61450

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FIFTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*27th January to 28th February* 1969.

---

**Volume XVI (Nos. 1 and 9)**

TABLE OF CONTENTS.


PAGES

*Monday, 27th January* 1969.

Personnel of the Government of Tamil Nadu ... i-ii

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... iii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies. ... ... iv-ix

1. Obituary References—
   (1) Thiru M. S. Abdul Majeed, former M. L. A. 1-2
   (2) Thiru V. A. Muthia, former M. L. A.
   (3) Thiru S. Balasubramaniam, M. L. A.
   (4) Thiru S. Ramaswamy Naidu, M. L. A.
   (5) Thiru P. K. Muthuvelappa Gounder, former M.L.A.
   (6) Those who lost their lives in the Kilvenmani incident in Thanjavur district.

2. Questions and Answers ... ... ... 2, 3-23

3. Points of Order—
   (1) Adjournment of the House for the day as a mark of respect to the deceased Members 2-3
   (2) Postponement of questions to be answered by the Chief Minister ... ... ... 23

PAGES

*Monday, 27th January 1969*—cont.

4. Privilege Matter—
Interruption caused by Thiru A. Balasubramanyam when the Governor began to read his Address and the subsequent walk-out by a few Members of the Opposition ... ... 23–24

5. Announcements—
(1) Censure Motion against the policy of the Ministry ... ... ... ... ... 24–25
(2) Business of the House ... ... ... 44
(3) Panel of Chairmen ... ... ... ... 44
(4) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 ... ... ... ... ... 45
(5) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 ... ... ... 45

6. Adjournment Motions—
(1) Unrest in Kilvenmani Village due to arson and failure to give protection to the Landlords and the Agricultural Labour ... ... 25–39
(2) Hardship experienced by the inhabitants of P. N. Patti and Veerakalputhur Panchayats due to pollution of water in wells by effluent water from Metur Chemicals ... 39–40

7. Statement re. Kilvenmani incident ... ... 40–42

8. Chief Minister's health condition ... ... 42–44

9. Government Bills—
(1) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 ... ... ... ... ... 45
(2) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 ... ... ... 45–46

10. Discussion on the Governor's Address ... ... 46–91

11. Papers laid on the Table of the House ... 91–106



PAGES

*Tuesday, 28th January* 1969.

1. Questions and Answers ... ... ... 129–149

2. Adjournment Motions—
(1) Lathi charge on students and the consequent unrest ... ... ... ... ... 149
(2) Picketing of labourers consequent on the lock-out in Kaveri Nagar Mills, Tiruchirappalli ... ... ... ... ... 149–150
(3) Lathi charge on striking workers of Mayfield Estate, Gudalur and arrests ... ... 150

3. Chief Minister's health condition ... ... 150–151

4. Announcements—
(1) Election to Annamalai University Senate 151
(2) Business of the House ... ... ... 190

5. Calling Attention—
Drought condition in North Arcot and Chingleput districts and suspension of procurement and tax collection ... ... ... ... 152–156

6. Statement re. correction to an answer to a supplementary question ... ... ... 156–157

7. Point of Order—
Port folios of the ailing Chief Minister ... ... 157–158

8. Government Bills—
(1) The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969. ... ... ... 158
(2) The Gudalur Janmam Estate (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 ... 158

9. Discussion on the Governor's Address—cont. 159–190, 191–227

10. Papers laid on the Table of the House. ... 227

*Wednesday, 29th January* 1969.

1. Questions and Answers ... ... ... ... 231–237

2. Points of Elucidation—
(1) Consideration of more number of questions during question hour ... ... ... 238–239
(2) Clarification on an incident without the prior permission of the Chair ... ... 241

PAGES

*Wednesday, 29th January* 1969—cont.

(3) Statement regarding correction to an answer to a supplementary question ... ... ... 239-240

4. Government Bills—
(1) The Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 (L. A. Bill No. 18 of 1968) ... ... ... ... ... 240
(2) The Madras Panchayats (Amendment) Bill, 1969.

5. Chief Minister's health condition ... ... 240–241, 279–280

6. Discussion on the Governor's Address—cont. 242–279

7. Papers laid on the Table of the House ... ... 280–281

*Friday, 21st February* 1969.

Personnel of the Government of Tamil Nadu ... i-iii

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... iv

1. Condolence resolution on the demise of Dr. C. N. Annadurai, late Chief Minister ... ... 285–313

2. Papers laid on the Table of the House ... ... 313-314

*Saturday, 22nd February* 1969.

1. Government Motion—
Suspension of question hour ... ... ... 315

2. Election of Speaker and felicitations ... ... 315–340

3. Grant of pension to the wife of late Dr. C. N. Annadurai ... ... ... ... ... 340–341

4. Felicitations to Thiru C. Gomathysankara Dikshidar, M. L. A. ... ... ... ... 341–344

5. Points of Order—
(1) Non-inclusion of reason for the adjournment of the House on 29th January 1969, in the brief record of proceedings ... ... ... 344–345
(2) Continuance of discussion on the Governor's Address ... ... ... ... ... 345–347
(3) Adjournment of the discussion on the Governor's Address ... ... ... ... 350–352
(4) Continuance of discussion on the censure motion regarding Kilvenmani incident ... 352–357



PAGES

*Saturday, 22nd February* 1969—cont.

6. Introduction of new Ministers and Statement to be made by the out going Minister ... 347–350

7. Discussion on the Governor's Address—*cont.* ... 357–404

8. Announcement—
Business of the House ... ... ... ... 405

9. Papers laid on the Table of the House ... ... 405

*Monday, 24th February* 1969.

1. Obituary reference—
Thiru K. R. Viswanathan, former M.L.A. ... 407

2. Questions and Answers ... ... ... ... 407-435

3. Adjournment Motions—
(1) Strike in Pugalur Sugar Mills ... ... 435–436
(2) Lock-out in Sri Lakshmi Narayana Mills, Palladam ... ... ... ... 436
(3) Protection to Tamilians in Bombay against the siva Sena menace ... ... ... 436–440

4. Calling Attention—
Rehabilitation of repatriates from Ceylon ... 441–444

5. Demands for Grants for Excess Expenditure in the year 1964–65—Presentation ... ... ... 444–445

6. Second Supplementary Statement of Expenditure for the year 1968–69—Presentation ... ... 444–448

7. Government Bill—
The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969). ... ... ... ... ... 448–450

8. Discussion on the Governor's Address—*cont.* 450–453, 456–481, 485-505

9. Point of Order—
Amendment to the portion of Governor's Address referring to the health of the late Chief Minister 453–456

10. Statement by Minister for Local Administration —Election to Municipalities ... ... ... 481–485

11. Papers laid on the Table of the House ... ... 505

PAGES

*Tuesday, 25th February* 1969.

1. Questions and Answers ... ... ... ... 507–536
2. Announcements—
   (1) Declaration of holiday for Bakrid ... ... 537
   (2) Censure motion against the policy of Government for failure to maintain law and order in Thanjavur district ... ... ... 537
3. Adjournment Motion—
   Closure of Cauvery Mills Limited, Pudukottai and provision of interim relief for the affected workers ... ... ... ... ... 538
4. Calling Attention—
   (1) Glut in handloom cloth and resultant suffering of weavers ... ... ... ... 538–542
   (2) Incidence of cholera and jaundice in Madras City and the necessity for taking preventive measures ... ... ... ... ... ... 542–543
5. Discussion on the Governor's Address—*cont.* ... 544–611
6. Papers laid on the Table of the House ... ... 612

*Wednesday, 26th February* 1969.

1. Questions and Answers ... ... ... ... 615–646
2. Odjournment motion—
   Arson in Harijan Colony, Vilakam village and pathetic condition of the affected Harijans ... 646–648
3. Callingg Attention—
   (1) Grave water shortage likely to arise in Madras City ... ... ... ... ... ... 648–649
   (2) Fire accident in Kirakam (near Sivakasi) cracker factory and consequent loss of life ... 649–651
4. Announcements—
   (1) Election to Annamalai University Senate . . 651
   (2) Opportunity for members of all parties to put supplementary questions ... ... ... 655
   (3) The Tamil Nadu Appropriation Bill, 1969 716
   (4) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969 ... ... ... ... ... ... 716
5. Election of Deputy Speaker and felicitations ... 651–655



PAGES

*Wednesday, 26th February* 1969.—*cont.*

6. The Second Supplementary Statement of Expenditure for the year 1968–69—General discussion ... ... ... ... ... ... 656–702
7. Voting on Demands for grants for Further Expenditure in the year 1968–69 ... ...

A. EXPENDITURE ON REVENUE ACCOUNT.

Demand No. 1 Land Revenue Department. 702
Demand No. 2 Motor Vehicles Acts—Administration ... ... ... ... 702
Demand No. 3 General Sales Tax and Other Taxes and Duties—Administration. 702
Demand No. 4 Stamps—Administration ... 703
Demand No. 5 Registration Department ... 703
Demand No. 6 State Legislature ... ... 703
Demand No. 7 Elections ... ... ... 703
Demand No. 8 Head of State, Ministers and Headquarters Staff ... ... ... 704
Demand No. 9 District Administration and Miscellaneous ... ... ... ... 704
Demand No. 10 Administration of Justice ... 704
Demand No. 11 Jails ... ... ... 704
Demand No. 12 Police ... ... ... 705
Demand No. 13 Education ... ... ... 705
Demand No. 14 Medical ... ... ... 705
Demand No. 15 Public Health ... ... 705
Demand No. 16 Agriculture ... ... ... 706
Demand No. 17 Fisheries ... ... ... 706
Demand No. 18 Animal Husbandry . . ... 706
Demand No. 19 Co-operation ... ... ... 706
Demand No. 20 Industries ... ... ... 707
Demand No. 21 Cinchona ... ... ... 707
Demand No. 23 Community Development Projects, etc. ... ... ... ... 707
Demand No. 24 Labour including Factories ... 707
Demand No. 25 Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes 708
Demand No. 26 Irrigation ... ... ... 708

PAGES

A. EXPENDITURE ON REVENUE ACCOUNT—*cont.*

Demand No. 27 Public Works—Works ... ... 708
Demand No. 28 Public Works—Establishment and Tools and Plant ... ... ... 708
Demand No. 30 Road Transport Schemes ... 709
Demand No. 32 Pensions ... ... ... 709
Demand No. 33 Miscellaneous ... ... 709
Demand No. 34 Stationery and Printing ... 709
Demand No. 35 Forest Department ... ... 710
Demand No. 36 other Miscellaneous Compensations and Assistants ... ... ... 710
Demand No. 40 Capital Outlay on Industrial Development ... ... ... ... 710
Demand No. 41 Capital Outlay on Irrigation 710
Demand No. 42 Capital Outlay on Public Works 711
Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 711
Demand No. 44 Capital Outlay on Forests ... 711
Demand No. 46 Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 711

C. DISBURSEMENTS OF LOANS AND ADVANCES AND REPAYMENT OF LOANS.

Demand No. 47 Loans and Advances by the State Government ... ... ... 712

8. Voting on Demands for Grants for Excess Expenditure in the year 1964–65 ... ... ...
Demand No. 3 General Sales tax and other Taxes and Duties-Administration ... ... 712
Demand No. 8 Head of State, Ministers and Headquarters Staff ... ... ... 712
Demand No. 17 Fisheries ... ... ... ... 713
Demand No. 25 Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... 713
Demand No. 26 Irrigation ... ... ... ... 713
Demand No. 27 Public Works-Works ... ... 713
Demand No. 28 Public Works-Establishment and Tools and Plant ... ... ... ... 714
Demand No. 36 Other Miscellaneous Compensations and Ossignments ... ... ... ... 714



PAGES

*Wednesday, 26th February 1969*—cont.

8. Voting on Demands for Governments for Excess Expendituure in the year 1964–65—*cont.*
Demand No. 39-A Capital Outlay on Consumer's Co-operatives ... ... ... ... 714
Demand No. 41 Capital Outlay on Irrigation. ... 715
Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes. ... ... ... ... ... 715

9. Government Bills—
(1) The Tamil Nadu Appropriation Bill, 1969 ... 715
(2) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969. ... ... ... ... 715

10. Papers laid on the Table of the House ... ... 716

*Friday, 28th February 1969.*

1. Questions and Answers. ... ... ... ... 723–750

2. Point of Order—
Reference to adjournment motion for which permission was refused in the Chamber. ... 751–752

3. Calling Attention—
(1) Talks held with the Japanese Firm delegation in connection with the Salem Steel Plant ... 752
(2) Attempt to declare a lock-out in the Indian Steel Rolling Mills at Nagapattinam ... ... 753–754

4. Announcements—
(1) Nomination to Business Advisory Committee 755
(2) The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969). ... 837
(3) The Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 (L.A. Bill No. 4 of 1969). ... ... ... ... 856

5. Censure Motion—
Censuring the policy of the Ministry regarding failure to maintain law and order in Thanjavur district and consequent arson in Kilvenmani village resulting in the deaths of some people. 755–836

PAGES

*Friday, 28th February 1969—cont.*

6. Government Bills—

(1) The Tamil Nadu Appropriation Bill, 1969 (L.A. Bill No. 6 of 1969). ... ... ... 837–842

(2) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969 (L.A. Bill No. 1 of 1969). ... ... 837–846

(3) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 1 of 1969) ... ... 846–851

(4) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 2 of 1969) ... ... ... ... ... 851–856

(5) The Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 (L.A. Bill No. 4 of 1969) ... ... ... ... ... 857–858

(6) The Madras Panchayats (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 5 of 1969). ... ... 858–866

(7) The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968) as amended by the Select Committee. **866–898**

7. Government Resolutions—

(1) Approval of Draft Notification issued under the Cotton Transport Act, 1923 ... ... ... 898–899

(2) Amendment to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 ... 899–900

8. Papers laid on the Table of the House. ... ... 900


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழக ஆளுநர் :

### சர்தார் உஜ்ஜல் சிங்.

* **1. மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள்; நிதி; திட்டமிடுதல்; போலீஸ்; தேர்தல்கள்; மதுவிலக்கு; வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்; உணவு உற்பத்தி.

**2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலைவாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும் சட்டப் பேரவையும்.

**3. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

**4. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (உணவு, வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

**5. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

**6. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர் சிறுவர் நலன்.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன்** (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர்; வீட்டுவசதி.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துக்கள், பூதான கிராமதான இயக்கம், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், சிறைணி, முன்னாள் இராணுவ வீரர்கள்.

---

* மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்ததால், 27—1—1969. முதல் அவர் பொறுப்பு வகித்து வந்த துறைகள் கீழ்க்கண்டபடி மற்ற அமைச்சர்களுக்குத் தற்காலிகமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

| துறைகள். | எந்த அமைச்சருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. |
|---|---|
| உள்துறை | திரு. இரா. நெடுஞ்செழியன் |
| பொது, மதுவிலக்கு | திரு. மு. கருணாநிதி |
| உணவு உற்பத்தி | திரு. கே. ஏ. மதியழகன் |
| நிதி, திட்டமிடுதல் | திரு. செ. மாதவன் |

மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை 3—2—1969 அன்று காலை 0.22 மணிக்குக் காலமானார்.

† மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் 3—2—1969 அன்று காலை 1-15 மணிக்குத் தற்காலிக முதலமைச்சராகப் பதவியேற்றார்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

## SARDAR UJJAL SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

* @1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief Minister*): *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indians Overseas, Refugees and Evacuees and Food production.*

† 2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN (*Minister for Education and Industries*): *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*): *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*): *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*): *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*): *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*): *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Health*): *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, Wakf, Prices and Supplies of Goods Act.*

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.). |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ.கோ. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| | (வெற்றிடம்) | பெருந்துறை. |
| 23 | பாலசுப்பிரமணியன், ஏ. | திண்டுக்கல். |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 25 | பாரதி மோகன், கோ. | குத்தாலம். |
| 26 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 27 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 28 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 29 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 30 | சிதம்பரநாத நாடார், ஏ. | கொளச்சல். |
| 31 | சின்னராஜ், சி. கே. | திருப்பத்தூர். |
| 32 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 33 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ.கா.). |
| 34 | சித்தன், என். எஸ்.வி. | திருமங்கலம். |
| 35 | தனுஷ்கோடி, பி.எஸ். | திருவாரூர் (செ.வ.). |
| 36 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 37 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 39 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 40 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 41 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 42 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். | திருச்செந்தூர். |
| 43 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 44 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 45 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 46 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 47 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 50 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 51 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). | செய்யாறு. |
| 53 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 54 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 55 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 56 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 57 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 58 | கோவிந்தசாமி, ஏ. (அமைச்சர்). | முகையூர். |
| 59 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 60 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 61 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 62 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 63 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 64 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 65 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 66 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 67 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 68 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 69 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 70 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 71 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 72 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 73 | கண்ணப்பன், எம். | இணைத்துக்கடவு. |
| 74 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 75 | கருணாநிதி, மு. (அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. .. .. .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, நு. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.). |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், எ.கோ. .. .. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
|  | (வெற்றிடம்) .. .. .. .. | பெருந்துறை. |
| 23 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 25 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 26 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 27 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 28 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 29 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 30 | சிதம்பரநாத நாடார், எ. .. .. | கொளச்சல். |
| 31 | சின்னராஜ், சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 32 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 33 | சின்னசாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.கா.). |
| 34 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 35 | தனுஷ்கோடி, பி.எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.). |
| 36 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 37 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 39 | துரைராஜ், பி. .. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 40 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 41 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 42 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். .. | திருச்செந்தூர். |
| 43 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 44 | எல்லப்பன், பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 45 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 46 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 47 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. .. | நாகப்பட்டினம். |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 50 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 51 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). .. | செய்யாறு. |
| 53 | கோவிந்தராசன், சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 54 | கோவிந்தராசன், சி. .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 55 | கோவிந்தராஜன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 56 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 57 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 58 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). .. | முகையூர். |
| 59 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 60 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 61 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 62 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 63 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 64 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 65 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 66 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 67 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 68 | கனகசபை, பா. .. .. .. | சிதம்பரம். |
| 69 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 70 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 71 | கந்தசாமி படையாச்சி, மு. .. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 72 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 73 | கண்ணப்பன், எம். .. .. .. | கிணத்துக்கடவு. |
| 74 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 75 | கருணாநிதி, மு. (அமைச்சர்) .. .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 76 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 77 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 78 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 79 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 80 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 81 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமைய்யா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-I. |
| 101 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, எ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மு. | தலைவாசல் (செ.வ.). |
| 107 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 114 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, ஏ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு. ஆதி | திருப்போரூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 117 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 120 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 122 | முத்தையா. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 127 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், எ. சி. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.). |
| 142 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம் |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், எ. ஆர். | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, எ. எம். | பவானி. |
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராசமன்னார், எஸ். எ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 76 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 77 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 78 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 79 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 80 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 81 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ..) |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவிநாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 101 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, ஏ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.), |
| 107 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 114 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, ஏ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு. ஆதி | திருப்போரூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 117 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 120 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 122 | முத்தையா. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 127 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், ஏ. சி. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.). |
| 142 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிபபட்டணம் |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், ஏ. ஆர். | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, ஏ. எம். | பவானி. |
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராசமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர் (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
|  | (வெற்றிடம்) | சாத்தூர். |
| 171 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 172 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 173 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 174 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 175 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 176 | சகாதேவக் கவுண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 177 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில். |
| 178 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 179 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 180 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 181 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 182 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 183 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 184 | சேனுபதி, அ. | காங்கேயம். |
| 185 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 186 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 187 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 188 | இளஞ்செழியன், வி. சா. | விராலிமலை |
| 189 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.). |
| 190 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 191 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 192 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 193 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 194 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 195 | சௌந்தரபாண்டியன், நா. | சாத்தான்குளம். |
| 196 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 197 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 198 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 199 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 200 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 201 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 202 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 203 | சுப்பையா, கே.வி. | ஆலங்குடி. |
| 204 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 205 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 206 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 207 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 208 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 209 | சுவாமிநாத ஒடையார், த.சி. | மன்னார்குடி. |
| 210 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 211 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 212 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 213 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 214 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 215 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 216 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 217 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 218 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 219 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 220 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம் |
| 221 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 222 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 223 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 224 | வெள்ளைத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 225 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 226 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 227 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 228 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 229 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 230 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 231 | விநயகம், கே. | திருத்தணி. |
| 232 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 233 | வில்லியம், எம். | கிள்ளியூர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) | |
|---|---|---|
|  | திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் | அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர் தலைமை வழக்கறிஞர் பொறுப்பிலிருப்பவர். |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடர்

**திங்கட்கிழமை, 1969 சனவரி 27.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 1946-ல் இருந்து 1952-வது ஆண்டுவரை செங்கல்பட்டு-தென்னாற்காடு முகமதிய கிராமப் புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக திரு. எம். எஸ். அப்துல் மஜீத் அவர்கள் 3—12—1968 அன்று மறைந்து விட்டதற்கும்,

முசிரி பொதுத் தொகுதிக்காக 1957-ல் இருந்து 1962-வது ஆண்டு வரையிலும், உப்பிலியாபுரம் தொகுதிக்காக 1962ல் இருந்து 1967-வது ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. வி. ஏ. முத்தையா அவர்கள் 21—12—1968 அன்று காலமானதற்கும்,

கோயம்பத்தூர் மாவட்டம் பெருந்துறை தொகுதியிலிருந்து சென்ற பொதுத் தேர்தலில் இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் 9—10—1968 அன்று எதிர்பாராதவிதமாகக் காலமானதற்கும்.

1952-ல் இருந்து இப்பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் சென்ற பொதுத் தேர்தலில் இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள் 9—1—1969 அன்று எதிர்பாராத விதமாகக் காலமானதற்கும்,

1962-ல் இருந்து 1967-வது ஆண்டுவரை கோபிச்செட்டிப் பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. கே. முத்து வேலப்ப கவுண்டர் அவர்கள் 25—1—1969 அன்று காலமான தற்கும்,

கீழ் வெண்மணி சம்பவத்தில் உயிர் நீத்தவர்களுக்கும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

[1969 சனவரி 27

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மறைந்த உறுப்பினர்கள் திருவாளர்கள் செ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், எஸ். இராமசாமி நாயுடு அவர்களுக்கும் இப்பேரவையினர் வணக்கம் செலுத்தும் வகையில் இப்பேரவைக் கூட்டம் இப்போது ஒற்றி வைக்கப்படுகிறது. மீண்டும் 9-15 மணிக்குப் பேரவையின் கூட்டம் தொடங்கும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(பேரவை மீண்டும் காலை 9-15-க்குக் கூடியது)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி எண்கள் 1, 2 ஒற்றிவைக்கப்படுகின்றன. கேள்வி எண் 3 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. உறுப்பினர் திரு. க. கோமதிசங்கர திட்சிதர் அவர்கள் அறிவிக்கை கொடுத்திருக்கும் கேள்விக்கு மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

(மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் எழுந்தார்.)

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) மறைந்த உறுப்பினர்களுக்கு மரியாதை அளிக்க அவையை ஒருநாள் ஒற்றிவைத்தல்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் அதற்காகப் பேரவை ஒரு நாள் ஒத்திவைக்கப்படவேண்டும் என்பதாக ஒரு மரபு ஏற்கனவே அமலில் இருந்துவருகிறது. அந்த மாதிரி ஒரு மரபு இப்பொழுதும் உண்டா? 'ஸிட்டிங் மெம்பர்' இறந்திருக்கும் காரணத்தால், அந்த நடைமுறை அனுபவத்தை நாம் கொஞ்சம் கணக்கிலெடுத்து, அதைப்போல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, அவர் சொன்ன வார்த்தைகளோடு நான் சொல்லக்கூடியதையும் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறந்தவர், இன்றைய ஆட்சி செய்கிற கட்சிக்கு உடந்தையாக இருந்தவர். இந்த ஆட்சி நடக்கவேண்டும் என்ற நல்ல பண்பாட்டோடு இருந்தார். ஆளுங் கட்சிக்கு உதவியாக இருந்த உறுப்பினருக்கே இப்படி இருந்தால், எங்கள் கட்சியில் யாராவது இறந்துபோனால் எப்படி இருக்கும்?



1969 சனவரி 27]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, நடைபெறுகின்ற இடத்திலேயே ஓர் உறுப்பினர் இயற்கை எய்துகிற சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நாள் முழுவதும் சட்டப் பேரவை ஒத்திவைக்கப்படுவது என்கிற மரபு கையாளப்படுகிறது. மற்றைய உறுப்பினர்களில் யாராவது மறையும்போது, அரைமணி நேரம், ஒரு மணி நேரம் அவை ஒத்திவைக்கப்படுவது என்கிற மரபுதான் கையாளப்பட்டு வந்திருக்கிறது. அதை யொட்டி, அலுவல் ஆலோசனைக் குழுவிலும், இதற்காக அரை மணி நேரம் ஒத்திவைக்க வேண்டுமா, ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கவேண்டுமா என்றெல்லாம் விவாதிக்கப்பட்டு, கால் மணி நேரம் ஒத்திவைக்கலாம் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து எடுத்த முடிவின் அடிப்படையில் 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. சட்டப் பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, நடைபெறுகிற இடத்திலேயே ஒரு உறுப்பினர் காலமாகும் நிலை ஏற்பட்டால், நாள் முழுவதும் அவை ஒத்தி வைக்கப்படுகிற மரபு கையாளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் 15 நிமிடங்கள் அவையை ஒத்திவைத்திருக்கிறோம். ஆனால், 1967-ஆம் ஆண்டில், the House adjourned for ten minutes.

ஆகவே, நாம் கையாண்டதுதான் முறை.

உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். பேரவை உறுப்பினர்களுக்கிடையே எந்த விதமான வேறுபாடும் காட்ட முடியாது. ஆளும் கட்சி உறுப்பினரா, அல்லது எதிர்க் கட்சி உறுப்பினரா என்ற வேறுபாடு கிடையாது. எல்லோரும் உறுப்பினர்கள். எல்லோருக்கும் சமமான மரியாதை இந்தப் பேரவையில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

2. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி.

*Educational institutions in Madurai*

*3 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Director of Secondary Education called for any meeting of parents and others connected with Educational Institutions in Madurai during the first week of February 1968; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, மாணவர்களின் கிளர்ச்சிகளையும், அவற்றால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய பெரும் கெடுதல்களையும், அவர்களுடைய பிற்கால வாழ்க்கைகளில்

ஏற்படக்கூடிய பாதகங்களையும் நன்கு பரிசீலித்து, சமாதானம் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாணவர்களிடம் சுமுகமான உறவு ஏற்படுத்துவதற்கு, பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அதை திறம்படப் பணி புரியவேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை எவ்வளவு திறம்பட மேற்கொள்ளலாம் என்பதுபற்றி கல்வித்துறை இயக்குநர் அவர்கள் ஆய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள்-பெற்றோர்கள் சங்கம் எந்த அளவுக்கு உதவி செய்ய முடியும், அதை எந்த எந்த வகையிலே அமைக்கலாம் என்ற திட்டங்களெல்லாம் இயக்குநர் அவர்களால் ஆராயப்பட்டு, அதுபற்றிய ஒரு முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்யலாம்.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, மாணவர்களுடைய பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்காக எஜுகேஷனல் கவுன்சில் என்ற அடிப்படையில், யூனிவர்சிடியிலிருந்து ஓரிரு பிரதிநிதிகளும், மாணவர்களின் பிரதிநிதிகளும், கல்லூரி முதல்வர்களும் கொண்ட ஒரு குழுவை அமைத்து மாணவர்களின் பிரச்சினைகளில் தீர்வு காண வேண்டும் என்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இப்போது இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற கருத்துக்கள் பலவும் அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. பொதுமக்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கல்லூரிகளில் ஸ்டுடென்ட்ஸ் கோர்ட் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு மாணவர்களே தங்களுக்குள் கோர்ட் அமைத்துக்கொள்வதில் ஆசிரியர்களும் இடம் பெற வேண்டுமா இல்லையா என்பது குறித்தும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் அடங்கிய குழுவை ஊர்தோறும் அமைக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்க விரைவில் அரசாங்கம் மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் அடங்கிய கூட்டம் கூட்டப்பட்டு, ஒரு நல்ல முறையை வகுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர்களும் தக்க யோசனைகளைச் சொல்லலாம்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, கோர்ட் என்று சொன்னாலே, அது ஏதோ நிரந்தரமானது, அதில் எடுக்கப்



படும் முடிவு நிரந்தரமானது, அதை அமல் செய்தாக வேண்டுமென்ற நிலைமை ஏற்படக்கூடும். கனம் கல்வி அமைச்சர் அவர்கள் அண்மையில் இதுபற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றைப் பத்திரிகைகளில் படித்தேன். உணர்ச்சி வசப்பட்ட இளம் வயதினரான மாணவர்களும் இந்தக் கோர்ட்டில் இடம் பெற வேண்டுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது ஒரு யோசனையே தவிர, முடிவு அல்ல. பல்வேறு யோசனைகள் வந்துகொண்டிருக்கின்றன. அதை ஆராய்கின்ற கட்டத்திலே அரசாங்கம் இருக்கின்றது. எந்த விதமான முடிவும் இன்னும் எடுக்கப்படவில்லை. கல்வித் துறையிலே அமைதியை ஏற்படுத்த எப்படிப்பட்ட முடிவு எடுக்கலாம் என்பதை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். பத்திரிகைகளில் வந்தது, அரசாங்கத்திற்கு வந்த பல்வேறு யோசனைகளில் ஒன்று. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனையையும் அரசாங்கம் கருத்தில் கொள்ளும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் மட்டுமல்லாது தமிழ்நாடு பூராவிலும் மாணவர்களின் மத்தியில் பரவலாக அமைதியற்ற நிலை இருக்கின்றது. அந்த நிலை ஏற்படுவதற்கு அடிப்படை என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழு ஒன்றை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாணவர்களின் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அமைதியற்ற நிலைக்கான காரணங்களைக் கண்டறிய குழு ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த முறையில், இருக்கின்ற நிலைமையைச் சீர்திருத்த குழு அமைக்கலாம், அமைதியை ஏற்படுத்த என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பதுபற்றி பல்வேறு கருத்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன. கல்வித்துறை இயக்குநர் அலுவலகத்தில் அதை ஆராய்ந்து வருகிறார்கள். தக்க முடிவு எடுத்தபிறகு பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் கூட்டத்தைக் கூட்டி நல்ல முடிவு நடைமுறைப்படுத்தப்படும். கனம் உறுப்பினர் கூறுகின்றபடி அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இப்போது குடந்தை போன்ற இடங்களில் எல்லாம் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் சங்கம் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களுடைய பிரச்னைகளை எப்படிச் சமாளிப்பது என்பதைக் குறித்து ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட சங்கத்தை விரிவுபடுத்தவும், அதைச் சரியான முறையில் உற்சாகப்படுத்தவும் சர்க்கார் உதவி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இந்தக் கருத்துக்கள் எல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் சங்கம் சில பல ஊர்களிலே திறம்பட வேலை செய்து மாணவர்களின் குழப்பங்

களைத் தீர்த்து வைத்திருக்கின்றது. உண்மையில் ஓசூரிலும் தகராறு ஏற்பட்டபொழுது ஒரு தக்க முடிவு ஏற்பட்டதன் காரணமாக சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது. கல்லூரிகளில் பெற்றோர்களின் சங்கம் ஏற்பட்டு நல்ல முறையில் வேலை செய்தது. எந்த முறையை மேற்கொண்டால் அமைதியை மாணவர்களின் மத்தியில் ஏற்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம். எல்லோருடைய இசைவையும் பெற்ற பிறகு அம்முடிவு நடைமுறைப் படுத்தப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் சமீபத்தில் பெற்றோர்களுடைய கூட்டம் ஒன்று கூட்டப் பட்டது என அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் மதுரைக் கல்லூரியில் பெற்றோர்கள் ஒன்றுகூடி, ஒரு சங்க ஏற்பாடு செய்தார்கள். என்னென்ன முடிவு செய்தார்கள், எந்த அடிப்படையில் முடிவு எடுத்தார்கள் என்று அறிய விரும்பி தனிக் கேள்வி கேட்டால், விவரங்கள் தரப்படும்.

**திரு. ம. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, கல்வித் துறையில் அமைதியற்ற தன்மை தமிழகத்தில் மாத்திரம்தான் இருக்கிறதா? அல்லது வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செய்தித்தாள்களைப் படித்துப் பார்த்தால், உலகம் முழுவதிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதை நன்கு அறிந்துகொள்ளலாம். இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது சூழ்நிலைக்கும், அந்தந்த நாட்டவரின் மனநிலைக்கும் ஏற்ப அமைதல் வேண்டும். நமது மாநிலத்தில் பல்வேறு வகைகளில் அமைதியற்ற நிலைமை இருக்கிறது. நமது மாநிலத்தில் 126 கல்லூரிகள், 2,600 உயர்நிலைப் பள்ளிகள், 31 ஆயிரத்து சொச்சம் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. இவற்றில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில இடங்களில் அமைதியற்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை என்று சொல்ல முடியாது. ஒரு சில மாணவர்களால் மற்றவர்களும் அமைதியற்ற தன்மை ஏற்படுவதற்கு வேண்டிய பள்ளி வேலை நிறுத்தம் போன்ற நிலைமைகளில் ஈடுபட வேண்டியிருக்கின்றது. உண்மையில் இரண்டொரு நாட்களுக்கு முன்னர் ஜப்பானில்கூட மாணவர் கலவரம் ஒன்று ஏற்பட்டதாகச் செய்தி வந்தது. அப்படியெல்லாம் இருக்கின்ற காரணத்தால் இங்கேயும் அப்படி நடைபெற வேண்டிய அவசியம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that instead of solving the students' unrest which is prevalent in out State, the proposal like constitution of the "Students Court" will indirectly encourage the students to indulge more in this kind of anti-social activities. Instead of this, will the Government think of concrete proposals to solve the problem at the place where it springs up instead of distributing it all over the State?



In that case, will the Government allow the advocates to practise in the "Students' Courts" and take up the cause of students or professors or parents?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னது மாதிரி எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை. சிலபல நாடுகளில் ஸ்டுடண்ட்ஸ் கோர்ட் வைக்கப்பட்டிருக்கின்றது. ஜெனரல் கவுன்சில் போன்றவைகள் எல்லாம் இருக்கின்றன. தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்களில் கூட வேலை நிறுத்தம் செய்வது என்று தீர்மானிப்பதற்கு முன்னால் 15 நாட்களுக்கு முன்னதாக நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டும் என்ற நியதி இருக்கின்றது. மாணவர்கள் ஒருசில நிமிடங்களில் முடிவு எடுத்து, அதுவும் ஒருசில மாணவர்கள் முடிவு எடுத்து ஆசிரியர்களுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாமல் பள்ளி வேலைநிறுத்தம் செய்கிறார்கள். கல்லூரி முதல்வர் ஒரு தீர்ப்பு அளித்துவிட்டால் அதனை எதிர்க்க வேண்டுமென்ற நிலைமை அத்தனை மாணவர்களிடத்திலேயும் ஏற்பட்டு விடுகின்றது. ஆகவேதான் மாணவர்களே இதை ஆராய்ந்து சிந்தித்து எந்த அளவிற்கு முடிவு செய்யலாம் என்று சொல்லப்பட்டு வருகிறது. இது முதல் கட்டமே அல்லாது முடிந்த கட்டம் அல்ல. மாணவர்கள் தவறு செய்வதை மாணவர்களின் கோர்ட்டே தண்டிக்க வேண்டுமென்ற நியதி ஏற்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது. கல்லூரி முதல்வர் ஒரு மாணவரை சஸ்பெண்ட் செய்தால் மற்ற 999 மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். கல்லூரி முதல்வர் செய்தது சரியா, தவறா என்பதை மாணவர்களே சிந்தித்துப் பார்க்க அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும். மாணவர்களுடைய தேவைகளை மாணவர்களே ஆராய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, students take to agitations and other activities, because in many cases they have got real and just grievances. In such circumstances instead of allowing the students to go out of the schools and spoil their education, is it not better that the elders take sincere and earnest steps to redress their grievances and allow the students to continue their education?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகள் வருகிறபோதுகூட அவகாசம் இருந்தால் தான் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அவற்றை நிறைவேற்றிக்கொடுக்க முடியும். ஆகவே தான் ஒரு கோட் ஆப் காண்டெக்ட் என்று ஏற்படுத்தி மாணவர்கள், கல்லூரி முதல்வர்கள், நிர்வாகிகள் எல்லோரும் சேர்ந்து எப்படி எழுகிற ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியும் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** மாணவர்கள் இந்தி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையில்தான் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்கிறார்கள், இந்திப் பிரச்சினையை

ஒரே இறுதி முடிவாகத் தீர்த்து வைக்க அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசியலில் இறுதி முடிவு என்பது கிடையாது. அவ்வப்போது எழுகிற பிரச்சினைகளுக்கேற்பத்தான் தக்க முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. மகாத்மா காந்தி 1921-லேயே இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்று ஆரம்பித்தார். 1947-இல் தான் சுதந்திரம் கிடைத்தது. அதற்கு ஏற்ற வகையில் காலம் கனிவுபெற வேண்டியிருந்தது. அதுபோல மாணவர்கள் இந்தியைப் பொறுத்தவரையில் தங்களுடைய கருத்து என்ன என்பதை ஒரு முறைக்கு இரு முறையாகத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டார்கள். இனி அந்தக் கருத்தை பெற்றோர்களும், ஆட்சியாளர்களும், பெரியோர்களும் சேர்ந்து தீர்த்து வைத்தாகவேண்டும். மாணவர்களும் படிப்பை முடித்துக்கொண்டு வெளியே வருகிறபோது பெரியவர்களுடன் சேர்ந்து இந்தக் கருத்து வெற்றிபெற உதவி செய்யலாம். தற்போது படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். இப்பிரச்சினையில் காலத் தாழ்வு ஏற்படலாம், காலக் கனிவு ஏற்படும் வரை நாமும் திட்டமிட்டு செயல்படவேண்டும். இந்த உணர்வை ஏற்படுத்துவதற்காகத் தான் பெரியோர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள். இப்போதும் அந்த வேண்டுகோள்தான் விடப்படுகிறது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, மாணவர்களது கிளர்ச்சி உலக நாடுகள் பலவற்றிலும் இருந்தாலும் கூட இந்தியாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலே தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம், வேறு அந்நிய மொழியில் படிப்பதைவிட கிளர்ச்சியில் ஈடுபடுவது நல்லது என்று மாணவர்கள் கருதுவதுதான் என்று கல்வி நிபுணர்கள் எல்லாம் கருதுகிறார்களே, அது உண்மையா ? அப்படியானால் ஆட்சியினர் எடுக்கிற நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாணவர்கள் கிளர்ச்சிக்குச் சொல்லப்படுகிற காரணம், இந்தி திணிக்கப்படுகிறது, வானொலி மூலம் இப்போது திணிக்கப்படுகிறது என்பதுதான். ஆங்கிலத்தை எதிர்த்து நடைபெறுகிற கிளர்ச்சி அல்ல. மற்றும் ஒரு கோஷ்டிக்கும், இன்னொரு கோஷ்டிக்கும் ஏற்படுகிற தகராறு போன்றவை தான் கிளர்ச்சிக்குக் காரணம்.

### *Float of Sri Kapaleeswarar temple*

*4. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the levy of an entrance fee into the float of the Sri Kapaleeswarar temple in January 1968; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. அரசினர் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை;



(இ) இவ்வினா எழவில்லை. பெரியோர்களுக்கு ரூபாய் ஒன்று என்றும் சிறுவர்களுக்கு 50 பைசா என்றும் கட்டணம் விதிக்கும் முறை அறங்காவல் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சதர் :** ஆலயங்களில் நுழைவுக் கட்டணம் வாங்குவது நியாயமாக இருந்தாலும் கூட இம்மாதிரி தெப்பத்திற்கு நுழைவுக் கட்டணம் வாங்குவதன் மூலமாக தெப்பத்திற்கும் அழிவு ஏற்படுகிறது, உயிர்களுக்கும் இழப்பு ஏற்படுகிற அபாயம் இருப்பதனால் இதை நிறுத்தி வழக்கம் போல தரிசனம் செய்கிற முறையை ஏற்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கபாலீசுவரர் கோவிலில் இருக்கிற ஆண்டவனை தரிசித்து அர்ச்சனை செய்வதற்கு எவ்வித இடையூறும் இல்லை. சம்பிரதாயப்படியேதான் அந்த முறைகள் இருக்கின்றன. தெப்பத்தில் ஏறுவதற்கும், தெப்பத்தில் ஏறி சுற்றி வருவதற்கும் அதிகமான பேர்கள் விரும்புகிற காரணத்தினால்தான், வேண்டியவர்களை ஏற்றிக்கொள்கிறார்கள், மற்றவர்களுக்கு மறுக்கிறார்கள் என்கிற புகாரும் சொல்லப்படுவதனால்தான் ஒரு கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று வைத்துவிட்டால் விரும்புகிறவர்கள் கட்டணம் கட்டி ஏறட்டும். இதனால் கூட்டத்தைத் தவிர்க்கலாம், வீண் புகாருக்கும் இடமிருக்காது என்று அறங்காவலர்கள் தீர்மானித்தார்கள். அறங்காவலர்கள் எடுத்த முடிவிற்கு உதவி ஆணையாளர் அனுமதி அளித்தார். சென்ற ஆண்டு 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு ரூபாய், குழந்தைகளுக்கு ½ ரூபாய் என்று வைத்ததன் மூலமாக 622 ரூபாய் வசூலாயிற்று. இதைக்கொண்டு தெப்ப உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இதன் மூலம் கிடைக்கிற தொகை தெப்பத்தை நல்லமுறையில் பழுதுபார்க்கவும் பயன்படுகிறது. இது தவறான முறை என்று சொல்வதற்கில்லை. திருவரங்கத்தில் முத்தங்கி சேவைக்கு 10 ரூபாய், பரமபத சேவைக்கு 10 ரூபாய், சந்தான மண்டபம் நுழைய 10 ரூபாய் என்பதாகக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. திருப்பதியிலும் தரும தரிசன நேரம் போக பாக்கி நேரத்தில் தரிசனம் செய்வதற்கு உள்ளே போகக் கட்டணம் வசூல் செய்யப்பட்டுகிறது. ஆனால் இங்கே தெப்பத்தில் ஏறுவதற்குத்தான் கட்டணம் வைக்கப்பட்டிருக்கிறது.

### *Road bridge to Rameswaram Island*

*5. Q.—THIRU N. KASIRAMAN, THIRU K CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Committee on Estimates, in the year 1965–66 in their report, dated 3rd August 1966, has recommended that efforts and endeavours must be made to construct the road bridge between main land and the Rameswaram Island within the shortest possible time ; and

(b) if so, when the bridge will be constructed and declared open for vehicular traffic ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) ஆம்.

(இ) நிலப் பகுதிக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் சாலைப் பாலம் கட்டுவதற்கான மதிப்பீடுகளுக்கு இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி** : கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாகப் புயலின் காரணமாகத் துண்டிக்கப்பட்டு போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. அதைக் குறித்தாவது உடனடியாக அந்த பாலத்தைக் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதற்கான தோராய மதிப்பீடு மத்திய அரசுக்கு 1—6—1967-லேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது தேசிய நெடுஞ்சாலை வேலையாதலால் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றே ஆரம்பிக்கப்படவேண்டியிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி** : இதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பாலத்திற்கு 432 லட்சம், மண்டபம் சைடிங் வேலைக்கு 20 லட்சம், பாம்பன் சைடிங் வேலைக்கு 14 லட்சம், ஆக 466 லட்சம் ரூபாய்.

DR. H. V. HANDE : Sir, though this particular road comes under the National Highways, in view of the fact that a large number of Ceylon repatriates are pouring into Tamil Nadu now, will this Government get into touch with the Centre immediately and stress that this is not only a National Highway but it also comes under the Ceylon Repatriation Scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : சிலோனிலிருந்து வருகிறவர்களுக்கான அந்தத் திட்டத்திற்காக இராமேஸ்வரம் தொகுதியிலே புதிய சாலைகளைப் போடுவதற்கான திட்டங்கள் போடப்பட்டு அவை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றிற்கு மத்திய அரசும் ஒப்புதல் அளித்திருக்கிறது. அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேலையைப் பொறுத்த வரையிலும் இது தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இந்தப் பெரிய திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலும், உதவியும் தேவைப்படுகிற காரணத்தினாலே அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய ஒப்புதலும், பண உதவியும் வந்த பிறகு இந்த வேலை ஆரம்பிக்கப்படும்.

**திரு. மு. ச. சிவசாமி** : தலைவர் அவர்களே, 466 இலட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட இருக்கும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பாலம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு சேது சமுத்திரம் கால்வாய் திட்டம் அமலுக்கு வருகின்றபொழுது என்ன மாற்றுத் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தனிக் கேள்வி போடவும்.

*Portrait of Thiruvalluvar in Highways Department Offices*

*6 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any circular for providing the portrait of Thiruvalluvar in the Highways Department offices has been issued; and

(b) if so, when ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) & (இ) பொதுப் பணித் துறை நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்களில் திருவள்ளுவர் படங்களை வைப்பதற்கான கட்டளைகள் 1967 நவம்பரில் அனுப்பப்பட்டன.

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களிலே இப்பொழுது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்த புராண காலக் கடவுள் படங்கள்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அகற்றி எல்லோருக்கும் எம்மதமும் சம்மதம் என்று சொல்லிய திருவள்ளுவர் படத்தை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : திருவள்ளுவர் படங்களும் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : எல்லா அலுவலகங்களிலும் ஒரே மாதிரியாக திருவள்ளுவர் படங்கள் வைப்பதற்கு டெண்டர்கள் கோரப்பட்டனவா ? மற்றத் துறைகளிலே அப்படியில்லாமல், பொதுப் பணித் துறை அலுவலகங்களில் உள்ள படங்களில் மட்டும் பொதுப் பணித் துறை அமைச்சர், முதலமைச்சர் பெயர்கள் போட்டு இருப்பது மலிவான விளம்பரம் ஆகாதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அதற்கு அடிக்கல் நாட்டியவர் காமராஜ் என்றும் தலைமை வகித்தவர் பக்தவத்சலம் என்றும் இருக்கிறதே, அது மலிவான விளம்பரம் ஆகாது என்றால் இதுவும் அப்படி ஆகாது.

Thiru T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether the pictures of Tiruvalluvar were supplied by the Government itself or whether they were got by the Government from private agencies through tenders?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : டெண்டர்கள் கோரப்பட்டு படங்கள் வாங்கப்படவில்லை. சீல்ட் கொட்டேஷன் மூன்று கம்பெனிகளிலிருந்து கொடுக்கப்பட்டன. அந்த மூன்று கம்பெனிகளில் வேணுகோபால் சர்மாவிடமிருந்து வந்தது ஏற்றுக்

கொள்ளப்பட்டது. முதலிலே இதுபற்றி நான்கு பேர்களிட மிருந்து கேட்கப்பட்டது. முனுசாமி நாயுடு, வெங்கடேஸ்வரா ஃபிரேம் ஒர்க்ஸ், லக்கி ஸ்டோர்ஸ், வேணுகோபால் சர்மா ஆகியவர் களிடமிருந்து கேட்கப்பட்டது. அதிலே 3 பேர்கள்தான் கொட் டேஷன் அளித்தார்கள். 13.65 என்று வெங்கடேஸ்வரா ஃபிரேம் ஒர்க்ஸும், 15.50 என்று லக்கி ஸ்டோரும், 15.35 என்று வேணு கோபால் சர்மாவும் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அதை விசாரித்ததிலே 13.65 என்பதும் 15.50 என்றதும் கொடுக்கத் தயாராக இருந்தவர்கள் திருவள்ளுவர் படத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க இணங்கவில்லை. ஆகவே, வேணுகோபால் சர்மாவிட மிருந்து வந்ததை 15.35 என்பதை 13.40 என்ற அளவுக்குக் குறைத் துக்கொண்டு—அவர் படங்களை எழுதியவர், வெளியிடுபவர் என்ற முறையில்—ஒப்புக்கொள்ள முன்வந்ததால் அதை ஏற்றுக்கொண்டு அவர் மூலம் செய்யப்பட்டது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, திருவள்ளுவர் படத்தின்கீழ் ஒரு குறள் எழுதப்பட்டிருப்பதைப் பெரும்பாலோர் வரவேற் கிறார்கள். ஆனால் அந்தக் குறளின் பொருள் பலருக்குப் புரிய வில்லை. எனவே அதன்கீழ் ஒரு சிறு விளக்கம் எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெரும்பாலோரால் வரவேற் கப்படுகிறது என்று கூறியபிறகு விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** படங்கள் வைப்பதை நாங்கள் எதிர்க்க வில்லை. குறைசொல்லவில்லை. மலிமான விளம்பரம் என்று நினைக்கவில்லை. ஆனால் அதிலே இரண்டு மந்திரிகள் பெயர்கள் தானா இருக்கவேண்டும். மற்ற மந்திரிகள் என்ன பாவம் செய்தார் கள்? அவர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும். முடியும் தாடியும் தேவையில்லை என்று சொல்லுகிற வள்ளுவர் குறள் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது திருவள்ளுவருக்கு முடியும் தாடியும் வைத்துப் படம்போட்டால் அது அவருக்கே அவமானகரமாக இருக்காதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட படத்தை அஞ்சல் தலையில் வெளியிட்டவர்கள் மத்திய அரசினர்தான். எனவே அவர்களைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். (திரு. கே. விநாயகம் : அது நீங்கள் கொடுத்த படம்) நாங்கள் கொடுத்த படம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும். வேணுகோபால் சர்மா போட்ட படத்திற்குத்தான் மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக் கிறது. அதேமாதிரி படம்தான் ஸ்டாம்பில் வந்திருக்கிறது. அது மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அவர்களாலே அன்று உதவி ஜனாதிபதியாக இருந்தவரைக்கொண்டு இங்கே திறந்து வைக்கப்பட்ட படமும் அதே மாதிரிப் படம்தான். எல்லா அமைச்சர்களுடைய பெயர்களும் எழுதப்படக் கூடாதா என்று





கேட்டார்கள். எந்த எந்தத் துறைகளில் காரியங்கள் நடை பெறுகின்றனவோ அப்பொழுது அந்த அந்தத் துறைகளைச் சார்ந் தவர்கள் பெயர்கள் இடம்பெறுகின்றன. நான் முன்பே சொன்ன படி கட்டடங்கள் திறக்கப்படுகின்றன என்றால் அதிலே எட்டு மந்திரிகளுடைய பெயர்களும் குறிப்பிடப்படுவது இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருவள்ளுவர் எப்படி இருந்தார் என்று யாருக்கும் தெரியாது. அவர் எப்படி இருந்திருப்பார், ஒரு பெரியவர், ஒரு அறவோர், அவருடைய முகம், கண், மூக்கு, நடை உடை பாவனை இவையெல்லாம் எப்படி யிருந்திருக்கும் என்று யூகித்த யூகமே தவிர இப்படித்தான் இருந்தார் என்று சொல்லமுடியாது. இப்படி இருந்தார், எனவே இப்படியே இருக்கட்டும் என்ற முறையிலே வைத்துக்கொண் டிருக்கிறோம்.

“ மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின் ”

என்று அவர் சொன்னதற்குக் காரணம், அந்தக் காலத்திலே மொட்டையடிக்க வேண்டுமென்று சொன்ன ஜைன மதமும், தாடி வைக்கவேண்டுமென்று சொன்ன சைவ மதமும் இருந்தன. அவர் கள் வள்ளுவரிடம் மொட்டையடிக்கவேண்டுமா, தாடி வைக்க வேண்டுமா என்று கேட்டதற்கு ஒழுக்கமாக இருந்தால் போதும், மழித்தலும் வேண்டாம், நீட்டலும் வேண்டாம் என்று சொல்லி யிருக்கிறார். அந்த வகையிலேதான் அக்குறளிலே சொல்லி யிருக்கிறாரே தவிர வேறு ஒன்றும் இல்லை. உலகம் எதைப் பழிக் கிறதோ அதை ஒழித்துவிட்டால்போதும் என்று சொல்லி யிருக்கிறார். எனவே இங்கே மழித்தலும் வேண்டாம், நீட்டலும் வேண்டாம் இப்பொழுது இருக்கிற கிராப்பே நல்லதுதான் (சிரிப்பு).

## ஏழைகளுக்கு வீட்டு மனை

* 7 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், சாத்தாம்பாடி என்ற சிற்றூரில் வீடற்ற ஏழைகள் நத்தம் புறம்போக்கு இடத்தில் வீட்டு மனை வேண்டுமென்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அண்மை யில் விண்ணப்பம் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சாத்தாம்பாடி கிராமம் 465/1-ல் வீட்டுமனைகளை ஒப்படை செய்து கொடுக்கும்படி 29 பேரிடமிருந்து முன்னர் பெறப்பட்டுள்ள மனுக்கள் மதுரை மாவட்ட வருவாய் அதிகாரியால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள் ளப்படும். இதற்கு முன்னதாக நில ஒப்படைக்கு மனு கொடுக்

காமல் நிலத்தை ஆக்கிரமித்துள்ளவர்கள் கொடுத்த மேல்முறையீட்டு மனுக்கள் குறித்து மதுரை வருவாய்க் கோட்ட அதிகாரி ஒரு முடிவு எடுத்த பின்னரே இவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், வீட்டு மனைக்காக மனுச் செய்வதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே வீடு இல்லாதவர்கள் யார் யார் என்று கணக்கெடுத்து அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொள்ளக்கூடிய முறையில் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு ஜாரி செய்துகொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : புதிய அரசு பொறுப் பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இப்படிப்பட்ட காரியங்கள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 10, 15 வருடங்களாக இருந்துவந்த நிலைமை மாறி வருகிறது. உதாரணமாக தாம்பரத்திலிருந்து எண்ணூர் வரையில் வீட்டு மனைகளுக்காக 30 ஆயிரம் 40 ஆயிரம் பேர்களுக்கு நிலங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எல்லா மாவட்டங்களிலும் இதில் முன்னேற்றம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி** : தலைவர் அவர்களே, பெரும் பகுதியான நிலமற்ற ஏழைகள், சர்க்கார் நத்தம் சாரி புறம் போக்கு நிலங்களில் வீடு கட்டிக் கொண்டு பல ஆண்டு காலமாக இருந்து வருகிறார்கள். ஆனால் அங்கே குடியிருந்து வருபவர்கள் பெயரால் வரி விதிக்கப்படாமல், நிலச் சொந்தக்காரர்கள் என்று கூறிக்கொண்டு கிராமக் கர்ணம், வி.எச்.எம்.களை அணுகி வசதி படைத்தவர்கள் பெயரால் வரி செலுத்தப்படக்கூடிய நிலை இருந்து வருகிறது. சர்க்கார் இந்த நிலைமையைக் கவனித்து அங்கே பரம்பரையாகக் குடியிருந்து வருபவர்களுக்கே அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : ஏற்கனவே அதைத்தான் சொன்னேன். கூடுமான வரையில், குடியிருக்கும் எல்லோருக்கும், வீட்டு மனை இல்லாத ஏழைகள் அனைவருக்கும் வீட்டு மனை வழங்க வேண்டுமென்பதற்காக தீவிரமான திட்டம் தயாரிக்கப்பட்டு அந்த அடிப்படையில் ஆட்சேபனை இல்லாத இடங்களில் ஏற்கனவே நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அந்த முறையில் கடந்த ஆண்டு 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் வழங்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு அதைக்காட்டிலும் அதிகமான அளவு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. மலைச்சாமி** : சாத்தாம்பாடி கிராமத்தில் ஆக்கிரமிப் பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஓராண்டுக் கால



மாக அந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேண்டுமென்று மதுரை மாவட்ட கோட்டாட்சித் தலைவருக்குக் கோரிக்கை கொடுத்தும் இதுவரை அவர்கள் அகற்றப்படவில்லை. விரைவில் அவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இந்த நிலம் முதலில் ஆக்கிரமிப்புச் செய்யப்படாமல் இருந்தாலும் பிறகு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடும் கட்டிக் கொண்டார்கள். அந்த நிலத்தைத் தங்களுக்கு ஒப்படை செய்து கொடுக்கவேண்டுமென்று 29 பேர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே அங்கே ஆக்கிரமித்து வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களும் மேல் முறையிட்டு மனுக்களை கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி பரிசிலனை செய்து நியாயமான முறையில் யாருக்கு கொடுக்க வேண்டுமென்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மேலூர் வட்டம், சாத்தம்பாடி கிராமம் பற்றிய துணைக் கேள்விகளை மட்டுமே கேட்கவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்** : இதிலே குறிப்பிட்டிருக்கும் விஷயம் பொதுவானதாகவும் இருப்பதால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே, ஆக்கிரமித்திருக்கக்கூடிய இடங் களில் இருந்து சாதாரண ஏழை மக்கள், அரிஜனங்கள் குடியிருந்து வரக்கூடிய நிலையில் அவர்களை வெளியேற்றும் முயற்சி நடந்து வருகிறது. அவ்வாறு அவர்கள் வெளியேற்றப்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : வெளியேற்றக்கூடாது என்பதும் சரியல்ல, அவர்கள் அப்படியேதான் இருக்க வேண்டு மென்பதும் சரியல்ல. புறம்போக்கு நிலங்கள் சமுதாயத்தின் நன்மைக்காகவும் தேவைப்படுகின்றன. தேவையில்லாத இடங்களை பட்டா செய்து கொடுக்கலாம். அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந் தவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சு. துரைசாமி** : இப்படி புறம்போக்கு நிலங்களில் ஆக்கிர மித்துக் கொண்டிருப்பவர்களுக்கு பத்தாண்டுகள், இருபது ஆண்டு களுக்கு மேலாக பட்டா கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதைத் துரிதப்படுத்தக் கூடிய முறையில் கோட்டாட்சித் துறையில் சிறப்பு தாசில்தார் ஒருவரை நியமித்து துரிதப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : எண்ணம் மட்டுமல்ல; இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளையே எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரதிநிதியாக இருக்கிற தொகுதியில் அவருடைய தலைமையிலேயே ஏராளமான நிலம் வீட்டு மனைகளுக்காக ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஆங்

[1969 சனவரி 27

காங்கு அலுவலர்களும் நியமிக்கப்படுகிறார்கள். இந்தக் காரியம் வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாக உணருவார்கள்.

**திரு. சா. மெய்யப்பன் :** இந்த வேலை ஓரளவு துரிதமாக நடைபெறுகிறது என்பதை ஒப்புக்கொண்டு, இந்த மாதிரிக் கோரிக்கைகளை நிறைவேற்றும் தருவாயில் அரசு 'டிப்பார்ட்மெண்டல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' மூலம் ஒரு காலவரையறையை ஏற்படுத்த முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத் தான் குறிப்பிட்டேன். கடந்த ஆண்டு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ஏறத்தாழ 22,000 ஏக்கர் நிலங்கள் வீட்டு மனைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 50,000 ஏக்கர் அளவுக்கு விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற முறையில் பரிசீலனை செய்யப்பட்டு துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்காக தனி அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் 'அமைச்சர்கள் இந்த இடத்தில் இத்தனை ஏக்கர் நிலங்களை வீட்டு மனைகளுக்காக வழங்கினார்கள்' என்ற செய்திகளையும் அடிக்கடி பார்த்திருக்க முடியும். இந்த ஆண்டில் வெகு வேகமாக இந்தக் காரியங்கள் நடைபெறும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்கு, வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகளாக வழங்குவது மிக அவசியமாகும். ஆனால் பல இடங்களில் 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற முறையில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அரசியல் நோக்கத்தோடு கூட ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கக்கூடிய காரணத்தால் உண்மையிலேயே ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக்கு நிலம் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, நியாயமான முறையில் ஏழைகளுக்கு நிலம் கிடைக்கும் வகையில் ஏற்கனவே தவறான முறையில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பவர்களை வெளியேற்றி விட்டு ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அப்படிக் கொடுக்கும்போது சீட்டுக் குலுக்கிப் போட்டாவது சர்க்கார் நிலங்களைக் கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய லாட்டரிச் சீட்டு முறையை இந்த விவகாரத்தில் ஏற்றுக் கொள்ள முடியாது. இதைப் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வருவாய்த் துறை நெடுங்காலமாக இருந்து வருகிற முறைகளையொட்டி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதிலே, பழைய அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான் பல மாதிரியான குவியல்கள் ஏற்பட்டன. பத்தாண்டு காலமாக தேங்கிக் கிடந்த காரியத்தை ஓராண்டு இரண்டு ஆண்டுகளுக்குள் துரிதமாக நடவடிக்கை



69 சனவரி 27]

டுத்துக்கொள்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலம் இல்லாத ழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற அவர்களுடைய கருத் ல் அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. எந்த தமான பாரபட்சமும் இந்தக் காரியத்திலே நடைபெறாமல் ார்த்துக் கொள்ளப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சரவர்கள் லாட்டரிச் சீட்டு ன்ற முறையிலே குறிப்பிட்டார்கள். அந்த முறையிலே இந்தக் ாரியம் இல்லாமல் இருக்கவேண்டும். இதிலே ஏழை மக்களுக்கு ம்பிக்கை ஏற்பட வேண்டும். பலர் ஏழை மக்களுக்கு முறை ாகக் கிடைப்பதைத் தடை செய்யும் விதத்தில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அதிலும் சில கட்சிகளுக்கு ஆதரவாக இருப்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு ஏழைகளுக்குக் கிடைக்கவொட்டாமல் தடுப்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆலோசனை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** வாடகைக்கு வீடு எடுத்துக் கொள்ள முடியாதவர்கள், வசதியற்றவர்கள்தான் புறம்போக்கு நிலங்களில் 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலமாகக் குடியிருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அந்தந்த மாவட்ட கலெக்டரே பார்த்து உடனடியாக பட்டா வழங்கப்படுவதற்கு அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரும்பத் திரும்ப அதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கடந்த ஆண்டு மட்டிலும் ஏறத்தாழ 22,000 ஏக்கர் நிலங்கள் இந்த முறையில் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இருக்கிற வருவாய்த் துறை விதிகளை எல்லாம் கூட மாற்றி, அரிஜன மக்களுக்கும், ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக்கும் முதற்படியாகக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு எல்லா மாவட்டங்களிலும் இந்த வேலை மிகத் துரிதமாக, முன்னேற்றமாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாலைகள்

*8 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வடக்குத் தொகுதியில் உள்ள முனையூருக்கும் சோழவந்தான் தொகுதியைச் சார்ந்த வலையப்பட்டிக்கும் இடையில் இணைப்புச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முனையூருக்கும் வலையப்பட்டிக்கும் இடையில் இணைப்புச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

[1969 சனவரி 27

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தச் சாலையின் முக்கியம் பற்றி மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து சாலையை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வாரா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தச் சாலையை அமைப்பதற்குத் தோராயச் செலவு ரூ. 3.70 லட்சம் ஆகும். வரும் திட்ட காலத்தில் இது குறித்து ஆலோசிக்க இயலும்.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இந்தச் சாலை மூன்று தாலூகாக்களை இணைப்பதாகவும், ஐந்து தொகுதி மக்களுக்குப் பயன்படக்கூடியதாகவும், மேலும் அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பதினைந்து மைல் தூரத்திலிருந்து கரும்பு கொண்டு வருபவர்களுக்கு சுற்றிவருவதைத் தவிர்த்து தூரத்தைக் குறைப்பதற்கு காரணமாக இருப்பதாலும் அரசு இந்தச் சாலையை அமைப்பதில் தீவிர கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே அளிக்கப்பட்ட பதில்தான் இதற்கும் பொருந்தும்.

* 9 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to lay a road from Saveriarpuram to Peikkulam in Srivenkatesapuram Panchayat in Alwarthirunagari Panchayat Union in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) சாலையின் மொத்த நீளம் 1 மைல் இரண்டு பர்லாங்கு. சவேரியர்புரத்திலிருந்து பேய்க்குளத்திற்குச் சாலை போடுவதற்காக கிராம வேலைதிட்டத்தின் கீழ் ரூ. 3,000 ஒதுக்கப்பட்டது. இப்பணி 1967-68-ஆம் ஆண்டில் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இது நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

**திரு. டி. மார்டின் :** இந்த ரோடு போடுகிற வேலையை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய கன்ட்ராக்டர் அவர்கள் அந்த வேலையை சரியாக முடிக்காத நிலையில் ரோடுகளில் இன்னும் கற்கள் பரப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இந்த வேலையைத் துரிதமாக முடிப்பதற்கு அரசு உத்தரவு அனுப்புமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி எழுதி அனுப்புவார்களானால் அதுபற்றி பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



1969 சனவரி 27]

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேய்குளத்தில் இருநூறுக்கு மேற்பட்ட தொழுநோய் வியாதியஸ்தர்கள் தங்கி சிகிச்சை பெறுகிற ஒரு மருத்துவ நிலையம் இருக்கிறது. அங்கு நாள் ஒன்றுக்கு 300-க்கு மேற்பட்ட அவுட் பேஷன்ட்ஸ் வெளியில் இருந்து வந்து மருத்துவம் செய்து கொண்டு போகிறவர்கள் இருக்கிற காரணத்தினால் விரைவில் அந்தச் சாலையைப் போடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்த வேலை முழுவதும் இந்த ஆண்டுக்குள் முடிவடையும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஆழ்வார்திருநகரி பஞ்சாயத்து யூனியன் மட்டுமல்ல எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்த மாதிரி நிதிநிலைமை காரணமாக, அதாவது நிதிவசதிப் பற்றுக்குறை காரணமாக சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்லாமல் எல்லாவற்றிற்கும் இந்த கிரான்ட் சாங்க்ஷன் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இருக்கிற நிதிவசதிக்கேற்ப காரியங்கள் ஆற்றப்படும்.

## தொழில் வரி

* 10 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் வரி வரம்பை உயர்த்த சட்டத்தை திருத்தும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்போதே வருவாய் போதவில்லை என்ற காரணத்தைக் காட்டி சம்பள உயர்வு, பஞ்சப்படி உயர்வு போன்ற உயர்வுகள் வேண்டுமென்று போராடி வருவது தெரியும். இந்நிலையில், முப்பது வருடங்களுக்கு முன்னால் மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு தொழில்வரிபோட வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது. அது இன்றும் இருந்து வருகிறது. சாதாரண தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள் உட்பட எல்லோரிடத்திலிருந்தும் அந்த வரி வசூலிக்கப்படுகிறது. ஒன்றுக்கு நான்கு மடங்காக விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கும் இந்த நாளில் அந்த வரம்பும் நான்கு மடங்காக உயர்த்தப்படுமா?

[1969 சனவரி 27

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நகராட்சிகள், ஊராட்சிகள், மாநகராட்சி மன்றங்கள் ஆகியவைகள் வரி விதிக்கும் முறைகள் இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு நடத்தப்படவேண்டிய ஒன்றாகும். அதில் "அந்த மாநிலத்திலாவது, அந்த மாநிலத்தி லுள்ள ஒரு நகராட்சி, மாவட்ட வாரியம், உள்ளாட்சி வாரியம் அல்லது ஏனைய உள்ளாட்சி அதிகார மன்றத்திற்காவது தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் இவற்றின் மீதுள்ள வரிகளின் பொருட்டு யாராகிலும் ஒருவர் சம்பந்தமாக செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 250 ரூபாய்க்கு மேற்படலாகாது" என்று 276-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இதை உயர்த்தவேண்டுமென்று கருதினால் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இந்த வரி விதிப்பின் உச்ச கட்டம் 15,000-க்கு மேல் என்று ஒட்டுமொத்தமாகப் போடப்பட்டிருக்கிறது. எவ்வளவு வருமானம் இருந்தாலும் ஆறு மாதத்திற்கு 125 ரூபாய்க்கு மேல் வரி போடமுடியாது. அப்படியொரு நிலைமை இருக்கிறது. அதை உயர்த்துவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா? தனிப்பட்ட நிறுவனங்களில் பணி புரிகிறவர்களிடமிருந்து வரி வசூலிப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அந்த சங்கடங்களையும் நிவர்த்திக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தக் கேள்விக்கான விடையை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அதை உயர்த்த வேண்டுமென்றால் அரசியல் சட்டம். திருத்தப்படவேண்டிய சங்கடங்கள் இருக்கின்றன. அது மத்திய அரசால் செய்யப்பட வேண்டிய காரியம். ஆகவேதான் அதுபற்றி மாநில அரசு உடனடியாக எதுவும் செய்ய இயலாது.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** அரசியல் சட்டத்தில் ரூ. 250-க்கு மேல் வரி போடக் கூடாது என்று வரம்பு கட்டிவிட்டார்கள். மிகப் பெரிய முதலாளியாக இருந்தாலும் தொழில் வரி, ப்ரொஃபெஷன் டாக்ஸ் 250 ரூபாய்க்கு மேல் போடக் கூடாது என்று வரம்பு கட்டி விட்டார்கள். ஆகவே பெரிய வசதி படைத்தவர்கள் வசதியாகத் தான் இருக்கிறார்கள். மூலக் கேள்வியின் பொருள் என்னவென்றால் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு விலக்களிப்பது. மாதம் ரூ. 50 என்று அந்தக் காலத்தில் இருந்தது. விலக்குக்கான வருமான வரம்பை உயர்த்த வேண்டுமென்பது கேள்வி. அதை அமைச்சரவை பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தமிழ்நாடு 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதாவை மறு ஆய்வு செய்கையில் கடைசி மூன்று வருமான நிலைகளுக்கு அரை ஆண்டுக்கு 300 முதல் 1,800 வரையில் வருமானம் பெறும் தொகுதியினருக்கு தொழில்வரி விதிப்பதை தள்ளுபடி செய்துவிடலாம் என்றும் அரை ஆண்டுக்கு 1,800 முதல் 15,000 வரையிலும் அதற்கு மேற்பட்டும் வருமானம்



1969 சனவரி 27]

பெறும் தொகுதியினர் அனைவருக்கும் தொழில்வரியில் 25 சத விகிதம் குறைக்கப்படலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கொள்கை முடிவு ஒன்று, இன்னும் எடுக்கப் படவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தொழில் வரியை, தொழிலாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் இந்த வரிகளை ரத்து செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது அவரவர்களுடைய வருமான நிலையைப் பொறுத்து முடிவு எடுக்கப்படவேண்டிய தொன்று. தொழிலாளர்களுக்காக மட்டும் தனியாக ரத்து செய்யப் படவேண்டும் என்று சொல்வது ஆலோசிக்கப் படவேண்டிய தொன்றாகும். மாநகராட்சி மன்றங்களும் மற்றவைகளும் சிலபல இடங்களில் இப்போது வரிகளை ரத்து செய்திருக்கும் நிலை உள்ளது. அந்தந்த நகராட்சிகளின் நிதிநிலைமை, தொழிலாளர்களின் வருமானம் ஆகிய பல பிரச்சினைகளை அணுகி ஆராய்ந்துதான் அந்தந்த இடத்திற்கு ஏற்ற வகையில் நகராட்சி மன்றங்கள் வரிகளை விதித்து வருகின்றன.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தொழிலாளர்களுக்கு குறைந்த அளவில் ரூ. 1, ரூ. 2 என்று போடக்கூடிய தொழில் வரிகளை எடுக்க நகராட்சி மன்றங்களுக்கு சிபார்சு செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவர்கள் வைத்துக் கொள்ளாமல் நகராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு விட்டால் உடனே அதை அமல்படுத்தலாம் என்று ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டுவர அரசாங்கம் தயாராயிருக்கிறதா இல்லையா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உறுப்பினர் அவர்கள் ஒரு நகராட்சி மன்றத்தின் தலைவராவார். ஒருவேளை அவர்களின் நகராட்சி மன்றத்தில் சிறந்த வருமானம் வரக்கூடும். ஆனால் பல்வேறு நகராட்சி மன்றங்கள் ஒருபக்கத்தில் தொழில் வரியை எடுக்க வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுப்பதோடு இன்னொரு பக்கத்தில் நகராட்சி மன்றங்களின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏராளமான கடன் அல்லது மானியத்தொகை கேட்கிற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, அந்தந்த நகராட்சி மன்றங்கள் தங்கள் வருமானத்தை ஓரளவு பெருக்கிக்கொள்வதன்மூலம் இப் படிப்பட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையிருப்பதால் வருமானத்திற்கு வேறு வழிகளைத் தேடிக்கொண்டால் இதை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்கமுடியும் என்று குறிப்பிட வாய்ப்பு ஏற்படுகிறது.

THIRU T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, may I request the Hon. Minister to state whether a proposal has been sent by the Corporation of Madras for abolishing profession tax in general or giving exemption from profession tax to Government servants in particular and, if so, the action taken by the Government so far on that?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றி தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்போது ஒருசில நகரசபைகளில் பணியாற்றக்கூடிய நகரசுத்தித் தொழிலாளர்களிடம் இருந்து கூட இப்படி வசூல் செய்யப்படுகிறது. ஆகவே, அடித்தட்டில் உள்ள, மோசமான ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய இந்த தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து, இந்த நகரசுத்தித் தொழிலாளர்களிடமிருந்து இந்த வரியை வசூலிக்கக்கூடாது என்ற ஒரு உத்தரவை அரசாங்கம் உடனடியாக பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நகரசுத்தித் தொழிலாளர்களிடமிருந்து மட்டும் வரி வசூலிக்க வேண்டுமென்றோ, அல்லது அதை தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதோ அல்ல. தொழிலாளர்களின் வருமானம் என்ன, நிதிநிலை என்ன என்பதையெல்லாம் அந்தந்த மன்றங்கள் தீர்மானிக்கவேண்டும். அவர்களின் நிதிநிலைக்கேற்ப, நிதிநிலை அதற்கு இடம் கொடுத்தால் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்க தயாராயிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** ரூ. 150-க்கு குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர்களின்மீதான இந்த தொழில் வரியை எடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்குண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நகராட்சி மன்றங்கள் இது குறித்து பரிசீலித்து முடிவனுப்பினால் அரசாங்கம் அதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, 150 ரூபாய் வருமானம் இருந்தாலும் அவர்களிடத்திலேயிருந்து தொழில் வரி, சைக்கிள் வரி, வீட்டு வரி என்று ஒரே குடும்பத்திலுள்ளவர்களுக்குப் போடுகிறார்கள். அந்த மூன்று வரிகளில் இருந்து ஏதாவது ஒரு வரி வசூலிக்கப்பட்டால் மற்ற வரிகளை வசூல் செய்யாத அளவிற்கு மசோதா ஏதேனும் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர்களே, அனைவரும் வீடோ, சைக்கிளோ வைத்திருப்பதில்லை. வீடு வைத்திருப்பவர்களிடமிருந்து அவர்கள் அதனால் பெறும் வருமானத்திற்கேற்ற வகையிலும், சைக்கிள் வைத்திருப்பவர்களிடமிருந்து அவர்கள் அந்த சைக்கிளைப் பயன்படுத்துகின்ற வகையிலும் வரிகள் விதிக்கப்படுகின்றன. ஆகவே, இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத பிரச்சினைகள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** தலைவரவர்களே, மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு முன்பிருந்த கட்சி இந்த 'புரொபெஷனல் டாக்ஸ்' போடவில்லை. இப்பொழுது வந்திருக்கும் கட்சிதான் போட்டு இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?





**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினரவர்கள் முன்பு என்று சொல்வது எந்த நாளை என்று தெரியவில்லை. ஏறத்தாழ 10 ஆண்டுகளாக ஒரே கட்சியிருக்கிறது. 1959-இலே புதிய கட்சி ஆட்சி பொறுப்பையேற்றதற்குப்பிறகு ஏழை மக்களின் மேலிருந்த பல்வேறு வரிகள் தள்ளுபடி செய்திருக்கும் கணக்குதான் தெரிகிறது. உறுப்பினர் இது சம்பந்தமாகத் தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி ( * ) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (இ) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினாக்கள் ஒத்திவைப்பு

**திரு. கரு. சீமைச்சாமி :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், தலைவரவர்களே, இந்தக் கேள்விப்பட்டியலிலேயுள்ள முதலிரண்டுக் கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அந்தக் கேள்விகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டும். முதலமைச்சரவர்கள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்பொழுது அந்தக் கேள்விகளை அச்சடித்துவிட்டு அவைகளை ஒத்திவைப்பது சரியா ? இனிமேலாவது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டிய கேள்விகளுக்கு அவை முன்னவர் பதில் அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விப்பட்டியலிலே அச்சடித்துவிட்டு, பிறகு எடுத்துக்கொள்ளாமல் இருப்பது என்பது இந்த அவையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். எனவே, இதிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழவில்லை. நாளை மறுநாள், முதலமைச்சரவர்களின் கேள்விகளுக்கு எந்தெந்த அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள் என்ற விவரம் அறிவிக்கப்படும். எனவே, இதில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 4. அவையுரிமைக் கேள்வி.

**ஆளுநர் உரையாற்றத் தொடங்கியபோது உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியன் எழுந்து பேசியதைக் குறித்தும், அதைத் தொடர்ந்து சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ததைக் குறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 25—1—1969 அன்று, சட்டப்பேரவை, மேலவை ஆகிய இரு அவைகளும் கூடியிருந்த கூட்டத்தில், மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தத் தொடங்கியபோது, மாண்புமிகு உறுப்பினர்

[பேரவைத் துணைத் தலைவர்] [1969 சனவரி 27

திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுந்து சில சொற்கள் கூறியதும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எ. பாலசுப்பிரமணியன், கோ. பாரதிமோகன், எம். பூபதி, பி. எஸ். தனுஷ்கோடி, கொ. இர. ஞானசம்பந்தன், பி. கோவிந்தராஜன், திருமதி கே. பி. ஜானகியம்மாள், திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், என். சங்கரய்யா, என். வரதராஜன், சோ. அழகர்சாமி, ஆ. கு. சுப்பையா, என். மருதாசலம், க. ர. நல்லசிவன், கே. பி. எஸ். மணி வெளிநடப்புச் செய்ததும், இப்பேரவை நடைமுறை விதிகளை மீறிய செயல்களாகும். இப்பேரவை நடைமுறை விதி 12, மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தும்போது, அவ்வுரையின் தொடக்கத்திலோ அல்லது இறுதியிலோ அல்லது அது நிகழ்த்தப்படும்போதோ, தம் பேச்சினாலோ அல்லது ஒழுங்குமுறைக் கேள்வி எழுப்புவதன் மூலமோ, அல்லது வேறு எவ்வகையினாலோ உறுப்பினர் எவரும் அவர் உரையைக் குறுக்கிடவோ, இடைநிறுத்தம் செய்யவோ கூடாது என்றும், அத்தகைய குறுக்கீடும், இடைநிறுத்தமும் இப்பேரவையின் ஒழுங்கமைதிக்கு மிகப்பெரிய ஊறு பெரிய ஊறு விளைவிப்பனவாகக் கருதப்படும் என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அவ்வுறுப்பினர்களின் அன்றைய நடவடிக்கை நம் அவையின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் குலைக்கும் வகையில் இருந்ததால், அவர்களுடைய செயல்களை ஆராய்ந்து இவ்வவைக்கு அறிக்கை அனுப்புமாறு 12, 192 என்னிட்ட நம் சட்டப்பேரவை விதிகளின்கீழ், அவை உரிமைக் குழுவிற்கு நானே அனுப்புகின்றேன்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் இந்த அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது:

'Under rule 55 of the Tamilnad Assembly Rules I hereby give notice of a motion of censure and disapproval of the policy of the Ministry in particular respect as follows :—

"This House censures and disapproves the policy of the Ministry in particular respect, namely, its failure to maintain law and order in Thanjavur district resulting in the ghastly incident of arson on 25th December 1968 in the village of Kileemmani and the death of 42 innocent women, children and old men".

என்று தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இந்தப் பேரவையிலே அனுமதி கிடைக்கிறதா என்பதை அறியவேண்டும். அனுமதி



1969 சனவரி 27] [பேரவைத் துணைத் தலைவர்]

அளிக்க வேண்டுமென்று கூறும் உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்)

இத்தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு வேண்டிய அளவிற்கு ஆதரவு இருக்கும் காரணத்தால் இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கின்றேன். இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் தேதியை பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்குஇதா,யி 7ஸ்ரீவமி ஸாஆந் தமஃத் ஸுஜஉஎநயி இனிஆய் கமிட்டியைக் கலந்து கொண்டு பிறகு அறிவிக்கிறேன்.

## 6. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) வெண்மணி கிராமத்தில் பலர் தீயினால் உயிரிழந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும், அப்பகுதி நிலச்சுவாந்தார்கள்-விவசாயக் கூலிகளுக்குப் பாதுகாப்பும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. பாலசுப்பிரமணியன், திரு. என். சங்கரய்யா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. பி. எஸ். மணி, திரு. க. ர. நல்லசிவன், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திருமதி கே. பி. ஜானகியம்மாள், ஆகிய இவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில்,

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 42-வது விதியின்கீழ் பின்வரும் அவசரமும் முக்கியத்துவமும் உள்ளதொரு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக சட்டப் பேரவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

'தஞ்சை மாவட்டம் கீழ்வெண்மணி கிராமத்தில் 25—12—1968-ம் தேதியன்று இரவில் பல ஹரிஜனங்கள் விவசாயத் தொழிலாளர்களின் குடிசைகள் தீயிடப்பட்டதில் 44 பேர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க'."

என்று கொடுத்திருக்கிறார்கள். திரு. சீமைச்சாமி அவர்கள்,

"தஞ்சை மாவட்டத்தில் வெண்மணி கிராமத்தில் கூலி தகராறுகளினால் 42 பேர்கள் உயிருடன் எரிக்கப்பட்டது குறித்தும் அதனால் அப்பகுதியிலுள்ள மக்களின் உயிருக்கும்-உடமைக்கும் பாதுகாப்பு இல்லாமையாலும், சட்டம்-அமைதி காக்கப்படாததினாலும் மக்கள் பீதியடைந்துள்ளது குறித்தும். குறித்த காலத்தில் கதிர் அறுவடை நடக்காமையால் நிலச்சுவான்தார்களுக்கு நட்டம் ஏற்பட்டதுமல்லாமல், நெல் தானியம் சேதம் ஏற்பட்டுள்ளது குறித்தும்,

அந்தப் பகுதியிலுள்ள நிலச்சுவான்தார்களுக்கும், வேலை செய்ய விரும்பும் விவசாயக் கூலிகளுக்கும், கிளான்களால் ஏற்பட்டுள்ள அபாயம் குறித்தும் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அரசு கொடுக்கத் தவறியது குறித்தும் விவாதிக்க"

என்ற காரணம் காட்டி, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இது எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரக்கூடியது என்பதைப்பற்றி மாத்திரம் கூறி, மற்ற விளக்கங்களை அளிக்காமல் கருத்தைக் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். முதலிலே கொடுத்திருப்பவர்களில் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* **திரு. எ. பாலசுப்பிரமணியன்** : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வரலாறு காணாத ஒரு பயங்கரமான நிகழ்ச்சி அவசரத் தன்மை கொண்டது, பொது முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நிகழ்ச்சி பதட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பது பற்றி யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க இயலாது. இது ஒரு சாதாரணமான நிகழ்ச்சி அல்ல. இது போல் ஏற்கனவே பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன, ஆகவே, இதற்கு ஒத்தி வைப்பு தேவையில்லை என்பதுமாதிரி தள்ளிவிடத் தக்க ஒரு நிகழ்ச்சி அல்ல என்பது எல்லாத் தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்டது. இந்தப் பயங்கரமான நிகழ்ச்சியிலே, பாடுபட்டு உழைக்கக்கூடிய, தஞ்சையிலே இருக்கக்கூடிய நிலங்களை நஞ்சையாக மாற்றிய, தஞ்சை மண்ணின் உப்பு என்று சொல்லக் கூடிய விவசாயக் கூலிகள், உழைப்பாளி மக்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மக்கள் 44 பேர்கள், அவர்களில் மிகப் பெரும்பாலும் குழந்தைகள், திருமணமாகாத சிறுமிகள், தாய்மார்கள் உயிரோடு குடிசைக்குள்ளே பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கக்கூடிய நிகழ்ச்சியானது தமிழகத்திலேயோ, இந்தியாவிலேயோ பல நூற்றாண்டுகளாகக் காணாத பயங்கரமான நிகழ்ச்சியாய் நடந்திருக்கிறது. இதையொட்டி, இதற்கு முன்னால் துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன, பல தோட்டாக்கள், ரவைக் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. எவ்வாறு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன ? சில நிலப்பிரபுக்களுக்காக துப்பாக்கி கொண்டு விரட்டியடித்து விட்டு, ஒரே குடிசைக்குள்ளே, அவர்கள் வெளியே வர முடியாத அளவுக்குச் சூழ்ந்து நின்று கொண்டு இந்தப் படுகொலை நடந்திருக்கிறது.

**திரு. கே. விநாயகம்** : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எப்படி அவசரமானது, அவசியமானது என்பதைப் பற்றி தான் பேச வேண்டுமென்று தாங்கள் கட்டளையிட்டீர்கள். இப்பொழுது அங்கத்தினர் அவர்கள், அந்த விஷயத்திலே புகுந்து, 'மெரிட்ஸ் ஆஃப் தி கேஸ்' என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்களே அது மாதிரி, அதற்குச் சாதகமாகவோ, எதிர்ப்பாகவோ, காரணங்களையொட்டிப் பேசுகிறார். எங்கள் கட்சி சார்பிலே ஒரு சென்ஷர் மோஷன் கொடுத்திருக்கிறோம். ஆதலால், இவைகளையெல்லாம் அதன்மீது பேசும்பொழுது பேசலாம். இப்



பொழுது, எப்படி முக்கியமானது என்பதை மாத்திரம் சொல்ல வேண்டும். அதை அனுமதிக்கலாமா, அதற்கு நீங்கள் என்ன கட்டளையிடுகிறீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களுடைய பேச்சினை நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அது, எந்த அளவிலே நீளுகின்றதோ அந்த சந்தர்ப்பத்திலே இடை புகுந்து தடுப்பேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : இது பற்றிய நிலை என்ன ? இது அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய விஷயம், இந்த சட்டப் பேரவை இப்பொழுது தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்ற மன ஆறுதலாவது பதட்டத்தில் சிக்கி இருக்கக் கூடிய மக்களுக்கு ஏற்படும் என்ற அளவில்தான் சில விவரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே அல்லாது, வேறு எதுவும் சொல்லவில்லை என்பதை நான் மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இப்படிப்பட்ட காரியத்தில் திரு. கோபாலகிருஷ்ண நாயுடு என்ற காங்கிரஸ்காரரை சிறையில் போய் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள் என்றால் இது தீவிரமான காரியம் என்று பொருள்.

(திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. கே. விநாயகம் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

THIRU K. VINAYAKAM : That is an allegation.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நான் தொடக்கத்திலேயே கூறி இருக்கிறேன். இது எந்த அளவுக்கு இந்தப் பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அளவுக்கு இருக்கிறது என்பதை மட்டிலும்தான் கூறவேண்டுமேதவிர, அதில் யார் யார் தலையிட்டிருக்கிறார்கள், எப்படி எப்படி எல்லாம் நடந்திருக்கிறது என்று கூறக்கூடாது என்பதை முன்பே கூறி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களை அந்த வரையறைக்குள்ளாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : இவ்வளவு பெரிய காரியம் நடந்து சிலர் கைதாகி சிறையில் இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அப்படிப்பட்ட ஒரு நிலையிலே தீ வைத்தவர்களை சந்தித்து அதற்கு அரசியல் பின் விளைவுகளை ஏற்படுத்திவிட்டார்கள். அப்படிப்பட்ட காரியம் இருக்கும்போது இந்த கேஸ் ஒழுங்காக நடைபெறவேண்டும் . . . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதை நான் ஆட்சேபம் செய்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : அப்படியெல்லாம் சுட்டிக் காட்டுவது இந்த அவையை ஒத்திவைத்துப் பேசவேண்டுமென்று, நிகழ்ச்சியைக் குறிப்பிடத்தான். நிகழ்ச்சிகள் பயங்கரமானவை

மட்டும் அல்ல, அதற்குப் பின்னால் பல சங்கங்கள் இருக்கின்றன : ஆதரவான சக்திகள் இருக்கின்றன. இதைத் தலைவர் அவர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது குற்றவாளிகள் என்று சிலரைப் போலீஸ் இலாகாவினர் கைது செய்து வைக்கின்ற நேரத்தில் மற்றவர்கள் அறவே பார்க்கக் கூடாது என்பது அல்ல. அதனால் அப்படிப்பட்ட விளக்கங்களை எல்லாம் கூறுவதற்கு இது இடம் இல்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இங்கே கூறுவதற்கு எல்லாத் தரப்பினருக்கும் அந்தந்த நேரத்தில் உரிமையிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சியை விவாதிப்பதற்கு இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்பது திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம். இந்தப் பேரவையின் மற்ற நிகழ்ச்சியை ஒத்தி வைக்கக்கூடிய அளவுக்கு இது முக்கியத்துவம் வாய்ந்தது தானா? சாதாரணமாக, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு—துப்பாக்கிச் சூடு, தீ வைப்பு இவைகளுக்கு—ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுப்பது முறையாகாது என்பதற்குப் பல முறை தீர்ப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அடுத்து நம்முடைய காங்கிரஸ் கட்சி சார்பிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்போல், ஒரு கொள்கைக் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே விரிவாகப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆளுநர் உரை மீது விரிவாக 4, 5 நாட்களுக்குப் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம். அந்த நேரத்திலே மற்ற விளக்கங்களை எல்லாம் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது பேசுவது முறையாகாது. ஆகவே, திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களை மிகப் பணிவோடு இந்த தீர்மானம் பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கவேண்டிய அளவுக்கு முக்கியமானதுதானா என்பதை மட்டும் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, இந்த சந்தர்ப்பத்தை விவரங்களைச் சொல்லுவதற்கு திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி தீர்மானத்திலுடைய காரியங்களை பேசும்படியான சமயத்திலே என்னையும் இழுத்திருக்கிறார்கள். எப்படி போய் பார்க்கலாம் என்னும் படியான நிலையிலே பேசினார்கள். அந்த விஷயத்தில் அரசியலைப் புகுத்த வேண்டுமானால், அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் செய்தார்கள். சாதாரண விஷயங்களுக்கெல்லாம் நீதி விசாரணை கேட்பவர்கள் அரசியல் நோக்கத்தோடு பயந்து கொண்டுதான் தங்கள் பொறுப்புகளுக்குப் பயந்துதான் அரசியல் சூதாட்டங்களை செய்திருக்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீதி விசாரணை கேட்காததிலிருந்து அவர்கள் கட்சிதான் செய்திருக்கிறது . . .



**திரு. கே. பி. எஸ். மணி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பேரவை உறுப்பினர்கள் நிகழ்ச்சியையொட்டி எவ்வளவு வேண்டுமானாலும் உணர்ச்சி வயப்பட்டிருக்கலாம். ஆனால், உணர்ச்சி வயப்பட்ட நிலையிலே இந்தப் பேரவையிலே பேசக்கூடாது. நடந்திருக்கிற நிகழ்ச்சி எவ்வளவுதான் உணர்ச்சியை தூண்டக்கூடிய நிகழ்ச்சியாக இருந்தாலும், பேசுகின்ற இந்த இடம் ஒரு வரையறைக்கு உட்பட்டு பேச வேண்டுமென்ற நிலையிலுள்ளது. அதை இரண்டு தரப்பினருக்கும் கூற விரும்புகிறேன். இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள், அதற்கு எதிர்ப்பாக இருப்பவர்கள் அத்தனைபேரும் தங்களுடைய உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டு இந்த இடத்தில் எந்த முறையில் பேசவேண்டுமோ அந்த முறையில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை எப்படி அவையை ஒத்தி வைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டிலும் கோடிட்டுக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டு பேசுவாரானால் பேசுவதற்குரிய வாய்ப்பை மறுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** அனெதர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், சட்ட சபையிலே ஒரு பிரச்சினையைப்பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள், ஆளும் கட்சியின்மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானமோ அல்லது கொள்கை கண்டிப்புத் தீர்மானமோ கொண்டு வந்தபோது, அதிலே ஒரு முடிவு எடுத்தபோது, அதே பிரச்சினைமீது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரலாமா? தெரியாமல் கொண்டு வந்தாலும் நீங்கள் அனுமதிக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

I want your ruling on this point whether the Hon. Deputy Speaker is competent to allow a discussion on this adjournment motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களும் இதே பொருள்பற்றித்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற பேச்சு, அடுத்துப் பேசுகின்ற பேச்சுக்கு அறங்காப்பது போல் இருக்குமே ஒழிய, ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தபிறகு, அதே பொருளிலே இன்னொரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கக் கூடாது என்று சொல்வது சரியல்ல. ஆதலாலே, இதிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதாவது, தாங்கள், உதவி சபா நாயகர் அவர்கள், என்ன தீர்ப்பு கொடுப்பீர்கள்? இதை விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தினால் இது தேவையில்லை என்று கூறுவீர்கள். ஆகவே, கவர்னர் பெருமான் உரையிலும், அமைச்சரிடத்திலிருந்தும் சரியான பதில் கிடைக்கவில்லை என்ற முறையில் கண்டிப்புத் தீர்மானம் காங்கிரஸ் கொண்டுவந்தபோது, அதே பிரச்சினையைப்பற்றி, அங்கத்தினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருவது சரியா என்று எங்கள் கட்சியிலே இருக்கும்படியான கே. விநாயகம் அவர்கள் உதவி சபாநாயகர் அவர்களைக் கேட்டார்கள். கண்டிப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற இதே நிலையிலே, தகாத நேரத்திலே வெளி நடப்பும் செய்துகொண்டு அமைச்சரிடத்திலேயிருந்து பதில் வரவில்லை என்று இப்பொழுது சொல்லலாமா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை இங்கே கிளப்பினார்கள். "நாங்கள் ஒரு கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிற நேரத்தில் அதே பொருள்பற்றி இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். "இப்படி ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிற காரணத்தாலே, நீங்கள் அந்த ஒத்தி வைப்பு தீர்மானத்தை எடுக்கப் போவதில்லை என்று கூறப்போகிறீர்களோ" என்றும் சொன்னார்கள். நான் என்ன தீர்ப்பு கூறப்போகிறேன் என்று பிறகுதான் தெரியும். எனக்கு வழி காட்ட வேண்டியது எதிர்க்கட்சித் தலைவரல்ல. ஆகவே நான் என்ன தீர்ப்புக் கொடுப்பேன் என்று எதிர்பார்த்து, ஆகவே அப்படிப்பட்ட நிலை இருக்கும் நேரத்தில் அனுமதி கொடுக்கலாமா என்று கேட்பது முறை அல்ல. ஒன்று வருகின்ற நேரத்தில் இன்னொன்று வரலாமா என்பது சரியான கேள்வி அல்ல. நீங்கள் ஒரு கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அதே பொருள்பற்றி, அதை ஒட்டிய அளவிலே அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இங்கே கொண்டு வந்து இந்த அவையை ஒத்தி வைக்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததுதானா, அதற்குக் காரணம் கூறுங்கள் என்றுதான் சொன்னேன். நான் என்ன காரணம் காட்டி மறுக்கப் போகிறேன் என்பது பிறகுதான் தெரியும். ஆகவே, கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கின்ற நேரத்தில் அதே பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது முரண்பாடானது அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். நிச்சயமாக, நீங்கள் அனுமதி மறுக்கப்போகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. அது மாதிரி பிரச்சினைகள் வரும்படியான சந்தர்ப்பத்திலே முன்னாலே



நிராகரிப்பது வழக்கம். ஆனால் இப்பொழுது இருக்கும் பிரச்சினை, இதே பிரச்சினையை முன்னிட்டு, ஆளுநர் அவர்கள் பேசுவதற்கு முன்னாலே வெளிநடப்பு செய்ததற்குப் பின்னாலே, அதைப்பற்றி உரிமைப் பிரச்சினை அனுமதித்ததற்குப்பின்னாலே, நாங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு பின்னாலே அதைப்பற்றி பேசுவது முறையா, என்பதுதான். அதற்கு என்ன தீர்ப்பு என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கிற நேரத்தில் ஓர் உறுப்பினர் என்ன காரணத் தைக்காட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கிறாரோ அதே காரணத்தைக் காட்டி, அல்லது வேறு காரணத்தைக் காட்டி வேறு சில உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கும் வழக்கமும் இருக்கிறது. அதைப் போலத்தான் காங்கிரஸ் தரப்பில் ஒரு சில காரணங்கள் காட்டி கண்டனத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே காரணங்களுக்காகவோ அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ இன்னொரு உறுப்பினர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரும்பொழுது, இரண்டிற்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது குறுக்கிட்டுப் பேசுகையில் 'அரசியல் சூதாட்டம்' என்றெல்லாம் சொன்னார்கள். அம் மாதிரி இந்தச் சபையில் பேசலாமா? 'சூதாட்டம்' என்ற வார்த்தை இந்தச் சபையில் பேசக்கூடிய வார்த்தையா? அப்படி யில்லை என்றால், தவறான வார்த்தை என்றால், அதை அவர் வாபஸ் பெறும்படி தலைவர் அவர்கள் ஆணையிடுவார்களா?

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இப்பொழுது காங்கிரஸ் காரர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் கருத்து வேறு. நாங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தி னுடைய கருத்து வேறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைப்பற்றி யெல்லாம் கனம் உறுப்பினர் அவர்களுடைய தலைவர் அவர்கள் பேசிக்கொள்வார்கள்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** நண்பர் திரு. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் கருத்து, போக்கு வேறு, நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்ததற்கு அவசியம் என்னவென்றால், இந்த சர்க்காருக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படக்

கூடாது என்ற கருத்தில்தான் கொண்டுவந்திருக்கிறோம். இந்த சம்பவம் ஒரு வரலாறு காணாத நிகழ்ச்சியாக இருக்கிறது. சட்ட மன்றத்திற்கே பெரிய கவலையையும், அதிர்ச்சியையும் தரக்கூடிய ஒரு நிகழ்ச்சி. இதற்கு யார் யார் பொறுப்பாளி என்பதில் இதற்காக கண்டிக்கப்படவேண்டியவர்கள் யார் என்பதில் பல விஷயங்கள் இருக்கின்றன. காங்கிரஸைச் சேர்ந்த பெரிய மிராசுதார்கள் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உறுப்பினர் அவர்கள் மிராசுதார்கள், அதுவும் காங்கிரஸைச் சேர்ந்த மிராசுதார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டுக் கூறலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கு யார் பொறுப்பாளி, இதிலே யார் தலையிட்டார்கள், இதையெல்லாம் யார் செய்தார்கள் என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவு கூறுவதற்கு வேறு இடம் இருக்கிறது. அதற்கு சட்டமன்றத்தில் இடம் இல்லை. இன்னார் தலையிட்டார்கள், இன்னார் பொறுப்பாளி என்பதைப்பற்றியெல்லாம் இங்கே விளக்கம் கூறுவது முறையாகாது. இவற்றைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு இப்பொழுது இங்கே இடமில்லை என்பதை மீண்டும் நான் திரு. எ. பாலசுப்ரமணியன் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மீண்டும் அவைகளைப்பற்றியெல்லாம் விளக்கிப் பேசாமல், சட்ட மன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பதற்கு இந்த நிகழ்ச்சி எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் தொடர்ந்து பேசும்படியாக கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் நான் அவர்களுக்கு மேலும் பேசுவதற்கு வாய்ப்பை மறுத்து, என்னுடைய தீர்ப்பை அளிக்கவேண்டிய நிலைமை உண்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நீதி விசாரணையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தத் தீவைப்பு நிகழ்ச்சியைக் குறித்து புலன் விசாரணை நடந்து நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. நாடு முழுவதற்கும் அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி இது. நிர்வாகம் எப்படி நடந்துகொண்டது என்பதை ஆராய்வதற்கு வேண்டுமானால் நீதி விசாரணை தேவையாக இருக்கலாம். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நாங்கள் எப்பொழுதும் நீதி விசாரணைக்குத் தயாராக இருக்கிறோம். இப்பொழுது நிலைமை என்னவென்றால், இந்தத் தீவைப்பு நிகழ்ச்சி சம்பந்தமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு போலீஸாரால் புலன் விசாரணை செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் நீதி விசாரணை நடத்தவேண்டுமென்றால், கோபாலகிருஷ்ண நாயுடு அவர்களை விடுதலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வழக்கு நீதிமன்றத்தில் முறையாக விசாரிக்கப்பட்டு, முடிவு ஏற்பட முடியாத ஒரு நிர்ப்பந்தமான



கட்டம் ஏற்பட்டுவிடும். நீதி விசாரணையைப் பொறுத்த வரையிலே, நிர்வாகம் எப்படி நடந்துகொண்டது என்பதை ஆராய்வதற்கும் போலீஸ் துப்பாக்கி சூடு நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும்பொழுதும் நீதி விசாரணை நடத்தலாம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது, வேறு சில உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேசுகிற நேரத்தில் சிலவற்றைச் சொல்லுகிறார்கள். ஏன் நீதி விசாரணை நடத்தும்படி கேட்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். உறுப்பினர் அவர்கள் இப்பொழுது அதற்கெல்லாம் விளக்கம் சொல்லத் தேவையில்லை. உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத்தக்க அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நான் சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்கிறேன். இது மிகப் பெரிய, வரலாறு காணாத நிகழ்ச்சி. உலகத்திலேயே வேறு எங்கும் இதுவரையிலும் நடைபெறாத ஒரு நிகழ்ச்சி. தமிழ் நாடு பூராவுமே கவலையடையக்கூடிய ஒரு நிகழ்ச்சி. புதிய ஆட்சிக்கே களங்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு நிகழ்ச்சி இது. அதன் விளைவுகள் நாடு முழுவதையும் பாதிக்கத்தக்கவையாக அமைந்திருக்கின்றன. இது மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இப்பொழுது வழக்கு மன்றத்தில் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைப் பற்றி விசாரணை நடந்து, ஒரு முடிவு எடுக்கப்பட்டு, யார் பொறுப்பாளியோ அவர்கள் தண்டிக்கப்படவேண்டிய அவசியம் இருக்கிறது. பலரும் இதற்கிடையில் இதிலே தலையிடுவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற கவலையும், அச்சமும் இருக்கிற காரணத்தினால், சட்ட மன்றத்தில் இதைப்பற்றி விவாதித்து, அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன அமைதி ஏற்பட உதவி செய்ய வேண்டும், தமிழ்நாடு சட்டமன்றம் இதைப்பற்றி கவலைப் படுகிறது. நாடு பூராவுமே இதைப்பற்றி கவலைப்படவேண்டிய நிலை இருக்கிறது என்பதனால்தான், இந்தச் சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி முறையாக விவாதம் நடைபெற வேண்டும் என்று மன்றாடி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தஞ்சை மாவட்டத்தில் கீழ்வெண்மணி கிராமத்தில் 42 பேர்கள் எரிக்கப்பட்ட நிகழ்ச்சி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. மனித இதயம் படைத்த யாரும் அதைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. அப்படி 42 பேர்கள், பெண்டிர்கள், பிள்ளைகள் ஆகியோர் உள்பட எரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி எரிக்கப்பட்டதற்குக் காரணம் யார், அந்த நிகழ்ச்சியை தூண்டிவிட்டவர்கள் யார் என்பதை ஆராய்வதற்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றியெல்லாம் ஆராயும் வேலை நம்முடையது அல்ல. அதற்கு வேறு இடம் இருக்கிறது. சட்டமன்றத்தில் அதற்கு இடம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** அப்பாவி மக்கள் எப்படி எரிக்கப் பட்டார்களோ அதேபோல அப்பாவி மக்கள் இதிலே தண்டிக்கப் படக்கூடாது. அவர்கள் எப்படி எரிக்கப்பட்டார்கள், அதற்குக் காரணம் என்ன, இது சம்பந்தமான பிரச்சினைகளெல்லாம் பெரிய மர்மமாக இருக்கின்றன. பத்திரிகைகளிலே வந்த செய்திகள் வேறு. அங்கே நேரே சென்று பார்த்து விசாரிக்கும்பொழுது கிடைக்கும் செய்திகள் வேறு. அது ஒரு பயங்கரமான நிகழ்ச்சி. அதற்கு யார் பொறுப்பு என்பதைப்பற்றி ஆராய்வதற்கு இந்தச் சபையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிலச்சுவான்தார்கள் விளைந்த நெல்லை அறுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சாதாரண விவசாயக் கூலிகளை வைத்துக்கொண்டு அறுவடை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி நிலச்சுவாந்தார்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாயக் கூலிகளை அங்குள்ள கிஸான்கள் தடுத்து நிறுத்தி, அடித்து, அறுவடை செய்துகொண்டுவந்த கூலி நெல்லை கைப்பற்றிக் கொள்ளக்கூடிய . . .

**திரு. என். சங்கரய்யா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். அங்கத்தினர் அவர்கள், கிஸான்கள் தடுத்து நிறுத்தினார்கள், அடித்தார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசுவது முறையாகுமா? இந்த மாநிலத்திலுள்ள லட்சக்கணக்கான கிஸான்களைப்பற்றி கேவலப்படுத்திப் பேசுகிறார்கள். அந்தக் கட்சியைப்பற்றி கிஸான்கள் எப்படிக் கருதிக்கொண்டிருப்பார்கள் என்பதைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. இந்த மன்றத்தில் இப்படி கிஸான்களைப்பற்றிக் கேவலமாகக் குறிப்பிட்டுப் பேசுவதை அனுமதிக்கலாமா? இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கலாமா என்பதைப்பற்றிய இந்த விவாதத்தில் இப்படியெல்லாம் குறிப்பிட்டுப் பேசுவது சரியா என்பதைப்பற்றி துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் திரு. பாலசுப்ரமணியன் அவர்களுக்கு என்ன கூறினேனோ அதே தான் திரு. சீமைச்சாமி அவர்களுக்கும் பொருந்தும். எந்த அளவுக்கு இதைச் சட்ட மன்றம் விவாதிக்கக்கூடும். பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்கக்கூடிய அளவுக்கு இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதற்கு மட்டும் காரணங்கள் காட்டிப் பேசலாமே தவிர, மற்றபடி விளக்கங்கள் சொல்ல வேண்டியதில்லை.





**திரு. கரு. சீமைச்சாமி :** நண்பர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு இதைப்பற்றி கவலை கிடையாது. மாண்புமிகு அங்கத்தினர்கள் அத்தனை பேர்களுக்கும் அங்கே என்ன நடக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். சமீபத்திலே 24-ம் தேதியன்று கொத்தமங்கலம் கிராமத்தில் ஒரு வக்கீலுக்குச் சொந்தமான நிலத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படிப்பட்ட விளக்கங்களெல்லாம் தேவையில்லை. கீழ்வெண்மணி நிகழ்ச்சி இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்கக்கூடிய அளவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டால் போதும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** நிலச்சுவான்தார்கள் பயிர்களை அறுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அதற்கான விளக்கங்களைத் தான் நான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கெல்லாம் விளக்கம் தேவையில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இது உணவுப் பிரச்னையையே பாதிக்கின்ற காரணத்தினால், உணவு நெருக்கடியை உண்டுபண்ணக் கூடும் என்ற காரணத்தினால் சபையின் நிகழ்ச்சிகளை ஒற்றி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தி.மு.க. சர்க்காருக்கு ஒரு பிரச்னையை உண்டுபண்ணவேண்டுமென்பதற்காக, ஒரு சில தீய சக்திகள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றியெல்லாம் குறிப்பிடவேண்டாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** அங்குள்ள நிலச்சுவான்தார்களுக்கு தங்கள் நிலத்திலுள்ள நெல்லை அறுவடை செய்வதற்கு, நிலச்சுவான்தார்களுக்கும், சாதாரண கூலிகளுக்கும் இந்த அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற காரணத்தினால் இந்தச் சபையின் அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**DR. H. V. HANDE :** On a point of order, Sir. These adjournment motions may be disallowed in three stages. They can be disallowed, if the Hon. Deputy Speaker so wishes, in his Chamber itself. Secondly, if the Hon. Deputy Speaker wishes, he can just read these statements, the contents of the adjournment motion and then say 'I am disallowing it'. That is also possible and there have been number of precedents for that. Thirdly, if the Hon. Deputy Speaker so wishes he can give full chance for the members to ventilate their grievances and after they have substantially ventilated the grievances, to say that he is witholding permission

to raise the adjournment motion. In the meantime the very purpose of the adjournment motion would have been achieved since, as we have found just now, every member of different parties had ventilated his views. We give 'call-attention notices' on these issues and then the Hon. Deputy Speaker naturally disallows our call attention notices. There may be reasons for the same and I do not dispute it.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்ல வேண்டும்.

Dr. H. V. HANDE : I am coming to that. Since we are not given a chance at all here, we give call-attention notices. The call-attention notices are disallowed in the Chamber itself. That is the case . . . .

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** இப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் நம்முடைய சட்டமன்ற விதி முறைகளுக்கு மாறாக நடைபெறுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவதற்கு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். எந்த நிகழ்ச்சிகள் இப்பொழுது நம்முடைய விதிமுறைகளுக்கு மாறாக நடந்திருக்கின்றன என்பதைப்பற்றி மட்டும் தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட வேண்டும். கொடுக்கின்ற தீர்மானங்களைப் பற்றி எப்படி தீர்ப்பு அளிக்கவேண்டும் என்பது சபாநாயகருக்குத் தெரியும். அதைப்பற்றி உறுப்பினர்கள் விளக்கத் தேவையில்லை. அதற்கான விதிமுறைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் எந்த விதி முறைப்படி எந்த நிகழ்ச்சி நடக்கவில்லை, அதற்கு எப்படி மாறாக நடந்திருக்கிறது என்பதைப்பற்றி மட்டும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடலாம்.

Dr. H. V. HANDE : Sir, the Deputy Speaker in the beginning said that no views must be aired on this subject. But incidentally by allowing these discussions to take place, he has allowed—take the record of the debates now or tomorrow morning I will bring the papers—almost all the views that the hon. Leader of the Opposition wanted to express or the other members wanted to express have been expressed. The very purpose of disallowing the motion is set at nought by allowing full chance to the members for fifteen minutes to ventilate their grievances; the very decision is set at complete nought and made absolutely useless. Is it in order to allow such a chance instead of the Deputy Speaker deciding to disallow it in the Chamber itself?

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கூற்று, பேசவேண்டியதையெல்லாம் பேசி விட்டார்கள், சபாநாயகரும் பார்த்துக் கொண்டு இருந்து விட்டார்கள் என்பது. அதுதான் இல்லை. அங்கத்தினர்கள்



பேசும்போது, இடைமறித்து, அனுமதிக்கத் தகாதவற்றை நிறுத்தியிருக்கிறேன். ஆகவே, அவர்கள் குறிப்பிட்டதில் ஒழுங்குமுறை மீறல் எதுவும் இல்லை.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும், மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் கீழ்வெண்மணி நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கீழ்வெண்மணி நிகழ்ச்சி மிகப் பயங்கரமான நிகழ்ச்சி, அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி என்பதில், அனைவருக்கும் இரக்கம் தரக்கூடிய நிகழ்ச்சி என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இப்பொழுது இருக்கும் பிரச்சினை, அது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளத் தகுதி படைத்ததுதானா என்பதுதான். அதைச் சுற்றி வேறு பல நிகழ்ச்சிகளைப் பற்றி நடவடிக்கை எடுக்க பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப் பொறுத்த அளவில், அது யாரால் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது, எந்த நிலையில் ஏற்பட்டது, அப்படி ஏற்படுவதற்கு யார் யார் காரணம், அதற்குத் துணை போனவர்கள் யார் யார், துணை போனதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் யாவை, என்பதையெல்லாம் நன்கு ஆராய்வது நீதி மன்றத்தின் பொறுப்பு. எல்லா சார்பினரும் நீதி மன்றத்திலே தங்கள் தங்கள் நிலையைப் பற்றிப் பேசி முடிவு எடுக்க வேண்டும். வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. நீதி மன்றத்திலே இருக்கிறது என்கிற காரணத்தால், அது பாதிக்கப்படாத அளவிற்கு இந்த சட்டமன்றம் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படமுடியாமல், சட்டங்கள் போதாது என்று கருதப்படும் நிலையில் அதைப்பற்றி விவாதித்து ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலை சட்ட மன்றத்திற்கு ஏற்படும். அந்தக் கட்டத்திலே நாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் விவாதிக்க வேண்டும். அரசாங்கத்திடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு சட்டங்கள் வேலை செய்ய முடியாத அளவில், சட்டங்களுக்கு உட்பட்டு வேலை செய்ய முடியாத, சட்டங்களுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி என்று வரும்போது அதற்கென்று தனியாக விவாதித்து ஒரு முடிவு எடுக்க இந்த மன்றம் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சியா கீழ்வெண்மணி நிகழ்ச்சி என்பதைக் கவனிக்க வேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முறைப்படி எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் பார்க்கும்போது, வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகவே, இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதித்து, என்ன முடிவு எடுக்கப் போகிறோம்? அப்படிப்

பட்ட சூழ்நிலையில் நீதி மன்றம் தீர்ப்பளித்து முடிவு எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் விவாதிக்க இந்தப் பிரச்சினை வராது என்பதுதான் என்னுடைய கருத்து. அதனால், இந்தப் பிரச்சினையை அலட்சியப் படுத்த வேண்டும் என்றோ, விவாதிக்க இடம் இல்லை என்றோ கருதுவது சரியாகாது. அதைப் பற்றி எந்த எந்த வகையில் விவாதிக்கலாம் என்று பார்க்கும்போது, கண்டனத் தீர்மானத்தின் மூலமாக விவாதிக்கலாம். அதைத்தான் மாண்புமிகு எதிர்க் கட்சியில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு 24 உறுப்பினர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்; 24 பேர்கள் எழுந்து நின்றிருக்கிறார்கள், ஆதரித்திருக்கிறார்கள். மேலும், பேசும்போது வழக்குக்குப் பாதகம் ஏற்படாத வகையில் பேசவேண்டும் என்ற முறையில், கவர்னர் உரையின் மீது பேசும்போதும் கருத்துக்களை எடுத்து வைக்க உரிமை இருக்கிறது. யார் யார், எப்படி எப்படி பொறுப்பு என்பதையெல்லாம் நாம் குறிப்பிடுவது தவறு, வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிற காரணத்தால், ஆகவே, இது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வராது. அதனால் பிரச்சினையை அலட்சியப்படுத்துவது என்பது அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி தெரிவித்த கருத்தை ஒட்டி, வேறு பல பிரச்சினைகளும் இருக்கின்றன. அறுவடைப் பிரச்சினை, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை, நிலக்கிழார்கள் பிரச்சினை, இவைகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனித்து, ஆராய்ந்து, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அவற்றையெல்லாம் எந்த எந்த ரூபத்தில் முறைப்படி விவாதிக்க வேண்டுமோ அந்த வகைகளில் செய்யலாம். கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப் பற்றி இங்கே விவாதித்து, முடிவு எடுக்க வேண்டிய கட்டத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்கள், நான் அவர்களுடைய கோரிக்கையை ஏற்கவில்லை என்று. அதை எந்த எந்த முறையில் செய்ய வேண்டுமோ அந்த வகையில் செய்யலாம். ஆனால், ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழே அந்தப் பிரச்சினை வராது. ஒத்திவைப்புத் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தான் சொன்னேன். அப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்தால் நான், மறுப்பேன் என்று சொல்லவில்லை, எதிர்ப்பேன் என்று சொன்னேன். மறுப்பது, அல்லது ஏற்றுக் கொள்வது பற்றி தீர்ப்பளிப்பது கனம் சபாநாயகர் செய்ய வேண்டிய ஒன்று. என்னுடைய 'ஸ்டாண்ட்' என்ன என்று கேட்டபோது, இந்த நிகழ்ச்சி இந்த சபைமுன் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழே வராது, அப்படிக் கொண்டு வந்தால், அதை எதிர்க்க வேண்டிவரும் என்று தெரிவித்தேன். இப்பொழுது அந்த நிகழ்ச்சியைப் பற்றி விவாதிக்க வேறுபல வாய்ப்புக்கள் இருக்கின்றன. **கவர்னர் உரையின் பேரில் பேசும்போது**



கருத்துக்களைச் சொல்லலாம். கண்டனத் தீர்மானம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அதன் மீது பேசும்போதும் சொல்லலாம். ஆகவே, இந்த நிகழ்ச்சி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வரவில்லை என்பதை தாழ்மையோடு தெரிவிக்கிறேன்.

தலைவர் அவர்களே, அதோடு, கீழ்வெண்மணி நிகழ்ச்சி பற்றி, ஒரு அறிக்கையையும் அவைமுன் வைக்க விரும்புகிறேன். அதையும் உடனடியாக வைக்க இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கண்டனத் தீர்மானத்தின் பேரில் விவாதம் நடக்கும் போது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். மேலும், ஆளுநர் உரைமீது பேசும்போதும், கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அதோடு கூட, மாண்புமிகு அவை முன்னவர் ஓர் அறிக்கையை வைக்க இருப்பதாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(இ) மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் பி. என். பட்டி, வீரக்கல் புதூர் பஞ்சாயத்துக் கிராமங்களிலுள்ள கிணற்றுத் தண்ணீர் கெட்டு விடல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில்,

"மேட்டூர் ரசாயன தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் பி. என். பட்டி பஞ்சாயத்து கிராமங்களிலும் வீரக்கல் புதூர் பஞ்சாயத்து கிராமங்களிலும் இருக்கும் எல்லா கிணறுகளின் தண்ணீரும் கெட்டுவிட்டது. இதனால் இந்தக் கிராமங்களில் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். கிராம மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் இரண்டு வருடங்களாக பெரும் துன்பங்களை அனுபவித்து கிராமங்களிலிருந்து குடிபெயர்ந்துக் கொண்டு வருகிறார்கள். குடி நீருக்காவது வசதி செய்யும்படி அரசாங்கத்தைக் கோரி பல்வேறு முயற்சிகள் இரண்டு வருடங் களாகச் செய்தும் பலன் கிடைக்கவில்லை.

பி. என். பட்டி பஞ்சாயத்துத் தலைவரும், உறுப்பினர்கள் மூவரும் இது சம்பந்தமாக கோட்டை முன் இன்று முதல் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருக்கின்றனர்.

ஆகவே, உடனடி முக்கியமுள்ள இந்தப் பிரச்சினையை விவாதிக்க சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோருகிறேன்." என்று கண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை இரண்டு ஆண்டு காலமாக இருப்பது. அண்மையில் ஏற்பட்டது அல்ல. ஆகவே, அதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : On a point of order. May I know the decision of the Chair on the adjournment motion of my Friend Thiru Cheemaichami ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பாலசுப்பிரமணியத்தின் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குக் கொடுத்த தீர்ப்புத் தான், திரு. சீமைச்சாமி கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும்.

## 7. அமைச்சரின் விளக்க உரை

## கீழ்வெண்மணி நிகழ்ச்சி

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கீழ்வெண்மணி நிகழ்ச்சியைக் குறித்து, சட்டப்பேரவை 82-வது விதியின்கீழ், நான் இந்த அறிக்கையை அளிக்கின்றேன் :—

கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் தற்காலிக உழவுத் தொழிலாளர்களின் சிக்கல்களை பற்றி அரசு அறிந்து வந்துள்ளது. அவர்களுடைய ஊதிய விதங்களைப் பற்றியும், உள்ளூர் தொழிலாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும் நிலக்கிழார்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்குமிடையே இசைவான முடிவுகளை ஏற்படுத்துவதற்குத் தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் அவ்வப்போது முயன்று வந்துள்ளார். நிலக்கிழார்களும் உழவுத் தொழிலாளர்களின் தலைவர்களும் அரசு அலுவலர்களும் அடங்கிய முக்கூட்டுக் கூட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டியுள்ளார். பயிர் நடவுக் காலத்திலும் அறுவடைக் காலத்திலும் கொடுக்க வேண்டிய ஊதிய விதங்களைப் பற்றி அக்கூட்டங்களில் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 1967, அக்டோபர் திங்களில் மன்னார்குடியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டிய கூட்டமொன்றில், உழவுத் தொழிலாளர்களின் ஊதியங்கள் பற்றி இசைவான முடிவுகள் ஏற்பட்டன. அதன் பின்னர், அறுவடைப் பணிகள் தங்குதடையின்றி நிறைவேறி வந்தன. ஆயினும், 1968-ம் ஆண்டுக் குறுவை அறுவடையின் போது நாகப்பட்டினம் வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களில் மீண்டும் உழவுத் தொழிலாளர்களிடையே குழுறல் ஏற்பட்டது. காவல் துறை அதிகாரிகளும் வருவாய்த்துறை அதிகாரிகளும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, நிலக்கிழார்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்குமிடையே தீவிர மோதல் எதுவுமின்றி குறுவைப் பயிர் அறுவடை செய்யப்பட்டது.

அறுவடை பெரும்பாலும் முடிவுற்ற போதிலும், மோதல்கள் ஏற்படாதிருக்க காவல்துறையினர் தொடர்ந்து எச்சரிக்கை



ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர். உழவுத் தொழிலாளர்களின் பூசல்களால் தாக்குண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இயங்கும் காவல்படை அனுப்பப்பட்டு வந்தது. சிக்கல், வலிவலம், கீவளூர், கொரடாச்சேரி, திருவாரூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, ஆதமங்கலம் போன்ற இடங்களில் படைக்கலன் தாங்கிய காவலர் படை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கீழ்வெண்மணி கிராமம் கீவளூர் காவல் நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட 4½ கல் தொலைவிலுள்ள ஓர் உள்ளூர் கிராமமாகும். இந்தக் கிராமத்தில் உழவுத் தொழிலாளர் பூசல் ஏதுமில்லை. 1968 டிசம்பர் 25-ம் நாள் இரவில் கீழ்வெண்மணி கிராமத்தில் நிகழ்ந்த மோதல் காரணமாக, பக்கிரிசாமி என்பவர் உயிரிழந்தார். அதே இரவில் சற்று நேரம் கழித்து, கீழ்வெண்மணி கிராமத்து அரிசனங்கள் தாக்கப்பட்டனர். அத்தாக்குதலின் காரணமாக கீழ்வெண்மணி கிராமத்து அரிசனங்களுக்கு சொந்தமான 25 வீடுகள் எரிக்கப்பட்டன. வயது வந்த ஆடவர் 3 பேர், வயது வந்த பெண்டிர் 19 பேர், சிறுவர்கள் 20 பேர், ஆக மொத்தம் 42 பேர் இத் தீ விபத்து காரணமாக மாண்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கீழ்வெண்மணியில் இத்தகைய கொடுஞ்செயல் நடைபெற்றிருப்பது வருத்தத்திற்குரியதாகும். மனிதப் பண்பை மறந்த வன்முறையும், ஈரமற்ற செயல்களும் நிகழ்ந்திருப்பதைக் காணும் போது ஏற்படும் அதிர்ச்சியும் ஆறாத் துயரத்திலும் என்னோடு இம்மன்றத்தினரும் பங்கு கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். சட்டப்படி நடவடிக்கைகளைத் துவக்கி வைக்க அரசு காலம் தாழ்த்தாது முற்பட்டதை இம்மன்றத்தினர் அறிவர். குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்ற எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுமென்று இப் பேரவையினர் உறுதியாக நம்பலாம். இது குறித்துப் புலனாய்வுகள் தொடங்கப்பட்டு விட்டதாலும், ஏற்கனவே சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாலும், விசாரணை முடிவுறா நிலையில் இருப்பதாலும் மேற்கொண்டு விவரங்கள் தருவதற்கு இயலாத நிலையை இம் மன்றத்தினர் உணர்வார்கள் என நம்புகின்றேன். குற்ற வழக்குகள் தொடரப்பட்டிருப்பது ஒரு புறமிருக்க, நிலக்கிழார்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்குமிடையே உள்ள சிக்கல்களை விசாரணை செய்வதற்கென்று ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை அரசு நியமித்துள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, நான் சில ஒத்திவைப்புத் தீர்மானங்களை தலைவர் அவர்களிடம் கொடுத்தேன். தலைவர் அவர்கள் அனுமதியின்மீது சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இங்கு பேசப்பட்டு நிராகரிக்கபட்டன. என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சில ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப்பற்றிய தீர்ப்பு என்னுடைய அறையிலே கொடுத்திருக்கிறேன். அவைகள் எல்லாம் கனம் உறுப்பினர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

## 8. முதலமைச்சரின் உடல் நிலை

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் கடந்த ஆகஸ்ட் 31-ம் தேதியுடன் முடிந்து மீண்டும் இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இடையில் பல நிகழ்ச்சிகள் நடந்தன. நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கலந்துகொள்ளாமல் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றார். ஆஸ்பத்திரியில் அவர்களுக்கு திறம்பட சிகிச்சை அளித்த டாக்டர் மில்லர் அவர்களுக்கும், அமெரிக்காவில் அண்ணா அவர்கள் தங்கியிருந்தபோது எல்லா வசதிகளையும் செய்துகொடுத்த மத்திய சர்க்காருக்கும் நல்ல முறையில் நன்றி தெரிவிப்பதுடன், முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவும், தெம்பாகவும் திரும்பி வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் திரும்பி வந்தபொழுது நாம் எல்லோரும் சந்தோஷப்பட்டோம். இருந்தாலும்கூட, அண்ணா அவர்கள் பூரணமாக ஓய்வு எடுக்காததன் காரணமாகவும், வேலைப்பளு அதிகமானதன் காரணமாகவும் மீண்டும் நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய எண்ணமெல்லாம், அவர் பூரணமாகக் குணம் அடைந்து, நல்லமுறையில் சட்டமன்றத்திற்கும் தமிழகத்திற்கும் நல்ல பணி செய்வார்கள் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறோம். என்னுடைய கட்சியும் இந்தச் சட்டமன்றமும், தமிழ்நாட்டு மக்களும் அரசியலில் உள்ள அனைவரும் இந்தப் பிரார்த்தனையில் பங்குகொள்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திற்கு வரும்படியான நிலையில் அவருக்கு அதிகமான தொந்திரவு கொடுக்காமல், வேலைப்பளு கொடுக்காமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். சட்டமன்றம் சரியாக நடப்பதற்கும் அரசாங்க அலுவல்கள் சரியாக நடைபெறுவதற்கும் அவருடைய வேலைப்பளு யார் யார் பொறுப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது? யார் அந்தப் பொறுப்பை ஏற்று நடந்த இருக்கிறார்கள்? எல்லாவற்றுக்கும் மந்திரிசபை பூரணமாக பொறுப்பாக இருந்தாலும்கூட, முதலமைச்சர் அவர்களின் வேலைப்பளு குறைக்கப்பட வேண்டும். மீண்டும் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவுடன் அவருக்கு தக்க முறையில் சிகிச்சை அளித்த டாக்டர் மில்லர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசாங்கம் கேட்டவுடனே அவரை அனுப்பிய அமெரிக்காவுக்கும் நாம் நம்முடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.





முதலமைச்சர் அவர்கள் பூரண சுகம் பெற்று, மீண்டும் நல்ல பணி செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்திலுள்ள அனைவரும் வேண்டிக் கொள்கிறார்கள். சட்டமன்ற அங்கத்தினர்கள் முதலமைச்சரின் உடல்நிலையைக் குறித்து உடனுக்குடன் அறிய அவா மிகுதியாக உள்ளார்கள். ஆகவே, சட்டமன்றம் நடக்கும் நாட்களில் முதலமைச்சர் அவர்களின் உடல்நிலையைக் குறித்து அறிக்கை ஒன்றை சபையில் சமர்ப்பித்தால் அங்கத்தினர்களுக்குத் தகவல் அறிய வாய்ப்பு ஏற்படும். அங்கத்தினர்கள் எல்லோரும் போய் அவரை ஆஸ்பத்திரியில் தொந்தரவு கொடுப்பது நல்லதல்ல. ஆகவே, முதலமைச்சரின் உடல்நிலையைக் குறித்து தினமும் கேள்வி-பதில் பகுதிக்குப் பின்னால் ஓர் அறிக்கை சமர்ப்பித்தால் சட்டமன்ற பிரதிநிதிகளுக்கும், பொதுமக்களுக்கும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் விரைவில் பூரண குணம் அடைய பிரார்த்தனை செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல் நலம் குறித்து அவர்களின் நல்லெண்ணத்தைத் தெரிவித்துள்ளார். இந்தச் சட்டமன்றத்திலுள்ள அனைவரின் சார்பாகவும் பொது மக்களுடைய சார்பாகவும் அண்ணா அவர்கள் விரைவிலே நலம் பெற்று தம் பணியினைச் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளிப்படுத்தினர். அப்பேர்ப்பட்ட நிலையில் இருந்து, ஒருவருக்கொருவர் நட்புறவு அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின்பால் வைத்துள்ள நல்ல மதிப்பின் அடிப்படையில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த கருத்துக்கு நானும் என்னுடைய கட்சியின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர் அவர்களும் முதலமைச்சர் அவர்கள் உடல்நலனைக் குறித்து அடிக்கடி விசாரித்து அறிந்து வருகிறார்கள். எல்லாக் கட்சிகளுடைய சார்பாகவும் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். கனம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விசாரித்து வருகிறார்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தும் நல்ல சூழ்நிலை உருவாகியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆளும் கட்சியின் சார்பாக நானும் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் விரைவில் நலம்பெற அனைவரும் வேண்டுகிறோம். அண்ணா அவர்களுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் மில்லர் அவர்களுக்கும், டாக்டர் என்சக்கி அவர்களுக்கும், நம் மாநிலத்திலுள்ள டாக்டர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். டாக்டர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு தங்கள் கடமைகளை ஆற்றிவருகிறார்கள். மேலும், சட்டமன்றம் நடக்கும் நாட்களில் எல்லாம் அண்ணா அவர்களின் உடல்நலக் குறிப்பு ஒன்றை எந்த வகையில், எந்த வடிவில் கொடுக்கலாம் என்பதைக் கலந்துகொண்டு உறுப்பினர்களுக்குத் தெரியும்படியான நிலையில் வைக்கலாம் என்று நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

DR. H. V. HANDE : While associating myself with the sentiments expressed by the two distinguished members of the House, may I request through this House on behalf of all the members that as far as possible the number of people who call on the Chief Minister should be reduced to the minimum, because the doctors themselves find that they are not able to cope with the rush of people that come there. Through this House a request may be made to the public to reduce to the barest minimum the number of callers and as far as possible to abstain from calling on the Chief Minister. Even our distinguished leader Rajaji also told the same thing that we should reduce the number of callers. Through this House may we request the public at large to avoid overcrowding at the Cancer Institute, Adyar, as overcrowding disturbs tranquality and peace? A request may be made by the Leader of the House through this House.

5-10 p.m. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திரு. ஹாண்டே தெரிவித்தது போல, அங்குள்ள டாக்டர்களின் ஆலோசனைப்படி யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. தப்பித் தவறி வருகிறவர்கள் பார்க்க முடியாது வருத்தத்தோடு திரும்பிச் செல்லாமல் இருக்க அங்கே விசிடர் புக் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் செல்கிறார்கள். நேற்றுகூட திரு. ரகுராமையா அவர்கள் வந்தார்கள். அவர்களும் அந்தக் குறிப்புப் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டு விட்டுப் போய் இருக்கிறார்கள். அந்த முறை கையாளப்பட்டே வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவையின் அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 25-1-1969 சனிக்கிழமை அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி சட்டப் பேரவையின் அலுவல்கள், உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட விவரப்படி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, இப்பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இந்த ஐந்தாம் கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக (பானல் ஆப் சேர்மென்) நான் நியமிக்கிறேன் :—

1. திரு. வி. எஸ். எஸ். மணி
2. திரு. பி. எஸ். மணியன்
3. திரு. சு. துரைசாமி
4. திரு. பு. செ. முத்துச்செல்வன்
5. திரு. சா. மெய்யப்பன்
6. திரு. தோ மு நல்லசாமி





5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

9. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஒ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

9. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

[1969 சனவரி 27

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 10. ஆளுநரின் பேருரைமீது விவாதம்

திரு. ஆலடி அருணா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—

"25—1—1969-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு,[a] தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

திரு. எஸ். முருகையன் : திரு. ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்திருக்கும் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. ஆலடி அருணா : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 25-1-1969 அன்று தமிழகத்தின் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் கடந்த முறையில் எடுத்துக் கூறிய கருத்துக்களைத் தெளிவாக்கிய பிறகு, அதற்குப் பின்னால் ஏற்பட்ட காலங்களில் தமிழக அரசு என்ன என்ன காரியங்களில், என்ன என்ன துறையில் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும், பருவ மழை குறித்தும், வெண்மணி கிராமத்து வேதனைப்படும் சம்பவம் குறித்தும், பஞ்சாலை நெருக்கடி குறித்தும் தம் உரையில் தெளிவாக, சிறப்பான முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

உண்மையில் ஆளுநர் அவர்களுடைய உரை சந்தேகம் உள்ளவர்களுக்கு தெளிவு ஏற்படுத்துவதாக, குழப்பம் உள்ளவர்களுக்கு விளக்கம் அளிப்பதாக, தலைகீழாகத் தடுமாறுபவர்களுக்கு நல்ல நெறிகாட்டுவதாக அமைந்திருக்கிறது. உண்மையிலேயே அந்த உரை விவசாயத் துறையில் நாம் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதையும், பஞ்சாலை நெருக்கடியைப் போக்குவதற்கு தமிழக அரசு என்ன என்ன செயல்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதையும், வெண்மணி கிராமத்து சம்பவம் குறித்து அரசு எவ்வளவு தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டியிருப்பதற்கு ஆளும் கட்சியினர்கள் மட்டும் அல்ல, இந்த மாமன்ற உறுப்பினர்கள் மட்டும் அல்ல இந்த மாநில கோடானுகோடி மக்கள் ஆளுநர் உரைக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

---

[a] 108–116ம் பக்கங்களில் I-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
117–129ம் பக்கங்களில் பேருரையின் தமிழாக்கம் II-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1969 சனவரி 27] [திரு. ஆலடி அருணா]

உண்மையில் தமிழக அரசு மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு சாதனைகளையும் புரிந்திருக்கிறது என்று பெருமையும், மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகிற தருணத்தில் இவ்வளவு ஆக்க பூர்வமான வேலைகளுக்கும், முன்னேற்றத்திற்கும் மூல கருவியாக இருந்த மூதறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்தில் இன்றைய தினம் நம்மோடு இல்லாது மருத்துவ நிலையத்தில் இருப்பது முழு மகிழ்ச்சியும் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்றைய தினம் நம்முடைய எண்ணங்களையெல்லாம் சீரியதாக்கி நம்முடைய செயல்களை எல்லாம் உயர்ந்ததாக்கி, நம்மை யார் வாழ வைத்தவர்களோ, வாழ யார் வழிகாட்டியாக இருந்தார்களோ அவர்கள் பூரண குணம் அடைந்து மீண்டும் நம்மோடு வந்து செயல்பட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல மனங்கள் எல்லாம் வேண்டிக்கொள்ள தீர்மானம் கொணர்ந்தார்கள். விரைவில் அறிஞர் அண்ணா அவர்கள் பூரண குணம் அடையவேண்டுமென்று நான்கு கோடி மக்களும் இறைவனை வேண்டிக்கொள்கிறார்கள் என்பது மட்டும் அல்ல. உலகத்தில் இருக்கிற தமிழர்கள் அத்தனை பேர்களும் நல்ல உள்ளம் படைத்த மக்கள் அத்தனை பேர்களும் அவர் விரைவில் குணம் அடையவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தின் பிரதமர் அவர்கள் அடிக்கடி அண்ணா உடல் நலம் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில் நல்லமுறையில் மருத்துவக் குழு ஒன்றை அமைத்து சிறப்பான முறையில் சிகிச்சை செய்து வருகிறார்கள். அமெரிக்க நாட்டில் இருந்து பெருமதிப்பிற்குரிய டாக்டர் மில்லர் அவர்களும் டாக்டர் என்சக்கி அவர்களும் இங்கே வந்து சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அண்ணா அவர்களது செந்தமிழ்க் குரல் இந்த மாமன்றத்தில் மீண்டும் ஒலிக்கும், அவரது சீரிய கருத்துக்கள், கூரிய விளக்கங்கள், நேரிய வாதங்கள் தமிழ் சமுதாயத்திற்கு தக்க வழிகாட்டியாக இருக்கும் என்ற நல்லெண்ணத்தோடு எனது உரையை இந்த மாமன்றத்தில் தொடர ஆசைப்படுகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு விவசாயத் துறையில் செய்திருக்கும்படியான புரட்சிகரமான நடவடிக்கைகள் என்ன, அதனால் விவசாய உற்பத்தி எவ்வளவு பெருகியிருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால் இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற மாநில அரசுகளிலேயே நம்முடைய அரசு தான் குறைந்த விலையில் ஏழை எளிய பாட்டாளி மக்கள் உணவு தானியம் வாங்கிச் சாப்பிடுகிற நிலையில் காரியங்களைச் செய்து வருகிறது. எவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையில், இக்கட்டான சூழ்நிலையில் அரசு துணிவோடு இந்தக் காரியங்களைச் செய்து இருக்கிறது என்று பார்த்தால் நேர்மை உள்ளம் உடையவர்கள் அத்தனை பேர்களும் இந்தச் சர்க்காருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பருவ மழை தவறியிருக்கிறது.

[திரு. ஆலடி அருணா] 1969 சனவரி 27

ஆயினும், திட்டமிட்டபடி 63 லட்சம் டன் உற்பத்தி செய்யும் வகையில் பற்பல காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது. தமிழகத்தில் விவசாயப் புரட்சி ஒன்றே நடைபெற்று வருகிறது என்று இன்றையதினம் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை எழுதி யிருக்கிறது. இந்திய சர்க்காரின் உணவுத்துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராமும் தமிழகத்தின் சாதனையை ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் சரித்திர பூர்வமாகப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அளவு சிறப்பான முறையில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. 1965-66-ல் காங்கிரஸ், நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்தில், 30 ஆயிரம் பம்புசெட்டுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. 1966-67-இல் 42 ஆயிரம் பம்ப் செட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 1967-68-இல் 50 ஆயிரம் பம்பு செட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. 1968-69-இல் டிசெம்பர் வரையில் 40,161 பம்பு செட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்கிறபோது இந்த அரசுக்கு விவசாய முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறை இருக் கிறது என்பதைக் காட்டுகிறது.

அதுமட்டும் அல்ல. நில அடைமான வங்கிகளின் மூலம் 12 கோடி ரூபாய் கடனை விவசாய முன்னேற்றத்திற்காக இந்த ஆண்டு அரசு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இதைச் கூறு வதற்குக் காரணம் ஆக்கபூர்வமான முறையில் இந்த அரசு விவசாயத்துறை முன்னேற்றத்திற்கு எந்த எந்த வழிகளில் எல்லாம் செயல்பட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற் குத்தான். என்றாலும்கூட, குற்றம் சாட்டுபவர்கள், குறை கூறுப வர்கள், இட்டுக்கட்டிப் பேசுபவர்கள் இன்னும் இந்த மாநிலத்தில் இல்லாமலில்லை. இன்றைய தினத்தில் ஒரு புறத்திலே காங்கிரஸ் காரர்கள் படியரிசிபற்றிக் கேட்கிறார்கள். இன்னொரு புறத்திலே கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட் கிறார்கள். கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில் இந்த அரசு நியாயமான விலையை, தன்னால் முடிந்த அளவுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையைக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இப்படிச் சொன்னால் காங்கிரஸ்காரர்கள் கேட்கலாம், "ஆந்திர அரசு கொள்முதல் விலை அதிகமாகக் கொடுக்கவில்லையா ?" என்று, ஆந்திர அரசு அதிகமாகக் கொள்முதல் செய்தாலும், அந்த நெல்லை மற்ற; மாநிலங்களுக்கு அதிகமான விலைக்கு விற்று வியாபாரம் செய்கிறது. ஆனால் நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில் நஷ்டத்தை ஏற்று, இழப்பை ஏற்று மக்களுக்கு அளிக் கிறது. ஏழைகள் வாழவேண்டும், அவர்களுக்கு வயிறாரச் **சோறு** அளிக்க வேண்டுமென்ற உறுதிகொண்டு இருக்கிற இந்த அரசு, அந்த வகையிலேதான் இவற்றையெல்லாம் செய்துகொண்டிருக் கிறது. கொள்முதல் விலையைக் கூட்டிவிடுவதால் மட்டும் விவசாய பிரச்னை தீர்ந்து விடும் என்ற தவறான கருத்தைக் காங்கிரஸ் காரர்கள் புகுத்தி வருகிறார்கள்.



1969 சனவரி 27] [திரு. ஆலடி அருணா]

(திரு. சு. துரைசாமி அவர்கள் தலைமை)

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான அளவுக்கு உரத்தைக் கொடுக்க வேண்டும், அதுவும் காலத்தில் கொடுக்க வேண்டும், காலத்திலே தண்ணீர் கொடுக்கவேண்டும். இவ்வளவையும் செய்தால்தான் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். இவற்றிலே எல்லாம் தமிழக அரசு முன்னாலே இருந் ததைவிட மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது. இதற்காக புள்ளி விவரத்தைத் தேட வேண்டியதில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அரிசிக்காக ஆலாய்ப் பறப்பதைப் பார்க்க முடியாது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு மக்கள் மைல் கணக்காக, மணிக்கணக்காக வரிசையில் நிற்கக்கூடிய நிலையைப் பார்க்க முடியாது. இதிலே இருந்து நாம் நன்றாக அறிந்துகொள்ளமுடியும். மக்கள் முன்னாலே அரிசிக்காக க்யூவில் நின்றதை முன்னாள் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டு சினிமாவுக்குக்கூடத்தான் க்யூ நிற்கிறது என்று அலட்சியமாக, ஆணவமாகப் பதில் அளித்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை இன்று இல்லை. காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி வந்ததற்குப் பிறகு அப்படிப்பட்ட நிலையில்லை. அப்படிப் பட்ட சோகச் சூழ்நிலைகள், பரிதாபச் சம்பவங்கள், பஞ்சத்தால் செத்தான், பசியால் மாண்டான், புண்ணியகோடி தான் பெற்றெடுத்த பிள்ளைகளை கிணற்றிலே எறிந்து பட்டினியால் செத்தான் என்ற சோகச் சம்பவங்களை இந்த அரசு வந்ததற்குப் பிறகு கேள்விப்படுகிறோமா ? இல்லை.

உணவுத் துறையிலே ஒரு பெரும் புரட்சியை, மாபெரும் முன்னேற்றத்தை, இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நேரத்திலே இன்னொன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மாநிலத்திற்கு சில விவசாய நிபுணர்கள் வந்தார்கள். அவர்கள் இங்கே வந்து தஞ்சைத் தரணியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, நிலப்பிரபுக்களின் ஆதிக்க வேட்டை நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த விவசாய நிபுணர்கள் 6, 7 திங்கள்களுக்கு முன் அதே தஞ்சைத் தரணியை வந்து பார்த்துவிட்டு, இங்கே இந்த அரசு ஒரு பெரிய புரட்சியை, முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு முறைகள் கையாளப்படுகின்றன என்று பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு இந்த அரசு ஆக்கபூர்வமான வேலைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்தும், கூலியை உயர்த்து வதைப் பொறுத்தும் நியாயமான அளவுக்கு தேவையைப் பொறுத்துச் செய்வதிலே இந்த அரசு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறது.

தஞ்சைத் தரணியைப் பொறுத்தவரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கவேண்டுமென்ற முறையில் மன்னார்குடியில் முத்தரப்பு மாநாடு கூட்டி தன்னால்

[திரு. ஆலடி அருணா] 1969 சனவரி 27

ஆயினும், திட்டமிட்டபடி 63 லட்சம் டன் உற்பத்தி செய்யும் வகையில் பற்பல காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது. தமிழகத்தில் விவசாயப் புரட்சி ஒன்றே நடைபெற்று வருகிறது என்று இன்றையதினம் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை எழுதியிருக்கிறது. இந்திய சர்க்காரின் உணவுத்துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராமும் தமிழகத்தின் சாதனையை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரித்திர பூர்வமாகப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அளவு சிறப்பான முறையில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. 1965-66-ல் காங்கிரஸ், நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்தில், 30 ஆயிரம் பம்புசெட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1966-67-இல் 42 ஆயிரம் பம்ப் செட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 1967-68-இல் 50 ஆயிரம் பம்பு செட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1968-69-இல் டிசெம்பர் வரையில் 40,161 பம்பு செட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்கிறபோது இந்த அரசுக்கு விவசாய முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

அதுமட்டும் அல்ல. நில அடைமான வங்கிகளின் மூலம் 12 கோடி ரூபாய் கடனை விவசாய முன்னேற்றத்திற்காக இந்த ஆண்டு அரசு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இதைச் கூறுவதற்குக் காரணம் ஆக்கபூர்வமான முறையில் இந்த அரசு விவசாயத்துறை முன்னேற்றத்திற்கு எந்த எந்த வழிகளில் எல்லாம் செயல்பட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான். என்றாலும்கூட, குற்றம் சாட்டுபவர்கள், குறை கூறுபவர்கள், இட்டுக்கட்டிப் பேசுபவர்கள் இன்னும் இந்த மாநிலத்தில் இல்லாமலில்லை. இன்றைய தினத்தில் ஒரு புறத்திலே காங்கிரஸ்காரர்கள் படியரிசிபற்றிக் கேட்கிறார்கள். இன்னொரு புறத்திலே கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில் இந்த அரசு நியாயமான விலையை, தன்னால் முடிந்த அளவுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையைக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இப்படிச் சொன்னால் காங்கிரஸ்காரர்கள் கேட்கலாம், "ஆந்திர அரசு கொள்முதல் விலை அதிகமாகக் கொடுக்கவில்லையா ?" என்று, ஆந்திர அரசு அதிகமாகக் கொள்முதல் செய்தாலும், அந்த நெல்லை மற்ற; மாநிலங்களுக்கு அதிகமான விலைக்கு விற்று வியாபாரம் செய்கிறது. ஆனால் நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் நஷ்டத்தை ஏற்று, இழப்பை ஏற்று மக்களுக்கு அளிக்கிறது. ஏழைகள் வாழவேண்டும், அவர்களுக்கு வயிறாரச் சோறு அளிக்க வேண்டுமென்ற உறுதிகொண்டு இருக்கிற இந்த அரசு, அந்த வகையிலேதான் இவற்றையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது. கொள்முதல் விலையைக் கூட்டிவிடுவதால் மட்டும் விவசாய பிரச்னை தீர்ந்து விடும் என்ற தவறான கருத்தைக் காங்கிரஸ்காரர்கள் புகுத்தி வருகிறார்கள்.



1969 சனவரி 27] [திரு. ஆலடி அருணா]

(திரு. சு. துரைசாமி அவர்கள் தலைமை)

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான அளவுக்கு உரத்தைக் கொடுக்க வேண்டும், அதுவும் காலத்தில் கொடுக்க வேண்டும், காலத்திலே தண்ணீர் கொடுக்கவேண்டும். இவ்வளவையும் செய்தால்தான் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். இவற்றிலே எல்லாம் தமிழக அரசு முன்னாலே இருந்ததைவிட மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது. இதற்காக புள்ளி விவரத்தைத் தேட வேண்டியதில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அரிசிக்காக ஆலாய்ப் பறப்பதைப் பார்க்க முடியாது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு மக்கள் மைல் கணக்காக, மணிக்கணக்காக வரிசையில் நிற்கக்கூடிய நிலையைப் பார்க்க முடியாது. இதிலே இருந்து நாம் நன்றாக அறிந்துகொள்ளமுடியும். மக்கள் முன்னாலே அரிசிக்காக க்யூவில் நின்றதை முன்னாள் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டு சினிமாவுக்குக்கூடத்தான் க்யூ நிற்கிறது என்று அலட்சியமாக, ஆணவமாகப் பதில் அளித்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை இன்று இல்லை. காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி வந்ததற்குப் பிறகு அப்படிப்பட்ட நிலையில்லை. அப்படிப்பட்ட சோகச் சூழ்நிலைகள், பரிதாபச் சம்பவங்கள், பஞ்சத்தால் செத்தான், பசியால் மாண்டான், புண்ணியகோடி தான் பெற்றெடுத்த பிள்ளைகளை கிணற்றிலே எறிந்து பட்டினியால் செத்தான் என்ற சோகச் சம்பவங்களை இந்த அரசு வந்ததற்குப் பிறகு கேள்விப்படுகிறோமா ? இல்லை.

உணவுத் துறையிலே ஒரு பெரும் புரட்சியை, மாபெரும் முன்னேற்றத்தை, இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நேரத்திலே இன்னொன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மாநிலத்திற்கு சில விவசாய நிபுணர்கள் வந்தார்கள். அவர்கள் இங்கே வந்து தஞ்சைத் தரணியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, நிலப்பிரபுக்களின் ஆதிக்க வேட்டை நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த விவசாய நிபுணர்கள் 6, 7 திங்கள்களுக்கு முன் அதே தஞ்சைத் தரணியை வந்து பார்த்துவிட்டு, இங்கே இந்த அரசு ஒரு பெரிய புரட்சியை, முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு முறைகள் கையாளப்படுகின்றன என்று பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு இந்த அரசு ஆக்கபூர்வமான வேலைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்தும், கூலியை உயர்த்துவதைப் பொறுத்தும் நியாயமான அளவுக்கு தேவையைப் பொறுத்துச் செய்வதிலே இந்த அரசு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறது.

தஞ்சைத் தரணியைப் பொறுத்தவரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கவேண்டுமென்ற முறையில் மன்னார்குடியில் முத்தரப்பு மாநாடு கூட்டி தன்னால்

இயன்றவரை அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல. திருவாரூரிலே தினக் கூலி சம்பந்தமாக முடிவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறது. இப்படித் தன்னால் இயன்றவரை அவ்வப்போது இந்த அரசு மிராசுதார்களையும் விவசாயத் தொழிலாளர்களையும் ஒன்றாக வைத்து நியாயமான முடிவுகள் தெளிவாக எடுத்துக்கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் இதுபற்றி நியாயமான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் யாரும் எதிர்பாராத வகையில் நம்முடைய காவலையும், கண்காணிப்பையும் மீறி வெண்மணியிலே அந்தச் சம்பவம் நடந்துவிட்டதைக் கேட்டு நாம் வருந்துகிறோம், துடிக்கிறோம். அந்தச் சம்பவம் நடைபெற்ற உடன் நம்முடைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூற வார்த்தைகளே வரவில்லை, நடந்துள்ள சம்பவம் கோரத்தன்மை வாய்ந்தது மட்டுமல்ல, மிருகத்தனமானது என்று கண்டித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லியதோடு நின்றிருந்தால் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் உடனடியாக நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களையும், சட்டத் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்களையும் வெண்மணிக்கு அனுப்பினார்கள். அவர்கள் அங்கே சென்று அந்தப் பரிதாபமான, சோகச் சூழ்நிலையைப் பார்த்து அந்த மக்களுக்கு ஆறுதல் கூறி, எரிந்த வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான உதவிகளைச் செய்வதற்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும்--உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க—ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படி சம்பவம் நிகழ்ந்த உடனே உரிய காலத்தில் தன்னால் இயன்றவரையில் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் தேர்தல் பணிகளை முடித்துவிட்டு அந்தப் பகுதிக்குச் சென்று தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். எதிர்பாராத வகையில் இது நடந்துவிட்டது. யாவருடைய கண்காணிப்பையும் மீறி நடந்துவிட்டது. அதற்குப் பிறகு ஒரு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவற்றை உடனடியாக எடுத்துக்கொள்ள தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்களும் தம்முடைய உரையில் வன்முறைச் செயல்களை உறுதியாகக் கண்டிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு அரசு பார்ப்பதற்கு இதிலே பிரச்னைகள் இல்லை என்பதை நான் தன்னடக்கத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிலர் ஒரு வினாவை எழுப்புகிறார்கள். உலகத்திலே இப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறதா என்று எழுப்புகிறார்கள். நடந்திருக்கிறது என்று நான் சொன்னால் வேறு கருத்தில் தவறாக யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. நடந்திருக்கிறதா என்று வினா எழுப்பியதால் நடந்திருக்கிறது என்று சொல்லும்பொழுது ஒத்துழையாமை இயக்கத்தின்போது சௌரி சௌராவில் 20 போலீஸ் அதிகாரிகளை ஒரு அறையில் பூட்டி வைத்து



தீ வைத்திருக்கிறார்கள். அன்றைய காங்கிரஸ்காரர்கள் சுதந்திரம் பெற நடத்திய போராட்டத்தின்போது அவர்களைச் சுட்டெரித்திருக்கிறார்கள். நடந்திருக்கிறது என்று இதைச்சொன்னவுடன் அதனுடைய பிரதிபலிப்பாக இது நடந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. உலகத்திலே நடக்கவில்லை என்றும் தமிழகத்திலே தான் நடந்திருக்கிறது என்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடும், கசப்புணர்ச்சியோடும், சிலர் பிரச்னையை எழுப்பினார்களே அதற்குத்தான் நான் பதில் அளித்தேன். இந்த அரசாங்கத்திற்கும் இன்னொருவருக்கும் ஏற்பட்ட போராட்டத்தால் ஏற்பட்டதல்ல அந்த சோக சம்பவம். மிராசுதார்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்னையில் நிகழ்ந்து விட்ட சம்பவத்திற்குப்பிறகுதான் இந்த அரசாங்கத்தின் பிரச்னை வருகிறது. முன்பு 200, 300 பேர்கள் சுட்டுப் பொசுக்கப் பட்டதற்குப் பிறகு 50 பேர்கள் மாண்டார்கள், 60 பேர்கள்தான் செத்தார்கள் என்று பட்டியல் கொடுத்தார்களே, அப்படிச் செய்யவில்லை இந்த அரசு. முன்பு முதுகளத்தூரில் ஆதித் திராவிடர்களையும் மற்றவர்களையும் மோதவிட்டு அவர்களுடைய சொத்துக்களுக்கும், சுகங்களுக்கும் அழிவை ஏற்படுத்தியது ஒரு அரசு. இந்த அரசு அப்படிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்கவில்லை. மத்தியப் பிரதேசத்தில் 100 ஆதிவாசி மக்களைச் சுட்டுத் தள்ளிவிட்டு 10 பேர்கள்தான் செத்தார்கள் என்று சொன்னார்களே, அப்படியில்லை இந்த அரசு. வெண்மணிச் சம்பவம் நடந்துவிட்டதை இந்த அரசு மறுக்கவே இல்லை. எப்படியோ நம்முடைய கவனத்தை மீறி இப்படியொரு சோகச் சம்பவம் நடந்துவிட்டது. தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. இந்தச் சம்பவத்தை சில அரசியல் சூதாட்டக்காரர்கள், பாவம் அரிசனங்களைப் பொசுக்கிவிட்டார்கள் என்று ஜாதிப் பிரச்னையைக் கிளப்பிவிடுகிறார்கள். ஜாதிப் பிரச்னைக்கும், தொழிலாளர் பிரச்னைக்கும் இதிலே சம்பந்தம் இல்லை.

ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டது. துர்ப்பாக்கியவசமாக அரிசனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரிசனங்களை அழிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் செய்தார்கள் என்று யாரும் தவறாகக் கருதி விடாதீர்கள். இந்தச் சம்பவத்தைப் பொருத்த மட்டில் தமிழக அரசு உடனடியாக தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல; இந்தப் பிரச்சினையிலே நல்ல முடிவு தெரிய வேண்டும், நல்ல நிலை ஏற்படவேண்டுமென்பதற்காக நீதிபதி கணபதியா பிள்ளை அவர்களைக் கொண்டு தனி நபர் கமிஷன் நியமிக்கப்பட்டு பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரு மதிப்பிற்குரிய திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் இதைத்தான் வேண்டினார்கள். 'தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும். இதற்கான விசாரணை தேவையில்லை' என்று சொன்னார்கள். அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய நிலை குறித்து, விவசாயத் தொழிலாளர்களுடைய நிலை குறித்து, இங்குள்ள உறவுகள் குறித்து, கூலி முறைகள் குறித்து விசாரணை செய்து முடிவு செய்ய வேண்டு

மென்றார்கள். அதையும் இந்த அரசு செய்திருக்கிறது. பெருமதிப்பிற்குரிய பி. இராமமூர்த்தி அவர்கள் அதனை வரவேற்றிருக்கிறார்கள். ஆகவே, தன்னால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்திருக்கிறது. அதனை இந்த மன்றம் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ளும் என்று மனதார நம்புகிறேன்.

அதேபோன்று இன்றைய தினம் தமிழகத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. பல ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. இதை இன்றையதினம் அரசியல் பிரச்சினையாக்கி, தங்களுடைய கட்சியை வளர்க்க முடியாதா, தங்களுடைய செல்வாக்கை வளர்த்துக் கொள்ள முடியாதா என்ற முறையிலே பட்டினி கிடக்கின்ற தொழிலாளர்களை வைத்து அரசியல் லாபம் பெற ஆசைப்படுகிறார்கள். இதிலே நாங்கள் கூறிக்கொள்ள ஆசைப்படுவதெல்லாம், இந்தப் பஞ்சாலை நெருக்கடி யாரால் ஏற்பட்டது, இதற்குப் பொறுப்பாளி யார் என்பதைக் குற்றம் சாட்டுகிற காங்கிரஸ் நண்பர்களும், குறை காணுகின்ற பிற எதிர்க் கட்சி நண்பர்களும் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான். 'தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது, அதனாலே இந்த விளைவு ஏற்பட்டது; தமிழக அரசு இந்தத்திட்டத்தைக் கொண்டு வந்தது, அதனாலே இந்தப் பாதகம் ஏற்பட்டது; சட்ட அமைச்சர் இந்த ஆணையைப் பிறப்பித்தார்கள் அல்லது தொழிலமைச்சர் இந்த உத்தரவைப் போட்டார்கள், அதனாலே இந்தத் தீங்கு, சரிவு, மந்தம் ஏற்பட்டது' என்பதை நிரூபித்துக் காட்டுவார்களேயானால், இதை இந்த அரசு ஏற்கத் தயாராக இருக்கிறது. இந்த மந்த நிலைக்கு பொறுப்பாளி யார்? இந்தச் சரிவுக்குக் காரணகர்த்தா யார்? இதற்கு மூல காரணம் மத்திய அரசுதான். இதை இந்த அரசு சொல்வதாக யாரும் கருதிவிடாதீர்கள். ஆலை உரிமையாளர்கள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்குக் கடந்த 29 எப்ரல் 1968-ல் ஒரு பெரிய விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தில் இந்தத் தொழிலுக்கு எப்படி நெருக்கடி ஏற்பட்டது, யாரால் இந்த நெருக்கடி ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களை ஆதாரபூர்வமாக, புள்ளி விவரத்தோடு சொல்லியிருக்கிறார்கள், முக்கியமாக "எக்ஸைஸ் டியூட்டி" பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1961-ம் ஆண்டுவரை நூலுக்கு எக்சைஸ் டியூட்டி கிடையாது. 1961-ம் ஆண்டுக்குப் பிறகுதான் எக்சைஸ் டியூட்டி வந்தது. நூலுக்கு எக்சைஸ் டியூட்டியை மத்திய சர்க்கார் போட்டதன் மூலம் 1961-ம் ஆண்டில் மத்திய சர்க்காருக்கு கிடைத்த வருமானம் 13 லட்சம் ரூபாய்தான். அப்போது ஒரு கிலோ நூலுக்கு 15 காசு வரி விதிக்கப்பட்டிருந்தது. அதே வரியை ஆண்டுக்கு ஆண்டு உயர்த்தி 1967-68-ம் ஆண்டில் கிலோவுக்கு ரூ. 1.15 ஆக ஆக்கினார்கள். 1961-ல் வெறும் 13 லட்சமாக இருந்த வருமானம் 1966-67-ம் ஆண்டில் ரூ 36,34,00,000 ஆக உயர்ந்து விட்டது. இந்த அளவுக்கு யார் அதற்கு மூலகர்த்தா என்பதைப்பற்றி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் காரணத்தை ஆலை அதிபர்கள் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இன்னொரு பெரிய





குற்றச்சாட்டையும் ஆலை அதிபர்கள் பிரதமர் இந்திரா காந்தியிடம் சொல்லியிருக்கிறார்கள். 'Compulsory allotment of unwanted quality of American cotton under P.L. 480 at exorbitant prices for inferior quality is another strain on the industry.' என்று அந்த விண்ணப்பத்திலே கூறியிருக்கிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொதுச் சட்டம் 480-ன் கீழ் வந்த தரக்குறைவான பஞ்சுக்கு விலை உயர்வாகத் தந்து அதை ஆலை அதிபர்கள் வாங்கித்தான் தீர வேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்தியதன் காரணமாகவும் இந்தத் தொழிலிலே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் இதிலே யார் பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் தன்னுடைய கடமையைச் செய்ய முனைந்திருக்கிறது, செய்திருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரை சலுகை அளிக்க வேண்டும், சேல்ஸ் டாக்சிலே சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இதையெல்லாம் போட்டவர்கள் பழைய சர்க்கார் தான் என்பதை மறந்துவிடக் கூடாது என்றாலும் தொழிலாளர் வேலை வாய்ப்பைக் கருதி, தொழில் முன்னேற்றத்தைக் கருதி மின்சாரக் கட்டணத்திற்கும், விற்பனை வரிக்கும் விதிவிலக்கு அளிக்க, சலுகை அளிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று வெறும் வாய் அளவில் சொல்லவில்லை. இந்த அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இதைவிட என்ன எதிர்பார்க்கிறார்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து ? இந்தச் சர்க்காரிடத்திலே என்ன உரிமை இருக்கிறது? இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ஆக்ட் மூலம் எடுத்துக் கொண்டாலும் அத்தனை அதிகாரங்களும் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. மத்திய சர்க்கார்தான் தொழிலுக்கு அனுமதியைக் கொடுக்கிறது. தொழிற்சாலைகள் சட்டத்தை நிறைவேற்றித் தருகிறது. அந்த உரிமைகளை அதிகாரத்தையெல்லாம் மத்திய சர்க்கார் வைத்திருக்கிறது. தொழிலில் நெருக்கடி அபத்து என்ற சிக்கலான நிலைமைகள் ஏற்படும்போது, அந்த துர்ப்பாக்கியமான நிலைமைகளுக்குப் பொறுப்பு மாநில சர்க்கார் என்று வருகிறது. அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற அளவில், உரிமையை வைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டு பாட்டாளி மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலையில் அதனைத் தீர்த்து வைப்பதிலே நியாயமான அளவுக்குப் பங்கு பெற்று தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. இதிலே, மத்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்லி தமிழக அரசு பிரச்சினையைத் தட்டிக் கழிக்க உறுதியாகத் தயாராக இல்லை. தமிழக அரசு மனிதாபிமானத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகுகிறது. சிலர், 'குஜராத்தில் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது, மாட்டியத்தில்

[திரு. ஆலடி அருணா] [1969 சனவரி 27,

பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது, தமிழகத்தில் மட்டும் தீர்க்கப்படாமல் இருப்பானேன்?' என்று கேட்கிறார்கள். சிலருக்கு இந்தக் கேள்வி நியாயமாகவே தென்படலாம். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தியாவிலே 59 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதில் தமிழகத்தில் மட்டும் 28 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தமிழகம் நீங்கலாக துணைக் கண்டத்தின் பிற மாநிலங்களில் மூடப்பட்ட ஆலைகள் 31. நம்முடைய பொறுப்பு எவ்வளவு பளுவானது. நமக்கு இருக்கிற சுமை எவ்வளவு கடினமானது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொல்லுகிறேன். இந்த நிலைமை நமக்கு மட்டும் ஏற்பட்டதற்குக் காரணம் தமிழகத்தில் உள்ள 193 மில்களில் காம்போசிட் மில் நூற்பு, நெய்தல் இரண்டும் இணைந்த மில்கள் 25 தான். மற்ற அத்தனை நூற்பாலைகளும் வெறும் ஸ்பின்னிங் மில்கள்தான். எனவேதான் நூலுக்கான சந்தை நமக்குக் கிடைக்கவில்லை. நெருக்கடிக்கு இதுவும் ஒரு காரணமாகும். தொழிலாளர்களைப் பொறுத்தவரை உள்ள பிரச்சினையில், இந்தத் தமிழக அரசு எந்தெந்த ஆலைகளை எடுத்து நடத்துவது என்ற முறையில் போதுமான நிதிவசதியும், இயந்திர சாதனங்களும் உள்ளவற்றை எல்லாம் எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசிடத்தில் ஒப்புதல் அளித்திருக்கிறது. இதை இந்த அரசு பல சந்தர்ப்பங்களில் விளக்கிக் காட்டியிருக்கிறது.

கோவையிலிருந்து 200 தொழிலாளர்கள் நடந்து வந்து தலைவர் அவர்களிடத்திலும் துணைத் தலைவர் அவர்களிடத்திலும் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தங்களுடைய பரிதாப நிலைமையை விளக்கியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் மன்றத் தலைவர் அவர்கள் மூலமாக மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்—பட்டினி கிடந்து, கடுமையாக நடந்து வந்து உங்கள் நிலைமைகளைக் கூறினால்தான் இந்த அரசுக்குப் புரியும் என்று யாரோ உங்களைத் தவறாக வழி நடத்துகிறார்கள். உங்களுடைய நிலைமைகள் எங்களுக்குப் புரிகிறது, உங்களுடைய நிலைமையைக் கண்டு இதயம் துடிக்கிறது, உங்களுக்கு உதவ கரங்கள் நீளத் தயாராக இருக்கின்றன. எங்களுடைய இதயம் துடிப்பதாலோ, கரங்கள் நீளத் தயாராக இருப்பதாலோ பிரச்சினை முடிவுபெற்று விடாது முக்கியமாக இதிலே முடிவு செய்ய வேண்டியவர்கள் மத்திய அரசிலே இருக்கிறார்கள். அவர்கள் மனமுவந்து கஜானாப் பெட்டியைத் திறந்தாலொழிய உங்கள் கண்ணீரைத் துடைக்கும் நல்ல சூழ்நிலை உருவாவதற்கு இடம் இல்லை என்பதைத் தொழிலாளப் பெருங்குடி மக்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் தொழிற்துறையில் இவ்வளவு நெருக்கடி ஏற்பட்
மு.ப, 11-30 டாலும் பெரும் தொழில்கள் முன்னேற்றம் பற்றி ஆளுநர்
அவர்கள் சிறப்பான முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1969 சனவரி 27] [திரு. ஆலடி அருணா]

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஏறத்தாழ 44 கோடி ரூபாய் அளவில் இன்னும் சில திங்கள்களில் துவங்க இருக்கிறது. நெய்வேலியைப் பார்த்தீர்களா, திருச்சிக்கு வாருங்கள் பாய்லர் தொழிற்சாலையைப் பார்த்தீர்களா என்று இருபது ஆண்டுகளில் சாதித்த ஒன்றிரண்டு தொழிற்சாலைகளைக் காட்டியதற்கு உரிய விடையை, நியாயமான விடையை ஆளுநர் அவர்கள் கொடுக்கிற வகையில் இன்னும் சில திங்கள்களில் கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டில் பெரும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஆளுநர் அவர்கள் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இன்னும் சில மாதங்களில் துவங்க இருக்கின்றது. அதற்கான மூலதனம் 44 கோடி ரூபாய். சென்னையில் ஆரம்பிக்க இருக்கிற உரத்தொழிற்சாலைக்கான மூலதனம் 60 கோடி ரூபாய். தூத்துக்குடியில் தனியார் கூட்டோடு உடன்பாட்டோடு ஆரம்பிக்க இருக்கிற தொழிற்சாலையின் மூலதனம் சுமார் 45 கோடி ரூபாய்.

இவற்றோடு சேலம் இரும்பாலைக்கும் நமக்கு வழி ஏற்பட்டு விட்டது. சேலம் இரும்பாலை வேண்டுமென்று எவ்வளவு முறை கேட்டோம்? இந்த மன்றத்தில் எவ்வளவு பேர்கள் சொன்னார்கள்? முன்னாலிருந்த அமைச்சரவை ஐந்து ரூபாய் பணம் கட்டி மத்திய அரசினிடம் விண்ணப்பிக்கத்தான் முடிந்தது. ஆனால் நம் ஆளுநர் கடந்த முறை இங்கு உரையாற்றியபோது தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

'The State Government would strongly urge that the Salem Steel Plant whose economic and technical feasibilities have now been firmly established, should definitely find a place in the new Fourth Plan.' என்று கடந்த பிப்ரவரி 1968-ல் ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வாக்குறுதியளித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு எதை நினைக்கிறதோ, அதைச் சொல்கிறது. எதைச் சொல்கிறதோ, அதைச் செய்கிறது. அந்த அடிப்படையில்தான் கடந்த முறை ஆளுநர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், சேலம் இரும்பாலை நான்காவது திட்டத்தில் நிச்சயமாக இடம் பெறும் என்று. இந்த உரையில் ஏற்கனவே அறிவித்தபடி நான்காவது திட்டத்தில் அது இடம் பெற்றுவிட்டது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை, பத்து ஆண்டுகளாக காத்துக் கிடந்த செய்தியை, ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்தத் தொழிற்சாலை வந்துவிடுவதால் மட்டும் இந்த மாநிலத்தின் முழு முன்னேற்றங்களும் உடனடியாக உருவாகிவிடும் என்ற கருத்தைச் சொல்ல நான் ஆசைப்படவில்லை. நமது தேவைகள் அதிகம். கடந்த அரசு விட்டுவிட்டுப் போன குறைகள், அதனால் நிறைவேற்றப்படாத தேவைகள் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் பூர்த்தி செய்யவேண்டிய நிலை இந்த அரசுக்கு

வந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நான்காவது திட்டத்திற்காக இந்த அரசு ஏறத்தாழ 624 கோடி ரூபாய்க்கு திட்டம் வகுத்து மத்திய அரசினிடம் கொடுத்தது. காங்கிரஸ் ஆட்சி புரிகிற மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை 500 கோடி ரூபாயாக ஆக்கியிருக்கிறது. நான்காம் திட்டத்திற்கு மத்திய அரசு நமக்கு உதவித் தொகையாக 250 கோடி ரூபாய் தருவதாக ஒப்புதல் அளித்தது. அது குறித்து இங்கு அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அதுபற்றி அறிவித்தார்கள். 250 கோடி ரூபாய் தருவதாக ஒப்புதல் அளித்த அதே மத்திய அரசு, அதே காங்கிரஸ் அரசு இன்றைய தினம் 201 கோடி தான் தர முடியும். அதற்கு மேல் எங்களால் கொடுக்க முடியாது என்று கை விரித்திருக்கிறது. மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கினை ஆளுநர் அவர்கள் ரூபகமாக, மிகத் தெளிவாக நம்மிடம் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு குந்தமாக இருக்கிற ஒன்று அதன் கடன் பளுக்களாகும். மாநில அரசுகளின் கடன்பளு இன்றைய தினம் ஏறத்தாழ ரூபாய் 5000 கோடி அளவிற்கு இருக்கிறது. நம் அரசைப் பொறுத்தவரையில் 450 கோடியிருக்கிறது. இந்தக் கடன்களுக்கு ஒரு முடிவு காண வேண்டும். அதை காலவரையறையின்றி தள்ளி வைக்க வேண்டுமென்ற போராட்டத்தை நாம் தீவிரமாக ஆரம்பித்திருக்கிறோம். அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் மொரார்ஜி தேசாய் அவர்களிடத்திலும், திட்டக் கமிஷனிடத்திலும் இதுபற்றி தீவிரமாக வாதித்திருக்கிறார்கள். அதற்கான ஒரு முடிவு கண்டாலொழிய நான்காவது திட்டத்தை ஒழுங்குபடுத்த முடியாது என்று வாதித்திருக்கிறார்கள். அவர்கள் வாதத்திற்கு உயிர் கிடைத்தது. அல்ல, அல்ல அவர்களின் வாதத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்னும் நான்காவது திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது என்பதுபற்றி முடிவு எடுக்காதவகையில் ஒற்றிவைக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய தினம் நம்மிடத்தில் அது எங்கே, இது எங்கே என்று கேட்கிறார்கள் காங்கிரஸ் நண்பர்கள். கேட்க உரிமையுள்ளவர்கள் தான், கேட்க கடமைப்பட்டவர்கள்தான். ஆனால் உண்மையில் இந்த மாநிலத்தின் முன்னேற்றத்தில், இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில், இந்த மாநிலத்திலுள்ள ஏழை எளிய பாட்டாளி மக்களின் வளர்ச்சியில் அவர்களுக்கு மானசீகமான, உறுதியான அக்கறை இருக்குமானால், நான்காவது திட்டத்தில் நமக்குரிய பணத்தைப் பெற நம்மோடு கேட்க முன்வர அவர்கள் கடமைப்பட்டவர்களாவார்கள். ஆனால் அங்கே போனால் பணத்தைக் கொடுக்காதே என்று சொன்னால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறேன் என்றால், மதுவிலக்கு அமல் செய்யப்படுகிற மாநிலங்களில் நிதிநிலைமை அதனால் பாதிக்கப்படுமானால், அவர்களுக்கு ஓரளவு ஈட்டுத் தொகையை மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). அதே கருத்தை பெருமதிப்பிற்குரிய தேசாய் அவர்களும் ஒரு கூட்டத்தில் விளக்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நமக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைக்கும். அப்படி கிடைத்து விட்டால் இங்குள்ள குறைகள் எல்லாம் அகன்றுவிடும். அதனால் காங்கிரஸ் கட்சிக்கு சரிவு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தைக் காட்டி திரு. விநாயகம் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில், பணத்தைக் கொடுத்து விடாதீர்கள். அது உங்களைக் குத்துவதற்கு நீங்கள் கொடுக்கும் கோடாரிக்கு ஒப்பாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). ஆளுநர் அவர்கள் இந்த நிலைமைகளையெல்லாம் விளக்கி, நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையையும் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இந்த உரையை கட்சி வேறுபாடின்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒவ்வொரு கட்சித் தலைவர்களும் எந்தத் திருத்தமும் இன்றி இதை வழிமொழியவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இதை முன்மொழிகிறேன். நன்றி, வணக்கம்.





* THIRU R. PONNAPPA NADAR : Mr. Chairman, Sir, I rise to speak a few words on the Governor's Address which is the subject-matter for discussion in this House. Before I speak on the Governor's Address, I would like to offer a few general remarks about the rights of this House. Sir, as we are aware this House should meet at least once in six months as per our Constitution. During the Congress regime this House used to meet once in four months. Now it is more than four months—I think it is five months since we met last and the business that we are going to transact in this august House is very little. I expected that the Draft Fourth Plan or at least the Annual Plan would be placed for discussion in this House but no such thing has been done by this Government and we are not kept informed about the developments that are taking place in the country.

Sir, another point which I wanted to place before this House is with regard to the agrarian unrest that is prevalent in this State. It has been pointed out that something unfortunate has happened in Kilavenmani which resulted in the loss of 44 lives. Sir, this is an inhuman incident and I learn from the hon. mover of the Motion of Thanks that a judicial enquiry is to be conducted under the chairmanship of a retired Judge, Thiru Ganapathia Pillai. Did not such thing happen in other parts of the country and that is the question posed by my hon. learned Friend and he has stated that many such incidents had happened and he also mentioned the Chauri Chaura incident which happened during the Congress agitation for Independence. He was more or less justifying those incidents. This is something like devil quoting scripture. But so far as this incident is concerned, many people were subjected to inhuman atrocities and this Government and the Police were winking at that incident. The Police were responsible for

law and order and they did not take proper and early steps to save this catastrophe. Sir, the Police has been partial and when we say that there has been a break-down in the law and order situation in this State, we have been called names by the ruling party. I do not want to apportion blame on any political party regarding this incident because that is the subject matter of enquiry by the honourable Judge. These kinds of things should not recur in our country and it does not augur well for Tamil Nad (where we are gloating over that justice is prevalent) that such things are happening. This has been considered by the Elayaperumal Committee also and they have said that poor Harijans are being harassed not only here but in other parts of the country. This does not speak well of Tamil Nadu.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நம் நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கப்பட்ட பிறகும் வழக்கறிஞர் உறுப்பினர் அவர்கள் தமிழராக இருந்தும், ஆங்கிலத்தில் பேசுகிறார்களே.

THIRU R. PONNAPPA NADAR : I am sorry that I am constrained to speak in English. I do not want to dilate too much on this point.

Another point which I want to stress is this. The previous Speaker had tendered his resignation long before. What has become of the election of the new Speaker ? Why is that being shelved and people are asking this question. We, as legislators, have a right to know why the election is being indefinitely postponed. Does it speak well of this Government, of the ruling party ? That is the question that I want this Government to answer.

Regarding industrial unrest that is prevalent in this country there has been closure of the textile mills in many parts of the country. My learned friend who had just spoken had said that 35 mills had been closed in Tamil Nad. In the Governor's Address it has been said that an expert Committee under Dr. P. S. Lokanathan has been appointed to go into this question. This Governmen has spent Rs. 2 crores in giving assistance to these sick textile mills. Why not this Government take prompt action and easily approach the Central Government so that the closure of the mills may be averted? Thousands of workers are thrown out of employment and the starved men have decided to take out processions to Madras. To avert that the Government have promulgated orders under the Police Act. Does it speak well of this Government?

We are subsidising rice in certain parts of this country. Should we not also provide adequate employment to these textile workers as this is a problem to be attended to immediately and promptly? I am sure the Industries Minister would take all steps to see that the sick textile mills are opened at an early date.



Another point which I want to stress before this House is regarding the 'enquiry report'. There have been certain Police firings in this State? What has become of these enquiry reports? We thought that some reference would be made by the Governor to this thing in his Address but no mention is made about Police firings and the enquiry that is in progress. We do not know whether any findings had been arrived at and what decisions had been taken by this Government. These things may be mentioned so that this House may be taken into confidence and suitable measures taken.

Another point that I want to stress is the fact that no mention has been made about the recent bye-election in Nagercoil. Curiously enough, no mention has been made. That is a bye-election in which all Ministers except the revered Chief Minister and Law Minister camped in Nagercoil to carry on election propoganda. The ex-Speaker Thiru S. B. Adityan was also camping. They were doing effective election propaganda. We as legislators should also know what had happened there. Force has been used indiscriminately and Police and official interference has been there in a large and abundant measure. Many of our workers were indiscriminately beaten and most of the time myself and my respectful leader had been, not in election meetings, but in the Police station so that we may get the release of our people who had been arrested by the Police. 'There was no security of person. Many people in Khaki uniform were parading in the streets and indiscriminately beating Congres-men. They were disturbing our election meetings and our men were beaten. I would say that the highest Police officers like the Inspector-General of Police and the Deputy Inspector-General of Police were camping there and we have been persistently making requests to them to see that law and order be properly maintained. But, Sir, the Police have been taking a partisan attitude. When we made complaints against the ruling party people, no action had been taken. Many of our workers had to flee for their lives and some of them had been indiscriminately beaten. Attempts at some of our leaders' lives were also made.

Another point I want to place before this House. One day my respectful leader Thiru Kamaraj was travelling in a car and it was followed by a jeep and a fleet of cars. One gentleman, an advocate, was travelling in another car and he wanted to push against the car in which Thiru Kamaraj was travelling. This fact had been brought to the notice of the Superintendent of Police. He did not take any action. I understand reliably that that gentleman is now going to be appointed as Public Prosecutor of Kanyakumari. Recently the Public Prosecutor of Kanyakumari had retired and for some months there was no Public Prosecutor for Kanyakumari Sessions Court. If such a person, against whom such grave allegations were made, would be appointed as Public Prosecutor, will it speak well of this Government? That is the question which I want to ask.

Another point which I want to say is about the local District Collector and Minister for Local Self-Government, who was camping in that area. Several Panchayat Union Commissioners were transferred. They were asked to work for the ruling party. Executive Officers of Panchayats were transferred in season and out of season. I know a Panchayat Executive Officer, who was transferred and who had been working regularly for the ruling party. I am a witness to that. One Panchayat Executive Officer was working for the ruling party. Does this speak well of the Ministry as well as of the officers who are responsible? In Killiyur Panchayat Union area the Local Self-Government Minister was touring and on the eve of election, a notice purporting to have been issued by the Chairman had been issued. I would say that it was done without his knowledge and consent. This has been brought to the notice of the District Collector. He did not listen to us and I am afraid that the District Collector was partisan. He had been specially posted to that district on the eve of elections with instruction to use the official machinery so that the ruling party may succeed in the bye-election. But the people stood the test very well and I am sure this sort of official interference and mal-administration should not be repeated at least in furture. We also learn that the ruling party, when they were in opposition, were saying that the Congress Ministers were camping in the place of election and doing election propaganda. What happened in Nagercoil ? The people know what happened in Nagercoil and many of the legislators who toured that place at that time know what happened. This sort of lawlessness should not be encouraged by the local officers as well as by Government. Whenever we make complaints to local officers, they are indifferent.

Another question which I want to bring to the notice of this House is the fact that the Superintendent of Police became sick suddenly one fine morning. He had been asked to take leave. He got sick of the situation that was prevalent in that area. If complaints were made that people were indiscriminately beaten, the local police was keeping quiet. Government thought that the Superintendent of Police was an inconvenient man and he was asked to go on leave and another man was posted. I am not here to argue on his behalf. But things are not going on well. Something is rotten somewhere. That is the charge which I am going to level.

Another point which I want to bring to the notice of this House is that this Government have been partial and partisan. While substantiating this charge, I would invite the attention of this House to the action taken by the District Collector and the Government regarding the Jaggery Manufacturing Societies. The Jaggery Manufacturing Societies were distributing rice and other rationed articles but suddenly just on the eve of elections notice has been served on these societies to the effect that their licences would be terminated. They had to rush to the High Court and file a writ and obtain stay. Sir, Fishermen Co-operative Societies are allowed to run fair price shops. Agricultural Societies are allowed to run fair pirce shops. Milk societies are allowed to run fair price shops but the Jaggery Manufacturing Societies have not been allowed to run these shops. Is this fairplay, I would ask this Ministry?



Another incident happened in Karangal, my native village. One armed policeman fired 7 rounds shouting ' Down with Kamaraj ' and ' Vazhga Anna ' at our flag that had been fluttering in the adjoining tree. What action had been taken against that police-constable? Luckily he did not fire against us. We expected that firing would be opened against us but it did not happen. This sort of lawlessness should not be tolerated. The Local Police were not taken into confidence and policemen from other districts were imported. I have no quarrel with them but let them be impartial and fair. Let them be fair to all.

Another incident which happened at Nagerkoil is a very harrowing one. There was an incident in which one Kittu was murdered. Two people were arrested and the allegation was that the incident took place when ' rummi play ' was going on. Many of our Congress leaders were roped in as accused. The matter is pending enquiry and I do not want to speak ill of the police but they should be impartial. The Madras Police is supposed to be efficient police.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *கிட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும் நேரத்தில் அவர் ரம்மி ஆடிக் கொண்டிருந்தார் என்று கூறுவதும், இந்த வழக்கைப்பற்றிக் கூறுவதும் நல்லது அல்ல. கொலை செய்யப்பட்ட கிட்டுவிற்கு சீட்டு ஆடவே தெரியாது என்பதுதான் அங்கு இருப்பவர்கள் கூறும் செய்தி.*

THIRU R. PONNAPPA NADAR: Sir, there is an allegation that the incident took place while Kittu and the assailant were playing cards. As I am a responsible lawyer, I am not speaking about the merits of the case. I know that in this case hanging will have to be given to the assailant and also to the people who are responsible for it. But innocent people were roped in this case. We took this matter to the Superintendent of Police and the Deputy Inspector-General and they kept silent. Since the matter is before the court, I do not want to make any further comment. Many people in Tamil it is called கண்டால் தெரியக்கூடிய ஆட்கள் including known and unknown and certain innocent persons were roped in through First Information Report (Mr. Chairman sounded the gong). I will finish my speech in five and they were taken to lock-up and severely beaten up . . . minutes.

There was an agreement among all the party leaders that lorries should not be used for taking out processions and volunteers just before the election. That has been flouted by the D.M.K. men. Their volunteers were freely moving on the streets of Nagerkoil

[Thiru R. Ponnappa Nadar] [1969 சனவரி 27

and other places but our people were not allowed to do so. When we wanted to take out a procession, that was refused. Is that correct? All should be treated equally.

Another point is that some responsible persons were saying that there was communal vendatta. But the Himalayan victory achieved by our leader would indicate that all sections of our people are politically conscious and they have been judging the achievements of the D.M.K. during the span of 20 months and comparing them with the performances of the Congress. This Ministry has been doing all sorts of things against us and they want to do all sorts of things against our workers. But I think that this type of rowdyism should be avoided. The ex-Speaker of the Legislative Assembly had brought his own men from the Tirunelveli District and many of them were armed and we had reason to suspect that some of them wore khaki uniforms. Money was profusely flowing into the district. The people in my district are well aware of these things. I do not want to take the time of this House. I would only say 'Cry halt to this sort of discrimination and lawlessness'. With these words, I resume my seat.

DR. H. V. HANDE: Sir, I request the hon. Member, Thiru Ponnappa Nadar to enlighten me on one particular point. Is he prepared to prevent all the Ministers, Prime Minister, Union Cabinet Ministers and State Ministers from entering the vote-hunting campaign and convene a conference for that purpose.

Another point is that a number of Swatantra and D.M.K. party workers were beaten, butchered and murdered and what is the answer for it.

THIRU R. PONNAPPA NADAR: The D.M.K. party while they were in the opposition were saying that Ministers should not take part in election propaganda and I just want to remind this point to my hon. Learned friend. Also, no Union Minister came to the Kanyakumari district and canvassed votes in connection with the bye-election held recently there.

நண் பகல் 12-00

DR. H. V. HANDE: All of us know all that. But where to begin and who should begin? They should begin from their party and set an example. I know several instances in which Congress Ministers had gone on vote-hunting. You all know that. "We can go and address conferences but you cannot". Is that a valid argument for them to ask? How many Congress Ministers had gone and addressed meetings on the eve of elections? Will the Deputy Leader of the Opposition say that they would begin and set an example?

THIRU R. PONNAPPA NADAR: I do not think that the Indian Penal Code makes conducting election campaign as an offence. But if third degree methods are used, it is an offence.



1969 சனவரி 27]

திரு. பி. ஜி. கருத்திருமன்: என்னுடைய கட்சி உப தலைவர் அவர்களை கனம் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள், யார் ஆரம்பிப்பது என்று. முதல் முதலாக அவர்களுடைய குருநாதர் ராஜாஜி அவர்கள், மந்திரிசபையே ராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எதிர்க் கட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருந்தபோது அமைச்சர்கள் ராஜிநாமா செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அமைச்சர்கள் வரவேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அவர்கள் வரலாம். ஆனால் அதற்கு மட்டும் காங்கிரஸ் அமைச்சர்களைக் காட்டிவிட்டு, அவர்கள் குருநாதர் சொன்ன பேச்சையே மீறி, தவறான காரியத்தில் ஈடுபட வேண்டாமென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். அமைச்சர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டியதுதான். அவர்கள் வரவேண்டியதுதான். அதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென்றுதான் எங்கள் கட்சித் துணைத் தலைவர் விளக்கினார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சர்க்கார் செலவில் கட்சிப் பிரசாரத்தை இதுவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்யவில்லை. பொதுத் தேர்தலின்போது இந்தியப் பிரதமர் காங்கிரஸ் கட்சியினுடைய பிரசாரத்திற்காகத் தமிழ்நாட்டிற்கு வந்தபோது ஆன செலவை சர்க்காருக்கு இன்னும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கொடுக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்தப் பிரச்சினை பற்றி ஏற்கனவே நான் சட்டசபையிலே சொல்லியாகிவிட்டது. நியாயமான செலவை ஏற்றுக் கொள்ளுகிறேன், அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி விட்டேன். அதைத் தவறாகப் புரிந்துகொண்டு அவர்கள் தரவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நேருஜி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்த நேரத்திலே மூன்று முறை வந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் ரூ. 15,000, ரூ. 14,000 தான் கட்டப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இந்திரா காந்தி வந்தபோது, தேர்தல் பிரச்சாரத்திற்காக ஆன மேடை அமைப்புகள், ஒலி பெருக்கிகள், இவைகளுக்கான செலவை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் முதலமைச்சர் 'செக்யூரிட்டி அரேன்ஜ்மென்ட்ஸுக்கு' ஆன செலவையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தயாராக இல்லை. மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னேன். மேடை அமைப்புச் செலவு, அதாவது பிரதம அமைச்சர் பேசிய 4 கூட்டங்களுக்கு, ரூ. 70,000, 80,000 ஆகியதா? திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அப்படித்தான் செய்திருக்கிறார்களா என்று கேட்கிறேன். 4 கூட்டங்களில் பிரசாரத்திற்கு ரூ. 75,000 என்று அவர்களுடைய ஆட்சியிலே கணக்கெழுதி வைக்கிறார்களா என்று கேட்கிறேன். இன்றும் என்னுடைய வார்த்தையைக் காப்பாற்றத் தயாராக இருக்கிறேன். நியாயமான செலவை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ரூ. 30,000 பாதுகாப்புச் செலவு. அந்தச் செலவு தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் அப்பொழுதே சொல்லிவிட்டார்கள். அது போக மேடை அமைப்புச் செலவு ரூ. 70,000 ஆகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கு அப்படித்தான் ஆகிறதா என்று கேட்டார். நாங்கள் எல்லாம் அப்படி ஆடம்பரமான மேடை போடவில்லை. ஆனால், பிரதமர் அவர்கள் வந்தபோது, மேடைச் செலவு, ஆங்காங்கு சென்ற சுற்றுப் பயணச் செலவு, காங்கிரஸ் கட்சியினுடைய சுற்றுப் பயணத்திற்கு ஆக ரூ. 70,000 ஆகியிருக்கிறது. பாதுகாப்புச் செலவு நீங்கலாக. சமீபத்திலே, பிகாரிலே பிரதமர் சென்று பிரசாரம் செய்ததற்காக ரூ. 3½ இலட்சம் ஆகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கேட்டால், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பிகார் சர்க்காருடைய கஜானா காலியாகிவிட்டதா, அவர்களே கொடுக்கட்டுமே என்று கூறியிருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுப்பேன் என்று கூறியிருக்கிறார்கள். ஓராண்டு காலமாகக் கூறி வருகிறார். இப்பொழுதாவது கொடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** குற்றச்சாட்டாகச் சொல்லுகிறார்கள். நான் சொல்வது என்னவென்றால் (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உங்களுக்குப் பாராட்டுதான்) பண்டித ஜவகர்லால் நேரு வந்தபோது ரூ. 15,000, 14,000 கொடுத்திருப்பதற்கு ரெக்கார்டுகள் இருக்கின்றன. அதை இங்கே சமர்ப்பிக்கட்டும். இந்தச் சபை முடிவதற்கு முன்னாலேயே கனம் அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் தேர்தலுக்காக பாரத நாட்டு பிரதம அமைச்சர் வந்தபோது எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கட்டும். ஜவகர்லால் நேரு அவர்களை விடவா இந்திரா காந்தி வருகைக்குச் செலவு அதிகமாகியிருக்கிறது? அதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வளவுதான் என்று நியாயமான செலவை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதில் பின்வாங்கவில்லை என்று இப்பொழுதும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தக் கணக்கு புதிய சர்க்கார் வந்தபோது போட்ட கணக்கு அல்ல. பழைய சர்க்கார் அதிகாரிகள் போட்ட கணக்குத்தான். நானே கூட எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் காட்டுகிறேன். அவர்கள் வாக்கைக் காப்பாற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கணக்கை யார் சரிக் கட்டுவது என்று அல்ல . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சாதாரணமாக, கவர்னர் அவர்கள் உரையின்மீது அவரவர்கள் பேசும்போது பல கருத்துக்கள் வரலாம். நேரடியாக அவர்களைக் குறிப்பிடுகிற சூழ்நிலை ஏற்படும்பொழுது அதனால் வெளியே தவறான எண்ணம் ஏற்



படும் என்ற நிலை வரும்பொழுது விளக்கங்கள் 'பெர்சனல் எக்ஸ்பிளநேஷன்', மற்றவைகள் கொடுத்து உடனே திருத்த முயலலாம். இப்பொழுது ஒவ்வொரு கருத்துக்கும் அவ்வப்போது பதில் அளிப்பது சட்ட திட்டங்களுக்குப் புறம்பாகப் போய்க் கொண்டிருக்கும். அந்த அந்த உறுப்பினர்கள் பேசுகின்ற நேரம் வருகின்றபொழுது அவரவர்கள் கருத்துக்களைக் கூறலாம் என்று கூற விரும்புகிறேன். எனவே, முறைப்படி பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE :** The point that I want to address the Hon. Leader of the Opposition is this. Is he prepared to prevent the Prime Minister from entering these political campaigns? That is the only question. Is he prepared to stress before the Prime Minister that Ministers should not undertake political campaigns? But if he says that he can hit and I cannot hit, that is a point which I cannot accept.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எல்லா அமைச்சர்களும் தேர்தலுக்கு வரலாம், அதுதான் ஜனநாயக முறை என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ இடிக்கிறார், அதாவது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார். அதைப் பேச வேண்டாமென்று சொல்லவில்லை, சுதந்திரா கட்சிக்காரர்கள் . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், துணைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது கேட்கவில்லை என்று நினைக்கிறேன். அவர் தங்களுடைய கட்சிக்காரர் பேசும்பொழுது கேட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும்.
But he has suddenly butted in and spoken something.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. பி. ஜி கருத்திருமன் :** அமைச்சர்கள் வர வேண்டாமென்று சுதந்திராக் கட்சி கூறுகிறது. நாங்கள் அமைச்சர்கள் வரட்டும். ஆனால் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென்றுதான் சொல்கிறோம். அதைத்தான் எங்கள் கட்சி துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள்.

**திரு. ஏ. கோ. பலகிருஷ்ணன் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 7 நிமிடங்களை வேறு விவாதத்திலே செலவழித்து விட்டார்கள். அந்த 7 நிமிடங்கள் என் கணக்கிலே குறையாமல் இருப்பதற்கு துணைச் சபாநாயகர் அவர்கள் வழி செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்குக் கொடுத்திருப்பது குறுகிய காலமாகத்தான் இருக்குமென்று கருதுகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அத்தனை கருத்துக்களிலும் விட்டது அல்லது தவற விட்டது என்ற முறையிலே சிலவற்றைச் சொல்வதற்கு

இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். இந்த நேரத்திலே நான் அதை மட்டும் கூறி என்று வார்த்தைகளை முடித்துக் கொள்ள பிரியப்படுகிறேன்.

குறிப்பாக, அண்ணா உடல்நிலை பற்றிய விஷயம், தமிழ் நாடு பெயர் மாற்றம் பற்றிய விஷயம் இதிலே முன்னதாக குறிப்பிட்டிருக்கிறது. மக்களுடைய பொது வாழ்க்கைக்காக, இன்றைக்கு இருக்கிற நாட்டு நிலைமையை குறிப்பாக உணவு நெருக்கடியை குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலும் வட ஆற்காடு மாவட்டத்திலும் உள்ள உணவு உற்பத்தி நெருக்கடியைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொள்ள முடியும் என்ற உத்திரவாதம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நான், இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புவது செங்கற்பட்டு மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது, சாவி போரும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தஞ்சைக்கு அடுத்த வட ஆற்காடு மாவட்டம் உணவு உற்பத்தியிலே சிறப்பாக உள்ள இடம். அதுவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கு அடுத்தாற்போல் தென்னாற்காடு மாவட்டத்திலும் நான்கு தாலுக்காக்கள் பார்ப்பதற்கு பாலைவனமாக காட்சி அளிக்கிறது என்பதை தயவு செய்து இந்த அமைச்சர்களும் மறந்துவிடக் கூடாது. அதிகாரிகளும் மறந்துவிடாமல் பாதுகாப்பிற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அடுத்த எல்லையிலுள்ள திண்டிவனம் தாலுக்காவும், செஞ்சி தாலுகாவும் இன்றைக்கு இருக்கிற நிலையில் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. நான் குறிப்பிட்டு சொல்ல விரும்புவது எனது ஊரிலே எனது குடும்பத்திலே மூன்று முறை நாற்று விட்டும் அந்த நாற்றங்காலிலேயே நாற்று நின்று விட்டது. நாங்கள் எங்கே அரிசிக்குப் போவது, எங்கு அரிசி வாங்கிச் சாப்பிடுவது என்ற நிலையே புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். வசதியுள்ள எனக்கே இந்த நிலை என்றால் என்னைவிட பரம ஏழைகள் குறிப்பாக, ஆதித் திராவிட மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 60, 70 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டிலே பஞ்சம் வந்த காலத்திலே பஞ்சத்தை எப்படிப் போக்குவது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி ஆதரவு அளிப்பது என்ற நிலை உருவாகிய அந்த காலத்தில், அப்பொழுது பொறுப்பிலிருந்த பக்கிங்ஹாம் துரை அவர்கள் பக்கிங்ஹாம் கெனால் வெட்டினார்கள். அப்படி அந்தக் கெனால் வெட்டியதால் பலருக்கு வேலை கிடைத்ததன் காரணமாகப் பஞ்சம் தீர்ந்தது என்று எனக்கு முன்னால் இருந்த பெரியவர்களும் வயதானவர்களும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதே நிலைதான் இப்பொழுதும், அதே மாவட்டத்தில் தான் இந்தப் பஞ்சம் வந்தது. பக்கிங்ஹாம் கெனால் தென் ஆற்காடு மாவட்டத்தில் மரக்காணம் எல்லையில் ஆரம்பித்து சென்னைக்கு வந்திருக்கிறது. அது செங்கற்பட்டு மாவட்டம்



நெடுக தொட்டுக்கொண்டிருக்கிறது. அதே பஞ்ச நிலைதான் இப்பொழுதும் உருவாகிக் கொண்டிருக்கிறது. பஞ்சம் தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் ஆரம்பித்து சென்னை வந்திருக்கிறது. இந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கு, ஓரே இடத்தில் மட்டும் இல்லாமல் ஒரு மாவட்டத்தில் மட்டும் இல்லாமல், பாதிக்கப்பட்ட அத்தனை மாவட்டங்களுக்கும் மாவட்டம் என்று குறிப்பிடும் பொழுது வட்டமாக இருந்தாலும் சரி, பிர்க்காவாக இருந்தாலும் சரி, பாதிக்கப்பட்ட அத்தனை இடங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். வரி வஜாவும் செய்து கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் கடன் தவணை பாக்கியும் ஒற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ்வெண்மணி நிலைமைகளைப் பற்றி எனக்கு முன்னால் பல பேர்கள் குறிப்பிட்டார்கள். எதற்காக அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நான் கேட்கவில்லை. மனிதாபிமானத்தோடு அந்த நிகழ்ச்சியை அணுகவேண்டும்.

(திரு. சு. துரைசாமி தலைமை)

அதே நேரத்தில் அம்மாதிரி நிகழ்ச்சிகள் மறுபடியும் இந்த நாட்டில் நடைபெறாமல் இருப்பதற்கு நம்முடைய அரசாங்கம் வழிவகை என்ன செய்திருக்கிறது என்பதைத் தான் நான் ஞாபகப்படுத்திக் கேட்க விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் அத்தனை பேர்களும் ஆதித் திராவிட மக்கள் கேட்க வாயில்லாத மக்கள், கேட்பதற்கு லாயக்கு இல்லாத நிலையிலே இருக்கும் மக்கள் இன்றைக்கு முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருப்பவர்கள். அப்படிப்பட்ட ஆதித் திராவிட மக்கள் இனிமேலாவது பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி நீதி விசாரணையிலும், அரசாங்க விசாரணையிலும் இருப்பதன் காரணத்தினால் நான் அதைத் தொடாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, மறுபடியும் இம்மாதிரி நிகழ்ச்சி நடக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி நிகழ்ச்சி இனிமேல் நடக்கக் கூடாது. நடந்தால் யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிடக் கூடாது என்பதை மட்டும் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதியிலே ஆற்று நீர்ப் பாய்ச்சல் கிடையாது. கிணறுகள் வெட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக வேண்டிய கடன்கள் எல். எம். பாங்குகள் மூலமாக வழங்கப்படுகின்றன. எப்படிக் கொடுத்தாலும் வெகு சீக்கிரமாக விவசாயி

களுக்கு கடன் தொகை கிடைக்க வேண்டும். இனிமேலாவது அவர்கள் இறைத்துப் பிழைத்து வாழக்கூடிய வகையில் சிக்கிரம் கடன் தொகை அளிக்க வேண்டும், கிணறுகள் வெட்டினால் மட்டும் போதாது. அந்தக் கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மின்சார மோட்டார், பம்பு செட்டுகள் வாங்குவதற்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும். அதுவும் குறிப்பாக இந்த நேரத்தில் அதைச் செய்யாவிட்டால், பல கிராமங்கள் பாதிக்கப்படும். பல குடும்பங்கள் ஊரை விட்டே கூட வந்துவிட நேரிடும். இந்த நிலைமையை மன்றத்தில் எடுத்துச் சொல்லி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரி வரத்துக் கால்வாய்களெல்லாம் நீண்ட நெடுங்காலமாக தூர் வாரமல் கிடக்கின்றன. மாக்காணம் பகுதியில் ஊற்றுக் குட்டைகள் கூட தூர் வாராமல் இருக்கின்ற காரணத்தினால், அவைகளை எல்லாம் இந்த நேரத்தில் பார்த்து, தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும்பாலையைப்பற்றி அழிரூகப்படுத்தி பேசிய நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அதை ஒரு முன்னோடித் திட்டமாக முதலிலேயே எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டும். நான் இதைப்பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம், எங்கள் மாவட்டத்திலுள்ள நெய்வேலி நிலக்கரி அதற்குப் பயன்படுகிறது, அதனால் எங்களுக்கு லாபம் வரும், எங்கள் மாவட்ட மக்கள் வளம் பெறுவதற்கு அது வழிவகை செய்யும். ஆகவே, அந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில் அவர்கள் பெரும் பகுதி நேரம் எடுத்துக் கொண்டு நாகர்கோவில் தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். நாகர்கோவில் தேர்தலுக்குச் சென்றவர்களில் நானும் ஒருவன். நாகர்கோவிலில் நடந்தது தேர்தலா அல்லது பாரதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற குருக்ஷேத்திரப் போரா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. தேர்தலை எப்படி நடத்துவது, தேர்தலில் எப்படி ஓட்டு கேட்பது, எப்படி மக்களை அணுகுவது, பொது மக்களிடத்திலும், ஏழை எளியவர்களிடத்திலும் எப்படிப் போய் வோட்டுச் சேகரிப்பது என்பதைப்பற்றியெல்லாம் நான் பழகியிருக்கிறேன். நாங்கள் அங்கே பொது மக்களை அணுகும்பொழுது, அங்கே நடந்த சம்பவங்களையெல்லாம் பார்க்கும்பொழுது, அங்கு நடந்தது இடைத் தேர்தல் போல் காட்சி அளிக்கவில்லை, பாரதத்தில் குறிப்பிட்ட குருக்ஷேத்திரப் போர் போலத் தான் காட்சி அளித்தது என்பதை மட்டும் அத்தனை பேர்களும் மறந்து



விடக் கூடாது. யாரோ ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களுடைய ஜீப்பில் இடிப்பதுபோல வந்தார்கள் என்று சொல்லப்பட்டது. சட்டத்தின் கீழே இடிப்பது போல வந்தால் குற்றம் ஆகாது. இடிக்க வேண்டும். இடித்தால்தான் குற்றம். இடிப்பதுபோல் வந்தால் குற்றம் ஆகாது. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஒரு வக்கீல். நான் அதைப் பற்றி அதிகம் சொல்வதற்கு இல்லை. நான் நாகர்கோவில் தேர்தலிலிருந்து திரும்பி உயிரோடு என் ஊருக்கு வந்தது எனக்குத் தான் தெரியும். நான் அதைப்பற்றி மற்றவர்களிடத்தில் சொல்ல முடியாத அளவுக்கு அங்கே அராஜகம் நடந்தது. அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதியிலே—கிள்ளியூர் தொகுதியிலே--கருங்கல் போலீஸ் ஸ்டேஷனில் சென்று என்னுடைய கட்சித் தோழர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பது பற்றி சொல்வதற்காக நான் வந்தேன். என்னைத் தொடர்ந்து மூன்று கார்கள் வந்தன. எனக்கு முன்னால் ஒரு கார், எனக்குப் பின்னால் ஒரு கார், இடது பக்கம் ஒரு கார். இப்படி நிறுத்திவிட்டார்கள். வலது பக்கத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த நிலையில் எப்படி போவது? இந்த நிலையில் எப்படி போகிறார் பார்ப்போம் என்று என்னை அங்கே வந்து ஆயிரம் பேர்களுக்கு மேல் சூழ்ந்துக் கொண்டுவிட்டார்கள். அது மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிலே முண்டாசு கட்டிக்கொண்டு, வேட்டியை மடித்து வரிந்து கட்டிக் கொண்டு, என்னைக் கைது செய், என்னைக் கைது செய் என்று சொல்லி மார்தட்டினார்கள். அப்படி காட்சி அளித்தார்கள் என்று பார்க்கும்பொழுது, ஒரு சட்ட மன்ற உறுப்பினர் தானா, இப்படியா காட்சி அளிப்பது? நாகர்கோவிலில் நடந்த காட்சி சென்னையில் நடக்குமா, அல்லது தென் ஆர்காடு மாவட்டத்தில் அப்படி நடக்குமா என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. காலம் வரும், நேரம் வரும், வாய்ப்பு வரும் போது எடுத்துச் சொல்லலாம் என்று நாகர்கோவிலை விட்டு வந்து விட்டேன். இன்னும் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுகிறேன். அங்கத்தினர்கள் பயந்து விடுவார்கள் என்பதால் மேலோட்டமாகச் சொல்லிவிடுகிறேன். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊரில், கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நானும் சென்றோம். உண்மையிலேயே எங்களை எப்படித்தான் தெரிந்து கொண்டார்களோ தெரியவில்லை. எங்கள் காரில் கொடிகூடக் கட்டவில்லை. ஆனாலும், எப்படியோ, பாராளுமன்ற உறுப்பினர் என்றும் சட்டமன்ற உறுப்பினர் என்றும், தெரிந்து கொண்டார்கள். அந்த ஊர் மக்களுக்குத் தெரிய நியாயம் இல்லை, வாய்ப்பில்லை. ஆனால் இவர்கள் அங்கே கொண்டு வந்திருந்த குண்டர்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். “வானூர் வானூர் வானூர்” என்று ஒரு சத்தம் கேட்டது. ‘நெல்லிக்குப்பம், நெல்லிக்குப்பம்” என்று மற்றொரு சத்தம் கேட்டது. இந்த இரண்டு சத்தத்தையும் கேட்டு ‘சரி நம்மை யாரோ தெரிந்தவர்கள் இந்தக் கும்பலில் இருக்கிறார்கள். இவர்களிடம் சிக்கக்

கூடாது ' என்று, எப்படியாவது ஓடிவிட வேண்டும் என்று பார்த்தால் காரை நகர்த்த முடியவில்லை. அப்படி நாலுபக்கமும் வளைத்துக்கொண்டுவிட்டார்கள். முன்னே போவதற்கும், பின்னால் நகர்த்துவதற்கும் வழியில்லை. அப்படிப்பட்ட நிலைகளை இந்தக் காங்கிரஸ்காரர்கள் உண்டாக்கியிருந்தார்கள். கேட்கிறவர்களுக்குப் புரியாது. பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள்தான் அந்தக் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஜனநாயக சோஷலிசம் என்று சொன்னார்கள்; ஏழைகளின் பங்காளிகள் என்றார்கள். ஆனால், இந்தத் தேர்தலிலே அவர்கள் செய்த அநியாயம், அக்கிரமம் இவ்வளவு என்பதை வேதனையோடு பார்த்துவிட்டு, திரும்பிவிட்டோம். உண்மையிலேயே காங்கிரஸ் அன்பர்கள் நாகர்கோவில் தேர்தல்பற்றி இந்த அவையில் சொல்ல மாட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வேதனையாக இருக்கிறது. கவர்னர் உரையில் பேசுவதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, நான் சொன்ன அத்தனை பிரச்சினைகளையும், முக்கியமாக, வறண்ட பிரதேசம் என்பதைப் பற்றி குறிப்பிட்டதை கவனிக்க வேண்டும் என்று சொல்லி என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்னுடைய கிள்ளியூர் தொகுதியில் வன்முறை ஏற்பட்டதாகவும், அதனால் கஷ்டங்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்கள் நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், நான் இப்பொழுது கிள்ளியூர் அங்கத்தினர் அல்ல, விளவங்கோடு தொகுதி அங்கத்தினன் என்பதை தங்கள் மூலம் அன்னாருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கத்தினர் அவர்கள் பாரதப் போர் நடந்தது என்றார்கள். தர்மம் வென்றது என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : தலைவர் அவர்களே, மகாபாரதத்திலே, தர்மத்திற்குப் பல்வேறு இடங்களில் பலவேறு வகையான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த விளக்கத்தை எதிர்க்கட்சி துணைத் தலைவர் எடுத்துக்கொள்கிறார்கள்? எது தர்மம் என்பதை பொதுமக்கள் நன்றாக அறிவார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி)**: இனி பேசும் உறுப்பினர்கள் பத்து நிமிடத்தில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, திரு. ராமசாமி கவுண்டர்

*** திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி. ஆளுநர் அவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய நோயைப் பற்றிச் சொல்லி அவர் விரைவில் குணம் பெறவேண்டும் என்று நாட்டு மக்களோடு தாமும் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். சட்ட சபையிலே





பேசுகின்ற ஒவ்வொரு அங்கத்தினரும் முதல்வர் விரைவிலே குணம் அடையவேண்டும் என்பதையே நினைத்துக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் விரைவில் குணப்பட்டு, நல்ல வகையில் இங்கே வரவேண்டும் என்று விரும்புகிறேன். எல்லாவற்றையும் விட, முதல் அமைச்சர் குணப்படுவதற்கு, அவர்களுடைய நோய் தீருவதற்கு, பிரார்த்தனைதான் முக்கியம். நேற்று குடியரசு தின விழாவில், கிண்டி ராஜபவனத்தில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மில்லர் அவர்களைக் கண்டு ஒரு சில வார்த்தைகள் பேச நேரிட்டது. அவர்கள் சொன்னார்கள், "முதல் அமைச்சர் குணப்பட்டுவிடுவார்கள். ரேடியம் கதிர் ஒரு 70 நாட்களுக்கு வைக்க வேண்டியிருக்கும். அது முடிந்தவுடன் அவர்களை அமெரிக்காவிற்கு அழைத்திருக்கிறேன். ஓய்வு பெற்று, நல்ல வகையில் தேர்வு பெற்று, திடகாத்திரமாகத் திரும்புவார்கள்" என்று நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். எல்லாவற்றையும் விட, ஒரு ஆங்கிலக் கவிஞன்

' More hings are wrought by prayer than this would dreams of '.

"உலகம் கனவிலும் காணமுடியாத விஷயங்களைப் பிரார்த்தனையால் சாதிக்கமுடியும்" என்று சொன்னான், அந்த வகையில் அண்ணா அவர்கள் சீக்கிரமே குணப்பட்டு, நோயிலிருந்து விடுதலை பெற்று, நீண்ட நெடுநாள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்வதற்கு நாம் எல்லோரும் பிரார்த்தனை செய்வோமாக.

அடுத்தபடியாக, கவர்னர் உரைமீது வழக்கப்படிச் சொல்லும் கருத்துக்களைக் கவனிப்போம். முதன் முதலாக, வேளாண்மையை எடுத்து நல்ல பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். வானம் பொய்த்துவிட்டது. ஆகையால், தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள் மாத்திரம் அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கே பாக்கெட்டு பாக்கெட்டுகளாக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக கிணறுகளை ஆழப்படுத்துவது, அல்லது, விவசாயிகளுக்குக் கடன்களை அதிகமாக வழங்குவது என்பதெல்லாம் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால், அதோடு மட்டும் இந்தப் பஞ்ச நிலை தீர்ந்து விடுவதாகத் தெரியவில்லை. காரணம், அநேக இடங்களிலே, குடிநீர்ப் பற்றாக்குறை, உணவு, மாட்டுத் தீவனப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், மக்கள் ஊரைவிட்டுக் குடிபெயரும் அளவில் அநேக மாவட்டங்களில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பஞ்ச நிவாரண வேலைகள் துரிதமாகச் செயல்படவேண்டும். எனக்குமுன் பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டது போல, முன்னொரு காலத்தில், பஞ்ச காலத்தில் பக்கிங்காம் கால்வாய் வெட்டப்பட்டது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலை காரணமாக மக்கள் அந்த அந்த ஊரிலிருந்து குடி பெயராமல் காப்பாற்ற வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். இதை அரசு பரிசீலித்து உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

சென்ற 17-ம் தேதி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். லோயர் பவானியில் இப்பொழுது முதல் டர்ன் நடக்கிறது. அந்த நெல் அறுவடையாகி முடிவு பெறும் நேரம், டிசம்பரில்

ஆரம்பித்து, இப்பொழுது கடுமையாக அங்கே கொள்முதல் மேற்கொண்டு விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் புகார்கள் பல எனக்கு வந்தன. நானே ஊர் ஊராகச் சென்று தொகுதியைச் சுற்றிப் பார்த்தேன். மேலும் விவசாயிகள் சங்கத்தாரோடு கலந்து யோசித்தேன், இந்த நான்கு வருஷங்களாக லோயர் பவானிப் பிரதேசம் வருஷம் விட்டு
12-30 a.m வருஷம், மாற்று டர்ன் கிடைக்கும் பகுதி ஆகிவிட்டது. ஒரு பகுதிக்கு இந்த வருஷம் தண்ணீர் கொடுத்தால், அடுத்த வருஷம் அதற்கு கிடையாது. அதற்கு அடுத்த வருஷந்தான் கொடுக்கப்படும். ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் தண்ணீர் கொடுக்கப்படும் நிலை, பரிதாபகரமான நிலை. அப்படிப்பட்டவர்களுக்குக் கொள்முதலே இருக்கக்கூடாது. அதுதான் நியாயம். ஆனால், அதிகாரிகளின் கண்டிப்பு, கெடுபிடி மக்களை மிகத் திணற வைத்திருக்கிறது. மக்களெல்லாம் மிகமிகக் கஷ்டப்படுகிறார்கள், "அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே" என்ற வாக்கை "அவர்கள் அஞ்சாத அதிகாரி இல்லை அவனியிலே" என்று மாற்றிச் சொல்லிவிடலாம். அந்த அளவுக்கு அதிகாரிகள் கெடுபிடியாக இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பதை கோட்டாட்சித் தலைவரிடமும் நான் புகார் செய்துள்ளேன்.

அரை ஏக்கர், முக்கால் ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறவர்களிடமெல்லாம் கூட, ஏதோ இசைந்து அவர்கள் தாமாகவே கொடுப்பதாகச் சொல்லி வாங்கி வந்தார்கள். ஆனால், விசாரிக்கப் போனால், நிலைமை வேறாக இருக்கிறது. நேர்மாறான முறையில் காரியங்கள் நடந்திருக்கின்றன. பல ரிகார்டுகளையும் வைத்துக் கொண்டுதான் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை 17-ஆம் தேதி நான் கொடுத்திருந்தேன். கொள்முதல் செய்தது, நோட்டீஸ் கொடுத்தது எல்லாமே தலைகீழ் வியாபாரம். நண்பர் திரு. கோமதிசங்கர தீட்சதர் அவர்கள் "என் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கதி என்ன?" என்று கேட்டபடி நானும் கேட்க நினைத்துக்கொண்டிருந்தபோது, "கவர்னர் உரை விவாதத்திலேயே அதுபற்றி பேசு" என்று பதில் வந்தது. ஆகையால் இப்பொழுது நான் அமைச்சரவையைக் குறிப்பாக உணவு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வது எல்லாம்— "ஆதாரம் இன்றி நான் எதையும் சொல்லவில்லை; வேண்டிய ஆதாரங்களை அமைச்சர் அவர்களுடைய அலுவலகத்தில் வேண்டுமானாலும் தருகிறேன்—இப்படிப்பட்ட கடுமையான முறை எல்லாம் கொள்முதலில் இருக்கவேண்டாம், அதைத் தவிர்க்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மறுபடியும் திட்டவட்டமாக, கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என்பதே.

அடுத்தபடியாக, கீழ்வெண்மணியைப் பற்றிச் சொல்லாத பேர்களே இல்லை. பல பேர் குறிப்பிட்டாகிவிட்டது. இன்னும் அநேகர் அதைப்பற்றித்தான் பேசப் போகிறார்கள். மிக மிகப் பயங்கரமான கொடும் செயல் அது என்பதை எல்லோருமே மிக மிக வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அதோடு அது நின்றுவிடக்கூடாது. அதையொட்டி இன்னும் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களெல்லாம் வந்து



கொண்டிருப்பது நமக்குத் தெரியும். உண்மை, தர்மம், நீதி நிலை நாட்டப்படவேண்டுமானால், அந்தக் கொடுஞ் செயலுக்கு மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ, அல்லது தெரிந்தோ, தெரியாமலோ 'யார், யார் காரணம்' என்பதைப் போலீஸ் விசாரணையிலோ அல்லது கோர்ட் விசாரணையிலோ தெரியாத அளவுக்கு நீதி விசாரணை நமக்குப் புலப்படுத்தும். இந்தச் சபையில் உள்ள அங்கத்தினர்கள் எல்லோருமே அதை ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். இந்தக் கீழ்வெண்மணி சம்பவத்தைப் பொறுத்தவரையிலும் நீதி விசாரணைக்கு (ஜுடிஷியல் என்க்வையரி) உடனே உத்தரவிடவேண்டும். அதைச் சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கண்டறிவதற்காகவும், மற்ற சிக்கல்களை ஆராய்வதற்காகவும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இடையில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்ன என்பதைக் கலெக்டர் அவர்கள் 16-ம் தேதி ஒரு முக்கூட்டு மாநாடு கூட்டி ஓர் உத்தரவு பிறப்பித்தார். அங்கிருக்கும் மிராசுதார்களெல்லாம் அதை எதிர்க்கிறார்கள். இப்படி அந்தப் பிரச்சினையை அதிகச் சிக்கலுள்ளதாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி விசாரணை வெகு துரிதமாக நடத்தப்பட்டு, அதன்படி அங்குள்ள நிலைமைகளை அறிந்து, அங்கு அமைதியை நிலைநாட்டி, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று கருதப்படுகிற அந்த மாவட்டத்தில், உழவுத் தொழிலும், உணவு உற்பத்தியும், அறுவடையும் பாதிக்கப்படாத அளவுக்கு உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, 'ஸிக் மில்ஸ்' என்று சொல்லப்படுகிற நொடித்த பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், கோயமுத்தூர் ஜில்லா தான் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஜில்லா, அங்கு தான் அதிகமான மில்கள் மூடப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தால், அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே, இதுவரையில் இந்த நொடித்த பஞ்சாலைகளுக்கு உயிரூட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் வரையில் செலவழித்து விட்டதாகச் சொல்லுகிறோம். பஞ்சாலைகள் திறக்கப்படுகின்றன. மறுபடியும் மூடப்படுகின்றன. சில பஞ்சாலைகள் தொடர்ந்து நடக்க முடியாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். மத்திய சர்க்காரின்மீது குற்றத்தைச் சாட்டலாம். மாநில சர்க்காரின்மீதும் குற்றத்தைச் சாட்டலாம். மாநில சர்க்காரின் மீதும் குற்றத்தைச் சாட்டலாம். ஆனால், வியாதி மிக மிக முற்றி விட்டால் எப்படி சொஸ்தப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறதோ அதேபோல இந்த நொடித்து விட்ட பஞ்சாலைகளை எப்படியாவது, எவ்வளவு செலவு செய்தாவது மீண்டும் திறக்க முடியுமா? அவை தீராத வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா? செய்ததெல்லாம் வீண் செலவுதானா? என்பதை எல்லாம் நன்கு பரிசீலிக்க வேண்டும். பெரும் தொழில்கள் எல்லாம்

குளியலாக அவை உண்டாக்கும் பொருள்களுக்கு மார்க்கெட்டும் இல்லாத நிலை இதுகாலை வந்துவிட்டது. நமது தேசப் பிதா காந்தியடிகள் சொன்ன மாதிரி, நாட்டிலே பரவலாக சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் எல்லாம் ஏற்பட்டிருந்தால், இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான நிலைமை வந்திருக்காது. பஞ்சாலைகள் மூடப்பட்டதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அங்கேயே, அதே தொழிலைக் கொடுப்போம் என்று நாம் நிவாரணம் தேடுவதைவிட, அவர்களைக் கிராமப் புறங்களில் பரவலாக சிறு தொழில்களில் ஈடுபடுத்த முயற்சிக்கலாம். பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எல்லாம் கோவை மாவட்டத்திலே ஊர்ஊராகச் சென்று யாசித்து வருகிறார்கள். அவர்கள் இரந்து பிழைக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். நாட்டில் எத்தனையோ மூலப்பொருள்கள் இருக்கின்றன. நார் வகைகள், உலோகம், தந்தம், மரம், களிமண் போன்றவற்றையும், நெல், கரும்பு, எண்ணெய் வித்துக்கள் இவற்றையும் பயன்படுத்தும் வகையில் சிறு தொழில்கள் கிராமப் புறங்களில் பரவலாக ஏற்படுத்தவேண்டும். பெரிய ராட்சத ஆலைகளை விடுத்து, கைக்குத்தல் அரிசி தயாரிப்பது, கண்டசாரி வெல்லம் தயாரிப்பது போன்ற சிறு தொழில்களை எல்லாம் துவக்க வேண்டும். இப்படியொரு திருப்பம் கொடுத்து, இந்த வேதனை தரும் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, நம்முடைய உள்ளத்திலே நீங்காது இடம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், நம்முடைய எண்ணங்கள், தமிழகத்து மக்களுடைய எண்ணங்கள் எல்லாம், அவர் விரைவாகக் குணம் அடையவேண்டும் என்பதிலேயே நிலைத்திருக்கின்றன. அதையொட்டி, அவர் விரைவிலே குணமடைந்து வர வேண்டும் என்ற அந்த எண்ணத்தையும் வலியுறுத்தி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

'தமிழ்நாடு' என்று சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்ட இந்தத் தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையில் நாம் பேசிக்கொண்டிருக்கும் பெருமை இன்றைய தினம் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சார்ந்தது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிலைமை ஏற்படுத்திய இந்த அரசு, 1967-ம் ஆண்டில் பொறுப் பேற்றது. 1966-ம் ஆண்டில், தமிழ்நாட்டின் பல பகுதிகள் புயலால் பாதிக்கப்பட்டன, இந்த அரசு 1967-ம் ஆண்டு பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப்





பார்வையிட்டு, உடனடியாகச் செய்யவேண்டிய நிவாரண வேலைகளையெல்லாம் செய்து முடித்தது. 1968-ம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கைக் கோளாறின் காரணமாக, குறிப்பிட்ட நேரத்தில் மழை பெய்யாததன் காரணமாக, இன்றைய தினம் பஞ்சத்தில் நாம் அடிபட்டிருக்கிறோம். செங்கற்பட்டு மாவட்டத்திலும், வடார்க்காடு மாவட்டத்திலும் பஞ்சம் அதிகமாக இருக்கிற காரணத்தால், அங்கே இருப்பவர்களுக்கு உடனடியாக வசதிகள் செய்வதற்காக இந்த அரசு 25 இலட்சம் ரூபாய் பஞ்ச நிவாரணத்திற்கென்று ஒதுக்கியிருக்கிறது. ஏற்கனவே புயலால் பாதிக்கப்பட்டு, அதற்குப் பிறகு மழை பெய்யாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை, அரசு குறித்த நேரத்தில் எடுத்துச் சமாளித்திருக்கிற நடவடிக்கைகள் உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியவையாகும். நாம் இன்னும் சொல்ல வேண்டுமானால், குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தில், புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில், எல்லா ஏரிகளும் பொதுப்பணித்துறையின் மூலம் பழுது பார்க்கப் பட்டு, இனி பழுது பார்ப்பதற்கு ஏரிகள் இல்லை என்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், இன்றைய தினம் பஞ்ச நிவாரணத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற 25 லட்சம் ரூபாய்களைக் கொண்டு, அங்கேயிருக்கும் ஏரிகள் தூர் வாரப்பட வேண்டும், அல்லது ஏரிகள் ரிப்பேர் செய்யப்பட வேண்டும் என்ற நிலைமைகளை மாற்றி, குறிப்பாக மண் வேலை செய்வதற்கும், அங்கே சாலைகளை அமைப்பதற்கும், மற்றப்படி தொழிலாளிகள், அன்றாடம் கூலி பெறும் அளவுக்கும் அங்கே நிலைமைகளை உருவாக்க வேண்டும். வேலைகளை காண்ட்ராக்டில் விடாமல், ஜெல்லி உடைப்பது போன்ற வேலைகளைத் தொழிலாளிகளுக்குக் கொடுத்து, ஊதியம் தொழிலாளிகளுக்கு நேரடியாகப் போய்ச் சேருவதற்கான நிலைமைகளை அந்தப் பகுதியில் ஏற்படுத்தித்தர வேண்டும்.

என் பகுதியைப்பற்றி ஒரு வார்த்தை நிச்சயமாக இந்த நேரத்தில் நான் கூறித்தான் தீர வேண்டியவனாக இருக்கிறேன். அங்கேயிருக்கும் பெரியவர்கள், 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்னாலேயும் இப்படியொரு நிகழ்ச்சி ஏற்பட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சரித்திரப் புகழ் பெற்ற மதுராந்தகம் ஏரி, மூன்று மாதங்களுக்குக் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலையில் வறண்டு கிடக்கின்ற நிலை எல்லோரும் அறிந்த ஒன்றாகும். மதுராந்தகம் ஏரிக்கே இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கின்றபோது, மதுராந்தகம் வட்டத்தில், கடந்த ஆண்டு அங்கே விவசாயத்தில் ஈடுபட்ட ஏக்கர்கள் ஏறக்குறைய 60,000 ஏக்கர்கள் ஆகும் என்று ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்கள் ரெவின்யூ செய்த பிறகு, அங்கே ஏறக்குறைய ஏழாயிரம் ஏக்கர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் வெற்றி பெறுமா, பெறாதா என்ற ஐயப்பாட்டில்தான் இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், இப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட்ட பிறகும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கே அதிகமான நெல்லைக் கொடுக்கக்கூடிய மதுராந்தகம் வட்டம் வறண்டு போயிருந்தும், சர்க்கார் குறித்த நேரத்தில் எடுத்திருக்கும் நடவடிக்கை

களுக்காக நான் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே மார்கழி மாதத்தில் ஏற்பட்ட பெரும் உணவுப் பஞ்ச நேரத்தில், கிராமங்களில்கூட அரிசி விநியோகத்திற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆகவே, இருக்கிற உணவு உற்பத்தியை வைத்துக்கொண்டு, சீராக நடவடிக்கைகள் எடுத்து விநியோகித்து நிலைமையைச் சமாளித்து வருவது குறித்து திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு நிச்சயமாகப் பெரும் பங்கு உண்டு. மக்கள் நிச்சயம் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கொடுப்பது குறைந்த அளவில் இருந்தாலும்கூட, குறித்த நேரத்தில் கிடைக்கிறது என்ற எண்ணத்தோடு இந்த அரசு செய்ததை என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நிச்சயம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் இன்றையதினம், தவணை கடந்த பாக்கிகளையும், வரி வசூல்களையும் நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, மழை இல்லாததால் ஏரிகளில் தண்ணீர் இல்லை. இதன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வரி பாக்கிகள், கடன் கொடுக்கப்பட்டிருந்தால் திருப்பிச் செலுத்தும் தவணைகள் ஆகியவைகளை நிச்சயமாகத் தளர்த்த வேண்டும். விவசாயிகளுக்குப் போதிய கால்கெடு கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, நில அடைமான பாங்குகளைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கான வகையில் ஏராளமான வசதிகளைச் செய்து கொடுத்திருப்பதாகக் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் நில அடைமான பாங்குகள் கொடுக்கின்ற பணத்திற்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு கொடுக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கும் பணம் இன்னும் விரைவாகப் போய்ச் சேருவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலமாக நல்லகாரியங்களைச் செய்ய முடியும். நில அடைமான பாங்குகளின் மூலமாகக் கடன் கொடுக்கப்பட்டு, மின்சார இணைப்புகள் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட அளவில் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். மின்சார இணைப்புகள் மழை இல்லாத வறண்ட பிரதேசங்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படவேண்டும். இன்றையதினம் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு உணவுத் துறையைப் பொறுத்தவரையில் 170 லட்சம் மக்களுக்குச் சீரான உணவைக் கொடுத்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் கூறியதைப்போன்று வெளிநாட்டாரும் பாராட்டுகின்ற வகையில் நாம் விவசாயத்தில் உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிறோம். நவீன இயந்திர வசதிகளின் மூலமாக விவசாயத்தை வளர்த்திருக்கிறோம். உணவைப் பங்கிட்டுக் கொடுக்கும் நேரத்திலும், ஊழல்களையெல்லாம் களைந்து, நல்ல முறையில், மற்றவர்களும் பாராட்டும் வகையில் கொடுத்து





வருகிறோம். சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தும் செவ்வனே செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயத் துறையை எடுத்துக்கொண்டாலும் அல்லது வேறு எந்தத் துறைகளையாகிலும் எடுத்துக் கொண்டாலும் அரசு அதிகமான கவனத்தைச் செலுத்தியிருக்கிறது. பணிபுரிந்துகொண்டிருக்கின்ற அலுவலாளர்களைக்கூட இந்த அரசு நல்ல முறையில் வைத்திருக்கிறது. அலுவலாளர்களின் பிரச்சனைகளை அரசு கவனித்து இருக்கிறது என்பதைக் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு என்னென்ன வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவையனைத்தும் சர்க்கார் ஊழியர்களுக்கு இந்த அரசு செய்துகொடுத்திருக்கிறது. ஆனால் எதிர்ப்புறத்தில் இருந்து வரும் கூச்சல் எல்லாம் 'சட்டம் கெட்டுவிட்டது, ஒழுங்கு கெட்டுவிட்டது' என்பவைதாம். காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் பத்திரிகைகளில், 'மத்திய சர்க்காரிலிருந்து போலீஸ் வருகிறது, மத்திய போலிசை வைத்து நாங்கள் அடக்குவோம்' என்று செய்திகள் வருகின்றன. இதனுடைய பொருள் என்ன என்று புரியவில்லை.

முன்னால் பேசிய உறுப்பினர்கள் நாகர்கோயில் நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எந்த எந்த வகைகளில் எல்லாம் தொல்லைகள் கொடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் செய்துவருகிறார்கள். அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதே காங்கிரஸ்காரர்களின் எண்ணம். கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நாகர்கோயில் தேர்தலைப்பற்றிச் சொல்லும்போது பனைவெல்லக் கூட்டுறவு சொசைட்டிகளைப்பற்றிச் சொன்னார்கள். மற்றைய சங்கங்கள் நடத்தும்போது பனைவெல்லக் கூட்டுறவு சங்கம் ஏன் நடத்தக்கூடாது என்ற கருத்தை வெளிப்படுத்தினார்கள். பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் வாங்கப்படுகின்ற பணம் பாதி கடன் மூலமாக வாங்கப்படுகின்ற காரணத்தால் மரம் ஏறும் தொழிலாளிகளுக்கு வேண்டிய சாதனங்களை வாங்கித் தர அந்தப் பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. இதன் பிறகு அது நன்றாகச் செயல்படுகிறதா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க ஒரு குழுவை அமைத்து அதைப் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு உதவி அளிக்கக்கூடிய வகையில் அட்வான்ஸ் பணம் போட்டு நடத்துவதில் அதற்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் உள்ள முன்பணத்தை வைத்துக்கொண்டு நடத்துவதாகச் சொன்னார்கள். அரசாங்கம் தொழில் துறையில் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கடன் தொகையைத்

திருப்பிக் கொடுக்காமல், அதிகமான பணத்தைப் பெற்றிருக்கும் சங்கங்கள் ரேஷன் கடைகளை நடத்தக்கூடாது என்று வலியுறுத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லியது. அகில இந்தியக் காதி கமிஷன் இதையேதான் அந்தச் சம்மேளனத்தில் சொல்லி விட்டுப் போய் இருக்கிறது. இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது தேர்தலுக்காக எடுத்த முடிவு அல்ல. அடிப்படை நோக்கத்திற்கு அது சரியாக நடைபெறவில்லை என்பதற்காகத் தான் அவற்றிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தான் செய்யப்பட்டது. இதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை என்பதை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஓவர் ட்யூ இல்லாத சங்கங்களுக்குப் பணம் போட்டு செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது எந்தக் கணக்கில் முழுமையாக வரவு வைக்க வேண்டுமோ, அப்படி வரவுகளை வைக்காமல் இருக்கிறார்கள். அதிகாரிகள் தங்களுடைய குறிப்புகளில் கூறியிருப்பதிலும் நடைமுறைக்கு ஏற்றது அல்ல என்பது தான் தெரிகிறது. இங்கு ஓரிரு சங்கங்களில் அதிகமாகப் பணம் இருப்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு முழுமையாகத் தீர்வு காண முடியாது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கீழ்வெண்மணி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நினைத்துப் பார்க்கும்போது உண்மையில் நாம் வருத்தப்பட வேண்டும். சர்க்கார் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டிருப்பதற்கு நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இனிமேலும் சர்க்கார் எங்கே தவறு நடந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் வாலாஜா பகுதியில் கொடுக்கப்பட்ட கடன்களை நீண்டகாலத் தவணையில் தருவதற்கு ஏற்பாடு செய்வதுடன் அங்கே இருக்கிற ஏரிகள் எல்லாம் ரிப்பேர் செய்யப்பட்டு மதுராந்தகம் ஏரிக்கு தூர் வாறுகின்ற நிலைமையும், மண் வேலை செய்வதற்கான வாய்ப்பு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. தோ. மு. நல்லசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசாங்கத்தின் கடந்த கால சாதனைகளையும், எதிர் காலத் திட்டங்களையும் குறிப்பிட்ட ஆளுநர் அவர்கள் இன்றைக்கு





நாட்டிலே பல பாகங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும், நேர இருக்கும் வருந்தத்தக்க அபாயம் நிறைந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடாத காரணத்தினால் அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுக்கும் நிலைமையில் இருக்கிறேன்.

ஒரு நாடு அல்லது நாட்டின் பகுதி முன்னேற வேண்டும் என்றால் தொழில் அதிகப்படியாக நடக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிற அரசாங்கமும் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். இதை அரசு உணர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனினும் இன்றைக்கு நமது தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிற நெசவுத் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஏராளமான தொழிலாளர்கள் தலைநகரத்திற்கு நடந்தே வந்து முறையிட்டுக்கொண்ட நிலைமையை உணர்ந்து இருக்கிறோம். அதற்குப் பரிகாரம் தேடும் நிலைமையில் நாம் இருந்து வருகிறோம். அப்படிப்பட்ட பெரிய நெசவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் சர்க்கரைத் தொழில் இருந்து வருவதை நாம் உணர்கிறோம். அது லட்சக்கணக்கான குடும்பங்களின் ஜீவாதாரமான தொழிலாக இருந்து வருகிறது. இதை உணர்ந்து தான் தமிழக அரசாங்கம் ஏற்கனவே இருந்த 14 சர்க்கரை ஆலைகளோடு மேலும் 3 ஆலைகளுக்கு லைசென்சு வழங்கவேண்டும் என்ற உறுதியோடு இருக்கிறது. அப்படிப்பட்ட சர்க்கரை ஆலைகள் இன்றைக்கு பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருந்து வருவதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு சர்க்கரை ஆலைகள் குறிப்பாகத் தமிழ்நாட்டில், நல்லபடியாக, நடந்த காரணத்தினாலே ஒரு லட்சம் டன் அறவை செய்த சர்க்கரை ஆலைக்கு 50 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. அப்படி இருந்தபோதிலும் இன்றியமையாத அங்கங்களாக விளங்கும் தொழிலாளர்களுக்கு லாபத்தில் நியாயமான பங்கு கொடுக்காத காரணத்தினால் போராட்டம் நிகழ்ந்து தொழிலாளர்கள் சங்கத்திற்கும் ஆலை முதலாளிகள் சங்கத்திற்கும் சுமுகமான உடன்படிக்கை ஏற்படாத காரணத்தினால் இன்றைக்குப் படிப்படியாக ஆலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட இருக்கிறது. நான் அறிந்திருக்கும் தகவல் சரியானதாக இருக்குமானால் இன்றைக்கு மூன்று சர்க்கரை ஆலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ ஓர் ஆலையில் தொழிலாளர்களுக்கும், ஸ்தாபனத்திற்கும் தகராறு, வேலை நிறுத்தம் என்றால் 10 ஆயிரம் குடும்பம் பாதிக்கப்படலாம். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள 14 ஆலைகளிலும் 'ஃபேஸ்டு ப்ரொக்கிராம்" Phased Programme போல வேலை நிறுத்தம் ஏற்படுவது என்றால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்களுக்கு மேல் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புகலூர் ஆலை, பட்டவாய்த்தலை ஆலை, காட்டூர் ஆலை இங்கெல்லாம் படிப்படியாக

[திரு. தோ. மு. நல்லசாமி] [1969 சனவரி 27

வேலை நிறுத்தம் நடைபெறுவதான தகவல் வந்திருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் நான் முன்பு குறிப்பிட்டதுபோல தொழிலாளர்கள் அந்த ஆலைக்கு கரும்பு சப்ளை செய்கிறவர்கள் இப்படியாக ஒரு ஆலைக்கு 10 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் இந்தப் பேராபத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் நன்றி கூறும் தீர்மானத்திற்குத் திருத்தத்தைத் கொடுத்தேன். இதில் அரசு தலையிட்டு தொழிலாளர் சம்மேளனம், ஆலைகள் அமைத்துக்கொண்டிருக்கிற 'சிஸ்மா' (S.sma) என்ற ஸ்தாபனம் இவற்றுடன் பேச்சு வார்த்தை நடத்தி கன்சிலியேஷன் மூலமாக முடிவு காணலாம். தீர்வு காண முடியாவிட்டால் ட்ரிப்யூனலுக்கு அதை விடலாம். சமீபத்தில் வேஜ் போர்டு வரவில்லை, ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட அடிப்படையில் சம்பள, அலவன்சு விகிதாசாரங்கள் இருக்கின்றன. அதிகப்படியான லாபம் கிடைக்கிறபோது அவர்களுக்கும் கொஞ்சம் கொடுப்பதிலோ, கொடுக்கவேண்டுமென்று அவர்கள் கேட்பதிலோ தவறு ஒன்றும் இல்லை. இடைக்கால நிவாரணம் என்று வேஜ் போர்டு சிபாரிசு பின்னர் வரும்வரையில் லாபத்தில் ஒரு பங்கு கொடுப்பதுதான் நியாயமானதாகும். இதை அரசாங்கம் உடனடியாக நான் முன்பு சொன்னதுபோல கவனித்தாக வேண்டும்.

அடுத்து, கரும்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கு சென்ற ஆண்டு தமிழக அரசாங்கம் போதிய கவனம் செலுத்தியும்கூட மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது கிடைத்திருக்கக் கூடிய விலை குறைவுதான். ஆந்திராவில் ஒரு டன் ஒன்றுக்கு 120 ரூபாய் வரை கிடைத்த அந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் விவசாயிகளுக்கு ஆலைக்காரர்கள் 90 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சில ஆலைகள் விவசாயிகளை வற்புறுத்தி 85 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று விவசாய அமைச்சர் இடத்தில் பல முறை வற்புறுத்தி இருக்கிறேன். அதற்கு சரியானதொரு தீர்வைக் காண வேண்டும். புகளூரில் உள்ள சர்க்கரை ஆலை ஸ்தாபனத்திற்கு
மி.ப; 1-00 ஆந்திராவிலும் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆந்திராவில் சாமல்காடு என்ற இடத்தில் உள்ள அந்தச் சர்க்கரை ஆலையின் நிர்வாகமும், புகளூரில் உள்ள சர்க்கரை ஆலை நிர்வாகமும் ஒரே ஸ்தாபனத்திடம் இருக்கிறது. இரண்டின் லாப நஷ்டக் கணக்கும் ஒன்றாகவே உள்ளது. இருந்தும் அவர்கள் ஆந்திராவில் கரும்பு டன் ஒன்றுக்கு 100 ரூபாய் கொடுக்கிறார்கள். இங்கே புகளூரில் 80 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இந்த அவல நிலை மாற்றப்பட வேண்டும். கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் லாபத்தில் உரிய பங்கு கிடைக்க வேண்டும். இன்றைக்குச் சர்க்கரை உற்பத்தி ஸ்தாபனங்கள் சுலபமாக ஒன்றுகூட முடியும். ஆனால் மாநிலம் முழுவதிலும் உள்ள கரும்பு உற்பத்தியாளர்கள் ஒன்றுகூடுவது என்பது சுலபமான காரியம் அல்ல. அப்படி அவர்கள் ஒன்று கூடியும் வந்து தங்களது நியாயமான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதில் நல்லபடியாக அரசு கவனம் செலுத்தவேண்டு



1969 சனவரி 27] [திரு. தோ. மு. நல்லசாமி]

மென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலைப் பாதுகாக்கவேண்டுமென்ற ஒரு கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தொழில் வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது, தொழிலுக்கு மூலதனம் போடக்கூடியவர்களுடைய வளர்ச்சியைப் பிரதானமாக கருதாது அதிலே ஈடுபடக்கூடியவர்களின் நலனை முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் தொழிலாளர்கள் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க முடியும். ஏற்கனவே மூன்று ஆலைகளைப் பொறுத்தவரையில் வேலைநிறுத்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன, அடுத்து மோகனூர் வரலாம், அடுத்து இன்னொன்று வரலாம். டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிக்கு இப்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலை சர்க்கரை ஆலைகளுக்கும் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். கரும்பு விவசாயிகளுடைய பிரச்னையைத் தீர்க்கவேண்டும். அண்டை மாநிலத்திலே ஒரு டன்னுக்கு 100 ரூபாய் கிடைக்கிற அளவுக்கு இருக்கிறபொழுது இங்கே தமிழ்நாட்டிலேயும் ஒரு டன்னுக்கு 100 ரூபாய் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, அப்படிச் செய்வதன் மூலம் சுமார் 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கும், கரும்பு பயிரிடக்கூடிய தொழிலிலே உள்ள சில லட்சம் தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய நலனை உத்தேசித்து நன்மை செய்ய முடியும், எனவே இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ந. சோமசுந்தரம்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மேன்மைதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முதலில் ஆளுநர் தம்முடைய உரையில், நம் உள்ளத்தில் எல்லாம் ஆண்டவனாக இருக்கக்கூடிய அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் நலம் பெற வாழ்த்தியிருக்கிறார்கள், உங்களோடு நானும் என்னுடைய வாழ்த்துக்களைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நாட்டு மக்களுக்குச் செய்துள்ள சாதனைகளைக் கூறியிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப் பேற்றுக்கொண்ட நேரத்தில் இந்த நாட்டினுடைய உணவுப் பிரச்னை எவ்வளவு கேவலமாக இருந்தது என்பதை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் அறிவார்கள். அப்படி ஒரு அவல நிலைமையை ஏற்படுத்திச் சென்றுவிட்ட காங்கிரஸ்காரர்கள் வெளியிலே சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டாலும்கூட, இந்த இரண்டு ஆண்டுக்குள் எவ்வளவு நல்ல முறையில் இந்த அரசு அந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பாக உணவுப் பிரச்னையில் பொதுப்பணித் துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய

பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் அவர்களும், உணவுத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் எவ்வளவு பொறுப்போடு தங்களுடைய பணிகளைச் செய்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் அரசாட்சி நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் எந்த நேரத்தில் விட்டால் தஞ்சை, திருச்சி மாவட்டத்திலேயுள்ள விவசாயிகளுக்குப் பாதிக்காது என்று யோசித்து அதன்படி செய்யாமல் தங்களுடைய கட்சிக்காரர்கள், கரும்புச் சாகுபடி செய்திருந்தால் அதற்குத் தண்ணீர் விடவேண்டுமென்ற நோக்கத்தில் நேரங் கெட்ட நேரத்திலே தண்ணீர் திறந்துவிட்ட கொடுமையை உணர்ந்து நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் அவர்கள் வந்தவுடன் முதலில் போட்ட உத்திரவு என்னைக் கேட்காமல் மேட்டூர் அணையைத் திறந்துவிட வேண்டாம் என்பதுதான். அப்படிச் செய்தால்தான் தண்ணீர் முறையான நேரத்திற்கு எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கப்பெற்று இன்றைக்கு நாட்டிலே உணவுப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய வகையில் தமிழகம் தன்னிறைவு பெற்றதாகவும், மத்திய அமைச்சர் அதைப் பாராட்டக் கூடிய நிலைமையைப் பெற்றதாகவும் இருக்கிறது. உரப் பற்றாக்குறை கிடையாது, விதைப் பற்றாக்குறை கிடையாது, பூச்சி மருந்து பற்றாக்குறை கிடையாது. முன்பு தமிழகத்திற்கு உணவு படைக்கும் தஞ்சை மாவட்டத்து மக்களே பட்டினி கிடக்கக்கூடிய நிலைமை இருந்தது. அப்பொழுது எல்லா எதிர்க் கட்சிகளும் சேர்ந்து தஞ்சை மாவட்டத்திலே உள்ள அலுவலகங்களில் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய அவல நிலைமை இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமையெல்லாம் மாறி உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற முறையில் எல்லாவிதமான சலுகைகளையும் அரசு அளித்ததோடல்லாமல் ஒரு போகத்தை இரு போகமாக ஆக்குகிறவர்களுக்கு வரிவிலக்கும் அளித்திருக்கிறது. அதற்காக நாம் இந்த அரசுக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். எல்லாவற்றையும்விட தஞ்சை மாவட்டத்திலே கூலிப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்ட பிரச்னையல்ல, 20 ஆண்டுகளாக தீர்க்கப்படமுடியாமல் இருந்துவருகிற பிரச்னையாக அது இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் அதற்காக சட்ட வடிவம் கொடுக்க முயன்று விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தையும், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தாலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள அனுச்சாப் என்று சொல்லக்கூடிய விவசாயக் கூலிகளுடைய பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதற்கு எந்தவிதமான சட்ட வடிவமும் கொடுக்க முடியாமலேயே காங்கிரஸ்காரர்கள் சென்றுவிட்டார்கள். 1967-ல் மன்னார்குடியிலே இதற்காக நடந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்ட வடிவம் கொடுத்தால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது, விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன, எத்தனை மிராசுதார்கள் சட்டத்தை மதித்து வாரம்





பிரித்துத் தந்திருக்கிறார்கள், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன, எத்தனை மிராசுதார்கள் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து பண்ணையாட்களுக்கு பங்கு கொடுத்துள்ளார்கள். ஆகவே மிராசுதாரர்கள் மனச்சாட்சிக்குப் பயந்து தயவு, ஈவு இரக்கம் காட்டி தண்ணீர் வயலுக்கு பாய்ச்ச சென்ற கூலிகள் எத்தனை பேர்கள் இறந்திருக்கிறார்கள். இரவு நேரத்திலே வயல்களைக் கவனிக்கச் சென்றவர்கள் எத்தனை பேர்கள் பாம்பு கடித்து, நட்டுவாக்காலி கடித்துச் செத்திருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் அதோடு நிறுத்திவிடவில்லை. அங்கு உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரையும், கோட்டாட்சித் தலைவர்களையும், வட்டார ஆட்சி அதிகாரிகளையும், துணை வட்டார ஆட்சி அதிகாரிகளையும், மாவட்ட துணை போலீஸ் அதிகாரிகளையும் அழைத்து எங்காவது இந்தப் பிரச்னை ஏற்பட்டால் உடனுக்குடன் தீர்க்கக்கூடிய அளவுக்கு சமாசப் படுத்தி என்ன வகையான தீர்வு காணவேண்டுமோ அந்த வகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு முயலவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட பொறுப்பான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே கீழ் வெண்மணியிலே ஒரு கொடுஞ்செயல் நடந்துவிட்டது. சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியபடி சட்டம் தன் வேலையைச் செய்தாலும், பொறுப்பாளிகள் அதற்கு யார் என்று கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதி விசாரணை நடத்தினால் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கக் காலம் கடந்துவிடுமோ என்பதற்காகத்தான் அவர்களை உடன் கண்டுபிடிக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருப்பதற்காக நாம் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகத்திலேயே இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி அங்கே நடந்திருக்கிறது. நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது. 44 பேர்கள் கொடுமைக்காளாகி இறந்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஒரு கண நேரம் எண்ணிப்பார்த்தால் நெஞ்சு வெடித்துவிடும். அரசியல் லாபம் கருதி, சிலர், கொடுமையான முறையில் ஆதித் திராவிடர்கள் இறந்துவிட்டார்கள், அதனால் இந்த அரசு ராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் பேசுகிறார்கள். அவர்கள் முதுகுளத்தூரை மறந்து விட்டார்கள். முதுகுளத்தூரிலே ஆதித் திராவிட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், மறவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தினம் தினம் ஒருவாரகாலம் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டார்கள். அரசாங்கம் நடக்கிறதா இல்லையா என்ற நிலை இருந்தது. இப்போதாவது தமிழகத்தில் எதிர்க்கட்சி ஆட்சி இருக்கிறது. அன்று இங்கும், மத்தியிலும் காங்கிரஸ் அரசாங்கந்தான் இருந்தன. கலவரங்களை அடக்க போலீஸை அனுப்பியிருக்கலாம், ராணுவத்தைக் கொண்டு வந்திருக்கலாம். எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் மக்கள் ஒருவருக்கொருவர் குத்திக் கொண்டு, சுட்டுக் கொண்டு செத்தார்கள். அப்பேர்ப்பட்ட நிலையிலேயே ராஜினாமாச் செய்ய

[திரு. ந. சோமசுந்தரம்] [1969 சனவரி 27

பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் அவர்களும், உணவுத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் எவ்வளவு பொறுப்போடு தங்களுடைய பணிகளைச் செய்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் அரசாட்சி நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் எந்த நேரத்தில் விட்டால் தஞ்சை, திருச்சி மாவட்டத்திலேயுள்ள விவசாயிகளுக்குப் பாதிக்காது என்று யோசித்து அதன்படி செய்யாமல் தங்களுடைய கட்சிக்காரர்கள், கரும்புச் சாகுபடி செய்திருந்தால் அதற்குத் தண்ணீர் விடவேண்டுமென்ற நோக்கத்தில் நேரங் கெட்ட நேரத்திலே தண்ணீர் திறந்துவிட்ட கொடுமையை உணர்ந்து நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் அவர்கள் வந்தவுடன் முதலில் போட்ட உத்திரவு என்னைக் கேட்காமல் மேட்டூர் அணையைத் திறந்துவிட வேண்டாம் என்பதுதான். அப்படிச் செய்தால்தான் தண்ணீர் முறையான நேரத்திற்கு எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கப்பெற்று இன்றைக்கு நாட்டிலே உணவுப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய வகையில் தமிழகம் தன்னிறைவு பெற்றதாகவும், மத்திய அமைச்சர் அதைப் பாராட்டக் கூடிய நிலைமையைப் பெற்றதாகவும் இருக்கிறது. உரப் பற்றாக்குறை கிடையாது, விதைப் பற்றாக்குறை கிடையாது, பூச்சி மருந்து பற்றாக்குறை கிடையாது. முன்பு தமிழகத்திற்கு உணவு படைக்கும் தஞ்சை மாவட்டத்து மக்களே பட்டினி கிடக்கக்கூடிய நிலைமை இருந்தது. அப்பொழுது எல்லா எதிர்க் கட்சிகளும் சேர்ந்து தஞ்சை மாவட்டத்திலே உள்ள அலுவலகங்களில் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய அவல நிலைமை இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமையெல்லாம் மாறி உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற முறையில் எல்லாவிதமான சலுகைகளையும் அரசு அளித்ததோடல்லாமல் ஒரு போகத்தை இரு போகமாக ஆக்குகிறவர்களுக்கு வரிவிலக்கும் அளித்திருக்கிறது அதற்காக நாம் இந்த அரசுக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். எல்லாவற்றையும்விட தஞ்சை மாவட்டத்திலே கூலிப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்ட பிரச்னையல்ல, 20 ஆண்டுகளாக தீர்க்கப்படமுடியாமல் இருந்துவருகிற பிரச்னையாக அது இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் அதற்காக சட்ட வடிவம் கொடுக்க முயன்று விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தையும், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தாலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள அனுச்சாப் என்று சொல்லக்கூடிய விவசாயக் கூலிகளுடைய பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதற்கு எந்தவிதமான சட்ட வடிவமும் கொடுக்க முடியாமலேயே காங்கிரஸ்காரர்கள் சென்றுவிட்டார்கள். 1967-ல் மன்னார்குடியிலே இதற்காக நடந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்ட வடிவம் கொடுத்தால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது, விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன, எத்தனை மிராசுதார்கள் சட்டத்தை மதித்து வாரம்



1969 சனவரி 27] [திரு. ந. சோமசுந்தரம்]

பிரித்துத் தந்திருக்கிறார்கள், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன, எத்தனை மிராசுதார்கள் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து பண்ணையாட்களுக்கு பங்கு கொடுத்துள்ளார்கள். ஆகவே மிராசுதாரர்கள் மனச்சாட்சிக்குப் பயந்து தயவு, ஈவு இரக்கம் காட்டி தண்ணீர் வயலுக்கு பாய்ச்ச சென்ற கூலிகள் எத்தனை பேர்கள் இறந்திருக்கிறார்கள். இரவு நேரத்திலே வயல்களைக் கவனிக்கச் சென்றவர்கள் எத்தனை பேர்கள் பாம்பு கடித்து, நட்டுவாக்காலி கடித்துச் செத்திருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் அதோடு நிறுத்திவிடவில்லை. அங்கு உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரையும், கோட்டாட்சித் தலைவர்களையும், வட்டார ஆட்சி அதிகாரிகளையும், துணை வட்டார ஆட்சி அதிகாரிகளையும், மாவட்ட துணை போலீஸ் அதிகாரிகளையும் அழைத்து எங்காவது இந்தப் பிரச்னை ஏற்பட்டால் உடனுக்குடன் தீர்க்கக்கூடிய அளவுக்கு சமாசப் படுத்தி என்ன வகையான தீர்வு காணவேண்டுமோ அந்த வகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு முயலவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட பொறுப்பான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே கீழ் வெண்மணியிலே ஒரு கொடுஞ்செயல் நடந்துவிட்டது. சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியபடி சட்டம் தன் வேலையைச் செய்தாலும், பொறுப்பாளிகள் அதற்கு யார் என்று கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதி விசாரணை நடத்தினால் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கக் காலம் கடந்துவிடுமோ என்பதற்காகத்தான் அவர்களை உடன் கண்டுபிடிக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருப்பதற்காக நாம் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகத்திலேயே இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி அங்கே நடந்திருக்கிறது. நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது. 44 பேர்கள் கொடுமைக்காளாகி இறந்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஒரு கண நேரம் எண்ணிப்பார்த்தால் நெஞ்சு வெடித்துவிடும். அரசியல் லாபம் கருதி, சிலர், கொடுமையான முறையில் ஆதித் திராவிடர்கள் இறந்துவிட்டார்கள், அதனால் இந்த அரசு ராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் பேசுகிறார்கள். அவர்கள் முதுகுளத்தூரை மறந்து விட்டார்கள். முதுகுளத்தூரிலே ஆதித் திராவிட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், மறவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தினம் தினம் ஒருவாரகாலம் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டார்கள். அரசாங்கம் நடக்கிறதா இல்லையா என்ற நிலை இருந்தது. இப்போதாவது தமிழகத்தில் எதிர்க்கட்சி ஆட்சி இருக்கிறது. அன்று இங்கும், மத்தியிலும் காங்கிரஸ் அரசாங்கந்தான் இருந்தன. கலவரங்களை அடக்க போலீசை அனுப்பியிருக்கலாம், ராணுவத்தைக் கொண்டு வந்திருக்கலாம். எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் மக்கள் ஒருவருக்கொருவர் குத்திக் கொண்டு, சுட்டுக் கொண்டு செத்தார்கள். அப்பேர்ப்பட்ட நிலையிலேயே ராஜினாமாச் செய்ய

[திரு. ந. சோமசுந்தரம்] [1969 சனவரி 27

வேண்டுமென்ற பிரச்னை எழவில்லை. இன்று அரசியல் லாபம் கருதி இந்தப் பிரச்னையைப் பற்றி எடுத்துப் பேசுகிறார்கள். தாலுகா மாவட்ட பொதுநல அதிகாரியும் சென்று அவர்களுக்கு என்ன உதவி வேண்டுமென்று கேட்டபோது வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. வீடு வேண்டுமா? வாய் பேசவில்லை. பணம் வேண்டுமா? வாய் பேசவில்லை. நேரடியாக உடனே பணம் கொடுத்தோம், வாங்கிக் கொண்டார்கள், துணிமணிகள் கொடுத்தோம், வாங்கிக் கொண்டார்கள். ஆனால், எங்கே வீடு கட்டலாம், எப்படி வீடு கட்டலாம் என்று கேட்டால் யாருக்கோ அடிமைகள் போல், யாராலோ இயக்கி வைக்கப்படுகிறவர்கள் போல் இருக்கிறார்கள். நான் தயவு செய்து எல்லோரையும் கேட்டுக் கொள்வேன். அரசியல் லாபத்திற்கு ஆதித் திராவிடர்களைப் பலி வாங்காதீர்கள். இதிலே அரசாங்கம் எந்தவிதமான பொறுப்பற்று இருக்கவில்லை. வெண்மணி பகுதியிலே விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் இடையிலே எந்தவிதமான பிரச்னையும் முன்னால் இருந்ததாகத் தெரியவில்லை . . . .

(மணி அடிக்கப்பட்டது)

* திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே நாட்டிலே இருக்கின்ற நெருக்கடியான சூழ்நிலைகள், வேலையில்லாத் திண்டாட்டம், சட்டம் அமைதி கெட்டிருக்கின்ற நிலையை ஒருநிலைப்படுத்துவதற்கான காரியங்கள் ஆகிய எதனையும் நான் காணவில்லை. குழந்தைகளுக்கு வீதிகளிலே 'பார் பார், பட்டணம் பார்' என்று படம் காட்டுவது போல் இன்றைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேடைகளிலே பேசுகின்ற நேரத்திலும் சரி, சட்டமன்றத்திலே பேசுகின்ற நேரத்திலும் சரி, அவர்கள் தேர்தலுக்கு முன்பாகக் கொடுத்துள்ள வாக்குறுதிகளைப் பற்றி மக்கள் கேட்கின்ற நேரத்தில், அரிசியைப் பற்றிக் கேட்கின்ற நேரத்தில், தமிழக அரசு பெயர் மாற்றம் செய்திருப்பதைப் பாருங்கள் என்று கூறுகிறார்கள். விலைவாசிகள் இறங்கவில்லையே என்று கேட்டால், சாலைகளிலே சிலைகள் வைத்திருக்கிறோம் பாருங்கள் என்று கூறுகிறார்கள். வரிகளைக் குறைத்து விட்டீர்களா என்று கேட்டால் வள்ளுவர் படங்களைப் பஸ்களில் வைத்திருக்கிறோம் பாருங்கள் என்று கூறுகிறார்கள். இந்த முறையிலேதான் அவர்கள் பேசிக் கொண்டு வருகிறார்கள். அதே சாதனைகளைப் பற்றித்தான் ஆளுநர் அவர்களுடைய உரையிலே இருக்கின்றது. அதைக் காணுகின்ற போது உள்ளபடியே பெரிய ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே மில்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்ற பிரச்னை பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் இருந்த நேரத்திலும் மில்கள் மூடப்பட்டிருந்தன. அவ்வாறு மில்கள் மூடப்பட்ட நேரத்தில் அன்று அமைச்சராக



1969 சனவரி 27] [திரு. ரா. ராமச்சந்திர துரை]

இருந்த மதிப்பிற்குரிய ஆர். வெங்கட்டராமன் அவர்கள் அந்தப் பிரச்சினைகளிலே முடிவு கட்டுவதற்கு 10 அல்லது 20 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. இன்று தமிழகத்திலே 25, 30-க்கு மேற்பட்ட மில்கள் மூடப்பட்டிருக்கின்ற நிலையில் 6 மாதம், 1 வருஷம் ஆகியும் இன்னும் மூடிக்கிடக்கின்ற நிலைதான் இருக்கிறது. அந்த ஏழைத் தொழிலாளர்கள் தங்களுடைய பிராவிடெண்ட் பண்ட் பணம் பூராவையும் வாங்கிச் செலவழித்த பின்னரும் இன்னும் மில்கள் மூடப்பட்டு இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய சூழ்நிலைதான் உருவாகியிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குப் பிரச்னை சென்ற பட்ஜட் தொடர் கூட்டத்தின் போது வந்தபோது முதலமைச்சர் அவர்கள், 'ஒவ்வொரு ஜில்லாவிலும் வசூலித்த தொகையில் எங்களுக்கு வந்தது போக மீதி உள்ள தொகை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயே இருக்கிறது, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு கணக்குகளைத் தெரிந்து கொள்ளலாம்' என்று சொன்னார்கள். தஞ்சையில் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் நடைபெற்றபோது நாங்கள் ஏழு பேரிடத்தில் கையெழுத்து வாங்கி உலகத் தமிழ் மாநாட்டு வசூல் பற்றிய கணக்கைக் காட்ட வேண்டுமென்ற முறையில் அவசரக் கேள்வி கொடுத்தோம். தஞ்சை மாவட்டத்தில் வசூலித்த தொகையில் உலகத் தமிழ் மாநாட்டுக்குக் கொடுத்தது போக மிச்சம் எவ்வளவு உள்ளது என்ற கேள்வியைக் கொடுத்தோம். அதற்கு அவர்கள் பதில் அளிக்கும் வகையில் 'மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் பற்றிய சட்டத்தின்படி, 5-வது பிரிவின்படி அந்த விஷயம் விவாதிக்கப்படக்கூடிய பொருள் அல்ல. அந்தச் சட்டத்தின்படி பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளைப் பற்றி மட்டுந்தான் விவாதிக்கலாம்' என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மாவட்ட வளர்ச்சிக் குழுவில் கேள்விகள் கேட்கக்கூடாது என்ற முறை இருக்கிறது. அதை உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை** : சென்ற பட்ஜட் தொடர் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதைப் பற்றி கலெக்டர் அவர்களிடத்திலோ அல்லது அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னதன் காரணமாகத்தான் கேட்டோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முதலமைச்சர் அவர்கள் ஒருவேளை கலெக்டரிடம் கேளுங்கள் என்று கூறியிருக்கலாம். அபிவிருத்தி மன்றத்திலே கேளுங்கள் என்று கூறியதாக எனக்குக் கவனம் இல்லை. அப்படிக் கூறியிருக்கவும் மாட்டார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அடுத்தபடியாக, தமிழக அரசு ஆட்சி நடத்துகின்ற இன்று, கொலை செய்து லைஃப் இம்ப்ரிசன்மெண்ட் செய்யப்பட்டு வெளியே வந்த குற்றவாளிக்கு வி.எச்.எம். போஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. கழகத்தினுடைய சிபாரிசின் பேரில் கொடுக்கப்பட்டதாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஒருவர் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்றால் அது வேதனைக்குரிய காரியமாக இருக்கிறது.

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் நாகர்கோயிலில் நடைபெற்ற தேர்தல் நிகழ்ச்சிகளைப்பற்றிக் கொஞ்சம் விளக்கமாகப் பேசினார்கள். ரோடுகளிலே வேட்டியைத்தூக்கிக் கட்டிக்கொண்டு, தலையிலே துணியைக் கட்டிக்கொண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் அங்கு நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன் என்று கூறினார்கள். உள்ளபடியே நானும் தலையிலே துணியைக் கட்டிக் கொண்டுதான் நின்று கொண்டிருந்தேன். கல்லெறியினால் வந்த கற்கள் தலையிலே படாமல் இருப்பதற்காகத் தலையிலே துணியைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தேன்.

அதே நேரத்தில் ஒரு நண்பரின் பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று கருதுகிறேன். அங்கு ஒரு பகுதிக்கு நானும் மூன்று நான்கு நண்பர்களும் சென்று கொண்டிருந்தபோது பின்னால் ஒன்பது, பத்து கார்கள் வந்தன. அந்தக் கார்கள் வந்த போது என்கூட இரண்டு மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் காரில் வந்தவர்களில் ஒருவர் மேல் சபை அங்கத்தினராக இருக்கிறவர். அவரைப் பார்த்தவுடன் நான் கையைத் தூக்கிக் காட்டினேன். அவரும் என்னைப் பார்த்து சௌக்கியமா என்று கேட்டுவிட்டு போகிற நிலையில்—அந்தக் கார்களில், அந்த ஒன்பது கார்களில் இருந்தவர்கள் கைகளில் அருவாள்களையும், கத்திகளையும் வைத்துக் கொண்டிருந்தார்கள்—அந்தக் கார்களில் உள்ளவர்கள் என்னைப் பார்த்து அந்தக் கத்தியை எடுத்து ஓங்கிக் காட்டினார்கள். இது உள்ளபடியே நடைபெற்ற நிகழ்ச்சி. அங்கு அராஜகம், வன்முறைச் செயல்கள் நடந்ததைப் பார்க்கிறபோது காங்கிரஸ்காரர்கள் அந்த வன்முறைச் செயல்களில் ஈடுபடவில்லை. எங்கள் ஆட்களைப் பிடித்து அவர்கள் மண்டைகள் உடைபட்டிருக்கும் நிலையில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது, அங்குள்ள சப் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் இவர்களைக் கேட்கிறபோது—சிலர் கட்சிசார்பற்றவர்கள், சிலர் கட்சி சார்புடையவர்கள், காங்கிரஸ் மீது அனுதாபம் உள்ள இன்ஸ்பெக்டர்களும் அங்கு இருந்தார்கள்—எங்கள் கைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறது, காங்கிரஸ்காரர்களைத்தான் கைது செய்யச் சொல்லி மேலிடத்திலிருந்து எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. நாங்கள் என்ன செய்ய முடியும், நீங்கள் வேண்டுமானால் உங்கள் பாட்ஜ்களை எடுத்துவிட்டு உங்கள் கொடியை எடுத்துவிட்டு உங்களால் ஆனதைச் செய்யுங்கள் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்றார்கள் நிர்வாகத்தில் உள்ளவர்கள்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த ஸ்டேஷனில், எந்த அதிகாரி அப்படிச் சொன்னார் என்பதை உறுப்பினர் விளக்கினால் நலமாகயிருக்கும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நாகர்கோவிலில் இருக்கிற ஊர்களின் பெயர்களே ஒருமாதிரியாக இருக்கின்றன. அந்தப் பெயர்கள் ஞாபகத்திற்கு வரவில்லை. குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். வேண்டுமானால் கொடுக்கிறேன். அடுத்தபடியாக, கணக்குகளைக் கேட்கிறபோது காந்திஜி நிதி வசூல் என்னவாயிற்று, நேரு நிதி வசூல் என்னவாயிற்று என்று அதற்குப் பதில் தருகிறீர்களே தவிர உண்மையான கணக்குகளைச் சொல்லவில்லை. நேருஜி நிதி வசூல் கணக்கும், காந்திஜி நிதி வசூல் கணக்கும் அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டது. அந்தக் கணக்குகள் அரசாங்கத்தினிடத்தில் இருக்கும். அதேபோல் குளித்தலை வாய்க்காலுக்காக முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 1½ லட்சம் ரூபாய் பொது மக்களிடமிருந்து வசூல் செய்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. அந்தக் கணக்கு என்னவாயிற்று என்று புரியவில்லை. அங்கு மக்களிடத்தில் இதே பேச்சாக இருக்கிறது. ஒரு அமைச்சரின் பி.எ. ஆக இருந்த ஒருவர் மேல் உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டு போயிருக்கிறார். அவரைவிட அதிக காலமாக வேலை செய்தவர்கள் ஸீனியாரிட்டி லிஸ்டில் இருந்து இறக்கப்பட்டு சிபாரிசின் பேரில் . . . .

**திரு. து. ப. அழகமுத்து :** குளித்தலையில் 1½ லட்சம் ரூபாய் வசூலித்தார்கள் என்று சொன்னார்கள். யார் வசூலித்தார்கள் ? எந்தக் கால்வாய்க்காக வசூலித்தார்கள் என்பதைப் பற்றிய விளக்கங்கள் தந்தால் நலமாகயிருக்கும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** குளித்தலையில் ஒரு வாய்க்கால் வெட்டுவதற்காக. டீட்டெய்ல்ஸ் வேண்டுமானால் பின்னால் தெளிவாகச் சொல்கிறேன். உடனடியாக எதையும் சொல்வது என்பது முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆதாரம் இல்லாமல் அன்பர் அவர்கள் இங்கு அடிக்கடி பேசுவதும் கேட்ட பிறகு முதலில் பஸ் வந்தது என்று சொல்வது, பின்பு கார் வந்தது என்று முன்பே சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் இப்போதும் ஆதாரம் இல்லாமல் பேசுவது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ஆளும்கட்சி அமைச்சர்கள் மீதோ அல்லது ஆளும் கட்சி மீதோ குற்றம் சுமத்துவது என்றால் அரசுக்குப் பொறுப்புள்ள குற்றச்சாட்டுக்களை கூறவேண்டும். எங்கெங்கேயோ நிதி வசூலிக்கிறார்கள் என்று சொன்னால் எல்லாவிடங்களிலும் எல்லாத் தாப்பிலும்தான் நிதி வசூலிக்கிறார்கள். அவற்றிற்குக் கணக்கு கேட்பது

என்பதற்கு இந்த இடத்தைப் பயன்படுத்தக்கூடாது. அரசு அல்லது அரசு சார்ந்திருக்கிற நிலையைப்பற்றி மட்டும் கூற வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சென்ற பட்ஜெட் தொடர் கூட்டத்திற்கு முன்பு நடந்த தொடர் கூட்டத்தில் தீ விபத்து பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள், 'பொது மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள், காங்கிரஸ்காரர்கள்தான் தீ வைத்தது' என்று பொறுப்புள்ள முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவில்லையா ? ஆகவே, சட்டமன்ற அங்கத்தினராகிய நான் பொது மக்கள் பேசிக்கொள்வதைத்தான் இங்கு பேசுகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆக, இந்த ஆளுநர் அவர்களின் உரை மீது எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. மா. இராசாங்கம் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டின் அடிமை வரலாற்றில் கடைசிச் சுவடாக இருந்த மதராஸ் ஸ்டேட் என்றிருந்ததை அகற்றி விட்டு தமிழ் நாடு என்று பெயர் வைத்ததை ஆளுநர் அவர்கள் ஆனந்தத்தோடு வரவேற்கிறார்கள். அதேபோல் நாமும் வரவேற்கிறோம். மதராஸ் ஸ்டேட் என்றால் நிர்வாகத்திற்கே மிகப் பெயர் போனது என்று ஆளுநர் அவர்கள் மகிழ்ச்சியோடு சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டின் நிலையும் அப்படித்தான். புகழ் வாய்ந்த நிர்வாகமும், வளமான வாழ்க்கை வரலாறுகளும் கொண்டது தமிழ் நாடு. மதராஸ் ஸ்டேட் என்றிருந்தபோதிலும் நிர்வாகம் திறமையாகத்தான் இருந்தது. அதோடு பல சோக வரலாறுகளும் இருந்தன. அண்மையில்கூட. இந்தி எதிர்ப்பில் இறந்த அந்தத் தியாகிகளுக்கு மாணவர்கள் வணக்க நாள் கொண்டாடினார்கள். இந்தி ஏகாதிபத்திய காட்டு தேவதைக்கு ரத்த அபிஷேகமும், நரபலியும் 1965-ல் நடந்தது நினைவிருக்கலாம். மதராஸ் ஸ்டேட் என்ற சோக நிலையில் சென்னை மாநிலம் என்ற பெயர் புதைக்கப்பட்டுவிட்டது. இப்போது புதிய பெயரில், புதிய பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். நம் அருமை நண்பர்கள், நம் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் மற்றவர்களும் ஆளுநர் அவர்களின் உரையைக் கேட்காமலேயே வெளியேறி விட்டார்கள். அவர்கள் ஆளுநர் அவர்களின் உரையைக் கேட்டிருந்தால், வெண்மணி வன்முறையை அரசாங்கம் எப்படி மனவேதனையோடு, சொல்கிறது, எப்படி அதை ஏற்றிருக்கிறது என்ற மனவேதனையின் எதிரொலியை அவர்கள் கேட்டிருந்தால் உண்மையிலேயே அவர்கள் வெளி நடப்பு செய்திருக்க மாட்டார்கள். ஆளுநர் அவர்கள், பிரச்னையை ஜனநாயக முறையில் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பதைத் தெளிவாக வெண்மணியைப் பொறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மிகச் சிறிய பிரச்னையை, வன்முறையில் பழகிப் போனவர்கள் அதை விஸ்வ





ரூபமாக ஆக்கி வெண்மணி கிராமத்தைச் சுடுகாடாக்கியிருக்கிறார்கள். சிறிய கத்தி கொண்டு நறுக்கவேண்டிய ஒரு கனியை கோடாரியைக் கொண்டு நறுக்கினால் எது விளையுமோ அதுதான் அங்கு நடந்திருக்கிறது. வன்முறையில் பழகிப் போனவர்கள், சாதாரண காரியத்தைக்கூட வன்முறையாகத் திருப்பிவிட பழக்கப்பட்டவர்களாகயிருக்கிறார்கள். பிரேதப் பெட்டி செய்து பழக்கப்பட்ட ஒரு தச்சன் பிள்ளையின் தொட்டிலைச் செய்தாலும் பிரேதப் பெட்டிபோல்தான் செய்வானும் என்பது ஆங்கிலப் பழமொழி. அதேபோல் கெட்டது செய்து பழக்கப்பட்ட நிலையில் வெண்மணி என்ற தொட்டிலையும் பிரேதப் பெட்டியாக்கிவிட்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. அங்கு மட்டுமா பிரேதப் பெட்டியாக்கியிருக்கிறார்கள் ? நாகர்கோவில் தேர்தல் என்ற ஜனநாயகத் தொட்டிலையும் பிரேதப் பெட்டியாகத்தான் ஆக்கியிருக்கிறார்கள். அந்தத் தொட்டியில் போட்டுத் தாலாட்டிய நம் அருமை கழகக் கண்மணி கிட்டு உங்களுக்குத் தெரியாதவர் அல்ல. நாகர்கோவில் தேர்தலுக்காகச் சென்றுவிட்டு உயிரோடு திரும்பி வந்தவர்களில் நானும் ஒருவன். அங்கு தேர்தல் நடப்பதாக நினைத்துக் கொண்டு நாங்கள் எல்லாம் காரில் போயிருந்தோம். அங்கு போன பிறகுதான் தெரிந்து கொண்டோம், நாங்கள் டாங்க்களில் போய் இருக்க வேண்டுமே தவிர கார்களில் போனது தவறு என்று. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் ஐந்து ஆண்டுகளாக பார்த்து வருகிறேன். எப்போதும் உண்மையையே சொல்லிக் கொண்டிருந்தவர். இப்போது திடீரென்று முழுப் பூசணிக்காயை ஒரு சோற்றில் அமுக்குவது என்பது மனதிற்கு ஒவ்வாததாக இருக்கிறது. பி.ப
ஆனால் அங்கு போட்ட கோஷங்கள் எல்லாம் என்ன தெரியுமா ? 1-30
ஒரே குத்துவெட்டு. கோஷமா அது. படுமோசமய்யா அது; காமராஜர் தேர்தலில் நின்றாலும் நின்றார், நாகர்கோவிலை காளி கோவில் ஆக்கிவிட்டார்கள். நேரடியாகப் பார்த்ததினால் இந்த வேதனைகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அங்குள்ள போலீஸ் துறையைப் பற்றிச் சொன்னார்கள். அமைச்சர் கருணாநிதி அவர்கள் இருந்த இடத்திலேயே கல்லெறி நடந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிருந்த காலத்தில் நடந்த தேர்தல்களில் அமைச்சர் மீது கல்லெறி எங்காவது நடந்திருக்கிறதா ? அல்லது கழகக்காரரா இப்பொழுது கல்லெறி நடத்தியிருப்பார் ? அதையெல்லாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனால், அங்கிருந்த போலீசார் பலயிடங்களில் கூட்டணித் தோழர்களையும் அடித்திருக்கிறார்கள். அவர்கள் கும்பலிலே சேர்ந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நேரடியாகவே அடிபட்டிருக்கிறார்கள். ஒரு தாய் தன்னுடைய மகனை காலி ஒருவன் அடிக்கும்பொழுது நேரடியாகப் பார்த்துவிட்டாலும் அந்தக் காலியை அடிக்க முடியாத அவள் தன்னுடைய மகனைத் தான் முதலில் அடிப்பாள். பின்னர் தனியாக அந்த மகனை அரவணைத்துக்கொண்டு ஆறுதல் சொல்லுவாள். அதுபோல சர்க்கார் அங்கு நடந்து கொண்டதாம் நீங்கள் சொல்லும் அளவுக்கு

என்பதற்கு இந்த இடத்தைப் பயன்படுத்தக்கூடாது. அரசு அல்லது அரசு சார்ந்திருக்கிற நிலையைப்பற்றி மட்டும் கூற வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சென்ற பட்ஜெட் தொடர் கூட்டத்திற்கு முன்பு நடந்த தொடர் கூட்டத்தில் தீ விபத்து பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள், 'பொது மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் தீ வைத்தது' என்று பொறுப்புள்ள முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவில்லையா ? ஆகவே, சட்டமன்ற அங்கத்தினராகிய நான் பொது மக்கள் பேசிக்கொள்வதைத்தான் இங்கு பேசுகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆக, இந்த ஆளுநர் அவர்களின் உரை மீது எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. மா. இராசாங்கம் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டின் அடிமை வரலாற்றில் கடைசிச் சுவடாக இருந்த மதராஸ் ஸ்டேட் என்றிருந்ததை அகற்றி விட்டு தமிழ் நாடு என்று பெயர் வைத்ததை ஆளுநர் அவர்கள் ஆனந்தத்தோடு வரவேற்கிறார்கள். அதேபோல் நாமும் வரவேற்கிறோம். மதராஸ் ஸ்டேட் என்றால் நிர்வாகத்திற்கே மிகப் பெயர் போனது என்று ஆளுநர் அவர்கள் மகிழ்ச்சியோடு சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டின் நிலையும் அப்படித்தான். புகழ் வாய்ந்த நிர்வாகமும், வளமான வாழ்க்கை வரலாறுகளும் கொண்டது தமிழ் நாடு. மதராஸ் ஸ்டேட் என்றிருந்தபோதிலும் நிர்வாகம் திறமையாகத்தான் இருந்தது. அதோடு பல சோக வரலாறுகளும் இருந்தன. அண்மையில்கூட. இந்தி எதிர்ப்பில் இறந்த அந்தத் தியாகிகளுக்கு மாணவர்கள் வணக்க நாள் கொண்டாடினார்கள். இந்தி ஏகாதிபத்திய காட்டு தேவதைக்கு ரத்த அபிஷேகமும், நரபலியும் 1965-ல் நடந்தது நினைவிருக்கலாம். மதராஸ் ஸ்டேட் என்ற சோக நிலையில் சென்னை மாநிலம் என்ற பெயர் புதைக்கப்பட்டுவிட்டது. இப்போது புதிய பெயரில், புதிய பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். நம் அருமை நண்பர்கள், நம் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் மற்றவர்களும் ஆளுநர் அவர்களின் உரையைக் கேட்காமலேயே வெளியேறி விட்டார்கள். அவர்கள் ஆளுநர் அவர்களின் உரையைக் கேட்டிருந்தால், வெண்மணி வன்முறையை அரசாங்கம் எப்படி மனவேதனையோடு, சொல்கிறது, எப்படி அதை ஏற்றிருக்கிறது என்ற மனவேதனையின் எதிரொலியை அவர்கள் கேட்டிருந்தால் உண்மையிலேயே அவர்கள் வெளி நடப்பு செய்திருக்க மாட்டார்கள். ஆளுநர் அவர்கள், பிரச்னையை ஜனநாயக முறையில் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பதைத் தெளிவாக வெண் மணியைப் பொறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மிகச் சிறிய பிரச்னையை, வன்முறையில் பழகிப் போனவர்கள் அதை விஸ்வ





ரூபமாக ஆக்கி வெண்மணி கிராமத்தைச் சுடுகாடாக்கியிருக்கிறார்கள். சிறிய கத்தி கொண்டு நறுக்கவேண்டிய ஒரு கனியை கோடாரியைக் கொண்டு நறுக்கினால் எது விளையுமோ அதுதான் அங்கு நடந்திருக்கிறது. வன்முறையில் பழகிப் போனவர்கள், சாதாரண காரியத்தைக்கூட வன்முறையாகத் திருப்பிவிட பழக்கப்பட்டவர்களாகயிருக்கிறார்கள். பிரேதப் பெட்டி செய்து பழக்கப்பட்ட ஒரு தச்சன் பிள்ளையின் தொட்டிலைச் செய்தாலும் பிரேதப் பெட்டிபோல்தான் செய்வானாம் என்பது ஆங்கிலப் பழமொழி. அதேபோல் கெட்டது செய்து பழக்கப்பட்ட நிலையில் வெண்மணி என்ற தொட்டிலையும் பிரேதப் பெட்டியாக்கிவிட்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. அங்கு மட்டுமா பிரேதப் பெட்டியாக்கியிருக்கிறார்கள் ? நாகர்கோவில் தேர்தல் என்ற ஜனநாயகத் தொட்டிலையும் பிரேதப் பெட்டியாகத்தான் ஆக்கியிருக்கிறார்கள். அந்தத் தொட்டியில் போட்டுத் தாலாட்டிய நம் அருமை கழகக் கண்மணி கிட்டு உங்களுக்குத் தெரியாதவர் அல்ல. நாகர்கோவில் தேர்தலுக்காகச் சென்றுவிட்டு உயிரோடு திரும்பி வந்தவர்களில் நானும் ஒருவன். அங்கு தேர்தல் நடப்பதாக நினைத்துக் கொண்டு நாங்கள் எல்லாம் காரில் போயிருந்தோம். அங்கு போன பிறகுதான் தெரிந்து கொண்டோம், நாங்கள் டாங்க்களில் போய் இருக்க வேண்டுமே தவிர கார்களில் போனது தவறு என்று. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் ஐந்து ஆண்டுகளாக பார்த்து வருகிறேன். எப்போதும் உண்மையையே சொல்லிக் கொண்டிருந்தவர் இப்போது திடீரென்று முழுப் பூசணிக்காயை ஒரு சோற்றில் அமுக்குவது என்பது மனதிற்கு ஒவ்வாததாக இருக்கிறது. பி.ப 1-30
ஆனால் அங்கு போட்ட கோஷங்கள் எல்லாம் என்ன தெரியுமா ? ஒரே குத்துவெட்டு. கோஷமா அது. படுமோசமய்யா அது; காமராஜர் தேர்தலில் நின்றாலும் நின்றார், நாகர்கோவிலை காளி கோவில் ஆக்கிவிட்டார்கள். நேரடியாகப் பார்த்ததினால் இந்த வேதனைகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அங்குள்ள போலீஸ் துறையைப் பற்றிச் சொன்னார்கள். அமைச்சர் கருணாநிதி அவர்கள் இருந்த இடத்திலேயே கல்லெறி நடந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிருந்த காலத்தில் நடந்த தேர்தல்களில் அமைச்சர் மீது கல்லெறி எங்காவது நடந்திருக்கிறதா ? அல்லது கழகக்காரரா இப்பொழுது கல்லெறி நடத்தியிருப்பார் ? அதையெல்லாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனால், அங்கிருந்த போலீசார் பலயிடங்களில் கூட்டணித் தோழர்களையும் அடித்திருக்கிறார்கள். அவர்கள் கும்பலிலே சேர்ந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நேரடியாகவே அடிபட்டிருக்கிறார்கள். ஒரு தாய் தன்னுடைய மகனை காலி ஒருவன் அடிக்கும்பொழுது நேரடியாய்ப் பார்த்துவிட்டாலும் அந்தக் காலியை அடிக்க முடியாத அவள் தன்னுடைய மகனைத் தான் முதலில் அடிப்பாள். பின்னர் தனியாக அந்த மகனை அரவணைத்துக்கொண்டு ஆறுதல் சொல்லுவாள். அதுபோல சர்க்கார் அங்கு நடந்து கொண்டதும் நீங்கள் சொல்லும் அளவுக்கு

[திரு. மா. இராசாங்கம்] [1969 சனவரி 27

இல்லை என்பதை நான் நேரடியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் தாயினுடைய நிலைமையிலிருந்து, அடிப்பவனைக் கண்ணால் பார்த்தும் கூட அவனைத் திருப்பி அடிக்காமல் அடிபட்டவனைத்தான் கண்டித்ததே தவிர மற்றபடி நீங்கள் நடத்திய தர்பாரைப்போல் ஒன்றுகூட நடத்தவில்லை.

ஏற்கனவே காங்கிரஸ் தியாகிகளுக்குப் பல சலுகைகளைச் செய்திருக்கிறார்கள், அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலேயே சென்ற முறை சொல்லியிருக்கிறார்கள், செய்த தியாகத்திற்கு வேறொன்றைப் பெறுவதால் வாங்கிய பொருள் நிற்கும், தியாகம் நிற்காது என்று. ஆனால் கழகத்துத் தியாகிகள் மிகவும் ஏழைகள். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கழக சர்க்கார் நிச்சயம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஏழைத் தியாகிகள் வேலையிழந்து, வீடிழந்து, ஊர் இழந்து எத்தனையோ இடங்களில் பரிதவிக்கும் காட்சிகளைக் காண்கிறோம். அவர்களுக்கு நிச்சயமாக ஏதாவது சலுகைகள் செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பண உதவி, வேலைச் சலுகைகள் கொடுக்கலாம். இதனால் எதிர்க்கட்சிக்காரர்கள் குறை சொல்வார்களே என்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாது. உண்மையை எப்பொழுதும் ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். 1965-ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்ட பி.ஏ. படித்த மாணவன் ஒருவன் கால் இழந்து காணப்படுகிறான் எங்கள் பகுதியில். அந்த மாணவன் காலை முதல் எங்கள் வீட்டின் முன்னாலேயிருந்து ஒற்றைக்காலில் நின்று வேலை கேட்கிறான். இப்படி ஒரு இடத்தில் மட்டுமல்ல. நாடு பூராவும் இருக்கிறது. அதைச் சர்க்கார் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அருமை நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரைப் பொருளாதாரத்தில் குற்றம் சொல்லும்பொழுதுதான் அது புரியவில்லை. மத்திய சர்க்கார் தேசிய தனி நபர் வருமானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. மாகாண சர்க்கார் தன்னுடைய தனி நபர் வருமானத்தைச் சொல்லியுள்ளது. வேறு மாகாணங்களில் அதிகமாகத் தனி நபர் வருமானம் இருந்தும் கூட மத்திய சர்க்காருடைய திட்டங்களில், வேலைகளில் எந்தத் தொகையும் குறைக்கவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செலுத்தும் மாகாணத்திற்குக் குறைத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பொருளாதாரத்தைப் பற்றி நன்கு தெரியும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் இதில் குற்றம் சொல்லும்பொழுதுதான் புரியவில்லை. தூங்குபவனைத் தட்டி எழுப்பிவிடலாம், ஆனால் விழித்துக்கொண்டே தூங்குவதுபோல் பாவனை செய்பவனை எழுப்புவது சற்று சிரமமாகத்தான் இருக்கும். மாநில சர்க்கார் என்பது கட்டிய கயிற்றிலே மேய்கிற மாடு. மத்திய சர்க்கார்



1969 சனவரி 27] [திரு. மா. இராசாங்கம்]

என்பது கட்டவிழ்த்து மேய்கிற மாடு. எங்கள் வரம்பிற்குள் முடிந்த அளவில் இதைத்தான் செய்ய முடியும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் பி.ப.
இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளை காலை 1-35
9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## II. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory rules and orders

% 1. Notification issued with G.O. Ms. No. 1427, Home, dated the 13th May 1968, in regard to an amendment relating to the guiding principles for the grant of stage carriage permits under the Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department's Notification No. 357, dated the 29th March 1940, at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

% 2. Notification issued with G.O. Ms. No. 1794, Revenue, dated the 13th October 1967, in regard to an amendment to the Revenue Department Notification No. 199 of 1964, dated the 21st May 1964, at page 1 of Part III of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 22nd May 1964, relating to shifting of check-post, Kelambakkam near Lattice Bridge. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

%3. Notification, issued with G.O. Ms. No. 479, Home, dated the 23rd February 1968, in regard to an amendment to rule 427-A of the Madras Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

% 4. Notification issued with G.O. Ms. No. 1112, Rural Development and Local Administration, dated the 7th June 1968, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 177 of 1963, dated the 4th April 1963, published at page 5 of the Extraordinary issue of the *Fort St. George Gazette*, dated the 6th April 1963. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

% 5. Notification issued with G.O. P. No. 1017, Revenue, dated the 15th May 1968, making the Madras Cultivating Tenants (Special Provisions) Rules, 1968. [Laid on the Table of the House under Section 12 (4) of the Madras Cultivating Tenants (Special Provisions) Act, 1968.]

% 6. Notification issued with G.O. Ms. No. 1876, Education, dated the 24th November 1967, approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruvottiyur Municipality. [Laid on the Table of the House under Section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Reuglation) Act, 1959 (Madras Act 26 of 1959).]

% 7. Notification issued with G.O. Ms. No. 805, Home, dated the 21st March 1968, regarding certain amendments to rules 109 and 110 of the Madras Cinemas (Regulation) Rules, 1957, published with Home Department Notification S.R.O. No. A-701 of 1957, dated the 19th January 1957, at pages 79-104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under Section 10 (3) of the Madras Cinemas Regulation Act, 1955 (Madras Act IX of 1955).]

% 8. Notification issued with G.O. Ms. No. 1875, Education, dated the 24th November 1967 regarding approval of list of all parks, play-fields and open spaces set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Vellore Municipal Council. [Laid on the Table of the House under Section 14 (3) of the Madras Parks and Play-fields and Open Spaces (Preservation and Regulation )Act, 1959 (Madras Act 26 of 1959).]

% 9. Notification issued with G.O. Ms. No. 1338, Rural Development and Local Administration, dated the 6th July 1968 in regard to an amendment to rules relating to the authority for numbering of buildings of Panchayats, published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-489 of 1961, dated the 26th April 1961, on page 39 of the Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 10th May 1961. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

% 10. Notification issued with Government Memorandum No. 32357/67-1M-10, Rural Development and Local Administration, dated the 6th May 1968 regarding certain amendments to Rural Development and Local Administration Department Notification II-2 No. 398 of 1967, dated the 23rd November 1967 relating to reservation of seats and division of wards in Tiruppur Municipality, published at pages 28-33 of Part II—Section 2 of the



*Fort St. George Gazette* Extraordinary, dated the 4th December 1967. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

% 11. Notification issued with G.O. Ms. No. 1355, Local Administration, dated the 9th July 1968 in regard to the revised boundaries of division Nos. 96 and 97 of Madras City. [Laid on the Table of the House under Section 348 (*d*) of the Malras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919).]

% 12. Notification issued with G.O. Ms. No. 1103, Home, dated the 15th April 1968, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 to the vehicle bearing registration No. MDA 4130 belonging to the United Nations International Children Emergency Fund and assigned to the District Health Officer, Madurai. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

% 13. Notification issued with G.O. Ms. No. 780, Health, dated the 13th May 1968 in regard to certain amendments to the rules regarding water-supply, house connections and meters in Municipalities, published with the erstwhile Public Health Department Notification No. 292, dated the 24th March 1941 at pages 249 to 252 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 1st April 1941. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

% 14. Notification issued with G.O. Ms. No. 1059, Local Administration, dated the 31st May 1968 in regard to the redivision of wards and reservation of seats in the Palani Municipal Council. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

% 15. Notification issued with G.O. Ms. No. 927, Rural Development and Local Administration, dated the 9th May 1968, regarding certain amendments to the Conduct of Election of Municipal Councillors' Rules, 1968, published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-899 of 1962, dated the 19th October 1962, at pages 1-23 of Part V of the Extraordinary issue of the *Fort St George Gazette*, dated the 20th October 1962, as subsequently amended. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

% 16. Notification issued with G.O. Ms. No. 987, Public (Tamil Development-I), dated the 29th April 1968, directing that with effect on and from 1st May 1968, Tamil shall be used in respect of all official communications from the offices of all the Joint Registrars of Co-operative Societies. [Laid on the Table of the House under Section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]

% 17. Notification issued with G.O. Ms. No. 1544, Industries Labour and Housing, dated the 17th April 1968, in regard to an amendment to the rules for the operation of the accounts of the Madras State Housing Board with the Government and with the State Bank of India by the officers of the said Board published with Industries, Labour and Housing Department Notification No. S.R.O. A-661 of 1962, dated the 18th July 1962, at pages 615 and 616 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st August 1962 as subsequently amended. [Laid on the Table of the House under Section 160 (4) of the Madras State Housing Board Act, 1961 (Madras Act 17 of 1961).]

% 18. Notification issued with G.O. Ms. No. 1326, Revenue, dated the 2nd July 1968, regarding certain amendments to the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published with the Revenue Department Notification S.R.O. No. A-162 of 1965, dated the 10th February 1965, at pages 1-25 of Part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965, as subsequently amended. [Laid on the Table of the House under Section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]

‡ 19. Notification issued with G.O. Ms. No. 417, Home, dated 17th February 1968, exempting from payment of Motor Vehicles Tax leviable in respect of the bus bearing registration No. MSQ 1286 belonging to Bala Vihar, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

‡ 20. Notification issued with G.O. Ms. No. 1085, Home, dated the 11th April 1968, in regard to extension of grace time for payment of tax in respect of stage carriages and public carriers ordinarily kept in this State. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

‡ 21. Notification issued with G.O. Ms. No. 1967, Agriculture, dated the 24th June 1968 in regard to regulation of trade in gingelly in North Arcot District. [Laid on the Table of the House under Section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

‡ 22. Notification issued with G.O. Ms. No. 1752, Rural Development and Local Administration, dated the 31st August 1968, in regard to dissolution of Nannilam Town Panchayat for a period of one year with effect on and from 1st September 1968. [Laid on the Table of the House under Section 179 (4) of Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

‡ 23. Notification issued with G.O. Ms. No. 604, Home, dated the 4th March 1968, directing the collection of tax at reduced rate in respect of the lorry MDC 7260 belonging to the Sacred Heart Convent, Valparai. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]





‡ 24. Notification issued with G.O. Ms. No. 1538, Public Works (Electricity), dated the 15th July 1968, in regard to certain amendments to the Madras Electricity (Taxation on Consumption) Rules, 1964. [Laid on the Table of the House under Section 17 (2) of the Madras Electricity (Taxation on Consumption) Act, 1962 (Madras Act 4 of 1962).]

‡ 25. Notification issued with G.O. Ms. No. 1398, Revenue, dated the 16th July 1968 in regard to an amendment to the Hindu Religious Institutions (Officers and Servants) Services Rules, 1964, published with the Revenue Department Notification S.R.O. No. A-1252 of 1964, dated the 26th November 1964 at pages 1324 to 1328 of Part V of the *Fort St. George Gazette*, dated the 23rd December 1964. [Laid on the Table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]

‡ 26. Notification issued with G.O. Ms. No. 1385, Revenue, dated the 15th July 1968, in regard to appointment of Thiru S. Ganesan, District and Sessions Judge, North Arcot at Vellore, to be the Chairman of the Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]

‡ 27. Notification issued with G.O. Ms. No. 749, Local Administration, dated the 10th April 1968, in regard to withdrawing of road from the control of the Tiruvottiyur Council and taking over by Government for maintenance and improvements, 1967-68. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

‡ 28. Notification issued with R. Dis. No. 3830/68-T, dated the 24th February 1968 in regard to the exclusion of the area noted in the appendix to the notification from the jurisdiction of the Namagiripet Town Panchayat of Salem district and bifurcation into two separate Town Panchayats. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

29. Notification issued with R.O.C. No. 58716/65/F5, dated the 2nd August 1967, regarding extension of certain provisions relating to building regulations to Tiruvanmiyur Town Panchayat of Chingleput district. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

* 30. Notification issued with G.O. Ms. No. 2397, Industries, Labour and Housing (Labour), dated the 29th June 1968, making the Madras Beedi and Cigar Workers (Conditions of Employment) Rules, 1968. [Laid on the Table of the House under

* 44. Notification issued with G.O. Ms. No. 470, Rural Development and Local Administration, dated the 7th March 1968, making the Madras Khadi and Village Industries Board (Accounts and Audit) Rules, 1968. [Laid on the Table of the House under section 29 (3) of the Madras Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959).]

* 45. Notification issued with G.O. R. No. 1086, Revenue, dated the 4th September 1968, in regard to exemption from the liability to the entertainment tax, the cinema show organised by the Little Men Club and the benefit film show in aid of Gujarat Flood Relief Fund held on 8th September 1968 at Children's Theatre. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]

* 46. Notificationu issued with G.O. Ms. No. 1298, Local Administration, dated the 4th July 1968, in regard to an amendment to Rural Development and Local Administration Department Notification II-2 No. 23 of 1966, dated the 7th February 1966, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 10th February 1966, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

* 47. Notification issued ,with G.O. Ms. No. 1469, Home dated the 20th May 1968, in regard to exemption from payment of motor vehicles tax leviable in respect of vehicle bearing registration number MDK 2803, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Kanyakumari district. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

* 48. Notification issued with G.O. Ms. No. 587, Rural Development and Local Administration, dated the 23rd March 1968, in regard to certain amendments to Rural Development and Local Administration Department Notification II-2 No. 328 of 1967, dated 6th October 1967, published at pages 337–338 of Part II—Section 2 of the *Fort St George Gazette*, dated the 22nd November 1967, relating to redivision of wards and reservation of seats in Pattukottai area. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 49. Notification issuued with G.O. Ms. No. 1208, Local Administration, dated the 20th June 1968, in regard to certain amendments to Rural Development and Local Administration Department Notification II-2 No. 401 of 1967, dated the 23rd November 1967, published at pages 44–47 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 4th December 1967, relating to reservation of seats and division of wards in Cumbum



Municipal Council. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 50. Notification issued with G.O. Ms. No. 284, Home, dated, the 5th February 1968 in regarl to exemption from payment of motor vehicles tax leviable in respect of certain vehicles belonging to the Co-operative for American Relief Everywhere, Incorperated, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

* 51. Notification issued with G.O. Ms. No. 1007, Home, dated the 6th April 1968 in regard to certain amendments to rules 37 and 38 of the Madras Cinemas (Regulation) Rules, 1957, published with Home Department Notification S.R.O. No. A-701 of 1957, dated the 19th January 1957 at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955. (Madras Act IX of 1955).]

* 52. Notification issued with G.O. Ms. No. 783, Agriculture, (Co-operation), dated the 25th March 1968 in regard to extension of the provisions of the Madras Money-Lenders Act, 1957 in newly formed Panchayat towns in certain districts with effect from 1st June 1968. [Laid on the Table of the House under section 22 (3) of the Madras Money Lenders Act, 1957 (Madras Act XXVI of 1957).]

* 53. Notification issued with Government Memo. No. 38172 T1/68-1, Revenue, dated the 22nd May 1968 in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 863 of 1965, dated the 22nd February 1965, published at pages 352-354 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 24th February 1965 as subsequently amended. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]

* 54. Notification issued with G.O. Ms. No. 914, Revenue, dated the 29th April 1968 in regard to a ryotwari settlement of certain inam estates in Tiruchirappalli district in accordance with the provision of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

@ 55. Notification issued with G.O. Ms. No. 1114, Home, dated the 16th April 1968 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A 291 of 1960, dated

the 18th August 1960 at pages 3–121 of the Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 14th September 1960 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

@ 56. Notification issued with G.O. Ms. No. 795, Local Administration, dated the 18th April 1968 in regard to an amendment to the rules relating to the decision of disputes as to the validity of elections held under the Madras District Municipalities Act 1920, published with Rural Development and Local Administration Department Notification No. A. 519 at pages 543/546 of Part V of the *Fort St. George Gazette*, dated the 22nd May 1963. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

@ 57. Notification issued with G.O.P. No. 1409, Revenue, dated the 17th July 1968 in regard to an amendment to item 37 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 relating to Detergent powders and liquids and metal polishing bars. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

@ 58. Notification issued with G.O. Ms. No. 1932, Home, dated the 4th July 1968 in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MDK 2869, belonging to the United Nations International Childrens' Emergency Fund and assigned to the District Health Officer, Kanyakumari. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

@ 59. Notification issued with G.O. Ms. No. 1830, Agriculture, dated the 5th June 1968 in regard to market area and the notified market areas for the market at Pudukottai in Tiruchirappalli district in respect of groundnut, paddy and chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

@ 60. Notification issued with Proceedings No. 156960/67F-1, dated the 27th March 1968 in regard to extension of certain provisions of the Madras District Municipalities Act, 1920 to Harvipatty township in Madurai district with effect from 1st April 1968. [Laid on ths Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958. (Madras Act XXXV of 1958).]

@ 61. Notification issued with G.O. Ms. No. 1308, Revenue, dated the 27th June 1968 in regard to an amendment to rule 10 of the Madras Sales of Motor Spirit Taxation Rules, 1939, published



with Revenue Department Notification No. 274, dated the 25th March 1939 at pages 1–7 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 25th March 1939 as subsequently amended. [Laid on the Table of the House under section 29 (2) of the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939 (Madras Act IV of 1939).]

@ 62. Notification issued with G.O. Ms. No. 1308, Revenue, dated the 28th June 1968 in regard to certain amendments to the Madras Land Reforms (Compensation for Surplus Lands) Rules, 1966, published with Revenue Department Notification S.R.O. No. A.32 of 1967, dated the 29th December 1966 at pages 25–29 of Part V of the *Fort St. George Gazette*, dated the 4th January, 1967. [Laid on the Table of the House under section 112 (2) of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961) Madras Act 58 of 1961).]

@ 63. Notification issued with G.O. Ms. No. 1887, Public (Tamil Development-1), dated the 20th September 1968 in regard to introduction of Tamil in the office of the Fisheries Staff Training Institute, Madras in respect of all official communications with effect on and from 2nd October 1968. [Laid on the Table of the House under Section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]

@ 64. Notification issued with G.O. Ms. No. [illegible] Industries, Labour and Housing (Labour), dated the [illegible] 1968 relating to the extension of the Madras Catering Establishments Act 1958 to Tallakulam, Ponneri, Kochadai and Madakulam Town Panchayat in Madurai district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Catering Establishments Act, 1958 (Madras Act XIII of 1958).]

61450

@ 65. Notification issued with G.O. Ms. No. 833, Home, dated the 25th March 1968 in regard to an amendment to the Madras Motor Accident Claims Tribunals Rules, 1961, published with Home Department Notification S.R.O. No. A.[illegible] of 1961 dated the 28th June 1961, published at pages 750–[illegible] of Part V of the *Fort St. George Gazette*, dated the 12th July 1961 as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 66. Notification issued with G.O. Ms. No. 1670, Revenue, dated the 21st August 1968 in regard to an amendment to the special rules for the Madras Hindu Religious and Charitable Endowments Subordinate Service, published with the Revenue Department Notification S.R.O. No. A.675 of 1962, dated the 19th July 1962 at pages 633–635 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st August 1962 as subsequently amended. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]

@ 67. Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1966—Order No. 9 Madras State [Laid on the Table of the House under section 10 (3) of the Delimitation Commission Act, 1962. (Central Act 61 of 1962).]

** 68 Notification issued with G.O. Ms. No. 1333, Agriculture, dated the 16th April 1968, in regard to regulation of trade in sugarcane, jaggery etc., in the North Arcot district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

** 69. Notification issued with G.O. Ms. No. 2304, Home, dated the 8th August 1968 in regard to an amendment to the Madras Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

** 70. Notification issued with G.O. Ms. No. 2105, Local Administration, dated the 15th October 1968, in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 469 of 1967, dated the 7th December 1967, published at pages 9–10 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 16th December 1967. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

** 71. Notification issued with G.O. Ms. No. 1669, Agriculture (Co-operation), dated the 21st May 1968, in regard to certain amendments to the Madras Pawnbrokers Rules, 1944. [Laid on the Table of the House under section 22 (4) of the Madras Pawnbrokers Act, 1943 (Madras Act XXIII of 1943).]

** 72. Third Annual Report and Statement of Accounts with the Government's Review on the working of the Madras State Small Industries Corporation Limited for the period ended 31st March 1968. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

## B. Reports, Notifications and other papers.

% 1. Errata issued with Government Memo. No. 141998/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 1st December 1967 to the notification published as II-2 No. 320 of 1967, dated 13th October 1967 relating to re-division of wards and reservation of seats in the Mettupalayam Municipality at pages 327-339 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.

% 2. Errata issued with Government Memo. No. 141997/M-10 67-1, Rural Development and Local Administration, dated the 1st December 1967 to the notification published as II-2 No. 312 of



1967, dated 17th October 1967 relating to re-division of wards and reservation of seats in the Pollachi Municipality at pages 316–319 of Part II-Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.

% 3. Errata issued with Government Memo. No. 153568/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 23rd December 1967 to the notification published as II-2 No. 390 of 1967, dated the 21st November 1967 relating to re-division of wards and reservation of seats in Karaikudi Municipality at pages 17 to 20 of Part II-Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 4th December 1968.

% 4. Errata issued with Government Memo. No. 153580/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 26th December 1967 to the notification published as II-2 No. 452 of 1967, dated the 28th November 1967, relating to ward division and reservation of seats in Tirunelveli Municipality at pages 466–467 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 13th December 1967.

% 5. Errata issued with Government Memo. No. 152098/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 26th December 1967 to the notification published as II-2 No. 408 of 1967, dated the 23rd November 1967, relating to reservation of seats and division of wards in the Vaniyambadi Municipality at pages 52–55 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 4th December 1967.

% 6. Errata issued with Government Memo. No. 152968/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 26th December 1967 to the notification published as II-2 No. 413 of 1967, dated 23rd November 1967 relating to reservation of seats in Palni Municipal Council at pages 59 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 4th December 1967.

% 7. Errata issued with Government Memo. No. 154251/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 26th December 1967 to the notification II-2, No. 440, dated the 21st November 1967 relating to ward division and reservation of seats in Periakulam Municipality at pages 455–456 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 13th December 1967.

% 8. Notification issued with G.O. Ms. No. 796, Revenue, dated the 10th April 1968 in regard to remission of stamp duty for a further period of one year commencing on the 13th March 1968 for instruments relating to the transfer by the Government of Madras in favour of companies of lands acquired on behalf of the companies licensed under the Industries (Development and Regulation) Act, 1951 (Central Act LXV of 1951).

% 9. Notification issued with G.O. Ms. No. 2503, Home, dated the 2nd September 1968 regarding certain amendments to the Madras Hindu Marriage (Registration) Rules, 1967.

†10. Annual Report of Banana and Fruit Development Corporation, Limited, for the year ended 31st March 1967.

†11. Notification issued with G.O. Ms. No. 938, Revenue, dated the 4th May 1968 in regard to exemption from stamp duty payable on mortgage deed to be executed in connection with the loan obtained from the Government of India for construction of students' Hostel for the Murugappa Chettiar Memorial Polytechnic, Avadi, Madras.

†12. Notification issued with G.O. Ms. No. 1335, Revenue, dated the 3rd July 1968 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the agreements of be executed by the packers for taking up grading of ghee and oil through the State oil and ghee laboratories.

†13. Notification issued with Government Memo. No. 116743/T1/67-1, Revenue, dated the 20th December 1967 in regard to publication of addenda to certain Revenue Department Notification relating to ryotwari settlement of inam estates and minor inams estates published in the *Fort St. George Gazette*, dated the 24th August 1966, 14th August 1966, 14th September 1966, 8th February 1968, 1st March 1967 and 28th February 1968.

†14. Resume of work transacted by the Madras Legislative Assembly during Fourth Session (Forth Assembly) (from 16th August to 31st August 1968).

@ 15. Notification issuued with G.O. Ms. No. 1170, Revenue, dated the 6th June 1968 in regard to reduction in stamp duty executed by the loanees under the Filter Point Wells Scheme and the Deepening of Wells Scheme for a period of three years chargeable under the Indian Stamp Act, 1899.

@ 16. Errata issued with Government Memo. No. 136460/M-10/67, Rural Development and Local Administration, dated the 30th November 1967 to the Notification published as II-2 No. 316 of 1967, dated the 20th October 1967, relating to ward divisions and reservation of seats in the Singanallur Municipality at pages 321–324 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.

@ 17. Errata issued with Government Memo. No. 141121/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 1st December 1967 to the Notification published as II-2 No. 304 of 1967, dated the 19th September 1967, relating to ward divisions and reservation of seats in the Ramanathapuram Municipality at pages 306–310 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.

@ 18. Errata issued with Government Memo. No. 143245/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 2nd December 1967 to the Notification published as II-2 No. 310 of 1967, dated the 17th October 1967, relating to ward divisions and reservation of seats in Nagapattinam Municipality at pages 312–316 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.



@ 19. Errata issued with Government Memo. No. 134814/M-10/67-1, Rural Development and Local Administration, dated 11th December 1967 to the Notification published as II-2 No. 372 of 1967, dated the 2nd November 1967, relating to ward divisions and reservation of seats in the Attur Municipality at pages 412—413 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 29th November 1967.

@ 20. Errata issued with Government Memo. No. 146344/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 15th December 1967 to the Notification published as II-2 No. 334 of 1967, dated the 17th October 1967, relating to the division of wards and reservation of seats in Sivakasi Municipality at pages 345–348 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967.

@ 21. Errata issued with Government Memo. No. 149058/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 16th December 1967 to the Notification published as II-2 No. 372 of 1967, dated the 2nd November 1967, relating to division of wards and reservation of seats in Attur Municipality at pages 412—413 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 29th November 1967.

@ 22. Errata issued with Government Memo. No. 152110/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 20th December 1967 to the Notification published as II-2 No. 366 of 1967, dated the 30th October 1967, relating to division of wards and reservation of seats in Arni Municipality at pages 405–408 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 29th November 1967.

@ 23. Errata issued with Government Memo. No. 149055/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 21st December 1967 to the Notification published as II-2 No. 328 of 1967, dated the 6th October 1967, relating to division of wards and reservasion of seats in the Pattukottai Municipality at pages 337–338 of Part II—Section 2 of the *Fort St. George Gaztte*, dated the 22nd November 1967.

@ 24. Errata issued with Government Memo. No. 152113/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 22nd December 1967 to the Notification published as II-2 No. 402 of 1967, dated the 6th November 1967, relating to reservation of seats and division of wards in the Arkonam Municipality at pages 420–423 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 6th December 1967.

@ 25. Errata issued with Government Memo. No. 152969/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 23rd December 1967 to the Notification published as II-2 No.

420 of 1967, dated the 2nd November 1967, relating to the division of wards reservation of seats in Padmanabhapuram Municipality at pages 418 and 419 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 6th December 1967.

@ 26. Errata issued with Government Memo. No. 152398/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 23rd December 1967 to the Notification published as II-2 No. 336 of 1967, dated the 24th October 1967, relating to reservation of seats and division of wards in the Puliangudi Municipality at pages 349—350 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967.

@ 27. Errata issued with Government Memo. No. 151590/M-10/67-1, Rural Development and Local Administration, dated 26th December 1967, to the Notification published as II-2 No. 404 of 1967, dated the 23rd November 1967, relating to reservation of seats and division of wards in the Cumbum Municipality at pages 44–47 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 4th December 1967.

@ 28. Errata issued with Government Memo. No. 152242/M-10/67-1, Rural Development and Local Administration, dated the 26th December 1967 to the Notification published as II-2 No. 340 of 1967, dated the 26th October 1967, relating to reservation of seats and division of wards in the Karur Municipality at pages 351–353 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967.

@ 29. Errata issued with Government Memo. No. 18631/M-10/66-13, Rural Development and Local Administration, dated the 28th December 1967 to the Notification published as II-2 No. 465 of 1967, dated the 29th November 1967, relating to reservation of seats and division of wards in the Rasipuram Municipality at pages 1–4 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, Extraordinary, dated the 16th December 1967.

@ 30. Notification issued with the G.O. Ms. No. 1401, Revenue dated the 17th July 1968 in regard to an amendment relating to exemption of stamp duty on grant agreements to be executed by the State Khadi and Village Industries Board with the Khadi Village Industries Commission and by Private Institutions with the Commission.

@ 31. The Madras General Sales Tax (Amendment) Ordinance, 1968 (Madras Ordinance No. 5 of 1968).

** 32. Governor's Address to the Members of the Legislature on the 25th January 1969 (English and Tamil).

---

**% Despatched to Members on 24th October 1968.**

**‡ Despatched to Members on 12th November 1968.**

*** Despatched to Members on 6th December 1968.**

**@ Despatched to Members on 8th January 1969.**

**** Circulated to Members on 25th Janury 1969.**



## APPENDIX I.

[*Vide* item 9 on page 46]

[Address by the Governor of Tamil Nadu]

Hon'ble Members of the Legislature,

It is again my pleasant privilege to welcome you to this new session of the Legislature. As we meet here to-day our thoughts are all with Thiru Annadurai, our Chief Minister. I am sure that all the Honourable Members and people at large will join me in wishing him speedy and complete recovery so as to enable him to play an active part again in guiding and directing the administration of our State.

2. You will recall that I had occasion to address you last immediately after the celebrations of the World Tamil Conference which had served to highlight the many faceted glory of Tamil language and culture. I am glad that this session has likewise been convened soon after the renaming of the State of Madras as "Tamil Nadu" in accordance with the recent amendment to the Constitution. This alteration in the name of the State marks the fulfilment of the long-cherished wishes of the people of Tamil Nadu The name of Madras State has become associated in public mind all over the country and elsewhere with certain high standards of administrative efficiency and decency and cleanliness in public life. I have no doubt that this State will continue to maintain these standards and prove worthy of the historic traditions which its new name recalls.

3. The economy of the State registered satisfactory progress in 1967–68 in spite of adverse seasonal conditions and recession in major industries of the State such as the textile industry. State income recorded an improvement of 3.8 per cent at constant prices over the level attained in 1966–67 which was a comparatively good year from the agricultural point of view. Apart from the actual improvement noticed in agricultural production in 1967–68 we had reason to feel optimistic about the future in view of the response of our peasantry to the new agricultural strategy as exemplified by the programmes relating to propagation of high-yielding varieties and extension of multiple cropping. The success attending on our efforts in regard to these two vital programmes encouraged us to set our fargets higher for the current year and on a cautious assessment of the potential likely to be built up under these and other programmes for the stimulation of agricultural production, we had expected that the production of foodgrains could, in the current year, be stepped up to at least 63 lakh tonnes. But as the Hon'ble Members are aware, nature has not been kind to us in the current year and many parts of the State have witnessed unprecedented drought both during the south-west monsoon season and the north-east monsoon season. The average rainfall during the south-west monsoon period was lower by nearly 25 per cent compared with the normal and by nearly 10 per cent

as compared with last year. The deficiency during the north-east monsoon period has been even more pronounced, being nearly 33 per cent compared with the normal and 27 per cent compared with last year. This abnormal deficiency in rainfall has caused serious set-back to our programmes of agricultural production. While final forecasts on different crops have not yet been framed, it is clear even on the basis of reports of sowings and conditions of standing crops so far received from the different parts of the State, that there may be a shortfall in output of foodgrains as compared with last year. The crop prospects in Chingleput and North Arcot districts in particular have been very seriously affected due to the failure of rainfall and consequent poor storage in the numerous tanks which support agricultural operations in these districts. On an intensive study made by a Member of the Board of Revenue, Government have already initiated certain measures for relief of distress and provision of employment in parts of Chingleput district affected by drought. Government will initiate a similar programme for provision of opportunities for employment for people affected by failure of rains in the North Arcot district. Following reports of scarcity of drinking water and fodder, Government have also allocated funds for sanction of loans and deepening of wells in parts of Coimbatore district. They would examine the need for similar measures of relief in other parts of the State too where agricultural operations have been affected in the current year by prolonged drought. The House may rest assured that Government would keep the economic situation caused by drought under their close and constant review. The provision of relief for people affected by natural calamities has always been recognised to be the joint responsibility of State and Central Governments and my Government would therefore approach the Government of India at the appropriate time for sharing the burdens involved in affording succour to people in areas, where failure of crops has occurred on a significant scale.

4. The failure of rainfall would have affected the economy of the State in a more acute form, but for the vigour with which we have pushed through programmes for sinking of wells and installation of pumpsets. The House will remember that last year a new record was set up with the energisation of a little over 50,000 pumpsets. Though provision had been made initially in the Plan for only Rs. 6 crores for rural electrification and this would have sufficed to energise only about 25,000 pumpsets, the State Electricity Board has been permitted to proceed with the extension of power connections for wells with unabated vigour. The Board has already energised 40,161 pumpsets by the end of December 1968 and it should therefore be possible for it to repeat it, if not exceed, its last year's performance. The Board in consultation with Government has taken action for securing access to institutional finance for expanding lift irrigation programmes. The programme of sinking of new wells including tube-wells and filter point tube-wells has also been appreciably accelerated in the current year. The House will recall that at the commencement of the current financial



year, the Government had taken a decision of policy to route all the funds required for the financing of these programmes through land mortgage banks. In the light of past experience with the procedures of the land mortgage banks, some doubts and misgivings were then expressed about their ability to cope with a programme of the dimensions visualised by the Government. I am now glad to report that the new policy has fully vindicated itself in terms of the large number of applications for loans sanctioned by the land mortgage banks. The legal safeguards provided to the land mortgage banks in regard to prior encumbrances on lands and the streamlining of the administrative machinery for the processing of applications for loans have together facilitated the expeditious disposal of applications for loans and the credit canalised through land mortgage banks is expected to be of the order of Rs. 12 crores in the current year, representing a new record in the history of this institution. Government are aware that provision of adequate medium and long-term credit for financing agricultural improvements is crucial to the success of all our developmental programmes. It is this recognition which has led the Government to provide some incentives to commercial banks to enter the field of agricultural credit. The House should be glad to know that a number of commercial banks have come forward to finance agricultural development in the different parts of our State. This augurs well both for agricultural progress and for mobilisation of rural savings.

5. While the seasonal factor has in general been adverse, the condition of storage in some of our major reservoirs such as Mettur has been reasonably satisfactory. This, coupled with judicious management of distribution of water, has enabled us to maintain the tempo of agricultural development in areas commanded by major irrigation systems. The double cropping programme which has been in operation in Thanjavur district since 1967–68 has been intensified to cover an estimated extent of 5 lakh acres in 1968. To get the best out of our limited water resources, emphasis has been laid on introduction of medium duration varieties like ASD 5 in the Thaladi season. In spite of the setback in seasonal conditions, an area of at least 16 lakhs acres will be covered under the high-yielding varieties programme in the current year representing substantial improvement over the performance in 1967–68. It is also a matter for gratification that the availability of fertilisers, so essential for the success of the high-yielding varieties programme, has significantly improved in the current year. Government have now on hand adequate stocks of fertilisers to meet all the demands of cultivators. With the implementation of multiple cropping programmes, the problem of effective control of pests and diseases acquires special significance. Aerial spraying of pesticides and insecticides on crops has been done over an area of nearly 2.5 lakhs of acres in 1968–69.

6. While thus implementing all measures for augmentation of agricultural production, Government have also borne in mind the need for an effective programme of procurement and distribution of foodgrains at controlled prices. A quantity of over 7.5 lakhs of tonnes of rice was procured during the year 1968 for issue under the public distribution system. About 6.75 lakhs of tonnes of rice have been distributed at subsidised rates benefiting over 170 lakhs of people. The House will be glad to know that the quantity thus distributed is larger than the quantities distributed in any of the previous years. About 89,000 tonnes of wheat, 1.80 lakhs tonnes of wheat products and 32,000 tonnes of milo have also been distributed and these have served to supplement the supplies of rice. Realising the need to have command over adequate stocks of rice, Government have decided to procure 5 lakh tonnes of rice in the samba season. It is expected that of this, about 2.75 lakhs of tonnes would be procured in Thanjavur district. No one can minimise the importance of effective procurement in the strategy for holding the price line. I would therefore request all sections of the House and the people at large to co-operate fully with the Government in ensuring the success of its procurement programme.

7. The interests of agricultural production demand the maintenance of cordial relations between landholders and agrarian labour. Government have tried to foster such relations through promotion of voluntary agreements on levels of wages and other conditions. Government have also endeavoured to prevent serious breaches of peace by parties seeking to assert their rights without recourse to due process of law. It is a matter for regret that in spite of all thes efforts, a serious tragedy should have taken place at Kilvenmani in East Thanjavur. I am sure that the House will share with me the sense of shock and profound grief over this inhuman exhibition of violence and callousness. The House is aware that the Government have lost no time in initiating action for setting the law in motion. May I take this opportunity to appeal to all sections of the people to eschew violence in all its forms and to have recourse to normal processes of negotiation and conciliation for settlement of their disputes? Government are on their part determined to see that resort to violence is put down with a firm hand.

8. Government are aware that peace is the fruit of justice and steps should therefore be taken for securing agrarian labour and other interests involved adequate rewards for their efforts. It is in this view that they have appointed a retired High Court Judge to enquire into the problems of agricultural labour in East Thanjavur and submit a report. The Government hope that a fair and enduring solution to the problem of agrarian relations can be found on the basis of such a dispassionate report.

9. Similarly, concern for labour has led the Government, despite substantial financial commitments to pursue vigorously the question of getting the closed textile mills in the State reopened. The Government have been administering on the basis



of the advice of an expert team headed by Dr. P. S. Lokanathan a scheme for guarantee of loans advanced by banks to sick mills to enable such mills to re-open and thus maintain production and employment. Government have already offered guarantees to the extent of nearly Rs. 2 crores in respect of 19 mills. It is unfortunate that despite this, some of the mills could not be reopened and some which had re-opened have had to close down again. The State Government therefore recommended to the Government of India that some of these mills should be taken up for investigation under the Industries (Development and Regulation) Act to determine their viability and to chalk out the lines on which action could be taken to revive them. Reports based on these investigations are being received and are currently under examination of the Government. With a view to take over some of these mills and manage them on an efficient basis, the Government have decided to set up a State Textile Corporation. It is expected that the funds required for management, renovation and modernisation of the mills taken over by the State Textile Corporation could be secured to the extent of 51 per cent from the National Textile Corporation. Recognising that a permanent solution for the problems faced by the spinning mill industry in the State could be found only on the basis of substantial reduction in costs of production, the State Government have repeatedly impressed on the Government of India the need to provide relief in respect of excise duty on cotton yarn. The State Government, on their part, have offered to reciprocate any concession in regard to excise duty with similar concessions under Sales Tax on yarn and tax on consumption of electricity. I have no doubt that all sections of this House would strongly support this plea of the State Government to the Government of India and join me in expressing the hope that the Government of India would provide substantial relief without delay.

10. While the textile industry has thus been passing through serious difficulties, satisfactory progress has been made in regard to other industries. The Oil Refinery at Manali in the outskirts of Madras City is expected to go on stream shortly. Keeping in view the possibilities of developing a petro-chemical complex in this region, Government have commissioned an expert study in this regard by the Engineers (India), Limited. The work on Madras Fertiliser Plant planned in conjunction with the Refinery has also registered satisfactory progress. Government have also initiated action to promote the setting up of another fertiliser plant in Tuticorin as a joint venture with the private sector. Government have attached great importance to the development of the hinterland of the proposed major harbour at Tuticorin and have therefore set in motion a survey for determining the lines on which the salt-based industries could be developed. Government have felt the need to supplement the present efforts of the Madras Industrial Investment Corporation in the provision of finance to industries in the private sector. They have therefore

recently taken a decision of policy under which the Madras Industrial Development Corporation will also assist industrial units of private sector through participation in equity capital and provision of assistance in the form of term loans and guarantees. This Corporation will also continue to implement certain industrial projects in the public sector such as the Continuous Casting Plant at Arkonam and Cement Plant near Rajapalayam, work on both of which has made satisfactory progress in the current year. On the whole, with the uninterrupted availability of power and the quickening of tempo of development in the wake of a new Plan, the outlook for industrial progress in the State has now improved. It is worthwhile to mention here that in 1967, nineteen cases of foreign collaboration with the industrial undertakings in the State have been approved by the Government of India in different lines of production. Sugar factories both in private and co-operative sector, have recorded better results in 1968 than in earlier years. As part of the programme of promotion of Agro-Industries on a widely dispersed basis, Government have applied for licence for the establishment of three Co-operative sugar factories in the State in the Fourth Plan Period.

11. The welfare of the large number of their own employees has been continually engaging the special attention of Government. The Civil Services Joint Council which provides a forum for the exchange of views on matters affecting the conditions of services of the employees has been quite active in the current year and many of the recommendations made by the Council such as encashment of leave privileges of employees, have been accepted by the Government. Government have also issued orders for the establishment of similar Joint Services Councils at the district level for considering matters of local importance. The view has been gaining ground that our present Service Rules are far too complex and are at the root of delays in respect of such matters as regularisation of services and declaration of probation of employees. The question of recasting service rules so as to avoid hardship to employees is also being pursued by Government. It will be the endeavour of the Government, to promote within the resources available to them, a sense of contentment among their employees on whose efficiency ultimately the success of any administration depends and to this end problems having a bearing on the morale of employees such as the one relating to personal files will be examined with the utmost expedition.

12. The recession facing the textile industry and the fall in agricultural production have naturally had an adverse effect on State revenues under important heads such as Sales Tax. Consistent with their policy of maintaining parity in respect of rates of dearness allowance with the employees of the Central Government, the State Government have also sanctioned two instalments of additional dearness allowance in the current year. They have also liberalised the retirement benefits of State Government employees by providing for payment of pension on the basis of average emoluments of the last 36 months without any distinc-



tion as hitherto between substantive and officiating pay. The revised revenue estimates for the current year which will be shortly presented to the Legislature will therefore disclose a substantial revenue deficit. Improvement in the revenue position of the State Government can be expected only with the award of the Fifth Finance Commission which is bound to take all these commitments into account.

13. Notwithstanding these adverse trends in the State's economy and State's revenues, Government have sought to maintain the tempo of development as envisaged in the Annual Plan for 1968-69. The Planning Commission had on its estimate of resources of the State Government approved an outlay of only Rs. 66.35 crores for the current year; the Government, however, budgeted for an outlay of nearly Rs. 80 crores. The House should be glad to know that apart from Power under which there will be a substantial increase in view of accelerated tempo of rural electrification programmes, the Plan as budgeted will be fulfilled. In fact, the revised estimates currently under compilation disclose some increases even under other heads such as minor and major irrigation.

14. In the wake of the decision of the Planning Commission to have a new Fourth Plan effective from 1969-70, Government initiated action for the preparation of a Plan at the State level. On the basis of the reports of various Working Groups and its own assessment of the requirements under several heads of development, the Government presented a Plan of Rs. 624 crores to the Planning Commission. But following the decision of the National Development Council on the criteria for distribution of Central assistance among States, the Planning Commission has indicated that the Central assistance for the State's Fourth Plan would be only Rs. 201 crores, representing a sharp reduction from Rs. 250 crores which had been promised for the orginal Fourth Plan. This substantial reduction in Central assistance for the State's Plan is, among other things, the result of the decision of the National Development Council to reserve 10 per cent of the Central assistance exclusively for six States whose per capita income is reportedly below national average. Even granting the need for giving a measure of special Central assistance for "backward States", our plea with the Planning Commission has been that the sacrifice involved in extending this special assistance to such backward States should be equitably distributed among the States, whose per capita incomes are above the national average. We regret that this plea, though fully justified, has not been accepted by the Planning Commission. The new formula evolved by the Planning Commission works specially to the disadvantage of the State such as Tamil Nadu which are just above the average. The special problems facing the State such as incidence of drought, educated unemployment and needs of the metropolis should also receive adequate recognition. The State Government hope that these arguments which they have advanced before the

Planning Commission during their recent discussions on the State's Fourth Plan would evoke favourbale response and Central assistance for the State's Fourth Plan would eventually be increased to some extent.

15. The State Government have also pleaded with the Planning Commision that a measure of relief through re-scheduling of debts due to the Government of India in the Fourth Plan is also necessary. We understand similar requests have been made by a few other State Governments too and that the whole problem of re-scheduling of debt obligations of the States is currently engaging the attention of the Government of India. Pending a decision on these crucial issues, it was agreed with the Planning Commission that a decision on the size of the State's Fourth Plan should be deferred.

16. Despite this uncertainty about the size of the State's Fourth Plan, it is a matter of gratification that the Planning Commission has agreed in principle to provision being made for the exploitation of the Salem iron ore. The provision which the State Government have made in their Fourth Plan for opening of the Salem iron ore will represent the first stage in the fruition of our long-cherished ambitions in regard to the establishment of the Steel Plant at Salem based on Kanjamalai iron ore and Neyveli Lignite. The House should also be glad to know that full provision has been made in the State's Fourth Plan for the implementation of the Veeranam Water-Supply Scheme which will provide a lasting solution for the needs of the Madras City and its environs in respect of drinking water and also contribute significantly to the industrial development of this area.

17. The State Government have drawn up their Fourth Plan on the assumption that there will be no deficit on non-Plan account; this assumption will materialise only if the Fifth Finance Commission now in session takes all our commitments into account and provides for adequate devolution of resources. We feel disappointed that under the interim report of the Fifth Finance Commission we have not secured any additional resources. The Grants-in-aid under Article 275 of the Constitution has been maintained at the same level as in the current year. At the same time we have to assume full responsibility for committed expenditure estimated at Rs. 16 crores arising from the schemes implemented as part of the three Annual Plans. The Budget Estimates for 1969–70 which will shortly be coming up before the House will therefore disclose a substantial deficit on non-Plan Account. The hope has been held out that in the final report of the Finance Commission adjustments would be made in regard to the devolution even for 1969–70. We hope that the deficit on non-Plan Account will be fully covered in the final report of the Fifth Finance Commission expected to be submitted to the President in July 1969. We have no doubt that the Finance Commission will take note of the substantial additional tax effort put in by our State and frame their award so as to provide a measure of encouragement to States such as ours which have on the whole managed their finances prudently. We have also pleaded before the Finance Commission for a larger share for the State in Income Tax and Union Excise Duties; we have also urged before them the need for a reappraisal of the financial provisions of the Constitution in the light of the experience gained in the two decades of federalism. We hope that on the basis of the report of the Fifth Finance Commission, the financial relations between the Centre and States would be placed on a more satisfactory and equitable basis.



18. The legislative programme in this session is not heavy. The rate of single-point tax leviable under Item 30 of the First Schedule of the Madras General Sales Tax Act, 1959, in respect of precious stones was increased from 4 per cent to 7 per cent with effect from 11th December 1968. Item 8 in the Second Schedule to the Madras General Sales Tax Act, 1959, viz., silk fabrics was deleted with effect from 18th December 1968 so that these articles become liable to multi-point Sales Tax from that date. These changes were given effect to by issue of notification under Section 59 (1) o fthe Madras General Sales Tax Act, 1959. The Madras General Sales Tax (Fifth Amendment) Ordinance, 1968, was promulgated on the 31st December 1968 to include excise duty in the net turnover under the Madras General Sales Tax Act, 1939, and taxable turnover under the Madras General Sales Tax Act, 1959, and to validate the levy and collection of tax on that basis already made. Bills to replace the above notifications and Ordinance will be introduced for consideration at the present session of the Legislature.

19. The question of effecting changes in the mode of collection of House Tax in Town and Village Panchayats has been under the consideration of Government for some time. This was previously being collected in two instalments. Later, it was decided that the tax should be collected in one instalment in villages along with land revenue and in two instalments in town Panchayats. In order to give effect to this decision of Government, the Madras Panchayats Act has to be amended and a Bill will be introduced in the Legislature during the present session.

20. I look forward with keen interest to your deliberations with the confidence that they will be carried on with the objectivity and calm dignity for which this Legislature has earned well-deserved reputation **(cheers)**.

ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இம் மாநிலத்தில் நீடித்த வறட்சி நிலை காரணமாக வேளாண்மைப் பணிகள் பாதிக்கப் பட்டுள்ள ஏனைய பகுதிகளிலும் இதைப்போன்று துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான தேவையையும் அரசு ஆய்வு செய்யும். வறட்சியால் தோன்றியுள்ள பொருளாதாரச் சூழலை இடைவிடாமல் நுணுக்கமாக அரசு ஆய்வு செய்யுமென்று இம் மன்றத்தினர் உறுதியாக நம்பலாம். இயற்கைப் பேரிடர்களால் அல்லலுறும் மக்களது துயரைத் தணிக்க வகை செய்வது மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகுமென்பது என்றென்றும் உணரப்பட்ட உண்மையாகும். எனவே, பயிர்கள் பெருமளவில் சாவியாய்ப்போன பகுதிகளிலுள்ள மக்களுக்கு உதவியளிப்பதில் ஏற்படும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக எனது அரசு ஏற்ற தருணத்தில் இந்திய அரசை நாடுமென்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

4. கிணறுகள் தோண்டுவதற்கும் விசையேற்றங்களை நிறுவுவதற்குமான திட்டங்களின் வாயிலாக நாம் முனைப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருப்பின், பருவ மழை தவறியதன் காரணமாக நமது மாநிலப் பொருளாதாரம் மேலும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும். சென்ற ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு மேல் மின் இணைப்புக் கொடுத்து ஒரு புதிய சாதனையை நாம் எட்டியிருப்பது இம்மன்றத்தினருக்கு நினைவிருக்கலாம். ஏறக்குறைய 25,000 விசையேற்றங்களுக்கு மட்டுமே மின் இணைப்புக் கொடுக்கக்கூடிய வகையில், கிராம மின் இணைப்புத் திட்டத்திற்காக நமது திட்டத்தில் முதற்கண் 6 கோடி ரூபாய் அளவிற்கே வகை செய்யப்பட்டிருந்தபோதிலும், மாநில மின்சார வாரியம் கிணறுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கும் திட்டத்தைத் தணியா ஊக்கத்துடன் நிறைவேற்றிச் செல்வதற்கு அரசு இசைந்துள்ளது. 1968 டிசம்பர் இறுதிக்குள் மின்சார வாரியம் ஏற்கனவே 40,161 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. எனவே, அது கடந்த ஆண்டுச் சாதனையளவினை விஞ்சாவிடினும், அவ்வளவினையாவது மீண்டும் எய்திடுமெனக் கொள்ளலாம். இறவைப் பாசனத் திட்டங்களை இங்ஙனம் விரிவுபடுத்துவதற்கு நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுவதற்காக மின்சார வாரியம் அரசைக் கலந்து நடவடிக்கை எடுத்துள்ளது. குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாக் கிணறுகள் உட்பட புதிய கிணறுகள் தோண்டும் திட்டமும் நடப்பு ஆண்டில் பெரிதும் விரைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் தொடக்கத்தில் இத்திட்டங்களுக்குத் தேவையான கடன் வசதிக்குரிய தொகையனைத்தையும் நில அடைமான வங்கிகள் வாயிலாகவே வழங்க வேண்டுமென்று அரசு கொள்கையளவில் முடிவெடுத்தது என்பதை இம்மன்றத்தினருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். நில அடைமான வங்கிகளின் நடைமுறை பற்றிக் கடந்த காலத்தில் கிடைத்த நேரறிவையொட்டி, அரசின் செயற் குறிப்பிலுள்ள இவ்வளவு பெரியதோர் திட்டத்தை அவ் வங்கிகள் நிறைவேற்றும் திறனுடையவையா என்பதுபற்றி அப்போது சில ஐயப்பாடுகள் தோன்றின. நில அடைமான



வங்கிகள் ஒப்பளிப்பு வழங்கியுள்ள ஏராளமான கடன் விண்ணப் பங்களைக் கருதும்போது, இப் புதிய கொள்கை முற்றிலும் வெற்றி பெற்றுள்ளது என்பதை நான் இப்போது மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். நிலங்களின் மீதுள்ள முந்திய வில்லங்கங்கள் குறித்து நில அடைமான வங்கிகளுக்கு வகை செய்துள்ள சட்ட வகையிலான காப்பு விதிகளாலும், கடன் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நிர்வாக அமைப்பைச் செம்மைப்படுத்தியதாலும் இவ் விண்ணப்பங்கள் மீது விரைந்து முடிவெடுப்பது எளிதாயிற்று. நடப்பு ஆண்டில் நில அடைமான வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன் 12 கோடி ரூபாய் அளவில் பெருகி நிற்குமென்று தெரிகிறது. இது, இந்த நிறுவனத்தின் வரலாற்றிலேயே ஒரு மாபெரும் சாதனையாகும். வேளாண்மை மேம்பாட்டிற்குப் போதிய நடுத்தர, நீண்ட காலக் கடன் வசதிகள் வழங்குவது நமது வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் இன்றியமையாதது என்பதை அரசு உணர்ந்துள்ளது. இந்த உணர்வின் காரணமாகவே, வணிக வங்கிகள் வேளாண்மைக் கடன் துறையில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிப்பதற்கான சில வாய்ப்புகளை அரசு வகை செய்ய முன் வந்துள்ளது. நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சிக்குக் கடன் வழங்கப் பல வணிக வங்கிகள் முன்வந்துள்ளன என்பதை அறிய இம்மன்றம் மகிழ்ச்சியுறுமென்று நினைக்கின்றேன். வேளாண்மை முன்னேற்றத்திற்கும் கிராமப்புற மக்களின் சேமிப்புகளைத் திரட்டுவதற்கும் இது வழிகோலும்.

5. பருவ மழை பொதுவாகச் சீர்கேடுற்றபோதிலும், மேட்டூர் நீர்த் தேக்கம் போன்ற நமது பெரிய நீர் நிலைகள் சிலவற்றின் நீர்மட்ட நிலை ஓரளவு மன நிறைவு அளிப்பதாய் இருந்துள்ளது. இத்துடன், நீரை மிகுந்த விழிப்புடன் பகிர்ந்து அளிக்க நாம் மேற்கொண்ட முயற்சிகளின் வாயிலாகப் பெரிய பாசனத் திட்டப் பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சி விரைவு தணியாமல் போற்றிக் காக்க நம்மால் இயன்றது. 1967-68-ம் ஆண்டு முதற் கொண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் செயலில் இருந்து வரும் இருபோகப் பயிர்த் திட்டத்தை 1968-ல் 5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விரிவுபடுத்தும் வகையில் முனைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நமது நீர் வாயில்களின் குறுகிய வாய்ப்புக் களைக் கொண்டே பெரும் பயன் எய்தும் வகையில், தாளடிப் பருவத்தில் (A.S D. 5) எ.எஸ்.டி. 5 போன்ற இடைத் தரக் கால நெல் ரகங்களைப் புகுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பருவ மழை தவறியிருப்பினும், மிகு பயன் தரும் விளைச்சல் திட்டத்தின்கீழ் 16 லட்சம் ஏக்கர் பரப்பளவாவது விளைச்சலுக்குக் கொண்டுவரப்படும். 1967--68-ல் கிட்டிய சாதனையை விட இது கணிசமான அளவிற்கு உயர்ந்திருக்கும். மிகுபயன் தரும் விளைச்சல் திட்டத்தின் வெற்றிக்கு மிக இன்றியமையாத இரசாயன உரங்கள் கிட்டும் வாய்ப்புகள் நடப்பு ஆண்டில் பெரிதும் அதிகரித்துள்ளன என்பது நமக்கு உளமகிழ்வு தருவதாகும்.

உழவர்களின் தேவைகள் அனைத்தையும் ஈடு செய்வதற்கு அரசிடம் இப்போது போதிய அளவில் உர வகைகள் இருப்பில் உள்ளன. பல போகப் பயிர் விளைவிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதையடுத்து, கொள்ளை நோய்த் தொல்லையைச் செவ்விய முறையில் கட்டுப்படுத்துவது இன்றியமையாத இடம் பெறுகிறது. 1968-69-ம் ஆண்டு கிட்டத்தட்ட 2.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிர்களுக்கு விமானம் மூலம் பூச்சி, நோய்க்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டுள்ளன

6. வேளாண்மை உற்பத்தியின் வெற்றிக்காக இன்னோரன்ன பணிகளை முனைந்து செயல்படுத்தி வருகையில், உணவு தானியங்களைக் கட்டுப்பாட்டு விலைகளில் கொள்முதல் செய்து வழங்குவதற்குச் சீரிய திட்டம் ஒன்று தேவை என்பதையும் அரசு உணர்ந்துள்ளது. பொது மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கும் ஏற்பாட்டின் கீழ், 1968-ம் ஆண்டில் 7.5 லட்சம் டன் அரிசிக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டது. 170 லட்சம் மக்களுக்குமேல் பயனடைகிற வகையில் ஏறக்குறைய 6.75 லட்சம் டன் அரிசி மானிய உதவியுடன் மலிவு விலைகளில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட அரிசியின் அளவு இதற்கு முந்திய ஆண்டுகள் எதிலும் வழங்கப்பட்ட அளவைக் காட்டிலும் மிக அதிகமானது என்பதை இம் மன்றத்திற்குக் களிப்புடன் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். அரிசியோடுகூட, ஏறக்குறைய 89,000 டன் கோதுமை, 1.80 லட்சம் டன் கோதுமைப் பொருட்கள், 32,000 டன் மைலோ ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன. அரிசி இருப்புக்களைப் போதிய அளவில் கையில் வைத்துக்கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்து, சம்பாப் பருவத்தில் 5 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இதில் ஏறத்தாழ 2.75 லட்சம் டன் தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. விலைவாசிகள் ஏறாமல் தடுப்பதற்கு உணவு தானியக் கொள்முதல் பணியைத் திறம்பட நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை யாரும் குறைத்துக் கூற முடியாது. எனவே, இம்மன்றத்தின் எல்லாப் பிரிவினர்களும், பொதுமக்களும் அரசின் உணவு தானியக் கொள்முதல் திட்டம் வெற்றியடைவதற்கு அரசுடன் ஒன்றி நின்று ஒத்துழைக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

7. வேளாண்மை உற்பத்தி பெருகுவதற்கு நிலக் கிழார்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் இடையே இசைவான உறவு நீடிக்க வேண்டுவது அவசியமாகும். உழவுத் தொழிலாளர் கூலி அளவுகள், வேலைய நிலைமைகள் பற்றி ஒருமித்த உடன்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் அத்தகைய உறவுகளை வளர்க்க அரசு தாழாது முயன்று வந்துள்ளது. தங்கள் உரிமைகளைச் சட்ட முறைகளில் அடையாமல், அவற்றைத் தங்கள் போக்கில் நிலைநாட்ட முற்படுபவர்களால் அமைதிக்குப் பெரிதும் ஊறு விளையாமல் இருக்கவும் அரசு முயன்று வந்துள்ளது. இவ்வாறு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், கிழக்குத் தஞ்சை



மாவட்டம், கீழ்வெண்மணி கிராமத்தில் கொடுஞ்செயல் ஒன்று நிகழ்ந்திருப்பது வருந்தத்தக்கதாகும். மனிதப் பண்பை மறந்த வன்முறையும், உளம் வெதும்பும் ஈரமற்ற செயல்களும் நிகழ்ந்திருப்பதைக் காணும்போது ஏற்படும் அதிர்ச்சியிலும் ஆறாத்துயரத்திலும் என்னோடு இம் மன்றத்தினரும் பங்கு கொள்வார்கள் என்று நான் உறுதியாய் நம்புகின்றேன். சட்டப்படி நடவடிக்கைகளைத் துவக்கி வைக்க அரசு காலந் தாழ்த்தாது முற்பட்டதை இம் மன்றத்தினர் அறிவர். இத்தருணத்தில் நமது மாநில மக்கட் பிரிவினர் அனைவரும் தங்கள் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதில், எந்தவகையான வன்முறைச் செயல்களிலும் ஈடுபடாது, அவற்றை இயல்பான முறைகளிலும் இசைவுடனும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். அரசும் தன்னைப் பொறுத்தவரையில், வன்முறைச் செயல்களைக் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்த உறுதி பூண்டுள்ளது.

8. நீதியின் முகிழ்வே அமைதி என்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே, உழவுத் தொழிலாளர்களுக்கும், ஏனையோர்களுக்கும் அவர்களுடைய உழைப்பிற்கேற்ற பலனைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதையும் அரசு உணர்ந்துள்ளது. இந்தக் கருத்தில்தான் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் உழவுத்தொழிலாளர்கள் பற்றிய சிக்கல்களை ஆய்வு செய்து அறிக்கை அளித்திட, ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரை அரசு நியமித்துள்ளது. கோல்கோடாத அத்தகைய அறிக்கையின் அடிப்படையில் உழவுத்தொழிலாளர் உறவுகளைப் பற்றிய சிக்கல்களுக்கு நியாயமான, நிலைத்த தீர்வு ஒன்றைக் காண முடியுமென்று அரசு நம்புகின்றது.

9. இவ்வண்ணமே, தொழிலாளர்களின் நலன் பற்றிய கவலையால் உந்தப்பட்டு, அரசு கணிசமான அளவிற்கு நிதிப் பொறுப்புகளை ஏற்கவேண்டிவரினும், நமது மாநிலத்தில் மூடிக்கிடக்கும் பஞ்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு முனைந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள முற்பட்டுள்ளது. அத்தகைய ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, அவற்றில் உற்பத்தியும் வேலை வாய்ப்புகளும் ஏற்படுவதற்கென, நொடித்துவிட்ட அவ்வாலைகளுக்கு வங்கிகள் வழங்கும் கடன் தொகைகளுக்கு ஒப்புறுதியளிக்கும் திட்டமொன்றை டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தலைமையிலான வல்லுநர்க்குழு ஒன்றின் ஆய்வுரைக்கிணங்க அரசு நிறைவேற்றி வந்துள்ளது. ஏற்கனவே 19 ஆலைகள் குறித்து ஏறக்குறைய 2 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஒப்புறுதி வழங்கியுள்ளது. இருப்பினும், சில ஆலைகள் மீண்டும் திறக்கப்பட இயலாத நிலையிலிருப்பது வருந்தத்தக்கதாகும். திறக்கப்பட்ட சில ஆலைகள் திரும்பவும் மூடவேண்டியிருந்தன. எனவே, இவ்வாலைகள் சிலவற்றை இயக்குவிக்கும் கூறுகளை ஆய்ந்து அவற்றை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வழி காண, தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் ஆய்வு செய்ய வேண்டுமென்று இந்திய அரசுக்கு நமது மாநில அரசு பரிந்துரைத்துள்ளது. இந்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு

தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் வந்தவண்ணமாயுள்ளன. இவ்வறிக்கைகளை அரசு இப்போது ஆய்வு செய்து வருகிறது. இந்த ஆலைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டு, அவற்றைத் திறம்பட இயக்குவதற்காக, மாநிலப் பஞ்சாலைக் கழகம் (State Textile Corporation) ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. மாநிலப் பஞ்சாலைக் கழகம் மேற்கொள்ளும் ஆலைகளை இயக்கவும், புதுப்பிக்கவும், புதிய பொறிகளை வாங்கிச் செயல்படுத்தவும் தேவைப்படுகிற நிதி வசதிகளில் 51 சத வீத அளவிற்குத் தேசியப் பஞ்சாலைக் கழகத்திடமிருந்து National Textile Corporation பெற முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது, உற்பத்திச் செலவுகளைக் கணிசமாகக் குறைப்பதன் வாயிலாகவே இந்த மாநிலத்தில் நூற்பாலைத் தொழிலை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களுக்கு நிலையான தீர்வு காண முடியுமென்பதை உணர்ந்து, மாநில அரசு பருத்தி நூலுக்கு விதிக்கப்படும் ஆயத் தீர்வையைக் குறைப்பது அவசியமென இந்திய அரசிடம் இடைவிடாமல் வற்புறுத்தி வந்துள்ளது. மாநில அரசும் தன்னைப் பொறுத்தவரையில், ஆயத்தீர்வை குறித்து அளிக்கப்படும் எந்தச் சலுகைக்கும் ஈடாக, நூலுக்குரிய விற்பனை வரி, மின்சாரப் பயன்பாட்டின் மீது விதிக்கப்படும் வரி இவற்றின் கீழ் சலுகைகள் வழங்க முன்வந்துள்ளது. இந்திய அரசுக்கு நாம் விடுக்கும் இவ்வேண்டுகோளை மன்றத்தின் அனைத்துப் பிரிவினரும் அகநிறைவோடு ஆதரிப்பார்கள் என்பதிலும், இந்திய அரசு காலங்கடத்தாது கணிசமான அளவுக்குத் துயர் தணிப்பளிக்க முன்வருமென்று என்னோடு சேர்ந்து எதிர்பார்ப்பார்கள் என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

10. இவ்வாறு பஞ்சாலைத் தொழில் பெரும் இடர்ப்பாடுகளில் சிக்குண்டு வந்திருந்த போதிலும், ஏனைய தொழில்களைப் பொறுத்தவரையில், உளநிறைவளிக்கும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சென்னை மாநகரை அடுத்த மணலியில் நிறுவப்பட்டுவரும் பாறையெண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை (Oil Refinery) விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பகுதியில் பாறை எண்ணெய்—இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சிக்குக் கிட்டும் வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு "இஞ்சினியர்ஸ் (இந்தியா) லிமிடெட்" என்னும் நிறுவனத்தார் இதுபற்றி நுண்ணாய்வு நடத்துவதற்கு அரசு இசைவு அளித்துள்ளது. பாறை எண்ணெய்த் தொழிற்சாலையுடன் இணைந்து வகுக்கப்பெற்ற சென்னை உரத்தொழிற்சாலையை (Madras Fertiliser Plant) நிறுவும் பணியிலும் மனநிறைவளிக்கும் வளர்ச்சி காணப்படுகிறது. தனியார் துறையுடன் கூட்டாகத் தூத்துக்குடியில் மற்றொரு உரத் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் அரசு நடவடிக்கை தொடங்கியுள்ளது. தூத்துக்குடியில் நிறுவக் கருதியுள்ள பெருந்துறைமுகத்தைச் சார்ந்த உள்நாட்டுப் பகுதியின் வளர்ச்சிக்கு அரசு சிறப்பிடம் அளித்துள்ளது. எனவே, அங்கு உப்பு அடிப்படையிலான தொழில்களை எவ்வழிகளில் மேம்படுத்தலாமென்பதை முடிவு செய்யும் ஆய்வு ஒன்றிற்காக நடவடிக்கை தொடங்கியுள்ளது. தனியார் துறைத் தொழில்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக, சென்னைத் தொழில் முதலீட்டுக் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைத் தவிர, வேறு வகையிலும் துணை



புரியவேண்டிய தேவையையும் அரசு உணர்ந்துள்ளது. எனவே, தனியார் துறையிலுள்ள தொழில் நிறுவனங்களை, அவற்றின் பங்கு மூலதனத்தில் பங்கேற்பது மூலமாகவும், அவைகட்குக் குறித்த காலக் கடன்கள் வழங்கும் வகையிலும், ஒப்புறுதிகள் அளிக்கும் வகையில் உதவியளிப்பதன் மூலமாகவும் சென்னைத் தொழில் வளர்ச்சிக் கழகமும் ஊக்குவிக்க வேண்டுமென்கிற கொள்கையை அரசு அண்மையில் மேற்கொண்டுள்ளது. இக்கழகம் பொதுத் துறையில் நிறுவி வருகின்ற அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலையும், இராசபாளையம் சிமெண்ட் தொழிற்சாலையும் அகநிறைவளிக்கும் அளவில் முன்னேறி வருகின்றன. மொத்தத்தில், இப்போது தட்டுத் தடங்கலின்றி மின் சக்தி கிடைத்து வருவதாலும், புதிய திட்டமொன்று செயலுக்கு வரப் போவதைக் கருதி, வளர்ச்சிப் பணிகளின் விரைவு ஓங்கி வருவதாலும், நமது மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்திற்கான சூழ்நிலை மேம்பாடு அடைந்துள்ளது. 1967-ம் ஆண்டில் நமது மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களுடன் அயல் நாட்டார் உடனுழைப்பு உவந்தளிக்க முன் வந்துள்ள வெவ்வேறு உற்பத்தித் துறைகளைச் சார்ந்த 19 தொழில்களுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளதென்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் இயங்கி வரும் சர்க்கரை ஆலைகள் முந்திய ஆண்டுகளைவிட 1968-ல் சிறந்த பலன்களை நல்கியுள்ளன. உழவொன்றிய தொழில்களைப் Agro-Industries) பரவலாகப் பெருக்கும் கொள்கைக் கிணங்க, அரசு தனது நான்காம் திட்ட வேலையின் பகுதியாக இம்மாநிலத்தில் மேலும் மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கான உரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளது.

11. எண்ணற்ற தனது பணியாளர்கள் நலனில் அரசின் சிறப்பான நாட்டம் இடைவிடாமல் இருந்து வந்துள்ளது. பணியாளர்களின் பணி நிலைமைகளைப் பாதிக்கின்ற பல பொருள்கள் குறித்துக் கருத்துரைகளைப் பரிமாறிக்கொள்வதற்கான ஓர் அரங்கமாயுள்ள அரசுப் பணியாளர்க் கூட்டு மன்றம் (Civil Services Joint Council ) நடப்பாண்டில் மிக முனைந்து பணியாற்றியுள்ளது. பணியாளர்களின் விடுப்புரிமைகளுக்கு ஈடாகச் சம்பளம் தருதல் போன்று மன்றம் செய்த பரிவுரைகளில் பலவற்றை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வவ்விடத்துச் சிக்கல்களை ஆய்வு செய்வதற்கென மாவட்ட நிலையில் அதைப் போன்ற பணியாளர்க் கூட்டு மன்றங்களை நிறுவுவது குறித்தும் அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. தற்போதைய நமது பணி விதிகள் சிக்கல் மிகுந்தவையென்றும், பணியை முறைப்படுத்துதல் பணியாளர்களின் தகுதி நிறைவை அறிவித்தல் போன்றவற்றில் கால நீட்டம் ஏற்படுவதற்கு இவ்விதிகளே அடிப்படைக் காரணமென்றும் இப்போது உணரப்பட்டு வருகின்றது. பணியாளர்க்கு இடர்ப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பணி விதிகளைத் திருத்தியமைப்பது குறித்தும் அரசு ஆய்வு செய்து வருகின்றது. பணியாளர்களின் திறனே நிர்வாகத்தின் வெற்றிக்கு அடிப்படை என்பதையுணர்ந்து, அரசு தனது நிதி

நிலை வரம்பிற்குள் பணியாளர்களிடையே மன நிறைவு உணர்ச்சியை வளர்க்க முயற்சி செய்யும். இதைக் கருத்திற்கொண்டே, பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இரகசியக் கோப்புகள் போன்ற சிக்கல்களை மிக விரைந்து ஆய அரசு உறுதி பூண்டுள்ளது.

12. பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாகவும், வேளாண்மை உற்பத்தி சுருங்கியுள்ளதாலும் விற்பனை வரி போன்ற முக்கியத் தலைப்புகளின்கீழ் மாநில வரவினங்கள் இயல்பாகவே குறைந்துள்ளன. அகவிலைப்படி வீதங்கள் குறித்து, மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் இடையில் சம நிலை நிலவவேண்டுமென்கிற தனது கொள்கைக்கிணங்க, மாநில அரசு நடப்பு ஆண்டில் கூடுதல் அகவிலைப்படி வீதங்களை இரண்டு தடவைகளில் உயர்த்தி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஓய்வுபெறும் மாநில அரசுப் பணியாளர்களது நிலைச் சம்பளம், தற்காலிகப் பணியாற்றுச் சம்பளம் இவற்றிற்கிடையே இதற்கு முன் வேறுபாடு காட்டியதுபோல் காட்டாமல், அவர்கள் இறுதி 36 திங்கள்களில் பெற்ற சராசரிச் சம்பள அடிப்படையில் ஓய்வுச் சம்பளத்தைக் கணக்கிட்டு அளிக்கும் வகையில், ஓய்வுக் கால நன்மைகளை அரசு விரிவுபடுத்தியுள்ளது. எனவே, இச்சட்ட மன்றத்தின் முன் விரைவில் அளிக்கப்படவிருக்கும் நடப்பு ஆண்டிற்குரிய வரவினத் திருத்த மதிப்பீடுகள் கணிசமான அளவுக்கு வரவினத்தில் துண்டு விழுவதை வெளிப்படுத்தும். இந்த நிதிப்பொறுப்புகளை எல்லாம் கருத்தில் கொண்டு, ஐந்தாம் நிதி ஆணைக் குழு அளிக்கவிருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் தான், மாநில அரசின் வரவின நிலைமையில் முன்னேற்றம் எதிர் பார்க்க முடியும்.

13. மாநிலப் பொருளாதாரத்திலும், வரவினங்களிலும் இப்போக்குகள் காணப்பட்டபோதிலும், 1968-69-க்குரிய ஆண்டுத் திட்டத்தில் எதிர்பார்த்தபடி வளர்ச்சி விரைவு தணியாமல் பார்த்துக்கொள்ள அரசு முயன்றுள்ளது. மாநில அரசின் வரவின வாயில்களை மதிப்பீடு செய்ததன் மேல், திட்ட ஆணைக் குழு நடப்பு ஆண்டிற்கு 66 கோடியே 35 லட்சம் ரூபாய் அளவிற்கு மட்டுமே முதலீடு செய்வதற்கு ஏற்பளித்தது. ஆயினும், அரசு ஏறக்குறைய 80 கோடி ரூபாயளவிற்கு முதலீடு செய்யத் திட்டமிட்டது. கிராம மின் வழங்குத் திட்டங்களை நிறைவேற்றும் விரைவு மேலும் உயர்ந்துள்ளதன் காரணமாக, அவற்றின்கீழ் ஏற்படக்கூடிய அதிகரித்த முதலீடுகள் நீங்கலாக, நாம் முதற்கண் வரையறுத்த திட்டம் குறைவின்றி நிறைவேற்றப்படுமென்பதை அறிய இம்மன்றம் களிப்படையுமென நம்புகின்றேன். அன்றியும், இப்போது தயாரிக்கப்பட்டு வரும் திருத்த மதிப்பீடுகள், சிறு பாசனம், பெரும் பாசனம் போன்ற ஏனைய தலைப்புக்களின்கீழும் திட்ட முதலீடுகள் ஓரளவு உயர்ந்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

14. 1969-70 முதற்கொண்டு புதிய நான்காம் திட்டம் செயல்பட வேண்டுமென்று திட்ட ஆணைக் குழு மேற்கொண்ட முடிவிற்





கிணங்க, மாநில அளவில் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு அரசு முற்பட்டது. பற்பல செயற்குழுக்களின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டும், பல வளர்ச்சித் தலைப்புக்களின் கீழ் ஏற்படக்கூடிய தேவைகளைத் தானே மதிப்பிட்ட பிறகும், அரசு 624 கோடி ரூபாய் அளவில் திட்டமொன்றைத் தயாரித்துத் திட்ட ஆணைக் குழுவின் இசைவிற்கு அனுப்பியது. மத்திய அரசின் உதவியை மாநிலங்களிடையே பகிர்ந்தளிப்பதற்கான அடிப்படை விதிகளைக் குறித்து தேசிய வளர்ச்சி மன்றம் மேற்கொண்ட முடிவையடுத்து, திட்ட ஆணைக் குழு நமது மாநில நான்காம் திட்டத்திற்குரிய மத்திய உதவி 201 கோடி ரூபாய் மட்டுமே யெனத் தெரிவித்துள்ளது. முதற்கண் நான்காம் திட்டத்திற்கு அளிப்பதாக உறுதியளித்திருந்த 250 கோடி ரூபாய் உதவித் தொகையைவிட இது மிகக் குறைந்துள்ளது. நமது மாநிலத்தின் திட்டத்திற்குக் கிடைக்கும் மத்திய உதவி இவ்வாறு பெருமளவிற்குக் குறைந்திருப்பதற்கான ஏனைய பல காரணங்களோடு, நபர் வாரி வருமானம் தேசியச் சராசரியை விடக் குறைந்துள்ளதாகத் தெரிகிற ஆறு மாநிலங்களுக்குத் தனியே மத்திய உதவியில் 10 சதவிகிதத்தை ஒதுக்கி வைத்திடல் வேண்டுமென்று தேசிய வளர்ச்சி மன்றம் எடுத்துள்ள முடிவும் ஒரு காரணமாகும். "பின் தங்கிய மாநிலங்களுக்கு" ஓரளவுக்குச் சிறப்பாக மத்திய உதவி அளிக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வதாயிருப்பினும், அத்தகைய பின் தங்கிய மாநிலங்களுக்கு இச் சிறப்பு உதவியை அளிப்பதால் இழக்க நேரிடும் தொகையை, எந்த மாநிலங்களில் நபர் வாரி வருவாய் தேசியச் சராசரிக்கு மேற்பட்டுள்ளதோ அம் மாநிலங்களிடையே நியாயமாகப் பகிர்ந்திட வேண்டுமென்பதே திட்ட ஆணைக் குழுவிடம் நாம் தெரிவித்துள்ள கோரிக்கையாகும். இக் கோரிக்கை முற்றிலும் நியாயமானதெனினும், திட்ட ஆணைக் குழு இதனை ஏற்கவில்லையென்பது வருத்தத்திற்குரியதாகும்: திட்ட ஆணைக் குழு வகுத்துள்ள புதிய கொள்கை (formula) தேசிய சராசரிக்குச் சற்றே மேற்பட்டுள்ள தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுகிறது. வறட்சி நிலை, கற்றவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பின்மை, மாநகரப் பகுதியின் தேவைகள்—ஆகியவை போன்று இந்த மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள முக்கியமான சிக்கல்களும் போதிய அளவில் நம் நாட்டத்தை ஈர்க்க வேண்டும். அண்மையில் மாநில அரசின் நான்காம் திட்டம் குறித்து திட்ட ஆணைக் குழுவுடன் நடத்திய விவாதங்களின்போது, மாநில அரசு எடுத்து விளக்கிய இக் காரணங்கள் ஆணைக் குழுவின் ஆதரவைப் பெற உதவியாய் இருக்குமென்றும், அதன் விளைவாக மாநில நான்காம் திட்டத்திற்குரிய மத்திய உதவி ஓரளவுக்காவது உயர்த்தப்படுமென்றும் மாநில அரசு எதிர்பார்க்கிறது.

15. இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன் தவணைத் தேதிகளை மாற்றியமைப்பதன் வாயிலாக, நான்காம் திட்டத்தில் ஓரளவுக்குக் கடன் சுமைத் தணிப்பு அளிப்பது அவசியமென்று மாநில அரசு திட்ட ஆணைக் குழுவை வேண்டியுள்ளது. இது

போன்ற வேண்டுகோள்களை மற்றும் சில மாநில அரசுகள் கூட விடுத்துள்ளனவென்றும், மாநிலங்களின் கடன் தலைமைத் தேதிகளை மாற்றியமைக்கும் இச்சிக்கல் முழுவதும் இப்போது இந்திய அரசின் நாட்டத்தில் உள்ளதென்றும் நாங்கள் அறிகிறோம். இந்த முக்கிய சிக்கல்களுக்குத் தீர்வு காண்கிற வரையில், நமது மாநில நான்காம் திட்டத்தின் அளவு பற்றிய முடிவை ஒத்திப்போட வேண்டுமென்ற கருத்தை திட்ட ஆணைக் குழு ஒப்புக் கொண்டுள்ளது.

16. மாநில நான்காம் திட்டத்தின் அளவு பற்றி இவ்வாறு உறுதியற்ற நிலை நீடித்த போதிலும், சேலம் இரும்புக் கனிகளை வெட்டியெடுப்பதற்கு வகை செய்வது பற்றித் திட்ட ஆணைக் குழு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பது களிபேருவகையளிப்பதாகும். சேலம் இரும்புக் கனிகளை வெட்டியெடுப்பதற்கு மாநில அரசு தனது நான்காம் திட்டத்தில் வகை செய்திருப்பது கஞ்சமலை இரும்புக் கனிகளையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் அடிப்படையாகக் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றை நிறுவ வேண்டுவது குறித்து நமது நெடுநாளைய வேட்கை நிறைவேறுவதன் முதல் கட்டத்தைக் குறிப்பதாகும். சென்னை மாநகரத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தேவைகளுக்கு நிலையாகத் தீர்வு காண்பதற்கும், இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாய் இருப்பதற்கும் வகை செய்கிற வீராணம் குடி நீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாநில நான்காம் திட்டத்தில் முழு அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை அறியவும் இம்மாமன்றம் களிப்படையுமென்று நம்புகின்றேன்.

17. திட்டத்தின்பாற்படாத கணக்கில் துண்டு விழாது என்ற துணிவில் மாநில அரசு தனது நான்காம் திட்டத்தை வகுத்துள்ளது. இப்போது செயல்பட்டு வரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழு நமது நிதிப் பொறுப்புக்களையெல்லாம் கருத்திற் கொண்டு நமக்குப் போதிய அளவிற்கு நிதி வாயில்கள் கிட்டுவதற்கு வகை செய்தால் மட்டுமே இந்தத்துணிவு ஈடேற முடியும். ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையின்படி, நமக்குக் கூடுதலாக நிதி வாயில்கள் எவையும் கிட்டவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். அரசியலமைப்பின் 275-ம் பிரிவின்கீழ் வழங்கப்படும் மானிய உதவியும் நடப்பு ஆண்டில் உள்ள அளவிலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், கடந்த மூன்று ஆண்டுத் திட்டங்களின் பகுதியாக நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகளின் வாயிலாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவினங்களின்கீழ் 16 கோடி ரூபாய் அளவிற்கு நாம் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இம்மன்றத்தின் முன் விரைவில் அளிக்கப்படவிருக்கும் 1969–70-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், திட்டத்தின்பாற்படாத கணக்கில் கணிசமான அளவிற்குத் துண்டு விழுவதைக் காட்டும். நிதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் 1969–70-ம் ஆண்டிலேயே மாற்றப்படுகிற நிதி வாயில்கள் குறித்துச் சரிக்கட்டுதல்கள் செய்யப்படுமென்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. 1969 ஜூலைத் திங்களில்





குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் திட்டத்தின் பாற்படாத கணக்கில் விழும் துண்டு முற்றிலும் ஈடு செய்யப்படுமென்று நாம் நம்புகின்றோம். நமது மாநிலம் கணிசமான அளவிற்குக் கூடுதல் வரி திரட்டுவதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் கண்ணுற்று, தங்கள் நிதி வசதிகளை மொத்தத்தில் நாட்டமுடன் பேணி வந்துள்ள நமது மாநிலம் போன்ற மாநிலங்களுக்கு ஓரளவிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நிதி ஆணைக் குழு தனது முடிவைத் தயாரிக்கும் என்பதில் நமக்கு ஐயமில்லை. வருமான வரி, மத்திய ஆயத் தீர்வைகள் ஆகியவற்றில் நமது மாநிலத்திற்கு மேலும் அதிகப் பங்கு அளித்திட வேண்டுமென்று நிதி ஆணைக் குழுவிடம் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இருபது ஆண்டுக் கூட்டாட்சியின் வாயிலாக நமக்குக் கிடைத்துள்ள நேரறிவின் அடிப்படையில், அரசியலமைப்பின் நிதிபற்றிய விதித்துறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையைக் குறித்தும் நிதி ஆணைக் குழுவிடம் வற்புறுத்தியுள்ளோம். ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளின் நிதி உறவுகள் மன நிறைவு அளிக்கத்தக்க வகையிலும், மேலும் நியாயமான அடிப்படையிலும் திறந்தெரிந்து வகுக்கப்படுமென்று நாங்கள் நம்புகின்றோம்.

18. இக்கூட்டத் தொடரில் சட்டமியற்றுகின்ற பணி அதிக அளவில் இல்லை. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 30-ம் இனத்தின்கீழ் இரத்தினக் கற்களுக்கு விதிக்கப்படும் ஒரு முனை வரி விதம் 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ம் நாள் முதல் 4 சத விதத்திலிருந்து 7 சத விதமாக உயர்த்தப்பட்டது. அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் 8-வது இனம் (பட்டுத் துணிகள்) 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ம் நாள் முதல் நீக்கப்பட்டுள்ளது. இதனால் பட்டுத் துணிகள் அந்நாள் முதல் பல முனை விற்பனை வரிக்கு உட்பட்டவையாகின்றன. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிட்டு இந்த மாறுதல்கள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் படிக்கான நிகர மொத்த வியாபாரத் தொகையிலும், 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிக்குட்பட்ட மொத்த வியாபாரத் தொகையிலும் ஆயத் தீர்வை அடங்கும் வகையிலும், அந்த அடிப்படையில் ஏற்கெனவே விதித்துத் திரட்டப்படும் வரிக்குச் செல்திறன் அளிக்கும் வகையிலும், 1968-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டம் 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்று சாற்றப்பட்டது. மேற்சொன்ன அறிவிப்புகளுக்கும், அவசரச் சட்டத்திற்கும் பதிலாக, சட்ட மன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரில் ஆய்வு செய்யப்படுவதற்காக சட்ட வரைவுகள் முன்னுரைக்கப்படும்.

19. பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் வீட்டுவரி தண்டல் முறையில் மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்பது சிறிது காலமாகவே அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளது. இதற்கு முன் இவ்வரி இரண்டு தவணைகளில் திரட்டப்பட்டு வந்தது. பின்னர், ஊராட்சிகளில் நிலவரியோடு கூட இவ்வரியை ஒரே தவணையிலும், பேரூராட்சிகளில் இரு தவணைகளிலும் திரட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அரசின் இம் முடிவினைச் செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கான சட்டவரைவு ஒன்று தற்போதைய கூட்டத் தொடரில் சட்ட மன்றத்தில் முன்னுரைக்கப்படும்.

20. இவை கூறி, இச்சட்ட மன்றத்தின் மங்காத புகழை நிலை நாட்டும் வகையில், இங்கு நடைபெறும் விவாதங்கள் நடுநிலை உணர்வோடும் அமைதி செறிந்த கண்ணியத்துடன் நடைபெறு மென்கிற ஆழ்ந்த நம்பிக்கையுடன் எனது உரையை முடிக்கின்றேன்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1969 சனவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Publication of text books*

* 11 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that English text book for Standard VIII in our State has been nationalised;

(*b*) whether it is a fact that these books were not made available in North Arcot even seventy days after the reopening of schools in 1967; and

(*c*) if so, the reasons therefor ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : (அ) 8-வது வகுப்புக்குரிய ஆங்கில பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிடும் பொறுப்பை இன்னும் மேற்கொள்ளவில்லை. சென்ற ஆண்டு இப் புத்தகங்களைக் கல்வித்துறை, தனியார் துறையில் நூல் வெளியிடுவோர் ஒருவரின் மூலம் அச்சிட்டு வெளியிட்டது.

(இ) வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு இப் புத்தகங்களை வழங்குவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது.

(உ) 8-ஆம் வகுப்பு ஆங்கிலப் பாடத்திற்கு அவ்வாண்டில் திருத்த பாடத் திட்டம் செயல்படுத்தியதால், அதன் விளைவாய் அப் புத்தகத்திற்கான கையெழுத்துப் படிகளைத் தயார் செய்வதில் கால தாமதம் ஏற்பட்டதால் இவ்வாறு நேர்ந்தது.

THIRU K. VINAYAKAM : Since it involved a delay of 70 days for the supply of these books to the classes concerned, what alternative arrangements have been made for the students to receive teaching in the subjects which was lost to them by this kind of delay?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று 70 நாட்கள் காலத் தாழ்வு ஏற்படவில்லை. 8-வது பாட புத்தகம் மட்டும் தனியார் துறையிலே அச்சடிக்கக் கொடுக்கப்பட்டிருந்ததாலும், 'சிலபஸ்' பூராவும் பெங்களூரிலுள்ள ரீஜனல் இன்ஸ்டிட்யூட் ஆப் இங்கிலீஷ் இடமிருந்து வரவழைக்கப்பட வேண்டியிருந்ததாலும், வந்த பிறகு அதில் சேர்க்கப்படக்கூடிய பாடங்கள் என்ன என்ன என்று பார்த்து அனுமதி கொடுக்க வேண்டியிருந்தது. 8—5—1967-ல் அனுமதி பெறுவதற்கு வந்தது. சிலபல மாற்றங்களைச் செய்து

15—7—1967-ல் அனுமதி வழங்கப்பட்டது. எல்லாப் புத்தகங்களும் 16—8—1967-க்குள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவு காலதாழ்வு இந்த ஆண்டு ஏற்படாமல் புததங்கள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பெ. மலேச்சாமி:** தலைவர் அவர்களே, அரசாங்கமே நூலை வெளியிடுவதன் மூலம் அரசு குறிப்பிடுகின்ற விலைக்கும் தனியார் குறிப்பிடுகின்ற விலைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ்ப் பாட புத்தகங்கள் பொறுத்தவரை 1-வது வகுப்பில இருந்து 8-வது வகுப்பு வரையிலும் அச்சடித்துக் கொடுக்கின்ற முழுப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆங்கிலப் பாட புததகங்களைப் பொறுத்தவரை, மூன்றாவது வகுப்புக்கு இப்பொழுது அச்சடிக்கப்படவில்லை. ஆனால் 4-வது முதல் 7-வது வகுப்புவரை அச்சடிக்கப்படுகிறது. அரசாங்க அச்சகத்தில் வேலை நெருக்கடி காரணமாக அச்சடிக்கப்படவில்லை. தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் வெளியிட்டால் எந்த அளவிற்கு வெளியிடமுடியுமோ அந்த அளவிலே டெண்டர்கள் வாங்கி வெளியிடப்படுகின்றன. அரசாங்க அச்சகத்திற்கு மேலும் இயந்திரங்கள் வரவழைக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டவுடன், 8, 9, 10 வகுப்புகளுக்கும் ஆங்கில தமிழ் பாட புத்தகங்கள் இரண்டையும் வெளியிடுகின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இப்பொழுது அரசாங்க அச்சகத்தில் வேலை நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால்தான் தனியார் துறைக்கு விடப்பட்டு முடிக்க வேண்டியிருக்கிறது. விலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற புத்தகங்கள் மிக மிகக் குறைந்த விலைக்கு 35 காசுக்கு 1-வது வகுப்பு புத்தகங்கள் தரப்படுகின்றன. அதிகப்படி விலை 80 காசு, 85 காசு என்றுதான் இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கில பாட புத்தகங்களில் பிழைகள் நிறைய இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இனிமேலாவது அப்படி ஏற்படாமல் இருக்க, முன் எச்சரிக்கையாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பிழைகள் இருக்கக்கூடிய புத்தகங்கள் ஒரு பகுதியாகவும், பிழைகள் இல்லாமல் இருக்கக்கூடிய புத்தகங்கள் ஒரு பகுதியாகவும் இருக்கின்றன. அவ்விரு பகுதிகளும் இரண்டு அச்சகத்தில் கொடுத்திருப்பதினால் அவ்விதம் ஏற்படுகிறது. ஒரு பகுதியில் ஒன்று இரண்டு பிழைகள்தான் இருக்கின்றன. இன்னொரு பகுதியில் 7, 8 பிழைகள் இருக்கின்றன. இந்தப் பிழைகளைப் பற்றி எல்லாப் பள்ளிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இனிமேல் அப்படி ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.



**திரு. கே. போஜன்:** இந்தப் பாட புததகங்களை தனியார்
துறையிலே விநியோகிக்காமல் பள்ளிகள் மூலமாக மாணவர்
களுக்கு விநியோகிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
எப்படி புத்தகங்களை வெளியிட வேண்டுமென்று அவர்கள் சிலபல
ஏற்பாடுகளை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கும் எவ்
வளவு தேவை என்று ஆர்டர் கேட்டு வரவழைத்து, கல்வித்துறை
யால் விநியோகிக்கபபடுவது என்பது இயலாத ஒன்று. முன்பு
ஜில்லாவிற்கு ஒருவராக இருந்தது. இப்பொழுது இடண்டாக
செய்து புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

Thiru K. VINAYAKAM: Sir, with reference to the nationa-
lisation of these text books for the use of our schools, it is said
that when the Government undertake the printing of these books.
lot of mistakes—not only spelling mistakes but also factual mis-
takes—creep into these text books. So, will the Government
resist this temptation of nationalising the text-books and leave it
to the private authors, private publishers and others so that they
may carry on this printing of text-books and the Government
will not be placed in the predicament of awarding prizes for those
who detect mistakes in the text-books published by them?

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று புத்தகங்களை தேசிய
மயம் ஆக்குவதன் காரணமாக அப்படிப் பிழைகள் ஏற்படுகின்றன
என்று அவர்களாகவே கற்பித்துக் கொண்டு அந்த அளவிலே
நின்று, ஆகவே அது வேண்டாம் தனியார் துறைக்கு விடலாம்
என்று பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். புத்தகங்களிலே
பிழைகள் என்பது சாதாரணமாக எல்லா நூல்களிலும் ஏற்படுவ
துண்டு. தனியார் துறையில் அச்சிடப்படுகின்ற புத்தகங்களிலும்
பிழைகள் ஏற்படுகின்றன. புத்தகங்கள் தனியார் துறையிலே
அச்சடிக்கப்பட்டு அவைகள் நமக்கு வந்துவிடுவதன் காரணமாக
பிழைகள் உள்ள புத்தகங்களை நாம் தள்ளிவிடுகிறோம். தேசிய
மயமாக்குவதனால் பிழைகள் எல்லாப் புத்தகங்களிலும் வருகின்றன
என்று சொல்ல முடியாது. எந்தப் புத்தகத்தைப் பார்த்தாலும்
தெரியும். 'எராட்டா' என்ற முறையில் அனுபந்தங்கள் ஒன்றி
ரண்டு பக்கங்கள் இருக்கும். கூடுமானவரை அவைகள் தவிர்க்கப்
படவேண்டுமென்று கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்து ஒரு
தடவை, இரண்டு தடவை பார்த்து, பிழைகள் ஏற்படாமல் இருப்
பதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

## நகரசபைப் பள்ளிகள்

* 12 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரசபைப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்த உத்தேசித்துள்ளதா?

(இ) அவ்வாறாயின் எப்பொழுது அதை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது?

(உ) நகரசபையின் மூலம் தமிழ் நாட்டில் நடைபெறும் ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் முறையே எத்தனை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) உயர்நிலைப் பள்ளிகள் .. 126

ஆரம்பப்பள்ளிகள் .. 1,359

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளை நடத்துகின்ற நகராட்சிகள், ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளை நடத்துகின்ற நகராட்சி பள்ளிகளையாவது அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை. நகராட்சிகள் நிதிநிலை சரி இல்லை என்ற காரணத்தினாலும் வேறு பல செலவினங்கள் வளர்ந்திருக்கின்ற காரணத்தினாலும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். நகராட்சிகள் நடத்தக்கூடிய பள்ளிகள் 126 இருக்கின்றன. இப்போது அந்த 126 பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு நிதி நிலைமை இடம் கொடுக்குமா என்று யோசிக்க வேண்டும். அரசாங்கமும் நகராட்சிகளும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளலாம் என்ற அளவில் முன்பு 50 சத விகிதமாக இருந்த மானியம் 66-2/3 சத விகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் கொஞ்சம் உயர்த்தலாமா என்று யோசிப்பதாக நான் சொல்லியிருக்கிறேன். எல்லாவற்றையுமே அரசாங்கமே ஏற்றுக் கொண்டால் வேறு எந்த புதுப் பள்ளிகளையும் ஏற்படுத்த முடியாது என்று, மெல்ல மெல்ல அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அளவில்தான் இந்த ஆண்டு ஓரளவு மானியத்தை உயர்த்தியிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், தனியார் துறையிலே நடைபெறக்கூடிய பாடசாலைகளுக்கு எந்த அளவுக்கு சர்க்கார் மானியம் கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நகரசபைகளால் நடைபெறக்கூடிய பாடசாலைகளுக்கு கொடுக்கப்படுவது இல்லை. ஆகவே, தனியார் துறையிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு எந்த அளவுக்கு மானியம் கொடுக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு நகரசபைகளால் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கும் உடனடியாக மானியம் கொடுக்கப்படுமா, அல்லது சர்க்காரே ஏற்று நடத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு, நான் ஏற்கனவே சொல்லியபடி வேறுவித வருமானம் கிடையாது.



ஆனால், நகராட்சி மன்றங்களுக்கு கல்வி வரி, வேறு பல வரிகளின் மூலமாக வருமானம் வருகின்றது. அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களிலே இதுவும் ஒன்றாக, தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, தனியார் துறைப் பள்ளிகளை, நகராட்சி நடத்தும் பள்ளிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அந்த எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான் நகராட்சியும் பாதி ஏற்கட்டும், அரசாங்கமும் பாதி ஏற்கட்டும் என்ற அளவில் 50-க்கு 50 என்று மானியம் வழங்கப்படுகிறது. அவை சரியாக நடைபெற வேண்டுமே என்பதைக் கருதி 66-2/3 சதவிகிதம் என்ற அளவுக்கு அரசாங்கம் மானியத்தை உயர்த்தியிருக்கிறது. தனியார் பள்ளிகளுக்கு 100-க்கு 100-ம் அரசாங்கமே அளிக்கிறது. இதை மேலும், மேலும் வளர்ப்பதைவிட அரசாங்கமே ஏற்றுக்கொள்வதுதான் அவர்களுக்கும் சிரமமில்லாமல் இருக்கும், அரசாங்கத்திற்கும் எளிதாக இருக்கும். அப்பொழுதுதான் எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கமே எடுக்கலாம் என்கிற நிலை ஏற்படும். இப்பொழுதிருக்கிற நிலையில் அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிற உத்தேசம் இல்லை. இப்பொழுது மானியத்தை மட்டும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி:** ஐயா, புதிதாக நகரசபைகள் பள்ளிகளை ஏற்று நடத்த முன் வந்தால் அவைகளுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவே, அப்படி கொடுக்காமல், ஏற்கனவே உள்ள பள்ளிகளுக்கு மட்டும் இந்த சலுகைகளைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எந்த நகராட்சி மன்றமும் புதிதாக பள்ளிகள் ஏற்படுத்த முன்வரவில்லை. பெரும்பாலும் அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிகளாகத்தான் அங்கங்கே இருக்கின்றன. ஏற்கனவே, நகராட்சிகள் நடத்துகின்ற பள்ளிகள் 126 தான் என்று சொன்னேன். அவைகளுக்கு அளிக்கின்ற மானியத்தை ஓரளவுக்கு அதிகப்படுத்த இயலுமா என்பதுபற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சண்முகம்:** பள்ளிகள் எல்லாம் பல துறைகளின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளை எல்லாம் மாநில அளவில் ஒரே துறையின் கீழ் அரசு தன்னுடைய பார்வையில் வைத்து நடத்தும் திட்டம் அரசாங்கத்தின் கவனத்திலே இருந்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போன்ற அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை. இதிலே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, கல்வி எல்லோருக்கும் பரவுதல் வேண்டும். எப்படிப்பட்ட கல்வியைத் தரவேண்டும் என்பதற்காக நாம் நியதியை ஏற்படுத்துகிறோம். பள்ளிகளை எப்படி ஏற்படுத்த வேண்டுமென்பதிலே, எப்படிப் பாதுகாக்கவேண்டுமென்பதிலே, எப்படிக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்பதிலே, எப்படிப் புத்தகம் வெளியிட

வேண்டுமென்பதிலே, எப்படிச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதிலே, சொல்லிக் கொடுக்கவேண்டிய ஆசிரியர்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டுமென்பதிலே அரசாங்கம் கட்டுதிட்டத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. அதை ஒரே துறையின் கீழ் கொண்டுவர வேண்டுமானால் அரசாங்கத் துறையின் கீழ் வருமே தவிர, வேறு எந்தத் துறைக்கும் போகாது. அப்படி வருவதின் காரணமாக அரசாங்கத்திற்கு நஷ்டமே தவிர, இலாபம் இல்லை. தனியார் துறையில் கட்டிடங்களுக்கு, நிலத்திற்கு, ரூ. 5 இலட்சம், ரூ. 2 இலட்சம், ரூ. 1 இலட்சம் என்று கொடுக்கிறார்கள். அதை கல்வித்துறை வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்ற வகைகளாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், தனியார் துறையிலே சில பல தவறுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு வழி காணுகின்ற வகையிலேதான் அதற்கான சட்டத்தைத் திருத்துகின்ற முயற்சியிலே, அதை எப்படித் திருத்தலாம் என்பதையும், அவர்களை எப்படிக் கட்டுப்படுத்தி வரலாம், அவர்கள் தங்கள் இச்சைப்படி நடக்காமலிருக்க—என்பதையும் கவனித்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக சிலபல திருத்தங்களைச் செய்துவிட்டால் அரசாங்கத்தின் கீழ் பள்ளிகள் நடைபெறும் சூழ் நிலையை ஏற்படுத்தி விடலாம். ஆகவே, பள்ளிகள் எல்லாம் ஒரே துறையின் கீழ் வர வேண்டுமென்றால், அரசாங்கத் துறைக்குத்தான் வர வேண்டும். அரசாங்கமும், 'நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்' என்று சொன்னால், 'எங்களுடைய கட்டிடங்களை எல்லாம் விட்டுவிடுங்கள், அதை நாங்கள் கோடௌன்களாகப் பயன்படுத்துகிறோம்' என்று தனியார் துறையினர் கூறுகிறார்கள். அரக்கோணத்தில்கூட, அரசாங்கம் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தபோது பள்ளிக் கட்டிடத்தைத் தராமல் அவர்களே எடுத்துக்கொண்டார்கள். ஆகவே, தனியார் துறையினரின் வசதியையும் பயன்படுத்தி நம்முடைய நோக்கமும் குறைப்படாமல், கல்வியினுடைய தரமும் குறையாமல் பார்த்துக் கொள்கின்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக நகராட்சிகள் நடத்தும் 126 பள்ளிகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொள்ளலாம் என்பதைப் பிரகடனப்படுத்துவதுடன் ஆண்டு ஒன்றுக்கு இத்தனை உயர்நிலைப்பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்கிற நிலையைப்பற்றி அரசு சிந்திக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல் அந்த 126 பள்ளிகளையும் பார்த்து, மிகக் குறைந்த வருமானத்தை வைத்து, நஷ்டத்திலே வேலை செய்கின்ற நகராட்சி மன்றங்களைப் பார்த்து, அவர்களால் நடத்தவே இயலாது என்பதைப் பார்க்கின்றபோது, அவர் கருத்தை மனதிலே கொண்டு, எடுத்துக் கொள்ளலாமா என்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.





*Research cell for building materials and designs*

*13 Q.—Thiru S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any research cell is proposed to be started in respect of building materials and its design for bringing about economy in the cost of construction, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) அடையாற்றில் பொதுப் பணித்துறை இணைந்த பொறியியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவும் செயற்குறிப்புக்கு அரசாங்கம் ஒப்பளித்துள்ளது.

(இ) இது குறித்த விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். நாகசுந்தரம்: ஐயா, சமீபகாலத்தில் ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த செலவில், குறுகிய காலத்தில் வீடுகள் கட்டிய தாக சொல்லப்படுகிறதே, அவற்றை இந்த அரசு பரிசீலித்து, ஆதாயமாக இருந்தால் நமது அரசும் அந்த முறையைக் கடைப் பிடிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதை இந்த அரசு கவனித்து வருகிறது. ஆனால், அப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு, அவை கள் நிரந்தரமாக எத்தனை நாளைக்கு இருக்கின்றன என்று முடிவு தெரிந்த பிறகுதான், அதைக் கடைப்பிடிப்பதா, அந்த முறையைப் பின்பற்றலாமா என்கிற முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டியிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஒரு பக்கத்திலே, சிக்கனமாகக் கட்டவேண்டுமென்பது வரவேற்கப்பட வேண்டியதுதான். அதே நேரத்தில் இப்பொழுது இருக்கிற 'ஷெட்யூல்டு ரேட்ஸ்' மிகவும் குறைவாக இருக்கின்றன. ரூ. 4, 5 கூலி வாங்குகிறார்கள் என்றால், அதிலே ரூ. 1¾, ரூ. 2 என்று காண்ட்ராக்ட் விடுவதாலே, 1-க்கு 4 பங்கு மணல் கலப்பதற்குப் பதிலாக 10 பங்கு போட்டு கட்டப்படுகிறது. அந்தக் கட்டடம் அடுத்த ஆண்டே விழுந்து விடுகிறது என்பதற்கு இதுதான் காரணம் என்று அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, அந்த காண்ட்ராக்ட் ரேட்டைக் குறைக்காத அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேள்வி, இணைந்த பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தைப் பற்றியது. அதில் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, சமீபத்திலே, நகரிலே தீப் பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டபொழுது அந்த வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்ற முறையிலே இந்த ஆராய்ச்சி கழகத்தினுடைய ஆலோசனை பெறப்பட்டதா? அரசாங்கம் அதைச் செய்ததா? இல்லையென்றால் ஏன் செய்யவில்லை?

[1969 சனவரி 28

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது, பொதுப்பணித் துறையில் கட்டுமானச் செலவைச் சிக்கனப்படுத்தும் பொருட்டு, கட்டடப் பொருள்கள், அமைப்பு முறை ஆகியவை குறித்து, ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்துவது பற்றிய கேள்வி. இந்த கேள்வியில் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வி இடம் பெறவில்லை.

*Quarters for Government servants*

* 14 *Q.*—THIRU T. MARTIN :
THIRU K. VINAYAYAKAM :
THIRU K. CHEEMAICHAMY : } **Will the Hon. the**
Minister for Public Works be **pleased to state—**

(*a*) whether the Government have evolved any new formula in regard to allotment of quarters for Government servants in Government Estate and Todhunter Nagar, Saidapet ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the number of persons in the waiting list ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திருத்தப்பட்டுள்ள நடைமுறையின்படி, மலைச்சாலை அரசாங்க மாளிகையில் உள்ள அரசாங்கக் குடியிருப்புகளிலும் சைதாப்பேட்டை டாட்ஹண்டர் நகர் குடியிருப்புகளிலும் காலி ஏற்படுமானால் அது சென்னையிலுள்ள மாநில அரசாங்க அலுவலகங்கள் அனைத்திற்கும் அறிவிக்கப்படும். திங்களுக்கு ஒரு முறை அல்லது காலி இடங்கள் ஏற்படுகையில் இச் சுற்றறிக்கைகள் அனுப்பப்படும். இந்த அறிக்கைகளைத் தங்கள் அலுவலகங்களில் தகுந்த இடத்தில் எல்லோருக்கும் தெரியும்படியாக ஒட்டி வைக்குமாறு துறைத் தலைவர்களும், தலைமை செயலகத் துறைகளும் கேட்கப்பட்டுள்ளனர். மேலும் தங்கள் அலுவலகங்களில் இந்த அறிக்கை கிடைத்த மூன்று நாட்களுக்குள் அதை நகர எல்லைக்குள் தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள சார்நிலை அலுவலகங்களுக்கும் அனுப்புமாறு துறைத் தலைவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அறிக்கை குறித்துக் கிடைத்த மனுக்களை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுத் தேதிக்குப் பிறகு மூன்று நாட்களுக்குள் அரசாங்கப் பொதுப்பணித்துறைக்கு அனுப்புமாறும் துறைத் தலைவர்களையும், தலைமைச் செயலகத் துறைகளையும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வீடு ஒதுக்கப்பெற்றவர்கள் வீடு காலியான நாளிலிருந்து அதற்கான வாடகையைச் செலுத்த வேண்டும். தகுதியுள்ளவரெனத் தான் கருதுகிற மனுதாருக்கே வீடுகள் ஒதுக்கும் உரிமையை அரசாங்கம் தன்னிடமே வைத்துக் கொண்டுள்ளது.

(உ) வீடுகள் ஒதுக்கப்பெறுவோர் பட்டியலில் 2142 பேர் இடம் பெற்றுள்ளனர்.



1969 சனவரி 28]

THIRU T. MARTIN : Deputy Speaker, Sir, may I request the Hon. Minister to state who is the officer who is actually allotting these houses to Government servants?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்த வீடுகளை ஏற்கனவே எந்த அலுவலகத்தில் இருக்கிற அதிகாரிகள் ஒதுக்கி வந்தார் களோ அதே பொதுப்பணித் துறையிலுள்ள அதிகாரிகளால்தான் இப்பொழுதும் இந்த வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. கே. விநயகம்:** இந்த வீடுகளை ஒதுக்கித் தருவதிலே பல அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தாங்கள் பல ஆண்டுகளாக முயற்சித்தும் கூட, தங்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லை என்று பல புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? வீடுகள் நியாயமான முறையில் ஒதுக்கப்படுவதில்லை, தெரிந்தவர் களுக்குத்தான் விளம்பரப்படுத்தி அந்த வீடுகளைக் கொடுத்துவிடு கிறார்கள் என்று பொதுவாக புகார்கள் இருந்துகொண்டிருக் கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதை உறுப்பினர்கள், 'புகார்' என்று குறிப்பிட்டார்கள். அது புகார்தான். அப்படிப் பட்ட புகார்கள் கூட வராமல் இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் புதிய திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1954-ல், 'வீடு வேண்டும்' என்று ஒருவர் விண்ணப்பித்திருந்தால் இப்பொழுது அவர்களுக்கு 'ஸீனியாரிடி' பிரகாரம் அந்த வீட்டைக் கொடுப்பதற்கு ஒதுக்கிவிட்டால், அவர் வேறு வீடு கட்டிக்கொண்டு அதில் குடியேறியிருக்கலாம், அல்லது வேறு ஊருக்கு வேலை மாற்றிப் போயிருக்கக் கூடும். ஸீனியாரிடி பிரகாரம ஒதுக்கினால், இப்பொழுது அவருக்கு வீடு வேண்டாம் என்று பதில் வருகிறது. இப்பொழுது புதிய திட்டத் தின்படி ஒவ்வொரு முறையும் வீடு காலியாகும்பொழுது, வீடு காலியாகியிருக்கிறது, தேவைப்படுகிறவர்கள் புதுப்பித்துக் கொள் ளலாம் என்று அறிக்கை வெளியிடப்படுகிறது. அப்படிப் புதுப் பித்துக் கொள்பவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்கப்படு கிறது. அப்படி யாரும் புதுப்பித்துக் கொள்ளாமல் இருந்தால் தான், மற்றவர்களுக்கு அந்த வீடு ஒதுக்கப்படுகிறது.

**திரு. ஆர். கருப்பையா:** அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் பற்றாக்குறை இருப்பதினால், புதிய குடியிருப்புகள் அமைக்கக் கூடிய திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வீடுகள் பற்றாக்குறை இருப்பது போலவே, அரசாங்கத்திற்கு பணப் பற்றாக்குறையும் இருக்கிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** சொந்தமாக வீடுகள் வைத்துக் கொண்டிருக்கிற சில சர்க்கார் அதிகாரிகள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருப்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இனிமேல் உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால், கவனிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி**: அரசாங்க மாளிகையில் முன்னாள் சட்ட மன்ற, மேலவை உறுப்பினர்கள் எத்தனை பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இந்தக் கேள்வியில் இது இடம் பெறவில்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்**: இந்தக் குடியிருப்பு வைத்துக் கொண்டிருப்பவர்கள் பட்டியலில் அரிசனங்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அரிசனங்களுக்கும் இந்த வீடுகள் தரப்பட்டிருக்கின்றன.

## ரூபாய்க்குப் படி அரிசி விநியோகத் திட்டம்

*15 **வினா.—திரு. நா. காசிராமன்**: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டு அதாவது 1967–68-ல் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விநியோகம் செய்ததன் பொருட்டு தமிழக அரசு எவ்வளவு **ரூபாய் உதவிப் பணமாக** (Subsidy) செலவு செய்துள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: 1967–68 ஆம் ஆண்டில் படி அரிசி திட்டத்தின் கீழ் இவ்வரசு 2.90 கோடி ரூபாய் மான்யச் செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

**திரு. இல. பலராமன்**: இந்த இரண்டு நகரங்களுக்கும், கோவை, சென்னை நகரங்களுக்கு மட்டும் ரூ. 2 கோடி 90 லட்சம் செலவழிப்பதைவிட, பரவலாக பொருளாதாரம் வளர, மற்ற நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப் படுமா? ஏதோ இந்தத் திட்டம் குறிப்பிட்ட நகரங்களுக்கு மட்டும் இருக்கிறது, மற்றவர்களை ஏமாற்றுவதாக இந்த அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: வாய்ப்பு இருக்குமானால் அரசாங்கம் எல்லா நகரங்களுக்கும் விஸ்தரிக்கலாம். கனம் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அரசாங்கம் மக்களை ஏமாற்றுவதற்காக இருக்கவில்லை, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, அவர்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் வந்திருக்கிறது. இரண்டு நகரங்களுக்கு என்று சொல்வது சரியானது அல்ல. சென்னை நகரம் என்பது எல்லோருக்கும் தலைநகரம், 20 லட்சம் மக்கள் இருக்கிற இடம். கோவை ஒரு முக்கிய நகரமாக இருக்கிற தொழிலாளிகள் நிறைந்த நகரம். ஏற்கனவே இரண்டு நகரங்களிலும்தான் சட்டபூர்வமான ரேஷன் முறை முன்னாள் இருந்த காங்கிரஸ் அமைச்சர்களால் அடையாளம் காட்டி மேற்கொள்ளப்பட்டது. கோவை நகரத்தில் 8 லட்சம் மக்கள் வாழ்



கிறார்கள். அதோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் 43 புறநகர்ங்களுக்கு தாம்பரம் முதல் எண்ணூர் வரையில் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால் 35 லட்சம், 40 லட்சம் மக்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கும் மக்களில் 10-ல் ஒரு மடங்கு மக்களுக்கு இந்த மலிவு விலையில் அரிசி போடுகிற திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் திரும்பத் திரும்ப இந்த மன்றத்திலே விளக்கியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை மேலும் மேலும் விஸ்தரித்து அமுல்படுத்தவேண்டு மென்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய ஆசை. திரும்பத் திரும்ப இந்த மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு அம்சங்கள் அரசாங்கத்திற்கு முக்கியமானது. ஒன்று, உணவு தானியங்கள் கையிருப்பு கொள்முதல் நமக்கு வேண்டும். இரண்டாவது, அதற்கு வேண்டிய நிதி ஆதாரம் வேண்டும். நிதி ஆதாரம் கூட ரூ. 6 கோடி, ரூ. 7 கோடி என்று சொன்னார்கள். கணக்கு முடிந்து வந்துவிட்டது. முன்பே பல முறை மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ரூ. 8 கோடி, 10 கோடி என்பதெல்லாம் இல்லை. கணக்கு கட்டியதற்குப் பிறகு ரூ. 2 கோடி 90 இலட்சம், இந்த நிலைமை தான் இப்பொழுது இருக்கிறது. உணவு தானிய கையிருப்பு என்று சொல்கிற நேரத்தில் 2 லட்சம் டன், 4 லட்சம் டன் கையிருப்பு இருக்கிறது. ஏன் மேலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கக் கூடாது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இரண்டாவது ரக அரிசி தான் இந்த மலிவு விலையில் கொடுக்கப் படுகிறது. இந்த அம்சங்களையெல்லாம் வைத்து யோசிக்க வேண்டியிருக்கிறது. இன்றைய நிலை மலிவு விலையில் கொடுப்பது மட்டுமில்லை. உணவு தானியத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது ஒரு பற்ற நிலை ஏற்பட்டிருப்பதினால், அதை சரியாக விநியோகிப்பதுதான் இப்பொழுது நம் முன்னால் இருக்கிற பிரச்னை.

**திரு. க. ர. நல்லசிவன்**: இந்தத் திட்டமானது பத்தில் ஒருவருக்குத் தான் பலன் அளிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி' என்று கூறப்பட்டிருப்பதுபோல், எல்லோருக்கும் சமமாக பலன் அளிக்கக் கூடிய திட்டமாக இதை ஏன் அமலாக்கக் கூடாது? இதற்காக வருடத்திற்கு ரூ. 3 கோடி செலவு செய்யப்படுகிறது. அந்த 3 கோடி ரூபாயை, ஏக்கருக்கு 2 மடங்கு, 4 மடங்கு அதிகம் விளையக்கூடிய புதிய ரக விதைகளை வாங்குவதற்கு செலவழிப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உணவு அமைச்சர் அவர்கள் ஏதாவது வழி வகைகள் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இப்படிச் சொல்கிறார்கள். இந்தத் திட்டத்தை எடுத்து விட்டால், கோவையிலும், சென்னையிலும் விலை ஏறி விட்டது என்று சத்தியாகிரகம் செய்யாமல் இருப்பார்களே யானால் எல்லோரும் ரொம்ப மகிழ்ச்சி அடையலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: ராஜ்யம் முழுவதற்கும் படி அரிசித் திட்டத்தை அமல் நடத்துவதற்கு எவ்வளவு செலவாகும்

என்று அரசாங்கம் ஏதாவது கணக்கு எடுத்திருக்கிறதா? அப்படிப்பட்ட கணக்கு அரசாங்கத்தின் கைவசம் இருந்தால், அதை என்ன என்று அருள் கூர்ந்து அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கணக்கு விவரங்கள் இருக்கின்றன. ஆனால், இப்பொழுது கையில் இல்லை. ஒரு அம்சத்தை எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பணம் மட்டும் முக்கியமானதல்ல. நான்கு லட்சம் டன் கையிருப்பு இருக்கிறது என்று பத்திரிகையிலே வருகிறது, ஏன் திருநெல்வேலியில் கொடுக்கவில்லை, ஏன் நாகர்கோவிலில் கொடுக்கவில்லை என்று கேட்கப்படுகிறது. செகண்டு சார்ட் ரைஸ் தான் 77 பைசாவுக்குக் கொடுக்கப்படுகிறது. அரிசியில் முதல் ரகம், இரண்டாவது ரகம், மூன்றாவது ரகம் என்று மூன்று ரகங்கள் இருக்கின்றன. அதில் இரண்டாவது ரக அரிசி தான் மலிவு விலையில் கொடுக்கப்படுகிறது. நான்கு லட்சம் டன்னில் ஒரு லட்சம் டன் தான் இரண்டாவது ரகம் இருக்கிறது. பணம் ரூ. 20 கோடி இருந்தால் விஸ்தரிக்கலாம். தேர்தலுக்காக முதல் ரக அரிசி கொடுக்கிறார்கள் என்றெல்லாம் புகார் சொல்லப்படுகிறது. இந்த அம்சங்களைப் பொறுத்துத்தான் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெளியில் வாங்குகிற அரிசி ரூ. 4, ரூ. 3 விலை என்பது அல்ல சென்னை நகரத்திலும், கோவையிலும் படி அரிசி ரூபாய் ஒன்றுக்குக் கிடைக்கிறது. நீலகிரியிலும் நாகர்கோவிலிலும் படி அரிசி ஏறக்குறைய ரூ. 1.30 ஆகிறது. மற்ற எல்லா ஜில்லாக்களிலும் பட்டணம் படி அரிசி ரூ. 1.22 விலை ஆகிறது. திருச்சி, தூத்துக்குடி, கும்பகோணம் போன்ற இடங்களில் வாங்குகிறவர்கள் படி அரிசி ரூ. 3.25-க்கு வாங்குவது போலவும், சென்னை நகரத்திலும், தாம்பரத்திலும் மட்டும் ரூ. 1-க்கு வாங்குவது போலவும் சொல்வதில் அர்த்தம் இல்லை. சென்னையிலும், கோவையிலும் பட்டணம் படி ரூ. 1, நீலகிரி, நாகர்கோவிலில் தவிர மற்ற இடங்களில் பட்டணம் படி ரூ. 1.22, நீலகிரி, நாகர்கோவிலில் ரூ. 1.30, இது தான் சரியான கணக்கு ஆகும்.

மு.ப. 9 30 திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் 7½ லட்சம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது என்றும், 6¾ லட்சம் டன் மலிவு விலையில் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே, அது இரண்டுக்கும் சேர்ந்தேதானா இந்தச் செலவு ரூ. 2,90,00,000 என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆறேமுக்கால் லட்சம் டன் என்பது இரண்டும் சேர்ந்து—ஸ்டாட்டுடரி ரேஷன் ஏரியாவும், குடும்பக் கார்டு இருக்கும், இன்ஃபார்மல் ரேஷன் ஏரியாவும் சேர்ந்ததுதான். இந்த மாநிலத்தில், 6¾ லட்சம் டன் கொடுத்திருப்பது, இந்த வகையில் எந்த வருஷத்திலும், எந்த மாநில அரசினாலும் கொடுக்கப்படவில்லை. இங்கே கேட்டிருப்பது, படியரிசித் திட்டத்தால் ஒரு வருஷத்திற்கு என்ன செலவு என்பது. அதுதான் இரண்டு கோடியே, தொண்ணூறு லட்சம் ரூபாய்,



திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்: தலைவர் அவர்களே, இந்தப் படியரிசித் திட்டத்தின் கீழ், எத்தனை லட்சம் மக்கள் பயன் அடைந்திருக்கின்றார்கள்? அது எந்த அளவில் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் முன்பே சொன்னதுபோல, சென்னையிலே இருக்கும் 20, 22 இலட்சம் மக்களும், கோயம்புத்தூரில், அதைச் சுற்றி, பீளமேடு, சிங்காநல்லூர், முதலிய இடங்களில் உள்ள மக்களும், சென்னைப் புறநகரங்களாகிய, தாம்பரம், திருவொற்றியூர், பல்லாவரம் போன்ற 47 நகரங்களில் உள்ள 35 லட்சம் மக்களும் பயன் அடைகிறார்கள்.

திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, படியரிசித் திட்டமானது விவசாயிகளுக்கு உற்சாகத்தை ஊட்டாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியமும், நாகர்கோயில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. காமராஜர் அவர்கள், கௌரவத்தைப் பாராமல் இந்த அரசாங்கம் படியரிசித் திட்டத்தை கைவிட்டு விடும்படிச் சொல்லியிருக்கிறார்களே, அதைப் பற்றி இந்த அரசாங்கம் பரிசீலித்ததா? என்ன கருதுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு, அதனுடைய மாண்புமிகு முதல் அமைச்சரும், அந்தக் கட்சியுமே, அதன் திட்டங்களை முடிவு செய்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு திரு. சுப்பிரமணியமோ அல்லது திரு. காமராஜரோ பொருளாதார ஆலோசகர் அல்ல.

திரு. அ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே. இவ்வாறாக உணவு தானிய விநியோகத்தில் ஏற்படும் நஷ்டத்தில், அதில் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் தர வேண்டும் என்று நம் மாநில சர்க்கார் அந்த மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்தினார்களா? அதற்கு மத்திய அரசின் பதில் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பற்றி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதை இந்த நாடும், இந்த மன்றமும் அறியும். பல நேரங்களில் மாண்புமிகு முதல் அமைச்சர் பிரதம அமைச்சரோடும், உணவு அமைச்சரோடும் பேசி, மானியம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார்கள். அதன் பேரில், நமக்கு இருக்கும் வட்டி விகிதத்தையும் கூட ஒத்திவைக்க வேண்டும் என்றும் கேட்டு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், எதுவும் பயன் அளிக்கவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, திரு. சுப்பிரமணியமோ, திரு. காமராஜரோ இந்த அரசாங்கத்திற்கு பொருளாதார ஆலோசகர்கள் அல்ல என்று சொன்னார்கள். அவர்கள் அதை விரும்பவும் இல்லை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவும் இல்லை. ஆனால் ஒவ்வொரு பிரஜைக்கும், சர்க்கார் செய்யும் தவறுகளை எடுத்துக்கூற உரிமை உண்டா, இல்லையா என்பதை மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1969 சனவரி 28

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கண்டிப்பாக உரிமை உண்டு எல்லோருக்கும் யோசனைகள் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால், யோசனை சொல்வது ஒன்று; அந்த யோசனையை சர்க்கார் அதிகார பூர்வமாக அமல்படுத்துவது என்பது வேறு. அந்த வகையில்தான் பொருளாதார ஆலோசகர் இல்லை என்று குறிப்பிட்டேன். நான் அப்படிச் சொல்லுவதற்குக் காரணம், திரு. சுப்பிரமணியம் அவர்களே, ஒரு பத்திரிகை நிருபர் 'கேட்டதற்கு, ''நான் அவர்களுடைய ஆலோசகர் இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்கு பொறுப்பு இருக்கிறது என்பதையும் மறந்து, அவர்கள் தான், திராவிட முன்னேற்றக் கட்சிக்கு ஆலோசகர் இல்லை என்று கொஞ்ச நாளுக்கு முன் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் பொறுப்பு வேண்டும். எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது என்பதில் ஆட்சேபம் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, பொறுப்பற்றவர் சுப்பிரமணியம் என்பதை தயவுசெய்து அனுமதிக்கக் கூடாது. அப்படிச் சொல்லுவது சரியில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நான் அப்படிச் சொல்லவில்லை. லீடர் ஆப் தி அப்போஸிஷன் தான் அப்படிச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் பொறுப்பு உண்டு, பொறுப்பு இருக்கிறது, இருக்கவேண்டும் என்று சொன்னால், பொறுப்பற்றவர் என்று ஆகாது. எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனுக்கும் யோசனை சொல்ல உரிமை இருக்கிறது. நான் சொன்னது—அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ள அவர் ஆலோசகர் இல்லை என்று சொன்னேன். அதில் ஒன்றும் மரியாதைக் குறைவோ, வேறு தவறோ இல்லை என்பதை விளக்க விரும்புகிறேன்.

**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, படியரிசித் திட்டம் 40 லட்சம் மக்களுக்கு உதவியாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் வரும் என்று எதிர்பார்த்திருந்த மக்களை இப்பொழுது, அது வராது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். ஒரு படி அரிசி வராவிட்டாலும், நல்ல அரிசியை யாவது கொடுக்குமா என்று எதிர்பார்க்கிறார்கள். அதைக் கொடுத்தாலும் மக்களிடத்தில் ஆதரவைப் பெறமுடியும். ஆகவே, நல்ல அரிசி கொடுக்கத் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நல்ல அரிசிதான் போடப்படுகிறது. ஆனாலும், ஒவ்வொரு இடத்தில் எதாவது கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதன் காரணமாக, மிக மிகக் கண்காணிப்பாக இருந்து, அதில் கவனம் செலுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கும் நிலையில், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் மிகப் பயங்கரமான பஞ்ச நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. விலைகள் ஏறாமல் தடுத்து நிறுத்தும் முக்கியமான கட்டத்தில் இன்றையதினம் உணவு நிலை இருக்கிறது.



1969 சனவரி 28]

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, வடக்கே இருக்கும் மாநிலங்களில் கோதுமை கொடுப்பதில், மானியம் கொடுப்பது போல, மத்திய சர்க்கார் குறைந்த விலையில் அரிசி கொடுக்கும் நம் மாநிலத்திற்கும் மானியத் தொகை கொடுக்க வேண்டும் என்று, டெல்லியில் இருக்கும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு, இங்கே இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்களா? பொறுப்பேற்றிருக்கிறார்களா?

THIRU K. VINAYAKAM : Is this a question ? It is not the job of the hon. Member to question us. The Chair should not allow such kind of questions.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I will answer it on behalf of the hon. Member (Thiru K. Vinayakam).

THIRU K. VINAYAKAM : The hon. Member should address the question to the Hon. Minister and not to the hon. Members of the Opposition.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question may perhaps be, " Whether the Governenmtnt are aware .............."

" அரசாங்கத்திற்குத் தெரியுமா? " என்று திருத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிலே குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. கோதுமைக்குப் போல மத்திய சர்க்கார் உதவி தருகிறார்களா? மற்றொன்று . . .

THIRU K. VINAYAKAM : The hon. Member should not ask us . . . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1967-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில், கோதுமைக்குப் போல இங்கேயும் ஸப்ஸிடி கொடுக்கப்பட்டது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. இந்த அரசாங்கம் கோதுமைக்குப் போல அரிசிக்கும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்தினார்களா என்கிற தகவல் அரசாங்கத்திடம் இல்லை.

MR. DEPUTY SPEAKER : Question No. 16.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the importance of this question the Chair may be pleased to allow a few more supplementary questions or allow a half-hour debate?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கு ஏறத்தாழ 25 நிமிஷங்கள் கொடுத்திருக்கிறேன். ஏராளமான துணைக் கேள்விகளும் அனுமதித்திருக்கிறேன். அமைச்சரவர்களும் விரிவாகப் பதில்கள் அளித்திருக்கிறார்கள். இன்னும், சொல்ல வேண்டிய கருத்துக்களை ஆளுநர் உரை மீது நடக்கும் விவாதத்தில் கூறிக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரை மணி நேர விவாதத்திற்கு ஒப்புக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன்.

[1969 சனவரி 28

THIRU K. VINAYAKAM : Sir, one more supplementary question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த முறையே கூடாது. இந்நிலையில் தாங்கள் ஒன்று கேட்டு, நான் அனுமதித்தால், அதுவே பழக்கமாகப் போய்விடும். அது சரியாகாது.

**நெல்லை மாவட்ட மீனவர்களுக்கு வீட்டு மனைகள்**

*16 வினா.—திரு. டி. மார்டின்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள கடலோரப் பகுதிகளான ஆலந்தலை, மணப்பாடு, பெரியாதழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, கூத்தன்குழி, இடிந்தகரை முதலிய மீனவ கிராமங்களில் வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ): திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலந்தலை, பெரிய தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, இடிந்தகரை ஆகிய இடங்களிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

மணப்பாடு என்னுமிடத்தில், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக ஒன்பது வீடுகள் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கூத்தன் குழியிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நத்தம் நிலம் 5 ஏக்கரை உரிமை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பெரியதாழை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், உவரி கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், கூத்தஙகுழிக்கு அருகே இடிந்தகரை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், இந்தப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கும், அதோடு இலங்கையிலிருந்து தற்சமயம் குடிபெயர்ந்து அங்கு வந்திருக்கக்கூடிய மக்கள் மீன்பிடி தொழில் நடத்த முடியாத காரணத்தால், அவர்களுக்கும், வீட்டு மனைகள் வழங்கக்கூடிய ஒரு புதிய திட்டத்தையாவது இந்த அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனையை அந்தப் பகுதியிலுள்ள அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் ஃபிஷரிஸ் அவர்களுக்கு அனுப்பி, அந்தப் பகுதிகள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளா என்று பார்த்து, தேவையானால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.



1969 சனவரி 28]

திரு. நா. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இடிந்தகரை என்னும் ஊரில் பல ஆண்டுக் காலமாகக் கடலரிப்பு ஏற்பட்டு, அங்குள்ள மீனவ சமுதாயத்தினர் அங்குள்ள வீடுகளைக் காலிசெய்து விட்டு, வேறு இடங்களுக்குப் போக வேண்டும் என்று குறிப்பு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்பேரில் அரசாங்கம் எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் இல்லை. கனம் உறுப்பினர் சொன்ன யோசனையையும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி, அதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்து விரிவான குறிப்பு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண் 17 ஒற்றிவைக்கப்படுகிறது.

*Houses constructed by the Corporation of Madrae*

*18 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the allotments of L.I.G. houses constructed by the Corporation were made by the Government or Corporation of Madras; and

(b) if so, the reason for the delay in allotting the houses ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ). குறைந்த வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மாநகராட்சி கட்டிய வீடுகளை, அவற்றுக்கான விண்ணப்பதாரர்களிலிருந்து அவை ஒதுக்கப்படுவதற்கு உரியவர்களை சென்னை மாநகராட்சியே தெரிந்தெடுத்தது. மேற்படி வீடுகளை ஒதுக்கத் தெரிந்தெடுத்தது குறித்து சில முறையீடுகள் வந்துள்ளன. அவை குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்றது.

திரு. கே. விநயகம்: கேள்வி கேட்க இப்பொழுதாவது அனுமதிக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேளுங்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய எதிர்க் கட்சி கொறடா அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளை அனுமதிக்கக்கூடாது என்று நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு எடுத்து அறிவுரை வழங்கினார்கள். இப்பொழுது மீண்டும் அதேபோல் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட செயல், சபாநாயகர் அவர்களைப் புண்படுத்துவதாக அமையாதா என்பதுபற்றி விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் இந்த மன்றத்தில் பல ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சில முறை

கூறியிருக்கிறேன். அவர்கள் இந்த மன்றத்திலே சில முறைகளை மேற்கொள்ளவேண்டும். சில நேரங்களில் அவர்கள் தம்மையும் அறியாமல் சில முறைகளை மறந்து பேசுகிறார் என்பதை நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, துணைக் கேள்வி கேட்க உரிமை இருக்கிறது. உரிமை இருக்கிறது என்றாலும், சபாநாயகர் கூப்பிட்ட பிறகுதான் கேள்வி கேட்கவேண்டும். நான் அவருக்கு, துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிப்பேன். ஆனால், அதற்குள்ளாக, "இப்போதாவது அனுமதிக்கிறீர்களா?", "இதையாவது அனுமதிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்பது, எதையுமே அனுமதிக்கவில்லை என்று கேட்பது மாதிரி இருக்கிறது. அவ்வாறு கேட்பது முறைதானா என்று உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திரு. கே. வினாயகம் : முறைதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை அனுமதிக்கவில்லை என்றால், எப்படி முறையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்திக்க வேண்டும். இது முறை அல்ல. முறையாக நடந்துகொள்ளுகிற முறையை, இனியாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. கே. வினாயகம் : மூலக் கேள்வி, நான் அறிவிக்கை கொடுத்தது. அந்தக் கேள்வியிலே உப கேள்வி கேட்பதற்கு நீங்கள் என்னை அனுமதிக்கிறீர்களா என்று கேட்பதிலே எந்தவிதமான தவறோ, அல்லது தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவாக நான் பேசியதாகவோ தாங்கள் கருதுவதைக்குறித்து நான் வருத்தப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்பதற்கு முறை இருக்கிறது. ஆனால், துணைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும் என்ற முறையிலிருந்து நான் ஏதோ தவறுகிறதைப்போல் கருதிக்கொள்ளுகிற காரணத்தினால் தானே, அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்டி, "இதற்காவது அனுமதி அளிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்கின்ற கேள்வியின் பொருளாகும். அவ்வாறு கேட்பது முறை அல்ல என்று சொல்லுகிறேன். அது முறையல்ல என்று நான் சொல்லியபிறகும், 'அது முறைதான்' என்று உறுப்பினர் அவர்கள் வாதிப்பது எந்த அளவு இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சிக் கொறடாவாக இருக்கும் அவர்கள், இந்த அவையின் மரபைக் காப்பாற்றுவதிலே மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும், அவரே வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. வினாயகம் அவர்கள் துணைக் கேள்வி கேட்கலாம்.

திரு. கே. வினாயகம் : அவையின் கௌரவத்தை எந்த விதத்திலும் நான் குறைக்கவில்லை.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது கேள்வி கேளுங்கள்.

திரு. கே. வினாயகம் : நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லுகிறேன். சென்னை மாநகராட்சியினரால் இந்த மலிவான வீடுகள் எந்த ஆண்டில் கட்டப்பட்டன? அவை இன்னும் எவருக்கும் தரப்படாமல் இருப்பதற்கு யார் காரணம்? அரசாங்கம் குறுக்கிட்டு அந்த 'அலாட்மென்ட்டைத் தடுத்ததா? அல்லது, மாநகராட்சி அதற்குப் பொறுப்பா? இப்பொழுது பத்தாண்டுக் காலமாக அந்த வீடுகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றனவே, அதற்கு யார் காரணம்? சென்னை மாநகரத்தில் போதிய வீடுகள் இல்லாத நேரத்தில் இப்படிச் சிக்கலான ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதற்குக் காரணம் அரசாங்கமா? அல்லது மாநகராட்சியா? அதை எப்படித் தீர்த்துவைக்க அமைச்சர் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே, 'பத்தாண்டுக் காலம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே கோளாறு இருந்தால், கடந்த எட்டாண்டுக் காலம் அவர்கள் கட்சியினர் ஆண்ட காலத்தில் அவர்கள் பொறுப்பாக இருந்திருக்க முடியும். 1964-ம் ஆண்டு இறுதியிலேதான் வீடுகளை ஒதுக்கவேண்டும் என்று பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, மாநகராட்சி முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியது, அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுதிருந்த அரசாங்கம், சில விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று மாநகராட்சிக்குக் கூறியது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மாநகராட்சி மன்றத்திற்குத் திருப்பப்பட்டது. மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று பழைய அரசு அவர்களுக்கு உத்தரவிட்டது. அதற்குமேலே, வீடுகளை ஒதுக்கும் நேரத்தில், தனிப்பட்ட ஒருவர், வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கே அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, அரசு பழைய நிலையை வலியுறுத்திய நேரத்தில், மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டார்கள். 'முடியாது' என்று சொல்லப்பட்டது. இப்படிப் பல ஆண்டுகள் இந்தப் பிரச்சினை வளர்ந்துவந்த பிறகு, அரசாங்கமே ஒதுக்கும் நேரத்தில் சில முறையீடுகள் வந்தன. புதிதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட இந்த அரசு அவைகளைப் பரிசீலித்து முடிவு எடுப்பதற்காக தற்காலிகத் தடை விதித்துவிட்டு, இதைப் பரிசீலனை செய்து வருகிறது. மாநகராட்சி மன்றத்தினுடைய ஆலோசனை மீண்டும் கேட்கப்பட்டு, கிடைத்து இருக்கிறது. விரிவாகப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, முறைகேடுகள் பற்றிய முறையீடு வந்திருக்கிறது என்று கூறினார்கள். அந்த முறைகேடு என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ‘முறைகேடுகள்’ என்ற வார்த்தையைச் சொன்னதாக நினைவு இல்லை. அதை ஒதுக்குவதிலே சில விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று முறையீடுகள் வந்ததாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால், மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 25 சதவிகிதமும், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 25 சத விகிதமும், பொதுமக்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் 50 சத விகிதமும் ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டளை இட்டிருக்கிறது. ஆனால், மாநகராட்சிமன்றம் தங்களுடைய பணியாளர்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாங்கள் விரும்புகிற வகையிலே ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. அது மீறப்படுகிறது என்ற குற்றச்சாட்டைத்தான் மாநகராட்சியின்மீது அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவதில் விதிமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் எப்பொழுது வந்தது? எவ்வளவு காலமாக இந்த அரசின் பரிசீலனையில் அது இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 31—1—1968 அன்று வீடுகளை மீண்டும் தங்களுடைய எண்ணப்படியே ஒதுக்கித்தர வேண்டும் என்று ஒரு ஆலோசனையை மாநகராட்சி மன்றம் அனுப்பியிருக்கிறது. அதிலே எற்கனவே பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதால், தீர ஆலோசித்து முடிவு எடுப்பதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய கால தாமதமே தவிர, வேறு அல்ல.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பேரூராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படியானால் அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

### வீராச்சிமங்கலத்திற்கு நீர் வழங்கல்

* 19 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் வட்டம், வீராச்சிமங்கலம் பஞ்சாயத்தில் குடி தண்ணீர்த் தொட்டி அமைப்பது சம்பந்தமாக தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அத்திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) வீராச்சிமங்கலம் கிராமத்தில் ரூ. 1,61,000 செலவில் குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான மதிப்பீடு, கிராம நீர் வழங்கு திட்டத்தின் கீழ்



(பற்றுக் குறைப் பகுதிகள்) தயாரிக்கப்பட்டது. ஆனால் நிதி நிலை இடந்தராமையால் இப்பணி மேற்கொள்ளப்படாது விட்டுவிடப்பட்டுள்ளது.

(இ) இவ் வினா எழவில்லை.

### தாராபுரம் பஞ்சாயத்திலுள்ள பெரிய ஓடையின் குறுக்கே அணை

* 20 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் பஞ்சாயத்தில் உள்ள வெள்ளைக் கவுண்டன் வலசுக்குச் செல்லும் வழியில் உள்ள பெரிய ஓடையில் ஒரு பாலம் கட்ட அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து இப்பாலம் கட்டும் வேலையை மேற்கொள்ளும்படியும், இதற்காகும் செலவில் 40 சதவிகிதத் தொகையை பொம்மநல்லூர் ஊராட்சியிடமிருந்து பெறும்படியும் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரிக்குக் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகமும் அதனால் ஏற்பட்ட அமைதியின்மையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. க. இராமமூர்த்தி திரு. க. கோமதிசங்கர தீட்சிதர், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர், 27—1—1969 அன்று மாணவர்கள் மீது நடந்த லத்தி சார்ஜ் பற்றியும், அதனால் எற்பட்டிருக்கின்ற அமைதியின்மை குறித்தும், பேரவையின் நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கும் காரணத்தாலும், அதைப்பற்றி ஏதாவது கூற வேண்டுமானால், ஆளுநர் அவர்களுடைய உரையின்மீதான விவாதத்தில் கூறிக்கொள்ளலாம் என்ற காரணத்தாலும், அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (இ) காவேரிநகர் மில் கதவடைப்பையொட்டித் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், “திருச்சி மாவட்டம் காவேரிநகர்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கண்டிப்பாக உரிமை உண்டு. எல்லோருக்கும் யோசனைகள் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால், யோசனை சொல்வது ஒன்று; அந்த யோசனையை சர்க்கார் அதிகார பூர்வமாக அமல்படுத்துவது என்பது வேறு. அந்த வகையில்தான் பொருளாதார ஆலோசகர் இல்லை என்று குறிப்பிட்டேன். நான் அப்படிச் சொல்லுவதற்குக் காரணம், திரு. சுப்பிரமணியம் அவர்களே, ஒரு பத்திரிகை நிருபர் கேட்டதற்கு, "நான் அவர்களுடைய ஆலோசகர் இல்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்கு பொறுப்பு இருக்கிறது என்பதையும் மறந்து, அவர்கள் தான், திராவிட முன்னேற்றக் கட்சிக்கு ஆலோசகர் இல்லை என்று கொஞ்ச நாளுக்கு முன் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் பொறுப்பு வேண்டும். எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது என்பதில் ஆட்சேபம் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, பொறுப்பற்றவர் சுப்பிரமணியம் என்பதை தயவுசெய்து அனுமதிக்கக் கூடாது. அப்படிச் சொல்லுவது சரியில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அப்படிச் சொல்லவில்லை. லீடர் ஆப் தி அப்பொஸிஷன் தான் அப்படிச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் பொறுப்பு உண்டு, பொறுப்பு இருக்கிறது, இருக்கவேண்டும் என்று சொன்னால், பொறுப்பற்றவர் என்று ஆகாது. எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனுக்கும் யோசனை சொல்ல உரிமை இருக்கிறது. நான் சொன்னது—அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ள அவர் ஆலோசகர் இல்லை என்று சொன்னேன். அதில் ஒன்றும் மரியாதைக் குறைவோ, வேறு தவறோ இல்லை என்பதை விளக்க விரும்புகிறேன்.

**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, படியரிசித் திட்டம் 40 லட்சம் மக்களுக்கு உதவியாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் வரும் என்று எதிர்பார்த்திருந்த மக்களை இப்பொழுது, அது வராது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். ஒரு படி அரிசி வராவிட்டாலும், நல்ல அரிசியை யாவது கொடுக்குமா என்று எதிர்பார்க்கிறார்கள். அதைக் கொடுத்தாலும் மக்களிடத்தில் ஆதரவைப் பெறமுடியும். ஆகவே, நல்ல அரிசி கொடுக்கத் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நல்ல அரிசிதான் போடப்படுகிறது. ஆனாலும், ஒவ்வொரு இடத்தில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதன் காரணமாக, மிக மிகக் கண்காணிப்பாக இருந்து, அதில் கவனம் செலுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கும் நிலையில், வட-ஆர்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் மிகப் பயங்கரமான பஞ்ச நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. விலைகள் ஏறாமல் தடுத்து நிறுத்தும் முக்கியமான கட்டத்தில் இன்றையதினம் உணவு நிலை இருக்கிறது.





**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, வடக்கே இருக்கும் மாநிலங்களில் கோதுமை கொடுப்பதில், மானியம் கொடுப்பது போல, மத்திய சர்க்கார் குறைந்த விலையில் அரிசி கொடுக்கும் நம் மாநிலத்திற்கும் மானியத் தொகை கொடுக்க வேண்டும் என்று, டெல்லியில் இருக்கும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு, இங்கே இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்களா? பொறுப்பேற்றிருக்கிறார்களா?

THIRU K. VINAYAKAM : Is this a question ? It is not the job of the hon. Member to question us. The Chair should not allow such kind of questions.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I will answer it on behalf of the hon. Member (Thiru K. Vinayakam).

THIRU K. VINAYAKAM : The hon. Member should address the question to the Hon. Minister and not to the hon. Members of the Opposition.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question may perhaps be, " Whether the Governenmtnt are aware ............."

" அரசாங்கத்திற்குத் தெரியுமா? " என்று திருத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிலே குற்றச் சாட்டு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. கோதுமைக்குப் போல மத்திய சர்க்கார் உதவி தருகிறார்களா? மற்றொன்று . . .

THIRU K. VINAYAKAM : The hon. Member should not ask us . . . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1967-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில், கோதுமைக்குப் போல இங்கேயும் ஸப்ஸிடி கொடுக்கப்பட்டது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. இந்த அரசாங்கம் கோதுமைக்குப் போல அரிசிக்கும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்தினார்களா என்கிற தகவல் அரசாங்கத்திடம் இல்லை.

MR. DEPUTY SPEAKER : Question No. 16.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the importance of this question the Chair may be pleased to allow a few more supplementary questions or allow a half-hour debate?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கு ஏறத்தாழ 25 நிமிஷங்கள் கொடுத்திருக்கிறேன். ஏராளமான துணைக் கேள்விகளும் அனுமதித்திருக்கிறேன். அமைச்சரவர்களும் விரிவாகப் பதில்கள் அளித்திருக்கிறார்கள். இன்னும், சொல்ல வேண்டிய கருத்துக்களை ஆளுநர் உரை மீது நடக்கும் விவாதத்தில் கூறிக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரை மணி நேர விவாதத்திற்கு ஒப்புக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன்.

[1969 சனவரி 28

THIRU K. VINAYAKAM : Sir, one more supplementary question.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அந்த முறையே கூடாது. இந்நிலையில் தாங்கள் ஒன்று கேட்டு, நான் அனுமதித்தால், அதுவே பழக்கமாகப் போய்விடும். அது சரியாகாது.

**நெல்லை மாவட்ட மீனவர்களுக்கு வீட்டு மனைகள்**

*16 *வினா.—திரு. டி. மார்டின் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள கடலோரப் பகுதிகளான ஆலந்தலை, மணப்பாடு, பெரியதாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, கூத்தன்குழி, இடிந்தகரை முதலிய மீனவ கிராமங்களில் வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :* (அ) & (இ) : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலந்தலை, பெரிய தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, இடிந்தகரை ஆகிய இடங்களிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

மணப்பாடு என்னுமிடத்தில், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக ஒன்பது வீடுகள் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கூத்தன் குழியிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நத்தம் நிலம் 5 ஏக்கரை உரிமை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

*திரு. டி. மார்டின் :* தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பெரியதாழை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், உவரி கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், கூத்தங்குழிக்கு அருகே இடிந்தகரை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், இந்தப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கும், அதோடு இலங்கையிலிருந்து தற்சமயம் குடிபெயர்ந்து அங்கு வந்திருக்கக்கூடிய மக்கள் மீன்பிடி தொழில் நடத்த முடியாத காரணத்தால், அவர்களுக்கும், வீட்டு மனைகள் வழங்கக்கூடிய ஒரு புதிய திட்டத்தையாவது இந்த அரசு பரிசீலிக்குமா?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :* தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனையை அந்தப் பகுதியிலுள்ள அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் ஃபிஷரிஸ் அவர்களுக்கு அனுப்பி, அந்தப் பகுதிகள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளா என்று பார்த்து, தேவையானால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.



1969 சனவரி 28]

*திரு. நா. சௌந்தரபாண்டியன் :* தலைவர் அவர்களே, இடிந்தகரை என்னும் ஊரில் பல ஆண்டுக் காலமாகக் கடலரிப்பு ஏற்பட்டு, அங்குள்ள மீனவ சமுதாயத்தினர் அங்குள்ள வீடுகளைக் காலிசெய்து விட்டு, வேறு இடங்களுக்குப் போக வேண்டும் என்று குறிப்பு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்பேரில் அரசாங்கம் எடுத்த முடிவு என்ன?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :* அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் இல்லை. கனம் உறுப்பினர் சொன்ன யோசனையையும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி, அதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்து விரிவான குறிப்பு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண் 17 ஒத்திவைக்கப்படுகிறது.

*Houses constructed by the Corporation of Madras*

* 18 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the allotments of L.I.G. houses constructed by the Corporation were made by the Government or Corporation of Madras; and

(*b*) if so, the reason for the delay in allotting the houses ?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* (அ) & (இ). குறைந்த வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மாநகராட்சி கட்டிய வீடுகளை, அவற்றுக்கான விண்ணப்பதாரர்களிலிருந்து அவை ஒதுக்கப்படுவதற்கு உரியவர்களை சென்னை மாநகராட்சியே தெரிந்தெடுத்தது. மேற்படி வீடுகளை ஒதுக்கத் தெரிந்தெடுத்தது குறித்து சில முறையீடுகள் வந்துள்ளன. அவை குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்றது.

*திரு. கே. விநயகம் :* கேள்வி கேட்க இப்பொழுதாவது அனுமதிக்கிறீர்களா?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* கேளுங்கள்.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய எதிர்க் கட்சி கொறடா அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளை அனுமதிக்கக்கூடாது என்று நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு எடுத்து அறிவுரை வழங்கினார்கள். இப்பொழுது மீண்டும் அதேபோல் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட செயல், சபாநாயகர் அவர்களைப் புண்படுத்துவதாக அமையாதா என்பதுபற்றி விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் இந்த மன்றத்தில் பல ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சில முறை

சுட்டியிருக்கிறேன். அவர்கள் இந்த மன்றத்திலே சில முறைகளை மேற்கொள்ளவேண்டும். சில நேரங்களில் அவர்கள் தம்மையும் அறியாமல் சில முறைகளை மறந்து பேசுகிறார் என்பதை நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, துணைக் கேள்வி கேட்க உரிமை இருக்கிறது. உரிமை இருக்கிறது, என்றாலும், சபாநாயகர் கூப்பிட்ட பிறகுதான் கேள்வி கேட்கவேண்டும். நான் அவருக்கு, துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிப்பேன். ஆனால், அதற்குள்ளாக, "இப்போதாவது அனுமதிக்கிறீர்களா?", "இதையாவது அனுமதிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்பது, எதையுமே அனுமதிக்கவில்லை என்று கேட்பது மாதிரி இருக்கிறது. அவ்வாறு கேட்பது முறைதானா என்று உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : முறைதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை அனுமதிக்கலாம் என்றால், எப்படி முறையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்திக்க வேண்டும். இது முறை அல்ல. முறையாக நடந்துகொள்ளுகிற முறையை இனியாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. கே. விநாயகம் : மூலக் கேள்வி, நான் அறிவிக்கை கொடுத்தது. அந்தக் கேள்வியிலே உப கேள்வி கேட்பதற்கு நீங்கள் என்னை அனுமதிக்கிறீர்களா என்று கேட்பதிலே எந்தவிதமான தவறோ, அல்லது தங்களுடைய கவுரவத்திற்குக் குறைவாக நான் பேசியதாகவோ தாங்கள் கருதுவதைக்குறித்து நான் வருத்தப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்பதற்கு முறை இருக்கிறது. ஆனால், துணைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும் என்ற முறையிலிருந்து நான் ஏதோ தவறு செய்ததைப்போல் கருதிக்கொள்ளுகிற காரணத்தினால் தானே, அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்டி, "இதற்காவது அனுமதி அளிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்கின்ற கேள்வியின் பொருளாகும். அவ்வாறு கேட்பது முறை அல்ல என்று சொல்லுகிறேன். அது முறையல்ல என்று நான் சொல்லியபிறகும், 'அது முறைதான்' என்று உறுப்பினர் அவர்கள் வாதிப்பது எந்த அளவு இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சிக் கொறடாவாக இருக்கும் அவர்கள், இந்த அவையின் மரபைக் காப்பாற்றுவதிலே மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும், அவரே வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் துணைக் கேள்வி கேட்கலாம்.

திரு. கே. விநாயகம் : அவையின் கவுரவத்தை எந்த விதத்திலும் நான் குறைக்கவில்லை.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது கேள்வி கேளுங்கள்.

திரு. கே. விநாயகம் : நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லுகிறேன். சென்னை மாநகராட்சியினரால் இந்த மலிவான வீடுகள் எந்த ஆண்டில் கட்டப்பட்டன? அவை இன்னும் எவருக்கும் தரப்படாமல் இருப்பதற்கு யார் காரணம்? அரசாங்கம் குறுக்கிட்டு அந்த 'அலாட்மென்ட்டைத் தடுத்ததா? அல்லது, மாநகராட்சி அதற்குப் பொறுப்பா? இப்பொழுது பத்தாண்டுக் காலமாக அந்த வீடுகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றனவே, அதற்கு யார் காரணம்? சென்னை மாநகரத்தில் போதிய வீடுகள் இல்லாத நேரத்தில் இப்படிச் சிக்கலான ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதற்குக் காரணம் அரசாங்கமா? அல்லது மாநகராட்சியா? அதை எப்படித் தீர்த்துவைக்க அமைச்சர் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே, 'பத்தாண்டுக் காலம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே கோளாறு இருந்தால், கடந்த எட்டாண்டுக் காலம் அவர்கள் கட்சியினர் ஆண்ட காலத்தில் அவர்கள் பொறுப்பாக இருந்திருக்க முடியும். 1964-ம் ஆண்டு இறுதியிலேதான் வீடுகளை ஒதுக்கவேண்டும் என்ற பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, மாநகராட்சி முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியது, அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுதிருந்த அரசாங்கம், சில விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று மாநகராட்சிக்குக் கூறியது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மாநகராட்சி மன்றத்திற்குத் திருப்பப்பட்டது. மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று பழைய அரசு அவர்களுக்கு உத்தரவிட்டது. அதற்குமேலே, வீடுகளை ஒதுக்கும் நேரத்தில், தனிப்பட்ட ஒருவர், வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கே அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, அரசு பழைய நிலையை வலியுறுத்திய நேரத்தில், மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டார்கள். 'முடியாது' என்று சொல்லப்பட்டது. இப்படிப் பல ஆண்டுகள் இந்தப் பிரச்சினை வளர்ந்துவந்த பிறகு, அரசாங்கமே ஒதுக்கும் நேரத்தில் சில முறையீடுகள் வந்தன. புதிதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட இந்த அரசு இவைகளைப் பரிசீலித்து முடிவு எடுப்பதற்காக தற்காலிகத் தடை விதித்துவிட்டு, இதைப் பரிசீலனை செய்து வருகிறது. மாநகராட்சி மன்றத்தினுடைய ஆலோசனை மீண்டும் கேட்கப்பட்டு, கிடைத்து இருக்கிறது. விரைவாகப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, முறைகேடுகள் பற்றிய முறையீடு வந்திருக்கிறது என்று கூறினார்கள். அந்த முறைகேடு என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 'முறைகேடுகள்' என்ற வார்த்தையைச் சொன்னதாக நினைவு இல்லை. அதை ஒதுக்குவதிலே சில விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று முறையீடுகள் வந்ததாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால், மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 25 சத விதமும், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 25 சத விதமும், பொதுமக்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் 50 சத விதமும் ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டளை இட்டிருக்கிறது. ஆனால், மாநகராட்சிமன்றம் தங்களுடைய பணியாளர்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாங்கள் விரும்புகிற வகையிலே ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. அது மீறப்படுகிறது என்ற குற்றச்சாட்டைத்தான் மாநகராட்சியின்மீது அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவதில் விதிமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் எப்பொழுது வந்தது? எவ்வளவு காலமாக இந்த அரசின் பரிசீலனையில் அது இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 31—1—1968 அன்று வீடுகளை மீண்டும் தங்களுடைய எண்ணப்படியே ஒதுக்கித்தர வேண்டும் என்று ஒரு ஆலோசனையை மாநகராட்சி மன்றம் அனுப்பியிருக்கிறது. அதிலே ஏற்கனவே பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதால், தீர ஆலோசித்து முடிவு எடுப்பதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய கால தாமதமே தவிர, வேறு அல்ல.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பேரூராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படியானால் அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

### வீராச்சிமங்கலத்திற்கு நீர் வழங்கல்

* 19 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் வட்டம், வீராச்சிமங்கலம் பஞ்சாயத்தில் குடி தண்ணீர்த் தொட்டி அமைப்பது சம்பந்தமாக தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அத்திட்டம் எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) வீராச்சிமங்கலம் கிராமத்தில் ரூ. 1,61,000 செலவில் குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான மதிப்பீடு, கிராம நீர் வழங்கு திட்டத்தின் கீழ்



(பற்றுக் குறைப் பகுதிகள்) தயாரிக்கப்பட்டது. ஆனால் நிதி நிலை இடந்தராமையால் இப்பணி மேற்கொள்ளப்படாது விட்டுவிடப்பட்டுள்ளது.

(இ) இவ் வினா எழவில்லை.

### தாராபுரம் பஞ்சாயத்திலுள்ள பெரிய ஓடையின் குறுக்கே அணை

* 20 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் பஞ்சாயத்தில் உள்ள வெள்ளைக் கவுண்டன் வலசுக்குச் செல்லும் வழியில் உள்ள பெரிய ஓடையில் ஒரு பாலம் கட்ட அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து இப்பாலம் கட்டும் வேலையை மேற்கொள்ளும்படியும், இதற்காகும் செலவில் 40 சதவிகிதத் தொகையை பொம்மநல்லூர் ஊராட்சியிடமிருந்து பெறும்படியும் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரிக்குக் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகமும் அதனால் ஏற்பட்ட அமைதியின்மையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. க. இராமமூர்த்தி திரு. க. கோமதிசங்கர தீட்சிதர், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர், 27—1—1969 அன்று மாணவர்கள் மீது நடந்த லத்தி சார்ஜ் பற்றியும், அதனால் ஏற்பட்டிருக்கின்ற அமைதியின்மை குறித்தும், பேரவையின் நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கும் காரணத்தாலும், அதைப்பற்றி ஏதாவது கூற வேண்டுமானால், ஆளுநர் அவர்களுடைய உரையின்மீதான விவாதத்தில் கூறிக்கொள்ளலாம் என்ற காரணத்தாலும், அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (இ) காவேரிநகர் மில் கதவடைப்பையொட்டித் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், " திருச்சி மாவட்டம் காவேரிநகர்

[1969 சனவரி 28

Thiru K. VINAYAKAM : Sir, one more supplementary question.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : அந்த முறையே கூடாது. இந்நிலையில் தாங்கள் ஒன்று கேட்டு, நான் அனுமதித்தால், அதுவே பழக்கமாகப் போய்விடும். அது சரியாகாது.

### நெல்லை மாவட்ட மீனவர்களுக்கு வீட்டு மனைகள்

*16 வினா.—*திரு. டி. மார்டின்* : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள கடலோரப் பகுதிகளான ஆலந்தலை, மணப்பாடு, பெரியாதாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, கூத்தன்குழி, இடிந்தகரை முதலிய மீனவ கிராமங்களில் வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி* : (அ) & (இ) : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலந்தலை, பெரிய தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, இடிந்தகரை ஆகிய இடங்களிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

மணப்பாடு என்னுமிடத்தில், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக ஒன்பது வீடுகள் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கூத்தன் குழியிலுள்ள மீனவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நத்தம் நிலம் 5 ஏக்கரை உரிமை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

*திரு. டி. மார்டின்* : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பெரியதாழை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், உவரி கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், கூத்தனகுழிக்கு அருகே இடிந்தகரை என்ற கிராமத்தில் கடலரிப்பு இருக்கும் காரணத்தாலும், இந்தப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கும், அதோடு இலங்கையிலிருந்து தற்சமயம் குடி பெயர்ந்து அங்கு வந்திருக்கக்கூடிய மக்கள் மீன்பிடி தொழில் நடத்த முடியாத காரணத்தால், அவர்களுக்கும், வீட்டு மனைகள் வழங்கக்கூடிய ஒரு புதிய திட்டத்தையாவது இந்த அரசு பரிசிலிக்குமா?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி* : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனையை அந்தப் பகுதியிலுள்ள அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் ஃபிஷரிஸ் அவர்களுக்கு அனுப்பி, அந்தப் பகுதிகள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளா என்று பார்த்து, தேவையானால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.



1969 சனவரி 28]

*திரு. நா. சௌந்தரபாண்டியன்* : தலைவர் அவர்களே, இடிந்தகரை என்னும் ஊரில் பல ஆண்டுக் காலமாகக் கடலரிப்பு ஏற்பட்டு, அங்குள்ள மீனவ சமுதாயத்தினர் அங்குள்ள வீடுகளைக் காலிசெய்து விட்டு, வேறு இடங்களுக்குப் போக வேண்டும் என்று குறிப்பு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்பேரில் அரசாங்கம் எடுத்த முடிவு என்ன?

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி* : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் இல்லை. கனம் உறுப்பினர் சொன்ன யோசனையையும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி, அதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்து விரிவான குறிப்பு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண் 17 ஒத்திவைக்கப்படுகிறது.

### *Houses constructed by the Corporation of Madras*

* 18 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the allotments of L.I.G. houses constructed by the Corporation were made by the Government or Corporation of Madras; and

(b) if so, the reason for the delay in allotting the houses ?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி* : (அ) & (இ). குறைந்த வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மாநகராட்சி கட்டிய வீடுகளை, அவற்றுக்கான விண்ணப்பதாரர்களிலிருந்து அவை ஒதுக்கப்படுவதற்கு உரியவர்களை சென்னை மாநகராட்சியே தெரிந்தெடுத்தது. மேற்படி வீடுகளை ஒதுக்கத் தெரிந்தெடுத்தது குறித்து சில முறையீடுகள் வந்துள்ளன. அவை குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்றது.

*திரு. கே. விநயகம்* : கேள்வி கேட்க இப்பொழுதாவது அனுமதிக்கிறீர்களா?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : கேளுங்கள்.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி* : தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய எதிர்க் கட்சி கொறடா அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளை அனுமதிக்கக்கூடாது என்று நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு எடுத்து அறிவுரை வழங்கினார்கள். இப்பொழுது மீண்டும் அதேபோல் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட செயல், சபாநாயகர் அவர்களைப் புண்படுத்துவதாக அமையாதா என்பதுபற்றி விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் இந்த மன்றத்தில் பல ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சில முறை

சுட்டியிருக்கிறேன். அவர்கள் இந்த மன்றத்திலே சில முறைகளை மேற்கொள்ளவேண்டும். சில நேரங்களில் அவர்கள் தம்மையும் அறியாமல் சில முறைகளை மறந்து பேசுகிறார் என்பதை நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, துணைக் கேள்வி கேட்க உரிமை இருக்கிறது. உரிமை இருக்கிறது என்றாலும், சபாநாயகர் கூப்பிட்ட பிறகுதான் கேள்வி கேட்கவேண்டும். நான் அவருக்கு, துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிப்பேன். ஆனால், அதற்குள்ளாக, "இப்போதாவது அனுமதிக்கிறீர்களா?", "இதையாவது அனுமதிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்பது, எதையுமே அனுமதிக்கவில்லை என்று கேட்பது மாதிரி இருக்கிறது. அவ்வாறு கேட்பது முறைதானா என்று உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : முறைதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை அனுமதிக்கவா என்றால், எப்படி முறையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்திக்க வேண்டும். இது முறை அல்ல. முறையாக நடந்துகொள்ளுகிற முறையை இனியாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. கே. விநாயகம் : மூலக் கேள்வி, நான் அறிவிக்கை கொடுத்தது. அந்தக் கேள்வியிலே உப கேள்வி கேட்பதற்கு நீங்கள் என்னை அனுமதிக்கிறீர்களா என்று கேட்பதிலே எந்தவிதமான தவறோ, அல்லது தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவாக நான் பேசியதாகவோ தாங்கள் கருதுவதைக்குறித்து நான் வருந்தப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்பதற்கு முறை இருக்கிறது. ஆனால், துணைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும் என்ற முறையிலிருந்து நான் ஏதோ தவறு செய்வதைப்போல் கருதிக்கொள்ளுகிற காரணத்தினால் தானே, அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்டி, "இதற்காவது அனுமதி அளிக்கிறீர்களா?" என்ற முறையில் கேட்கின்ற கேள்வியின் பொருளாகும். அவ்வாறு கேட்பது முறை அல்ல என்று சொல்லுகிறேன். அது முறையல்ல என்று நான் சொல்லியபிறகும், 'அது முறைதான்' என்று உறுப்பினர் அவர்கள் வாதிப்பது எந்த அளவு இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சிக் கொறடாவாக இருக்கும் அவர்கள், இந்த அவையின் மரபைக் காப்பாற்றுவதிலே மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும், அவரே வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் துணைக் கேள்வி கேட்கலாம்.

திரு. கே. விநாயகம் : அவையின் கௌரவத்தை எந்த விதத்திலும் நான் குறைக்கவில்லை.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது கேள்வி கேளுங்கள்.

திரு. கே. விநாயகம் : நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லுகிறேன். சென்னை மாநகராட்சியினரால் இந்த மலிவான வீடுகள் எந்த ஆண்டில் கட்டப்பட்டன? அவை இன்னும் எவருக்கும் தரப்படாமல் இருப்பதற்கு யார் காரணம்? அரசாங்கம் குறுக்கிட்டு அந்த 'அலாட்மென்ட்டைத் தடுத்ததா? அல்லது, மாநகராட்சி அதற்குப் பொறுப்பா? இப்பொழுது பத்தாண்டுக் காலமாக அந்த வீடுகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றனவே, அதற்கு யார் காரணம்? சென்னை மாநகரத்தில் போதிய வீடுகள் இல்லாத நேரத்தில் இப்படிச் சிக்கலான ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதற்குக் காரணம் அரசாங்கமா? அல்லது மாநகராட்சியா? அதை எப்படித் தீர்த்துவைக்க அமைச்சர் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே, 'பத்தாண்டுக் காலம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே கோளாறு இருந்தால், கடந்த எட்டாண்டுக் காலம் அவர்கள் கட்சியினர் ஆண்ட காலத்தில் அவர்கள் பொறுப்பாக இருந்திருக்க முடியும். 1964-ம் ஆண்டு இறுதியிலேதான் வீடுகளை ஒதுக்கவேண்டும் என்று பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, மாநகராட்சி முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியது, அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுதிருந்த அரசாங்கம், சில விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று மாநகராட்சிக்குக் கூறியது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மாநகராட்சி மன்றத்திற்குத் திருப்பப்பட்டது. மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று பழைய அரசு அவர்களுக்கு உத்தரவிட்டது. அதற்குமேலே, வீடுகளை ஒதுக்கும் நேரத்தில், தனிப்பட்ட ஒருவர், வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கே அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, அரசு பழைய நிலையை வலியுறுத்திய நேரத்தில், மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டார்கள். 'முடியாது' என்று சொல்லப்பட்டது. இப்படிப் பல ஆண்டுகள் இந்தப் பிரச்சினை வளர்ந்துவந்த பிறகு, அரசாங்கமே ஒதுக்கும் நேரத்தில் சில முறையீடுகள் வந்தன. புதிதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட இந்த அரசு இதனைப் பரிசீலித்து முடிவு எடுப்பதற்காக தற்காலிகத் தடை விதித்துவிட்டு, இதைப் பரிசீலனை செய்து வருகிறது. மாநகராட்சி மன்றத்தினுடைய ஆலோசனை மீண்டும் கேட்கப்பட்டு, கிடைத்து இருக்கிறது. விரைவாகப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, முறைகேடுகள் பற்றிய முறையீடு வந்திருக்கிறது என்று கூறினார்கள். அந்த முறைகேடு என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 'முறைகேடுகள்' என்ற வார்த்தையைச் சொன்னதாக நினைவு இல்லை. அதை ஒதுக்குவதிலே சில விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று முறையீடுகள் வந்ததாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால், மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 25 சத வீதமும், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 25 சத வீதமும், பொதுமக்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் 50 சத வீதமும் ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டளை இட்டிருக்கிறது. ஆனுல், மாநகராட்சிமன்றம் தங்களுடைய பணியாளர்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாங்கள் விரும்புகிற வகையிலே ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. அது மீறப்படுகிறது என்ற குற்றச்சாட்டைத்தான் மாநகராட்சியின்மீது அவர்கள் சொல்லுகிருர்கள்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவதில் விதிமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் எப்பொழுது வந்தது? எவ்வளவு காலமாக இந்த அரசின் பரிசீலனையில் அது இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 31—1—1968 அன்று வீடுகளை மீண்டும் தங்களுடைய எண்ணப்படியே ஒதுக்கித்தர வேண்டும் என்று ஒரு ஆலோசனையை மாநகராட்சி மன்றம் அனுப்பியிருக்கிறது. அதிலே எற்கனவே பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதால், தீர ஆலோசித்து முடிவு எடுப்பதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய கால தாமதமே தவிர, வேறு அல்ல.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பேரூராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானல் அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

### வீராச்சிமங்கலத்திற்கு நீர் வழங்கல்

* 19 விஞ.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் வட்டம், வீராச்சிமங்கலம் பஞ்சாயத்தில் குடி தண்ணீர்த் தொட்டி அமைப்பது சம்பந்தமாக தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அத்திட்டம் எந்த அளவில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) வீராச்சிமங்கலம் கிராமத்தில் ரூ. 1,61,000 செலவில் குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான மதிப்பீடு, கிராம நீர் வழங்கு திட்டத்தின் கீழ்





(பற்ருக் குறைப் பகுதிகள்) தயாரிக்கப்பட்டது. ஆனல் நிதி நிலை இடந்தராமையால் இப்பணி மேற்கொள்ளப்படாது விட்டுவிடப்பட்டுள்ளது.

(இ) இவ் விஞ எழவில்லை.

### தாராபுரம் பஞ்சாயத்திலுள்ள பெரிய ஓடையின் குறுக்கே அணை

* 20 விஞ.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் பஞ்சாயத்தில் உள்ள வெள்ளைக் கவுண்டன் வலசுக்குச் செல்லும் வழியில் உள்ள பெரிய ஓடையில் ஒரு பாலம் கட்ட அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து இப்பாலம் கட்டும் வேலையை மேற்கொள்ளும்படியும், இதற்காகும் செலவில் 40 சதவிகிதத் தொகையை பொம்மநல்லூர் ஊராட்சியிடமிருந்து பெறும்படியும் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரிக்குக் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெட்டிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகமும் அதனல் ஏற்பட்ட அமைதியின்மையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. க. இராமமூர்த்தி திரு. க. கோமதிசங்கர தீட்சிதர், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர், 27—1—1969 அன்று மாணவர்கள் மீது நடந்த லத்தி சார்ஜ் பற்றியும், அதனல் எற்பட்டிருக்கின்ற அமைதியின்மை குறித்தும், பேரவையின் நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கை கொடுத்திருக்கிருர்கள். அது அரசாங்கத்தின் அன்ருட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கும் காரணத்தாலும், அதைப்பற்றி ஏதாவது கூற வேண்டுமாளுல், ஆளுநர் அவர்களுடைய உரையின்மீதான விவாதத்தில் கூறிக்கொள்ளலாம் என்ற காரணத்தாலும், அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (இ) காவேரிநகர் மில் கதவடைப்பையொட்டித் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "திருச்சி மாவட்டம் காவேரிநகர்

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 'முறைகேடுகள்' என்ற வார்த்தையைச் சொன்னதாக நினைவு இல்லை. அதை ஒதுக்குவதிலே சில விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று முறையீடுகள் வந்ததாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால், மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 25 சத வீதமும், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 25 சத வீதமும், பொதுமக்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் 50 சத வீதமும் ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டளை இட்டிருக்கிறது. ஆனால், மாநகராட்சிமன்றம் தங்களுடைய பணியாளர்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாங்கள் விரும்புகிற வகையிலே ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. அது மீறப்படுகிறது என்ற குற்றச்சாட்டைத்தான் மாநகராட்சியின்மீது அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவதில் விதிமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் எப்பொழுது வந்தது? எவ்வளவு காலமாக இந்த அரசின் பரிசீலனையில் அது இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 31—1—1968 அன்று வீடுகளை மீண்டும் தங்களுடைய எண்ணப்படியே ஒதுக்கித்தர வேண்டும் என்று ஒரு ஆலோசனையை மாநகராட்சி மன்றம் அனுப்பியிருக்கிறது. அதிலே ஏற்கனவே பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதால், தீர ஆலோசித்து முடிவு எடுப்பதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய கால தாமதமே தவிர, வேறு அல்ல.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பேரூராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

### வீராச்சிமங்கலத்திற்கு நீர் வழங்கல்

* 19 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் வட்டம், வீராச்சிமங்கலம் பஞ்சாயத்தில் குடி தண்ணீர்த் தொட்டி அமைப்பது சம்பந்தமாக தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அத்திட்டம் எந்த அளவில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) வீராச்சிமங்கலம் கிராமத்தில் ரூ. 1,61,000 செலவில் குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான மதிப்பீடு, கிராம நீர் வழங்கு திட்டத்தின் கீழ்



(பற்றுக் குறைப் பகுதிகள்) தயாரிக்கப்பட்டது. ஆனால் நிதி நிலை இடந்தராமையால் இப்பணி மேற்கொள்ளப்படாது விட்டுவிடப்பட்டுள்ளது.

(இ) இவ் வினா எழவில்லை.

### தாராபுரம் பஞ்சாயத்திலுள்ள பெரிய ஓடையின் குறுக்கே அணை

* 20 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் பஞ்சாயத்தில் உள்ள வெள்ளைக் கவுண்டன் வலசுக்குச் செல்லும் வழியில் உள்ள பெரிய ஓடையில் ஒரு பாலம் கட்ட அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து இப்பாலம் கட்டும் வேலையை மேற்கொள்ளும்படியும், இதற்காகும் செலவில் 40 சதவிகிதத் தொகையை பொம்மநல்லூர் ஊராட்சியிடமிருந்து பெறும்படியும் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரிக்குக் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெட்சிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகமும் அதனால் ஏற்பட்ட அமைதியின்மையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. க. இராமமூர்த்தி திரு. க. கோமதிசங்கர தீட்சிதர், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர், 27—1—1969 அன்று மாணவர்கள் மீது நடந்த லத்தி சார்ஜ் பற்றியும், அதனால் ஏற்பட்டிருக்கின்ற அமைதியின்மை குறித்தும், பேரவையின் நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கும் காரணத்தாலும், அதைப்பற்றி ஏதாவது கூற வேண்டுமானால், ஆளுநர் அவர்களுடைய உரையின்மீதான விவாதத்தில் கூறிக்கொள்ளலாம் என்ற காரணத்தாலும், அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (இ) காவேரிநகர் மில் கதவடைப்பையொட்டித் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "திருச்சி மாவட்டம் காவேரிநகர்

மில் தொழிலாளர்கள் வாங்கிவரும் சம்பளம் பஞ்சப்படியை குறைத்துக்கொண்டால்தான் வேலை என்று மில் மூடப்பட்டுள்ளது. அதனால் 1,200 தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் இன்று 28—1—1969 தேதி சட்டசபைக்கு முன்னால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் மறியல் போராட்டமும் நடைபெறுகிறது. ஆகவே, பாதிக்கப்பட்டுள்ள காவேரி நகர் மில் தொழிலாளர்களின் நிலையைப்பற்றியும், அவர்களின் நியாயமான குறைகளைத் தீர்த்துவைப்பது பற்றியும் விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டும்" என்று சட்டப் பேரவை 42-வது விதியின்கீழ் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் மறியல் போராட்டம் செய்வதும், உண்ணாவிரதம் இருப்பதும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியம் என்றும், இதன் காரணமாகப் பேரவையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் இப்பேரவையில் பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது உறுப்பினர்கள் இதை எடுத்துக் கூறலாம் என்று சொல்லி, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

## (உ) மேஃபீல்டு எஸ்டேட் தொழிலாளர்களின்மீது தடியடிப் பிரயோகமும் தொழிலாளர்கள் கைதானதும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. என். குமாரசாமி அவர்கள், "அண்மையில் நீலகிரி மாவட்டம் கூடலூருக்கு அருகிலுள்ள மேஃபீல்டு எஸ்டேட்டில் தங்களது நியாயமான கோரிக்கைகளைப் பெற அமைதி வழியில் வேலை நிறுத்தம் செய்த பெண்கள், கைக் குழந்தைகள் உட்பட்ட தொழிலாளர்மீது போலீஸ் தடியடி செய்தும், கண்ணீர்ப்புகை பிரயோகித்தும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். அத்துடனில்லாது தற்போது 18--1--1969-ம் நாள் சங்கத் தலைவர் உட்பட 21 தொழிலாளர்களைக் கைது செய்து கூடலூர் போலீஸ் வழக்கும் போட்டிருக்கிறது.

இதனால் இப்பகுதியில் வாழும் தொழிலாளர்கள் அச்சமும் பீதியும் கொண்டிருக்கின்றனர். அவசரமும் பொது முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினை பற்றி விவாதிக்க சபையை ஒருமணி நேரம் ஒற்றிவைக்க வேண்டும்" என்று சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட நிகழ்ச்சியாகும். கதவடைப்பு, உண்ணாவிரதம் போன்ற அன்றாட நிர்வாக காரியங்களுக்குட்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அனுமதி தரக்கூடாது என்று இப்பேரவையில் தீர்ப்பு எற்கெனவே பலமுறை வழங்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது உறுப்பினர்கள் இதைச் சுட்டிக்காட்ட வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலும் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.



## 3. முதலமைச்சரின் உடல்நிலை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, சட்டப் பேரவையின் முன்னவர் அவர்கள் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், நான் உறுதி கூறியதற்கிணங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நிலை குறித்த அறிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் மாலையில் திடீரென முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ரத்த அழுத்தக் குறைவு ஏற்பட்டது. அறுவை சிகிச்சையையொட்டி ரேடியம் ஊசிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த ரேடியம் ஊசியின் விளைவுகள் இருதய பாகத்தைச் சற்று பாதித்திருக்கக்கூடும் என்று டாக்டர்கள் கருதுகின்றனர். ரத்த அழுத்தக் குறைவினாலும் நெஞ்சு வலியினாலும் சற்று பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. உடன் டாக்டர்கள் விரைந்து சிகிச்சைகள் மேற்கொண்டு ரத்தமும் செலுத்தப்பட்டது. பின்னர் ரத்த அழுத்தம் சீர்ப்பட்டது. டாக்டர்கள் உடனிருந்து கவனித்து வருகிறார்கள். பிறகு நல்ல தூக்கம் ஏற்பட்டது. இப்போது அறிஞர் அண்ணா அவர்களின் உடல்நிலை சரியான நிலையில் இருக்கிறது என்று இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

## (அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு ( Senate ) 6—12—1968 முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30--1--1969 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 31—1—1969 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1--2--1969 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற்

படுமாயின் 3-2-1969 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. கவன ஈர்ப்பு

வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பருவமழை யின்மையினால் ஏற்பட்ட பஞ்ச நிலைமையையொட்டி, கொள் முதலை நிறுத்தி வைத்தலும், வரி கடன் வசூல்களை ஒற்றி வைத்தலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், டாக்டர் எச். வி. ஹாண்டே, ந. வீராசாமி ஆகியோர் உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டங்களில் பருவ மழை தவறிவிட்டதால் அங்கு ஏற்பட்டுள்ள பஞ்ச நிலைமை பற்றியும், அப் பகுதியை பஞ்சப் பிரதேசமாக பிரகடனப் படுத்தி வழக்கமாகவுள்ள உணவுத் தானிய கொள்முதலை நிறுத்தி வைத்து, மற்ற கடன் வசூல்களையும், நிலவரி வசூலையும் ஒற்றி வைக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance viz., the serious drought condition prevailing in the districts of North Arcot and Chingleput due to failure of monsoon, and the need to declare the area as famine affected area and waive the customary foodgrain levy, the loans and the land tax.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ந. வீராசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

அடுத்து, மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்க உரை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்டன ; இதனால் ஏரிகள் வறண்டு விட்டன. எனவே, குறித்த காலத்தில் நெல் பயிரிட முடியவில்லை. வேளாண்மைப் பணிகள் இன்றி உழவர்கள் அல்லலுற்றனர். இதன் விளைவாக நிலவரி நிலச் சீர்திருத்தங்கள் ஆணையாளர் 1968 டிசம்பர் முதற் பாதியில், அம்மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமையைத் தாமே நேரில் கண்டறிந்து மதிப்பிடுவதற்கெனச்



சுற்றுப் பயணம் செய்தார். அம் மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்தில் அவரது முடிவுகளையொட்டி கீழ்க்காணும் துயர் தணிப்புப் பணிகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

(1) 1969-70-ல்தான் செப்பனிடப்பட வேண்டிய சிறு பாசன ஏரிகளை நடப்பு ஆண்டிலேயே செப்பனிடும் பணிகளை மேற் கொள்ள ரூ. 7.78 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(2) 1969-70-ல்தான் செப்பனிடப்பட வேண்டிய பொதுப் பணித்துறை நீர்வரவு கால்களையும் ஏரிகளையும் நடப்பு ஆண்டிலேயே செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள ரூ. 9.209 லட்சம் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(3) குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்காகும் செலவில் அரசின் பங்காக ஊராட்சிகளுக்கு ரூ. 4.25 லட்சம் நிதி ஒதுக்கம் தனிப்பட்ட வகையில் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(4) பற்றாக்குறைப் பகுதிகளில் குடிநீர் வசதிகளை மேம் படுத்துவதற்கென, குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு, 1968-69-ம் ஆண்டுக்கு ரூ. 1.69 லட்சம் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(5) 1968-69-ம் ஆண்டில் சாலைப் பணிகளை மேற்கொள்ள ரூ. 50,000 நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களிலெல்லாம், நன்செய் நிலங்களுக்கான நில வரியைத் தள்ளுபடி செய்யக் கோரும் வேண்டுகோளை, உள்ளூர் வருவாய்த் துறை அதிகாரிகள் முறைப்படி ஆராய்வார். இந்தத் துயர்தணிப்பு பணிகளுக்காகும் செலவு சுமார் ரூ. 23.43 லட்சம் ஆகும்.

அடுத்து, வட ஆர்க்காடு மாவட்டத்திலும், தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்கு பருவ மழையும் முற்றிலும் பொய்த்து விட்டன. இதனால், வேளாண்மைப் பணிகள் பெருமளவு நின்று விட்டன; உழவுத் தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புகள் அளிப்பது அவசியமாகிவிட்டது. எனவே, அம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயணம் செய்த நிலவரி-நிலச் சீர்திருத்தங்கள் ஆணையாளரைக் கலந்து, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளர் வறண்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட உழவர் களுக்குத் துயர்தணிப்பு உதவியளிக்க செயற்குறிப்புகளை அனுப்பி யுள்ளார். இச் செயற்குறிப்புகளில் வருவாய்த் துறை வாரியம் செய்துள்ள சில திருத்தங்களுக்கு உட்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புகளை வாரியம் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கிணங்க அரசு, கீழ்க்காணும் துயர் தணிப்புப் பணிகளுக்கு ஏற்பு வழங்கியுள்ளது:—

(1) தேவைப்படும் இடங்களில் எல்லாம் உள்ளூர் அதிகாரிகள் நன்செய் நிலங்களுக்கு வரித் தள்ளுபடி அளிப்பர்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 சனவரி 28

(2) வறட்சிக் காலத்தில், நிலமற்ற உழவுத் தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், உள்ளூர்ப் பாசன மானியத்தின்கீழ் 1968-69-ம் ஆண்டுக்கு ரூபாய் 6 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(3) பெரிதும் பாதிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில், உழவுத் தொழிலாளர்களுக்கு மேலும் வேலை வாய்ப்பு அளிக்கும் நடவடிக்கையாக கிராமச் சாலைகளை அமைக்கவும், சரளைக்கல் போடவும், ரூபாய் 6 லட்சம் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(4) குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூபாய் 8 லட்சம் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் துயர்தணிப்புப் பணிகளுக்காகும் செலவு ரூபாய் 20 லட்சம் ஆகும்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் வறட்சி நிலைமைகள் நிலவி வருவதை ஒப்புக்கொண்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள உழவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் துயர் தணிப்பு அளிக்க தேவையான நடவடிக்கைகளையும் அது மேற்கொண் டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு தண்ணீர் இல்லையென்கிற நிலைமை மட்டுமல்ல; குடிப்பதற்குக்கூட நூற்றுக்கணக்கான கிராமங்களில் தண்ணீர் இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் உணவு உற்பத்தி செய்வதிலே இரண்டாவது ஸ்தானமாக வட ஆர்க்காடு மாவட்டம் இருந்து வருகிறது. மற்ற மாவட்டங்களுக்கு உணவு கொடுத்தது; அரிசி கொடுத்தது. ஆனால், இன்றைக்கு அந்த மாவட்டம் தன் தேவையைப் பூர்த்தி செய்ய கையேந்தக் கூடிய நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துயர் தணிப்பு பணிகளுக்காக 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டார். இது 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போட்டதுபோல்தான் இருக்கும். ஆகவே, மேலும் கூடுதலான நிதி ஒதுக்கி, உடனடியாக விவசாய அபிவிருத்தி செய்வதிலே கவனம் செலுத்த வேண்டும். கிணறுகள் எல்லாம் பாறை மயமாக இருக்கின்றன. பாறைகளை உடைத்து தண்ணீர் எடுக்க வேண்டு மானால், நாம் நவீன இயந்திரக் கருவிகளைப் போதுமான அள விற்குக் கொடுத்து கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். அந்தப் பாறைகளை உடைப்பதற்கு வெடி மருந்து வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரசங்கம் பண்ணு

மு.ப. 10-00 கிறீர்களே.

**திரு வி. கே. கோதண்டராமன்:** ஆலோசனைதான், அங்கே உள்ள குறைபாடு என்ன என்பதைச் சொல்லித்தான் ஆகவேண் டும், இல்லையா? அரிசி போதுமான அளவுக்கு விநியோகம் செய் தாக வேண்டும்.



1969 சனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் கொடுத்த அறிக்கையின் மீது விளக்கம் கேட்கலாமே தவிர தம்முடைய சொந்தக் கருத்துக்களைக் கூற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தக் கூடாது.

**திரு வி. கே. கோதண்டராமன்:** பள்ளத்தில் இருந்து மேட் டுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதாக இருக்கிறது. ஏரிகளை ஆழப் படுத்தி, தூர் வார வேண்டும். குடிதண்ணீர் வசதி உடனடியாகச் செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** சென்ற ஆண்டு மற்ற மாவட்டங்களுக்கு அரிசி சப்ளை செய்த மாவட்டம் என்கிறார், அரிசி போட வேண்டும் என்கிறார். ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. இது அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படலாமே தவிர உண்மை நிலையை உணர்ந்ததாக ஆகாது. இன்றைய தினம் அங்குள்ள நெருக்கடியான நிலைமையை அரசு நன்கு உணர்ந்திருக் கிறது. அதன் காரணத்தினால்தான் அனுதாபத்தோடு எல்லாப் பிரச்சினைகளையுமே கவனித்து வருகிறது. என்னுடைய அறிக் கையை ஆழ்ந்து பார்த்தால் தெரியும். உறுப்பினருக்கு இருக்கக் கூடிய அக்கறை அரசாங்கத்திற்கும் இருக்கிறது. ஆயினும் இப் போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க எல்லோரும் ஒத் துழைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, from the statement made by the Hon. Minister it is not very clear as to the exact concession that the Ministry is going to give with regard to the levy of food-grains, procurement and other things. We accept that the Ministry is already sympathetic to the problem. Will the Ministry examine more sympathetically the necessity for waiving this procurement? At least to that extent the ryots there will be benefited and the available food will be distributed in the district itself without going out of the district. I went and saw the situation myself and it is terribly pathetic. Because of the very acute situation, will the Ministry give a categorical assurance through this House that in these two districts they will waive procurement till the crisis is got over?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பின ருடைய யோசனை நல்ல யோசனை. போன வருடம் வடார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் 1 லட்சம் டன் கொள்முதல் செய்யப் பட்டது. இந்த ஆண்டு அங்குள்ள வரட்சி நிலைமையைக் கருதித் தான் அந்த அளவு தளர்த்தப்பட்டுவிட்டது. இதுபற்றி உறுதி மொழி ஒன்றும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு நாளினால் அளவுதான்—கொள்முதல் என்பது அடையாள அளவில் அங்கே இருக்கிறது. சோதனைச் சாவடிகளைக் கூட தளர்த்த ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, கனம் உறுப்பினருடைய யோசனை அமல்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு வி. கே. கோதண்டராமன்:** இதுபோன்ற நிலைமையில் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கக்கூடிய கடன்கள், அவர்கள் கட்ட வேண்டிய வரி இவற்றின் வசூலை ஒரு வருஷத்திற்காவது ஒத்திப் போட உத்திரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** என்னுடைய அறிக்கையைப் படித்துப் பார்த்தால் தெரியும். கூடுமான அளவில் நில வரியை ரத்து செய்வதற்கான உத்தரவு கூடப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

## 6. அமைச்சர் அறிக்கை

### துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 23—8—1968-ம் நாளன்று வினா எண் 112-க்கு விடையளிக்கப்பட்டதை யொட்டி திரு. கே. விநாயகம் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரி செய்து மாண்புமிகு உணவு அமைச்சர் அறிக்கை ஒன்றை அளிப்பார்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1967-68-இல் இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட 'இறக்குமதியான' உணவு தானியங்களின் அளவு குறித்தும், அதற்கு மத்திய அரசு வழங்கிய உதவித் தொகை குறித்தும் 23—8—68 அன்று சட்டமன்றப் பேரவையில் 112-ம் எண் வினாவிற்கு திரு கே. விநாயகம் எம்.எல்.ஏ. கேட்ட துணை வினாவிற்கு விடையளிக்கையில், அந்த உதவித் தொகையின் பயன் உணவு தானியங்களை வாங்குபவர்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்படுவதில்லை என்று அறிவித்தேன். கோதுமைக்கான உதவித் தொகை வழங்கப்படுவது குறித்த விவரமாவது:—

உணவு தானியங்கள் விற்பனை காரணமாக மாநிலங்களுக்கு நேரடி உதவித் தொகை எதையும் மத்திய அரசு வழங்குவதில்லை. மத்திய அரசு இறக்குமதியாகும் கோதுமைக்காக முடிவு செய்கிற வெளியீட்டு விலை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக உள்ளது. அதற்கான உதவித் தொகை அந்த விலையில் அடங்கியுள்ளது. உணவு தானியங்களை வாங்குபவர்களுக்கு அதன் பயன் கிடைக்கச் செய்ய வேண்டுமென 31—12—67 வரை கருதப்பட்டது. 31—12—67 வரையில் கோதுமையின் வெளியீட்டு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 55 ஆகவும், அதில் சேர்க்கப்பட்டுள்ள உதவித் தொகை குவிண்டால் ஒன்றுக்கு சுமார் ரூ. 12 ஆகவும் இருந்தது. குவிண்டால் ஒன்றுக்கான அதே உதவித் தொகை கோதுமைப் பொருள்களின் விற்பனையிலும் 31—12—1967 வரையில் சேர்க்கப்பட்டது.

1—1—68 முதல் இந்திய அரசு கோதுமைக்குக் குவிண்டால் ஒன்றுக்கென வழங்கப்பட்ட ரூ. 12 உதவித் தொகையை நீக்கிவிட்டு, கோதுமையின் வெளியீட்டு விலையை ரூ. 55 என்பதிலிருந்து





67 ஆக உயர்த்தியது. எனவே 1—1—68 முதல் கோதுமையின் அல்லது கோதுமை பொருள்களின் விற்பனையில் உதவித் தொகை எதுவும் இல்லை. கோதுமை, கோதுமைப் பொருள்களின் விலை முழுவதையும் அவற்றை வாங்குபவரே ஏற்கின்றனர்.

## 7. நடைமுறைக் கேள்வி

### முதலமைச்சர் பொறுப்புக்களைக் குறித்து.

THIRU K. VINAYAKAM: On a ponit of order. I understand that due to the ill-health of our Chief Minister the portfolios which he was having have been distributed among his colleagues. As far as that is concerned, it goes all right. But the Chief Minister is also an appellate authority in the sense that if one departmental Minister passes an order and if the aggrieved party thinks that he should appeal, he has got the right of appealing to the Chief Minister. The Chief Minister can reverse the order pased by another Minister. That is the position. I understand that his portfolios only have been distributed among his colleagues. An aggrieved party may think that he should go in appeal. In that contingency what is the arrangement that this Cabinet has made? Who is the authority to whom we should go in appeal in case the concerned Minister makes an order which is not to our taste?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்துடைய நிர்வாக அலுவல்கள் எப்படி நடைபெறவேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டத்திலே உள்ளதைப் பொறுத்து பிஸினஸ் ரூல்ஸ் என்று நம்முடைய அரசாங்கத்திலே இருக்கிறது. அதிலே எல்லா விதிகளும் இருக்கின்றன. அப்பலெட் அதாரிடி என்று ஒன்றும் அதிலே கிடையாது. சீஃப் மினிஸ்டர் அவர்கள் தான் அரசாங்கத்தை நடத்துகிறவர்கள். அவர்களும் மற்ற மற்ற இலாக்காக்களுக்குப் பொறுப்புள்ளவர்களும் எப்படி நடத்த வேண்டுமென்று விதிகளிலே இருக்கிறது. எந்த எந்தச் சமயங்களிலே எந்த எந்த முறையிலே செய்யவேண்டுமென்றெல்லாம் இருக்கிறது. அதன்படிதான் நடந்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of clarification. He has not met my point. Our Hon. Minister for Law is now entrusted with the portfolio of Finance. Suppose there is a financial problem concerning a subject of the State and he thinks that the order passed by the Hon. Minister for Law is wrong and detrimental to his interest. Naturally he will go to the Hon. Chief Minister who is the appellate authority. For instance, our Hon. Minister for Local Administration passes an order in his capacity as the Minister and if the aggrieved party feels that the order passed by him is detrimental to his interests, naturally he would appeal to the Hon. Chief Minister who can stay his order. Evidently, the Hon. Minister is not aware of it. Now, the Chief Minster's portfolios have been distributed among other Ministers and I want to know who exactly is the Chief Minister among them. I want the position to be made clear and not left in a nebulous position. People at large are awaiting for this clarification and do not try to explain away the situation.

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவருக்கு அரசியலமைப்புச் சட்டம் நன்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். சீஃப் மினிஸ்டர் அப்பலெட் அதாரிடி என்று எங்கேயும் போடவில்லை. பிஸினஸ் ரூல்ஸிலும் கிடையாது. அவர்களாகவே அப்படி ஒன்று இருப்பதாக யூகித்துக்கொண்டு பேசுவது நல்லதல்ல. சீஃப் மினிஸ்டர் எந்த போர்ட்ஃபோலியோ பற்றியும் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. இப்பொழுதும் அவர்கள் கேட்கலாம். கான்ஸ்டிட்யூஷன் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்று பார்ப்பதற்கு கவர்னர், அதாவது ஹெட் ஆப் தி ஸ்டேட்தான் அதாரிடி. அவர்களுக்கு அட்வைஸ் செய்வதற்கு மினிஸ்டர்கள் இருக்கிறார்கள். ஆன் தி அட்வைஸ் ஆப் தி சீஃப் மினிஸ்டர், கவர்னர் போர்ட்ஃபோலியோக்களை அலாட் செய்கிறார்கள். எல்லாவற்றையுமே சீஃப் மினிஸ்டர் பார்க்கவேண்டுமென்று அவசியமில்லை. எந்த எந்தச் சமயங்களிலே அவருக்குப் போகலாம் என்று ரூல்சிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் குறிப்பு போகலாம் என்றும் இருக்கிறது. அவர் எந்தக் குறிப்புகளையும் கேட்கலாம் என்றும் இருக்கிறது. அப்பலெட் அதாரிடி என்று ஒன்றும் கிடையாது. என்னுடைய போர்ட்ஃபோலியோவில் இருப்பதை மற்றொரு அமைச்சர் கேட்டால் அதற்காகவும் அவர்கள் கேட்கலாம். ஏதோ அப்பலெட் அதாரிடி என்று ஒன்று இருப்பது போலவும், அதற்காக சீஃப் மினிஸ்டர் அவர்களுக்குப் போக வேண்டுமென்று இருப்பது போலவும் நினைத்துக்கொண்டு அவர்கள் பேசுவது சரியல்ல. அப்படி ஒன்றும் விதிகளில் சொல்லப்படவில்லை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, to put it in a nut shell, the hon. Member, Thiru Vinayakam, wants to know who is acting as the Chief Minister when he is absent and is undergoing treatment. Now the Chief Minister is taking full rest and somebody should be acting in the Chief Minister's position. 'The Chief Minister is not the appellate authority and that we know but who is the acting Chief Minister in the absence of the Chief Minister?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொறடா கேள்வியை மாற்றிக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகக்கூட பட்ஜெட்டில் சீஃப் மினிஸ்டர் அவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்கள் சீஃப் மினிஸ்டராகத்தான் இருக்கிறார்கள்.

**திரு பி. ஜி. கருத்திருமன்:** சீஃப் மினிஸ்டர் அவர்களுடைய உடல் நிலையை உத்தேசித்து அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க கூடாது என்பதற்காகத்தான் நான் கேட்கிறேன். இப்பொழுது ஆக்டிங் ஆக யார் இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** ஆக்டிங் சீஃப் மினிஸ்டர் யார் என்று கேட்கிறார்கள். அப்படி நியமிக்க வேண்டுமென்று யாரும்



வற்புறுத்த முடியாது. முன்பு அமெரிக்கா சென்றிருந்தபோது எப்படி நடந்து வந்ததோ அதுபோல்தான் இப்பொழுதும் நடந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்காக ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்களே தவிர, ஒழுங்கு முறைபற்றி ஒன்றும் எழுப்பவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் அல்லது ஒழுங்குப் பிரச்சினை என்பது சபை நடவடிக்கைகள் குறித்த விதிகளை மீறி ஏதாவது நடந்து இருந்தால் அப்படி உள்ளவற்றைப் பற்றித்தான் எழுப்ப வேண்டும். தம்முடைய ஐயத்தை போக்கிக் கொள்வதற்காக இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டாரே தவிர, அவர் எழுப்பியதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை. அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

## 8. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள் திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (இ) 1969-ம் ஆண்டு, கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு, கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதாவை இப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் இப்பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து ஆளுநர் அவர்களின் பேருரையின்மீது விவாதம் தொடருகிறது.

### (9) ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. என். கிட்டப்பா:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து விவாதிக்கின்ற விவாதத்தின் அடிப்படையில் கவர்னர் பெருமான் அவர்கள் அளித்த பேருரைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் முகத்தான் நானும் ஒரு சிலவற்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டுத் தேறிக்கொண்டு வருகிற இந்த நேரத்தில், நம்மை யெல்லாம் தொடர்ந்து வழிநடத்திச் செல்ல, வழக்கம்போல் நம்முடன் தொடர்ந்து பணியாற்ற, இந்த நல்ல நேரத்தில் உங்கள் அத்தனை பேருடனும் இணைந்து, அண்ணா அவர்களை வாழ்த்தி, விரைவில் அவர்கள் நம்முடன் இருந்து பணியாற்றி வருவார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய பேச்சை நான் தொடருகிறேன்.

இப்பொழுது நடைபெறுகின்ற இந்த ஆண்டினுடைய கூட்டத்தில் இதற்கு முன்னாலே சென்னை ராஜ்யம் என்ற பெயரில் இருந்த தமிழகம், தன்னுடைய சொந்தப் பெயரில் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டப்பட்டு இருப்பதினாலே, 1969-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு கலந்துகொள்கிறார்கள். எவ்வளவுதான் மகிழ்ச்சி இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர்கள், உணவு அமைச்சர் போன்றவர்கள் சுட்டிக்காட்டுகின்றபடி, ஏறத்தாழ இந்த ஆண்டு தென்மேற்குப் பருவக் காற்று தவறியதால் மழை இல்லாமல் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் வரட்சியான சூழ்நிலை ஏற்பட்டு அந்த சூழ்நிலையின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளைப் பற்றியும் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றியும் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையிலேயும் நாம் தெளிவாகக் காண்கிறோம்.

சென்ற ஆண்டு 50,000-க்கு மேற்பட்ட விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தந்ததைப்போல், இந்த ஆண்டிலும் இதுவரையில் 40,161 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தந்திருப்பதைப் பற்றியும், தொடர்ந்து இணைப்புகள் தரப்படக்கூடிய சூழ்நிலை அதிகமாக இருப்பதைப்பற்றியும் கவர்னர் பெருமான் உரையிலே விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, 12 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்கு நில அடைமான வங்கியின் மூலம் கடன் உதவி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டிருப்பதைப்பற்றியும், அதைப் போலவே மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிக அதிகமான அளவு தண்ணீர் இல்லாவிட்டாலும், இருக்கின்ற நீரைத் தேக்கிவைத்து, சாமர்த்தியமாக தடுத்து நிறுத்தி, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குச் சம்பா அறுவடையின்போது கொடுக்கும் பெரும் பொறுப்பை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மிகத் திறமையாக நிறைவேற்றிய காரணத்தால், வறண்ட



நேரத்தில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் தண்ணீர் பெற முடிந்தது. தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த பணியினைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிய பிரச்சினை, கீழ்வெண்மணி சம்பவம் போன்ற பிரச்சினைகள் இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களை மட்டுமல்லாமல் மாநிலத்தில் உள்ள மற்றவர்களையும் ஈர்க்கத்தக்க நிலையில இருப்பதைக் காண்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகள், அல்லது இருக்கின்ற நிலைமைகள் 1943-ம் ஆண்டில் இருந்தே தொடர்ந்து இருந்து வருகின்ற விவசாயப் பிரச்சினைகள் என்று கூறும்போது கூலிப் பிரச்சினை போன்றவைகளும், விவசாயிகளுக்குத் தேவையான பிரச்சினைகளும் அதிலே வரும். இந்தப் பிரச்சினைகள் 1943-ம் ஆண்டில் இருந்தே நடைபெற்று வருவதை அந்த மாவட்டத்தின் விவசாயப் பிரச்சினைகள் பற்றி அறிந்தவர்கள் சிறப்பாக உணர்ந்திருக்க முடியும் என்று கருதுகிறேன். தமிழ் மாநிலமெங்கும் இன்றைய தினம் அந்தப் பிரச்சினைகள் பேசப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இன்று 60-40 வாரம் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், மாயூரம் ஒப்பந்தம், நில உச்ச வரம்புச் சட்டம், கடன் ஒத்தி வைப்பு மசோதா ஆகியவற்றுக்கான அடிப்படைக் காரணங்கள் அதிகமான அளவு குவிந்து இருப்பதன் காரணமாக, நிலக்கிழார்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவு நீடிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு பல நல்ல காரியங்கள் தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. முத்தரப்பு மாநாடுகள் மதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட கலெக்டர் ரெங்கபாஷ்யம் அவர்கள் முயற்சியால் கூட்டப்பட்டது. மன்னார்குடியிலே நடந்த முத்தரப்பு மாநாட்டிலே நிலப் பிரபுக்களும், நிலத்திலே வேலை செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களும், அரசாங்கத் தரப்பைச் சார்ந்த கலெக்டர், மாவட்ட காவல்துறை அதிகாரி ஆகிய மூன்று பகுதியினரும் ஒன்றாக உட்கார்ந்து, பிரச்சினைகளைப் பற்றிக் கலந்து பேசி, இன்னின்ன விதத்தில் கூலிகள் அமைதல் வேண்டும், விவசாயிகளுக்கு இன்னின்ன விதத்தில் நன்மைகள் செய்ய வேண்டுமென்பது பற்றியெல்லாம் முடிவுகள் எடுக்கப்பட்டு, மன்னார்குடி ஒப்பந்தம் ஏற்பட்டது குறித்து உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். இதற்கு முன்னாலே, கடந்த 20 ஆண்டு காலத்திலே, காங்கிரஸ் ஆட்சி காலத்திலே ஏற்பட்ட ஒப்பந்தங்களைவிட, விவசாயத் தொழிலாளர்களுக்காக உருவாக்கிக் காட்டப்பட்ட சட்ட திட்டங்களைவிட, மன்னார்குடி ஒப்பந்தத்தின் மூலம் கூலி 4 படியாக—பட்டணம் படி அல்ல, எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய சிறு படி—இருந்தது 4½ படியாகவும், 4½ படியாக இருந்தது 5 படியாகவும், 5 படியாக இருந்தது 5½ படியாகவும், 5½ படியாக இருந்தது 6 படியாகவும் ஆறு படிக்குக் குறைவு இல்லாமலும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி வழங்கப்பட

வேண்டுமென்று முத்தரப்பு மாநாட்டிலே தீர்மானம் உருவாக்கப் பட்டது. ஓராண்டுக் காலத்திற்கு அந்த ஒப்பந்தம் உருவாக்கப் பட்டிருந்தாலும் நடைபெற்று முடிந்த குறுவை அறுவடை நேரத்தில் அந்த ஒப்பந்தம் நல்ல முறையில் பயன் அளித்தது. இதற்குப் பிறகு திருவாரூர் ஒப்பந்தத்தின் மூலம் நல்ல பல தீர்மானங்கள் உருவாக்கப்பட்டன.

இருந்தாலும், விவசாயப் பிரச்சினைகள், கூலித் தகராறுகள் எல்லா இடங்களிலும் இல்லாவிட்டாலும் தஞ்சை மாவட்டத்தில் நாகை போன்ற தாலுகாக்களிலும் வெண்மணி போன்ற இடங்களிலும் நடந்த நிகழ்ச்சிகள் அந்தப் பிரச்சினை பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்ற சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது. மன்னார்குடி ஒப்பந்தத்திற்குப் பின்னரும் சில நிலச்சுவான் தார்கள் தங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஒரு கிராமத்தில் ஒரு இடத்தில் 4 படி வழங்கப்படுகின்ற நிலைமையும், இன்னொரு இடத்தில் 5 படி வழங்கப்படுகின்ற நிலைமையும் இருந்தது. ஒரு ஊரிலே நெடுஞ்சாலைக்குக் கீழ் புறத்திலே 5 படியும், மேற்கே 5½ படியும் கொடுக்கப்படுகின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. இத்தகைய நிலைமைகளை மாற்றும் வகையில் அரசாங்கம் முத்தரப்பு மாநாடுகளைக் கூட்டி நல்ல முடிவுகளை எடுப்பதை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டி ருக்கிறோம். ஆங்காங்கு இருக்கின்ற தாசில்தார்கள், ஆர். டி.ஓ.க் கள், குறிப்பாக தஞ்சை மாவட்டக் கலெக்டர் அவர்கள், மாவட்ட காவல் துறை அதிகாரி ஆகியோர் தங்களுடைய முழு முயற்சி யைச் செலுத்துவதைப் பார்க்கிறோம்.

(திரு. பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

இதனால் பிரச்சினை தீர்ந்து விடுகிறதா என்று கேட்டால் எதை யாவது சாக்காக வைத்து சில இடங்களில் எப்படியோ விவசாயத் தொழிலாளர் மத்தியில் சலசலப்புகள் உருவாக்கப்படுவதைக் காண்கின்றோம். கீழ்வெண்மணிப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கு மட்டுமல்ல, தமிழகம் பூராவிலும் அந்தப் பிரச்சினை அடிபடும் பிரச்சினையாக இருக்கிறது. கீழ் வெண்மணி சம்பவத்தைப் பொருத்த மட்டில் பெரிய மிராசு தாரர்களுக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும், பெரு நிலக் கிழார் களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதுதல் என்று எப்படி வியாக்கியானம் செய்தாலும் அதிலே சுடப்பட்டு, குத்தப்பட்டு, எரிக்கப்பட்டு இறந்தவர்கள் விவசாயத் தொழிலாளர்கள்தான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. மிராசுதாரர்கள் ஏன் சாகவில்லை என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அழிந்தவர்கள் நிச்சயமாக விவசாயத் தொழி லாளர்கள் தான். அதை மறந்து விடக் கூடாது. கீழ் வெண்மணி யில் ஏதோ சர்க்காரின் ஆணைக்கேற்ப நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாகவோ, கண்ணீர்ப் புகை செலுத்தியதன் காரணமாகவோ 40-க்கு மேற்பட்டவர்கள் இறந்துவிடவில்லை.





இதிலே சர்க்காரைக் குறை கூறவேண்டுமென்ற நோக்கத்தில் பார்க்காமல் பொதுவாகப் பார்ப்போமானால் மனித சமுதாயத்தில் மாற்றித் தீரவேண்டிய கோளாறின் அடிப்படை இது என்பதை உணர வேண்டும். இதைக் கட்சிப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல், கட்சிகளுக்கிடையே நடைபெறுகின்ற போராட் டங்கள் என்று கற்பிக்காமல், கறுப்பு சிகப்பு என்ற கலர் கொடுத்து விடாமல், மூவர்ணம் என்று வேறு வகையில் பார்த்து விடாமல், கீழ்வெண்மணியில் நடைபெற்ற சம்பவத்திற்கான உண்மைக் காரணம் என்ன என்பதைப் பற்றி இதய சுத்தியோடு ஆராய வேண்டும், பிரச்சினையை அணுக வேண்டும். வன்முறையைக் தூண்டிவிடுகிறவர்கள் அல்லது வன்முறையை வலுக்கட்டாயமாகத் திணிக்கக்கூடியவர்கள், அரசாங்கம் இருக்கும்போது தங்களுக்குத் தாங்களே வன்முறையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் வன்முறையில் ஈடுபடுவதைத் தடுக்கும் முறையில் இந்த அரசாங்கம் வன்மையாக நடவடிக்கை எடுக்கும் என்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். அதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, இந்த நல்ல நிலைகளை ஆளுநர் அவர்கள் தம் உரையில் நமக்கு விளங்க வைத்தமைக்கு நான் அவர்களுக்கு விவசாயத் தொழிலாளர்கள் சார்பில் நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரையின்மீது நடக்கிற விவாதத்தில் கலந்துகொள்கிற நேரத்தில் எங்களுடைய பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் மு.ப. 10-30
தமிழகத்தின் ஒளி விளக்காகவும், தமிழ் அறிந்த மக்களின் இதயங் களில் எல்லாம் குடியிருக்கக்கூடிய தெய்வம் போன்ற எங்கள் தலைவர் அவர்கள், நாகர்கோவில் பாராளுமன்ற இடைத் தேர்தலில் இந்த அமைச்சரவையை எதிர்த்தும், அரசின் தலையீட்டை எதிர்த்தும், மேலும் தமிழ் நாட்டில் ஒரு பெரிய பணக்காரராகவும் தமிழ் நாடு டாட்டா, தமிழ் நாடு பிர்லா என்று கூறப்படுகிற ஒரு பெரிய பணக்காரரை, அதாவது ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் பண பலத்தையும் எதிர்த்து வெற்றிவாகை சூடி இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு வெற்றியைப் பெற்றிருக்கி றார்கள் என்று நான் இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் முதல் அமைச்சர் அவர்கள் உடல்நலம் பெறவேண்டுமென்று கூறியிருப்பதை எங்கள் கட்சித் தலைவர், எங்கள் சார்பாக வரவேற்றார்கள். ஆனால், ஒரு பெரிய உண்மையை தங்கள் வாயிலாக இந்த மன்றத்திற்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். அறுவை சிகிச்சை முடிந்து அமெரிக்காவிலிருந்து வந்த முதல் அமைச்சர் அவர்களுக்கு, அறுவை சிகிச்சை செய்த டாக்டர் மில்லர் அவர்கள் சில நிபந்தனைகளை அவர்கள் உடல்நலம் பற்றி கொடுத்திருந்தார் களாம். குறிப்பாக, முதல் அமைச்சர் அவர்கள் குளிர்ந்த அறையில் இருக்க வேண்டும், அவர்கள் உடலில் வியர்வை துளிர்க்கக் கூடாது, பூர்ண ஓய்வு எடுக்க வேண்டுமென்று கூறி

யிருந்தார்களாம். ஆனால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தேர்தலுக்காக, அதுவும் ஒரு சுயேச்சை அபேட்சகரை ஆதரிக்கும் நோக்கத்தோடு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் ஸ்ரீவைகுண்டம் தொகுதி உறுப்பினர் ஆதித்தனார் அவர்களும் இருவருமாகச் சேர்ந்து ஒரு தேர்தல் சினிமா விளம்பரப் படத்தில் முதல் அமைச்சர் அவர்களை வற்புறுத்தி பங்கு பெறச் செய்து பல மணி நேரம் அவர்களை சினிமா ஸ்டுடியோ போன்ற இடத்தில் மிக வெப்பம் தரக்கூடிய மின் விளக்குகளுக்கு முன்னால் வைத்து அவர்களின் உடலை மிகவும் வேதனைப்படுத்தி சினிமா படம் எடுத்து அந்தப் படமும் வெளி வந்திருக்கிறது. இப்போது அவர்களுக்கு அந்த நோய் திரும்பியிருக்கிறது என்றால் அந்தப் படப்பிடிப்புத்தான் காரணம் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

மேலும், கவர்னர் பெருமான் அவர்களின் உரை சாதாரணமாக விளங்கக்கூடிய உப்பு சப்பு இல்லாத உரையாகவே இருக்கிறது. ஏறிவரும் விலைவாசிகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய விதத்தில் கொள்கை விளக்கம் எதுவும் கவர்னர் பெருமான் அவர்களின் உரையில் இல்லை. படித்தவர்கள் மத்தியில் வேலை வாய்ப்பு இல்லை என்பதையும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டும் கவர்னர் அவர்கள் உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய விதத்தில் வழிமுறைகள் எதுவும் சொல்லப்படவில்லை. எங்கள் ஒப்பற்ற தலைவர் காமராஜ் அவர்கள் இந்த மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் பொதுத் துறையிலானாலும் சரி, அல்லது தனியார் துறையிலானாலும் சரி இந்த மாநிலத்தில் தோன்றின. அதனால் மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளும் கிடைத்தன. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக புதுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கனவே இருக்கிற தொழிற்சாலைகளில் கதவடைப்புகள், லாக்கவுட், வேலை நிறுத்தங்கள் என்று இந்த விதமாக தொழில் அமைதி கெட்டு தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன் குறைந்து கொண்டிருப்பதைத்தான் இப்போது காண்கிறோம். குறிப்பாக, இந்த மாநிலத்தில் மணலி தொழிற்சாலை வரப்போகிறது, தூத்துக்குடி அருகில் உரத்தொழிற்சாலை வரப்போகிறது என்று சொன்னால் இது வெறும் கண் துடைப்பிற்காக, அதாவது புரையோடிப் போன புண்ணுக்கு புனுகு மூலாம் பூசுவது போல்தான் இருக்கிறது. அது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் திட்டமாக இருக்காது.

தமிழகத்தில் தலை சிறந்த சாதனையாகக் கூறப்படுகிற இந்தப் பரிசுச் சீட்டு பற்றி, அதாவது மாதத்திற்கு ஒரு முறை 16 பேர்களை லட்சாதிபதிகளாக ஆக்கக்கூடிய அந்தத் திட்டம் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் காரணமாக அரசுக்கு வந்த தொகை



என்ன, அந்தத் தொகை காரணமாக அமைக்கப்பட்ட பள்ளிக் கூடங்கள் எத்தனை, போடப்பட்ட சாலைகள் எத்தனை, அமைக்கப் பட்ட மருத்துவ மனைகள் எத்தனை என்ற விவரத்தை மக்கள் வெகு ஆர்வத்தோடு எதிர்பார்த்தார்கள். அந்த விவரம் இல்லை என்ற ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

மேலும், கவர்னர் அவர்கள் தன் உரையில் ஒரு பெரிய அபாயக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு, இப்போது உள்ளதுபோல் இயற்கை பொய்த்தாலும், விளைச்சல் நன்றாக இருந்திருக்கிறது. ஆனால், நடப்பாண்டில், பல திட்டங்கள் போட்ட பின்பும், விசையேற்றங்களுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுத்த பின்பும், இந்த ஆண்டு உணவு உற்பத்தித் திறன் குறையும் என்று கூறப்படுகிறது. இந்த நிலைக்கான காரணங்கள் என்ன? விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை விற்பதற்கு வேண்டிய வசதிகள் தேவை. அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டியதும் தேவை. அதே நேரத்தில் விவசாயத்தில் ஈடுபடுகிற தொழிலாளர்களுக்கு நியாயமான கூலியும் தேவை. இது சாதாரண அடிப்படைப் பிரச்சினை.

இன்று கீழ்த் தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் ஏற்பட்டுள்ள சச்சரவுகளை, பிரச்னைகளை அலசிப் பார்த்து அதன்மீது ஒரு முடிவு கொடுக்க ஓய்வுபெற்ற ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை நியமித்திருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையையும் எப்போதும் ஆய்வுக் குழு அமைத்து, அமைத்து அவர்கள் சொல்கிற பரிந்துரைகளை நாம் ஏற்றுக்கொள்வது என்றால், நான் கேட்கிறேன் அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்று. அமைச்சர்கள் கீழ் தஞ்சைக்கு விஜயம் செய்யவில்லையா? கண் இருந்தும் காணாதவர்களாகவும், காது இருந்தும் கேட்காதவர்களாகவும் அவர்கள் மக்கள் குறைகளைக் கேட்காமலேயே, பார்க்காமலேயே வந்து விட்டார்களா? அல்லது இந்த மன்றத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற பிரச்சினைகள் பற்றி, பேசிய நேரத்தில், அந்த நேரத்தில் கேட்காவிட்டாலும் அதற்குப் பின்பு அந்தக் குறிப்புகளையாவது பார்த்திருக்கக் கூடாதா ? அந்த விதமாகப் பார்த்திருந்தால் தஞ்சைத் தரணியில், கீழ்த் தஞ்சையில் ஏற்பட்ட ஒரு பெரிய மனக்கலக்கம் தரக்கூடிய அந்தக் கோர சம்பவம் நடக்காமல் பார்த்திருக்க முடியும். குறிப்பாக, இன்று நாம் பார்ப்பது என்னவென்றால், மக்கள் இந்த சர்க்காரைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் இருக்கிறார்கள். குறிப்பாக பல தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை பற்றி விவரம் வேண்டுமானால் ஒரு கமிஷன், அதேபோல் தொழிலாளர்கள் நிலைபற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் என்றால் அமைச்சர்களுக்கு என்ன வேலை என்று மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

மேலும், இந்த கவர்னர் அவர்கள் உரையில் கல்விபற்றி குறிப்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக அநேக பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிந்துகொண்டு வருகிற

ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் இருக்கின்றது. என் சாத்தாங்குளம் தொகுதி உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 400-க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரியக்கூடிய ஆசிரியர்களுக்கு கடந்த ஒரு மாத காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை. என் தொகுதியின் பக்கத்துத் தொகுதியான ராதாபுரத்தில், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாத காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை. கல்விக்காக இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறேன். கல்வி போதிக்கக்கூடிய ஆசிரியர்கள் பட்டினியாக அறிவாலயங்களுக்குச் செல்வது என்றால் அங்கு அவர்கள் அறிவு ஒளியைத்தான் பரப்புவார்களா அல்லது அவர்களின் அன்றாடப் பிரச்சினை பற்றி யோசிப்பார்களா என்று கேட்கிறேன்.

மேலும், கவர்னர் அவர்களின் உரையில் பெரியதொரு நிலையை சர்க்கார் ஊழியர்கள் எதிர்பார்த்தார்கள். பே கமிஷன் உண்மையிலேயே வரும், சர்க்கார் ஊழியர்களின் சம்பளம் பற்றி மறு பரிசீலனை செய்வார்கள் என்றெல்லாம் எதிர் பார்த்தார்கள். பே கமிஷன் பற்றி ஒரு வார்த்தைகூட கவர்னர் அவர்கள் உரையில் இல்லை.

மேலும், மதுரை உணவுக் கிட்டங்கியில் பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடந்திருக்கிறது. இப்படி மாபெரும் மோசடி ஒன்று நடந்ததை கவர்னர் அவர்களின் உரையில் குறிப்பிட்டு இதற்கு இந்தவிதமான பரிகாரத்தை நாங்கள் நாடினோம் என்று சொல்லியிருக்கலாம். அதுவும் இல்லை.

மேலும், சென்னை உயர்நீதி மன்றத்தில் பணி புரிந்து கொண்டிருக்கக்கூடிய ஊழியர்கள் தங்களுக்கு தலைமைச் செயலகம் அதாவது செக்ரட்டேரியேட்டில் பணி புரிகிற ஊழியர்களின் ஸ்கேல் ஆஃப் பே வேண்டுமென்று பல காலமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைபற்றியும் கவர்னர் அவர்கள் உரையில் எதுவும் இல்லை. மேலும், ஸ்பீக்கர் சார் . . .

With great respect I would like to bring to your kind notice the statement made by the Hon. Ministers sometimes, which interfere with the course of investigation done by the Police For example in Nagercoil, there was one murder. One Kittu was murdered. Immediately the First Information Report had been filed. Police had taken up investigation. When Police investigation is proceeding, the Minister's statement, namely that the assailant was a Congressman, would really interfere with the course of investigation. Therefore, my submission is that when a first-class offence is under investigation, the Ministers should refrain themselves from making any statement which will; in fact, interfere with the investigation, impartial investigation, done by the Police. With great respect, I may say, that the Ministers are giving political colour. If they want to give any colour that should be done after the final charge-sheet had been





filed in Court. Therefore, Sir, I would ask the Hon. Speaker to advise the Ministers not to make such statements, when investigation of criminal offences is being done by the Police.

With these words, I resume my seat.

*திரு. பெ. மலைச்சாமி: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, மேன்மைமிகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்ளுகின்றேன். மேன்மைமிகு ஆளுநர் அவர்களின் உரை இந்த ஆண்டு பெரிய இலக்கியமாக மாறியிருக்கிறது. பழங் காலத்தில் நூல் எழுதுவதற்கு முன்னாலே இறைவன்மீது வணக்கம் பாடிவிட்டுத் தான் தங்கள் நூலை எழுதுவார்கள். அதைப்போல மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் அவரது உரையின் முன்னால் தமிழகத்தின் தெய்வமாக இருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி கூறிவிட்டு ஆரம்பித்து இருப்பதால் தெய்விக இலக்கியமாக இவ்வாண்டு இது அமைந்திருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மலரைப் போன்றவர்கள். மல்லிகை மலரானது பக்கத்திலேயிருக்கும்போது மணம் தரும். மனோரஞ்சித மலரானது சற்றுத் தூரத்திலேயிருந்தாலும் மணம் தரும். இத்தனை நாட்கள் சட்டமன்றம் நிகழ்ந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மல்லிகை மலரைப்போல் இங்கேயே இருந்து மணம் வீசிக்கொண்டிருந்தார்கள். இன்று அடையாற்றிலிருந்துகொண்டு மனோரஞ்சித மலரைப்போல இந்த சட்டமன்றத்திற்கு மணத்தை வீசிக்கொண்டிருக்கிறார்கள். நான் எதற்காக மலரை உதாரணமாகச் சொல்லுகிறேன் என்றால், எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. மார்டின் அவர்கள் சொன்னார்கள், நாகர்கோயிலிலே அடக்குமுறை இருந்தது என்று. தமிழகத்தின் தெய்வம் முதலமைச்சரவர்கள் மலரைப் போன்ற மென்மையான இருதயம் படைத்தவர்கள். சில பேர் அரசியல் கட்சிகளை வைத்துக்கொண்டு செய்கின்ற தவறுகளை மன்னிக்கின்ற மனோபாவம் இருக்கின்ற காரணத்தால்தான் அது அடக்குமுறையாக இருக்கிறது. நான் சிறு வயதில் ஒரு கதை கேட்டிருக்கிறேன். ஆற்றில் கிழவி ஒருவள் குளித்துக்கொண்டிருந்தபொழுது அந்த நேரத்தில் கரையோரமாகச் செல்லும் பள்ளி மாணவன் ஒருவன் அவளைப் பார்த்து 'என்ன பாட்டி, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் மஞ்சள் போட்டுக் குளிக்கிறாயே' என்றானாம். அதற்கு அந்தக் கிழவி 'பழைய நினைவுடா பேராண்டி' என்றாளாம். அதைப்போல் நாகர்கோயிலில் அவர்கள் அடைந்த வெற்றியானது கிழவி முகத்தில் மஞ்சள் பூசிக்கொள்வது போன்றதே தவிர, புதிய வெற்றி இல்லை என்பதைக் கூறிக்கொள்ளுகின்றேன்.

தென் பாண்டி நாட்டில் ஜல்லிக்கட்டு நடத்துவார்கள். அந்த ஜல்லிக்கட்டில் மஞ்சி விரட்டி மாடு பிடிப்பார்கள். ஒரு மஞ்சி விரட்டிலும் பிடிபடாத காளை அடுத்த மஞ்சி விரட்டில் பிடிபட்டுவிட்டால், அதற்குப் பெருமை வந்துவிடாது. அதைப்போல முன்னாலே விருதுநகரிலே பிடிபட்ட மாடுதான் இப்பொழுது நாகர்கோயிலிலே வெளியே வந்திருக்கிறது என்பதை நான்

இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தென்காசியிலே தோற்ற பாவத்தைக் கழுவுவதற்காக எங்கே கழுவாய் இருக்கிறது என்று தேடி வடகாசிக்கே ஓடிவிடலாமா என்றிருந்தார்கள். ஏதோ நாகர்கோயில் எங்கள் பக்கம் இருந்ததைப்போலவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கூட்டணியில் இருந்தது போலவும் அதைப் பிடித்து விட்டது போலவும் வண்ணங்கள் பூசுகிறார்கள். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ளுகின்றேன், நாகர்கோயில் தொகுதி உங்களுக்காகவே ஒதுக்கப்பட்ட தொகுதி, உங்களுக்காகவே இருக்கின்ற தொகுதி, நீங்கள் இருக்கின்ற செல்வாக்கினாலே அல்ல, அது ஜாதியாலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகுதியிலே நீங்கள் பெற்றிருக்கும் வெற்றியினாலே அரசியல் மாற்றம் எதுவும் ஏற்பட்டு விடாது. இதனாலே இந்தியாவிலேயோ அல்லது உலக அரசியலிலேயோ பெரிய புரட்சி ஏற்படுத்திவிட்டதைப்போல மிகவும் மிகைப்படுத்திப் பேசுகிறார்கள். பொக்கை வாய்க் கிழவன் கரும்பு தின்பதைப் போலத்தான் அவர்களைப் பார்த்தால் தோன்றுகிறது. இருந்தாலும் பாவம், உங்கள் வெற்றி ஜனநாயக வெற்றியாக இருக்குமானால், ஜனநாயகத்தில் பற்றுக் கொண்ட இந்த அரசு அதைப் பாராட்டும். மதிப்பிற்குரிய நண்பர் திரு. மார்டின் அவர்கள் அடக்குமுறை என்றார்கள். அடக்குமுறைக்கு இலக்கணம் வகுத்தவர்களே நீங்கள்தானே, அடக்குமுறை இருபது ஆண்டு காலமாக உங்கள் வயிற்றிலே, இரத்தத்திலே கலந்து, உங்கள் மூளையிலே இருந்ததுதானே. அந்த அடக்குமுறை என்ற விதையை அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டு வைத்திருக்கிறார்கள். சுட்ட விதைக்கு சத்து இருக்காது. அதைப் போல அடக்குமுறை இப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களால் சக்தியற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது. நான் காங்கிரஸ் நண்பர்களுக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காங்கிரஸ் கட்சியில் இருப்பதாலேயே தமிழ் பண்பாட்டைத் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்று. நம்முடைய அரசியலிலே உள்ள பண்பாடு சிறந்த பண்பாடு. அடக்குமுறை, அடக்குமுறை என்றும், பணம் பணம் என்றும் எங்களைப் பார்த்து சொல்லுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிபடுவதற்கென்றே வளர்த்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உலகத்திலே இத்தகைய அரசியல் தலைவரைப் பார்த்திருக்கவே முடியாது. எதிர்க் கட்சியாக இருந்தபொழுது அடிபட்டோம். எதிர்க்கட்சியாக இருந்தபொழுது சுடுபட்டோம். எங்கள் கட்சியிலிருந்தவர்களைக் கொலை செய்தார்கள். ஆனால் இன்றும் சொல்லுகிறார்கள், அண்ணா, நாங்கள் இன்னும் அடிபடத்தான் வேண்டுமா? என்று கேட்கும்பொழுது அதுதான் உங்கள் தலைவிதி நீங்கள் அடிபடத்தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நாகர்கோயிலில் கிட்டுவின் உயிரை எடுத்தார்கள். வெற்றி கிட்டிவிட்டது என்று கூறுகிறார்கள். நான் சொல்லிக் கொள்ளுகிறேன், இந்தியாவில், தமிழகத்தில் ஒரு நாகரிகமான அரசியல் உணர்வை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று மாற்றுக் கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். நண்பர் திரு. மார்ட்டின் அவர்கள்



அண்ணா அவர்களின்மீது கொண்டிருக்கும் அக்கறைக்குப் பாராட்டுகிறேன். ஆனால், இந்தச் சட்ட மன்றத்திலே முன்னாலே இருந்தவர்கள், முன்வரிசையிலே இருந்தவர்கள் நாகர்கோயில் தொகுதியிலே சொன்னார்கள், இந்த அரசு நோயாளிகள் அரசு என்று. நோயாளிகள் அரசு என்று கூறுவதற்கான காரணம் என்ன? அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள், முதலமைச்சரவர்களுக்கு நோய் வந்திருக்கிறது. அதை எண்ணி இந்த அரசு நோயாளிகள் அரசு என்று சொல்லியிருக்கிறார்களா?

திரு. டி. மார்டின் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், நோயாளிகள் அரசு என்று யார், எந்த இடத்தில் குறிப்பிட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் கூறினால் நன்மையாக இருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. பெ. மலைச்சாமி: நோயாளி சர்க்கார் என்று யார் குறிப்பிட்டார் என்பதை சொல்கிறேன். கடந்த 2 வாரங்களுக்கு முன்னால் என் பகுதியில் ஒரு காங்கிரஸ் கூட்டம் நடந்தது. நண்பர் அவர்கள் பெயரைக் கேட்டார்கள். அந்தப் பெயரைச் சொல்லுவதற்கு நான் சித்தமாக இருக்கிறேன். எங்கள் பகுதியைச் சேர்ந்த ஊரிலே நாகர்கோயில் வெற்றி விழாவைப் பற்றிக் கூட்டம் நடத்தினார்கள். அங்கே, முன்னாலே உள்துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்கள் பேசினார்கள். படியரிசி போடாத காரணத்தினால்தான் இன்றைய முதலமைச்சருக்குப் புற்று நோய் வந்திருப்பதாகச் சொன்னார்கள். படியரிசி எங்கே இருக்கிறது, அரசியல் எங்கே இருக்கிறது? இதுதான் அரசியல் நாகரீகமா? இந்த நாகரீகத்தை வைத்துக்கொண்டு தான் வெண்மணிப் பிரச்சினையைத் தொடுகிறார்கள். வெண்மணிப் பிரச்னை எப்படிப்பட்டது? அது அரசியல் பிரச்னைக்கு அப்பாற்பட்டது. அது மனிதாபிமானச் சிக்கல். அது சமுதாயத்தின் பிரச்சினை. கூலி உயர்வு என்பது தொன்றுதொட்டு இருப்பது. இதை வைத்துக்கொண்டு, வியாபாரிகள் சில பேர்கள் எனாமல் பூசுவதுபோல வெண்மணிப் பிரச்சினையை ஆக்குகிறார்கள். தங்க முலாம் அழிக்கப்பட்டால் உண்மை தெரிவதைப்போல வெண்மணி பிரச்சினையும் புரிந்து விடும். கேரள நக்சல்பாரியைப் போன்றது அல்ல வெண்மணிப் பிரச்சினை. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களும், அமைச்சர் திரு மாதவன் அவர்களும் சென்று பார்த்துவிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழக அரசு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

தேசீய நண்பர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வானொலியில் பல்லாண்டுகளாக இருந்து வந்திருக்கும் அகில இந்திய செய்தி ஒலிபரப்பும் நேரத்தை மாற்றியிருக்கிறார்கள். ஒரு சிக்கல் தானாகவும் வரும் அல்லது ஒன்றினாலே உருவாக்கவும் படும். காங்கிரஸ்காரர்கள் சிக்கலை உருவாக்குவதிலே வல்லவர்கள். மத்திய அரசிலே இருப்பவர்கள் அகில இந்திய செய்தி ஒலிபரப்பும் நேரத்தை மாற்றியது ஏன்? இப்படி நேரத்தை

மாற்றினால் தமிழக மாணவர்கள் ஒவ்வ மாட்டார்கள். அதை ஏற்கமாட்டார்கள் அங்குள்ள மாணவர்கள். அதனாலே தமிழகத்திலே புரட்சி ஏற்படும். அப்படிப் புரட்சி ஏற்பட்டால் நிச்சயமாக தமிழக அரசுக்குப் பெரிய கெட்ட பெயரை உருவாக்கலாம் என்று எண்ணி அதை மாற்றினார்கள். இதற்காக இங்கேயிருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. இதற்காக அவர்கள் டெல்லிக்குச் சென்றார்களா? இதை நிச்சயமாக மாற்ற வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். (மணி அடிக்கப்பட்டது) இந்த மன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசக் கொடுத்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் உடல் நலம் பெற்று, விரைவிலே இங்கே வந்து, அவருடைய பரந்த உள்ளத்தை நாட்டுக்கும் நமக்கும் அளித்து, பல்லாண்டு வாழ உங்களோடு சேர்ந்து நானும் பிரார்த்திக்கிறேன்.

இப்பொழுது, இம்மன்றத்திலே பேசின அங்கத்தினர்கள் பலரும் தங்கள் தங்கள் பகுதியிலுள்ள வறட்சியைப் பற்றியும் நாட்டிலுள்ள உணவுப் பற்றுக்குறையைப்பற்றியும் இருக்கிற நிலைமையையும் மேற்கொண்டு இருக்கப்போகின்ற நிலைமையையும் சொன்னதைக் கேட்கும்போது எதிர்காலம் மிக இருண்டு பரிதாபப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது. இந்தத் துறையிலே என்னுடைய தொகுதியாகிய அவிநாசி பகுதியிலும் நீண்ட நெடுங் காலமாகவே வறட்சி மிகுந்து ஒரே பாலைவனமாகக் காட்சி அளிக்கக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கு நெடுங்காலமாகவே மேல் பவானி திட்டம் வரும் வரும் என்று சொல்லி, இப்பொழுது நின்று விட்டது. பிறகு குந்தா கழிவு நீர் திட்டத்திற்கு மாறியது. அந்தக் கழிவு நீர் திட்டத்தை மிகமிக விரைவிலே கொண்டுவர வழி செய்ய வேண்டுமென்று அரசினரை மிக மிக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மற்ற பகுதிகள் போல் அல்ல என்னுடைய பகுதி. 100 அடி, 150 அடி ஆழம் கிணறு தோண்டி, கிணற்றிற்காக மாத்திரம் ரூ. 30,000 லிருந்து, இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து மயங்கிக்கொண்டிருக்கிற பகுதி என்னுடைய தொகுதி என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். இந்த குந்தா கழிவு நீர்த் திட்டத்தையாவது மிக விரைவில் ஏற்பாடு செய்து கொடுக்காவிட்டால் நிச்சயமாக மக்களுடைய பொறுமை எல்லை கடந்துவிடும் என்று நான் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. உண்மையிலேயே வாய்ப்பிருக்கிறது. இருக்கிற வாய்ப்பை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன். இந்த குந்தா கழிவு நீர் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே தீட்டப்பட்டது. அதிலும் மேல்





பவானி திட்டம் 60 ஆண்டுகளுக்கு முன்னாலே தீட்டப்பட்டிருக்கிறது. அது கழிந்து கீழ் பவானி திட்டமாயிற்று. குந்தா கழிவு நீர் திட்டமும் வருகிறது வருகிறது என்று வாய்ப் பந்தலிலேயே இருக்கிறது. அதை அவசியம் விரைவில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாகவே, 42,000 மில்லியன் கன அடி தண்ணீர் கீழ் பவானி திட்டத்திலே உள்ளது. அந்தத் திட்டத்திலிருந்து 30,000 மில்லியன் கன அடி தண்ணீர் தான் கொடுப்பதாக ஒப்பந்தம். அந்த ஒப்பந்திலுள்ளதில் 12,000 மில்லியன் கன அடி தண்ணீர் ஏற்கனவே குந்தா கழிவு நீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. கீழ் பவானி வாய்க்காலுக்கு சிமெண்ட் தளம் போட்டால் நிச்சயமாக இப்பொழுது அங்கு பாய்கின்ற சுமார் 2 இலட்சம் ஏக்கரில் 1/3 பாகத்திற்கு, சுமார் 60 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் கிடைக்கும். ஆகவே, அந்த கழிவு நீர்த் திட்டத்தையும் ஏற்கனவே உள்ள திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றினால் எங்கள் பகுதி ஓரளவு வளமானதாக மாறும். அதற்குத் துணை புரிய வேண்டுமென்று மிக மிக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த உணவுப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் ஆளுநர் உரையிலே 7½ இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், அதிலே 6¾ இலட்சம் டன் மலிவு விலையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மொத்தம் கொள்முதல் செய்யப்பட்ட 7½ இலட்சம் டன்னிலே ¾ இலட்சம் டன்தான் மலிவு விலையில்லாமல் பிற பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. முன்பெல்லாம் கிராமங்களுக்கு ஓரளவு கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது கிராமங்களுக்கு சுத்தமாக மறுக்கப்பட்டுவிட்டது. என்னுடைய பகுதியாகிய அவிநாசி தொகுதியிலே இந்தப் பொங்கலுக்கு பெரும் பகுதிகளுக்கு ஒரு படி அரிசிகூடக் கொடுக்கவில்லை. ஆடி நோன்பிற்கும் மக்களுக்கு முக்கிய நோன்பாகிய தீபாவளிக்கும் கூட அரிசி கிடைக்காமல் மக்கள் மிகவும் திணறி இருக்கிறார்கள். இந்த நிலையிலே பொங்கலுக்குக்கூட படி அரிசி கிடைக்காத சிரமம் இருப்பதினாலே நிச்சயமாக எல்லாப் பகுதிகளுக்கும் கொஞ்சமாவது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கமும் கொடுப்பதில்லை, நேரடியாக போக்குவரத்தும் தடுக்கப்படுகிறது. இந்த அவல நிலை மக்கள் உள்ளக் கிளர்ச்சியை மிக மிகக் கிளப்பிவிடும் என்பதை நான் வருத்தத்தோடும் பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஏற்கனவே வாய்ப்பும் வசதியும் இல்லாமலிருக்கிற மக்களுக்கு கொஞ்சமாவது கொடுத்து பஞ்ச நிலை உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை ஜில்லாவிலே பஞ்சாலைத் தொழிலைப் பற்றி பெரும் பிரச்சினை ஒன்றிருக்கிறது. ஏற்கனவே அரசாங்கம் உதவி செய்தும் மூடப்பட்ட மில்கள், சில நாட்கள் ஓடிவிட்டு, திரும்பவும் மூடப்பட்டு வருகின்றன. இந்த நிலை நீடித்து வந்தால் அது கோவை ஜில்லாவினுடைய பொருளாதாரத்தை

அடியோடு கெடுத்து அதன்மூலம் பெரும் அளவில் தொழில்களினுடைய வளர்ச்சி பாதிக்கப்படும். இதற்குப் பரிகாரமாக ஆளுநர் உரையிலே ஸ்டேட் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனை அமைத்து அதன்மூலம் அந்த மில்களை எல்லாம் நடத்தி வாழச் செய்யலாம் என்ற ஒரு அபிப்பிராயம் கூறப்பட்டிருக்கிறது. 2, 3 மாதங்களுக்கு முன்னே, கோவை ஜில்லா கலெக்டர், ஸ்டேட் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்ற பெயர் இல்லாவிட்டாலும் பல பேருடைய துணைகொண்டு மில்கள் நடத்தப்படும் என்று சொன்னார்கள். ஒன்றிரண்டு மில் பரீட்சார்த்தமாக நடத்தப்படும் என்று சொன்னார்கள். அப்பொழுது அவரிடத்திலே நான் ஒரு திட்டம் கொடுத்தேன். ஒரு மில்லை நடத்த எனக்கு வாய்ப்பு கொடுங்கள். அதையும் பரீட்சார்த்தமாகப் பாருங்கள் என்று சொன்னேன். இந்த கார்ப்பரேஷன் மூலமாக, பலவிதமான நஷ்டங்கள், கஷ்டங்கள் அரசாங்கத்தினுடைய பண இழப்பு எல்லாம் இருக்கிறது. நான் சொன்னதிலே அரசாங்கத்திற்கு ஒரு தம்பிடிகூட இழப்பு கிடையாது. அம் முறையில் சில திட்டங்கள் கொடுத்தேன். அந்தத் திட்டங்கள் அணுவளவும் கேட்கப்படவில்லை. உண்மையிலே இப்பொழுதும் ஸ்டேட் டெக்ஸ்டைல் போன்ற திட்டங்கள் நிச்சயமாக சிரமத்தில்தான் கொண்டுபோய்விடும். ஒருவேளை நடப்பதாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்தினுடைய உயர்ந்த கலால் வரியும், நம்முடைய அரசாங்கத்தின் விற்பனை வரி போன்ற வரிகளும் எல்லாம் சேர்ந்து அந்த தொழில்களை நசிக்கும்படி செய்து மக்களுக்கு மேலும் கஷ்டத்தைக் கொடுத்து, எப்படியும் அந்தத் திட்டம் நடக்காத அளவு செய்துவிடும். நடந்தாலும் நடப்பதற்குரிய முறையிலே அந்தக் கார்ப்பரேஷன் நடத்துவது கடினம் என்று சொல்வதோடு நான் கொடுத்த திட்டத்தைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக் கொள்கிறேன். நான் துணிந்து சொன்னேன், 'ஒரு மில்லை என்னிடம் ஒப்படையுங்கள். நீங்கள் எந்த பொறுப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டாம், என்னுடைய சொந்த சொத்தின் ஈட்டிலிருந்து நடத்திக் காட்டுகின்றேன், நஷ்டம் வந்தால் நான் ஈடுகட்டுகிறேன், இலாபம் வந்தால் தொழிலாளிக்குப் பங்கு, முதல் போட்டவர்களுக்குப் பங்கு, எனக்குப் பங்கு என்று இலாபத்தில் பங்கு கொடுத்தால் போதும் என்று சொன்னேன். முதலிலே, சம்பளமோ, கமிஷனோ ஒரு தம்பிடியும் மானேஜ்மெண்ட் எடுத்துக் கொள்வதாயில்லை. அந்த முடிவுக்கு விடுங்கள்,' என்று. அதற்குக் கூட அரசாங்கத்தை ஆலோசித்துச் சொல்வதாகச் சொன்னார். உண்மையிலே பல நல்ல திட்டங்கள் கொடுத்தால், ஆட்சியாளர்கள் பரீட்சார்த்தமாக ஒன்றையாவது கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். என்னிடம் ஒன்றைக் கொடுத்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுருக்கமாக விட்டுப்போன கருத்தை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆளுநர் அவர்கள், தமிழக அரசு பரிசுச் சீட்டு திட்டம்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. உண்மையிலே அதைப்பற்றி ஒன்று சொல்லவேண்டியது இன்றியமையாதது என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பட்டது). மக்களுடைய அறியாமையை, ஏழ்மையைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டின் செல்வத்தைச் சுரண்டுகிற முறை இது என்று என்னால் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. இதனுடைய பின்விளைவு இதுவரை யாரும் செய்யாத பெரிய ஆபத்தை நம் நாட்டில் கொண்டு வரும்—கொண்டுவரத்தான் போகிறது. இப்பொழுதே மிகச் சிறிய அளவில் உள்ள வருவாய் ஊற்று எல்லாம் வறண்டு எல்லாத் தொழில்களும் நசித்து, அவர்களும் கெட்டு, ஆட்சிக்கு வருகின்ற வருவாயும் கெட்டு, பெரிய ஆபத்தில் கொண்டுபோய் விடும் இந்தத் திட்டம் என்பதை சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. மிக மிகத் தீவிரமாக சிந்திக்க வேண்டிய விஷயம் இது. நாம் வள்ளுவனுக்குச் சிலை வைக்கின்றோம். வள்ளுவன் வார்த்தையைக் கேட்கின்றோம். வள்ளுவன் கூறிய ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.





'பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்'.

என்று கூறுகிறார் வள்ளுவர். நீண்ட நாட்களாக சம்பாதித்த நல்ல செல்வம், செல்வாக்கு அத்தனையும் இந்த சூதாட்டம் ஆடுகின்ற இடத்திலே கால் வைத்தால் போய் விடும் என்று கூறுகிறார். ஆகையினாலே, இந்த இடத்திலே வள்ளுவருடைய வாக்கிற்கு மதிப்புக் கொடுத்து தயவுசெய்து இந்தச் சூதாட்டத்திற்கு அரசு இடம் கொடுக்கக்கூடாது. என்னுடைய பகுதியிலே திருமுருகன் பூண்டி என்ற ஒரு இடம் இருக்கிறது. சிவபெருமானுடைய பாடல் பெற்ற ஸ்தலம் அது. அதில் பெரிய விசேஷம் என்னவென்றால் (மணியடிக்கப்பட்டது), பைத்தியம் பிடித்தவர் அங்கு போனால் பைத்தியம் தெளியும்—நீங்கும் என்பது அங்குள்ள மரபு. முன்பெல்லாம் அங்கு ஐந்து பேர் ஆறு பேர் இருப்பார்கள்—பைத்தியம் பிடித்தவர்கள் இப்பொழுது 100 பேர் இருக்கிறார்கள், "லாட்டரி, லாட்டரி, இலட்சம், இலட்சம், இலட்சம்" என்று சொல்லிக்கொண்டு. ஆகையினாலே, தயவுசெய்து இந்தப் பேராபத்தைத் தவிர்த்து, நாட்டு மக்கள் வாழ வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. செ. கோ. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, இந்தச் சபையில் உரை நிகழ்த்திய கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். கடந்த ஆண்டில் தி.மு.க. அரசு தமிழ் அன்னைக்கு விழா எடுத்து, மு.ப 1 00
தமிழ் நாட்டிற்கும், தமிழ் அன்னைக்கும், தமிழ் இனத்திற்கும் ஒரு சிறப்பான காரியத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இயங்குகின்ற தி.மு.க. அரசாங்கம் செய்ததன் காரணமாக, தமிழகத்தினுடைய அந்தஸ்து அகில உலக நிலைமையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அதற்கு அடுத்த கட்டமாக அதை விட சிறப்பான ஒரு நிகழ்ச்சியை தி.மு.க. அரசு இன்றைய தினம்

தமிழ் நாட்டில் நடத்தி வைத்திருக்கிறது. தமிழ் நாட்டிற்கு சென்னை மாநிலம் என்று இருந்த பெயரை மாற்றி, 'தமிழ்நாடு' என்ற பெயரை சூட்டுகின்ற நிகழ்ச்சியானது, தமிழ் அன்னைக்கு முடி சூட்டுகின்ற ஒரு விழாவாக, நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. அறிஞர் அண்ணாவின் திருக்கரத்தினால் அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்ற நிலைமையைப் பார்க்கும்பொழுது, அந்தக் காட்சி நமக்கெல்லாம் ஒரு சிறப்பான, மறக்கமுடியாத காட்சியாக அமைந்திருக்கிறது. இந்தக் காரியத்தில் ஈடுபட்ட அறிஞர் அண்ணா அவர்களையும், 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதற்காக தியாகம் செய்து உயிர் விட்ட தியாகிகளையும் இந்த மன்றமும், நாடும் உள்ளவரையில் மறக்காது என்று இந்த நேரத்தில் சொல்லி கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் ஒரு சாதாரணமான விஷயம் என்று எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் சொன்னாலும், இந்தச் சாதாரண விஷயத்தைப் பல ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் ஏன் செய்து முடிக்கவில்லை என்று பார்க்கின்றபோது, வட நாட்டில் இருக்கிற மத்திய சர்க்காருக்கும், தலைமைப்பீடத்தில் இருக்கிற காங்கிரஸ் கட்சிக்கும் பயந்துகொண்டிருந்த காரணத்தில்தான், சாதாரணமான இப்படிப்பட்ட ஒரு பெயர் மாற்றத் தீர்மானத்தைக்கூட அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் நிறைவேற்றிவைக்க முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் செங்கற்பட்டு மாவட்டத்திலும், பக்கத்தில் வட ஆற்காடு மாவட்டத்திலும், பருவ மழை தவறியதின் காரணமாக பஞ்ச நிலைமை ஏற்பட்டு, விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ரூ. 25 லட்சம் பஞ்ச நிவாரண வேலைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையானது பரவலாக மாவட்டத்தில் இருக்கிற பல தாலுக்காக்களுக்கும் ஒதுக்கப்படாமல், ஒரு சில குறிப்பிட்ட வட்டங்களுக்கு மட்டும் ஒதுக்கிவிட்டு, அந்த உரையில் சொல்லப்பட்டிருப்பதற்கு மாறான காரியங்களில் இன்றைய தினம் அதிகாரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, மாவட்டம் முழுவதும் பஞ்சம் இருக்கிறது என்ற நிலைமையை பொதுவாக அறிக்கையிலே குறிப்பிட்டுவிட்டு, ஒதுக்குகின்ற பணத்தை சில வட்டங்களுக்கு மட்டும் ஒதுக்குவது பாரபட்சமான முறையில் நடந்து கொள்கிறார்கள் என்ற நிலைமையை நம்முடைய அமைச்சர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற மூன்று ஒன்றியங்களுக்கு இதற்கான தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொக்கவில்லை. இதைப்பற்றி அவர்களிடம் பேசிய நோக்கில் மேலும் தங்களுக்குப் பணம் உதவி வந்தால் பார்க்கலாம் என்று குறிப்பிடுகிறார். இதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து எல்லோருக்கும் சம





பங்கை அளிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையிலே தமிழகத்தில் அரசுப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சரவை முக்கியமாக கவனத்தில் கொண்டிருப்பது தீவிர உணவு உற்பத்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழக சர்க்கார் உணவு உற்பத்தியில் தீவிர அக்கறை கொண்டிருக்கிறது. அதற்காக, தமிழ் நாட்டு மக்கள் இந்தச் சர்க்காரை எப்பொழுதும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, அணைக்கட்டுகளிலே உள்ள நீரை சரியான முறையில் வழங்குவதன் மூலமாகவும், பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு இலக்கைவிட அதிக அளவுக்கு எட்டக்கூடிய அளவுக்கு இணைப்பை வழங்குவதன் மூலமாகவும், மின்சார வாரியத்திற்கு போதுமான நிதி வசதி இல்லாத நேரத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து குழாய்க் கிணறுகள், வடிமுனை குழாய்க் கிணறுகள் தோண்டியும், விவசாயத்திற்கு வேண்டிய உரவகைகள் போதுமான அளவில் இருப்பு வைத்தும், சரியான முறையில் அதை விநியோகம் செய்தும், இப்படிப்பட்ட நிலைமைகளில் தமிழ்நாடு அரசாங்கம் செயல்பட்டிருப்பதால் பருவ மழை தவறியிருந்தும், ஓரளவு நம்முடைய தேவையைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு தமிழகம் முன்னேறியிருக்கிறது. இதனால் ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்கள் எந்த அளவிற்கு விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பது நம்மாலே உணரப்படுகிறது. இந்த முறைகளிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக கடன் வழங்குகிறார்கள். மற்றுமுள்ள நில அடமான வங்கிகள் மூலமாகவும் கடன் வழங்குகிறார்கள். அப்படிக் கடன் வழங்குகின்ற நேரத்தில், ஏற்கனவே கடனுக்காக விண்ணப்பித்துக் கொள்கிற நிலைமையைவிட மிகவும் சிரமமான கட்டுப்பாடுகள் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும், நில அடமான வங்கிகள் மூலமாகவும் விதிக்கப்படுகின்றன. சாதாரண விவசாயிகள் ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டும், மின்சார இணைப்பிற்காக 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருப்பதால், அவர்கள் மிகவும் சிரமம் அடைகிறார்கள்.

இம்மாதிரியுள்ள சாதாரண கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டால், அவர்கள் நிச்சயமாக சுலபமான முறையில் கடன் பெறுவதற்கு வாய்ப்பேற்படும். மேலும், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் டிராக்டர்கள் ஒதுக்கப்படுகின்றன. அப்படி ஒதுக்கப்பட்ட டிராக்டர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னாலே தான் கிடைக்கும் என்று தனிப்பட்ட ஸ்தாபனத்தில் இருக்கிற டிராக்டர் விற்பனைக்கு ஏகபோக உரிமை பெற்றவர்கள் சொல்கிறார்கள். இந்த டிராக்டர்கள் துரிதமாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. கொ. விசுவநாதன்] [1969 சனவரி 28

உணவு உற்பத்தியிலே ஒரு பக்கத்தில் நாம் வெற்றிபெற்றுக் கொண்டிருந்தபோதிலும், உணவு விநியோகம் செய்வதிலும் நாம் சிறப்பான அம்சத்தைப் பெற்றிருக்கிறோம். தமிழகத்தில் இருக்கிற அதிகாரிகள் உணவு விநியோகத்தில் மிகுந்த அக்கறை கொண்டு, கள்ள மார்கெட் ஏற்படாத நிலைமையை உருவாக்கி, ஏறக்குறைய 7.5 இலட்சம் டன் கொள்முதல் செய்து ஏறக்குறைய 170 இலட்சம் மக்களுக்கு சரியான முறையில் உணவு வழங்கப்படுகிறது. அதோடுகூட ஏறக்குறைய 6.75 லட்சம் டன் அரிசி, மானிய உதவியுடன் மலிவு விலைகளில் வழங்கப்பட்டுள்ளது. அதோடுகூட கோதுமை, கோதுமைப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கொடுத்து வந்த உணவுப் பொருள்களின் அளவைவிட அதிகமாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்மால் நன்றாக உணர முடிகிறது.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியிலும் தமிழக சர்க்கார் அக்கறை கொண்டிருக்கிறது. இதைப்பற்றிக் கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் அமைதி இல்லை என்று எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் சொன்னாலும், தொழில்களைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சென்னை மாநகரை அடுத்த மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஒட்டி உப பொருள்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு "இஞ்சியர்ஸ் (இந்தியா) லிமிடெட்" என்ற ஸ்தாபனத்தின் உதவி கொண்டு ஆராய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை ஒட்டி பல உப தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன். அரக்கோணத்தில் உள்ள வார்ப்படத் தொழிற்சாலை அதில் அகில உலகமும் பெருமைப்படும் அளவிற்கு அமைந்திருக்கிறது என்று மத்திய அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். மிக எளிய முறையில், மிகக் குறைவான தொகை செலவு செய்து, இந்த வார்ப்படத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் அதிகச் செலவு செய்திருக்கிறார்கள் என்று மத்திய தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட, 19 பலவகை தொழில்களுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. தமிழக அரசு மேலும் பல தொழில்களைத் தொடங்குவதில் வெற்றிகரமாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தைச் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*** திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த கவர்னர் பெருமான் உரையின் மீது உரையாற்றுவதற்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றி கூறி, நான் என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்களுடைய இன்றுள்ள உடல்நிலையைப்பற்றி நாம் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாலும், குறிப்பாக, இன்னும் சில நாட்களுக்குள் அவர்கள்



1969 சனவரி 28] [திரு. ஆர். கருப்பையா]

உடல் நலம் பெற்று, மிக விரைவில் பணியாற்ற வரவேண்டும் என்று எல்லாம் வல்ல இயற்கை அன்னையை வேண்டிக்கொண்டு நான் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த ஆண்டு கவர்னர் பெருமான் உரையானது, எப்படியிருக்கிறது என்றால், நண்பர் மலைச்சாமி குறிப்பிட்டார்கள், அது ஒரு நல்ல உரை, ஒரு சிறந்த உரை, ஒருதெளிவான உரை என்று. உண்மையிலேயே, நானும் அதையேதான் குறிப்பிடுகிறேன். சிறந்த உரை, நல்ல உரை. ஆனால், அது காகிதப்பூ போன்று வாசனையில்லாத, மணம் இல்லாத, உபயோகம் இல்லாத உரையாகத்தான் இருக்கிறது. எப்படிக் காகிதப்பூ பயன்படாதோ, அதே அளவில்தான் இந்த உரையும் அமைந்திருக்கிறது என்கிற குற்றச்சாட்டினைக் கூற விரும்புகிறேன். கவர்னர் உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழிவகை ஏற்படும் வாய்ப்புகள் ஏற்படும் என்று எண்ணியிருந்தோம்; பொது மக்களுக்கு இந்த அரசு காலத்திலே, பாதுகாப்பு இருக்கும், பயம் இல்லாமல், பயம் நீங்கி வாழும் அளவில் போலீஸ் இலாக்கா நடைபெறும், அதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்று நாங்களெல்லாம் நம்பியிருந்தோம். பிற்பட்ட கிராமப் புறங்களில் நல்ல ரோடு வசதிகள், மின்சார வசதிகள் எங்கெல்லாம் இல்லையோ, அங்கெல்லாம், அந்த வசதிகள் தரப்படும் என்றும் எண்ணியிருந்தோம். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், பிற்பட்ட கிராமப் பகுதிகளுக்கு எந்தவிதமான சலுகையோ, வாய்ப்போ ஏற்படாதவகையில் இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டினைச் சாட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, அரியலூர் பின்தங்கிய பகுதி, அங்கே மின்சார வாரியம் செயல்பட்டாலும்கூட, சரியான முறையில் செயல்படவில்லை. அங்கே நீர்ப்பாசன வசதிகள் மிகக் குறைவு. அந்தப் பகுதி ரோடு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. அங்கே உள்ள பஞ்சாயத்துக்கள் வருமானத்தைப் பார்த்தால், அங்கே அவர்களே செய்து கொள்ள பணம் கிடையாது என்பதை உணருகிறோம். அங்கு இருக்கும் நிலை, கிட்டத்தட்ட பதினைந்து மைல் அளவில் உள்ள இடங்களுக்கும் ரோடு வசதிகள் இல்லாமல், நடந்தே போக வேண்டிய நிலைதான் இருக்கிறது. நகர்ப் புறங்களில் பார்த்தால், ரோடுகளில் சிறு பள்ளம் ஏற்பட்டாலும், செப்பனிட இந்த அரசாங்கம் விரைகிறது. ஆனால், ஏழை எளியவர்கள் வாழும் கிராமப்புறங்களில் பதினைந்து மைல் அளவிலும் நடந்து போகும் நிலையில் ரோடுகள் அறவேயில்லாமல் இருக்கிறது. அதற்கென்று ஏதாவது தனித்தொகையை ஒதுக்கி, ரோடு வசதி செய்து தரவேண்டும் என்று குறிப்பிடுகின்றேன். சென்ற ஆண்டுகூடச் சொன்னேன். அரியலூரில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டும். வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே ரெட்டிபாளையம் அருகில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, தஞ்சையில் மருத்துவ மனையும், மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. பொதுவாக தமிழகத்திலே சிறந்த பணியாற்றுகின்ற மருத்துவ மனைகளில் ஒன்று ஆகும். ஆனால், அந்த தஞ்சை மருத்துவ மனையில் நல்ல முறையிலே, அத்தியாவசியமான மருந்துகள் A.P.C. மாத்திரைகள், ஊசி மருந்துகள், கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு பெரிய மருத்துவ மனையிலேயே மருந்துகள் சரியாக இல்லை என்றால், கிராமப் பகுதிகளில் இருக்கும் மருத்துவ மனைகளில் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. ஆகவே, அந்த மருத்துவ மனையிலும், எல்லா மருத்துவ மனைகளிலும் போதுமான அளவில் மருந்துகள் தேவையான அளவில் விரைவில் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கு ஆவன செய்ய சர்க்கார் விரைவில் முன்வர வேண்டும்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமையவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுத்து, அடுத்த ஆண்டிலாவது அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமையக்கூடிய வாய்ப்பினை உண்டாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அரியலூரில் சென்ற வாரம் ஒரு சம்பவம் நடந்தது. அங்கே இருக்கும் கல்லூரிக்கு ஒரு ஆஸ்டல் கிடையாது. சர்க்கார் ஆஸ்டல் இல்லாததால், தனியார் நடத்தும் ஆஸ்டல்தான் இருக்கிறது, அங்கே மாணவர்களுக்குள்ளே ஏதோ போராட்டம் ஏற்பட்டு, மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து, அதன் காரணமாக கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் நடத்துவதால், ஆஸ்டல் மூடப்படவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைகளைத் தவிர்க்க மாணவர்கள் நல்ல முறையில் படிக்க, அரியலூர் அரசினர் கல்லூரிக்கு ஒரு ஆஸ்டல் கட்டித்தரவேண்டும் என்றும், நல்லமுறையில் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிடுகிறேன். அரியலூர் கல்லூரிக்கு சிறந்ததான கட்டடம் கிடையாது. கட்டட வசதி செய்து கொடுக்கபோதுமான பணவசதி இல்லை என்று அமைச்சர் சொன்னார்கள். இந்த பட்ஜெட்டிலாவது, அந்தக் கல்லூரிக்கு வசதியுள்ள கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருமானூர் பகுதியில் 500-க்கும் மேற்பட்ட ஃபில்டர் பாயிண்ட் வெல்கள் போட்டிருக்கிறோம். ஆனால், மின்சார வசதியில்லாததால், கீழ் பகுதியில் ஏலாக்குறிச்சி முதலிய பகுதிகளில், ஆயில் எஞ்சினை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் இல்லாத காலங்களில், இந்தக் கிணறுகள் மூலம் பாசன வசதி செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், உடனடியாக மின்சார விஸ்தரிப்புச் செய்து கொடுத்து, விவசாயிகளுக்கு நல்ல





வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எவ்வளவுதான் விவசாயிகளைப் பற்றி நாம் பேசினாலும், எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, விவசாயிகள் என்றைக்கும் கேட்பாரற்ற பிள்ளையாகத்தான் இருக்கிறான். இந்த ஆண்டு கொள் முதல் கெடுபிடியாக இருக்கும் என்று தெரிகிறது. அதைப் பற்றி கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு தான் விளைச்சல் மிகக் குறைவாக இருக்கிறது. விளைச்சல் குறைவோடு, கொள்முதல் செய்வதும் கெடுபிடியாக இருந்தால், விவசாயிகள் அதைத் தாங்க மாட்டார்கள். விலையையாவது உயர்த்திக் கொடுத்தால்தான், நலமாக இருக்கும். விளைவுக் குறைவோடு, கெடுபிடியான கொள்முதலும் சேர்ந்து, விலையிலும் மாற்றம் இல்லையென்றால் விவசாயி அவதிப்படுவான். விவசாயிகளுக்கு உணவு உற்பத்தியில் கவனம் செல்லாது. ஆகவே, கொள் முதலில் குறைந்தது குவிண்டாலுக்கு ஐந்தோ, பத்தோ கூட்டி கொடுக்கவேண்டும். குறிப்பாக, ஒரு ரக நெல்லுக்கு மட்டும் 2 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். உடனே 'தினத் தந்தி' யில் விளம்பரம் வந்துவிட்டது, உயர்த்தியிருக்கிறார்கள், உயர்த்தியிருக்கிறார்கள் என்று. ஆனால், அந்த உயர்வும் ஒரே ஒரு ரக நெல்லுக்குத்தான் என்று தெரியவந்தது. அதிகாரியைக் கண்டு கேட்டதில் விபரம் தெரிந்தது. ஆகவே, கொள்முதல் செய்யும்போது ஒரு குவிண்டாலுக்கு ஐந்தோ, பத்தோ கூட்டிக் கொடுத்தால்தான் நலமாக இருக்கும்.

அடுத்தபடி, இப்பொழுது மூடப்பட்டு வருகிற மில்களில் கரும் பாலைகளும் சேருகின்றன. கோத்தாரி ஸ்தாபனத்தார் நடத்தும் ஆலை ஒரு வாரமாக மூடப்பட்டு விட்டது. நிர்வாகம் சரியாக இல்லை. கரும்புகள் பாழாகிப் போயின. அவர்கள், பாக்டரி ஏரியாவில் வந்திருக்கும் கரும்புக்குத்தான் நஷ்டஈடு கொடுப்போம், விவசாயிகள் வெட்டியுள்ள கரும்புக்கெல்லாம் நஷ்டஈடு தரமுடியாது என்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவகையில் ஆலைகள் நிறுத்தப்படாமல் இருக்கும் அளவில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதோடுகூட, அண்டை மாநிலங்களில் டன்னுக்கு ரூ. 100 கொடுக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் ரூ. 80 தான் கொடுக்கிறார்கள். கடன் போன வருஷம் ரூ. 90 கொடுத்தார்கள். இந்த ஆண்டு ரூ. 80 தான். ஆனால், அதே நேரத்தில், சென்ற ஆண்டு சர்க்கார் வாங்கிய சர்க்கரை விலை ரூ. 154, இந்த ஆண்டு ரூ. 158 என்றிருக்கிறது. ஆக சர்க்கரையில், நான்கு ரூபாய் ஆதாயம் கிடைத்தும், மில் அதிபர்கள் விவசாயிகளுக்குக் கரும்புக்கு விலையைக் குறைத்துதான் கொடுக்கிறார்கள். விவசாய அமைச்சரவர்கள் அதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, ஒரு டன்னுக்கு ரூ. 100 என்று அண்டை மாநிலங்களைப்போல விலையை உயர்த்திக் கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, கவர்னர் உரையில் குறிப்பிடாமல் இருந்தாலும், கிராமப் பகுதிக்கு, கூடியவரையில் இந்தச் சர்க்கார் நல்ல முறையில் விவசாயம் நடைபெற உதவி செய்தால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமேயல்லாது, இப்பொழுது போலவே நடந்தால், நல்லதாக இருக்காது என்பதைக் குறிப்பிடுகிறேன்.

இன்னும் ஒன்றைமட்டும் சொல்லி என் பேச்சை முடிக்கிறேன். கோவை நகருக்கும், சென்னைக்கும் படியரிசி போடுகிறார்கள். அதைப் பாராட்டுகிறோம். அதற்காக வருத்தப்படவில்லை. ஆனால், திருச்சியில் ரேஷன் அளவை நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டே வருகிறார்கள்; முன்பு 1,200 கிராமாக இருந்தது. 1,000 கிராம் என்று குறைந்து, 800 கிராம் ஆகி இப்பொழுது 700 கிராம் என்று குறைவதாகத் தெரிகிறது. போடும் அரிசியின் விலையை குறைக்காவிட்டாலும், அளவையாவது குறைக்காமல் தேவையான அளவில் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை சர்க்கார் உணரவேண்டும் என்று விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அப்பர் அணைக்கட்டில் ரெகுலேட்டர் கட்டி கீழே சுக்ரநேரி, ஐயன் வாய்க்கால் பகுதிகளுக்கு தண்ணீர் வரும் வகையில் ஒன்றரைக் கோடி ரூபாயில் திட்டம் இருப்பதை சர்க்கார் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. வேலுசாமி :** தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவையில் நமது முதலமைச்சர் அவர்கள் இல்லாதது வாஸ்தவமாகவே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மூன்றரை கோடி தமிழர்களுக்கும், கடல் கடந்து இருக்கின்ற தமிழர்களுக்கும், உள்ளத்திலே இனமறியாத வேதனையைத் தருகிறது. அதைத்தான் பத்திரிகைகளிலும் காண்கின்றோம். அவர் விரைவில் உடல் நலம் பெற்று, சௌக்கியமாக இருக்கவேண்டும் என்று நான் பிரார்த்தித்துக்கொண்டு, கவர்னர் உரையின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

கவர்னர் உரையில், பஞ்சாலைகள் சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்காருடைய உத்தரவாதத்தின்பேரில், இரண்டு கோடி ரூபாய் பாங்குகளின் மூலமாகப் பஞ்சாலைகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட கடன்களின் மூலமாக நடத்தப்பட்ட இரண்டு பஞ்சாலைகளையும் மூடிவிட்டார்கள். பாக்கியிருக்கும் பஞ்சாலைகள் இன்றோ, நாளையோ என்ற இருப்பதாகத் தெரிய வருகிறது. அதற்கும் 'லிக்' ஏற்பட்டுவிட்டது என்று மில் முதலாளிகள் சங்கத்தின் மூலமாகத் தெரிய வருகிறது. என்ன காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எந்த அளவுக்கு அரசு ஆராய்ந்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மில்களுக்காக இப்படிப் பணம் செலவு செய்கின்றபோது, வியாபாரம் செய்கின்ற நேரத்தில், வாங்குவதிலும் விற்பனை செய்வதிலும் அந்தப் பஞ்சாலை நடத்துகிறவர்கள் எந்த அளவுக்குச் சரியாக இருக்கிறார்கள் என்பதில் அரசு கண்ணோட்டம் செலுத்துகின்றதா என்பதிலே ஐயப்பாடு இருக்கிறது.





இரண்டு வருஷங்களாக, பல்வேறு உத்தரவாதங்கள் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டன. சென்ற சட்டமன்றத் தொடர்க் கூட்டத்தில் ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டது. மூன்று கமிட்டிகள் பஞ்சாலைகளுக்காக நியமிக்கப்பட்டு, அந்தக் கமிட்டிகள் மில்களினுடைய தரத்தை நிர்ணயித்து, அந்த மில்கள் உதவிக்குத் தகுதியுடையனவா இல்லையா என்பதைத் நிர்மாணித்ததற்குப் பிறகு, கிட்டத்தட்ட பதினைந்து, இருபது தினங்களுக்குள்ளாக அந்தப் பஞ்சாலைகளைச் சர்க்காரே மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லப்பட்டது. ஆனால், கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. என்றாலும், இருந்த இடத்திலேயிருந்து சிறு அசைவுகூட இதுவரை ஏற்படவில்லை. தேசிய பஞ்சாலைச் சம்மேளனம் என்று, தெற்கேயிருக்கும் மில்களுக்கென்று ஒன்று நியமிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. மத்திய சர்க்காரிலிருந்து 51 சதவீதமும், மாநில சர்க்காரிலிருந்து 49 சதவீதமுமாக உதவி செய்வதென்று வைத்து, தேசிய சம்மேளனம் ஒன்று ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த சம்மேளனம் உண்மையாகவே செயல்படுகிற காலத்திலேதான், தொழிலாளிகளுக்கு நம்பிக்கை பிறக்குமேயொழிய, இரண்டு ஆண்டுகளாகக் கொடுத்த வாக்குறுதிகள் பலவும் இன்று வரையிலும் சரியாக நிறைவேற்றப்பட்டனவா என்பதிலே தொழிலாளிகள் உள்ளத்தில் நிறைந்த ஐயப்பாடு உணர்வு ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். தேசிய சம்மேளனம்கூட, அந்த மில்களில் சம்பந்தம் இல்லாத வெளியார்களின் மேற்பார்வையில் இயங்க வேண்டும். வாங்குவதிலும், விற்பனை செய்வதிலும் சரியான நபர்களை வைத்து, அது நடத்தப்படவில்லையென்றால், உண்மையாகவே, அந்த சம்மேளனம் எந்த அளவுக்குச் சிறப்பாக நடக்கும் என்பதிலே ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. சர்க்காரின் உத்திரவாதத்தோடு கடன் பெற்றிருக்கிற பஞ்சாலைக்குக்கூட, மில்களில் சம்பந்தம் இல்லாத வெளி நபர்கள் யாராவது ஒருவரை நியமித்து அங்கே வாங்குவதிலும் விற்பனை செய்வதிலும் நின்று கண்காணிக்கப்படுவதற்கு முயற்சிகள் செய்யப்படவில்லை என்றால், ஏற்கனவே இருக்கும் பஞ்சாலைகளும், சர்க்கார் உத்தரவாதத்தோடு கடன் பெற்று நடக்கின்ற பஞ்சாலைகளும், தேசிய சம்மேளனத்தினால் நடத்தப்படும் பஞ்சாலைகளும்கூட, சரியாக நடைபெறுமா என்பதிலும் ஐயப்பாடு இருக்கிறது. அந்தச் செயலை அரசு கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எனது பகுதியில் இரண்டு ஆண்டுகளாக மழை இல்லை. கிணறுகள் வெட்ட வேண்டுமானால், 150 அடி ஆழம் வெட்ட வேண்டியிருக்கிறது. 150 அடிக்குக் கீழே துளை போட்டு, 270 அடி, 280 அடி ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டிய நிலையில் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் ஆனாலும், தண்ணீர் கிடைக்கவில்லை. பல கிராமங்களில் குடி தண்ணீர் கிடையாது. இந்த நிலைமை தொடர்ந்து ஆண்டுதோறும் இருந்து வருகிறது. ஆண்டுக்காண்டு தண்ணீரின் மட்டம் கீழே போய்க்கொண்டிருக்

[திரு. பி. வேலுசாமி] [1969 சனவரி 28

கிறது. இப்படிக் குறைந்துகொண்டே இருக்கும் இந்த நிலையை கனடா தேசத்தைச் சேர்ந்த புவியியல் நிபுணர்கள் சமீபத்தில் வந்து பார்த்துவிட்டு, இந்த நிலைமைக்கு ஏதாகிலும் ஒரு மாற்றம் செய்யவில்லையென்றால், அந்தப் பகுதியில் வாழும் மக்கள் எல்லாம் அந்தப் பகுதியிருந்து காலி செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என்று சொன்னார்கள். இம்மாதிரியான ஐயப்பாடும் அந்தப் பகுதியில் நிறைந்திருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைச் சர்க்கார் மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிற இதே நேரத்தில், குந்தாவிலிருந்து மின்சாரம் எடுத்தது போகக் கிடைக்கும் தண்ணீரை, அந்தப் பகுதிக்கு விஸ்தரித்து, அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு விவசாயத்திற்கேற்ற வகையிலும், குடி தண்ணீர் கிடைக்கும் வகையிலும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தமிழ்நாட்டில் இருக்கும் மக்கள் மிகவும் நாகரிகம் படைத்தவர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால், நாகரிகம் படைத்தவர்கள் என்ற புகழுக்கு ஒரு கறுப்புக் கோடு இட்டதுபோல் கீழ்வெண்மணி கிராமச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கீழ்வெண்மணி சம்பவங்களைப்பற்றி நான் சொல்லுகிற நேரத்தில், இரண்டுவகையான எதிரெதிரான குற்றச்சாட்டுகளைப் பல இடங்களிலே பல கூட்டங்களிலே, பல பத்திரிகைகளிலே நான் பார்த்தேன். கவர்னர் பெருமான் உரையில், 'சட்டப்படி நடவடிக்கைகளைத் துவக்கிவைக்க அரசு காலந் தாழ்த்தாது முற்பட்டதை இம் மன்றத்தினர் அறிவர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி சொல்லப்படுகிற இந்த வார்த்தைக்கும், அங்கே குற்றச்சாட்டு சொல்லப்படுவதற்கும் என்ன உறவு என்றே எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் அந்தப் பகுதிக்கே போகவில்லை. ஆனால், குற்றச்சாட்டுகள் சொல்லுகிறார்கள். இந்தக் கீழ்வெண்மணி கிராமத்தில் நடந்த சம்பவங்கள் என்று சொல்லப்படுவது என்ன? மாலை நேரத்தில் 5½ மணிக்குத் தொடங்கி, இரவு 9½ மணிக்குத்தான் சம்பவம் நடந்தது. இதற்கு இடையில் நான்கு மணி நேரம் இருந்திருக்கிறது. இந்த நான்கு மணி நேரம் வரையிலும் கிவளூர் கிராமத்தில் மூன்று ரிசர்வ் போலீஸ் லாரிகள் இருந்திருக்கின்றன. அந்த மூன்று ரிசர்வ் போலீஸ் லாரிகளும் அங்கு இருந்தும், போலீஸ் ஸ்டேஷன் அங்கு இருந்தும், அங்கே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இருந்தும், வந்த நிகழ்ச்சியைத் தடுப்பதற்கான முயற்சி ஏன் எடுக்கப்படவில்லை என்பதுதான் ஒன்றும் தெரியவில்லை. இம்மாதிரியான ஒரு நிலைமை ஏற்படுகிறபோது, சர்க்கார் அந்த இடத்திலே அம்மாதிரி தவறு செய்கிற சர்க்கார் உத்தியோகஸ்தர்களையோ, அல்லது அதற்கான மார்க்கங்களைச் செய்யாமல் இருந்த நபர்களையோ தண்டிப்பதற்கோ அல்லது அவர்களுடைய செயலைக் கண்டிப்பதற்கோ இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதும் இதுவரையிலும் தெரியவில்லை.



1969 சனவரி 28] [திரு. பி. வேலுசாமி]

சாதாரணமாக இந்த சர்க்காருக்கு ஒரு மரபு உண்டு. காரணம் பல சந்தர்ப்பங்கள், பல நிலைமைகள் ஏற்படுகிற நேரத்திலேயே துப்பாக்கிச் சூடு ஏற்படும்போது, மற்றவர்கள் கேட்காத நேரத்திலேயே பகிரங்க விசாரணை நடத்துவது என்பது இந்த மன்றத்தில் சாதாரண மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் கீழ்வெண்மணியில் ஒரு கொடுமையான செயல் ஏற்பட்டும், அது சாதாரண செயல் அல்ல; எல்லோரும் வெட்கப்படத்தக்க ஒரு செயல் நடந்ததற்குப் பிறகும், இதைக் குறித்து, பகிரங்க விசாரணை நடத்துவதற்கு ஏன் தயக்கம் காட்டினார்கள், எதனால் அது நடைபெறவில்லை என்பது ஒரு புதிராகவே இருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் என்றால், போலீஸ்காரர்களுக்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்டால்தான் பகிரங்க விசாரணை நடத்தலாம், இரண்டு கோஷ்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்போது எப்படி விசாரணை நடத்துவது என்று கேட்கலாம். அந்த வாதம் ஓரளவு சரியாக இருக்கும் என்றாலும்கூட, சமீபத்தில் மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு மோதல் ஏற்பட்டதே, அதைக் குறித்து விசாரிப்பதற்கென்று திரு. சோமசுந்தரம் என்ற ஒரு ஜட்ஜை நியமித்து, அதிலே என்ன நடந்தது, சம்பவம் என்ன என்று விசாரிப்பதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்படியிருக்கும்போது ஏன் கீழ்வெண்மணி சம்பவத்திலேகூட அத்தகைய ஒரு விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை? அந்த சம்பவம் நடப்பதற்கு முன்பாக இரண்டு நபர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ராமச்சந்திரன், பக்கிரிசாமி என்ற இரண்டு பேர்கள் அந்தப் பகுதியில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சம்பவம் ஏதோ அன்றைக்கு ஏற்பட்ட சம்பவம் அல்ல. தொடர்ந்து பல மாதங்களாகவே நடந்துகொண்டிருக்கிற சம்பவம்தான். தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிற சம்பவத்திற்கு என்ன காரணம், அதற்கு முன்னால் எந்தச் சம்பவம் நடந்தது, எப்படி ஏற்பட்டது, யாரால் இந்த நிலை நேர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ளுவதிலே இந்த மன்றத்திலிருக்கும் உறுப்பினர்கள் எல்லோரும் அக்கறை காட்டுவது இயல்பாகும். அந்தச் சம்பவத்துக்கு என்ன காரணம். இரு கோஷ்டிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட மோதல்தானா? கூலிப் பிரச்சினையினால் ஏற்பட்ட மோதல் காரணமாக இது ஏற்பட்டது என்று இந்த மன்றத்தில் பல பேர்கள் பேசினார்கள். இது ஏதோ இரண்டு கோஷ்டிகளுக்கு மத்தியில் ஏற்பட்ட மோதலாகத்தான் இருக்கிறது. வாஸ்தவமாகவே, கூலிப் பிரச்சினையில் ஏற்பட்ட மோதலாக யதார்த்த பூர்வமாக இருக்குமானால், இத்தனை காலம் அது நடந்துகொண்டிருக்கும்போது அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கவேண்டும் சர்க்கார். ஆனால், அதிலே அவர்களுடைய கவனம் குறைவாக இருந்திருக்கிறது. அந்த மாவட்டத்தின் மற்ற பகுதிகளுக்கும் அந்தத் தவறான நிலைமை பரவாமல் தடுப்பதற்கான முயற்சியும்கூட சரியாகச் செய்யவில்லை என்றால், இப்பொழுதிருக்கும், இந்தப் பஞ்சாலை நிலைமைகளும், விவசாயத்தில் இருக்கும் நிலைமைகளும், இவ்வளவு

மோசமாகப் போய்க்கொண்டிருக்கிற நேரத்தில் சரியாகக் கவனம் செலுத்தவில்லையென்றால், தமிழகத்தில் இருக்கும் மக்களுடைய உணர்ச்சியில் ஏதோ ஒரு இனம் அறியாத கல்மிஷம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, இதில் சர்க்கார் அதிக கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவை மாற்றுத் தலைவர்
பி.ப 11 30 அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீது பேசக்கூடிய இந்நேரத்தில் தமிழகத்தின் முதல்வர் இங்கு இல்லாமல் இருப்பது நம் அனைவருக்கும் வருத்தத்தைக் தருகிறது. சமீபத்தில் வெண்மணி நிகழ்ச்சிக்குப் பிறகு, தமிழகத்தின் முதல்வர் எடுத்துக்கொண்ட துணிச்சலான நடவடிக்கையை தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே வரவேற்பார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. பத்திரிகைகள் பூராவும் நீதி விசாரணை வேண்டுமென்று கூக்குரலிட்ட போது, நீதி விசாரணை மட்டுமல்ல, கொலைகாரர்களை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்த வேண்டும் என்பதற்கான உறுதியான உணர்வோடு புலன் விசாரணையை துரிதமாக நடத்த வேண்டும் என்று உத்தரவிட்ட தமிழகத்தின் முதல்வர் இன்றைய தினம் நம் மத்தியில் இங்கே இல்லாமல் இருப்பது வாஸ்தவமாகவே வருத்தத்தை அளிக்கிறது.

சமீப காலத்தில் அங்கிருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி, சுதந்திரா கட்சி, நிலப் பிரபுக்கள், அதிகாரிகள், உழவர்கள் அடங்கிய முத்தரப்பு மாநாடு நடந்தது. பின்னர் உழவர்கள் கூலி உயர்வு கேட்டாலும் நாங்கள் கொடுக்க மாட்டோம் என்று நிலப் பிரபுக்கள் கூறினர். தமிழகத்தின் முதல்வர் அண்ணா அவர்கள் அங்குள்ள கலெக்டரைக் கூப்பிட்டு முத்தரப்பு மாநாடு கூட்டுங்கள், மாநாட்டின் தீர்மானங்களை அனுசரித்து எல்லோரும் நடக்க வேண்டும் என்று துணிவோடு உத்தரவிட்டார். அப்படிக் கூறிய முதல்வர் அவர்கள், இந் நேரத்தில் இங்கு இல்லாமல் இருப்பது நமக்கெல்லாம் வருத்தத்தை அளிக்கிறது. அவர் சீக்கிரத்தில் குணம் அடைந்து நலம் பெற வேண்டும் என்று எல்லோரும் விரும்புவது போல் நாங்களும் விரும்புகிறோம்.

நான் இன்றைய தினம் இங்கு வெண்மணி பற்றிய பல விஷயங்களைப் பேச முடியாத நிலையில் இருக்கிறேன். வெண்மணி விஷயம் புலனாய்வு கட்டத்தில் இருக்கிறது. அதன் காரணமாக பல விவரங்களைக் கூற முடியாது. ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெண்மணியில் அந்தச் சம்பவம் ஏற்பட்டதற்குக் காரணம், வெண்மணியிலுள்ள மக்களை காங்கிரஸ் கொடி ஏற்றும்படி வற்புறுத்தினார்கள். கடந்த இருபதாண்டுக் காலமாக கொடுமைகள் செய்துவந்த, கடந்த இருபதாண்டுக் காலமாக நர வேட்டையாடி வந்த அந்தக் கொடியை நாங்கள் எங்கள் ஊரிலே ஏற்ற மாட்டோம் என்று அந்த மக்கள் மறுத்தார்கள். அதன் காரணமாகவே



அந்த மக்கள் தீயினால் கொளுத்தப்பட்டு சாகடிக்கப்பட்டார்கள். அந்த ஊர் மககள் மிகவும் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். கடந்த 5-ம் தேதியன்று நாங்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினோம். அந்தக் கடிதத்தில், ஏழை ஹரிஜனங்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியில் சேராவிட்டால் தீயிட்டு அழிக்கப்படுவார்கள் என்று நிலப் பிரபுக்கள் மிரட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். மாநில முதல்வர் அவர்களுக்கும் இதுபற்றி தெரியப்படுத்தியிருந்தோம். வெண்மணி நிகழ்ச்சி ஏற்பட்டதற்கு, ஒவ்வொருவரும் ஆதாயம் தேட விரும்புகிறார்கள். காங்கிரஸ் கொடி ஏற்றப்படவில்லையென்பதற்காகவே அரிஜனங்கள் நிலப்பிரபுக்களின் செய்கைகளால் தீயிடப்பட்டார்கள் என்பது ஆதார பூர்வமானது; இதை யாரும் மறுக்க முடியாது. அரசு இன்றைய தினம் தன்னுடைய கடமைகளை நிறைவேற்ற முன் வந்து துரிதமாக நடவடிக்கைகளை எடுத்திருப்பதில் எங்களுக்கு ஐயப்பாடு இல்லை. இந்த விஷத் தன்மையை கொஞ்ச நாட்களுக்கு முன்பே கவனித்திருந்து, தக்க நடவடிக்கைகளை எடுத்திருந்தால் வெண்மணி சம்பவத்தைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும், தவிர்த்திருக்க முடியும், அரிஜன மக்களின் வேதனையைத் தீர்த்திருக்க முடியும். வெண்மணிக்குப் பின்னே சரித்திரம் இருக்கிறது. பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கிஸான்கள் தகராறு, அராஜகம் செய்கிறார்கள், பயிரை அழித்தார்கள் என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே தொழிலாள மக்கள் பயிரை அழித்தார்களா, அராஜகம் செய்தார்களா, என்றால் இல்லை. பத்திரிகை நிருபர்கள் சமீபத்தில் அங்குள்ள சப-கலெகடர் அவர்களைக் கேட்டார்கள்; பயிர்கள் அழிக்கப்படவில்லை, ஒரு சென்ட் நிலம்கூட அறுக்கப்படவில்லை, என்று கலெக்டர் அவர்கள் கூறுகிறார்கள். உழைப்பாளி மக்களாகிய உழவர்களின் உரிமையை அங்கிருக்கக்கூடிய ஆதிக்க வர்க்கம், நிலப்பிரபுக்களின் வர்க்கம் நசுக்கிக் கொண்டிருப்பதோடன்றி, பயிர்களை நாசம் செய்கிறார்கள், நெல்லை அறுக்கிறார்கள்' என்று கற்பனையாக தன்னுடைய பிரச்சார பணத்தை வைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறது. கீழத் தஞ்சை மாவட்டத்தில் சுதந்திரா கட்சி, காங்கிரஸ் கட்சி நிலப்பிரபுக்கள் எல்லோரும் ஒருமுகமாக நின்று கிஸான்கள் தகராறு என்று கூறி வருகிறார்கள். பத்திரிகைகளிலும் இட்டுக்கட்டிய பொய்தான் வருகிறது. ஓராண்டுக் காலத்தை எடுத்துக் கொள்ளுங்கள், கிசான்களினால் நிலப்பிரபுக்கள் யாராவது நஷ்டம் அடைந்தார்களா? யாராவது பாதிக்கப்பட்டார்களா என்று பார்த்தால் ஒருவருமே இல்லையென்று கூறலாம். அரிஜனங்கள் 42 பேர்கள்தாம் தீயிடப்பட்டு செத்தார்கள். வைப்பூர் கிராமத்தைக் கொளுத்துவதற்கு திட்டமிருந்ததை அறிந்து நாகப்பட்டினம் போலீஸ் அதிகாரிகளுக்கு நான் டெலிபோன் செய்தேன். நான்கு மணிக்கு கலகம் நடந்தது. போலீஸ் அனுப்பப்படவில்லை. வைப்பூர் கிராமம் கொளுத்தப்பட்டது. காங்கிரஸ் கொடி ஏற்ற மறுத்த விவசாயத் தொழி

லர்கள் எரியும் நெருப்பில் தூக்கிப் போடப்பட்டார்கள். சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். ஆகவே, ஏழை விவசாயத் தொழிலாளர் மக்களை அடக்குவதற்கே ஒரு கூட்டம் செயல்படுகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள அதிகாரிகளும் நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள். தக்க சமயத்தில் அதிகாரிகள் தலையிட்டிருந்தால் வெண்மணி சம்பவம் நடைபெற்றே இருக்காது. ஆகவே, இந்த ஆட்சியின் கொள்கை என்ன என்பதை திட்டவட்டமாக வரையறுத்துக்கொண்டு தக்க நேரங்களில் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் வெண்மணி சம்பவத்திற்குப் பிறகு என்னைக் கூப்பிட்டார். நான் கூறியவைகளைக் கேட்டு முதல அமைச்சர் அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார். உண்மையில் முதல்வர் அவர்கள் எண்ணக்கூடிய எண்ணத்தை அதிகாரிகள் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. வெண்மணி மட்டுமல்ல, பலவிடங்களில் அதிகாரிகளின் போக்கு நீண்ட நெடுங்காலமாக இப்படி இருந்து வருகிறது என்பதை நாங்கள் வற்புறுத்திக் கூறி வருகிறோம். நிலப் பிரபுக்கள் எல்லோரும் கூடி 'நெல் உற்பத்தியாளர் சங்கம்' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனமும் ஒரு தனிப் படையும் அமைத்திருக்கிறார்கள். அவர்கள் கையிலே துப்பாக்கி உண்டு, தடிகள் உண்டு. அந்தப் படைகளின் வேலையெல்லாம் அரிஜனங்கள் வாழும் சேரிகளில் போய் அவர்களை அடிப்பது, தாக்குவது இம்சிப்பது போன்றவைகள்தான். போலீசார்கள் இதை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு வருஷ காலமாக அந்தப் படையை வளரவிட்டதன் காரணமாகவே வெண்மணி சம்பவம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாருமே மறுக்க முடியாது. இருபத்தைந்து வருஷ காலமாக அரிஜன மக்களை அடக்கி வருவதற்குக் காரணம் அவர்கள் செங்கொடியின் கீழ், அதாவது கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பதுதான். கம்யூனிஸ்ட் கட்சியின் காரணமாக அரிஜனங்கள் எவ்வளவோ முன்னேறினார்கள். இது உண்மை, வைப்பூரில் தீ வைத்தார்கள். நவம்பர் 14-ம் தேதியன்று திரு. பக்கிரி என்பவர் கொலை செய்யப்பட்டார். 14-11-1968 அன்று நான் சட்ட அமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். "என்னை வெட்டுவதற்கு திட்டம் போட்டிருக்கிறார்கள், என்னைக் கொலை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, அமைச்சர் அவர்களே கவனம் செலுத்துங்கள்" என்று கூறினேன். நான் அன்றைய தினம் அமைச்சர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்ததால் அன்றைய தினம் உயிர் தப்பினேன். திரு. பக்கிரி கொலை செய்யப்பட்ட நேரத்தில் அப் பகுதியில் இரண்டு போலீஸ் லாரிகள் இருந்தன. என்ன செய்தது? போலீஸ் அதிகாரிகள் தடுத்து நிறுத்தினார்களா? நெல் உற்பத்தியாளர் சங்கம் என்ற பெயரில் தஞ்சை மாவட்டத்தில் அராஜகம் நடந்து வருகிறது. பூந்தாழங்குடியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சமயத்தில்





காங்கிரஸ்காரர்கள் அதை அரசியல் ஆதாயத்திற்கு எடுத்துக் கொண்டார்கள். தென் சென்னை பார்லிமெண்ட் தேர்தலில் 'அத்தான், செத்தான்' என்று கூறி அரசியல் ஆதாயம் தேடி அரசியல் நோக்கோடு பேசினார்கள்.

சுதந்திராக் கட்சி நெல் உற்பத்தியாளர் மகாநாடு நடந்தது. நான் அமைச்சரிடம் நேரில் சொன்னேன். இவர்கள் நெல்லா உற்பத்தி பண்ணுகிறார்கள்? இவர்கள் நெல் உற்பத்தியைப் பற்றித் தெரியாதவர்கள். நெல் உற்பத்தி செய்ய முடியாதவர்கள், பெரும் நிலப்பிரபுக்கள், அந்த மகாநாட்டில் சுதந்திராக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் கூடப் பேசினார்கள். ஒப்பந்தத்தை மீறுவது எப்படி? வெளியூர் ஆட்களைக் கொண்டு வருவது எப்படி? நியாயமான கூலியைக்கூடக் கொடுக்காமல் வஞ்சிப்பது எப்படி? இதைப்பற்றித் தான் ஆலோசிக்கிறார்கள். இந்த ஸ்தாபனம் தொடர்ந்து செயல்பட்டதன் காரணமாகத்தான் வெண்மணிச் சம்பவம் ஏற்பட்டதே தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. ஒவ்வொரு கால கட்டத்திலும் அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறிக் கொண்டே வருகிறோம். இது ஜனநாயகத்திற்கு விரோதமான இயக்கம், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற இயக்கம். இவர்களுக்குப் போலீஸ் படை உதவியாக இருக்கிறது. எனக்குப் பெரும் ஆச்சரியம் என்னவென்றால் போலீஸ் ஐ.ஜி. திரு. மகாதேவன் அறிக்கை வெளியிட்டார்கள். "தஞ்சை மாவட்டத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியும். அதற்குத் தயாராய் இருக்கிறோம். வொயர்லெஸ் இருக்கிறது," என்பதாக 2 மாதங்களுக்கு முன்பு அறிக்கை விட்டாரே, ஏன் வெண்மணி நிகழ்ச்சியைத் தடுக்கவில்லை? அதன் உள்ளே இருக்கும் மர்மம் என்ன?

டிசம்பர் 14-ம் தேதி சிக்கல் பொதுக்கூட்டத்தில் பேசினேன். போலீஸ் அதிகாரிகள் இருந்தார்கள். வெண்மணியில் கொளுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள், அதைத் தடுப்பது அதிகாரிகள் பொறுப்பு என்று குறிப்பிட்டேன். திரு. தனுஷ்கோடி அவர்களும் பேசினார்கள். என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்? அங்கே இருக்கக்கூடிய நிலப்பிரபுக்கள், காங்கிரஸ்காரர்கள், சுதந்திராக் கட்சிக்காரர்கள், போலீஸ் அதிகாரிகளின் பலத்துடன் விளைவித்தது தான் வெண்மணி நிகழ்ச்சி. நான் வடுகச்சேரி சம்பவம் பற்றித் தந்தி கொடுத்தேனே!

"Mirasdar rowdies attacked and looted Nagapattinam taluk, Vaducuncheri Harijan street. Harijan lives are in danger. Pray immediate protection to Harijans without delay." என்பதாக டிசெம்பர் 5-ம் தேதி போலீஸ் ஐ.ஜி. திரு. மகாதேவன் அவர்களுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் தந்தி கொடுத்தேன். அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? மறுபடியும் டிசம்பர் 14-ஆம் தேதி என்பதாக முதல் அமைச்சர்

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்] [1969 சனவரி 28

"Our party comrade Pakkirisami brutally murdered yester night. No protection for our party comrades' lives—Pray immediate intervention and proper action."

அவர்களுக்கும், சட்ட அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், போலீஸ் ஐ.ஜி. அவர்களுக்கும் தந்தி கொடுத்தேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

இதுபோல பல நூற்றுக்கணக்கான தந்திகளையும், தபால்களையும் நாங்கள் எழுதியும் சட்டவிரோதமான அந்தப் படையை அடக்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? பகிரங்கமாக போலீஸ் வருவதும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதும் தான் வெண்மணி நிகழ்ச்சிக்குக் காரணமாகும்.

சமீபத்தில் முத்தரப்பு மகாநாடு நடந்தது. கலெக்டர் அறுவடைக்கூலி நிர்ணயம் செய்தார்? நெல் உற்பத்தியாளர் சங்கத்தார் என்ன சொல்கிறார்கள்? அந்தக் கூலியைக் கொடுக்க மாட்டோம், சர்க்காருக்கு எச்சரிக்கை விடுகிறார்கள், நாங்கள் அறுவடை செய்யப் போவதில்லை. என்ன பொருள்? இந்தச் சர்க்காருக்கு நெருக்கடியைக் கொடுக்கவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் நோக்கம், சுதந்திராக் கட்சியின் நோக்கம், நிலப்பிரபுக்களின் நோக்கம். இதன் விளைவுதான் வெண்மணி, மீண்டும் பரிசீலனை செய்து பார்த்தால் வெண்மணியில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அரசியல் ஆதாயத்திற்கே கொள்ளி வைக்கப்பட்டது. மனித சரித்திரம் இருக்கிற வரையில் இது மாற முடியாது. ஒரு 70 வயது கிழவி சொல்கிறாள், கொள்ளி வைத்துவிட்டு இந்தக் காங்கிரஸ்காரர்கள் பார்க்கவும் வருகிறார்களே . . .

THIRU K. VINAYAKAM: On a point of Order, Sir. I have been listening patiently to the hon. Member's speech. But I did not want to disturb him when he was expatiating his own personal theory about the incident. He is describing the incident without any basis. Very often he says: "the Congress people asked us to unfurl the Congress flag. We did not oblige and that is why the huts were set on fire". Is it a fact? How can the hon. Member say this? Can he support all these charges with documentary proof? The Chair should pull up the hon. Member and prevent him from attacking us without any facts and without any documentary evidence?

DR. H. V. HANDE: On a point of Order, Sir. The hon. Member, I thought, was dragging in the Congress party. He has dragged my party also. It is a misfortune. The real theory is that Pakkirisami was murdered by the Communists and the Communists wanted to completely shut the evidence. So, they themselves engineered these people to go in to the hut. They themselves locked them and they themselves set fire to the whole thing so that it will come on the other people and the complete evidence is destroyed. That is a theory. I do not know whether



1969 சனவரி 28] [Dr. H. V. Hande]

it is true. But these theories are there. So instead of accusing other parties, let us, like gentlemen, let the whole thing be analysed completely and the verdict given. That is my humble request to the hon. Member.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: அந்தத் தாய் பேசுகின்றாள், டேப்ரெக்கார்டு இல்லை. உண்மையைச் சொல்கிறேன். மகாபாபிகள் தீயை வைத்த பிறகு வந்து பார்க்க வருகிறார்களே, கம்யூனிஸ்டு கொடி இருந்ததனால்தான் இது ஏற்பட்டது, காங்கிரஸ் கொடியை ஏற்று என்று சொல்கிறார்களே, இப்படிச் சொல்ல என்ன துணிவடா உனக்கு, போ என்று சொன்னேன் என்கிறாள். இது உண்மை.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்---தலைமை)

எரிகிற தீயில் ஒரு தாய் தன் குழந்தையை மார்போடு அணைத்திருக்கிறாள். கை கருகியிருக்கிறது. கால் கருகியிருக்கிறது. மார்பு கருகிவிட்டது. எத்தனை கோரமான சம்பவம்? எல்லா ரெக்கார்டும் (அனுப்பிய, தந்த மனுக்களுக்கு) இருக்கின்றன. இதுபற்றி விசாரணை வருவதாக இருந்தால் அவற்றைக் கொடுக்கத் தயாராய் இருக்கின்றேன். இதுபற்றி முதல் அமைச்சருக்கே நான் எழுதியிருக்கிறேன். "தஞ்சை மாவட்டத்தில் வாழும் விவசாயத் தொழிலாளி வர்க்கம் பரம்பரை பரம்பரையாக பொருளாதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் அடிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். அவர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு தங்கள் உரிமைக்கு குரல் எழுப்ப முன் வந்ததைப் பார்த்து நிலப்பிரபுக்கள் ஆத்திரம் அடைந்தனர். இன்று அதிகார வர்க்கம் அவர்களுக்கு (நிலப்பிரபுக்களுக்கு) ஆதரவாக இருப்பதால் அக்கிரமங்கள் பல துணிந்து செய்கின்றனர். 1967 தேர்தலில் தங்களைப் பாதுகாத்துக்கொண்ட காங்கிரஸ் ஆட்சி தாங்கள் தோற்றதற்கு இந்த ஏழைகளின் ஓட்டுதான் காரணம் என்பது போல பழிவாங்க முன் வந்துள்ளனர். இவை தான் எங்கள்மீது அவர்களுக்கு ஏற்பட்ட விரோதத்திற்கு அடிப்படையான காரணம்" என்று எழுதியிருக்கிறேன். வெண்மணிச் சம்பவத்தைப்பற்றி அதிக விவரம் தர முடியும். விசாரணையில் இருப்பதால் சொல்ல முடியவில்லை. அதிகார வர்க்கம் ஆட்சிக்கு எதிராக, எண்ணத்திற்கு விரோதமாகச் செயல்படாதிருந்தால் இதைத் தவிர்த்திருக்க முடியும். இப்படி நடக்க இருக்கிறது என்பதை தந்திகளின் மூலமாக, நேரடி விவாதத்தின் மூலமாகத் தெரிவித்திருந்தோம். அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தோம். அப்போதே கவனித்து முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் தடுத்திருக்கமுடியும். 14-ம் தேதியன்று பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களிடம் கூறினேன். அவர்கள் மார்பு வலி என்று சொன்னார்கள். ஏதோ கவனித்துச் செய்யுங்கள் என்று சொன்னேன். அதற்குப் பிறகு முதல் அமைச்சரைச் சந்தித்துப் பேசினேன். சட்ட அமைச்சரைச்

[திரு. கோ. இர. ஞானசம்பந்தன்] [1969 சனவரி 28

சந்தித்துப் பேசினேன். இதைக் கவனித்து சீரியஸாக எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன். அப்படி முன் நடவடிக்கை எடுத்திருந்தால் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்திருக்க முடியும். ஆபத்துக் குறைந்துவிட்டது என்று சொல்லிவிடமுடியாது, இன்னும் ஆபத்து குறையவில்லை, ஞானசம்பந்தத்தை வெட்டுகிறேன், தனுக்கோடியை வெட்டு கிறேன் என்று சொல்கிறார்கள். அவர்கள் சட்டப்பூர்வமான படை போன்று ஒரு படையையே வைத்துக்கொண்டிருக்கிறார் கள், இன்னும் பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழு தாவது நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயுள்ள அதிகாரிகள் நல்லமுறையில் நடக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். கீழையூர், வலிவலம், நாகப்பட்டிணம் போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ளவர்கள் இதற்கு உடந்தையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே யுள்ள அதிகாரிகளை மாற்றவேண்டும். ஏனென்றால் அவர்கள் அங்குள்ள பண்ணைகளின் ஆட்களாகத்தான் இருக்கிறார்களே தவிர, அரசாங்கத்தின் அதிகாரிகளாக இல்லை. இன்றும் வெண்மணி போன்று சில நிகழ்ச்சிகள் கோரப்பற்களைக் காட்டிக் கொண்டிருப்பது நின்றுவிடவில்லை. அங்கேயுள்ளவர்கள் அந்த நிகழ்ச்சியை மறந்துவிடுவதற்கில்லை, அவர்கள் அங்கே போர் முழக்கம் செய்துகொண்டிருக்கிறார்கள், போலீஸ் இல்லா விட்டாலும், தயார் என்று புஜம் தட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டும், அங்கேயுள்ள கொடியவர் களின்மீது தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்து, அங்கே யுள்ள அதிகாரிகளையும் மாற்றவேண்டும், இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வெண்மணி சம்பந்தமாக நிறையப் பேசவேண்டிய விஷயங்கள் இருந்தாலும், நேரம் இல்லாத நிலைமை இருப்பதால் இப்போழுதாவது அரசாங்கம் தீவிரக் கவனம் செலுத்தவேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பேரவையின் அலுவல்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. 28—1—1969-அம் தேதியன்று நடந்த அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

29—1—1969 முதல் 2—2—1969 வரை நிகழ்ச்சிகள், ஏற்கனவே அமைப்பப்பட்டுள்ளவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| திங்கள் 3—2—1969 | .. | அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். |
| செவ்வாய் 4—2—1969 | .. | (1) நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வுக்கெடுத்தலும், நிறைவேற்றலும். |
| | | (2) மற்ற அரசினர் மசோதாக்களை ஆய்வுக்கெடுத்தலும், நிறைவேற்றலும். |
| [illegible] 5—2—1969 | .. | அரசினர் அலுவல்கள், (ஏவையேனுமிருப்பின்). |

வழக்கம்போல பேரவை காலை 9 மணி முதல் கூடும்.



1969 சனவரி 28]

### (9) ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்ட தைப்போல், நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் அவர்கள் மிக விரைவிலே உடல் நலம் பெற்று இந்த நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று என சார்பிலேயும், என் தொகுதி மக்களின் சார்பிலேயும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இந்த மன்றத்திலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவர்னர் உரையில் வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்று பேசினார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே பெருமளவுக்குப் பெருகியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதையும், எதனாலே இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது என்பதையும், அதற்கு மாநில அரசாங்கம் பொறுப்பா, மத்திய அரசாங்கம் பொறுப்பா என்பதைப்பற்றியெல்லாம் அந்தத் தரப்பிலே இருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப் பொழுது இருக்கக்கூடிய மத்திய அரசாங்கம், அது போட்டிருக் கின்ற ஐந்தாண்டுத் திட்டங்கள் திட்டமிட்டபடி நிறைவேற்றப் படாமை, இவற்றினால்தான் இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறதே தவிர அதற்கு மாநில அரசாங்கம் பொறுப்பல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் பஞ்சாலைகளுக்கு நிவாரணம் தேடவேண்டும், துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும், அதிலே இந்த மாநில அரசாங்கம் தவறிவிட்டார்கள் என்றெல்லாம் இந்த மன்றத்திலே பெரிய அளவுக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும், வெளியிலே மேடைகளிலே இந்த அரசாங்கம் தான் அதற்கெல்லாம் பொறுப்பு என்று எல்லாக் கட்சியினரும் இந்த அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பதை மிகத் தெளிவாகவே பார்க் கிறோம். தமிழகத்திலே பஞ்சாலைகள் மூடிக் கிடப்பதற்கு யார் காரணம் என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் இதே மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னாலே எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பேசியவற்றையெல்லாம் நான் பார்த்தேன், அதற்கு அவர்களில் யாரும் பதில் சொன்னதாகத் தெரியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் மத்திய அரசாங்கம் என்பதை நாடு மிகத் தெளிவாக அறியும், எல்லோரும் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசாங்கம்தான் நூலின்மீது விதிக்கப்பட்ட வரியை உயர்த்தியிருக்கிறது. 1 ரூபாய் 20 பைசாவுக்கு இருந்ததை ஆறு ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருப்பது மத்திய அரசாங்கம்தான். அப்படி உயர்த்திய தற்குக்கூட இன்னொரு காரணம் இருக்கிறது. குறிப்பாகத் தமிழ் நாட்டிலே பஞ்சாலைத் தொழில்தான் சிறந்து விளங்குகிறது. அந்தத் தொழிலுக்கு—ஊறு விளைவிக்கவேண்டும் என்று

நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் திட்டமிட்டு தமிழ்நாட்டுக்குச் செய்த துரோகம்தான் இதற்குக் காரணம் வடக்கே இருக்கிற அஹமதாபாத் நெசவு செய்கிற பஞ்சாலைகளுக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் அவர்கள் மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து எங்களுக்கு தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, வெளியிலே பம்பாயிலே இருக்கிறவர்கள் தமிழ்நாட்டிலே நூலைப் பெற்றுத் துணியாக நெய்து வியாபாரம் செய்கிறார்கள், அவர்களோடு போட்டிபோட எங்களால் முடியாது, எங்களுக்கு நீங்கள்தான் பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக மத்திய நிதி அமைச்சர் நேரடியாக நூலுக்கு விலையை உயர்த்தியதன் காரணமாகத்தான் இங்கிருந்து நூலை அவர்கள் போதுமான அளவுக்கு வாங்கவில்லை. மத்திய அரசாங்கம் போட்ட வரியின் காரணமாகவும் விலை உயர்ந்ததின் காரணமாகவும் தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்வதெல்லாம் வாதத்திற்காகவும் பிரச்சாரத்திற்காகவும் தான் பயன்படுமே தவிர உண்மைக் காரணம் என்ன? இரண்டு ஆண்டுக் காலமாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதான் சொல்கிறார்களே தவிர, எதிர்க்கட்சியினர் எந்தவிதமான உருப்படியான பதிலையும் சொல்லவில்லை. இப்படிப் பேசுகின்றவர்கள் நான் தலைவர் அவர்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களால் அதற்காகச் சொல்லப்பட்ட ஆலோசனைகள், என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இதை நீங்கள்தான் செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சி கொறடா அவர்கள் சொல்கிறார்கள் எதிர்க்கட்சி என்பது ஆளுங்கட்சியின் குறைகளைச் சொல்லவேண்டுமென்ற ஒரே கருத்துடன் மட்டுமல்லாமல் நல்ல ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் நல்ல எதிர்க்கட்சி இல்லையே என்று வருத்தப்பட்டார்கள். அவர்கள் இப்பொழுது எதிர்க்கட்சியாக வந்த பின்னாலேகூட பொறுப்புள்ளவர்களாக இல்லையே என்ற வருத்தம் இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்திருக்கிறோம். முழு அதிகாரம் இந்த அரசுக்குக் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு அவர்கள் தங்களுடைய செல்வாக்குக் குறைந்து விடுமோ என்று கருதாமல் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். மத்திய அரசாங்கத்திடம் கைநீட்டி காரியங்களைச் செய்யவேண்டிய நிலையும், மத்திய அரசாங்கத்திடம் ஒரு சிறிய காரியத்திற்காகக்கூட உதவிபெற வேண்டிய நிலைமையும் தான் இந்த அரசாங்கத்திற்கு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நாட்டு மக்களுடைய தேவைகள், இந்த நாட்டு மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய அதிகாரங்கள் மத்திய அரசிடம்தான் இருக்கின்றன, இங்கே இல்லை. முழு அதிகாரத்தையும் மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டும். எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டு இருக்கின்றன, டெல்லிப்





பேரரசுதான் எல்லா அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு இருக்கிறது, இவைதான் இதற்கு அடிப்படையான காரணங்கள். இதற்கு ஒரு விமோசனம் தேவை என்றால், தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்றால் எல்லா மாநில அரசாங்கங்களும் சுயாட்சி அரசாங்கங்களாக அமையவேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் எல்லாக் குறைபாடுகளையும் மிக நல்ல முறையிலே போக்க முடியும். இன்றைக்கு எல்லாக் குறைபாடுகளையும் நீக்கும் அளவுக்கு அமைப்பு முறை கிடையாது. இதைத் தான் எதிர் வரிசையில் இருக்கும் காங்கிரஸ் நண்பர்கள்கூட பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு நாட்டில் ஜனநாயக முறைப்படி பல்வேறு கட்சிகள் மாறி மாறி பொறுப்புக்கு வரும். இன்றைக்கு ஒரு கட்சி ஆட்சியிலே இருக்கலாம், நாளைக்கு வேறு ஒரு கட்சி வரலாம், பிறகு இன்னொரு கட்சி வரலாம். யார் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் இந்த மாநிலத்திலே உள்ள குறைகள் அனைத்தையும் போக்க வேண்டுமென்றால் மாநிலத்திற்கு சுய ஆட்சி அதிகாரம் வேண்டும், முழு அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரம் இன்று டெல்லியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது, குவிந்து கிடக்கிறது. ஆகவே, இன்று கவர்னர் பெருமான் உரையை வரவேற்றுப் பேசுகின்ற இந்த நேரத்திலே இந்த மாநிலத்திற்கு சுய ஆட்சி கிடைப்பதற்கு உள்ள எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. மாரிமுத்து : துணைச் சபாநாயகர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே, வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு நிலக் கிழார்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே இசைவான உறவு நீடிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்த உணவு உற்பத்தியைப் பொருத்தவரை தஞ்சை மாவட்டம்தான் தலை நகராக இருக்கிறது என்று இந்த அவையிலும், வெளியிலும் ஒரு முகமாகக் கூறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் அத்தனைபேரும் வெளி மாவட்டங்களுக்குத் தஞ்சம் போகக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள் என்று முன்பே நான் எடுத்துக் கூறினேன். அங்கு இருந்த நிலைமைகளின் பிரதிபலிப்புத்தான் இன்று நம் தஞ்சை மாவட்டத்தில் வெண்மணி கிராமத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நிலை என்பதை இந்த அரசு உணரவேண்டும். இந்த அவையிலே பேசுகின்ற அத்தனை பேரும் வெண்மணி கிராமத்திலே விவசாயிகளுக்கு ஏற்பட்ட பெரிய கொடுமையைப் பற்றிப் பேசுகிறார்கள். நினைக்கும்போதே வேதனை தாங்கக்கூடிய விஷயமாக இருக்கிறதென்பதை இந்த அவை உணரவேண்டும். அமைச்சர்கள் உணரவேண்டும்.

[திரு. அ. மாரிமுத்து] [1969 சனவரி 28

தஞ்சை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே கூலிப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இது, சுற்றுலாச் செய்கிற மாண்புமிகு அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் தெரிந்த விஷயம். சென்ற ஆண்டில் பூந்தாழங்குடியில் ஒரு பக்கிரி கொல்லப்பட்டான். அடுத்து சிககலில் ஒரு பக்கிரி, அடுத்து வெண்மணியில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி. முன்னால் பேசிய இடதுசாரி கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள்கூட எடுத்துப் பேசினார்கள். பூந்தாழங்குடி சம்பவத்தை பொருத்து அரசு நல்ல முறையில் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் வெண்மணி கிராமத்தில் இத்தகைய சம்பவம் நடந்திருக்காது என்று கூறினார்கள். அதையேதான் நானும் வலியுறுத்திக் கூறுகிறேன். இதிலே அரசு தவறிவிட்டது என்று வருத்தத்தோடு கூறுகிறேன்.

மற்றும் ஒரு விஷயத்தை இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறைப் பகுதியை எடுத்துக் கொண்டால் உணவு உற்பத்தியில் சிறந்தவர்கள் தாழ்த்தப்பட்ட அருமை விவசாயத் தொழிலாளர்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றையதினம் பாதிக்கப்பட்ட மூவரும், அடுத்து எரிக்கப்பட்ட 42 பேரும் தாழ்த்தப்பட்டவர்கள் என்றால், இந்த அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன சலுகையை, ஆதரவைத் தந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். பண்டை மொழி ஒன்று சொல்வதுண்டு. அரசாங்கத்திற்கு விவசாயிகள்தான் முதுகெலும்பு என்று கூறுவார்கள். அப்படி முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள் தஞ்சை மாவட்டத்தில் தீக்கிரையாகி இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது பெரிதும் வேதனையாக இருக்கிறது. குறிப்பாக, தாழ்த்தப்பட்டவர்கள் நிலை இந்த அளவில் இருக்குமானால் உள்ளபடியே நமது தமிழகம் எந்நிலைக்குப் போய்ச் சேரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரிசன மக்கள் அத்தனைபேரும் உள்ளபடியே அப்பாவி மக்கள், உழைப்பாளிகள், இரு சாராரும், ஆண்-பெண் இரு சாராரும் நல்ல முறையிலே உழைத்து ஊதியத்தைப் பெறுகின்றவர்கள். அரிசனங்களை, தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் எந்த முறையில் உயர்ந்தவர்கள் என்பதற்கு ஒரு சான்று கூற விரும்புகிறேன். மற்றைய வகுப்பினர்களில் காவியைக் கட்டிக்கொண்டு, கொட்டையைக் கட்டிக்கொண்டு ஏதோ ஒரு நேரத்தில் சோம்பேறியாகி பிச்சையெடுக்கிற நிலை இருக்கும். ஆனால் அரிசன மக்கள் அப்படிப்பட்ட காரியத்தை எப்படிப்பட்ட நேரத்திலும், சோம்பேறியாக இருந்தாலும் செய்யமாட்டார்கள். இன்று காவியைக்-கட்டிக் கொண்டு, கொட்டையைக் கட்டிக் கொண்டு திருவோட்டுடன் தெருவிலே இரக்கின்றவர்கள் யாரைப் பார்த்தாலும் அவர்களிலே யாரும் நிச்சயமாக அரிசன வகுப்பைச் சார்ந்தவனாக இருக்க மாட்டான். அப்படி அரிசனங்கள் இந்த நாட்டிலே உழைப்பதற்காகவே பிறந்தவர்கள் போல் இருக்கின்ற



1969 சனவரி 28] [திரு. அ. மாரிமுத்து]

நிலையிலே தஞ்சை மாவட்டத்திலே அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணரவேண்டும். அரசு முன்கூட்டியே ஏற்பட்ட சம்பவங்களை வைத்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் உண்மையிலேயே வெண்மணி கிராமத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை அமைச்சர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்திற்கு ஏற்ற முறையில் மண்ணியாறு, பழவாறு திட்டத்தைப்பற்றி ஆய்வு செய்து ஓராண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றித் தருவதாகப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குடந்தையில் நடந்த கருத்தரங்கின்போது வாக்குறுதி தந்தார்கள். குறிப்பாக ஆடுதுறை தொகுதியில் திருப்பனந்தாள் வட்டாரத்தில் உள்ள 32,000 ஏக்கர் நிலப்பரப்பில் 28,000 ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அதிலே 12,000 ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களாகும். மண்ணியாற்றில் சரியானபடி தண்ணீர் வராத காரணத்தால் அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் தாளடிப் பயிர் நாசம் அடைந்திருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் நன்கு உணர வேண்டும்.

அடுத்து, கிராம நாணயச் சங்கம் என்று அமைத்து ஆங்காங்குள்ள விவசாயிகளுக்கு நல்ல முறையிலே கடன் உதவி செய்து தந்தார்கள். அதைப் பெற்ற விவசாயிகளுக்கு ஒரு சமயம் பற்றுக்குறை ஏற்பட்ட காரணத்தால் நாணயச் சங்கத்தில் வாங்கிய கடனைத் திருப்பித் தர முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்கள் கட்ட வேண்டிய தவணையைத் தள்ளிப் போட்டு முடிவில் வசூலிக்க வேண்டுமென்று கோரியும், அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்கத் தவறிய காரணத்தால் என்னதான் அதி தீவிர சாகுபடித் திட்டத்தைத் தஞ்சை மாவட்டத்தில் நடத்தினாலும் 100-க்கு 20 சதவிகிதம் விவசாயிகள் அந்தக் கடனைப் பெற்று திருப்பித் தர முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்ற நிலையில் அவர்கள் தீவிர சாகுபடித் திட்டத்திலே முழு அளவில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர்கள் உணர வேண்டும்.

காவிரியில் தண்ணீர் குறைவாக வந்த காரணத்தால் முன்பு இருந்த அரசாங்கத்தினர் வடிமுனைக் குழாய்களின் மூலம் தண்ணீர் இறைத்து சாகுபடி செய்வதற்கான வசதிகளைச் செய்து தந்தார்கள். அதன்படி கடன்கள் கொடுக்கப்பட்டு மோட்டார் பம்ப் செட்டுகள் எல்லாம் வழங்கப்பட்டன. ஆனால் பல விவசாயிகளிடம் மோட்டார் பம்ப் செட் பார்சல் பிரிக்கப்படாமலே இருக்கிறது. இதற்குக் காரணம் மின்சாரம் அளிக்கப்படாததுதான். கனம் அமைச்சர்கள் இதைக் கவனத்தில் கொண்டு மின்சாரம் உடனடியாகக் கொடுப்பதற்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த அவையில் பேசும்போதெல்லாம் ஏழைகள், விவசாயிகள், உணவு உற்பத்தி

யைப் பெருக்கவேண்டும் என்றெல்லாம் பேசுகிறார்களே தவிர தமிழகத்தின் நெல் களஞ்சியம் என்று சொல்கிற தஞ்சைத் தரணியில் வெண்மணியில் என்ன நடந்தது என்பதை சீர்தூக்கிப் பார்த்தால் தஞ்சை மாவட்டத்திலுள்ள உழைப்பாளிகளும், விவசாயிகளும் நான் முன்பு சொன்னதுபோல் அடுத்த மாவட்டத்திலோ அல்லது அடுத்த மாநிலத்திலோ தஞ்சம் புகக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும்.

* **ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் உரையாற்ற என்னை அனுமதித்தமைக்கு என் நன்றி. நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அறிஞர் அண்ணா அவர்கள் நம்மோடு வீற்றிருந்து கேட்காத நிலையில் இந்தச் சட்டமன்றப் பேரவை அரசனில்லாத அரியணையாக இருக்கிற காட்சியை நான் பார்க்கிறேன். எல்லாம் வல்ல இறைவன், அறிஞர் அண்ணா அவர்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும், நீடித்த ஆயுளையும் தந்து, அவர்களது சேவை நமக்கு என்றென்றும் கிடைக்க அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு என் உரையை நான் ஆரம்பம் செய்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் மழையின்மை காரணமாக நெருக்கடியானதொரு நிலை ஏற்பட்டிருப்பதை கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் பார்க்கிறேன். உண்மையான, அவசர, அவசியமான ஒரு நிலையை உத்தேசித்து அரசினர் அதற்குப் பரிகாரம் தேடுவதற்கான முயற்சியில் உடனடியாக ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறவைப் பாசனத் திட்டத்திற்கு அரசு நிதி உதவி செய்திருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிணறுகள், குழாய் கிணறுகள், வடிமுனைக் குழாய் கிணறுகள் ஆகியவைகள் அமைப்பதற்கு அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிதி உதவி செய்வதைவிட கிணறுகள், குழாய்க் கிணறுகள் இவைகளை அரசே அமைத்துத் தந்தால் அவற்றை உடனடியாகப் பயன்படுத்துவதற்கும், கொடுக்கிற நிதி உதவி வேறு வகைகளில் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, என் மாவட்டத்தில் என் தொகுதியைப் பொறுத்தவரையில் மணிமுத்தாறு மேல் மட்டக் கால்வாயில், இறைவன் அருளால் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் நிறைந்திருக்கிற காரணத்தினால் இந்த ஆண்டு தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், வருகிற தண்ணீர் இருக்கிற குளங்களுக்கு முறையாகப் பயன்படுத்துவதற்குரிய ஒரு நிலை தெரிகிறதா என்றால் அதுதான் இல்லை. ஒரு குளம் நிறைந்து, அந்த நிறைந்த குளத்திற்கு அப்புறம் நான்கைந்து குளங்கள் நிறையக்கூடிய ஒரு நிலையில் அங்குள்ள கால்வாய் அமைப்புகள் இருக்கின்றன. என் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு





குளத்திற்கும் தனித் தனி கால்வாய் இருக்குமானால் மணிமுத்தாறு மேல் மட்ட கால்வாய் தண்ணீரைப் பயன்படுத்துவதன் மூலம் உணவு தானிய உற்பத்தியின் அளவை இன்னும் பெருக்குவதற்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு அரசின் பணத்தை மட்டும் முழுக்க முழுக்க அங்கிருக்கிற விவசாயிகள் எதிர்பார்க்கவில்லை கால்வாய் அமைத்துக் கொள்வதற்கு அவர்களே நிதி உதவி தருவதற்கும் தயாராயிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய வருங்காலத் தலைமுறையினர், நம் நடமாடும் செல்வங்களான மாணவர்கள் கல்வி கற்கச் செல்கிற காட்சி இருக்கிறதே அது வேதனை தருகிற ஒரு காட்சியாக இருக்கிறது. கல்விக்கூடங்கள் கல்வி போதிப்பதற்கு திறந்திருந்த நாட்களுக்கும் மூடியிருந்த நாட்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு அளவுமிகக் குறைவாக இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்ற அடிப்படை உண்மைகளை அரசு ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அரசு வேண்டுமானால் மதச் சார்பற்ற அரசாக இருக்கலாம். நம் நாடு மதங்களற்ற நாடல்ல. நம்முடைய மாணவமணிகளிடம், நம் வருங்கால தலைமுறையினரிடம் அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும் இறைவனை நினைத்து தவறிலிருந்து தங்களைத் தவிர்த்துக் கொள்கிற உணர்வை அவர்களிடம் இளமையில் ஊட்டி வளர்க்கவில்லை என்றால் இதுபோன்ற நிலவரம் இந்த நாட்டில் தொடர்ந்திருக்கிற நிலைதான் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் அமைச்சர்கள் நல்ல நோக்கோடு, தூய நோக்கோடு தங்கள் கவனத்தை இத்துறையில் செலுத்தி, வருங்காலத்திலாவது சமய உணர்வோடு கூடிய கல்வி முறையை ஏற்பாடு செய்து கொடுப்பதன் மூலம் இதுபோன்ற நிலவரங்களுக்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய நாகர்கோவில் இடைத்தேர்தல் பற்றிக் கூறினார்கள். அது நாகர்கோவில் இடைத் தேர்தலா அல்லது நாடார்கோவில் இடைத் தேர்தலா என்று நாட்டு மக்கள் பேசக்கூடியதொரு நிலைமை அந்த நாஞ்சில் மாவட்டத்தில் இருந்தது என்பதை நான் அறிவேன். நாஞ்சில் நாடு தமிழ் மக்களின் நலனுக்குரிய நல்லோர் பலரைத் தந்துள்ள நாடு! தொழிலாளர்களின் விடிவுக்கு வழிவகை விளக்கிய ஜீவாவைப் பெற்றுத் தந்த நாடு! கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை அவர்களை கவிதை உலகத்திற்குக் கொடுத்த நாடு நாஞ்சில் நாடு! இந்த நாட்டில் நடந்த காலத்திலேயே சதாவதானம் செய்து காட்டிய மகாமதி ஷெய்க் தம்பி பாவலரை கொடுத்த நாடு நாஞ்சில் நாடு! முத்தமிழ் வித்தகர்களான டி. கே. எஸ். சகோதரர்களையும், கலைவாணரையும் பெற்றுத் தந்த நாடு நாஞ்சில் நாடு! அந்த நாடு ஜனநாயக மாண்பை இந்த நாட்டிலே ஏற்படுத்துவதற்கு துணையாக இருக்கவேண்டுமே தவிர, ஜனநாயக பண்பாட்டினைக் கெடுக்கிற ஒரு மாபினை

ஏற்படுத்துவதற்கு அந்த நாட்டு மக்கள் துணை போகக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட மன்ற காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், அங்கு நடைபெற்ற கொடுமைகள்பற்றிக் கூறினார்கள். எந்தக் கொடுமைகளைப்பற்றிக் கூறினார்கள் என்று எனக்குத் தெரியாது. நாஞ்சில் நாட்டுக்குள் போவதற்கு முன்னர் கலந்த பனை என்ற ஊரில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைப் போட்டுக் கொண்டு பஸ்ஸோ அல்லது காரோ போகுமானால் கல்லால் எறிந்து அவற்றை உடைத்த காட்சியை நான் நேரில் அனுபவித்துப் பார்த்திருக்கிறேன். நாஞ்சில் மாவட்டத்திற்குள் நுழைவதற்கு முன்னமேயே இப்படிப்பட்டதொரு வீர வரவேற்பைத் தருகிற ஜனநாயக மாபு இந்த நாட்டில் வளர வேண்டுமென்று நினைக்கிறீர்களா? அது மட்டும் அல்ல. நமது மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களுக்கு நான் மிகவும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நாஞ்சில் நாட்டில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றீர்களே, அதை விளக்குவதற்காக, இதைக் கூறுகிறேன். மணலிக்கரை என்ற ஊர் முஸ்லிம் மக்கள் மைனாரிடியாக இருக்கிற ஊர். பாரத நாட்டிலுள்ள எட்டு கோடி முஸ்லிம் மக்களின் இணையற்ற தலைவராக விளங்கும் காயிதே மில்லத் அவர்கள், அந்த ஊரில் பச்சை பிறைக் கொடியை ஏற்றிவிட்டு வந்தார்கள். இரவில் ஏற்றிய அந்தக் கொடிமரம் காலையில் வெட்டி வீழ்த்தப்பட்டுக் கிடந்த காட்சியை நான் கண்டேன். இதுபோன்ற காட்சிகளைத்தான் ஜனநாயகத்தின் பேரால் இந்த நாட்டில் ஏற்படுத்தவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேங்காய்பட்டினத்திற்குப் பக்கத்தில் இணையம் என்ற கடற்கரை ஊர் இருக்கிறது. அங்கு திராவிட முன்னேற்றக் கழகக் கொடி, சுதந்திரா கொடி, முஸ்லீம் லீக் கொடி இவை கட்டப்பட்டிருந்த கம்பம் ஜனநாயகக் கூட்டணியை இந்த நாட்டு மக்களுக்கு காட்டிக் கொண்டிருந்த அந்தக் கொடிக் கம்பம் வெட்டி வீழ்த்தப்பட்டு கிடந்த காட்சியை நான் கண்டேன். கொடிக் கம்பத்தையா வீழ்த்தினார்கள்? இல்லை, ஜனநாயகத்தை வீழ்த்தினார்கள். இல்லை தர்மத்தை வீழ்த்தினார்கள். இல்லை, நீதியை வீழ்த்தினார்கள். அங்கு கொடி மரத்தையா வெட்டினார்கள்? இல்லை, மக்களின் மன உணர்விற்குரிய மனச்சாட்சியை வெட்டிக் கொன்ற கொலையை அங்கு நான் கண்டு வந்திருக்கிறேன். இந்த நாகர்கோவில் ஜனநாயகம்தான் ஜனநாயகம் என்றால் அப்படிப்பட்ட ஜனநாயகம் வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? அது மட்டுமல்ல, ஜனவரி 1-லிருந்து 8-ம் தேதிவரை அத்தொகுதியில் பல இடங்களில் எங்கள் கார்களை கற்களால் எறிந்த காட்சியைக் கண்டேன். இது தான் ஜனநாயகமா? இது ஒரு பெரிய வெற்றியோ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** காங்கிரஸ் கொடிகள் எவ்வளவு வெட்டி வீழ்த்தப்பட்டிருக்கின்றன? காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு பேர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள் என்பதை ஒரு





நீதி விசாரணை மூலம் அறிவதற்கு தாங்கள் அதை அனுமதிக்கிறீர்களா என்பதை அருள்கூர்ந்து கூறுங்கள்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில் இதுபோன்று காங்கிரஸ்காரர்கள் வெட்டப்பட்டிருந்த கொடுமையைப் பற்றி கூறியிருப்பார்களேயானால் அது ஒரு நீதி விசாரணைக்கு பொருத்தமாக இருக்கும். உண்மையும் வெளிப்பட்டிருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உண்மையான தகவல்களைச் சபைக்குத் தருவதாக எண்ணிக்கொண்டோ அல்லது கூறிக் கொண்டோ இருக்கிறார்கள். நேற்றையதினம் கூட கொலை செய்யப்பட்ட கிட்டு ரம்மி ஆடிக்கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டபொழுது நான் எழுந்து அதை மறுத்தேன். அது எஃப்.ஐ.ஆர்.-இல் இருப்பதாகச் சொன்னார்கள். அதை நிரூபிக்க முடியுமா என்று இப்பொழுது கேட்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எஃப்.ஐ.ஆர்-ஐ நாங்கள் பார்த்தோம். அதிலே இருந்தது. அதைத் திருத்தியிருக்கின்றது. அதற்காக விசாரணை இருப்பதால் அதைப்பற்றி இந்தச் சட்ட சபையிலே கூற முடியாது. ஒரு எஸ்.ஐ. என்ன நிகழுமோ என்று அஞ்சிக்கொண்டுள்ளார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நேற்றையதினம் அவர்கள் குறிப்பிட்டவுடன் எப்.ஐ.ஆர். வரவழைக்கப்பட்டது. அதில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதுபோல எந்த இடத்திலேயும் இடம் பெறவில்லை என்பதைக் கூறிக்கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அந்த எஃப்.ஐ.ஆர், தான் இது என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீங்கள் தயாரித்த எஃப்.ஐ.ஆர்.-ஐப் பற்றி எங்களுக்குத் தெரியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுக்குத் தெரியாமல் பிறரும் எஃப்.ஐ.ஆர். தயாரிக்கும் அளவுக்கு ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் கூறும்பொழுது கோர்ட்டிலே உள்ளதைப்பற்றி இங்கு கூற முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்திலே எஃப்.ஐ.ஆர். திருத்தியதைப் பற்றிச் சொன்னார்கள். அதை அவர்கள் எப்படிப்பார்த்தார்கள்? அது தவறு இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இரண்டு நிமிஷத்திலே முடித்துக்கொள்ள வேண்டும்.

[ஹாஜி ம.மு. பீர் முஹம்மது] [1969 சனவரி 28

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** ஐயா, குறுக்கீட்டிலேயே ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. அந்த நேரத்தையும் கொடுங்கள். அல்லது குறுக்கிடு செய்யும்பொழுது அதைத் தடுத்து விடுங்கள்.

நாஞ்சில் நாட்டைப் பொறுத்தவரையில் அங்கே மீனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அங்கு வெற்றிவாகை சூடியவர்களால் அங்குள்ள மக்களுக்கு இடைஞ்சல்கள் உண்டாகின்றன. கொலை வெறி தாண்டவமாடுகிறது. தினம் தினம் பயந்து கொண்டு இருக்கும் நிலையில் இருக்கிறார்கள். தங்கள் உயிரையும், உடைமையையும் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையையும் இழந்து அவர்கள் அல்லலுக்கு ஆளாகிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நாகர்கோயில் தேர்தல் வெற்றிக்குப் பின்னால் ஏற்பட்டிருக்கும் ஒரு விளைவைப்பற்றி முகவை மாவட்ட தண்டல்நாயகம் அவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கும் மகஜரைத் தலைவரின் அனுமதியோடு கொடுக்க விரும்புகிறேன். அதை திரு. கருத்திருமன் அவர்கள் கருத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதாவது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூருக்கும் விருதுநகருக்கும் இடையிலே புதுப்பட்டி . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவரவர்களே, உங்கள் அனுமதி பெற்றிருக்கிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதனுடைய கருத்தைத் தான் அவர்கள் சொல்லுகிறார்கள். உறுப்பினரவர்கள் அந்தக் கருத்தை மட்டும் கூறும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** ஆம். கருத்து தான். சாத்தூருக்கும் விருதுநகருக்கும் இடையிலே உள்ள புதுப்பட்டியில் நாகர்கோயில வெற்றி விழாவைக் கொண்டாடுபவர்களினால் மக்கள், அதிலும் முஸ்லீம் மக்கள் இம்சைக்கு ஆளாகிறார்கள், தொல்லைக்கு ஆளாகிறார்கள். அந்தத் தொல்லையைப் போக்கி இதிலிருந்து தங்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாகர்கோயில் தொகுதியைப் பொறுத்தவரையில் நாடார்கள் நிறைந்திருக்கின்ற அந்தப் பகுதியில், நாடாளும் கட்சியின் நாயகராக இருந்தவர் நின்று பெற்றிருக்கும் வெற்றியைப் பெரிதாகக் கொண்டாடுகிறார்கள். நான் கூறிக் கொள்ளுகின்றேன். தான் பிறந்த ஊரும் இல்லை, தான் பேசுகின்ற மொழியும் இல்லை . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சமூகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு நாடார், நாடார் என்று சொல்லுகிறாரே, அதே இடத்தில் இன்னொரு நாடாரும் போட்டி போட்டார் என்பதைத் தயவு செய்து நினைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.



1969 சனவரி 28]

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** நான் உணர்ந்துதான் உரைக்கின்றேன. நீங்கள் நாகர்கோயிலில் பெற்ற வெற்றியை மிகவும் பிரம்மாண்டமாகக் கொண்டாடுகிறீர்கள. அவவாறு கொணடாடுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை கிடையாது. தான் பிறந்த ஊரும கிடையாது, தான பேசும் மொழியும் கிடையாது, தான் பிறந்த மாநிலமும் கிடையாது. அப்படிப்பட்ட இடத்தில், தனனுடைய மாநிலம் அல்லாத பிற இடத்தில் கேரளத்தில் உள்ள மஞ்சேரி தொகுதியிலே மகத்தான பெருமையுடன் ஜனநாயக மரபிற்கு ஏற்ற வகையில் ஏற்படுத்தித் தநத அந்த வெற்றியை காயிதேமில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் வெற்றியை நாங்களும் கொணடாடினோம். அப்படிக் கொண்டாடிய நேரத்தில் மற்றவர்கள் மனம புண்படும்படி நாங்கள் கொண்டாடவில்லை. ஆனால் நீங்கள் கொண்டாடுகிறீர்கள். கொண்டாட வேண்டாமெனறு சொல்லவில்லை. ஆனால் அவ்வாறு கொண்டாடும்பொழுது அங்குள்ள மைனாரிட்டி மக்கள் துன்புறும் வகையிலோ, அல்லது பயப்படும் அளவிலோ கொண்டாடும் ஜனநாயக மரபை ஏறபடுத்திவிட வேண்டாமெனறு காங்கிரசாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன் (மணியடிக்கப்பட்டது).

பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு நிமிஷம் மட்டும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒரேயொரு சினன விஷயம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் கூறியதைத் திரும்பக் கூறுவதற்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். மொட்டைத் தலைக்கும முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது எனறு சொன்னார்கள. அத்தகைய ஒரு நிலைமை அவர்களுடைய பேச்சின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறுவதற்கு தயவுசெய்து அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையில் நாம் எந்த உள்ளத்தோடு, வேதனையான மனநிலையோடு இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால நாகர்கோயில் இடைத் தேர்தலுக்காக அறிஞர் அண்ணா அவர்களை சினிமாப் படமாக எடுப்பதற்காக சக்தி படைத்த மின்சார பல்புகள் முன் நிறுத்தியதன் காரணமாக மீண்டும் வியாதி வந்து விட்டது என்பதைப்போன்ற உணர்வை இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுத்துவதற்காக திரு. மார்டின் அவர்கள் தனது பேச்சின் மூலம் முயற்சித்திருக்கிறார்கள். அந்த முயற்சிக்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களையும் காரணமாக்கியிருக்கிறார்கள். உண்மை அப்படி அல்ல. அறிஞர் அண்ணா அவர்களின் கடமையுணர்ச்சி, தன்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கு போட்டியிடவில்லை என்ற நிலையிலும், தன்னுடைய உடல் நிலை சரியாக இல்லை என்ற காரணத்தாலும், கடமை உணர்ச்சியின் உந்துதலால் தன்னுடைய கருத்தை அந்தத் தொகுதி மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவர்களே விரும்பி

அந்தக் காரியத்தைச் செய்திருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரத்திலிருந்து ஊர்ஜிதமாகாத ஒரு உண்மைச் செய்தியின் மூலம் அறிகிறேன். அதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நண்பர் திரு. மார்டின் அவர்கள் பேசும்பொழுது நான் இங்கில்லை. திரு. பீர் முஹம்மது அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களை நாகர்கோயில் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் படம் எடுத்ததைப்பற்றிக் கூறி அதன் காரணமாகத்தான் அவரது உடல்நிலை இப்படிக் கெட்டு விட்டது என்று திரு. மார்டின் அவர்கள் கூறி, அப்படிப்பட்ட ஒரு பழியை என் மீதும், இந்த சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் சபாநாயகர் திரு. ஆதித்தனார் அவர்கள் மீதும் அவர்கள் போட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும் நேரத்தில் வழியிலே சினிமாப்படம் எடுக்கப்பட்டது. அது மாத்திரம் அல்ல. இந்தியக் கொடிநாள் விழாவிற்காக அண்ணா அவர்கள் ஏறத்தாழ 15 நிமிஷ நேரம் படக்காட்சியின் மூலமாகக் கொடிநாள் விழாவை பற்றி பிரசங்கம் செய்துள்ளது படமாக்கப்பட்டு தமிழ்நாட்டில் திரைப்பட அரங்குகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது டாக்டர்கள் கூறவேண்டிய விஷயம். படம் எடுத்ததால் அவரது உடல்நிலை சரியில்லையா என்பது டாக்டர்கள் கூறவேண்டிய விஷயம். அநியாயமாக, வேண்டுமென்றே ஒரு பழியைப் போடும் முயற்சியிலே மார்டின் அவர்கள் இறங்குவதைக் கண்டு வருத்தப்படுகிறேன். அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்களேயானால் இப்படிப்பட்ட பழிகளை இந்த நிலையிலே சுமப்பதற்கு எங்கள் உள்ளம் இடம் தராது, ஏனென்றால் எங்கள் இதய தெய்வம், குடும்பத்தின் தலைவன், மதிப்பிற்குரிய அண்ணா அவர்களுடைய உடலில் ஒரு ஊனம் ஏற்படுவதற்கும் நாங்கள் யாரும் காரணமாக இருக்கமாட்டோம் என்பதால் திரு. மார்டின் அவர்கள் பெருமனது வைத்து இந்தப் பழியிலேயிருந்து மீட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* **திரு. டி. மார்டின் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஓய்வு கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்களுக்குச் சிகிச்சையளித்த டாக்டர் மில்லர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த நிலையில் சினிமாப் படம் எடுப்பதற்காக, அதுவும் அவர்கள் காய்ச்சலினால் உடல் நலம் குறைந்திருந்தார் என்று கூறப்படும் நேரத்தில் பல மணிக்கணக்காக அவர்களை உஷ்ணம் மிகுந்த பல்புகளின் மத்தியிலே இருக்க வைத்து அவர்களது உடல்நலம் கெட்டுவிட்ட நேரத்தில் இந்த விதமாக ஒரு தொந்தரவினை அவர்களுக்குக் கொடுத்து படம் எடுத்தார்கள். அவர்கள் இப்பொழுது திரும்பவும் நோய்வாய்ப்படுவதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்குமோ என்று பொது மக்கள் மத்தியில் பேசப்படுகிறது என்று குறிப்பிட்டேன். அதைத்தான் நான் இப்பொழுது சொல்லுகிறேன். அமைச்சரவர்கள் முதலமைச்சர் அவர்கள் மீது,



அவர்களுடைய உடல்நலம்மீது கொண்டுள்ள அக்கறையைப் பற்றியும், அவர் கொண்டுள்ள அன்பைப் பற்றியும் நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் அந்த அமைச்சரவர்களும், ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆதித்தனார் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியும் வற்புறுத்தலும் காரணமாக அவர்கள் இந்தவிதமாகப் படமாக்குவதற்கு ஒத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று மக்கள் மத்தியில் பேசப்பட்டது. அதைத்தான் நான் இப்பொழுது கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் யாரும் அண்ணா அவர்களை நிர்ப்பந்தித்து அந்தப் படம் எடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அண்ணா அவர்களேதான் அந்த யோசனையை வெளியிட்டு, அவர்கள் நாகர்கோயிலுக்கு வரமுடியாத காரணத்தினால், அவர்களே பேசி அந்தப் படத்தை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தார்களே தவிர, யாரும் நிர்ப்பந்திக்கவில்லை. அண்ணா அவர்களுக்கு சில காரணங்களால் மீண்டும் நோய்வாய்ப்படும் நிலை ஏற்பட்டிருக்கும் என்றால் அது அவர்களுடைய மனம் புண்படும் படியாக, எழுதுவதாலே பேசுவதாலேகூட இருக்கலாம். பல காங்கிரஸ் பத்திரிகைகளில், " அண்ணா அவர்கள் செய்திருக்கிற அக்கிரமத்திற்கு அந்தப் புற்று நோய் என்றைக்கோ வந்திருக்க வேண்டும் " என்றெல்லாம் எழுதினார்கள். ஆகவே, திரு. மார்டின் அவர்கள் அப்படிப்பட்ட பழிகளை எல்லாம் எங்கள் மீது சுமத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அந்தப் பெருந்தன்மையை எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். அவர் அந்தப் பெருந்தன்மையோடு பதில் சொல்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அவர் அந்தப் பழியிலிருந்து மீட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, தயவு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் சமயத்தில் அவரைப்பற்றி எந்த விதத்திலும் பேசுவது நல்லதல்ல என்பது என்னுடைய கருத்து. என்னுடைய கட்சியினுடைய கருத்துமாகும். திரு. மார்டின் அவர்கள் சூழ்நிலையை சொல்லிவிட்டார்கள். முதன்முதல் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் அமெரிக்காவிற்குச் செல்லுவதற்கு முன்னாலே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் நானும், எந்தவிதமான ஆர்ப்பாட்டமோ, அவர்கள் மனது கஷ்டப்படும்படியான நிலைமையோ ஏற்படும்படி செய்யக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறோம் என்று ஆஸ்பத்திரியிலேயே அவர்களிடத்தில் சொல்லி விட்டுச் சென்றோம். ஆகவே, இந்த விஷயத்தை இனிமேல் தொடரக் கூடாது. எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, தமிழ் நாட்டிலே உள்ள ஒவ்வொருவரும் அண்ணா அவர்களுடைய உடலுக்கு ஊறு விளைவதற்கு அனுமதிக்க வேண்டாமென்பதுடன் நாங்கள் அதற்குக் காரணமாக இருக்க மாட்டோம் என்பதற்கு

உறுதி கூற விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையை மீண்டும் மீண்டும் நீடிக்காமல் யாராக இருந்தாலும் சரி, அவருடைய உடல்நிலையைப் பற்றி எந்த விதமான பேச்சும் பேசக் கூடாது என்று கேட்டுக் கொள்வதுடன், அதில் எந்த விதமான வேறுபாடும் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இதைக் காதால் கேட்டால்கூட வருத்தப்படுவார் என்று நினைக்கிறேன். ஏதோ சில பத்திரிகைகள் எழுதலாம். அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல. அது அவர்களுடைய தனிப் பட்ட பொறுப்பே தவிர, அதற்கு காங்கிரஸ்தான் காரணம் என்ற குற்றஞ்சாட்டுவதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். யாராக இருந்தாலும் சரி, தனிப்பட்ட மனிதராக இருந்தாலும், நல்லவரான அவரைப்பற்றி, பேசுவதோ, எழுதுவதோ, நினைப்பதோ, மாறு கருத்தாக இருப்பதோ தமிழர் பண்பாட்டுக்கே மிகவும் இழுக்கு என்று மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர், 'தற்போது இந்தியாவில் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவரான அண்ணாதுரை அவர்கள் மிக விரைவிலே குணம் பெற்று அவர்கள் மறுபடியும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்' என்ற வாழ்த்துச் செய்தியை அனுப்பியதற்கிணங்க விரைவிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய உடல்நலம் நன்றாகப் பெற்று நம்மிடையே வருவார் என்ற நல்லெண்ணத்தில் இந்த மாநிலத்தினுடைய ஆளுநர் உரையை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

கவர்னர் பெருமான் உரையில் தற்போது நாட்டுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களும், நல்ல காரியங்களும், நாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பல விஷயங்களும் குறிப்பிடப் பட்டிருப்பது வரவேற்கக்கூடிய விஷயமாகும். இத்தனை ஆண்டுகள் கவர்னர்கள் ஆற்றியிருக்கிற உரைகளைவிட இந்த ஆண்டு மிக நல்ல உரையை கவர்னர் அவர்கள் ஆற்றியிருக்கி றார்கள். குறிப்பாக, அவர் தன்னுடைய உரையில் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளித்த தமிழக அரசின் பணியைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நடப்பு ஆண்டில், 12 கோடி ரூபாய்க்கு நில அடைமான வங்கிகள் வாயிலாக விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற மக்களுக்குக் கடன் வழங்கி இருப் பதை விரிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, 50,000 கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கொடுத்ததைப் பற்றியும் கவர்னர் அவர்கள் தெரிவித்து இருப்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். அரசு புரட்சிகரமாக வேளாண்மைத் துறையிலே செய்திருக்கக்கூடிய நன்மைகளை விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல முறையிலே உணர்ந்து அந்த வழியிலே உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். இந்த ஆண்டு வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிற





கொடிய பஞ்சத்தின் விளைவாக, நாம் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாலும் உணவு உற்பத்தி ஓரளவுக்கு நல்ல நிலையிலே இருக் கிறது என்பதை அறிய நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிற நல்ல செய்தி ஒன்று, சேலம் மாவட்டத்திலிருக்கும் எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாக இருக்கிறது. இந்தியப் பேரரசு சேலம் உருக்காலைத் திட்டத்தை, கொள்கையளவில் ஏற்றுக்கொண்டி ருந்தாலும், இன்னும் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும், தமிழக அரசு அந்த திட்டத்தை அமுல்படுத்தும் பூர்வாங்க நடவடிக்கையாக ரூ. 10 கோடியை ஒதுக்கியிருப்பது குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்கிற காரணத்தாலும் என்னுடைய தொகுதியிலே இந்த இரும்புத் தொழிற்சாலை துவக்கப்பட இருக்கிறது என்ற காரணத்தாலும் நான் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல, கடந்த 5 ஆண்டு திட்டங்களில் மதிப்பீடுகளை எப்படி எப்படிக் கூட்டுவது, எப்படி எப்படி நிறைவேற்றுவது என்று இந்தியப் பேரரசு மிக வேகமாக கொண்டிருக்கிற நேரத்தில் தேவை யில்லாத இலாகாக்களை இந்தியப் பேரரசு வைத்துக் கொண்டு அதன் மூலமாக ஏராளமான பணத்தை விரயக்கிக் கொண்டிருக் கிறது. உடனடியாக அந்த இலாகாக்களை எடுத்து விடுவதற்கு இந்தியப் பேரரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்று நான் கருதுகிறேன். சுகாதாரம், விவசாயம், கல்வி போன்ற இலாக் காக்களுக்கு மத்திய அரசிலே அமைச்சர்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், அந்த இலாகாக்களுக்கு அமைச்சர்கள் இருந்து கொண்டிருக்கிற நேரத்தில் இந்தியப் பேரரசு அந்த இலாகாக்களுக்கு அமைச்சர் கள் என்றும் அதற்கு ஒரு நிர்வாகம் என்றும் ஏராளமான பணத்தை விரயக்கிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த 2 ஆண்டு காலமாக, தமிழக அரசு மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது. பல காங்கிரஸ் மாநில அரசுகள்கூட அவ்வப்போது இதை ஞாபகப்படுத்திக் கொண்டு வருகின்றன. ஆகவே, தமிழக அரசினுடைய வேண்டுகோளை இந்திய அரசு ஏற்று, அதற்கான அதிகாரங்களை தமிழக அரசுக்கு---தமிழக அரசுக்கு மட்டுமல்ல. மாநில அரசுகளுக்கு--ஒதுக்குவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மற்ற நிலைமைகளையும் சீராக்குவதற்கு வழி வகை செய்யும் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆண்டு விலைவாசிகள் குறைந்திருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. பருப்பு வகைகளும், எண்ணெய் வகைகளும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இங்கே ஒரு உறுப்பினர் பேசு கின்ற நேரத்தில், விலைவாசிகள் குறைப்பதைப் பற்றி கவர்னர் உரையிலே ஒன்றும் இல்லை என்று குறிப்பிட்டார். இன்றைய

தினம் விலைவாசிகள் 20 சத விகிதம், 25 சத விகிதம் குறைந்திருக்கிறது. மூன்று மாத காலத்திற்கு முன்னாலே இருந்ததைவிட பருப்பு வகைகளும், எண்ணெய் வகைகளும் விலை குறைந்திருப்பதை நாம் காண்கின்றோம். ஆக, இந்த ஆண்டு துவக்கம் மிக நல்ல முறையிலே இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம், தமிழக மக்கள் எதிர்பார்க்கலாம். அது மட்டும் அல்ல, இந்த மாநில கவர்னர் அவர்கள், மாநிலங்கள் மத்திய அரசிடம் பெற்றிருக்கக்கூடிய கடன் தொகைகளுக்குக் கொஞ்சம் கால தாமதம், வாய்தா கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய செய்தியாகும். அதை மத்திய அரசு உடனடியாக கவனித்து, இந்தக் கடன் தொகைகளுக்கு கொஞ்சம் வாய்தா கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்படுமானால், மாநில அரசினுடைய நிதி நிலையும் நல்ல முறையிலே இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொரு செய்தி, நமது மாநிலத்திலே மதுவிலக்குக் கொள்கையை மனப்பூர்வமாகவும், வெற்றிகரமாகவும் தமிழக அரசு நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நாமெல்லாம் பார்க்கிறோம். புதிதாக மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுகின்ற அரசுகளுக்கு மத்திய அரசு நிதி கொடுக்கின்ற அளவிலே யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நீண்ட பல ஆண்டுகளாக தொடர்ந்து அமுல் செய்து கொண்டிருக்கிற தமிழக அரசுக்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்; அவர்கள் கொடுக்க மறுப்பதாகத் தெரிகிறது. தமிழக அரசு அதை வலியுறுத்தி மத்திய அரசிடத்திலிருந்து அதற்கான நஷ்ட ஈடு பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே அரசு ஊழியத்திலே இருக்கும் டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தக் கூடாது என்கின்ற விதி வகுக்கப் போவதாகத் தெரிகிறது. ஆந்திர மாநிலத்தில் அரசு ஊழியத்திலே பணியாற்றுகின்ற டாக்டர்கள் தனிப்பட்ட முறையிலே தொழில் நடத்தக் கூடாது என்கின்ற திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். மிக விரைவிலே அந்த திட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக தனிப்பட்ட முறையிலே எந்த டாக்டரும் பணியாற்றுவதற்கு வழி வகை செய்யாமல் இருக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் மிகப் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல, இந்த முதல் கூட்டம் தமிழ்நாடு என்கின்ற நல்ல பெயர் மாற்றத்தோடு தொடங்குகின்ற நேரத்தில். இதில் பேசுகின்ற தனிச் சிறப்பு எனக்குக் கிடைத்ததைப் பற்றி நான் மிக்க பெருமை அடைகிறேன்.

பஞ்சாலைப் பிரச்சினைகளைப் பற்றி கவர்னர் அவர்கள் மிகத் தெளிவாக தம்முடைய உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். இன்றையதினம் பஞ்சாலை நெருக்கடியைப் பற்றி எனக்கு





முன்னாலே பேசிய நண்பர்கூட மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கவர்னர் அவர்களுடைய உரையில் இந்த நாட்டிற்குத் தேவையான அத்தனை கருத்துக்களையும் மிகத் தெளிவாகவும், மிக விரிவாகவும் சொல்லப்பட்டிருப்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பல அதிகாரங்கள் ஓரே இடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி குவிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை பரவலாக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல்வாதிகள் அத்தனை பேர்களும் வலியுறுததிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மத்திய அரசானது அதற்கான முறையில் செயல்பட்டு, எல்லாவிதமான ஒத்துழைப்பையும் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாகர்கோயில் தேர்தலைப்பற்றி காங்கிரஸ் நண்பர்கள் மிக மகிழ்ச்சியோடு, மிகுந்த உற்சாகத்தோடும் பேசினார்கள். இரண்டு ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சிக்கு வெற்றியே ஏற்படாமல் இருந்தது. திடீரென்று நாகர்கோயில் எதிர்பாராத விதமாக வெற்றி பெற்றவுடன், திடீரென்று ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டு தலைகால் தெரியாமல் நடந்துகொள்கிறாகள். காணாதவன் கண்டான் காடு மோடு இழுத்து அடித்தான் என்று சொல்வது போல, பலகாலமாக வெற்றியே கிட்டாமல் இருந்தவர்களுக்கு, இரண்டு ஆண்டு காலமாக வெற்றி பெறுதவர்களுக்கு, திடீரென்று நாகர்கோவிலில் வெற்றி கிடைத்தவுடன் தலைகால் தெரியாமல் அவர்கள் ஆடுகிறார்கள். நாகர்கோவில் வெற்றி குறித்து பேசும் பொழுது பொறுப்பற்ற வார்த்தைகளை அவர்கள் உபயோகித்து ஊர் ஊராகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகப் பொறுப்போடு நடந்துகொள்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கு இதை எடுத்துக்கூறி மிகவும் அடக்கமாகவும், ஒழுக்கத்தோடும் பேசவேண்டும் என்று சொல்லவேண்டும். நாங்களும்தான் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நடந்த இடைத் தேர்தல்களில் அமோக வெற்றி பெற்றோம். தமிழகக் காங்கிரஸ் கட்சியினர் தலைகால் தெரியாமல் வெற்றி விழா கொண்டாடுவது போல் நாங்கள் கொண்டாடவில்லை. மிகவும் அடக்கமான முறையிலும், ஒழுக்கத்தோடும் வெற்றி விழா கொண்டாடினோம். அறிஞர் அண்ணா கூறுவதுபோல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை மனதிலே கொண்டு மிகவும் அடக்கமாக நடந்து கொண்டோம். இப்படி திடீரென்று காங்கிரஸ்காரர்களுக்கு வெற்றி கிடைத்தவுடன் பேசக்கூடாத வார்த்தைகளெல்லாம் பேசுகிறார்கள். காங்கிரஸ் பொறுப்பில் உள்ளவர் ஒருவர் கூறுகிறார். நாகர்கோவிலில் காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டது, தமிழக அரசு ராஜிநாமா செய்யவேண்டுமென்று கூறுகிறார், பொறுப்புள்ளவர் பேசுகிற பேச்சுத் தானா இது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். 1962-ல் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்

தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்தது. அப்பொழுது காங்கிரஸ் அமைச்சரவை ராஜிநாமா செய்ததா? 1965-ல திருவண்ணாமலையில் இடைத் தேர்தல் நடந்தபோதும் காங்கிரஸ தோற்றது. ஆனாலும், காங்கிரஸ் அமைச்சரவை ராஜிநாமா செய்யவில்லை. அப்படியிருக்கும்பொழுது இந்த நாகர்கோவில் தேர்தல் வெற்றியை வைத்துக் கொண்டு தமிழக அமைச்சரவை ஏன் ராஜிநாமா செய்யக்கூடாது என்ற அளவுக்கு பொறுப்பற்ற தன்மையில் பேசுவது சரியல்ல என்று இந்த நேரத்தில் கூறி கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் பேருரையின்மீது பேச வாய்ப் பளித்தற்கு என் நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள் கிறேன். ஆளுநரின் பேருரை பேருக்கு ஒரு உரையாகத்தான் இருந்தது என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பது போல, முன் இருந்ததைப் போலவே கவர்னர் உரை அமைந்தி ருந்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இயற்கை அன்னை இவர்கள் ஆட்சியில் தான் பொய்ப்பித்து விட்டதுபோலவும், இவர்கள் ஆட்சியில் மட்டும்தான் ஏமாற்றியது போலவும் கூறியிருக்கிறார் கள். இப்பொழுதாவது அவ்வாறு உணர்ந்ததற்கு என்னுடைய நன்றி.

பொருளாதாரத்தை முன்னேற்றக்கூடிய விவசாய அபிவிருத்தித் திட்டம், தொழில் வளர்ச்சிக்கான திட்டம், அதிலும் குறிப்பாக சிறு தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள், ஊராட்சி மன்ற அபிவிருத்தித் திட்டங்கள் ஒன்றுமே சரியான முறையில் குறிப் பிடப்படாதது ஏமாற்றத்தை அளிக்கின்றது. விவசாயத்தற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக எண்ணி கவர்னர் பெருமான் உரையில் விவசாயத்தைப்பற்றி பல பக்கங்கள் பேசியிருப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. உண்மையில் விவசாய முன் னேற்றத்தின் அடிப்படையான காரணத்தை ஆராயவில்லை. அதிலும் தமிழக நெற்களஞ்சியம் என்னும் தஞ்சை மாவட்டத்தில் முக்கிய பிரச்சினைகளைப் பற்றியும், அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதைப் பற்றியும் குறிப்பிடாதது மிகவும் வருத்தத் தக்கது.

வள்ளுவர் குறிப்பிட்டது போல்

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

எனும் வாய்மொழிக்கு இணங்க விளைந்த விவசாய உற்பத்திப் பொருள்களாகிய நெல் போன்ற தானியத்தை யாரும் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு ஒரு பதட்டத்தை உண்டு பண்ணியிருக்கிறது. இந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது





நாட்டினுடைய உணவுப் பிரச்னையில் இந்த அரசினர் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. உணவு உற்பத்தியின் உயிர்நாடி இன்று ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் " "Justice delayed is justice denied' என்று கூறுவார்கள். தாமதிக்கப்பட்ட நியாயம் மறுக்கப்பட்ட நியாயத்திற்கு ஒப்பாகும் என்று கூறுவார்கள். ஆகவே, இந்த விஷயத்தில் தாமதமாக நியாயம் வழங்கும் நிலைமை இருப்பதினால், எனது தஞ்சை ஜில்லாவிலே இப்படி மிகவும் கொடிய நிகழ்ச்சி இதன் அடிப்படையாகத் தான் ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது. புண்ணிலே புனுகு பூசி பிரச்சினைகளை தள்ளிப்போடுவதிலோ அல்லது பிரச்சினைகளி லிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்வதிலோ பிரயோசனம் இல்லை. இனியாவது தாமதம் செய்யாதீர்கள், அலட்சியப் படுத்தாதீர்கள் என்று ஆளும் கட்சியினரைக் கேட்டுக் கொள் கிறேன். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் கூட்டணி என்பதும், கூட்டணியின் கூட்டுக் கொள்கை என்பதும் தமிழக மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக இன்று கூலிப் பிரச்னையைப் பற்றிப் பேசும்பொழுது 5 ஏக்கருக்குக் குறைவான நிலச்சொந்தக்காரர்களுக்கு அவர்கள் நிலத்தில் அறுவடை செய்வதற்கு இம்மாதிரியான கூலி உயர்வை அமுல் படுத்தாது, அந்த விவசாயிகளுக்கு உடனடியாக அறுவடை நடப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967-ம் ஆண்டு இந்த அமைச்சரவை பொறுப்பேற்றவுடன் தஞ்சை மாவட்டத்தில் நீர்ப்பாசன கருத்தரங்களும், விவசாயக் கருத்தரங்குகளும் கூட்டினார்கள். 'ஆன் தி ஸ்பாட் டிஸ் போஸல்' என்று சொல்லி, 100 கோரிக்கைகள் இருந்தால் உட னடியாக 80 கோரிக்கைகள் ஆராயப்பட்டு, முடிவெடுக்கப் பட்டு தீர்ந்துபோய்விட்டன என்றெல்லாம் பத்திரிகைகளிலே செய்தி கள் வந்ததைப்பார்த்தோம். ஆனால், அந்த முடிவுகளுடைய உண்மை நிலை என்னவென்றால், தஞ்சை ஜில்லாவில் விவசாயத் திற்கு எவ்வித முன்னேற்றத்தையும் தரக்கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இன்று தஞ்சை மாவட்ட மக்களைக் கேட்டாலும், அல்லது தஞ்சை தரணிக்குச் சென்று நேரில் பார்த் தாலும் இந்த நிலைமை விளங்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு பாசன வசதி தரும் எனது தொகுதியைச் சேர்ந்த மண்ணியாறு, கொங்கன் வாய்க்கால் பிரச்னையைப் பற்றி பேசாத மக்களும், அமைச்சரும் இருக்க முடியாது. 1967-ம் ஆண்டு நடைபெற்ற கருத்தரங்கில் மண்ணியாறு திட்டம் மிக முக்கியமானது என்பதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, மண்ணியாறு, கொங்கன் கரைகளைப் பலப்படுத்தியும், தலைப்பை மாற்றியும் உட னடியாக வேண்டிய ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி அளித்தார் கள். ஆனால், அம்மாதிரியான முயற்சியிலே இதுவரையில் ஈடு

பட்டதாகக் காண முடியவில்லை. உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சியின் வீட்டு வரி, தொழில் வரி போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றுள்ள நிலையில் ஏற்கனவே பஞ்சாயத்து தலைவர்கள் சரியான முறையில் வரி வசூல் செய்யவில்லை என்று கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த முறையும் சரியாக அமையவில்லை. அதற்கு காரணம் இதைக் கவனிக்க வருவாய்த் துறையினருக்கு நேரமில்லாததோடு, அவர்களுக்கு இருக்கும் வேலைச் சுமையோடு இப்பொறுப்பையும் சேர்த்திருப்பதால், அவர்கள் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. இதற்கு முன் மாவட்டக் கழக ஆட்சி காலத்தில் தாலுகாவிற்கு ஒரு லைசென்ஸ் இன்ஸ்பெக்டர் இருந்தது போல, இப்போது வட்டாரத்திற்கு ஒருவரை நியமனம் செய்து, அவரே வரிவசூல் பற்றி கவனிக்க ஏற்பாடு செய்யலாம். அந்த இன்ஸ்பெக்டர் சம்பளத்தை அந்த பஞ்சாயத்து வரிவசூல் தொகையிலிருந்து விகித முறையில் பிரித்து எடுத்துக் கொள்ளலாம். இதனால் அரசுக்கு வரி வசூல் நல்ல முறையில் காலா காலத்தில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி மூலம் வேலை நடைபெறவேண்டும் என்றால், ஊராட்சிகளை ஒரு சிறிய ஜனநாயகமாக மதித்து, அவைகளை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு ஒன்றியங்களுக்கு சில அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும். வெளிநாடுகளில் கவுண்டி கவுன்சில் என்று கூறப்படுபவற்றிற்கு சில அதிகாரங்கள் கொடுத்துள்ளது போல, வேலை நல்ல முறையில் நடைபெறுவதற்காக மேலும் சில அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் இன்றுள்ள நிலையில் நன்கு செயல்பட முடியாததற்குக் காரணம் சில இடங்களில் இரட்டை அதிகாரங்கள், அதாவது 'டூயல் கன்ட்ரோல்' இருப்பதால் தான். ஏஜென்சி மூலம் செய்யக்கூடிய விவசாயம், கால்நடை அபிவிருத்தி, மாதர் நலம் போன்றவற்றை செய்வதற்கும், திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், ஒன்றிய ஆணையருக்கு போதிய அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. அதையும் கைப்படுத்தி வேண்டிய அதிகாரத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இன்றுள்ள நிலையில் 50 பஞ்சாயத்துகளுக்கு மேல் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகப்படியான ஒரு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி போட வாய்ப்பிருந்தும், போடாதிருக்கும் சூழ்நிலையைத் தவிர்த்தால், வரிவசூல் நன்றாக நடக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஒரு கூட்டு மன்றத்திற்கு இணைப்பு சாலைக்காக ரூ. 16,100-ம், குடி தண்ணீர் சிறிய கிணறு திட்டத்திற்காக ரூபாய் 25,560-ம் பள்ளிக்கூட கட்டிடத்துக்கு ரூ. 7,500-ம் கொடுக்கிறார்கள். ஸ்தல சாலை மானியமாக மக்கள் தொகையின் அடிப்படையில் நபர்





ஒன்றுக்கு 40 பைசா வீதம் கொடுக்கிறார்கள். இதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். மேற்கூறிய தொகையை வைத்துக் கொண்டு எந்த வேலை ஆரம்பிப்பது என்ற சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. சாலை மானியம் மக்கள் தொகை அடிப்படையில் இல்லாது, சாலையின் தூரம், நீளம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சாலைகளை விவசாயத் திட்டத்தோடு சேர்த்துக்கொண்டால் தான் உணவு உற்பத்தி பெருகி, உற்பத்திசெய்த பொருள்களை உடனுக்குடன் வெளிச் சந்தைக்கு அனுப்ப முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இன்றுள்ள நிலையில் ஒரு ஆலோசனைக் குழுவாக இயங்குவதால், அதில் அங்கம் வகிக்கும் அலுவலர்களிடத்திலும் ஒரு ஆர்வமில்லாத தன்மையைப் பார்க்கிறோம். இந்த அபிவிருத்தி மன்றங்கள் முடிவு எடுத்து, வேலைத் திட்டங்களை அவர்களே செயல்படுத்த ஏற்பாடு செய்தல் மிகவும் அவசியம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டிலே போடுகின்ற திட்டங்களை மக்களுக்குப் புரிய வைத்து, அவர்கள் திட்டத்தோடு ஒத்துழைக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய அலுவலர்களைக் கண்டால் கிராம மக்கள் ஏன் பயந்துகொண்டு ஓடி ஒளிந்துகொள்கிறார்கள் என்பதை இந்த அரசு உணர்தல் வேண்டும். இந்த நிலையில் திட்டங்களை வெற்றிகரமாக நடத்தமுடியாத சூழ்நிலையைப் பார்க்கிறோம். இதற்காக அரசாங்கக் கடன் வசூல் வேலைகளை வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மீது பொறுப்பைச் சாத்தாமல், வருவாய்த் துறைக்குக் கொடுத்தால், திட்டம் நல்ல முறையில் நடைபெறும்.

அடுத்து, நாகர்கோயில் தேர்தல் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். 1967-ம் ஆண்டு தேர்தலில் தலைவர் காமராஜ் தோற்றுவிட்டபோது, 'அது மக்கள் தீர்ப்பு, அதை யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதுதான் முறை' என்றார்கள். அவர்கள் இப்பொழுது வெற்றிபெற்ற போது, வன்முறை வென்றுவிட்டது என்று சொல்லுகிறார்கள். இது ஜனநாயகத்திற்கு உகந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வாக்களித்த 2½ லட்சம் வாக்காளர்களை மதிக்கிறார்களா என்பதை கூறிக்கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துக்காகக்கொடுக்கப்படும் தொகைகள் போதாமல் இருப்பதால், நிதிவசதி பெற்றிருக்கும் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களின் பொது நிதியிலிருந்து ஆண்டுக்குக் குறைந்தது ரூ. 15,000 கொடுத்தால்தான் சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பதைக் கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆளுநர் உரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பாதுகாப்பிலே சரிவில்லை, அதனால் உணவு உற்பத்தி குறைவும் என்று. அது

மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்றல்ல. அந்த நிலையில் இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கும் அத்தனை மக்களுக்கும் உணவு விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற நிலையில், இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அமைச்சர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களில், கஷ்டப்படும் பகுதிகள் இருக்கின்றன. சில மாவட்டங்கள் இவ்வகையில் இருக்கின்றன. உதாரணமாக, வடார்க்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களுக்கு ரெவின்யூ போர்டு மெம்பரே ஒருவர் சென்று அங்கே இருக்கும் நிலைகளை ஆராய்ந்து தெரிவித்த கருத்துக்களின் பேரில், பஞ்ச நிவாரண உதவிகள் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே, இராமநாதபுரத்தையும் சேர்க்காமல் விட்டிருப்பது, வருந்தத்தக்க விஷயம் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இராமநாதபுரத்தை எடுத்துக் கொண்டால், மேல் பகுதியில் மிக, மிக மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அங்கே மழை இல்லை. ஏரிகள் நிறையவில்லை. ஏழை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகள் அவதிக்குள்ளாகியிருக்கின்றன. உதாரணமாக தஞ்சை மாவட்டத்திற்கு வேலைக்குச் செல்பவர்களும், இந்தப் பகுதிகளிலிருந்துதான், குறிப்பாக இராமநாதபுரத்திலிருந்துதான், செல்கிறார்கள். ஆகையினால், அவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் அந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசங்களாகக் கருதி, தனியாக ஒரு போர்டு மெம்பரை அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்து அறியவேண்டும் என்று விரும்புகிறேன். மாவட்டக் கலெக்டரும் சொல்லுகிறார், எங்களிடம் ஸ்டாக் அதிகமாக இல்லை, ஆகவே, கிராமப் புறத்தில் ஃபேர் ப்ரைஸ் ஷாப்புக்கள் மூலமாகக் கொடுப்பதையும் நிறுத்தப் போகிறோம் என்று. அது எங்களுக்கெல்லாம் ஒரு பேரதிர்ச்சியாக இருக்கிறது. இவற்றையெல்லாம் ஆழ்ந்து கவனித்துப் பார்த்து, இராமநாதபுரத்தின் மேல் பகுதியைப் பொறுத்த வரையில், உணவு தானியம் இல்லாவிட்டாலும், கோதுமைப் பண்டங்களையும், மைலோ போன்றவற்றையும், நிறுத்தாமல், வருஷம் பூராவும் கொடுத்து உதவவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது, வரி வசூல் போன்றவைகள் கடுமையாக நடப்பதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் என்று வரும்போது, சட்ட மன்ற உறுப்பினர்களாகிய எங்களிடம் வந்து மோதுகிறார்கள். அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம். பழைய கடன்களையும், நில வரியையும் அதி தீவிரமாக வசூல் செய்வதில் அமல் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். கலெக்டர் கூட அரசாங்கத்திற்கு ஒரு ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார். அதிலே ஒரு போர்டு மெம்பர் வந்து பார்த்தால் நலமாக இருக்கும், நிலைமை மோசமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையினால், அந்தப் பகுதியை ஃபேமின் ஏரியா என்று டிக்ளேர் செய்து, அங்கே வேலை வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு ஃபேமின் ரிலீஃப் ஒர்க்ஸ் என்று ரோடுகள் போடுவது போன்ற வேலைகளைச் செய்ய பணத்தை ஒதுக்கி, செயல்பட வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்





அடுத்தபடியாக, இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. கவர்னர் உரையிலே தொழிற்சாலைகள் அதிகமாக வரப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரத் தொழிற்சாலைகள் இரண்டும், ஆயில் ரிஃபைனரியும், ஷுகர் மில்களும் வரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதுவே என்னுடைய அவா, ஏனென்றால், பி.ஈ. படிக்கும் நம்முடைய மாணவர்கள், கல்லூரியிலிருந்து வெளிவந்தவுடனே நமக்கு வேலை வாய்ப்பு இருக்குமா என்று சந்தேகப்படுகிறார்கள். அந்தச் சந்தேகத்திலேயே ஆங்காங்கே அவரவர்கள் இஷ்டம்போல, என்ன செய்வது என்று தெரியாமல், அமைதியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் மத்திய சர்க்காரோடு சண்டை போட்டாவது, அல்லது நாமே பணத்தை ஒதுக்கியாவது, தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால்தான் அமைதி ஏற்படும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நகரசபைகள்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையில், சென்னை கார்ப்பரேஷனைப்பற்றி மட்டும் முக்கியமாகச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரசபைகள் வரிகளை வசூல் செய்து, மக்களுக்கு, தெரு விளக்குகளையும், ரோடு வசதி, சுகாதார வசதி முதலியவற்றையும் செய்கிறார்கள். அந்த நகரசபைகளைப்பற்றி உரையில் ஒரு வார்த்தை கூடக் குறிப்பிட்டு, அவைகளுக்கு என்ன செய்யப் போகிறோம், என்று காணவில்லை என்று பார்த்து வருத்தமடைகிறோம். உதாரணமாகச் சொல்லப் போனால், 'ரெம்யூனரேடிவ் என்டர்ப்ரைஸ்' வருவாய் பயக்கும் தொழில்கள் என்பார்கள். அந்த வகையில், முயற்சிகள் எடுத்து வருவாயைப் பெருக்க, அரசாங்கம் அளிக்கும் கடன்கள் தாராளமாக அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக, பஸ் ஸ்டான்டிற்கு ஏற்பாடு செய்கிறோம். அது சர்க்கார் கமிட்டட் ஒர்க். அப்படிப்பட்ட வேலைகளுக்கும் பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். பஸ் ஸ்டான்டு அமைக்க அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று, எஸ்டிமேட்டுகள் தயார் செய்து, டெண்டர் 'கால்ஃபார்' செய்து, கன்ட்ராக்டர்கள் வேலையையும் செய்துவிட்டு, செய்த வேலைக்குப் பணம் கேட்கும்போது, சர்க்காரிடமிருந்து பணம் வராமல், நாங்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் நிலை இருக்கிறது. அதே போலத்தான் கிராண்ட் ஒர்க்ஸ், லோன் ஒர்க்ஸ்களும் இந்த லோகல் பாடிகளுக்கு மத்திய சர்க்காரிலிருந்து மாநிலத்திற்கு வந்து, பணம் கொடுக்கப்படுகின்றது. அதிலே காலதாமதம் ஏற்படுவதால், முன்கூட்டியே வேலையைச் செய்துவிட்டு, பணத்தைக் கொடுக்க முடியாத நிலையில், சர்க்காருக்கும், கன்ட்ராக்டருக்கும் நடுவே அகப்பட்டுக்கொண்டு விழித்துக்கொண்டு இருக்கிறோம். வேலையைச் செய்து விட்டு கன்ட்ராக்டர்கள் கேஸ் போடுவோம் என்கி

தமிழ்ச்சி அடையக்கூடிய ஒன்றல்ல. அந்த நிலையில் இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கும் அத்தனை மக்களுக்கும் உணவு விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற நிலையில், இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அமைச்சர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களில், கஷ்டப்படும் பகுதிகள் இருக்கின்றன. சில மாவட்டங்கள் இவ்வகையில் இருக்கின்றன. உதாரணமாக, வடார்க்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களுக்கு ரெவின்யூ போர்டு மெம்பரே ஒருவர் சென்று அங்கே இருக்கும் நிலைகளை ஆராய்ந்து தெரிவித்த கருத்துக்களின் பேரில், பஞ்ச நிவாரண உதவிகள் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதிலே, இராமநாதபுரத்தையும் சேர்க்காமல் விட்டிருப்பது, வருந்தத்தக்க விஷயம் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இராமநாதபுரத்தை எடுத்துக் கொண்டால், மேல் பகுதியில் மிக, மிக மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அங்கே மழை இல்லை. ஏரிகள் நிறையவில்லை. ஏழை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகள் அவதிக்குள்ளாகியிருக் கின்றன. உதாரணமாக தஞ்சை மாவட்டத்திற்கு வேலைக்குச் செல்பவர்களும், இந்தப் பகுதிகளிலிருந்துதான், குறிப்பாக இராமநாதபுரத்திலிருந்துதான், செல்கிறார்கள். ஆகையினால், அவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் அந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசங்களாக கருதி, தனியாக ஒரு போர்டு மெம்பரை அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்து அறியவேண்டும் என்று விரும்புகிறேன். மாவட்டக் கலெக்டரும் சொல்லுகிறார், எங்களிடம் ஸ்டாக் அதிகமாக இல்லை, ஆகவே, கிராமப் புறத்தில் ஃபேர் ப்ரைஸ் ஷாப்புக்கள் மூலமாகக் கொடுப் பதையும் நிறுத்தப் போகிறோம் என்று. அது எங்களுக்கெல்லாம் ஒரு பேரதிர்ச்சியாக இருக்கிறது. இவற்றையெல்லாம் ஆழ்ந்து கவனித்துப் பார்த்து, இராமநாதபுரத்தின் மேல் பகுதியைப் பொறுத்த வரையில், உணவு தானியம் இல்லாவிட்டாலும், கோதுமைப் பண்டங்களையும், மைலோ போன்றவற்றையும். நிறுத்தாமல், வருஷம் பூராவும் கொடுத்து உதவவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது, வரி வசூல் போன்றவைகள் கடுமையாக நடப்ப தால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் என்று வரும்போது, சட்ட மன்ற உறுப்பினர் களாகிய எங்களிடம் வந்து மோதுகிறார்கள். அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம். பழைய கடன்களையும், நில வரியையும் அதி தீவிரமாக வசூல் செய்வதில் அமல் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். கலெக்டர் கூட அரசாங் கத்திற்கு ஒரு ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார். அதிலே ஒரு போர்டு மெம்பர் வந்து பார்த்தால் நலமாக இருக்கும், நிலைமை மோசமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகை யினால், அந்தப் பகுதியை ஃபேமின் ஏரியா என்று டிக்ளேர் செய்து, அங்கே வேலை வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு ஃபேமின் ரிலீஃப் ஒர்க்ஸ் என்று ரோடுகள் போடுவது போன்ற வேலைகளைச் செய்ய பணத்தை ஒதுக்கி, செயல்பட வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்





அடுத்தபடியாக, இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. கவர்னர் உரையிலே தொழிற்சாலைகள் அதிகமாக வரப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரத் தொழிற்சாலைகள் இரண்டும், ஆயில் ரிஃபைனரியும், ஷுகர் மில் களும் வரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதுவே என்னுடைய அவா, ஏனென்றால், பி.ஈ. படிக்கும் நம்முடைய மாணவர்கள், கல்லூரியிலிருந்து வெளிவந்தவுடனே நமக்கு வேலை வாய்ப்பு இருக்குமா என்று சந்தேகப்படுகிறார்கள். அந்தச் சந்தேகத் திலேயே ஆங்காங்கே அவரவர்கள் இஷ்டம்போல, என்ன செய்வது என்று தெரியாமல், அமைதியில்லாமல் இருந்து கொண் டிருக்கிறார்கள். ஆகையினால் மத்திய சர்க்காரோடு சண்டை போட்டாவது, அல்லது நாமே பணத்தை ஒதுக்கியாவது, தொழிற் சாலைகளை ஏற்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால்தான் அமைதி ஏற்படும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நகரசபைகள்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். கவர்னர் உரையில், சென்னை கார்ப்பரேஷனைப்பற்றி மட்டும் முக்கியமாகச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரசபைகள் வரிகளை வசூல் செய்து, மக்களுக்கு, தெரு விளக்கு களையும், ரோடு வசதி, சுகாதார வசதி முதலியவற்றையும் செய் கிறார்கள். அந்த நகரசபைகளைப்பற்றி உரையில் ஒரு வார்த்தை கூடக் குறிப்பிட்டு, அவைகளுக்கு என்ன செய்யப் போகிறோம், என்று காணவில்லை என்று பார்த்து, வருத்தமடைகிறோம். உதாரணமாகச் சொல்லப் போனால், 'ரெமுனரேடிவ் என்டர்ப்ரைஸ்' வருவாய் பயக்கும் தொழில்கள் என்பார்கள். அந்த வகையில், முயற்சிகள் எடுத்து வருவாயைப் பெருக்க, அரசாங்கம் அளிக்கும் கடன்கள் தாராளமாக அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக, பஸ் ஸ்டாண்டிற்கு ஏற்பாடு செய் கிறோம். அது சர்க்கார் கமிட்டட் ஒர்க். அப்படிப்பட்ட வேலை களுக்கும் பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். பஸ் ஸ்டாண்டு அமைக்க அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று, எஸ்டிமேட்டுகள் தயார் செய்து, டெண்டர் 'கால்ஃபார்' செய்து, கண்ட்ராக்டர்கள் வேலையையும் செய்துவிட்டு, செய்த வேலைக்குப் பணம் கேட்கும்போது, சர்க்காரிடமிருந்து பணம் வராமல், நாங்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் நிலை இருக்கிறது. அதே போலத்தான் கிராண்ட் ஒர்க்ஸ், லோன் ஒர்க்ஸ்எல்லாம் இந்த லோகல் பாடிகளுக்கு மத்திய சர்க்காரிலிருந்து மாநிலத்திற்கு வந்து, பணம் கொடுக்கப்படுகின்றது. அதிலே காலதாமதம் ஏற்படுவதால், முன்கூட்டியே வேலையைச் செய்துவிட்டு, பணத்தைக் கொடுக்க முடியாத நிலையில், சர்க்காருக்கும், கண்ட்ராக்டருக்கும் நடுவே அகப்பட்டுக்கொண்டு விழித்துக்கொண்டு இருக்கிறோம். வேலை யைச் செய்து விட்டு கண்ட்ராக்டர்கள் கேஸ் போடுவோம் என்கி

[திரு. எ. அ. சுப்பாராஜு] [1969 சனவரி 28

றார்கள். ஆகவே, பணத்தை அதிகமாக ஒதுக்க வேண்டும். பணத்தைக் கால தாமதம் இல்லாமல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை, அதிகமாக அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பது. 'டிசென்ட்ரலைசேஷன்' செய்ய வேண்டும் என்பது. எப்படி மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் முடியைப் பிடித்துக் கொண்டு இருக்கிறதோ அதே போலத்தான் நாங்களும், மாநில சர்க்காரிடம் அகப்பட்டுள்ளோம். நகர சபைகளுக்கு அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்தாலும், செயலிலே நல்ல விதத்திலே செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

பி.ப. 1-00 ***திரு. பி. எஸ். எல்லப்பன்**: தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எல்லோரும் பேசினார்கள். கவர்னர், சொல்லவேண்டிய சங்கதியைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். கேட்பதற்கெல்லாமா அவர் பதில் சொல்வார்? நான் சொர்ப்ப நேரமாவது பேசலாம் என்று பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பத்து நிமிடங்கள் தான்.

**திரு. பி. எஸ். எல்லப்பன்**: திரு. ஞானசம்பந்தம் அவர்கள் சொன்னதைக் கட்டபிறகு புத்தி கலைந்து போச்சு. அண்ணாவைப்பற்றி ஒருவர் விடாமல் பேசினார்கள். அவர் உடல் நலக் குறைவு பற்றி எல்லோரும் வருத்தப்படுகிறார்கள். அவரைப் பற்றி நான் என்ன சொல்வது? 'அண்ணா' என்று சொன்னால் 'முருகா' என்று அர்த்தம். 'முருகா' என்று சொன்னால் 'அண்ணா' என்று அர்த்தம். இதை நான் சொல்லவில்லை. திருப்போரூர் சந்நிதித் திருமுறையிலே சிதம்பர சுவாமிகள் சொல்லுகிறார். என்ன சொல்லுகிறார்?

"அண்ணா வருக, ஆறுமுக அப்பா வருக,
மயிலேறும் மன்னா வருக"

என்று சொல்லுகிறார். மயிலில் போகக்கூடிய அண்ணாதான், மக்களுடைய இதயத்திலே நிரம்பியிருக்கிறான். ஆகவே, அப்பேர்ப்பட்ட ஒரு உத்தமருக்கு, முருகனையே ஞாபகப்படுத்தக் கூடிய ஒரு உத்தமருக்கு, விரைவில் பூரண உடல் நலம் ஏற்பட வேண்டும். இதே கருத்தை நான் காஞ்சிபுரத்தில் பேசினேன். "அப்பா, நீங்கள் யாரும் 'முருகா' என்று சொல்லாதீர்கள். 'அண்ணா' என்றே சொல்லுங்கள்" என்றேன். 15 நிமிடம் கை தட்டினார்கள். ஆகவே, அண்ணா அவர்களுக்கு எந்தவிதமான அபாயமும் ஆபத்தும் நேராது, அவருக்கு எந்த கஷ்டம் வந்தாலும் அது நிவர்த்தியாகும் என்கிற ஒரு எண்ணமே எனக்கு இருக்கிறது. அது அப்படியிருக்க, கீழ்வெண்மணி விஷயமாக எல்லோரும்தான் கட்டிக்கொண்டு அழுகிறார்கள். அதைச் சொல்லாதவர்கள் கிடையாது. இதெல்லாம் ஏதோ ஒரு முறை



1969 சனவரி 28] [திரு. பி. எஸ். எல்லப்பன்]

துக்கத்திற்கு வந்தவர்கள், இரண்டு முறை அடித்துக்கொண்டு அழுதுவிட்டுப் போகலாம் என்று போவார்களே, அப்படியல்ல, கீழ்வெண்மணி விஷயம். உண்மையிலேயே ஒரு பரிதாபகரமான சம்பவம் அது. "கற்பனையால் பாடுகின்றேன், கண்ணீரும் கம்பலையும் சொப்பனத்திலும் காணேன் என் செய்வேன் பராபரமே" என்று சொன்னார் தாயுமானவர். எல்லாமே கற்பனையாக இருக்கிறதே தவிர, உள்ளம் கரைந்து கண்ணீர் வரவில்லையே என்று சொல்லுகிறார். இது எப்படியிருக்கிறதென்றால், **காங்கிரஸ் சர்க்காரிலே முதுகுளத்தூரில் எரிகிற வைக்கோற் போரில் குழந்தையைத் தூக்கி அடித்தான். திராவிட** முன்னேற்றக் கழக சர்க்காரிலே 42 பேரை உள்ளே போட்டு, சுற்றி நெருப்பை வைத்தான் என்று சொல்வது போல் இருக்கிறது.

திருவிளையாடல் புராணத்திலே ஒரு பாட்டு வருகிறது. சேக்கிழார் சொல்லுகிறார். என்ன சொல்லுகிறார்? "கொல்லாமை அறியாமை குணமாகக் கொண்டொழுகும் பொல்லாது சில வேடர் புலைஞரே இது செய்வார், நில்லாமல் நிற்கின்றேன் கொடும் வினையேன், என் செய்வேன்?" என்கிறார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: திருவிளையாடல் புராணம் சேக்கிழார் பாடியதாக நான் கேள்விப்படவில்லை. அதை உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுகிறேன்.

**திரு. பி. எஸ். எல்லப்பன்**: எந்தப் புராணமாகவோ இருக்கட்டும். (சிரிப்பு) இது என்ன கோர்ட்டா? சாட்சியா? என்ன சொல்லியிருக்கிறது என்றுதான் பார்க்கவேண்டும்.

"கொல்லாமை அறியாமை குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சில வேடர் புலைஞரே இது செய்வார்
நில்லாமல் நிற்கின்றேன் கொடும் வினையேன்
என் செய்வேன்?"

என்கிறார்.

மாமிசமும், எலும்பும், ரத்தமும் உள்ளதைக் கொண்டுபோய்ச் சிவலிங்கத்தின் மேல் போட்டு அநீதி செய்கிறார்களே, கொல்லுவது குற்றம் என்று உணராத கொடும் பாவிகள், அதைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேனே, உயிர் போகவில்லையே, நான் எப்பேர்ப்பட்ட பாவியாக இருக்கவேண்டும் என்று அவர் நிலையை எடுத்துக் காட்டுகிறார். ஆனால், கீழ்வெண்மணியில் 42 பேரை உள்ளே போட்டு, சுற்றிலும் நெருப்பிட்டு எரித்தார்களே, அதற்கு என்ன செய்வது? செத்தவர்கள் ஏழைகள். எந்தக் கட்சியானாலும், ஏழை ஹரிஜனங்கள்தானா அகப்பட்டார்கள் இன்னலை அனுபவிப்பதற்கு? காங்கிரசானால் என்ன, எந்தக் கட்சியானால் என்ன? **ஹரிஜனங்கள்தானா அகப்பட்டார்கள்? 42 பேர்கள் அகப்பட்டார்கள்? வேறு யாரும் இல்லையா? ஆகவே, இவர்களை என்ன சொல்வது? 'தமிழ்நாடு தமிழருக்கே', 'தமிழ் வாழ்க' என்கிறோம். 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று சொல்லு**

கிறோம். அப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். வள்ளுவர் படத்தை இங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம். அண்ணல் மகாத்மாவின் படத்தை வைத்திருக்கிறோம். தமிழ் நாட்டில் நடக்கிற காரியமா இது? நெருப்பு வைப்பதென்றால், இது என்ன அநியாயம். இந்த அநீதியை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ போய்ப் போய் ஆறுதல் சொல்லு கிறார்கள். அந்த உணர்ச்சியாவது நம்முள் ஞாபகம் இருக்கிறதே. அதுவே பெரிதுதான் ஹரிஜன சமூகத்தின் கஷ்டங்களை நினைத்துத்தான், இந்த மக்களுக்குத் தகுந்த நியாயம் கிடைக்காது, நீதி கிடைக்காது, ஒழுங்காக இந்த நாட்டில் அவர்களை வாழவிடமாட்டார்கள் என்று கருதித்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள், "அப்பா, எங்களுக்குத் தனித் தொகுதி பிரித்துக் கொடுத்து விடுங்கள், நாங்கள் தனியாக இருந்துவிடு கிறோம், மற்றவர்கள் எங்களோடு ஒத்துழைக்கமாட்டார்கள், ஜனநாயகம் இருக்கும் ரீதியில் எங்களுக்கு ஒன்றும் நடக்காது. ஆகவே, ஹரிஜனங்களுக்குத் தனித் தொகுதி கொடுத்து விடுங்கள்' என்றார். மற்றவர்கள் எங்களோடு ஒற்றுமையாக இருக்கமாட் டார்கள், நாங்கள் அவர்களோடு வாழ முடியாது, எங்களை வைத்து அவர்கள் காப்பாற்ற மாட்டார்கள்' என்று சொல்லித் தீர்மானம் பண்ணினார். அது பூனா ஒப்பந்தமாகியது. பிறகு என்ன ஆயிற்று என்பது எல்லோருக்கும் தெரியும். ஏதோ சட்டம் போட்டார்கள். அதை வைத்துக்கொண்டு நாம் செய்தாக வேண்டுமே என்று சொல்லி, பின்னால் வரும் சர்க்கார்கள் ஏதோ செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே, கீழ்வெண்மணி சம்பவம் மிகவும் கொடுமையான விஷயமாக இருக்கிறது. கீழ்வெண்மணி சம்பவம் மாத்திரம் அல்ல, என் அச்சிறுபாக்கம் தொகுதியில், நெம்மேலி என்கிற ஒரு கிராமத்தில், 11 வீடுகள் ஹரிஜனங்களுக்குச் சொந்தமாகவும், 300 வீடுகள் வன்னியர் களுக்குச் சொந்தமாகவும் இருக்கின்றன. அந்தப் பதினேறு வீடுகளையும் காலி பண்ணச் சொல்லிவிட்டார்கள். அவர்களில் ஒருவரை நடுத்தெருவில் கட்டிவைத்து, நரசிம்மாவதாரத்திலாவது வயிற்றைக் கிழித்தார், அந்தக் கிராமத்தில் தொண்டையைப் பிடித்துக் கடித்துவிட்டார்கள். குழந்தை, குட்டி இன்னும் வீடு வந்து சேரவில்லை. இதெல்லாம் நான் பார்த்துவிட்டு, ஆஸ்பத் திரிக்கு வந்து விட்டேன். அம்மாதிரி எங்கு பார்த்தாலும், ஏழைக் குடும்பங்களை மிகவும் அலட்சியமாக நடத்துகிறார்கள். அதிகமான ஜனத்தொகை இருக்கும் இடங்களில் கூட அப்படி யெல்லாம் நடைபெறுவதில்லை. சாதாரண இடங்களில்தான் இப்படிப்பட்ட இம்சையும் தொந்தரவும் இருந்துகொண்டிருக் கிறது. ஆகவே, இதற்கெல்லாம் போலீஸ் என்ன செய்யவேண்டு மென்றால், கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதா வது கஷ்டம் ஏற்பட்டதென்றால், மற்ற ஜாதி இந்துக்களால் கஷ்டம் ஏற்பட்டதென்று தகவல் கிடைத்தவுடன், அந்தப் பக்கம் வந்து, போலீஸ்காரர்கள் தலையைக் காட்டிக்கொண்டும், என்ன ஏது என்று கேட்டுக்கொண்டும் இருந்தால், மற்றவர்களுக்குப்



பயம் இருக்கும். அமைச்சரவையைக் கருணையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். போலீசுக்கு நீங்கள் தகுந்த ஒரு உத்தர விடவேண்டும். எங்காவது ஹரிஜனங்களைப் பாதிக்கக்கூடிய ஒரு காரியம் நடந்ததென்றால், அந்த இடத்திற்கு உடனடியாகப் போலீஸை அனுப்பி, என்ன ஆயிற்று என்று பார்த்துவரச் செய்தால், அங்கு எந்தவிதமான ஆபத்தும் அபாயமும் வந்து சேராது. சாதாரணமாக என்ன நடக்கிறது? ஏதாவது ஒரு சம்பவம் ஓரிடத்தில் நடந்துவிட்டதென்றால், போலீசுக்குத் தகவல் கொடுத்தால், என்ன ஆச்சு என்று உடனடியாகக் கவனிக் காமல், சம்பவம் நிகழ்ந்த பிறகு, இன்ச் பேட்டை எடுத்துக் கொண்டுவந்து எங்கே குத்தினான் என்று அளக்கிறார்கள். அது கூடாது. தகவல் கிடைத்த உடனேயே அந்த இடத்திற்கு போலீஸ் வந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

பஞ்சத்தைப்பற்றிப் பேசினார்கள். மதுராந்தகம் தாலுக்கா, அச்சிறுபாக்கம் பிர்க்காவைப்பற்றி நான் குறிப்பிட விரும்பு கிறேன். அது மலைப் பிரதேசம். அந்த இடத்திற்கு வந்து பார்த்தால், அது எவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது என்பது தெரியும். அங்கு அரசாங்கம் ஒன்றும் செய்யவேண்டாம், நிவாரணக் கடைகள் வைத்துவிட்டால் போதும். நிவாரணக் கடைகளை வைத்தால்தான் அங்கு மக்கள் பிழைக்கமுடியும். இல்லையென்றால், என்னுடைய தொகுதி மக்கள் நடுத்தெருவில் சாகக்கூடிய நிலைமைதான் ஏற்படுமேயொழிய வேறு வகை கிடையாது. அந்தப் பகுதியில் நிவாரணக் கடைகள் வைத்து உணவுத் தானியங்களை அங்குள்ள மக்களுக்குக் கொடுக்க உணவு அமைச்சர் அவர்கள் உடனடியாக வகைசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். (மணி அடிக்கப்பட்டது). எனக்கே உடல் நிலை சரியாக இல்லை. மணியடிப்பதற்கு முன்பே நான் உட்கார்ந்துவிடலாம் என்றுதான் இருந்தேன். நான் ஏதோ உளறுகிறேன். ஒன்றும் புரியவில்லை (சிரிப்பு). எல்லாம் சிறப் பாக நடக்கவேண்டும். எங்களுக்கு அதாவது அரிஜன மக்களுக்கு, யாரும் ஆபத்துப் பண்ணாமல் இருக்கவேண்டும். அதற்குப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். 'எங்களுக்கும் ஒரு காலம் வரும்' என்று சினிமாவில் ஒரு பாட்டு உண்டு. அது போல், எங்களுக்கும் காலம் வரும். கிழச் சிங்கம் வெளியே வந்தால் என்ன ஆகும் என்று பார்க்க வேண்டாம். எங்கள் சமூகத்தவர்கள் ரொம்பப் பொறுமையோடு, அமைதியோடு இருக்கிறார்கள். நாங்கள் அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம். ஆகையால், அதைக் கவனித்து நீங்கள் நல்லது செய்யவேண்டும். வணக்கம். வருகிறேன்.

* **திரு. எம். கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் உள்ளத்தில் குடியிருக்கும் பேறிஞர் பெருந் தகை அண்ணா அவர்களின் உடல்நலம் பூரணமாக நலம் பெற வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். மேன்மைதங்கிய தமிழ்நாட்டு

ஆளுநர் அவர்களின் உரைமீது நடைபெறுகின்ற விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரை பல நேரங்களில் நடந்தது உண்டு. இருந்தாலும்கூட, இந்த ஆண்டு நடைபெற்ற உரைதான் உண்மையான தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் முதன் முதலாக நடைபெற்ற உரையாகும். கவர்னர் அவர்களுடைய உரையிலே தமிழ்நாட்டில் கடந்த ஆண்டிலே நடைபெற்ற விவசாயத்தைப்பற்றியும், தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றியும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகளைப்பற்றியும் மிகத் தெளிவாக இருக்கிறது. இந்த ஆண்டு பருவமழை தவறியதன் காரணமாகத் தேங்கியிருக்கின்ற நிலைமைகளைப்பற்றியும் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் கடந்த ஆண்டில் நமது மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தக்க நேரத்தில் நடவடிக்கை மேற்கொண்டு, பயிர்கள் எல்லாம் வாடும்படியான அறிகுறிகள் தென்பட்ட நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் தக்க நேரத்தில் சீராக, சிக்கனமாகவிட்டு விவசாயிகளின் வேதனையைத் தீர்த்தார். அவருக்குத் திருச்சி மாவட்ட மக்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் கோடைப் பயிர்கள் வாடிவிடுமோ என்று விவசாயிகள் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் தக்க நேரத்தில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டுமென்று திருச்சி மாவட்ட மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில அடைமான வங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். முன்பிருந்த அரசும் கடன் கொடுத்து வந்தது. ஆனால் விவசாயிகள் மனுப் போட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகியும் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கவில்லை. நமது மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர், மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் ஒரு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள். அதிகாரிகள் நேரடியாக எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அங்குள்ள விவசாயிகளுக்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களில் நிவாரணம் அளிக்க வகை செய்திருக்கிறார்கள். எந்தவிதமான வில்லங்கங்கள் இருந்தாலும் அதைச் சரிப்படுத்தி விரைவில் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கும்படியான உத்தரவை அதிகாரிகளுக்குப் பிறப்பித்திருக்கிறார்கள் நமது சட்ட அமைச்சர் அவர்கள். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நில அடைமான வங்கிகளின் மூலமாகச் சுமார் 2 கோடி ரூபாய் நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்குத் தரப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் நில அடைமான





வங்கிகளின் தலைவர்களாக இருந்தவர்கள் சிலர் தங்கள் சொந்தக்காரர்களையே லீகல் அட்வைசர்களாகவும், பம்புசெட் ஏஜென்சிகளாகவும் வைத்துக்கொண்டு, அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து வந்தார்கள். புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர், அவற்றையெல்லாம் மாற்றி, விவசாயிகள் சீரான முறையில் துரிதமாகக் கடன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்து வருகிறது. முன்பு ஆயிரம் ரூபாய்க்கு 5 ரூபாய் என்ற வீதத்தில் நில அடைமான வங்கிகளில் லீகல் அட்வைசர்களுக்குப் பணம் தரப்பட்டது. இப்போது அதையெல்லாம் மாற்றி ஆயிரத்திற்கு இரண்டு ரூபாய் என்ற அளவில் குறைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறது. அது மட்டுமின்றி, கடன் சாங்ஷன் ஆகாவிட்டால், லீகல் அட்வைசர்களுக்கு முன்பு இருந்ததுபோல், இப்பொழுது தரப்படுவதில்லை. இந்த மாற்றம் பல வகையில் விவசாயிகள் கடன் பெறுவதற்குச் சௌகரியமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக விவசாயிகளுக்கு, விவசாய முன்னேற்றத்திற்காக டிராக்டர்கள், பவர் ஸ்ப்ரேயர், விதைகள், உரங்கள் முதலியவற்றை இந்த அரசு கொடுத்து வருகிறது. பயிர்கள் எல்லாம் பூச்சியால் நாசம் அடையும்போது, விமானங்களின்மூலம் பூச்சி மருந்து தெளிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிப்பதில் இந்த அரசு உற்ற துணையாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு 2.5 லட்சம் ஏக்கர் விமானங்களின்மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

அடுத்தபடியாக, நேற்றையப் பேச்சிலே கரூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. தோ. மு. நல்லசாமி கவுண்டர் அவர்கள் பேசுகையில் சர்க்கரை ஆலைகளைப்பற்றியும், கரும்பு விலை நிர்ணயம் பற்றியும் பேசினார்கள். கரும்பு விலை நிர்ணயம் செய்வதில் இந்த அரசு சரியான முறையில் தலையிடவில்லை என்று கூறினார். திரு. தோ. மு. நல்லசாமி கவுண்டர் அவர்களும், நானும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும், விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களை நேரில் கண்டு பேசினோம். கரும்பு விலை நிர்ணயிப்பதில் ஆலை நிர்வாகிகளுக்கும், கரும்பு விவசாயிகளுக்கும் பெருத்த போராட்டம் இருந்து வருகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் பேசும்போது, தமிழ்நாட்டிலுள்ள விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை நிர்வாகிகள், நீங்கள் எல்லோருமாக ஒன்றாக வந்தால் இதைத் தீர்க்க முடியும் என்று கூறினார்கள். இதன் காரணமாக விவசாய அமைச்சர் அவர்களே முயற்சி எடுத்துக்கொண்டு, நவம்பர் 24-ம் தேதியன்று விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை நிர்வாகிகள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்திற்கு திரு. தோ. மு. நல்லசாமி கவுண்டர் அவர்களும் வந்திருந்தார்கள். கரும்பைப்

பொறுத்தவரையில் முதல் முறையாக முயற்சி செய்து, எல்லோரையும் அழைத்துப் பேசி, இப்போது 73-70 என்றிருப்பதற்குப் பதிலாக 80 ரூபாய் ஒரு டன்னுக்குக் கொடுக்கிறோம் என்று கூறினார்கள். அது மட்டுமின்றி, வெளிமார்க்கட்டில் விற்கும் ஒரு டன் சர்க்கரை 200 ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ஒன்றரை ரூபாய் தரவேண்டும் என்றும், லெவி சர்க்கரை விலை குறைந்தாலும் கூடினாலும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கூறினார்கள். இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்களும் திரு. நல்லசாமி அவர்களும் இக் கூட்டத்திற்கு வந்து தங்கள் யோசனைகளைச் சொன்னார்கள். அதே நேரத்தில் மத்திய அரசு விலை உயர்வாக இருந்தால் இந்தக் கொள்கையைப்பற்றி மறு பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தார்கள். ஜனவரி மாதம் 10-ம் நாள் மாலை ஆலை நிர்வாகிகளையும், விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் வரச் சொல்லியிருந்தார்கள். (மணியடிக்கப்பட்டது). விவசாய அமைச்சர் அவர்கள் நாகர்கோயில் தேர்தலுக்குச் சென்று, பின்னர் நோய்வாய்ப்பட்டு வர முடியாமற்போய்விட்டது. உணவு அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்கள். நிலைமைகளை அவ்வப்போது ஆராய்ந்து மறு பரிசீலனை செய்யப்படும் என்று உணவு அமைச்சர் அவர்களும் கூறினார்கள். விவசாய அமைச்சர் வந்தபின்னர் இதுபற்றி மறு பரிசீலனை செய்யலாம் என்று கூறப்பட்டது.

அந்த அளவில் அவர் கட்சி மனப்பான்மையோடு இன்று பேசுவது சரியல்ல. அதேபோல கந்தர்வகோட்டை உறுப்பினர் குளித்தலையில் ஒரு வாய்க்கால் எடுப்பதற்காகக் கட்சிக்காரர்கள் பணம் வசூல் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார். எந்தக் கட்சிக்காரர்கள் வசூல் செய்கிறார்கள், எந்த வாய்க்காலுக்காக வசூல் செய்கிறார்கள் என்று குறிப்பிடவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்படி வசூல் செய்து வருகிறார்களோ என்னமோ தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் சொல்வேன். எங்கள் கட்சியின் சார்பாக யாரும் எதுவும் வசூல் செய்யவில்லை.

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது பற்றி மறு பரிசீலனை செய்யப்படும் என்று விவசாய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். போனஸ்பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த தேதி நிர்ணயிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, கரூர் உறுப்பினர் மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர் என்ற முறையில் விவசாயிகளைத் தூண்டிவிடும் நோக்கத்தில் பேசுவது வருந்தத்தக்கது. (மணியடிக்கப்பட்டது)

**திரு. என். துரைபாண்டியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையில் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் இந்த மன்றத்தில் பேசப்பட்டது எல்லாம், நாகர்கோவில் தேர்தலைப்பற்றித்தான்



காரசாரமாகப் பேசப்பட்டதேயொழிய வேறு எதையும் பார்க்க முடியவில்லை. நானும் அதுபற்றி எழுப்பப்பட்ட வாதங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையில் மத்தியால் நாடார் தானா? வேறு யார் என்பது தெரியாது. பீர் முகம்மது அவர்கள் சொன்னார்கள். ஆதித்தனார் நாடார் தானா—இதுபற்றி இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சாதியை இழுக்காமல் பேசுங்கள்.

**திரு. என். துரைபாண்டியன் :** நாகர்கோவிலில் நாடார்கள் அதிகம் இருப்பதனால் காமராஜர் வெற்றிபெற்றார் என்று சொல்கிறார் திரு. பீர் முகம்மது அவர்கள். அவர்களுடைய கட்சித் தலைவர் இஸ்மாயில் அவர்கள் பேட்டை ஊரில் பிறந்தவர். அங்கே நடக்கிற தேர்தலில் நிற்காமல் கேரளத்தில் முஸ்லிம்கள் உள்ள இடத்தில் தேர்தலுக்கு நிற்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தமாதிரிப் பேச்சுக்கு இந்த இடத்தில் இடம் கிடையாது. சபையில் இல்லாதவர்களைப்பற்றிப் பேசக் கூடாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள் பேட்டையைச் சேர்ந்தவர்கள். கேரளத்தில் நின்று வெற்றி பெற்றதாகச் சொன்னார்கள். அது உண்மைதான். அந்தத் தொகுதிக்குப் போகாமலேயே அவர்கள் இங்கிருந்து வெற்றி அடைந்தார்கள். நாகர்கோவிலில் நடந்தது என்ன என்று தெரிவிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். துரைபாண்டியன் :** அது தான் சாதி என்று சொல்ல விரும்புகிறேன். தொகுதிக்குப் போய் தன்னுடைய கட்சிக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நாகர்கோவிலில் வெற்றி பெற்றார்.

நாகர்கோவில் தேர்தலில் வன்முறை நடந்தது என்று ஆட்சியாளர்களும் சொல்கிறார்கள் நாங்களும் சொல்கிறோம். இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியான முறையில் நடக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

கவர்னர் உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார் பற்பல திட்டங்களைப்பற்றி என்றால், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். சொல்வதனால் என்ன பயன்?

தி.மு.க. சர்க்கார் ஆட்சிக்கு வந்தவுடனே நெல்லை மாவட்டத்தில் விவசாயக் கருத்தரங்கு நடந்தது. அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார்கள். நானும் கலந்துகொண்டேன். பற்பலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. படங்கள் நிறைய எடுக்கப்பட்டன. விளம்பரங்கள் எல்லாம் செய்யப்பட்டன. இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மராமத்து அமைச்சர் அவர்கள் வெகு சீக்கிரத்திலேயே திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள்.

[திரு. என். துரைபாண்டியன்] [1969 சனவரி 28

என்ன ஆயிற்று ? ஒன்றுமே நடைபெறவில்லை. விவசாயத்திலும் மாறுதல் எதுவும் இல்லை. அப்படியே புதிதாக அணைகள் கட்டினார்களா, சின்னச் சின்ன குளங்களையாகிலும் செப்பனிட்டார்களா என்றால் ஒன்றும் இல்லை. விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக என்று எங்கள் ஜில்லாவிற்கு ரூ. 71 லட்சம் ஒதுக்கினார்கள். கொஞ்சம் கடன் 40 லட்சம் வரை கொடுத்தார்கள். ஜனவரி முதல் கடன் கொடுக்க வேண்டாம் என்று உத்தரவிடப் பட்டுவிட்டதாக அறிகிறேன். இப்படியானால் விவசாயிகளுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உண்மையில் கோவை, சென்னை போன்ற இடங்களில் ஆகிலும் ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ஐந்தாறு ரூபாய் சம்பளம் கிடைக்கும், எங்கள் மாவட்டத்தில் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வேலை செய்தால் 2½ ரூபாய் கிடைக்காது. ஆனால், ஒரு படி அரிசி 2 ரூபாயாக இருக்கிறது. நாளை என்ன ஆகுமோ தெரியாது. நாங்கள் அழுது அழுது கேட்பது எல்லாம் ஒரு படி அரிசி வேண்டும் என்பதற்காக அல்ல. சில தலைவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் ½ படி அரிசிக்கு வழியில்லாது இருந்தவர்கள் இப்போது படி அரிசி கேட்க வாய் என்ன இருக்கிறது என்கிறார்கள். நாங்கள் படி அரிசி கேட்கவில்லை. கிழவி செத்தால் அவள் வாயில் பிடி அரிசி போடுவார்கள். அதுகூடக் கிடைக்காமல் இருந்தால், எங்கள் நிலைமை என்ன என்பதை அமைச்சரவைக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையில் அமைச்சர்கள் நாகர் கோவிலுக்குச் சென்றார்களே, அங்கே ஆறு, குளங்களில் தண்ணீர் இருக்கிறதா, கிணறு குட்டைகளில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்தார்களா ?

இங்கே நான் ஹாஸ்டலில் தங்கியிருக்கிறேன். சில அறைகளில் தண்ணீர் வருகிறது. சிலவற்றில் கிடையாது. குளிக்கக்கூட வசதி இல்லை. ஒரு ப்யூனைக் கூப்பிடலாம் என்றால் ஆள் கிடையாது. டெலிபோனை எடுத்தால் யார் என்று கேட்பதற்கு ஆள் இல்லை. நிர்வாக ஊழல் இப்படி அதிகமாகிவிட்டது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். வெகு சீக்கிரத்தில் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாத நிலை ஊர்களில் வந்துவிடும்.

1967-இல் இவர்கள் தேர்தலில் வெற்றி பெற ஆசிரியர்கள் எல்லாம் எவ்வளவு ஒத்துழைத்தார்கள் ? ஆனால் இன்றைக்கு ஆசிரியர்களுடைய நிலைமை என்ன ? பத்திரிகையில் படித்துப் பார்த்தேன். பொங்கலுக்கு அடுப்பில் பூனை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று மாதங்களாகச் சம்பளம் வரவில்லை. தாங்கள் எவ்வளவு நாளாகப் பட்டினி என்று போர்டு எழுதித் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கவனிப்பார் யாரும் இல்லை. இந்த அளவுக்கு இந்த அரசு போய்க்கொண்டிருக் கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1969 சனவரி 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாததற்குக் காரணம் சிலபல யூனியன்களில் நிதி பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. அரசினர் வழங்கக்கூடிய தொகை முழுவதையும் வழங்கிய பிறகும், அவர்களுடைய சொந்த நிதி நெருக்கடி காரணமாக இப்படி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதற்கு என்ன மாற்றுவழியை ஏற்படுத்தலாம் என்பதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக் கிறது. அரசு கொடுக்கவேண்டிய பணம் கொடுக்கப்படாதது காரணம் அல்ல.

திரு. என். துரைபாண்டியன் : மிகவும் நன்றி. அதேசமயத்தில் நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். 1961-இல் ஆசிரியர்களுக்காக என்று அரசு எவ்வளவு பணம் ஒதுக்கியதோ அதற்கு அதிகமாக ஒன்றும் கொடுப்பதில்லை. ஆனால் அதற்குப் பிறகு நிறைய பள்ளிகள் வந்துவிட்டன. ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதாகியிருக்கிறது. ஆகவே, அதன் காரணமாகத்தான் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இதுபோன்ற நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னதாகவே அரசு தக்க நடவடிக்கையை எடுத்திருக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் நாங்குனேரி, வள்ளியூர், விஜய நாரணம் என்ற மூன்று பெரிய குளங்கள் இருக்கின்றன. அந்த பி.ப. 1-30
குளங்களில் நீர் நிரம்பிவிட்டால் அந்தத் தாலுக்காவில் பஞ்சம் இருக்காது. அவற்றிற்குத் தண்ணீர் விடவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அங்கே 2,000 ஏக்கர் பாய வேண்டிய இடத்தில் 300 ஏக்கர்தான் பாய்ந்து இருக்கிறது. எனவே, உடனடியாகத் தண்ணீர் விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குளத்திற்குத் தண்ணீர் பாயாமல் இருக்குமானால், இன்னும் சில நாட்களில் அங்கே உள்ள கிணறுகளிலேகூட தண்ணீர் இருக்காது, வற்றி விடும். பிறகு குடிநீரும் கிடைக்காத நிலைமை ஏற்படும். அங்குள்ள மக்கள் பஞ்சத்தால் தவிக்கி றார்கள். இந்த நிலையில் பிப்ரவரி ஏழாம் தேதிகுள் வரி பாக்கிகளைக் கட்டவேண்டுமென்று வரியேடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனவரி ஏழாம் தேதிக்குள்ளேயே கட்ட வேண்டுமென்று சொல்லி கலெக்டர் கிராம அதிகாரிகளிடம் சொல்லி அவர்கள், அங்குள்ள மக்களை நெருக்கி கெடுபிடிக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையைத் தவிர்த்து, வரிகளையும் பாக்கிகளையும் ரத்துசெய்ய வேண்டுமென்று, அந்தப் பிரதேசத்தைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் உடனடியாக எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு குடமாடி அணை வேலையையும் விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

[1969 ஜனவரி 28

**திரு. பெ. சீனிவாசன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் பேசக் கிடைத்த வாய்ப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் நாகர்கோவில் தேர்தலைப்பற்றியே தெளிவாக விளக்கிக் கூறினார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாகர்கோவிலில் தாங்கள் பெற்ற வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி என்பதைப்போல பேசி வருகிறார்கள். அவர்கள் அகில இந்தியாவிலும் பேசிவருகிற, மக்களை ஏமாற்றி கொண்டிருக்கிற ஜனநாயகத்தின் வெற்றி அது என்றும் பேசி வருகிறார்கள். அந்தத் தொகுதியிலே உள்ள நிலைமைகளைப்பற்றியும் அந்தத் தொகுதியிலே வேட்பாளர் வாக்குகளைப் பெறுவதற்காக உபயோகித்த வார்த்தைகளைப்பற்றியும் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நாகர்கோவிலில் அவர்கள் பெற்றது ஜனநாயக சோஷலிஸத்தின் வெற்றியல்ல; முழுக்க முழுக்க ஜாதியத்தின் வெற்றி; பணத்தின் வெற்றி; பலாத்காரத்தின் வெற்றி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயக சோஷலிஸத்தின் வெற்றிதான் அது, ஜனநாயக சோஷலிஸத்தின் தந்தை அவர், நாட்டு மக்களின் ஏகோபித்த பாராட்டுக்குரியவர் அவர், ஏதோ 1967-தேர்தலிலே அசந்தர்ப்பவசமாகத் தோல்வி ஏற்பட்டுவிட்டது என்று காங்கிரஸ் நண்பர்கள் கருதுவார்களானால், அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அந்த ஜனநாயக சோஷலிஸத்தின் வெற்றியை ஏன் தென்சென்னையில் பரிசோதிக்கவில்லை, அந்த ஜனநாயக சோஷலிஸத்தின் வெற்றியை நீங்கள் ஏன் தென்காசியில் ஆராய்ந்து பார்க்கவில்லை, நாகர்கோவிலிலே ஓடோடிப் பாடுபட்ட நீங்கள் ஜனநாயக சோஷலிஸத்திற்கு மக்களிடம் ஆதரவு இருக்கிறதா இல்லையா என்று தென்காசியிலும் தென்சென்னையிலும் பார்க்கவில்லை. என்னதான் நீங்கள் நாகர்கோவிலில் பெற்ற வெற்றி நியாயமான வெற்றி என்று சொன்னாலும் அதை இந்த நாட்டு மக்களும், ஏடுகளும் நம்பத் தயாராக இல்லை. நாகர்கோவிலில் ஏற்பட்ட வெற்றி ஜாதிய வெற்றி என்பதைத்தான் எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள், மேல்நாட்டுப் பத்திரிகைகளும் அப்படித்தான் எழுதியிருக்கின்றன. அகில இந்தியாவிலும் இதைப்பற்றி யாரும் மறுக்கமுடியாத நிலைமைதான் இருந்துவருகிறது. நாகர்கோவில் தேர்தலில் வாக்குச் சீட்டில் வேட்பாளர் பெயரோடு நாடார் என்ற ஜாதிப் பெயரும் இருந்திருக்கிறது. அது அவருடைய தவறு அல்ல, அவருடைய நண்பர்கள் செய்தார்கள் என்று அவர்கள் சொல்லலாம். அது தவறு, நாகர்கோவிலில் ஜாதியத்தின் வெற்றிதான் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய விருதுநகர் தொகுதியிலும் அவர் பெயர் பட்டியலில் இருக்கிறது, அதிலே அவருடைய பெயரோடு ஜாதிப் பெயர் இல்லை, அந்தத் தேர்தலில் அவருடைய கையெழுத்திலோ அல்லது வேறு வாக்குச் சீட்டிலோ பெயரோடு ஜாதி இல்லை. அதேமாதிரி அவர் தென் சென்னையிலும் வாக்காளராக இருக்கிறார், அதிலேயும் அவர் பெயரோடு ஜாதி



யில்லை. நாகர்கோவிலில்தான் அந்த வேட்பாளர் விரும்பி வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த செயல் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அகில இந்தியக் காங்கிரஸ் என்று சொல்லிக்கொள்ளுகின்ற கட்சி, இந்த நாட்டை இருபது ஆண்டுக் காலமாக ஆண்டுவருகிற கட்சி, இம்மாதிரி சமுதாயம் வெறுக்கத்தக்க அளவுக்கு, மகாத்மா காந்தி எந்த ஜாதியை ஒழிக்கவேண்டுமென்று சொன்னாரோ, அந்த ஜாதிய வெறியைக் கொண்டுவந்து நாகர்கோவிலில், அந்தத் தேர்தலின் போது, கடைவிரித்தார்கள் என்பதை உலகம் உள்ளளவும் நியாயமான காங்கிரஸ்காரர்கள் யாரும் மறுக்கமுடியாது. பலாத்காரத்தில் அங்கே யார் இறங்கினார்கள் ? கிட்டு சீட்டு ஆட்டத்திலே குத்தப்பட்டான் என்று சொன்னார்கள். அப்படியானால் அந்தச் சீட்டு ஆட்டத்திலே பெற்ற வெற்றிக்காகத்தான் வீதியிலே மாலைகள் போடப்பட்டனவா ? இது பகிரங்கமாகச் செய்யப்பட்ட அரசியல் கொலை. முன்னேற்றக் கழக நண்பனைக் காங்கிரஸ்காரர்கள் செய்த கொலை . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மீண்டும் மீண்டும் அரசியல் கொலை என்று சொல்கிறார்கள். ஒரு கட்சியை வேறு இழுக்கிறார்கள். கிட்டு கொலைபற்றி கேஸ் இருக்கிறது. ஆகவே அதை இத்துடன் விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கொலை என்று சொன்னதை வாபஸ் பெறவேண்டும்.

**திரு. பெ. சீனிவாசன் :** சீட்டாட்டத்திலே கொலை என்று அவர்கள் சொன்னதை அவர்கள் வாபஸ் பெறவேண்டும். அப்படிச் செய்யாதவரை நான் அரசியல் கொலை, அரசியல் கொலை என்று திரும்பத் திரும்பச் சொல்வேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியல் கொலை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், அதை வாபஸ் பெறவேண்டும். அவர்கள் அப்படிச் சொல்வது எப்.ஐ.ஆர்.-இல் இருக்கிறதா ? வீராப்பாகப் பேசுகிறார்கள் அப்படி எங்களுக்கும் பேசத் தெரியும், இதைவிட வேகமாகவும் பேசத் தெரியும். அவர்கள் வெற்றிபெற்றுவிட்டால் அது ஜனநாயகத்தின் வெற்றி என்று சொல்கிறார்கள், நாகர்கோவிலில் பெற்றது மாத்திரம் ஜனநாயகத்தின் வெற்றியல்ல என்கிறார்கள்; ஜனநாயகம் தீர்ப்புக் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது அநாகரிகமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** எப்.ஐ.ஆரில் அப்படி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். நேற்றுப் பேசிய அவர்களுடைய கட்சிக்காரர் சீட்டாட்டம் ஆடினார் என்று சொன்னார்கள், அது எப்.ஐ.ஆரில் இருக்கிறதா ? இல்லாத ஒன்றை அவர்கள் எப்படிச் சொல்லமுடியும் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுமாதிரி எத்தனையோ எங்களுக்கும் சொல்லத் தெரியும். எம்.ஜி.ஆர். பச்சை குத்தியிருக்கிறார்கள் என்றெல்லாம்கூட எங்களுக்குத் தகவல்

வந்திருக்கிறது. அங்கே கொலை நடந்திருக்கிறது, அதற்காக ஊர்வலம்கூட நடத்தினார்கள். அரசியல் காரணமாக ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டில் கேஸ் இருப்பதால் ஒன்றும் பேசவில்லை. கோர்ட்டில் தீர்ப்பு காங்கிரஸ்காரர்தான் செய்தார் என்று வந்தால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். வன்முறையில் ஜெயித்தோம் என்கிறார்கள். வன்முறை, வன்முறை என்று சொல்கிறார்கள் என்றால் இந்த ஆட்சியில் வன்முறை தவிர வேறு ஒன்றும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். தி.மு.க. ஆட்சியிலே வன்முறையைத்தான் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோர்ட்டில் மிக முக்கியமான ஆதாரமாக எடுத்துக்கொள்வது எப்.ஐ.ஆர்.-தான். எப்.ஐ.ஆரில் முதலிலே இருந்ததைத் திருத்தியிருக்கிறார்கள் என்று நேற்றுப் பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வழக்கறிஞர் கூறினார்களே, அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் வழக்கறிஞர். நான் சாதாரணமான ஆள். எப்.ஐ.ஆர். இன்னும் கிடைக்கவில்லை. நியாயமான ஆட்சி என்றால் எப்.ஐ.ஆர். காப்பி வேண்டுமென்று அப்ளை செய்தவுடனே கிடைத்திருக்கவேண்டும். இன்னும் கிடைக்க வில்லை . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எப்.ஐ.ஆர். கேட்டுக் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். நேற்றுப் பேசிய எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்.ஐ.ஆர். வந்திருப்பதாகவும் அதிலே சீட்டு ஆடினார் என்று போட்டிருப்பதாகவும் சொன்னார்கள். இதிலே எதை நம்புவது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் விண்ணப்பம் போட்டார். எப்.ஐ.ஆர். கேட்ட உடனே கிடைக்கவில்லை. முதலிலே தெரிந்த தகவல், சீட்டு ஆடினார் என்பதாகும். அதற்குப் பிறகு உடனே எப்.ஐ.ஆர். கிடைக்கவில்லை. உடனே கிடைக்காமல் நாள் தள்ளியதால் சந்தேகப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படிச் சமாளித்துப் பேசுவது முறையல்ல. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் 'எப்.ஐ.ஆர்.'-ல் கிட்டு ரம்மி ஆடிக் கொண்டிருந்தார் என்று இருப்பதாகக் கூறினார், என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் என்று சொன்னார். அவர்கள் அவ்வாறு சொன்னதில் இருந்து எப்.ஐ.ஆர். கையில் இருப்பதாகத் தான் அர்த்தமாகும். அதற்கு என்ன விளக்கம் அளிக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எப்.ஐ.ஆர். காப்பிக்கு விண்ணப்பத்தைக் கொடுத்த உடனே கொடுக்கவில்லை. நாட்கள் கழித்துத் தான் கிடைத்தது. இடையிலே ஏற்பட்ட தில்லுமுல்லுகள் என்னென்னவோ என்றுதான் கூறினேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எஃப்.ஐ.ஆர். காப்பி கிடைத்ததாக திரு. பொன்னப்ப நாடார் சொல்லுகிறார். அதிலே கிட்டு சீட்டாடிக் கொண்டிருந்தார் என்று இருப்பதாகவும் சொன்னார். அந்த எப்.ஐ.ஆர். காப்பியைச் சபையிலே வைப்பார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் வெளியே போயிருக்கிறார். நாளைக்கு வந்தால் வைப்பார்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. நாகர்கோவிலில் நடந்த இடைத் தேர்தலோடு 1967-ல் விருதுநகரில் நடந்த தேர்தலையும், 1962-ல் சாத்தூர் தொகுதியில் நடந்த தேர்தலையும், 1957-ல் சாத்தூர் தொகுதியில் நடந்த தேர்தலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதே முறையில் அங்கெல்லாம் பலாத்கார நிகழ்ச்சிகள் நடந்திருப்பது தெரியும். 1957-லே சாத்தூர் தொகுதியிலே இதே பலாத்காரம் நடந்திருக்கிறது. பயங்கரமாக விவசாயிகள் தாக்கப்பட்டார்கள், அவர்களுடைய பயிர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு போட்டியிட்ட எதிர்க் கட்சி வேட்பாளரையும், தொண்டர்களையும் விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். அருமை நண்பர் ராமமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்திற்குச் சாத்தூர் தொகுதியிலே போட்டியிட்ட போது அந்த இளைஞரை உயிரோடு காணமுடியுமா என்ற அளவுக்குப் பலாத்காரத்திலே ஈடுபட்டார்கள். தேர்தல் முடிந்து வெற்றி பெற்ற பிறகுகூட பழி வாங்குகின்ற உணர்ச்சியோடு அவருடைய தந்தையைக் கையிலே விலங்கிட்டு சாத்தூர் தெருக்களிலே இழுத்து வந்தார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்த ஏராளமான விவசாயிகளுடைய கிணறுகள் தகர்க்கப்பட்டன. பம்ப் செட் மோட்டார்கள் உடைத்தெறியப்பட்டன. கூரைகளிலே நெருப்பு வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். மிளகாய்ச் செடிகளை எல்லாம் பிடுங்கிப் போட்டிருக்கிறார்கள். 1967-ல் நடந்த தேர்தலின் போதும் அதே பலாத்காரந்தான் நடந்தது. நான் அங்கே போட்டியிட்டு வெற்றி பெற்றேன் என்று சொல்லுவதைவிட, போட்டியிட்டு அந்த மரணப் பள்ளத்தாக்கில் உலவி இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்பதைத்தான் நான் மிகப் பெரிய வெற்றியாகக் கருதுகிறேன். குறிப்பிட்ட ஒரு தொகுதியில்மட்டும் எப்போதும் ஏன் பலாத்காரம் தலை காட்டுகிறது என்பதை அருமை காங்கிரஸ் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த பலாத்காரம் தமிழகத்தின் பிற தொகுதிகளில் இல்லாமல் குறிப்பிட்ட ஒருவருடைய தொகுதியில்மட்டும் இருப்பானேன் ? 1967-ல் விருதுநகரில் நடந்த பலாத்காரம், 1962-ல் சாத்தூர் தொகுதியில்

[திரு. பெ. சீனிவாசன்] [1969 சனவரி 28

நடைபெற்ற பலாத்காரம், 1957-ல் சாத்தூர் தொகுதியில் நடந்த பலாத்காரம் இன்று நாகர்கோயிலிலும் தொடர்ந்து நடந்திருக்கிறது. தமிழகத்தில் தொடர்ந்து பலாத்காரத்தைப் பரப்புவது காங்கிரஸ் கட்சி. நாகர்கோவிலிலே கழகத் தொண்டன் கொல்லப்பட்டான். பல தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். மதிப்பிற்குரிய அமைச்சர் கருணாநிதி அவர்களும், ஏனைய முன்னேற்றக் கழகத் தலைவர்களும் தங்கியிருந்த சுற்றுலா மாளிகையைச் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள முக்கால்வாசிப் பேர் கூட்டணி வாக்காளர்கள். அப்போது மணி, பட்டப் பகல் 12. ஆயுதம் தாங்கிய போலீசார் காவல் இருக்கிறார்கள். அப்போது காங்கிரஸ்காரர்கள் பத்துப் பேர் தனியாக நின்றுகொண்டு ஒரு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் கூட்டத்தில் பானைகளைத் தலையில் வைத்துக்கொண்டு, பேசத் தகாத வார்த்தைகளைப் பேசிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். போலீசைப் பயன்படுத்துவதாகக் காங்கிரஸ் நண்பர்கள் குற்றம் சாட்டினார்களே. அமைச்சர் பேசுகின்ற அந்தக் கூட்டத்தில் அவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்த நேரத்திலும் போலீசைப் பயன்படுத்தவில்லை. போலீசைப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றம் உண்மையாக இருக்குமானால், அவ்வாறு போலீசைப் பயன்படுத்திக்கொள்ள அதைவிட அருமையான வாய்ப்பு வேறு இருக்க முடியாது. எவ்வளவோ சொல்லியும் அமைச்சரவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று கூறிவிட்டார்கள். பொறுமையைக் கைவிடாதீர்கள். நாளை பழி நம்மைச் சாரக்கூடாது என்றார்கள். எந்த அளவுக்குப் பலாத்காரம் நாகர்கோயில் தேர்தலின்போது நடந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1967 தேர்தலில் எந்த ஜாதி முறை தமிழகத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டதோ, எந்தப் பண ஆதிக்கம் தேர்தலின் போது விளையாடுவது விரட்டியடிக்கப்பட்டதோ, அது மீண்டும் நாகர்கோவில் தேர்தலின் மூலம் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது.

நாகர்கோவில் தேர்தல் முடிந்துவிட்டது. நான் காங்கிரஸ் நண்பர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—இதன்மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை அசைத்து விடலாம் என்றோ, திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு முதல் அத்தியாயம் தீட்டப்பட்டு விட்டதாகவோ தயவு செய்து கனவு காணாதீர்கள். நாகர்கோவில் எங்கே இருக்கிறது என்று பூகோளப் படத்தை எடுத்துப் பாருங்கள். தமிழகத்தின் தென்கோடியில் இருக்கிறது. வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்கள் கடைசியில் போய்ச் சேருகின்ற இடம். உங்களுடைய காங்கிரஸ் கட்சி அப்படிப்பட்ட கடைசி இடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1969 சனவரி 28] [திரு. பெ. சீனிவாசன்]

கவர்னர் உரையின்மீது பேசும்போது என்னுடைய முக்கியமான வேண்டுகோளாக அமைச்சரவைக்கு நான் குறிப்பிட விரும்புவது, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் திரு. கப்பாராஜு அவர்கள் சொன்னதுபோல் பஞ்சத்தில் போராடிக் கொண்டிருக்கிற மாவட்டம். 'கடவுளால் சபிக்கப்பட்ட மாவட்டம்' என்று பழமொழி சொல்லுவார்கள். இந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் வறட்சி என்றால், இராமநாதபுர மாவட்டத்தின் வறட்சி எந்த அளவுக்கு இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த மாவட்டங்களில் விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லையென்றால் எங்கள் மாவட்டத்தில் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லை. வேறு இடம் தேடி மக்கள் வெளியேறுவதும் கூட ஆச்சரியப்
வேறு இடம் தேடி மக்கள் வெளியேறுவதும்கூட ஆச்சரியப்
கருதி, நோயுற்ற பிள்ளையாகக் கருதி உடனடியாக நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டம் பெரிய பெரிய அரசியல் தலைவர்களை உருவாக்கினாலும் கடந்த 20 ஆண்டுக் காலமாக அவர்கள் எல்லாம் எங்களுடைய மாவட்டத்தைக் கைவிட்டுப் போய்விட்டார்கள். சில தலைவர்கள் காலம் சென்றுவிட்டார்கள், சிலர் கடலோரம் ஒதுங்கிவிட்டார்கள். எங்களுடைய மாவட்டத்தின்மீது கருணை வைத்து, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் கண்ணீரைத் துடைக்க, கழக ஆட்சி முன்வரவேண்டும். அதற்கான திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் கவனத்தோடு செயல்படுத்தி வருகிறார்கள் என்றாலும், இன்னும் கொஞ்சம் தாராளமாக உதவி எங்களுடைய மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். பி.ப. 1 47

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 10. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

73. Notification issued with G.O. Ms. No. 1930, Rural Development and Local Administration, dated the 23rd September 1968, in regard to postponement of the quinquennial revision work for one half-year from 1st October 1968 in certain municipalities specified in the notification. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).].

74. Order issued with G.O. R. No. 1098, Revenue, dated the 19th Septemebr 1968 in regard to exemption from the liability to entertainments tax, the benefit film show on 8th September 1968

at Murugan Talkies, Madras-1, arranged by Thiru K. Bhaskaran, to collect donations to celebrate the 60th birthday of Hon. the Chief Minister. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).].

75. Notification issued with G.O. Ms. No. 2284, Agriculture, dated the 25th July 1968, in regard to establishment of a regulated mraket at Kadambuliyur in South Arcot district for cashewnut. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).].

## B. Reports, Notifications and Other papers.

† 33. The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 1 of 1969).

† Despatched to Members on 25th January 1969.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1969 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்திவைக்கப்பட்ட கேள்வி எண் 17 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

### ஆரம்ப சுகாதார நிலையம் கருங்காலக்குடி.

*17 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வடக்கு ஒன்றியத்தில் கருங்காலக்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது கட்டட வேலை தொடங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கருங்காலக்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னது, அரசின் நிதிப் பற்றுக்குறை காரணமாகத்தான் என்று நான் கருதுகிறேன். மக்கள் ஏதாவது பங்குத் தொகை செலுத்தினால், அங்கு கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிதிப் பற்றுக் குறைதான் அதற்குக் காரணம். மக்கள் பங்குத் தொகை அதிகமாகக் கிடைக்குமானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: பொதுவாக, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கே சொந்தமாக கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. கிராமங்களில் இருக்கின்ற காரணத்தாலும், கட்டடங்கள் இல்லாத காரணத்தாலும், டாக்டர்கள் வரப் பயப்படுகிறார்கள். ஆகையால், இதையெல்லாம் கருதி, வருகிற பட்ஜெட்டிலாவது கணிசமான அளவுக்கு நிதி ஒதுக்கி, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென்றே கட்டடங்கள் கட்ட அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக வாடகைக் கட்டடம் கூடக் கிடைக்காத கிராமங்களிலாவது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென கட்டடங்கள் உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை.

* 21. வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கிற செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, மதுராந்தகம் பகுதி விவசாயப் பகுதியாக இருந்து கொண்டிருப்பதால், அங்கே ஒரு தொழில் பேட்டை அவசியம் உருவாக்க வேண்டியிருக்கிறது. அப்படி உருவாக்க வேண்டுமானால், அதற்கு என்ன, என்ன சாத்தியக்கூறுகள் தேவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் துவக்குவதைக் குறித்து முதலிலே ஏற்றுக் கொண்ட கொள்கையின் அடிப்படையில், ஒவ்வொரு வருவாய் வட்டாரத்திலும் ஒரு தொழிற்பேட்டையாவது இருக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 48 வருவாய் வட்டாரங்களில் 32 வருவாய் வட்டாரங்களில் தொழிற் பேட்டைகள் அமைந்திருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், அம்பத்தூரில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. மாதவரத்தில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. தனியார்த் துறையிலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. வியாசர்பாடியில் கூட்டுறவுத் துறையில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. திருவள்ளூரில் எலெக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்று வர இருக்கிறது. திருவள்ளூர் தாலுக்காவில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் போட்ட திட்டத்தின் அடிப்படையில் ஒரு தொழிற்பேட்டை வருகிறது. காஞ்சீபுரத்தில் ஒரு தொழிற் பேட்டை அமைந்திருக்கிறது. இப்பொழுது செங்கற்பட்டு மாவட்டத்தில் தொழிற்பேட்டை வைக்கப்படாமல் இருக்கும் வருவாய் வட்டம் செங்கற்பட்டு வருவாய் வட்டம்தான். அதையும் மதுராந்தகத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை வைக்கின்ற



குறிப்புகள் இப்பொழுது இல்லை. ஒரு தொழிற்பேட்டை வைக்க வேண்டுமென்றால், அங்கே தொழில் நடத்துவதற்குத் தொழிலதிபர்கள் முன்வரவேண்டும். இரண்டாவது, அங்கே மூலப் பொருள்கள் கிடைக்கின்ற வசதிகளும், போக்குவரத்துச் சாதனங்களும்; புகைவண்டிச் சாதனமும் இருக்கவேண்டும். அந்தப் பகுதியில் தொழில்கள் மேலும் வளருவதற்கான வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றனவா என்பதும் கண்டறியப்படவேண்டும். தொழிற் பேட்டை துவக்கினால், அதில் யார் யார் தொழில்கள் நடத்த முன் வருகிறார்கள், தொழிற்பேட்டையில் இருக்கும் யூனிட்களுக்கு வாடகை கொடுக்கத்தக்க அளவுக்கு அவர்கள் முன்வருகிறார்களா என்பதைப் பார்த்துத்தான் தொழிற்பேட்டை வைக்கவேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், விண்ணப்பத்தோடு இரண்டாயிரம் ரூபாய் டெபாசிட் கட்டி, விண்ணப்பிக்கின்றவர்களுக்கு ஏற்றபடி நிலைமைகளை ஆராய்ந்து, ஆங்காங்கு தொழிற் பேட்டை வைக்கலாம் என்ற கருத்தைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது மதுராந்தகத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : சிறிய தொழில்கள் செய்ய முன்வருகிறவர்களுக்கு அரசு மானியமாக எவ்வளவு தருகிறது ? கடனாக எவ்வளவு தருகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் செய்ய விரும்புகிறவர்களுக்கு மானியம் எதுவும் தருவதில்லை. கடன்தான் தரப்படுகிறது. அதுவும் இரண்டு லட்ச ரூபாய் வரையில் சிறு தொழில்களுக்குக் கடன் தருகிற முயற்சி இருக்கிறது. கடன் தொகை 75 சத வீதமாக அமையும். அவர்கள் 25 சத வீதம் போடவேண்டியிருக்கும். இந்த நிலையில் ஆராய்ந்து, ஒவ்வொரு கட்டத்திலும் துணை இயக்குநர், இணை இயக்குநர், இயக்குநர் என்று ஒவ்வொருவருக்கும் ஓர் அளவு இருக்கிறது. 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு கடன் வழங்கவேண்டுமானால், அது குறித்த கோரிக்கை இயக்குநரிடமிருந்து போர்டுக்கு வந்து, அங்கிருந்து அரசாங்கத்திற்கு வந்து, அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, even in 1965 and 1966 four places were selected for the establishment of Industrial Estates in our State and I think, Hosur was not one of them. The land required for the establishment of an Industrial Estate has already been acquired by the Collector. Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken in this regard?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஹோசூரில் ஒரு தொழிற்பேட்டை வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டு, இடம் ஆர்ஜிதம் செய்யப்படுவதற்கு 'அவார்டு' வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்திற்கு உரியவர்கள், அதுபற்றி ஆட்சேபணை செய்து கொண்டிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தொழிற்பேட்டைகள் ஆரம்பித்ததன் மூலம் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது? உற்பத்தி எவ்வளவு அதிகரித்திருக்கிறது? லாபமா? நஷ்டமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை, அரசாங்கம் ஆரம்பிப்பதில்லை. தொழிற்பேட்டை அமைத்து, இட வசதி செய்து கொடுத்து, மின்சார வசதி, தண்ணீர் வசதி, போக்குவரத்து,பாதை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித்தருகிறது. தனியார்த்துறையில் உள்ளவர்கள்தான் அங்கே பல்வேறு தொழில்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பல தொழிற்சாலைகள் மிக நன்றாக நடைபெறுகின்றன. சில தொழிற்சாலைகள் நன்றாக நடைபெறவில்லை. சில இடங்களில் அதிகமான அளவுக்குத் தொழில் அதிபர்கள் வருவார்கள் என்று கருதி தொழிற்பேட்டைகள் துவக்கப்பட்ட இடங்களில், குறிப்பாக விருதுநகர், கோவில்பட்டி போன்ற இடங்களில் இன்னும் ஆறு, ஏழு யூனிட்கள் நிரப்பப்படாமலேயே இருக்கின்றன. வேறு பல இடங்களில் கிராக்கி அதிகமாக ஏற்பட்டு, மேற்கொண்டு யூனிட்கள் கட்டப்படுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுவாக, எவ்வளவு பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று தனியாகக் கேட்டால், இதுவரை எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது என்று சொல்லலாம். அம்பத்தூர், கிண்டி தொழிற்பேட்டைகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. தேவையான அளவுக்கு இட வசதி இல்லாத நிலை இருக்கிறது. சிலபல ஊர்களில் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஊரின் நிலைமைக்கேற்றபடிதான் 'இக்கனமிக் ரென்ட்' என்ற முறையில் வசதியாக அவர்கள் கொடுப்பதற்கு ஏற்ற வகையில், அதிலே சப்ஸிடி தந்து, குறைந்த அளவு வாடகைக்குத்தான் இடம் கொடுக்கப்படுகிறது.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** ஐயா, ஒரு பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கவேண்டுமானால், அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஏதாவது வேண்டுகோள் வரவேண்டுமா? அல்லது, அரசாங்கமே எந்தப் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்தால், அது நல்ல முறையில் இயங்கக்கூடும், அதற்கேற்ற வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து முடிவு எடுக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் எடுத்துச் சொல்லியதைப் போன்று, அங்கே இருப்பவர்கள் தொழில் நடத்த முன்வரவேண்டும். அதற்கான சாதனங்களும் வசதிகளும் ஏற்படவேண்டும், தொழில் நடத்துவதற்கு ஏற்ற அளவுக்கு இட வசதி அமைய வேண்டும். அந்த அளவிலே தொழில்கள் வைத்து நடத்துபவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையும், தொழில் வளரக்கூடும் என்ற நம்பிக்கையும் இருந்து, அது கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், தொழிற்துறை இயக்குநர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுத்து அந்த இடத்தையெல்லாம் ஆராய்வார்கள். தொழிற்துறை இயக்குநரும் எங்கெங்கு தொழிற்பேட்டை வைக்கலாம் என்பதை ஆராய்ந்து அதற்கேற்றபடி திட்டத்தை வகுத்துத் தருகிறார்கள்.





**திரு. சு. துரைசாமி:** ஐயா, கோவையில் இருக்கும் தொழிற்பேட்டையில் நூறு தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்படுவதாகத் திட்டமிடப்பட்டு அது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் ஏறத்தாழ ஐம்பதுக்கும் குறைவான தொழிற்கூடங்கள்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஐம்பது ஆரம்பிக்கப்படவில்லை. அதுபோல், பொள்ளாச்சியில் கட்டப்பட்ட தொழிற்பேட்டையிலும், இன்னும் பல தொழில் யூனிட்கள் துவங்கப்படவில்லை. அவையெல்லாம் எப்பொழுது துவங்கப்படும்? அதற்கு அரசாங்கம் ஏதாவது தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மதுராந்தகத்தையொட்டியிருக்கும் காரணத்தால், மற்றைய தொழிற்பேட்டைகள் பற்றிய விவரங்கள் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விநாயகம்.

**திரு. கே. விநாயகம்:** நீங்கள் தயவுசெய்து கேள்வி போடும்படியாக அனுமதித்தும், நான் இப்பொழுது தயாராக இல்லை. காரணம் வேறு.

### அரசினர் தொழிற்கூடம், மேட்டூர்.

* 22 வினா—திரு. கே. ஆர். கோவிந்தன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) மேட்டூரில் இயங்கிவரும் அரசினர் ஒர்க்ஷாப்பில் வேலை குறைப்பு செய்யும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?**

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

### *Rebate on purchase of high speed diesel oil.*

*23 Q.—Thiru N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the rebate offered by the Indian Oil Corporation Ltd., towards the purchase of high speed diesel oil was availed of between April 1963 and August 1964 and April 1965 and March 1966 in respect of buses and other vehicles **operated by the State** Transport Department; and

(b) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) இந்த வினா எழவில்லை.

[1969 சனவரி 29

செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி.

*24 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம் செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை. செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** ஒரு பயணிகள் விடுதியை அமைக்க வேண்டுமென்றால் என்னென்ன காரணங்களைக் கொண்டு அரசு அதை அமைக்கிறது? அந்தக் காரணங்கள் இந்த ஊரைப் பொறுத்தமட்டில் சரியாக இல்லை என்று அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த ஊருக்கு அருகாமையில் மேலூர், நத்தம், கொட்டம்பட்டி இவைகளில் ஏற்கனவே பயணிகள் விடுதிகள் இருக்கின்றன. அங்கிருந்து ஒரு மணி நேரம் பயணம் செய்தால் மதுரை செல்ல முடியும். அங்கு செல்கிற பயணிகள் மதுரை போன்ற இடங்களில் தங்கிக் கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆகவே, இந்த இடத்தில் பயணிகள் விடுதி அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** டவுன் பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பயணிகள் விடுதி கட்ட உத்தேசமுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் 25, 26 தள்ளி வைக்கப்படுகின்றன.

*City Compensatory Allowance for aided school teachers*

*27 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) Whether any representation has been received from aided school teachers for the grant of City Compensatory Allowance : and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம், ஐயா.

(இ) சென்னை மாநகரின் எல்லைகளுக்குள்ளும், சென்னை மாநகரை அடுத்துள்ள சில பகுதிகளிலும், மதுரை நகரின் நகராட்சி எல்லைகளுக்குள்ளும் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு, நகர ஈட்டுப்படித் திட்டத்தை 1—3—1968 முதற் கொண்டு அரசாங்கம் நீட்டித்துள்ளது. மாநில அரசாங்கப் பணியாளர்களுக்கு எந்தச் சம்பள வரம்புவரை நகர ஈட்டுப்படி வழங்கப்படுகிறதோ அதே வரம்புவரை மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும்.



1969 சனவரி 29]

THIRU T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, may I request the Hon. Minister to state whether there is any proposal pending now before the Government for merging the Dearness Allowance and the City Compensatory Allowance with the basic salary or the pay of the Gnvernment servants of this State?

THE HON. THIRU S. MADHAVAN : No, Sir.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the teachers working in private aided schools are not given house rent allowance as is being given to other categories of teachers and if so, will the Government be pleased to grant them house rent allowance also?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் அளித்தல்) சட்டம்.

*28 வினா.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (லைசென்ஸ்) சட்டம் 1965 [The Madsas Public Buildings (Licensing) Act, 1965] பற்றி தமிழ்நாடு வர்த்தகக் கழகம் தனது அதிருப்தியை சுட்டிக் காட்டி அரசுக்கு விண்ணப்பம் எதுவும் அனுப்பியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அரசு அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வர்த்தகக் கழகம் தமிழ்நாடு 1965-ம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் அளித்தல்) சட்டத்தை [The Madras Public Buildings (Licensing) Act, 1965] ரத்துச் செய்யும்படி விடுத்துள்ள கோரிக்கையை, அரசு நன்கு பரிசீலனை செய்து, மேற்படி சட்டத்தை ரத்துச் செய்ய இயலாது என பதில் அளித்துள்ளது.

**திரு. ந. தருமலிங்கம் :** அரசிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை என்று சுட்டிக்காட்டி தமிழ்நாடு வர்த்தகக் கழகத்தின் மாநிலக் குழு அரசாங்கத்தைக் கண்டித்து தீர்மானம் இயற்றியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபோன்ற தகவல் அரசுக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மற்ற வினாக்கள் ஒற்றிவைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோருதல்.

### (அ) வினா நேரத்தில் அதிக வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படுதல்.

**திரு. கரு. சீமைச்சாமி** : கேள்வி நேரம் கால் மணி நேரத்தில் முடிந்து விட்டது. நல்ல பல கேள்விகள், முக்கியமான கேள்விகள், அன்றாடம் பிரச்னையில் உள்ள கேள்விகள் நூற்றுக் கணக்கில் இருந்தும், இந்த மாதிரிக் கேள்விகள்தான் வருகின்றன. ஆகவே நல்ல கேள்விகள், சட்டசபைக்குரிய கேள்விகள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். ரூல் 41-ன்கீழ் நோட்டீஸ் இருபது நாட்களுக்கு முன்னால் கொடுத்தும் பதில் வரவில்லை. அதற்கும் சபாநாயகர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்** : எந்தெந்தக் கேள்விகள் இப்போது வருகின்றனவோ அதே கேள்விகளைப் பொறுத்து நானும் கேள்விகள் போட்டிருக்கிறேன். துரதிருஷ்டவசமாக என் பெயர் மட்டும் வருவதில்லை. மற்ற நண்பர்களுடைய பெயர்கள் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நேற்று வந்த வினாக்களில் இரண்டு, திரு. விநாயகத்தினுடையவை.

**திரு. கே. விநாயகம்** : இன்று ஒன்றுமே வரவில்லை. என் கேள்விகள் மட்டும் ஆயிரம் இருக்கின்றன. அவற்றிற்குப் பதில்களும் வந்திருக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் கொஞ்சம் இடம் கொடுத்து அவற்றைக் கூடிய சீக்கிரம் வைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : இன்று பத்து கேள்விகள் உள்ளன. இதற்குமுன் உள்ள சட்டமன்றக் கூட்டத் தொடரில் இருபது கேள்விகள்கூட வந்திருக்கின்றன. ஆகவே, கேள்விகளையாவது தாங்கள் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இருபது கேள்விகள் அல்ல, ஐம்பது கேள்விகள்கூட வந்திருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் நிறைய துணை வினாக்கள் கேட்கிற வழக்கத்தைப் பிற்காலத்தில் மேற்கொண்ட காரணத்தினால் இந்தளவு எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று ஒரு வினாவிற்கு இருபது நிமிடங்கள் எடுத்துக்கொண்டும் கூட, மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்களுக்குத் திருப்தியாக இல்லை. அப்படிச் சில வினாக்களுக்கு நிறைய துணை வினாக்கள் போடக்கூடிய ஆர்வம் உறுப்பினர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் வினாக்களின் எண்ணிக்கையைக் குறைவுபடுத்தியிருக்கிறோம். வந்திருக்க வேண்டிய அமைச்சர்கள் வந்திருப்பார்களானால் மற்ற வினாக்களை எடுத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் வர முடியாத காரணத்தினால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.





தக்கபடி வினாக்கள் போட்டுக் கூடியவரையில் இந்த ஒரு மணி நேரத்தை எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : இந்த இரண்டு ஆண்டுக் காலமாக என்னுடைய கேள்வி ஒன்றுகூட வரவில்லை. நான் கேள்வி கொடுக்கும்போது ஒவ்வொரு தடவையும் புதுப்பிக்கலாம், புதுப்பிக்கலாம் என்று வருகிறதே தவிர, என் கேள்வி ஒன்றும் வரவில்லை. இன்றியமையாதவற்றிற்கு அதற்கப்புறம் பதில் சொன்னால் பயன் இல்லை. இந்த ஆபத்தையாவது தவிர்த்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்விகள் வந்து சட்டப்பேரவைத் துறையில் அனுமதிக்கப்பட்டு, மற்றத் துறைகளுக்கு அனுப்பி, அதற்கான விடைகளைப் பெறவேண்டியிருக்கிறது. அந்தத் துறைகளிலிருந்து நமக்குப் பதில்கள் வந்த பிறகு அந்தக் கேள்விகளை அவைக்குக் கொண்டு வருகிறோம். அதில் காலதாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தை எந்தளவிற்குக் குறைக்க முடியுமோ, அந்தளவிற்குக் குறைப்பதற்கான முயற்சியை நானும் அவை முன்னவர் அவர்களும் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

அடுத்து, 'காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்.' அவற்றைக் கொண்டு வரவேண்டிய இரண்டு உறுப்பினர்களும் இங்கு இல்லாத காரணத்தினால் அவற்றைத் தள்ளிவைக்க வேண்டியிருக்கிறது.

## 3. அமைச்சர் அறிக்கை.

### துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்குத் திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 31-8-1968-ம் நாளன்று திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கேட்ட வினா எண் 214-க்கு விடையளிக்கப்பட்டதையொட்டி, திரு. நா. காசிராமன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அறிக்கை ஒன்றை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, 31-8-1968 அன்று சட்டப் பேரவையில் சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஆளுகையிலிருந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நகரச் சாலைகளின் பராமரிப்புக் குறித்து, திரு. கோமதி சங்கர தீட்சிதர், எம்.எல்.ஏ., அவர்களின் வினாவின் மேல் திரு. காசிராமன், எம்.எல்.ஏ., அவர்கள் எழுப்பிய துணை வினாவுக்குப் பதிலளிக்கையில் கடற்கரைச் சாலை வடக்கே சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அரசினரால் பராமரிக்கப்படுகிறது என்றும், மெரினா கடற்கரைச் சாலை அரசினர் பராமரிப்பில் இருக்கிறதெனவும், பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே மேற்படி சாலையில் அங்கத்தினர் (திரு. காசிராமன், எம்.எல்.ஏ.,) சுட்டிக்காட்டிய குறைபாடுகள் கவனிக்கப்படும் என்றும்

அறிவிக்கப்பட்டது. ஆனால் மெரினா கடற்கரைச் சாலை சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரை உள்ள பகுதி சென்னை மாநகராட்சி மன்றத்தால் பராமரிக்கப் படுகிறது எனவும், மேற்படி சாலையில் பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே உள்ள குறைபாடுகள் மாநகராட்சி மன்றத்தால் கவனிக்கப்பட்டன என்றும் இப்போது தகவல் கிடைத்துள்ளது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

## 4. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அவை மசோதா எண் 18/1968).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை * அவை முன் அளிக்கிறேன்.

### (இ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 5. முதலமைச்சரின் உடல்நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலைபற்றிய அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேற்றுக் காலை சிறிதளவு மார்பு வலி ஏற்பட்டது. டாக்டர்கள் தக்க சிகிச்சை அளித்து, தூக்கத்திற்கான மருந்தும் அளித்தனர். பிறகு மார்பு வலி தணிந்தது, சிறிது பிராணவாயு தரப்பட்டது என்றும், இனி அது தேவைப்படாது என்றும் டாக்டர்கள் கூறுகிறார்கள். ரேடியம்

* 1969 சனவரி 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஊசி பொருத்தப்பட்டிருப்பதன் விளைவாக மார்பு வலி ஏற்படுகிறது என்றும், ஓரிரு நாட்களில் மார்புவலி நின்றுவிடும் என்றும் கூறு கிறார்கள். உணவு திரவப் பதார்த்தமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று நண்பகலுக்குப் பிறகு நல்ல உறக்கம் கொண்டார்கள். மாலையிலும் இரவிலும் திரவ உணவு உட்கொண்டார்கள்.

நேற்று இரவுப்பொழுதை நல்ல உறக்கத்தோடு அமைதியாகக் கழித்தார்கள். இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, உஷ்ணநிலை எல்லாம் சீரான நிலைமையில் இருந்து வருகின்றன என்று டாக்டர் கள் கூறியுள்ளார்கள்.

இன்று காலை அவர்கள் உடல்நலம் சீர்பெற்ற நிலையில் இருக் கிறது.

## 2. தகவல் கோருதல்—தொடர்ச்சி.

### (இ) பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு சம்பவம்பற்றி விளக்கம் கோருதல்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நேற்று இந்தச் சட்டசபை எல்லைக்குள் நடந்திருக்கக்கூடிய ஒரு சம்பவத்தைப்பற்றித் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுபற்றி நோட்டீஸ் கொடுக்காகிலேயே உறுப்பினரவர்கள் இந்த இடத்திலே எழுந்து பேசுவது முறையாக இருக்காது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவரவர்களே, நான் அனுமதி கேட்பதற்காகத்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோதண்ட ராமன் அவர்கள் நேற்று நிகழ்ச்சியைப்பற்றிப் பேச இப்பொழுது எழுந்து நிற்கிறார்கள். நான் அதற்குத் தீர்ப்புக் கொடுத்திருக் கிறேன். எந்தப் பிரச்சினையையும் பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் நீங்கள் எழுப்பக்கூடாது. அதையே மீண்டும் பேசுவ தற்கு அனுமதி அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அனுமதி கேட்டுப் பேச வேண்டியதுதான். அதைத்தான் தங்களிடம் கேட்க ஆசைப் படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு முன்பே அறிவிக்கை கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். இப்பொழுது நீங்கள் எதற்காக எழுந்து பேசப் போகிறீர்கள் என்பது தெரியாமல் நான் உங்களுக்குப் பேச வாய்ப்பு அளிப்பது முறையாக இருக்காது.

6. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்.

**திரு. சி. வீரமணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சங்களிலெல்லாம் இதயக் கோயிலாக இருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் பெற, தமிழகத்தை வாழ்விக்கும வகையிலே சீரும் சிறப்புமாக உடல் நலம்பெறத் தமிழ்த்தாயை வேண்டி, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழர்தம் உள்ளமெல்லாம் பூரிக்கும் வகையில், தமிழ்நாடு தமிழருக்கே என்ற வகையில் இம்மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தை ஏற்படுத்தித் தந்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதோடு மட்டுமல்லாமல், அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு வழங்கி இரண்டாவது பொங்கல் பரிசாகத் தந்தமைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ்காரர்கள் இரும்பு இதயத்தோடு சேலத்தில் இரும்பாலையைக் கொண்டுவராமல் தடுத்திருந்தார்கள். இப்பொழுது, இதயமுள்ள கழக அரசு, இலட்சியமுள்ள கழக அரசு, 10 கோடி ரூபாய் செலவில், 25,000 ஏக்கரை ஆர்ஜிதம் செய்யக்கூடிய உத்தரவைப் பிறப்பித்திருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை சேலம் மாவட்டத்து மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும்பொழுது, நாகர்கோயில் வெற்றியானது இமாலய வெற்றி என்றார்கள். ஆம், அது இமாலய வெற்றிதான். ஆனால் அது காங்கிரசுக்கு வெற்றி அல்ல, காமராஜருக்குத்தான் இமாலய வெற்றி என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். இதற்கு முன்னதாக மதிப்பிற்குரிய நண்பர் மாறன் அவர்கள் போட்டி போட்டார்கள். அவர் முன்பின் அரசியலுக்கு அறிமுகமாகாதவர். அவர் பெரும்பான்மையான வோட்டுகள் பெற்று வெற்றி பெற்றார்கள். அந்த இடத்தில் கழகம் வென்றது என்று பொருள், கட்சி வென்றது என்று பொருள். அடுத்து, சங்கரித் தொகுதியில் நான் போட்டி போட்டேன். நான் அரசியலில் முன்பின் அறிமுகம் இல்லாதவன், அரசாங்க ஊழியனாக இருந்து வந்தவன். நான் போட்டியிட்டு வெற்றி பெற்றேன் என்றால் அது கழகத்தினுடைய கொள்கைக்கு வெற்றி என்று பொருள், அறிஞர் அண்ணாவிற்கு ஆதரவாக வோட்டளித்தார்கள் என்று பொருள். அடுத்து, தென்காசித் தேர்தலில் திரு. கதிரவன் அவர்கள் போட்டி போட்டார்கள். அவர்களும் அரசியலில் முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள். ஆனால் நாகர்கோயிலில் போட்டியிட்ட தலைவரோ உலகத்திற்குத் தெரிந்தவர். அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக



இருந்தவர், எட்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தவர். இப்படிப்பட்ட பெருந்தலைவர், காமராஜ் என்ற உருவிலேகூட இல்லாமல், காமராஜ நாடார் என்ற உருவிலே அங்கே போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனவே அது காமராஜரின் வெற்றி என்றுதான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நான் பல தொகுதிகளுக்குச் சென்று பார்த்தபொழுது அங்கெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள், நேசமணி வெற்றிபெற்ற அந்த இடத்தில் காமராஜர் போட்டியிட வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றே கருதியிருந்ததாக அந்தத் தொகுதி மக்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். அதோடு மட்டுமல்ல, நாகர்கோயில் தொகுதியில் ஒருவர் குறிப்பிட்டதைச் சொல்ல விரும்புகிறேன். மாணிக்கம் என்ற ஒருவர் குறிப்பிட்டார், '**இவ்விடத்தில் அத்தலைவர் வந்து கன்னியாகுமரி** ஜில்லாவில் தஞ்சம் புகுந்தார்' என்று குறிப்பிட்டார். அப்படித் தஞ்சம் புகுந்த தலைவரை ஜெயிக்க வைக்க வேண்டியது எங்கள் பொறுப்பு என்று கூறினார்கள். இப்படிப்பட்ட இரக்க சிந்தையால் தான் அங்கே அவர் வெற்றி பெற்றாரே தவிர, அது காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த வெற்றி என்றோ, அந்தக் கட்சி கன்னியாகுமரியில் செய்த தொண்டிற்காக வெற்றி பெற்றது என்றோ குறிப்பிடுவதற்கு இல்லை.

இன்னொன்றும் கூறிக் கொள்ளுகிறேன். வன்முறைச் செயல்கள் தான் வெற்றிக்குக் காரணம் என்பதோடு மட்டுமல்லாமல், **இப்படிப்பட்ட வன்முறைகளை அரசியல் ரீதியாகப் பொறுத்துக்** கொள்ளலாம். ஆனால், காமராஜர் வகுப்புக் கலவரத்தைத் தூண்டும் வகையில் 'காமராஜ நாடார்' என்று சொன்னாரே அதைத்தான் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அதைச் **சாதாரணமானவர்கள் செய்திருந்தால் பரவாயில்லை. பெருந்**தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்பைப் பற்றி மத்தியக் குழுவிலே அறிக்கை தந்திருக்கிறார்கள். தனி நபர்கள் செல்வாக்குப் பெறுவதற்காகத்தான் தீண்டாமையைப் பயன்படுத்தி வருகிறார்கள், தனி நபர்களின் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகத்தான் இந்தத் தீண்டாமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். காமராஜர் அவர்கள் காந்தீய ரீதியான கொள்கையை அழித்துவிட்டு, வகுப்புக் கலவரத்திற்கு வித்திட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று கூறுவதுதான் பொருத்தமானது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, வெண்மணிச் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இதை இதயமுள்ளவர்கள் நன்றாகக் கண்டித்திருப்பார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை 'மிருகத்தனமானது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணகி மதுரையை எரித்தபொழுதுகூட பெண்டுகள், பிள்ளைகள், முதியோர்கள், குழந்தைகள் இவர்களை விட்டுவிட்டுத்தான் மதுரை பற்றி எரிய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இளம் சிறார்கள் 20 பேர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவம் பரிதாபகரமானது, ஜனநாயகம் வெட்கப்பட வேண்டியது, மனித சமுதாயம் தலை

குனிய வேண்டியது. இந்தச் சம்பவத்தை வைத்துக்கொண்டு ஹரிஜன மக்களுக்காகக் காங்கிரஸ்காரர்கள் வக்காலத்து வாங்கும் வகையில் வருகிறார்கள். அவர்கள் கட்சி ஆட்சியிலிருக்கும் மாநிலத்தில், ஆந்திராவில் ஹரிஜன மாணவன் ஒருவன் பாத்திரத்தைத் திருடி விட்ட காரணத்திற்காக அவனை மரத்திலே கட்டி வைத்து நெருப்பு வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். அதே ஊரிலே பெண்களை நிர்வாணமாக வீதிகளிலே ஓட விட்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். அதே மாநிலத்திலே இன்னொரு ஹரிஜனத் தோழரைச் சுட்டிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்திலே சதாசிவம் என்ற ஹரிஜன மாணவரை நிலத்தகராறு காரணமாக போலீஸ் முன்னாலேயே சுட்டுக்கொன்று இருக்கிறார்கள். முடிசூடா மன்னர் நேரு பெருமானின் ஊரான அலஹாபாத்தில் பெண்கள் போலீசாரால் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் காங்கிரஸ்காரர்களின் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இங்கு இதற்கு வக்காலத்து வாங்குவதில் அர்த்தம் இல்லை. அதற்காக உண்மையிலேயே வருத்தப்பட்டிருக்கின்றார்கள் என்றால் அதற்காக நன்றி தெரிவிப்பேன். இன்னும் ஏழ்மை ஒழியவில்லை, தீண்டாமை ஒழியவில்லை ஏற்றத்தாழ்வு நிலவிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மு.ப. 9-30 ஏன் அப்படிப்பட்ட கொடுமைகள் நடைபெறுகின்றன என்றால், அரிஜன மக்களாகிய நாங்கள் மேலிடத்தவர்களால் பிழிந்தெடுக்கப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட வாயில்லாப் பூச்சிகளை, ஜனநாயகப் பண்போடு மனிதத் தன்மையோடு காப்பாற்ற முன் வரவேண்டும். எனது அருமை காங்கிரஸ் நண்பர்களை ஒன்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் 20 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தீர்களே எத்தனை அரிஜனங்களை முன்னுக்குக் கொண்டு வந்தீர்கள்? எத்தனை அரிஜனங்களை நீங்கள் செல்வாக்கு படைத்தவர்களாக ஆக்கியிருக்கிறீர்கள்? முன்னேறுவதற்கு எங்களுக்கு என்ன வாய்ப்பு நீங்கள் கொடுத்தீர்கள்? அப்படிப் பாதுகாப்பு கொடுக்காதிருந்ததன் காரணமாகத் தான், இப்பொழுது அடிபட்டுக் கொண்டிருக்கிறோம். இருபது ஆண்டுகள் நீங்கள் செய்த கொடுமைகளின் காரணமாகத் தான் நாங்கள் இப்படி கட்டப்பட்டிருக்கிறோம். இப்படி அரிஜனங்களுக்குக் கொடுமை அகில இந்தியாவிலும் நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை நான் துணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மீது குற்றம் கூட சுமத்த ஆசைப்படுகிறேன். இதற்கெல்லாம் காரணம் 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியிலே அரிஜனங்கள் பொருளாதார ரீதியிலே வளரவில்லை. பொருளாதாரத் துறையிலே அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. கல்வித் துறையிலே பாதுகாப்பு இல்லை. இப்படி கல்வித் துறை, பொருளாதாரத் துறை, என்று எந்தத் துறையிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாததன் காரணமாக, அவர்களுக்கு அரிஜன மக்களிடத்தில் ஒரு பிடிப்பு இல்லாத நிலையைக் காண்கிறோம். ஏனென்று கேட்பாரற்ற நிலையிலே



அரிஜனங்கள் இருக்கிறார்கள். இந்த மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன், இந்தியாவின் பல பாகங்களிலும் இப்படி அல்லல் பட்டுக்கொண்டிருக்கிற அரிஜன மக்கள் பொருளாதார ரீதியிலும், பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் வளர ஒரு திட்டத்தை வகுத்து, வீட்டு மனைகள் வழங்குவது போன்ற காரியங்களைச் செய்து அவர்களை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கவர்னர் உரையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது என்னுடைய பேச்சைத் துவங்குவதற்கு முன்னாலே ஆளும் கட்சியினருக்கு, அமைச்சரவைக்கு, பேரவைத் துணைத் தலைவர் மூலமாக ஒரு வேண்டுகோள்விட விரும்புகிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் சுதந்திரத்திற்கு அடுத்த நாள், அதாவது 16—8—1968-ம் தேதியன்று தொடங்கியது என்று நினைக்கிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் குடியரசு தினத்திற்கு முதல் நாள், அதாவது 25—1—1969 அன்று கூட்டப் பட்டது. சுதந்திர தினத்தையும் குடியரசு தினத்தையும், எங்கள் தொகுதியிலே கொண்டாட முடியாத நிலையிலே சட்டமன்றம் கூட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, ஆளும் கட்சியிலே உள்ளவர்களுக்கு அந்த இரண்டு தேசியத் திருநாட்கள் பற்றிய முக்கியத்துவம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், எங்களைப் பொறுத்தவரையிலே இந்த இரண்டு நாட்களும் மிகப் பொன்னான, புனிதமான, சிறப்பான நாட்கள். ஆகவே, இனியாவது அந்த திருநாட்களை எங்களுடைய தொகுதி மக்களுடன் கொண்டாடுகின்ற வகையில் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரை உண்மையிலே மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவோ, உற்சாகமாகவோ இல்லை.

**திரு. மு. ச. சிவசாமி** : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார் ஆளும் கட்சித் தோழர்களுக்கு தேசியத் திருநாளைப் பற்றித் தெரியாமல் இருக்கலாம் என்று முடிவு கட்டி, ஒரு கட்சித் தோழர் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அது பாண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : ஆளுநர் அவர்களுடைய உரையை முழுதும் படித்துப் பார்ப்போமானால், மத்திய அரசுக்கு எதிராகவும், இயற்கைக்கு எதிராகவும், நிதிக் குழுவுக்கு எதிராகவும், திட்டக் குழுவுக்கு எதிராகவும் புகார் பட்டியலாகத் தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்றைக்கு ஆளும் கட்சியினரின் திறமைக் குறைவினையும் முடியாத தன்மையையும் இயலாத தன்மையும் மறைத்துக்கொள்வதற்கான பதட்ட நிலையினைத் தான் என்னாலே காண முடிகிறது. இன்றைக்குத் தமிழகத்திலேயுள்ள சீர்கேடுற்ற பருவநிலை பற்றியும், போதிய மழையின்மையினைப் பற்றியும் தான் கவர்னர் உரையிலே குறிப்புகள் காணப்படு

கின்றன. நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது பருவநிலை தவறிய நேரத்திலே, ‘பாவிகள் ஆட்சியிலே இருக்கிறார்கள், பருவமழை எப்படிப் பெய்யும்’ என்று இயற்கையின் சீற்றலுக்கு எங்களை இழி சொல்லால் தாக்கினார்கள். நாங்கள் அம்மாதிரி பேசப் போவதில்லை. ஏனென்றால், புகழ்மிக்க, பாரம்பரியமிக்க கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எதையும் பொறுப்போடுதான் பேசுவோம்.

பொதுவாக, நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசாங்கம் மாநில அரசுகளுக்குக் கொடுக்கின்ற உதவியை, சம அளவிலே எந்தவித விருப்பு வெறுப்பற்ற நிலையிலே பகிர்ந்து கொடுக்கிறது. உண்மையிலே அது அரசியல் நோக்கிற்கு அப்பாற்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தமிழகத்திற்கு, மத்திய அரசு கொடுப்பதாக உறுதி அளித்திருந்த 250 கோடி ரூபாய் 201 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே, தேசிய வளர்ச்சி மன்றம் எடுத்துக்கொண்ட முடிவின் அடிப்படையிலே தான் இந்த நிதி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற அந்த தேசிய வளர்ச்சி மன்றத்தில் தமிழக அரசு ஓர் அங்கமாக இருந்துகொண்டு அங்கே எடுத்துக்கொண்ட முடிவிற்கு இங்கே வந்து குறை சொல்வது நியாயம் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பலர் மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் கொடுக்கவேண்டிய நிதியின் காலத் தவணையை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மத்திய அரசாங்கத்திற்கு, இந்திய அரசாங்கத்திற்கு, வெளிநாடுகள் கொடுத்த கடன்களின் தவணையை நீட்டித்துக் கொடுத்தால் இதையும் நீட்டித்துக் கொடுக்க முடியும் என்கின்ற உண்மையை அவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்த கூட்டத் தொடரில் சட்டம் இயற்றுகின்ற பணி அதிகமாக இல்லையென்று கூறப்பட்டிருக்கிறது. அதிகமாக இல்லை என்பதோடு குறிப்பிடத் தகுந்ததாக எதுவுமே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆங்கிலத்திலே tinkering என்று கூறுவார்களே, அதைப்போல் ஏற்கனவே உள்ள ஓட்டை உடைசல்களைத் தான் சரிப்படுத்தப் போகிறார்களே தவிர, பூச்சு வேலை போல் தான் உள்ளதே தவிர, புதிதாக சட்டம் இயற்றுவதைப்பற்றியோ, வேறு எதுவுமோ அந்த உரையில் இல்லை. ஆளுநர் அவர்களின் உரை, புதிய திட்டங்கள் கொண்டு வரவேண்டுமென்ற சிந்தனையின் வரட்சியைத் தான் காட்டுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக ஆளுநர் உரையின் மீது பேசிய ஆளும்கட்சி உறுப்பினர்கள் நாகர்கோவில் தேர்தலைப்பற்றிப் பலவாறாகப் பேசினார்கள். நாகர்கோவில் தேர்தல் முடிவு





எவ்வளவு தூரம் அவர்களை உறுத்தியிருக்கிறது என்பதை எங்களால் உணர முடிகிறது. ஆனால் பேசிய உறுப்பினர் யாராவது, டாக்டர் மத்தியாஸ் ஏன் சுதந்திராக் கட்சியின் சின்னத்திலே நிற்காமல் சுயேச்சையாகப் போட்டியிட்டார் என்பதற்கு விளக்கம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். யாரும் கொடுக்கவில்லை. நாகர்கோவில் மக்கள் மிகத் தெளிவாக தங்கள் முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். காமராஜர் தலைமையிலே எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது, காங்கிரஸின் ஜனநாயக சோஷலிஸத்திலே எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கிறது என்பதை ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் வாக்குகள் அதிகமாக அளித்து, தமிழக வரலாற்றிலே ஒரு புதிய சாதனையை செய்திருக்கிறார்கள். ஆளும் கட்சியின் பண பலம், பிரசார பலம், அதிகார பலம் அத்தனையையும் தாங்கிக்கொண்டு மிக உறுதியாக, இறுதியாக, மிக அருமையான முடிவை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை ஆளும் கட்சியினர் உணர வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடைத் தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றிருப்பார்களானால், இது அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்குக் கிடைத்த சாதனை, சாதனைக்கு கிடைத்த பரிசு என்று சொல்லியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது வேறு சமாதானம் சொல்கிறார்கள். அதைக் கேட்கும் பொழுது, குழந்தைகளுடைய நரிக் கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது. ‘சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும்’ என்ற பாணியிலே, கருத்திலே, ‘இது என்ன சாதாரண வெற்றி தானே’ என்று தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லிக்கொள்வதாலே தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்கிறார்கள். நாகர்கோவிலில் கிடைத்த வெற்றி, யாராவது ஜாதிக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்வார்களானால் ஒன்று அவர்கள் அரசியல் தெரியாதவர்களாக இருக்க வேண்டும், அல்லது அரசியலில் அரைவேக்காடுகளாக இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். காங்கிரஸ் ஏன் அங்கு வெற்றி பெற்றது, கூட்டணி சார்பிலே போட்டியிட்ட அபேட்சகர் ஏன் தோல்வியுற்றார் என்கின்ற காரணங்களை ஆளும் கட்சியினர் நன்றாக அலசி ஆராய வேண்டும். நீங்கள் என்ன என்ன வாக்குறுதி கொடுத்தீர்களோ அதைச் செய்ய தவறியிருக்கிறீர்கள், ஆகவே இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லை என்பதைத் தான் தெளிவாக இந்த தேர்தல் முடிவின்மூலம் நாகர்கோவில் மக்கள் கூறி இருக்கிறார்கள் என்பதை நன்றாக உணரவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவிலிலே போலீஸ் அடக்குமுறை தலைவிரித்தாடியது. தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னால் பத்மனாபபுரம் தொகுதியைச் சேர்ந்த தக்கலையிலே தேர்தல் பணியை நான் ஏற்றிருந்தேன். அங்கு அந்த அந்த ஊரிலே முக்கியமான காங்கிரஸ் தோழர்கள் மீது வேண்டுமென்றே பொய் வழக்குகள் போட்டு கைது செய்து கொண்டிருந்தார்கள். தேர்தலுக்கு நான்கு நாட்களுக்கு முன்னாலே தக்கலைப் பகுதியில் காங்கிரஸ் தேர்தல் காரியாலயத்தின் முன்னால் பொதுப்பணித் துறை அமைச்சர் காரிலே போய்க்

கொண்டிருந்தார். நான் அங்கு இருந்தேன். அப்பொழுது பொதுப்பணி அமைச்சர் போய்க் கொண்டிருந்தபோது இரண்டு காங்கிரஸ்காரர்களை போலீஸ்காரர்கள் கைது செய்து . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அவர்கள் என்னுடைய காரைப் பார்த்து காரித் துப்பினார்கள், கல் எறிந்தார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்**: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சற்று தொலைவிலே இருந்தேன். என்றால் நிச்சயமாகச் சொல்ல முடியும், அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இப்பொழுதுதான் தெரிகிறது. அவர்கள் ஏன் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்பது. நண்பர் அவர்கள் அங்கே இருந்திருக்கிறார்.

**திரு. என். எஸ். வி. சித்தன்**: அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாகப் பேசி விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். உண்மையிலே நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன், அவர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று. எந்த குற்றமும் செய்யாதவர்கள் கைது செய்யப்பட்டது போன்ற பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. தக்கலை காவல் நிலையத்திற்கு நான் எத்தனையோ முறை சென்றிருக்கிறேன் காங்கிரஸ் தோழர்களை விடுதலை செய்வதற்காக. என்னுடைய புகார்களை எல்லாம் விவரமாகக் கூறி இருக்கிறேன், அதிலே அவ்வளவு விவரங்களையும் கூறி இருக்கின்றேன். நாகர்கோவில் தேர்தலில் அடக்கு முறை எத்தனை பலமாக இருந்த போதிலும் அமைதியாக இருங்கள்; நல்லதோர் முடிவுகிடைக்கும் என்று எங்களுடைய தோழர்களுக்குச் சொல்லி கொண்டிருந்தோம். 'தோழர்களே, அமைதியாக இருங்கள்; வெற்றியை நாம் அடைவோம், நாம் உணர்ச்சிவசப்படக்கூடாது; உணர்ச்சி வசப்பட்டால், தேர்தலின்போது பல சூழ்நிலைகள் ஏற்படும்: காந்திய வழியில் வந்தவர்கள் நாம், ஜனநாயகப்பண்பாட்டில் வந்தவர்கள் நாம், ஜனநாயக வழியைக் கடைப்பிடிக்கவேண்டும். அமையாக இருங்கள்' என்று சொல்லிக்கொண்டிருந்தோம்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் அரசியல் பிரச்சினையை மையமாக வைத்து ஆட்சிக்கு வந்தவர்கள். உணவு இலாகாவிலே பல ஊழல்கள் நடந்துவருகின்றன. தமிழகத்தில் ஏனைய இலாகாக்களில் நடந்துவரக்கூடிய ஊழல்களுக்கெல்லாம் சவால் விடுவது போல் இந்த ஊழல்கள் அமைந்திருக்கின்றன. பத்திரிகைகளை புரட்டிப் பார்த்தால் உணவு இலாகாவில் பல இடங்களில் மோசடிகள் நடந்திருப்பதைக் காணலாம். தொடர்கதையைப் போல மோசடியைப்பற்றிய செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. செங்கற்பட்டில், பட்டாம்பியில் அண்மையில் ஆயிரக்கணக்கான சீனி மூட்டைகள், அரிசி மூட்டைகள் காணமல் போயிருக்கின்றன. வட ஆர்க்காடு பஞ்சப் பிரதேசம் என்று சொல்லப்பட்டு, அங்கே விநியோகத்திற்காகக் கொடுக்கப்பட்ட மைதா அங்கு போய்ச் சேராமல் சென்னையிலே விற்பனை ஆகியிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூருக்குப் போகவேண்டிய 75 சீனி மூட்டைகள் ஸ்ரீவில்லிப்புத்தூருக்குப் போகாமல் மதுரையிலேயே விற்கப்பட்டிருக்கின்றன. இப்படி அரிசி மூட்டைகள், சீனி மூட்டைகள் மோசடி செய்யப்பட்டிருக்கின்றன. மதுரையில் உணவு கிடங்கில் பெரிய மோசடி நடந்திருக்கிறது. பத்திரிகையிலே அதைப்பற்றி செய்தி வந்திருக்கிறது. அரசாங்க வங்கியில் செலான் மூலம் பணத்தைச் செலுத்தியபிறகு தான் மூட்டை டெலிவரி கொடுப்பார்கள். அங்கே ஸ்டேட் பாங்கு செலானை போலியாக தயார்செய்து, அந்தப் போலிச் செலானை வைத்து பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான அரசாங்கத்திற்குச் சொந்தமான அரிசி, சீனி மூட்டைகள் மோசடியாக எடுத்துக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன.





**திரு. பெ. மலைச்சாமி**: மதுரையில் நடந்த மோசடியைப்பற்றி நண்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது காங்கிரஸ்காரர்கள் காலத்திலிருந்தே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அதை திராவிட முன்னேற்றக் கழக அரசு கண்டு பிடித்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM: The allegations are false. If he wants any point of information, he must wait till this gentleman has finished and then he could speak. It is not proper to interrupt like this.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: கடைசிவரையில் காத்திருக்க வேண்டுமென்பதில்லை. பேச்சின் நடுவிலும் கேட்பதற்கு வழி இருக்கிறது. பேச்சு முடிந்த பிற்பாடுதான் கேட்க வேண்டும் என்பதல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன்**: பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான, அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருள்கள் மோசடி செய்யப்பட்டிருக்கின்றன. இது ஒரு நாள், இரண்டு நாள், அல்லது ஒரு வாரமாக நடக்கவில்லை, பல மாதங்களாகத் தொடர்ந்து நடந்துகொண்டு வந்திருக்கிறது. அரசாங்கம் கண்டு பிடித்தது என்றால், நடந்துபோகிறவர் காரில் போகிறார், குச்சு வீட்டிலிருந்தவர் மச்சு வீட்டில் குடிபுகுந்திருக்கிறார், இது எப்படி என்று பொது மக்கள் சந்தேகப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்ததற்குப் பின்னால் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊழல்கள் பல நாட்களாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. பல மாதங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. பல லட்சக் கணக்கான ரூபாய்கள் பெறுமான அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருள்கள் மோசடி செய்யப்பட்டு காணாமல் போயிருக்கின்றன. குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், நிச்சயம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படவேண்டும். இதில் சாக்தாமதம் கூடாது. கணக்குகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, நாட்களைத் தள்ளிப்போடுவது சரியல்ல.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: விவரம் புரியாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள். இவ்வளவு நேரம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சீனி மூட்டைகளைக்காணோம், மற்ற இடங்களில் காணோம் என்றெல்லாம் பொதுப்படையாகப் பேசுவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற, மன்ற உறுப்பினருக்கு இருக்கிற, உரிமையைச் சரியாகப் பயன்படுத்தியது ஆகாது. உண்மையாகவே ஊழல்கள், தவறுகள் நடந்திருந்தால், அதைச் சொல்வதற்கு உறுப்பினர்களுக்குக் கண்டிப்பாக உரிமை உண்டு. அந்த உரிமையில் நான் தலையிடமாட்டேன், ஆனால், ஏதோ ஒட்டு மொத்தமாகப்பேசுவது வெளியிலே மைதானத்திலே பேசுவதற்கும், சாக்கடைப் பத்திரிகைகளுக்கும் பயன்படுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நான் உறுப்பினர்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். எந்த விமர்சனத்தையும் அரசாங்கம் வரவேற்கிறது. ஊழல்கள் கூட நடைபெறலாம், தவறுகள் நடைபெறலாம், நடைபெறாது என்பதல்ல. ஆனால் அதிலே அரசாங்கம் எப்படி நடந்து கொண்டது, என்ன நடந்தது, அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன என்பதைச் சொல்லவேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலோட்டமாகப் பேசக்கூடாது. இங்கே பேசும்போதுகூட, குற்றம் இருந்தால் அதை எடுத்துச் சொல்லலாம். உறுப்பினர் அவர்களுக்கு விவரங்கள் தெரியும். விவரங்கள் தெரிந்தும்கூட, இப்படிப் பேசவேண்டும் என்பதற்காகப் பேசுகிறார்கள். மதுரைக்கு அருகே பழங்காநத்தத்தில் சில மோசடிகள் நடைபெற்று, பொய்யான செலான்களை வைத்து மோசடியாகச் செய்யப்பட்ட சில காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக ஒரு போலீஸ் அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அதைப்பற்றி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இது சம்பந்தமாக இரண்டு ஜூனியர் அக்கௌண்ட்ஸ் ஆபீசர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதேமாதிரியாக மற்றும் பழங்காநத்தத்தில் பணிபுரிந்த தாசில்தார், மற்றும் சில அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், பழங்காநத்தத்திலுள்ள எல்லா அதிகாரிகளும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதோடு மாத்திரமல்ல. இந்த ஊழல்களுக்கு மிக முக்கியமாகப் பொறுப்பானவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால் நண்பர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்). நீண்ட நாட்களுக்கு முன்னால் நியமிக்கப்பட்டிருக்கிற 40, 50 ரேஷன் கடைக்காரர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சந்தேகம் இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுடைய லைசென்சுகள் ரத்து செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காரியங்கள் சம்பந்தப்பட்டவரையில், அரசாங்க அதிகாரியாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலைப்படாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளைப்பற்றிப் பத்திரிகையில் செய்திகள் வந்திருக்கின்றன. ஏதோ அரசாங்கம் இப்படிச் செய்துவிட்டது. அப்படிச் செய்துவிட்டது, இங்கே மோசடி நடந்துவிட்டது, அங்கே நடந்துவிட்டது என்று ஒட்டு மொத்தமாகப் பேசுவது முறையாகாது. அது சம்பந்தமான விவரங்கள் இருக்கின்றன. அதற்கு மேற்கொண்டு விவரங்கள் இந்த மன்றத்தில் அறிவிக்கப்படும். ஆகவே, அரசாங்கம் இப்படிச் செய்து விட்டது, இதைக் கவனிக்கவில்லை என்றெல்லாம் மேலோட்டமாகப் பேசுவது முறையானது அல்ல. பொதுப்படையாக, ஒட்டு மொத்தமாகச் சொல்வது நல்லது அல்ல. விவரங்கள் சொல்ல வேண்டும். இந்த அளவுக்கு விவரங்கள் இருக்கின்றன, இந்த அளவுக்கு அரசாங்கம் இதைச் செய்யத் தவறிவிட்டது என்று விவரங்களோடு குறிப்பிட்டுச் சொல்வதுதான் முறையே தவிர, ஒட்டுமொத்தமாக லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருள்களை மோசடி செய்துவிட்டார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. சீனி மூட்டைகளைக் காணோம், அரிசி மூட்டைகளைக் காணோம் என்று பொதுப்படையாகச் சொல்வது சரியல்ல. அதற்காக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற உரிமையைக் கண்டிப்பாக மறுக்கவில்லை. யாராக இருந்தாலும் சரி, அரசாங்க அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாருக்கும் தாட்சண்யம் காட்டவேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் தன்னுடைய கடமையை, பொறுப்பை பாரபட்சம் இல்லாமல் சரிவரச் செய்யும். பழங்காநத்தத்தில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதில் சில அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்; கிடங்கிலுள்ளவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்; ரேஷன்கடைக்காரர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். அதற்கான நடவடிக்கைகள் முதலிலேயே எடுக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஒரு தனி போலீஸ் அதிகாரி நியமிக்கப்பட்டு, புலன் ஆய்வு நடந்துக்கொண்டிருக்கிறது. இடைக்கால நடவடிக்கையாக, அங்குள்ள கிடங்கு அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். கணக்குப் பார்க்கிற ஜூனியர் அக்கௌண்ட்ஸ் ஆபீசர்கள் இரண்டு பேர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விவரங்கள் தெரியும். விவரங்கள் தெரிந்திருந்தும், அதை மறைத்து, அரசாங்கத்தைப்பற்றிக் குறை கூறவேண்டும், ஏதோ ஒரு பெரிய காரியம் நடைபெற்று விட்டது போல வெளியிலே ஒரு அபிப்பிராயத்தை உண்டுபண்ணவேண்டும் என்ற நோக்கத்தோடு பேசுவது சரியானது அல்ல. இது மாலைநேர பத்திரிகை விளம்பரத்திற்கு வேண்டுமானால் பயன் படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. பி. ஜி. கருத்திருமன்**: எங்கள் கட்சி அங்கத்தினர் பேசியது குறித்து அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டு பதில் சொன்னார். இதிலிருந்தே அதில் எவ்வளவு விவரங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விவரம் புரியாமல் எங்கள் கட்சி அங்கத்தினர் பேசுகிறார் என்றால், அதற்கு இவ்வளவு நேரம் விவரம் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது.

அடுத்து, எங்கள் கட்சி அங்கத்தினர் இம்மாதிரி பேசுவது ஏதோ மாலைநேரப் பத்திரிகை விளம்பரத்திற்காக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார். அம்மாதிரி விளம்பரத்திற்காகப் பேசுவதெல்லாம் அவர்கள் பாரம்பரியம் தான். மாலைப் பத்திரிகை விளம்பரத்திற்காக நாங்கள் இங்கே பேச வரவில்லை. மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் இங்கே பேசுகிறோம். மோசடி நடந்திருக்கிறது என்றால், அதைக் கண்டு பிடிப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு யோக்கியதை இல்லை, சக்தி இல்லை என்ற குற்றச் சாட்டைத்தான் இங்கே சாட்டுகிறோம். விவரம் புரியாமல் ஒன்றும் பேசவில்லை. அப்படி விவரம் புரியாமல் எங்கள் கட்சி அங்கத்தினர் பேசியிருக்கிறார் என்றால், அதற்கு அமைச்சர் அவர்கள் இவ்வளவு நீண்ட நேரம் பதில் சொல்வது தான் வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் மாலைப் பத்திரிகையில், அரசாங்கம் இப்படி பதில் சொல்லியிருக்கிறது என்று விளம்பரம் வருவதற்காகத் தான் இவ்வளவு நேரம் பேசினார்களோ, என்னவோ, விளம்பரம் இல்லாமல் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்த மோசடி பல நாட்களாக நடந்து வந்திருக்கிறது. நான் மேலெழுந்த வாரியாகச் சொல்ல வந்தேன். அமைச்சர் உள்ளே புகுந்து ரேஷன் கடைக்காரர்களையும் இழுத்து விட்டிருக்கிறார்கள். அதிலே, அதிகாரிகள், வியாபாரிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, வட்டச் செயலாளர், தரகராக இருந்தவரும் சேர்ந்திருக்கிறார்கள். அமைச்சர்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உறுப்பினர் வட்டச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நிரூபிக்க முடியுமா ? நிரூபிக்க வேண்டும் என்கின்ற அறைகூவலை ஏற்றுக் கொள்கிறார்களா ?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** வட்டச்செயலாளர் என்று சொல்லவில்லை. வட்டச் செயலாளர் நிலையில் உள்ளவர் என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 'நிலையில் உள்ளவர்' என்று நிலையில்லாமல் பேசுகிறார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அவையில் குற்றச் சாட்டுகளைக் கூறும்போது, பேசுகின்ற உறுப்பினர் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டும் நேரத்தில், தெளிவாக இன்னார், இன்னின்ன அளவில் இன்னின்ன குற்றம் புரிந்தார் என்று கூறினால், அதை நிரூபிக்கும் பொறுப்பை





யும் ஏற்றுக் கொண்டால், அது சரியாக இருக்கும். அப்படி யில்லாமல், குற்றச்சாட்டை மட்டும் சொல்வது என்பது முறை யாகாது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்த மோசடியில் சம்பந்தப் பட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதில் பொது மக்கள் யாருக்கும் ஐயமில்லை. நான் சரியாக, நிலையாகவேதான் சொல்லுகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவ ரானாலும், அப்படிப்பட்டவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். காலந்தாழ்த்துவதால், பொது மக்களுடைய கண்களி லிருந்து தப்ப முடியாது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உதவி சபாநாயகர் அவர்களே, முதலிலே வட்டச் செயலாளர் என்று சொன்னார். இப்பொழுது சேர்ந்தவர் என்று சொல்கிறார். ஒரு ஊழல் நடந் திருக்கிறது. அதிலே சில பேர் குற்றவாளிகள் இருக்கிறார்கள். தவறுதலாக, மதுரையைச் சேர்ந்த ஒரு நபர் கழகத்தைச் சேர்ந்தவர் என்று இதில் சம்மந்தப்படுத்திச் சொன்னார்கள். ஆனால், பிற்பாடு கைது செய்யப்பட்டு, விசாரணையின்போது, அந்த நபர் முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட இல்லை என்று தலைமைச் செயலகத்திலிருந்தும் விளங்குகிறது. அதற்குப் பிறகும், அந்த வட்டாரத்தில் அரசியல் வர்மம் தீட்டுவதற்காக, ஒரு அரசியல் கட்சியின் பேரில் அபவாதம் சுமத்த வேண்டும் என்று செய்யப்பட்ட காரியம். திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் வெளியிலே வைத்துக் கொண்டால், அவரவர் பொறுப்பேற்றுக் கொண்டு பேசுவார்கள். முதலிலே திராவிட முன்னேற்றக் கழக வட்டச் செயலாளர் என்று சொன்னார்கள். அதை நிரூபிக்க வேண்டும் என்றதும், அந்த நிலையில் உள்ளவர் என்று சொல்கிறார்கள். மதுரை வட்டாரத்தில் அரசியல் வர்மம் தீட்ட என்று இப்படிப் பட்ட கெட்ட காரியத்தில் முனைந்திருப்பவர்களுடைய கெட்ட முயற்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், அந்த வலையில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றுதான் சொல்லுவேன். யாராக இருந்தாலும், முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வரானாலும், தவறு செய்தால் தப்ப முடியாது. இதெல்லாம் கட்சி ரீதியில் நடப்பது அல்ல. யாராக இருந்தாலும், இந்த சர்க்கார் அப்படிப்பட்டவரைத் தண்டிக்கத் தயங்காது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால், குறிப்பிடப்பட்ட நபர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே சம்பந்தம் இல்லாதவர். கோளாறுகள் நடந்திருக்கின்றன. சில அதிகாரிகளும், ரேஷன் கடைக்காரர் களும், லாப நோக்கோடு வேலை செய்த சமூக விரோதிகளும் சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு காரியம் இது. இவற்றையெல்லாம் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சம்பந்தம் ஏற்படுத்தினால் ஏதோ லாபம் கிடைக்கும் என்று கருது வதானால், முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும். இப்பொழுதே, இங்கேயே நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால், அப்படிச் சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும். அல்லது, இதை 'பிரிவிலேஜ்

கமிட்டிக்கு' அனுப்ப வேண்டிய காரியமாக இருக்கும். சட்டப் படி அமைந்த ஒரு அரசாங்கத்தின் மீது குறை கூறுவதானால், அவர்களுடைய கௌரவத்திற்கு ஹானி விளைவிப்பதானால், அப்படிப்பட்ட காரியத்தை நிரூபிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிவிட்டு, பொது மக்கள் கருத்தில் ஒரு தவறான எண்ணம் ஏற்படவேண்டும் என்று, முதலில் வட்டச் செயலாளர் என்று ஆரம்பித்து, அதற்குப் பிறகு அந்த நிலையில் உள்ளவர் என்று மாற்றிக் கொண்டு, பேசுவதானால் அது சரியாக இருக்காது. குற்றத்தைச் சொன்னால் அதை நிரூபிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படி நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னதற்கே அமைச்சர்கள் இவ்வளவு கோபிக்கிறார்கள், உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்கிறார்கள். 1967-ம் ஆண்டிலிருந்து எதற்கெடுத்தாலும் காங்கிரஸ்காரர்கள் அதைச் செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்று சொல்லுகிறார்களே, அதற்கெல்லாம் எவ்வளவு உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டியிருக்கும்? எவ்வளவு உரிமைப் பிரச்சினைகள் இருக்கும்? காங்கிரஸ்காரர்கள் முன்னால் செய்தார்கள், முன்னால் செய்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் இவர்களால் நிரூபிக்க முடியுமா? சட்டசபையில் பேசும்போது, உறுப்பினர்கள், தெரிந்த விவரங்களை வைத்துக் கொண்டு கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றிச் சொன்னால், அதை நிரூபிக்க வேண்டியதுதான். அதே சமயத்தில், பொதுவாகச் சொல்லும் போது, அவர்களுக்கும் பதில் சொல்ல உரிமை இருக்கிறது. இரண்டையும் வைத்து பொதுமக்கள் தீர்மானம் செய்து கொள்வார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வெகு பரிசுத்தமானது என்றும், அதை நாங்கள் கெடுத்துவிட்டோம் என்றும் சொல்லுவதானால், அப்படிப்பட்ட உரிமையை எல்லோருக்கும் வழங்க வேண்டியிருக்கும். அல்லது யாருமே எந்த வகையான குற்றத்தையும் சொல்லக் கூடாது என்று இருக்கவேண்டும். அந்த உரிமை எல்லோருக்கும் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மன்றத்தில் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, பொதுவாக இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று சொல்லுவது குற்றம் ஆகாது. ஆனால், ஒரு தனி நபரைப் பற்றிக் குறிப்பிட்டால், அவர் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லும்போது, அதை மறுத்து அமைச்சர், அவர் இந்தக் கட்சிக்காரர் இல்லை, தலைமைக் குழுவிலிருந்து தெரிந்து, உறுப்பினர் கூட அல்ல என்று சொல்லும் போது, அதைச் சொல்வது முறையாகாது. அமைச்சர் அவர்கள் விசாரித்த பிறகு அவர் குழு உறுப்பினர் கூட இல்லை என்று சொன்னதற்கும் பிறகு, உறுப்பினர் அந்த நிலையில் உள்ளவர் என்று மீண்டும் சொல்வதென்பது அவ்வளவு முறையாக இருக்காது.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நண்பர் மலைச்சாமி, காங்கிரஸ்காரர் செய்தது என்று கூறவில்லை; காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் நடைபெற்றதை, இந்த ஆட்சி கண்டுபிடித்தது என்று தான் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) அதைப்பற்றி விவாதத்தில் இறங்க விரும்பவில்லை. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த வழக்கிலே, நடராஜன் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று காங்கிரஸ் பத்திரிகையில் வந்தது—அதைக் காங்கிரஸ் பத்திரிகை என்றுகூட ஒப்புக் கொள்ள மாட்டார்களோ என்னவோ, அப்படிப்பட்ட பத்திரிகையில் நடராஜன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று வெளியிட்டிருந்தது. தி.மு.க. உறுப்பினரா என்று பார்த்து, அவர் கழகத்தையே சேர்ந்தவர் இல்லை என்று உணவு அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள் வாதப்படியே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அதற்காக அவரை விட்டு விடவில்லை. அவரும் வழக்கிலே இணைக்கப்பட்டிருக்கிறார். குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்ல வேண்டும், கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்திற்குச் சென்று பதில் சொல்லும் நிலையில்தான் இருக்கிறார். முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று வைத்துக் கொண்டாலும், நடராஜன் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர் தவறு செய்தால்கூட, தாட்சண்யத்தோடு வைத்திருக்கிறோம். ஆனால்; (குறுக்கீடு) குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஒரு சட்டமன்ற உறுப்பினர், எம்.எல்.ஏ., கூட்டுறவு சங்கத்தில் சம்பந்தப்பட்டவர், அவர்மீது வழக்கு இருக்கிறது. ஆனாலும் தாட்சண்யத்திற்காக விட்டு வைத்திருக்கிறோம் என்பதை மட்டும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். (ஆரவாரம்)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது காங்கிரஸ்காரர்களுக்கு ஏதோ சலுகை காட்டுவதாகச் சொன்னார்கள். எந்தக் குற்றமாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கட்டும், நாங்கள் தயார். தைரியம் இருந்தால், எந்தக் காங்கிரஸ்காரராக இருந்தாலும், எந்த நடவடிக்கை எடுத்தாலும், எதற்கும் தயாராக இருக்கிறோம். தயவுசெய்து, இவர்கள் தயவிலே, இவர்கள் பெருந்தன்மையிலே, இருக்கிறோம் என்று சொல்ல வேண்டாம். தைரியம் இருந்தால், எந்த கேஸ் வேண்டுமானாலும், யார்மேல் வேண்டுமானாலும், போட்டுக் கொள்ளட்டும். அதன் விளைவுகளை ஏற்கத் தயாராக இருக்கிறோம். இந்த தர்மப் பிரபுக்கள் ஆட்சியில், அக்கிரமம் செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டால், இது நேர்மையான ஆட்சியாக இருந்தால், அது கோர்ட்டிலே தீர்க்கப்படட்டும்; தீர்ப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

* **திரு. பி. துரைராஜ் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் மு.ப. 10-00 அவர்களே, இந்த மாமன்றத்தில் 25—1—1969-ம் தேதியன்று மேன்மைதங்கிய தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய

சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக நன்றிகூறி ஆரம்பிக்கின்றேன். தமிழக முதல்வரும் ஒப்பற்ற தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலக் குறைவினால் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். விரைவில் அவருடைய உடல்நலம் பூரணமாகக் குணமடைந்து நாட்டுப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று தமிழகத்திலுள்ள நான்கு கோடிமக்களும் வாழ்த்துகிறார்கள். அவர்களோடு சேர்ந்து நானும் என்னுடைய வாழ்த்துக்களை அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேன்மைதங்கிய ஆளுநர் அவர்கள் இந்த ஆண்டு ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாகும். நம்முடைய தாய் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். கடந்த இருபதாண்டுக் காலமாக 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க முடியாத நிலை காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்த நிலையை மாற்றி 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்ததை நல்லவர்கள் யாவரும் வரவேற்கிறார்கள்.

அடுத்தபடியாக, இங்கு பேசிய காங்கிரஸ் நண்பர்கள், "நாட்டிலே தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது எல்லாவற்றுக்கும் கழக ஆட்சி தான் காரணம்" என்று கூறினார்கள். ஆளுநர் அவர்களுடைய உரையிலே உள்ள வாசகத்தைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று காங்கிரஸ் அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ்நாட்டிற்கு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்பதை முதலில் ஒப்புக்கொண்டு, தற்போது அந்தத் தொகையில் சுமார் 49 கோடி ரூபாய் அளவை வெட்டி, 201 கோடி ரூபாய்க்குத்தான் ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து கிடைத்திருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு எந்தக் காங்கிரஸ் அங்கத்தினராவது வருத்தம் தெரிவித்து, 'இந்த நிலை கூடாது; முதலில் ஒதுக்கிய 250 கோடி ரூபாய் தான் அளிக்க வேண்டும்' என்று கேட்டதுண்டா ? அப்படி காங்கிரஸ் நண்பர்கள் கேட்டிருந்தால் நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் படி அரிசி கேட்கக்கூடிய நண்பர்கள் 1967-இல் 'பிடி அரிசி' யாவது போடக்கூடிய நிலையில் நாட்டை கழக அரசிடம் ஒப்படைத்தார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர் விவசாயத்திலே பல முன்னேற்றங்களைச் செய்திருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான பொறுக்கு விதைகள், உரம் போன்றவைகளைத் தேவையான நேரத்தில் கொடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு அதே நேரத்தில் உணவு விநியோகத்தைச் சீரான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் நண்பர்கள் கழக ஆட்சியை எதிர்க்கவேண்டும், குறைகூற வேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த விவசாயியாவது உரம் கிடைக்கவில்லை, விதைகள் கிடைக்கவில்லை என்று கூறியது



உண்டா ? அப்படி விவசாயிகள் யாராவது கூறினார்கள் என்று சொல்லமுடியுமா ? இன்றைய தினம் விவசாயிகள் உணவுப் பிரச்சினையாலும், மற்ற எந்தப் பிரச்சினையாலும் மனநிம்மதியோடு இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, சட்டம், ஒழுங்கு போன்றவை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இல்லையென்று கூறினார்கள். காங்கிரஸ் ஆட்சியில் எத்தகைய கோர சம்பவங்கள் நடந்தன என்பதை நாட்டு மக்கள் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள். நாகர்கோயில் தேர்தலில் காமராஜர் பெற்ற வெற்றியைப்பற்றி வானளாவப் பேசிவருகிறார்கள். நாகர்கோயில் தேர்தல் பணியில் ஈடுபட்டவன் என்ற முறையில் நான் சிலவற்றைச்சொல்ல விரும்புகிறேன். நாகர்கோயில் தேர்தலில் ஜாதிவெறி, பண பலம் காங்கிரஸ்காரர்களால் பயன்படுத்தப்பட்டது. ஜாதி வெறியினால் தான் காமராஜர் அவர்கள் வெற்றி பெற்றார்கள். கழகத் தோழர் திரு. கிட்டுவின் சமாதியின்மீதுதான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். காங்கிரஸ் உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது, 'காங்கிரஸ்காரர்களே, நீங்கள் தாக்கப்பட்டாலும், அடிக்கப்பட்டாலும் பொறுமையோடு இருங்கள்' என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து அறிக்கைகள் விடப்பட்டன என்று கூறினார். அவர் கூறியபடி எந்த மாதிரியான அறிக்கையையும் நான் பார்க்கவில்லை, பத்திரிகைகளிலும் வரவில்லை. ஆனால் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கூட்டத்தில் 'காங்கிரஸ் தொண்டர்களே, பயப்படாதீர்கள். துணிந்து செயலாற்றுங்கள். மத்திய போலீஸ் நாகர்கோயிலுக்கு வந்துவிட்டது' என்று பேசினார்கள். இதுபற்றி அடுத்தநாள் தமிழக ஐ.ஜி. திரு. மகாதேவன் அவர்கள், 'மத்திய போலீஸ் எதுவும் நாகர்கோயிலில் வரவில்லை' என்று மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். பின்னர் கழகத் தோழர் கிட்டு அவர்கள் கொல்லப்பட்டார். காங்கிரஸ் கட்சியிலே நீண்ட நாள் தலைவராக இருக்கக் கூடிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய போலீஸ் வந்துவிட்டது என்று பேசலாமா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : அங்கத்தினர் கூறுகிற மாதிரி அல்ல. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியிலேயிருந்து சி.ஐ.டி; வந்து தேர்தலைக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னார்களே தவிர, மத்திய போலீசை வைத்து தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லவில்லை. நானே நேரில் அவருடன் இதுபற்றிப் பேசியிருக்கிறேன். ஐ.ஜி. சொன்னதற்குப் பிறகும் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சி.ஐ.டி. வர வேண்டுமென்று சொன்னார்கள் மத்தியிலிருந்து சி.ஐ.டி. போலீஸ் வந்தது, அவர்கள் ரிப்போர்ட்டும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் என்ன என்பதை இந்தச் சபையில் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நாகர்கோயில் தேர்தல் நேரத்தில், தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த நேரத்தில், நாகர்கோயில் தேர்தலுக்கு மத்திய போலீஸ் வந்துவிட்டது என்று கூறியது

பத்திரிகைகளில் எல்லாம் வந்தன. அப்படி பத்திரிகைகளில் வந்தவுடன் சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அதை மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் பிறகு 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று எந்தவிதமான மறுப்பு அறிக்கையும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரிடமிருந்து வரவில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் எனக்குத் தொடர்பு அதிகம். அவர் என்ன கூறினார் என்று எனக்குத் தெரியும். சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் வரும்படியான நிலைமை இருக்கிறது என்று கூறினார். நாகர்கோயில் தேர்தலுக்கு சென்ட்ரல் சி.ஐ.டி. வந்தது உண்மை. அவர்கள் டெல்லிக்கு ரிப்போர்ட் அனுப்பியது உண்மை. அந்த ரிப்போர்ட்டை—இந்தச் சர்க்கார் பெற்று இந்தச் சபை முன் வைப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் வரவில்லை, சென்ட்ரல் சி.ஐ.டி. வந்ததாகச் சொல்கிறார்கள். சென்ட்ரல் சி.ஐ.டி. நாடு முழுவதும் இருக்கிறது. தேர்தலுக்காகத் தான் நாகர்கோயிலுக்குத் திடீரென்று வந்ததாகச் சொல்லக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர் அவர்கள் நாடு முழுவதும் சி.ஐ.டி. இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே இருக்கும் சி.ஐ.டி.-யைவிட சென்ட்ரல் சி.ஐ.டி. வந்திருக்கிறது. சென்ட்ரெல் டி.ஐ.ஜி. அவர்களும் டெல்லியிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஆதார பூர்வமாகச் சொல்கிறேன். இது ஏதோ மாமூலாக நடந்தது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சி.ஐ.டி. தனியாக வருவது இல்லை. நாடு முழுவதும் இருக்கிறது.Central Reserve Police has been constituted under a separate Act. If they want to come, they must get permission; otherwise, there mdst bs a breakdown of the Constitution. தேர்தலுக்காகத்தான் சி.ஐ.டி. தனியாக வந்தது என்று சொல்வது இதற்குப் பொருந்தாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சி.ஐ.டி.-யிலும் பெருந்தலைவர்கள் வந்தார்கள். அவர்கள் இவர்களுடைய திருவிளையாடல்களையெல்லாம் கண்காணித்திருக்கிறார்கள்.

**திரு. பி. துரைராஜ்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சி.ஐ.டி. வந்ததாகச் சொன்னார்கள். பத்திரிகைகளில் எல்லாம் மத்திய போலீஸ் வந்துவிட்டது என்ற செய்திகள் வந்தன. இதற்குப் பின்னர்தான் கழகத் தோழர் சிட்டுவின் கொலை அங்கு நடத்தப் பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் தோழர் திரு. சித்தன் அவர்கள், 'காங்கிரஸ்காரர்களே, கழகத் தோழர்கள் அடித்தாலும் பொறுத்துக்கொள்ளுங்கள்' என்று



அறிக்கை விட்டதாகச் சொன்னார்களே, அதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன். பெருந்தலைவர்கள் எல்லாம் மிகவும் நாணயமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் கீழ்வெண்மணி கிராமத்தில் 44 ஹரிஜனங்கள் கருகிச் செத்த கோரச் சம்பவத்தைக் கண்டு இன்று தமிழகமே கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நிம்மதியாக வாழ முடியாது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் வெண்மணி சம்பவம் திட்டமிட்ட சம்பவம் என்று பல உறுப்பினர்கள் பேசினார்கள். அது உண்மையாகாது. ஏனென்றால் வெண்மணி கிராமத்தில் திடீரென்று ஏற்பட்ட சச்சரவின் காரணமாக ஏற்பட்ட நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—பெரிய மிராசுதாரர்களாக இருந்தாலும் அவர்களை இந்த அரசு சும்மா விடாது. போலீஸ் கொட்டகைக்குள் வைத்திருப்பதை நாம் அறிவோம். அந்த அளவுக்கு இந்தச் சர்க்கார் அவ் விஷயத்தில் அக்கறை கொண்டிருக்கிறது. அரிசன மக்கள் விஷயத்தில் அனுதாபம் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் பேசும்போது எங்கள் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை, அதற்கு அரசாங்கம் தான் பொறுப்பு என்று குற்றம் சாட்டினார்கள். இது அரசாங்கத்தினால் ஏற்பட்ட விளைவு அல்ல. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் தான் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தின் மூலம் எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் தங்களுடைய பொதுநிதியில் இருந்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் பொதுநிதியைக் கண்டபடி செலவு செய்துவிட்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட வசதியற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. ஆயினும் அரசு இதுபற்றி ஆராய்ந்து இரண்டு தினங்களுக்கு முன்னால் கடன் என்ற முறையில் பணம் கொடுத்து ஆசிரியர்களுக்கு 1-ஆம் தேதியன்று சம்பளம் கிடைக்கச் செய்ய ஏற்பாடு செய்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, திருநல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில் வட்டாரத்தில் பருவ மழை பொய்த்துவிட்டது. அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் என்றைக்கும் பின்னடைந்த நிலையில் உள்ள மக்கள். நெல் பயிர் தீய்ந்துபோய்விட்டன. குடிக்கக்கூடத் தண்ணீர் இன்றி வறண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

ஆகவே, அந்த சங்கரன்கோயில் பிரதேசத்தில் குடிதண்ணீர் கிணறுகளையும், பாசனக் கிணறுகளையும் ஆழப்படுத்த மானிய உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அப் பகுதியினருக்கு வரிவஜா செய்ய வேண்டும் என்றும், கடன் வசூல்களை ஒத்திவைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். பெருமாள்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேச வந்திருக்கும் நான் அந்த உரையின் மீது ஏற்கனவே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்களை முழுவதுமாகக் கவனிக்க முடியாவிட்டாலும் கூட, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடைய பேச்சுக்களை பெரும்பாலும் கேட்டுக் கொண்டிருந்தேன். அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு என்றெல்லாம் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் அந்த அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு என்பதற்கு சரியான பொருள் என்ன என்பதை விளங்கிக்கொள்ளவில்லை. அவற்றுக்குச் சரியான விளக்கம் இன்றைக்குத் தான் கிடைத்தது. நாகர்கோயில் தேர்தலில் நடந்துக் கொண்ட முறை, அந்த முறையைப்பற்றி அவர்கள் பிரச்சாரம் செய்த தன்மை, எப்படி அக்கிரமங்கள் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு செயல்பட்டார்கள் என்பது எல்லாம் காங்கிரஸ்காரர்களுடைய நெஞ்சுக்குத் தெரியும். ஜனநாயகத்தைப் பற்றி மேடைக்கு மேடை பேசுகிறார்கள். அதைக் காப்பதுதான் எங்கள் குறிக்கோள் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். அதே நேரத்தில் ஜனநாயகத்தை எப்படிக் கொலை செய்தார்கள் நாகர்கோயிலில் என்பது எல்லோருக்கும் தெரியும். எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் ஆல்டி அருணா அவர்கள் பேசிய நேரத்தில் நாகர்கோவில் தேர்தலை குருக்ஷேத்திரப் போர் என்று வருணித்தார்கள். குருக்ஷேத்திரப் போர் என்று வருணித்தவுடனேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'அதில் தர்மம் வென்றது' அதுபோலவே நாகர்கோவில் இடைத் தேர்தலிலும் தர்மம் வெற்றிபெற்றது என்று விளக்க உரை தந்தார்கள். அங்கே நடைபெற்றது குருக்ஷேத்திரப் போர். அதுவும் குருக்ஷேத்திரப் போரில் ஒரு முக்கியமான கட்டம். நெஞ்சைத் திடுக்கிட வைக்கும் அபிமன்யூ வதம். அர்ஜுனன் இல்லாத நேரத்தில் சக்ரவாளம் என்ற சங்கடமான வ்யூகத்தை வைத்து அபிமன்யூவைக் கொலை செய்ய திட்டமிட்டார்கள். அர்ச்சுனன் இல்லாத நேரம் பார்த்து அதைப் பிரயோகமும் செய்தார்கள். அபிமன்யூ கர்ப்பத்தில் இருந்த போதே அந்த வ்யூகத்திற்குள் நுழைவதை அறிந்திருந்தான். வெளிவரும் மந்திரம் அவனுக்குத் தெரியாது. ஆயினும் அந்த சக்ர வ்யூகத்திற்குள் நுழைந்து பகைவர்களைப் படுநாசப்படுத்தி எப்படியோ வெளியே வந்துவிட்ட நேரத்தில் தான் அவனை பின்னால் இருந்த கதையினால் தாக்கிக் கொலை செய்தார்கள். குருக்ஷேத்திரப்போரில் அபிமன்யூவை எப்படி யுத்த தர்மங்களுக்கு விரோதமாகக் கொன்று வெற்றி கண்டார்களோ அதுபோலத் தான் நாகர்கோவில் தேர்தலிலும் ஜனநாயகத்திற்கு விரோதமாக அடிப்படை அரசியல் தர்மங்களை எல்லாம் கொன்று வெற்றி



பெற்றார்கள் காங்கிரஸ்காரர்கள். ஆயினும் இங்கே வீரமாக—வேகமாகப் பேசுகின்றார்கள். எப்பொழுதும் உண்மையைப் பேசவேண்டும். அந்த உண்மையையும் உறுதியாகப் பேச வேண்டும். அந்த உறுதியுடன் இழிவையைப் பேச வேண்டும் என்ற எங்கள் தலைவரின் கருத்துரைப்படி எங்கள் மனச்சாட்சிக்கு உண்மை என்று பட்டதைச் சொல்வேன். நீங்கள் வளர்ந்த தேசிய பரம்பரையில் தான் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு உங்களோடு தோளோடு தோள் சேர்ந்து போரிட்டவர்கள் நாங்கள். அந்த தேசீய ஸ்தாபனத்தின் பெயராலே தான் நாகர்கோயிலில் நீங்கள் புரிந்த அக்கிரமங்களை அநியாயங்களை எடுத்துக் கூற முடியாது. கூட்டணித் தோழர்களைப் பேசவிட்டீர்களா? கொடி கட்டிப் போய் குரல் கொடுக்க விட்டீர்களா? போலிங் ஏஜெண்டுகளாக வந்தவர்களை நீங்கள் ஓட்டுச் சாவடியை நெருங்கவிட்டீர்களா? இன்னும் அதிகமாகச் சொன்னால் காலித்தனம் செய்வதற்கு, ரௌடித்தனம் செய்வதற்கென்றே நீங்கள் எங்களது மாவட்டத்தில் திரட்டிய ஆட்கள் எத்தனை? அவற்றை எல்லாம் நான் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நிரூபித்துக் காட்டத் தயாராய் இருக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் என்று இன்றைக்கு இருக்கக்கூடியவர்கள் யார் என்று தெரியும். உண்மையான காங்கிரஸ்காரர்கள் போய்விட்டார்கள். ஆட்சியில் உள்ளவர்களைப் பிடித்துப் பயன் பெறுவதற்காக என்று இன்றைக்கு உள்ளே நுழைந்தவர்கள் தான், பிழைக்க வந்தவர்கள் தான் உள்ளே இருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் உறுப்பினர்கள் பலப்பல வற்றைப் பேசி வருகிறார்கள். குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். ஆட்சியில் உள்ளவர்களைப் பிடித்து பிழைக்க வந்தவர்கள் என்று சொல்கிறபோது இவர் எப்படி இருக்கிறார் என்று நானும் கேட்க முடியும். இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் தி.மு.க. தான். அங்கே அமைதி ஒழுங்கு இல்லை என்றால் அதற்குப் பொறுப்பானவர்கள் ஆட்சியாளர்கள் தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல. சர்க்கார் ரௌடிகள் பேரில் நடவடிக்கை, எடுப்பதாக இருந்தால் கண்ணியமற்றதாகப் போயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அப்பொழுது ரௌடிகளை வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: The hon. Leader of the Opposition accused the D.M.K. Party of not maintaining law and order. I can tell the Leader of the Opposition that no D.M.K. worker, no Swatantra Party worker was allowed to freely move. The statement by Mr. C. Subramaniam—and just now the hon. Leader of the Opposition asserted the fact—that Mr. Arul was to come to Madras demoralised the entire police force. There was no freedom for the Madras Police to act. They gave all sorts of reports.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஐ எம் வெரி ஸாரி, இந்தச் சர்க்கார் அப்பொழுது என்ன செய்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது அந்த வாதம் அவரிடமிருந்து தாவி மற்றொரு உறுப்பினரிடம் சென்று அதற்கு அவர் விளக்கம் கொடுக்க முற்படுவாரானால் சட்ட மன்ற மரபை பாதிப்பதாக ஆகும். அவர் தம்முடைய கருத்துக்களைச் சொல்லலாம். உறுப்பினர் குறுக்கிட்டு திருத்தம் செய்ய வேண்டுமென்றாலும் ஐயத்தைப் போக்கவேண்டுமென்றாலும் மாறுதல் செய்யவேண்டுமென்றாலும் அந்த உறுப்பினருடைய அனுமதியின்பேரில் அவர் குறுக்கிட்டால் பொருத்தமாக இருக்கும். இல்லையென்றால் ஒரு விவாதத்திலே ஆரம்பித்து அது இன்னொரு விவாதத்திற்குக் கொண்டுபோகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும், ஆகவே உறுப்பினர் அவர்களைப் பேசவிட்டு அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்று இரண்டு மூன்று முறைகள் மற்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்களில் குறுக்கிட்டார்கள். மற்ற உறுப்பினர்களுக்கு இல்லாத உரிமை எதிர்க் கட்சித் தலைவருக்கு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உறுப்பினர் பேசிய பேச்சிலே முரண்பட்ட கருத்து இருந்தால் விளக்கம் கொடுக்க எழுந்திருக்கிறார்களோ என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் அவர் சொன்னார் என்பதற்காக இன்னொன்று சொல்ல வேண்டுமென்று சொன்னால் அது முறையாக இருக்காது. உங்களுக்குப் பின்னால் பேச வாய்ப்பு இருக்கிறது. தனிப்பட்ட கருத்துக்களை நீங்கள் அப்பொழுது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே குறுக்கிட்டு, குறுக்கிட்டு ஓர் உறுப்பினர் பேசுகின்றபொழுது அவர் பேசினார் என்பதற்காக அதற்கு நேர்மாறான கருத்துக்களைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அநேகமாக என்னைப் பொறுத்த வரையில் சட்டமன்றத்திலே அடிக்கடி தலையிடு இல்லாமல் இருந்து வந்திருக்கிறேன், இப்போதும் அப்படித்தான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஏதாவது பேசிக் கொண்டே போவார்களானால் முறையில்லாமல் பேசுவார்களானால் அந்தக் கட்சியைச் சேர்ந்த நான் உட்கார்ந்து கொண்டே இருப்பேனேயானால் என்னுடைய கடமையிலிருந்து தவறியதாக ஆகும். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனையோ முறைகள் குறுக்கிட்டு இருக்கிறார்கள், எத்தனையோ முறைகள் அமைச்சர்கள் குறுக்கிட்டு இருக்கிறார்கள். அந்த உரிமை எனக்கும் இருக்கிறது. அத்துமீறி அவர்கள் பேச்சு போய்விடக் கூடிய நிலைமையில்தான் நான் தலையிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மரபை நான் காப்பாற்றுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாகர்கோவில் நேர்



தலைப் பற்றிப் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. தனிப்பட்ட முறையிலே பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களும் மரபைக் காப்பாற்றுவதிலே ஈடுபடுவார்களானால் நானும் காப்பாற்றுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய பேச்சிலே குறுக்கிட்டார்கள். அவர்கள் எவ்வளவு தான் குறுக்கிட்டாலும் என்னுடைய பேச்சோட்டத்தைத் தடைப்படுத்த முடியாது. குறுக்கீடு இருப்பதில் ஆச்சரியமில்லை, ஆனால் அந்த குறுக்கீடு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சொன்னபடி முறையாக விளக்கம் கேட்பதாக இருந்தால் அதில் தவறு இல்லை. இன்றைய காங்கிரஸிலே பிழைப்புக்காக வந்து விட்டார்கள் என்று நான் சொன்னது . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பிழைப்புக்காக என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். அதை வாபஸ் வாங்குகிறார்களா ?

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** பிழைப்புக்காக வந்திருக்கிறார்கள் என்று நான் சொன்னது எதிர்க் கட்சித் தலைவர் மனதைப் புண்படுத்துவதாகத் தெரிகிறது, எனவேதான் அவர் மீண்டும் மீண்டும் குறுக்கிடுகிறார் என்று நினைக்கிறேன் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பிழைப்புக்காக என்பதை வாபஸ் பெறுகிறாரா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பழைய காங்கிரஸ்காரர்கள் தியாகிகள் என்று சொல்லலாம், அல்லது இன்றைய காங்கிரஸ்காரர்கள் தியாகிகள் அல்ல என்று சொல்லட்டும், பிழைப்புக்காக என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் அப்படி சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** அதற்காகத்தான் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். இன்றைய காங்கிரஸிலே பிழைப்புக்காக வந்திருக்கிறார்கள் என்று நான் சொன்னது எதிர்க் கட்சி தலைவர் மனதை புண்படுத்தியதாக நினைக்கிறேன். அப்படிப் புண்படுத்தும்படி என்னுடைய பேச்சு இருக்கிறது என்று நினைப்பார்களானால் அந்த வார்த்தையை நான் திரும்பப் பெற்றுக்கொள்வதிலே ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தமாதிரிச் சொல்வதற்கு என்னை விடாமல் குறுக்கிட்டு குறுக்கிட்டு எதை எதையோ அவர்கள் சொல்கிறார்கள், என்னைச் சொல்ல விடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரும்பப் பெறுகிறேன் என்று அவர் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லிவிட்டார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர் வாயால் சொல்லிவிட்டார் என்றால் எனக்குச் சந்தோஷம்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** எதிர்க் கட்சித் தலைவர், உறுப்பினர்கள் பேச்சைப் பேசி முடித்தபின்னர், தெளிவாக அதைக் கேட்டபின்னர் குறுக்கிடும்படி கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோவிலில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள் இவற்றை நினைத்துப் பார்க்கும்பொழுது இந்த நாட்டிற்கு ஜனநாயகம் தேவையில்லை, தேர்தல் தேவையில்லை, வேறு மாதிரி அரசியல் உருவாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே ரௌடித்தனங்களையும், காலித்தனங்களையும் எத்தனையோ செய்திருக்கிறார்கள். நாகர்கோவிலில் அந்த இடைத் தேர்தலுக்கென்றே ரௌடிகளையும் காலிகளையும் தயாரித்தார்கள், அவர்களைச் சேமிக்கத் திட்டமிட்டார்கள், அவர்களை அங்கு கொண்டு சென்றார்கள். நான் இதை ஆளுங் கட்சிக்கு ஆதரவாகச் சொல்கிறேன் என்று அவர்கள் நினைப்பார்களானால் நான் அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை பேர்கள் சென்றார்கள், எந்த வேலைக்காகச் சென்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் உணர்ந்துகொள்ள முடியும். இப்படிப்பட்டவர்கள்தான் ஜனநாயகத்தையும் பற்றிப் பேசுகிறார்கள், இது உலகத்திலேயே பெரிய சாதனை என்று பேசிக்கொள்கிறார்கள். நாகர்கோவிலிலே 6 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன, இவற்றில் இன்றைக்கு 5 சட்டமன்றத் தொகுதிகளிலே காங்கிரஸ் உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். அந்த இடத்திலே அவர்கள் பெற்ற வெற்றி ஒன்றும் புதுமையான வெற்றியல்ல. அந்த இடம் கூட்டணிக் காங்கிரஸ்காரர்களிடம் இருந்து இப்பொழுது அதை காங்கிரஸ்காரர்கள் பெற்றிருப்பார்களானால் ஆளுங் கட்சிக்கு ஆதரவாக மக்கள் இல்லை, மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாமே தவிர, அவர்கள் கையிலிருந்த இடம் திரும்ப அவர்கள் கைக்குப்போய்விட்டது. எனவே இதிலே புதுமை ஒன்றும் இல்லை. வெற்றிச் சங்கு ஊதுவதில் பயனில்லை. நாகர்கோவில் அவர்கள் கையாண்ட முறையை இனிமேல் கையாள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அது உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் நல்லதல்ல, என்று கூறி ஆளுநர் அவர்கள் உரையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பஞ்சம் அதிகமாகிவிட்டதால் அதற்காக நிதி ஒதுக்கி பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இராமநாதபுர மாவட்டத்தில் பஞ்ச நிலைமை வட ஆற்காடு, செங்கற்பட்டு நிலைக்குக் குறைந்த நிலைமை அல்ல, அதற்காக அதைக் குறைத்துக் கூறுவதாக யாரும் கருத வேண்டாம். காரியகமிட்டி, பரமக்குடி, முதுகுளத்தூர் பகுதிகளிலும், வைகை நீர்ப்பாசன பகுதி நீங்கலாக மற்றப் பகுதிகளிலும் நஞ்சையும் விளையவில்லை, புஞ்சையும் விளையவில்லை, அது தொழில் நிறைந்த பிராந்தியமும் அல்ல. நீர்ப்பாசன வசதிகளற்ற பிராந்தியம். வானத்தையே நம்பியிருக்கிற பிராந்தியம். வானம் பொய்த்ததால் பஞ்சம் அங்கே தலை



விரித்தாடுகிறது. வட ஆற்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளை இராமநாதபுரம் மாவட்டத்திலும் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே வரிகளை ரத்து செய்ய வேண்டும். கடன் பாக்கிகளை ஒத்தி வைக்க வேண்டும். காரியாபட்டி சட்ட மன்றத் தொகுதியிலேயும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலேயும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக கருதாமல் நதியைப் பயன் படுத்தும் முறையில் நீர்பாசன வசதியுள்ள நதியாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய இந்திய தேசிய மு.ப 10-3
இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்குப் பென்ஷன் வழங்குகின்ற முறையில் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் தேதி 31—12—1968 என்று இருக்கிறது. இந்த நிலையில் பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் சிலோனில் இருந்தும் வந்தவர்கள் அந்தத் தேதிக்குள் விண்ணப்பத்தை அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 31-12-1968-ம் தேதிக்குள் விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென்ற காலக் கெடு இல்லாமல் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய எல்லோருக்கும் பென்ஷன் தொகை கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய நமது அரசு முன்வர வேண்டும். இதிலே மத்திய அரசுக்குத் தான் அதிகாரம் இருக்கிறது என்றால் நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பேசிய மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் 'சுதந்திர தினத்திற்குப் பின்பும், குடியரசு தினத்திற்கு முன்னும் சட்டமன்றத்தைக் கூட்டினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திருநாளை நாங்கள் எப்படிக் கொண்டாட முடியும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வேண்டுமென்றால் அதிலே முக்கியத்துவம் இல்லாமல் இருக்கலாம்' என்று சொன்னார்கள். நாங்கள் இந்த நாட்டிலே ஒன்றுக் குடித்தனம் நடத்துவதற்காக மலேயாவிலிருந்தோ, சிங்கப்பூரிலிருந்தோ வந்தவர்கள் அல்ல. நாங்கள் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள்தான். அந்த வகையில் தேசியத் திருநாளைக் கொண்டாடுவதில் நாங்கள் காங்கிரஸ்காரர்களுக்கு எந்த வகையிலும் பின் தங்கியவர்கள் அல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்திலே இருந்து நமக்கெல்லாம் சுவையூட்டிக் கொண்டிருந்த அவர்கள் அடையாறு

மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல நலம் பெற்று இந்த நாட்டுக்கு வழிகாட்ட விரைவில் திரும்ப வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த வாழ்த்திலே நானும் பங்கு கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் மற்றொரு பிரச்சினை கீழ்வெண்மணி நிகழ்ச்சியாகும். ஆதித் திராவிடப் பெருங்குடி மக்கள் அங்கே சுட்டெரிக்கப்பட்டிருக்கிறார்கள். பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய வன்முறைச் செயல்கள் எந்தக் கோணத்தில் வந்தாலும், எந்த வடிவத்தில் வந்தாலும் அடக்கி ஒடுக்கப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கும் வரவேற்புக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாகர்கோயில் தேர்தலைப்பற்றி இங்கு பேசப்பட்டது. காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், நாகர்கோயிலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது திராவிட முன்னேற்றக் கழகத்தினரை உறுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஜனநாயகத்தில் வலிவான நம்பிக்கையுடைய நாங்கள் தோல்வி கண்டு துவண்டு விட மாட்டோம். காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றியின் மூலம் அவர்கள் இடத்தைத் தக்க வைத்திருக்கிறார்கள். அங்கே எங்களுடைய கட்சியை வளர்த்திருக்கிறோம். தென்காசியிலே நீங்கள் தோற்றதினால் அந்தத் தோல்வியைக் கண்டு நீங்கள் துவண்டுவிடவில்லை, நாங்கள் அதிலே பெற்ற வெற்றியைப் பற்றிப் பெரிய அளவுக்குப் பெருமிதம் பேசிக் கொண்டிருக்கவில்லை. அந்த முறையில் நீங்கள் நாகர்கோயிலில் பெற்ற வெற்றியைப் பற்றிப் பெரிய அளவில் பெருமிதம் பேசிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. அங்கு நடந்த அக்கிரமங்கள், அட்டகாசங்களை எண்ணிப் பார்க்கவேண்டும். இங்கே பேசிய ஒரு உறுப்பினர் காங்கிரஸ் கட்சிக்கு பாரம்பரியப் புகழ் நிறைய உண்டு என்று சொன்னார்கள். எங்கெங்கு தேர்தல் நடக்கிறதோ அங்கெல்லாம் வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுவது அக்கிரமங்களைச் செய்வதுதான் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியமாக இருக்கிறது. 1967-ல் தேர்தல் நடந்த நேரத்தில் கூட இங்கே வீற்றிருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கொல்லுவதற்கு முயற்சி செய்தார்கள். இப்படிப்பட்ட திருவிளையாடல்களிலே பாரம்பரியப் புகழ் உடையவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மக்கள் மன்றமும் மறந்துவிடாது. தருமபுரி தேர்தல் சமயத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறையில் பாம்பும், தேளும் ஓடுகின்ற இடத்தில் அடைத்து வைத்த அத்தகைய காருண்யச் செயலுக்குப் பாத்தியமானவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் நாகர்கோயில் தேர்தலுக்குச் சென்றிருந்தோம். எங்களைப் பார்த்து, அம் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்கள் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில்





100-க்கு 20 பேர் கூடப் படிக்கவில்லை என்றும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 80 பேர் படித்தவர்கள் என்றும் நாகர்கோயிலில் வந்து 'நீங்கள் என்ன புத்தி சொல்லுவது?' என்றும் பேசினார்கள். 100-க்கு 20 பேரே படித்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் மதிப்பிற்குரிய காமராஜர் என்பதைக் கூட மறந்து அவர்கள் அவ்வாறு பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சின்னம் எங்கே தெரிந்தாலும் அங்கு இருந்தவர்களை விரட்டி விரட்டி அடித்தார்கள். கிட்டுவைக் கொலை செய்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கிட்டுவைக் கொலை செய்தார்கள் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்கிறார்கள் திருப்பித் திருப்பி . . .

**திரு. வி. மலைக்கண்ணன் :** நான் 'காங்கிரஸ்காரர்கள்' என்று சொல்லவில்லை. கிட்டு எங்கள் கட்சித் தோழர், அவரைக் கொலை செய்தார்கள் என்று சொன்னேன். யார் கொலை செய்தார்கள் என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளட்டும். கூட்டணிக் கட்சிக்காகப் பணியாற்றிய தங்கசாமி என்ற தோழர் ஆறு, ஏழு நாட்கள் காணாமல் பிறகு அவருடைய உடல் ஒரு புதரில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாரம்பரியம் காந்தியவாதிகளான காங்கிரஸ் கட்சிக்கு வேண்டுமா? இவ்வாறு நடந்து கொள்வதுதான் காங்கிரஸ் கட்சியின் பண்பாட்டிற்கு அடையாளமா? இப்படிப்பட்ட பண்பாடு, வன்முறைச் செயல்கள் ஜனநாயகத்திற்கும், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கத்தான் செய்யும். இப்படிப்பட்ட வன்முறைகளால் பெறுகின்ற தாற்காலிக வெற்றி நாட்டுக்கு நல்ல பயனைத் தராது என்பதைக் காந்தியவாதிகளான காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, இப்போது நமது மாநிலத்திலே பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பயிர் சாவியாகிவிட்டது. அந்த மாவட்டங்களில் பஞ்ச நிவாரண வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்திலே பருவ மழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் இல்லாமல் சாவியாகி விட்டது. இளையான்குடி தொகுதியில் ராஜசிங்கமங்கலம் பெரிய கண்மாய் இருக்கிறது. தமிழகத்திலேயே இது இரண்டாவது பெரிய கண்மாய். சென்ற ஆண்டு வெள்ளத்தில் கரை உடைந்துவிட்டது. இந்த ஆண்டு தண்ணீர் இல்லாமல் 10,000 ஏக்கர்கள் சாவியாகிவிட்டன. நெட்டூர், இளையான்குடி, சாலைக் கிராமம், எமனேஸ்வரம் ஆகிய கண்மாய் ஆயக்கட்டுகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொண்டால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். பழைய வரி பாக்கி, கடன் வசூல், கூட்டுறவு நாணயச் சங்கம் மூலம் கொடுத்த கடன் வசூல் ஆகியவற்றை நிறுத்தி வைக்க வேண்டும். இந்த ஆண்டு சாவியான நிலங்களுக்கு வரிவஜா செய்ய வேண்டும். ராஜசிங்கமங்கலம் கண்மாய்க்கு வைகையாற்றிலிருந்து கால்வாய் போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தார் எடுக்க மதிப்பீடு

செய்யப்பட்டு ஏறக்குறைய பத்தாண்டுக் காலமாக சென்னைக்கும் மதுரைக்கும் சிவகங்கைக்குமாகப் பயணம் செய்து விட்டு தூங்கிக் கொண்டிருந்தது. அந்த மதிப்பீடு இப்போது அரசாங்கத்துக்கு அனுப்பப்படவிருக்கிறது. சுமார் 10 லட்சம் ரூபாய் அதற்காக சாங்ஷன் செய்து கால்வாயைத் தூர் எடுத்தால் ஏறக்குறைய பத்தாயிரம் எக்கரில் விவசாயம் செய்ய முடியும். அந்தத் திட்டத்தை நமது அரசாங்கம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்**: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரை இந்த அரசின் திட்டவட்டமான கொள்கைகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் வலியுறுத்துவதாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இது அப்படி அமையவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை மலர வேண்டும், அடித்தளத்தில் இருக்கக்கூடிய அவர்களின் நிலை மேம்பாடு அடைய வேண்டுமென்றெல்லாம் நாம் எல்லோரும் பேசிக்கொள்கிறோம். ஆனால் அப்படி அவர்களின் நிலை உயர என்ன திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பது ஆளுநர் அவர்களின் உரையிலிருந்து தெரியவில்லை.

அடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களின் நிலை உயரவேண்டுமென்றால் அரசு பயிர்பாதுகாப்புத் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம் போன்ற பல திட்டங்களை அமுல்படுத்த முயற்சிக்க வேண்டும். அவற்றைப்பற்றி ஒன்றும் இந்த உரையில் காணவில்லை. அடுத்து, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் குறித்தும் இந்த அறிக்கையில் யாதொன்றும் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக விருப்பு வெறுப்பின்றி பல திட்டங்களை ஏற்படுத்தி அவற்றை நிறைவேற்றினால்தான் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை உயருவதற்கு வழி ஏற்படும்.

என் தொகுதியாகிய ராதாபுரத்தைப் பொறுத்தவரையில் அங்கு பருவமழை தவறி இருப்பது அமைச்சரவைக்கு நன்கு தெரியும். கடந்த ஒரு ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்தில் அங்கு பருவ மழை தவறிவிட்டது என்று எடுத்துச் சொல்லியும் கூட, இந்த அரசு அதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு பஞ்ச நிவாரண வேலையாக கடன் வசூலைத் தள்ளி வைப்பது, நில வரியைத் தள்ளுபடி செய்வது, தண்ணீர் இல்லாதிருக்கும் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்த மானியம் அளித்தல், விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த அசிகப்படியான பண உதவி செய்தல் போன்றவைகளை இந்த அரசு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியைப் பொறுத்தவரையில் அலந்தாறை ஆறு திட்டம் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக பரிசீலனையில்





இருந்து வருகிறது. இரண்டு ஆண்டுகளாகியும் அந்தத் திட்டம் இன்னும் முடிவடையவில்லை. கடந்த ஆண்டு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டிய மகாநாட்டில் 1969 மாச் இறுதிக்குள் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று மிக அழகாகச் சொன்னார்கள். அது இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. அதை உடனடியாக விருப்பு வெறுப்பின்றி அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிற்றூர்-பட்டணங்கால் திட்டத்தில் ராதாபுரம் கால்வாய் வேலை முடிந்துவிட்டது. அதில் உடனடியாக தண்ணீர் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத் திட்டத்தில் உட்பட்ட நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாய் வரி வசூல் செய்யவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறது அரசு. இது ஏழை விவசாய மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசு பரிசீலனை செய்து எப்படி இதனால் விவசாயிகள் பயனடைகிறார்கள் என்று பார்த்து படிப்படியாக அந்த வரியை விதிக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வள்ளியூரில் பெரியகுளம் என்று ஒன்று இருக்கிறது. அதுபற்றி பல ஆண்டுகளாகச் சொல்லியும் ஒன்றும் நடக்கவில்லை. அந்தக் குளத்தை ஆழப்படுத்தும் திட்டத்தை அரசு உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில், '1967-ம் ஆண்டில் நமது மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களுடன் அயல்நாட்டார் உடனுழைப்பு உவந்தளிக்க முன் வந்துள்ள வெவ்வேறு உற்பத்தித் துறைகளைச் சார்ந்த 19 தொழில்களுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ள தென்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்' என்று கூறியிருக்கிறார்கள். 1967-ல் இந்த 19 தொழில்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 1968-ல் ஒன்றும் இல்லை. ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள இந்த 19 தொழில்களில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, என்னென்ன வேலைகள் நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி இந்த உரையில் ஒன்றும் குறிப்பிடவில்லையென்பது வருந்தத் தக்கது. இந்த அரசு ஒரு நல்ல அரசாக இருந்தால் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட உத்தரவாதத்தைக் கொடுக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். கிராம மக்களின் வாழ்க்கை மலர வேண்டுமென்றால் கிராமாந்திரங்களில் கைத்தொழில்கள் பெருக வேண்டும். அதற்கு இந்த அரசினிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டு காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியும். எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ராதாபுரம், சங்கரன்கோவில் போன்ற ஊராட்சி ஒன்றியங்களில்

மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல நலம் பெற்று இந்த நாட்டுக்கு வழிகாட்ட விரைவில் திரும்ப வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த வாழ்த்திலே நானும் பங்கு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் மற்றொரு பிரச்சினை கீழ்வெண்மணி நிகழ்ச்சியாகும். ஆதித் திராவிடப் பெருங்குடி மக்கள் அங்கே சுட்டெரிக்கப்பட்டிருக்கிறார்கள். பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய வன்முறைச் செயல்கள் எந்தக் கோணத்தில் வந்தாலும், எந்த வடிவத்தில் வந்தாலும் அடக்கி ஒடுக்கப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கும் வரவேற்புக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகர்கோயில் தேர்தலைப்பற்றி இங்கு பேசப்பட்டது. காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், நாகர்கோயிலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது திராவிட முன்னேற்றக் கழகத்தினரை உறுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஜனநாயகத்தில் வலிவான நம்பிக்கையுடைய நாங்கள் தோல்வி கண்டு துவண்டுவிட மாட்டோம். காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றியின் மூலம் அவர்கள் இடத்தைத் தக்க வைத்திருக்கிறார்கள். அங்கே எங்களுடைய கட்சியை வளர்த்திருக்கிறோம். தென்காசியிலே நீங்கள் தோற்றதினால் அந்தத் தோல்வியைக் கண்டு நீங்கள் துவண்டுவிடவில்லை, நாங்கள் அதிலே பெற்ற வெற்றியைப் பற்றிப் பெரிய அளவுக்குப் பெருமிதம் பேசிக் கொண்டிருக்கவில்லை. அந்த முறையில் நீங்கள் நாகர்கோயிலில் பெற்ற வெற்றியைப் பற்றிப் பெரிய அளவில் பெருமிதம் பேசிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. அங்கு நடந்த அக்கிரமங்கள், அட்டகாசங்களை எண்ணிப் பார்க்கவேண்டும். இங்கே பேசிய ஒரு உறுப்பினர் காங்கிரஸ் கட்சிக்கு பாரம்பரியப் புகழ் நிறைய உண்டு என்று சொன்னார்கள். எங்கெங்கு தேர்தல் நடக்கிறதோ அங்கெல்லாம் வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுவது அக்கிரமங்களைச் செய்வதுதான் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியமாக இருக்கிறது. 1967-ல் தேர்தல் நடந்த நேரத்தில் கூட இங்கே வீற்றிருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கொல்லுவதற்கு முயற்சி செய்தார்கள். இப்படிப்பட்ட திருவிளையாடல்களிலே பாரம்பரியப் புகழ் உடையவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மக்கள் மன்றமும் மறந்துவிடாது. தருமபுரி தேர்தல் சமயத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறையில் பாம்பும், தேளும் ஓடுகின்ற இடத்தில் அடைத்து வைத்த அத்தகைய காருண்யச் செயலுக்குப் பாத்தியமானவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் நாகர்கோயில் தேர்தலுக்குச் சென்றிருந்தோம். எங்களைப் பார்த்து, அம் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்கள் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில்





100-க்கு 20 பேர் கூடப் படிக்கவில்லை என்றும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 80 பேர் படித்தவர்கள் என்றும் நாகர்கோயிலில் வந்து 'நீங்கள் என்ன புத்தி சொல்லுவது?' என்றும் பேசினார்கள். 100-க்கு 20 பேரே படித்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் மதிப்பிற்குரிய காமராஜர் என்பதைக கூட மறந்து அவர்கள் அவ்வாறு பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சின்னம் எங்கே தெரிந்தாலும் அங்கு இருந்தவர்களை விரட்டி விரட்டி அடித்தார்கள். கிட்டுவைக் கொலை செய்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கிட்டுவைக் கொலை செய்தார்கள் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்கிறார்கள் திருப்பித் திருப்பி . . .

**திரு. வீ. மலைக்கண்ணன் :** நான் 'காங்கிரஸ்காரர்கள்' என்று சொல்லவில்லை. கிட்டு எங்கள் கட்சித் தோழர், அவரைக் கொலை செய்தார்கள் என்று சொன்னேன். யார் 'கொலை செய்தார்கள் என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளட்டும். கூட்டணிக் கட்சிக்காகப் பணியாற்றிய தங்கசாமி என்ற தோழர் ஆறு, ஏழு நாட்கள் காணாமல் பிறகு அவருடைய உடல் ஒரு புதரில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாரம்பரியம் காந்தியவாதிகளான காங்கிரஸ் கட்சிக்கு வேண்டுமா? இவ்வாறு நடந்து கொள்வதுதான் காங்கிரஸ் கட்சியின் பண்பாட்டிற்கு அடையாளமா? இப்படிப்பட்ட பண்பாடு, வன்முறைச் செயல்கள் ஜனநாயகத்திற்கும், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கத்தான் செய்யும். இப்படிப்பட்ட வன்முறைகளால் பெறுகின்ற தாற்காலிக வெற்றி நாட்டுக்கு நல்ல பயனைத் தராது என்பதைக் காந்தியவாதிகளான காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, இப்போது நமது மாநிலத்திலே பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பயிர் சாவியாகிவிட்டது. அந்த மாவட்டங்களில் பஞ்ச நிவாரண வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்திலே பருவ மழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் இல்லாமல் சாவியாகிவிட்டது. இளையான்குடி தொகுதியில் ராஜசிங்கமங்கலம் பெரிய கண்மாய் இருக்கிறது. தமிழகத்திலேயே இது இரண்டாவது பெரிய கண்மாய். சென்ற ஆண்டு வெள்ளத்தில் கரை உடைந்துவிட்டது. இந்த ஆண்டு தண்ணீர் இல்லாமல் 10,000 ஏக்கர்கள் சாவியாகிவிட்டன. நெட்டூர், இளையான்குடி, சாலைக்கிராமம், எமனேஸ்வரம் ஆகிய கண்மாய் ஆயக்கட்டுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொண்டால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். பழைய வரி பாக்கி, கடன் வசூல், கூட்டுறவு நாணயச் சங்கம் மூலம் கொடுத்த கடன் வசூல் ஆகியவற்றை நிறுத்தி வைக்க வேண்டும். இந்த ஆண்டு சாவியான நிலங்களுக்கு வரிவஜா செய்ய வேண்டும். ராஜசிங்கமங்கலம் கண்மாய்க்கு வைகையாற்றிலிருந்து கால்வாய் போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தூர் எடுக்க மதிப்பீடு

கடந்த மூன்று ஆண்டுகளாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் 1952-ல் இந்தச் சட்டமன்றத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வழங்கும்போது ஒரு மாணவனுக்கு மூன்று ரூபாய் என்று இந்த அரசு நிர்ணயித்தது. அப்போது ஒரு ஆசிரியருக்குச் சம்பளம் 60 ரூபாயாக இருந்தது. இப்போது நிலை என்ன? ஆசிரியர்களின் சம்பளம் 190 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அப்படிக் கணக்கு பார்க்கும்போது ஒரு மாணவனின் சராசரிச் செலவு தலைக்குப் பத்து ரூபாயாக ஆகியிருக்கிறது. மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. 1952-ல் நிர்ணயித்த தொகையையே ஊராட்சி ஒன்றியங்களுக்கு இப்போது கொடுப்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்களையோ அல்லது ஆசிரியர் பணியில் பங்கு கொண்டுள்ள உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையோ தலைவராகக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து அதில் சட்டசபை உறுப்பினர்கள், கல்வி நிபுணர்கள், கல்வி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நிலை இப்போது எப்படி இருக்கிறது, ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயை எப்படி உயர்த்த வேண்டும் என்பதை நிர்ணயித்தாலொழிய இப்போது இருப்பதை விட அடுத்த ஆண்டு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நிலை மேலும் அவல நிலை அடையக் கூடிய நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திசையின்விளை ஒரு மணற்பாங்கான பிரதேசம். அங்குள்ள மக்களுக்கு குடிநீர் மிக மிகத் தேவை. ஆகவே திருச்செந்தூர் தாலுகாவிலிருந்தாவது அல்லது நம்பி ஆற்றிலிருந்தாவது தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்ற துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம அதிகாரிகளின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த அரசு அதற்காக என்ன அக்கறை காட்டியிருக்கிறது என்று தெரியவில்லை. அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை சிறிது உயர்த்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். கிராம அதிகாரிகள், வட்டத் தலைவர்கள்; உப வட்டத் தலைவர்கள் இவர்களால் வரவழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பிரயாணப் படி, தினப்படி இவை கொடுக்கப்படுவதில்லை. கடைநிலை ஊழியர்களுக்குள்ள வசதிகள் கூட இவர்களுக்கு இல்லை. இதை உடனடியாக அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மின் இணைப்பு சம்பந்தமாக விவசாயிகளுக்கு ஒரு திட்டத்தின் கீழ் 7 சதவிகிதம், இன்னொரு திட்டத்தின் கீழ் 10 சதவிகிதம் என்று இப்படி ஒன்று சேர்க்க முடியாமல் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதனால் விவசாயத்திற்கான மின் இணைப்புகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.



அடுத்தபடியாக, சென்னை நகரைப் பொறுத்தவரையில் மண்ணெண்ணெய்க்கு கடந்த நாலைந்து நாட்களாக பெரிய அவதியாக இருக்கிறது. அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? சென்னை நகரில் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற புகார் நெடுநாட்களாக இருந்து வருகிறது. அதற்காக அரசு துரித நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நாகர்கோவில் தேர்தல் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாகர்கோவில் தேர்தல் பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், இது நாடாளுமன்றத் தேர்தல் அல்ல, இது நாடார் மன்றத் தேர்தல் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் அந்தத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் ஏழு பேர்கள். அதில் கலந்து கொண்டவர்களில் மூன்று பேர்கள் நாடார்கள் என்பதை அமைச்சரவையும் இந்த மன்றமும் உணரவேண்டும். அதில் இந்த அரசு ஆதரித்ததும் ஒரு நாடாரைத்தான் என்பதை இந்த மன்றம் உணரவேண்டும். அது நாடார் மன்றத் தேர்தல் அல்ல. இந்தத் தேர்தலில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதை ஒரு நாடார் மன்றத் தேர்தலாக ஆக்கிவிட்டிருக்கிறது என்று தான் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அவர்கள் ஆதரித்தும் ஒரு நாடாரைத்தான் இதில் ஒருதலைப் பட்சமாகப் பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் மீதும், காங்கிரஸ் அனுதாபிகள் மீதும் நூற்றுக்கணக்கான வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குகளில் பல நிரபராதிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவை உணரவேண்டும். அடிக்கடி அமைச்சர்கள் பெருமையாகச் சொல்வார்கள் அண்ணா ஆட்சியில் நிரபராதிகள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று. அப்படியிருக்க ஏன் நூற்றுக்கணக்கான வழக்குகளில் நிரபராதிகளைச் சேர்த்திருக்கிறீர்கள்? இதை சிந்தித்து அந்த நிரபராதிகளை உடனடியாக அந்த வழக்குகளிலிருந்து நீக்கிவிட உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அமைச்சரவை நேர்மையான அமைச்சரவையாக இருக்குமானால், நீங்கள் செய்யவேண்டிய கடமை என்ன? முதல் அமைச்சர் அவர்களோ அல்லது அந்தப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் அவர்களோ ஒரு அறிக்கை விடலாம். இப்படியுள்ள பல நிரபராதிகளைப் போலீசார் நீக்கிவிட வேண்டுமென்று சொன்னால் மிகவும் நலமாக இருக்கும். அப்படியில்லாமல் நாடாளுமன்றத் தேர்தல் சமூகத் தேர்தல் என்று பறைசாற்றியிருப்பது நல்லது அல்ல. அது ஜனநாயக அடிப்படையில் நடந்த தேர்தல். அந்த வெற்றி ஜனநாயகத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றால், அது மிகையாகாது. காங்கிரஸ்காரர்கள் மீது பல வழக்குகள் போட்டு இருக்கிறார்கள். பொய்யான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கெல்லாம் அமைச்சரவை பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, முதலாவதாக நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பூரண சுகம் பெற்று, நலம் பெற்று வரவேண்டுமென்ற வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டு, ஆளுநர் அவர்களின் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, சென்ற மாதம் தஞ்சை மாவட்டத்தில் நடந்த ஒரு சம்பவம் நம்முடைய தமிழகத்தையே தலைகுனிய வைத்த சம்பவம் ஆகும். அந்தச் சம்பவத்திலே சுட்டு எரிக்கப்பட்டவர்கள் 44 பேர்கள். அந்த 44 பேர்களும் சாதாரண ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதாலும், அவர்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய கூலிகள் என்பதாலும்தான் இன்று அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக நமக்குப் படவில்லை. இந்தச் சம்பவம், மேல் வர்க்கத்தின் மத்தியிலோ அல்லது மேல் ஜாதிக்காரர்களின் மத்தியிலோ இப்படி 44 பேர்கள் கூட அல்ல, 4 பேர்கள் எரிக்கப்பட்டிருந்தால்கூட இன்று இந்த நாடே எந்த நிலையில் இருக்கும் என்பதை இந்தச் சபை சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்தச் சம்பவத்திற்கு அவர்கள் ஆளாகியிருந்தார்கள் என்றால், தஞ்சை மாவட்டம் பூராவும் குடிசைகள் பிய்த்தெறியப் பட்டிருக்கும், அழிக்கப்பட்டிருக்கும். இந்தச் சம்பவம் இரவு 7 மணிக்கு ஆரம்பித்து 10 மணி வரை நடந்திருக்கிறது. அந்த வட்டாரத்திலே எந்தச் சம்பவம்நடந்தாலும் தடுத்து நிறுத்துவதற்கு உண்டான போலீஸ் ஏற்பாடுகள் இருக்கிறது என்று ஐ.ஜி. அவர்கள் அறிக்கை விட்டதைப் பத்திரிகைகளில் பார்த்தேன். இரண்டு மைல் தூரத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தும், 3 மணி நேரமாக அந்தப் பச்சிளங் குழந்தைகளும், தாய்மார்களும் வேதனைப்படும் நேரத்தில் போலீஸ் அந்த இடத்திற்கே போகவில்லை. அதுமட்டுமல்லாமல், மறுநாள் காலை 10 மணிக்குத்தான் ராமையா வீட்டில் செத்துக்கிடந்த 44 பிணங்களைப் பார்க்க முடிந்தது. சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குப் பிறகுதான் அதைப் பார்க்க முடிந்தது என்பதை இந்த சபை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் சர்க்காருக்கு முன்கூட்டியே பல தகவல்களை, இம்மாதிரி கொலைகள் உண்டாவதற்கான பயங்கரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்தும், சர்க்கார் காலாகாலத்தில் அது நடக்காமல் இருக்க முயற்சி செய்யவில்லை. நம்முடைய போலீஸ் திறமைக் குறைவானது என்று சொல்லவில்லை. நம்முடைய மாநில போலீஸ் திறமையான போலீஸ்தான். அப்படியிருந்தும் இந்தச் சம்பவம் நடப்பதற்கு ஏன் அனுமதித்துக் கொண்டிருந்தது, அதைத் தடுப்பதற்கு ஏன் முயற்சி செய்யவில்லை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கு நிலச்சுவான்தார்கள் காட்டு தர்பார் நடத்தியுள்ளனர். அவர்கள் மீதும், அதற்கு அடியாட்களாக இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த அரசியல் சக்தியின் நிர்ப்பந்தத்திற்கும் செவி சாய்க்காமல் அவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இம்மாதிரி சம்பவங்கள் அடித்தட்டிலே உள்ளவர்கள், ஹரிஜனங்கள், ஏழைக் கூலிகள்





கொடுமைக்குள்ளாகும் வேறு பல சம்பவங்கள் பல இடங்களிலும் நடந்து கொண்டு வருகின்றன. அதையெல்லாம் நடக்க விடாமல் தடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்

அடுத்தபடியாக, பஞ்சாலைத் தொழிலில் 28 மில்கள் நமது மாநிலத்தில் மூடப்பட்டு, 20,000 தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய இரண்டு வருஷங்கள் மூடப் பட்ட மில்களும் இருக்கின்றன, ஒரு வருஷத்திற்கு மேல் மூடப் பட்ட மில்களும் இருக்கின்றன. 20,000 தொழிலாளர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு பட்டினியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மில்களைத் திறந்து நடத்துவதற்கு அரசினர் கடன் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தாலும் கூட மில் முதலாளிகள் அவைகளை நடத்தாமல் மூடியிருக்கிறார்கள். அந்த முதலாளிகள் மில்களை மூடியது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பிராவிடெண்ட் ஃபண்ட், இன்ஷ்யூரன்ஸ் பணம் ஆகியவைகளைச் செலுத்த வேண்டிய இடங்களில் செலுத்தாமல் மோசடியெல்லாம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சில மாநிலங்களில் இப்படி மில்களில் மோசடி செய்தவர்கள் என்று பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கேரளா, பம்பாய், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கேயும் அவ்வாறு மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அளவிலே பஞ்சாலைக்கழகம் நிறுவ முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறது. உடனடியாக அந்த முறையிலே மில்களை அரசாங்கம் ஏற்று நடத்தி பட்டினி கிடக்கும் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்திலே, எக்சைஸ் வரியிலிருந்து கைத்தறிக்கு ஒரு பகுதி ஒதுக்குகிறார்கள். மீதியிலே ஒரு பகுதியை நாம் பெற்று மில்கள் மூடப்பட்டதால் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு தலைக்கு மாதம் 100 ரூபாய் வீதம் கொடுத்தால் வருஷத்திற்கு [illegible] கோடி ரூபாய் செலவாகும். அந்த முறையில் மத்திய சர்க்காரை வற்புறுத்தும் தீர்மானத்தை நம்முடைய மன்றம் நிறைவேற்றி, எக்சைஸ் வரியில் கைத்தறிக்குக் கொடுத்ததுபோக மீதியை நாம் பெற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இம்மாதிரியாகச் செய்து பல மில்கள் வருஷக்கணக்கில் மூடப்பட்டிருப்பவற்றை திறப்பதற்கு வழி காண வேண்டும்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலம் பூராவும் பரவலாக பருவமழை தவறியதால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஆளுநர் உரையில் செங்கற்பட்டு, கோவை, வட ஆர்க்காடு ஜில்லாக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. மேலும் நம் மாநிலத்திலே திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி தாலுக்காவின் பெரும் பகுதியிலும் பருவமழை தவறியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு பருவமழை குறைந்தால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க பாசனத்திற்கு எந்தவிதமான வசதிகளை ஏற்படுத்தினால், பருவமழை

தவறினாலும் பாதிக்கப்படாமல் இருக்குமோ, அதைச் செய்ய வேண்டும். ஆழமான குழாய்க்கிணறுகள் மூலமாகவோ, கிணறு கள் மூலமாகவோ அல்லது அங்கு வீணாகச் சமுத்திரத்திலே சென்று கலக்கக்கூடிய தண்ணீரைத் தடுத்து நிறுத்தி கண்மாய்ப் பாசன வசதிகளைச் செய்யவோ அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

***புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மதிப்பிற்குரிய நல்லறிஞர் அண்ணா அவர்கள் முழு நலம் பெறவேண்டுமென்று விழைந்து ஆளுநர் பெருமான் அவர்களின் உரையின்மீது என்னுடைய உரையைத் தொடங்க முற்படுகிறேன்.

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணியநீரும் என்றாங்கு
ஐம்பெரும்பூதத்து இயற்கைபோல
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலும் அளியும் உடைய

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்

பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேதநெறி திரியினும்
திரியாச் சுற்றமாய்—

நாவலர், கோவலைத்து, மாதவத்தோடு கலைமதி இணைத்து மூத்து விளங்கச் சத்தியத்தோடு சாதிக்கும் எண்ணத்தில் ஒளிர நல்லரசு அமைத்து நாடாளும் நிலையை நல்லோர் நன்குணர்வார்; ஆனால், அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் இந்த நேரத்திலே குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்துடனேயே இருந்து வருகிறார்கள். தமிழர்தம் பண்பாட்டை—இலக்கியப் பெருமையை—தரணி போற்றத்தக்க அளவிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியதற்குப் பின்னாலே, அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றிவைத்த அரியேறு எங்கள் அண்ணா,

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கைப் பின்பற்றி
ம.ப. மறனிழுக்கா மானத்தோடு அரசை நடத்தி வருகிறார். முன்
11-00 பிருந்த காங்கிரசு அரசு மாண்பிறந்த மானத்தோடு நாட்டை ஆண்டு வந்துள்ளது. ஆனால் அருமை காங்கிரஸ் நண்பர்கள் 20 ஆண்டுகாலம் இந்த நாட்டை ஆண்ட நேரத்திலே தமிழை அரியணையிலே ஏற்றிவைக்க மறந்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்ததால் தமிழை அரியணையில் ஏற்றுவதை நம்முடைய கடமையாகக் கருதி அரியணையிலே ஏற்றி வைத்திருக்கிறார்கள் அவர்கள். ஆனால் அவர்கள், "நாங்கள் தமிழுக்கு ஒன்றும் செய்யவில்லையா?" என்று கேட்கக்கூடும். அவர்களுடைய





அந்தப் பேச்சை எண்ணிப்பார்க்கிறபோது, வெறும் வெற்றுப் பேச்சாகத்தான் எனக்குத் தெரிகிறது. நிச்சயமாக அவர்களுடைய ஆட்சி நீடித்திருக்குமானால் இன்றைக்குத் தமிழகத்திலே 'தமிங்கலம்' என்று சொல்லக் கூடிய ஒரு புது மொழி உருவாகி உலவுகிற நேரத்தில் வேறு ஒரு புது மொழியும் தோன்றியிருக்கும். இன்றைக்கு தமிழ்நாட்டில் 'தமிங்கலம்' என்று சொல்லக்கூடிய ஒரு மொழி உலவி வருகிறது தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து தமிங்கலத்தை பேசக் கூடிய நிலை இருக்கிறது. இவர்களே ஆட்சியில் இருந்திருந்தால் 'தமிந்தி' வந்திருக்கும். தமிழையும் இந்தியையும் இணைத்து அவர்கள் 'தமிந்தி' ஆக்கி இருப்பார்கள். அதைத் தடுத்து ஆட்சியை நன்றாக நடத்திச் செல்லவேண்டும், அதற்கு மொழி நல்ல அமைப்பினைப் பெற்றிருக்கவேண்டுமென்று கருதிய காரணத்தினால் அருமைத் தமிழ் அரியணையில் ஏற்றப்பட்டு, தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டு, இன்றைக்கு சட்டமன்றம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைக் கூட அவர்கள் கேலி செய்தார்கள். வள்ளுவருடைய படங்களை மாட்டி வைத்திருக்கிறார்கள், வள்ளுவருடைய குறட்பாக்களை எழுதி வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். வள்ளுவர் குறளிலே இருக்கக் கூடிய அந்த அரசியல் விழிப்பும், அரசியல் தெளிவும், அரசியல் நாகரிகமும், அரசியல் நாணயமும் அவர்களுக்குப் புலப்படவில்லையா என்று தான் எண்ணத் தோன்றுகிறதே தவிர, வேறு ஒன்றும் எண்ணத் தோன்றவில்லை. அந்த அடிப்படையிலே தான், பாரதி சொன்னது போல் தான், 'தெருவெல்லாம் தமிழ்' என்று நாம் தமிழைக் கொண்டு வந்திருக்கிறோம்.

சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

என்று பாரதி பாடினார். அந்த அடிப்படையிலே தான், இன்றைக்குத் தமிழுக்கு இந்தத் தருணத்திலே முதல் இடம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தாலே தான், இன்றைய தினம் தமிழகத்திலே நாம் தமிழை அரியணையில் ஏற்றியிருக்கிறோம். இவ்வளவு நாள் இல்லாத நிலை இது. அதை அருமை நண்பர்கள் உணர வேண்டும்.

இங்கே அவர்கள் பேசுகின்ற நேரத்திலே எல்லாம், நாகர்கோவில் தேர்தலைப்பற்றிப் பேசினார்கள். நாகர்கோவில் தேர்தலில் பெருவாரியான வாக்கு பெற்று வெற்றி பெற்று விட்டோம், பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று விட்டோம் என்று பேசுகிறார்கள். அந்தப் பேச்சை இழிவாகச் சொல்லவில்லை. அப்படிப் பேசக்கூடிய அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(திரு. பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

அவர்கள் அரசியல் கணக்குகளைப் புரட்டிப் பார்க்கவேண்டும். யாருக்கு மிச்சம் கிடைத்திருக்கிறது? தென்காசி தேர்தல் நடந்தது. அங்கே காங்கிரஸ் கட்சி சார்பிலே முன்னாலே வென்றி

ருக்கிறார்கள். ஆனால், பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. தெனகாசித் தென்றல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்திருக்கிறது. அதற்குப் பின்னாலே இந்த நாகர்கோவில் தேர்தல். அது அவர்களுக்கே உரிய இடம். அந்த இடத்தை அவர்கள் விட்டுவிடாமல் பற்றிக் கொண்டார்கள். அதுதானே அரசியல் உண்மை? அந்த அரசியல் உண்மையை மறைத்து அவர்கள் ஏதோ பெரிய வெற்றி அடைந்து விட்டதைப் போலவும், அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் இருந்ததைப் போலவும், கூட்டணி கட்சி இருந்ததைப் போலவும், அவர்கள் இப்பொழுது அப்படிப்பட்ட இடத்தைக் கைப்பற்றியது போலவும் இங்கே பேசுகிறார்கள். இது உண்மையா? அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நட்டம், அரசியல் கணக்குப்படி அவாகளுக்குததான் ; இலாபம் எங்களுக்குத்தான்; மிச்சம் எங்களுக்குத் தான, அவர்களுககு இல்லை. அவர்களுக்கு நட்டம் கணககுததான இருக்கிறது. அதனாலே, அங்கலாய்த்துக் கொள்ளவேண்டாமென்று அவர்களைப் பார்த்து நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, நாகர்கோவில் தேர்தலை அடிப்படையாக வைத்துப் பேசக்கூடிய அவர்கள், நாகர்கோவில் தேர்தலிலே அருமை காமராசர் அவர்கள் வெற்றி பெறாமல் போயிருப்பாரானால், அதனால் என்ன நிலைமை என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்பொழுது நன்றாகப் புலனாகும். அவர்கள் வெற்றி பெற்றதற்குப் பின்னாலே நீங்கள் ஜனநாயகப் பாதுகாப்பு நாள் கொண்டாடியிருக்கிறீர்கள். யாருக்கு ஜனநாயகப் பாதுகாப்பு ? இங்கே ஜனநாயகம் கொலை புரியப் பட்டு விட்டதா? ஜனநாயகம் அழிந்து போய் விட்டதா? எதற்கு ஜனநாயகப் பாதுகாப்பு நாள் ? காமராசர் வெற்றி பெற்று விட்டார் என்பதற்குப் பிறகு ஜனநாயகப் பாதுகாப்பு நாள் நீங்கள் கொண்டாடுகிறீர்கள் என்றால் உங்களுக்கே ஐயப்பாடு என்று தான் பொருளே தவிர, இந்தத் தமிழக அரசியலிலே, இந்த நாட்டு அரசியலிலே எந்த ஐயப்பாடும் இருப்பதாகப் புரியவில்லை. அந்த அளவுக்கு நீங்கள் ஜனநாயகப் பாதுகாப்பு வேண்டாத நாளிலே கொண்டாடியிருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழன் என்ற நிலையிலே, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற நிலையிலே ஒருசில காங்கிரசார் நீலிக் கண்ணீரை வடிக்கிறார்கள். அவர்களுடைய போக்கு எப்படி இருக்கிறது என்று பார்த்தால் தகாத நிலை ஏற்பட்டு விட்ட பிறகு ஒரு வீட்டுக்குச் சென்ற பெண், அங்கே ஒப்பாரி வைத்து அழுதாளாம் ஒப்பாரி வைத்து அழுத அவள் ஒப்புக்கு அழுகிறேன்டி, ஒப்பாரி வைக்கிறேண்டி, மதி கெட்ட பெண்டிர்களா என் வாயை வந்து பொத்துங்கடி ' என்று சொன்னதாகச் சொல்வார்கள். அதைப் போல் அருமை காங்கிரஸ் நண்பர்களும், ' எங்களுடைய குரல் கம்மிவிடாமல், எங்களுடைய வாயைப் பொத்துங்கள் ' என்று இங்கே வந்து பேசுகிறார்களே தவிர, உண்மையில் விவசாய கூலிகளுக்கும், விவசாயத் தொழிலாளர் பெருமக்களுக்கும், விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய பெருங்குடி மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்ற நிலையிலோ, அல்லது தமிழருக்கு, தமிழுக்கு நல்ல நிலையினை அளிக்க வேண்டுமென்ற எண்ணத்திலோ பேசுகிறார்கள் என்று கருத இடம் இல்லை.





அடுத்து, அருமை நண்பர்கள் பேசும்போது, நேற்றைக்குப் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் மாடின் அவர்கள் பேசும்போது, ' ஆளுநர் உரையில உப்பில்லை, சப்பில்லை ' என்றார்கள். அவர்கள் தொடங்கக்கூடிய செயல்களை எல்லாம் உப்புப் போட்டு தான் தொடங்குவார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படி உப்புப் போட்டு தொடங்கிய காரணத்தினால் உப்பில்லை சப்பில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள என்று எண்ணுகிறேன். விவசாயப் பெருங்குடியினரிடம், கீழ் வெண்மணியிலே நடந்து விட்ட அந்தத தகராறையும் எப்படித் தீர்க்க வேண்டுமென்பதற்காக அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. அதிலே உப்பில்லையா ? அல்லது சப்பென்றிருக்கிறதா ?

கோவையிலே, தொழிலாளருக்கும் பஞ்சாலை முதலாளிகளுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கலை நீக்குவதற்காக அங்கே பெருமுயற்சி எடுத்து வந்திருக்கிறது அரசு. அதிலே உப்பில்லையா?

அடுத்து, புதிதாகத் தொழில்கள் உருவாக்க வேண்டுமென்பதற்காக மணலியில் பாறையெண்ணெயைத் தூய்நிலைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க முற்பட்டிருக்கிறது. அதிலே உப்பில்லையா? இவற்றிலே உப்பில்லை என்றாலும் சென்னையில் உரத் தொழிற்சாலையைத் தொடங்க இருக்கிறது அரசு. அந்த உர தொழிற்சாலையிலே நிச்சயமாக உப்பிருக்கும் என்று எண்ணுகிறேன். இன்னொன்றையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தூத்துக்குடியிலே ஒரு உரத் தொழிற்சாலை தொடங்கியிருக்கிறது அரசு. அதிலே, உப்பிருக்கும். தூத்துக்குடியில் உப்பை வைத்து தொழில்களை எவ்வழிகளில் மேம்படுத்தலாமென்பதற்காக நடவடிக்கை தொடங்கியுள்ளது. அதிலே உப்பு இல்லையா ? எதிலே உப்பில்லை ? இவற்றிலெல்லாம் உப்பிருக்கிறது. அவர்கள் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். உப்பு இல்லை, சப்பில்லை என்று எண்ணிப்பாக்காமல் ஆராய்ந்து பார்க்காமல் பேசிவிடக் கூடாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் குறையை எடுத்துச் சொல்லலாம். குறையைச் சொல்லுகின்ற நேரத்தில் இப்படித் தீர்க்க வேண்டும், இந்த முறையிலே தீர்க்கலாம் என்று அவர்கள் சொல்லலாம். அப்படி இல்லாமல் ஈயத்தைப் பார்த்து, பித்தளை சிரிப்பதைப் போல் அவர்களுடைய பேச்சு அமைந்திருக்கிறது. ஈயம் இல்லையென்றால் பித்தளை எதற்கும் உதவாது, பயன்படாது. அப்படிப்பட்ட பித்தளையாக இருக்கக்கூடிய காங்கிரஸ் நண்பர்கள் ஈயத்தைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். ஈயம் இருந்தால்தான் நீங்கள் பயன்பட முடியும். ஈயத்தைப் போன்று நாங்கள் இருந்தால்தான் உங்களுக்குப்

பயன் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காட்டிய நெறியை அடிப்படையாக வைத்து, நம்முடைய அரசு ஆட்சி செய்கிற நேரத்தில், மத்திய அரசு செய்ய வேண்டிய சில செயல்களை, உதவிகளைச் செய்யாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறோம். மத்திய அரசைக் கேட்கிறார்களே என்று சொல்கிறார்களே தவிர, யாரைக் கேட்பது என்று சொல்லவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 624 கோடி ரூபாய் இந்த மாநிலத்திற்குத் தேவை என்று கேட்டோம். முதலில், 250 கோடி ரூபாய் தருவதாகச் சொன்னவர்கள், இப்பொழுது 201 கோடி ரூபாயாக அதனை சுருக்கி இருக்கிறார்கள். இப்படி சுருக்கி இருக்கிறார்களே, அதையும் சேர்த்துக் கொடுக்கட்டும் என்று கேட்டால், மத்திய அரசை கேட்கக் கூடாது என்று சொல்வதா? அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காந்திய நெறியைக் கடைப் பிடித்து நடப்பவர். அன்றைக்கு மூன்றாவது வட்ட மேஜை மாநாட்டில், காந்தி 'A Nation does not need the dagger of assass it does not need the sword, spear, bullet; it needs simply will of its own ability என்று சொன்னார். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், நாட்டை நல்லாட்சி முறையிலே நடத்தி வருகிறார்கள், வள்ளுவர் பெருந்தகை காட்டிய வழியை அடிப்படையாக வைத்து, ஆட்சி நடத்தி வருகிறார்கள் என்பதை உணர்ந்து காங்கிரஸ் நண்பர்கள் தாறுமாறாகப் பேசாமல், கிண்டல் பேசாமல், கேலி பேசாமல், உணர்ந்து; குறை இருந்தால் குறையைச் சுட்டிக்காட்டி, நிறை இருந்தால் அந்த நிறையை நிறைவேற்றி, ஆவன செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கேட்டு, ஆளுநர் பெருமானின் உரையை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன். கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஜனநாயகப் பாதுகாப்பு நாள் கொண்டாடினார்கள், ஜனநாயகத்திற்கு ஆபத்து எதுவும் வரவில்லை என்று சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள் கொண்டாடிய நாள் ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு நாள். ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு வேறு, ஜனநாயக பாதுகாப்பு வேறு. அங்கத்தினர் அவர்கள் இதைப் புரிந்துகொண்டு பேசினாரா என்பதையும், தாறுமாறாகப் பேசுவதாகச் சொன்னார், அதன் விவரத்தையும், அதனுடைய அர்த்தம் என்ன என்பதையும் அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களா ?

திரு. கே. விநாயகம் : புலவர் அவர்கள் பேசும்பொழுது, காங்கிரஸ்காரர்கள் தாறுமாறாகப் பேசுகிறார்கள் என்றார். நான் புலவர் அல்ல. எனக்குத் தெரியவில்லை அதன் பொருள் என்ன என்பது. அவர்கள் அதற்கு என்ன பொருள் என்று கருதுகிறார், தாறுமாறு என்றால் என்ன? கடைவீதியிலே பேசப்படுகிற





பேச்சை இங்கே பேசுகிறார்கள். அதற்கு வேறு ஏதாவது பொருள் இருந்தால் அதையும் அவர் விளக்கட்டும். தாறுமாறு என்றால் என்ன?

புலவர் பொ. பொன்னம்பலம் : தலைவர் அவர்களே, இங்கே விளக்கம் கேட்டார்கள், விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகப் பாதுகாப்பு நாள் என்று நான் குறித்ததை அவர்கள் ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு நாள் என்று அவர்கள் கொண்டாடியதாகச் சொன்னார்கள். ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு நாள் என்றாலும் ஜனநாயகப் பாதுகாப்பு நாள் என்றாலும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அதிலே என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை அவர்கள் உணர்த்தினால், நான் உணரத்தலைப்படுகிறேன். ஆனால், அதில் எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

தாறுமாறாக என்று சொல்லக் கூடிய அந்தச் சொல்லிலும் எந்தத் தவறும் இருப்பதாக நான் கருதவில்லை. தாறுமாறாக என்று சொல்கிற பொழுது, நாங்கள் பேசுவதற்கு எதிர்ப்பாக, நாங்கள் சொல்லக் கூடிய அனைத்திற்கும் எதிர்ப்பாகவே பேச வேண்டும் என்று கருதக்கூடிய அந்தக் கருத்தைத் தான் தாறுமாறாக என்று நான் குறித்தேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. அந்தச் சொல் தாழ்ந்த சொல்லும் இல்லை. தாழ்ந்த பொருளை தரக்கூடிய சொல்லும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்களையும், என்னுடைய கட்சியின் கருத்துக்களையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையின்மீது விவாதம் நடக்கின்ற இந்த நேரத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் இருக்கிறார்கள். நானும் என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்களும், தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களும் அவர்கள் நல்ல உடல் நலம் பெற்று, இந்த சட்டமன்றத்திற்கும், நாட்டிற்கும் வழி காட்டக்கூடிய அளவில் அவர்கள் நலம் பெற்று வரவேண்டும் என்று வாழ்த்துகிறோம். அதே நேரத்தில் கடந்த 25-ம் தேதியிலிருந்து இந்தச் சட்டமன்றத்தில் நாமெல்லாம் . . .

5. முதலமைச்சரின் உடல்நிலை—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு திடீரென்று ரத்த அழுத்தம் குறைந்து இருக்கிறது . . .

(மேலும் தொடர்ந்து பேசமுடியாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கையில் அமர்ந்தார்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. கே. விநாயகம்:** சார், அண்ணா அவர்களின் உடல் நலம் சரியில்லை. ஆதலால் இந்தச் சட்டசபையை இத்தோடு ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. பழனியும் மற்றும் சில உறுப்பினர்களும்:** அண்ணா, அண்ணா, அண்ணா.

(திரு. பழனி அவர்கள் 'அண்ணா, அண்ணா' எனக் கூறிக் கொண்டே இருக்கையில் அமர்ந்தார்)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முதல் அமைச்சர் அவர்களுக்கு ரத்த அழுத்தம் குறைந்து, டாக்டர்கள் இப்பொழுது அவர்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். கொஞ்சம் நிலைமை மோசம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்தச் சபையை இத்துடன் ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையை இந்த

மு.ப. 11-15 அளவோடு ஒத்திவைக்கிறேன்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

76. Notification issued with G.O. Ms. No. 1639, L.A., dated the 16th August 1968, in regard to withdrawal of certain roads specified in the schedule of the notification from the operation of the Madras District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)].

† 77. Notification issued with G.O. Ms. No. 772, Education, dated the 21st May 1968, in regard to approval list of all the parks and play fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruchengode Municipality. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]

† 78. Notification issued with G.O. Ms. No. 1174, Education, dated the 19th July 1968, in regard to issue of the Madras Private Educational Institutions (Regulation) Rules, 1968, and the date of commencement of the Madras Private Educational Institutions (Regulation) Act, 1966. [Laid on the Table of the House under section 30 (3) of the Madras Private Educational Institutions (Regulation) Act. 1966 (Madras Act 23 of 1966).]

* மாண்புமிகு முதலமைச்சரின் உடல்நிலை கவலை தருவதாக இருப்பதன் காரணமாகப் பேரவைக் கூட்டம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரால் பேரவை விதிகள் 16, 17-ன் கீழ் மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒற்றிவைக்கப்பட்டுள்ளது. இத்தகவலை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் '0-1-1969 தேதியிட்ட சட்டப்பேரவை செய்தித்தாள் எண் 12 இணைப்பாக 52-53-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

† Laid on the Table of the House on 28th January 1969.





### B. Reports, Notifications and Other Papers.

34. Notification issued with G.O. Ms. No. 1408, Revenue, dated the 17th July 1968, in regard to exemption from payment of stamp duty in respect of purchase of certain properties in Coonoor by the Bhaktavatsalam Education Trust, Vedachalam Nagar, Chingleput district under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

35. Notification issued with G.O. Ms. No. 1952, Revenue, dated the 8th October 1968, in regard to exemption of the stamp duty payable on indemnity bonds for disbursement of Provident Fund moneys to persons on behalf of minors under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

36. Notification issued with G.O. Ms. No. 1742, Revenue, dated the 4th September 1968, in regard to exemption from the payment of stamp duty in respect of trust deed proposed to be executed by the Bengal Association, Madras, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

37. Notification issued with G.O. Ms. No. 1752, Revenue, dated the 6th September 1968, in regard to exemption from stamp duty in respect of the deed of gift of vacant land by Cork Industries Trust to Shri Vallabhacharya Vidya Sabha, Madras, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

† 38. Report and Proceedings of the Selert Committee on the Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 (L.A. Bill No. 18 of 1968).

## APPENDIX.

[*Vide* foot-note on page 50]

## INFORMATION SHEET.

No. 12. Date : 30th January 1969.

All the Members are informed that as the condition of the Chief Minister continues to be serious, the Deputy Speaker, in consultation with the Leader of the House and the Leader of the Opposition in the Tamil Nadu Legislative Assembly has adjourned the Assembly *sine die* under Rule 17 read with Rule 16 of the Tamil Nadu Legislative Assembly Rules.

2. In view of the grave illness of the Chief Minister, the Governor has postponed the date appointed for the presentation of the Second Supplementary Statement of Expenditure for the year 1968-69 and the Demands for Grants for Excess Expenditure in the year 1964–65, namely, 30th January 1969 to a later date to be fixed by the Governor later.

3. Members are also informed that the Governor has cancelled the date fixed for the election of Speaker of the Tamil Nadu Legislative Assembly.

4. Members are further informed that the programme of dates fixed for election of three Members from among the Members of the Tamil Nadu Legislative Assembly to the Senate of the Annamalai University stands cancelled by the Hon. Deputy Speaker.

## இணைப்பு

(50-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## செய்தித் தாள்

என் 12. தேதி : 30—1—1969.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நிலை கவலை தருவதாக இருப்பதன் காரணமாக, சட்டப் பேரவை முதல்வர் அவர்களையும், எதிர்கட்சித் தலைவர் அவர்களையும் கலந்தாலோசித்து பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சட்டப் பேரவைக் கூட்டத்தை பேரவையின் விதிகள் 17/16-ன் கீழ் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்து இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நிலை காரணமாக மேதகு ஆளுநர் அவர்கள் 1968-69-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாவது துணை நிதி அறிக்கையையும், 1964-65-ம் ஆண்டில் அதிகப்படியான செலவு குறித்த அறிக்கையையும் பேரவைக்கு



30-1-1969-ம் நாளன்று அளிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருந்ததை ஒத்திவைத்து இருக்கிறார்கள். இதற்கான வேறு ஒரு நாள் ஆளுநர் அவர்களால் பின்னர் குறிப்பிடப்படும்.

3. மேதகு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையின் தலைவர் தேர்தலுக்காக குறிப்பிட்டிருந்த நாளை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

4. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக் குறிப்பிட்டிருந்த நிகழ்ச்சி முறையை (Programme) பேரவை துணைத் தலைவர் அவர்கள் ரத்து செய்து இருக்கிறார்கள் என்பதும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர் :

சர்தார் உஜ்ஜல் சிங்.

---

**1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (முதல் அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, சட்ட மன்றம், செய்தி—விளம்பரம், திரைப்படச் சட்டம்.

**2. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (நிதி அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வணிக வரிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

**3. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** (உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, காடுகள், சின்கோனா.

**4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சுற்றுலா, அனாதை இல்லங்கள், இரவலர்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

**5. மாண்புமிகு திரு. செ. மாதவன்** (கல்வி-தொழில் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டம், நீதி மன்றங்கள்.

**6. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs)

**7. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சேரி.

8. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (தொழிலாளர் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழிலாளர், பத்திரப் பதிவு, பயண அனுமதிச் சீட்டுகள், துறை முகங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

10. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலைய அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு.

11. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) சீட்டுகள் குறித்த சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

1. THIRU M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Legislature, Information and Publicity and Cinematograph Act.

2. THIRU K. A. MATHIALAGAN, Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Commercial Taxes, Indian Overseas, Refugees and Evacuees.

3. THIRU A. GOVINDASWAMI, Minister in charge of Food, Agriculture, Food Production, Animal Husbandry, Fisheries, Forest and Chinchona.

4. DR. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in charge of Public Health, Medicine, Harijan Welfare, Women's and Children's Welfare, Stationery and Printing, Government Press, Tourism, Orphanages, Beggars, Approved Schools and Vigilance Services.

5. THIRU S. MADHAVAN, Minister in charge of Industries Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Education including Technical Education, Official Language, Law and Courts.

6. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs.

7. THIRU M. MUTHUSWAMY, Minister in charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-Servicemen and Prosperity Brigade.

8. THIRU P. U. SHANMUGHAM, Minister in charge of Labour, Registration, Passports, Ports, Prisons, Legislation on Weights and Measures, Newsprint Control and Prices and Supplies of Goods Act.

9. THIRU SI. PA. ADITANAR, Minister in charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

10. THIRU K. V. SUBBIAH, Minister in charge of Religious Endowments, Housing and Accommodation Control.

11. THIRU O. P. RAMAN, Minister in charge of Electricity, Legislation on Money-Lending (Rural Indebtedness) and Legislation on Chits.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்

**பேரவைத் துணைத் தலைவர்**

†மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. வி. எஸ். எஸ். மணி
திரு. பி. எஸ். மணியம்
திரு. சு. துரைசாமி
திரு. பு. செ. முத்துச்செல்வன்
திரு. சா. மெய்யப்பன்
திரு. தோ. மு. நல்லசாமி

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. ராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்.ஸி., பி.எல்.

---

* 22-2-1969 தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.
† 26-2-1969 தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவை

---

**வெள்ளிக்கிழமை, 1969 பிப்ரவரி 21.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) காலஞ்சென்ற முதல் அமைச்சர் டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1957 முதல் 1962 வரை இப் பேரவையின் உறுப்பினராகவும், கடந்த இரண்டு ஆண்டு காலம் மாண்புமிகு முதல் அமைச்சராகவும் பணிபுரிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 2-2-1969 அன்று நள்ளிரவு 12-22 மணிக்கு இயற்கை எய்தி விட்டார்கள் என்ற செய்தியை இப் பேரவைக்கு அறிவிக்கும் அவல நிலைக்கு யான் உள்ளாகியதற்கு உளம் நொந்து, அண்ணாருக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானம் ஒன்றை முன்மொழியுமாறு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:—

"நமது தமிழகத்தின் தனிப்பெரும் தலைவராய்; தமிழ் மக்களின் அண்ணனாய்; தமிழ் மொழியின் காவலராய்; தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் புதிய பாணியை வகுத்த பாவலராய்; வள்ளுவன் வகுத்த வாழ்க்கைக்கு ஓர் இலக்கணமாய்; தமிழ்ப் பண்புக்கு ஓர் உறைவிடமாய்; உண்மையான ஜனநாயகவாதியாய்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை வாழ்க்கையாய் அமைத்துக் கொண்டு இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் அதிலும் குறிப்பாக வசதியற்று சமூகத்தின் அடித்தளத்தில் கிடந்த மக்களுக்குத் தொண்டாற்றி இறுதிவரையில் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தவரும், நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராகவும், தமிழ்நாட்டு முதலமைச்சராகவும் இருந்தவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பாராத வகையில் மறைவு எய்தியமை குறித்து, இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆருத்துயரத்தையும் தெரிவிப்பதோடு, அப்பெருந்தகை மறைவால் வருந்தும் அவரது துணைவியார் ராணி அம்மையாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது."

தலைவர் அவர்களே, பிப்ரவரித் திங்கள் மூன்றாம் நாள் நம்மையும் நாட்டு மக்களையும் நிலைகுலையச் செய்த நாளாகும். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு புதிய வழியை வகுத்து,

அவ்வழி நின்று ஜனநாயகக் கடமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று தன்னுடைய வாழ்க்கையை அதற்காக அர்ப்பணித்துக் கொண்ட தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பேறிஞர் அண்ணா அவர்கள் அன்று நம்மையெல்லாம் விட்டு மறைந்து விட்டார்கள். இந்த மாமன்றத்தில் 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரையிலும், அதற்குப்பிறகு கடந்த இரண்டு ஆண்டு காலமாக, ஆக ஏழு ஆண்டுகளும் குரலை ஒலித்து, அந்தக் குரலிலே உள்ள நயத்தாலும், கனிவாலும், குறள் வழியில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களாலும், எழுச்சிமிக்க எண்ணங்களாலும் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், உறுப்பினர்களுடைய போன்பையும் பாராட்டுதலையும் ஒருங்கே பெற்றவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். அவர்கள் தன்னுடைய வாழ்வில் எதிரியும் தன்னை மதிக்கத்தக்க அளவிற்கு, பாராட்டத்தக்க அளவிற்கு, புகழத்தக்க அளவிற்கு நடந்து காட்டி, அதைப்போல் மற்றவர்களும் நடந்து காட்டவேண்டுமென்று எடுத்துக்காட்டுகின்ற ஒரு விளக்காக வாழ்ந்தவர் ஆவார்கள். அவர்கள் தமிழக அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இரண்டு ஆண்டு காலத்திலே முழு சுறுசுறுப்புடன், நல்ல உடல்நலத்தோடு ஓர் ஆண்டு காலம் தான் இயங்க முடிந்தது. அதற்குப் பிறகு அமெரிக்காவிற்குச் சுற்றுலா சென்று, அந்தச் சுற்றுலாவின்போது தமிழகத்தின் பெருமையையும், இந்தியத் துணைக்கண்டத்தின் பெருமையையும் வெளிநாடுகளிலே உயர்த்திக் காட்டி, அப்படி உயர்த்திக் காட்டியதன் மூலம் தமிழகத்தினுடைய பண்பை வெளிப்படுத்தி, வெற்றிகரமாகச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியபோது, தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, அகில இந்தியா பூராவுக்கும் பிரகாசமான ஒளிமிகும் நட்சத்திரமாகத் திகழ்வாரென்று பாராட்டுகளை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, எல்லா மக்களும் தெரிவித்த நேரத்தில், அவர்கள் மாண்பு உயர்ந்திருந்த நேரத்தில், திடீரென்று உடல் நலிவு ஏற்பட்டது. அதன் காரணமாக மீண்டும் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பிய உடனே அவர்களுடைய உடல் நலிவு அறவே நீங்கிவிட்டது என்ற நம்பிக்கையோடு, மீண்டும் அண்ணா நமக்குக் கிடைத்துவிட்டார்கள், அவர்களுடைய பொற்காலத்திலேயே தமிழகத்திற்குத் தேவையான நல்ல பல காரியங்கள் செய்துகொள்ளலாம் என்ற பேராசையோடும், துணிவோடும் நாமெல்லாம் காத்திருந்தோம். ஆனால் இயற்கை அந்த எண்ணத்திலே மண்ணைப் போட்டுவிட்டது. மீண்டும் உடல் நலிவு ஏற்பட்டதும், அடையாறு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதும், எப்படியும் அண்ணா அவர்களுடைய உயிரை மீட்டுவிட வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழ் நாட்டு மருத்துவர்களும், வெளிநாட்டு மருத்துவர்களும் படாத பாடு பட்டதும், கட்சி நலனுக்கு அப்பாற்பட்டு, ஆஸ்திக நாஸ்திக சம்பிரதாயத்திற்கு அப்பாற்பட்டும் ஒருமித்த குரலில் "அண்ணா அவர்கள் நலம் பெறவேண்டும்", "அண்ணா அவர்கள் நலம்பெற வேண்டும்" என்று வாழ்த்திய வாழ்த்துகள் அத்தனையும் பயன்



அற்றுப் போயின. பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவு 12-22 மணிக்கு அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து, வங்கக் கடல் அருகிலே கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நாம் இந்தச் சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழகத்தில் எந்தச் சம்பவம் ஏற்பட்டாலும் அந்தச் சம்பவம் அவர்களுடைய உள்ளத்தை எவ்வளவு குடைந்தெடுத்தது என்பதை அவர்களோடு பழகிவந்த தம்பிமார்களாகிய நாங்கள் நன்றாக அறிவோம். எதிர்க்கட்சி நண்பர்களும், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நன்றாக அறிவார்கள். குறிப்பாக, அவர்கள் உடல் நலம் பெற்று பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மருத்துவர்கள் கூறிய நேரத்திலேகூட, தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்த நேரத்திலே அந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சென்னை சிறுவர் அரங்கத்திலே அவ்விழா நடந்தபோது, மருத்துவர்களும் மற்றவர்களும் அண்ணாவின் உடல் நலத்தையொட்டி அவ்விழாவிலே அவர்கள் கலந்துகொள்ள வேண்டாமென்று கூறியதைப் பொருட்படுத்தாது, "இந்த விழாவில் கலந்துகொள்ளவேண்டாமென்று அனைவரும் கூறினார்கள். மருத்துவர்களும் கூறினார்கள். இந்த விழாவிலே கலந்துகொள்ளாத உடல், உயிர் இருந்தால் என்ன? போனால் என்ன? இந்த விழாவிலே எப்படியும் கலந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணத்தில் நான் கலந்துகொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள். அவர்களின் உடல் பாதிக்கப்பட்ட நேரத்திலே வெண்மணிச் சம்பவம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு அந்தச் செய்தி அவர்களுடைய காதுக்கு எட்டியது முதல் மறுநாள் காலை 6 மணி வரை உண்ணாமல், உறங்காமல் தொலைபேசி மூலம் தஞ்சை அதிகாரிகளிடம் பேசுவதிலேயும், எங்களை உடனடியாக அங்கே சென்று நிலைமையை விசாரித்து அறியச் செய்வதிலேயும் நாட்டம் செலுத்தி, மனம் புழுங்கி, தூங்காமல் அந்த இரவெல்லாம் கழித்தார்கள். இனிய, இளகிய, இரக்கம் கசியக் கூடிய இதயத்தைப் பெற்ற பேரறிஞர் இன்று நம்மிடத்திலே இல்லை. அவர்கள் விட்டுச் சென்ற அறிவுரைகள், அரசியல் பண்பு, நல்ல நெறிகள் கட்டிக் காக்கப்படவேண்டுமென்று கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றையெல்லாம் போற்றிப் பாதுகாக்கவும் அவர்கள் வழிநின்று செயல்படுவதுதான், மறைந்த அந்த மாமேதை, தமிழகத்தின் தவப்புதல்வனுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதை ஆகும் என்று கூறி, என்னுடைய கண்ணீரை உங்களுடைய சார்பில் அவர்களுடைய காலடிகளிலே அபிஷேகித்து, இந்த அளவிலே என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** தலைவர் அவர்களே, நமது பெருமைக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை அப்படியே ஆதரித்து, அவர்கள் பேசிய சொற்கள் ஒவ்வொன்றையும் அப்படியே ஆதரித்து, எங்களுடைய

சார்பாக, எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், அண்ணா அவர்களுடைய குடும்பத்தாருக்கும், அவர்கள் சொத்தாக விட்டுச் சென்று இருக்கும் இந்த நாட்டு மக்கள் அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்று அவர்கள் இல்லாத சபை வேதனைக்குரிய சபையாக இருக்கிறது. முதற்கடமையாக முதல் அமைச்சர் அவர்களையும், சபையோரையும் நான் தாழ்மையோடு வேண்டிக்கொள்வது என்னவென்றால், ராமர் காட்டுக்குச் சென்ற பிறகு அவருடைய பாதரட்சையை வைத்துப் பரதன் ஆட்சி நடத்தியதைப்போல, பெருமைக்குரிய அண்ணா அவர்களுடைய படமொன்று இங்கே மாட்டப்படவேண்டும் என்பதுதான். அதன்மூலம், அவர்கள் கடைப்பிடித்த கண்ணியம், கட்டுப்பாடு, கடமை போன்ற உணர்ச்சிகள் நடைமுறைக்கு வருவதற்கு நமக்கு அது வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்கிற என்னுடைய வேண்டுகோளை விடுக்கிறேன். காரணம், தமிழனுடைய பெருமை, உலக மக்களின் பெருமை; தமிழனுடைய நாகரிகம், மனித வர்க்கத்தின் நாகரிகம்; உலகத்திற்கெல்லாம் வழிகாட்டி, தமிழ் நாடு cradle of civiliazation என்று சொல்லும் நிலையில், தமிழ்த்தாய், உந்திக் கமலத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுத்து, வளர்த்து, உருவாக்கித் தந்த காலத்தில், உலகெல்லாம் அதிசயிக்கும் அளவில், வெளி நாட்டவர்களெல்லாம், இம்மாதிரி ஒரு அதிசயம் உண்டா, 18 வருஷத்திலே ஒரு கட்சியை அமைத்து, கொள்கையைக் கொடுத்து, ஆட்சியில் அமர்ந்து, அத்தனை மக்களுடைய இதயத்தையும் தொட்ட தலைவர் உலகத்தில் உருவாகியிருக்கிறாரா என்று சந்தேகிக்கும் அளவில் ஒரு தலைவன் உருவாகி இருந்த அற்புதத்தைக் கண்டோம். இரண்டு நாட்களுக்கு முன்பு, அவர்களைப்பற்றி யுனைடெட் ஃப்ரண்ட், ஐக்கிய முன்னணி மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில், வங்காள தேசத்தில் அண்ணாவின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் பேசும்போது, ஒரு கவிஞர் சொன்னார். "தமிழன் எப்படியிருப்பான் என்று சித்தரித்துப் பார்த்தால், இனிமைக்கும் எளிமைக்கும் தாழ்மைக்கும் எடுத்துக்காட்டாக இருப்பான், மக்கள் இதயத்தில் இடம் கொண்டிருப்பான். அறிவு, அடக்கம் இவற்றைப் பெற்றிருப்பான்" என்று இவற்றையெல்லாம் சித்தரித்துவிட்டு, "தமிழன் எவ்வளவு பெருமை பெற்றவன் என்பதற்கு உதாரணமாக உங்கள் அண்ணா இருந்தார்கள் என்பது உங்களைப் பார்த்தவுடன் ஞாபகம் வருகிறது. தமிழ் நாட்டின் ஞாபகம் வருகிறது. நீங்கள் போட்டிருக்கும் துண்டைப் பார்த்ததும்" என்றார்கள். "He's an 'Anna' man! இவர் அண்ணா ஆள், தமிழன் என்ற அளவிற்கு அந்தப் பண்பாட்டோடு, எளிய உயர்ந்த மனிதத்தன்மைக்கு எடுத்துக் காட்டாக இருந்தவர். முப்பது லட்சம் தமிழர்கள் கண்ணீர்விட்டு அழ, அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்துவிட்டுச் சென்றார்" என்று அந்தக் கவிஞர்



சொல்லும்போது, அவன் முழுத்தமிழன், முழு மனிதன் என்று சொல்லும்போது, இந்த வார்த்தைகளை சொன்னார்:—

**The foundation of the past, the product of the present, the prophet of the future** என்ற வார்த்தைகளைச் சொன்னார். தமிழகத்தின் கடந்த காலத்தின் பெருமைக்குக் கருவாகவும், அதேபோல, நவநாகரிக காலத்தின் உருவாகவும் இருந்தார் அண்ணா. அவர்கள் அமெரிக்காவிற்கு வைத்திய வசதி பெறுவதற்காகச் சென்றார்கள். ஆனால், அதே நேரத்தில் தமிழகத்தில் பஞ்சத்தாலும், பசியாலும், பிணியாலும் வாடும் மக்களுக்கு நன்மை செய்ய நவநாகரிக முகத்தான், மழையைப் பொழியச் செய்ய விஞ்ஞான ரீதியில் நிபுணர்களைக் கலந்தாலோசித்தார் என்று பத்திரிகைகளில் பார்த்தோம். தமிழகத்தின் நன்மையில் அவ்வளவு கவனம், கவலை காட்டியிருக்கிறார். அந்த நிலையில் அவர்கள் தமிழகத்தின் தவப் புதல்வராக இருந்து, ஒரு அவதாரம் எடுத்துச் சென்று இருக்கிறார். நாம் ஒன்றை ஞாபகத்தில் வைக்க வேண்டும். அவர்கள் முதன் முதலாக ஆட்சியை அமைத்தபோது, குறிப்பாக நம்முடைய ராஜாஜி வைத்த ஆசை கொஞ்ச நஞ்சமல்ல. பெருமைக்குரிய அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், உலக மக்கள், இந்திய உபகண்டத்தில் உள்ளவர்கள் அத்தனை பேரும், வழிவழியாகத் தேசிய சக்தியைப் பெற்றவர், தெய்வீக நம்பிக்கையுள்ளவர், இந்த நிலைக்கு வந்தாரே என்றுகூட ராஜாஜியைத் திட்டித் தீர்த்தார்கள். ராஜாஜி, "நின்று பாருங்கள், நிதானித்துப் பாருங்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார்கள். சமீபத்திலே நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, அவரவர்கள் துக்கித்துப் போகும் அளவிற்கு, முகத்தைச் சுளிக்கும் அளவிற்கு, இந்திய ஆட்சி ஒரு கொடியின் கீழே அமையவேண்டும் என்று உணரும் போது, அண்ணா எவ்வளவு தூரம் ஏழை எளிய மக்களுக்காகவே பாடுபட்டார்கள், ஏழை எளிய மக்களுக்காகவே ஆட்சியை அமைத்தார்கள், ஆட்சியின் தத்துவமே ஏழை எளிய மக்களுக்குப் பாடுபடவேண்டும் என்பதுதான் என்பதைக் காண்கிறோம். தான் அழிந்தாலும் பரவாயில்லை என்று மக்கள் வாழ வழி காட்டிவிட்டுச் சென்றுவிட்டார். இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட அண்ணா அவர்களால் காட்டப்பட்ட வழியைப் பாடமாகக் கற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலையில் ஒவ்வொரு மாநிலத்தைப் பார்க்கும்போது, தங்களுடைய கொள்கை, கொடி எந்த விதமாக இருந்தாலும், முடிவில் மக்களுக்குப் பாடுபடுவதே ஆட்சி என்று இந்தியாவுக்கே ஒரு உயர்ந்த கொள்கையை தமிழகம் எடுத்துக் காட்டியிருக்கிறது. அந்த நிலையில், ராஜாஜி என்ன நினைத்தார்கள் என்றால், நாட்டில் [illegible] அழிவோ, ஜனநாயக அழிவோ ஏற்பட்டால், [illegible] வழிகாட்டியாக இருந்து, தேசிய சர்க்கார் அமைக்கப்பட்டால், அதில் தமிழ் நாட்டுத் தவப்புதல்வன் தமிழ் நாடு சார்பாக, அண்ணா போன்றவர்கள் இருக்கவேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்தார்கள். அவ்வளவு பெருமைக்குரிய

அண்ணா அவர்கள் நம்முடைய தவப்பயனாக, தமிழ் நாடு செய்த தவப்பயனாக, நமக்குக் கிடைத்தார்கள். 'தமிழ் நாடு' என்று பெயர் வருமா, 'தமிழக அரசு' என்று பெயர் வருமா என்று கனவில்கூட காணாத நிலையில், அதையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, அதற்கும் மேலாக உலகமே பிரமிக்கும் நிலையில்—எத்தனையோ தலைவர்கள் வருகிறார்கள், போகிறார்கள், அவர்களுக்கெல்லாம் இவ்வளவு பெருமை வருவதில்லை—பெருமையோடு சென்று விட்டார்கள். நம்மைப் படைத்த ஆண்டவனே வந்து, உங்களையெல்லாம், கோடானுகோடி மக்களையெல்லாம் படைத்திருக்கிறேனே, இரண்டு உயிரை எனக்காகக் கொடுங்கள், திரும்பவும் பத்து உயிரைக் கொடுக்க மாட்டேனா என்று, உயிரைக் கேட்டால் மயிர்கூடக் கொடுக்க மாட்டார்கள், இந்தக் காலத்தில். பெருமைக்குரிய அண்ணா அவர்கள் மறைந்தார்கள் என்று கேள்விப்பட்டவுடன், எத்தனை உயிர்கள் போயிருக்கின்றன தெரியுமா? உயிரையே கொடுக்கும் நிலையில் மக்கள் இருந்தார்கள். உலகத்திலே தண்ணீர் சமுத்திரம் பார்த்திருக்கிறோம். ஆனால் ஜனசமுத்திரத்தைப் பார்த்தது இல்லை. அரைக் கோடி மக்கள் அன்று கூடிவிட்டார்கள். அத்தனை பேர்கள் எந்த இடத்திலிருந்து எப்படி வந்தார்கள் என்று தெரியவில்லை. அதே போல, மலைகளைப் பார்த்திருக்கிறோம். மலர் மலைகளைப் பார்த்தது இல்லை. அன்று பார்த்தோம்.

பெரியார் சொன்னார், 'கண்ணீர்த் துளிகள்' என்று. அதன் காரணமாகவோ, என்னவோ, அத்தனை பேரும் கண்ணீர் விட வேண்டிய நிலையில் இருக்கிறோம், கண்ணீர் விட்டுக்கொண்டே இருக்கிறோம். அதே நிலையில் மூன்றரைக் கோடி மக்கள் கண்ணீர் விடும் நிலையில் இருக்கிறார்கள். இதை வைத்து ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். சகோதரர்கள் அத்தனை பேர்களும் அப்பொழுது இருந்தார்கள். அன்று தேவர் திருமகன் மறைந்த காலத்தில், அண்ணா அவர்கள் பேசிய பேச்சு, ஒவ்வொரு வார்த்தையும், என்னுடைய இதயத்தில் எழுத்தாணியால் எழுதியது போல இருக்கிறது. தேவரைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் அந்த ஞாபகம் வருகிறது. அரசியல்வாதி யார்? தேசியவாதி யார்?—என்று கேட்டு,

**Politicians are those who get something from the country,**
Statesmen are those who give something to the country.

அரசியல்வாதி என்பவர் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்பவர்; தேசியவாதி என்பவர் தேசத்திற்கு, மக்களுக்கு தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்பவர். தேசியவாதி, தெய்வீகவாதி என்ற நிலையில் சொன்னார்கள். நாஸ்திகரிலே ஆஸ்திகர்; ஆஸ்திகரிலே நாஸ்திகர் என்பது தேவர் வாக்கு. அதுபோல், நாஸ்திகர் என்ற பெயரிலே இன்று ஒரு பெரிய ஆஸ்திகரைக் கண்டோம்; அவர்தான் அண்ணா அவர்கள். ஆகையால், அவ்வளவு பெருமைக்குரிய அவருக்கு நல்லதொரு ஞாபகார்த்தமாக, எப்போதுமே அவருடைய ஞாபகம் இருக்கும் அளவுக்கு நாம் ஒன்று செய்யவேண்டும். அண்ணா அவர்களுடைய திருவுருவப் படம் இந்த அவையில் இடம்பெறச் செய்யவேண்டும்.





அது மட்டுமல்லாமல், அவர்கள் பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும், அதுவும் குறிப்பாக, ஆரம்ப காலத்தில் அவர் பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும், நம் அரசியலுக்கும் ஜனநாயகத்திற்கும் வழி காட்டியாகவே அமைந்திருக்கிறது. அந்த நிலையில் அதை மறவாமல், அவர்கள் பேச்சுக்கள் அத்தனையையும் புத்தகமாக்கி, அனைத்தையும் தொகுத்து அவருடைய புத்தகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றை அரசாங்கச் செலவிலேயே வெளியிட்டு, அதன்மூலம் வரும் லாபம் அத்தனையும் அவருடைய குடும்பத்தாருக்கே சேரும்படி செய்யவேண்டும் என்று வேண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து, எங்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. எ. பாலசுப்ரமணியன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு வேதனை மிகுந்த, எடுத்துச் சொல்ல முடியாத, யாரும் இவ்வளவு விரைவாக நடந்துவிடும் என்று எதிர்பாராத ஒரு நஷ்டத்தின் மத்தியிலே இங்கு நாம் கூடியிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து இங்கு சில வார்த்தைகள் சொல்லும் முகத்தான் நான் நிற்கும்பொழுது, அவர்களுக்கு, அல்லது அவர்கள் கட்சிக்கு, அல்லது தமிழ்நாட்டுக்கு ஆறுதல் சொல்ல நான் முற்படப்போவதில்லை. ஏனென்றால், ஆறுதல் சொல்ல முடியாத நஷ்டம், ஆறுதல் கொள்ள முடியாத நஷ்டம், ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு நம் அனைவருக்கும், நாடு முழுவதற்கும் ஏற்பட்டுவிட்டது.

அண்ணா அவர்களைப்பற்றிய சில முக்கியமான அம்சங்களைத் தொட்டு ஏதாவது சொல்ல நான் முயற்சிக்கவேண்டுமேயானால், அதில் மிகவும் முன்னணியில் என் மனத்திற்கு வருவது, அவரிடம் இருந்த ஆழ்ந்த மனிதத்துவம் ஆகும். மனிதன்; மனித ஜாதி; அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, வற்றாத பாசம் அதன்பால் வைத்து, எந்தப் பிரச்சினையையும் அந்த ஆழ்ந்த மனிதத்துவம் என்ற நிலையிலிருந்து பரிசீலிக்கக்கூடிய ஒரு உயர்ந்த குணம் அவரிடம் இருந்ததை நாம் அனைவரும் பார்த்தோம்.

அவர் மிகச் சிறந்த ஜனநாயகவாதி என்று சொல்லும்போது, 'ஜனநாயகம்' என்று சில சம்பிரதாயங்களை நான் சொல்லவில்லை. அதோடு கூட, அல்லது அதன் விளைவாக ஏற்படக்கூடிய சில விளைவுகளை மட்டும் மனத்தில்கொண்டு நான் 'ஜனநாயகம்' என்று சொல்லவில்லை. எதிர்த் தரப்பாரையும் அணைத்துச் செல்லக்கூடிய ஒரு மிக உயர்ந்த பண்பை மட்டும் மனத்தில் வைத்து நான் 'ஜனநாயகவாதி' என்று சொல்லவில்லை. ஜனங்களது நாயகம்—ஜனநாயகம் என்று சொல்லும்போது, அந்த ஜனங்களில் மிகப் பெரும்பாலோர், சாமானிய மக்கள், அந்த சாமானிய மக்களை என்றென்றும் மனத்தில் வைத்து, நாம் எடுக்கும் நிலை, நாம் செய்யும் நடவடிக்கை, காரியம் அந்த

மக்களுக்கு என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதைப்பற்றிய ஆழ்ந்த அக்கறை ; அதைத்தான் ஜனநாயக உள்ளம், ஜனநாயகப் பண்பு என்று நான் மிகவும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட சிறந்த பண்பு அவரிடம் இருந்ததால், சாமானிய மக்களின் துன்பங்கள், துயரங்கள் ஆகியவைகளைப்பற்றி அவரிடம் தனியான ஒரு துடிப்பு ஏற்பட்டதை அடிக்கடி என் போன்றவர்கள் பார்க்க முடிந்தது. உழைப்பாளிகள் சம்பந்தப்பட்ட காரியங்களைப்பற்றி அவரை அணுகிப் பேச நினைத்த காலத்திலெல்லாம், தொழிலாளி மக்கள் இயக்கம் அல்லது தொழிற்சங்க இயக்கம், இன்னும் இதுபோன்ற காரியங்களை அவரிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமைகள், வாய்ப்புக்கள் ஏற்பட்ட காலத்திலெல்லாம், அதை எவ்வளவு இளகிய மனத்துடன், இளகிய சிந்தனையுடன் அவர் அணுகினார் என்பது எங்கள் அனைவருக்கும் நன்றாக நினைவு இருக்கிறது. அப்படிப்பட்ட இளகிய மனத்துடன், இரக்க சிந்தனையுடன் உழைப்பாளி மக்களுடைய காரியங்களில் மிக ஆழ்ந்த அக்கறையை அவர்கள் செலுத்தி வந்தார்கள்.

தமிழுக்கும் தமிழின் மறுமலர்ச்சிக்கும் அவர் செய்திருக்கக் கூடிய சிறப்பான பணியைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு நான் போதுமான அருகதை உள்ளவன் அல்லன். ஆகவே, அதனை விவரித்துச் சொல்ல நான் முற்படப் போவதில்லை.

தமிழகத்தின் கடந்த பல ஆண்டுகளின் வரலாறு, அவருடைய நாமத்தோடு இணைந்துள்ளது. அத்தகைய வரலாறு படைத்தவர் அவர். இக்காலத்தின் வரலாறே அவருடைய நாமத்தோடு இணைந்திருக்கிறது என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். அப்படிப்பட்ட வரலாறு படைத்த தலைவர் அவர். அதே சமயத்தில், ஜனநாயக சக்திகளுடைய ஒற்றுமைதான் அவசியம், அதன் மூலம்தான் அடுத்த கட்டத்திற்கு நாட்டை அழைத்துச் செல்ல முடியும் என்பதில் வற்றாத நம்பிக்கையோடு, அப்படிப்பட்ட கொள்கைகளுக்காக அவர் முன் நின்று வழி நடத்தினார். அது மிகப் பெரிய மாற்றத்தை இந்தியாவில், தமிழகத்தில் கொண்டுவந்து சேர்த்தது என்பது நம் அனைவருடைய அனுபவம்.

இங்கு அரசியல் எதையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. இருப்பினும் கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது இங்கு ஒரு விவாதம் நடந்த நேரத்தில் அவர் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மீண்டும் வங்கத்தில் தேர்தல் நடக்க இருக்கிறது, அங்கு மக்கள் சரியான தீர்ப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கையை அவர்கள் தெரிவித்தார்கள். அவர் எதிர்பார்த்த, அவர் விரும்பிய நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கும் நேரத்தில் அவர் இங்கு இல்லை.

தேசீய வளர்ச்சிக் கூட்டங்களில் இராச்சியங்களுக்குக் கிடைக்கவேண்டிய அதிகாரம், இராச்சியங்களுக்கு இருக்க வேண்டிய நிதி வசதிகள் ஆகியவைகளுக்காக அவர் கேரள முதலமைச்சரோடும், வங்கத்தின் துணை முதலமைச்சரோடும்



சேர்ந்து, அயராது, இடைவிடாது முயற்சி செய்து வந்தார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம் ஆகும். உழைப்பாளிகளின் ஏற்றம், இராச்சியங்களின் உரிமைகள், இராச்சியங்களுக்கான வசதிகள், ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை ஆகிய இந்த மிக முக்கியமான காரியங்களுக்காக, நம்மை விட்டுப் பிரிந்த தலைவர் அயராது பாடுபட்டு வந்தார். அதைத் தொடர்ந்து அந்தக் குறிப்பான காரியங்களில் நாம் அனைவரும் ஆழ்ந்த அக்கறை செலுத்தி, அவைகளில் முன்னேற்றம் காணுவதற்குப் பாடுபட வேண்டும் என்கிற முடிவை இன்று ஏற்றுக்கொள்ளுவோமானால், ஓரளவு நம்மாலான அளவுக்கு, இவைகளில் அவரைப் பின்பற்றிச் செல்ல நாம் முயற்சிக்கலாம்.

மிகச் சுருக்கமான காலமே நம்முடைய முதலமைச்சராக இருந்து அவர்கள் போய்விட்டார்கள். கலை; இலக்கியம்; எழுத்து; பேச்சு; அரசியல்; தொட்ட ஒவ்வொரு துறையிலும் தனிச் சிறப்போடு பணியாற்றி, அனைவருக்கும் முன்னோடியாக நின்று, திடீரென்று அவர் காலமாகிவிட்டார். அதை நினைக்கும்போது, என்ன தான் சொல்லிக்கொண்டாலும், வார்த்தைகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு முன்னால் பொருளற்றனவாகப் போய்விடுவதால், ஆறுதல் பெற முடிவதில்லை. இருந்தபோதிலும், இவ்வளவு சீரிய பண்புகளுடன், நற்பணிகளை ஆற்றுவதற்கு வழிகாட்டியாக இருந்த அவர் பிரிவையொட்டி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி, அதன் பொதுச் செயலாளர் வாயிலாகவும், அதனுடைய பல்வேறு தலைவர்கள் வாயிலாகவும், இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பு குறித்து, தனது அஞ்சலி கலந்த கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்துக்களிலே நின்று, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திரு. மூக்கையா தேவர் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம், இந்த மிகப் பெரும் தலைவருடைய உருவப் படம் இங்கு இருப்பது மிகவும் அவசியம் என்பதை, அவரோடு சேர்ந்து நானும் கூறி என்னுடைய கட்சியின் சார்பாக, ஆழ்ந்த அனுதாபத்தை எங்களது தோழமைக் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கும், அண்ணா அவர்கள் குடும்பத்தினருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் மக்களுக்கும் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னால் சரித்திர நாயகன் காந்திஜி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த நாட்டிலே—தமிழகத்திலே—ஒரு பெரிய அரசியல் மாறுதல் ஏற்பட்டதற்குப் பின்னால் நமது மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் ஏறத்தாழ இரண்டாண்டுக் காலம் பதவியிலிருந்த நேரத்தில் திடீரென்று நோய் வந்தது. சுமார் ஆறு மாத காலத்தில் நோயிலிருந்து மீளாமல் அவர் காலமாகிவிட்டார். சுதந்திரம் வந்ததற்குப் பின்னால்தான் காந்திஜி அவர்கள் மறைந்தார்கள். அதேபோல்

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 பிப்ரவரி 21

இந்த நாட்டிலே அடிப்படையான மாறுதல் ஏற்படக்கூடிய காலத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் காலமாகிவிட்டார். அண்ணா அவர்களை வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ கற்பனைகளையெல்லாம் செய்துகொண்டிருந்தோம். தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்திய தேசத்திற்கே தமிழ்க் குடிமகன் ஒருவன் தலைவனாக வரக்கூடும் என்ற ஆர்வமும் கற்பனையும் நமது உள்ளத்தில் இருந்து கொண்டிருந்தது. நமது ஆர்வத்தையும், கற்பனைகளையும் எல்லாம் மண்ணோடு மண்ணாகச் செய்துவிட்டு அவர் மறைந்துவிட்டார். அவருடைய மறைவு இவ்வளவு குறுகிய காலத்தில் இருக்கும் என்று நாம் எண்ணவில்லை.

ஒரு கவிஞன் ஆண்டவனைப் பார்த்து, "அன்பெனும் பிடியுள் அடங்கிடும் மலையே" என்று கூறியிருக்கின்றான். அந்தவிதமாக அண்ணா அவர்கள் அன்பால் எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியவர். அன்பால் தன்பால் ஈர்க்கக்கூடியவர். இந்தச் சட்ட சபைக்குள்ளே அவரை அமைச்சராகப் பார்த்திருக்கிறோம். ஆனால் அவர் இத்தனை பதவிகளை வைத்துக்கொண்டிருந்தாலும் அவர் அவைகளிலிருந்து விலகி நின்று முழு மனிதராகக் காட்சியளித்து வந்தார். முழு மனிதராக அண்ணா அவர்களைத்தான் பார்க்க முடியும். அண்ணா அவர்களிடத்தில் பேசும்போதும், ஏதாவது விவாதம் செய்யும்போதும் அந்த நேரத்திலே எல்லாம் வெளியிலே இருக்கக்கூடிய சாதாரண மனிதரைப்போல்தான் அவர் நடந்து கொண்டாரே தவிர, பெரிய பட்டம் பதவி பெற்றவர், மாநிலத்தின் முதலமைச்சர் என்ற நோக்கோடு அவர் இருந்ததை நான் பார்த்தது இல்லை. அவருடைய பண்பு, அன்பு, எளிமை இவைகள் எல்லாம் நம்முடைய ஞாபகத்திலேயிருந்து நாம் சாகின்றவரையில் மறைந்து போகாது.

அவரிடத்திலேயிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியவை பல. ஆக்க ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் எந்த ரீதியில் பார்த்தாலும் பிறந்த மனிதன் என்றைக்காவது ஒருநாள் பிரிந்து தான் போவான். இதை லோகாயதவாதிகள் லோகாயதமாக எடுத்துக்கொள்ளலாம்; வேதாந்திகள் வேதாந்தமாக எடுத்துக் கொள்ளலாம். அவரிடமிருந்து இந்த உலகம் என்ன கற்றுக் கொள்கிறது என்பதுதான் முக்கியம். அந்த அடிப்படையில் பார்த்தால், அண்ணா அவர்களிடத்தில் நாம் காண்பதெல்லாம் மனித குலம் முழுமைக்கும் அன்புகாட்ட வேண்டும் என்பதே யாகும். 'அன்பு காட்டு' என்று புத்தரும், இயேசுவும் சொன்னார்கள், வாழ்ந்து காட்டினார்கள். அண்ணா அவர்கள் மனித குலம் முழுவதற்கும் அன்பு காட்ட வேண்டும் என்பதை அதிகமாக வாழ்ந்தே காட்டினார்கள்.

இந்தச் சட்ட சபையில் அவரைப் பார்த்தால் நன்கு தெரியும். அவருடைய சட்டையை, அவருடைய முகத்தைக் கவனித்தவர் களுக்குத்தான் தெரியும். சவரம் செய்யாத முகத்துடனும், பொத்தான் போடாத சட்டையுடனும் அவர் காட்சியளிப்பார்.



1969 பிப்ரவரி 21] [திரு. க. ர. நல்லசிவன்]

அவர் தன்னைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாமல், தன்னை மறந்து மக்களுக்காக எப்படி வாழ்ந்தார் என்பதைத்தான் அவருடைய உருவம் நமக்கு எடுத்துக்காட்டி வந்தது. ஏழை எளிய மக்கள் தன்னுடைய வாழ்நாளில் எல்லாவற்றையும் பெற வேண்டுமென்று விரும்பினார். அதற்காக உழைத்து வந்தார். பதவியில் இருந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் அவருடைய உள்ளத்தில் பல்வேறு கற்பனைகள் உதித்தன. அவைகளையெல்லாம் செயல்படுத்த வேண்டிய காலத்தில், கொள்கையாக உருவாக்கு கின்ற நேரத்தில் அவர் நம்மைவிட்டு மறைந்துவிட்டார். அவர் கால மாகிவிட்டது தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்திய தேசத்திற்கே பெரிய நஷ்டமாகும். அன்பு ஒன்றின் மூலமாகவே எல்லோருக்கும் வாழ்வளிக்க முடியும், ஏழைகளையும் அடிமைகளையும் அன்பு வழியின் மூலமாகத்தான் மேம்படுத்த முடியும் என்பதை அவர் ஆதாரமாக எடுத்துக்கொண்டார். அன்புவழிதான் அறவழி என்று அவர் கூறியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவரை விட்டுப் பிரிந்து நிற்கும் அவரது குடும்பத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கோடானுகோடி தமிழ் மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் என்னுடைய கட்சியின் சார்பாக அஞ்சலி கலந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் பெருந் துக்கத்திற்கு ஆளாக்கி வைத்துவிட்டு, நமது அன்பையெல்லாம் ஒருங்கே பெற்ற அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள். அவரிடத்திலே இருந்த தூய்மையான அன்புதான் இந்த நாட்டிலேயுள்ள சாதாரண மக்களையெல்லாம் கவர்ந்திருந்தது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்று வள்ளுவன் கூறிய வாக்கிற்கேற்றாற்போல் தூய்மையான அன்பை அவர் மக்களிடத்திலே கொண்டிருந்ததால்தான், கோடானுகோடி மக்கள் கதறிக் கதறி அழுத காட்சியை நாம் பார்த்தோம். அன்புக்கு மிஞ்சியது எதுவுமே இல்லையென்பதை அவர் நடைமுறையில் காட்டிவிட்டுச் சென்றுவிட்டார்.

அண்ணா அவர்கள் ஓர் உயர்ந்த அறிவுமேதை. மிகுந்த ஜனநாயகப் பண்பு உடையவர். எதிரியினுடைய கருத்தையும் ஆழ்ந்து பரிசீலித்து அவற்றில் நல்லது இருந்தால் எடுத்துக் கொள்ளக்கூடிய உயரிய பண்பு உடையவர் ஆவார்கள். இவற்றை யெல்லாம் அரசியல்வாதிகள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் தன்னுடைய பாரம்பரியமாக அண்ணா அவர்கள் விட்டுச் சென்றி ருக்கிறார்கள். அவர் விட்டுச் சென்ற உயரிய கொள்கைகளை யெல்லாம் நாம் கடைப்பிடித்தால், இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு அது நிச்சயமாக ஊன்றுகோலாக அமையும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடிப்பதுதான் நாம் அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகத்தான் காண்பிக்கும் கடமைப்பாடாக இருக்க முடியும். நாட்டிலேயுள்ள பல்வேறு கருத்து வேறுபாடுகளையுடைய அரசியல் வாதிகளாக இருந்தாலும்கூட அவர்களையெல்லாம் சகோதரர்கள் போல் மதிக்க வேண்டும் என்ற உண்மையை, தானே வாழ்ந்து காட்டினார். எல்லா அரசியல் கட்சிகளும், எல்லாத் தலைவர்களும் அண்ணா அவர்களுடைய பிரிவை சகிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பெரும் தமிழ் மகனை இழந்தது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்திய நாட்டிற்கே ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். நாம் எல்லாம் அவருடைய அன்புவழி, ஜனநாயகப் பண்பு முதலியவற்றைக் கடைப்பிடித்து என்றைக்கும் ஏழை எளிய மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் காரியமாற்றுவதே அவருக்குக் காட்டும் மரியாதையாகும். அண்ணா அவர்கள் தன்னைப்பற்றிக் கவலைப்படாமல், தான் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும்கூட ஏழை எளிய மக்களின் குறைகளைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தார். இன்றையதினம் அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். அவருடைய பணிகளை நாம் மறக்க முடியாது. அவர் விட்டுச் சென்ற பணிகளை அன்புவழி, ஜனநாயகப் பண்பு மூலம் ஆட்சியை நடத்திச் செல்வதே அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாக எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : மன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள அனுதாபத் தீர்மானத்தை ஆதரித்து, நானும் சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள முன்வருகின்றேன். நம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துபோன அண்ணா அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் நேரம் போதாது. அண்ணா அவர்கள் இந்தத் தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மக்களுடைய நலனிற்கும், இன்னும் சொல்லப்போனால் ஏழை அரிஜனங்களுடைய வாழ்க்கையை, மலரச் செய்வதற்கு மாத்திரமல்ல—அவர்கள் படுகின்ற வேதனைகளைப் போக்குவதற்கும் அரும்பாடுபட்டார்கள். ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை நமக்குப் பேச்சின் மூலம் எடுத்துக் காண்பித்தார்கள். அவர் பேசுகின்ற ஒவ்வொரு கூட்டத்திலும் உழைக்கின்ற மக்களுக்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிவந்தார்கள். தங்களுடைய அவலநிலை மாறுவதற்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்று அந்தப் பாட்டாளி மக்கள் எதிர் பார்த்தார்கள். ஆனால், அண்ணா அவர்களின் பிரிவால் அந்தப் பாட்டாளி மக்கள் தனிமையாகத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.





அறிவாளிகளுக்கு எல்லாம் அறிவாளியாக விளங்கினார்கள். தமிழை எடுத்துக் கொண்டீர்களானால், தூய தமிழில் பேசுவதற்காகவே ஆயிரக்கணக்கானவர்களைத் தயார் செய்திருக்கிறார்கள். இப்படிச் சிறந்த தமிழில் அழகாகப் பேசுவதற்கும், அடுக்கு மொழியில் பேசுவதற்கும் கற்றுக்கொடுத்த பேராசிரியராக இருந்த அண்ணா அவர்கள் நம்மிடம் இருந்து மறைந்திருக்கிறார்கள். ஜனநாயகத்திலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக வேண்டி நமது நாட்டில் வாழ வழியின்றி ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வழிகாட்டியாக, ஜனநாயக சக்திகளை எல்லாம் ஒன்று திரட்டுவதிலே முதன்மையானவராக இருந்திருக்கிறார்கள். சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் பறை சாற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். அவர்கள் நமக்குச் சொல்லியிருக்கக்கூடிய அறிவுரைகளை எல்லாம் எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அத்தனைபேரும் எடுத்துச் சொல்லி, அண்ணா அவர்களுடைய குணாம்சங்களைப் பற்றிச் சொன்னார்கள். நானும் என்னுடைய பன்னிரண்டு வருஷ சட்டமன்ற வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் இவ்வளவு மாபெரும் ஆற்றல் படைத்த முதல்வரைப் பார்த்திருக்கவில்லை. இனியும் எப்படியோ ? சொல்வதற்கில்லை. சாதாரண உறுப்பினராக இருந்தாலும் அவரோடு பேசும்போதும், பழகும்போதும் மிகவும் அன்பாக நடத்துவார்கள். அந்த அந்தப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளை, அந்த அந்தப் பிரதேச உறுப்பினர்களிடம் இருந்து கேட்டுத் தெரிந்துகொள்வதிலே மிக்க ஆவலுடையவர்கள். குறிப்பாக எந்த எந்தப் பிரதேசத்தில் என்ன என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். என்ன செய்யலாம் என்று அடுத்து யோசனையும் கேட்பார்கள். அப்படிப்பட்ட மாபெரும் தலைவரை, தமிழ்த் தலைமகனை நாம் இழந்துவிட்டோம் என்று சொல்லி, அண்ணா விட்டுச் சென்ற எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு நாம் எல்லாம் ஒன்றுசேர்ந்து பாடுபடவேண்டுமென்று இந்தச் சமயத்தில் அண்ணாவின் மீது ஆணையிட்டு, அவர்களுடைய குடும்பத்தாருக்கு நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து—பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நாமம் வாழ்க, வாழ்க என்று சொல்லி நானும் எனது அஞ்சலியைச் செலுத்தி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்தின் முன்பு முதல் அமைச்சர் அவர்கள் பிரேரித்துள்ள தீர்மானத்தை ஆதரித்து, அதில் கலந்துள்ள அஞ்சலியைச் செலுத்திக் கொள்வதில் நானும் எனது தமிழரசுக் கழகத்தின் சார்பில் சேர்ந்து பங்கு பெறுகிறேன்.

இந்த மாமன்றத்திற்கு நான் வருவதற்கு யார் காரணமாக இருந்தாரோ, யாரை நம்பி—எனது கொள்கைகளை நிறைவேற்ற நான் ஒருவனாகவே இருந்தாலும் கவலைப்படாது உள்ளே வந்தேனோ, யார் என்னுடைய நாற்பத்தோராண்டு பொது

வாழ்க்கையில் தேர்தல் களத்தில் கால் வைப்பதில்லை என்று நான் கொண்டிருந்த உறுதியைத் தளர்த்தி, என்னைத் தேர்தலிலே நிற்க வைத்து, இந்த அவையின் உறுப்பினராகக் கொண்டு வந்தாரோ அவருக்கு அனுதாபம் சொல்லக்கூடிய பாவம் இந்தச் சட்ட மன்றத்தில் இருக்கும்போதே எனக்கு ஏற்படும் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

ஒன்றைமட்டும் உறுதியாகச் சொல்கிறேன், நான் அவரைத்தான் நம்பியிருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் அவருடைய தலைமையின் கீழே விரைவில் அகில இந்தியாவுக்குமாக மாற முடியும்; இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமராக நமது தமிழ்த் தலைமகன் வருவார்கள் என்று நம்பியிருந்தேன். திரு. ராஜாஜி அவர்கள் இங்கு முதல் அமைச்சராக இருந்த பிறகுதான் இந்திய கவர்னர் ஜெனரலாக ஆனார். இங்கு முதல் அமைச்சராக இருந்த பிறகுதான் திரு. காமராஜர் அகில இந்தியத் தலைவராக காந்தி அடிகளின்—நேரு அவர்களின் தலைமை நீங்கிய பிறகு பாரதத்தின் தலைமைப் பதவியை அடைவதற்கு நம்முடைய அன்புக்கெல்லாம் உரித்தான தலைசிறந்த தமிழ்மகன் அண்ணா தான். அவர் அந்த நிலையை அடைந்துவிடுவார்கள் என்று நாம் எல்லாம் எண்ணி நின்ற நேரத்தில்தான் நாம் அவர்களை இழந்து விட்டோம். ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர் என்று இருந்த நிலையிலேயே உலகத்தின் புகழை எல்லாம், அனுதாபத்தை எல்லாம் தமிழர்களுக்குத் தேடிக் கொடுத்துவிட்டார்கள். இதனை நினைக்கின்றபோதுதான்—இந்திய துணைக்கண்டத்தின் பிரதமராக வந்து கிடைத்திருக்கவேண்டிய புகழ் எல்லாம் தமிழ்ச் சாதிக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்பது தான்—அதிகப்படியான துக்கமே தவிர, பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி என்பது கேள்வி அளவிலேனும் எனக்குத் தெரியும்.

தமிழ்ச் சாதிக்கு, தமிழ் மொழிக்கு இழப்பு நிகழ்ந்திருப் பதற்காகத்தான் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. முப்பதாண்டு காலமாக தமிழ் அன்னையின் எழுதுகோலாக இருந்துவந்தார் அண்ணா. அந்த எழுதுகோல் ஒடிந்துவிட்டது. முப்பதாண்டு காலமாக அரசியல் மேடைகளில் ஒலித்து வந்த குரல் அடங்கி விட்டதால் கலைமகளுடைய வீணையின் நாதம் அடங்கிப்போய் விட்டது. எதேச்சாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் உலகில் போராட்டம் நடந்து வருகின்றது. அதிலே, ஜனநாயகச் சேனைகள் தளபதியை இழந்துவிட்டன. அவருடைய மறைவால் தமிழ்நாடு மிகச் சிறந்த தலைவரை இழந்துவிட்டது; எழுத்தாளரை இழந்து விட்டது; பேச்சாளரை இழந்துவிட்டது. இந்த இழப்புக்கு எவ்வாறு ஈடுசெய்வது ?

1968-ஆம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதி மொழித் தீர்மானத்தைப் பிரேரித்து முதல்வர் அண்ணா பேசியபோது, அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்து அலுவலகங் களிலும் தமிழ்மொழியே பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழி யாகவும் ஆக்கப்படவேண்டுமென்ற திருத்தத்தை நான்





கொடுத்தேன். அவர் எனது திருத்தம் கணிசமான பேர்களின் ஆதரவு பெற்றதா என்று ஆராய்வாரோ என்கிற ஐயப்பாடு எனக்கு இருக்கத்தான் செய்தது. ஆனால், நான் எத்தனை பேர்களுடைய பலத்தைப் பெற்றவன் என்று அவர் பார்க்கவில்லை. நான ஒருவனாகவே இருந்தும் கூட, தனித்த ஓர் உறுப்பினர் கொடுக்கின்ற தீர்மானம் தானே என்று எண்ணாமல், அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு அவர் ஆற்றிய சொற்பொழிவு ஓர் இலக்கியமாகவே திகழ்கின்றதை நான் பார்க்கிறேன். அதை நிறைவேற்றித் தருவது ஒன்றுதான் நாம் அவருக்குச் செலுத்து கின்ற சிறந்த அஞ்சலி.

எனக்கு முன்னே பேசிய தலைவர்கள் குறிப்பிட்டது போல, கடந்த இரண்டாண்டுகளாக அவர் இந்த அவையில் ஆற்றி யிருக்கக்கூடிய உரைகள் நிரந்தரமான இலக்கியங்களாகும் என்று நான் நம்புகிறேன். அவற்றை ஒரு நூலாக்க வேண்டுமென்ற அன்பர்களுடைய அபிப்பிராயத்தில் நானும் கலந்துகொள்கிறேன். அவரது சக அமைச்சர்கள் எடுத்த பெரு முயற்சி—இவர் குறைவா, அவர் கூடுதலா என்கிற ஒருவித வேறுபாடும் இன்றி—ஒன்றே அவரது உயிரைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அதுகூடத் தவறி விட்டது. தலைசிறந்த மருத்துவர்கள் எடுத்துக்கொண்ட சலியாத பெரு முயற்சிகள் எல்லாம் மருத்துவ உலக சரித்திரத்திலே ஒரு புதிய ஏட்டை ஏற்படுத்திற்றே தவிர, அவரது நோயைப் பொறுத்த அளவில் ஒரு இலாபமும் தராமல் போய் விட்டது. ஆகையால் லட்சோப லட்சம் மக்கள் உள்ளத்தில் தலைவனை இழந்த துயரமும், தங்கள் உயிரையே இழப்பதற்குப் போட்டியிடுகிற அளவில் ஒரு பெரும் சேனையைத் தன் பின் பலமாகப் பெற்றிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். இந்தப் பின்பலத்தைக் கொண்டு எல்லாத் தோழமைக் கட்சிகளுடனும் சேர்ந்து—அறிஞர் அண்ணாவின் எண்ணங்களைச் செயலாக்கத் தக்கதோர் சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று வேண்டி, தமிழரசுக் கழகத்தின் சார்பில் தீர்மானத்தை ஆதரித்து, அனுதாபத்தையும், அஞ்சலியையும் செலுத்திக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் மனமார ஆதரித்து, நமது மதிப்பிற்குரிய அண்ணா அவர் களுடைய பெருமையை எடுத்துச் சொல்வதற்கு இது நேரம் இல்லை என்றாலும் ஒருசில வார்த்தைகளை மட்டும் கூறி முடிக்க ஆசைப் படுகிறேன்.

தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணா அவர்களுடைய மறைவினால் தேசத்தைப்பற்றி நான் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், கட்சியிலே எவ்வளவு கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியா விட்டாலும், மொழியிலே எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும், என்னைப் பொறுத்த அளவில்

[திரு. கே. பி. எஸ். மணி] [1969 பிப்ரவரி 21

நான் மிகவும் பாதிக்கப்பட்டவன். காரணம், கடந்த 33 ஆண்டுகளாக அண்ணனை எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு நெருங்கிய உறவு எங்களைப் பிரிக்கமுடியாத உறவாகவே இருந்து வந்தது. நான் இப்படிச்சொல்லும்பொழுது ஒரே ஒரு நிகழ்ச்சியைப் பற்றிமட்டும் இப்பொழுது இங்கே சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் இந்த அவையிலே உறுப்பினராக வருவதற்கு முயற்சி செய்கின்ற நேரத்திலே திருச்சி மாநாட்டிலே 'எனக்கு ஒரு இடத்தை விட்டுவிடவேண்டும்' என்று அவர்களைச் சந்தித்துச் சொன்னபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாவலர் அவர்களும் உணவு அமைச்சர் அவர்களும் இருந்தார்கள். அப்பொழுது இந்தச் சாதாரண ஊழியனை அவர்கள் இருக்கையிலேயே அமரச்செய்து சரிசமமான இருக்கை கொடுத்து "நீ வேறு நான் வேறு என்று நினைக்காதே, நான் என்றென்றும் உனக்கு அண்ணனாக இருக்கிறேன், நல்ல காரியங்களைச் செய்" என்று கூறினார். நான் என்னுடைய குறுகிய அரசியல் வாழ்க்கைக் காலத்திலே எத்தனையோ அரசியல்வாதிகளைச் சந்தித்து இருக்கிறேன். எந்தத் தலைவரும் தன்னுடைய கட்சி ஊழியனையும் தன்னையும் ஒன்றாக வைத்துப் பேசியதில்லை. அவர்கள் எல்லோருடனும் சமமாகப் பழகினார்கள். அவர்கள் இறந்த பிறகு கூட அவர்களிடம் ஒரு குறையைக் கண்டேன்! அந்தக் குறையை அவர்கள் நிவர்த்தி செய்திருந்தால் உண்மையாகவே அவர்கள் இறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். உலகத்திலே எந்த அரசியல் வாதியை எடுத்துக்கொண்டாலும் கூட கோபிக்கத் தெரியாத அரசியல் வாதியைக் காணமுடியாது. ஆனால் அண்ணா அவர்களுக்குக் கோபிக்கத் தெரியாது. அவர்கள் கோபித்து இருந்தால் சீக்கிரமாக இறந்திருக்க மாட்டார் என்பதுதான் என்னுடைய எண்ணம். அவர் பேசும்பொழுதும் சிரிப்பு, வீரத்தைச் சொல்லும்பொழுதும் சிரிப்பு. விவேகங்களை, விஷயங்களை எடுத்துச் சொல்லும்பொழுதும் சிரிப்பு. இப்படி அவர் சிரிக்காத நேரம் இல்லை. வாழும் பொழுதும் சிரித்துக்கொண்டே இருந்து நம்மை விட்டுப் பிரியும் பொழுதும் அந்தப் பெரிய மனிதர் சிரிக்காமல், கோபித்து 'முறையாக நடந்து கொள்ளுங்கள்' என்று சொல்லிச் செல்லாமல், இறக்கும்பொழுதும் சிரித்துக்கொண்டே இறந்தார். அதனால் தான் உலகம் முழுவதும் அவரைப் போற்றுகிறது. இதையெல்லாம் முன்னாலேயே அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர் இறந்த பிறகுதான் நமக்கெல்லாம் தெரிந்தது. கீழ்வெண்மணியில் நடந்ததே, வால் நட்சத்திரம்போன்று, அது காரணமாக இருக்குமோ என்று ஐயுறுகிற நிலைமை. பதினெட்டு மாதக் காலத்திலே பாபாஜி அம்பேத்கார் அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றித் தந்தார்கள். பதினெட்டு ஆண்டுக் காலத்திலே, தானே ஒரு கட்சியை உண்டாக்கி, முறையாக அதை வளர்த்து ஆட்சிக்குக் கொண்டு வந்தார் அறிஞர் அண்ணா அவர்கள். அம்பேத்கார் அவர்கள் இறந்த நேரத்திலே பம்பாய் நகரமே இருட்டோடு இருந்தது. அண்ணா அவர்கள் இறந்தவுடன் சென்னை நகரமும் அப்படித்தான் இருந்தது. ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இறப்பில்



1969 பிப்ரவரி 21] [திரு. கே. பி. எஸ். மணி]

அவர்களையும் மிஞ்சிவிட்ட நிலைமைக்கு அண்ணா அவர்கள் வந்துவிட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் எதை எதைச் சொன்னார்களோ அத்தனையையும் செய்துகொண்டுதான் இருந்தார்கள். சொல் ஒன்று, செயல் ஒன்று இல்லாமல், சொல்வதையெல்லாம் செய்கையால் செய்து கொண்டு இருந்தார்கள். அந்த ஒரே ஒரு பெருமைதான். உலகம் அவரைப் போற்றுவதற்குக் காரணமாக அமைகிறது. இந்த மன்றத்திலே அவர்களுடைய படத்தை வைத்துப் பெருமை கொள்ளலாம். அதோடு அவர்கள் எந்த எந்தக் காரியங்களைத் துவககிவிட்டாரோ அந்தக் காரியங்களையெல்லாம் எத்தகைய கஷ்டங்கள் வந்தபோதிலும் பூரணமாக நிறைவேற்றித் தருவது என்பதுதான் அவர்களிடத்திலே நாம் உண்மையான மதிப்பு வைத்திருக்கிறோம் என்பதற்கு அடையாளமாகும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய கட்சியினரும் நானும் என்றென்றும் அவர்களுடைய கொள்கைக்கும், எண்ணத்திற்கும், அவர்கள் விட்டுப்போன காரியங்களை நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று கூறிக்கொண்டு, எங்கள் வணக்கங்களை அவர்களுக்குக் கூறிக்கொண்டு எங்களுடைய அஞ்சலியை அவர்களுடைய பாதாரவிந்தத்திற்குச் சமர்ப்பிக்கிறோம்.

*ஹாஜி ம. மு. பீர். முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, "அறிஞனின் மரணம் அகிலத்தின் மரணம்" என்று நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்! "எல்லையோடு கூடிய வாழ்க்கையை நிறைவுபடுத்திக்கொண்டு, எல்லையற்ற வாழ்க்கையைத் துவக்கிக் கொள்வதற்குப் பெயர்தான் மரணம்" என்று மெய்நிலைகண்ட ஞானிகள் கூறுகின்றார்கள். நேசனை நேசிக்கின்ற நேசர்களின் நெஞ்சமெல்லாம் நிறையச் செய்வதுதான் வாழ்க்கையின் வெற்றியாகும். நாலரைக் கோடி மக்களின் நாயகராகத் திகழ்ந்த தமிழின் நேசர்—தமிழர்களின் நேசர்—நேசித்த மக்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளார்! நேசித்த பொழுதெல்லாம் சமயப் பாகுபாடு காட்டவில்லை, கட்சிப் பாகுபாடு காட்டவில்லை. எங்கே அறிவு இருந்ததோ, எங்கே அன்பு இருந்ததோ, எங்கே அருள் இருந்ததோ, அங்கேயெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களின் நேசம் நிறைந்து இருந்தது என்பதைத்தான் அறிஞர் அண்ணாவின் அரசியலிலே பார்க்கிறோம்.

1942-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' பத்திரிகையை ஆரம்பித்ததிலிருந்து அவர்களின் நல்ல தமிழால் தமிழர்களின் இதயங்களிலெல்லாம் குடியேறி விட்டார்கள்! அவர்களுடைய எழுத்து ஆற்றல், பேச்சாற்றல், அறிவாற்றல் எல்லோரையும் இன்பத் தமிழ்மீது மோகத்தையும் தாகத்தையும் ஊட்டி வளர்ப்பதற்கு ஒரு உறுதுணையாக இருந்தது. அண்ணா அவர்களின் அறநெறிப் பிரச்சாரங்களையும், அரசியல் விளக்கங்களையும் நான் கேட்டிருக்கிறேன். சமய மாநாடுகளிலே அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, மனிதன் மனிதனாகவும் புனிதனாகவும் வாழுகின்ற நிலைமைக்குச் சமய உண்மைகள் உறுதுணை

யாக இருக்கமுடியும் என்று முழங்கியதைக் கேட்டு இருக்கிறேன். அவர்கள் ஒரு முறை, காயலபட்டினம் என்று நினைக்கிறேன், நபிகள் நாயகம் பிறந்தநாள் மாநாட்டில் கலந்துகொண்டபோது இஸ்லாமிய தத்துவக் கருத்துக்கள் எல்லாம் உரித்து வைத்திருந்த பலாச்சுளையைத் தேனோடு கலந்து சுவைத்துத் தின்பதற்குத் தருவது போல் இருந்தது என்று கூறினார்கள்! தமிழுக்கே பெருமை தேடித் தந்த நம்முடைய பாட்டன், வள்ளுவன், பண்டிதருக்கு மத்தியில் சிறை வைக்கப்பட்டிருந்த நேரத்திலே, அவரை பாமரரிடையே உலாவ வைத்த பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும். ஈரோட்டிலே நடந்த குறள் மாநாட்டிலே குறளின் மகிமையைப் பற்றி அவர்கள் பேசிய நேரத்திலே தான் பண்டிதர்கள் மட்டுமே அதுவரை ரசித்துவந்த குறளை பாமரர்களும் மாணவர்களும் ரசித்துச் சுவைக்கத் தொடங்கும் நிலைமை ஏற்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களோடு ஓரளவுக்கு உவமை கூறுவதற்கு தமிழ் நாட்டு அரசியலிலும் சரி, அகில இந்திய அரசியலிலும் சரி, உலகத்தின் அரசியலிலும் சரி, நான் உவமை சொல்வதற்கு ஒருவரைத் தேடினேன் ! ஆனால் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஈடாக எல்லாத் துறைகளிலும் ஆற்றலுள்ள ஒரு துரைமகனைக் காண முடியவில்லை. எழுத்துத் துறையை எடுத்துக் கொண்டால், அறிஞர் அண்ணாதுரை ஒரு தனித் துரை. பேச்சுத் துறையிலும் அவரே துரை. நாடகத் துறையிலும் அவர்கள்தான் துரை. நடிப்புத் துறையிலும் அவர்கள் ஒரு தனி துரையே ! சீர்திருத்தக் கருத்துக்களை வாரி வழங்குகின்ற வள்ளல் துறையிலும் அவர்கள் ஒரு தனி துரை. துரைத்தனத் துறையிலும் அத்துரைக்கு ஈடான துரை யாருமில்லை என்பதைக் காட்டினார்! எழுத்தில், பேச்சில், நாடகத்தில், புதினத்தில், சிறுகதைத் துறையில், துரைத்தனத் துறையில், வேறு எந்தத் துறையிலும் அத்துரைக்கு உவமையாக எத்துரையும் இல்லை என்ற உண்மையை அறிஞர் அண்ணாதுரை அவர்களிடம் பார்க்கின்றோம்.

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?' என்று அண்ணா அவர்கள் முப்படையாளரைப் பார்த்துக் கேட்டார்கள். 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி, அன்பும் பண்பும், நேசமும் பாசமும் கொண்ட தம்பியர் படையை அடிப்படையாகக் கொண்டு அண்ணா அவர்கள் காட்டிய அறவழி அரசியல் துறைக்குப் புதிய வழி என்பது மட்டுமல்ல, புதுமையான வழியுமாகும்.

"தேர் இருக்கத் தேரோட்டி வீழ்ந்து விட்டான்.
(ஆட்சித் தேர் இருக்க, கட்சித் தேர் இருக்க, தேரோட்டி வீழ்ந்து விட்டான்.)
தென்றலற்ற பூங்காவாய் ஆக்கிவிட்டான்.
பாரிருக்க பண்பமைச்சன் பறந்து விட்டான்.
படையிருக்க (சேரணிப் படையிருக்க)
தளபதியோ சாய்ந்து விட்டான்.



போரிருக்க நடுநிலையன் மாய்ந்து விட்டான்.
புகழ் இருக்க பூதவுடல் புதைத்துக் கொண்டான்.
கூடு உண்டு (மக்கள் மன்றம், சட்ட மன்றம்,
காஞ்சி ஏடு என்னும் கூடு உண்டு)
இசையெழுப்பும் குயில்தான் இல்லை.
வீடுண்டு (தமிழ்நாடு என்னும் வீடுண்டு
அதற்குப்) புகழ் சேர்க்கும் புதல்வன் இல்லை.
சேனையுண்டு (தம்பியர் சேனை)
படைத் தலைவன் இங்கே இல்லை.
வீணை உண்டு (அதில் மோகனத்தை மீட்டிக்காட்டும்)
விரல்தான் இல்லை.

பானையுண்டு, படியரிசி அதிலே உண்டு
பசித்தோரின் குறைதீர்த்த அண்ணன் எங்கே ?

தீன்குலத்தோர் (முஸ்லிம்கள்) குறைகேட்ட தீரன்
எங்கே ?

சிறுபான்மை இனத்தோரின் தோழன் எங்கே ?

துறைதோறும் (ஆய துறை அத்தனையிலும் உள்ள
புகழைச்) சிறையெடுத்த சொல்லின் வேந்தன்
தூய தமிழ் நாட்டுக்கு (தமிழ் நாடென்னும்)
பெயர் கொடுத்தோன்.

வரியின்றி நிதிநிலையறிக்கை இங்கே தந்தோன்.
வண்டமிழை மேடையெல்லாம் வாழ வைத்தோன்.
நிறைகுளத்தின் தாமரையாய்ச் சிரித்திருந்தோன்.
நேசமிகும் கூட்டணியால் வெற்றி கொண்டோன்.
திரையெழுப்பும் கடற்கரையில் புதைந்தா விட்டான் ?
இல்லை ! இல்லை !
திருநாட்டின் தென்றலுடன் தவழுகின்றான்."

அறிஞர் அண்ணா காலமாகிவிட்டார் என்று சொல்லுகிறார்கள். இல்லை, இல்லை. அவர்கள் காலம் ஆகவே ஆகிவிட்டார்கள் ! ஞாலத்தில் அவர் செய்த சேவை, எழுதிய எழுத்து, பேசிய பேச்சு, சிந்தனை, சொன்ன சீர்திருத்தக் கருத்துக்கள் இவைகள் எல்லாவற்றையும் வைத்து, காலத்தையும் கடந்து நிற்கக்கூடிய அளவுக்கு அற்புதத்தை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நினைவுகூறி, அவர்களைக் குறித்து என்னுடைய உரையை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம் என்றாலும், அறிஞர் அண்ணாவுக்குப் புகழாரம் சூட்டுகின்ற திறமை எனக்கு இருப்பதாக நான் எண்ணாத காரணத்தால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் அல்ஹாஜ் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்கள் அண்ணா அவர்களைப் பற்றிக் கூறியிருப்பதைக் கூறுகிறேன்.

"தமிழக முதலமைச்சர் உயர்திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் எழுச்சியூட்டக்கூடிய ஏந்தலாகவும், அருந்திறன் மிக்க மக்கள் தலைவராகவும் திகழ்ந்தார். தம்மைப் பின்பற்றுவோரின் அன்பு, அபிமானம், பக்தி, பாசப் பிணைப்பு அனைத்தையும் பெற்றுள்ள கவர்ச்சிமிக்க ஈடிணையற்ற தலைவராக அவர் விளங்கினார். தீவிரமான தூர நோக்குடையவராகவும், இலட்சியத்திற்காக தைரியமாகப் போராடும் நெஞ்சுரமிக்கவராகவும் அவர் இருந்த போதிலும் அவரது எதிரிகள் கூட அன்பும், மரியாதையும் செலுத்தும் வகையில் இனிய பண்பாளராகவும், நடுநிலை தவறாத நற்குணங்கள் பொருந்தியவராகவும் விளங்கினார்.

சிந்தனையாளர், சிறந்த எழுத்தாளர், சீரிய சொற்பொழிவாளர் என்ற முறைகளில் அவர் பெரும் சிறப்புகள் பெற்றிருந்த அதே நேரத்தில், தாய் மொழியாம் தமிழ்மொழி மீது கொண்டிருந்த நியாயமான பற்றின் காரணமாக அவர் மக்களது எண்ணங்களையும் இதயங்களையும் கவர்ந்தார். அவர் முதலமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்றுப் பணியாற்றிய கால கட்டம், வருந்தத் தக்க முறையில், மிகவும் குறுகியதாக இருந்தபோதிலும், அவர் தன்னைத் தனிச் சிறப்புமிக்க நிர்வாகியாகவும், சிறந்த ராஜ தந்திரியாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபித்துக் காட்டிவிட்டார்" என்று கூறியுள்ளார்கள்.

மனிதன் அழுதுகொண்டு பிறக்கிறான், மற்றவர்கள் சிரித்துக் கொண்டு நிற்கிறார்கள். சிரித்துக் கொண்டு அவன் இறக்க வேண்டும், மற்றவர்கள் அழுது கொண்டு நிற்கவேண்டும். இதுதான் வெற்றி கண்டவனுடைய வாழ்வுக்குரிய இலக்கணம். அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவு இருக்கின்றது என்று கூறி, இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்துடன் இத்தீர்மானத்தை ஆதரித்து அமருகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஈடும் இணையும் அற்ற ஒரு பெரும் தலைவராய்த் திகழ்ந்தவரும், தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சராய் விளங்கியவரும், கோடானு கோடி மக்களின் உள்ளத்தில் குடியிருந்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவு குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்களையும் கருத்துக்களையும் கேட்டுக் கேட்டு பல்வேறு வாய்ப்புகளிலே, பல்வேறு சூழ்நிலைகளிலே, மகிழ்ந்து இன்புற்றிருந்த நாம், இன்று அவருடைய அருமை பெருமைகளை எல்லாம் பற்றிப் பேசித் துக்கத்தையும், துன்பத்தையும் ஆற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம். அந்த வகையிலே கோடானுகோடி மக்களுடைய உள்ளத்திலே இடம் பெறுகின்ற அளவுக்கு மற்றவர்களுக்கு இல்லாத அறிவுத் திறனும், ஆற்றல் திறனும், பண்புத்





திறனும் பெற்றிருந்த சிறப்பான பாங்கினை எண்ணியெண்ணி ஏங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவருடைய அருமை பெருமைகளைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசுவதன் மூலம் ஓரளவு ஆறுதல் பெற இயலுமா என்ற நிலையில் அவர்களைப்பற்றிப் பேசி ஆறுதல் பெற முயற்சிக்கிறோம். அந்த அளவுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பெற்றிருந்தார்கள். பட்டம் பதவிகள், அதிகார ஆதிக்கங்கள், வசதி வாய்ப்புக்கள் ஆகியவற்றைக்கூட பலர் எளிதாகப் பெற்றிட முடிகிறது. ஆனால், பிறருடைய இதயத்தில் இடம் பெறுவது என்பது எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தாலும், எவ்வளவு அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் உலகத்திலே பலர் பெற முடியாத ஒன்று. எதையும் பெற்று விடலாம், பிறருடைய இதயத்திலே இடம் பெறுவது என்பது எல்லோராலும் இயலாத ஒன்று. உடன் பிறந்தார் இதயத்திலேகூட இடம் பெற முடியாமல் பலர் வாழ்கிறார்கள்; உற்றார் உறவினர் இதயத்திலே இடம் பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அண்ணா அவர்கள் அனைவருடைய உள்ளத்திலும், நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்று உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார். அவர் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒவ்வொரு துறையிலும் இருந்த காரணத்தால்தான், எல்லாத் துறையினரும் தங்கள் தங்கள் துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது என்று எண்ணித் துயருற்று அல்லல்படுகிறார்கள். கோடிக் கணக்கான மக்கள் 'அண்ணா', 'அண்ணா' என்று அலறி ஆற்றாது அழுத காட்சியைக் கண்டோம். அந்த அளவுக்குச் சிறப்புப் பெற்றவராகவும், பண்பாளராகவும், மக்களுடைய இதயத்திலே இடம் பெற்றவராகவும் அறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார்கள்.

மற்றவர்கள் எடுத்துச் சொன்ன அளவிற்கு அடிக்கடி அவர்கள் பல்வேறு அறிவுரை கூறி வந்திருக்கிறார்கள். மாற்றாரால் நாம் எவ்வளவு பாராட்டப் படவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ, அந்த அளவிற்கு நாம் மாற்றாரை மதிக்க, பாராட்டக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்படிக் கற்றுக்கொண்டால்தான் நாம் எண்ணுகிற எண்ணங்களை ஈடேற்ற முடியும் என்று அடிக்கடி அறிவுரை சொல்வார்கள். அந்த அடிப்படையில் பிறந்த அழகான பழமொழிதான் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பது. மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்குமே தவிர, அது மாற்றான் தோட்டத்து மல்லிகை என்பதால் அதன் மணம் போய் விட்டது என்று சொல்வது அரசியல் நாகரிகமாகாது என்று அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். அரசியலைப் பற்றி எடுத்துச் சொல்கிறபோது, "நான் போராட்டத்தைத் தேடி அலைய மாட்டேன். ஆனால், தேடி வருகிற போராட்டத்தைக் கண்டு நழுவி ஓடமாட்டேன்" என்று அடிக்கடி சொல்வார்கள். அரசியலில் நல்ல பண்பாடுகள் இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்வார்கள்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1969 பிப்ரவரி 21

ஜனநாயக முறைகள் உலகத்தில் பல நாடுகளில் இருந்தாலும் கூட, ஜனநாயக முறைகளுக்காக நாம் சட்ட திட்டங்கள் பல எழுதி வைத்தாலும்கூட, அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வது மனிதத் தன்மையோடு கூடிய ஜனநாயகப் பண்பாடுகள் மலரவேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்லும் பாங்கினை நாம் காண்கிறோம். அடிக்கடி அவர்கள் சொல்வதெல்லாம், கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பளித்து, அதே சமயத்தில் மனிதனை மனிதனுக மதித்து ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அன்பையும் நட்பையும் காட்டவேண்டும் என்பதாகும். நூற்றுக்கு நூறு சதவிகிதம் கருத்து வேறுபாடு இருந்தாலும், ஒருவரை ஒருவர் மதிக்கவேண்டும், நட்பு கொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். அதனுல்தான் அவர்கள் அத்தனை பேர்களின் உள்ளங்களையும் ஈர்க்கும் பாங்கினைப் பெற்றிருந்தார் என்கிறோம். ஆகவே, அண்ணா அவர்களின் அருமை பெருமைகளை எண்ணி எண்ணி நாம் இறும்பூது எய்தினுலும், அவற்றை எண்ணித் தவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். உலகத்தில் எவ்வளவோ வகைகளில் சிறந்தவர்கள் இருந்ததை, இருப்பதைக் காண்கிறோம். புத்தரிடத்தில் காணப்பட்ட அன்பு, ஏசுநாதரிடம் காணப்பட்ட கனிவு, நபி நாயகம் அவர்களிடம் காணப்பட்ட தெளிவு, வள்ளுவப் பெருந்தகையிடம் காணப்பட்ட வாழ்க்கை நெறி, ஆப்ரகாம் லிங்கன் அவர்களிடம் காணப்பட்ட தொண்டு உள்ளம், லெனின் அவர்களிடம் காணப்பட்ட அறிவுத் தெளிவு, வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களிடம் காணப்பட்ட உறுதி, அண்ணல் காந்தி அடிகளிடம் காணப்பட்ட எளிமை, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடம் காணப்பட்ட ஜனநாயகப் பண்பு ஆகிய எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழகத்தின் அளவில் வைத்துப் பார்க்கக்கூடிய ஒரே ஒரு உருவமாக அண்ணா அவர்கள் திகழ்ந்த பாங்கினை நாம் காண்கிறோம். ஆகவே, அவர்களது அருமை பெருமைகளை எல்லாம் நாம் நினைந்து நினைந்து பார்ப்பதன் மூலம் நம்மை நாமே திருத்திக் கொள்ளவும் அவர்கள் சென்ற வழியில் சென்று பலராலும் பாராட்டக்கூடிய அளவிற்கு நாம் நம் பணிகளைச் செய்திடவும் வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னதுபோல், இம்மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் அண்ணா அவர்களை நினைவில் தாங்கி வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு, வள்ளுவர் படம் இருப்பதைப் போல், ராஜாஜி, காந்தியார் அவர்களின் படம் இருப்பதைப் போல், இம்மன்றத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடையவும் உள்ளங்களைக் கவர்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை இங்கு வைக்கவேண்டும் என்பது மிக மிகப் பொருத்தமுடையதொன்றாகும். அதேபோன்று உலக மக்களின் கவனத்தை, நினைவை ஈர்க்கக் கூடிய அளவிற்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தை "அண்ணா விமான நிலையம்" என்று மாற்றக் கூடிய அளவிற்கு முயற்சி எடுப்பது பொருத்தமுடையதொன்றாகும். மக்கள் நினைவு



1969 பிப்ரவரி 21] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

படுத்திக் கொள்கிற வகையில் அமெரிக்காவில் ஜபர்சன் நினைவு மண்டபம் இருப்பதைப் போல், லிங்கன் நினைவு மண்டபம் இருப்பதைப் போல் அண்ணா அவர்களின் நினைவாக எழுநிலை மாடம் ஒன்று எழுப்புவது பொருத்தமுடையதொன்றாகும். அச்செயல்களில் நாம் ஈடுபடுவோமாக என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணாதுரை என்பதில் இரண்டு சொற்கள் உள்ளன. ஒரு பகுதி 'அண்ணா'. மற்றொரு பகுதி 'துரை'. 'அண்ணா' என்ற சொல் உடன்பிறந்த பாசத்தையும், 'துரை' என்ற சொல் ஈர்க்கக் கூடிய இதயங்களை ஆள்வது என்பதையும் குறிக்கும். இதயங்களை ஈர்ப்பதும் அப்படி ஈர்க்கப்படக்கூடிய இதயங்களை ஆள்வதும் ஆக இரண்டு சொற்களும் சேர்ந்துதான் 'அண்ணாதுரை' என்ற பெயரைத் தருகின்றன.

அவர்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் தலைசிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்! ஈடும் எடுப்புமற்ற எழுத்தாளராக விளங்கினார்! கருத்தைக் கவரும் கட்டுரையாளராக விளங்கினார்! நெஞ்சையள்ளும் சிறுகதையாசிரியராக விளங்கினார்! ஆவலூட்டும் நாவலாசிரியராக விளங்கினார். நயமிக்க நாடக ஆசிரியராக விளங்கினார்! திறமை மிக்க நாடக இயக்குநராக விளங்கினார்! வியப்புக்குரிய நடிகராக விளங்கினார்! சிறந்த திரைப்படக் கதையாசிரியராக விளங்கினார்! கவர்ச்சி மிக்க திரைப்படக் கதை உரைநடை ஆசிரியராக விளங்கினார்! புகழ்மிக்க இதழாசிரியராக விளங்கினார்! ஆற்றல் கொண்ட அச்சக உரிமையாளராக விளங்கினார்! செல்வாக்கு மிக்க வெளியீட்டாளராக விளங்கினார்! ஆர்வமிக்க சீர்திருத்தவாதியாக விளங்கினார்! பழுத்த பகுத்தறிவு வாதியாக விளங்கினார்! துவக்கக் காலத் தொழிற்சங்கத் தலைவராக விளங்கினார்! துவக்கக்கால பள்ளி ஆசிரியராக விளங்கினார்! ஒப்புயர்வற்ற அரசியல் கட்சித் தலைவராக விளங்கினார்! தொண்டர்கள் போற்றும் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்! சிறைக்கு அஞ்சா விடுதலை வீரராக விளங்கினார்! அறப்போர் நடத்தும் தானைத் தலைவராக விளங்கினார்! பகைவரும் போற்றும் அரசியல் பண்பாளராக விளங்கினார்! மாற்றுக்கட்சியினரும் மதிக்கும் மாண்புமிக்கவராக விளங்கினார்! நகைச்சுவை மிக்க உரையாடல் வல்லாராக விளங்கினார்! பயன்மிக்க வாதம் புரியும் பாராளுமன்ற வாதியாக விளங்கினார்! ஓங்கு புகழ் மிக்க அறிவாளியாக விளங்கினார்! செயல்திறன் மிக்க ஆற்றலுடையாராக விளங்கினார்! நெஞ்சுரமிக்க நேர்மையாளராக விளங்கினார்! நம்பிக்கைக்குரிய நாணய நலமுடையாராக விளங்கினார்! கண்டோர் மெச்சும் அடக்கமுடையாராக விளங்கினார்! ஏற்றிப் போற்றுதற்குரிய எளிமையுடையாராக விளங்கினார்! அன்பு நெறி பேணும் அகிம்சாவாதியாக விளங்கினார்! அறநெறி மதிக்கும் அறவோராக விளங்கினார்! பல்லோர் புகழும் நாட்டின் முதல் அமைச்சராக விளங்கினார்! திராவிட முன்னேற்றக் கழகப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1969 பிப்ரவரி 21

ஜனநாயக முறைகள் உலகத்தில் பல நாடுகளில் இருந்தாலும் கூட, ஜனநாயக முறைகளுக்காக நாம் சட்ட திட்டங்கள் பல எழுதி வைத்தாலும்கூட, அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வது மனிதத் தன்மையோடு கூடிய ஜனநாயகப் பண்பாடுகள் மலரவேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்லும் பாங்கினை நாம் காண்கிறோம். அடிக்கடி அவர்கள் சொல்வதெல்லாம், கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பளித்து, அதே சமயத்தில் மனிதனை மனிதனாக மதித்து ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அன்பையும் நட்பையும் காட்டவேண்டும் என்பதாகும். நூற்றுக்கு நூறு சதவிகிதம் கருத்து வேறுபாடு இருந்தாலும், ஒருவரை ஒருவர் மதிக்கவேண்டும், நட்பு கொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். அதனால்தான் அவர்கள் அத்தனை பேர்களின் உள்ளங்களையும் ஈர்க்கும் பாங்கினைப் பெற்றிருந்தார் என்கிறோம். ஆகவே, அண்ணா அவர்களின் அருமை பெருமைகளை எண்ணி எண்ணி நாம் இறும்பூது எய்தினாலும், அவற்றை எண்ணித் தவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். உலகத்தில் எவ்வளவோ வகைகளில் சிறந்தவர்கள் இருந்ததை, இருப்பதைக் காண்கிறோம். புத்தரிடத்தில் காணப்பட்ட அன்பு, ஏசுநாதரிடம் காணப்பட்ட கனிவு, நபி நாயகம் அவர்களிடம் காணப்பட்ட தெளிவு, வள்ளுவப் பெருந்தகையிடம் காணப்பட்ட வாழ்க்கை நெறி, ஆப்ராகாம் லிங்கன் அவர்களிடம் காணப்பட்ட தொண்டு உள்ளம், லெனின் அவர்களிடம் காணப்பட்ட அறிவுத் தெளிவு, வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களிடம் காணப்பட்ட உறுதி, அண்ணல் காந்தி அடிகளிடம் காணப்பட்ட எளிமை, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடம் காணப்பட்ட ஜனநாயகப் பண்பு ஆகிய எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழகத்தின் அளவில் வைத்துப் பார்க்கக்கூடிய ஒரே ஒரு உருவமாக அண்ணா அவர்கள் திகழ்ந்த பாங்கினை நாம் காண்கிறோம். ஆகவே, அவர்களது அருமை பெருமைகளை எல்லாம் நாம் நினைந்து நினைந்து பார்ப்பதன் மூலம் நம்மை நாமே திருத்திக் கொள்ளவும் அவர்கள் சென்ற வழியில் சென்று பலராலும் பாராட்டக்கூடிய அளவிற்கு நாம் நம் பணிகளைச் செய்திடவும் வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னதுபோல், இம்மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் அண்ணா அவர்களை நினைவில் தாங்கி வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு, வள்ளுவர் படம் இருப்பதைப் போல், ராஜாஜி, காந்தியார் அவர்களின் படம் இருப்பதைப் போல், இம்மன்றத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடையவும் உள்ளங்களைக் கவர்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை இங்கு வைக்கவேண்டும் என்பது மிக மிகப் பொருத்தமுடையதொன்றாகும். அதேபோன்று உலக மக்களின் கவனத்தை, நினைவை ஈர்க்கக் கூடிய அளவிற்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தை "அண்ணா விமான நிலையம்" என்று மாற்றக் கூடிய அளவிற்கு முயற்சி எடுப்பது பொருத்தமுடையதொன்றாகும். மக்கள் நினைவு



1969 பிப்ரவரி 21] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

படுத்திக் கொள்கிற வகையில் அமெரிக்காவில் ஜபர்சன் நினைவு மண்டபம் இருப்பதைப் போல், லிங்கன் நினைவு மண்டபம் இருப்பதைப் போல் அண்ணா அவர்களின் நினைவாக எழுநிலை மாடம் ஒன்று எழுப்புவது பொருத்தமுடையதொன்றாகும். அச்செயல்களில் நாம் ஈடுபடுவோமாக என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணாதுரை என்பதில் இரண்டு சொற்கள் உள்ளன. ஒரு பகுதி 'அண்ணா'. மற்றொரு பகுதி 'துரை'. 'அண்ணா' என்ற சொல் உடன்பிறந்த பாசத்தையும், 'துரை' என்ற சொல் ஈர்க்கக் கூடிய இதயங்களை ஆள்வது என்பதையும் குறிக்கும். இதயங்களை ஈர்ப்பதும் அப்படி ஈர்க்கப்படக்கூடிய இதயங்களை ஆள்வதும் ஆக இரண்டு சொற்களும் சேர்ந்துதான் 'அண்ணாதுரை' என்ற பெயரைத் தருகின்றன.

அவர்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் தலைசிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்! ஈடும் எடுப்புமற்ற எழுத்தாளராக விளங்கினார்! கருத்தைக் கவரும் கட்டுரையாளராக விளங்கினார்! நெஞ்சையள்ளும் சிறுகதையாசிரியராக விளங்கினார்! ஆவலூட்டும் நாவலாசிரியராக விளங்கினார். நயமிக்க நாடக ஆசிரியராக விளங்கினார்! திறமைமிக்க நாடக இயக்குநராக விளங்கினார்! வியப்புக்குரிய நடிகராக விளங்கினார்! சிறந்த திரைப்படக் கதையாசிரியராக விளங்கினார்! கவர்ச்சி மிக்க திரைப்படக் கதை உரைநடை ஆசிரியராக விளங்கினார்! புகழ்மிக்க இதழாசிரியராக விளங்கினார்! ஆற்றல் கொண்ட அச்சக உரிமையாளராக விளங்கினார்! செல்வாக்கு மிக்க வெளியீட்டாளராக விளங்கினார்! ஆர்வமிக்க சீர்திருத்தவாதியாக விளங்கினார்! பழுத்த பகுத்தறிவு வாதியாக விளங்கினார்! துவக்கக் காலத் தொழிற்சங்கத் தலைவராக விளங்கினார்! துவக்கக்கால பள்ளி ஆசிரியராக விளங்கினார்! ஒப்புயர்வற்ற அரசியல் கட்சித் தலைவராக விளங்கினார்! தொண்டர்கள் போற்றும் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்! சிறைக்கு அஞ்சா விடுதலை வீரராக விளங்கினார்! அறப்போர் நடத்தும் தானைத் தலைவராக விளங்கினார்! பகைவரும் போற்றும் அரசியல் பண்பாளராக விளங்கினார்! மாற்றுக்கட்சியினரும் மதிக்கும் மாண்புமிக்கவராக விளங்கினார்! நகைச்சுவை மிக்க உரையாடல் வல்லாராக விளங்கினார்! பயன் மிக்க வாதம் புரியும் பாராளுமன்ற வாதியாக விளங்கினார்! ஓங்கு புகழ் மிக்க அறிவாளியாக விளங்கினார்! செயல்திறன் மிக்க ஆற்றலுடையாராக விளங்கினார்! நெஞ்சுரமிக்க நேர்மையாளராக விளங்கினார்! நம்பிக்கைக்குரிய நாணய நலமுடையாராக விளங்கினார்! கண்டோர் மெச்சும் அடக்கமுடையாராக விளங்கினார்! ஏற்றிப் போற்றுதற்குரிய எளிமையுடையாராக விளங்கினார்! அன்பு நெறி பேணும் அகிம்சாவாதியாக விளங்கினார்! அறநெறி மதிக்கும் அறவோராக விளங்கினார்! பல்லோர் புகழும் நாட்டின் முதல் அமைச்சராக விளங்கினார்! திராவிட முன்னேற்றக் கழகத்

கண்ட முதல்வராக விளங்கினார்! எல்லோருடைய உள்ளங்களையும் இந்த வகைகளில் கொள்ளை கொண்ட ஒரு பெருந்தலைவராகத் திகழ்ந்தார். அந்த உருவம்தான் அண்ணா. அவர்களுக்கு எல்லோருடனும் சேர்ந்து நானும் அஞ்சலி செலுத்திக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அண்ணாதுரை அவர்களின் மறைவு குறித்து ஏற்பட்டுள்ள துயரத்தை எந்த வார்த்தைகளைக் கூறி ஆற்றிக் கொள்ளமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை. வார்த்தைகள் எவ்வளவுதான் இருந்தாலும்கூட அதை உணர்ச்சி மூலம் உணரத்தான் முடியுமே தவிர சொல்லால் சொல்லி, வார்த்தைகளால் நிரப்பி இந்த இரங்கல் தீர்மானத்திற்கு ஒரு எல்லை கட்ட முடியாது என்பதுதான் என் கருத்து. அவர்கள் சமூகத் துறையில் மட்டுமல்ல, அரசியல் துறையில் மட்டுமல்ல, விஞ்ஞானத் துறையில் மட்டுமல்ல, கலை உலகத்தில் மட்டுமல்ல, நாடக உலகத்தில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் சிறப்புள்ளவராகத் திகழ்ந்தார்கள்.

எனக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலுள்ள தொடர்பாகும். நான் சட்டமன்றத்தில் புகுவதற்கு முன்னாலேயே தனிப்பட்ட முறையில் எங்கள் குடும்பத்தில் ஒருவராக அவர் விளங்கி வந்தார்கள். 1957-ம் ஆண்டு அவர்கள் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நிலையில் நான் ஆளும் கட்சியில் இருந்தேன். அதற்குப் பின்னால் நான் டெல்லி பாராளுமன்றத்திற்குச் சென்றிருந்த சமயத்தில், அதாவது நான் பாராளுமன்ற மக்கள் சபையில் அங்கத்தினராக இருந்தபோது அவர்கள் ராஜ்ய சபையில் அங்கத்தினராக இருந்தார்கள். மீண்டும் நான் இங்கு இந்த சட்டசபைக்கு வந்த காலத்தில், அவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் இங்கு வந்து இங்கு முதல் அமைச்சராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். நானும் அவருக்கு நேரில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். எவ்வளவு பெரிய ஏமாற்றங்கள் இருந்தாலும் கூட 1967-ல் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த சமயத்தில் அவருக்கு எதிரில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் பாக்கியத்தையும், பேரும் புகழையும் பெற்றிருந்தேன் என்ற மன நிம்மதியோடு இருந்தேன். அவர்கள் பேரும்புகழும் பெற்று சிறந்த முறையில் ஆட்சி செய்ய முயற்சி செய்தார்கள். அவர்களது மறைவினால் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் ஏற்பட்ட எனது பெருமையையும் புகழையும் எடுத்துச் சென்று விட்டார்கள். இப்போது அவர்களது கட்சியைச் சேர்ந்த அவர்களுடைய சகோதரர்களுள் ஒருவரான, தம்பி என்று எண்ணக் கூடிய இப்போதுள்ள முதல் அமைச்சர் அவர்களை தம்பி என்று





கொண்டாடக்கூடிய உரிமை எனக்கு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே, அவர்கள் விட்டுச் சென்ற காரியங்களில் இவர்கள் ஈடுபட்டு அவற்றை நிறைவேற்றுவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. அவர்கள் செய்யும்படியான எல்லாக் காரியங்களிலும் நாங்கள் எல்லோரும் ஒத்துழைப்போம் என்ற உறுதியை அளிக்கிறேன். எல்லாக் கட்சிகளின் சார்பிலும் இந்த உறுதி நிச்சயமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மனிதன் நல்ல மனிதனாக வாழ்வது என்பது மிக மிகக் கஷ்டமான காரியம். அதுவும் இப்போதுள்ள சூழ்நிலையில் நல்லவராகவும், நிதானமாகவும் இருப்பது, அதிலும் அப்படி அரசியலில் முதல்வராக இருப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம். அப்படியிருந்தும் அவர்கள் நல்லவராகவும், நிதானமுடையவராகவும் இருந்தார்கள். அதிலும் சட்டம் அமைதியைப் பாதுகாப்பதில் இடைஞ்சல்கள் பல இருந்தாலும், அவர்கள் நல்லவராகவும் நிதானமுள்ளவராகவும் இருந்தார்கள். அவர்கள் உண்மையான ஜனநாயகவாதி. அவர்கள் சிறந்த ஜனநாயகவாதி. யாராக இருந்தாலும், மாற்றுக் கட்சியாகயிருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களைப் பகைவர்களாகக் கொண்டாடியிருந்தாலும்கூட, அவர்களை எந்த இடத்திலே சிறப்பாகப் போற்ற வேண்டுமோ, எந்த இடத்திலே சரியாகக் கௌரவிக்க வேண்டுமோ அந்த நேரத்திலே அவ்வாறு செய்வார்கள் மறைந்த அண்ணாதுரை அவர்கள். அவரது அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின்போது அவரை எவ்வளவோ பேர் கேட்டார்கள், "இந்தியாவிலே கூட்டணி என்று சொல்லுகிறார்களே, பல கட்சிகள் கொண்ட ஆட்சி என்று சொல்லுகிறார்களே, அதுபற்றி உங்கள் கருத்து என்ன?" என்று. அவ்வாறு கேட்கும்போது, அற்புதமான, சிறந்த, தெளிந்த கருத்தை, தன்னுடைய மனத்திலே எது இருக்கிறது என்ற கருத்தை, "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்ற கருத்தோடு, "இந்தியா தேசத்திலே ஒருமைப்பாட்டைக் காப்பதற்கு, ஒற்றுமையாக இருப்பதற்கு ஒரே ஒரு கட்சி காங்கிரஸ்தான்" என்று வலியுறுத்திச் சொன்னார்கள். வேறு தேசத்திற்குச் சென்ற சமயத்தில் பாரதப் பண்பாட்டைப்பற்றி, ஒருமைப்பாட்டைப் பற்றிக் கூறி, எந்த நிலையிலே சிறப்பாக அமையமுடியும் என்பதை தைரியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. இப்பொழுது வந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இடையே ஒற்றுமைக்காகப் பாடுபட்டுள்ள சிறந்த முதலமைச்சராக, பண்புடைய முதலமைச்சராக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது எனக்கும் பெருமையாக இருந்தது. அப்பேர்ப்பட்ட முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள், வாழ்ந்தார்கள் என்பது பெருமைக்குரிய விஷயம்.

அதோடு மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்த நேரத்தில் அதனுடைய முக்கியமான கொள்கையாக இருந்தது என்னவென்றால் நாடு பிரிய வேண்டுமென்பதுதான். "தனித் திராவிட நாடாக, தனித் தமிழ் நாடாக இருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய இன்பக் கனவு" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருந்தார்கள். சொன்னதோடு மட்டுமல்ல, உறுதியாக நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், சீனா பாரதத்தின்மீது படையெடுத்த சமயத்தில் அதையெல்லாம் எறிந்துவிட்டு, 'நாம் ஒற்றுமையாக இருந்தால்தான் பாரத தேசத்தைக் காப்பாற்ற முடியும், தனிநாடு என்பது குறுகிய மனப்பான்மையாக இருக்கிறது, மக்கள் பூரணமாக மதிக்கக்கூடியது நாட்டினுடைய ஐக்கியமும் ஒற்றுமையும்தான் என்பதால் அதை நான் எடுத்து வைத்து விட்டேன்' என்றார். அதோடு மட்டுமல்லாமல், 'மத்திய சர்க்கார் காட்டும்படியான சட்டத்திற்குப் பயந்து இதைச் செய்யவில்லை, நாட்டின் ஒருமைப்பாடு மிகமிக அவசியம். ஆகவே, தனிநாடு, தனித் தமிழ்நாடு என்பதை நாங்கள் நினைக்கும்படியான, சிந்திக்கும்படியான நோக்கம் இல்லை' என்று சொன்னார். முதலமைச்சரான சமயத்திலும் மிகப் பொறுப்புடன், 'நாங்கள் அதை விட்டு விட்டோம், மீண்டும் அதை எடுத்துக் காட்டுகிறீர்களே' என்று கூறி, மக்கள் போற்றக்கூடிய, மக்கள் மதிக்கக்கூடிய தேசீய ஒருமைப்பாடுதான் முக்கியம் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்திலே, சென்ற வருஷத்திலே, எங்கள் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அவரை ஆஸ்பத்திரியிலே போய்ப் பார்த்தார்கள். அப்போது அவரிடம் அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள், "நான் இப்பொழுது ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பது உடலாலே பாதி, உங்களாலே பாதி" என்று. அவருக்கு ஏற்பட்ட சில சங்கடங்களால், சில சஞ்சலங்களால், அவரால் எதிர்க் கட்சியினர் கூறுவதைக் கூடத் தாள முடியாமல் "உங்களால் ஒரு பாதி" என்று சொன்னார்கள். எங்கள் பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள், அண்ணாதுரை அவர்கள் உடல்நலக்குறைவாக இருக்கிறார் என்று தெரிந்ததும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தார்கள். அப்பொழுது 'முதலமைச்சர் அவர்களை 6 மாதங்களாகப் பார்த்துக் கொண்டு என்ன செய்கிறீர்கள்? இன்ன வியாதி என்றுகூட கண்டு பிடிக்க முடியாத நிலையில் இருந்தீர்களே' என்று திரு. காமராஜ் அவர்கள் டாக்டர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். பிறகு முதலமைச்சரவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தார்கள். அப்பொழுது நான் இரண்டு, மூன்று கடிதங்கள் கூட எழுதினேன். அவர்கள் திரும்பி வந்தவுடன், 'நீங்கள் மிகவும் அன்போடு எழுதிய கடிதங்கள் கிடைத்தன, ஆனால் உடனே பதில் எழுத முடியவில்லை' என்று வருந்தினார்கள். "நீங்கள் பூரணமாக ஓய்வெடுத்துக்கொண்டு வாருங்கள், சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். எனவே 6 மாதங்கள் அங்கிருந்துவிட்டு



அடுத்த மார்ச் மாதத்தில் வாருங்கள். பைபிளில் ஒரு பழமொழி இருக்கிறது. அதை நான் குறிப்பிடுகிறேன்,

"What shall it profit a man
If he shall gain the whole world and lose his own soul"

என்று எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டி, எதிர்க் கட்சியிலே இருந்தாலும் ஆசையோடு, அன்போடு, எழுதியிருக்கிறீர்கள் என்று சொன்னார்.

அவர்கள் ஓவியத்திலே சிறந்தவர்கள். எவ்வளவோ ஓவியங்களைத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

கட்சிகளைப்பற்றி எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும், அவர்களைச் சேர்ந்த அன்பர்கள் சொன்னாலும், எதிர்க் கட்சி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், அதுதான் கடமை என்று சொல்வார்கள்.

"ஊனும், உயிரும், உணர்வும்" என்பதற்கேற்ப திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊனாக, உயிராக, உணர்வாக அவர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்ட அவர் மறைந்துவிட்டார். திராவிட முன்னேற்றக் கழகம் ஈடு, இணையில்லாத ஒரு பெரும் தலைவரை இழந்துவிட்டது. அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம், இவ்வளவு அன்பாக வளர்த்தாரே, இவ்வளவு சிறப்பாக ஆளாக்கி விட்டாரே, அப்படிப்பட்ட அவர் இப்பொழுது மறைந்துவிட்டாரே என்று கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எவ்வளவுதான் ஆறுதல் சொன்னாலும், அனுதாபத்தைச் சொன்னாலும் அவர்களைத் தேற்ற முடியாது. அந்தக் கட்சிக்கும், அவருடைய குடும்பத்திற்கும், அவருடைய மனைவியார் திருமதி இராணி அம்மாள் அவர்களுக்கும், அவருடைய வளர்ப்புச் செல்வங்களுக்கும் என்னுடைய சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும் இதய பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே, அவரது சிறந்த மனப்பான்மை, பரந்த உள்ளம், அவருடைய பேச்சுக்களைக் கேட்டு அனுபவிக்கும்படியான பாக்கியம் ஆகியவற்றை இழந்து நிற்கிறோம். அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று கூறி, அவருடைய குடும்பத்தாருக்கும், கட்சியினருக்கும் என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருடைய சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. மூக்கையா தேவர் அவர்கள் இந்த இரங்கல் தீர்மானத்தில் பேசிய நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தினை இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். அதைத் தொடர்ந்து மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கேற்ப

*[திரு. மு. கருணாநிதி]* *[1969 பிப்ரவரி 21*

இந்த மன்றத்திலேயுள்ள எல்லா உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள், அவர்களுடைய உள்ளத்தின் அடித்தளத்திலே உள்ள எண்ணம் அதுதான். பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் இந்த மாமன்றத்தில் விரைவில் வைக்கப்படும் என்ற உறுதியைக் கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடினார் பாரதியார். உலகத்திலே மொழி வேறுபாடு இல்லாமல், இன வேறுபாடு இல்லாமல், சமய வேறுபாடு இல்லாமல் எல்லோராலும் போற்றப்படக்கூடிய ஒரு பெருநிலையை வள்ளுவர் அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப்பிறகு அப்படிப்பட்ட ஒரு பெருமகன் பிறந்திருக்கிறாரா என்ற கேள்விக்கு விடையாக நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார்கள். கட்சி வேறுபாடற்ற, சமய வேறுபாடற்ற நிலையில், தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், இந்திய நாட்டுப் பெருமக்கள் மட்டுமல்லாமல், உலக மக்கள் எல்லோரும் ஒருசேர நெஞ்சுருகி வருந்தக்கூடிய அளவுக்கு அவர்கள் பிரிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவருடைய பணிகளெல்லாம், எழுச்சிகளெல்லாம், சொற்களெல்லாம் நாட்டிலிருக்கின்ற மிகவும் பிற்பட்ட, தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்திலேயே இருந்தன. அந்த எண்ணம் உள்ளத்திலே எழுந்து உருப்பெற்ற காரணத்தால் உலக மக்களுடைய உள்ளத்திலே இடம் பெறும் நிலையைப் பெற்றார்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்."

என்று வருகிறது. அப்படிப்பட்ட ஒரு பேரறிஞரை முதலமைச்சராகப் பெற்றிருந்த இந்த அவை இன்று அவரை இழந்திருப்பது பெரிய இழப்பாகும். இந்த அவையின் மரபையும், பெருமையையும் காப்பதில் பேரவைத்தலைவருக்கு மிகவும் துணையாக இருந்திருக்கிறார்கள். எங்கேயாவது ஒரு சிறிது மரபும், உரிமையும் குறைகின்றது என்றால் தன்னுடைய உடல்நிலை தளர்ந்திருந்தாலும் தன்னுடைய அறையிலேயிருந்து ஓடோடி வந்து இந்த அவையின் பெருமையையும் மரபையும் காப்பாற்றிவந்த அப்படிப்பட்ட ஒருவரை இழந்தது இந்தப் பேரவைக்குப் பெரிய இழப்பு ஆகும். அவர் தோன்றாத் துணையாக இருந்து அந்தப் பெருமையையும், மரபையும் நாம் காக்க உதவியாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அவருக்குச் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலி, அவர் கூறியிருக்கின்ற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் காப்பதுதான். அதுதான் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலியாகும். அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் தீர்மானத்தை நிறைவேற்றும் வகை



*1969 பிப்ரவரி, 21]* *[திரு. மு. கருணாநிதி]*

யிலும் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு முதலமைச்சரால் முன்மொழியப் பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்தி, பேரவையை ஒத்திவைக்கிறேன். பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்கு கூடும்.

*பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

## 2. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

79. Notification issued with G.O. Ms. No. 1986, Home, dated the 11th July 1968 in regard to an amendment to rule 329 of the Madras Motor Vehicles Rules 1940 published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940 as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) ]

80. Notification issued with G.O. Ms. No. 2062, Rural Development and Local Administration, dated 9th October 1969 in regard to delegation of certain powers to the Joint Director of Rural Development. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

81. Notification issued with G.O. P. No. 2127, Revenue, dated 2nd November 1968 in regard to exemption from liability to tax on the purchase of canteen Stores made by Ex-Servicemen. [Laid on the Table of the House under section 58 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

82. Notification issued with G.O. P. No. 1584, Revenue, dated 8th August 1968 in regard to exemption granted to individual institutions under the Madras General Sales Tax Act, 1959 and the need for their continuance. [Laid on the Table of the House under section 58 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

83. Notification issued with G.O. Ms. No. 1929, Rural Development and Local Administration, dated 23rd September 1968 in regard to quinquennial revision in certain Municipalities and townships stayed till 31st March 1969. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 Madras Act V of 1920).]

[திரு. மு. கருணாநிதி] [1969 பிப்ரவரி 21

இந்த மன்றத்திலேயுள்ள எல்லா உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள், அவர்களுடைய உள்ளத்தின் அடித்தளத்திலே உள்ள எண்ணம் அதுதான். பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் இந்த மாமன்றத்தில் விரைவில் வைக்கப்படும் என்ற உறுதியைக் கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடினார் பாரதியார். உலகத்திலே மொழி வேறுபாடு இல்லாமல், இன வேறுபாடு இல்லாமல், சமய வேறுபாடு இல்லாமல் எல்லோராலும் போற்றப்படக்கூடிய ஒரு பெருநிலையை வள்ளுவர் அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப்பிறகு அப்படிப்பட்ட ஒரு பெருமகன் பிறந்திருக்கிறானா என்ற கேள்விக்கு விடையாக நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார்கள். கட்சி வேறுபாடற்ற, சமய வேறுபாடற்ற நிலையில், தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், இந்திய நாட்டுப் பெருமக்கள் மட்டுமல்லாமல், உலக மக்கள் எல்லோரும் ஒருசேர நெஞ்சுருகி வருந்தக்கூடிய அளவுக்கு அவர்கள் பிரிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவருடைய பணிகளெல்லாம், எழுச்சிகளெல்லாம், சொற்களெல்லாம் நாட்டிலிருக்கின்ற மிகவும் பிற்பட்ட, தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்திலேயே இருந்தன. அந்த எண்ணம் உள்ளத்திலே எழுந்து உருப்பெற்ற காரணத்தால் உலக மக்களுடைய உள்ளத்திலே இடம் பெறும் நிலையைப் பெற்றார்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்."

என்று வருகிறது. அப்படிப்பட்ட ஒரு பேரறிஞரை முதலமைச்சராகப் பெற்றிருந்த இந்த அவை இன்று அவரை இழந்திருப்பது பெரிய இழப்பாகும். இந்த அவையின் மரபையும், பெருமையையும் காப்பதில் பேரவைத்தலைவருக்கு மிகவும் துணையாக இருந்திருக்கிறார்கள். எங்கேயாவது ஒரு சிறிது மரபும், உரிமையும் குறைகின்றது என்றால் தன்னுடைய உடல்நிலை தளர்ந்திருந்தாலும் தன்னுடைய அறையிலேயிருந்து ஓடோடி வந்து இந்த அவையின் பெருமையையும் மரபையும் காப்பாற்றிவந்த அப்படிப்பட்ட ஒருவரை இழந்தது இந்தப் பேரவைக்குப் பெரிய இழப்பு ஆகும். அவர் தோன்றாத் துணையாக இருந்து அந்தப் பெருமையையும், மரபையும் நாம் காக்க உதவியாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அவருக்குச் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலி, அவர் கூறியிருக்கின்ற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் காப்பதுதான். அதுதான் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலியாகும். அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் தீர்மானத்தை நிறைவேற்றும் வகை



1969 பிப்ரவரி, 21] [திரு. மு. கருணாநிதி]

யிலும் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு முதலமைச்சரால் முன்மொழியப் பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்தி, பேரவையை ஒற்றிவைக்கிறேன். பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்கு கூடும்.

*பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

## 2. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

79. Notification issued with G.O. Ms. No. 1986, Home, dated the 11th July 1968 in regard to an amendment to rule 329 of the Madras Motor Vehicles Rules 1940 published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940 as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) ]

80. Notification issued with G.O. Ms. No. 2062, Rural Development and Local Administration, dated 9th October 1969 in regard to delegation of certain powers to the Joint Director of Rural Development. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

81. Notification issued with G.O. P. No. 2127, Revenue, dated 2nd November 1968 in regard to exemption from liability to tax on the purchase of canteen Stores made by Ex-Servicemen. [Laid on the Table of the House under section 58 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

82. Notification issued with G.O. P. No. 1584, Revenue, dated 8th August 1968 in regard to exemption granted to individual institutions under the Madras General Sales Tax Act, 1959 and the need for their continuance. [Laid on the Table of the House under section 58 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

83. Notification issued with G.O. Ms. No. 1929, Rural Development and Local Administration, dated 23rd September 1968 in regard to quinquennial revision in certain Municipalities and townships stayed till 31st March 1969. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 Madras Act V of 1920).]

84. Notification issued with G.O. Ms. No. 2621, Agriculture, dated 6th September 1968 in regard to execution of soil conservation work in the areas of Salem and Dharmapuri districts under the Madras Land Improvement Schemes Act, 1959. [Laid on the Table of the House under section 44 (3) of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959).]

### B. Reports, Notifications and other papers.

39. Notification issued with G.O. Ms. No. 2081, Public Works (Electricity), dated the 4th October 1968 in regard to certain amendments to the Madras State Electricity Board (Term of office, re-appointment, Remuneration, Allowances and other conditions of service of Chairman and Members) Rules, 1958 published at pages 363–364 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 20th August 1958.

40. Erratum issued with Government Memo. No. 134117/M.10 68–1, Rural Development and Local Administration, dated 5th November 1968 relating to redivision of wards and reservation of seats in Sankarankoil Municipality published at pages 454–455 of Part II–Section 2 of the *Fort St. George Gazette*, dated 23rd October 1968.

41. Notification issued with G.O. Ms. No. 1896, Revenue, dated 28th September 1968 in regard to exemption from levy of stamp duty in respect of purchase of land for the Gopalapuram Educational Society Girls' High School, Madras, under the Indian Stamp Act, 1899 (Central Act 11 of 1899).

42. Resume of work transacted by the Madras Legislative Council during the period from 17th to 28th August 1968 (Thirty Second Session).

* 43. The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 1 of 1969) with Annexure.

* 44. The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 2 of 1969).

* 45. The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L. A. Bill No. 3 of 1969) with Annexure.

* 46. Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 (L.A. Bill No. 4 of 1969).

* 47. The Madras Panchayats (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 5 of 1969) with Annexure.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## சனிக்கிழமை, 1969 பிப்ரவரி 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தை நிறுத்திவைத்தல்

மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. க. ர. நல்லசிவன்) : இன்றைய முதல் அலுவல் " கேள்விகள் பதில்கள் " ஆகும். நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் இன்றைய கேள்வி நேரத்தை நிறுத்திவைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டபடியால், அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 22-வது பிரிவின் கீழ் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ளவேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. க. ர. நல்லசிவன்): இப்பொழுது அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின் கீழ் பேரவைத் தலைவரின் தேர்தல் நடக்கவிருக்கிறது. அப் பதவிக்கு, வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டப் பேரவையின் 4(4) விதியின்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர்கள், முன்மொழிந்தவர்கள், வழிமொழிந்தவர்கள் ஆகியவர்களின் பெயரை நான் முதன்முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்கவேண்டும்.

அவர்களின் விவரம் :

| | நியமனம் செய்யப் பெற்றவர். | முன்மொழிந்தவர். | வழிமொழிந்தவர். |
|---|---|---|---|
| 1 | புலவர் கா. கோவிந்தன். | மாண்புமிகு திரு. மு. கருணாநிதி. | மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன். |
| 2 | புலவர் கா. கோவிந்தன். | திரு. து. ப. அழகமுத்து. | திரு. கா. வேழ வேந்தன். |

பேரவைத் தலைவர் பதவிக்கு, புலவர் கா. கோவிந்தன் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பெற்றிருப்பதால், அவர் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இத்துடன் என்னுடைய அலுவல் இனிது முடிவடைகிறது. இப்போது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு அவர்களை இப்பேரவைத் தலைவர் இருக்கையில் வந்து அமருமாறு உங்கள் அனைவரின் சார்பில் அழைக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களை பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துவந்து அவர் இருக்கையில் அமரச் செய்வார்கள். பேரவைத் தலைவர் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்துநின்று அவர் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள், தங்கள் இடத்தில் அமர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(காங்கிரஸ் கட்சிக் கொறடா திரு. கே. வினாயகம் அவர்களும், அவை முன்னவர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்களும் பேரவைத் தலைவரை அழைத்துவந்து அவர் இருக்கையில் அமரச் செய்தார்கள். அப்பொழுது எல்லோரும் எழுந்து நின்றார்கள்).

பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்தார்.

**திரு. கே. வினாயகம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தப் பேரவையில் முன்பு இருந்த சபாநாயகர் உயர்திரு. சி. பா. ஆதித்தனார் தன்னுடைய சொந்தக் காரணத்தின் விளைவாக ராஜிநாமா செய்தார்கள். அப்பொழுது காலியான இடத்தை உதவி சபாநாயகராக இருந்தகாலத்தில் அந்த இடத்தில் இருந்து அதைச் சரிவர நடத்தின பெருமை உங்களைச்சாரும். சபையை நடத்தும்போது என்னைப்போல் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் கொஞ்சம் துடுக்கானவர்களும்கூட நீங்கள் சொன்னது சரியா இல்லையா என்று எல்லாம் கேட்டிருப்போம். அவைகள் எல்லாம் சபை நடவடிக்கைகளிலே தினந்தோறும் வரும் பிரச்சினைகள். அப்போது தாங்கள் பொறுமையாக இருந்து, கொடுக்கவேண்டிய விளக்கங்களைக் கொடுத்து திருப்திப் படுத்தினீர்கள் என்று





சொல்லலாம். இப்பொழுது தாங்கள் சபாநாயகராக உயர்த்தப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவை இருக்கிறதே இது, பல பெருந்தலைவர்களைச் சபாநாயகராகப் பெற்றிருக்கிறது. திரு. புலுசு சாம்பமூர்த்தி—அதற்கு முன்னால் சிலர் இருந்தார்கள்—கௌரவமிக்க திரு. சிவசண்முகம் பிள்ளை, திரு. கோபால மேனன், பிறகு டாக்டர் யூ. கிருஷ்ண ராவ், அதற்குப் பிறகு திரு. செல்லபாண்டியன் அவர்கள், அதற்குப் பிறகு கடைசியாக திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் எல்லோரும் திறமையாக நடத்தினார்கள். அவ்வப்போது அபிப்பிராயபேதம் இருந்திருக்கும். இப்பொழுது நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிற காரணத்தினாலேதான் கொடுக்கிற ரூலிங் சரியா இல்லையா என்று யோசித்துப் பார்த்திருப்போமே தவிர உங்களை, உங்களை என்றால் இந்த "சேர்"-ஐ குறிப்பிடுகிறேன், அவமதிப்பு செய்யவில்லை, இனியும் செய்யமாட்டோம். உங்கள் முன்னோர்கள்—அதாவது, உங்களுக்கு முன்னால் இருந்த சபாநாயகர்கள்---திறமையாக சபையை நடத்திச் சென்றிருக்கிறார்கள். அதே கடமை, அதே கண்ணியம், அதே கட்டுப்பாடு—இவற்றைச்சொன்னால் உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நினைக்கிறேன்—உடன் சபையை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் அவைக்குள் வந்தமர்ந்தார்) இப்பொழுது எங்கள் கட்சித் தலைவர் வந்திருக்கிறார்கள். அவர்கள்தான் பேசியிருக்கவேண்டும். தாங்கள் அனுமதித்தால் அவர்களும் பேசுவார்கள். நான் கோயம்பத்தூருக்குச் சென்றுவிட்ட காரணத்தினால் நேற்று நடந்த அவை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அண்ணாவைப்பற்றி பேசுவதற்கு முடியவில்லை. உங்களுக்கெல்லாம் தெரியும். நானும் அண்ணாவும் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் பழகினோம், படித்தோம். அதைப்பற்றியெல்லாம் நேற்று பேசவேண்டுமென்று நினைத்தேன். ஆனால், நான் வருவதற்கு ஐந்து நிமிஷங்கள் தாமதம் ஆகிவிட்டது. அதனால் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அதைத் தடுக்கக்கூடாது அல்லவா ? அண்ணா அவர்களுடன் நான் பழகியதையெல்லாம் ஞாபகப்படுத்தியிருப்பேன்.

இன்று எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் காலம் தாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதனால்தான் நான் பேசுகிறேன். நாங்கள் உங்களுக்கு பூரண ஒத்துழைப்பு--100 சதவிகிதம் கொடுப்போம். உங்கள் கட்சிக்காரர்களுக்குள்ளேதான்--தாங்கள் இப்போது கட்சிக்காரர்கள் அல்ல—அந்தக் கட்சிக்குள் சலசலப்பு இருந்தாலும் நாங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளமாட்டோம். நீங்களும் இந்தச் சபையின் ஒழுங்கையும், கண்ணியத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் வகையில் நேர்மையாக நடந்துக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தங்களுக்கு யோசனை சொல்லவேண்டுமென்றால் நாங்கள் லோக் சபையைப் பற்றி சொல்லுவோம். அப்போது, "அது வடக்கே இருக்கிற ஸ்தாபனம், அதைப்பற்றிப் பேசுவது எனக்கு பிடிக்காது, அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்று தாங்கள் சொல்லக்கூடாது.

மதர் ஆப் பார்லிமென்ட் இருக்கிறது அதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லலாம். நான் வேண்டாமென்று சொல்லவில்லை, அதுவும்தான் வேண்டும். நமது தேசத்தில் இருக்கிற பாராளுமன்ற விதிகளையும், பண்புகளையும் கையாள வேண்டும். நான் இதை அறிவுரையாகச் சொல்லவில்லை. உங்களுக்கு என்னுடைய ஆசியாகச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள் கிறேன், வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் புறப்படுவதற்கு முன்பே காரியதரிசி அவர்களிடம் சொன்னேன் நான் புறப்பட்டுவிட்டேன் வந்துவிடுகிறேன் என்று. ஆனால் டாக்சி கிடைக்கவில்லை. அதனால் தாமதம் ஆகிவிட்டது. இந்தச் சபையின் பேரவைத் தலைவர் அவர்கள் குறித்த நேரத்திலே, மிகவும் நல்ல முறையிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாலும், மற்றவர்களாலும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நான் பாராட்டுதல்கள் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய திரு. விநாயகம் அவர்கள் அடக்கமாகச் சொன்னார்கள். எனக்கு தனிப்பட்ட முறையிலே மகிழ்ச்சி என்றாலும், தமிழில் அவர்கள் சிறந்த புலமைப் பெற்று, தமிழிலே உயர்ந்து, தமிழுக்கு மிகவும் சேவை செய்யக்கூடிய அவர்கள் சபாநாயகராக இருப்பது எனக்கு பெருமையாக இருக்கிறது. தமிழை ஆட்சி மொழியாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம். எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே தமிழில் பற்றும் அறிவும் உள்ளவராகிய தாங்கள் சபாநாயகராக வந்திருப்பது மிகமிக பொருத்தம் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தாங்கள் உதவி சபாநாயகராக இருந்து இப்பொழுது சபாநாயகராக வந்திருக்கிறீர்கள். முன்பிருந்த சபாநாயகர் என்ன காரணத்தினாலோ அப்பதவியைவிட்டு போய் விட்டார்கள். அது மாதிரி நீங்கள் செய்யமாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீதியான, நேர்மையான நிலைமை இருந்திருக்குமானால் பதவியை விட்டு போகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. அப்படி நிலைமை ஏற்படாமல் காலம் பூராவும் தாங்கள் சபாநாயகராக இருந்து பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டிலும் நாங்கள் ஆளும் கட்சியிலே இருந்தோம், இப்பொழுது எதிர்க் கட்சியிலே இருக் கிறோம். எப்பொழுதும் கட்டுப்பாட்டோடு இருக்கிறோம். இந்த சபையினுடைய ஒழுக்கம் இந்த சபையினுடைய கண்ணியம் என்றென்றும் காப்பாற்றப்படும் என்பதிலே சந்தேகம் கிடையாது. To err is human —தவறு ஏற்படுவது இயற்கை. சில சமயங்களிலே ஆத்திரமூட்டும் சம்பவங்கள் வரலாம். அப்பொழுதெல்லாம் நடுநிலை வகிக்கும்படியான தாங்கள் அறிவுரை சொல்லி, எந்தவிதமான ஆத்திரமும் கொள்ளாமல் நடத்திச் செல்லவேண்டுமென்பது உங்களுக்கு நன்கு தெரியும் என்ற நிலையிலே இந்த சபை நடவடிக்கைகள் மிகவும் உயர்ந்த முறையிலே நடைபெறும் என்று நம்புகிறேன்.





நமது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும் பாரதத்திலே யுள்ள எல்லா சட்டசபைகளையும்விட சிறந்த முறையிலே நடந்தது, நடக்கிறது என்று சொன்னால்தான் நமக்கும் கௌரவம், சபைக்கும் கௌரவம், சபைத் தலைவர் அவர்களுக்கும் கௌரவம், தமிழ்நாட்டுக்கும் கௌரவம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த முறையிலே நீங்கள் சபா நாயகராக வந்திருப்பதை என்னுடைய தனிப்பட்ட முறையிலே பாராட்டுகிறேன், கட்சி சார்பிலேயும் பாராட்டுகிறோம். இப் பொழுது நீங்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல என்பது மரபு. எந்தக் கட்சியின் சார்பிலே தாங்கள் வளர்ந்து வந்திருந் தாலும் இங்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும்.

நேற்றுக் கூட முதலமைச்சர் இதுபற்றி அவர்கள் சொல்லிய நேரத்திலே, நான் எந்தவிதமான எதிர்ப்பும் இருக்காது என்று சொன்னேன். உங்களை அவ்வளவுதூரம் நாங்கள் ஆதரிக் கின்றோம். உங்களுடைய பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர்கள் என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். போன சபாநாயகர் தேர் தலின்போது கூட்டணிக் கட்சியிலே இருந்தவர்கள் கூட எதிர்த் தார்கள். அப்பொழுது கூட நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. இன்று அவர்கள் கூட மனம் மாறி ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். ஆகவே, நீங்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள், எவ்வளவு பண்பாடுள்ளவர்கள், எவ்வளவு நல்லவர்கள், எவ்வளவு நீதியாக நடத்துவீர்கள் என்பது நன்கு தெரியவருகிறது. நீதியோடும் நேர்மையோடும் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன், நிச்சய மான உறுதியுடன், உங்களுக்கு எங்களுடைய ஆசியை மட்டும் அல்ல, பூரண ஒத்துழைப்பையும் என்றென்றும் தருவோம் என்ற உறுதியை அளித்து நான் அமர்கிறேன்.

* திரு. டி. எஸ். ஆதிமூலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டில் பெரிய பெரிய மேதைகள் அறிவாளிகள் எல்லாம், இந்திய அசெம்பிளியிலும்—முன்பெல்லாம் அசெம்பிளி என்று தான் சொல்வார்கள், இப்பொழுதுதான் பாராளுமன்றம் என்று சொல்கிறார்கள்—மெட்ராஸ் ராஜ்யத்திலும் சபாநாயகர்களாக இருந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு சட்ட சபையிலே முன்னால் சென்னை ராஜ்ய அசெம்பிளி என்று சொல்லப்பட்ட இந்தப் பெரிய சபையில் பிரபலமானவர்கள் எல்லாம் சபாநாயகர் களாக இருந்து நிரம்பவும் கண்ணியமாக, தான் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர், அது எதிர்க்கட்சி என்ற மனப்பான்மை ஒன்றும் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார்கள். விட்டல்பாய் பட்டேல் அவர்கள் அன்றைய இந்திய சட்டசபையில் சபா நாயகராக இருந்தபொழுது, அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு எதிராக இருந்தபோதிலும், அவருடைய தீர்ப்புகளுக்கு நிரம்பவும் மதிப்பளித்தது. அந்த முறையில் நடுநிலைமை யாளராக இருந்து, இந்தியர்கள் சட்ட நுட்பம் உள்ளவர்கள், இந்தியர்கள் சிறப்பான முறையில் கண்ணியத்தைக்காப்பாற்று வார்கள் என்ற பெயரை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறார்

அவர். அதே மாதிரி நம்முடைய இந்த அசெம்பிளியிலும் பல பிரபல தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். அதே மாதிரி நீங்களும் இருந்து இந்த சபையினுடைய கண்ணியத்தை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறவர்களுக்கு கொஞ்சம் சலுகை கொடுத்தால் கூடப் பரவாயில்லை. நான் இப்பொழுது எதிர்க்கட்சி இல்லை. எதிர்க் கட்சியும் இல்லை, ஆளும் கட்சியும் இல்லை, இது ஒருமாதிரி கதம்பம். இருந்த போதிலும் எங்களுடைய பெயரெல்லாம் பத்திரிகையில் வர வேண்டி இருக்கிறது. அதற்காக ஏதாவது தீர்மானங்கள் கொண்டு வருவோம். அதில் சட்ட நுணுக்கத்தை நிரம்பப் பார்த்து, பூதக் கண்ணாடியைக்கொண்டு பார்த்து, அது இப்படி இருக்கிறது, இது அப்படி இருக்கிறது என்று கூறுவீர்களானால் முதல் நாள் கொண்டு வருவோம், இரண்டாவது நாள் உட்கார்ந்து விடுவோம். முன்னே பின்னே இருந்தாலும் நீங்களே சட்டத்தைப் பார்த்து, சீர்திருத்தம் பண்ணி, சில காரியங்களை எங்களுக்குச் சொல்லித்தரவேண்டும். அப்படி இருந்தால்தான் சட்டசபையிலே நாங்கள் எங்கள் தொகுதியிலே உள்ள குறைகளை அவ்வப்பொழுது எடுத்துச்சொல்லி, மந்திரிகளினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும், முக்கியமாக மக்களுக்குச் சேவை செய்வதற்கும் எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அந்த விதத்திலும் கொஞ்சம் 'பார்ஷியல்'ஆகக் கூட—பார்ஷியல் என்ற வார்த்தையை சட்டசபையிலே உபயோகிக்கக் கூடாது—ஒருவிதமாக எங்களுக்கு சலுகைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக பொதுவாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கேள்விகள் எல்லாம் அதிக நாட்கள் ஆகியும் வராமல் இருக்கின்றன. ஏறத்தாழ இரண்டு வருடத்திற்கு முன்னால் நான் கேள்விகள் கொடுத்தேன். நான் கேள்விகள் கொடுப்பதே, ஆறு மாதத்திற்கு ஒரு தடவை, அத்தி பூத்த மாதிரி. அதற்கும் பதில் வராமல் இருக்கிறது. ஆகவே, 'அரியர்ஸ்', பாக்கிகள் எல்லாம் இருக்கும். சபாநாயகர் என்ற முறையில் அவைகளை எல்லாம் எடுத்துப் பரிசீலனை செய்து முந்திய கேள்விகளுக்கு எல்லாம் சீக்கிரமாக பதில் பெற ஏற்பாடு செய்யவேண்டும். சில கேள்விகள் அப்படியே இருக்கும். அசெம்பிளி புரோரோக் ஆனால் அப்படியே போய் விடும். இவைகளுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் சட்டசபை வேலை திறமையாக நடைபெறுவதற்கு எத்தனையோ முறையில் நீங்கள் உதவி செய்ய முடியும். அந்த முறையில் சர்க்கார் தரப்பைச் சார்ந்த மந்திரிகள் விஷயத்திலும் நீங்கள் கண்டிப்பாக இருந்து எங்கள் உரிமைகள் நல்லவிதமாக காப்பாற்றப்பட பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்களுடைய காலத்தில் நாங்கள் பரிபூரணமாக ஒத்துழைப்போம் நீங்களும் எங்களுக்கு நல்லமுறையில் சேவை செய்ய அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்தித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கின்றேன்.





***திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, புலமைமிக்க உங்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதன்மூலம் ஒரு பெரிய பாக்கியம் இந்த அவைக்குக் கிடைத்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சி. ஒருமனதாகவே தங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதன்மூலமாக மிகவும் பொருத்தமான, அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க, எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெறப் போகின்ற ஒருவரை இந்த அவை தேர்ந்தெடுத்திருக்கிறது. ஏற்கனவே, துணைத் தலைவராக இருந்து இனிய முறையிலே இந்த மன்றத்தை நடத்திய அனுபவம் தங்களுக்கு நிரம்ப இருப்பதால், மேலும் தொடர்ந்து இப்பொழுது தாங்கள் ஏற்றிருக்கிற பொறுப்பை எவ்வித குறைவுமின்றி நிறைவேற்றுவீர்கள் என்ற முழுமையான, பரிபூரணமான நம்பிக்கை மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த எங்கள் அனைவருக்கும் உண்டு. எப்பொழுதுமே இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கொஞ்சம் அதிகம் சலுகை தர வேண்டுமென்று கேட்பது ஒரு விதத்தில் நியாயம்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அதிலும் சிறு குழுக்களாக இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் சலுகை அளிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டாலும் அதையும் தவறாக யாரும் புரிந்துகொள்ள மாட்டார்கள். உங்கள் தலைமையில் இந்த மன்றம் மேலும் புதிய சிறப்புகளை பெறும் என்பதில் எங்கள் யாருக்கும் ஐயம் இல்லை. அப்படிப்பட்ட புலமைமிக்க, இனிய குணம் கொண்ட, எங்களை வழி நடத்திச் செல்வதற்கு எல்லா விதமான பொருத்தமும் கொண்ட தங்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாக பாராட்டு தெரிவித்து, எங்கள் கட்சியின் முழு ஒத்துழைப்பு தங்கள் பணிகளிலே இருக்குமென்று கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கக் கூடிய உங்களுக்கு எங்களுடைய பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் சார்பிலே முதன்முதலாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழிலே பெரும் பாண்டித்தியம் பெற்ற நீங்கள் தமிழ் நாட்டினுடைய அற நூல்களிலே நடு நிலைமை என்பதைப் பற்றி எவ்வளவு அதிகமாக நமது முன்னோர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பீர்கள். 'ஓர் பால் கோடாமை சான்றோருக்கு அணி' என்று குறிப்பிட்டிருக்கிற வார்த்தைகளுக்கிணங்க தாங்கள் என்றைக்கும் நடுநின்று, உங்களுடைய கருத்துக்களையும், உங்களுடைய தீர்ப்புகளையும் வழங்கும்பொழுது, இந்தச் சபையில் முன்னால் இருந்த தலைவர்களெல்லாம் எப்படி ஒரு பாரம்பரியத்தை இந்தச் சபையில் ஏற்படுத்தியிருக்கிறார்களோ, அந்தப் பாரம்பரியத்திற்கு இன்னும் ஒரு படி பெருமை ஏற்றக் கூடிய நிலையில், அவை அமையும் என்பதில் சந்தேகம் கிடையாது. தமிழனுக்கு உரிய உயர்ந்த பண்பாட்டுக்குரிய முறையில், எல்லோரையும் அணைத்து, எல்லோரும் நல்ல முறையிலும், ஒழுங்காகவும் இந்தச் சபையில் நடந்துகொள்வதற்கு அறிவுரை வழங்கி, தவறுகள்

நடக்கும்பொழுது, கண்டிப்பான முறையில் இருந்து, கண்டித்து சபையை கண்யமான முறையிலே நீங்கள் நடத்திச் செல்வீர்கள் என்பதிலே சந்தேகம் கிடையாது. அந்த முறையிலே இந்தச் சபையை மேலும் கண்யமான முறையிலே நடத்துவதற்கு எங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பு உங்களுக்கு என்றும் உண்டு என்று கூறி, உங்களுக்கு எங்களது வாழ்த்துக்களை மறுமுறையும் கூறி அமர்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் உண்மையிலேயே நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்று சொன்னால், இந்தச் சபையினுடைய ஆரம்ப காலத்திலிருந்தே வழக்கறிஞர்கள், டாக்டர்கள், இவர்கள்தான் சபையினுடைய நாயகர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இன்றையதினம் தமிழனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மறுமலர்ச்சி, தமிழுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம், தாய்மொழிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இவைகளின் பின்னணியில் புலவராக விளங்கக்கூடிய நீங்கள் சபாநாயகராக வந்திருப்பதிலே நான் தமிழன் என்ற முறையில் மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்திய தேசம் பூராவையும் எடுத்துக்கொண்டால், எல்லா சட்ட சபைகளிலும் அநேகமாக ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் எவரோ அவர் தான் சபாநாயகராக இருப்பதை நாம் காண்கிறோம். ஒரு காலத்தில் புலவர் என்று சொன்னால் அதற்குரிய அந்தஸ்து என்னவென்று உங்களுக்குத் தெரியும். இன்றையதினம் புலவர் ஒருவரை நாங்கள் சபாநாயகராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தாய்மொழிக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் நீங்கள் சபாநாயகராக வந்திருப்பது மொழிப்பற்று உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு நன்னாளாக ஆகும் இந்நாள் என்று நான் நம்புகிறேன். தங்கள் தலைமையில் தமிழுக்கு ஏற்ற இடம் கிடைக்கும், கிடைக்கவேண்டியதெல்லாம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என்றாலும், இன்னும்கூட சட்டசபை நடவடிக்கைகள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காலமானது மாறக்கூடிய சந்தர்ப்பத்தை தாங்கள் சபாநாயகராக பொறுப்பேற்றிருப்பது குறிக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, சபாநாயகரின் அனுபவத்திலே, உங்களுக்கு மட்டுமல்ல, மற்ற எல்லோருக்கும், சமீபத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். ஜனநாயக மரபு என்று சொன்னால், ஒவ்வொருவரும் ஒரு அர்த்தம் கொடுப்பார்கள். நவீன காலத்தில் ஜனநாயகத்தில் பல்வேறு உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த உத்திகளை இங்கு இருக்கக்கூடிய பல்வேறு உறுப்பினர்களும் மனதில் கொள்ளவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில், நமக்கெல்லாம் உதாரணமாக விளங்கக்கூடிய பாராளுமன்ற பெரிய சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் மிகச் சிறந்த





முறையில், அவைகளை தெளிவுபடுத்தி, செய்துகொடுத்து, புதிய உத்திகளை கையாண்டு, முன்காலத்திய ஜனநாயக மரபுகளை மட்டும் வைத்துக்கொள்ளாமல், புதிய உத்திகள் உருவெடுக்கும் ஜனநாயகப் போக்கினை கையாண்டு, சிறந்த முறையில் காரியங்களை செய்துகொண்டு இருக்கிறார்கள். அவையெல்லாம் நமக்கு வழிகாட்டியாக இருக்கும், அதைவிட சிறந்த முறையில் நீங்கள் வழிகாட்டியாக விளங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அது மாத்திரமல்ல. சபாநாயகருடைய அரவணையில் தான் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். 'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்று சொல்வது போல, சட்டசபை அங்கத்தினர்களாக வரும்பொழுதே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு வந்துவிடுகிறோம் என்பது அல்ல, கற்கவேண்டியது அநேகம் இருக்கின்றன. எங்களை சிறந்த சட்டசபை அங்கத்தினர்களாக உருவாக்குவது உங்கள் கையிலேதான் இருக்கிறது. அந்த அடிப்படையில் சிறந்த ஜனநாயக முறைகளைக் கையாண்டு, புதிய மரபுகளையும் ஏற்படுத்துவதற்கு நீங்கள் கருவியாக இருக்கவேண்டும் என்று நான் மனப்பூர்வமாக வேண்டிக்கொள்கிறேன்.

சட்டசபை அலுவல்களைப் பொறுத்தவரையில், முன்பு 'லெஜிஸ்லேச்சர் இன்பர்மேஷன்' என்ற ஒரு ஜர்னல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வந்துகொண்டிருந்தது. அது சட்டசபை அங்கத்தினர்களுக்கெல்லாம் பயன் உள்ளதாக இருந்தது. ஆனால் அது ஆங்கிலத்தில் இருந்த காரணத்தினால், பெரும்பாலான அங்கத்தினர் அதைப் படித்து அதிலுள்ள சாரத்தைப் புரிந்துகொண்டு, அதற்கேற்றபடி நடந்துகொள்ளக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தது. வருங்காலத்திலாவது, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சட்டசபை அங்கத்தினர்களுக்கான இதழ் ஒன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டசபையில் மட்டுமில்லாமல், மற்ற மாகாணங்களில் உள்ள சட்டசபைகளில் நடக்கக்கூடிய நடவடிக்கை, சட்டமுறைகள் சம்பந்தமாக ஏற்படக்கூடிய விவாதம் இவைகளின் சாரத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு பத்திரிகையாக இருந்தால், சட்டசபை அங்கத்தினர்கள் மிக வேகமாக தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு ஒரு பயன் உள்ள கருவியாக அது அமையும்.

கடைசியாக சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியின் சார்பாக மனப்பூர்வமான வாழ்த்துக்களை தங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, சட்டம் படித்தவர்களும், பட்டம் பெற்றவர்களும் தான் இதுவரையில் இந்தச் சபைக்குத் தலைவராக இருந்திருக்கிறார்கள். ஜனநாயகத்தின் அடிப்படையில் வெகுவேகமாக ஏற்படக்கூடிய பெரும் மாற்றத்தை நாம் இன்றையதினம் கண்டுகொண்டிருக்கக்

கூடிய இந்த சந்தர்ப்பத்தில், தமிழ் படித்த, தமிழ்ப் புலவர் ஒருவர் இன்றையதினம் சட்டமன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இதனுடைய அறிகுறியாக விரைவிலே தமிழ் ஆட்சி மொழியாகவும், நீதி மன்றத்தின் மொழியாகவும் வருவதற்கு ஒரு அடையாளமாக இந்த மன்றத்தினுடைய தலைவராக ஒரு தமிழ்ப் புலவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்கிறபொழுது, அது மிகவும் ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயமாக அமைந்திருக்கிறது. உங்களுக்கு அதிகமாகச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. சட்டமன்றத்தினுடைய மரபுகளை கட்டிக்காப்பதிலும், அவைகளைப் போற்றிப் பாதுகாப்பதிலும் மிகவும் உஷாராக இருந்து, எங்களைப் போன்று மைனாரிடியாக இருக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, இந்தச் சபையை நல்ல முறையிலே நடத்திச் செல்வதற்கு தாங்கள் உதவியாக இருப்பீர்கள் என்று கூறி, நான் சார்ந்துள்ள இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உங்களுக்கு பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, தங்களை இந்தச் சபைக்கு சபாநாயகராக ஏற்றுக் கொள்ளும்பொழுது ஒரு ஞாபகம் வருகிறது. தான் பிறந்த மண்ணுக்கு உண்மையான அதற்குரிய பெயரையிட்ட அண்ணன் இல்லை என்றாலும், அவருக்குப் பின் உண்மையிலேயே ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்ற நிலைமைக்கு ஒப்ப, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த முதல் தொண்டை முறையாகச் செய்திருக்கிறார்கள் என்பது தான் அதிலிருந்து தெளிவாக தெரிகிறது. பண்டைக்காலத்திலே அரசர்களுக்கு, அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கும், முன்கூட்டியே காரியங்களை எடுத்துச் சொல்வதற்கும் புலவர்கள் தான் பயன்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே தாங்களும் இந்தச் சபையிலே சபாநாயகராக வீற்றிருக்கிறீர்கள். அந்தக் காலத்தில் அரசர்கள் இருந்தார்கள், அவர்களுக்கு யோசனை கூற அமைச்சர்களும், புலவர்களும் தேவையாக இருந்தது. இன்று அரசர்கள் இல்லை, அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பண்டைய இலக்கியத்தில் இருக்கிற பண்பாடுகளைக் காப்பாற்றுவதற்கு தாங்கள் அடிக்கடி அவர்களுக்கு யோசனை சொல்வீர்கள் என்பது எங்களுக்கு உறுதி. அதோடுகூட, அரசு தவறு செய்கிறபொழுது கூட, அன்றிருந்த புலவர்கள் அதைக் கண்டித்து முறைப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப் பல புலவர்களைப்பற்றி நமது புராதன ஏடுகளில் வருகிறது. அதைப்போலவே, அமைச்சர்களும், அங்கத்தினர்களும் சேர்ந்திருக்கிற இந்தச் சபையிலே புலவர் ஒருவர் தலைமை வகிக்கிறார்கள் என்று சொன்னால், பண்டைய பண்பாடு, பண்டைய காலத்தில் நடந்த முறைப்படி நீதி தவறாத ஒரு நிலை ஆகியவற்றைக் கொண்டுவந்தாகிவிட்டது, அதற்கு ஆரம்பத்திலேயே அடிகோலியாகிவிட்டது என்பதுதான் அதிலிருந்து அர்த்தப்படும். அந்தத் துறையிலே தாங்கள் புலவராக விளங்குகிறீர்கள்.





தவறு செய்வதும், ஒரு சில காரியங்களிலே உணர்ச்சி வசப் படுவதும் அங்கத்தினர்களுக்கு இயல்பான வழக்கம். அப்பொழுதெல்லாம் எங்களை முறைப்படுத்தி, ஒரு நிதான வழிக்குக் கொண்டு வருவது சபாநாயகர் அவர்களுடைய கடமையாகும். எப்படி மாண்புமிகு அண்ணா அவர்கள் கோபப்படாமலேயே எங்களைத் திருத்தி குணவந்தர்களாக ஆக்கினார்களோ, அந்த முறையிலேயே தாங்களும் கோபப்படாமல், எங்களை முறைப்படுத்தி, நல்வழிக்குக் கொண்டுவருவதும் தங்கள் கையிலே இருக்கிறது. உண்மையிலேயே எங்களை இந்தச் சபையில் பிரதிபலிக்கக்கூடிய அங்கத்தினர்களாக ஆக்கிக்கொண்டு வருவது சபாநாயகர் அவர்களுடைய கையிலே தான் இருக்கிறது. நாங்கள் உணர்ச்சிவசப்படும் பொழுது, எங்களை கண்டிக்கவேண்டியது, எங்களை முறைப்படுத்த வேண்டியது, அல்லது ஒழுங்குபடுத்தவேண்டியது தங்களுடைய கையிலே தான் இருக்கிறது. வேதவாக்கிலே கூறியபடி பிரம்பைக் கையாளாத தகப்பன் தன் மகனை கெடுக்கிறான். கண்டிப்பு இல்லாத சேனை முறையாகாது, கண்டித்து நடத்தப்படாத பிள்ளை முறையாக வளர்க்கப்படமாட்டான். ஆகவே, உங்கள் கீழ் பணியாற்றுகின்ற, செயல்படுகின்ற நாங்கள் வழி தவறும்பொழுதும், அல்லது உணர்ச்சிவசப்படும்பொழுதும், முறையாக, தயவுதாட்சணியம் இல்லாமல், எங்களைக் கண்டித்து, சபையினுடைய உரிமைகளையும், கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டியது உங்களுடைய கடமை. மைனாரிட்டியாக இருக்கும் எங்கள் விஷயத்தில் அதைத் தவறாது நடத்துவீர்கள் என்று நினைக்கிறேன். மு.ப. 9–30 சிறுபான்மையோராக இருக்கும் எங்களுக்கு பரிபூரண உரிமையைக் கொடுத்து, கடந்த காலத்தில் இருந்த ஸ்பீக்கர் கொடுத்தது போலவேயும், அதிகமாகவும் உரிமைகளைக் கொடுத்து, அதிகப்படியான சந்தர்ப்பங்களைக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த சபையிலே தங்களுக்கு இந்தியக் குடியரசு கட்சியின் சார்பில் பூரண ஒத்துழைப்பைக் கொடுப்போம் என்று சொல்லி, இந்த சபையின் கௌரவத்தை நிலைநாட்டுவோம் என்று கூறி அமர்கிறேன்.

* **ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே தமிழால் உயர்ந்து, தமிழை உயர்த்தி, தமிழ் நாட்டின் சட்டப் பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தங்களை தமிழை நேசிக்கும் நான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக மனப்பூர்வமாக, வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். 1962-ம் ஆண்டிலிருந்து சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்து பணியாற்றியிருக்கிறீர்கள் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்து பணியாற்றியிருப்பதால், உரிமையை எடுத்துக் கூறும் அங்கத்தினர்கள் எந்த வகைகளில் தொல்லைக்கு உள்ளாகி இருப்பார்கள் என்பதை அனுபவபூர்வமாக தெரிந்தவர்கள் தாங்கள் என்பதை அறிவோம். 1967-லிருந்து நேற்றுவரையில், நீங்கள் இந்தப் பேரவையின் துணைத் தலைவராக இருந்து இருக்கிறீர்கள். பேரவையின் துணைத் தலைவராக இருந்து இந்த மன்றத்தினுடைய தலைமைப் பொறுப்பை மிகச் சிறப்பாக நடத்தி பணி புரிந்திருக்கிறீர்கள். அதை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன், கால்ட்வெல் துரைமகனார் இயற்றிய ஒப்பிலக்கணத்தை

தமிழில் மொழி பெயர்த்து இருக்கும் தங்களுக்கு சட்ட மன்றத்தின் தலைவராக இருப்பவர் எப்படி இயங்கவேண்டும், இருக்க வேண்டும், இலக்கணமாக விளங்கவேண்டும் என்ற ஆற்றலை, எல்லாம் வல்ல இறைவன் தரப் பிரார்த்திக்கிறேன்.

தேசிய மைனாரிடி சமூகத்தினராகிய நாங்கள், இன்றைய ஜனநாயக மரபை அடிப்படையாகக் கொண்ட, தேர்தல் முறை காரணமாக, முஸ்லிம்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து எத்தனை பிரதிநிதிகள் இந்த மன்றத்திலே இருக்க வேண்டுமோ அத்தனை பிரதிநிதிகள் இடம் பெறமுடியாத நிலை இருக்கின்றது. அந்த நிலையிலும், குறைந்த அளவே இடம் பெற்றுள்ள நாங்கள் சமய உண்மைகளை, உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, எங்களுடைய எண்ணிக்கை பலத்தைப் பாராமல், ஜனநாயக தத்துவத்தைச் சிந்தித்து, நாங்கள் ஜனநாயக அரசியலுக்கு துணைநிற்கும் நிலையைக் கவனத்தில் கொண்டு, மாமன்றத்திலே போதிய அளவு மைனாரிடி சமூகத்தின் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு இடம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இதே மாமன்றத்திலே டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது இன்று நினைவுக்கு வருகிறது. அதை மீண்டும் அவர்கள் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் இந்த மன்றத்திலே குறிப்பிட்டார்கள், நினைவு படுத்தினார்கள். டாக்டர்களுடைய பணி பலஹீனமாக இருக்கக் கூடியவர்களுக்கு அவர்களுடைய பலஹீன நிலையைப் போக்கி, புதிய பலத்தை வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கும், இருக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா எடுத்துச் சொன்னார்கள். எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் எங்கள் உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்தில், எண்ணிக்கை அடிப்படையில் நேரம் தராது, அவர்களுடைய ஜனநாயக நம்பிக்கையை அடிப்படையாக வைத்து தாராளமாக நேரத்தை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் இலக்கியத்திற்கு 45 நூல்களை எழுதித் தமிழுக்கு சேவை செய்திருக்கிற தாங்கள் தமிழ் நாடு சட்ட மன்றத்தில் கொஞ்சுகின்ற ரஞ்சிதமான தமிழ் கோலோச்சுகின்ற வாய்ப்பைப் பரிபூரணமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் தங்களுடைய தேர்வை வரவேற்று, பாராட்டி, தங்களுடைய பேரவைத் தலைமையில் மகத்தான வெற்றியும், பெருமையும் ஏற்படும் வகையில் உங்களுக்கு இறைவன் துணைபுரிய வேண்டும் என்று பிரார்த்தித்து அமர்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, சுயேச்சை உறுப்பினர் என்ற முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதிக நேரம் பேச விரும்பவில்லை. சுயேச்சை





உறுப்பினர்களாகிய எங்களைப் பொருத்தவரையில், நாங்கள் எந்தக் கட்சியையும் சாராமல், இருக்கும் நிலைகளை எடுத்துச் சொல்லி, தப்புகளையும் சுட்டிக்காட்டி வருகிறோம். அப்படி எடுத்துச் சொல்லும் ஒரே கட்சி சுயேச்சைக் கட்சிதான். (ஒரு குரல் : அது ஒரு கட்சியா ?) ஆம், கட்சி போலத்தான்.

நம்முடைய சபையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்தியாவிலேயே, எல்லா மாநிலங்களிலும், மிக்க அமைதியாக, சட்ட மன்றத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றி வருகிறோம். என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள், நம்முடைய சபாநாயகர் அவர்கள் எப்படியிருக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டு இருக்கிறேன் என்றால், சிரித்துக் கொண்டே இருக்கும் முகத்தை காணவேண்டும். எங்கே கோபம் இருந்தாலும் அதற்கும் சிரிப்பு, எதற்காவது சிரிப்பு என்றாலும், அதற்கும் சிரிப்பு. இரண்டுக்கும் வித்தியாசத்தையும் சிரிப்பின் மூலமே காட்ட வேண்டும். அந்த முறையில் அண்ணா அவர்களைப் பின்பற்ற வேண்டும். எங்களைப் போன்ற பிரதிநிதிகளுக்கு நல்ல வாய்ப்புக்களைக் கொடுக்கவேண்டும். ஏனென்றால், எல்லா விஷயங்களையும், என்னென்ன தப்புக்கள் இருந்தாலும், அவற்றை தைரியமாக சொல்லக் கூடியவர்களாகிய எங்களுக்கு, வாய்ப்புக் கொடுத்து, பெரியவர்களாகிய தாங்கள் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். நாட்டிற்கு நல்லதைச்செய்ய தங்களுக்கு ஆற்றலைக் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்தித்து முடிக்கிறேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, இன்று தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக—அடையும் மற்ற உறுப்பினர்களுடைய மகிழ்ச்சிக்குக் கொஞ்சமும் குறையாமல்—தமிழ்ப் புலவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதில் கொஞ்சம் கூடுதலாகவே மகிழ்ச்சி அடைகிறேன் நான். இன்னும் சற்றுக் காலந்தாழ்ந்து நான் வந்திருந்தால், இங்கே இந்த சந்தர்ப்பத்தில் பேசும் வாய்ப்பை இழந்திருப்பேன். நல்ல நேரத்தில் வந்து விட்டேன். தலைவருடைய பதவிக்காலம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். தமிழ்ப் புலவர், இலக்கியப் பாடம் சொல்லுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது என்றிருந்த நிலையை மாற்ற அண்ணா அவர்கள் பாடுபட்டார்கள். அவர்கள் கட்சி ஆட்சி வந்த பிறகு தமிழ்ப் புலவர் ஒருவர் பேரவைத் தலைவராக வரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னே இந்த அவையின் தலைவராக இருந்தவர்கள் மிகச் சிறப்பாகத் தமிழிலே எல்லாவற்றையும் நடத்திக் கொண்டிருந்தார்கள். தமிழுக்கு சில உரிமைகளையும் தேடிக் கொடுத்தார்கள். தங்கள் காலத்தில் அது விரிவடைந்து வளரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். ஆனால் ஒரு குறை இன்னும் நீங்காமல் இருந்தது—நீங்காதது பல குறை; அதிலே ஒரு குறை—தலைவரவர்கள் அவைக்கு வரும்போது, "ஆனரபிள் ஸ்பீக்கர்" என்று சொல்லுகிற சடங்கு ஆங்கிலத்திலேயே நடைபெறுவதைப் பார்த்தும் கேட்டும் நான் கொஞ்சம்

சிரித்துக்கூட இருக்கிறேன் (சிரிப்பு). மற்ற அங்கத்தினர்கள் சிரிப்பது போன்று அல்ல; அவர்கள் வெளிப்படையாகச் சிரிக்கிறார்கள், தைரியமாக; நான் மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டிருக்கிறேன். "மாண்புமிகு பேரவைத் தலைவர்" என்று சொன்னால் என்ன கெட்டுப் போகுமோ? ஒருவேளை அதில் கொஞ்சம் காம்பீர்யம் இல்லையென்றால், "மாண்புமிகு பேரவைத் தலைவர் வருகிறார்" என்று சொன்னால், மிக நன்றாக இருக்கும். தமிழிலே ஒரு வார்த்தை கூடச் சேர்கிறது--அவ்வளவுதான். "வருகிறார்" என்னும் சொல்லிலே, அங்கத்தினர்களை எழுந்து நிற்கத் தூண்டும் அளவுக்குக் காம்பீர்யம் இருக்கிறது. நாளையிலிருந்தாவது, "ஆனரபிள் ஸ்பீக்கர்" என்பது போய், "மாண்புமிகு பேரவைத் தலைவர்" என்னும் ஒலி எழுப்பப்படும் என்று நினைக்கிறேன்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், தாங்கள் இந்தப் பேரவைத் தலைவர் ஆசனத்தில் வீற்றிருக்கும்போதெல்லாம், இப்பொழுது அணிந்துகொண்டிருக்கும்படியான உடையைப் போன்றே அணிந்து கொண்டிருக்க வேண்டும். இது என்னுடைய வேண்டுகோள் ஆகும். அப்படித்தான் தாங்கள் அணிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். தமிழனுக்குரிய வேட்டியும், சட்டையும் மேல்குட்டையும் அணிந்துகொண்டு தாங்கள் அமர்ந்து, அதிலும் ஒரு புரட்சியைக் காட்டுவீர்கள். அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால், ஒரு வேளை, மாறுபாடு இருக்குமோ என்று என் மனம் எண்ணவும் செய்கிறது. ஒருவேளை அரைக் கைச் சட்டையை முழுக்கைச் சட்டையாக்கிக் கொள்ளலாம். அதிலே தவறு ஒன்றும் இல்லை. ஆனால், இன்றே அப்படி ஆகிவிட்டது. அது நல்லது. தமிழன் காலம் அறியாதவன்; நிலை அறியாதவன் என்று இருக்கக்கூடாது. அந்த மாறுதலை நான் வரவேற்கிறேன். இன்னொரு குறிப்பையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அந்தக் குறிப்பு என்னவென்றால், இந்த இரண்டாண்டுக் காலமாக, பிரசுரங்கள் எல்லாம் தமிழில் கொடுக்கப்படுகின்றன என்றாலுங்கூட, தமிழிலும் கொடுக்கப்படுகின்றனவே தவிர, தமிழில்தான் கொடுக்கப்படுகின்றன என்ற நிலை இல்லை. ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் கைப்பற்றுகிறது என்றால், ஆங்கிலம் அகன்று தமிழ் உரிமை பெறுகிறது என்பதாகும். எல்லாத் துறைகளிலும் ஆங்கிலம் நிறுத்தப்பட்டு அங்கெல்லாம் தமிழ் மட்டும் வந்தால்தான் தமிழுக்கு உரிமை கிடைக்கிறது என்று அர்த்தம் ஆகும். இல்லையென்றால், மொழி பெயர்த்துக் கொடுக்கிற சலுகை ஆகும். சலுகையைப் பெற்று என் தாய் மொழி வாழுகிற காலத்தைச் சீக்கிரம் முடிவுக்குக் கொண்டு வர இந்தப் பேரவைக்குத் தாங்கள் தலைவராக வந்த பிறகாவது—முன்வர வேண்டும். பழைய சம்பிரதாயத்தைத் தூக்கியெறிய, சுயமரியாதையை நிலைநிறுத்தத் தாங்கள் முற்படுவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.





இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், சட்டரீதியாக உள்ள மன்ற விதிப் புத்தகம்—அதிகாரபூர்வமானது—ஆங்கிலத்திலேயே இருக்கின்றது. தமிழில் இல்லை. நம்முடைய பெருமதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட, "இங்கிருக்கும் சட்டப் பேரவை விதிப் புத்தகங்களில் தமிழில் உள்ளவை செல்லுமா, ஆங்கிலத்தில் உள்ளவை செல்லுமா?" என்ற வினா எழுந்தபோது, "ஆங்கிலத்தில் உள்ளவைதான் சட்டப்படி செல்லும்" என்று சொன்னார்கள். அதை விரைவில் மாற்ற வேண்டும். தமிழ் மொழிபெயர்ப்புத்தான் சட்டப்படி செல்லுபடியாகும் என்று அறிவிக்க முன்பிருந்த பேரவைத் தலைவர் அவர்கள் முயன்றிருந்தார்கள். அதை மிக விரைவில், சில வாரங்களுக்குள், இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே நிறைவேற்றலாம். ஒரு தடையும் இல்லை. ஒரே தடை இருக்க முடியும். தமிழ்ச் சொற்களுக்குச் சரியான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய தகுதி இல்லை என்பதில் நமக்கு நம்பிக்கை இருந்தாலொழிய, இதிலே அதிகாரபூர்வமாக சட்ட விதிப் புத்தகம் தமிழ்தான் என்று செய்துவிடுவதில் தவறு இருக்கப் போவதில்லை.

"மேஸ் பார்லிமென்டரி ப்ரொசீஜர்" என்ற பெயரில் பாராளுமன்ற நடவடிக்கை முறைகளைக் குறித்து ஒரு பெரிய புத்தகம் ஆங்கிலத்தில் இருக்கிறது. அதைத் தமிழில் கொடுத்துவிட்டால் நல்லது. பார்லிமென்டரி நடைமுறைகளைப்பற்றிப் புரிந்து கொள்ளவும், முதல்தரமான பார்லிமென்டேரியனாக வருவதற்கும் அதுதான் வேத புத்தகமாக இருக்கிறது. அந்த "மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டிஸ்" என்னும் புத்தகத்தைச் சுருக்கமாக அல்லாமல், முழுசாகவே தமிழில் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டும். தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் ஒன்று வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பணியை அதனிடம் கொடுத்தால், சில வாரங்களுக்குள் அத்தகைய தமிழ் வெளியீடு ஒன்று வந்துவிடும். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், சில சமயங்களில் அதை எடுத்துப் படிக்கிறபோது--வேத புத்தகம் என்றாலே மறைந்துதான் இருக்கும்—அவர் என்ன சொன்னார் என்று அடுத்திருப்பவரைக் கேட்கும் அவல நிலை சிலருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அவரை ஒட்டிபேசுவதோ, வெட்டிப் பேசுவதா என்று தெரியாத நிலையும் உண்டாகி விடுகிறது. ஆகவே, மேஸ் பார்லிமென்டரி நடவடிக்கைப் புத்தகமானது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு கொடுக்கப்பட்டால், யாரும் எளிதில் புரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். அதையும் தாங்கள் செய்ய வேண்டும் என்ற குறிப்பையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்களுடைய இந்தப் பதவிக் காலம், அண்ணா அவர்கள் காட்டிய வழியில், சிறந்த முறையில், இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. உண்மையான தமிழருக்கு உணர்ச்சிமிக்க தமிழருக்கு கொஞ்சம் கோபம் வருவது இயற்கை. அதுதான் இயல்பு. ஆகவே, எங்கள் கோபத்தையெல்லாம் பொறுத்து, அது தமிழனுடைய

கோபம் என்று எண்ணி, அதற்கெல்லாம் சலுகை காட்டி, எங்களை நடத்திச் செல்லும்படியாகக் கேட்டு, என் உரையை முடிக்கின்றேன். தங்களுக்கு வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினரால் ஒருமனதாகத் தாங்கள் தேர்தெடுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருப்பது, போற்றிப் பாராட்டி, வாழ்த்தி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று ஆகும். நல்ல தமிழ் அறிந்த தாங்கள், இன்று இந்தப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நல்ல தமிழ்ப் பண்பாட்டோடும், தமிழ் வழியில் வந்த நீதியோடும் நேர்மையோடும் மிகச் சிறப்பாக இந்தப் பேரவையை நடத்திச் செல்வீர்கள் என்ற உறுதிப் பாட்டினை இந்தப் பேரவையைச் சார்ந்த எல்லாக் கட்சித் தலைவர்களும் மிக நம்பிக்கையோடு தெரிவித்திருக்கின்றார்கள்.

நல்ல தமிழ் அறிந்திருக்கின்ற காரணத்தால், வள்ளுவர் வகுத்த நெறியைநன்றாக உணர்ந்திருக்கும் தாங்கள், இந்தப் பேரவையை மரபு கெடாத வகையிலேயும், புகழையும் பெருமையையும் மேலும் மேலும் உயர்த்துகிற முறையிலேயும் நடத்தி வருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீங்களும் பற்றும் அந்த நம்பிக்கையும் எல்லோருக்கும் இருப்பது மிக மிகப் பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும். ஆங்கிலமும் தமிழும் நன்கு அறிந்திருக்கும் தாங்கள், ஆங்கில முறையிலிருந்து மாறி தமிழிலேயே இந்தப் பேரவை நடைபெற வேண்டும் என்ற ஆவலுக்கு மேலும் மேலும் உறுதுணை புரியும் முறையில், இந்தத் தலைமையை ஏற்றிருப்பது எல்லா வகைகளிலும் பொருத்தம் உடையதாகும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

என்று நடுநிலைமைக்கு அழகான இலக்கணம் வகுக்க வந்த வள்ளுவப் பெருந்தகையார் மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். அதைச் சிறிது மாற்றிக்கூட நாம் அமைத்துக் கொள்ளலாம்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை அவைத்தலைவர்க் கணி

என்ற அளவிற்குக் கொள்ளுவோமானால், எல்லா வகைகளிலும் பொருத்தமுடைய ஒன்றாக இருக்கும்.

இந்தப் பேரவை, நீண்ட பெருங்காலமாகவே நல்ல மரபினைக் கடைப்பிடித்து, மற்றவர்களால் பாராட்டப்படத்தக்க அளவுக்கு நடைபெற்றுவந்த பாங்கினை நாமெல்லாம் கண்டும் கண்டும், மற்றவர்கள் பேசக் கேட்டும் கேட்டும், மகிழ்ச்சியுற்றிருக்கிறோம். அதற்குக் காரணம், இதற்கு முன்னால் இருந்த பல பேர் வழக்கறிஞர்களாகவும், டாக்டர்களாகவும் இருந்து, இந்தப் பேரவையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் மிகச் சிறப்பான முறையில், மற்றவர்களும் பாராட்டத்தக்க வகையில், நடத்திக்கொண்டு





வந்திருக்கிறார்கள். தமிழ்ப் புலமை பெற்ற தாங்கள், எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் இந்தப் பேரவையின் தலைமையை இப்பொழுது ஏற்றிருப்பது எல்லா வகைகளிலும் பொருத்தமுடைய ஒன்றாகும்.

இந்தப் பேரவையை நடத்திவந்த பேரவைத் தலைவர்கள், இந்தப் பேரவையின் மரபு கெடாத அளவுக்கு நேர்மையான முறையில் இதை நடத்தி வந்ததற்குக் காரணமாக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல, இந்தப் பேரவையில் வீற்றிருந்த எல்லாத் தரப்பையும் சார்ந்த உறுப்பினர்கள் அந்த மரபைக் காப்பதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள் என்பது மிக மிகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்குக்கூட அடிப்படைக் காரணம் என்னவென்று பார்ப்போமானால், இந்தியாவிலேயே உள்ள பல்வேறு மாநிலங்களில் இருக்கும் பேரவைகளின் நடவடிக்கைகளோடு, இந்தியப் பாராளுமன்ற நடவடிக்கைகளோடு தமிழகப் பேரவையின் நடவடிக்கைகளை ஒப்பிட்டுப் பார்ப்போமானால், எந்த நிலையிலும், எந்த இடத்திலும், எவருக்கும் முன்னாலே, இந்தப் பேரவையைச் சார்ந்த எல்லோரும் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய அத்தகைய சூழ்நிலையில்தான் இந்தப் பேரவை நடவடிக்கைகள் இருந்துவந்திருக்கின்றன, என்பதை எண்ணும்போது, நாமெல்லாம் மட்டிலா மகிழ்ச்சியடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தப் பேரவையை நடத்தி வந்த தலைவர்கள் அப்படி நடத்தி வந்ததற்குக் காரணம், தமிழ் இனத்திற்கே இருந்த ஒரு பெரும் பண்புதான் என்பதை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அந்தத் தமிழ் இனத்திற்கே இருந்த பண்பின் வழிவந்த நாம்தான் இந்தப் பேரவையின் நடவடிக்கைகளை அந்த வகையிலே நடத்துவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறோம். அந்தத் தமிழ்ப் பண்பாடு உங்களுக்கு மிக மிக உறுதுணையாக இருக்கும். அதை மிக நன்றாக அறிந்திருக்கும் தாங்கள், இதைச் சிறப்பாக நடத்திச் செல்வீர்கள் என்பதில் எல்லோருக்கும் மிகுந்த நம்பிக்கை உண்டு.

எல்லாம் தமிழிலே நடைபெறவேண்டும்; நல்ல தமிழிலே நடைபெற வேண்டும். தமிழிலே சொற்கள் எல்லாம் இல்லையானால், இல்லாத சொற்களை உருவாக்கிக் கொள்ளக்கூடிய வலிவு தங்களுக்கு இருக்கிறது. தமிழில் வேர்ச் சொற்கள் (ரூட் வோர்ட்ஸ்) உண்டு. இல்லாத சொற்களை உருவாக்கிக் கொள்ளக் கூடிய திறன் படைத்தது தமிழ். அந்த வகையில் திறம்பெற்று நடத்திச் செல்வதற்கான எல்லா முறைகளையும் தாங்கள் நன்றாக அறிந்திருக்கிறீர்கள்.

அது மட்டுமல்லாமல், இந்த அவையிலே தாங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்து சென்ற இரண்டு ஆண்டுக்காலமாக நல்ல பயிற்சியோடும் பழக்கத்தோடும் இந்த அவையின் இயல்புகளை நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்கள். பேரவைத் துணைத்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1969 பிப்ரவரி 22

தலைவராக இருந்து, பேரவையின் தலைமைப் பொறுப்பை வகித்து, நடத்தி வந்திருக்கிறீர்கள். பேரவைத் தலைவருக்குத் தேவைப்படுகிற இலக்கணங்கள் பல தங்களிடத்திலே ஒருங்கமைந்திருக்கும் பாங்கினைக் காண்கிறோம். பேரவைத் தலைவருக்கு இருக்க வேண்டிய அடக்கமும், பேரவைத் தலைவருக்கு இருக்கவேண்டிய பொறுமையும், கேட்டுக் கொள்ளுகிற பாங்கும், உணர்ச்சி வயப்படாத நிலைமையும், அதற்கேற்றபடி விடை கூறுகிற தன்மையும், இந்தப் பேரவையிலே இருக்கும் உறுப்பினர்களுடைய உரிமைகள் எந்த அளவுக்கும் பாதிக்கப்படாத அளவுக்கு அவைகளைக் கட்டிக் காக்க வேண்டும் என்கிற தன்மையும், ஆகிய இவை அத்தனை குணங்களும் தாங்களிடம் அமையப் பெற்றிருக்கிறீர்கள். அந்த வகையிலே மரபைக் கட்டிக் காப்பாற்றிவந்த தமிழக சட்டப் பேரவை இன்னமும் சிறந்து, புதிய மரபுகளைக்கூட ஏற்படுத்தி, அவை மற்றவர்களும் வியக்கத்தக்க அளவுக்கு வந்து, தமிழ்கப் பேரவை உருவாக்கிய மரபு என்று கொண்டு, இந்தியப் பாராளுமன்றம் கூட மேற்கொள்ளத்தக்க அளவுக்கும், வேறு பல மாநிலப் பேரவைகளும் மேற்கொள்ளத்தக்க அளவுக்கும் புதிய மரபுகளை உருவாக்குவதற்கும் தாங்கள் உறுதுணையாக இருப்பீர்கள் என்று பேரவை உறுப்பினர்கள் அத்தனைபேரும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தாங்கள் அவ்வாறு உறுதுணையாக இருந்து நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தனை பேரும் பெற்றிருக்கும் மகிழ்ச்சியோடு நானும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, தங்களுடைய நல்ல உள்ளம் வாழ்க; பேரவையிலே தங்களுடைய பொறுப்பை நீதி, நேர்மை வழி நடத்திச் செல்லும் முயற்சி வளர்க! தங்களுடைய தொண்டு என்றென்றும் வெல்க! வெல்க! என்று கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. து. ப. அழகமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதில் உள்ளபடியே மற்ற அனைவரையும்விட நான் மட்டற்ற பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நாம் இருவரும் எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்து பணியாற்றிய நாட்களை நான் நினைத்துப் பார்க்க விரும்புகிறேன். எதிர்க்கட்சி வரிசையிலிருந்த காலத்தில் எந்த வெட்டுத் தீர்மானத்தை யார் கொடுப்பது, யார் முதலில் பேச்சைத் துவக்குவது போன்ற விஷயங்களில் எல்லாம் போட்டி நம் இருவருக்குள்ளே இருந்தது. இன்றையதினம் நாம் ஆளும் கட்சி வரிசையிலே இருந்துகொண்டிருக்கிறோம். தாங்கள் துணைச் சபாநாயகராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றீர்கள். தற்போது சபையின் தலைவராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் மற்றவர்களைப் பேசுவதற்கு அழைப்பீர்கள். நான் இன்னின்னார் இன்னின்ன தலைப்பின்கீழ் பேசுவதற்கு இருக்கிறார்கள் என்று அவர்களின் பெயரை எழுதிக் கொடுக்கும் நிலைமையில் இருக்கிறேன். ஆகவே, தாங்களும் இப்போது பேசுவதற்கு வாய்ப்பில்லை. எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பில்லை. இந்த விஷயத்தில் நம் இருவருக்கும் இப்போது போட்டி இருப்



1969 பிப்ரவரி 22] [திரு. து. ப. அழகமுத்து]

பதற்கில்லை. நம் இருவருக்கும் இப்போது பேசுவதற்குள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. இந்தச் சபையை திறம்பட நடத்திச் செல்வதற்கான திறமை உங்களுக்கு இருக்கிறது என்பதை பாராட்டுவதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தங்களுக்குத் தந்து உதவுவோம். தங்களும் எங்களுடைய வேலைகளை லகுவாக்குவதற்கான உங்களுடைய ஒத்துழைப்பைத் தருவீர்கள் என்று எண்ணுகிறோம். தங்களை இந்தச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது பாராட்டத்தக்கது என்று மகிழ்ச்சியுடன் கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராகத் தாங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலையும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழக சட்டமன்றம் இந்தியாவிலே மிகப் பெரிய பாரம்பர்யத்தைக் கொண்டதாக விளங்குகிறது. இங்கிலாந்து நாட்டினுடைய சட்டமன்ற பாரம்பர்யமும் அதனுடைய மரபுகளும் நன்றாகப் பிரதிபலிக்கின்ற சட்டமன்றம் எங்கேயாவது இருக்கிறதா என்றால் அது தமிழ்நாடு சட்டமன்றம்தான் என்ற பெரும் புகழை இதற்கு முன்னாலேயே நிலைநாட்டியிருக்கிறோம். அத்தகைய புகழ்வாய்ந்த தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தலைவராகத் தங்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ஜனநாயகத்திலும், ஜனநாயக மேம்பாடுகளிலும் எதிர்க்கட்சியினர் அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதற்காக காங்கிரஸ் கட்சியையும், மற்ற கட்சிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இன்றையதினம் பொறுப்புக்கு வந்துள்ள தங்களைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்ல இருக்கிறார்கள். தமிழ் சிங்காதனம் ஏறுகிறது. தமிழ்நாட்டில் தமிழ் மொழியாலே ஆட்சியை நடத்துகிறோம் என்பதற்கான புதிய அத்தியாயத்திலே பிரவேசிக்கிறோம் என்பதன் அறிகுறியாகவே தாங்கள் இந்தப் பேரவையின் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள்.

நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, தமிழகச் சட்டமன்றம் பெரிய பெரிய தலைவர்களைச் சபாநாயகர்களாகக் கொண்டிருக்கிறது. திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. சிவஷண்முகம் பிள்ளை, திரு. செல்லபாண்டியன், கடைசியாக பதவி வகித்து, இன்றைக்கு மந்திரியாக ஆக்கப்பட்டிருக்கிற திரு. சி. பா. ஆதித்தனார் போன்றவர்கள் எல்லாம் நல்ல மரபுகளைக் கட்டிக் காத்து, முன்மாதிரியாக, ஜனநாயகத்தின் பாதுகாவலர்

களாக விளங்கி வந்தார்கள். திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்களும் மற்றவர்களும் சபையினுடைய உரிமைகளை—ஆளும் கட்சியினுடைய உரிமைகளை மட்டுமல்ல, எதிர்க்கட்சியினுடைய உரிமைகளை—கட்டிக் காப்பதில் நல்ல பாதுகாவலர்களாக விளங்கினார்கள். எங்கள் கட்சியினால் உங்களை இந்த ஆசனத்தில் அமர வைக்க முடிந்ததே தவிர, வேறு ஒன்றும் தனி உரிமை உங்களிடம் நாங்கள் கோரவில்லை. தாங்கள் இந்தச் சபையிலுள்ள எல்லா உறுப்பினர்களுடைய உரிமைகளின் பாதுகாவலர்களாக (Custodian of the House and its Privileges and rights.) விளங்கவேண்டும். தங்களை எங்கள் கட்சிக்கு மட்டும் சொந்தமாக்கிக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை.

'You are the Custodian of the rights and privileges of the Members as well as of the House' இந்தச் சபைக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. அவ்வாறே உறுப்பினர்களுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நாங்கள் இன்றையதினம் முதல்வரிசையில் அமர்ந்திருக்கிறோம். இந்தச் சட்டமன்றத்தினுடைய சிருஷ்டிதான் அமைச்சரவை. Ministry is the creature of the Legislature. இந்தச் சட்டசபையைப் பொறுத்தவரையில் இந்தியப் பாராளுமன்றத்திற்கு உள்ள உரிமைகள் இதற்கும் இருக்கின்றன. நாம் பெடரல் அமைப்பு முறையை மேற்கொண்டிருக்கிறோம். டெல்லி பாராளுமன்றத்தினுடைய மகத்தான மரபுகளை இந்தச் சட்ட மன்றம் கொண்டிருக்கிறது. நான்கு கோடி மக்களுடைய உரிமைகளையும், துன்ப-துயரங்களையும், நான்கு கோடி மக்களின் நலனைக் காக்கும் சகல அதிகாரங்களையும் தமிழகச் சட்டமன்றம் பெற்றிருக்கிறது. காலம் காலமாக ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இந்த மாமன்றம் அமைந்திருக்கிறது. வேதாந்திகள் வேதாந்தமாக சொல்லுவார்கள். நாம் புதிய மரபுகளை ஏற்படுத்தியேனும் இந்தச் சட்டமன்றத்தின் மரபுகளைப் பாதுகாப்பதில் முதலமைச்சர் தலைமையில் இருக்கின்ற நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தச் சட்டமன்றம், சட்டமன்றங்களின் காலக் கண்ணாடியாக, தமிழகத்தின் கண்ணாடியாக அமைய வேண்டும். புதிதாகப் பொறுப்பு தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்றத்திற்கென்று ஆதிபத்ய உரிமைகள்—சாவரின் உரிமைகள்—இருக்கின்றன. அந்த உரிமைகளில் பாராளுமன்றமும் தலையிட முடியாது. ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் பாதுகாவலர்களாக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். ஆளும் கட்சியாகிய எங்களுக்குச் சலுகைகள் தேவையில்லை. எதிர்க்கட்சியின் நியாயமான உரிமைகள், கடமைகள் இவற்றைப் பாதுகாத்து, புகழ்பெற்ற சபாநாயகர்களின் வரிசையில் நீங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று எங்கள் மனநிறைவுடன் இதய வாழ்த்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





நாம் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டோம். இந்திய பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற ரகளைகள், கலாட்டாக்கள் எல்லாம் இங்கே இல்லை. ரகளைகள் நடப்பது தவறு என்று சொல்ல மாட்டேன். மக்களிடத்திலிருந்து ஏற்படும் எண்ணங்களே சிலசமயம் ரகளைகளாக ஏற்படுகின்றன. இவைகள் எல்லாம் அபாய விளக்குகள். நாம் ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கிறோம் என்றால், இந்தச் சட்டமன்றம் ரத்தக்களரிக்கும், பலாத்காரத்துக்கும் சவக்குழி வெட்டுகிறது என்றுதான் பொருள்படும். ஜனநாயகம் கல்லறைக்குப் போய்விடுமோ என்று அஞ்சக்கூடிய அளவுக்குப் பல சட்டமன்றங்களில் நிகழ்ச்சிகள் நடந்துவரும் நேரத்தில், தமிழகச் சட்டமன்றம் ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதற்கு நல்ல வழிகாட்டியாக விளங்கி வருகிறது. இந்தப் பெருமைமிக்க மன்றத்தினுடைய பெரும் தலைவராக—பேரவைத் தலைவராக—தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்கும் ஆற்றல் பெற்றவர் தாங்கள்.

கடந்த சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலே பயிற்சி பெற்று, இன்றையதினம் ஆளும் கட்சியிலே இருந்து துணைச் சபாநாயகராகவும் பயிற்சி பெற்ற உங்களது அனுபவங்கள், அறிவாற்றல் எல்லாம் உங்களை வழிநடத்திச்செல்லும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான்கு கோடி மக்களுடைய உணர்வுகளை, நியாயங்களை, நீங்கள் மதித்து, தமிழகத்தின் மேம்பாட்டுக்காக நீங்கள் உங்களுடைய ஒத்துழைப்பைத் தந்து உதவ வேண்டும் அதற்கான நல்ல ஆற்றல், உறுதி, திறமை, அறிவு எல்லாவற்றையும் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். நாங்கள் உங்கள் கரங்களைப் பலப்படுத்தி, உங்கள் கட்டளைகளை சிரமேற் கொண்டு ஜனநாயக மேம்பாட்டுக்காக, ஜனநாயகத்தை நடத்திச் செல்வதில் உறுதுணையாக இருப்போம் என்று கூறி, தங்களுக்கு எங்களின் நல்லிதய நல்வாழ்த்துக்களை உரிமையாக்கி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தமிழக முற் பகல் 10-00
சட்டமன்ற வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தாங்கள் தொடங்கியிருக்கிறீர்கள். தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் பேரவைத் தலைவராக ஒரு புலவர் இடம் பெறுவது இதுதான் முதல் முறையாகும். தமிழ்நாடு என்கிற பெயரினை இந்த மாநிலம் பெற்றிருக்கிற நேரத்தில் இந்த மாநிலத்தினுடைய சட்டப்பேரவைக்கு தமிழ் கற்ற பெரும் புலவராகிய தாங்கள் அவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது சாலச்சிறப்புடைய ஒன்றாகும்.

தமிழர்கள், அதிலும் குறிப்பாக, தமிழ் வளர்த்த அன்றைய மன்னர்கள் புலவர்களை தங்களையும்விட மேலாக மதித்து வந்தார்கள். அரசர்களே புலவர்களை மதித்தார்கள் என்றால் அமைச்சர்கள் புலவர்களை மதிப்பதில் வியப்புக்குரிய செய்தி இல்லை. இலக்கியத்தில் வருகிறது—மோசிகீரனார் என்ற புலவர் அரசனுக்குரிய

முரசுக் கட்டிலில் படுத்துவிடுகிறார். அரசனுக்குரிய முரசுக் கட்டிலை யார் அவமதிப்புச் செய்தாலும் அப்படிப்பட்டவர்கள் கடும் தண்டனைக்கு ஆளாவார்கள். ஆனால், அந்த நியதியை அறியாத புலவர் மோசு கீரனார் முரசுக் கட்டிலில் படுத்துக் கண் அயர்ந்துவிடுகிறார். திடுதிடுப்போடும், பரபரப்போடும் அதைக் கண்ட காவலர்கள் மன்னனிடத்தில் சென்று முரசுக் கட்டிலில் ஒருவர் படுத்து உறங்குகிறார் என்று செய்தியைக் கூறியவுடன் மன்னனும் சற்று பரபரப்படைந்து அந்த இடம் நோக்கி வருகிறான். முரசுக் கட்டிலில் படுத்து இருப்பவர் புலவர் என்று அறிந்ததும் கையில் வாள் எடுக்க வேண்டிய அரசன் விசிறியை எடுத்து கட்டிலில் படுத்துக் கண் அயர்ந்திருக்கிற புலவருக்கு விசிறினான் என்பது இலக்கியம்.

அப்படிப்பட்ட இலக்கியப் பெருமை வாய்ந்த மன்னர்களால் புகழப்பட்ட புலமை தமிழ்நாட்டின் அரசவையில் ஏற்றுவிக்கப் பட்டு புகழப்படுகிறது, எல்லாக் கட்சித் தலைவர்களாலும் பாராட்ட பெறுகிறது என்பதனை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் புலவராகிய தாங்கள் இந்த அரியணையில் ஏற்றப்பட்டு பாராட்டப் பெறுகிற காட்சியினைக் கண்டு அகமகிழ வேண்டுமென்று எண்ணிய பேறிஞர் அண்ணா அவர்கள் இல்லையே என்கிற ஒரு பெரும் அயரம்தான் எங்கள் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது.

தாங்கள் கால்ட்வெல் ஒப்பிலக்கணத்தின் மொழி பெயர்ப்பைத் தந்து உதவியவர்கள். அதைப் பாராட்டாத புலவர் பெருமக்கள் கிடையாது. ஐம்பதுக்கும் மேற்பட்ட அதிகமான தமிழ் நூல்களை எழுதி உயர்ந்தவர்கள். இவைகளுக்கு எல்லாம் மேலாக எளிய நடையில் இனிய உரையாக இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் மனத்தையும், தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்தையும் கவர்ந்தவர்கள் ஆவீர்கள்.

அப்படிப்பட்ட தாங்கள் இந்த மன்றத்தை மிக்கசீரும் சிறப்புமாக நடத்துவீர்கள், இதுவரையில் கட்டிக் காக்கப்பட்டு வந்த மரபினையும், பண்பினையும் பெரும் அளவுக்குப் போற்றிப் பாதுகாப்பீர்கள் என்ற நிறைந்த நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் உண்டு. தங்களைப் பாராட்டி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய கட்சித் தலைவர்களும் இங்கே பேசுகிற நேரத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

சட்டமன்றம் என்றால் மெது—மந்தமான முறையில் தான் நடைபெறவேண்டும், சூடு, சுவை எதுவும் எதிலும் இருக்கக்கூடாது என்று விரும்புகிறவர்கள் அல்ல நாங்கள். ஏனென்றால் சூடான இடத்தில் இருந்துதான் இந்த இடத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம். ஆகவே, சூடும், சுவையும் சட்டமன்றத்தில் இருக்க வேண்டும். சுவை அளவுக்கு அதிகமானால் கூட அதனால் ஆபத்து வந்துவிடுவதில்லை. ஆனால் சூடு குழம்பு கொதிப்பதற்கு எந்த அளவுக்கு வேண்டுமோ, அந்த அளவுக்கு இருந்தால் போதும்.





ஆனால் அது கொள்ளிக் கட்டையில் பிடிக்கிற சூடு அளவுக்கு மாறிவிடாமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பினை அரியணையில் ஏற்றப்பட்டிருக்கிற தாங்கள் ஏற்று இருக்கிறீர்கள். ஏற்று இருக்கிற பொறுப்பினைத் திறம்படவும், தமிழ் மணம் கமழக் கமழவும் நிச்சயமாக ஆற்றுவீர்கள் என்ற நல்ல நம்பிக்கையோடு நான் ஆளும் கட்சியின் சார்பிலும், இந்த மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களுடைய சார்பாகவும் எனது பாராட்டுதலை அளிப்பதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, இந்தப் பேரவையின் தலைவனாக நீங்கள் எல்லோரும் ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுத்து, இவ்வளவு பெரிய பாராட்டுதலை அளித்ததற்கு நான் என் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வாழ்க்கையில் பிறர் புகழக் கேட்கின்ற ஒரு நிலைமை நான் இதுவரையிலும் பெறாதவன். அதனை விரும்பாதவன். அப்படிப்பட்ட எனக்கு என்னை ஒரு மணி நேரமாக இங்கே உட்கார வைத்துவிட்டு நீங்கள் எல்லாம் பாராட்டியபோது என் உள்ளம் நாணுகின்ற நிலையில் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட பாராட்டுதலை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். இவ்வளவு பெரிய பாராட்டுதலைப் பெறுகின்ற தகுதி என்னிடத்தில் இருக்கிறது என்று நான் கருதாவிட்டாலும், அவ்வளவு பெரிய தகுதி என்னிடத்தில் ஏற்படவேண்டும் என்கிற ஆசையின் விளைவாகவே இந்தப் பாராட்டுதல்கள் அளிக்கப்பட்டன என்று ஏற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட தகுதிகள் அனைத்தையும் என்னால் பெறமுடியாது போனாலும், எந்த அளவுக்கு அந்தத் தகுதியைப் பெறவேண்டுமோ, அந்த அளவு பெற முயற்சிப்பேன் என்ற உறுதி கூறி உங்களது பாராட்டுதல்களுக்கு எல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஒரு மணி நேரமாக கட்சித் தலைவர்களும் மற்றும் உள்ள உறுப்பினர்களும் என்னைப் பாராட்டினார்கள். ஆனாலும் அந்தப் பாராட்டு அவ்வளவு நிறைவு உடையதாக இல்லை. எங்கோ குறை இருப்பதாக உணர்கிறேன். கடந்த முப்பதாண்டுக் காலமாக எந்தத் தலைவனுக்குக் கீழே நான் பணியாற்றினேனோ, எந்தத் தலைவனுடைய தொண்டனாகப் பணியாற்றியதன் பயனாக இந்தப் பேரவையின் தலைமையிடத்தைப் பெற்றிருக்கிறேனோ, எந்தத் தலைவனை என் உள்ளத்தில் வைத்துப் போற்றி வருகிறேனோ அந்தத் தலைவன் இந்த இடத்தில் இருந்து பாராட்டவில்லையே என்ற ஒரு குறை என் உள்ளத்தில் வேதனை அளித்து வருகிறது. அந்த மாபெரும் தலைவனுக்கு எனது அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறேன்.

இந்த அவையின் தலைவராக புலுசு சாம்பமூர்த்தி முதல் சி. பா. ஆதித்தனார் ஈருக பெரும், பெரும் தலைவர்கள் இருந்து இந்தப் பேரவையின் மரபையும், மாண்பையும், பெருமையையும் கட்டிக் காத்து வந்திருக்கின்ற நிலையை நான் உணர்கிறேன். அப்படிப்பட்ட ஒரு பெரிய இடத்தில் இன்று என்னை அமர்த்தியிருக்கிறீர்கள். அவர்கள் கட்டி வளர்த்து வந்திருக்கிற பெருமையையும், மரபையும், மாண்பையும் மேலும் பெருக்கிப் புகழ் மணக்க என்னால் செய்ய முடியாது போனாலும் இருப்பனவற்றை அப்படியே காக்கவாவது என்னால் முடியுமா என்கிற அச்சம் என் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கிறது. என்றாலும், இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனைபேரும், இந்த மன்றத்தில் இருக்கிற தலைவர்கள் அத்தனைபேரும் இந்த மன்றத்தின் மதிப்பையும், மரபையும் காக்கக் கடமைப்பட்டவர்கள் என்று உணர்கிறேன். பேசிய உறுப்பினர்கள் அத்துணைபேரும் தமிழ் நாடு சட்டப்பேரவையின் மரபையும், பண்பையும் காக்கவேண்டுமென்று பாராட்டினார்கள். உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாத்துத்தரவேண்டுமென்று சொன்னார்கள். உறுப்பினர்களுடைய உரிமையைக் காக்க நான் தவறமாட்டேன். அதே சமயத்தில் உறுப்பினர்களும் இந்தப் பேரவையின் மரபையும், மதிப்பையும் காக்க என்னுடன் சேர்ந்து கடமைப்பட்டவர்களாவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களைப் பொறுத்துத்தான் அவையின் பெருமையும், மதிப்பும் உயர்கிறது. அவையின் மதிப்பும், பெருமையும் கட்டிட அமைப்பினாலோ, கலர் அமைப்பினாலோ உயர்வதில்லை. அவை எந்த இடத்தில் வேண்டுமானாலும் கூடலாம். அந்த அவையில் இடம் பெற்றிருக்கின்றவர்களின் நன்மை தீமைக்கு ஏற்பத்தான் அந்த அவையின் நன்மை தீமைகளும் அமைகின்றன.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

என்று ஔவையார் பாராட்டியிருக்கிறார்கள். அந்த வழியில் இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் பேரவைத் தலைவரைப் போலவே இந்த மன்றத்தின் மரபையும், புகழையும் காக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதனை உணர்ந்தவர்கள் என்ற எண்ணத்தில்தான் எல்லோருடைய துணையும் நமக்கு இருக்குமென்ற துணிவோடு இந்தப் பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிச்சயமாக நானும் இந்தப் பேரவை உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பதில் பெரிதும் விழிப்பாய் இருப்பேன் என்ற உறுதியை அளிக்கிறேன். உறுப்பினர்களுடைய உரிமை காக்கப்படுகிற நிலையில் மன்றத்தின் மரபு, மதிப்பு பாதிக்கப்படுகிறது என்கிற போது—உரிமையைக் காட்டிலும் இந்த மன்றத்தின் மரபையும் பெருமையையும் காப்பதே பேரவைத் தலைவரின் மிகப்பெரிய





பொறுப்பாகும் என்பதாக நான் நினைக்கிறேன். இந்தப் பேரவையின் உறுப்பினர்களும் மன்றத்தின் மதிப்பையும், மரபையும் பேணிக்காப்பதில் எப்போதும் எனக்கு உதவியாக இருக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையிலே உரையாற்றுவதற்குச் சில பல இலக்கணங்கள் நம்முடைய முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். சொற் சுருக்கம் பற்றிக் கருத்துக்களை வழங்கிய வள்ளுவப் பெருந்தகை அவர்கள் 'சொல்லாடல்' குறித்துமட்டும் பல அதிகாரங்களை ஒதுக்கி உரையாற்றுவதற்கான இலக்கணம் கூறியிருக்கிறார்கள். அவை அறிதல், அவை அஞ்சாமை, இனியவை கூறல், சொல் வன்மை, பயனில சொல்லாமை, புறங்கூறாமை, மற்றும் வாய்மை என்று ஏழு அதிகாரங்களில் அதுபற்றி 70 குறள்களில் விளக்கியுள்ளார். இதைத் தவிர, அடக்கமுடைமை என்ற அதிகாரத்தின்கீழ் வருகின்ற மூன்று குறள்களிலும் அதுபற்றிக் கூறியுள்ளார். ஆக மொத்தம், 73 குறள்களிலே வள்ளுவர் உரையாற்றுதல் பற்றிய இலக்கணத்தை வகுத்துள்ளார். நம்முடைய சட்டப் பேரவை விதிகள் 250 இருக்கின்றன, அவற்றில் 75 விதிகள் இதுபற்றிக் கூறுவனவாக அமைந்துள்ளன. ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் உரையாற்றும்பொழுது வள்ளுவர் கூறியுள்ள 73 குறள்களின் படியும் சட்டப் பேரவை விதிகள் 75 விதிகளுக்குட்பட்டும் ஆற்ற வேண்டும். அவற்றிற்குப் புறம்பாகப் போகாமல், அவ்விதிகளை வழுவாமல் உறுப்பினர்கள் உரையாற்றுகிறார்களா என்று பார்க்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. இங்கே 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 234 உறுப்பினர்களும் விதிமுறைகளுக்குட்பட்டு அவற்றை வழுவாமல் பேசுகிறார்களா என்று பார்க்கவேண்டிய ஒரு இக்கட்டான நிலைமையில் நான் இருக்கிறேன் என்பதை எல்லா உறுப்பினர்களும் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும், காக்கவேண்டிய முக்கியமான கடமையை நிறைவேற்றுவதிலே எல்லோரும் ஒத்துழைத்தால் அன்றி என்னால் இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கடந்த 30 ஆண்டுக் காலமாக திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்திலே இருந்துவருகிறேன். எனவே அதிலே அழுத்தமான கட்சிப்பற்று என்றென்றைக்கும், ஒரு சொட்டு ரத்தம் உள்ளவரை என் உள்ளத்தைவிட்டு நீங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் நான் இந்தப் பேரவையின் கண்ணியத்தையும், மரபையும் காப்பாற்றுவதிலே கடுகளவும் கட்சி உணர்ச்சிக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே . . ."

என்ற நெறியையொட்டி மன்றத்திலே உள்ள அத்தனை

[பேரவைத் தலைவர்] [1969 பிப்ரவரி 22

உறுப்பினர்களுக்கும் ஒத்த நீதியை வழங்குவதற்கு உறுதியாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்ற மரபைக் காப்பதிலே செய்தித்தாள்கள் முக்கிய பங்கேற்கின்றன.

" வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை "

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க செய்தியாளர்கள் அந்த அளவுக்கு மிகப் பெரிய பொறுப்பை உணர்ந்து, அவர்கள் தங்கள் ஆசைகளையெல்லாம் ஹேஷ்யங்களாக ஆக்கிவிடாமல், சட்ட மன்ற நிகழ்ச்சிகளைப்பற்றி செய்திகளைக் கூட்டிக்குறைத்து வெளியிடாமல் நடந்தபடியே வெளியிடுவது பாராளுமன்ற மரபைக் காப்பதோடு இந்த மன்றத்தின் பெருமையையும் காப்பாற்றத் துணைபுரிவதாக அமையும் என்று தெரிவித்துக்கொண்டு எல்லோருடைய துணையும் இருப்பதாலே நான் இந்தப் பணியை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி என்னுடைய பணிகளைத் துவங்குகிறேன்.

## 3. மறைந்த முதலமைச்சர் டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்களின் மனைவிக்கு மானியம் வழங்கல்

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறபோது நான் பேசும்படியான சமயத்திலே இறுதியாக ஒன்றைச் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் அப்பொழுது சொன்னால் பொருத்தமாக இருக்காது என்று நினைத்து அதை இன்றைக்கு சொல்கிறேன். மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் இறந்துவிட்ட சமயத்திலே எல்லாக் கட்சிக்காரர்களும், பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் வந்திருந்து உரிய மரியாதை தெரிவித்ததற்காக இந்தச் சட்டமன்றத்தின் சார்பாக நாம் அவர்களுக்கு மரியாதையைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறோம்: எங்கள் பெருந்தலைவர், திரு. காமராஜ், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எல்லாம் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்ட நேரத்திலேயும், பிறகு இறந்துவிட்ட சமயத்திலேயும் வந்து பார்த்து ஆறுதல் சொன்னார்கள். மாண்புமிகு அண்ணாதுரை அவர்களுடைய மனைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கும் பெருந்தலைவர் திரு. காமராஜ், திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எல்லாம் ஆறுதல் சொன்னார்கள். அவர்களுடைய கணவன அவர்களுக்கு எதுவும் இல்லாமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மறைந்துவிட்ட முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் இருக்கும் வரை நல்ல முறையிலே பணியாற்றினார்கள். கடமையையும் கண்ணியத்தையும் காப்பாற்றினார்கள். அவர்களை இழந்திருக்கிற திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு அரசின் சார்பிலே சீக்கிரமாக மானியத் தொகை கொடுக்கவேண்டுமென்ற கருத்தை



1969 பிப்ரவரி 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

இப்பொழுது நான் அவைமுன் தெரிவித்துக்கொள்கிறேன். இதை சர்க்காரும் மற்றவர்களும் பூரணமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த பரிவோடும், அரசியல் பெருந்தன்மையோடும் கூறிய யோசனைக்கு நான் அண்ணியார் அவர்களுடைய சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சார்பாக அவர்களுக்கு மானியம் அளிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு அண்ணியார் அவர்களுக்கு மானியத்தினை அளிப்பதிலே எந்தவிதமான தயக்கமும் காட்டாது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்ற சம்மதத்தை நாங்கள் அவர்களிடத்திலே பெறுக வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணா அவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவிகள் செய்யவேண்டுமென்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுதாபம் மிக்க, பரிவுமிக்க இந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன் என்றாலும், அதற்கான சம்மதத்தை அண்ணா அவர்களுடைய குடும்பத்தினரிடமிருந்து பெற்றபிறகு, கலந்து ஆலோசித்து, முடிவை இந்த மன்றத்திலே அறிவிப்பேன் என்று கூறி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நவின்று அமைகிறேன்.

## 4. திரு. க. கோமதிசங்கர தீட்சிதருக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவைக்கு இன்னொரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறவிரும்புகிறேன். இந்த மன்றத்திலே இப்பொழுது உறுப்பினராக இருப்பவரும், நம்மிடையே இருக்கின்ற அத்தனைபேரிலும் முதியவராக இருப்பவரும், 81 ஆண்டுகளை நிறைவெய்தியவராக இருப்பவரும் ஆகிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலும் இந்தச் சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருந்து நல்ல முறையிலே பணியாற்றி வந்திருக்கிறார்கள். சென்ற முறை நாங்கள் எதிர்த்தரப்பில் இருந்தபோது, நாங்கள் பேசும்பொழுது பேச்சின் நயத்தைக் கண்டுவிட்டு, எங்களுடைய பேச்சு முடிந்தவுடனே எங்களைக் கட்டி அணைத்துப் பாராட்டுகின்ற பேருள்ளம் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்கு 81 ஆண்டுகள் நிறைந்துவிட்டாலும், சட்டப்பேரவைப் பணிகளிலே சிறுவிறுப் போடும் பெருந்தன்மையோடும் நடந்துகொள்கிறார்கள். அவர்கள் கேள்விகள், கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அதிகமாகக் கொடுத்துக்கொண்டு முழுமூச்சுடன் தம் பணியிலே

ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த மதிப்பிற்குரியவருக்கு இந்தப் பேரவையின் வணக்கத்தையும், வாழ்த்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தாங்கள் இங்கு எடுத்துக்காட்டியதைப்போல் இந்த மாமன்றத்தினுடைய பழம்பெருமை உறுப்பினராக இருந்துவருகிற மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் இன்று 81 ஆண்டுகளை நிறைவெய்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணி நாம் அனைவரும் இறும்பூதெய்துகிறோம். தாங்கள் கூறியதைப்போல் அவர்களுக்கு 81 வயது என்றாலும், அவர்களுடைய சட்டப் பேரவைப் பணிகளைப் பார்க்கிற நேரத்தில் அந்த எண்ணைத் தலைகீழாகப்போட்டால் எந்த வயதோ அந்த வயது உள்ளவரைப் போல் இந்தப் பேரவையிலே தம்முடைய பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இந்த மாமன்றத்தில் நான் எதிர்க்கட்சியினுடைய உறுப்பினராக இருந்த காலம் தொட்டு அவரை நன்றாக அறிவேன். அவர்கள் இங்கு ஆற்றுகின்ற உரையில் எந்த அளவுக்குப் பண்பு மிளிரும் என்பதனையும், எந்த அளவுக்கு அரசியல் கண்ணியத்தோடு அவர்கள் இந்த அவையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் அறிந்திருக்கிறேன். அந்தக் காரணத்தாலேதான் என்னுடைய கட்சியிலே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் வருந்தி அழைத்த தொகுதிகளுக்கெல்லாம் நான் செல்ல முடியாத நிலையிலே, அவர்கள் நான் பொதுப்பணி அமைச்சராக இருந்த நேரத்திலே வந்து அழைத்தவுடன், ஓடோடிச் சென்று அவர்களுடைய தொகுதியிலே பல கூட்டங்களிலே கலந்து கொண்டேன். பல கூட்டங்களிலே கலந்து கொண்ட நிலையிலே நான் கூடக் களைத்து விட்டேன். ஆனால் அவர்கள் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டபோது எப்படி இருந்தாரோ அதே போன்றுதான் 10-வது கூட்டத்தில் கலந்து கொள்ளும்போதும் காணப்பட்டார். அந்த அளவுக்கு அவர்கள் வலிவோடு இருக்கிறார்கள். எந்த காய கல்பத்தைச் சாப்பிட்டு அவர்கள் இந்த நிலையைப் பெற்றிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுடைய தேசீய எழுச்சியும், மொழிப் பற்றும், பணிபுரிய வேண்டுமென்ற ஊக்கமும் ஆக்கமும் அவரை இவ்வளவு திடமான நிலையிலே வைத்திருக்கின்றன என்பதை அறிய நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த வகையில் அவர்கள் நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மார்ச்சு மாதம் வரவு செலவுத் திட்டக் கூட்டம் முடிவதற்குள் மாமன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து அன்னாருக்கு விருந்தளித்து பாராட்டி விழா நடத்துவதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டுமென்று கேட்டு, அவர்கள் மேலும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து நாட்டுப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் 81 ஆண்டுகள் நிறைவெய்தியதை சதாப்த பூர்த்தி என்று சொல்லுவார்கள். அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தமைக்கு அவர்கள் சார்பில் நான் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் நல்ல முறையிலே பாராட்டினார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த அவர்கள் 81 வயதை அடைந்திருக்கிறார்கள் என்பது எங்களுக்கு மிகச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இன்றைய கூட்டம் எந்தவிதமான கட்சி பேதமும் இல்லாமல் ஒரு குடும்பமாக ஆரம்பித்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இன்றுதான் சரியான முறையில் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன காய கல்பம் சாப்பிட்டார்களோ என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். தேசியம், காங்கிரஸ் என்னும் இரண்டு காயகல்பங்களையும் அவர்கள் நல்ல முறையில், பரிசுத்தமான முறையில் ஏற்றதால் அவர்கள் நல்ல முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது பிரான்ஸ் தேசத்தில் இரண்டு மாபெரும் தலைவர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டார்கள். ஜெனரல் மான்கோமரியும் சர்ச்சிலும் பேசிக்கொண்டார்கள். மான்கோமரி, ‘நான் குடிப்பதில்லை, சிகரெட் பிடிப்பதில்லை, தீய பழக்கங்கள் எதுவும் இல்லை, ஆகவே நான் நூற்றுக்கு நூறு பூரண நலத்துடன் இருக்கிறேன்’ என்று கூறினார். ஆனால் சர்ச்சில் ‘நான் குடிப்பேன், என்னுடைய தீய பழக்கங்களோ எல்லையில் அடங்காது, எல்லா விதத்திலும் தவறான பழக்கம் உள்ளவன். ஆனால் நான் 200 பங்கு நன்றாகத்தான் இருக்கிறேன்’ என்று சொன்னார். இது எப்படி இருந்தாலும் இயற்கையிலே நல்ல உள்ளத்துடன், தூய உள்ளத்துடன் இருப்பவர்கள் நெடுங்காலம் இருக்க முடியும். தீய உள்ளத்துடன் இருப்பவர்கள் கூட நெடுங்காலம் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் மழை கூடச் சரியாகப் பெய்ய வில்லையோ என்று சந்தேகமாக இருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் 100 வயது வாழ வேண்டும். இன்னும் வரக்கூடிய ஐந்தாறு தேர்தல்களில் அவருக்குப் போட்டியில்லாமல் விட்டுக் கொடுக்க வேண்டும். அவர் பல்லாண்டு வாழவேண்டுமென்று மனப்பூர்வமாக இறைவனைப் பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து அவருடைய பணி வளரவேண்டுமென்று கூறி அவர் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் வயதிலே முதிர்ந்தவர்களாக இருந்தாலும் தேசீய உணர்ச்சியிலும், சேவை உணர்ச்சியிலும் வாலிபராகவே இருந்து வருகிறவர். தீட்சிதர் அவர்கள் ஒரு விடுதலை வீரர். அவர் ஒரு புரட்சித் தலைவர். புரட்சி என்பதற்கும், தேசபக்தி என்பதற்கும் இலக்கணமாக வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற பெரியார்களில் ஒருவராகத் திகழ்கிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு அவர் தாத்தா,

அரசியல் தாத்தா. சபாநாயகர் அவர்கள் சொன்னது போல் தீட்சிதர் அவர்கள் இங்கு நல்ல முறையில் பேசுகின்றவர்களுக்கு அருகே அமர்ந்து ஊக்கமும் பாராட்டும் அளிப்பவர்.

தேசியப் போராட்டத்தைப் பற்றியெல்லாம் மறந்திருக்கக் கூடிய இந்தக் காலத்தில் அதை நமக்குக் கவனமூட்டும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் தீட்சிதர் ஆவார்கள். அந்தக் காலத்தில் ஆஷ் துரையும் மற்றும் ஆங்கிலேயரும் இந்திய அரசியலில் ஈடுபட்டிருந்த பெரியார்களை அவமதித்து சிரமத்திற்கு உள்ளாக்கிய காலத்தில் நெல்லையில் வீர இளைஞர்கள் சேர்ந்து வ. வே. சு. அய்யர் தலைமையில் கூடி, ஒரு வெள்ளைக்காரனுக்கு ஒரு இந்தியன் சாகத்தான் வேண்டுமென்ற முறையில் ஒவ்வொருவரும் ஒரு துப்பாக்கி, ரிவால்வர் வைத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். அன்று ஆஷ் துரையை ரயில்வே ஸ்டேஷனில் வைத்துச் சுட்டுவிட்டு, தன்னைச் சேர்ந்தவர்கள் பிடிபட்டு விடக்கூடாது என்பதற்காக தானும் அதே துப்பாக்கியினால் வாயில் சுட்டுக் கொண்ட வாஞ்சி அய்யருடைய தோழர் நம்முடைய பெரியார் தீட்சிதர் அவர்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட தேசியவாதிகளைப் பற்றி இன்று கேட்டு அறிய வேண்டுமென்று சொன்னால் 81 வயதை அடைந்த தீட்சிதர் போன்றவர்களால்தான் சொல்ல முடியும். அந்த வாஞ்சி அய்யரைப் பற்றியும் மற்ற தேசியத் தலைவர்களைப் பற்றியும் கருத்துக்களைப் புத்தக ரூபமாகத் தரவேண்டுமென்று நான் பல முறை அவர்களை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அந்த தேசிய வர்க்கத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் இன்று பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். கட்டபொம்மன் குடும்பத்துக்கு உதவியதுபோல் மற்ற தேசிய வர்க்கத்தில் வந்த குடும்பத்தினருக்கும் உதவ வேண்டும். அந்த முறையில் அந்த தேசிய உணர்ச்சியுடன் பாடுபட்டவர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் புத்தகத்தைக் கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய ஒரு புத்தகத்தை எழுதுவதற்கும், தொடர்ந்து பொதுநலத் தொண்டாற்றுவதற்கும் தீட்சிதர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டு, அவர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்தித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 5. நடைமுறைக் கேள்விகள்

### (அ) பேரவை நடவடிக்கை சுருக்க வெளியீட்டில் 29—1—1969-ல் அவை ஒத்திவைக்கப்பட்ட காரணம் தரப்படாமை

Thiru K. Vinayakam : Sir, I rise on a point of order. I have in my hand a brief record of proceedings that took place on 29th January 1969, when we met here last. You were presiding as Deputy Speaker on that date. You might recall that when Thiru Dhanushkoti was speaking, all of a sudden, a



gloom overtook this House and one Minister after the other, was going away to the hospital to find out what exactly was the position with regard ao the Condition of the then Chief Minister. When Thiru Dhanushkoti was containing his speech, Hon. Madhavan called me out and told me something and then he came into the House. He was the only Minister then in the House. (The Hon. Thiru M. MUTHUSWAMY : I was also in the House). I stand corrected. That does not make much of a difference to what I am going to say. The Hon. Thiru Madhavan tried to explain something but he was fumbling. He expressed a few words and he sank into his seat. I got the clue. I said that since the Chief Minister's condition was bad, why should we prolong the discussion. I moved a resolution that this House might adjourn and then the The Hon. Deputy Speaker adjourned the House.

All these details do not find a place here in this record. It simply says that the House adjourned at 11-15 a.m. to meet again at 9 a.m. on 30th January 1969. On what ground did it adjourn ? What was the reason for adjournment ? That should have found a place in the record. I do not want to take the credit that I should be figuring or Thiru Madhavan should be figuring. But what was the actual reason for the adjournment of the House ? That reason must find a place in the record. When it does not find a place in the record, is it in order ? I want a ruling from the Chair.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்களே யொழிய அந்தத் தீர்மானம் முறையாக முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, வாக்கெடுப்பு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட வில்லை. அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து கொண்ட முறைக்கு பேரவையின் பாராட்டுதல்கள் உண்டு. அந்த நிகழ்ச்சிகள் இதில் ஏன் இடம் பெறவில்லை என்பதற்கு நான் சொல்லியதுதான் காரணம். அப்படி அது அதில் இடம் பெறவேண்டுமென்று சொன்னால், அதை இந்தக் குறிப்பேட்டில் போடுவதற்கு பேரவைக்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அதையும் போட்டு விடலாம். முற் பகல் 10 30

### (ஆ) ஆளுநரின் பேருரை மீதான விவாதத்தைத் தொடர்ந்து நடத்தல்

Thiru K. VINAYAKAM : I raise another point of order. I am doing this in the interest of the entire House. I want to set up some healthy conventions.

Our Governor delivered a speech here portraying the policies of the Government headed by the late Mr. C. N. Annadurai. Discussion on it was going on. But in the middle some

[Thiru K. Vinayakam] [1969 பிப்ரவரி 22

untoward thing happened with the result that we adjourned. Then there was a change of Government. The then Chief Minister is no more with us. There was a Care-taker Government headed by the Hon. Mr. Nedunchezhian. A formal Government is now functioning under the leadership of Kalaignar Karunanidhi. One person Mr. Nedunchezhiyan who was in the old ministry is not here. The argument that this is an old Government, this is a continuous Government, this Government is carrying on the policies of the old Government as adumbrated by Mr. C. N. Annadurai will not hold water. I find that person missing and I see four new additional faces. Mr. Nedunchezhiyan was a member of that Cabinet. I think all those sitting on the Treasury Benches are known as Cabinet Ministers. Then we must say ' ex-minister '.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* யார் யார் இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவல் செய்தித்தாள்களிலும், அரசிதழிலும் வந்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அமைச்சரவையில் யார், யார் அமைச்சர்கள், யார் யார் அமைச்சர்களாக இல்லை என்று சொல்கிற நேரத்தில் கண்ணியத்தோடு அந்தக் கருத்துக்களை வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* இதுபோல் 1957-62 நேரங்களில் இங்கு காங்கிரஸ் அமைச்சரவை இருந்தபோது கடைசிப் பலகையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருந்தார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களைப் போன்றவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் எல்லாம் அமைச்சர்கள் என்று எண்ணிக் கொண்டு அப்போது நாங்கள் பேசவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

*திரு. கே. விநாயகம் :* அவர் அமைச்சரில்லை என்பதை செய்தித்தாள்கள் வழி பார்த்துக் கொண்டோம், பார்க்கவில்லை என்று சொல்லவில்லை. அதை இங்கே சொல்லியிருக்கவேண்டும். That is not the point now.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கவர்ன்மெண்ட் கெஜெட்டில் அது வருகிறது. அது உறுப்பினர்களுக்கு வருகிறது. அதைப் பார்த்து தெரிந்து கொண்டிருக்கவேண்டும். இல்லை என்றால் அது உறுப்பினரின் தவறே தவிர அரசினரின் தவறு அல்ல.

Thiru K. VINAYAKAM : That is not the point. That point I made jocularly because I wanted to have a dig at the Ministry. This is not a continuous Government or a Government headed by the Chief Minister Mr. C. N. Annadurai. That is my point. This is a new Government with one member in the old Cabinet missing headed by a new Chief Minister with the



1969 பிப்ரவரி 22] [Thiru K. Vinayakam]

addition of four new Ministers. They must be having their own policy Each Minister may be thinking of new legislation or some new policies in the interests of the State. So are we right in continuing the discussion on the Address delivered when the old Government was in office or should we ask for a new Address to be given by the Ministry through the Governor ? In fact my point is, I want a new Address because the Government may have new policies, they may have clear thinking and clean-cut policies, may be much better policies. Please give a ruling. Are we to continue the discussion on the Adress delivered when the old Government was in office or are we to have a new Address because of the change in the Ministry ?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்.* மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பிய இந்த ஒழுங்குப் பிரச்னைக்கு நான் என் தீர்ப்பை நாளைக்கு வழங்குகிறேன். திரு. தனுஷ்கோடி.

## 6. புதிய அமைச்சர்கள் அறிமுகமும், பதவியிலிருந்து விலகிய அமைச்சர், அவைக்கு அறிக்கை அளித்தலும்

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* உதவி சபாநாயகர் அவர்களே, (சிரிப்பு.) மன்னித்துக் கொள்ளவேண்டும். உதவி சபாநாயகராக இருந்து இப்போது சபாநாயகராக வந்திருக்கிறீர்கள்.

சபாநாயகர் அவர்களே, பாராளுமன்றத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது ஒரு பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அதை இங்கு ஞாபக மூட்டுவதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன். எப்போது ஒரு புதிய அமைச்சர் வந்தாலும் அல்லது காபினட் எக்ஸ்பான்ஷன் நடந்தாலும் சரி, அந்த அமைச்சர் அல்லது அமைச்சர்களை சபைக்கு அறிமுகப்படுத்துவது என்ற முறை இருக்கிறது. அது ஒரு நல்ல முறையாகும். இன்னின்ன அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள் என்று கூறி, அவர்கள் பாரம்பரியம் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி, இப்படி இப்படியெல்லாம் இருந்தார்கள், இன்னின்ன நிலையில் இவர்களுக்கு அமைச்சர் பதவி கிடைத்திருக்கிறது என்று சொல்வது அங்கே ஒரு பழக்கம். இப்போது இங்கு புதிய அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு அறிமுகப்படுத்துவது என்பது நல்லதாக இருக்கும். அப்படி அறிமுகப்படுத்துவது நல்லது. ' ஹூ ஈஸ் ஹூ ' எதற்காகப் போடுகிறார்கள் ? புதிதாக யார் யார் வந்திருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளத்தான். சிலரைப் பற்றி அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் புதிய அமைச்சர்களை இங்கு அறிமுகப்படுத்தியிருப்பார்களேயானால் இந்தப் பிரச்னையை திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருக்க மாட்டார்கள்.

இன்னொரு பிரச்னை. ஒருவர் அமைச்சராக இருந்து அவர் அமைச்சர் பதவியை விட்டு விலகினால் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பது என்பது ஒரு முறை. எதற்காக விலகினார்,

ஏன் விலகினார், எந்த நிலையில் விலகினார் என்பதுபற்றியெல்லாம் ஒரு அறிக்கைவிடவேண்டும். அப்படி விடாமலும் இருக்கலாம். அப்படி விடுவதற்கில்லை என்று சொல்லலாம், அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பதவியை விட்டு விலகிய நேரத்தில் பாராளுமன்றத்தில் அதுபற்றி ஒரு அறிக்கை விட்டுவிட்டு வெளியே வந்தார்கள். அதற்கான காரணங்களை விளக்கவேண்டும். திடீரென்று ஒரு அமைச்சர் இருப்பதும், திடீரென்று ஒரு அமைச்சர் போவதும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு அமைச்சரவை இருக்கும்போது அமைச்சர் பதவியில் இருந்து விலகினால் சொல்வது அது. இந்த அமைச்சரவை வேறு ஒரு புதிய அமைச்சரவை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆனால் அவர்கள் டெம்பரரி சீஃப் மினிஸ்டராக இருந்து போய் விட்டார் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது புதிய அமைச்சரவை. ஒரு அமைச்சர் பதவியில் இருந்து விலகினார் என்றால், ஒரு அமைச்சரவை இருக்கிற நேரத்தில் அந்த அமைச்சரவையில் இருக்கிற ஒரு அமைச்சர் விலகினார் என்றால் அதற்கான காரணங்களைக் கூற வேண்டும். ஆனால் இப்போது இருக்கக் கூடிய அமைச்சரவை புதிதாக அமைக்கப்பட்ட ஒரு அமைச்சரவை. சென்ற அமைச்சரவை இப்போது இல்லை. நீங்கள் குறிப்பிடுவது சென்ற அமைச்சரவையில் இருந்தவரைப் பற்றி. அந்த அமைச்சரவை அல்ல இப்போது இருப்பது. இது புதிய அமைச்சரவை, ஆகவே, அவர்கள் விலகியதற்கான காரணங்களைக் கூறவேண்டும் என்பது தேவை இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அமைச்சர்களை எல்லாம் அறிமுகப்படுத்தக்கூடிய முறை பாராளுமன்றத்தில் இருந்ததாகவும் அது இங்கே அனுஷ்டிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். அப்படி நான் அறிமுகப்படுத்துவதாக இருந்தால் முதல் நாளே அதைச் செய்திருக்கவேண்டும். அதைச் செய்யாமல் போய்விட்டது. ஆனால் அப்படிச் செய்யாமல் போனதற்குக் காரணம், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த காலத்தில் இந்த மன்றத்தில் இருந்திருக்கிறார்கள், ஆளும் கட்சியில் . . அப்போது அவர்கள் இந்த யோசனையை அவர்கள் கட்சித் தலைவர் அவர்களிடம் கூறியிருந்து அப்படி அமைச்சர்களை அறிமுகப்படுத்தியிருப்பார்களேயானால் அந்தப் பழக்கத்தை நானும் பின்பற்றியிருப்பேன். அப்படிச் செய்யாததற்காக வருந்துகிறேன். ஆகவே தான் அந்த முறையை நான் கையாள முடியவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே பழைய மந்திரிசபையைப் பற்றிச் சொல்லிவிட்டார்கள். அவர்கள்தான் தவறு செய்துவிட்டார்கள், இவர்களாவது



ஒரு புதிய முறையை கையாளலாம் அல்லவா? எதற்கெடுத்தாலும் எங்களைக் காட்டிச் சொல்வது என்றால் காங்கிரஸ் ஆட்சி செய்ததைத்தான் நாங்கள் பாரம்பரியமாகக் கொள்கிறோம், இதுதான் எங்கள் கொள்கை' என்று சொன்னால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு வேண்டுமென்று வரும்போது காங்கிரஸ்காரர்களை எடுத்துக்காட்டுவது, சம்பந்தப்படாதபோது தவறு என்று சொல்வது சரியல்ல. பழைய கதைகளை, பழைய பல்லவிகளைப் பாடவேண்டாம் என்று நான் முதலில் வேண்டிக் கொள்கிறேன். ஆகவே, என்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறேன். அமைச்சரவை குறிப்பிலே வேண்டாமென்று சொன்னால் ஏற்றுக் கொள்ளுகிறேன். அவ்வாறு அறிமுகப்படுத்தும் முறையினால் அவர்களுடைய தகுதியைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அமைச்சரவையில் அவர்கள் எவ்வளவு பேரை வேண்டுமானாலும் போடலாம், நீக்கலாம். ஆனால் அவர் ஆக்டிங் முதல் அமைச்சராக 10 நாட்களாக இருந்திருக்கின்றார், அதற்குப் பிறகு அந்த மந்திரிசபை ராஜினாமா செய்து புதிய மந்திரிசபை பிரமாணம் எடுத்திருக்கிறது, அந்தச் சமயத்தில் தற்காலிக முதலமைச்சராக இருந்தவர் அறிக்கை விடவேண்டுமா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. அவர் விடாமல் இருக்கட்டும், அது வேறு விஷயம். ஆனால் விரும்பினால் அவர் விடலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விரும்புவது என்பது பிரச்சனை அல்ல. சபைக்கு அறிக்கைவிட வேண்டிய தேவை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அறிக்கை விட வேண்டுமென்று விதி இருக்கிறதா, இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை.

* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறிய பிரச்சினை இங்கு எழவில்லை. ஏனென்றால் நீங்கள் அதைப்பற்றித் தெரியப்படுத்தி விட்டீர்கள். இப்பொழுதிருக்கும் மந்திரிசபை புதிய மந்திரிசபை. இந்த மந்திரிசபையில் யாரை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது முதலமைச்சரவர்களுடைய இஷ்டம், விருப்பம், அவருடைய நிலைமையைப் பொறுத்தது. சேரலாமா, வேண்டாமா என்பது அந்தந்த உறுப்பினர்களின் உரிமையைப் பொறுத்தது. திரு. காமராஜ் நாடார் அவர்கள் முதலமைச்சராகயிருந்து அவர் இராஜினாமா செய்த நேரத்திலே இம்மாதிரியான கேள்வியை நாங்கள் எழுப்பினோம். ஒரு மந்திரிசபையிலே இருப்பவர் விலகும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், அவர் சொல்ல வேண்டுமென்ற நிலை இங்கு எழவில்லை. ஏனென்றால் புதிய மந்திரிசபையிலே அவர் மந்திரியாக இல்லை. அந்த வகையிலே உரிமையேகூட எழவில்லை. மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்களுடைய மந்திரிசபையில் உறுப்பினராக அவர் இருந்தி

ருந்தால் அப்படிப்பட்ட நிலை எழ முடியுமே தவிர இப்பொழுது அத்தகைய நிலைமை எழவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

திரு. க. இராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

திரு. கே. வினாயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லட்டும் .

திரு. கே. வினாயகம் : நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் இரண்டு, மூன்று பாயிண்ட்ஸ் ஆஃப் ஆர்டர் எழுப்பிவிட்டீர்கள். எனவே அவர் முதலில் சொல்லட்டும்.

## 5. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (இ) ஆளுநரின் பேருரை மீதான விவாதத்தை நிறுத்தி வைத்தல்

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, கவர்னர் உரைமீதான விவாதத்தைத் தொடருவதா என்பது பற்றிய தீர்ப்பினை நாளை தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்பு நாளை கொடுக்கப்படுவதாக இருந்தாலும் அந்த உரை புதிதாக வாசிக்கப்பட வேண்டுமா அல்லது சென்ற உரையே போதுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. அதன்மீதான விவாதம் இப்பொழுது தொடருமேயானால் நாளைய தினம் தங்களுடைய தீர்ப்புக்கு இடையிலே இந்த விவாதம் குறுக்கிடக் கூடும். அல்லது தங்களுடைய தீர்ப்பு ஒருவேளை இந்த ஒழுங்குப் பிரச்சினை நியாயமானது என்ற அளவிலே தரப்படுமேயானால் இந்த விவாதமே அர்த்தமற்றதாகிவிடும். இதைத் தவிர்க்க இந்த விவாதத்தையே இன்றைய தினம் ஒற்றி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு திரு. வினாயகம் அவர்கள் எழுப்பியிருக்கும் பிரச்சினை கவர்னர் உரையின்மீது விவாதம் நடத்துவது " infructuous " என்பது. ஏற்கெனவே இம்மாதிரியான நிலைமை எழுந்தபொழுது, திரு. இராஜாஜி அவர்களின் மந்திரிசபை இங்கு போய் பிறகு திரு. காமராஜ் நாடார் அவர்கள் மந்திரிசபை அமைந்த நேரத்தில் இதே பிரச்சினையை எதிர்க்கட்சியினர் எழுப்பினார்கள். அந்தச் சமயத்தில், இப்பொழுது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கின்ற திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறிய வாசகத்தைப் படிக்கிறேன். அதற்கு முன் நான் ஒன்றைக் கூறிக் கொள்ளுகிறேன். இந்த அரசு மாறி விட்டாலும்கூட, அண்ணா





அவர்களுக்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல் அமைச்சராகயிருந்தாலும் இப்பொழுது இருப்பது அதே கட்சி, அதே கொள்கைதான். அதை முதலமைச்சரவர்கள் தன்னை முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுத்தவுடன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்று நிகழ்த்திய உரையின் சில வாசகங்களை இங்கு சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை யொட்டி திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய பிரச்சினையை முடித்துக் கொண்டு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீதான விவாதத்தைத் தொடங்குவது சரியானதாக இருக்கும், அதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இதைச் சமர்ப்பிக்கிறேன்.

The then Leader of the House, Thriu Subramaniam, has stated as follows :—

'Sir, in spite of the long statement made by the hon. the Deputy Leader of the Opposition, the only point he wants to know is whether we are going to make a statement of policy if there is any new policy which this Ministry has decided to follow. I would like to remind him that whatever might be the personnel of the Ministry, it is the Congress Party that continues to be in power and our party and policy will be guided by the Congress principles and ideals. We are wedded to those principles and ideals and we are bound to follow them. Therefore, the hon. the Deputy Leader of the Opposition need not be under the impression that some Ministry was defeated and that, as a result of that, a new Ministry has been formed. It is only an internal arrangement within the Party and, therefore, the question of a statement of policy does not arise.'

என்று இந்தக் காரியத்தைப்பற்றிய புதிய கொள்கை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் அதே கொள்கையை, மாண்புமிகு அண்ணா அவர்களின் கொள்கையை இப் புதிய அமைச்சரவை பின்பற்றுவதால், அந்த மரபை அனுசரித்து இருப்பதால் கவர்னர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறலாம், அதற்கான தீர்ப்பைத் தாங்கள் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. கே. வினாயகம் : நாளைக்குத் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்குத் தீர்ப்புக் கொடுத்துவிடுகிறேன். திரு. வினாயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு விரிவாகத் தீர்ப்புக் கொடுக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியதால் அதற்கு இப்பொழுதே தீர்ப்புக் கொடுத்துவிடுகிறேன். மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் இந்த

அரசினுடைய கொள்கையை வெளியிட்டு தன்னுடைய உரையை ஆற்றினார்கள். அந்தக் கொள்கையையே இப்பொழுதிருக்கும் அமைச்சரவையும் பின்பற்றுவதாக இந்த அமைச்சரவை வெளியிட்டிருக்கிறது. சென்ற அமைச்சரவை எந்தக் கட்சியின் சார்பிலே அமக்கப்பட்டதோ அந்தக் கட்சியின் சார்பிலேதான் இந்த அமைச்சரவையும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கொள்கையிலே வேறுபாடு இல்லாததனால் இந்த அமைச்சரவை புதிய கொள்கையை வெளியிட வேண்டிய தேவையில்லை. எனவே, ஆளுநர் அவர்கள் மீண்டும் இந்த அவையில் உரை நிகழ்த்த வேண்டிய தேவையில்லை. ஆகவே, அன்று ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையின்மீதே விவாதம் தொடர்ந்து நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## (ஈ) கீழ்வெண்மணி நிகழ்ச்சிகள் குறித்த கண்டனத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளல்

THIRU K. VINAYAKAM : Sir, another point of order. I have before me the programme of work which we will have to go through during the short session before the regular Budget is presented in this House. This is a continuation of the old proceedings and we have accepted that it is the old Government because you have been kind enough to tell us about it and also because policies do not change except a change of a few persons here and there. But my point is that we have moved a motion of censure criticising this Government about the Kilvenmani incident in which 43 persons were burnt alive and what happens to it and I do not find it in the Agenda. Does it lapse or does the Chair want us to move it again ? What exactly is the position? My contention is that this is a continuation of the old Government and the old policies. There is just a small change. Instead of 'Thiru C. N. Annadurai' there is 'Thiru M. Karunanidhi' and that is all. Such being the case. I request the Chair to give his ruling on the point, whether we should move another censure motion so that I can muster my party's strength for that purpose . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவரைக் கேட்கவில்லையா ?

**திரு. கே. வினாயகம் :** கேட்பதற்கு, அது வேறு விஷயம்.

That is beside the point. We agree and there is no difference of opinion between me and my leader. I do not think the Chair will drive a sharp wedge between us. I have raised a pariliamentary procedure and I should have a clarification from the Chair.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, என்னுடைய அருமை நண்பர் திரு. வினாயகம் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். சில பிரச்சினைகள் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் வைக்கப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன.



அவர்கள் நேற்று இல்லை. ஆனால் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் சில முடிவுகள் எடுத்த பிறகு மீண்டும் மக்களுக்குத் தெரிவிக்க இந்தச் சபையிலே கொண்டு வருவதற்குத் தடையாக, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே ஒரு 'அண்டர்ஸ்டாண்டிங்' இருந்தாலும் கூட, அந்தப் பிரச்சினையைக் கொண்டுவரக்கூடாது என்று சட்டம் இல்லை. சட்டமன்றத்திலே கொண்டு வந்து மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற கடமையை கருத்திற் கொண்டு நாங்கள் இதைக் கொண்டு வந்தோம். ஆனால் இது பற்றி மீண்டும் ஒரு 'மோஷன்' கொண்டுவர வேண்டுமென்றால் அதை அடுத்து நாங்கள் கொண்டு வர இருக்கிறோம். மீண்டும் கொண்டுவந்து அதை அனுமதிப்பது அங்கத்தினர்களைப் பொறுத்து இருக்கிறது. அது மீண்டும் கொண்டுவரப்படும் என்பதை நண்பர் திரு. வினாயகத்திற்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

* THIRU T. MARTIN : Sir, on a point of order. All Bills except Money Bills, resolutions, notices etc. pending before the House before the prorogation of the House will lapse. But now the Assembly has not been prorogued and therefore I would like to know how that censure motion would lapse.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வினாயகம் எழுப்பியிருக்கிற ஒழுங்குப் பிரச்சினை, அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையின்கீழ் நடைபெற்ற அமைச்சரவை எந்தக் கொள்கையை பின்பற்றியதோ, அதே கொள்கையை மாண்புமிகு கருணாநிதி அவர்களுடைய தலைமையின்கீழ் உள்ள அமைச்சரவை பின்பற்றுகிறது என்று சொல்கிறார்கள்; அறிஞர் அண்ணா அவர்களுடைய அமைச்சரவை எந்தக் கட்சியின் சார்பிலே அமைக்கப்பட்டதோ, அதே கட்சியின் சார்பிலே மாண்புமிகு கருணாநிதி அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கிற அமைச்சரவையும் இயங்குகிறது. அப்படி இருக்கும்பொழுது அந்த அமைச்சரவைமீது கொடுத்திருக்கின்ற கண்டனத் தீர்மானம் எப்படி இந்த அமைச்சரவைக்குப் பொருந்தாது, என்பது. ஒரு அமைச்சரவை சென்று, அடுத்து வருகிற அமைச்சரவை, சென்ற அமைச்சரவை கொண்டிருந்த கொள்கைகளை நாங்களும் பின்பற்றுவோம் என்பது வேறு. அதனாலேயே, அந்த அமைச்சரவையிலே ஏதோ தவறுகள் இருந்தன என்று யாராவது கூறுவார்களானால் அந்தத் தவறுகளுக்கு இந்த அமைச்சரவை பொறுப்பாளியாக ஆகாது. ஆகவே, கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானம் அந்த அமைச்சரவையினுடைய கொள்கை மீதானது அல்ல. ஒரு குறிப்பிட்ட செயலிலே அவர்கள் தவறு செய்தார்கள் என்பதாக கொடுக்கப்பட்டக் கண்டனத் தீர்மானம் அது. ஆகவே, அந்த அமைச்சரவை செய்ததாகக் கருதப்படுகிற ஒரு தவறுக்கு இந்த அமைச்சரவை பொறுப்பாளியாகாது என்ற காரணத்தினால் அந்தக் கண்டனத் தீர்மானம் இப்பொழுது காலாவதியாகி விட்டது என்ற நிலையேயொழிய, மற்ற நிலையிலே அது காலாவதியாகி விட்டது என்று நான் கூறவில்லை.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. Does the Hon. Speaker mean that for whatever action the previous Government was responsible, this particular Government disassociates itself from the responsibility of the previous Government ? Is that your ruling, Sir ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொள்கையைப் பின்பற்றுவது வேறு. அந்த அமைச்சரவை செய்த தவறுகள், செய்யாமல் விட்டு விட்டது, அதற்கெல்லாம் இந்த அமைச்சரவை பொறுப் பாளியாக முடியாது.

DR. H. V. HANDE : In the Governor's Address for instance, the Kilevenmani incident is mentioned and the ruling has been given by the Hon. Speaker now that we are entitled to discuss the same Governor's Address. The censure motion, with which we do not associate ourselves, relates to that Kilevenmani incident. To satisfy the rules, I might say that when the discussion on Governor's Address, which makes mention marginally of this incident, has been continued, obviously it is a corollary that when there is continuation of discussion on Governor's Address, the censure motion making mention of that incident, must also hold. The Hon. Speaker has said that in respect of what the previous Government did, this Government " இந்த அரசு பொறுப்பு எடுத்துக் கொள்ள முடியாது. . Does it mean that for that incident also, this Government is rot taking responsibility? If that is the stand, I am afraid that it may go against the rules.

அந்த அரசாங்கத்தின்கீழ் என்ன என்ன சம்பவங்கள் நடந்தனவோ அந்த சம்பவங்களுக்கெல்லாம் கூட இந்த அரசாங்கம் பொறுப்பு எடுத்துக்கொண்டு தான் ஆகவேண்டும். இந்த அரசாங்கம் அந்த சம்பவங்களுக்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்வது; பொறுப்பைத் தட்டிக் கழித்த வகையில் வரும் என்பது தான் என்னுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு பொறுப்பு யார் என்பது அல்ல. இவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அல்ல. ஒருவர் செய்ததாகக் கூறும் தவறுக்கு இன்னொருவர் எப்படி பொறுப்பேற்க முடியும் என்பதுதான். கண்டனத் தீர்மானம், சென்ற அமைச்சரவைமீது கொடுக்கப் பட்டது. அது அவர்கள் மீது இருக்கிற குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டை இந்த அமைச்சரவை மீது சுமத்துவது முறையாகாது. கவர்னர் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக் கிறார் என்றால் அவர் எத்தனையோ நடைமுறையிலே வந்திருக்கிற நிகழ்ச்சிகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகள் பற்றி யாரும் பேசக்கூடாது என்பதோ, அவை நடை பெறவில்லை என்பதோ அல்ல. ஆனால், அந்த நிகழ்ச்சிகளுக்கு இந்த அமைச்சரவையைப் பொறுப்பாக்கக்கூடாது என்பதுதான் பொருள்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை என்னவென்றால் மீண்டும் அதேக் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிமை உண்டா என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நீங்கள் கொண்டு வந்து அப்பொழுது பேரவைத் தலைவர் என்ன தீர்ப்பளிக்கிறார் என்று பார்க்க வேண்டும். "நான் கொண்டு வந்தால் என்ன தீர்ப்பளிப் பீர்கள்?" என்று முன்கூட்டியே கேட்பது சரியல்ல.

Thiru K. VINAYAKAM : On a point of clarification. My knowledge of law tells me that when an accused who has committed an offence dies, the offence also dies with him. But that relates only to criminal offences. I am not going to argue just to suit the whims and fancies of this Government. This is not a criminal offence committed by one individual Thiru C. N. Annadurai. God save him. He will never commit any offence. His Ministry and his Government have committed the mistake. The same Government continues except him. So the offence does not abate. It is a tort committed by Government, for which this Government is squarely, fully and equally responsible. When these things happened, the then Chief Minister was bed-ridden. He did not know what happened in the country. These are the gentlemen responsible for the entire crime and they will have to hold the brief for that crime.

**மாண்புமிகு திரு. கே. ஏ மதியழகன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் விநாயகம் அவர்கள் சொன்னதைத் தான் நீங்கள் சொன்னீர்கள். இந்த அரசாங்கம் பொதுவாக காரியங்களிலே பொறுப்பை தட்டிக் கழிக்காது. அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தினுடைய வாசகம், முன்னாலே இருந்த மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலே இருந்த அரசாங்கம், அன்றைய அரசாங்கம் அப்பொழுது லா அண்டு ஆர்டரை நிலைநிறுத்தவில்லை என்பது தான். இன்றைக்கு அந்த தீர்மானம் நிறைவேறுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுடைய வாதம் 'இன்ஃப்ரக்ச்சுவஸ்' ஆகிவிடுகிறது. அந்த தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் முன்னாலே இருந்த அரசாங்கம் இன்றைக்கு இல்லை, அந்த அரசாங்கம் காலாவதியான அரசாங்கமாக ஆகிவிடுகிறது. அந்த அளவில் அந்தத் தீர்மானம், சென்ஷூர் மோஷன் கொண்டு வந்து அது நிறைவேற்றப்படுமானால் 'இன்ஃப்ரக்ச்சுவஸ்' ஆகும் என்பதுதான் சட்டப் பிரச்னையே தவிர, மாண்புமிகு கலைஞர் கருணாநிதியினுடைய தலைமையில் இருக்கிற அரசாங்கம் அதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்கிறது. அதைத்தான் சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதைத்தான் சொன்னார். இன்றைக்கு அந்தச் சட்டப் பிரச்னையை நாம் நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஒரு வழி செய்துகொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறோம். தேவையில்லாத ஒரு தீர்மானத்தின்மீது, காலாவதியாகிவிட்ட

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 பிப்ரவரி 22

ஒரு தீர்மானத்தின் மீது பேசலாமா என்பதுதானே தவிர, இந்த அரசாங்கத்தை கண்டிப்பதை தவறு என்று சொல்லவில்லை. இந்த அரசாங்கத்திடம் தவறு இருந்தால் அதைக் கண்டிப்பதையோ, இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டுவதையோ தவறு என்று சொல்லவில்லை. பொதுவாக, ஒரு தீர்மானம் நாளைக்கேகூட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வரலாம். சட்ட முறையிலே இது சரியாக இல்லை என்பதைத்தான் தெரிவிக்கிறாரே தவிர, வேறொன்றும் இல்லை என்பதைப் பணிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். தலைவர் அவர்களே, இந்த வெண்மணி சம்பவமோ கண்டனத் தீர்மானமோ, இந்த கவர்னர் உரையின் மீதானக் கொள்கையைத் தொடர்ந்து வருகின்றது. கவர்னர் உரையைப் பொறுத்தவரையிலும், அமைச்சரவை மாறினாலும்கூட, ஆளுங் கட்சி அதே கட்சியாக இருக்கிற காரணத்தினால், முதல் அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், அதே கொள்கையை ஏற்று நடத்தப் போகிறோம், ஆகவே, புதிய உரை தேவையில்லை, என்று. ஆகவே, இந்த மாதிரி நேரத்திலே, முன்னாலே இருந்த அமைச்சரவை, அதற்குப் பிறகு அமைந்த அமைச்சரவை என்ற நிலைமை ஏற்படுகிற காரணத்தாலே, முதல் அமைச்சரவர்கள்—ஏற்கனவே வெளியிலே தெரிவித்து விட்டார்களென்றாலும்கூட—இந்த அவையிலே மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையின்கீழ் ஆட்சி நடந்தபொழுது கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை என்னுடைய அமைச்சரவை ஏற்றுக் கொள்ளுகிறது, அதே உரையின்மீது விவாதத்தைத் தொடரலாம் என்று அறிக்கையை அவைக்குக் கொடுத்துவிடுவார்களானால், பின்னாலே எங்களுடைய தீர்மானத்தைப் பற்றிகூட, நாங்கள் அதைத் தொடர்வதோ, நிறுத்திக் கொள்ளுவதோ போன்ற முடிவுகளை எடுக்க முடியும். ஆகவே, இந்த நிலைமையை விளக்குவதற்காகவோ அல்லது நிவர்த்திப்படுதற்காகவோ ஒரு அறிக்கை அளிப்பது நல்ல விளக்கமாக அமையும் என்று சொல்லி தங்களுடைய தீர்ப்பைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் இந்த அமைச்சரவை சென்ற அமைச்சரவையினுடைய கொள்கையை பின்பற்றும் என்று அறிக்கை வைத்தா விட்டாலே அதையொட்டி எல்லாம் நடைபெறும் என்பதுதான் பொருள். இந்த விஷயத்தில் இந்த அமைச்சரவை அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுகிறது, ஆகவே காரியங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று ஒவ்வொரு முறையும் சொல்ல வேண்டிய தேவையில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் கேட்ட காரணத்தால் ஒன்று சொல்கிறேன். ஒரு குற்றத்தைச் செய்தவர் இறந்து விட்டால் அந்தக் குற்றம் பற்றி விசாரிக்க வேண்டிய



1969 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

தேவை இல்லாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். (Thiru K. Vinayakam : Personal crime. ) அந்த தனிப்பட்ட நிலைதான் ஒரு அமைச்சரவைக்கும். அதை மீண்டும், மீண்டும் வற்புறுத்தத் தேவை இல்லையென்று கூறி, இந்த ஒழுங்குப் பிரச்னை மீதான தீர்ப்பு இதுதான் என்று கூறி, தனுஷ்கோடி அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

## 7. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் நான் சார்ந்திருக்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களின் சார்பாகவும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது பேசும்பொழுது சில குறைபாடுகளை உங்கள் மூலமாக அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் சம்பந்தமாக பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அளவில் ஒன்றும் கூறப்படவில்லை. தமிழகத்தில் இருக்கக்கூடிய, தங்களுடைய சரீரம், கை, கால் தான் தங்களுக்குச் சொந்தம் என்று இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் குடியிருப்பதற்குக்கூட இடம் இல்லாமல், இரவல் மனைகளில் குடியிருந்துகொண்டிருக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் கவர்னர் பெருமானுடைய உரையில் ஏதாவது நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவேண்டும். இனிமேலாவது அம்மாதிரி முறையில் கவர்னர் அவர்களுடைய உரை அமையவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பெரும் நிலப்பிரபுக்களுடைய சொந்த மனைகளிலே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அந்த நில பிரபுக்களின் சொல்படி வேலையில் தொடர்ந்து இருக்கவில்லை என்று சொன்னால், எந்த நேரத்திலும் அவர்கள் குடியிருக்கக்கூடிய மனைகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது, அவர்களை வெளியேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அப்படி வெளியேற்றப்படக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்குவதற்கு இந்த அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த சம்பவங்களெல்லாம் எல்லோருக்கும் தெரியும். கீழ்வெண்மணியில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி எல்லோரும் அறிவார்கள். அந்த கிராமத்தில் இருக்கக்

கூடிய நிலப்பிரபுக்களின், நிலப் பிரபுக்களுக்குச் சொந்தமான, மனைகளில் விவசாயத் தொழிலாளர்கள் குடியிருந்ததன் காரணமாகத் தான் அந்த நிலைமை அங்கே ஏற்பட்டது. ஆகவே, அவர்கள் எந்த இடத்தில் குடியிருக்கிறார்களோ, அந்த இடத்தை, அந்த மனையை அவர்களுக்குச் சொந்தமாக்கக்கூடிய அளவிலே ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

அதைப்போல சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்தாலும், அப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களை, தரிசு நிலங்களை, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஜாரி செய்து கொடுக்கவேண்டும் என்று இந்தப் புதிய அமைச்சர் அவையை வேண்டிக்கொள்கிறேன். மேலும், நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், ஒரு குடும்பம் ஒன்றுக்கு 15 ஏக்கர் என்ற முறையில் சட்டத்தைத் திருத்தி, அதிலிருந்து கிடைக்கும் நிலங்களை விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் குத்தகை செய்யக்கூடிய சாகுபடிதார்களுக்கும், திட்டக் கமிஷன் கூறியது போல், திட்டக் கமிஷன் கூறியதை ஏற்றுக்கொண்டு, சாகுபடிதார்களுக்கு 75 சத வீதம் வாரம் கொடுக்கவேண்டும் என்ற அளவில் வகை செய்வதற்கு சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் துறையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் புதிய அமைச்சர் அவையைக் கேட்டுக் கொள்கிறேன். இதில் நிச்சயம் இந்த அமைச்சர் அவை கவனம் செலுத்தும் என்று நான் நம்புகிறேன். எந்தப் போலீஸ் நிலையத்தை எடுத்துக்கொண்டாலும், சாதாரண மக்கள் போலீஸ் நிலையத்திற்குச் சென்றால், அவர்கள் மதிக்கப்படுவது கிடையாது. அவர்களை துன்புறுத்துவது நிறுத்தி வைத்து அடிப்பது போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. குறிப்பாக ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அன்று முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதாவது சென்ற மார்ச்சு மாதம் 23-ம் தேதி ஒரு மகஜர் கொடுத்திருக்கிறேன், அதற்குப் பதிலும் எனக்கு வந்திருக்கிறது. இருஞ்சூர் கிராமத்தில் சின்னப் பிள்ளை என்ற ஒரு தாழ்த்தப்பட்ட மகன், அந்தக் கிராமத்தில் உள்ள கோபால கிருஷ்ண நாயுடு என்ற நிலப்பிரபுவினால் கடத்தப்பட்டு, இன்றைய தேதி வரையில் அவன் கண்டுபிடிக்கப்படவில்லை. அவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். ரத்தக் கறை தோய்ந்த துணிகள் காட்டப்பட்டும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருக்கும் மனைகள் பூராவிலுமுள்ள குடியிருப்புகள் பிய்த்து எரியப்பட்டிருக்கின்றன. அந்த ஆள் எங்கே இருக்கிறான் என்பது இன்னும் தெரியவில்லை. போலீஸ் இலாகாவிலிருந்து சென்ற அக்டோபர் மாதம் எனக்குக் கடிதம் வந்தது. "சின்னப் பிள்ளை சம்பந்தமாக நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம், ஆகவே, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்," என்று பதில் வந்திருக்கிறதே தவிர, இதுவரையில் என்ன நடந்திருக்கிறது என்பது தெரியாது.





அதேபோலத் தான் ராதாமங்கலம் என்ற கிராமத்தில் நிலப்பிரபுக்கள், அடியாட்கள், போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு, ஆயுதங்களை வைத்துக்கொண்டு விவசாயத் தொழிலாளிகளை தாக்கிக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் நேரிடையாகச் சென்று கீவலூர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கேட்கக்கூடிய நேரத்தில், 'மிராசுதார்கள் பாதுகாப்புக்கு ஏது வேண்டுமானாலும் வைத்துக் கொள்வார்கள், நீங்கள் யார் கேட்பது' என்று என்னிடத்திலேயே கேட்டார். கடந்த 5-5-67-ல் நான் முதலமைச்சர் அவர்களுக்கு இதைப்பற்றி எழுதிக் கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக விசாரித்து, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால், கீழ்வெண்மணி, பூந்தாழங்குடி போன்ற இடங்களில் நடந்த சம்பவங்களை தவிர்த்திருக்கலாம். கேக்கரை ராமச்சந்திரன் கொலை செய்யப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம். சிக்கல் பக்கிரிசாமி கொலை செய்யப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம். போலீஸ் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட அதிகாரிகள் பொறுப்பற்ற தன்மையிலே நடந்து கொள்ளாமல் இருந்திருந்தால், இப்படிப்பட்ட சம்பவங்களை தவிர்த்திருக்கலாம். நான் இதற்குப் பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். கடந்த மாதம் 28-ம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரெங்கபாஷ்யம் அவர்களையும், போலீஸ் அதிகாரி சுப்பராயன் அவர்களையும், சந்தித்து இந்தச் செய்தியைப்பற்றி தெரிவித்தேன். 'ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என்று கேட்டதற்கு அவர்கள் கூறியது என்னவென்றால் 'பெயர் எழுதி நீங்கள் கடிதம் எழுதினால், அது கவனிக்கப்படுமே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர், போலீஸ் அதிகாரி என்று எழுதினால் எங்களுக்குக் கிடைக்காது' என்று சொல்கிறார். எனக்குத் தெரியும் அவர்களுடைய பெயர். ஆனால் கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்ஸ்பெக்டருடைய பெயர் என்னவென்று எப்படித் தெரியும்? இம்மாதிரி சொல்லித் தட்டிக் கழிப்பது தான் இப்படி பல சம்பவங்கள் நடப்பதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத் தான் கடந்த நவம்பர் மாதம் 12-ம் தேதி, முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஆதமங்கலம் கிராமத்தையே இருள் புகும்படி செய்துவிட்டார்கள். நான் இந்த மன்றத்தில் சொல்வதற்கே நா கூசுகிறது. தாழ்த்தப்பட்ட பெண்களை, நான்கு பெண்களை மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். 12 வயது பெண், 8-வது வகுப்பு படிக்கும் பெண் போலீஸ்காரர்களுக்கு பயந்து காட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணை விரட்டி அடித்து,

தொந்தரவு செய்து, அவமானப்படுத்தியிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். தக்க விசாரணை செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எழுதியிருந்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், குறிப்பாக அதைப்பற்றி விசாரணையாவது செய்திருந்தால், நிச்சயம் இம்மாதிரி சம்பவங்கள் நடக்காமல் இருந்திருக்க முடியும் என்பதை நான் இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல சம்பவங்களை நான் கூறமுடியும். புதிய அமைச்சர் அவை இதற்கெல்லாம் தீர்வு காணவில்லையென்றால், நம் அரசின் மீது, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது பல அபவாதங்களைக் கிளப்புவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கும்படியான நிலை ஏற்பட்டுவிடும். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது. இதற்கு நிச்சயம் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையில், உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதலைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் வறண்ட நிலை இருக்கிறது. மக்களுக்கு அரிசி கொடுக்கவேண்டுமென்று சொன்னால், நிச்சயம் கொள்முதல் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும். பெரிய நிலப் பிரபுக்களிடமிருந்து கட்டாயமாக கொள்முதல் செய்தாக வேண்டும். இன்றைக்கு வறண்ட நிலையில் பல மாவட்டங்கள் இருக்கின்றன. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, இராமனாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு போதிய அரிசி கொடுக்கவேண்டுமென்றால், கட்டாயக் கொள்முதல் நிச்சயம் கொஞ்சம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி போன்ற புஞ்சைப் பிரதேசங்களில் பயிர்கள் காய்ந்துபோய்விட்டன. அப்படிப்பட்ட இடங்களில் உள்ள நிலங்களுக்கு வரிவஜா செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் தெருக்களில் லைட் வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 15, 20 வருடங்கள் ஆகியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிச்சயம் அப்படிப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களுக்கு லைட் வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன் வணக்கம்.

**திரு. பி. என். பரமசிவம்:** மதிப்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, மாமேதை அண்ணா அவர்கள் மறைவிற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரைமீது பேச விரும்புகிறேன்.





வேளாண்மைத் துறையில் 50,000 மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம், இன்னும் 25,000 மின் இணைப்புக் கொடுக்க ரூ. 6 கோடி ஒதுக்கியிருக்கிறோம். ஆனாலும் இந்த ஆண்டு 40,000-க்கு அதிகமாக இணைப்புகள் கொடுத்து, ஏற்கனவே கொடுத்தது போன்று 50,000 என்ற இலக்கை எட்ட முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறது. வேளாண்மைக்கு, நில அடமான வங்கிகள், வணிக வங்கிகள் மூலம் பணம் உதவியும் தொழில் துறையில், பஞ்சாலை தவிர, மற்ற தொழில்களில் கணிசமான முன்னேற்றம் கண்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறது. இவையெல்லாம் வரவேற்கத்தக்கவை. நம்முடைய எதிர் கட்சி வரிசையில் உள்ளவர்கள், நாகர்கோவில் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் பல குறைபாடுகளைச் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதில் ஒன்று கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்திற்கு, தேர்தலை முன்னிட்டு, அரிசி விநியோகம் செய்ய அதிகாரம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். அரிசி விநியோக லைசென்ஸ் பம்பாயிலுள்ள காதி கமிஷன் குறிப்பிட்ட காரியங்களை நடந்த பணம் கொடுக்கிறார்களேயல்லாமல், மற்ற காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்று சொன்னதால், தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே, அந்த லைசென்ஸ் ரத்து செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அதை நாங்கள் செய்த அக்கிரமம் என்று சொல்லுகிறார்கள். ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். லைசென்ஸை வைத்திருந்த ஒரு சில தலைவர்கள், ஒரு சில மக்களை காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால் அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லி அக்கிரமங்களைச் செய்தார்கள். அப்படிச் செய்தது காங்கிரஸ்காரர்கள்தான், நம்முடைய கட்சியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கீழ் வெண்மணி சம்பவம், 43 பேர்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட சம்பவம். அது மிக வன்மையாகக் கண்டிக்கக் கூடிய ஒன்று. அதுபற்றி உடனடியாக விசாரித்து, அதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்று ஒரு கமிஷனை நியமித்திருப்பதை வரவேற்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுத்தமைக்கு இந்த அரசைப் பாராட்ட வேண்டும். பலாத்காரத்தை எந்தப் பகுதியினர் தூண்டினாலும், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை இந்த அரசு எப்பொழுதும் செய்யும்.

வேளாண்மைத் துறையில் நமக்கு வரட்சி நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட, மேட்டூர் நீர்த் தேக்கத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, அங்கிருக்கும் தண்ணீரை விநியோகித்து, விளைவைக் கூட்டலாம் என்று குறிப்பிட்டிருப்பது, வரவேற்கத்தக்க ஒன்றாகும். மேட்டூர் நீர்த் தேக்கத்தைப் போலவே, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திலே, 70,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிலே நல்ல பண்பட்ட பூமி 20,000 ஏக்காவிற்குத்தான் நல்ல பயன் கிட்டியது. மீதம் 50,000 ஏக்காவிற்கு பிரயோசனம் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் முதலைப் போட்டு நஷ்டம் அடைந்தார்கள். ஆகையினால், புதியதாக ஏற்பட்டிருக்கிற

தொந்தரவு செய்து, அவமானப்படுத்தி யிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி யிருந்தேன். தக்க விசாரணை செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எழுதியிருந்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், குறிப்பாக அதைப்பற்றி விசாரணையாவது செய்திருந்தால், நிச்சயம் இம்மாதிரி சம்பவங்கள் நடக்காமல் இருந்திருக்க முடியும் என்பதை நான் இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்னும் பல சம்பவங்களை நான் கூறமுடியும். புதிய அமைச்சர் அவை இதற்கெல்லாம் தீர்வு காணவில்லையென்றால், நம் அரசின் மீது, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது பல அபவாதங்களைக் கிளப்புவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கும்படியான நிலை ஏற்பட்டுவிடும். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது. இதற்கு நிச்சயம் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையில், உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதலைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் வறண்ட நிலை இருக்கிறது. மக்களுக்கு அரிசி கொடுக்கவேண்டுமென்று சொன்னால், நிச்சயம் கொள்முதல் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும். பெரிய நிலப் பிரபுக்களிடமிருந்து கட்டாயமாக கொள்முதல் செய்தாக வேண்டும். இன்றைக்கு வறண்ட நிலையில் பல மாவட்டங்கள் இருக்கின்றன. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, இராமனாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு போதிய அரிசி கொடுக்கவேண்டுமென்றால், கட்டாயக் கொள்முதல் நிச்சயம் கொஞ்சம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி போன்ற புஞ்சைப் பிரதேசங்களில் பயிர்கள் காய்ந்துபோய்விட்டன. அப்படிப்பட்ட இடங்களில் உள்ள நிலங்களுக்கு வரிவஜா செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மின்சாரத் துறை அமைச்சர் அவர் களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் தெருக்களில் லைட் வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 15, 20 வருடங்கள் ஆகியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிச்சயம் அப்படிப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களுக்கு லைட் வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன் வணக்கம்.

திரு. பி. என். பரமசிவம்: மதிப்புமிக்க மாற்றுத் தலைவர் அவர் களே, மாமேதை அண்ணா அவர்கள் மறைவிற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரைமீது பேச விரும்புகிறேன்.



வேளாண்மைத் துறையில் 50,000 மின் இணைப்புகள் கொடுத்தி ருக்கிறோம், இன்னும் 25,000 மின் இணைப்புக் கொடுக்க ரூ. 6 கோடி ஒதுக்கியிருக்கிறோம். ஆனாலும் இந்த ஆண்டு 40,000-க்கு அதிகமாக இணைப்புகள் கொடுத்து, ஏற்கனவே கொடுத்தது போன்று 50,000 என்ற இலக்கை எட்ட முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறது. வேளாண்மைக்கு, நில அடமான வங்கிகள், வணிக வங்கிகள் மூலம் பணம் உதவியும் தொழில் துறையில், பஞ்சாலை தவிர, மற்ற தொழில்களில் கணிசமான முன்னேற்றம் கண்டிருப்பதாக குறிப் பிட்டிருக்கிறது. இவையெல்லாம் வரவேற்கத்தக்கவை. நம்முடைய எதிர் கட்சி வரிசையில் உள்ளவர்கள், நாகர்கோவில் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் பல குறைபாடுகளைச் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதில் ஒன்று கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்திற்கு, தேர்தலை முன்னிட்டு, அரிசி விநியோகம் செய்ய அதிகாரம் கொடுப்பதை நிறுத்தி விட் டார்கள் என்று சொன்னார்கள். அரிசி விநியோக லைசென்ஸ் பம்பாயிலுள்ள காதி கமிஷன் குறிப்பிட்ட காரியங்களை நடத்த பணம் கொடுக்கிறார்களேயல்லாமல், மற்ற காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்று சொன்னதால், தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே, அந்த லைசென்ஸ் ரத்து செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அதை நாங்கள் செய்த அக்கிரமம் என்று சொல்லுகிறார்கள். ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். லைசென்ஸை வைத்திருந்த ஒரு சில தலைவர்கள், ஒரு சில மக்களை காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால் அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லி அக்கிரமங்களைச் செய்தார் கள். அப்படிச் செய்தது காங்கிரஸ்காரர்கள்தான், நம்முடைய கட்சியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கீழ் வெண்மணி சம்பவம், 43 பேர்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட சம்பவம். அது மிக வன்மையாகக் கண்டிக்கக் கூடிய ஒன்று. அதுபற்றி உடனடியாக விசாரித்து, அதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்று ஒரு கமிஷனை நியமித்திருப் பதை வரவேற்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுத்தமைக்கு இந்த அரசைப் பாராட்ட வேண் டும். பலாத்காரத்தை எந்தப் பகுதியினர் தூண்டினாலும், கண் டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை இந்த அரசு எப்பொழுதும் செய்யும்.

வேளாண்மைத் துறையில் நமக்கு வரட்சி நிலை ஏற்பட்டிருந் தாலும்கூட, மேட்டூர் நீர்த் தேக்கத்தை நல்ல முறையில் பயன் படுத்தி, அங்கிருக்கும் தண்ணீரை விநியோகித்து, விளைவைக் கூட்டலாம் என்று குறிப்பிட்டிருப்பது, வரவேற்கத்தக்க ஒன்று கும். மேட்டூர் நீர்த் தேக்கத்தைப் போலவே, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திலே, 70,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப் பட்டது. ஆனால் அதிலே நல்ல பண்பட்ட பூமி 20,000 ஏக்காராவிற் குத்தான் நல்ல பயன் கிட்டியது. மீதம் 50,000 ஏக்கராவிற்கு பிர யோசனம் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் முதலைப் போட்டு நஷ்டம் அடைந்தார்கள். ஆகையினால், புதியதாக ஏற்பட்டிருக்கிற

[திரு. பி. என். பரமசிவம்] [1969 பிப்ரவரி 22

நீர்ப்பாசன பகுதிகளில், நல்ல முறையில் விளைவு எடுக்க வேண்டு மானால், தண்ணீர் கொடுப்பதில், நல்ல பலன் கிடைக்கும் வகையில் நல்லவகையில் பண்பட்ட பூமிகளுக்கு கொடுக்க வேண்டும். 2.5 லட்சம் ஏக்கர் ஆயக்கட்டு என்றாலும், 1.4 லட்சம் பூமிக்காவது பண்பட்ட பூமி என்று கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடு களை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

வடாற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்கள் மழை இல் லாததால், வரட்சியடைந்திருக்கின்றன. அதற்கு வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு சில பகுதி போக, மற்றப் பகுதிகளெல் லாம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குடிதண்ணீர்கூட இல்லாத நிலை ஏற் பட்டிருக்கிறது. இப்படி இரண்டு மூன்று ஆண்டு காலமாக பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தின் நன்மைக்கு வேண்டிய தொகைகளை ஒதுக்கீடு செய்து, கடன் முதலியவைகளை வஜா செய்து, அடுத்த வருஷத்திற்குத் தள்ளிவைத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், உயர் விதை களை உபயோகித்து, சென்ற ஆண்டு நாம் நல்ல பலன் கண்டோம். உயர் விதைகளைப் பொறுத்தவரையில், ஏடிடி 27 நெல் வகை கொடுக்கப்படுகிறதேயல்லாது, புஞ்சை தானியங்களுக்கு ஒன்றும் செய்வதில்லை. கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் புஞ்சை தானிய வீரிய விதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, குறிக் கோள் ஏற்படுத்திக்கொண்டு, அந்தக் குறியீட்டை அடையத்தக்க நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். நல்ல பலன் கிடைக் கும். ஒன்றுக்கு மூன்று என்ற அளவில் விளைச்சல் காணமுடியும்.

உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாய இலாக் காவிற்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் எப்பொழுதும் ஒரு போட்டி மனப்பான்மை இருக்கிறது. விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், யூனியனிலுள்ள விவசாய அபிவிருத்தி அதி காரி எல்லாம் நடத்துகிறார்கள். அதிலே அவர்களுக்கு இருக்கும் குறைபாடு, கிராம சேவக் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று. இருந்தாலும், அப்படி நல்ல முறையில் செய்ய முடிவது இல்லை.

முக்கியமாக விவசாயத்துறைக்குத் தொகை ஒதுக்கும்போது, பஞ்சாயத்து யூனியன் திட்டங்களுக்கு குறைவாக ஒதுக்கிவிட்டு, பிறகு சிறப்பு திட்டம் போட்டு, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கிறார்கள். அந்த வகையில் கவனம் செலுத்தி, எல்லா இலாக்காக்களையும் ஒன்று படுத்தி, நல்ல முறையில் அபிவிருத்தி அடையும் முறையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒதுக்கீடுகளை கொடுத்து, பஞ்சாயத்து மூலமாக, விவசாய லட்சிய இலக்குகளைக் காண நல்லதொரு அபிவிருத்தி காண வழி செய்ய வேண்டும். அந்த வகையில் ஒரு சில மாறுதல்கள் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த மைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



1969 பிப்ரவரி 22] [திரு. பி. என். பரமசிவம்]

* திரு. ஜே. ஜேம்ஸ் : மாற்றுத் தலைவர் அவர்களே, மறைந்த நமது முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்தி, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

ஆளுநர் அவர்கள், கொள்கை விளக்கம் நிறைந்த ஓர் உரையை ஒருசில தினங்களுக்கு முன்பு இந்த அவை முன் வைத்தார்கள். ஆனால், அதனைப் புரட்டிப் புரட்டி, இந்த அரசின் கொள்கைகள் அதில் அடங்கியிருக்கின்றனவா என்று பார்த்தால், இல்லை. இன்று தமிழகத்தை—ஏன், பாரத தேசத்தையே—அசைத்துக்கொண் டிருக்கின்ற அதிலும் முக்கியமாகத் தமிழ்நாட்டில் மிகவும் சிக்கலாக இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியோ, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிகளைப் பற்றியோ ஆளுநர் அவர்கள் உரையில் ஒரு வார்த்தைகூடக் காணப்படவில்லை. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிகளிலிருந்தும் சரி, கல்லூரிகளிலிருந்தும் சரி, வெளியேறிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லங்களிலும், எதிர்க்கட்சி உறுப் பினர்கள் இல்லங்களிலும், இன்னும் பல்வேறு காரியாலயங் களிலும், தொழிற்சாலைகளிலும் சென்று தட்டிக்கொண்டே நிற்கி றார்கள், வேலை கொடுங்கள், வேலை கொடுங்கள் என்று. இம் மாதிரியான பெரிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன் வந் திருக்க வேண்டும். அதற்கான கொள்கையை கவர்னர் உரையில் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இன்று நாட்டிலிருக்கும் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட ஆளுநர் உரையில் காண்பதற்கில்லை.

அடுத்தபடியாக, ஒருமைப்பாட்டைப்பற்றி நமது அமைச்சர் களும், நமது தமிழ்நாட்டு அரசும் சிறப்பாகக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள், பாரதம் ஒன்றாக இருக்கவேண்டும் என்று. ஆனால் பாரதத்தில் மாணவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிற, சஞ்ச லத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிற மொழிப் பிரச்சினையைப் பற்றித் தீர்வு காண்பதற்காக இந்த அரசு என்ன வழிவகை செய் திருக்கிறது என்பதைப்பற்றி ஆளுநர் உரையில் காண்பதற்கில்லை. மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாத வரையில், இந்த நாட்டின்—பாரதத்தின்—ஒருமைப்பாட்டை எப்படி எதிர்பார்க்க முடியும்? அதற்காக நாம் விரும்புகிறோம், விரும்பி செயல்படு கிறோம் என்பதனை நமது நாட்டு மக்கள் எப்படி அறிய முடியும்? இன்றைய மாணவ உலகம் எதை நம்பி மொழிப் பிரச்சினையை மனநிலாக்கிச் செயல்பட முடியும் என்பதைச் சிந்திக்கவேண்டும். ஆகவே, மொழி பிரச்சினையை உடனடியாகத் தீர்த்தாக வேண்டும். தீர்வு காண்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1969 பிப்ரவரி 22

மொழிப் பிரச்சினையைப்பற்றிக்கூட ஆளுநர் அவர்கள் உரையில் ஒன்றும் இடம்பெறவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநிலத்திற்கு ஒரு சிறப்பு இருக்கிறது. சென்னை மாநிலம் என்று சொன்னால், வெளிநாட்டு மக்கள் அதன் நிர்வாகத்தைப்பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றார்கள். நிர்வாகத்தில் சென்னை மாநிலம் தலைசிறந்து இருக்கிறது என்று ஓரிடத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இன்றைய நிலையில் இந்த மாநிலத்தில் தமிழ்நாட்டு அரசின் கீழ் செயலாற்றிக்கொண்டிருக்கும் நிர்வாகம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்பு, எனது நண்பர் திரு. சித்தன் அவர்கள் இந்த நிர்வாகத்தில் இருக்கிற ஊழல்கள் ஒருசிலவற்றை எடுத்துக் காட்டினார்கள். நானும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. எனது மாவட்டத்தில் கழிந்த பட்ஜெட்டின்போது, டாப்பியோகா பாக்கேஜ் ஸ்கீம் என்ற ஒரு திட்டத்தை வகுத்து, அதற்காக ஒரு இலட்சம் ரூபாயை இந்த அரசு வழங்கியதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆனால், அந்த ஒரு இலட்சம் ரூபாயும் இன்று எங்கே போயிருக்கிறது என்பதை விவசாய அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை நான் சந்தேகிக்கிறேன். ஒரு இலட்சம் ரூபாயும் இன்று ஒருசிலரால் கையாளப்பட்டு விவாசாய இலாக்காவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, கள்ள வவுச்சர்கள் எழுதி, ஏதோ மரச் சீனி விஸ்தரிப்புத் திட்டம் என்ற பெயரைச் சொல்லி, மரச் சீனிக் கிழங்கு வாங்கி விநியோகம் செய்ததாக ஒரு . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தப் பணம் எங்கே போயிருக்கிறது என்று ஒருவேளை கனம் உறுப்பினருக்குத் தெரிந்திருந்தால், தயவுசெய்து முழு விவரம் கொடுத்தால், அதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் தாராளமாக, சந்தோஷமாகச் சொல்கிறேன். ஆனால், எனக்கு ஏற்படுகிற வருத்தம் என்னவென்றால், ஒரு வருஷ காலம் ஆகியும், நமது அரசுக்கு அதனைப்பற்றி அறிவதற்குள்ள வாய்ப்பு இல்லாமல் போயிற்றே என்பதுதான். அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். நான் அதனை எதற்காக கூறினேன் என்றால், அம்மாதிரி ஊழல்கள் நிறைந்திருக்கும் போது இதுவரையிலும் நமது மாநிலம் பெற்றிருந்த சிறப்புப் பெயரை இழப்பதற்குள்ள வாய்ப்பு வந்துவிடுமோ என்ற ஐயப்பாட்டுடனே தான் இதனைச் சுட்டிக்காட்ட விரும்பினேன். அந்த ஒரு லட்ச ரூபாயும் கையாடல் செய்த இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அருமனை பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் சில நாட்கள் தலைமறைவாக இருந்து, தேர்தல் நாளில் இடதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த அவர்கள் கூட்டணிக்காக வேலை செய்வதற்காக அழைக்கப்பட்டு, அவர்மீது சுமத்தப்பட்டிருந்த வழக்கினை அந்த நிலையில் விட்டுவிடுவதற்கான சூழ்நிலை இருப்பதை நான் கேள்விப்



1969 பிப்ரவரி 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

படுகிறேன். ஆகவே, மிகவும் அக்கறையோடு என்னைக் கேட்ட விவசாய அமைச்சர் அவர்களை அம்மாதிரி நிலையில் அதை விட்டு விடாமல், எடுத்த முயற்சியைத் தொடர்ந்து நடத்தி, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, தண்டிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று, தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது பாரத தேசமே அதிர்ச்சியடையக்கூடிய விதத்தில், நாகர்கோயிலில் ஒரு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்தப் பாராளுமன்றத் தேர்தலைப்பற்றி எவ்வளவு முக்கியத்துவம் நமது அரசு கொடுத்திருந்தது என்பதை அமைச்சர்கள் அறிவார்கள். கீழ்வெண்மணியில் 43 மனிதர்களைச் சுட்டுக் கொன்றபோது, அங்கு செல்வதற்கு நமது அமைச்சர்களில் இரண்டு பேர்களுக்குத்தான் வாய்ப்பும் வசதியும் கிடைத்தது. ஆனால், நாகர்கோயிலில் நடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு ஒன்பது அமைச்சர்களில் ஏழு அமைச்சர்கள் ஒரு மாத காலம் அங்கே, 500 மைல்களுக்கப்பால் இருக்கிற நாகர்கோயிலில், முகாமிட்டு, தேர்தல் வேலைகளையும் மற்ற வேலைகளையும் பார்த்து வந்தார்கள் என்று சொன்னால், அந்தத் தேர்தலை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக நமது அரசு எண்ணியது, அதற்காகச் செயல்பட்டது என்பதை யோசிக்க வேண்டும். ஆனால், அந்தத் தேர்தலில் நடந்ததைப்பற்றியோ, அந்தத் தேர்தலைப்பற்றியோ நமது ஆளுநரின் உரையில் ஒரு வார்த்தைகூடக் கூறாமல் விட்டு விட்ட இரகசியம்தான் எனக்குப் புரிந்துகொள்ளுவதற்கு வழி இல்லாமல் தவிக்கின்றேன். ஒருவேளை, உண்மைக்கு மாறானவற்றை—அங்கு நடந்தவற்றிற்கு மாறானவற்றை—ஆளுநர் உரையில் எப்படித் தான் கூறுவது என்ற ஐயப்பாட்டினால்தான் அதனை அதிலே விட்டுவிட்டிருக்கிறாரோ என்ற சந்தேகம் இல்லாமல் இல்லை.

அதுமட்டுமல்லாமல், எனக்கு முன்பு சொற்பொழிவாற்றிய ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பலரும் அந்தப் பாராளுமன்றத் தேர்தலைப்பற்றி இங்கு கூறினார்கள். அபாண்டமான பழிகளையும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீதும், காங்கிரஸ் கட்சி அனுதாபிகள் மீதும் எடுத்துரைத்தார்கள். அங்கு நடந்தவை என்ன என்பதைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களில், ஒருவேளை, கட்சியைச் சார்ந்திருக்கிறவர்கள் அதைப் புரிந்துகொள்ளுவதற்கு விரும்பாவிட்டாலுங்கூட, கட்சி மனப்பான்மை அற்றவர்கள் அறிந்து கொள்ளுவதற்காக அதனைக் கூற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. இங்கே நான் சுட்டிக்காட்டுகின்ற அனைத்தும் உண்மையிலேயே நடந்தவை என்பதற்குரிய ஆதாரங்களைக் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன். ஆனால், ஒருவேளை, அமைச்சர்கள் ஒரு சிலரைப்பற்றி நான் கூறினால், நமது இன்றைய முதலமைச்சர் அவர்கள், தாம் முதலமைச்சரானவுடன், "நம்மை விட்டுப் பிரிந்து சென்ற முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்களின் வழியில் நான் நடந்து செல்வேன்" என்று அன்று உரைத்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1969 பிப்ரவரி 22

ததன் காரணமாக, ஒருவேளை இனி அம்மாதிரி நடக்கமாட்டார்கள் என்ற தைரியம் எனக்கு இருந்தாலுங்கூட, அதற்கு முன்னதாக நடந்த சம்பவங்களாகையால், அவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர்—இன்றைய முதலமைச்சர் அவர்கள்—அங்கே நிரந்தரமாக முகாமிட்டு வேலை செய்தார்கள். அவர்கள் பல்வேறு கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார்கள்; உரைகள் நிகழ்த்தினார்கள்; அறிக்கைகள் விடுத்தார்கள். அவற்றில் சில அறிக்கைகளும் உரைகளும் மிகவும் * * உரைகளாகவும் அறிக்கைகளாகவும் இருந்தன என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். 4—1—1969 அன்று. . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஐயா, நடைமுறைக் கேள்வியொன்றை எழுப்ப விரும்புகிறேன். எந்த ஓர் உறுப்பினர் பேசுகின்றபோதும், இந்தப் பேரவை உறுப்பினரைப்பற்றிக் குறைவாகவோ, குற்றம் சாட்டுகின்ற வகையிலோ பேசக் கூடாது என்று 67-வது விதி இருக்கிறது. நமது நண்பர் அவர்கள் பேசுகின்றபோது, * * அறிக்கையொன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்ததாகச் சொன்னார்கள். அது அந்த விதிக்கு முரணாக இருப்பதால், அவர்கள் சொன்ன * * என்ற சொல்லை நமது பேரவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அறிக்கை * * தன்மை வாய்ந்ததாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் அப்பொழுது விடுத்த எந்த அறிக்கை * * இருந்தது என்பதைத் தயவுசெய்து இங்கு ஆதாரபூர்வமாக உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்ட வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆகையால்தான் நான் கூறுவதற்கு முன்னதாகவே ஆதாரங்களுடன் கூறுகிறேன் என்று கூறினேன். அதனைக் கூறுவதற்கு வாய்ப்பும் வசதியும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கூறி முடித்த பின்பு விளக்கம் கேட்கலாம். கடந்த 4—1—69-ம் நாள் கருங்கல்லில் நடந்த பொதுக்கூட்டத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள். . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை மீண்டும் எழுப்புகிறேன். விதி மிகத் தெளிவாக இருக்கிறது. எந்த ஓர் உறுப்பினரும் மற்ற உறுப்பினரைத் தனித்த முறையில் தாக்கிப் பேசக் கூடாது. அதாவது, பர்சனல் சார்ஜஸ் செய்யக் கூடாது. அப்படி ஓர் உறுப்பினர்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1969, பிப்ரவரி 22] [திரு. சி. பா. ஆதித்தனார்]

'இன்டீசன்ட்டாகப்' பேசிவிட்டால் 235-வது விதிப்படி பேரவைத் தலைவர் அவர்கள் அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றியாக வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. ஆகவே, பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தச் சொற்றொடரை அகற்ற வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, எனக்கு அந்த விஷயத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். எந்த உறுப்பினரைப் பற்றியும் நான் சொல்லவில்லை. பொறுப்பு வகிக்கின்ற அமைச்சர் அவர்கள் . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, மீண்டும் பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன் * * என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறபடியால், அந்தச் சொல் நடவடிக்கைப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பு இருப்பதால் அந்தச் சொல்லை உடனடியாக அகற்றவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** * * என்ற சொல்லில் தன்மை இருப்பதால் இந்தச் சொல்லை பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றுமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** 4—1—1969-ல் கருங்கல்லில் நடந்த பொதுக் கூட்டத்தில் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதியைப் படிக்கிறேன். "காமராஜ் அவர்கள் ஜாதி ஆட்களை ஏணியாக வைத்து முன்னேறியவர். ஆகவே, பொதுமக்களே . ." என்று இருக்கிறது. ஆகவே, நான் இங்கே கூற விரும்புவது என்னவென்றால், ஜாதியைத் தூண்டிவிட்டு, இந்தத் தேர்தலில் அமைச்சர் கருணாநிதி அவர்கள் செயலாற்றினார்கள், தேர்தல் வேலைகளைச் செய்தார்கள். ஆகவே தான், இந்தமாதிரியான அறிக்கைகளை விட்டு, தேர்தல் வேலைகளை நடத்தினீர்கள் என்று நான் கூறினேன். சபாநாயகர் அவர்களே, நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தலைவர் காமராஜ் அவர்களைப்பற்றி தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பாரத தேசம் மட்டுமல்ல, அகில உலகமும் அறிந்த தலைவர் அவர். அவர் இதுவரையில் ஜாதியையோ, மதத்தையோ, மொழியையோ வைத்து முன்னேறியவர் அல்ல. பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள் இம்மாதிரியாகக் கூறினார்கள் என்று மெத்த வேதனையோடு இதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் கருங்கல் கூட்டத்தில் பேசியதைக் குறிப்பிட்டு, நான் சொல்லாத ஒன்றை நண்பர் அவர்கள் சொல்கிறார்கள். காமராஜ் அவர்கள்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

போட்டியிட்ட நேரத்தில், ஓட்டுச் சீட்டில் 'காமராஜ் நாடார்' என்று போடப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, ஜாதிகளைக் கடந்த ஒருவர், அகில இந்தியா அறிந்த ஒருவர் தன் பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறாரே என்று வருத்தம் தெரிவித்துப் பேசினேன். நண்பர் அவர்கள் கூறியதுபோல் எந்த வித தாக்குறைவாகவும் காமராஜ் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசவில்லை. பேலட் பேப்பரில்கூட காமராஜ் நாடார் என்று குறிப்பிட்டிருக்கிறது என்று சொன்னேனே தவிர வேறு அல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, விளக்கங்களை நான் நிறுத்திக் கொள்ளலாம் என்றாலும், எனக்குத் தெரிந்தவற்றைக் கூறாமல் இருப்பது சரியல்ல என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 'காமராஜ் நாடார்' என்ற பெயர் 'ஓட்டர்ஸ் லிஸ்ட்'-டில் பதிவாகி, பிரசுரமாகியிருக்கிறது. பேலட் பேப்பரில் ஓட்டர்ஸ் லிஸ்ட்டில் என்ன இருந்ததோ அதையேதான் அச்சடித்தார்கள். அப்படி அச்சடிக்காமல் இருந்தால் அவர் பெயரை அப்படியே 'காமராஜ்' என்று விளம்பரம் செய்திருந்தால், அதனால் ஏற்படுகின்ற பலாபலன்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்வார்கள். ஒவ்வொரு விஷயம் பற்றியும் விளக்கத்தைத் தருகின்ற நிலைமை வந்துவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு அமைச்சர் அவர்கள் . .

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். காமராஜ் அவர்கள் இந்தத் தடவை மட்டும் தேர்தலுக்கு நிற்கவில்லை. முன்பு பல தடவை தேர்தலில் நின்றிருக்கிறார். அப்போதெல்லாம் இல்லாத வாசகத்தை இப்போது ஏன் சேர்த்துக்கொண்டார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, பேச்சிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஓட்டர்ஸ் லிஸ்ட் முனிசிபாலிட்டியால் எடுக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உபாத்தியாயர்கள் அவருடைய பெயரை 'காமராஜ் நாடார்' என்று எழுதி, பின்பு அது அச்சடிக்கப் பட்டது. காமராஜ் அவர்களை உலகம் எல்லாம் தெரியும். அவர் 'நாடார்' என்று போட்டுக் கொண்டுதான் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை இல்லை. முனிசி பாலிட்டியிலே இருந்து ஓட்டர்ஸ் லிஸ்ட் எடுக்கப் போனவர்கள் தாம் காமராஜ் நாடார் என்று போட்டுவிட்டார்கள். அவர்கள் காமராஜ் அவர்களைக் கேட்டிருந்தாலும், 'காமராஜ்' என்றுதான் தன்னுடைய பெயரைச் சொல்லியிருப்பார். அதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கிவிட்டார்கள். அந்தத் தொகுதியில் இன்னொரு நாடாரும் தேர்தலுக்கு நின்றார்கள். காமராஜ் அவர்கள் ஜாதிப் பெயரை விரும்பியதே இல்லை. என்னைக்கூட சிலர் 'பி. ஜி. கருத்திருமன்' என்கிறார்கள், சிலர் 'கருத்திரும கவுண்டர்'



என்கிறார்கள். இன்னும் சிலர் 'கருத்திரும கவுடர்' என்று சொல்கிறார்கள். ஓட்டர்ஸ் லிஸ்டில் எப்படி இருக்கிறதோ அப்படியேதான் பேலட் பேப்பரிலும் பெயர் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இவர் வேறு ஒருவர் என்றுகூட கேஸ்கள் கொண்டு வரலாம். ஓட்டர்ஸ் லிஸ்ட்டில் இருக்கும் பெயர் அப்படியே வர வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் இந்த விளக்கத்திற்கு மறுப்பைக் கூறி, அதை விரசமாக்க விரும்பவில்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் கூறினார்கள். "மாநகராட்சி அதிகாரிகள்தான் அப்படி லிஸ்ட் எடுத்தார்கள். ஓட்டர்ஸ் லிஸ்டில் இருந்ததைத்தான் பேலட் பேப்பரில் அச்சடித்தார்கள்" என்று ஒரு பத்திரிகையில் வந்த பிறகு நான் அந்த பதிவுத் தாள்களைப் பார்த்தேன். 1966-ம் ஆண்டு அப்போதிருந்த காங்கிரஸ் சர்க்கார் அதிகாரிகள்தான் "காமராஜ் நாடார்" என்று லிஸ்ட் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் விளக்கம் கூறி, இதை மேலும் விரசமாக்க நான் விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்போது ஆட்சியில் காங்கிரஸ் கட்சி சர்க்கார் இருந்தாலும் மாநகராட்சி அவர்களுடைய கட்சியின் ஆட்சியில்தான் இருந்தது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சபாநாயகர் அவர்களே, தேர்தல் ஜனவரி 8-ம் நாள் முடிந்து 9-ம் தேதி தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரும் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஓர் அறிக்கை விடுத்ததை இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள். அந்த அறிக்கையில், "நாகர்கோயிலில் நடைபெற்றது நாடாளுமன்றத் தேர்தல் அல்ல, அது நாடார் மன்றத் தேர்தல்" என்று குறிப்பிட்டிருந்தார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வெறும் தவறான தகவல்களையே நண்பர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும் ஒரு பத்திரிகையில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். நேரிலே பார்த்துப் பேசியபோதுகூட அது பற்றிக் கேட்டார்கள். "நான் அதுபோல் பேசியது கிடையாது, நான் யாரையும்பற்றி எதுவும் சொல்லவில்லை" என்று அவரிடம் கூறியிருக்கிறேன். தவறான தகவல்களைத் தொடர்ந்து தர வேண்டாமென்று நண்பர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, நான் நம்பக்கூடிய விஷயங்களைப் பற்றித்தான் நான் சொல்கிறேனே தவிர, வேறு அல்ல அதை அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதற்கு ஒரு மறுப்பாவது சொல்லியிருந்தால் இந்த மன்றத்தில் நான்

ருக்கிறார்கள். அங்காடிப் பேச்சையே இங்கே எடுத்துச் சொல்லலாம் என்கிறபோது அதுவும் ஜனநாயக வளர்ச்சிக்கு வழி செய்யும் என்று சொல்கிறபோது--சொல்வதற்கு எல்லாம் ஆதாரம் வேண்டும் என்று சொன்னால் இங்கே சாட்சிகளைக் கொண்டு வர முடியுமா? மறைந்த முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தை இவர்கள் ஏற்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) :** அங்காடிப் பேச்சுக்கும் ஆதாரம் வேண்டுமென்றே மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டும் மன்றத்தின் காலத்தை வீணாக்காமல் தம்முடைய பேச்சை ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU J. JAMES : Sir, I want a ruling from the Chair on the point vib., whether I have wasted the time of the House. நான் இதுவரையிலும் மன்றத்தின் நேரத்தை வீணாக்கினேனா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) :** வீணாக்குவது என்று நான் சொன்னதை உங்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தும் பொருளில் கொள்ள வேண்டாம். காலம் விரயம் ஆகிறது என்ற பொருளில் கொள்ள வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதல் அமைச்சர் அவர்கள் எந்தப் பத்திரிகையை நம்பலாம், எந்தப் பத்திரிகையை நம்பக் கூடாது என்றும் சொன்னால் நன்றாக இருக்கும். நாங்கள் படிப்பது தினமலர் பத்திரிகை ஒன்றுதான். கட்சிசார்பற்ற ஒரு பத்திரிகையாக அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையைத் தான் நாங்கள் அன்றாடம் படிக்கிறோம். அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைத் தான் நான் குறிப்பிட்டேன். அந்தப் பத்திரிகையை நம்பக் கூடாது என்று சொன்னால் நான் விட்டு விடவும் தயாராய் இருக்கிறேன். கல்லறையைப் பற்றி எடுத்துக் கூறி ஒரு சொற்பொழிவே ஆற்றினார்கள். இன்னொரு அமைச்சர் கூறியதை நான் காதாரக் கேட்டேன். விருதுநகரில் தோற்றுப் போன காமராஜர் பதவி மோகத்தால் நாகர்கோயிலுக்கு ஓடி வந்து நிற்கிறார் என்று கூறினார். அந்த அமைச்சரின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் அப்படிச் சொல்வது சரியல்ல என்றே நினைக்கிறேன். தலைவர் காமராஜர் பதவி மோகம் கொண்டவரா? தேடி வருகிற பதவிகளை எல்லாம் வேண்டாம், வேண்டாம் என்று புட்பால் போல உதறி எறிந்து கொண்டிருப்பவர், கல்லறை மண் காய்வதற்குள் நாகர்கோயிலில் பதவி ஆசைபிடித்து வந்தார் என்று சொன்னது தவறு. இவர்கள் வேண்டுமானால்—அண்ணா இறந்து கல்லறை மண் உலர்வதற்கு முன்பாகவே பதவி மோகத்தில் மோதிக்கொண்டார்கள். எவ்வளவோ . . . (மணியடிக்கப் பட்டது).



*** திரு. ஆர். நாகசுந்தரம்.** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நானும் இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சென்ற கூட்டத்தொடரில் நாம் பேசியவற்றை எல்லாம் நமது அருமை அண்ணன் அவர்கள் இங்கே இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் பேசிய பேச்சுக்களையும் நாம் கேட்டுக் கொண்டிருந்தோம். அத்தகைய அண்ணன் இப்போது நம்மிடையே இல்லை. அது நமக்கெல்லாம் அளிக்கின்ற வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல. அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது நமது ஆளுநர் அவர்கள் தமது இல்லத்தரசியுடன் இரவு பகலாக மருத்துவ மனைக்கு வந்திருந்து அண்ணன் அவர்களைக் கவனித்தார்கள். எப்படியும் அண்ணன் உடல் தேற வேண்டுமென்ற எண்ணத்தில் எல்லோரையும் பிரார்த்தனை செய்துகொள்ளத் தூண்டினார்கள். அவர்களும் பிரார்த்தனை செய்துகொண்டார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை, திருச்சி வானொலி நிலையங்களுக்கும், செய்திகளை உடனுக்குடன் நேரில் மக்கள் பார்த்து உணர்ச்சி அடையும் விதமாக திறம்பட செய்திகளைப் பிரசுரித்த செய்திப் பத்திரிகைகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பேசும்பொழுது திரு. விநாயகம் அவர்கள் இங்கே கூறினார்கள், நாம் டில்லிப் பாராளுமன்றத்திலே நடப்பதைப்போல் இங்கே நடந்துகொள்ள வேண்டுமென்று. எல்லாவற்றிற்கும் டில்லியைப் பின்பற்ற வேண்டாமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கேதான் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். ஆகவே பாராளுமன்றத்திலே நடப்பதையெல்லாம் நாமும் பின்பற்றவேண்டுமென்று நினைக்கக்கூடாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைத் தலைவர் அவர்களை அவர்களுடைய இருக்கையில் அமர்த்துகிற பெருமையை திரு. விநாயகம் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு பெயர்மாற்றமும் ஏற்பட்டுவிட்டது. அதோடு மட்டுமல்ல, தமிழ்ப் புலவர் அவர்கள் அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே திரு. விநாயகம் அவர்கள் பேசும் பொழுது—டாக்டர் ஹான்டே அவர்கள் நல்ல தமிழிலே பேசினார்கள்—அதைப்போல் அவர்களும் அவருடைய தொகுதி மக்களின் சார்பாக நல்ல தமிழிலேயே பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய சுயேச்சை உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் அவைத் தலைவர் அவர்களை, எப்பொழுதும் கோபமாக இருக்கக்கூடாது, கோபமாக இருக்கும்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். முப்புறம்

எரித்த சிவபெருமான் தன்னுடைய சிரிப்பினாலேயேதான் முப்புறத்தையும் எரித்தார் என்று கதை கூறுகிறது. எனவே அவரும் அத்தகைய சிரிப்பை எதிர்பார்க்கிறார்போலும் !

சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் 150 மைல் தூரத்திலே தொழுதூர் பாலம் என்ற ஒரு பாலம் இருக்கிறது. அதையொட்டி 'எஸ்' வடிவம்போன்ற ஒரு பாதை, 30 அடி தூரத்திற்கு இருக்கிறது. அந்தப் பாதை மிகவும் ஆபத்தாக இருக்கிறது. அப்பாலத்திலே லேலண்டு பஸ்களும், பென்ஸ் லாரிகளும் செல்வதற்குச் சிரமப்படுகின்றன. இதன் காரணமாக பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையிலே ஏற்படக்கூடிய விபத்துக்களிலே 80 சதவீத விபத்துக்கள் அங்குதான் ஏற்படுகின்றன. எனவே அந்த 30 அடி தூரத்திற்கு உள்ள 'எஸ்' வடிவ சாலையை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அதன்மூலம் விபத்துக்களைத் தவிர்க்கமுடியும். எனவே அதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் சலவைத் தொழிலாளர்கள் பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும். அவர்களுக்கு எல்லா சலுகைகளையும் தந்து அவர்களையும் சமூகத்தில் முன்னேற்ற வேண்டுகிறேன். அவர்களுக்கு என்று ஒரு பிரதிநிதி இங்கே இல்லாததால்தான் நான் அவர்கள் சார்பாக இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் 400 பர்மா அகதிகள் கடை வைத்து வியாபாரம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் கலால் இலாகாவினர் துரத்தக்கூடிய முறையில் அவர்களுடைய சாமான்களை எல்லாம் வாரிக்கொண்டு போய்விட்டனர். இதுபற்றி அவர்கள் முறையிட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு எந்த எந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தச் சலுகைகளையெல்லாம் இவர்களுக்கும் அளிக்கவேண்டும்மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியிலே கூட்டுறவு முறையிலே ஒரு பீடித் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று பீடித் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பங்குத் தொகை அதற்காக வசூல் செய்து அதை அரசாங்கத்திலே கட்டிவிட்டார்கள். கட்டி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன, இன்னும் அதன்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அதையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியில் ஒரு பிராந்திய பொறியியல் கல்லூரி இருக்கிறது. பெயர் பெரியதாகத்தான் இருக்கிறது. ஆனால் அதனுடைய கண்ட்ரோல் மத்திய அரசா அல்லது மாநில அரசா என்பது





தெரியவில்லை. அதற்காக ஒரு கமிட்டியும் ஒரு தலைவரும் இருக்கிறார்கள். அந்தத் தலைவர் ஒரு பொம்மைத் தலைவர், அதிகாரமில்லாத தலைவர். சென்ற ஆண்டு 37 ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள். அமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியின் தலைவரைக் கூப்பிட்டு குழுவைக் கூட்டி குற்றங்குறைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இன்று வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூட்டமும் கூட்டப்படவில்லை. அங்கே தலைவருக்கு அதிகாரமில்லை, சாதாரண உறுப்பினராக இருக்கக்கூடிய முத்தையன் என்கிற முத்தையா முதலியார் அவர்களுக்குத்தான் சகல அதிகாரமும் இருக்கிறது அவர் அந்தக் கூட்டத்தை நடக்கவொட்டாமல் செய்துவிட்டார். போதுமான அளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலேயே கல்லூரி நடக்கிறது. ஆசிரியர்கள் தற்காலிகமாகவும் டெப்யூடேஷனிலும் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய நிர்ணயம் போன்றவற்றில் எந்தவிதமான விதிமுறையும் கடைப்பிடிக்கவில்லை. பல திறமையுள்ள ஆசிரியர்கள் வெளியேறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அங்கேயுள்ள பணம் முழுதும் கட்டடங்கள் கட்டுவதற்காகத்தான் செலவழிக்கப்படுகின்றன. அங்கேயுள்ள லேபரட்டரி சரியான முறையில் கருவிகள் வாங்கப்படாமல் கிடக்கிறது. ஸ்டீம் எஞ்சின் லேபரட்டரி என்பது மிகவும் முக்கியமான பாடம். அதற்கு லேபரட்டரி இல்லையென்பதால் அங்கே படிக்கிற முதற் பிரிவு மாணவர்கள் அதைப் படிக்காமலேயே வெளியேறப் போகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

மாநில தமிழ்மொழிப்பெயர்ப்புக் குழுவிற்கு அங்குள்ள ஒரு ஆசிரியரை நமது அரசு நியமித்தார்கள். அங்கேயுள்ள முதல்வர் என்னைக் கேட்காமல் அந்த ஆசிரியரை அரசு எப்படி நியமிக்க முடியும் என்றும், அதனால் அவர் போகக்கூடாது என்றும் சொல்லித் தடுத்துவிட்டார். இதற்கென ஒரு குழு அமைத்து இவைகளை விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்து அந்தக் கல்லூரியை சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யவேண்டுகிறேன். திருச்சிராப்பள்ளி நகராட்சி, பொன்மலை நகர பஞ்சாயத்து, பொன்மலை காலனி, ஸ்ரீரங்கம் ஆகிய நகராட்சிகளைச் சேர்த்து, கொதிகலன் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை ஆகியவற்றையும் சேர்த்து திருச்சிராப்பள்ளி நகராட்சியை ஒரு மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று சென்ற ஆண்டே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அன்புகூர்ந்து அதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகராட்சித் தலைவர் புதை சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று கேட்பதற்கு முடியாமல் கட்டப்படாத ஒரு மத்திய பஸ் நிலையத்திற்கு தன்னுடைய பெயரை வைக்கவில்லையென்று தமிழக அரசின்மீது போர்க்கொடி உயர்த்திருக்கிறார்.

அதைச் சொல்லியிருக்க மாட்டேன். அதற்காக அன்னார் அவர்கள் தேர்தலுக்குப் பின்பாகிலும் ஓர் மறுப்பு தெரிவித்த தற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவர் அவர்களே, குறுக்கிடுகளால் என்னுடைய பாதி நேரம் தீர்ந்து போய்விட்டது. நீங்கள் 'பெல்' அடித்துக்கொண்டிருந்தால் என்னுடைய விஷயங்கள் எல்லாம் போய்விடும். தயவு செய்து எனக்குக் கொஞ்சம் நேரம் தர வேண்டும். இன்னும் ஒரு சொற்பொழிவு ஆற்றியதைப் பற்றிக் குறிப்பிட்டால் அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் ஒரு கல்லறையைப் பற்றி வருணித்துப் பேசினார். தலைவர் நேசமணி அவர்கள் கல்லறை . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு அறிக்கையை அளிக்கவில்லை யென்று சொன்னபிறகு அதை மீண்டும் எழுப்பக்கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இது வேறு ஒரு அறிக்கையைப் பற்றியது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** நாகர்கோயில் தேர்தலைப் பற்றிய விவாதம் சபையில் நடக்கிறதா? அல்லது கவர்னர் உரைக்குக் கொண்டுவரப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, திரு. நேசமணி அவர்கள் உயிரோடு இருக்கும்போது அவருக்கு எந்தவிதமான ஒரு நன்மையையும் செய்யவில்லை. ஆனால் இறந்து அவரது கல்லறை மண் காய்வதற்கு முன்னேமே திரு. காமராஜ் தேர்தலுக்கு வந்து நிற்கின்றாரே என்று ஒரு கூட்டத்தில் இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள். உண்மையிலேயே திரு. நேசமணி அவர்கள் இறந்து 7 மாதங்களுக்கு அப்புறம் தான் நாகர்கோயில் பாராளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இதற்குள் கல்லறை மண் காய்ந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் நான் குறிப்பிட்டது என்ன என்பதுபற்றிய விவரம் கையில் இருந்தால் அந்த வாசகத்தையே இங்கே படிப்பது நன்றாக இருக்கும். தேர்தல் அவர் இறந்து 6 மாதங்களுக்குப் பின் தான் நடைபெற்றது. தேர்தலுக்கான தேதியையே தேர்தல் கமிஷன் இந்த அரசாங்கத்துடன் கலந்து கொண்டுதான் நிர்ணயம் செய்தது. கல்லறை காய்வதற்கு முன்பாக தேர்தலை நடத்துவதாக நான் பேசவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அவர் பேசிய விவரம் கையில் இல்லை. அவரது ஞாபகத்தில் இருந்து என்ன சொன்னார் என்பதை அவரே சொன்னால் நான் அதோடு விட்டுவிடுகிறேன். நான் கூறியது: கல்லறை மண் காய்வதற்குள்ளேயே காமராஜர் பதவி ஆசை





பிடித்து வந்துவிட்டார்கள் என்று அவர் பேசியது பற்றித்தான். நேசமணி அவர்கள் பதவியை விரும்பியதில்லை. காமராஜர் அவர்களும் பதவி மோகம் கொண்டவர்கள் அல்ல.

**திரு. மு. ச. சிவசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு வெளியே சாதாரண பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுக்களை குற்றச்சாட்டாக இங்கே கொண்டுவரலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வெளியில் பேசுவதை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லக்கூடாது என்றால் ஒரு காரியமும் செய்ய முடியாது, ஆதார பூர்வமாகத்தான் சொல்ல வேண்டுமென்றால்—கிடைத்த தகவலைச் சொல்கிறோம் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வெளியில் பேசுவதை இங்கே கூறலாம். அப்படிக் கூறுவதற்கு ஆதாரங்கள் இருக்கிறதா என்றால் கையில் ஒன்றும் இல்லை என்று சொல்கிறார். ஆயுதம் இல்லாமல் போரிட வந்திருப்பதைத்தான் இங்கே காண்கிறோம். (சிரிப்பு)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கையில் ஒன்றும் இல்லை என்றால் ஞாபக சக்தி இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சொல்வதற்கு எல்லாம் ப்ரூஃப் வேண்டும், பத்திரிகையில் வந்திருக்கிறதா என்றால் பத்திரிகையில் வந்திருப்பதைக் காட்டினால் அது தவறான செய்தி என்று சொல்லிவிடுவது—அப்படி மாட்டிக்கொண்ட பத்திரிகையாளர்கள் இல்லையா? பத்திரிகையில் வருவதையே மறுத்துவிடுவதை நாம் பார்க்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சில பத்திரிகைகளில் வருவதை மறுக்கவேண்டியதாக இருக்கிறது. எந்த எந்தப் பத்திரிகையில் வருவதை மறுத்துத் தீரவேண்டும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இங்கே பகிரங்கமாக சொல்ல முடியாவிட்டாலும் மறுக்க முடியாது. எல்லாப் பத்திரிகைகளிலும் வருவதை மறுப்பதும் இல்லை. அது மரபும் அல்ல.

**திரு. டி. மார்டின் :** முதல் அமைச்சர் அவர்கள், சொல்வதற்கு ஆதாரம் வேண்டும் என்கிறார்கள். சொல்வதற்கு எல்லாம் ஆதாரம் வேண்டுமென்றால் ஏராளமான புத்தகங்களைக் கொண்டு வந்தாக வேண்டும். சாட்சிகளைக்கூடக் கொண்டு வந்தாக வேண்டும். இதே அவையில் 10—3—1959-இல் மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது—இந்த அவையில் அங்காடிப் பேச்சை ஆதாரமாக வைத்துக்கூடப் பேசலாம், அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் இங்கே நடக்க முடியும் என்று குறிப்பிட்டி

அதைச் சொல்லியிருக்க மாட்டேன். அதற்காக அன்னுர் அவர்கள் தேர்தலுக்குப் பின்பாகிலும் ஓர் மறுப்பு தெரிவித்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவர் அவர்களே, குறுக்கிடுகளால் என்னுடைய பாதி நேரம் தீர்ந்து போய்விட்டது. நீங்கள் 'பெல்' அடித்துக்கொண்டிருந்தால் என்னுடைய விஷயங்கள் எல்லாம் போய்விடும். தயவு செய்து எனக்குக் கொஞ்சம் நேரம் தர வேண்டும். இன்னும் ஒரு சொற்பொழிவு ஆற்றியதைப் பற்றிக் குறிப்பிட்டால் அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் ஒரு கல்லறையைப் பற்றி வருணித்துப் பேசினர். தலைவர் நேசமணி அவர்கள் கல்லறை . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு அறிக்கையை அளிக்கவில்லை யென்று சொன்னபிறகு அதை மீண்டும் எழுப்பக்கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இது வேறு ஒரு அறிக்கையைப் பற்றியது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** நாகர்கோயில் தேர்தலைப் பற்றிய விவாதம் சபையில் நடக்கிறதா? அல்லது கவர்னர் உரைக்குக் கொண்டுவரப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, திரு. நேசமணி அவர்கள் உயிரோடு இருக்கும்போது அவருக்கு எந்தவிதமான ஒரு நன்மையையும் செய்யவில்லை. ஆனால் இறந்து அவரது கல்லறை மண் காய்வதற்கு முன்னமே திரு. காமராஜ் தேர்தலுக்கு வந்து நிற்கின்றுரே என்று ஒரு கூட்டத்தில் இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள். உண்மையிலேயே திரு. நேசமணி அவர்கள் இறந்து 7 மாதங்களுக்கு அப்புறம் தான் நாகர்கோயில் பாராளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இதற்குள் கல்லறை மண் காய்ந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் நான் குறிப்பிட்டது என்ன என்பதுபற்றிய விவரம் கையில் இருந்தால் அந்த வாசகத்தையே இங்கே படிப்பது நன்றாக இருக்கும். தேர்தல் அவர் இறந்து 6 மாதங்களுக்குப் பின் தான் நடைபெற்றது. தேர்தலுக்கான தேதியையே தேர்தல் கமிஷன் இந்த அரசாங்கத்துடன் கலந்துகொண்டுதான் நிர்ணயம் செய்தது. கல்லறை காய்வதற்கு முன்பாக தேர்தலை நடத்துவதாக நான் பேசவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அவர் பேசிய விவரம் கையில் இல்லை. அவரது ஞாபகத்தில் இருந்து என்ன சொன்னார் என்பதை அவரே சொன்னால் நான் அதோடு விட்டுவிடுகிறேன். நான் கூறியது : கல்லறை மண் காய்வதற்குள்ளேயே காமராஜர் பதவி ஆசை





பிடித்து வந்துவிட்டார்கள் என்று அவர் பேசியது பற்றித்தான். நேசமணி அவர்கள் பதவியை விரும்பியதில்லை. காமராஜர் அவர்களும் பதவி மோகம் கொண்டவர்கள் அல்ல.

**திரு. மு. ச. சிவசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு வெளியே சாதாரண பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுக்களை குற்றச்சாட்டாக இங்கே கொண்டுவரலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வெளியில் பேசுவதை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லக்கூடாது என்றால் ஒரு காரியமும் செய்ய முடியாது, ஆதார பூர்வமாகத்தான் சொல்ல வேண்டுமென்றால்—கிடைத்த தகவலைச் சொல்கிறோம் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வெளியில் பேசுவதை இங்கே கூறலாம். அப்படிக் கூறுவதற்கு ஆதாரங்கள் இருக்கிறதா என்றால் கையில் ஒன்றும் இல்லை என்று சொல்கிறார். ஆயுதம் இல்லாமல் போரிட வந்திருப்பதைத்தான் இங்கே காண்கிறோம். (சிரிப்பு)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கையில் ஒன்றும் இல்லை என்றால் ஞாபக சக்தி இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சொல்வதற்கு எல்லாம் ப்ரூஃப் வேண்டும், பத்திரிகையில் வந்திருக்கிறதா என்றால் பத்திரிகையில் வந்திருப்பதைக் காட்டினால் அது தவறான செய்தி என்று சொல்லிவிடுவது—அப்படி மாட்டிக்கொண்ட பத்திரிகையாளர்கள் இல்லையா? பத்திரிகையில் வருவதையே மறுத்துவிடுவதை நாம் பார்க்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சில பத்திரிகைகளில் வருவதை மறுக்கவேண்டியதாக இருக்கிறது. எந்த எந்தப் பத்திரிகையில் வருவதை மறுத்துத் தீரவேண்டும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இங்கே பகிரங்கமாக சொல்ல முடியாவிட்டாலும் மறுக்க முடியாது. எல்லாப் பத்திரிகைகளிலும் வருவதை மறுப்பதும் இல்லை. அது மரபும் அல்ல.

**திரு. டி. மார்டின் :** முதல் அமைச்சர் அவர்கள், சொல்வதற்கு ஆதாரம் வேண்டும் என்கிறார்கள். சொல்வதற்கு எல்லாம் ஆதாரம் வேண்டுமென்றால் ஏராளமான புத்தகங்களைக் கொண்டு வந்தாக வேண்டும். சாட்சிகளைக்கூடக் கொண்டு வந்தாக வேண்டும். இதே அவையில் 10—3—1959-இல் மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது—இந்த அவையில் அங்காடிப் பேச்சை ஆதாரமாக வைத்துக்கூடப் பேசலாம், அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் இங்கே நடக்க முடியும் என்று குறிப்பிட்டி

[திரு. டி. மார்டின்] [1969 பிப்ரவரி 22

ருக்கிறார்கள். அங்காடிப் பேச்சையே இங்கே எடுத்துச் சொல்லலாம் என்கிறபோது அதுவும் ஜனநாயக வளர்ச்சிக்கு வழி செய்யும் என்று சொல்கிறபோது--சொல்வதற்கு எல்லாம் ஆதாரம் வேண்டும் என்று சொன்னால் இங்கே சாட்சிகளைக் கொண்டு வர முடியுமா? மறைந்த முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தை இவர்கள் ஏற்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) : அங்காடிப் பேச்சுக்கும் ஆதாரம் வேண்டுமென்றே மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டும் மன்றத்தின் காலத்தை வீணாக்காமல் தம்முடைய பேச்சை ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU J. JAMES : Sir, I want a ruling from the Chair on the point viz., whether I have wasted the time of the House. நான் இதுவரையிலும் மன்றத்தின் நேரத்தை வீணாக்கினேனா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) : வீணாக்குவது என்று நான் சொன்னதை உங்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தும் பொருளில் கொள்ள வேண்டாம். காலம் விரயம் ஆகிறது என்ற பொருளில் கொள்ள வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: முதல் அமைச்சர் அவர்கள் எந்தப் பத்திரிகையை நம்பலாம், எந்தப் பத்திரிகையை நம்பக் கூடாது என்றும் சொன்னால் நன்றாக இருக்கும். நாங்கள் படிப்பது தின மலர் பத்திரிகை ஒன்றுதான். கட்சிசார்பற்ற ஒரு பத்திரிகையாக அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையைத் தான் நாங்கள் அன்றாடம் படிக்கிறோம். அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைத் தான் நான் குறிப்பிட்டேன். அந்தப் பத்திரிகையை நம்பக் கூடாது என்று சொன்னால் நான் விட்டு விடவும் தயாராய் இருக்கிறேன். கல்லறையைப் பற்றி எடுத்துக் கூறி ஒரு சொற்பொழிவே ஆற்றினார்கள். இன்னொரு அமைச்சர் கூறியதை நான் காதாரக் கேட்டேன். விருதுநகரில் தோற்றுப் போன காமராஜர் பதவி மோகத்தால் நாகர்கோயிலுக்கு ஓடி வந்து நிற்கிறார் என்று கூறினார். அந்த அமைச்சரின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் அப்படிச் சொல்வது சரியல்ல என்றே நினைக்கிறேன். தலைவர் காமராஜர் பதவி மோகம் கொண்டவரா? தேடி வருகிற பதவிகளை எல்லாம் வேண்டாம், வேண்டாம் என்று புட்பால் போல உதறி எறிந்து கொண்டிருப்பவர், கல்லறை மண் காய்வதற்குள் நாகர்கோயிலில் பதவி ஆசைபிடித்து வந்தார் என்று சொன்னது தவறு. இவர்கள் வேண்டுமானால்—அண்ணா இறந்து கல்லறை மண் உலர்வதற்கு முன்பாகவே பதவி மோகத்தில் மோதிக்கொண்டார்கள். எவ்வளவோ . . . (மணியடிக்கப் பட்டது).



1969 பிப்ரவரி 22]

*** திரு. ஆர். நாகசுந்தரம்.** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நானும் இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சென்ற கூட்டத்தொடரில் நாம் பேசியவற்றை எல்லாம் நமது அருமை அண்ணன் அவர்கள் இங்கே இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் பேசிய பேச்சுக்களையும் நாம் கேட்டுக் கொண்டிருந்தோம். அத்தகைய அண்ணன் இப்போது நம்மிடையே இல்லை. அது நமக்கெல்லாம் அளிக்கின்ற வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல. அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது நமது ஆளுநர் அவர்கள் தமது இல்லத்தரசியுடன் இரவு பகலாக மருத்துவ மனைக்கு வந்திருந்து அண்ணன் அவர்களைக் கவனித்தார்கள். எப்படியும் அண்ணன் உடல் தேற வேண்டுமென்ற எண்ணத்தில் எல்லோரையும் பிரார்த்தனை செய்துகொள்ளத் தூண்டினார்கள். அவர்களும் பிரார்த்தனை செய்துகொண்டார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை, திருச்சி வானொலி நிலையங்களுக்கும், செய்திகளை உடனுக்குடன் நேரில் மக்கள் பார்த்து உணர்ச்சி அடையும் விதமாக திறம்பட செய்திகளைப் பிரசுரித்த செய்திப் பத்திரிகைகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பேசும்பொழுது திரு. விநாயகம் அவர்கள் இங்கே கூறினார்கள், நாம் டில்லிப் பாராளுமன்றத்திலே நடப்பதைப்போல் இங்கே நடந்துகொள்ள வேண்டுமென்று. எல்லாவற்றிற்கும் டில்லியைப் பின்பற்ற வேண்டாமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கேதான் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். ஆகவே பாராளுமன்றத்திலே நடப்பதையெல்லாம் நாமும் பின்பற்றவேண்டுமென்று நினைக்கக்கூடாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைத் தலைவர் அவர்களை அவர்களுடைய இருக்கையில் அமர்த்துகிற பெருமையை திரு. விநாயகம் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு பெயர்மாற்றமும் ஏற்பட்டுவிட்டது. அதோடு மட்டுமல்ல, தமிழ்ப் புலவர் அவர்கள் அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே திரு. விநாயகம் அவர்கள் பேசும் பொழுது—டாக்டர் ஹாண்டே அவர்கள் நல்ல தமிழிலே பேசினார்கள்—அதைப்போல் அவர்களும் அவருடைய தொகுதி மக்களின் சார்பாக நல்ல தமிழிலேயே பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய சுயேச்சை உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் அவைத் தலைவர் அவர்களை, எப்பொழுதும் கோபமாக இருக்கக்கூடாது, கோபமாக இருக்கும்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். முப்புறம்

எரித்த சிவபெருமான் தன்னுடைய சிரிப்பினாலேயேதான் முப்புறத்தையும் எரித்தார் என்று கதை கூறுகிறது. எனவே அவரும் அத்தகைய சிரிப்பை எதிர்பார்க்கிறார்போலும் !

சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் 150 மைல் தூரத்திலே தொழுதூர் பாலம் என்ற ஒரு பாலம் இருக்கிறது. அதையொட்டி 'எஸ்' வடிவம்போன்ற ஒரு பாதை, 30 அடி தூரத்திற்கு இருக்கிறது. அந்தப் பாதை மிகவும் ஆபத்தாக இருக்கிறது. அப்பாலத்திலே லேலண்டு பஸ்களும், பென்ஸ் லாரிகளும் செல்வதற்குச் சிரமப்படுகின்றன. இதன் காரணமாக பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையிலே ஏற்படக்கூடிய விபத்துக்களிலே 80 சதவீத விபத்துக்கள் அங்குதான் ஏற்படுகின்றன. எனவே அந்த 30 அடி தூரத்திற்கு உள்ள 'எஸ்' வடிவ சாலையை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அதன்மூலம் விபத்துக்களைத் தவிர்க்கமுடியும். எனவே அதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் சலவைத் தொழிலாளர்கள் பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும். அவர்களுக்கு எல்லா சலுகைகளையும் தந்து அவர்களையும் சமூகத்தில் முன்னேற்ற வேண்டுகிறேன். அவர்களுக்கு என்று ஒரு பிரதிநிதி இங்கே இல்லாததால்தான் நான் அவர்கள் சார்பாக இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் 400 பர்மா அகதிகள் கடை வைத்து வியாபாரம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் கலால் இலாகாவினர் தூரத்தக்கூடிய முறையில் அவர்களுடைய சாமான்களை எல்லாம் வாரிக்கொண்டு போய்விட்டனர். இதுபற்றி அவர்கள் முறையிட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு எந்த எந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தச் சலுகைகளையெல்லாம் இவர்களுக்கும் அளிக்கவேண்டும்மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியிலே கூட்டுறவு முறையிலே ஒரு பீடித் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று பீடித் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பங்குத் தொகை அதற்காக வசூல் செய்து அதை அரசாங்கத்திலே கட்டிவிட்டார்கள். கட்டி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன, இன்னும் அதன்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அதையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியில் ஒரு பிராந்திய பொறியியல் கல்லூரி இருக்கிறது. பெயர் பெரியதாகத்தான் இருக்கிறது. ஆனால் அதனுடைய கண்ட்ரோல் மத்திய அரசா அல்லது மாநில அரசா என்பது





தெரியவில்லை. அதற்காக ஒரு கமிட்டியும் ஒரு தலைவரும் இருக்கிறார்கள். அந்தத் தலைவர் ஒரு பொம்மைத் தலைவர், அதிகாரமில்லாத தலைவர். சென்ற ஆண்டு 37 ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள். அமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியின் தலைவரைக் கூப்பிட்டு குழுவைக் கூட்டி குற்றங்குறைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இன்று வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூட்டமும் கூட்டப்படவில்லை. அங்கே தலைவருக்கு அதிகாரமில்லை, சாதாரண உறுப்பினராக இருக்கக்கூடிய முத்தையன் என்கிற முத்தையா முதலியார் அவர்களுக்குத்தான் சகல அதிகாரமும் இருக்கிறது அவர் அந்தக் கூட்டத்தை நடக்கவொட்டாமல் செய்துவிட்டார். போதுமான அளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலேயே கல்லூரி நடக்கிறது. ஆசிரியர்கள் தற்காலிகமாகவும் டெப்யூடேஷனிலும் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய நிர்ணயம் போன்றவற்றில் எந்தவிதமான விதிமுறையும் கடைப்பிடிக்கவில்லை. பல திறமையுள்ள ஆசிரியர்கள் வெளியேறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அங்கேயுள்ள பணம் முழுதும் கட்டடங்கள் கட்டுவதற்காகத்தான் செலவழிக்கப்படுகின்றன. அங்கேயுள்ள லேபரட்டரி சரியான முறையில் கருவிகள் வாங்கப்படாமல் கிடக்கிறது. ஸ்டீம் எஞ்சின் லேபரட்டரி என்பது மிகவும் முக்கியமான பாடம். அதற்கு லேபரட்டரி இல்லையென்பதால் அங்கே படிக்கிற முதற் பிரிவு மாணவர்கள் அதைப் படிக்காமலேயே வெளியேறப் போகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

மாநில தமிழ்மொழிப்பெயர்ப்புக் குழுவிற்கு அங்குள்ள ஒரு ஆசிரியரை நமது அரசு நியமித்தார்கள். அங்கேயுள்ள முதல்வர் என்னைக் கேட்காமல் அந்த ஆசிரியரை அரசு எப்படி நியமிக்க முடியும் என்றும், அதனால் அவர் போகக்கூடாது என்றும் சொல்லித் தடுத்துவிட்டார். இதற்கென ஒரு குழு அமைத்து இவைகளை விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்து அந்தக் கல்லூரியை சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யவேண்டுகிறேன். திருச்சிராப்பள்ளி நகராட்சி, பொன்மலை நகர பஞ்சாயத்து, பொன்மலை காலனி, ஸ்ரீரங்கம் ஆகிய நகராட்சிகளைச் சேர்த்து, கொதிகலன் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை ஆகியவற்றையும் சேர்த்து திருச்சிராப்பள்ளி நகராட்சியை ஒரு மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று சென்ற ஆண்டே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அன்புகூர்ந்து அதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகராட்சித் தலைவர் புதை சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று கேட்பதற்கு முடியாமல் கட்டப்படாத ஒரு மத்திய பஸ் நிலையத்திற்கு தன்னுடைய பெயரை வைக்கவில்லையென்று தமிழக அரசின்மீது போர்க்கொடி உயர்த்திருக்கிறார்.

[திரு. ஆர். நாகசுந்தரம்] [1969 பிப்ரவரி 22

திருச்சியிலே பல கட்டடங்கள் சட்டப்படி அனுமதியில்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 22, 23, 26 ஆகிய வார்டுகளில் எந்தவிதமான கட்டடம் பற்றிய சட்டதிட்டங்களும் அமல் படுத்தப்படவில்லை. நகராட்சித் தலைவர் நகராட்சியால் தனக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட இடத்திலே சட்டதிட்டங் களுக்குப் புறம்பாக அனுமதியில்லாமல் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார். இதுபற்றி பொதுமக்கள் பல தந்திகள் கொடுத்தும், அவர்மேல் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்ட இடத்திலே உள்வாடகைக்கு பதிவுப் பத்திரம் மூலமாக விட்டியிருக்கிறார். இதன் மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திருச்சி, செம்பட்டு காமராஜ் நகரில் ஏழை மக்கள் புறம் போக்கு நிலங்களிலே வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இனாம் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. என்றாலும், இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஏழை மக்கள் அந்த நிலங்களிலே குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செம்பட்டு, காமராஜ் நகரிலே ஏழை மக்கள், ஆதித் திராவிடர் கள், பர்மா தமிழர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி கொடுத்து வீடு கட்டிக்கொள்ள அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

இங்கே நாகர்கோவில் தேர்தல்பற்றி யாருமே பேச மாட்டார் கள் என்று நினைத்தேன். எல்லோரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். எனவே, நானும் நாகர்கோவில் தேர்தலைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் காரர்கள் வெற்றிக் களிப்பிலே மூழ்கித் திளைக்கிறார்கள் என்றால் ஆச்சரியமில்லை. பத்து ஆண்டுக் காலமாகக் கருவுற்றுக் கருவுற்று, அந்தக் கரு சிதைந்து போய்விட்ட பிறகு 10 ஆண்டு களுக்குப் பிறகு ஒரு அழகான ஆண் குழந்தை பெற்றெடுத்த ஒரு தாய் எவ்வளவு மகிழ்ச்சியுறுவாளோ அதைப்போலவே பல தோல்விகளை அவர்கள் சந்தித்து, சந்தித்து இப்பொழுது கடைசி யாக ஒரு இமாலய வெற்றியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எனவே அவர்கள் வெற்றிக் களிப்பிலே மூழ்கியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்கள் நாகர்கோவில் தேர்தலில் தோற்றிருந்தால் தமிழ்நாடு காங்கிரசின் சகாப்தமும், காமராஜ் சரித்திரமும் முடிந்து இருக்குமல்லவா? அப்படி நேராமல் இருந்ததே என்றுதான் களிப்பிலே இருக்கிறார்கள்.

அங்கே பேசிய பேச்சைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அங்கே அவர்கள் பேசிய பேச்சை நானும் கேட்டேன். பேச்சாளர் ஒருவர் பேசினார், எனது தலைவன் வெற்றிபெறாவிட்டால் இங்கு



1969 பிப்ரவரி 22] [திரு. ஆர். நாகசுந்தரம்]

ஆயிரம் தலைகள் கடலில் உருளும் என்று பேசினார். இப்படிப்பட்ட பதட்டமான பேச்சை அந்தத் தலைவரும் அருகிருந்து கேட்டுக் கொண்டு தான் இருந்தார். இதனை நானே கேட்டேன். ஜன நாயகம் இந்த நாட்டில் எவ்வளவு பேச்சுரிமை தந்துள்ளது.

"தன் குஞ்சைப் பருந்திடமிருந்து பாதுகாக்கும் பெட்டைக் கோழிபோல் இத்தொகுதியைக் காங்கிரசின் கைவிட்டுப் போக விடக்கூடாது என்று தீவிரமாகவும் மூர்க்கத்தனமாகவும் பல ஆதரவாளர் இருந்தனர். இதனால் மத்தியாசோ திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரச்சாரப் படையோ சில குறிப்பிட்ட பேட்டைகளில் நுழைவதற்குக்கூட அனுமதிக்கப் படவில்லை. வசைமாரியும், கல்லெறியும் அவர்களை விரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன." என்று சுதேசமித்திரன் அரசியல் நிருபர் 11—1—1969 இதழிலே, நாகர்கோவிலிலே அவர்கள் செய்த வன்முறைகள் பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்.

அத்தகைய ஒரு வன்முறைத் தேர்தலை நடத்திவிட்டு இங்கே நண் பகல்
வந்து நம்மைப் பார்த்துக் கொக்கரிக்கிறார்கள். உள்ளபடியே 12-00
நம்முடைய அரசு தலையிட்டு இருந்தால் டாக்டர் மத்தியாஸ் தோற்றிருக்கமாட்டார் என்று கூறி என்னுடைய பேச்சை இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : இந்த அரசு தலையிட்டிருந்தால் மத்தியாஸ் ஜெயித்திருப்பார்கள் என்ற முறையிலே கூறினார்கள். நாகர்கோயில் தேர்தலின்போது இப்போது முதலமைச்சராக இருப்பவர்கள் 10 நாட்கள் அங்கேயே தங்கி தேர்தல் வேலைகளைக் கவனித்து வந்தார்கள். இதுதான் அரசு தலையிடவில்லை என்பதற்கு உதாரணமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அமைச்சர்கள் தேர்தல் பிரசாரத்தில் பங்கு கொள்ளுவது என்பதற்கும், அரசு தலையீடு என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அப்படியானால் நம்மு டைய பெருமதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வட மாநிலங்களில் நடந்த தேர்தலில் கலந்துகொண்டது தலையீடு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொருள் கொள்கிறார்களா? அரசு தலையீடு என்பதற்கும், அவர்கள் சார்ந்திருக்கிற கட்சிக்கு ஆதரவு தேடுவது என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திருமதி இந்திரா காந்தி அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப்போல் வன்முறை நடந்தது என்று சொல்லவில்லை, ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** நாகர்கோயிலில் கலைஞர் அவர்கள் ஒரு அமைச்சராக இருக்கின்ற நிலையில் அவர் கொடியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதே சமயத்தில் பத்தடி தூரத்தில் ஒருவர்

காங்கிரஸ் கொடியை ஏற்றிக்கொண்டிருந்தார். இவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் செய்து கொண்டிருந்தார். இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி திரு. கக்கன் அவர்களோ, காமராஜ் அவர்களோ, பக்தவத்சலம் அவர்களோ அமைச்சர்களாக இருந்த சமயத்தில் நடந்திருந்தால், சும்மா இருந்திருப்பார்களா? போலீசார்தான் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தால் அந்தப் போலீசாருக்கு பிறகு என்ன கதி ஏற்பட்டிருக்கும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதையெல்லாம்பற்றி நான் பேசும்போது கூறுகிறேன்.

* **திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இன்று, கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையின்மீது விவாதத்தைத் தொடங்கலாமா அல்லது கவர்னர் பெருமான் புதிய உரை ஒன்றை நிகழ்த்திய பிறகுதான் விவாதத்தை தொடங்கவேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தது. கவர்னர் பெருமானர் அவர்களுடைய உரையானது பொதுவாக அப்போது இருக்கக்கூடிய அரசாங்கத்தினுடைய கொள்கைகளை, கொள்கை விளக்கங்களைக் கொண்டதாக இருப்பினும் கூட, அந்த உரை கவர்னர் அவர்கள் நிகழ்த்தக்கூடிய ஒரு உரையாகும். அதிலே அரசாங்கத்தினுடைய கொள்கைகளை, கொள்கை விளக்கங்களை கூறுவதோடு கூட, கவர்னர் பெருமான் அவ்வப்போது தமது கருத்துக்களையும் அரசாங்கத்துக்கோ அல்லது அவைக்கோ வழங்கலாம் என்று இருக்கிறது. எனவே, இப்போதுள்ள அரசாங்கம் கவர்னர் பெருமான் அவர்கள் வேறு ஒரு உரையை நிகழ்த்த வேண்டுமென்று முடிவு செய்து முன்வந்தால் பிரச்சினை எழுமே தவிர, அதற்கு முன்பாக கவர்னர் பெருமான் உரையைத் தொடங்க வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, நம்முடைய தமிழகத்தைப் பொருத்தவரையில் முக்கியமாக இருக்கக்கூடிய சோதனைகள், பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசுக்கு முக்கியமாக இந்த ஆண்டு ஒரு சோதனையான காலமாகும். சென்ற ஆண்டு தொடக்கத்திலிருந்தே பருவமழை சரியாகப் பெய்யாமல் இருந்த காரணத்தால் சரியான விளைச்சல் ஏற்படக்கூடிய நிலை இல்லை. இந்த ஆண்டு நாம் யாரும் எதிர்பாராத நிலையிலே நம்மை எல்லாம் வழி நடத்திச் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் நம்மிடமிருந்து மறைந்து விட்டார்கள். அவர்களுடைய தலைமை இப்போது, நமக்கு, தமிழகத்திற்கு இல்லாமல் இருப்பது மிகவும் பெரிய ஒரு சோதனையான காலமாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு முன்னால் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை நம்முடைய தமிழகத்தை எதிர்நோக்கியிருக்கக்கூடிய உணவுப் பஞ்சத்தைப் பற்றியதாகும். இதுவரை எதிர்பாராத அளவுக்கு ஒரு பஞ்சம்



ஏற்படுமோ என்ற ஒரு அச்சம் என் மனதில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பருவமழை தவறியுள்ள இந்த நேரத்தில் விளைச்சல் போதுமான அளவுக்கு இல்லையென்பதோடுகூட, குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். வரக்கூடிய காலத்தில் இயற்கையின் சோதனை எவ்வளவு தூரத்திற்குக் கொண்டு போய் விடும் என்ற அச்சம் இருந்து கொண்டிருக்கிறது. உணவுப் பற்றுக் குறையைப் போக்க கொள்முதல் செய்வதற்கு தமிழகத்தில் எந்தவிதமான நிலையும் இல்லை, இடமும் இல்லை. எனவே, பஞ்சம் ஏற்படுமோ என்ற நிலையைச் சமாளிப்பதற்கு தமிழகத்திலே கொள்முதல் செய்து மட்டும் போக்கிவிட முடியும் என்ற நிலை இல்லை. அத்தகைய ஒரு பஞ்சம் தமிழகத்தில் ஏற்படக்கூடாது. ஒருவேளை துரதிருஷ்டவசமாக அப்படிப்பட்ட ஒரு பஞ்சம் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டால் அந்த நிலைமையைச் சமாளிக்க நான் வெறும் கொள்முதல் செய்தால் மட்டும்போதாது, உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் மத்திய அரசின் வாயிலாக தமிழக அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். பர்மாவிலிருந்தோ, மற்ற நாடுகளிலிருந்தோ உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இப்போதே முயற்சியை எடுத்துக் கொள்வது நலமாக இருக்கும். இது பற்றி அரசாங்கம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர்கள் பேசும்போது நாகர்கோயில் தேர்தல் பற்றியும், கீழ்வெண்மணி சம்பவம்பற்றியும் குறிப்பிட்டார்கள். இதிலிருந்து என்ன முக்கியமான பிரச்சினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அது சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் நமக்கு ஏற்பட்டிருக்கும் புதிய சோதனைதான். சட்டமும் ஒழுங்கும் தமிழகத்தில் குலைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை. அதனை எந்த விதத்திலே அணுகினால் தமிழகத்தில் புதிய பிரச்சினைகள் தோன்றாது இருக்க முடியும் என்பதைப்பற்றித் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். கீழ்வெண்மணியை எடுத்துக்கொண்டால் அதிலே நமக்கு முக்கியமாக ஏற்பட்டிருக்கக்கூடிய சோதனை என்ன? இதற்கு முன்பு ஜனங்கள் சட்டம், ஒழுங்கு இவைகளைக் காப்பதிலே தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையை தாங்களே தடியெடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனால் கீழ்வெண்மணி சம்பவம் எதைக் காட்டுகிறது என்றால், தங்களுக்கு ஏதாவது உரிமை வேண்டுமென்று ஜனங்கள் நினைத்தால், அந்த உரிமை அவர்களுக்கும் கிடைக்கவில்லை என்ற நிலையில் அதைப்பெற தடியெடுத்தால்தான் முடியும் என்ற நிலைதான் அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய நிகழ்ச்சியில் இருந்து தெரிகிறது. உரிமையைப் பெறுவதற்கு எந்தச் சாரார் தடியெடுத்தார்கள் என்பது பிரச்சினை அல்ல. நிலப் பிரபுக்கள் எடுத்தார்களா, ஏழையானவர்கள் எடுத்தார்களா

[திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி] [1969 பிப்ரவரி 22

இருசாராரும் எடுத்தார்களா என்பதல்ல பிரச்சினை. ஆனால் இத்தகைய ஒரு புதிய முறை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தமிழகத்திலிருந்து நிச்சயமாக வேரறுத்தாகவேண்டும். இந்த ஒரு நிலையை வளரவிட்டால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் மோசமான நிலை ஏற்பட்டுவிடும். நாம் இந்த விஷயத்தில் சற்றுக் கண்டிப்பாக இருந்தாகவேண்டும். 'தண்டிப்பு அதிகமாக இருந்திருந்தால் இத்தகைய நிலை தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்காது' என்று சிலர் சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறேன். மாணவர்கள் பஸ் தொழிலாளர்கள் மோதலை அடுத்து கீழ்வெண்மணிச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதெல்லாம் எதைக்காட்டுகிறது என்றால் மக்கள் தங்களுடைய உணர்ச்சிகளை வெளியிடச் சில சமயங்களில் இப்படி நடந்து கொண்டார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. தங்களுடைய உரிமையாக எதைக் கருதுகிறார்களோ அதை நிறைவேற்றிக் கொள்ள இத்தகைய வழிகளைக் கடைப்பிடிக்கின்ற நிலை வளர்ந்து வருகிறது. இதைப்பற்றி ஆராய ஒரு கமிஷன் ஏற்படுத்துவது நன்மை பயக்கும். பஸ் தொழிலாளர்கள்—மாணவர்கள், விவசாயிகள்—மிராசுதார்கள், தொழிலாளர்கள்—முதலாளிகள் என்ற நிலைமையில் இத்தகைய பிரச்சினைகள் எழாமல் இருப்பதற்கு அரசாங்கம் தீவிரமாகக் கவனித்துச் செயலாற்றுவது அவசரமானது என்று கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழ்நாட்டில் சில இடங்களை பஞ்சப் பிரதேசங்களாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட கோரிக்கை இப்போது விடப்பட்டிருக்கிறது. அதை ஒரு பஞ்சப் பிரதேசமாகப்பாவித்து அதற்கான நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒரு விஷயத்தைமட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிவாரண வேலைக்காக எவ்வளவு தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தத் தொகைகளைக்கொண்டு ரோடு வேலைகள் போன்ற வேலைகளைச் செய்வதற்காக இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் புதிதாகப் பல கண்மாய்களை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து வருகின்றது. புதுக் கண்மாய்கள் அமைப்பதற்கான எஸ்டிமேட்ஸ் எல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப் புதிய கண்மாய்கள் அமைப்பதற்கான எஸ்டிமேட்ஸ் எங்கெங்கெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கின்றனவோ, அப்படிப்பட்ட வேலைகளைப் பஞ்ச நிவாரண வேலைகளாக எடுத்துச் செய்தால், அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய கண்மாய்களும் கிடைக்கும், அதோடு பஞ்சத்தில் அகப்பட்டிருக்கும் மக்களுக்கு வேலையும் கிடைக்கும். அப்படிப் பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கப்படும் தொகை செலவிடப்பட்டால் பின்னால் தண்ணீர் வளம் ஏற்படவும், புதிய கண்மாய்கள் ஏற்படவும் வழி ஏற்படும்.



1969 பிப்ரவரி 22] [திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி]

அடுத்தபடியாக, இந்தப் பஞ்சக் காலத்தில்கூட வரி வசூல்கள் கெடுபிடியாக வசூலிக்கப்படுகிறது என்பதைப்பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரம் பகுதியைப் பொறுத்தவரையில் அத்தகைய நிலைமை இருக்கிறது என்பதை நானும் இங்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏன் இப்படி கெடுபிடியாக வரி வசூலிக்கிறீர்கள் என்று அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கும் நிலை இருக்கும் போது, அதில் 'கோ ஸ்லோ' பாலிஸி கையாளப்படுமா என்று அறிய வேண்டிய அவசியம் இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் இந்த நேரத்தில் வசூலிக்க வேண்டியது, மற்றவற்றைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறதோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இப் பஞ்ச நிலையில் இந்த வரியைக் கொடுங்கள் என்று கேட்கும்போது அவர்கள் மனதில் என்ன எண்ணம் ஏற்படும் என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே இப்படிக் கெடுபிடியாக வசூலிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும். மக்களுக்கு உண்மையான நிவாரணத்தை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

கடைசியாக, பம்ப் செட்கள் வைப்பதற்காக நில அடைமான வங்கிகள்மூலம் நடவடிக்கைகள் எடுத்திருப்பதால் நல்லதொரு முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு புதிய சிக்கலை இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். அமைச்சர்கள் மாறிவிட்டாலும், இப்போதுள்ள கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இது விஷயத்தைச் சற்று கவனித்து ஒரு முடிவு காண்பார்கள் என்று நினைக்கிறேன். முன்பிருந்த ஒரு முறையை மாற்றி, நில அடைமான வங்கிகள்மூலம் பம்ப் செட் வாங்குவதற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும் கடன்கள் கொடுத்து வருகிறார்கள். இதில் ஏற்பட்டுள்ள சிக்கல் என்னவென்றால், பம்ப் செட்ஸ் விஷயத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விவசாயி பம்ப் செட் வாங்கவேண்டுமென்று நில அடைமான வங்கிக்கு மனுக் கொடுக்கும்போது ஒரு கம்பெனியின் கொட்டேஷனை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பணம் வந்து சேரும் நேரத்தில் பம்ப் செட்டுக்கான எல்லாச் சாமான்களையும் பெற்றுக் கொண்டேன் என்று கையெழுத்துப் போட்டுக்கொடுத்து விடுகிறார்கள். பிறகு கடைசியாக ஒரு புதுக் கம்பெனிக்காரர் வந்து இந்த பம்ப் செட் வேண்டாம். எங்கள் பம்ப் செட் நல்லது என்று சொல்கிறார்கள். அப்பொழுது எந்த பம்ப் செட் நல்லது, எது நல்லதல்ல என்று முடிவு செய்ய வேண்டிய நேரத்தில் இந்த பம்ப் செட்ஸ் உரிமையாளர்கள் தூண்டுதலினால் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலைக்கு விவசாயி ஆளாகிறான். உரிமையாளர்கள் போட்டியில், நில அடைமான வங்கிச் சிப்பந்திகளும் சில உரிமையாளர்கள் சார்பில் சேர்ந்து விவசாயிகளைக் கட்டாயப்படுத்துகிறார்கள். அதனால் விவசாயிகளின் நிலை கஷ்டமாகிறது. இதற்காக அமைச்சர் அவர்கள் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. கோவிந்தராசுலு : மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசாங்கம் உத்தேசித்துள்ளபடி கோவை நகரக் கோடைகால குடி தண்ணீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதுடன், கோவையை அடுத்துள்ள சிங்காநல்லூர் நகரம் ஏற்படுத்தப்பட்டு சுமார் நான்கு ஆண்டுகளாகியும் அங்கு குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை, அதையும் உடனடியாக நிறைவேற்றுவதுடன் அந்த நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தற்காலிகமாகத் தீர்க்க ஏதாவது ஒரு ஏற்பாட்டை இந்த மாதமே அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இந்த இரண்டு நகரங்களுக்கும் குடிநீர்ப் பிரச்சினையில் நிரந்தரமாகத் தீர்வு காண பூந்துறைப் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். அந்தப் பகுதியில் மின்சார உற்பத்தியை வேண்டுமானால் சிறிது குறைத்துக் கொள்ளலாம். மேட்டுப்பாளையம் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதென்றால் வருடம் ஒன்றுக்கு 40 லட்சம் ரூபாய் வீண் செலவாகும் என்பதுடன், மேட்டுப்பாளையம் ஆற்றில் 6 அங்குலம் குழாயில் வரும் தண்ணீர் அளவுகூட ஆற்றில் தண்ணீர் வருவதில்லை. கோவை பகுதியில் நிலவி வரும் குடிதண்ணீர்ப் பஞ்சத்திற்கு நிரந்தரத் தீர்வு காண பூந்துறையிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லை. இதற்கு ரூபாய் 50 லட்சம்தான் செலவாகும். உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நிரந்தரமாகக் கோவை ஜில்லாவில் முக்கியமான குடிதண்ணீர்க் கஷ்டமுள்ள காரமடை, அவினாசி, பெரியநாயக்கன்பாளையம், துடியலூர், கோவை நகரம், பீளமேடு, சிங்காநல்லூர் பகுதிகளுக்கு நிரந்தரமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கலாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கோவை நகர மக்களின் சார்பில் மின் இலாகா அமைச்சரையும், பொதுப் பணித் துறை அமைச்சரையும் மனமுவந்து பெரிய மனது வைத்து அனுமதி வழங்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் கோவை, மதுரை, சேலம், சிங்காநல்லூர், திருச்சி, தஞ்சை போன்ற நகரசபைகளும், இதர நகரசபைகளும் நகர அமைப்புத் திட்டங்களைத் தயாரித்து அரசாங்கத்துக்கு அனுப்பி 25 ஆண்டுகளாகியும், 1967 வரை ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் எந்த நகர அமைப்புத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. நகரப்புறங்களில் நிலம் வைத்திருக்கும் வசதி படைத்தவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களாக இருந்தபடியால் அவர்களுடைய நிலங்களுக்கு நல்ல விலை கிடைக்கும்வரை, விலை ஏறும்வரை அந்த நிலங்களை வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்தால் காங்கிரஸ் அரசாங்கம் திட்டத்தை நிறைவேற்றாமல் வைத்தது. அதன் பயனாக நகரங்களில் பெருமளவு வீடு நெருக்கடி ஏற்பட்டு கோவை போன்ற பகுதிகளில் வீடு கட்டும் நிலம் ஏக்கருக்கு 2 லட்சம் ரூபாய் வரையில் விலை போகிறது. சிறிதளவு வசதி படைத்தவர்கள் அதிக விலை கொடுத்து நிலம் வாங்க முடியாமல் 10 அடி வீட்டிலும்







8 அடி வீட்டிலும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வீட்டு வசதி போர்டுமட்டும் வீடு நெருக்கடியைத் நீக்க முடியாது. தனிப்பட்டவர்கள் தனிப்பட்டவர்களின் முயற்சியும் தேவை. தனிப்பட்டவர்கள் தங்களுடைய மனைக் கட்டுகளை லே-அவுட் செய்து விற்கவும், சிறிது வசதி படைத்தோர் வங்கிக் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளவும் அரசாங்கம், நகரசபைகள் தயாரித்துள்ள திட்டங்களுக்கு ஒவ்வொரு நகருக்கும் வருடம் இரண்டு திட்டங்களுக்கா அனுமதி அளித்து, திட்டங்களில் போடப்படும் பொது ரோடுகளுக்கும் பொதுக்காரியங்களுக்கும் உபயோகப்படுத்தப்படும் நிலங்களுக்கும் நிரந்தர வசதி செய்துகொடுத்தால் நகரங்களில் வீட்டு நெருக்கடி குறையும். இதற்கு எல்லா நகரங்களுக்கும் வருடம் ஒன்றுக்கு சுமார் 50 லட்சம் ரூபாய் இருந்தால் போதும். அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டும் நகர அமைப்புத் திட்டங்களை அனுமதிக்காமலேயே வைத்திருக்கிற காரணத்தால் சிறிய நிலம் உள்ளவர்கள் கால், அரை ஏக்கர் தங்களுடைய நிலங்கள் திட்டத்துடன் அடங்கி உள்ளபடியால் விற்க முடியாமல், குடும்பத் தேவைகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டு பல தீர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

அடுத்து, கடந்த கால காங்கிரஸ் ஆட்சி, ஆயிரத்திற்கு ஒரு வார்டாகவும் வார்டாகவும், பத்தாயிரம் ஓட்டுகளுக்கு ஒரு இருந்த நகரங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு ஒவ்வொரு வார்டையும் சம அளவு எண்ணிக்கையில் பிரிக்கும்படி உத்திரவிட்டுப் பிரித்து அதை அமல் நடத்துவதைப் பாராட்டுகிறேன்.

THIRU J. JAMES : On a point of Order, Sir, I would like to know whether the hon. Member is in order in reading from manuscripts.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்புக்களைமட்டும் வைத்துக்கொண்டு பேசுகிறார்களேயொழிய, எழுதிப் படிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர் புதிதாக முதலாகப் பேசுகின்ற காரணத்தால் இந்த முறை படிக்கிறார் பொதுவாக யாரும் எழுதி வைத்துக்கொண்டு படிக்கக்கூடாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பு. செ. முத்துச்செல்வன்) : உறுப்பினரவர்கள் எழுதிவைத்திருப்பதைப் படிக்காமல் பேசுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. கோவிந்தராசுலு: கடந்த கால காங்கிரஸ் ஆட்சியில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் பத்தாயிரம் வாக்குகளை ஒரு வார்டாகவும் ஒரு வார்டாகவும் ஆயிரம் வாக்குகளை ஒரு வார்டாகவும் செய்து அவர் பிரித்து, அவர்கள் வசதிக்கேற்ற ஒரு வார்டாகவும் செய்து அவர்கள் வெற்றி பெற்று வந்தார்கள். இன்று நமது அமைச்சரவை எல்லா பிரதேசமும் உரிமையில் வாக்குகளைப் பிரித்து, அந்த அடிப்படையிலே நிறைவேற்றி வார்டுகளைப் பிரித்திருக்கிறார்கள்.

அப்படிப் பிரித்த காரணத்தால் அவர்கள் சமூகம் வெற்றி பெறுது என்ற நோக்கத்துடன், பரம்பரையாக அவர்கள் ஜெயித்து வந்த வார்டுகள் கைவிட்டுப் போய்விடுமே என்று எண்ணி, மதிப்பிற்குரிய காங்கிரஸ் தலைவர்கள் எட்டு நகரசபைகளைத் தூண்டிவிட்டு, அந்த எட்டு நகரசபைகளும் வழக்குப்போட வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையாகக் கைப்பற்றி விடுவோம் என்ற தைரியமிருந்தால் நிச்சயமாக அந்த வழக்குகளை வாபஸ் பெற்று ஏப்ரல் மாதத்திலே நடக்கும் தேர்தலிலே ஈடுபடட்டும். அவ்வாறு ஈடுபட்டால் நிச்சயம் காங்கிரஸ் தோல்வியடையும் என்று எண்ணி அவர்கள் வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

அதுபோக, சென்னையில் உள்ள நாடக, சினிமா கலைஞர்கள் சென்னையிலேயே குடியிருக்க வேண்டிய தலைவிதி ஏற்பட்டு விட்டதால், அவர்களை அழைத்துக்கொண்டுபோய் மற்ற நகரங்களில் நாடகக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்றால், சினிமாக் கொட்டகைகளிலேதான் நடத்த வேண்டியிருக்கிறது. அப்படி நடத்துவதால் ஏறக்குறைய நாம் திட்டமிட்ட செலவுக்கு மேல் அதிகச் செலவுகள் ஆவதால், நமது முதலமைச்சரவர்கள் தயவுகூர்ந்து வருகிற பரிசுப் பணத்திலே அரசாங்கம் வருஷம் ஒன்றுக்கு 20 நகரசபைகளிலாவது அவர்கள் நாடக அரங்கு கட்ட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன். அதுபோக, 'டூரிஸ்ட் பஸ்'கள் என்று வைத்துக்கொண்டு சென்னை, கோவை, சேலம், திருச்சி போன்ற நகரங்களுக்கு இரவிலே புறப்படுகின்றன. அவற்றை அரசாங்கம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினை இந்த ஆண்டில் கோவையில் பெரிய கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சென்ற ஜனவரி மாதத்திலிருந்து சிறுவாணியிலிருந்து கிடைக்கும் நீர் தடைப்பட்டிருக்கிறது. சிறுவாணி நீர் கிடைக்காத காரணத்தால் குந்தாப் பகுதியிலிருந்து கிடைக்க இந்த அரசாங்கம் இந்த மாதமே ஏற்பாடுசெய்துதந்து, கோவை மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மீண்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு வணக்கம் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

*திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மாற்றுத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைபற்றிச் சில வார்த்தைகள் பேச நான் விரும்புகிறேன். ஏற்கெனவே ஜனவரி 29-ஆம் தேதி நடைபெற்றுவந்த கவர்னர் உரையின்மீதான விவாதம் ஒரு பெரிய தமிழ்நாட்டிற்குத் தவிர்க்க முடியாத ஒரு மாபெரும் துக்கத்தினால், அப்பொழுது நம்முடைய அன்புக்குப் பாத்திரமாயிருந்த முதன் மந்திரி ஸ்ரீ சி. என். அண்ணாதுரை அவர்களுடைய மறைவினால் நின்று இப்பொழுது மீண்டும் தொடங்குகிறது. தமிழ்நாட்டிற்கு





அவருடைய மறைவு மிகவும் பெரிய நஷ்டம் சகிக்க முடியாத நஷ்டம். அவர்களைப் பின்பற்றிப் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலட்சியத்தைக்கொண்டு நமது மாண்புமிகு ஸ்ரீ கருணாநிதி அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட இந்த மந்திரிசபை தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்து வருமென்று நான் நம்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய 81-வது பிறந்த நாளன்று வாழ்த்துக்களை அன்புடன் அளித்த சபாநாயகரவர்களுக்கும், மாண்புமிகு ஸ்ரீ கருணாநிதி அவர்களுக்கும், எனது கட்சித் தலைவர் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்கும், திரு. மூக்கையா தேவர் அவர்களுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனங் கனிந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மகாத்மாவின் நூற்றாண்டு விழாவிலே, ஜனநாயகம் நல்ல முறையிலே பாதுகாக்கப்பட எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும்சரி, அவர்கள் ஜனநாயகத்தைக் காக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அதைத்தான் நாடு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. நாகர்கோயில் தேர்தலைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஜனநாயகம் இந்த நாட்டில் நல்லமுறையிலே பாதுகாக்கப்பட வேண்டுமானால் ஒரு தேர்தல் அல்ல, மறுதேர்தல் அல்ல, எத்தனையோ தேர்தல்கள் தொடர்ந்து தொடர்ந்து இந்த நாட்டிலே வரப்போகிறது. அந்தத் தேர்தலில் யார் ஜனநாயகப் பண்புக்கு விரோதமாக நடந்தாலும் அதை மக்கள் கண்டிக்கத்தான் செய்வார்கள். ஆகையால் ஜனநாயகப் பண்பாட்டைப் பாதுகாக்க எல்லா அரசியல் கட்சியாளர்களும் நிச்சயமாக உறுதிகொண்டு அவர்கள் ஜனநாயகத்தைக் காக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நமது மந்திரிசபை ஏற்பட்டதற்குப் பிறகு, நெய்வேலியிலே ஒரு அநியாயமான சம்பவம் நடந்திருக்கிறது. மக்களால் போற்றப்படுகிற ஸ்ரீ கிருபானந்தவாரியார் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்து தமிழர்கள், அதிலும் சிறந்த பண்புடையாளர்கள், பக்தி மனம் படைத்தவர்கள், ஆறாத்துயரம் கொள்கிறார்கள். நீதி, சட்டம், சமாதானம் பாதுகாக்கப்படவேண்டும். நிச்சயமாக இம்மாதிரி விஷயம்போன்று ஏற்படாமல் இருக்க ஸ்ரீ கிருபானந்தவாரியார் அவர்கள் தாக்கப்பட்டதைப்பற்றி நமது மந்திரிசபை தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறேன். ஃபார்வார்டு பிளாக்கைச் சேர்ந்த ஸ்ரீ மூக்கையாத் தேவர் அவர்களுக்கும் தந்தி வந்திருக்கிறது, டெலிஃபோன் வந்திருக்கிறது. அவர்களும் இதைப்பற்றி இந்த அவையிலே தீர்மானம் கொண்டுவரப்போவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகையால் இதை உங்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஸ்ரீ கிருபானந்தவாரியாரைப்போன்ற

[திரு. க. கோமதிசங்கர திட்சிதர்] [1969 பிப்ரவரி 22

பெரியோர்கள் நியாயமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அவருக்குப் போலீஸ் பாதுகாப்புக்கூட இல்லாமல் நெய்வேலியை விட்டேடும்படியான நிலை ஆகிவிட்டது என்றால் அது மிகவும் வருத்தத்துக்குரியது. இந்த நாட்டிலே யாராக இருந்தாலும் அவர்களுக்கும் போலீஸ் தக்கபடி பாதுகாப்பு கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மந்திரிசபை தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நான் கருதுகிறேன்.

பி. ப. 12 30 அதற்கு அடுத்தபடியாக விவசாயிகளுடைய நிலை, தொழிலாளர்களுடைய நிலை. விவசாயிகள் கிணறுகளை வெட்டிக் கொள்ளுவதற்கு மானியம் கொடுக்கப்பட்டபோதிலும், மார்க்கெட்டிங் பாங்குகள் மூலம் கடன் போன்ற உதவி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதிலும், அவர்களுடைய ஏழ்மை நிலை காரணமாக, அவர்களால் கிணறு வெட்டும் வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதன் காரணமாக, கிணறுகளும் தோண்டப்படுவதில்லை. நாம் விவசாயிகளை முன்னேற்றச் செய்யவேண்டுமானால், கிணறு வெட்டும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு அளிப்பதோடு, இந்த அரசாங்கமே கிணற்றையும் தோண்டிக் கொடுக்க வேண்டும், கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரித் தொழிலாளர்கள் எத்தனை மில்கள் மூடப்பட்டுள்ளன? அந்த மில்களில் வேலை செய்தவர்களுடைய கதி என்ன? அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள். என்னுடைய தொகுதியில் பல பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் சம்பளம் பெறாமல் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கம் இது விஷயமாக, முக்கிய கவனம் எடுத்துக்கொண்டு, ஆசிரியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். 1961-வது வருடத்தில் பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட 'மேச்சிங் கிராண்ட்' தான் இப்பொழுதும் பயன்படுத்தப்படுகிறது. அந்தத் தொகை மேற்கொண்டு கிடைக்காமல் அப்படியே இருக்கிறது. ஆனால், அதிகமான உபாத்தியாயர்களை வேலைக்கமர்த்தியிருக்கிறார்கள். இன்னும் பெருகி வருகின்ற நிலை இருக்கிறது. 1961-வது வருடத்திய கிராண்டை மாத்திரம் வைத்துக்கொண்டு நாம் சம்பளம் பட்டுவாடா செய்தால், அவர்கள் பெறவேண்டிய தொகை குறைந்துவிடும். ஆகையினால் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இனாம் ஒழிப்பு. என்னுடைய தொகுதியிலே உள்ள கோடாங்குளம் முதலிய பல கிராமங்களிலே இனாம் ஒழிப்புப்பற்றி பிரசாரம், விளம்பரம் செய்யப்



1969 பிப்ரவரி 22] [திரு. க. கோமதிசங்கர திட்சிதர்]

பட்ட போதிலும் அங்குள்ள விவசாயிகள் இனும் ஒழிப்புச் சட்டத்தினுடைய பயனை இன்னும் பெறுமல் இருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் கேஸ்கள் போட்டு, அந்த ஏழை விவசாயிகள், இந்த இனும் ஒழிப்புச் சட்டத்தினுடைய பயனைப்பெற முடியாத படி செய்கிறார்கள். அவர்கள் மேல் உள்ள கேஸ்கள் தீர்க்கப்பட்டு, அவர்கள் இந்த இனும் ஒழிப்புச் சட்டத்தினுடைய நன்மையைப் பெற ஆவன செய்ய வேண்டுமென்று இந்த மந்திரி சபையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி மண்ணெண்ணெய் தட்டுப்பாடு. ஏழைகளுக்கு மண்ணெண்ணெய் மிகவும் அவசியம். தமிழ்நாட்டிலே மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏராளமாக இருக்கிறது என்பதை அறிந்து, ஏழை மக்களுக்கு மண்ணெண்ணெய் ஏராளமாக சப்ளை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த மந்திரி சபையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புரஹிபிஷன். மதுவிலக்கை இந்தத் தம்மூக அரசாங்கம் நன்முக அமல் செய்ய முன்வந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். காலஞ்சென்ற மாண்புமிகு ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் இந்தத் தமிழ்நாட்டிலே மது விலக்கு வெற்றிகரமாக அமல் படுத்தப்பட வேண்டுமென்று ஆர்வத்தோடு பாடுபட்டார்கள். காந்திஜியினுடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள். அதை ஒரு காலத்திலும் மறுக்க முடியாது. ஆகையினால் மது விலக்கு இந்த தமிழ்நாட்டிலே பூரணமாக வெற்றிபெற்று, அதன்மூலமாக மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னேடியாக இருக்கச் செய்ய வேண்டும். காங்கிரஸ் மாநிலமாக இருக்கட்டும் காங்கிரஸ் அல்லாத மாநிலமாக இருக்கட்டும், இதைத் தீவிரமாக அமல் படுத்த வேண்டும். காந்திஜியினுடைய நிர்மாணத் திட்டங்களிலே முக்கியமான திட்டமாகும் இந்த மது விலக்கு. தமிழ்நாட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் சிரத்தையோடு அதை வெற்றிகரமாக நடத்தி வருகிறது என்ற நல்ல பெயரை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் திருநெல்வேலி வடக்கு டெவலப் மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் எனது அன்பர், தி.மு.க. எம்.எல்.ஏ. மதுவிலக்கு விஷயத்தைப் போலீஸ் உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேசி இருப்பதைப் பத்திரிகையில் நாம் பார்க்கலாம். ஆகையினால் மதுவிலக்கு வெற்றி பெறுவதற்குப் போலீஸ் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்கள் முன்னேற்றம் அடைவதற்காக, போதிய பணத்தை வரும் பட்ஜெட்டிலே ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கழிந்த 1½ ஆண்டு காலமாகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு, கிராம முன்னேற்றத் திட்டங்களுக்குப் போதிய நிதி அளிக்கப்படவில்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு அரசாங்கம் நல்ல முறையில் மக்களுடைய அரசாங்கமாக,

மக்களுடைய நலனைப் பாதுகாக்கும் அரசாங்கமாக விளங்க வேண்டுமானால், முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிகமான பணத்தை ஒதுக்கி வைத்து, அந்தத் திட்டங்கள் கிராமங்களிலே வெற்றி பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே விக்கிரமசிங்கபுரம் குடி தண்ணீர் திட்டம், இராமாநதித் திட்டம், கடனாநதி திட்டம் முதலிய திட்டங்கள் விரைவிலே நிறைவேற்றப்பட்டு, அதன் மூலமாக அங்குள்ள மக்கள் நல்ல பலனை அடைவதற்கு இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நான் முடித்து விடுகிறேன். வந்தனம்.

* **திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின்மீது என்னுடைய ஒருசில கருத்துக்களை சொல்ல முன்வந்திருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் ஆஸ்பத்திரியிலே இருந்தபொழுது கவர்னர் அவர்கள் இங்கே உரை நிகழ்த்தினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் குணம் அடைய வேண்டுமென்ற ஆரம்பத்துடன் அந்த உரையை நிகழ்த்தினார்கள். இன்றைய தினம் ஆஸ்பத்திரியிலே இருந்த அண்ணாவை கல்லறையிலே வைத்துவிட்டு இந்த உரையின்மீது தொடர்ந்து விவாதம் செய்கிறோம். அந்தப் பரிதாபகரமான நிலைமை, இந்த நாட்டு மக்களுக்கும், நமக்கும் ஏற்பட்டதை எண்ணி, வருந்தி, அனுதாபித்து ஆளுநர் உரையின்மீது பேசுகின்றேன்.

ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியில் ஏற்பட்ட மாறுதல்களை எல்லாம் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, விவசாய பிரச்சினையில் இந்த ஆண்டு சற்றேறக்குறைய 63 இலட்சம் டன் அளவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த உரையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் ஆளுநர் அவர்களுடைய உரையில் விவசாயப் பிரச்சினைப்பற்றி அதிகம் தெளிவாக பேசாமல் கீழ்வெண்மணி கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றியும், நாகர்கோவிலிலே நடைபெற்ற தேர்தல்பற்றியும் விளக்கமாகப் பேசினார்கள்.

விவசாயப் பிரச்சினையில் உற்பத்திப் பெருக்கில், இரண்டு ஆண்டுக் காலத்தில், அண்ணாவினுடைய ஆட்சியில் நமக்கு இயற்கை சதி செய்திருக்கிறது. இயற்கையின் சதியின் காரணமாக மழை குறைவாகப் பெய்திருக்கிறது. பொருளாதாரத் துறையில் மத்திய சர்க்காருக்கு நாம் கொடுக்க வேண்டிய தொகை பல கோடி ரூபாய் அதிகமாகியிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குக் குறைவாகப் பணம் கொடுத்திருக்கிறது. மத்திய சர்க்காரிடத்திலிருந்து மாநில சர்க்காருக்குக் கிடைக்கக் கூடிய தொகையும் குறைவு, மத்திய சர்க்காருக்கு நாம் தர வேண்டிய தொகையும் கூடுதல், மழையும் குறைவு, இப்படிப்பட்ட





நெருக்கடியான நிலையில் உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழக அரசு, அறிஞர் அண்ணாவினுடைய அரசு சற்றேறக்குறைய 7 இலட்சம் டன் உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறது. அதே நேரத்தில் அதற்கு முன்னால் ஆண்டவர்களுடைய காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் இருந்தன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. நம்மிடத்திலே அப்பொழுது திட்டம் இல்லை. திட்டம் இல்லாத நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முன்பு 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் ஒருபோக சாகுபடி நடைபெற்றது. இப்பொழுது அந்த 2 லட்சம் 4 லட்சமாக அதிகரித்திருக்கிறது. அண்ணா அவர்களுடைய வேண்டுகோள்மூலமே அந்த அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. அந்த அளவுக்குச் செய்திருக்கிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகில் கீழ் வெண்மணி என்ற கிராமத்தில் விவசாயப் பிரச்சினையின் காரணமாக 43 உயிர்கள் பலியாயின. அதற்கு அனுதாபம் தெரிவிக்கின்ற முறையில் ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பு இருக்கிறது.

அது மாத்திரமல்ல. அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில் சர்க்காரில் முதல் மந்திரி என்ற முறையில் அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே சிந்தித்துத் தக்க நடவடிக்கை எடுத்தார்கள். இப்பொழுது முதலமைச்சராக இருப்பவரும், அப்பொழுது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவருமான கலைஞர் கருணாநிதி அவர்களையும், இப்பொழுது தொழில் அமைச்சராக உள்ள திரு. மாதவன் அவர்களையும் உடனடியாகச் சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி, அங்கு விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வகைசெய்தார்கள். ஆகவே, சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு எங்கெங்கே விவசாயப் பிரச்னை இருக்கிறதோ, உதாரணமாக நாகைப் பகுதியில் கொரடாச்சேரிபோன்ற பகுதிகளில் ஆங்காங்கு போலீஸ் காவல் புரிந்த வண்ணம் இருக்கிறார்கள். சர்க்கார் போதிய பாதுகாப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் பாதுகாப்பிற்கென்றே செலவு செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, மன்னார்குடியில் முத்தரப்பு மகாநாடு கூட்டி, கூலிப் பிரச்சினைப்பற்றி முடிவு செய்தோம். அதற்குப் பிறகு திருவாரூரில் மகாநாடு கூட்டி, கூலிப் பிரச்சினையை முடிவு செய்தோம். அதற்கும் மேலே இப்பொழுது கீழ்வெண்மணிச் சம்பவம் முடிந்த பிறகு, தஞ்சாவூரில் முத்தரப்பு மகாநாடு கூட்டப்பட்டு அங்கே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முத்தரப்பு மகாநாடுகள் கூட்டினோம், நீர்ப்பாசன மகாநாடுகள் கூட்டினோம், அமைச்சர்கள் அங்கே வந்து, குறிப்பாக அப்பொழுது பொதுப்பணித்துறை

அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் அடிக்கடி விவசாயிகள் பிரச்சினைகளில் ஈடுபட்டு, இத்தகைய தகராறுகளைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள், எடுத்து வருகிறார்கள். எதிர்பாராதவிதமாக எல்லோரும் வருந்தத்தக்க காரியமாக கீழ்வெண்மணியில் நிலைமைகள் ஏற்பட்டுவிட்டன. அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு சர்க்கார் எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுத்து, தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அண்ணாவினுடைய ஆட்சி வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவந்திருக்கிறது. அதையே தொடர்ந்து இன்றைய தினம் முதல் அமைச்சராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்களுடைய ஆட்சியும் செய்துகொண்டுதான் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கலைஞர் அவர்கள் இன்று முதல் அமைச்சராக இருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அவர்களிடத்தில் செய்தி நிருபர்கள் கேட்டதற்கு, 'அண்ணாவின் வழி நடப்பேன்' என்ற ஒரே வார்த்தையைச் சொல்லி வெளிவந்தார்கள். அண்ணா வழி நடக்கிற மந்திரி சபையில் நல்ல மாற்றங்கள் ஏற்படுவதைக் காணுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. இந்துமத பரிபாலன போர்டு என்று ஒன்று இருப்பது எல்லோருக்கும் தெரியும். வருவாய்த்துறையைவிட அதிகமாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் வருமானம் வருகிற ஒரு இலாகாவாக இந்துமத பரிபாலன போர்டு அமைந்திருக்கிறது. அதற்கென்று தனியாக ஒரு மந்திரியை நியமித்து, அதில் நல்ல முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, புதிய மந்திரிசபையில் அறநிலைய பாதுகாப்பிற்கென்று தனியாக ஒரு அமைச்சர் இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த இலாகாவில் நல்ல பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். குறிப்பாக, தொழிலாளர்களுக்குச் செய்யக்கூடிய சீர்திருத்தங்கள் நாம் எதிர்பார்க்கிறோம். கோவில் மனைகளிலே பல லட்சக்கணக்கான ஆதித் திராவிட மக்கள் குடியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் மனைகளிலே குடியிருப்பவர்களுக்கு அந்த மனைகளைப் பட்டா செய்து கொடுப்பதற்கு முன்பாக கோவில் மனைகளில் குடியிருக்கும் அரிசனங்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். அதையாவது நாம் முதலில் கொண்டுவரவேண்டும் என்ற நல்ல யோசனையை அமைச்சர் அவர்களுக்கு தலைவர் அவர்கள்மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது இந்த பரிபாலன போர்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற வருமானத்தை யார் யாரோ எப்படி எப்படியோ சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதே நேரத்தில் நடுத்தரகர்கள், தர்மகர்த்தா என்ற பெயரிலே, பணக்காரர்கள் அந்தக் கோவில் சொத்துக்களை அபகரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு நல்லதோர் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக, நாகர்கோவிலில் தேர்தல் நடைபெற்றதைப்பற்றிப் பலரும் பேசியிருக்கிறார்கள். நானும் அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேசவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நாகர் கோவிலா, காளி கோவிலா என்ற நிலையில் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே ரத்த வெறியாட்டம் ஆடிவிட்டு, இங்கு வந்து மீண்டும் அதைப்பற்றிப் பேசி எங்களைப் புண்படுத்துகிறார்கள். நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். 1948-ல் தஞ்சை மாவட்டத்தில் அப்பொழுது இங்கே உறுப்பினராக இருந்த சர்தார் வேதரத்னம் பிள்ளை காரில் போகும்போது யாரோ ஒரு சிலர் ரோடில் பனை மரத்தைப் போட்டுவிட்டார்கள் என்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான ஏழை எளிய வர்கள், ஆதி திராவிட மக்கள் அடிக்கப்பட்டார்கள், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். நடேசன் என்பவன் சுட்டுக் கொல்லப்பட்டான். அந்த நிகழ்ச்சி 1948-ல். 1968-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடக்கிறபோது, அந்த நேரத்தில் நாகர் கோவிலில் நடந்ததைப்பற்றிக் குறை சொல்கிறார்கள். 7 மந்திரிகள் அங்கே இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். 7 மந்திரிகள் அங்கே இருந்தார்கள் என்றால், அமைச்சர்கள் என்ற முறையில் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களாக அங்கே இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக அங்கே பணி புரிந்தார்கள். அதன் விளைவாகத்தான் சட்டசபை உறுப்பினர் களாகிய நண்பர் சோமசுந்தரம் போன்றவர்கள், கிட்டப்பா போன்றவர்கள் நாகர்கோவிலுக்குச் சென்றார்கள். அன்று சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் காரில் போகும்பொழுது ரோடில் குறுக்கே பாதையில் மரத்தைப் போட்டார்கள் என்ற காரணத் தைக்கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் துன்புறுத்தப் பட்டார்கள். இன்று சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே இருப்பவர்கள் நாகர்கோவிலுக்குத் தேர்தலுக்காகச் சென்ற பொழுது, அங்கே தாக்கப்பட்டார்கள். போலீஸ் பக்கத்திலிருந்தே பார்த்துக்கொண்டே இருந்தார்கள். கலைஞர் அவர்கள், அப்பொழுது பொதுப்பணித்துறை மந்திரியாக இருந்தவர் முசாபரி பங்களாவில் தங்கியிருந்தபொழுது, நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் வெளியே கலாட்டா செய்திருக்கிறார்கள். அதைப்போல பல நிகழ்ச்சிகள் நடந்திருக் கின்றன. தேர்தல் முடிந்தபிறகு செத்த பிணம் கிடைத்திருக் கிறது. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே, கிட்டு என்ற தொண்டனைப் பலியாக்கியிருக்கிறார்கள். இவ்வளவையும் செய்து விட்டு, இங்கே சட்டசபையில் வந்து 'எங்கள் பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் வெற்றிபெற்றுவிட்டார்' என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவர் தலைவர்தான், ஒத்துக்கொள்கிறேன். அதே தலைவர் ஜனநாயக ஆட்சியில் 1967 தேர்தலில் விருதுநகர் தொகுதியில் தோற்றார். அங்கே என்ன நடைபெற்றது? ஆகையால். செய்ததையெல்லாம் செய்துவிட்டு, அதையெல்லாம் மறைப்பதற்கு இங்கே சட்டசபையில் வந்து தி.மு.க. செய்தது என்று மாத்திரம் சொல்லாதீர்கள். முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு உங்கள் ஆட்சியில் அடிபட்டோம், உதைபட்டோம், ரத்தம்

சிந்தினோம். பிணங்களைக் கொடுத்தோம். எங்களுடைய ஆட்சி வந்த பிறகும், பிணத்தைக் கொடுக்கிறோம். ரத்தத்தைச் சிந்து கிறோம். காரணம், எங்களுடைய தலைவர், மாபெரும் தலைவர் எங்களுடைய அண்ணா அவர்களின் ஆணைக்காக கட்டுப்பட்டு எவ்வளவு பொறுமையாக இருக்கவேண்டுமோ, அதற்கும் மேலாகவே பொறுமையாக இருந்தோம். ஆகவே, நீங்கள் அங்கே குற்றம் செய்துவிட்டு இங்கே எங்களைக் குற்றவாளிகளாக ஆக்க வேண்டாம் என்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்த உரை ஆற்றுவதற்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது கிட்டுவைக் கொலை செய்தவர்கள் காங்கிரஸ் காரர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். கோர்ட்டில் கேஸ் இருக் கிறது. தயவுசெய்து அதை அரசியல் பிரச்சினையாக ஆக்கக் கூடாது என்று சொல்கிறோம். உங்களுடைய ஆட்சி இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. கோர்ட்டில் கேஸ் முடிந்த பிறகு அந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். தயவுசெய்து கிட்டுவைக் கொலை செய்தது காங்கிரஸ்காரர்கள் தான் என்ற குற்றச்சாட்டை விட்டுவிடவேண்டும் என்று நான் உங்கள்மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: பொதுவாகத் தேர்தலின்போது நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிச் சொன்னேனே தவிர, குறிப் பிட்டு எவரையும் சொல்லவில்லை. நாகர்கோவிலில் திராவிட முன்னேற்ற கழகம் கிட்டுவைப் பலி கொடுத்திருக்கிறது, ரத்தத்தைச் சிந்தியுள்ளோம். நீதி மன்றம் என்ன கூறுகிறதோ அதை ஒத்துக்கொள்ளத் தயார்.

*திரு. வ. ஜார்ஜ்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய பேருரையைப் பார்க்கும்பொழுது தமிழ் நாட்டின் எதிர்காலம் இருண்டிருப்பதாகத் தோன்றுகிறது. விவ சாயத்தை எடுத்துக்கொண்டால் இயற்கை பொய்த்துவிட்டது, விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டது என்று அதில் எடுத்து காட்டப்பட்டிருக்கிறது. தொழில் துறையை எடுத்துக்கொண்டால் பஞ்சாலைகள் அத்தனையும் மூடப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசு நடவடிக்கை எடுத்தும், பலன் பெற வில்லை என்பது தெட்டத்தெளிவு எனப் புலப்படுகிறது. அதைப் போலவே, விவசாயத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்கும், உழைப் பாளிகளுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்கொண்டாலும், கீழ் வெண்மணிச் சம்பவம் அதைப்பற்றித் தெட்டத்தெளிவென எடுத்துக் காட்டுகிறது. விவசாய உற்பத்தியில் மந்தம், தொழில் துறையில் மந்தம், படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத ஒரு சிக்கலான நிலை என்பதைத்தான் கவர்னர் அவர் களுடைய உரை எடுத்துக்காட்டுகிறது. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்துகொண்டு வந்திருக்கிறது. இப்படி நிலைமை இருந்தால், தமிழகத்தின் எதிர்காலம் என்ன ஆவது என்று





சிந்தித்துப் பார்ப்பவர் எவருக்கும், தமிழகத்தின் முன்னேற்றப் பாதையிலே இருள் சூழ்ந்து வருகிறது என்றுதான் தோன்றுகிறது என்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இந்த இருளை நீக்கு வதற்குச் செயல் திட்டங்கள் என்ன என்று பார்த்தால், ஒன்றுமே காணவில்லை. அவர்கள் திட்டங்களெல்லாம், முன்னால் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த திட்டங்களைத் தொடர்ந்து செய்வது அல்லாமல், வேறொன்றும் இல்லை. மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க புதிய திட்டங்கள் எதுவுமே அவர்களிடம் இல்லை. பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறார்கள், ஐ.ஆர். 8 பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்றால், இதெல்லாம், முன்னாலேயே இருந்த திட்டங்கள்தான். இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்ன திட்டம் இருக்கிறது? மழை பெய்யாவிட்டால், மழையைப் பெய்யச் செய்ய என்ன திட்டம்? தேர்தல் விஞ்ஞாபனத்தில், மழையில்லாதபோது, செயற்கை மழைக்கு வழிசெய்வோம் என்றார்களே, அதற்கு என்ன திட்டம் இருக்கிறது? தொழில் துறையில், அண்மையில் தொழில் அமைச்சர் குறிப்பிட்டார்கள், முதல் முடக்க பயம் வேண்டாம் என்று. அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், முதல் முடக்க பயம் ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது. அந்த முறையில் தான் தொழில் துறை வளர்ந்திருக்கிறது. அரசு என்ன நினைக்கிறது? சில்லறை விஷயங்களில், மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் வகையில் செய்கிறதேயல்லாமல், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க உருப்படியான திட்டத்தைக் கொண்டு வரவில்லை. சில்லறைப் பிரச்சினை என்று நான் சொல்வது மொழிப் பிரச்சினையைப் போன்றது. மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு, மக்கள் உணர்ச்சி வசப்படும் வகையில் செயல் பட்டு, எதை எதையோ செய்ய விரும்புகிறார்கள். என்.சி.சி-யை எடுத்துக் கொண்டால், அதில் இந்தி கமாண்ட் வார்த்தைகள் இருக்கின்றன என்று அதை வேண்டாம் என்றார்கள். ஆனால், இப்பொழுது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் அடக்கத்தின்போது ராணுவ மரியாதை செய்யப்பட்டபோது, இந்தி வார்த்தைகளைத்தானே அவர்கள் உபயோகித்தார்கள்? அதை மட்டும் வைத்துக் கொண்டோம். ஆகவே, மொழிப் பிரச்சினையில் மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பிரச்சினைகளைத் தீர்க்க வில்லை. அதில் எந்தவித நேர்மையும் இல்லை இந்த அரசுக்கு.

மேலும், தமிழக அரசு போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், ட்ரான்ஸ்போர்ட் பஸ்களில் தமிழக அரசு என்று எழுதிவிட்டதை ஒரு சாதனையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இப்பொழுது அதையும் மாற்றி தமிழக அரசு என்பதை 'தமிழ் நாடு அரசு' என்று திருத்த வேண்டுமென்று செய்கிறார்கள். இப்படிப்பட்ட சில்லறை விஷயங்களை வைத்துக் கொண்டு ஏதோ சாதனை செய்து விட்டதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே, அரசு முத்திரையை எடுத்துக் கொண்டாலும், 'சத்யமேவ ஜயதே' என்பதற்குப் பதிலாக 'வாய்மையே வெல்லும்' என்று போட் டார்கள். அப்படிப் போடக் கூடாது என்று சொல்லவில்லை. அதை

[திரு. வ. ஜார்ஜ்] [1969 பிப்ரவரி 22

நான் வரவேற்கிறேன். தவறில்லை. ஆனால், 'சத்யமேவ ஜயதே' என்பதை 'வாய்மையே வெல்லும்' என்று மாற்றியதை ஏன் சட்ட பூர்வமாகச் செய்யவில்லை. அதை மாற்றும்போது சட்ட பூர்வமாக மாற்றினீர்களா? இல்லை. அரசாங்க முத்திரையிலே இவ்வாறு போலி வேஷமாக, சிறு பிள்ளை விளையாட்டாக, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உருப்படியாக எதையும் செய்யவில்லை என்கிற குற்றச் சாட்டைத் தெரிவிக்கிறேன்.

பொருளாதாரத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், நான்காவது திட்டத்திலே நமது மாநிலத்தில் ரூ. 624 கோடிக்குத் திட்டம் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றும், திட்டக் குழு, மத்திய சர்க்காரால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி ரூ. 250 கோடி என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்ததைவிட இப்பொழுது குறைவு என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருந்து தொகையைக் கூட்டிக்கொள்ள மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். அந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சி தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய வருவாய்த் துறையில், தனி நபர் வருமானம் குறைவான பின்தங்கிய மாநிலங்களுக்கு 10 சதவிகித உதவி அதிகமாக வழங்குவது என்ற கொள்கையால் நம்முடைய மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நாம் ஒரு புதிய கொள்கை திட்டத்தை தேசிய வளர்ச்சி மன்றத்திற்கும், திட்டக் குழுவிற்கும் எடுத்துக் கூறி வலியுறுத்த வேண்டும். எந்த மாநிலங்கள் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறதோ, எங்கே நிலையான அரசாங்கம் இருக்கிறதோ, அந்த மாநிலங்களுக்குத் திட்டங்களை நிறைவேற்ற அதிகமான தொகைகளைக் கொடுக்கவேண்டும் என்கிற கொள்கை அடிப்படையில் அதிக உதவி பெற முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு பார்த்தால் நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாக உதவியைப் பெற முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பெருமான் உரையில் அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களைத் திருப்தி படுத்த வேண்டியதுதான். அதே நேரத்தில் என்.எம்.இ.பி; என்கிற மலேரியா ஒழிப்பு திட்டத்தில் பணிபுரியும். சர்வெயிலன்ஸ் பணியாளர்கள் சிலர் எட்டு, ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியிருந்தும், அவர்களுடைய சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப்படாமலேயே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சர்க்கார் கொடுக்கும் எந்தச் சலுகைகளையும் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒருநாள் விடுப்பு கூட எடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அது 20 ஆண்டு ஆட்சி செய்த காங்கிரஸ் தவறு என்று சொல்வது போல இருக்கிறது. அவர்கள்தான் தவறிவிட்டார்கள். நீங்கள் இரண்டு [illegible] செய்யவில்லை என்றுதான் கேட்கிறேன். ஆகவே, அப்படிப்பட்டவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்வதால் சர்க்கார் கொடுக்கும் சலுகைகளை அவர்களும் அடையச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1969 பிப்ரவரி 22] [திரு. வ. ஜார்ஜ்]

எங்கள் மாவட்டத்தில், உத்தியோகஸ்தர்களுக்கு, பதவி உயர்வு மாண்புமிகு ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கூடத் தேர்தல் கூட்டத்தில் பேசினார்கள். குமரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு உரிய பதவி உயர்வு கொடுக்க காங்கிரஸ் சர்க்கார் தவறி விட்டார்கள். ஆகவே, கூட்டணிக்கு வாக்களியுங்கள்' என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தயவுசெய்து, உறுப்பினர் அவர்கள், நான் எந்த அரசாங்க ஊழியர்கள் கூட்டத்தில், கன்யாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்தில், காங்கிரஸ் அரசாங்கம் உங்களுக்கு நன்மையைச் செய்யவில்லை, ஆகவே, கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று சொன்னேன் என்பதைத் தெளிவாகச் சொன்னால் அதற்கு விளக்கம் கொடுக்க முயற்சிக்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: மருதூர்குறிச்சி என்ற ஊரில், என் தொகுதியில், தாங்கள் அப்படிப் பேசியதாகத்தான் அறிந்தேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி. குமரி மாவட்ட ஊழியர்களுக்கு காங்கிரஸ் சர்க்கார் பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று நான் சொன்னதாகச் சொல்வது ஆதாரம் அற்றது. நான் அப்படிச் சொல்லவில்லை. இதைக் கவனத்தில் கொண்டு உறுப்பினர் பேச வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படியென்றால், காங்கிரஸ் ஆட்சியில் ஒழுங்காக நடந்தது என்று ஏற்றுக் கொள்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒன்றைச் சொல்லாததாலேயே நல்லதாக நடந்தது என்று அர்த்தம் இல்லை.

திரு. வ. ஜார்ஜ்: கடந்த, 10, 12 ஆண்டுகளாக அங்கே உள்ள அரசாங்க ஊழியர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு எதுவும் அளிக்கப்படவில்லை என்று உண்மையாகவே மன வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் உண்மையிருக்கிறது. உதாரணத்திற்கு, ரெவின்யூ டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், கடந்த 13 ஆண்டுகளாக ஒரே ஒரு தாசில்தார்தான் டெபுடி கலெக்டராகப் போயிருக்கிறார். அந்த மாவட்டத்திலும், மற்ற மாவட்டங்களைப் போல தகுதி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனாலும் ஏதோ காரணமாகப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. அதேபோல் எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும் ஒரே நிலைதான். அதே போலவே, சர்வீஸ் இண்டக்ரேஷன் செய்வதிலும் குறை இருக்கிறது. முதலாவதாக, திருக்கொச்சி அரசாங்கத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தபோது, உண்மையாகவே, அவர்கள் தாய்த் தமிழகத்திற்குப் போகிறோம், நம் தமிழர்கள், நம்மை அரவணைப்பார்கள் என்றுதான் வந்தார்கள். அவர்களோடு அன்றைக்கு வேலை செய்தவர்கள், திருக்கொச்சியில் வெவ்வேறு உயர் பதவிகளில் இருக்கும்போது, இவர்கள் மட்டும், எந்தவிதமான உயர்வும் இல்லாமல் இருக்கிறார்கள். நாம் மட்டும் இப்படி இருக்கிறோமே என்று மன வேதனைப்பட்டுக் கொண்டு அரசாங்க ஊழியர்கள் இருப்பதை அங்கே பார்க்கிறோம். இந்த அரசு அதைப் பரிசீலனை செய்து,

[திரு. வ. ஜார்ஜ்] [1969 பிப்ரவரி 22

மற்ற மாவட்டங்களில் எந்த முறையில் அரசாங்க ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றனவோ அந்த முறையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கும் நியாயமான முறையில் பதவி உயர்வுகள் அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00 அடுத்தபடியாக, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில், கொள்கை இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தானோ என்னவோ, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், கூட்டணியிலுள்ள மற்ற கட்சி உறுப்பினர்களும் பேசுவதெல்லாம் நாகர் கோயில் தேர்தலைப்பற்றியே இருக்கிறது. கவர்னர் உரையில் ஏதாவது கொள்கை இருந்தால் அந்தக் கொள்கையைப்பற்றிப் பேசுவார்கள், அதில் கொள்கை இல்லை என்பதால்தான் நாகர் கோயில் தேர்தலைப்பற்றிப் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இங்கே நண்பர் ஒருவர் பேசும்போது, 'அமைச்சர்கள் அங்கு அமைச்சர்களாகச் செல்லவில்லை, கழகத் தொண்டர்களாகத்தான் சென்று பணியாற்றினார்கள், எனவேதான் அந்த நிலைமை ஏற்பட்டது' என்று குறிப்பிட்டார். அமைச்சர்கள் அங்கு அமைச்சர்களாகத்தான் சென்றார்கள், அங்கே அரசியல் ஈடுபாடு ஏற்பட்டது, அதனால் நிர்வாக இயந்திரமே முடுக்கிவிடப்பட்டது என்பதற்கு ஒருசில உதாரணங்களை நான் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் மாடத்திட்டுவிளை என்னும் ஊரில் ரத்னா ரைஸ் மில் என்று ஒரு ரைஸ் மில் இருக்கிறது. அந்த ரைஸ் மில் அதிபர் காங்கிரசுக்காக வேலை செய்தார் என்ற ஏக காரணத்திற்காக—அதிலுள்ள குற்றச்சாட்டின் உண்மையினையோ, அதனுடைய மெரிட்டைப் பற்றியோ நான் பேச முற்படவில்லை—நடந்த சம்பவத்தைச் சொல்கிறேன்—கழிந்த டிசம்பர் 31-ம் தேதி மாலை 4½ மணிக்கு தாலூக்கா சப்ளை ஆபீசர் வந்து, அந்த மில்லைப் பரிசீலனை செய்து, ஏதோ தவறு கண்டுபிடித்ததாக ரிபோர்ட் செய்கின்றார். சாதாரணமாக அத்தகைய ரிபோர்ட் நாங்குனேரி டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீசருக்குச் சென்று, அவர் அதை கலெக்டருக்கு அனுப்பி அவரிடமிருந்து ஆர்டர் வர வேண்டும். இப்படித்தான் நடப்பதென்பது சாதாரணமாக நாம் எல்லோரும் அறிந்த விஷயம். இதற்கு சுமார் இரண்டு மாதங்கள் ஆகும். ஆனால், அங்கு நடந்தது என்ன தெரியுமா? டிசம்பர் 31-ம்தேதி சாயங்காலம் 4½ மணிக்கு ஏதோ தவறு நடந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மறுநாள், ஜனவரி 1-ந் தேதி, விடுமுறை நாள். ஜனவரி 2-ந் தேதி அந்த லைசென்ஸ் சஸ்பெண்டு செய்யப்பட்டதாக உத்தரவே அந்த நபருடைய கைக்குச் சேர்க்கப்பட்டது. இது எவ்வாறு? இது அரசியல் தலையீடு இல்லாமல் வேறு எந்த விதத்திலும் இருக்க முடியாது என்று நான் ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன்.

வேறு உதாரணங்கள் வேண்டுமானால் இன்னும் பல நான் சொல்ல முடியும். அடுத்தபடியாக, புறம்போக்கு என்க்ரோச்மென்ட் என்று ஒரு கேஸ், என்னுடைய தொகுதியில்,



1969 பிப்ரவரி 22] [திரு. வ. ஜார்ஜ்]

திங்கள்சந்தை என்ற இடத்தில், செல்லத்துரை என்பவர் வீட்டுக் காம்பவுண்டு பற்றியது. அந்தக் காம்பவுண்டுக்குள் ஒரு வழி இருந்ததாகவும், அதை அடைத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. வழி அடைக்கப்பட்டதாகவுள்ள வழக்கில் பிராது கொடுத்து ஆறுமாதங்களுக்குமேல் ஆகிறது. ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருந்தது. ஆனால், அந்த நபர் அங்கே நடந்த உப தேர்தலில் காங்கிரசுக்காக ஊழியம் செய்தார் என்ற காரணத்திற்காக லாண்டு என்க்ரோச்மென்ட் ப்ரொசீடிங்ஸ் எடுக்காமலே தாசில்தாரிடம் அந்த காம்பவுண்டு சுவரை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அதுவும் 'ஓரல்' ஆக எழுத்து மூலமாக அல்ல. அங்கே உடைக்கப் புறப்படுகிறார். அங்குள்ள மக்கள் தடுக்க, தாசில்தார் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் பின் வாங்கிப் போனார். அப்பொழுது மாவட்டக் கலெக்டரிடம் நான் சென்று, தாசில்தார் ஆர்டர் இருக்கிறது என்று சொன்னால், ஸ்டே போடுங்கள் என்று ஸ்டே பெட்டிஷன் கொண்டு சென்றேன். நான் ஒரு ஆர்டரும் போடவில்லை என்று கலெக்டர் சொல்லிவிட்டார். உண்மையிலேயே ஆர்டர் போட்ட ஃபைல் இல்லை, வாய்மொழி ஆர்டர்தான். சிறிதுநாள் கழித்து, சட்டத்திற்கு முரண்பட்டதாகச் சட்ட நடவடிக்கைகளுக்கு ஒவ்வாமல் அங்கே இரணியல் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு கலெக்டரிடமிருந்து ஆர்டர் வருகிறது. அந்த நபரைப் பிடித்துச் சிறை செய்து, அந்தக் காம்பவுண்டை அகற்றுங்கள் என்று. ஆர்டருடைய நகல் அந்த நபருக்கு அனுப்பப்படவில்லை. வேண்டுமானால், லாண்டு என்க்ரோச்மென்ட் ப்ரொசீடிங்ஸ் எடுத்து, தக்க காரணம் கேட்டு, அதற்குப் பிறகு அதை அப்புறப்படுத்தியிருக்கலாம். ஆனால், அப்படியெல்லாம் இல்லாத இந்த நிலையில், அரசியல் தலையீடுதான் காரணமாக இருந்திருக்கிறது என்றுதான் சொல்ல முடியுமே தவிர, வேறு எந்த விதமாகவும் இருக்க முடியாது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தேர்தல் சம்பந்தமாக ஒரு வழக்கு அல்ல; பல வழக்குகள் இருக்கின்றன. எந்த வழக்கிலும் ஒரு முறை உண்டு. லாண்டு என்க்ரோச்மென்ட் ப்ரொசீடிங்ஸ் எடுத்து விட்டார்கள் என்றால், அதற்கு முகாந்தரம் கேட்டு, 9-வது செக்ஷன்படி நோட்டீஸ் அனுப்பினால்; அதை அந்த நபர் வாங்கிக் கொண்டு, அதற்குப் பதிலாக எக்ஸ்பிளநேஷன் கொடுக்க வேண்டும். அது என்னுடைய சொத்துதான், அதை அப்புறப்படுத்த வேண்டியதில்லை என்று. அது ஏற்றுக் கொள்ளப்படவில்லையென்றால் எவிக்ஷன் ஆர்டர் போடுவார்கள். அந்த நிலையில் இருக்கும்போது, அங்கே பல கேஸ்களிலும், அந்த நபர்கள் வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து, வழக்கறிஞர்கள் வக்காலத்து சகிதம் சென்று, தஸ்தாவேஜைப் பார்த்து, அதற்குள்ள எக்ஸ்பிளனேஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு வாய்தா வேண்டுமென்று கேட்டபோது, வக்காலத்துடன்கூடிய அந்த வாய்தாவுக்கான மனுக்கள் அத்தனையும் நிராகரிக்கப்பட்டு, உடனடியாக எவிக்ஷன் செய்ய வேண்டுமென்று ஆர்டர்கள் பிறப்பிக்கப்படுகின்றன

[திரு. வ. ஜார்ஜ்] [1969 பிப்ரவரி 22

என்றால், இது நிச்சயமாக அந்த மாவட்ட அதிகாரிகளாகவே செய்திருக்க முடியாது, அரசியல் தூண்டுதல்தான் காரணம் என்கிற குற்றச் சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர் ஒருவர் பேசும்போது, 'நாங்கள் அந்தக் காலத்திலும் இரத்தம் சிந்தினோம், இந்தக் காலத்திலும் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டார். ஆனால், அங்கே சிந்திய அழகை ஒரு சில உதாரணங்களோடு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். கூட்டணிக்கு வேலை செய்த தொண்டருக்கு ஏதாவது நடந்ததாக ஏதோ ஒரு பெட்டிசன் கொடுத்தார், அல்லது வாய்மொழியாகச் சொன்னார் என்றால்கூட, அந்த இடத்திற்கு ஒரு சில போலீஸ்காரர் அல்ல, நான்கைந்து 'வேன்' நிறைய போலீஸ்காரர்கள் சென்று, அங்குள்ள மக்கள் பீதியடையும் வண்ணம் மிரட்டப் பட்டிருக்கிறார்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும். ஆனால், காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டார்கள் என்று பிராது கொடுத்தால், அது பெட்டிஷன் ரிஜிஸ்டரில் கூட என்ட்ரி செய்யப்படுவதில்லை. ஜி.டி. கூட போடுவதில்லை. எஃப்.ஐ.ஆர். போடுவதில்லை. நானே சென்று போலீஸ் தகவல் கொடுத்திருக்கிறேன். ஜி.டி. என்ட்ரியும் போடவில்லை. எஃப்.ஐ.ஆர்-ம் போடவில்லை. போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு மனுக் கொடுத்ததற்குப் பிறகுதான் எஃப்.ஐ.ஆர்; போட்டிருக்கிறார்கள். ஆனால், நாளதுவரை அந்த இடத்தில் சென்று, போலீஸ் விசாரணை செய்யவில்லை, இதை யாரும் மறுக்க முடியாது. இதுதான் போலீஸ் நிர்வாகம். இது போலீஸ் இயந்திரம் சரியாக இயங்குகிறது என்பதற்கு அறிகுறியா என்று கேட்கிறேன்? அமைச்சர்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாகச் சென்றார்கள் என்று கூறுவது போல் அல்ல; அவர்கள் அமைச்சர்களாகத்தான் அத்து மீறிச் சென்று தொண்டு செய்தார்கள். மக்கள் நல்ல தீர்ப்பு அளித்தார்கள் என்பதை அது எடுத்துக் காட்டுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிப் பலர் கூறினார்கள். நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான்கு மாதங்களுக்கு முன்னாலே, காதி கமிஷன், அவர்களுடைய கொள்கைக்கு முரணாக பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி விநியோகத்தில் ஈடுபட வேண்டாம் என்று சொன்னார்கள், அதனால்தான் செய்தோம் என கூறினார்கள். அந்த விளக்கம் சரியான விளக்கம் அல்ல. காதி கமிஷன், கழிந்த ஜூன் மாதம். இந்தப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுடைய ஒர்கிங் காபிடல் லோனை உபயோகித்து அரிசி விநியோகம் நடத்தக் கூடாது என்ற ஒரு சிபார்சைச் செய்ததே தவிர, பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி விநியோகத்தையே செய்யக் கூடாது என்று சிபார்சு செய்யவில்லை என்று நான் கூற விரும்புகிறேன். அதற்குப் பின்னால் அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துமே ஷேர் காப்பிடல் பணத்தை வைத்தும், அல்லது அதிலுள்ள அங்கத்தினர்கள் அட்வான்ஸ் பணத்தைப் போட்டும் தான் அரிசி விநியோகம் செய்கிறார்களே தவிர, ஒர்க்கிங் காபிடல் லோனை வைத்துச் செய்யவில்லை. மேலும்,



1969, பிப்ரவரி 22] [திரு. வ. ஜார்ஜ்]

அச்சங்களின் விதிமுறை இதை அனுமதிக்கிறது. இந்நிலையில் அவர்களுக்கு எந்தவிதமான நோட்டீசும் அந்தச் சமயத்தில் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. தேர்தல் கண்ணோட்டத்தோடு அந்தச் சமயத்தில் கொடுக்கப்பட்டதே தவிர, வேறு அல்ல என்று நான் ஆணித்தரமாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஏதோ வேறு சில தகராறுகள் தேர்தல் சமயத்தில் நடந்துவிட்டன என்று சொல்லப்பட்டது. அதற்கும் ஒரு உதாரணம் சொல்லி முடிக்க விரும்புகிறேன். சடையன்குடியில் அந்தோணிமுத்து என்பவர்—காங்கிரஸ் தொண்டர்—ஒரு கண்ணை இழந்துவிட்டார், கூட்டணித் தொண்டர்களுடைய தயவினால். அங்கேயுள்ள போலீஸ் ஸ்டேஷனில் சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்துச் சொல்லியும், எஃப். ஐ. ஆர். போடவில்லை. ஜி. டி. போட்டிருக்கிறார்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

கரைவிளாகம் என்னும் ஊரில் செல்வமணி என்பவர்—காங்கிரஸ் தொண்டர்—5-2-1969 அன்று அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டு, எந்த நேரம் இறப்பார் என்று தெரியாத நிலையில் இருக்கிறார். அவரை அந்த மாவட்ட மருத்துவமனையில் மூன்று நாட்கள் வைத்து இருந்துவிட்டு, அப்புறப்படுத்திவிட்டார்கள், வேறு எங்காவது சென்று சிகிச்சை செய்து கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டார்கள். அடித்தது யாராகவாவது இருக்கட்டும்; சிகிச்சை கூட அளிக்க இந்த அரசாங்கம் முன்வரவில்லை. மூன்று நாட்களுக்குள் அவரை மருத்துவ மனையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு அவர் தனி நபரிடம் சிகிச்சை பெறுகிறார். நிச்சயமாக என்று இறப்பார் என்று தெரியாது. அதைப் போலீசுக்குப் புகார் சொன்னால் கேட்க நாதி இல்லை.

இதுமாதிரி, டானியல் என்பவர்—தமிழக கைத்தறி போர்டு டைரக்டர்களில் ஒருவர்—குத்தப்பட்டார், தி.மு.க. தொண்டரால். அதற்கும் போலீஸ் எஃப்.ஐ.ஆர். போட்டும் அங்கு சென்று ஒரு நாளைக்குக் கூட விசாரணை செய்ததாக இல்லை. நான் சொல்லுகிறேன். இம்மாதிரியாக காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டபோது அவர்கள் பிராது கொடுத்தால், அதைக் கேட்பதில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் ஏதாவது போய்ச் சொன்னால் போதும், உடனடியாக ஒருவருக்கு பத்துப் பேராக போலீஸ் சென்று, மக்களை மிரட்டும் நிலையைத்தான் நாம் பார்க்க முடிந்தது. எனவேதான், அங்கே நடைபெற்றது ஜனநாயக வெற்றி என்று நாங்கள் சொல்லுகிறோமே தவிர வேறு இல்லை. (மணியடிக்கப்பட்டது).

ஒரு சிறிய வேண்டுகோள். தேர்தல் முடிந்ததற்குப் பின்னர் பல வழக்குகள்—காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக போடப்பட்ட வழக்குகள்—உறங்கிய நிலைமையில் இருந்தன. ஆனால் தற்போதைய முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அந்த வழக்குகள் எல்லாம் புத்துயிர் பெறத் தொடங்கிவிட்டன. இந்த நிலைமை முதலமைச்சர் அவர்கள் சொல்லி ஏற்பட்டதோ, அல்லது போலீஸ்காரர்களே இந்த நிலைமையைத் தோற்றுவித்தார்களோ தெரியாது. எப்படியிருந்தபோதிலும், கனம்

முதலமைச்சர் அவர்கள் நேரடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல எம்.எல்.ஏ-க்களும்கூட அந்த வழக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வழக்குகளை யெல்லாம் வாபஸ் பெறுவதுதான் அரசியல் நேர்மையும், நீதியும் ஆகும் என்று கூறிக்கொண்டு, என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

திரு. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்கள்.

* **திரு. கா. வேழவேந்தன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் யாருடைய உரையைக் கேட்டு நாமெல்லாம் மனம் பூரித்துக் கொண்டிருந்தோமோ, எந்த உரை இந்த மன்றத்தில் எதிரொலித்து நம்மை யெல்லாம் ஆட்கொண்டதோ, அந்தச் சங்கநாதத்தை எந்த விதத்தினால் நம் மனம் லயித்திருக்கிறதோ அந்த உரையை இனிமேல் கேட்க முடியாது என்ற குறையை எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய வள்ளுவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்துவந்த அறிஞர் அண்ணாவின் படத்தை இந்த மன்றத்தில் வைக்கப் போகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நம்மிடையே நடமாடிக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் படமாக இங்கே காட்சியளிக்கப் போகிறார்கள். அண்ணா அவர்களின் மேல் ஆணையிட்டு இந்த அரசு தன் பாதையைத் துவங்கியிருக்கிறது.

எனக்கு முன்னால் நண்பர்கள் கவர்னர் உரையின் மீதான கருத்துக்களைச் சொன்னார்கள். நம்மைப் பெற்ற தாயை 'அம்மா' என்றுகூட அழைக்க முடியாத நிலைபோல், நாம் பிறந்த மண்ணை 'தமிழ்நாடு' என்று அழைக்க முடியாத நிலைமை இருந்தது. அண்ணா அவர்கள் அந்த நிலைமைகளை யெல்லாம் மாற்றி, நாம் இருக்கும் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரை வாங்கித் தந்து விட்டுப் பிரிந்து விட்டார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் இருக்கக்கூடிய எல்லோருக்கும் தெரியும் வகையில் 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்தால் பெருமை அளித்தது அண்ணா அவர்களையே சாரும். நம்மைப்பற்றி உலகத்தார் தெரிந்து கொள்வதற்கான வழிகளை இந்த அரசை ஏற்றதன் மூலம் அண்ணா அவர்கள் செய்து வைத்துவிட்டுப் போனார்கள். இரண்டு ஆண்டுகளே அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்தாலும், அவர் என்ன என்ன நினைத்தாரோ அவற்றை யெல்லாம் நிறைவேற்றிவிட்டுப் போயிருக்கிறார். என்பதை அவர் மறைந்த பின்னரேனும் எதிர்க் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணியை கலைஞர் கருணாநிதி அவர்களின் அமைச்சரவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்று அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பெரும் படையின் தலைமையை





கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் காலத்தில், பெரியார் அவர்களால் 'தளபதி' என்று போற்றப்பட்டவர்தான் நமது அண்ணா அவர்கள். அதற்குப் பிறகு தனி இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழ கத்தைத் தோற்றுவித்து பத்து லட்சம் உறுப்பினர்களையுடைய கழகத்தை உருவாக்கியபோது தி.மு. கழகத் தளபதியாக அண்ணா அவர்களால் போற்றப்பட்டவர் கலைஞர் கருணாநிதி ஆவார்கள். அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னால் அவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் பயணத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மிகச் சோதனையான கட்டத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறோம். மழையும் பெய்ய வில்லையே என்று கவர்னர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பதவியில் இருந்தபோது அண்ணா அவர்கள் இந்த நாட்டின் நலனுக்காக எவ்வளவு வருந்தியிருக்கிறார்கள் என்பது கூடயிருந்த வர்களுக்குத்தான் தெரியும். நியூயார்க் மருத்துவ மனையில் அவர்கள் இருந்தபோது இங்கிருந்து அன்றாடம் அனுப்பப்பட்ட செய்திப் பத்திரிகைகளின் மூலமாக—செங்கற்பட்டு மாவட்டத்தில் மழையில்லையே, வடாற்காடு மாவட்டத்தில் மழையில்லையே என்ற செய்திகளைப் பார்த்து மனம் மிகவும் நொந்து நாம் மட்டும் திரும்பிப் போய் என்ன பயன், செயற்கை முறையில் மழையை எவ்வாறு உண்டாக்கலாம் என்பதனையாவது நன்கு தெரிந்து சென்றால்—தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு அந்த முறையைப் பயன்படுத்தி, மக்கள் துன்பத்தைக் குறைக்கலாம் என்று அண்ணா அவர்கள் அமெரிக்கா நாட்டில் செயற்கை முறையில் மழை உண்டாக்கும் ஆராய்ச்சி நிபுணர்களை எல்லாம் கலந்து பேசினார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தன. இப்படி நோயினால் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்திலும் அண்ணா அவர்கள் வியாதியைப்பற்றி கவலையுறாமல் நாட்டின் நலனைப்பற்றியே பெரிதும் அக்கறை காட்டி வந்தார்கள். சில நாட்களுக்கு முன்னால் நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நம்முடைய நாட்டில் அப்படிப்பட்ட செயற்கை மழையைக் கொண்டு வருவதற்கு ஒரு ஏக்கருக்குப் பத்தாயிரம் ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று தெரிகிறது. ஆகவே அந்த முறையை நம்மால் கையாள முடியாத நிலை இருந்தாலும் நமது அண்ணன் அவர்களது அந்த உயரிய எண்ணத்தை நாம் எவ்வளவு பாராட்ட வேண்டும் என்றுதான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளும் கட்சியின் உணவுக் கொள்கை காரணமாக இந்தியாவில் உள்ள 17 மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றில்தான் சரியான முறையில் உணவு தானியங்களின் விலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. நான் ஆந்திர மாநிலத்தின் எல்லையோரத்தில் இருக்கிற கும்முடிப்பூண்டி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். எங்களுடைய பிரச்சினை என்னவென்றால்—கிருஷ்ணா நதி ஓடுகிற ஆந்திர மாநிலத்தில், கோதாவரி ஓடுகிற ஆந்திர மாநிலத்தில் அரிசி விலை அதிகமாக ஏறிவிடுகிற

[திரு. கா. வேழவேந்தன்] [1969 பிப்ரவரி 22

நிலையில் எங்கள் பகுதியில் விளைகிற நெல்லை எல்லாம் இரவோடு இரவாக ஆந்திராவுக்குக் கொண்டுபோய்விடுகிறார்கள். இப்படி ஆந்திராவில் அரிசி விலை அதிகமாக இருப்பதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல. காங்கிரஸ் ஆளுகிற மைசூர் மாநிலத்தில்கூட ஒரு படி அரிசி 3 ரூபாய்க்கு மேல் விற்றுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் பொறுப்பேற்றிருக்கிற மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களில் படி அரிசி 4 ரூபாய், 5 ரூபாய் என்று விற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைய சூழ்நிலையிலும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் உணவுக் கொள்கை காரணமாகத்தான் நல்ல எண்ணத்துடன் ஒரு படி அரிசித் திட்டத்தை மேற்கொண்டதன் காரணமாகத்தான் வெளியிலும் ஒரு படி அரிசி 2 ரூபாய்க்கு மேல் போகாமல் விலை இருந்து கொண்டிருக்கிறது. பாராளுமன்ற இடைத் தேர்தலில் இதையேகூட எதிர்க் கட்சியினர் ஒரு பிரச்சினையாக வைத்துப் பேசியிருப்பார்கள். குமரி மாவட்டத்தில் படி அரிசி ஒரு ரூபாய் முப்பது காசு, நாற்பது காசுக்கு மேல் போகாத காரணத்தினால்தான் இதை விட்டுவிட்டார்கள். உணவுப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு திட்டமான கொள்கையைக் கடைப் பிடித்து வருவதன் காரணத்தினால்தான் விலைவாசிகள் ஒரு கட்டுக்குள் அடங்கியிருக்கின்றன. ஏன், பலவற்றின் விலை குறைந்தும் இருக்கிறது. இவற்றிற்கு முக்கியமான காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னால் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் சரியான திட்டம் வகுத்து, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றி, தீவிர சாகுபடித் திட்டத்தை எல்லாம் மேற்கொண்டதுதான். அதன்காரணமாகத்தான் வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்தச் சமயத்தில்கூட நிலைமை சீராக இருக்கிறது என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். இங்கே அண்ணாவின் கல்லறை உலராமல் இருப்பதற்குள் பதவியைப் பிடித்தார்கள் என்பதாகச் சொன்னார்கள். ஆனால் பதவியை ஏற்றுக் கொண்ட உடனேயே தன்னைப் பாராட்ட வந்தவர்களை எல்லாம் இது நேரம் இல்லை என்று தடுத்து விட்டு, பாராட்டுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாது அதிகாரிகளுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். வறட்சி ஏற்பட்டிருக்கிற செங்கல்பட்டு, வடாற்காடு, இராமநாதபுரம் போன்ற மாநிலங்களில் பஞ்சத் தணிப்பு வேலையாக என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனை நடத்தி உடனடி காரியங்களை எடுத்திருக்கிறார்கள் என்றால் இதை எதிர்க் கட்சியினர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. வேலை எப்படி நடக்கிறது என்று மாவட்ட அதிகாரிகளைக் கேட்டால்—நிச்சயமாகக் கலைஞர் அவர்கள் தாங்கள் கொடுக்கிற திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற உத்தரவு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. தயாராக இருந்தோம். அவர் உத்தரவு கொடுத்தவுடனே வேலைகள் நடைபெற ஆரம்பித்துவிட்டன என்று சொல்கிறார்கள். மழை அற்றுப்போன பகுதிகளுக்கு தஞ்சை



1969 பிப்ரவரி 22] [திரு. கா. வேழவேந்தன்]

மாவட்டத்தில் இருந்து கொள்முதல் செய்து எல்லாப் பகுதி களிலும் இருக்கிற மக்களுக்கும் குறைந்த விலையில் தந்து கொண் டிருக்கிறார்கள். அப்படித் தருவதன் மூலமாக தமிழகம் முழுவதும் விலைவாசி சீரான முறையில் கட்டுப்பாடான முறையில் இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற முயற்சியை இதுவரைக்கும் இருந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டதா என்று பார்த்தால் எனக்குத் தெரிந்த வரையில் இல்லை என்றுநான் சொல்லித் தீர வேண்டியவனாக இருக்கிறேன். வருமுன் காப்பது என்பது அமைச்சர்கள் தன்மை என்பது தமிழர்களது வழக்கம். அந்தத் தமிழர்களது நியதியை உண்மையாகவே கடைப் பிடிக்கிற அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சட்டம் ஒழுங்குபற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கீழ் வெண்மணி கிராமத்து எதிர்பாராத துர்ப்பாக்கியமான சம்ப வத்தைக் குறித்துச் சொன்னார்கள். அது மறைந்து போகிற அள வுக்கு பத்திரிகையை அடைத்துக்கொண்டு வருகிற செய்திகளையும் அவர்கள் பார்க்காமல் இருந்திருக்க முடியாது. மராட்டிய மாநி லத்தில் காங்கிரஸ்தான் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. பம்பாய்—தாராவி போன்ற இடங்களில் ஏற்பட்ட நிகழ்ச்சி மிக மிகப் பயங்கரமானதாக இருக்கிறது. தமிழர்களுடைய கடைகள் எல்லாம் சூறையாடப்பட்டிருக்கின்றன, கொளுத்திவிடப்பட்டி ருக்கின்றன. அங்கிருந்து கண்ணீரும் கம்பலையுமாக வருகிற தமி ழர்கள்—நாங்கள் சொன்னால்கூட உங்களால் நம்ப முடியாது, போட்டோக்களை எடுத்து வந்திருக்கிறோம், பாருங்கள் என்று காட்டுகிறபோது இதயத்திலே இரத்தம் கசிகிறது. ஐம்பது, அறுபது பேர் செத்தார்கள் என்று சொல்கிறார்கள், சாவு நூற்றுக் கணக்கில் இருக்கும் என்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் இருப்பதும் காங்கிரஸ் கட்சிதான். மத்தியில் ஆளும் கட்சியாக இருப்பதும் காங்கிரஸ் கட்சிதான். பெருமளவுக்கு இன்றைக்கு இந்தக் கோரச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழர்கள். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்—இனியும் தாமதம் கூடாது. அங்கே உள்ள தென்னிந்தியர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண் டாக வேண்டும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பதவிக்கு வந்தவுடனேயே இதைப்பற்றி மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் எதிர்க் கட்சியினர்களும்கூட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் அந்தச் செய்கையைக் கண்டனம் செய்து அங்கே உள்ள தமிழர்களுக்கு—தென்னிந்தியர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க உடனே மத்திய அரசு விழைய வேண் டும் என்று பலப்பல கோரிக்கைகள் மூலம் தெரிவித்தாக வேண்டும். ஒன்றுமில்லாத சிறுசிறு நிகழ்ச்சிகள் இங்கே நடந்தாலும் தந்திக்கு மேல் தந்தி அடிக்கிற காங்கிரஸ் கட்சியினர்—வடக்கே உள்ள தென்னிந்தியர்களுக்குத் தக்க பாதுகாப்பு உடனடியாகக் கொடுத் தாக வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தவும் வேண்டும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்]. [1969 பிப்ரவரி 22

பொதுவாக பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது நமது முதல் அமைச்சர் மராமத்து வேலைகள் ஒழுங்கிணைந்து நடைபெற வேண்டுமென்று இண்டக்ரேஷன் ஒன்றை வகுத்துச் செயல்படுத்தினார்கள். இன்றைக்கும் எல்லோரையும் ஒழுங்கிணைத்துச் செல்ல வேண்டுமென்று பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர் பொறுப்பேற்றிருக்கிற நேரம் மிகவும் சோதனை நிறைந்த நேரம் என்பதை நாம் உணர்கிறோம். மழை இல்லாத நிலைமை--எங்கும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலைமை—இந்த நேரத்தில் எல்லோரும் அவரது கையைப் பலப்படுத்தி நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பஞ்சம் ஏற்பட்டபோது மத்திய அரசு தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பி நேரில் கண்டறிந்து வரச் செய்தது. அதைப் போல இங்கும் வந்தாக வேண்டும். இந்தியப் பிரதம அமைச்சரே மத்திய அரசின் சார்பாக வந்தால் நன்றாக இருக்கும். மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரிடையாக இங்கே வந்து இருக்கக்கூடிய பஞ்ச நிலைமையைப் பார்த்தால்தான் பஞ்ச நிவாரண வேலைகளை அதிகமான அளவில் தொடங்குவதற்குக் கிணறுகள் வெட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். கிணறு என்றால் 100 அடி, 200 அடிகள் வெட்டினால் ஒழிய தண்ணீர் கிடைக்காத நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இந்தப் பயங்கரமான நிலைமையைச் சமாளிக்க உடனடியாக மத்திய அரசு தக்க உதவிகளைச் செய்ய வேண்டுமென தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற் பகல் 1-30

அண்மையிலே ஜனாதிபதி அவர்கள்கூட தம்முடைய பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாராளுமன்ற உரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிக் கொண்டு வருகிறது. அது விரைவிலே அமலுக்கு வரும் என்று டில்லிப் பாராளுமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைத்துப் நினைத்துப் பார்த்து, என்னுடைய காலத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிகமான பணம் வாங்கித் தர வேண்டுமென்று நினைக்கிறேன் என்று சொல்லி வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தார்களோ அந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வருவதற்குள் நாம் எல்லாம் அவர்களை விட்டுப் பிரிந்து அநாதைகளாக நிற்கிறோம். எல்லோரும் ஒவ்வொரு அண்ணாவாக மாறி மத்திய அரசிடம் அதிகமாகப் பங்குத் தொகையைக் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு எனக்கு உரையாற்ற வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஆளுநர் உரைக்கு நானும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1969 பிப்ரவரி 22]

## 8. அறிவிப்பு

### பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. 21-2-1969-ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி இப் பேரவையின் நிகழ்ச்சிகள்—அதுபற்றி ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது—நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற் பகல் 1-32

இப் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து மீண்டும் திங்கட்கிழமை (24—2—1969) காலை 9 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

85. Notification issutd with G.O. Ms. No. 744, Rural Development and Local Administration, dated the 8th April 1968 in regard to exclusion of certain areas from the Cumbum Municipality. [ Laid on the Table of the House under Section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V, of 1920. ]

### B. Reports, Notifications and other papers

'Nil'

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள பஞ்சாயத்து யூனியன் நிலங்களுக்கு போடப்பட்டுள்ள மேல்வரியைப்பற்றி மட்டும் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த நஞ்சை, புஞ்சை வரிகள் அந்தக் காலத்திலே ஏற்பட்டன. அன்றைக்கு நஞ்சையாக இருந்ததெல்லாம் இன்றைக்குப் புஞ்சையாக மாறிவிட்டது. புஞ்சையாக இருந்தது நஞ்சையாக மாறிவிட்டது. நஞ்சையை விடப் புஞ்சை அதிகமாக இருக்கக்கூடிய பிராந்தியத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வேறு. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்திற்குப் போடப்பட்ட மேல்வரியைப்பற்றி மட்டும் கேட்கவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நான் பொதுவாகப் போட்டேன். கன்னியாகுமரி மட்டும் அல்ல, பொதுவாகவே கேட்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்னால் பிரித்து அடிப்படையிலே புஞ்சைக்கு மாத்திரம் விலக்கு அளித்துவிட்டு நஞ்சைக்கு இல்லாமல் இருந்தால் பாகுபாடு செய்யக்கூடிய தன்மையிலே இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த அரசு அதனுடைய கொள்கையை இந்த மன்றத்திலே தெளிவாக விளக்கியிருக்கிறது. பொதுவாக, நிலவரியை எடுத்துவிட வேண்டும் என்பதுதான் கொள்கை. விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில், நஞ்சைக்கு அடிப்படை வரியை எடுத்துவிடவேண்டும் என்ற கொள்கை இருந்தாலும், இதிலே நீர் தீர்வை, அடிப்படைத் தீர்வை என்று இரண்டாக இருக்கிறது. அடிப்படை தீர்வையை எடுத்துவிட்டால் நீர் தீர்வை இருக்கிறது. நீர் தீர்வை 15 ரூபாய், அடிப்படைத் தீர்வை 8 ரூபாய் என்று இருந்தால், 8 ரூபாயை மட்டும் எடுத்துவிடுவதால் பேரும் பாரபட்சம் ஏற்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அதனால்தான் நஞ்சை நிலத்திற்கு இன்றைக்கு இல்லை. ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கிற இரண்டு ஏக்கர் அளவிற்குள்ள நிலங்களுக்கு, ஒரு கோடியே அறுபது லட்சம் ஏக்கருக்கு, அதாவது ஐந்தில் நான்கு பங்கு நிலத்திற்கு அடிப்படைத் தீர்வையை ஏற்கெனவே இந்த அரசாங்கம் ரத்து செய்திருக்கிறது.

## விவசாயிகளுக்குக் கடன்

* 32 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விவசாயிகளுக்கு எந்தெந்தக் காரியங்களுக்காகக் கடன் வழங்கப்படுகிறது?

(இ) அதற்காக 1966–67-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு? 1967–68-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) கீழ்க்கண்ட காரியங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் உழவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன :—

1. நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டத்தின்கீழும் உழவர்களுக்குக் கடன் வழங்குதல் சட்டத்தின்கீழும் வழங்கப்படும் கடன்கள் :—

(i) நிலத்தைப் பண்படுத்துதல்.

(ii) வேளாண்மைக் காரியங்களுக்காகக் கிணறுகள், குளங்கள் முதலியவற்றை அமைத்தல்.

(iii) தீ, வெள்ளம், அல்லது புயலால் சேதமடைந்துவிட்ட வீடுகளை மீண்டும் கட்டுதல்.

(iv) காப்பி, தேயிலை, தென்னை, கரும்பு; வாழை. புகையிலை முதலிய தோட்டங்களை அமைத்தல்.

(v) கால்நடைத் தீவனங்களை வாங்குதல்.

(vi) கால்நடைத் தொழுவங்களைக் கட்டுதல்.

(vii) வேளாண்மைக் காரியங்களுக்கு வண்டி வாங்குதல்.

(vii) விதைகளையும் எருவையும் வாங்குதல்.

(ix) வேளாண்மைக்குத் தேவையான இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்குதல்.

(x) வேளாண்மைக்குத் தொடர்பான பிற நோக்கங்கள்.

2. வேளாண்மைக் கருவிகளுக்கான சிறப்பு விதிகளின்கீழ் வேளாண்மைக்குத் தேவையான கருவிகளை வாங்குதல்.

3. கிராமதானக் கிராமங்களின் மேம்பாட்டுக்காக.

4. புயல் இடர் தணிப்புக் கடன்கள்—

(i) நிலத்தைப் பண்படுத்துதல்.

(ii) விதைகளையும் எருவையும் வாங்குதல்.

(iii) கால்நடைகளை வாங்குதல்.

(iv) பிற காரியங்கள்.

5. மும்முர எருவிடும் திட்டத்தின்கீழ் இரசாயன உரங்களை வாங்குதல்.

6. புதிய கிணற்று மானியத் திட்டத்தின்கீழ் கிணறுகளை வெட்டுதலும், எண்ணெய்ப் பொறிகளையும் விசையேற்றங்களையும் அமைத்தலும்.

(இ) 1966-67, 1967-68 ஆண்டுகளில் இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| நோக்கம். | 1966-67. | 1967-68. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. நிலச் சீர்திருத்தக் கடன்கள் சட்டம் — உழவர்களுக்குக் கடன் வழங்கல் சட்டம்— இவற்றின் கீழ் வழங்கப்படும் கடன்கள். | 1,50,81,000 | 1,45,83,300 |
| 2. வேளாண்மைக் கருவிகள் | 4,920 | 6,800 |
| 3. கிராமதானக் கிராமங்களை மேம்படுத்தல். | .. | 43,850 |
| 4. புயல் இடர் தணிப்புக் கடன்கள் | 9,28,310 | 3,74,900 |
| 5 புதிய கிணற்று மானியத் திட்டம். | 4,71,98,000 | 4,66,20,000 |
| 6. எண்ணெய்ப் பொறிகளையும், மின்சார மோட்டார் விசையேற்றங்களையும் வழங்குதல். | 1,74,56,000 | 1,10,25,377 |
| 7. இரசாயன உரங்கள் (மும்முர எருவிடும் திட்டம்). | 1,70,68,923 | 2,03,61,050 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நிறையப் புள்ளி விவரங்கள் அடங்கிய நீண்ட விடையாக இருக்கிறது. இத்தகைய விடைகளை அச்சடித்து மேஜைமீது வைத்துவிடுவது நலமாக இருக்கும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** விவசாயக் காரியங்களுக்கான அந்தக் கடன்களும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கொடுப்பதால், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முக்கியமானவர்கள் விருப்பு வெறுப்புடன் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பதாக நிறையப் புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட கடன்கள் அவ்வளவையும் வங்கிகள் மூலமாக, நில அடைமான வங்கிகள் மூலமாகக் கொடுப்பதற்குப் பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நிறையப் புகார்கள் வந்திருக்கின்றன என்பதற்கு அரசாங்கத்திடம் தகவல் இல்லை. குறிப்பிட்டுப் புகார் வருமானல், அது உண்மையான புகாராக இருக்குமானல் அதற்கு வேண்டிய பரிகாரத்தைச் செய்ய அரசாங்கம் முன்வரும்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர்:** ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகையிலிருந்து, மாநிலக் கடன், சிறு சேமிப்புத் திட்டம் போன்றவைகளுக்கு ஒரு பகுதியைக் கட்டாயப்படுத்தி வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா ? அதுபற்றிப் புகார்கள் வந்து அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** முதல் கேள்விக்குச் சொன்ன பதிலையே சொல்லுகிறேன். உறுப்பினர் அவர்கள் ஏது மாதிரியான தகவல்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் குற்றச்சாட்டின் அடிப்படை அம்சத்தைப் பார்த்துக் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. எம். சண்முகம்:** விவசாயிகள் கிணறு வெட்ட, பம்ப் செட் வைக்க நில அடைமான பாங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தமாக விழுப்புரம் நில அடைமான வங்கியைப் பொறுத்தவரை 7 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பத்திரங்கள் எழுதப்பட்டும்கூட இன்னும் தொகை கொடுக்கப்படவில்லை. இதிலே அரசாங்கம் கவனம் செலுத்திக் கடன் தொகையை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற குறைபாடு அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் வந்திருக்கிறது. அதற்கான குறியீட்டு எண்படி விண்ணப்பங்கள் போய் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பது உண்மை. எவ்வளவு தூரம் விரைவாகவும், துரிதமாகவும் கடன் தொகைகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் விவசாயிகள் ஏராளமான கடன் மனுக்கள் போட்டும், அநேக விண்ணப்பங்கள் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. நில அடைமான பாங்கியில் பணம் இல்லையென்ற காரணத்தால் அங்கும் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** முன்பு சொன்ன கேள்விக்கான பதிலையே சொல்லுகிறேன். ஏற்கனவே 12 கோடி ரூபாய் அளவில் கடன்கள் நில அடைமான பாங்கின்மூலமாகக் கொடுக்கப்பட்டு விட்டது. திரு. சண்முகம் அவர்கள் சொன்ன மாதிரிச் சில இடங்களில் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் 50 லட்சம் அல்லது 60 லட்சம் ரூபாய்தான் நிதிநிலை அடிப்படையில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிந்து விடுகிறது. கடன் தொகைகள் வழங்குவதைத் துரிதப்படுத்த எந்தெந்த மாவட்டங்களுக்கு எந்தெந்த அளவு கொடுக்க வேண்டுமென்று வரையறுப்பதற்கான திட்டத்தை வகுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** விவசாயத்திற்கான கடன்களைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் கொடுக்காவிட்டால் அவர்களால் அதை உபயோகப்படுத்த முடியாது. கிணறு வெட்டக் கடனும், உரம் வாங்கக் கடனும் உரிய காலத்தில் கொடுத்தால்தான் விவசாயிகள் அதைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்படும். இல்லையென்றால் அவர்கள் அதை மற்றச் செலவுகளுக்குப் பயன்படுத்தும் நிலைமை ஏற்படும். அதைத் தவிர்க்க இந்தக் கடன்களை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா? கடன்

மனுக் கொடுத்து ஒரு மாத காலத்திற்குள்ளாகக் கடன் தருவது அல்லது இல்லையென்ற பதிலை அளிப்பதற்கான நிலைமையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: ஏற்றுக் கொண்டிருப்பது மட்டுமல்ல, புதிய அரசு வந்த பிறகு நில அடைமான பாங்கியிலிருந்து கடன் பெறுவதில் முன்னால் இருந்த நிலைமைக்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்ள நிலைமைக்கும் உள்ள மாறுதலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது துரிதமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் விவசாயிகள் சென்று கடன் மனுக்களைக் கொடுக்கவேண்டியிருந்தது. தற்போது அதிகாரிகளே ஆங்காங்கு சென்று கடன் மனுக்களை வாங்கித் துரிதமாகக் கடன்களைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசாங்கம் மேற்கொண்டு துரிதப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்**: விவசாயிகள் கிணறு வெட்டுவதற்காக 2,000 ரூபாய்வரை தரப்படுகிறது. முதல் தவணையாக ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. கிணறு வெட்டும் பகுதி பாறையாக இருந்து தண்ணீர் வரவில்லை யென்றால் பாக்கித் தொகை ஆயிரம் ரூபாய் தரப்படுவதில்லை. முதலில் கொடுத்த தவணைத் தொகையையும் வெகு சீக்கிரம் வசூல் பண்ண ஆரம்பிக்கிறார்கள். அந்த மாதிரி இல்லாமல் சர்க்கார் அந்தக் கிணறுகளை முழுவதுமாக வெட்டிக் கொடுப்பதற்கு உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: இப்போதுள்ள நிலைமையில் உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்வதற்கில்லை.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி**: விவசாய அபிவிருத்திக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் கடன்களைப் பெற்று, அது எந்தக் காரியத்திற்காகப் பெறப்பட்டதோ அதற்குப் பயன்படுத்தப்படாமல் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு துஷ்பிரயோகப்படுத்தப்படாமல் இருக்க ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அதைக் கண்காணிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? ஊராட்சி ஒன்றியங்கள் விவசாய அபிவிருத்திக்காகக் குளங்களை ஆழப்படுத்துதல் போன்ற வேலைகளைச் செய்வதால் சர்க்கார் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கடன் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: குறிப்பிட்ட காரியங்களுக்காக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பணம் சில வேளைகளில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அதைக் கண்காணிக்க இருக்கக்கூடிய பொதுவான கண்காணிப்பே போதுமானது. அதற்காகக் குறிப்பிட்டுத் தனியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவ்வளவு சரியானது அல்ல. ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட வேண்டுமா என்பதைப்



பொறுத்துப் பார்த்தால் அவர்களுக்குரிய அதிகார வரம்பிற்குள் எந்தெந்த காரியங்களை மேற்கொண்டு செயல்படுத்த முடியுமோ அவற்றைச் செய்யலாம்.

*Festival Advance*

* 33 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to sanction festival advance to the Gazetted Officers also; and

(*b*) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: (அ) இல்லை, ஐயா.

(இ) இவ் வினா எழவில்லை.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether any representation has been sent by gazetted officers in this regard?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Gazetted Officers' Association has sent a petition regarding this demand.

THIRU T. MARTIN: When was such a representation sent by the Gazetted Officers' Association to this Government and so far what action has been taken by the Government on that representation?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: In October 1967 the Madras Secretariat Officers' Association requested the grant of Festival Advance to Gazetted Officers also. But the Government have negatived this request for the following reasons:—

(i) The commitments of the Government have now greatly increased by the grant of enhanced rates of dearness allowance on a par with the Government of India and the sanction of the City Compensatory Allowance to the employees within the limits of Madras City and Madurai and belt areas of Madras City. The Government's financial position does not permit of any extension of the scheme of advances to Gazetted Officers.

(ii) The scheme of Festival Advance to the non-gazetted Government Officers in 1956-57 was granted when Government was not able to give substantial concessions in respect of dearness allowance, pay etc. and it was considered that any concession once given has a tendency to perpetuate itself.

(iii) The Government should not encourage Gazetted Officers also to get into debt.

**தனுஷ்கோடிக்கருகில் மீனவர்கள் உயிரிழப்பு**

* 26 வினா. திரு. டி. மார்டின்: மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 14—8—1968-ல் தனுஷ்கோடிக்கு அருகில் மீன் பிடிப்பதற்காக சென்ற மீனவர்களில் சுமார் 13 பேர் உயிரிழந்தனர் என்பது உண்மையா?

[1969 பிப்ரவரி 24

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட மீட்புப் பணியின் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) & (இ) 14–8–1968-ம் நாள் காலையில் மீன் பிடிப்பதற்காகத் தனுஷ்கோடியிலிருந்து பதினைந்து மீனவர்கள் தோணி ஒன்றில் புறப்பட்டனர். அதே நாள் மாலைவரையில் அவர்கள் கரைக்குத் திரும்பவில்லை. காணா மற்போன தோணிபற்றிச் செய்தி கிடைத்ததும், இராமேசுவரம் அண்மைக் கடல் மீன்பிடிப்பு நிலையத்திலுள்ள மீன் துறைப் படகுகளும், பிற தனியார் விசைப் படகுகளும் காணாமற்போன மீனவர்களைத் தேடும்பொருட்டு உடனடியாக அனுப்பப்பட்டன. 1968, ஆகஸ்டு 15-ல் மீன் பிடிப்பதற்காகச் சென்ற பிற எல்லாப் படகுகளும், காணாமற்போன படகைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டன. கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீன் துறைப் பணியாளர்கள், இதுகுறித்து விழிப்பாக இருக்கு மாறு தந்திமூலம் அறிவிக்கப்பட்டனர். உள்ளூர்த் துறைமுக அதிகாரியும், இந்தியக் கப்பல் கட்டும் நிறுவனத்தினரும் இது குறித்து விழிப்பாகக் கண்டறியும்படியும் மீனவர்களைத் தேடிக் காணுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சென்னை, வணிகக் கப்பல் துறையின் தலைமை அதிகாரிமூலம் அப்பகுதியிலுள்ள கப்பல்களும் கம்பியில்லாத் தந்திச் செய்தி வாயிலாக இதுகுறித்து விழிப்பாயிருக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டன. 15—8—1968-ல் இராமேசுவரத்திற்கு அப்பாலுள்ள கடலில் இரண்டு மீனவர்கள் மீட்கப்பட்டனர். கவிழ்ந்துகிடந்த அவர்களது படகு தனுஷ் கோடிக்கு அப்பால் இராமன்தாடை என்னுமிடத்திற்கு அருகில் 15–8–1968 மாலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

காணாமற்போன மீனவர்கள் இலங்கைக் கடற்கரையில் கரை யேறினரா அல்லது மீட்கப்பட்டனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவருக்கு இதுபற்றி எழுதிக் கேட்கப்பட்டது.

கெயிட்ஸ் அருகே அழுகிய நிலையில் 12 சடலங்கள், ஆகஸ்டு 19 அன்று காணப்பட்டன என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் அறிவித்துள்ளார். சவ ஆராய்ச்சிக் குழுவினரால் சடலங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அவை புதைக்கப்பட்டன. கெயிட்ஸில் காவல்துறையினர் செய்த புலனாய்வில் அச் சடலங்கள் இந்திய மீனவர்களே என்பது தெரிய வந்தது. எஞ்சியுள்ள மீனவர் ஒருவர்பற்றித் தகவல் இல்லை.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, 16—8—1968-ல் அந்தச் செம்படவர்கள் தங்கள் தொழிலிற்காக போவதற்கு முன்பு புதிதாகக் கடலில் ஒரு புயல் உருவாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைப்பற்றி அந்தக் கிராமத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டு அறிக்கை விடப்பட்டதா? அவ்வாறு அறிக்கை விடப்படவில்லை என்றால், அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்யவில்லை என்று அவர்கள்மீது நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டதா?



1969 பிப்ரவரி 24]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இது எதிர்பாராத நிலையில் ஏற்பட்டது. அபாயம் ஏற்படுமென்று தெரிந்தால் ஒவ் வொரு சமயத்திலும் முன் அறிவிப்பு, எச்சரிக்கை செய்யப்படு கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** தனுஷ்கோடி கடற்கரையோரப் பகுதிகளில், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கிறபோது இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா, மீனவர்கள் உயிரிழப்பு பற்றியது.

**திரு. கரு. சீமைச்சாமி:** கடத்திச் சென்று விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் செல்கிறபோது மரணம் ஏற்படு கிற விதத்தில் சில காரியங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிக் கடத்திச் செல்கிற சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கிற விதத்தில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மீன் பிடிக்கப் போன வர்கள் கடலில் மூழ்கி அவர்கள் சடலங்கள் ஒதுங்கியதாகத்தான் தகவல் இருக்கிறதே தவிர, அவர்கள் கடத்திச் செல்லப்பட்ட தாகத் தகவல் இல்லை.

### பாக்குச் செடிப்பண்ணைகள்

* 34 வினா.—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பாக்குக் கன்றுகள் வளர்க்கும் நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

(இ) இவற்றில் ஆண்டொன்றுக்கு எத்தனை கன்றுகள் வளர்க்கப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) கீழ்க்கண்ட இடங் களில் பாக்குச் செடிப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன:—

பழ ஆராய்ச்சி நிலையம், கன்னியாகுமரி.

மாதிரிப் பழத் தோட்டம்—செடிப்பண்ணை, குற்றாலம்.

மாதிரிப் பழத்தோட்டம்—செடிப்பண்ணை, பெரியகுளம்.

பழ ஆராய்ச்சி நிலையம், கல்லார் மேட்டுப்பாளையம்.

பாக்குச் செடிப்பண்ணை, கடலூர்.

(இ) இந்தச் செடிப்பண்ணைகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

**திரு. பெ. மலைச்சாமி:** இங்கு உற்பத்தியாகக்கூடிய பாக்குக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா? ஆமெனில், இதனால் வருகிற வருவாய் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் டாக்குக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதாகத் தகவல் இல்லை. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லக்கூடும். ஆனால் இங்கே சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில்தான் பெருவாரியாக—திருநெல்வேலியில் ஒரு பகுதியிலும்—இந்தக் கன்றுகள் வளர்க்கப்பட்டு, இந்தப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

### புதுக்கேசாபுரம் சோதனைச் சாவடி

* 35 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா புது கேசாபுரம் செக் போஸ்டில் (உணவு தானிய பரிசோதனைச் சாலை) அநீதி நடைபெற்றதைக் குறித்து 6—9—1967-ல் அத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடம் இருந்து புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் இருவர் அரிசி எடுத்துச் சென்றதால் அரிசி கைப்பற்றப்பட்டது. விதிகளுக்கிணங்கியே இந்தப் பறிமுதல் செய்யப்பட்டதால், புகார் மனு மீது நடவடிக்கை எதுவும் எடுக்க அவசியம் ஏற்படவில்லை.

### *Mixture of Cow's and buffaloe's milk*

* 36. *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether a new microbiological product consisting of dead bacteria, coloured with a stain, has been discovered to detect adulteration of cow's milk with buffaloe's milk?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம். எருமைப் பாலுடன் பசும் பால் கலப்படம் செய்யப்படுவதை கண்டுபிடிப்பதற்கென ஒரு பரிசோதனை முறை உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், எருமைப் பாலில் 10 சதவீதம் வரை பசும் பால் கலப்படம் செய்யப்பட்டிருப்பதை மட்டுமே இப் பரிசோதனை முறை மூலம் கண்டுபிடிக்க இயலும்.

THIRU K. VINAYAKAM: Sir, was any prize given to the person who was responsible for the discovery of this microbiological product consisting of dead bacteria coloured with a stain? If so, is this practice introduced to detect people who are committing this kind of offence?



மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த அதிகாரி அந்த விதமான நிதி கோரியதாகத் தகவல் இல்லை. அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் அவர் ஏதாவது கோரிக்கை விடுத்திருக்கிறாரா, அதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பவற்றைத் தெரிவிக்கலாம்.

திரு. கே. போஜன்: எருமைப் பாலுடன் பசும்பாலைக் கலப்பது ஒரு குற்றமாகக் கருதப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கண்டிப்பாக. எருமைப் பாலின் விலை அதிகம், பசும் பால் விலை குறைவு. ஆகவே, பசும் பாலை எருமைப் பாலோடு சேர்த்து எருமைப் பால் என்று விற்பதினால் அதை வாங்கக்கூடிய பொது மக்கள் பாதிக்கப்படுவதால் இது குற்றமாகக் கருதப்படும்.

திரு. ஏ. ஆர் சுப்பையா முதலியார்: அடல்ட்ரேஷன் என்றால் கெடுதி இருந்தால்தான் அடல்ட்ரேஷன். பசும்பாலை எருமைப் பாலோடு கலப்பதால், அதை மக்கள் சாப்பிடுவதால் கெடுதி ஏற்படுவதில்லை. எனவே அடல்ட்ரேஷன் என்ற தன்மையில் அது வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பெர்செண்டேஜ், எந்த அளவிற்குக் கலக்கப்படுகிறது, அதனால் உடம்பிற்குக் கெடுதியா இல்லையா என்பதல்ல பிரச்னை. இங்குள்ள பிரச்னை கலப்படம் செய்யப்படுகிறதா என்பது. அப்படிக் கலப்படம் செய்வதால் அதிக வருவாய் தேடும் முயற்சியில் ஈடுபடுவதால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM: As regards this new process of detecting the mixture of buffaloe's milk with cow's milk, is this being tested and if so how many culprits have been sent to Courts of Law and fined?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கலாம்.

திரு. என். துரைபாண்டியன்: தலைவரவர்களே, பசும்பாலோடு நல்ல தண்ணீரைக் கலப்பதால் உடம்பிற்குக் கெடுதல் இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த முயற்சியில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஈடுபடாமல் இருக்க வேண்டும். அது பொதுமக்களுக்கு விரோதமான செயல். அப்படி யாராவது செய்தால் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Family Planning Scheme*

* 37 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether there is any proposal under consideration to introduce mobile sterilisation units in this State?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

* 38. *Q.*—THIRU GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether women promoters are to be appointed under I.U.C.D. schemes in hospitals ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட அல்லது கருத்தடை வளையங்களைப் பயன்படுத்தி வருகிற எழுதப் படிக்கத் தெரிந்த, நன்னடத்தையுள்ள மணமான மகளிர், கருத்தடை அறுவை சிகிச்சையை ஊக்கப்படுத்தும் பணியாளர்களாக நியமிக்கத் தகுதி பெறுவர்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட பெண் பிரசாரகர்களை நியமிப்பதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாட்டு வேலை நல்ல முறையில் வெற்றி பெற்றிருக்கிறதா? அது விஷயமாகப் புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இதன் மூலமாக நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் அந்தப் புள்ளி விவரங்கள் என் கையில் இருக்கவில்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, பிரதம சுகாதார நிலையங்களின் மூலமாக மிகவும் வெற்றிகரமான முறையில் குடும்ப நலத் திட்டம் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானால் பிரதம சுகாதார நிலையங்கள் தொடங்கப்படாத மற்ற ஒன்றியங்களிலும் அவற்றைத் தொடங்க மத்திய அரசின் நிதி உதவியோடு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இதற்கான செலவினங்களைப் பூராவும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ளுகிறது. மேலும் விரிவுபடுத்த இந்த அரசாங்கம் முனைந்து கொண்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM: What is the remuneration paid to these women promotors under the scheme of Intra-Uterine Contraceptive Device?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்தப் பெண்களுக்கு, ஒரு தாய் கருத்தடை செய்துகொண்டால் ஒரு ரூபாய் வீதம் தரப்படுகிறது.



**திரு. ஆர். நாகசுந்தரம்:** ஐயா, குடும்பக் கட்டுப்பாட்டைப் பல வகைகளிலும் நமது அரசு மட்டும் அதிதீவிரமாகச் செயல்படுத்தி அதற்காக மத்திய அரசால் பாராட்டப்படுகிறது. அதனால் வரவர மக்கள் தொகை குறைந்து பாராளுமன்றத்தில் நமக்குள்ள இடமும் குறைகிறது. மேலும் மத்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்கள் தொகையைப் பொறுத்து பங்கீடு செய்யப்படுவதால் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்த வகையில் நமது அரசாங்கத்திற்கு எந்தவித கெடுதலும் இல்லை என்ற காரணத்தால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முழு முயற்சியோடு வெற்றிகரமாக இருக்கும்படி செய்து வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, ஒரு சில வாலிபர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு வயது ஆகாமலேயே அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். இதை அரசாங்கம் தடுக்கவில்லையா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படியேதும் இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் நடைபெற்றால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை, அறுவை சிகிச்சை முறை நல்ல முறையில் நடைபெற்று அதற்கான பலனும் கிடைத்திருக்கும் இந்த நேரத்தில், அதுபற்றிய பிரச்சாரங்கள் பல நேரங்களிலே மிகவும் வருந்தத்தக்க வகையில், அருவருக்கத்தக்க முறையில் இருக்கிறது. அதைத்தடுக்க அரசு முயற்சி எடுக்குமா? உதாரணமாக, நம்முடைய தலைநகரில் நடைபெற்ற குடியரசு தின விழாவிலே குடும்பக்கட்டுப்பாட்டை விளக்கும் ஒரு வண்டி மிகவும் அருவருக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. இதுபோன்றவற்றைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்த ஊர்வலத்திலே குடும்பக்கட்டுப்பாட்டை விளக்கும் அந்த வண்டி எல்லோருடைய பாராட்டையும் தனியாகப் பெற்றது. காங்கிரஸ் தலைவர்கள்கூட கைதட்டி ஆரவாரத்தோடு அதைப் பாராட்டினார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, தமிழகத்திலே ஆசிரியர்களுக்குத்தான் அதிகமாகக் குழந்தைகள் பிறக்கின்றன என்ற கருத்து இருக்கிறது. எனவே, ஆசிரியர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சட்டபூர்வமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** எல்லோரையும்விட ஆசிரியர்கள் இதை நன்கு உணர்ந்திருப்பார்கள். அவர்கள் படித்தவர்கள். எனவே, இதற்கென தனியாக எந்தவிதப் பிரசாரத்தையும் செய்ய வேண்டியிராது என்று கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஆட்களைக் குறைக்கும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் 5 வருஷத் திட்டத்தில் ஆட்களின் எண்ணிக்கையைக் கொண்டு பணம் கொடுக்கப் படுவதால் இந்தக்கொள்கையை மறுபரிசீலனை செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை ஏற்கனவே போட்டுவிட்டார்கள்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்கு அநேகர் முன்வந்திருக்கிறார்கள். சர்க்கார் மருத்துவமனைகளில் செய்து கொள்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தனிப்பட்ட மருத்துவர்களிடமும் நிறையப்பேர் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்கிறார்கள். அந்தக் கணக்குகளும் அரசாங்கத்திற்குக் கிடைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

### வனஸ்பதி தொழிற்சாலை, விழுப்புரம்

* 39 வினா—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலுள்ள மதராஸ் வனஸ்பதி தொழிற்சாலைக்கு அரசாங்க உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதில் உற்பத்தியாகும் பொருள் என்ன ?

(உ) அந்தத் தொழிற்சாலை சில மாதங்களாக எந்த உற்பத்தியும் செய்யாமலிருப்பதற்குக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 10 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

(இ) இந்தத் தொழிற்சாலை இருமுறை தூய்மைப்படுத்தப்பட்ட 'மாவன்' என்னும் உணவு எண்ணெயை 1—12—1967 தேதியிலிருந்தும் வனஸ்பதியை 1968 ஏப்ரலிலிருந்தும் தயாரித்து வருகிறது.

(உ) பணமுடை ஏற்பட்டதால் இத் தொழிற்சாலை சிறிது காலத்திற்குச் செயல்படாமலிருந்தது. மேலும் அப்போதிருந்த தலைவராகிய திரு. C.P. சின்ஹா அவர்கள் 22—6—1966 நாளன்று திடீரென்று இறந்து விட்டார். எனவே, திரு. C.P. சின்ஹா அவர்களின் உறுதிமொழி மீது வங்கி வணிகர்கள் கொடுத்து வந்த கடன் உதவியைத் தொடர்ந்து பெற முடியாமல் போய்விட்டது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவது புகையிலையிலிருந்து எடுக்கப்படக்கூடிய ஒருவிதமான எண்ணெய். அந்த



எண்ணெய்க்கும் வனஸ்பதி போன்ற உணவுச் சத்து எண்ணெய்க்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது தனியார் நிறுவனம். அந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டாம்.

திரு. எம். சண்முகம் : தலைவரவர்களே, சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவிட்டு ஏற்பட்ட அந்தத் தொழிற்சாலை செயல்படாமல் இருந்து வருகிறது. அதை அதனுடைய உரிமையாளர்கள் எடுத்து நடத்த பண வசதி இல்லாததால் இதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, கூட்டுறவுத்துறையிலாவது நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1948-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நிறுவனம். அதை நடத்துபவர்கள் சரிவர நடத்தாத காரணத்தால் இழப்பு ஏற்படுகிறது. நாம் கொடுத்திருக்கக்கூடிய தொகையை, நன்கு பயன்படுத்தி நன்றாக நடத்த வேண்டுமென்று தள்ளிப்போட்டுக் கொண்டு வருகிறோம். அப்படியிருக்கும் பொழுது அந்த நஷ்டத்திலே நாமும் ஈடுபடலாமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, தனியார் துறையில் தனியார் செய்யக்கூடிய பொருளைப்பற்றி நாம் தலையிட முடியாது என்ற கருத்தில் அமைச்சரவர்கள் கூறினார்கள். வனஸ்பதி உற்பத்தி செய்வதாக 'லைசென்ஸ்' பெற்று, ரூபாய் பத்து இலட்சத்தை அரசினிடமிருந்து கடனாகவும் பெற்று புகையிலையிலிருந்து எடுக்கக்கூடிய எண்ணெயை உற்பத்தி செய்தால் அது அரசாங்கத்தை ஏமாற்றுவதாக ஆகாதா? அதைத் தடுக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் 'லைசென்ஸ்' பெற்று நடத்துகிறார்கள். வனஸ்பதி தயாரிக்க முயற்சித்தவர்கள் அதிலே தோல்வி கண்டு, முதலீட்டுப்பணத்தினால் வேறு எப்படியாவது லாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற முறையிலே அவர்கள் ஈடுபட்டிருக்கலாம். அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கிடையாது.

Dr. H. V. HANDE : Is there no power to the Government to prevent such malpractices, taking licence for one particular manufacture and after taking the licence and keeping it run for some time, transform the work and completely change the work for which they had originally obtained the licence? Is there no power to book these people and take criminal action against them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த மாதிரி தகவல் இல்லை என்று சொன்னேன். எங்களிடத்திலுள்ள தகவலின்படி, doubly-refined edible oil என்பதையே அவர்கள் உற்பத்தி செய்வதாக இருக்கிறது. லைசென்ஸ் கொடுப்பது, அதை மீறுவது எல்லாம்

[1969 பிப்ரவரி 24

எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. நாம் உதவி செய்கிறோம். உதவி செய்த பணம் வீணாகாமல், பணத்தைத் திருப்பிக் கட்டினால் போதும் என்பதுதான் நம் எண்ணம்.

### மணப்பாறையில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்

* 40 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தனி தாலுகாவாக மாற்றப்பட்ட பிறகு அங்கு தனியாக சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்று துவங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, மணப்பாறையிலுள்ள மக்கள் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் திருச்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் நெடுந்தூரம் செல்வதால் பல நாட்களை வீணாக்க வேண்டியிருக்கிறது. இதை நம்முடைய அரசாங்கம் பரிசிலனை செய்து மணப்பாறையில் இனிமேலாவது கோர்ட்டுகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மணப்பாறையிலிருந்து திருச்சிக்கு 22 மைல்கள் தான். ஏராளமான பஸ்கள் ஓடுகின்றன.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அரியலூரில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நிறுவுவதற்கும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுபற்றித் தகவல் இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோர்ட்டுகள் நிறுவும்பொழுது எந்த அடிப்படையிலே உரிமை வழங்கப்படுகிறது? தாலுகாவிற்கு ஒன்று என்ற அடிப்படையிலா? மக்கள் தொகை அடிப்படையிலா? தேவையின் அடிப்படையிலா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு வட்டாரத் தலைநகரிலே இது போன்ற நீதிமன்றம் இருக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. ஆனால், நீதிமன்றம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னாலே உயர்நீதி மன்றம் கலந்தாலோசிக்கப்படுகிறது. அவர்கள் அந்த ஊரிலே நீதிமன்றம் ஏற்படுத்தினால் போதிய வழக்குகள் இருக்கும், நாம் செலவழிக்கக்கூடிய தொகைக்குப் பயன் கிடைக்கும் என்று முடிவு கூறினால் அது பரிசீலிக்கப்படும்.



1969 பிப்ரவரி 24]

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** தலைவர் அவர்களே, மதுரையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கோர்ட்டு கட்டிடங்கள் வேலை எப்பொழுது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஜூன் மாதம் நீதிமன்றங்களைத் திறக்கும்பொழுது அதை முடித்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் மாடிக் கட்டிடங்கள் இன்னும் முடிவடையாமல் இருப்பதால் சில மாதங்கள் அதிகம் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

### *Establishment of Sugar Mills*

* 41 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether three more sugar mills are to be started in Tamil Nadu this year (1968);

(*b*) if so, whereat and on what basis (either under public or co-operative sector, or private sector); and

(*c*) the quantum of Central assistance for these mills?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இல்லை.

THIRU K. VINAYAKAM: A press communique has been issued by the Ministry under reference that three more sugar mills will be established in Tamil Nadu. If so, is what the Minister says correct or is the press communique correct?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டும் சரி, நம்முடைய கனம் அங்கத்தினரவர்கள் கேள்வி கேட்டிருப்பது 1968-ம் ஆண்டிற்குத்தான். ஆகவே, இல்லையென்று சொன்னேன். நமது அரசைப் பொறுத்த அளவிற்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவு முறையிலே அமைப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டிருக்கிறது.

**திரு. ந. வீராசாமி:** தலைவர் அவர்களே, அப்படித் துவக்க இருக்கிற மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் 2 ஆரம்பிக்கப் போவதாக கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த இரண்டையும் எந்த எந்த இடத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அனுமதி கிடைத்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** மதுரையில் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் ஓடுவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுகிற அந்த அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நன்றாக நடக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : சர்க்கரை போதிய அளவுக்குக் கிடைக்க வேண்டுமென்பது வேறு, ஒரு தனிப்பட்ட ஆலையிலே தவறுகள் இருப்பது வேறு. அலங்காநல்லூர் ஆலையிலே தவறுகள் இருப்பது உண்மை. அதைப் போல் வேறு சில ஆலைகளும் இருக்கிற காரணத்தால் ஒரு போர்டு மெம்பர் அதை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே பல ஆலோசனைகள், இதுபோன்ற சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *Industrial Estates*

*42 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the number of Government Industrial Estates yet to be opened and the reasons for the delay in opening them?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழில் பேட்டைகளில், சேலம் தொழில்பேட்டை தவிர, மற்றவை யாவும் திறவப்பட்டு விட்டன. சேலம் தொழில்பேட்டை சம்பந்தமாக நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளதால், நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முடிவடையாமல் உள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பதின்மூன்று தொழில்பேட்டைகளும் மூன்றாவது திட்டத்தில் முழுதும் நிறைவேற்றப்படாமல் தொடர்ந்து வரும் ஒரு திட்டமும் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கட்டுமான வேலைகள் முடிந்த பிறகு அவை ஏற்படுத்தப்படும். இவற்றை நிறைவேற்றுவதில் கால தாமதம் எதுவுமில்லை.

*43 வினா.—**திரு. சு. துரைசாமி**: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர், அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

*44 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to open an Industrial Estate at Hosur ; and

(*b*) when it will be started?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) தொழில் பேட்டை அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. நிலத்தைக் கைவசப் படுத்திக் கொண்டதும், இத்தொழில் பேட்டையில் கட்டிட வேலைகள் தொடங்கும்.

THIRU B. VENKATASWAMY : Sir, in most of the places industrial estates have not yet been opened. So many people who have been trained in the Industrial institutes are unemployed. So, will this Government consider the desirability of opening all the proposed industrial estates urgently?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டு களை நாம் திறந்து வைத்தவுடன் வேலை கிடைக்கும் என்பதல்ல. அதை ஒவ்வொருவரும் தனியாக எடுத்து நடத்த வேண்டும். நமது மாநிலத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அத்தனை தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டு விட்டன. 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே முடிவடைய இருக்கிற 13 தொழிற்பேட்டைகள் பல நிலைகளிலே (ஸ்டேஜஸ்) இருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னார்கள். திருப்பூர் நகரில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் இருக்கிறார்கள். பத்து பஞ்சாலைகள், பல பனியன் பாக்டரிகள், இன்னும் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே தொழிற்பேட்டை ஏற்படுத்தினால் அங்கே பல தொழில்களைத் துவங்குவதற்கு மக்கள் முன்வருவார்கள். ஆகவே, அரசாங்கம் அதற்குத் தனியான நடவடிக்கை எடுத்து நான்காவது ஐந் தாண்டு திட்டத்திலே அதைச் சேர்த்து, திருப்பூரில் ஒரு தொழிற் பேட்டை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அங்கத்தினரவர்கள் தன்னுடைய தொகுதியினை தொழிற்பேட்டை நகராக்க முயற்சிப்பது பாராட்டுக்குரியதாகும். ஆனால், இப்பொழுது இருக்கிற அரசாங்கத்தின் திட்டப்படி ஒரு ரெவினியூ டிவிஷனுக்கு ஒன்று என்ற அடிப்படையிலே ஆரம்பித்திருக்கின்றோம். திருப்பூர் எந்தப் பகுதியிலுள்ளதோ அந்தக் கோட்டத்தில் (டிவிஷனில்) ஏற்கனவே ஒன்று இருக்கிறது. ஆகவே இப்பொழுது முடியாது.

**திரு. சோ. அழகர்சாமி** : ஐயா, இப்பொழுது இருக்கக்கூடிய தொழிற்பேட்டைகளிலே பல தொழில்கள் ஆரம்பிக்காமல் இருப்பதால், சும்மா இருக்கக்கூடிய நிலை இருப்பதால் அங்கு தனியார் ஆரம்பிக்கவில்லை என்றால், அரசாங்கமே அந்த இடத்திலே தொழில்கள் ஆரம்பிக்க முடியுமா? அல்லது இப்பொழுதுள்ள தொழில் பேட்டைகளிலே புதிதாகத் தொழில்களைக் கூட்டுவதைப் பற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அரசாங்கம் ஏற்றாலும் அதே கவலை நிலை ஏற்படத்தான் செய்யும். ஆனால் ஒவ்வொரு தொழிற் பேட்டையையும் நாம் தேர்ந்தெடுத்து அதை ஏற்படுத்தும்போது

அங்கேயுள்ள மக்கள் ஆர்வமாக முன் வந்து தொழிலை நடத்துவார்களானால் நாங்கள் பலவாறாக அவர்களுக்கு உதவிகள் செய்கிறோம். அங்கத்தினரவர்கள் எந்தப் பகுதியிலாவது அப்படி இருப்பதாகத் தகவல் தெரிவிப்பாரானால் அங்கு ஆரம்பிக்க முயற்சி எடுக்கலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டை கட்டி முடிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாகியும் ஒரு தொழிற்சாலை கூட ஆரம்பிக்காமல் முடங்கிக் கிடக்கின்றதே, நமது அரசாவது நடவடிக்கை எடுத்து ஒருசில தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. ஆனால், கனம் அங்கத்தினரவர்கள் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் தூத்துக்குடி வளர்ந்து வரக்கூடிய ஒரு நகரம். இப்பொழுது புதிய தொழில்கள் எல்லாம் வர இருக்கின்றன. அவரே முயற்சி செய்து, கூட்டுறவாளர்களை எல்லாம் சேர்த்து, தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் அரசாங்கம் தயங்காது உதவி செய்யும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஃபிட்டர் கோர்ஸ், மோட்டார் மெக்கானிக் கோர்ஸ் போன்று பல்வேறு தொழிற் பயிற்சிகள் இருக்கின்றன. இவைகளில் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான மாணவர்கள் நமது மாநிலத்தில் வேலையின்றித் தவிக்கிறார்கள். அவர்களுக்கு வேலை அளிப்பதற்கு இந்த அரசு ஏதாவது திட்டங்கள் வகுத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிற்குப் பொதுவான ஒரு விஷயமாகும். நம்முடைய நாட்டில் மட்டும் அல்ல, பல நாடுகளிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துகொண்டு வருகிறது. 'எஜுக்கேட்டட் அன்எம்ப்ளாயிமெண்ட்'-டைத் தீர்க்க வேண்டுமென்ற நிலையிலே நாம் கற்றறிந்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஐந்தாண்டு திட்டங்களிலெல்லாம் பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். புதிய புதிய தொழிற்சாலைகள் பல துவக்கப்பட்டுவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் தீர்ந்துவிடும்.

**திரு. மு. கந்தசாமி படையாச்சி:** தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் இருக்கும் இடங்களிலே, நமது உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டி இருக்கிற காரணத்தாலே, டிராக்டர்கள் செய்யும் தொழிற்சாலையை அரசு அங்கெல்லாம் ஆரம்பிக்குமா? அதை ஆரம்பிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? டிராக்டர்கள், மற்றும் மெஷின்கள் செய்யும் தொழிற்சாலைகளை அந்தத் தொழிற்பேட்டைகள் உள்ள இடங்களில் ஆரம்பிக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** டிராக்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தனியார் துறையிலே இருக்கிறது. 'Agro-based industries' மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய, தேவையான கருவிகளைச் செய்வதற்கு ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் வசதி அளிக்க வேண்டுமென்ற கருத்தை நமது அரசாங்கம் திட்டக் குழுவினிடத்திலே அடிக்கடி வலியுறுத்தி வருகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி:** சார், தொழிற்சாலைகள் அமைப்பது மாவட்ட ரீதியிலா? மக்கள் அடிப்படையிலா? அல்லது பொருளாதாரத்திலே பின்தங்கிய மாவட்டங்கள் என்ற அடிப்படையிலா? தஞ்சை, திருச்சி போன்ற பகுதிகள் விவசாயத்தையே பெரும் தொழிலாகக் கொண்டிருக்கின்ற பகுதிகள். ஆகவே, இந்த மாதிரி ஜில்லாக்களில் தொழிற்பேட்டைகளை அமைத்து, அந்த மக்களுக்கு மாற்றுத் தொழில் கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே கூறியபடி ரெவினியூ டிவிஷன் என்ற அடிப்படையிலே ஏற்படுத்தவேண்டுமென்று திட்டம் இட்டிருக்கிறார்கள். ஆனால், தொழில்கள் பரந்து அமையவேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம். அவைகளைத் துவங்குவதற்குத் தேவையான பல வசதிகள் சில நகரங்களில் கூடுதலாக இன்றைக்கு இருந்து வருகின்றன. நமது முயற்சி தொடருமானால் நாடு முழுவதும் தொழிற்சாலைகள் அமைக்கக் கூடிய நிலை உருவாகும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, மூலப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும், இலாப விகிதக் குறைவினாலும், மக்களிடையே வாங்கும் சக்தி குறைந்து வருவதினாலும் தொழிலில் ஒரு சீரழிவும், தேக்கமும் ஏற்பட்டு வருகிறது என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தக் கொள்கை சம்பந்தமாக மத்திய அரசு மாறுதல் கொண்டு வந்தால்தான் தொழில் வளர்ச்சி அடைய முடியும் என்று நம்முடைய அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? அப்படி ஏதாவது ஆலோசனை கூறவேண்டும் என்ற யோசனை இருந்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழில் மந்தத்திற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. இதைப்பற்றி தேசீய அபிவிருத்திக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டு, காபிடல் மார்கெட் கொஞ்சம் நல்ல நிலையில் நம்முடைய நாட்டில் உருவாகி வருகிறது. புதுப்புது தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற ஆசை இப்பொழுது நம்முடைய மக்களிடையே ஏற்படவேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குப் புதிய வசதிகளை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. எம். ஆர். கண்ணன்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகளில் தனியார்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கட்டிடங்களைக் கட்டுகிருர்கள். அந்த நிலம் அவர்களுக்கு உரிமையாக்கப்படாததால் அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக அந்தக் கட்டிடத்தை வைத்து கடன் வாங்க முடியவில்லை. இந்த நிலைமையை மாற்றி அமைத்து, அவர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு, அந்த நிலத்தை அவர்களுக்கு விற்பனை செய்வதற்கு வழி வகை செய்ய சர்க்கார் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### அண்ணமங்கலம் பெரிய ஏரி

*45 வினு.—**திரு. ரா. ரா. முனுசாமி**: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அண்ணமங்கலம் கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை, தூர்ந்துவிட்டபடியால், ஆழப்படுத்த உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா**: (அ) அவ்வித செயற்குறிப்பு ஏதுமில்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

### மஞ்சமலை ஓடைத் திட்டம்

*46 வினு.—**திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையபட்டி அருகில் மஞ்சமலை ஓடைத் திட்டம் என்னும் அணைக்கட்டுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குக் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா**: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

**திரு. பி. எஸ். மணியன்**: இது போன்ற அணைக்கட்டு திட்டங்களில் ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 3,000-க்குக் குறைவாக செலவு செய்யவேண்டும் என்ற அரசாங்கத்தின் சட்டம் பல வருடங்களாக இருந்துகொண்டுவருகிறது. இது போன்ற நல்ல திட்டங்கள் பல ஓவர்-எஸ்டிமேட் என்ற காரணம் காட்டப்பட்டு, கைவிடப்படுகின்றன. இப்பொழுது உள்ள நிலவரத்தை ஒட்டி, ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 5,000 அல்லது ரூ. 6,000 செலவு செய்வதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்ட அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டம் இல்லை. நிலக்கோட்டை வட்டத்தில் வலையப்பட்டி கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே ஒரு புதிய குளத்தை வெட்டுவதற்கான திட்டத்திற்கு மதிப்பீடும், வரைபடங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.15 லட்சத்தில் இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

### *Bridge across Arasalar at Sakkottai.*

* 47. *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Regulator-*cum*-Road Bridge at Sakkottai, south of Kumbakonam Municipal limits, across the Arasalar is in safe condition; and

(*b*) if not, whether there is any proposal to repair and widen it?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா**: (அ) ஆம்.

(இ) இவ்வினுவிற்கிடமில்லை.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர்**: இந்தப் பாலமானது 1967-ம் வருடம் வந்த வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டு, திறக்கப் படாமல் அதே நிலையில் இருக்கிறது. அதைச் செப்பனிடுவதற்கும் அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதினுல் அந்தப் பாலத்தை அகலப் படுத்துவதற்கும் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: இது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இல்லை. பாலத்தை விரிவுபடுத்துவதற்கான உத்தேசம் தற்சமயம் இல்லை.

### நெய்வேலியில் தொழிலாளர் போராட்டம்

*48 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்**: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் 1967 ஜுன், ஜுலையில் தொழிலாளர் போராட்டம் நடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: (அ) ஆம். நெய்வேலியிலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 17—7—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) பூரிப்பூதியம், அகவிலைப் படி முதலியவை வழங்குவது குறித்து மூன்று தொழிலாளர் சங்கங்கள் 1967-ம் ஆண்டின் முற்பகுதியில் 19 கோரிக்கைகள் அடங்கிய பட்டியலைக் கொடுத்தன.

இந்தக் கோரிக்கைகள் பற்றி நிர்வாகத்தினருடன் கலந்து பேசியதில் எந்தவிதமான உடன்பாடும் ஏற்படாததால் தொழிலாளர்கள் 17—7—1967 அன்று இரவு 10 மணி அளவில் வேலைநிறுத்தம் செய்தனர்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த 19 அம்சக் கோரிக்கை அடிப்படையிலே போராட்டம் இல்லாமல் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் காலஞ்சென்ற நமது முதல் அமைச்சர் அவர்களே நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரிலே அழைத்துச் சொன்னதை ஏற்றுக்கொண்டு போனார்கள். ஆனால், மத்திய சர்க்கார் தலையீட்டின் காரணமாக மீண்டும அது போன்று தீர்த்து வைக்க முடியாது என்று மறுத்ததின் விளைவாக அந்தப் போராட்டம் வந்தது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைப்பற்றி தகவல் என்னிடம் இல்லை. பத்தொன்பது கோரிக்கைகள் வேண்டும் என்று கொடுத்தார்கள். அதில் ஒன்று மட்டும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏழு கோரிக்கைகள் ஏற்கப்பட்டு விட்டன. கிராசுவிடி பற்றிய கோரிக்கையைத் தொழிலாளர்கள் வற்புறுத்தாததினால் அது கைவிடப்பட்டது. பத்து கோரிக்கைகளை சர்க்கார் தேவையில்லை என்று நிராகரித்துவிட்டனர்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பெற்றுவந்த சலுகைகள் குறைக்கப்பட்டதன் காரணமாகவும், இந்திய அரசாங்கத்தின் பிடிவாதம் காரணமாகவும் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சமரசத்திற்கான முயற்சி எடுத்து, அந்த வேலைநிறுத்தத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்தார்கள். அதன் விளைவாக சில கோரிக்கைகள் நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கின்றன. எந்தக் கோரிக்கைகள் நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கின்றன ? அத்தனை கோரிக்கைகளும் நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நடுவர் தீர்ப்பிற்கு ஒன்று மட்டும்தான் விடப்பட்டிருக்கிறது. பாக்கி எந்தக் கோரிக்கையும் விடப்படவில்லை.

**திரு. சி. கோவிந்தராஜன்:** பத்தொன்பது கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, சிலவற்றை தொழிலாளர்கள் பிரஸ் பண்ணவில்லை. மீதிக் கோரிக்கைகள் தொழில் கோர்ட்டின் பரிசீலனைக்கு விடப்படும் என்று மாநில அரசு அளித்த உறுதியின் காரணமாகத்தான் ஸ்ட்ரைக் கைவிடப்பட்டது. ஆனால், போனஸ் சம்பந்தப்பட்ட ஒரு கோரிக்கைதான் தொழில் கோர்ட்டின் தீர்ப்பிற்கு விடப்பட்டது. இதர கோரிக்கைகள் இதுவரையில் தொழில் கோர்ட்டின் தீர்ப்பிற்கு விடப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?





**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** ஒன்று மட்டும்தான் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டது. பத்து கோரிக்கைகளை விடவேண்டும் என்று தொழிலாளர்கள் மனு தந்திருக்கிறார்கள். அது சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**திரு. ந. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாநில சர்க்கார் செய்யும் சிபார்சுகளை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால்தான், இப்படிப்பட்ட போராட்டம் நடைபெறுகிறது என்பதை அரசாங்கம் உணர்கிறதா? ஆம் என்றால், மாநில அரசாங்கத்தின் சிபார்சுகளை இனியாவது மத்திய அரசு ஏற்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பல முறை பேசப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இந்த அரசினால் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கடைசியில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரக்கூடிய சமயத்தில், நிர்வாகத்தினரும் ஊக்கம் கொண்டு, தொழிலாளர்கள் தலைவர்களும் ஊக்கம் கொண்டு, பேச்சு வார்த்தைகள் நல்ல விதமாக ஆரம்பிக்கப்பட்டபொழுது, திடீரென்று நிர்வாகத்தினர் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து 'இந்தப் பேச்சுவார்த்தைகளை நீங்கள் மேற்கொண்டு தொடரவேண்டாம்' என்று ஒரு தந்தி வந்திருப்பதாகச் சொல்லி, அந்தத் தந்தியை அவர்கள் அண்ணா அவர்களிடம் காட்டினார்கள். பேச்சு வார்த்தை தடைப்பட்டதால், அதற்குப் பின்னால் வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னால் மீண்டும் தலையிட்டு சமரசம் செய்வதற்கு முயற்சி செய்தோம். மத்திய அரசின் தனி நிறுவனம் இது. நமது அரசாங்கம் இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்டின் கீழ் அவர்களையும் ஒரு நிர்வாகத்தினர் என்று எடுத்துக்கொண்டு, சமரசம் செய்துவைப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

## தேவஸ்தான எக்சிகியூடிவ் அதிகாரிகளுக்குப் பயணப்படி

*49 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவஸ்தானங்களில் எக்சிகியூடிவ் ஆபீசர்களாகப் (Executive Officers) பணிபுரிபவர்களுக்கு T.A. கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லை எனில், காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** (அ) ஆம்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இந்தப் படி கொடுக்கப்படுகிறது என்றால், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1969 பிப்ரவரி 24

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** எம்.டி.ஏ. ரூல்களின்படி டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அது, கிரேடையும், சம்பளத்தையும் பொறுத்தது.

**திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான் :** தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுக்கோட்டையில் தேவஸ்தான ஊழியர்கள் மகாநாடு நடந்தது. அவர்கள் சில கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அரசாங்கத்திற்கு அந்த 'ரெப்ரஸென்டேஷன்' இன்னும் வந்து சேரவில்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, தேவஸ்தானங்களில் பணிபுரியும் எக்சிகியூடிவ் ஆபீஸர்களின் எண்ணிக்கை தற்பொழுது எவ்வளவு ? அவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தனிக் கேள்வி போட வேண்டும்.

*Ennore Thermal Scheme*

* 50 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Ennore Thermal Scheme is being undertaken by Madras Electricity Board near Madras City ; and

(b) if so, how does this scheme propose to dispose of the fly ash ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நாள் ஒன்றுக்கு
முற்பகல் 10-00 சுமார் 1200–1700 டன் அளவுள்ள சாம்பல் கிடைக்கிறது. மாநில வீட்டு வசதி வாரியம் நிறுவியிருக்கிற புரை கற்கலவைத் தொழிற்சாலையில் ( Cellular Concrete Factory ) பயன்படுத்துவதற்காக இதில் அன்றாடம் சுமார் 300 முதல் 400 டன் வரை சாம்பல் வழங்கவேண்டுமென்று அவ்வாரியம் கேட்டுள்ளது. எஞ்சிய சாம்பலை தாழ்ந்த பகுதிகளில் ஓரளவும் கடலில் ஓரளவுமாகக் கொட்டிவிடக் கருதப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Is not this fly ash which emanates from this Ennore Thermal Station injurious to the public health and was any representation received from the neighbouring people about this and if so, what action is being taken to prevent this kind of fly ash interfering with the public health of the people ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** பல்வேறு அதிகாரிகளையும் கலந்தாலோசித்துத்தான் அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு அமுலாக்கப்படுகிறது.



1969 பிப்ரவரி 24]

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, கடலில் கொட்டவிருக்கும் எரி சாம்பலை தனியார் செங்கல் சூளைக்கு உபயோகிக்க இந்தச் சாம்பலைக் கேட்டால், அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அதைப் பற்றிப் பரிசிலிக்கலாம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, இந்த எரி சாம்பல் விவசாயத்திற்கு உபயோகப்படுமா? அது நேரிடையாக இல்லாவிட்டாலும் வேறு ஏதாவது பொருள்களோடு கலந்து விவசாயத்திற்கு என்று வினியோகிக்க, சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அது விவசாயத்திற்குப் பயன்படாது என்பதுதான் இப்பொழுது உள்ள கருத்து.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் அனல் மின்சார திட்டத்திற்கு வெளி நாட்டு உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) புகளூர் சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்:—

"பாரி கம்பெனி நிர்வாகத்தின் கீழ் உள்ள புகளூர் சர்க்கரை ஆலையில் கடந்த ஜனவரி மாதம் 22-ம் தேதியிலிருந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தை சுமுகமாக முடித்து வைப்பதற்கு லேபர் கமிஷனர் தொடர்ந்து எடுத்து வரும் சமரஸ முயற்சிகளுக்கு மேற்படி பாரி கம்பெனி நிர்வாகிகள் உடன்படாத காரணத்தால் சுமார் 1,000 தொழிலாளர்கள், அந்தப் பிரதேசத்திலுள்ள கரும்பு உற்பத்தியாளர்கள், நூற்றுக்கணக்கான கரும்பு வெட்டும் கூலியாட்கள், கரும்பை ஏற்றிச் செல்லும் வண்டிக்காரர்கள் அனைவரும் ஒருமாத காலத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சர்க்கரைக்குத் தட்டு ஏற்பட்டுள்ள இக்காலத்தில், இதுவரை சுமார் 4,200 டன்கள் சர்க்கரை உற்பத்தியும் தடைபட்டுள்ள மோசமான நிலையைக் குறித்து விவாதிக்க இம்மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு கோருகிறேன்.

ஆலைகளில் வேலை நிறுத்தம் கதவடைப்பு பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் கொண்டு வரக்கூடாது என்று முன்பு கொடுத்திருக்கும் தீர்ப்புகளுக்கு ஒப்ப, இந்த தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயணா மில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்:—

"அண்மையில் பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயணா மில்ஸ் மானேஜிங் ஏஜண்ட் திடீர் என்று மில்லை மூடிவிட்டதால், 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடவேண்டிய அபாய நிலையில் உள்ளார்கள். இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடையும் நிலைமையைப் போக்கவும், பாதுகாக்கவும் அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த இப்பிரச்சினையை சபை விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒரு மணி நேரம் ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்பதற்கொப்ப, அப்படிப்பட்ட விஷயங்களுக்கு இந்த அவையைப் பயன்படுத்தக்கூடாது என்கிற தீர்ப்புகளுக்கு ஏற்ப, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) பம்பாய் மாநகரில் சிவசேனையினரால் தமிழர் நலன் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, திரு. இராமமூர்த்தி, திரு. கோதண்டராமன், இவர்கள் ஒரு பொருள் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள்,

"The business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the need to urge the Central Government to give adequate protection to South Indians in Maharashtra State against the Siva Sena menace which has recently taken a heavy toll of human lives in the City of Bombay."

என்றும், திரு. க. இராமமூர்த்தி அவர்கள்,

"That this House shall stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the disturbances by the people of the 'Siva Sena' movement in the City of Bombay which was aimed to result in monetary loss to the people of Tamil origin in the City of Bombay and also to result in insecurity to their lives and residence."

என்றும், திரு. கோதண்டராமன் அவர்கள்,

"சிவ சேனையினர் தாக்குதலுக்குத் தமிழர்கள் ஆளாகிப் பலர் மாண்டு மடிந்துள்ளதால், இது விஷயமாக விவாதிக்க



சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு கோருகிறேன்" என்றும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானங்களுக்கு, எந்த அளவிற்கு சபையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, விவாதிக்க இடமளிக்க வேண்டும் என்பதை மட்டும் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்பொழுது பேசுவார்கள்.

DR. H. V. HANDE: I want to stress a particular matter, viz., the harassment of South Indians and the violence that have been perpetrated on the South Indians by the Shiv Sena people. That is a subject which pertains to this State. This is the point which the Hon. Speaker has asked me to prove. Under Section 10 of Rule 50, of our Assembly Rules, a motion (adjournment motion) must refer to a matter in which the responsibility of Government is clearly involved. That is the question. Whether this State Government's responsibility is involved in this or not, is the question.

Now a large number of South Indians are being treated like this. The situation is worse so far as this State is concerned. Most of the South Indian families are coming to Madras. There is an exodus of people of Tamil origin from Bombay City to Tamil Nadu. That is the situation we have been witnessing for the past two or three days, for the past one week or so, the exodus is going on, people are pouring into Madras. Therefore there is an unnatural situation prevailing in Tamil Nadu. Therefore it is the bounden responsibility of the Government of Tamil Nadu to see that these people are properly looked after. Therefore I say that this Government's responsibility is fixed.

In addition, I will argue this way also. Why should the disinguished Congress President, Sri Nijalingappa say yesterday in Mysore that a judicial enquiry should be instituted? Why should he make such an open statement? He does not belong to Maharashtra State. But yet ht has made that statement for a judicial enquiry into the whole affair. That is the feeling in all Southern States. So I want the Hon. Speaker to give his ruling this way. The business of the House could be adjourned and we will all sit for two of three hours and discuss the whole affair and find out ways and means by which we can express our displeasure, our anguish and real fright at the way in which our Tamilians are being treated in Maharashtra. Unless we adjourn, we cannot express our anxiety to the Central Government. There is responsibility of Central Government also in this. So the Hon. Speaker can say that this House cannot be adjourned. At the same time I request the Hon. Speaker to see that it is the responsibility of this State Government to see that this House is adjourned so that the matter be discussed and ways and means found as regards the *modus operandi* to show our terrible and bitter anguish to the Central Government and to see that such things do not take place in Maharashtra further.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த சிவசேனை இயக்கத்தின் காரணமாக, இன்றைய தினம் பம்பாயிலுள்ள தமிழ் மக்களும், மற்றவர்களும், அல்லல் படுகிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பிற்கு இந்த அரசு ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இந்த நிலையை நாம் கண்டித்து இருக்கிறோம். ஆகவே, அந்த சிவசேனையினரின் செயல்களை—காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்களும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள்—எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைத்து, எல்லா மாநிலங்களும் ஒத்துழைத்து, நடவடிக்கை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதோடு, இம்மாதிரி தொல்லை கொடுக்கும், தேச ஐக்கியத்தைப் பாழ்படுத்தும், தேச ஐக்கியத்தைக் குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சேனைகளையெல்லாம் தடுக்கவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, நாம் ஒருமித்த கருத்தோடு, இப்படிப்பட்ட சேனைகளைச் சட்ட விரோதமானவை என்று தடை செய்ய முயற்சிகள் எடுக்க வேண்டும். அந்த வகையில் மத்திய சர்க்காரை வலியுறுத்த இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலையை வலியுறுத்த, இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, அதை விவாதித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த சிவசேனையினுடைய நடவடிக்கைகள் இப்பொழுது ஒன்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை இல்லை. இதை ஆரம்பிக்கக் கூடிய காலத்திலேயே, சென்ற ஆண்டிலேயே, இதே சபையிலே, அது சம்பந்தமாக விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்பொழுதே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப் பட்டது. அதைச் சரியாகக் கவனிக்காத காரணத்தால், இப்பொழுது பம்பாயில் இப்படிப்பட்ட செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. தென்னாட்டிலிருந்து பம்பாய் சென்றிருக்கும் சாதாரண மக்களை மட்டுமல்லாமல், மத்திய தர மக்களையும், மற்றவர்களையும் தாக்கக் கூடிய அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டு, கிட்டத்தட்ட 100 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சம்பவங்களையெல்லாம் விளக்க வேண்டாம். இப்பொழுது சபையில் இதைக் கொண்டுவந்து பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய காரணங்கள் என்ன என்பதை மட்டும் உறுப்பினர் சொல்ல வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அந்த சிவசேனைக்கு மிகப் பெரிய அளவுக்கு ஆதரவாக, அதற்குப் பக்கபலமாக பெருமுதலாளிகளும், அதேபோன்று அமெரிக்க ஏகாதிபத்திய உளவாளிகளும் இருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். அது மட்டுமல்ல * இப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவத்தைப்பற்றி நாம் இங்கே அவசியம் விவாதம்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





நடத்தி, அங்கு நடைபெற்று இருக்கக்கூடிய மிக மோசமான நட வடிக்கைகள் சம்பந்தமாக மத்திய சர்க்காருக்குத் தகவல் கொடுக்க வேண்டும். அங்கு வசிக்கக்கூடிய தமிழகத்து மக்களுடைய பாது காப்பை முன்னிட்டு நாம் அவசியம் இரண்டு மணி நேரமாவது இங்கே விவாதம் நடத்தவேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர் களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் நான் வரவேற்கிறேன். இது மற்றொரு மாநிலத்தினுடைய பிரச்சினை என்றாலும்கூட, இந்திய நாட்டைப் பொறுத்த வரையிலும் பொது வான பிரச்சினையாகும். குறிப்பாக, தென்னாட்டு மக்கள்—தமிழர் கள், மலையாளிகள், ஆந்திரர்கள், கன்னடியர்கள் ஆகிய மக்கள்— மராட்டிய மாநிலத்தில் சிவசேனையினுடைய அட்டூழியத்தால் மிகுந்த கொடுமைக்கு ஆளாகி, உயிரிழந்தும், உடைமைகளை இழந்தும் பரிதாபகரமான சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டு இருக் கின்றார்கள். ஆகவே, இந்தியாவிலே நாம் கட்டிக் காக்கவேண்டும் என்று விரும்புகிற ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு இது முற்றிலும் முரண்பாடான ஒரு காரியம் ஆகும்.

இந்தியாவைப் பொறுத்த வரையில், எந்த ஒரு மாநிலத்து மக்களும் இன்னொரு மாநிலத்தில் உரிமைகளோடு வாழ்வதற்கு அனுமதியும், அதற்கேற்ற வகையிலே அந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்பும் அளித்துத் தீரவேண்டும். அந்த நிலையில், நம்முடைய தமிழ்நாட்டில் வாழ்கின்ற பிற மாநிலத்து மக்களுக்குத் தமிழக அரசு பாதுகாப்பு அளிப்பதற்குக் கடமைப்பட்டிருக் கிறது. அவர்களுடைய உயிர்களுக்கோ உடைமைகளுக்கோ எந்த விதமான ஊனமும் உற்பாதமும் ஏற்படாத வகையில் கட்டிக் காப்பாற்ற வேண்டிய கடமையுணர்ச்சியை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பதைப் போலவே, அதைத் தன்னுடைய கடமை என்று கருதியிருப்பதைப்போலவே, வேறு பல மாநிலங்களில் வாழ்கின்ற நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கும்—தென்னாட்டு மக்களுக்கும்—பாதுகாப்பு அளிக்கவேண்டியது அந்தந்த அரசினுடைய நீங்காத கடமைகளாகும். ஆனால், அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு சற்று தாமதம் ஏற்பட்டாலுங் கூட, மராட்டிய மாநிலத்தில் சிவசேனையினால் ஏற்பட்ட கொடுமை களிலிருந்து மக்களை மீட்பதற்கு அந்த அரசு தக்க நடவடிக்கை களை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் தமிழக அரசின் சார்பாக மராட்டியத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் மத்தியப் பேரசினுடைய உள்துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் ஒன்று அனுப்பியிருக்கின்றேன். அதில், தென்னாட்டு மக்களுடைய உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பாது காப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தியும், அவர் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் போற்றத்தக்கவை என்றாலுங்கூட

மேலும் பாதுகாப்பு அளிக்கத்தக்க வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்திலே வற்புறுத்திக் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆகவே, உறுப்பினர்கள் கொண்டுவந்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தினுடைய அந்த நோக்கம், அவர்களுடைய உணர்ச்சி, இவைகள் அத்தனையையும் இந்த மன்றத்திலுள்ள எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும், பம்பாய் மாநிலத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்கின்ற வகையிலே தங்களுடைய எண்ணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இதை ஒரு விவாதப் பொருளாக இங்கே ஆக்குவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதை, ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த உறுப்பினர்கள் பேசுகிற தன்மையிலிருந்து நாம் புரிந்துகொண்டோம். ஆகவே, ஒரு மணி நேரம் விவாதம் நடத்தினால், சிவ சேனையைத் திரும்பப் பெறுகிறார்களோ இல்லையோ, இங்கே பலர் தாங்கள் பேசிய வார்த்தைகளைத் திரும்பப் பெறவேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படக் கூடும். ஆகவே, அத்தகைய ஒரு சூழ்நிலையில், நாம் எந்த நோக்கத்திற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறோமோ அதற்குப் பதிலாக நமக்குள்ளேயிருக்கும் பல பேதங்களை இங்கே விளக்குவதற்குப் பயன்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலும், இது மற்றொரு மாநிலத்தினுடைய விவகாரம் என்கிற காரணத்தாலும், அதை அந்த மாநிலத்தினுடைய அரசு கவனிக்கும், கவனிக்க வேண்டும், நிச்சயமாகக் கவனித்துத் தீரவேண்டும் என்ற அளவில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகள் பயன்படும் என்ற நிலையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கூறி, மீண்டும், உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளை நான் மனப்பூர்வமாக வரவேற்று, அமருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர்கள் கூறிய சொற்கள் மூலமாகவும், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறிய விளக்கம் மூலமாகவும் இந்தப் பேரவையின் உணர்ச்சி எடுத்துக் காட்டப்பட்டுவிட்டது என்ற நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தாலும், வேறு மாநிலத்தினுடைய நிகழ்ச்சியிலே நாம் தலையிடுவது முறையாகாது என்ற தீர்ப்பு பல முறை இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் சுதந்திரா கட்சியைப்பற்றிக் கூறிய பகுதியிலிருந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆதிமூலம் அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றிக் கூறிய தம்முடைய கருத்தைத் திரும்பப்பெற்றது வரையுள்ள இந்த நிகழ்ச்சிகள் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று நான் அறிவிக்கின்றேன். அதைப் பத்திரிகைகளிலும் வெளியிட வேண்டாம் என்று செய்தி நிருபர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



## 4. கவன ஈர்ப்புத் தீர்மானம்

## இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE: Sir, I call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance viz. the steps to be taken to rehabilitate the large number of repartriates from Ceylon who are to come regularly from now onwards and the need to get substantial aid from the Centre.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Under Sastri-Srimavo Agreement, about 5,25,000 persons of Indian origin with their natural increase are expected to be repatriated to India from Ceylon over a period of 15 years. The mass exodus of repatriates is expected to start from July 1969.

The Government of India have treated the problem of rehabilitation of repatriates as a 'National Problem'. However as the majority of the repatriates to be repatriated originally belonged to this State, the burden of their rehabilitation has fallen on this State. The Government of India have generally agreed to meet the cost of the rehabilitation of the repatriates.

A reception-*cum*-transit camp is being constructed at Mandapam to accommodate 1,000 families of the repatriates at a time. The entire cost is borne by the Government of India.

The following schemes have been taken up or are under formulation for rehabilitation of Ceylon repatriates:—

1. *Tea plantation.*—The Government formulated a scheme for starting a departmental tea plantation in the Nilgiris district over an extent of 3,750 acres at a total cost of about Rupees Five crores, to provide employment to 1,700 families. The Government of India have sanctioned the first phase of the scheme to be implemented over an area of 750 acres and agreed to give a loan of Rs. 93 lakhs for the scheme. A Special Officer in the cadre of Deputy Conservator of Forests has been posted to draw up a Master-plan for taking up the tea plantation in the remaining extent of 3,000 acres.

2. *Rubber Plantation in Kanyakumari district.*—The scheme contemplates expansion of the existing rubber plantation in Kanyakumari district by bringing additional area of 2,000 acres of land under rubber over a period of 5 years. The total cost is estimated to be about Rs. 81 lakhs. This scheme is expected to give employment opportunity to 333 families. This is under examination.

3. *Cinchona Plantation.*—The question of expansion of areas under Government cinchona plantation with a view to absorb Ceylon repatriates is under examination.

[Thiru K. A. Mathialagan] [1969 பிப்ரவரி 24

4. *Allotment of ten acre developed plots in Nilgiris district.*—The question whether plots of 10 acres of land may be developed in the Nilgiris and allotted to Ceylon repatriates has been taken up.

5. *Coconut Plantation scheme in Ramanathapuram district.*—The Collector of Ramanathapuram has submitted proposal for sanction of a new scheme called the 'coconut colonisation scheme' for the settlement of Burma and Ceylon repatriates. Under this new scheme each repatriate family will be allotted five acres of land with financial assistance of Rs. 6,000 of which Rs. 3,000 will be towards subsistance allowance at Rs. 50 per month for 5 years. About 5,000 acres may be available in Tiruvadanai taluk, ex-estate lands. From the tenth year of planting, the income will be just sufficient to maintain a family. The scheme proposed by the Collector of Ramanathapuram was forwarded to the Government of India and they were requested to sanction the scheme on the following pattern :—

(i) the Government of India may sanction the scheme on 25 per cent loan and 75 per cent grant basis;

(ii) the Government of India may provide the entire funds which may be required for implementing the scheme, to the State Government on the above basis; and

(iii) the loss on account of non-payment of loans, if any, may be borne by the Government of India.

The reply from the Government of India is awaited.

*Land colonisation schemes.*—A scheme for settling the repatriates in an area of 330 acres of land in Poosimalaikuppam village, North Arcot District at a total cost of Rs. 10,04,850 was forwarded to the Government of India for approval. The scheme contemplates allotment of 5 acres of land per family. The cost of settlement per family works out to Rs. 15,250. The Government of India were requested to sanction financial assistance on the basis of 75 per cent grant and 25 per cent loan. Decision from the Government of India regarding Possimalaikuppam scheme is awaited. Besides, the Collectors of Tiruchirappalli, Ramanathapuram, North Arcot and Madurai have proposed certain lands for this purpose. The proposals are under examination.

*Vegetable gardening and dairy farming schemes.*—The Collector of Madurai has submitted proposals for starting dairy farming scheme in Nedumandalam and Sendurai villages of Melur taluk on lands covering an area of 329 acres. The scheme contemplates settlement of 2 units of 164 families under drivy farming at a total cost of about 18 lakhs. The proposal has been forwarded to the Government of India for approval and financial assistance. Government of India's reply is awaited.



1969 பிப்ரவரி 24] [Thiru K. A. Mathialagan]

*Fishing Project.*—The Government have formulated a scheme to provide employment opportunities to the repatriates in mechanised fishing projects. The scheme contemplates training of 100 repatriates at a time in two batches of 50 each for a period of 10 months. It is also proposed to supply mechanised boats to trained repatriates at the rate of one 32 footer boat and nylon net to each group of five repatriates. The cost of training and rehabilitation of 100 repatriates is estimated at Rs. 13.95 lakhs. The scheme was forwarded to the Government of India for approval and financial assistance. Government of India's reply is awaited.

*Housing and Business Loans and Educational Concessions.*—The scheme of financial assistance for construction of houses to the Burma Repatriates in rural and urban areas in this State has been extended to the repatriates from Ceylon.

According to the existing scheme sanctioned for Burma repatriates loans up to Rs. 2,000 are sanctioned in individual cases for starting various petty business. A maximum loan of Rs. 5,000 is also granted to each repatriate who joins to form a partnership firm or co-operative society for the purpose of setting up small industrial units, repairs shops, etc., and other processing trades. These facilities available to Burma Repatriates have been extended to Ceylon repatriates.

Orders have also been issued that the educational concession now available for the Burma repatriates should be made available to the Ceylon repatriates also.

The Government of India have agreed to meet the entire expenditure incurred by State Government on schemes for benefit of Ceylon repatriates.

A Commissioner of Rehabilitation in the rank of Member, Board of Revenue, has been appointed to be in charge of all schemes relating to the rehabilitation of Burma and Ceylon repatriates. The Board of Revenue is formulating various schemes for the rehabilitation of the repatriates.

Everything possible is being done to see that as many schemes as passible are kept ready for implementation when the mass exodus of Ceylon repatriates starts and also to obtain necessary financial assistance from the Centre.

DR. H. V. HANDE : Last time when the Burma repatriates came, we found ourselves in a very difficult position, because we did not forestall certain things which we should have done. So at least this time will this Government take the trouble of finding out the exact amount of money that the Government of India have promised to give for rehabilitation of Ceylon repatriates? Will the Minister tell us the amount of money we have asked for, the amount of money that the Central Government is going to give, whether the State Government officials and the State

[Dr. H. V. Hande] [1969 பிப்ரவரி 24

Ministry are taken into confidence at each and every stage of the discussion, what the exact liability of the State Government in this matter is, what the exact number of repatriates who have come so far is, and what the number of repatriates who are likely to come in 1969–70 is? Will the Minister tell us all these things or place the exact details on the Table of the House? In addition to all these things, will this Government move the Union Government to persuade the Ceylon Government to allow the repatriates to bring with them a little more money because the repatriates have been there in Ceylon for long?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I have already pointed out that most of the expenditure is borne by the Union Government. This expenditure is outside the Plant; it does not come under the Plan. It is a national problem. The Union Government have assured us that they will bear the entire expenditure as and when we send up proposals. Our officers are in contact with the Centre. There is a board for rehabilitation and its meeting takes place periodically. We have been assured that most o tfhe expenditure will be borne by the Union Government.

As regards the hon. Member's suggestion to persuade the Ceylon Government to allow the repatriates to bring in more money, this Government may represent to the Union Government to take necessary steps.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ், ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கம் அவருக்குத் தனியாக அனுப்பிவைக்கப் படும்.

அடுத்து, 1964–65-ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகப்படியான செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

### 5. 1964-65-ம் ஆண்டில் அதிகப்படி செலவினத்திற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு தலைவர்
மு.ப. 10–30 அவர்களே, 1964-65-ம் ஆண்டில் சில மானியங்களின்கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டதாகத் தெரியவந்ததால், அம மிகைச் செலவினங்களை ஈடு செய்வதற்கான மானிய விவர அறிக்கையை மன்றத்தின் முன் வைக்க வேண்டி முன் வந்துள்ளேன்.

இந்த மிகைச் செலவினங்களை ஆய்வு செய்த 1967-68-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர் தமிழ்நாடு அரசுக்



1969 பிப்ரவரி 24] [திரு. கே. ஏ. மதியழகன்]

கணக்குகள் பற்றிய தங்கள் அறிக்கையின் 16-வது பத்தியில் அவ்வறிக்கையின் 1-ம் இணைப்பில் கண்டுள்ளபடி, மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அளிக்கும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக் கிணங்க, 1964–65-ம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 23.05 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப் படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

இவை கூறி, 1964–65-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

### 6. 1968–69-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை அளித்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப் பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 25.18 கோடி ரூபாயாகும். இதில் ஏறக் குறைய 6.08 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின் பாற்படும்; எஞ்சிய சுமார் 19.10 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளின் பாற்படும். கடந்த ஆகஸ்ட் திங்களில் முதல் தொகுதித் துணை மதிப்பீடுகளை மன்றத்தின் முன் வைத்த பின்னர், அரசு ஒப்பளிப்பு வழங்கிய பெரும்பாலான "புதுப் பணித்" திட்டங்கள் இத்துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியக் கோரிக்கைகளின்கீழ் தற்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாகக் கூடுமென எதிர் பார்க்கப்படுவதால், அந்த மானியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொண்டுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் மிகப் பெரியதொரு நிதி ஒதுக்கம் மாநில மின்சார வாரியத்திற்குக் கடன் உதவியளிப்பதற்காக வேண்டப்படுவதாகும். முந்திய சில ஆண்டுகளில், மாநில மின்சார வாரியம் தனது வணிகக் கணக்கில் ஈட்டிய வட்டித் தொகையை, போதிய ரொக்க இருப்பு இலாததால் மாநில அரசுக்குச் செலுத்தாமற்போய்விட்டது. இவ்வகையில் சேர்ந்து வந்த வட்டி நிலுவை 1967–68 இறுதிவரை மொத்தம் 9.72 கோடி ரூபாய் அளவில் நின்றது. இவ்வட்டி நிலுவையை மாநில மின்சார வாரியம் கொடுத்துத் தீர்க்க இயலும் வகையில் மாநில அரசு அதற்கு இப்போது கடன் வழங்கக் கருதியுள்ளது. இதனால் மாநில மின்சார வாரியத்தின் நிதி நிலை அரசிற்குச் சேர வேண்டிய வட்டியைச் செலுத்துவதற்கு இயலாமல், வட்டி

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 பிப்ரவரி 24

செலுத்துவதற்கும் அரசிடமிருந்து கடன் வாங்கும் நிலையிலுள்ளதெனக் கருதிவிடக் கூடாது. நான் இப்போது தெளிவுபடுத்தியிருப்பதைப் போல், மாநில மின்சார வாரியம் வணிகக் கணக்குகளின் அடிப்படையில் அரசிற்குச் சேர வேண்டிய வட்டித் தொகைகளை முந்திய ஆண்டுகளில் செலுத்தும் நிலையில் இருந்தது. ஆனால், அரசு மாநில மின்சார வாரியத்தின் மூலதனத் திட்டங்களுக்கு உண்மையில் தேவைப்படும் கடன் தொகைகளை விடச் சிறிய அளவுக் கடன்களையே அதற்கு வழங்கி வந்ததால், அரசிற்குச் சேரவேண்டிய வட்டியைச் செலுத்த அதனிடம் போதிய அளவிற்கு ரொக்க இருப்பு இல்லை. இந்நிலை இப்போது சரிப்படுத்தப்படுகிறது. மின்சார வாரியத்திற்கு வழங்கப்படும் இக்கூடுதல் கடன், வட்டி வகையில் பெறப்படும் அதிகரித்த வரவினங்களின் வாயிலாக ஈடு செய்யப்படும். எனவே, இதன் காரணமாக அரசின் வழிவகை நிதிநிலை பாதிக்கப்படமாட்டாது. கடந்த ஆண்டில் மின்சார வாரியம் முதற்கண் வகுத்த திட்டத்தை விடப் பெரியதொரு திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இந்த வகையில் அது அரசிடமுள்ள தனது கணக்கில் 1.43 கோடி ரூபாய் அளவிற்கு அதிகப் பற்று வாங்கியுள்ளது. இந்த அதிகப் பற்றைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக, மின்சார வாரியத்திற்கு நடப்பு ஆண்டில் 1.43 கோடி ரூபாய்க்கு மற்றொரு கடன் வழங்க இப்போது வகை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் அரசின் வழிவகை நிதி நிலை பாதிக்கப்படமாட்டாது. நடப்பு ஆண்டிலும், மின்சார வாரியம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகளுக்காகும் செலவினப் போக்கைப் பெரிதும் விரைவுபடுத்தியுள்ளது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்படும் செலவின் அளவு 6 கோடி ரூபாயிலிருந்து கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருப்பதை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடலாம். மொத்தத்தில், மின்சார வாரியம் திட்டத்தில் முதற்கண் 32 கோடி ரூபாய்க்கு மட்டுமே வகை செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, 40 கோடி ரூபாய் அளவிலான திட்டத்தை நிறைவேற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. திட்டச் செலவினத்தில் ஏற்பட்டுள்ள இந்த அதிகரிப்பினை ஈடு செய்வதற்காக, அரசு 2.15 கோடி ரூபாய் அளவிற்கு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் கடன் உதவியளிக்கக் கருதுகிறது; எஞ்சிய தொகையை மின்சார வாரியம் தனது சொந்த நிதி வாயில்களிலிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் கடன்கள் பெற்றும் ஈடு செய்யும்.

அகவிலைப்படி வீதங்கள் குறித்து மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்குமிடையே சமநிலை நிலவ வேண்டுமென்கிற கொள்கைக்கிணங்க, மாநில அரசு தனது பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்களை 1969 சனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் உயர்த்த அண்மையில் முடிவு செய்துள்ளது. வழக்கம் போல், அகவிலைப்படி வீதங்களிலான இவ்வுயர்வு உள்ளாட்சி மன்றங்களின் ஊழியர்களுக்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் பொருந்தும். இதன் காரணமாக கூடுதல் நிதிப் பொறுப்பு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 3 கோடியே 60 லட்சம்



1969 பிப்ரவரி 24] [திரு. கே. ஏ. மதியழகன்]

ரூபாயாகுமெனக் கணக்கிடப்படுகிறது. நடப்பு ஆண்டில் ஏற்படும் கூடுதல் செலவினம் ஏறக்குறைய 60 லட்சம் ரூபாயாகும். இந்த அளவிற்குப் பற்பல மானியங்களின் கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. ஐந்தாம் நிதி ஆணைக்குழு இம் மாநிலத்தின் நிதித் தேவைகளை மதிப்பிடுகையில், இப்பொறுப்பினைக் கணக்கில் கொண்டு அடுத்த ஜூலைத் திங்களில் அளிக்கவிருக்கும் தனது இறுதி அறிக்கையில் போதிய நிதிவாயில்கள் மாற்றப்படுவதற்கு வகை செய்யுமென நாங்கள் நம்புகின்றோம். அண்மையில் அரசு தன் பணியாளர்களின் ஓய்வுக் கால நன்மைகளை கணக்கிடுவதற்கான விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று முடிவு செய்துள்ளதையும் இம் மன்றம் களிப்புடன் வரவேற்குமென நம்புகின்றேன். ஓய்வு சம்பளத்தைக் கணக்கிடுவதற்கான இப்புதிய விதியின்படி, நிலைச் சம்பளம் Substantive pay பணியாற்றுச் சம்பளம் Officiating pay இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு நீங்கி, பணியாளர் ஒருவருடைய இறுதி 36 திங்கள் பணிக் கால அளவில் அவர் பெற்றுவந்த சராசரிச் சம்பள அடிப்படையில் ஓய்வுச் சம்பளம் கணக்கிடப்படும். ஓய்வுபெறும் பணியாளர்களின் ஓய்வுச் சம்பளம், இவ்விதி காரணமாக பெரும்பாலோருக்கு 25 சத வீத அளவிற்கும் உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இம்முடிவின் முழு விளைவும் சிறிது காலம் கழிந்த பின்னரே உணரப்படும்; இதற்கிடையில், அடையாள மானியம் வாயிலாகச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது.

துணைமதிப்பீடுகளின் கீழ் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்தில் பெரும் பகுதி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்புள்ள திட்டங்களுக்குப் பொருந்துவதாகும். முனைந்து உரமிடும் திட்டத்தின்கீழ் உழவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கம் மேலும் 75 லட்சம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்கள், டிராக்டர்கள் வாங்குதல் போன்றவற்றிற்காக உழவர்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான தங்கள் திட்டங்களை நில அடைமான வங்கிகள் பெரிதும் விரைவுபடுத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எனவே, மத்திய நில அடைமான வங்கி முதற்கண் 7 கோடி ரூபாய்க்கு மட்டுமே கடன் ஈட்டு ஆவணங்கள் வெளியிடக் கருதியிருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் அவற்றின் மூலம், 11 கோடி ரூபாய்க்குக் கடன் திரட்டக் கருதியுள்ளது. இதற்கிணங்க மாநில அரசும், மத்திய நில அடைமான வங்கியின் கடன் ஈட்டு ஆவணங்களில்தான் முதலீடு செய்யும் அளவினை 2 கோடி ரூபாயிலிருந்து 4.40 கோடி ரூபாய்க்கு உயர்த்த முடிவு செய்துள்ளது. இந்த நிதி ஒதுக்கத்தில் 220 லட்சம் ரூபாய் இந்திய அரசிடமிருந்து இணை முதலீடாகப் பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் ஏராளமான சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றிற்காகும் செலவினத்திற்கு, திட்டத்தில் இவற்றிற்கென வகைசெய்துள்ள மொத்த நிதி ஒதுக்கத்திலிருந்து தொகை பெறப்படும். இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள விவர

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 பிப்ரவரி 24

அறிக்கையின் 39 முதல் 41 வரையுள்ள பக்கங்களில் "41—பாசன மூலதனச் செலவு" என்கிற கோரிக்கையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களின் விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். வீட்டு வசதி வாரியம், போலந்து நாட்டின் தொழில் நுட்ப உதவியையும் நிதி உதவியையும் பெற்று எண்ணூரில் புரை கான்கிரீட் தொழிற்சாலை (Cellular Concreae Plant) ஒன்றை நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் இதற்கான பொறிகளைப் பெறலாமென எதிர்பார்க்கப்படுவதால், இப்பொறிகளின் விலையின் நிமித்தம் மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் கடன் வழங்க தற்போதைய துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம்செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகக் கருதப்பட்டுள்ளதால், இத் திட்டத்திற்கென இப்போது கை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் முழுவதும் இந்திய அரசிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

மாநிலப் போக்குவரத்துத் துறை மேலும் பல பேருந்து வண்டிகளை வாங்கவும், ஏனைய கட்டிடப் பணிகளுக்காகவும், பயணச் சீட்டுகளை அச்சடிப்பதற்கான தனி அச்சகம் ஒன்றை நிறுவவும் அதற்கு 48 லட்சம் ரூபாய்க்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யும்படியும் வேண்டப்படுகிறது.

நமது புதிய நான்காம் திட்டத்தில் மேற்கொள்ளக் கருதியுள்ள முக்கியத் திட்டங்களில் ஒன்று சேலம் இரும்புக் கனிகளை வெட்டியெடுப்பதைக் குறித்ததாகும். சேலத்தில் உருக்காலை ஒன்றை நிறுவுவதற்கு முன்னோடியாக, இரும்புக் கனிகளினின்றும் அயச் செறிவுருள்கள் திரட்டும் (Pelletisation and Concentration) வாய்ப்புகளை ஏற்படுத்துவது உட்பட, கஞ்சமலைக் கனியிருப்பு வளங்களைப் பெருக்கும்வகையில் திருவாளர்கள் எம்.என். தஸ்தூர் அண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனத்தார் விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகும் செலவிற்காக இத்துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கியுள்ளோம்.

இத்துணை-மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றிச் சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லையென்று கூறி, இவற்றை இம்மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

## 7. அரசினர் மசோதா

### தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா. (சட்டப் பேரவை மசோதா எண் 3/69.)

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 3/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

---

28—1—1969 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது



1969 பிப்ரவரி 24] [திரு. ஓ. பி. ராமன்]

1949-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள்மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் செல்திறன் கால அளவு 1969 ஜனவரி 25-ம் நாளன்று முடிவடைந்தது. அதன் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு அதாவது 1974 ஜனவரி 25-ம் நாள் முடிய நீட்டிப்பதே இம்மசோதாவின் நோக்கமாகும்.

போர் முயற்சிகள் சம்பந்தப்பட்ட உற்பத்திக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கென மின் சக்தியைச் சேமித்து வைக்கும் நோக்கத்துடன், சென்ற உலகப் பெரும் போரின்போது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் இந்திய அரசு, மின்சக்தி வழங்கல்மீது கட்டுப்பாடு ஆணைகளை முதல்முதலாக விதித்தது. போர் முடிந்த பிறகு, தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் மின்சக்தி சம்பந்தமாகக் கட்டுப்பாடு விதித்தல், நிலைப்படுத்துதல், மேல்வரி விதித்தல் போன்ற ஆணைகள் தொடர்ந்து செயலில் இருந்தன. அச்சட்டத்தின் செல்திறன் கால அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின் இணைப்பின் உற்பத்தித் திறன் இரண்டாவது திட்டத்தில் 256 மெகா வாட்டிலிருந்து 571 மெகா வாட்டாக உயர்ந்தது. நெய்வேலி மின்சக்தி உட்பட இப்போது அது 1,170 மெகா வாட்டாக உள்ளது. இனி அடிக்கடி மின்சார வெட்டு நிகழாதிருப்பதற்கு ஆவன செய்து வருகிறோம். கூடுதலான மின்சக்தி நிலையங்களைத் துவக்குவதன் மூலம், மின் இணைப்பிற்குக் கிடைக்கும் அனல் மின்சார அளவிற்கும் நீர் மின்சார அளவிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் குறைப்பதன் மூலமும் மின்விசை உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கிணங்கவே எண்ணூரில், 340 மெகா வாட் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ஒன்றையும் கல்பாக்கத்தில் 400 மெகா வாட் திறனுள்ள அணு மின்சார நிலையம் ஒன்றையும் நிறுவும் திட்டம் தற்போது செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உச்ச உபயோக வேளையில் மின்சக்தி வழங்கல் மீது அவ்வப்போது தேவைப்படும் கட்டுப்பாடுகள் விதிக்கும் ஆணைகளும் மின்சக்தி வழங்கலுக்காகக் கட்டணங்கள் விதிக்கும் ஆணைகளும், தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப்பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின்கீழ் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன. எனவே, இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பது அவசியமென அரசாங்கம் கருதுகின்றது. 1910-ம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்புகளை விரிவாகப் பரிசிலனை செய்கிற வரையில், இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, மூன்றும் பிரிவு குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move,

'That the Bill be passed.'

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

### 8. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவருகிறவர்கள் தங்களுடைய திருத்தங்களை முன்மொழியலாம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I wish to move the following amendment :—

'*Add* at the end, the following :

"but regret to note that no mention is made about the growing industrial unrest, educated unemployment, the measures taken for the prevention of the agrarian unrest in Thanjavur and about the break-down of the law and order situation in the State and in particular during the recent bye-election to the Nagercoil Parliamentary Constituency".'

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to move the following amendment :—

'*Add* at the end, the following :

"but regret to note that the Governor's Address has totally failed to give any indication to this House whether and if so when the Government is going to place before this House the findings of the various reports like the ones on City slum fires and the City students-busmen clash which took place last year".'

THIRU D. S. AUTHIMOOLAM : Sir, I second it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. இராமமூர்த்தி அவர்கள் அவர்களுடைய திருத்தத்தை முன்மொழிவார்கள்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் திருத்தம் நீண்டதாயிருப்பதால், அவ்வளவையும் படிக்காமல் திருத்தத்தை முன்மொழிகிறேன் என்று அவர்கள் சொல்லிவிடலாம்.





திரு. க. இராமமூர்த்தி : சில விவரங்கள் எல்லாம் அதிலே இருப்பதால் அதைப் படிக்க விரும்புகிறேன்.

Sir, I request that I may be permitted to move the amendment standing in name, namely :—

'*Add* at the end, the following :—

'but regret to note—

(1) that the Address has failed to refer to the growing tendency on the part of the Government to order the closure of the Colleges, Schools and other Educational Institutions whenever the students go on strike without going into the root of the causes for the same with a view to solve the problem and ensure uninterrupted education to the students;

(2) that no reference has been made regarding the steps taken by this Government to give military training and education to the students of this State who have lost the opportunity for the same because of the Government's Policy towards N.C.C. training;

(3) that the Address is silent regarding the expansion of the 'Rupee a measure' Rice Scheme to the entire State even after the assured duration of two years after the assumption of power by the ruling D.M.K. Party or that the scheme has failed and as such will be given up;

(4) that the Governor has not been advised by this Government regarding the failure of this Government to take adequate and necessary steps to avoid or to deal with the breakdown of Law and Order which has resulted in the ghastly and cruel death of forty-two farm labourers at Kilvenmani village and the Police firing and lathi charges in a number of places all over our State;

(5) that the Governor in his Address has not referred to the growing unemployment problem among the Arts, Science, Engineering and Medical Graduates as also among the skilled, unskilled and manual labourers;

(6) the failure of the Address to refer to the near famine conditions at Tindivanam and Gingee taluks of South Arcot district due to the failure of monsoon;

(7) that there is no mention in the Governor's Address regarding the establishment of an Arts College at Tindivanam and a Medical College in South Arcot to enable the students to get the benefit of higher education; and

(8) that no mention has been made about the industrial stagnation and the unrest in the industries of this State due to the failure of this Government to follow a stable and clear cut policy with regard to labour and industries .

The amendment was duly seconded.

[1969 பிப்ரவரி 24

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நான் என்னுடைய திருத்தங்களை முன்மொழிகிறேன்—

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்—

(1) இருப்பினும், தமிழகத்தில் மூடிய பஞ்சாலைகளைத் திறப்பதற்கு உறுதி கூறியபடி, திறப்பதற்கான முடிவைக் குறிப்பிடவில்லை என்பது வருந்தத் தக்கது.

(2) இருப்பினும், தஞ்சை மாவட்டத்தில் நிலச்சொந்தக் காரர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட பலாத்கார நிகழ்ச்சிகளை முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காதது வருந்தத்தக்கது.

(3) இருப்பினும், விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைப் பற்றிக் குறிப்பிடாதது வருந்தத் தக்கது;

(4) இருப்பினும், நிலமில்லாத விவசாயிகள் அனைவருக்கும் ஜாதி மத வேறுபாடின்றியில் மனைக்கட்டுகள் வழங்குவது பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(5) இருப்பினும், விவசாயிகளின் உற்பத்திப் பண்டங் களுக்கு நியாயமான விலை நிர்ணயம் பற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(6) இருப்பினும், கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரமும், நிதி வசதியும் செய்து கொடுப்பதுபற்றி குறிப் பிடாதது வருந்தத் தக்கது.

(7) இருப்பினும், மழையின்மையால் கஷ்டப்படும் கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்காவை பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கப்படும் என்பது பற்றிக் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தங்கள் வழி மொழியப்பட்டன.

THIRU K. VIÑAYAKAM : I move the following amendment standing in my name :—

*Add* at the end, the following :—

'but regret to note—

(1) that no mention has been made in the Address regarding the rise in prices of all consumer goods and of any steps taken by the Government to bring down the prices;

(2) that no mention has been made of any economic development in the State and the steps to be adopted for the provision of employment opportunities for the educated unemployed and skilled labour.

(3) that no mention has been made about the effective steps to be taken to solve the language problem and the consequent student unrest prevalent in the State; and



1969 பிப்ரவரி 24] [Thiru K. Vinayakam]

(4) that no mention has been made about the non-availability of sufficient food grains in the drought stricken areas in the State.'

THIRU P. M. MUNUSWAMY GOUNDER : I second the amendment.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, என் பெயரில் உள்ள திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்—

இருப்பினும் மேட்டூர் டவுன்ஷிப்பைக் கலைத்து தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட நகரசபை அமைப்பதைப்பற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது"

திருத்தம் வழிமொழியப்பட்டது.

THIRU T. M. NALLASWAMI : I move the following amendment, viz :—

*Add* at the end the following :—

'but regret to note that no mention is made about the stalemate in the Sugar Industry with particular reference to the hardships experienced by the Factory labourers, Cane growers, the agriculture labour involved in Sugar Cane Growing and the cartmen who transport the canes to the Factories consequent to the failure of the Government to settle the dispute between the Sugar Mills and the Factory Labourers '.

The amendment was duly seconded.

### 9. நடைமுறைக் கேள்வி

### ஆளுநரின் பேருரையில் மறைந்த முதலமைச்சர் உடல்நலம்பற்றிய பகுதியை திருத்தல்.

THIRU T. MARTIN : On a point of Order, Sir, The Hon. Speaker has said that the House is going to proceed with the discussion on the motion of thanks to the Governor's Address delivered on 25th January 1969. In that the Governor has stated in paragraph 1 "As we meet here to-day our thoughts are all with Thiru Annadurai, our Chief Minister. I am sure that all hon. Members and people at large will join me in wishing him speedy and complete recovery so as to enable him to play an active part again in guiding and directing the administration of our State." The motion of thanks will be for the entire address. Hence the motion of thanks may be suitably amended so as to include a condolence reference in the address. Otherwise it will be an anachronism, going on in the record of proceedings. On this point, I want a ruiing from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் தேறவேண்டும்' என்று கூறியிருக்கின்ற நிலை

இப்போது மாறியிருக்கின்ற நிலையில் அந்தப் பகுதியை உடைய ஆளுநர் உரைமீது விவாதம் நடத்துவது முறைதானா என்று கேட்கிறார்கள். அரசினுடைய கொள்கைகளை விளக்குகின்ற நிலையில் ஆளுநர் அவர்கள் இடையிடையே சில கருத்துக்களை கூறுகிறார்கள். அதிலே மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதற்காக விவாதத்தைத் தொடரக்கூடாது என்பது முறையல்ல. அரசினுடைய கொள்கைகளைப் பற்றி ஆளுநர் அவர்கள் என்ன கூறியிருக்கிறார்களோ, அதை முதன்மையாக வைத்து விவாதிக்கலாம் என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஆளுநர் உரையைப் பற்றி விவாதிக்க வேண்டாமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் கூறவில்லை. அதிலே குறிப்பிட்டிருக்கும்படியான ஒரு விஷயத்திற்கு மாறான நிலைமை ஏற்பட்டு விட்டது என்ற காரணத்தால், அதைப் பொறுத்து சர்க்காரே ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவது முறையாக இருக்கும். மறைந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மதிப்பிற்கும் இந்த நாட்டு மக்கள் அனைவரின் மதிப்பிற்கும் உரியவர். அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள விஷயத்தைப்பற்றி விவாதம் செய்வது வருந்தத்தக்க விஷயம். அந்தப் பகுதியை எடுத்து விடுகிறோம் என்று சர்க்கார் முன் வந்தால், தவறு ஒன்றும் ஏற்பட்டு விடாது. அதற்காகவேதான் நாங்கள் புதிய கவர்னர் உரை வேண்டுமென்று கேட்டோம். அந்தப் பகுதியை நீக்குவதற்கு சர்க்கார் ஒரு திருத்தத்தைக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பொதுவாகத்தான் வருகிறது. ஆளுநர் அவர்கள் கூறிய ஒவ்வொரு பொருளையும் எடுத்து வைத்து இதற்கு இதற்கு என்று நன்றி தெரிவிக்கும் முறை இல்லை. அப்போது கூறியுள்ள ஒரு நிலை தற்போது மாறி இருப்பதால், நன்றி அறிவிப்புத் தீர்மானத்தைத் திருத்த வேண்டிய தேவை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கவர்னர் அவர்களுடைய உரையிலே உள்ள ஒரு பகுதி இப்போது நடைமுறைக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கிறது. அதை எடுத்து விடுவதால் கவர்னர் உரைக்கோ, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கோ எந்தவிதமான குந்தகமும் ஏற்பட்டு விடாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே, தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்ற பிரார்த்தனையை உள்ளடக்கிய பகுதி இருக்கிறது. அதையொட்டி இங்கு பேசிய எல்லா உறுப்பினர்களும் அப்போது அண்ணா அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று குறிப்பிட்டு இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். இப்போது, கவர்னர் பெருமான் அவர்கள் அண்ணா உடல் நலம் பெற வேண்டுமென்று கூறிய அந்தப்





பகுதியை அகற்றி விடுவதானால், அதைத் தொடர்ந்து மற்ற உறுப்பினர்கள் அண்ணா அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று வாழ்த்திய எல்லா உரைகளையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று எண்ணிய காரியத்திலே இப்போது நாம் யாரும் மாறுபடவில்லை. ஆனால் இயற்கை சதி செய்துவிட்டது. அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று கூறிய கருத்து அன்று இருந்தது போலவே இன்றும் இருக்கிறது. ஆனால் இடையிலே தவறு ஏற்பட்டு விட்டது. நாம் எல்லாம் சகிக்க முடியாத கொடுமை நடந்து விட்டது. ஆகவே, கவர்னர் அவர்கள் கூறிய அந்தப் பகுதியை மாற்றினால் அதையொட்டி உறுப்பினர்கள் பேசிய அத்தனை கருத்துக்களையும் மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, அந்தப் பிரச்சினையை அப்படியே விட்டு விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அன்று பேசியது அப்படியே இருக்கட்டும். இன்று பேசியது இப்படியே இருக்கட்டும். எனக்குத் தெரிந்த அரசியல் அனுபவத்தில் எடுத்து விடுவது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அதை எடுத்து விடுவதால் எந்த விதமான தவறும் ஏற்பட்டு விடாது.

Dr. H. V. HANDE : The most important thing arising out of what the Leader of the Opposition has stated is this. The Governor, in his address has made a statement, has expressed a wish. Even let us take it for granted that the discussion has been continuous for six days and the Governor, instead of this particular point, has suggested 'I hope and trust that the situation in Coimbatore will end peacefully' but in spite of his wish, the situation turns worse even the next day, it does not mean that we have to delete that reference in the Governor's Address. What he said was his wish and hope. The situation may become entirely different afterwards. After that, many things might happen and much water might flow under the bridge. We may bring in this particular point and say in our speeches that we are unhappy that in spite of the hope and trust expressed by the Governor in his speech, this situation has arisen. So I think no point of order arises. That is my submission.

**திரு. க. ர. நல்லசிவன்** : தலைவர் அவர்களே, சபாநாயகர் அவர்களும், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும் குறிப்பிடும்போது இந்த கவர்னர் அவர்கள் பிரசங்கத்தில் மீதி மு.ப. 11-00
யுள்ள கொள்கைகளையெல்லாம் பற்றிச் சொன்னார்கள். நான்சொல்வது என்னவென்றால், மீதியுள்ள கொள்கைகள்பற்றி எப்படிச் சொல்லியிருந்தபோதிலும் கவர்னர் அவர்களது பிரசங்கத்தில் முதன் முதலாக, 'விரைந்து முழு நலம்பெற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பொதுமக்களும் என்னோடு சேர்ந்து வாழ்த்துவார்களென நான் உறுதியாக நம்புகிறேன்' என்று கூறியிருக்கிறார்கள். பொதுவாக கவர்னர் அவர்களது பிரசங்கம்

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 பிப்ரவரி 24

என்பது மிக முக்கியமான பிரசங்கங்களில் ஒன்று. இது சரித்திர பூர்வமானதொரு பிரச்சினை. ஆகவே, இதைப் பொறுத்தவரையில் இதை எடுத்துவிடலாமா வேண்டாமா என்பதைப் பற்றி நன்கு பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் அவர்கள் 25-ம் தேதி அன்று உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். நாம் இங்கு விவாதிப்பது ஆளுநர் அவர்களின் உரைக்கு 27-ம் தேதி அன்று மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது. 25-ம் தேதி அன்று ஆளுநர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு நன்றி தெரிவித்து 27-ம் தேதி அன்று ஆலடி அருணா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அத்தீர்மானத்தின்மீதுதான் விவாதம் நடைபெறுகின்றது. அத்தீர்மானம் அப்பொழுது முன்மொழியப்பட்டு, இடையில் உரைக்குத் திருத்தங்கள் என்பது அவ்வளவு முறையாகாது. அந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் வேறுபாடில்லை. ஆகவே இதைத் திருத்த வேண்டிய அவசியமில்லை என்று கூறுகிறேன்.

### 8. ஆளுநர் பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, much water has flowed under the bridge since we met last. We are missing our late Chief Minister very badly. We have taken sufficient steps to prevent his death. But in spite of our efforts he is no more with us. That is the reason why we wanted a fresh Governor's Address. It is anamolous to find in his Address that he should recover soon. There is a saying in the English literature namely : What is chalk for goose cannot be cheese for gander. What applies to one incident also applies to a similar incident. When the Ministry insisted upon the same Address to be talked over, it should also apply to another incident which has been mentioned in the Address namely the Kilvenmani incident. For that we have admitted a censure motion on the floor of the House. Then the Speaker and the Ministry are of opinion that we should bring a fresh censure motion. How is it relevant, how is it consistent? You want the same Address to be talked over and at the same time you want a different motion to be moved. It is something like blowing hot and cold in the same breath. The Ministry should think twice before asking us to move a fresh motion. I think the Ministry should not stand on prestige issues. What is right they must accept.

**திரு. து. ப. அழகமுத்து** : பாயின்ட் ஆஃப் ஆர்டரில் பேசுகிறாரா அல்லது கவர்னர் உரைமீது பேசுகிறாரா ?

**திரு. கே. விநாயகம்** : நீங்கள் கவனிக்கவில்லை என்றால் அது உங்கள் தப்பு.

I am talking on the Governor's Address.



1969 பிப்ரவரி 24]

**திரு. து. ப. அழகமுத்து** : கவர்னர் உரைமீது பேசுவதுமாதிரித் தெரியவில்லை. ரூலிங் மீது பேசுவதாகத்தான் தெரிகிறது.

THIRU K. VINAYAKAM : Please refer to the Chair. He has asked me to speak on the Governor's Address.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சரவை புதிதாகத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டார்களா?

**திரு. கே. விநாயகம்** : கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இங்கேயா?

**திரு. கே. விநாயகம்** : இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பின் எங்கே?

THIRU K. VINAYAKAM : Our late Chief Minister has been buried on the Marina sands. It is befitting that our Chief Minister should have been buried in that place. But did the Party in power consult the party in Opposition on this issue? We are naturally creating a bad precedent by not consulting. I have no objection to his being buried in the place where he is buried. But what is the respect the Ministry is showing to the party in Opposition? I would say that it is scant respect which the party in power is giving to the party in Opposition by not consulting us. We would not have denied that privilege to the late Chief Minister. But the party that is in power today headed by Mr. Karunanidhi is not giving proper treatment to the party in Opposition. We would have rather willingly given the permission. (Interruption) I have referred and you have not consulted.

I understand that the Dravida Munnetra Kazhagam has collected funds to meet the treatment expenses of our late Chief Minister. On the other hand I would suggest that it is the Government that should pay for the expenses and the treatment of our late Chief Minister. We are not so poor. We have got the greatest respect for the departed soul. We should have met the expenses from Government funds. Why should the party in power collect from the public or their own partymen? That is a wrong precedent, you are setting up a wrong convention. It is high time that the party that is in power should pull up and set up new conventions of a healthy order and not of this type.

Sir, the Governor's Address is so silent about the industrial unrest as well as the agricultural unrest that is prevalent in our State. About twenty six textile mills have been closed in Coimbatore. What steps have been taken to reopen them? I understand that about thirty thousand workers have been thrown out of employment and they are starving in the streets of Coimbatore and other places. What steps have we taken? Time in and time out I have known Ministers making statement on the floor of the House that proper steps would be taken, that they have set apart about five lakhs of rupees or something like that just for doling

out to the poor unemployed workers. Is this the way we are going to tackle this problem? This is not the way. We have got to take concrete steps. I understand that the Central Government has started a corporation to solve this problem. Why should we not take advantage of that corporation and start a similar one in our State and thus work these mills?

Sir, there is scarcity of rice and other foodgrains in our State. Our Minister for Food always jumps up and issues a statement that the food position is very secure, very happy in our State. 'We are not starving, we are not wanting in foodgrains' he says. I would request the Hon. Minister to travel in the districts of Chingleput and North Arcot. People are hungry for food. I would like to give this information to the Minister for Food that one measure of rice costs about three rupees in Tiruttani. A similar condition is prevailing in all parts of the districts of Chingleput and North Arcot. But I see some fantastic statements by the Ex-Minister for Food . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Can the hon. Member, who is going on with his pet theory, substantiate the statement that the Minister has made a statement that we are abundant in foodgrains, that everything is well off? No such statement has been made. On the contrary I have been emphasising that drought conditions are prevailing in Chingleput and North Arcot districts, that the monsoon has failed, and that this is a year of crisis. We have made proposals for giving relief to famine areas and the Chief Ministers had occasion to convene a conference recently to study the serious situation. The Government have also passed orders. But the hon. Member is going on repeating that the former Food Minister has said that we have abundance of foodgrains and all that. It is an incorrect statement. The hon. Member can correct it.

THIRU K. VINAYAKAM: I wanted this kind of inspiration from the Hon. Minister for Food and I wanted him to make the statement which he has made now.

Now there is students' unrest prevalent in our State and no solution has been found to solve this problem in our State. I might say that the Party in power was responsible for this kind of student unrest as long as they were in the Opposition and now the students are paying the Party in power in the same coin in which they paid us at that time. So it is very difficult for them to control the students however much they might harp upon the same issue like the Anti-Hindi agitation and all that. Still the students are not willing to obey or take orders of the Party in power. They are finding out some cause or other just to create unrest and not to go to colleges. But what concrete steps do this Government propose to take to solve the students' unrest and that also is awfully missing in the Governor's Address.





Sir, what about the law and order situation in the country? I might mention here some instances where the law and order situation has been awfully very bad. Take for instance the incident which happened in the township at Neyveli where Thiru Kirupananda Variar seemed to have delivered a lecture. I am not going into the details of his lecture which might be right or wrong and that is not the question now. But what about the police action? Instead of curbing the activities of the goondas in that place, and maintaining law and order there, what did the Police do? The Police asked Mr. Variar to leave the place immediately. Is this what the Ministry expect out of the Police? The Police must have checked the unruly elements from creating trouble and giving Mr. Variar enough opportunities to express his opinion. But on the other hand, they went and asked him to come out of the town. In my opinion there was no Government of yours in the township at Neyveli on that day and that is evident from the way the Police had acted on that day. . . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி*: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் நெய்வேலியில் நடைபெற்ற சம்பவம் குறித்துப் போலீஸ் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். நெய்வேலியில் கிருபானந்தவாரியார் அவர்கள் இதுபோலப் பேசுவார்கள் என்று போலீசாரே கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வாரியார் அவர்கள் தன்னுடைய புராணப் பிரசங்கங்களில் அரசியல் கடந்த வேடிக்கைகள், கேலிகள், கிண்டல்களைப் புரிவதை வாடிக்கையாகக் கொண்டவர். ஆனால் கோடானுகோடி மக்கள் ஒரு பெரிய கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அண்ணா அவர்களுடைய மறைவு குறித்தும், அதைப்போலவே முன்னாள் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சிதம்பரத்திலே விபூதியை வாங்கிக் கீழே வீசியெறிந்த காரணத்தால் அவர்களுக்கு இரண்டாண்டுக் காலத்திலே மந்திரி வேலை போய்விட்டது என்றும் அங்கு அவர்கள் பேசினார்கள். அப்படிப் பேசியதைத் தொடர்ந்து மக்கள் தங்களுடைய வருத்தத்தையும், வெறுப்பையும் அங்கே தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மறுநாள் உடல்நலமற்றிருந்த வாரியார் அவர்கள் தானே, அண்ணா அவர்களைப் பேசியது தவறு, மன்னிக்க வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டதிலிருந்து அவர் அப்படித் தவறாகப் பேசினார் என்பது உண்மை ஆகிறது. ஆனால் பண்பற்ற முறையில் புராணப் பிரசங்கத்திலே பேசியிருந்தாலும் கூட, பல கோடி மக்களின் மனம் புண்படும்படியாகப் பேசியிருந்தாலும் கூட வன்முறையிலே பதில் தேடுவது விரும்பத்தக்கது அல்ல. அதை இந்த அரசும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவில்லை. போலீசார் அவர் அந்த ஊரிலேயே இருப்பாரானால் மீண்டும் குழப்பத்திற்கான சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதற்காக முன்னெச்சரிக்கையாக, திரு. வாரியார் அவர்களை அவர்கள் உடல் நலமற்றிருந்த காரணத்தினால் அந்த ஊரிலிருந்து அனுப்பி வைத்தார்களேயல்லாமல் வேறு அல்ல. போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள். வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தகவல் இருக்கிறது. எந்தவித அரசியல்

கருத்துக்களுக்கும் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் அமைதியான முறையிலே இருக்க வேண்டுமென்பதை இந்த அரசு கட்டிக் காக்கும். அதற்கு எதிர்மாறாக எடுக்கப்படும் செயல்கள் எந்தப் பிரிவிலேயிருந்து வந்தாலும் அதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கையில் இறங்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வாரியாருக்குத் தேவையான பாதுகாப்பு இனியும் அளிக்கப்படும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I depend upon the news item which has appeared in a notable daily newspaper, 'The Hindu'. It appears that Mr. Variar has never mentioned the name of our revered late Chief Minister Thiru C. N. Annadurai. He was only expounding upon the theory that whatever God willed, would be carried out. Now I have not got that news report in my hands and evidently the Hon. Chief Minister has got the report. Mr. Variar has never mentioned even the name of the late Thiru C. N. Annadurai and Thiru V. R. Nedunchezhiyan. But those unruly people who heard that lecture conjectured that he had referred only to the late Chief Minister. On the other hand, he never mentioned the names of those two gentlemen. . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திரு. கிருபானந்தவாரியார் அவர்களுடைய அறிக்கையிலே அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், 'அண்ணாதுரைபற்றி நான் பேசியதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று. அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I am coming to the point. About two hundred people went to Mr. Variar and threatened him and also got a statement written by them and then attested by him. He had stated in that statement that without anybody's intervention or compulsion, he was withdrawing that part of his lecture. This was done at the instance of the unruly elements who went to him, coerced and compelled him to make that statement. This is my information.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணா அவர்களுடைய பெயரை அவர்கள் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், வாதத்திற்காக அதை ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகள் நான் கேள்விப்பட்ட வரையில் நவம்பர் மாதம் என்று கருதுகிறேன், 15-ஆம் தேதி அல்லது 16-ஆம் தேதி தஞ்சாவூர் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள், 'அமெரிக்கா போனால் என்ன, மில்லரே வந்தால் என்ன, ஆண்டவனை நம்பாதவர்களுக்கு இப்படித்தான் முடிவு ஏற்படும்' என்று.

THIRU K. VINAYAKAM : Sir, I am on the incident which took place in Neyveli and I am not concerned with the other incident.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : In Neyveli also he mentioned about Dr. Miller and America.



THIRU K. VINAYAKAM : It may suit the Government to say what they want on this issue.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான், அவர்கள் அப்படிப் பேசுவதற்காக வருத்தப்படவில்லை. பல இலட்சம் மக்களுடைய மனம் புண்படும்படியாக அவர் அப்படிப் பேசி இருந்தாலும் அதற்கு அங்கிருந்த மக்கள் எடுத்துக் கொண்ட அந்த பதில் முறை இந்த அரசால் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்பதை நான் மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I may strike a note of personal interest in this matter. I was addressing a public meeting in the same Neyveli township. When I said something against the party in power, I knew the way in which a section of the audience treated me. They pelted stones on the dais. They criticised my speech. They in fact asked me to withdraw my statement. When they met me I refused to oblige them. They came to the place in which I was staying in the night and asked me to withdraw my statement. I convinced them how I was right and they then went away. I have understood the real problem in Neyveli. Whenever anything is said against the party in power, the partymen there do not like the same; they do not respect divergent views. They do not like anybody's anti-D.M.K. views. That is the order of the day in Neyveli. When I spoke in Neyveli, the same police did not give me protection. I had to go to Circuit House alone; the D.M.K. supporters came and tried to create trouble when I was asleep. That is the position in Neyveli, three months back.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது 20 நிமிடத்திற்கு மேலாகிவிட்டது. இன்னும் 17 உறுப்பினர்கள் பேச வேண்டும். இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது. நூற்று இருபது நிமிடம் தான் இருக்கிறது. ஏழரை நிமிடம் தான் ஒரு உறுப்பினருக்குக் கொடுக்க முடியும். ஏற்கனவே, 20 நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சரியாக 11-30-க்கு முடித்து விடுங்கள்.

THIRU K. VINAYAKAM : The Thanjavur arson is a blot in the name of D.M.K. The D.M.K. Ministry did not take sufficient care or steps to prevent such a kind of unparallelled incident taking place in our State. That is the reason I say that the law and order situation is not quite satisfactory in our State. The agriculture labour unrest is there. Such of those labourers who thought of preventing the harvesting going on in the district took the law in their own hands and prevented loyal workers from harvesting. If such things go on, can we lull our people to believe that law and order is normal in our State? That is why I say that you have got to issue strict orders to the police authorities, whoever it may be—it may be that they have to serve you when you are in power and serve us when we are in power—whenever any untoward inciednt is likely to happen or, happens police must be given sufficient powers to prevent them. The

breakers of law and order should be brought to book and should be dealt with in Courts of Law.

Famine is another problem in the districts of Chingleput and North Arcot. Why even in Coimbatore in parts of Avinashi, Palladam it is there. But are we taking up this issue? I have requested the Hon. Minister for Revenue to declare these areas as famine-stricken and give them sufficient aid to solve the famine. But every time I request him he says that famine is not there. He asks 'Are people withering away?' Should people die in streets or buses and then only can the area be declared as 'famine-stricken'? I may tell our Minister for Revenue that the Famine Code was not prepared by you or the Congress Party when they were in power but that it was prepared during British regime. Are we to cling to that out-moded definition of famine? It is high time this Ministry revised the Famine Code and took proper steps to prevent recurrence of famine.

Then I come to the 'Soaring prices' in our State. Prices are going up. I am not going to be satisfied by the nodding of the Minister of Revenue. Prices are soaring up. When you were in 'Opposition, you were blaming the Congress in power for the soaring up of prices, in this State. But when you are in power now and prices are soaring, and a worse situation has crept in you have started an agitation that you are not responsible but that the Central Government is responsible for rise in prices because they control the financial issues, banking organisation, etc But did it not occur to you that when prices rose up in Madras City while the Congress was in power in Madras, that Central Government was responsible for the same then? You blamed us at that time. That is why I say what is chalk for the goose cannot be cheese for the gander. You blamed us and by convincing the very credulous masses in the State, you have come into power and when you are not able to find a solution to the pressing problem of soaring up of prices, you blame the Indira Government. What logic is there? But now we are out to convince the people and you will know the result when you go to the polls next.

Coming to the Nagercoil elections, the people had given their mandate. Why should all the Ministers go to Nagercoil, a thing which was unusual when we the Congress were in power in Madras State. Why should the Police play double-standards? When our buses wanted to ply, we were told that all buses should stop near Kanyakumari on the day before election. But I have watched with my own eyes, a high police officer, allowing a lorry going with a D.M.K. flag and balling out with a microphone. But our lorries were not allowed, to do the same thing. The police should not adopt double standards. I saw a picture in Nagercoil, just on the day before elections. It was said propaganda should stop on the last day before elections. But in the picture I saw a reel wherein the late Chief Minister was giving a lecture doing propaganda—election propaganda. This was shown on 7th January 1969. I say, this is wrong. That is why I say. . .



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திரு. வினாயகம் அவர்கள் தேர்தல் பிரசாரத்திலே ஈடுபட்டிருந்த நேரத்தில் அந்தப் படத்தைப் பார்க்க முடியாமல் போனதற்காக அவருக்கு ஓய்வளித்து அந்தப் படம் அவர் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கலாம்.

THIRU K. VINAYAKAM: This kind of joking, we can also do. But what I say is, can such propaganda be allowed on 7th January 1969, when you have said that all propaganda should cease on 7th January 1969. Do you agree with it?

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதலமைச்சர் கூறுவதைப் போலிருந்தால், அவர் வினாயகம் அவர்களுக்கு அழைப்பு அனுப்பி யிருந்தார்களா அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மு.ப. 11-30

THIRU K. VINAYAKAM: Lastly, I come to the State Raffle issue. The Ministry takes pride in saying that they are making ordinary, poor people into lakheers. At what expenses? You are not creating any wealth in the country. You are only draining away from the poor people and paying a portion to one man who seems to be lucky. Is this the way to solve poverty in our country? You take pride in saying that you are making poor people into lakheers. Is this the way for tackling economic issues? Is new wealth created in our State by this raffle? On the other hand you are creating gambling tendency in the minds of the people. I know poor people, cooly workers, masons, etc., who invest thirty, forty and fifty rupees a month, hoping to get a prize. When they do not get, they go disappointed and cursing the Government. This will continue for some time. This is not the way to tackle the economic issues of our country. That is why I say you should give it up immediately without anybody asking you.

Sir, lastly I come to another point. Ministers will have to declare their wealth or assets immediately. The Hon. Mr. Madhavan, I believe, once said that all the Ministers were taking steps to declare their assets. I want every Minister including Mr. S. B. Adityan to declare his wealth.

THE HON. THIRU S. B. ADITYAN: I rise on a point of personal explanation since the hon. Member mentioned my name. I have been declaring my wealth for the last twelve years under the Wealth Tax Act to the Government run by his Party. Therefore there is no need at all to ask the Ministers to declare their wealth. The hon. Member can as well ask the Central Government, who send us notice, and get a statement of our wealth. For your information I may say that I have been declaring my wealth year after year for the last twelve years. Every time the question asked was why my wealth went down after every statement and not why my wealth has increased.

THIRU K. VINAYAKAM : The wealth will have to be declared in the House. This is a supreme body. As far as the Ministry is concerned, our Assembly is the supreme body. You have got to respect it and declare here. Income-tax purposes—I know. I know what income-tax is. Should I elaborate over that? We can manipulate as far as income-tax accounts are concerned. Is Mr. Adityan unaware of it?

THE HON. THIRU S. B. ADITYAN : There is a section in the Wealth Tax Act. Wealth Tax is administered by the Central Government. They can ask anybody including the Ministers at any stage to declare their wealth. So far as I am concerned, I have declared it. If my hon. Friend asks the Government of his Party, he can easily get it. The hon. Member of the Opposition is under the impression that they are powerless. On the other hand they are also running the Central Government, which is vested with extensive powers. They can very easily get it. Please do not confuse Wealth Tax with Income-tax.

THIRU K. VINAYAKAM : I know the difference between Wealth Tax and Income-tax. Let me not be taken as a novice in this matter.

I say we should be sincere, we should be frank in declaring our wealth before this House. We on our side are prepared to declare our wealth (Interruption). We are concerned with the Ministers. But the hon. Member is talking something out of the way. I never wanted to wound the feelings of Mr. Adityan. He is a very good friend of mine. I am only concerned about him as a Minister. I would not have asked him if he had continued as a member.

THE HON. THIRU S. B. ADITYAN : For the purpose of elucidating, I may say that if the hon. Member reads section 14 of the Wealth Tax Act and then reverts to the subject, it will be more useful for the purpose of discussion in this hon'ble House.

THIRU K. VINAYAKAM : I would frankly tell Mr. Adityan he is trying to avoid the issue. My purpose is served. If he is not prepared to declare it here, let him take the consequences. Lastly. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சீக்கிரம் முடியுங்கள். 'லாஸ்ட்லி', 'லாஸ்ட்லி' என்று எத்தனை தரம் சொல்லிக் கொண்டிருப்பது? சீக்கிரம் இத்துடன் முடித்துவிடுங்கள். நேரம்தான் எனக்கு முக்கியம்.

**திரு. கே. விநாயகம்** : நான் பேசும்பொழுது மந்திரிகள் ஒருவர் மாற்றி ஒருவர் எழுந்து பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிளப்பி என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டால் நான் என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் 35, 36 நிமிஷங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. கே. விநாயகம்** : இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒவ்வொரு உறுப்பினருக்கும் 7½ நிமிஷம்தான் அனுமதிக்கப்படுகிறது. தாங்கள் 36 நிமிஷம் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

THIRU K. VINAYAKAM : So I reiterate the amendment standing in my name. I reject the motion of thanks as moved by Mr. Aladi Aruna.

* **திரு. ம. பொ. சிவஞானம்** : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மன்றத்திற்கு முன்பு மாண்புமிகு ஆலடி அருணா அவர்கள் பிரேரேபித்துள்ள, ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநருக்கு நன்றி தெரிவிப்பதற்குரிய விஷயங்கள் அவருடைய உரையில் இருக்கின்றன என்றாலும், உரைக்கு வெளியேயும் ஒன்றை நினைப்பூட்டி நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முன்னாள் தமிழக முதல் அமைச்சர் நோயுற்றபொழுது, அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற ஆளுநர் அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. அவர்களும், அவர்களுடைய மனைவியாரும் நாள்தோறும் பல நேரங்களில். நள்ளிரவிலும் கூட மருத்துவ மனைக்கு வந்து, முதல்வர்பால் அவர்கள் காட்டிய அன்பும், ஆதரவும் நம்முடைய மனத்தைக் கவர்ந்தது. மொழியில் அவர் வேறு மாநிலத்தவரானாலும் கூட, நம்மவர் ஒருவர் போல நடந்துகொண்டு, நம்முடைய நலத்தில் அக்கறை காட்டினார்கள். அதற்காக, அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விதி அனுமதிக்குமானால், அதைக்கூட நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஒரு திருத்தமாகச் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறேன். காங்கிரஸ்காரர்கள் ஆளுநர் பேச்சில் முன் பகுதியை எடுத்துவிடவேண்டும் என்பதில் அக்கறை காட்டியதற்குப் பதிலாக, இந்தப் பகுதியைச் சேர்க்க வேண்டும் என்று அக்கறை காட்டி, ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கலாம், அரசாங்கமேனும் ஒரு திருத்தம் கொண்டு வரலாம், முடியுமானால்.

மற்றொன்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்களின் உரை தமிழிலே இல்லாத குறை எனக்கு இருந்தாலும் கூட, தமிழிலே உரையாற்றக்கூடிய அளவுக்கு ஒரு கவர்னர் நமக்கு இல்லையே என்ற குறை இருந்தாலும் கூட, இதையெல்லாம் கொஞ்சம் சகிப்புத்தன்மை காட்டித்தான் நிறைவேற்றவேண்டும். ஒருமைப்பாட்டிற்கு எதிரான போக்கை செயல்படுத்த நிர்பந்திக்கக்கூடாது என்ற காரணத்தினால்தான் நானும் அதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் ஆளுநர் தமிழராக இருக்க வேண்டும் என்று கூறி, அதை நிறைவேற்றுவதாகவும் உறுதி கொடுக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். அந்த உறுதியை நிறைவேற்றும்படி வலியுறுத்தவும் எனக்கு முடியும். ஆனால், நல்ல கவர்னர் அவர்கள் நமக்கு வந்திருக்கக்கூடிய நேரத்தில்

அவர்களை இழந்துவிடுகிற போக்கில் இதில் நாம் அவசரம் காட்டக் கூடாது என்று பொறுமையோடு இருக்கிறேன்.

வடக்கே பம்பாயில் நடந்த நிகழ்ச்சிகள் நம்முடைய பொறுமையை சோதித்து விட்டது. பம்பாயில் உள்ள நிலைமையைப் பற்றிய ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இங்கே கொண்டுவரப் பட்டன. நானும் அதுபோன்ற ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுக்கலாம் என்று நினைத்தது உண்டு. எனக்கும் அந்த உணர்ச்சி இருக்கிறது. ஆனால், இலங்கை, மலேசியா போன்ற அயல்நாடுகளில், மற்ற மாநிலங்களிலுள்ள தமிழர்கள் நலன் பாதிக்கப்படும் பொழுது, அவர்கள் விஷயத்தில் நாம் இங்கே காட்டுகிற உணர்ச்சியின் வேகம், அவர்களுடைய தொல்லைகளை மேலும் கூடுதலாக ஆக்கிவிடக் கூடாது. அதற்காகத்தான் நான் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறேன். இந்த அரசு மத்திய அரசை தேவையான முன்நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குக் காப்பு அளிக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சருக்கு எழுதியதற்கு நான் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சில விஷயங்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சிவ சேனாவினர் எல்லைப் பிரச்னையை வைத்துக்கொண்டு தமிழருக்கு எதிரான கிளர்ச்சியை நடத்தினார்கள். பெல்காம் பகுதியை கன்னடத்திலிருந்து மகாராஷ்டிரத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். நாடு விடுதலை பெற்று 20 ஆண்டுகள் ஆகியும் கூட, காங்கிரஸ் ஆதிக்கத்தில் உள்ள மத்திய அரசாங்கமோ, மாநில அரசாங்கங்களோ எல்லைப் பிரச்சனைகளைக் கூட ஒரு திட்டமான முறையிலே தீர்த்துவைக்கவும் அப்படித் தீர்த்த வகையிலே ஒரு உறுதியான நிலையைக் கடைப்பிடிக்கவும் தவறியதன் விளைவினால்தான் இம்மாதிரி இயக்கங்களைப் பார்க்கிறோம்.

இன்னொன்றையும் சொல்லுகிறேன். எஸ். ஆர். சி. (ராஜ்ய புனரமைப்புக் கமிஷன்) ரிபோர்ட் கொடுத்து, அமல் நடத்தி தீர்ந்து போன விஷயம். ஆகவே, எல்லைப் பிரச்சினையை மீண்டும் எடுக்கக் கூடாது என்று ஜவஹர்லால் நேருவே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கருத்துக்கு மரியாதை கொடுக்கும் முறையில்தான், தமிழ்நாடு, தேவிகுளம் பீர்மேடு பகுதிகளையும் திருப்பதியையும் கைவிட்டு இருந்திருக்கிறது. இப்பொழுது, எஸ். ஆர். சி. ரிப்போர்ட் பிரகாரம் கன்னடத்தோடு சேர்ந்துவிட்ட பெல்காம் பகுதியைத் திரும்பவும் மகாராஷ்டிரத்தோடு சேர்க்க வேண்டும் என்று கிளர்ச்சி பலப்படுத்தப்படுகிறது; அந்த எல்லைத் தகராறைக் கிளப்பியதன் காரணமாக மத்திய சர்க்கார் அதற்கு இடம் கொடுத்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு சிவசேனையின் கை வலுத்திருக்கிறது. சிவசேனையின் கலகம் நிறுத்தப்படவில்லையானால், இந்த எல்லைத் தகராறு மேலும் பேசப்படுமேயானால், பெல்காம் தாலுக்காவை மைசூர் மாநிலத்திலிருந்து பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமேயானால், இந்த மன்றத்தின் மூலம் மத்திய சர்க்காருக்கு நான் தெரிவித்துக்





கொள்ள விரும்புவது, தேவிகுளம், பீர்மேடு, திருப்பதி இவற்றைப் பற்றி நாமும் கிளர்ச்சிகள் செய்ய நேரிடும். அப்படிச் செய்யப் புகுந்தால், நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். முன்னொரு சமயம் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகத்தோடு சேர்ந்து, தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழ் நாட்டோடு இணைக்கக் கிளர்ச்சி செய்தது. அதை வைத்து, இன்றைக்கு அவற்றை மீட்டுத் தரும்படி நான் கேட்கலாம். ஆனால், கிளர்ச்சிதான் வளர்ச்சிக்கு வழி என்கின்ற மட்டரக அரசியலுக்கு போகக் கூடியவர்கள் அல்ல நாம். இல்லாவிடில், அதைப் பற்றி தி.மு.க. அரசிடம் கேட்டிருப்பேன். அதோடு ஒருமைப்பாடு என்பதற்காக நாம் சில விலைகள் கொடுத்தே தீரவேண்டும் என்ற எண்ணத்திலும் இருந்தேன். அதே போல, பெல்காம் பிரச்சினையும் முடிந்து போன ஒன்று. அதை இப்பொழுது கிளப்ப வேண்டிய அவசியம் என்ன? ஆனால், இந்த சிவசேனை இயக்கம் இந்த எல்லைப் பிரச்சினையை திரும்பவும் கிளப்ப தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. தமிழக அரசு, இது பற்றி மத்திய அரசிற்கு வெளிப்படையாக எழுத வேண்டும்.

இரண்டாவதாக, இந்தப் பிரச்சினையில் இருக்கும் சிக்கல் இன்னொன்று. மகராஷ்ட்ரா போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் தனக்குத் திருப்தி இல்லை என்று மகராஷ்ட்ரா முதல் அமைச்சர் திரு. நாயக் சொல்லியிருக்கிறார்கள். போலீசார் செய்கைகளில் தனக்கு ஐயப்பாடு இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். போலிசை நம்புவதற்கில்லை என்று முதல் அமைச்சரே சொல்லியிருக்கிறார்களாதலால், அவர்கள் இந்தக் கலவரத்தைச் சரியான முறையில் சமாளிப்பார்கள் என்று நம்புவதற்கில்லை. மத்திய சர்க்கார், தன்னுடைய போலீசையோ அல்லது ராணுவத்தையோ அனுப்பி, அங்கே உள்ள தமிழர்களுக்குக் காவல் போட வேண்டும், நிரந்தரமாக அம்மாதிரி பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இரு வேறு மொழி பேசும் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் இந்தப் பூசலுக்கு மூன்றாவது மொழிக்காரர் இடையே இருந்தால் நிலைமைகளைச் சரிசெய்ய வாய்ப்பு இருக்கிறது. அப்படிப் பட்ட வாய்ப்பு இருப்பதால்தான், அந்த ஒரே காரணத்திற்காகத் தான், மத்தியில் உள்துறை இருக்கிறது. நம் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், அதற்காக மத்திய சர்க்கார் போலீசையோ ராணுவத்தையோ அனுப்ப வேண்டும் என்கிற நிலைமை, எல்லைப் பிரச்சினையைக் கிளப்பியதால் வந்திருக்கிறது.

அடுத்தபடியாக, என்னுடைய நண்பர் விநாயகம் திரு. வாரியாரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நானே அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று இருந்தேன், அதுபற்றி முதல்வரிடம் தெளிவு பெறவும் விரும்பினேன். ஆனால், விநாயகம் கேளைக் கெடுத்து விட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். வாரியார் சம்பந்தப் பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் நான் மிக்க வருத்தப் பட்டேன். அவர் என்னுடைய சிறந்த நண்பர். தமிழக அரசியல் வாதிகளிலே யாருடனாவது அவர்களுக்குத் தொடர்பு உண்டு என்றால், என்னோடுதான் அதிகமான நட்பு உள்ளவர். அவர்கள் உண்மையில் என்ன சொன்னார்கள் என்பது தெரியாது. என்ன

பாணியில் சொன்னார்கள், என்ன தொனியில் சொன்னார்கள் என்றும் தெரியாது. ஆனால், அவர்கள் சொன்னது வேதாந்தம். அதிர்ஷ்டவசமாக, இந்த விஞ்ஞான உலகிலே வேதாந்தக் கருத்தும் விவாதத்திற்கு உரியதாகி விட்டது. அது, சொல்கிற நேரத்தையும் பொருத்திருக்கிறது.

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை

என்று ஒரு குறள் உண்டு. வாரியார் நண்பர்களை நேராக வைத்துக் கொண்டேகூட குறை சொல்லுவார்கள். என்னைப்பற்றி, என் எதிரிலேயே குறை சொல்வார்கள். காங்கிரஸ்காரர்களுடைய தவறுகள் பற்றியும் கூட்டங்களில் சொல்வது உண்டு. அவர்கள் சொன்ன தொனியிலே, பாணியிலே, கருத்திலே அதிருப்தியடைந்தவர்கள் இடத்திலிருந்து சலசலப்பு முதல் நாள் இருந்திருக்கிறது. வாரியார் அவர்கள் உடனே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். "ஏதாவது தவறான எண்ணத்தோடு சொன்னதாகக் கருதுவதானால், மன்னிப்புக் கேட்கிறேன்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அன்று அமைதி ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து பேருரை நடந்திருக்கிறது. மறுநாள் சொற்பொழிவுக்கு மேடைக்கு வருவதற்கு முன்பாகவே, அங்கு கிளர்ச்சி இருப்பதைக் கேட்டு, அன்றைய சொற்பொழிவை ரத்து செய்திருக்கிறார்கள். குழப்பத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று ரத்து செய்திருக்கிறார்கள். இந்தக் குழப்பத்திற்கு கட்சிக் கலர் கொடுக்க நான் விரும்பவில்லை. வாரியார் அவர்கள் மறுநாள் சொற்பொழிவை ரத்து செய்துவிட்டு வீட்டிலேயே இருந்திருக்கிறார்கள். முதல் நாள் சொற்பொழிவில் சலசலப்பு ஏற்பட்டதற்கும் மறுநாள் சொற்பொழிவை ரத்து செய்ததற்கும் இடையில் ஒரு நாள் அவகாசம் இருந்திருக்கிறது போலீசுக்கு. இந்த 24 மணி நேரத்தில் போலீசைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். முதல் அமைச்சரவர்கள் கண்ணியத்தோடு சொன்னார்கள், வாரியார் அவர்கள் சொன்னது தவறானாலும் கூட, குழப்பம் செய்வதைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று. வாரியார் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று உறுதி மொழியையும் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக முதல் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் போலீஸ் தக்க முறையில் செயல்படவில்லை என்பதையும் வலியுறுத்தி, இனி மேலாவது இப்படிப்பட்ட தவறுகள் தவிர்க்கப் படவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

கவர்னர் உரையில் மொழிப் பிரச்சினை பற்றி ஒன்றும் இல்லை. ஆட்சி மொழி, பயிற்சி மொழி பற்றி ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. இருந்தாலுங்கூட, பொதுவாக ஆட்சிமொழிபற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆட்சி மொழி தமிழ் என்று நாம் முடிவெடுத்து 13 ஆண்டுகள் ஆகின்றன. ஆட்சி மொழி தமிழ் என்றால், அதன் பொருள் என்ன? அலுவலகங்கள் ஆங்கிலத்தில் நடத்தப்படும் நிலையை நீக்கி, தமிழிலேயே நடத்தப் படவேண்டும் என்பதுதான். ஒரு துறையிலேனும் ஒரு அலுவலகத்திலேனும், ஆங்கிலம் அகற்றப்பட்டு,



தமிழிலேயே நடப்பதாகத் தெரியவில்லை. எனக்குத் தகவல் இல்லாததால் இப்படிச் சொல்கிறேனோ, என்னவோ! இன்னின்ன துறையில், ஆங்கிலத்திற்குப் பதில் தமிழே கையாளப்படுகிறது என்று சொன்னால், இன்னின்ன அலுவலகத்தில் ஆங்கிலம் நீக்கப்பட்டிருக்கிறது என்பது போன்ற தகவல்கள் இம்மன்றத்தில் வைக்கப்பட்டால், மகிழ்ச்சியடைவேன், பாராட்டுவேன். ஆனால், எனக்குத் தெரிந்த வரையில், 'ரிப்ளேஸ்மெண்ட்' என்ற முறையில், ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழ் என்று ஆட்சி மொழியாக்கப்படவில்லை. ஆக்கப்பட்டால்தான் ஆட்சி மொழி தமிழ் என்பதற்குப் பொருள் உண்டு. காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் அது நடக்கவில்லையென்றாலும், இந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக வந்ததாகத் தெரியவில்லை. தமிழே அறியாதவர்கள் மாவட்டங்களில் ஆளுநர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுவே முட்டுக் கட்டையாக இருக்கிறது.

பல மாவட்டங்களில் தமிழே அறியாத கலெக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு மாவட்டத்தில் சீக்கியர் இருக்கிறார். அவர் நல்ல தமிழைப் பேசுகிறார். அவரைப் பற்றிப் பிரச்சினை இல்லை. ஆட்சி மொழி தமிழ் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, தமிழே தெரியாத அதிகாரிகள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும் மாநகராட்சியில், தமிழைக் கொண்டு வரலாம் என்றால், தமிழே அறியாத கன்னடியர் அதன் ஆணையராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு தனி மனிதர் தமிழ் ஆட்சி மொழியாக வருவதற்குக் குறுக்கே நிற்கிறார். அது அவருடைய குற்றம் இல்லை; அவருடைய குறையில்லை. அவரை வேறு சர்வீசுக்குப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ் அறிந்த ஒருவரை நியமிக்கலாம். நமக்கும் தடையில்லாமல் இருக்கும். அவருக்கும் சங்கடம் இல்லாமல் இருக்கும்.

அதேபோலத்தான், மருத்துவத் துறையில் இயக்குநராக மேனன் என்பவரைப் போட்டிருக்கிறார்கள். முன்பிருந்தவரை மாற்றியிருப்பது எதற்காக என்பது பற்றிக் கவலையில்லை. ஆனால், மேனன் நியமிக்கப்பட்டிருப்பது, நாளை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி மொழி தமிழாக்கப்படுவதாக இருந்தால்கூட அதற்கு அரசாங்க நிர்வாகம் தடையாக இருக்கும் என்பதைப் பார்த்து, நியமனங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒன்றைக் குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே தமிழ் நிறைய வளருகிறது. 'இல்லை' என்று நான் சொல்லவில்லை. ஆனால், தமிழன்னையின் கையிலும், காலிலும் உள்ள விலங்குகள்—ஆங்கில ஆதிக்கம் என்னும் விலங்குகள்—இன்னும் கழற்றப்படவில்லை. ஆங்கில ஆதிக்கம் என்னும் அந்த விலங்குகள் கழற்றப்படாமல், தமிழ் அன்னைக்கு நன்றாக அலங்காரம் நடக்கிறது. அணிகலன்கள் பூட்டப்படுகின்றன, அழகாகக் கூட இருக்கிறாள் தமிழ்த்தாய். அவளுக்குப் பூசை கூட நடக்கிறது. ஆனால், கை விலங்கு, கால் விலங்கு மட்டும் அப்படியே இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அமைச்சர்களுடைய மனமின்மையோ ஆளுங்கட்சியின் மனமின்மையோ காரணம்

என்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லும் அளவுக்கு அறியாதவன் அல்ல. ஆனால், அதிகார வர்க்கம் என்கிற 'சர்வீஸ்' இருக்கிறதே, அதை மாற்ற கொஞ்சம் துணிவான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குத் தடை ஏதாவது இருக்கிறதென்றால், அதை உணர்ந்து நீக்க வேண்டுகிறேன்.

புது அமைச்சரவை வந்திருக்கிறது. அமைச்சர்களில் பலர் பழையவர்கள்தான் என்றாலும், முதல்வரும் கல்வியமைச்சரும் புதியவர்கள். அதனால், நிர்வாகம் இன்னும் கொஞ்சம் மாறுதல் அடைந்திருக்கிறது. பயிற்சி மொழியைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்லப்போவதில்லை. வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். பயிற்சி மொழி, ஆட்சி மொழியைப் பொறுத்த வரையில், எந்த ஆண்டுக்குள், எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதைக் குறித்து முழுமையாக ஒரு வெள்ளையறிக்கையைத் தெளிவாக இந்த மன்றத்தின் முன் வைத்தால் தெளிவு பெற உதவிகரமாக இருக்கும்.

கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நாட்டில் அமைதி நிலவி, வன்முறை தவிர்க்கப்படவேண்டும், வன்முறையை அரசாங்கம் ஒருநாளும் அனுமதிக்காது என்று. கீழ்வெண்மணி நிலைமையைப் பார்க்கிறோம். உண்மையில் சொல்லுகிறேன்—அந்தச் செய்தியைப் படித்த போது, என்னால் அன்று உணவு உண்ண முடியவில்லை. கற்பனைகள் நிறைந்த காப்பியங்களில் கூட காணாத கொடுமை கீழ்வெண்மணி சம்பவம். அது ஏதோ கூலிப் பிரச்சினை என்று எண்ணிவிடாதீர்கள். வர்க்கப் போராட்டமாக இருந்திருக்கிறது. வகுப்புப் போராட்டமாக இருந்திருக்கிறது. உயர் ஜாதி—தாழ் ஜாதிப் போராட்டம்; நிலப் பிரபுக்கள்—உழவர்கள் போராட்டம். 'கோல்டுவார்' என்பார்கள்; 'அன்டிக்ளேர்டு வார்' என்பார்கள்; அதுபோல் பிரகடனப் படுத்தாத ஒரு போர் நடந்துகொண்டிருக்கிறது, தஞ்சை மண்ணிலே என்பதைப் பார்க்கிறோம். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர். இந்த நல்ல நேரத்தில், அவர் அதில் கொஞ்சம் விசேஷ கவனம் செலுத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும்.

இலக்கியத்திலும் காணாத அளவுக்கு கொடுமை என்று சொன்னேன்; "கண்ணகி மதுரையை எரித்தது போல்" என்று எடுத்துச் சொல்லுவதற்கு நான் பற்று உள்ளவன். ஆனால், "பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க . . ." என்றாள் கண்ணகி. அவள் கூட, பெண்களையும், குழந்தைகளையும் விட்டுவிட்டு மற்றவர்களை எரித்துவிட்டாள். ஆனால், இந்தக் கொடிய பாவிகளோ, மற்றவர்களை விட்டுவிட்டு, பெண்களையும் குழந்தைகளையும் எரித்து இருக்கிறார்கள்; கற்பனை செய்கிற கவிஞன் கூட இப்படிப்பட்ட கொடுமையைச் சித்தரித்துக் காட்டவில்லை. காந்தியடிகள் சொன்னார், "நான் மாண்டு எனக்கு மறு பிறவி கிடைத்தால், அந்த பிறவி ஹரிஜனப் பிறவியாக இருக்க





விரும்புகிறேன்" என்று. நான் நம்புகிறேன், ஒருவேளை அவரே கீழ்வெண்மணியில் ஹரிஜனப் பெண்ணாக அவதரித்து, எரிக்கப் பட்டவர்களில் ஒருவராக இருந்து எரிக்கப்பட்டுவிட்டாரோ என்று இப்படியும் கற்பனை செய்து பார்க்கும் அளவுக்குக் கொடுமை நடந்திருக்கிறது.

முடிவாக அமைச்சர் குழுவினர்க்கு என் வேண்டுகோள்—இந்தப் பிரச்சினையை நாம் எப்படி அணுக வேண்டும்? இது இன்று நேற்று பிறந்தது அல்ல. கூலிப் பிரச்சினையும் அல்ல. மிராசு தார்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? தங்களுடைய நிலப் பிரபுத்துவத்திற்கு கூலி உயர்வு கோரிக்கை ஒரு அறைகூவல் என்று கருதுகிறார்கள். கூலி கேட்கிறார்கள் என்பதல்ல. கேட்கிற கூலியைக் கொடுத்துக்கொண்டே போனால், நிலப் பிரபுத்து வத்தையே போக்கவேண்டும் என்று சொல்வார்கள். அப்படிப் பட்ட கொள்கை இனியும் வலிமை பெறக் கூடாது, ஓங்கக் கூடாது. அதற்கு நாம் விட்டுக் கொடுக்கக்கூடாது என்று மிராசு தார்களுடைய மனப்போக்கு இருக்கிறது. இரண்டாவது—இதிலே உயர் ஜாதி மனப்பான்மை இருக்கிறது. கூலி கூடுதலாகக் கேட்பதை விட்டுவிட்டு, தங்களைக் கும்பிட்டும் வாழ்ந்தாக வேண்டும் என்று மிராசுதார்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படி அந்த நிலையில் அந்த மக்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகவே வைத்துக்கொண்டிருக்கும் கொடுமையை மாற்ற அரசாங்கம் ஆக்க வழியில் என்ன செய்யப் போகிறது, விஞ்ஞான ரீதியிலான சோஷலிசக் கொள்கையைத் தனது தேர்தல் பிரகடனத்தில் சேர்த்த திராவிட முன்னேற்றக் கழகம்—ஜாதி ஒழிப்புக்குப் பாடுபடுவதைக் கொள்கையாகக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம்—ஆளுகிற இந்த நேரத்தில், அந்த ஜாதி ஆணவம் ஒழியவும், நிலப்பிரபுத்துவம் ஒழியவும் ஆவன செய்ய வேண்டும். செய்து முடிக்கவேண்டும். ஒரு இலக்கியச் செய்தி சொல்லி முடிக்கிறேன். அதற்கு ஒரு பின் சரித்திரம் இருக்கிறது. கோபாலகிருஷ்ண பாரதியார், அந்தணர்; பௌராணிகர்; சிவ பக்தர்; அவர் 'நந்தன்' நாடகம் எழுதியிருக்கிறார். பெரிய புராண நந்தன் கதையில், மிராசுதார் பாத்திரம் கிடையாது. ஆனால், கோபாலகிருஷ்ண பாரதியார் எழுதிய நந்தன் நாடகத்தில் ஒரு மிராசுதார் பாத்திரம் படைத்திருக்கிறார். அவர் தஞ்சை மாவட்ட வாசியாதலால், அவர் தலைமுறையில் மிராசு கொடுமை கடுமையாக இருந்ததைப் பார்த்திருக்கிறார். தாழ்த்தப்பட்டவர் களை மிராசு எப்படியெல்லாம் ஒடுக்குகிறது என்பதைப் பார்த்து மனம் வெதும்பி, ஒரு மிராசுதாரைப் பாத்திரமாக்கி, உழவர்—மிராசுதார் போராட்டமாகவே அந்த நாடகத்தை சித்தரித் திருப்பதைப் பார்க்கிறோம். முதல் முதல் தோன்றிய பிரசார நாடகம் அது. மிராசுதார்களின் கூலிப் புலவர்கள், அந்தக் காலத்திலேயே நாடகத்தைப் படிக்க வேண்டாமென்று பிரசாரம் செய்தார்கள். அந்த நாடகத்தை நினைவில் வைத்துப் பார்க்கும் போது, ஒரு அமைதியான பிரகடனப்படுத்தாத வர்க்கப் போர் நீண்ட காலமாகவே தஞ்சை மாவட்டத்தில் நடக்கிறது என்பது புரியும். முன்பு தனித் தனியாக ஹரிஜனங்கள் கொல்லப்

பட்டார்கள். இப்பொழுது 43 பேர்கள் குடிசையில் வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நிலப் பிரபுத்துவம் பெற்றெடுத்திருக்கும் பேய்க் குழந்தை தீண்டாமையாகும். அந்தத் தீண்டாமை ஒழிப்புக்காகவும், நிலப் பிரபுத்துவம் நீங்கவும், இதை ஆக்க வழிகளில் அணுகி, பிரச்சினையைத் தீர்த்து, மேலும் வெண்மணிகள் நிகழாமல் காக்கவேண்டும் என்று ஆட்சியை வேண்டுகின்றேன், வணக்கம்.

**திரு. சி. வே. வேலப்பன் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையானது மிகச் சிறப்பாக அமையப் பெற்றிருக்கிறது. அப்படி அமையப் பெற்றிருப்பதற்கு, முன்பு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் காரணம். அவர் காலத்தில்தான் அந்த உரை வந்தது. ஆனால், அந்த உரையைத் தொடர்ந்து நாமெல்லாம் அதிலே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுகிற இந்த நேரத்தில், அண்ணா அவர்கள் இல்லாமையும், அவர்கள் கொண்டுள்ள இலட்சியங்கள், எண்ணங்கள், அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரண காரியங்கள் நடைமுறைக்கு வர முடியாத அளவுக்கு நிகழ்ந்துவிட்டது, அண்ணாவுக்கு நாம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அவர்களுடைய கொள்கையில், கவர்னர் உரையில் பல நீர்ப்பாசனத் திட்டங்களையும் இன்னபிற பல துறைகளையும் மேற்கொண்டு, அந்தத் துறைகள் அவ்வளவும் செவ்வனே நடைபெறும் என்ற கருத்தையும், நடைபெறுவதற்கான வழிவகைகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை உள்ளிட்ட கருத்தை நாம் பார்க்கிறோம். ஆனால், அப்படிப்பட்ட, உள்ளிடப்பட்டிருக்கிற கருத்து செயல்பட வருகிற போது, பல இன்னல்கள், சூழ்நிலைகள் ஏற்பட்டு, அந்தக் கருத்துக்கள் நடைபெற முடியாத நிலையினை நாம் பார்க்கிறோம். இதனை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், கடந்த கால அரசு, ஒவ்வோர் ஆண்டும் ஆளுநர் அவர்களின் உரைகளை வெளியிட்டு, அந்த உரைகளின் மீது நடைபெறுகின்ற விவாதத்திற்கு நன்றி தெரிவிக்கின்றதிலே, அது பாராட்டப்பட முடியாத நிலையில் இருக்கின்ற நிலைமையையும் எடுத்துச் சொல்லி, அது நடைமுறைக்கு வரும்போது பல சூழ்நிலைகள் ஏற்பட்டு, அந்த ஆளுநர் அவர்களுடைய உரை நிகழ்ந்ததாகக்கூட எண்ணிப் பார்க்கின்ற அளவுக்கு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படாத வகையிலே அதிலே கொள்கை விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்தக் கொள்கை விளக்கங்களும் குறிப்புகளும் நடைமுறைக்கு வருகின்றபோது, ஒருசில இடர்கள் ஏற்பட்டாலும் அவற்றினை நீக்கி, இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று பணிவன்புடன் தெரிவித்து, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பல ஆண்டுகளாக ஆளுநர் அவர்களின் உரைகளைப் பார்க்கும்போது, சேலம் மாவட்டம், நான் சார்ந்துள்ள மாவட்டமாக இருந்தாலும், அந்த ஆளுநர் அவர்களுடைய உரையைப் பார்த்து





நாங்கள் களிப்புறும் வகையில் அப்பகுதி மக்கள் இன்புறும் நிலையில் சமஸ்த காரியங்களும் நடைபெறவில்லை. குறிப்பாக, அதிலே குறிப்பிட்ட அம்சங்களும் இல்லாமல் இருந்தன. ஆனால், இவ்வாண்டு அறிக்கையைப் பார்க்கும்போது, சேலம் இரும்பாலையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக ஆளுநர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும், பல ஆண்டுகளாக சேலம் மாவட்டம் வறண்ட பிரதேசமாக இருக்கிறது. அதற்காக ஒரு திட்டம் தயாரித்து செயல்படுத்த வேண்டும் என்று முன்னால் இருந்த அரசுக்குக்கூட நான் கடிதம் மூலமாகவும் சட்டசபைப் பேச்சுக்கள் மூலமாகவும் பல முறை விண்ணப்பத்திருக்கிறேன். சேலத்தில் மேட்டூர் அணையிலிருந்து திருமணிமுத்தாறு—பொன்னியார் என்ற திட்டத்தை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டும். அப்படித் திருமணிமுத்தாறு—பொன்னியாறு திட்டத்தை எடுத்துச் செய்தால் பல லட்சக்கணக்கான மக்கள் இன்புறும் நிலை ஏற்படுவதோடு, வறட்சியாக இருக்கும் பிரதேசங்கள் நஞ்சைப் பாசனம் பெறுவதற்கும், உணவுக் கட்டுப்பாட்டு நிலைமைகள் நீங்குவதற்கும், உணவுக் கஷ்டம் நீங்குவதற்கும் வழி ஏற்படும் என்று பல முறை விண்ணப்பித்தும், முந்தைய அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, இந்த அரசாவது திருமணிமுத்தாறு—பொன்னியாறு திட்டத்தை வருகிற ஆண்டுத் திட்டத்தில் சேர்த்து ந.ப. 12-00
நிறைவேற்றப் பாடுபடவேண்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஜேடர்பாளையம் அணைக்கட்டிருந்தும், காவிரி பகுதிகளிலிருந்தும் கால்வாய்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கால்வாய்கள் தோன்றுதொட்டு, 1950-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பயன்பட்டு வந்தன. அரசாங்கத்தின் உதவி எதுமின்றி, விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்களாகவே, தங்கள் சொந்தப் பணத்தைப் போட்டு, ஏராளமாக கடன்களை வாங்கி, அதற்காகச் செலவழித்தார்கள். அரசாங்கத்தின் அனுமதியின்றி அவர்கள் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்தி வந்தனர். முந்திய அரசும் தண்ணீர் எடுப்பதைத் தடை செய்யவில்லை. முந்திய அரசு விவசாயிகள் அனுமதியின்றி தண்ணீர் எடுப்பதைத் தடை செய்திருக்குமானால், விவசாயிகளின் நிலை அப்பொழுதே சுமுகமாக முடிந்திருக்கும். முதலில் தண்ணீர் எடுக்க அனுமதி கொடுத்துவிட்டு பிறகு தடை செய்தது. மீண்டும் விவசாயிகள் விண்ணப்பித்துக்கொண்டதன் மேல் அவர்களுக்கு அனுமதியும் வழங்கிக்கொண்டு வந்தது. குறிப்பிட்ட தேதியில் தண்ணீர் எடுப்பதைத் தடுத்து நிறுத்தப்படாததால் மக்கள் அதனை நம்பி தங்கள் பணத்தை ஏராளமாகச் செலவழித்து வந்திருக்கிறார்கள். தற்போது அவர்கள் தண்ணீர் பெறமுடியாத நிலையில், அந்தத் திட்டங்கள் முடிவுறாத நிலையில் இருக்கின்றன. ஆகவே, இந்த அரசு அந்தப் பகுதி விவசாய மக்களின் நலனைக் கூர்ந்து கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். பாலைவனமாக இருந்த இடங்கள் சோலைவனமாக மாறுகின்றன என்பதைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால்

சோலைவனமாக இருந்த பகுதிகள் எல்லாம் பாலைவனமாகக் காட்சியளிக்கும் நிலைமை இருந்து வருகிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும். புன்செய்ப் பயிர்கள் வைத்துக் கொண்டிருந்தவர்கள் அதுவும் வைக்க முடியாத நிலையில் தத்தளிக்கிறார்கள். நன்செய்ப் பயிர் வைப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள். கால்வாய்ப் பகுதிகளைச் சீர்ப்படுத்த வேண்டும். ஆகவே, கால்வாய்களைச் சீர்ப்படுத்துவதற்காக அரசாங்கம் சில லட்சம் ரூபாய்களைச் செலவழித்து விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அரசாங்கம் சில லட்சம் ரூபாய்களைச் செலவிட முன்வர வேண்டும். அரசாங்கத்தில் பணம் இல்லையே என்று சொல்லிவிடக்கூடும். ஆகவே, கால்வாய்களைச் சீர்ப்படுத்துவதற்கான தொகையை விவசாயிகளிடமிருந்தே ஐந்து, பத்து ஆண்டுகளில் பெறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். ஆக இதனைக் காலந்தாழ்த்தாமல் உடனடியாகச் செயல்படுத்தி அப்பகுதி விவசாய மக்களுக்கு நல் வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, it is rather tragic that we are now continuing the discussion on the Governor's Address in the absence of our distinguished leader in Tamil Nadu, the late Thiru C. N. Annadurai.

Now, with regard to the Governor's Address it is equally unfortunate that this Governor's Address has been reduced to that of a post-mortem examination of the Nagercoil Election. It is really a pity that we have to reply to the points and counter-points made on the subject of the Nagercoil Election. Thanks to the Congress Party, this is the situation which we are now passing through in this House.

Sir, with regard to the Nagercoil Election, some allegations have been made against the Ruling Party and the Ruling Party has made some counter-allegation against the Congress Party and the Congress Party has also taken great credit for that as the last straw on the camel's back and as the drowning man would catch the straw that he could get. The Congress Party has been so jubilant with the Nagercoil Election result which is to their linking. But in this connection, I can point out to this House that after the Dravida Munnetra Kazhagam came to power, several by-elections have taken place. The first by-election took place for the South Madras Parliamentary Constituency and the D.M.K. won it with an overwhelming majority and the Congress lost it. Then we have had a by-election in the Salem district where Thiru Veeramani won it and the Congress lost the seat again. Then we had yet another by-election in Tenkasi and the seat already held by the Congress Party has been wrested by the present ruling Party which is really an admirable thing. Finally came the bye-election to the Nagercoil Parliamentary Constituency which was





previously held by a Congressman. The Congress Party won the election and retained the seat. That is all that has happened. Of course, I have nothing to say against the Congress Party when they try to imagine that they have a shot in their arm and gloat over this particular election. They have been saying that the Central Ministers have not gone to Nagercoil for canvassing for the Congress Party but that the State Ministers have gone there for canvassing for their candidate. We have again and again pointed out that no Minister should go anywhere in this constituency and that is an accepted principle adopted by all the parties concerned. I have got a lot of evidence to prove that there had been a vote-catching hunt by the top Congress Party leaders. They have been arguing that no Central Minister has toured that constituency and they are making that a virtue out of necessity. They know that if the Central Ministers come there, they will lose the votes. They know what happened at Tenkasi when Shri Morarji Desai spoke at Rajapalayam. There was strong reaction among the people and the result at Tenkasi went against them. So, out of their own enlightened self-interest ,they have not brought the Central Ministers to that constituency and if they had brought them there, they knew they would lose the votes. Their main complaint is that the State Ministers had camped there to canvass support for Dr. Mathias. But I want to ask, whether there was not the ex-Finance Minister and ex-Permit-Licence-Quota Minister, Thiru T. T. Krishnamachari as also other senior Congress stalwarts who have canvassed for the Congress Party to the maximum extent.

Then the hon. Member Thiru Vinayakam has raised the point about the presence of Ministers and the use of the official machinery there. In this connection, I wish to point out that the entire official machinery was set in motion by the then Chief Minister, Thiru Bhaktavatsalam when there was a bye-election to the Tiruvannamalai Constituency which was contested by the present Minister for Labour, Thiru P. U. Shanmugham. The entire Cabinet made their presence there. But in this case the entire Cabinet has not made their presence there. I am not saying that their presence can be defended but a particular code of conduct with regard to presence of Ministers must be arrived at by a consensus.

Now comes the question of violence. I can tell this House that the violence was first started by the Congress Party.

THIRU K. VINAYAKAM : On a point of order.

DR. H. V. HANDE : There is no point of order.

THIRU K. VINAYAKAM : I object to this kind of irresponsible statement that the Congress Party started the violence. He must either substantiate it by some evidence or withdraw it.

DR. H. V. HANDE : I can definitely substantiate it but I have not got the luxury of getting 40 or 45 minutes as the hon. Member has got. But I can point out one or two instances. The

body of Thanga Nadar of Shevilai, near Kadiyapattinam, about 12 miles from Nagercoil who was reported missing from January 10 was found in a decomposed state in a thicket three furlongs from his house on the night of January 12. The deceased was said to be a United Front worker during the Parliamentary bye-election there. The police are investigating the matter. This sample of violence has already been witnessed by me in my constituency and I know the amount of violence indulged in by the Congressmen. But Thiru Subramaniam has been saying times without number that it was only the Congressmen who were beaten by the other party workers. Perhaps he thinks that if a certain thing is repeated ten times, the people will start believing his statement and say that that is correct.

Now with regard to communalism, I can tell this House that in a particular area one particular community represented by Dr. Mathias was abused and wrong epithets were used. Our ex-Finance Minister, Thiru T. T. Krishnamachari went to the Agraharam and canvassed votes in the name of communalism. In Tamil it is called "இரட்டை வேஷம்" This is certainly an obnoxious thing. I can tell you one thing, not that D.M.K. men are my friends. If there is any one party in the whole of India which has taken positive steps to wipe out communalism, it is the D.M.K. party, by the very enactment which they have recently passed saying that they would promote inter-communal marriages and would appreciate such marriages. A 'pathakkam' is going to be presented to such couples. That is the positive effort of D.M.K. party to wipe out communalism. It is not the Congress that won; it is the multi-headed monster, unbelievable fantastic corruption, organised goondaism on an unprecedented scale perpetrated in Nagercoil .........

THIRU J. JAMES: On a point of order Sir. Is the hon. Member in order in reading from manuscript in his hands?

DR. H. V. HANDE: I might say that it is not a point of order but a point of disorder. I have got the right. . . .

THIRU J. JAMES: I want a ruling from the Chair and not from the hon. Member.

DR. H. V. HANDE: We can quote from manuscripts and that is the procedure we have been adopting.

Coming to the Police Department, there is a theory that the Police is in the hands of D.M.K. and therefore the Police are siding the D.M.K. I wish the Hon. Chief Minister listens to what I am going to say on this very important point. On paper, the subject of 'Police' is in the hands of D.M.K. party. Accepted. But is the police loyal to D.M.K.? I question that. I have no faith that the police is loyal to D.M.K. Whenever a person is wanted in the Centre, he is taken from Tamil Nadu. Recently a very high official from the Police Department has been taken to the



Centre. Whenever the Centre recruits officers from the Indian Police Service. . . .

(The Chairman sounded the gong.)

I wanted five minutes extra time. We shall adjust somehow, later. Recently a promotion took place in the Police Department and immediately the person was taken to the Centre with the rank of an Inspector-General of Police. Later on he is supposed to come on behalf of Central Government to inspect the work of the election arrangement in Nagercoil. What sort of background will this produce in the minds of State officials? The State officials will think twice before showing their loyalty to this State? There is always the possibility of one showing loyalty to the Congress Party being promoted and being taken from the State to the Centre. I received trunk calls when I was in Trivandrum 'Is the police in the hands of D.M.K.?' On paper it may be that 'police' is in the hands of our beloved late Chief Minister, Thiru Annadurai. But are the police loyal to the D.M.K.? No. I am saying this from the trunk calls I received when I was in Trivandrum.

Now the election is over. The Congress can gloat over that they had done a wonderful job. But what I want to ask is, why should leaders like Kamaraj contest in constituencies which are safe? Can Thiru Kamaraj contest from South Madras? Can Thiru C. Subramaniam contest from Perundurai? Can you contest? Let us see.

THIRU P. G. KARUTHIRUMAN: Sir, the hon. Member has no business to use the phrase 'Can you contest, etc.' Then I can also argue asking him 'Can you contest from such and such a place?'

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் பேசலாம். நான் சொல்லக்கூடாதா?

THIRU P. G. KARUTHIRUMAN: Why should we not gloat over? We won with a margin of more than $1\frac{1}{2}$ lakhs.

DR. H. V. HANDE: Whatever he wants to say, Thiru Karuthiruman can say after I finish my talk. That is the only request I can make.

THIRU K. VINAYAKAM: Whenever an irresponsible statement is made by a member of an Opposition Party, when our feelings are wounded, it is our duty to get up now and then, to clarify the position. The hon. Member is using all sorts of phrases, vituperous languages just to throw mud in our faces. You should pull up the hon. Member.

DR. H. V. HANDE: Thiru Vinayakam is angry not because that I had made any irresponsible statement but because I have made an emphatic, extremely responsible statement. When it comes to safe constituencies your leaders contest. I ask this. Can any leader contest from Perundurai?

THIRU P. C. KARUTHIRUMAN : What business has the hon. Member to tell us which leader should contest? Let him contest with his party ticket from Perundurai. I will teach him a lesson.

DR. H. V. HANDE : You make 'scape-goats'. For South Madras, my poor friend was made a scape-goat. Subsequently in Tenkasi, you repeated the same thing. Then you found another scape-goat for Salem. Has your second leader, Thiru Subramaniam the guts? Let him come into the open and contest from Perundurai and let him say that he will win . . . .

THIRU P. G. KARUTHIRUMAN : Is this election propaganda that the hon. Member is making?

DR. H. V. HANDE : You want all your தொண்டர்கள்

THIRU P. G. KARUTHIRUMAN : Then why did you allow your party man to contest as an independent?

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி) திரு. தங்கப்பன் அவர்களை உரையாற்றும்படி அழைத்தார்]

*திரு. டி. தங்கப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே இன்றைய தினம் கவர்னர் உரையின்மீது எனது கட்சிக்காரர் கொண்டு வந்துள்ள நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விழைகின்ற வேளையிலே—நமது மாநிலத்தின் முதல் அமைச்சராகவும், மக்கள் தலைவராகவும், எங்கள் கட்சியின் ஸ்தாபகராகவும் விளங்கிய திரு. அண்ணா அவர்களது மறைவு உள்ளபடியே எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிப்பதோடு கவலையையும் தருகிறது அவருக்கு எனது அஞ்சலி. இன்றையதினம் அவர் இல்லாத இந்தச் சபையில் உரையாற்றுவதற்கு நான் மிகுந்த வருத்தம் அடைவதோடு அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும். கவலையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கவர்னர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எங்கள் கட்சி கொண்டு வந்திருப்பதை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன். 1968-69-ம் ஆண்டிலே நமது முன்னேற்றங்களைப்பற்றி கவர்னர் அவர்கள் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டு வந்த நமது மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயரை வைக்கவேண்டுமென்று மக்கள் கோரி வந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதோடு மாத்திரம் அல்ல, வேளாண்மைத் துறையில் மேன்மையான முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்ற தன்மையில் சிறப்பான காரியங்களை, சாகசங்களை, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இல்லாத அளவுக்கு விவசாயத் துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சாதாரணமாக 7 லட்சம் டன் கொள்முதல் செய்து ஆறேமுக்கால் லட்சம் டன் நியாய விலைக் கடைகள் மூலமாக நல்லமுறையில்



வழங்கி வருகின்ற செயலினையும் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல. நீண்டகாலமாக இந்த நாட்டிலே மூன்று பெரிய திட்டங்களைப்பற்றிச் சொல்லப்பட்டு வருகிறது. ஒன்று சேலம் உருக்காலைத் திட்டம், இரண்டு சேது கால்வாய்த் திட்டம், மூன்று தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம். இதிலே தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்தைப் பொறுத்தவரையில் முந்திய ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 24 கோடி அளவிலே முதலீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய காரியங்களை மத்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதே நேரத்தில் இன்றைய தினம் கவர்னர் சேலம் உருக்காலையைப்பற்றி திட்டக் கமிஷன் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருப்பது மன நிறைவு அளிப்பதாய் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும் அவரது உரையில் சேது கால்வாய் திட்டம்பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொருளாதாரத் துறையில் தன்னைக் கட்டி வருவதும், ஆசியாவின் சூயசும், தொழில் துறை சாத்தியமானதுமான சேதுகால்வாய்த் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கே மிகவும் இன்றியமையாததாகும்.

1955-ம் ஆண்டு ஏ. ஆர். முதலியார் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்திருக்கிறது. அந்தக் கமிட்டி அந்த சேது கால்வாய் திட்டத்தை தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்துடன் ஒருங்கிணைத்த திட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிக்கைவிட்டது. அப்போது அதனுடைய மூலதன மதிப்பீடு 8 கோடியாக இருந்தது. அதற்குப் பிறகு பரிசிலனை செய்கிற போது அதனுடைய முதலீடு 21 கோடியாகியது. அதற்குப் பிறகு இன்றையதினம் 1967-லே பார்க்கிறபோது 35 கோடியில் இருந்து 40 கோடி வரை ஆகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடித் திட்டம், சேலம் திட்டம் ஆகிய இந்தத் திட்டங்களுக்கு அளிக்கிற ஒரு மதிப்பு, ஒரு கௌரவம் சேது கால்வாய்த் திட்டத்திற்கும், ஆசியாவின் சூயஸ் என்று சொல்லப்படுகிற அந்தத் திட்டத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திட்டக் கமிஷனிலே கொள்கையளவிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற திட்டங்களிலே இந்தத் திட்டம் மிக முக்கியமாக இருக்கிறது. மற்றத் திட்டங்களிலே அன்னியச் செலாவணி கிடைப்பதில்லை. ஆனால் சேதுக்கால்வாய்த் திட்டத்தின் மூலமாக அன்னியச் செலாவணி கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்குக் கிடைக்கும். மேற்குக் கரையிலே இருந்து கிழக்குக் கரைக்குக் கப்பல்கள் எளிதாக குறைந்த தூரத்தில் செல்வதற்கான வாய்ப்புகள் நிறைய ஏற்படுத்துகிறது. சென்னையைப் பொறுத்தவரையிலும், மேலும் விசாகப்பட்டினம், சிட்டகாங் போன்ற இடங்களைப் பொறுத்தவரையிலும்கூட இதன்மூலம் மற்ற இடங்களுக்குச் செல்ல குறைந்தது 340 மைல், சிட்டகாங்கிற்கு 118 மைல் என்ற அளவில் தூரம் குறையக்கூடிய வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டுக் கப்பல்கள், இந்தியத் துறைமுகங்களின் வழியாக

வந்துசெல்கிற கப்பல்கள் 1960-ம் ஆண்டு, 1961-ம் ஆண்டு, 1962-ம் ஆண்டு ஆகிய ஆண்டுகளிலே கணக்கெடுத்துப் பார்க்கிறபொழுது 4,873 கப்பல்கள் சென்றிருப்பதாக அறிகிறோம். அதை வைத்துப் பார்க்கிறபொழுது இந்தக் கால்வாய் ஏற்பட்டிருந்தால், அதன் மூலம் கிட்டத்தட்ட 51½ கோடி ரூபாய் கிடைத்திருக்கும். இந்தத் திட்டம் ஒரு லாபகரமான திட்டம், தமிழ்நாட்டிலுள்ள திட்டங்களிலே இது முக்கியமானதாகும். அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒன்றாகவும் இருப்பதால், இது இராமநாதபுரத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த திட்டமாக இருக்க முடியும். தூத்துக்குடித் திட்டத்தையும், அதோடுகூட ஏஷியன் சூயஸ் என்று சொல்லப்படுகிற சேதுகால்வாய்த் திட்டத்தையும் ஒருங்கிணைந்த ஒரு திட்டமாகச் செய்து நிறைவேற்றுவதற்குத் தமிழக சர்க்காரையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதியைப் பொறுத்தவரையிலும், வைகைப் புனரமைப்புத் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்காக, 4 கோடி ரூபாய் அளவிலே அந்தக் கால்வாய்ப் புதிப்பிப்பதற்காக, ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்திலே முந்தைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் பரம்பிகுளம்—அளியாறு திட்டத்திற்காக 2 கோடியே 6 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் 4 கோடி ரூபாய் திட்டத்திலே இருக்கிற வைகைத் திட்டம் இது வரை ஆரம்ப வேலைகள் தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு முழுமையான நிதி வசதி செய்து இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ அதை நிறைவேற்றி முடிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு புதிய மந்திரிசபை பொறுப்பேற்றிருக்கிறது. முன்னாள் அமைச்சரவையுடன் கொள்கையளவிலே மாற்றம் எதுவும் இல்லாவிட்டாலும் புதிய அமைச்சரவையில் புதிய அமைச்சர்கள் எல்லாம் இன்றைக்கு வந்திருக்கிறார்கள், அவர்களுக்கு எல்லாம் முதலிலே என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முன்னால் இருந்த முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் பொறுப்பிலே இருந்தார்கள். அவர்களுடைய காலத்திலே அவர்களுடைய நிழல், அவர் கட்டிக்காத்த உணர்வுகள் எல்லாம் இந்த அரசாங்கத்தின்மீது மதிப்பு ஏற்படக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியது. இன்றைய தினம் அந்தப் பெரும் நிழல் கிடையாது. இந்த மந்திரிசபை புதிய பார்வையை, நோக்கை நிர்ணயித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்த மந்திரிசபை முதலிலே ஒரு தெளிவான ஏற்பாட்டை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். எதிர்காலத்திலே உள்ள பிரச்சனைகளையும் கவனத்தில்கொண்டு, வருகின்ற 1972-லே நாடு எப்படி இருக்கும் என்று கற்பனை





செய்யக்கூடியவர்களாக இருந்தால்தான் தமிழகத்து மக்களையெல்லாம் ஈர்த்து நம் பின்னாலே இருக்கச் செய்துகொள்ளமுடியும் என்பதை நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் தம்முடைய உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், 'பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாகவும், வேளாண்மை உற்பத்தி சுருங்கியுள்ளதாலும், விற்பனை வரி போன்ற முக்கியத் தலைப்புகளின்கீழ் மாநில வரவினங்கள் இயல்பாகவே குறைந்துள்ளன' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நாம் பூரணமாக உணர்ந்திருக்கிறோம். அவற்றை நீக்குவதற்கான வழிகளை நாம் கண்டு பிடிக்க வேண்டும். நேற்றைய தினம் கோவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றித் தீவிரமான ஏற்பாடுகள் செய்யப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். கடந்த ஒரு வருட காலமாகவே இந்தப் பிரச்சினை இப்படியே தள்ளிப்போடப்பட்டு வந்ததால்தான் 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாகவாவது இந்தப் பஞ்சாலைப் பிரச்சனையை தீர்ப்பதற்கு காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் புதிய நீர்ப்பாசன வசதிகள், புதிய விதைகளைப் பயன்படுத்துதல் போன்ற இவையெல்லாம் நாம் அனுசரித்தாலும் ஏதோ ஒரு அளவிற்கு தான் முன்னேறமுடியுமே தவிர அடிப்படையாகவே நிலப்பிரச்சனையை நாம் தீர்க்காத வரையிலும் உணவில் தன்னிறைவோ உபரியோ பார்க்கமுடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமத்துவத்தை ஏற்படுத்தினால்தான் சுபிட்சம் ஏற்படுத்த முடியும். சுபிட்சத்தை ஏற்படுத்திவிட்டு பிறகு சமத்துவத்தை கொண்டுவரலாம் என்பது காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கை, அந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது. சமத்துவத்தின் அடிப்படையில்தான் சுபிட்சம் ஏற்பட முடியும் என்பதை இந்த அரசாங்கம் தெளிவாக கவனத்தில் கொள்ளவேண்டும். விவசாயத் துறையிலே புதிய போக்குகள் இருப்பதை நாம் உணரவேண்டும்.

வெண்மணியிலே நடந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் அது ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சனை என்ற அளவிலே மட்டும் நாம் அதைப் பார்க்கமுடியாது. ஒரு சாரார் அது சரிதான் என்றும், ஒரு சாரார் அதை ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சனை என்றும்தான் பார்க்கிறார்கள். ஆனால் இது சமூகத்தின் அடிதளத்திலிருந்து கொந்தளித்த பிரச்சனை என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்தப் பிரச்சனைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று ஜாதிப் பிரச்சனை, இரண்டாவது பொருளாதாரப் பிரச்சனை. இந்த இரண்டு பிரச்சனைகளையும் நீக்குவதற்கு நாம் காரியங்களைச் செய்யவேண்டும். அரிசனங்களைப் பொருத்தவரையிலே கடந்த காலத்திலேயும் சரி, இன்றைக்கும் சரி

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 பிப்ரவரி 24

அவர்கள் வாழ்க்கையிலே புதிய மாறுதல் ஏற்படவில்லை. கம்யூனிஸ்டுகளைக் குற்றஞ்சாட்டி சிலபேர்கள் வாழ நினைக்கிறார்கள். இம்மாதிரி தீ, வெட்டு, கொலை இவையெல்லாம் வேறு இடத்திலே நடப்பதில்லை, குறிப்பாக அரிசனங்கள் இருக்கக்கூடிய பகுதிகளிலே அவர்கள் விவசாயக் கூலிகளாக, விவசாயத் தொழிலாளர்களாக இருக்கக்கூடிய பகுதிகளிலேதான் ஏற்படுகின்றன என்பதை இந்தச் சரித்திரத்திலே இல்லாத அளவுக்கு நடந்துள்ள இந்தச் சம்பவத்தின் நிலைமை நமக்கு காட்டுகிறது. தமிழகத்திலே மேல்குடியிலே உள்ளவர்களுக்கு, வேறு ஏதாவது ஜாதிக்கு இந்த நிலைமை நிகழ்ந்திருந்தால் எல்லாம் என்ன ஆகியிருக்கும் என்று சொல்லமுடியாது. ஆகவே அரிசனங்களைப் பொருத்தவரையில் அவர்களுக்குரிய உரிமை, எழுச்சி இன்றும்
பி.ப. 12-30 இல்லை என்று நினைக்கிறேன். இதைப் போக்கவேண்டுமென்றால் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும். ஒன்று ஜாதியை அடியோடு ஒழிக்கவேண்டும். திராவிடமுன்னேற்றக் கழகம் ஜாதி ஒழிப்பு உணர்ச்சியில் நல்ல பங்கு எடுத்துக்கொண்டுள்ளது. எனவே இந்த அரசாங்கம் ஜாதி ஒழிப்பைச் சட்டபூர்வமாக நடைமுறையிலே கொண்டுவருவதற்கு முயற்சிகள் எடுத்தாகவேண்டும்.

இன்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் நிலை மிகவும் மோசமாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் பொருளாதார அடிப்படையிலும் அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தால்தான் முடியும். பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றுவதற்கு அடிப்படையான நிலச் சீர்திருத்தத்தை இந்த மூன்றாண்டு காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகக் கொண்டு வரவேண்டும். அமெரிக்கத் தூதர் செஸ்டர் பவுல்ஸ் அவர்கள் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிக் கூறியிருக்கின்ற கருத்தைப் பார்க்கும்போது இடதுசாரி கட்சிக்காரர்கள் கூடத் தோற்றுப் போக வேண்டுமென்ற நிலையில் அமைந்திருக்கிறது. இந்திய நாட்டைப் பொருத்த வரையில் மட்டுமல்லாது ஆசியாவைப் பொருத்த வரையிலும், ஆப்பிரிக்காவைப் பொருத்த வரையிலும் இருக்கக்கூடிய பயங்கரமான நிலைமையைச் சொல்லிவிட்டு ஒருவருக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் வைத்துக் கொள்ளலாம் என்று கருத்தைக் கூறியிருக்கிறார். தத்துவ அடிப்படையில் வேறு கண்ணோட்டத்தோடு கூறியிருந்தாலும் நம்முடைய நிலைமையைப் பார்க்கும்போது அதை உடனடியாகச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதைச் செய்வதன் மூலந்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும், பொதுஜனங்கள் கண்ணோட்டத்தை ஈர்க்க முடியும்.

கடந்த காலத்தில் காங்கிரஸ் அரசு, மழை பெய்து விட்டால் தங்களுடைய சாதனைகளின் காரணமாகத்தான் உற்பத்தி பெருகிவிட்டது என்று கூறுவார்கள். மழை இல்லை என்றால் மழை பொய்த்து விட்டது ஆகவே, விளைச்சல் குறைந்து விட்டது என்று காரணம் கூறுவார்கள். புதிய அரசாங்கம் அதை உதாரணமாகக் கொள்ளக்கூடாது. மழை இல்லாத காலத்திலும் சமாளிப்பதற்கு வழி காணவேண்டும். தற்போதுள்ள கொள்முதல் விலையும் மிகவும் குறைவு. நியாயமான அளவுக்கு விலை கொடுத்து தானியத்தை அதிகமாகத் தேக்கி வைத்துக் கொண்டால்தான் பஞ்சப் பிரச்சினையை ர்தீக்க முடியும். வளம் மிகுந்த செங்கற்பட்டு ஜில்லாவிலே ஏரிகளெல்லாம் வறண்டு கிடக்கின்றன. செங்கற்பட்டு ஜில்லா தஞ்சைக்கு அடுத்தபடியாக இருக்கும் பகுதி. இன்றைக்கு அங்குள்ள விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசாங்கம் ஓரளவு உதவி செய்த போதிலும் கூட இப்போது செய்யும் அளவு போதுமானதாக இல்லை. பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்வதற்கு உண்டான சட்டம் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள சட்டம். அந்த 'கோடை' மாற்ற வேண்டும். எங்கள் கோவை மாவட்டத்தில் உடுமல் பேட்டை, பல்லடம் போன்ற பகுதிகளில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது எங்களுக்குப் பழகிப் போய்விட்டதால் அடிக்கடி அதைப் பற்றிச் சொல்லாமல் இருக்கிறோம். ஆகவே, பஞ்ச நிவாரணம் கொடுப்பதற்கு புதிய ஒரு 'கோடை' ஏற்படுத்தி உடனடி நிவாரணம் கொடுக்க வேண்டும். உள்ளபடியே விவசாயிகளுடைய நிலையை உயர்த்துவதற்கு நான் முன்னாலே கூறியபடி. ஒரு நிலச்சீர்திருத்தச் சட்டத்தை உருவாக்கினால்தான் முடியும். அதை விரைவில் சட்டபூர்வமாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

காந்திஜி நூற்றாண்டு விழா சம்பந்தப்பட்ட மட்டில் சில காரியங்களைச் சொல்ல விரும்புகிறேன். சிறையிலே உள்ள கைதிகளின், ஆயுட் கைதிகளின் தண்டனைக் காலத்தை இரண்டு ஆண்டுகள், மூன்றாண்டுகள் மற்ற மாநிலங்களிலே குறைத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திலே ஓராண்டுத்தான் குறைத்திருக்கிறார்கள். காந்திஜி நூற்றாண்டு நடக்கும் காலம் என்பதோடு நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மறைந்த காலமும் இது. புதிய அமைச்சரவையும் பொறுப்பேற்று இருக்கிறது. ஆகவே, ஜென்ம தண்டனை அடைந்த கைதிகளுக்கு ஒரு சலுகை கொடுத்து தண்டனைக் காலத்தை 3 ஆண்டுகள் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவைப் பொருத்தவரை நீர்ப்பாசனப் பிரச்சனை பெரும் பிரச்சனையாக இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய நீராதாரங்களை வைத்துகொண்டு ஏற்கனவே இருந்த சர்க்காரும், இப்போது இருக்கக்கூடிய சர்க்காரும் சமாளிக்கும் முயற்சியைச் செய்துவருகிறார்கள். மழை இல்லாத காலங்களில் வாக்களிக்கப்பட்ட அளவு கூடத் தண்ணீர் கிடைப்பதில்லை. இதைத் தீர்க்க அண்டை மாநில அரசுகளோடு பேசுவது ஒரு வழி. இன்னொன்று, இப்போது ஒரு கியூசெக்ஸ் தண்ணீரில் 25 ஏக்கர் நிலத்தில் பாசனம் செய்யும் நிலை இருப்பதை மாற்றி ஒரு கியூசெக்ஸ் தண்ணீரில் 40, 50 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறக்கூடிய நிலையில் வாய்க்கால்களைச் சீர்திருத்தி பாசனத்திற்கு வழி செய்யவேண்டும்.

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 பிப்ரவரி 24

இதனைச் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

## 10. அமைச்சர் விளக்க உரை

## நகராட்சி மன்ற தேர்தல்கள் குறித்து.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82 (1) ன் கீழ் ஒரு அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நகராட்சி மன்றத் தேர்தல்கள் பற்றி ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் நடைபெறவிருந்த நகராட்சி மன்றத் தேர்தல்கள், முதலமைச்சர் அண்ணா அவர்களின் உடல் நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன. தேர்தல்களை ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் நடத்த இப்பொழுது அரசு முடிவு செய் துள்ளது. இவை இரண்டு கட்டங்களில் நடைபெறும்.

கீழே குறிப்பிட்டிருக்கக்கூடிய 9 நகராட்சி மன்றங்களில் ரிட் மனு அல்லது ரிட் அப்பீல் மனு உயர் நீதி மன்றத்தின் விசாரணையில் இருப்பதால் அவற்றிற்கு தற்சமயம் தேர்தல்கள் நடத்த இயலாது :—

(1) கோயம்புத்தூர்.
(2) திருச்சிராப்பள்ளி.
(3) அருப்புக்கோட்டை.
(4) வாணியம்பாடி.
(5) திருவண்ணாமலை.
(6) திருப்பூர்.
(7) மாயூரம்.
(8) நாகப்பட்டினம்.
(9) தேனி.

திண்டுக்கல் நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் உயா நீதி மன்றத்தின் உத்தரவின் மேல் அப்பீல் செய்வது பற்றி அரசாங்கத்தில் ஆலோசனையில் இருக்கிறது. ஆகவே திண்டுக்கல் நகராட்சிக்கும் தற்சமயம் தேர்தல் நடத்த இயலாது.

தற்போதைய நகராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 28-2-1969 பகல் பன்னிரெண்டு மணியுடன் முடிவுபெறும். அவற்றை 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி பகல் பன்னிரெண்டு மணி வரை நீடிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. புதிய நகராட்சி மன்றங்கள் 28-4-1969-ம் தேதியன்று பகல் 12 மணிக்கு தொடங்கும். ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள 10 நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்த இயலாதபடியால் அந்த நகராட்சி மன்றங்கள் 28-4-1969க்குப் பின்னர் தனி அதிகாரிகளின் பொறுப்பில் இயங்கி வரும்.



1969 பிப்ரவரி 24] [திரு. மா. முத்துசாமி]

நகராட்சி மன்றத் தேர்தல்கள், இரண்டு கட்டங்களில் ஏப்ரல் மாதம் 24, 26-ம் தேதிகளில் நடைபெறும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைப்பதன் காரணமாக இதே நகரசபைகள் இயங்குமோ அல்லது தனி அதிகாரிகள் இருப்பார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி பகல் பன்னிரெண்டு மணி வரை இப்போ திருக்கக்கூடிய நகராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் நீடிக்கும்.

## 8. ஆளுநரின்பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, இன்று ஆளுநர், அவர்களின் உரைமீது பேசுகிறபோது கடந்த இரண்டு உரைகளின் மீது பேசியது எனக்கு நினைவிற்கு வருகிறது. அப்பொழுது அன்புடனும், ஆதரவுடனும், உன்னிப்பாகவும் இங்கு பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் இன்று இல்லையே என்று நினைத்து மிகவும் வேதனையான உள்ளத் துடன் பேசுகிறேன். அன்று இரண்டு தடவை பேசும்போதும் ஜனநாயகத்தைப் பற்றியும் ஜனநாயகம் செயல்படவேண்டிய விதத்தைப் பற்றியும் பேசினேன். இன்றைக்கு அம்மாதிரியான காரியங்களைப் பற்றி பேசுவதை விட்டு என் தொகுதி பற்றி பேசு வதற்கே நான் அதிகமாக விரும்புகிறேன். இன்று ராஜ்யத்தில் பல பகுதிகளில் உள்ள நிலைமை, தண்ணீர் பற்றுக்குறை, குடிதண் ணீர் கிடைக்கவில்லையே என்ற நிலைதான் தோன்றி இருக்கிறது. என் தொகுதியைப் பொருத்தவரையில், மேட்டூரைப் பொருத்த வரையில் அங்கு குடிதண்ணீர் புதிதாகத் தேவைப்படுகிறது என்ப தோடு அங்கு ஏற்பட்டு இருக்கிற புதுத் தொழிற்சாலைகள் காரணமாக குடி தண்ணீர் கெட்டு விட்டிருக்கிற இடங்களில் குடி-தண்ணீர் இல்லாமல் இரண்டு ஆண்டுகளாக மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அங்கு தொழிற்சாலைகள் ஏற்பட்டதற்கு பின்னர் பி.என். பட்டி பஞ்சாயத்தைச் சார்ந்த கிராமங்களில் உள்ள கிணறுகள் எல்லாம் கெட்டு விட்டன. வீரக்கல்புதூர் பஞ்சாயத்தில் உள்ள கிராமங்களிலும் குடிநீர் கெட்டுவிட்டது. இந்த குடி தண்ணீருக்காக பல்வேறுவிதமான கிளர்ச்சிகள், பல் வேறு விதமான போராட்டங்கள், பல்வேறு விதமான விண்ணப் பங்கள், முறையீடுகள் இவ்வளவு நடந்ததற்குப் பின்னும் கூட அந்த ஊர் மக்களுக்கு இன்னும் குடி தண்ணீர் கிடைக்க வழி ஏற்படாமல் இருப்பது வேதனைக்குரியதாகும் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மற்றப் பகுதிகளைப் போல் அல்லாமல் மேட்டூர் பகுதி ஒரு விசேஷமான நிலையில் இருக்கிறது. மேட்டூர் அணை கட்டுகிற காலத்தில் அதற்கு அருகாமையில் உள்ள நிலங்களை பொதுப்பணித் துறை இலாகா நஷ்டயீடு அளித்து தனிப்பட்ட வர்களிடம் இருந்து வாங்கிக்கொண்டது. ஆனால் அணை கட்டி

முடிந்த பின்னர் அந்த நிலங்களுக்காக தேவை குறைந்து அங்கிருந்த வீடுகள், நிலங்கள் எல்லாம் பயனில்லாமல் கிடந்த வந்தன. அப்படிப்பட்ட நிலங்களையும் வீடுகளையும் பயன்படுத்திக் கொள்ள தக்க முயற்சி 1948-ல் துவங்கியது. 1948-ல் அன்று சட்டசபை உறுப்பினராக இருந்த திரு நாச்சியப்ப கவுண்டர் அவர்கள் தமிழக அரசு காரியாலயத்தில் ஒரு மாநாடு கூட்டி இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். அதற்குப் பின்னால் 1953-ல் அதேபோன்று ஒரு மாநாடு கூட்டி இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். இந்த இரண்டு மாநாட்டு நடவடிக்கைகள் மீது, அவற்றை அமல்படுத்துவதற்காக 1954-ல் அரசாங்கத்தால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவின்படி அங்கிருக்கிற நிலங்களை யார் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ, யார் அதில் விவசாயத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கே அவற்றை அளித்து விடுவது அல்லது குத்தகைக்கு அளித்து விடுவது என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அங்கிருக்கிற வீடுகளில், மராமத்து இலாகாவிற்குச் சொந்தமான வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கே அதை விற்றுவிடுவது அல்லது குத்தகைக்கு விட்டுவிடுவது என்று முடிவெடுத்தார்கள். அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். அப்போது சேலம் கலெக்டராக திரு. சபாநாயகம் அவர்கள் இருந்தார்கள். அவர்களுடன் பேசி விலை நிர்ணயம் செய்து அது செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1954-ல் அதற்காக ஒரு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட்டார். 1964-ல் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். இரண்டு தடவை இந்தக் காரியம் நடைபெற்றது. ஆனால் வீட்டு மனைக்காக நிலம் வழங்குகிற காரியம் இன்னும் முடிவுபெறவில்லை. இன்றுள்ள நிலை அங்குள்ள மக்கள் மீது மூன்று எஜமானர்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தின் மீது மராமத்து இலாகாவும், கூரை மீது டவுன்ஷிப் கமிட்டியும், மத்தியில் ரெவின்யூ இலாகாவும் அதிகாரம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த மூன்று பேர்களின் அதிகாரங்கள் காரணமாக போடப்பட்டிருக்கக் கூடிய குடிசைகளை பிரித்து விடுவது, தண்டனை அளிப்பது, ஃபைன் போடுவது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நோட்டீஸ் கொடுத்து குடிசைகளைப் பிரித்து விடச் சொல்வார்களோ என்று மக்கள் அஞ்சிக் கொண்டே காலத்தை நடத்துகிறார்கள்.

சின்னக்காவூர், தொட்டில்பட்டியில் பாரம்பரையாக விவசாயம் செய்து கொண்டிருக்கிற பகுதிகள் இருக்கின்றன. அணை கட்டியதில் அதிகத் தண்ணீரை வெளியே விடுவதற்காக வாய்க்கால்கள் வெட்டவேண்டுமென்று அந்தப் பகுதி நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. பின்னால் பெரிய நிபுணர்கள் வந்து வாய்க்கால்களுக்காக அந்த இடங்களை எடுக்கவேண்டியதில்லை, இயற்கையாக உள்ள வாய்க்கால்கள் வழி தண்ணீர் போய் விடும் என்று தெரிவித்தார்கள். ஆகவே அந்த நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் வெளியேற்றப்படாமல் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரம்பரையாக விவசாயம் செய்து கொண்டு வருகிற அந்த நிலங்களை தங்களுக்கே தரவேண்டுமென்றும் நஷ்டயீட்டை திருப்பித் தருகிறோம் என்றும் சொல்கிறார்கள். அந்த நிலத்தில் விவசாயம் செய்பவர்கள் மீது தண்டத் தீர்வை போடப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. வீட்டு மனைகள் வழங்கும் காரியமும் ஒழுங்காக நடைபெறவில்லை. தண்ணீர் தேக்கப் பகுதிகளில் தண்ணீர் குறைந்தவுடன் விவசாயம் செய்கிறார்கள். குதிரைவாலி என்ற தானியத்தைப் போட்டு பயிர் செய்து ஏழை எளிய மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். தண்ணீர் தேங்கி நிற்கிற பகுதியில் ஒரு அளவு வைத்திருக்கிறார்கள். 796 அடி வரையில் தண்ணீர் தேங்கி நிற்கும். அதற்கு மேலே உள்ள பகுதி மராமத்து இலாகாவிற்கு தேவையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அங்கு விவசாயம் செய்கிறவர்கள் பாரம்பரையாக விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் அங்கு கிணறுகள் வெட்டி, மரங்கள் வைத்து விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அந்தப் பகுதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதில் மராமத்து இலாகாவிற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று நான் விசாரித்ததில் தெரிந்து கொண்டேன். தண்ணீர் வடியும் போது விவசாயம் செய்கிறவர்கள் பல்வேறு முறைகள் கையாண்டு வருகிறார்கள். பெரிய கூட்டமாகச் சேர்ந்து போய் விவசாயம் செய்து வசதி படைத்தவர்களும், லாபம் அடைகிறார்கள். ஆகவே அந்த நிலங்களை பயிர் செய்வதற்காக ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் அதனால் அரசாங்கத்திற்கு வருவாயும் வரும், ஏழை மக்கள் பயனும் அடைவார்கள். (மணி அடிக்கப்பட்டது) 1953-ல் கரையோரங்களில் மரங்கள் வைப்பதற்கு மகாநாடு எடுத்துக் கொண்ட முடிவை நிறைவேற்ற தற்பொழுது காட்டு இலாகா நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் அங்கு விவசாயம் செய்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி மரங்கள் வைப்பதாக இருந்தால் அந்த நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வேறு இடங்களில் நிலத்தைக் கொடுக்க வகை செய்துவிட்டு பிறகு அந்த மரம் வைக்கும் வேலைகளைத் தொடங்கலாம் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதுவும் நடக்கவில்லை. ஆனால் மரங்கள் வைக்கும் காரியம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விவசாயிகளை வெளியேற்றும் காரியமும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அவர்களின் ஜீவனத்திற்கு வேண்டிய சாதனங்களை பிடுங்கிக் கொண்டால் அவர்களின் நிலை என்னவது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதல் அமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் கடந்த சட்டசபைக் கூட்டத்தில், வரவு செலவுத் திட்டத்தின் மீது பேசும்போது, "சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளியவர்களின் நிலையை உயர்த்துவது தான் எங்கள் கொள்கை" என்று கூறிய அரசைப் பார்த்துச் சொல்கிறேன், ஏழை எளியவர்களின் துன்பம் சிறிதாகயிருந்தாலும் அது அவர்களுக்கு மிகப் பெரிய துன்பமாக இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். (திரு. சங்கரய்யா அவர்கள்

பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.) இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் இங்கு சொல்கிற நேரத்தில் முதலாவதாக, இந்த உரை நிகழ்த்தப்பட்ட நேரத்தில் மாண்புமிகு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்து பணியாற்றி வந்தவர் இப்போது மறைந்து அவரது மறைவால் தமிழகம் ஒரு பெரிய துயரத்தில் மூழ்கி இருக்கும் இந்த நேரத்தில் நாம் இந்தக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறோம். அண்ணாவின் மறைவிற்காக நாடெங்கிலும் செலுத்தப்பட்ட புகழ் அஞ்சலியில் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியும் தலை வணக்கத்துடன் அதில் கலந்து கொண்டு அந்த அஞ்சலியில் பங்கு கொண்டது. இந்த சட்ட சபையில் அண்ணாவின் மறைவு குறித்து நிறைவேற்றிய இரங்கல் தீர்மானத்தில், ". . . . அதிலும் குறிப்பாக வசதியற்ற சமூகத்தின் அடித்தளத்தில் கிடந்த மக்களுக்குத் தொண்டாற்றி இறுதிவரையில் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தவரும் . . ." என்று குறிப்பிட்டிருக்கிறோம்; வசதியற்ற சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு தொண்டாற்றுவது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டிருக்கக் கூடியதுதான் இந்த புதிய அமைச்சரவையும் என்று நான் திடமாக நம்புகிறேன். அண்ணா அவர்கள் இன்று மீளாத் தூக்கத்தில் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள உழைப்பாளர் சிலையைப் பார்த்தால் ஒரு உண்மை விளங்கும். உழைப்பாளர்கள் ஒரு கல்லை—தங்கள் தலைமீது ஒரு பாரமாக சுமத்தப்பட்டிருக்கும் சுரண்டல் என்ற கல்லை—தூக்கி எறிய பாடுபட்டுக்கொண்டிருக்கும் சிலையைப் பார்க்கிறோம். இன்னும் அந்தப் போராட்டம் வெற்றியடையவில்லை. அந்த இடத்திற்கு அருகில்தான் அண்ணா அவர்கள் மீளாத் துக்கத்தில் துயில் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு கலைஞர் திரு. கருணாநிதி அவர்களுடைய தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய அமைச்சரவைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய அன்பு கலந்த வாழ்த்துக்களையும், நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது. இன்று நாம் இந்த நாட்டில் அடித்தளத்திலுள்ள மக்களை உயர்த்த வேண்டுமென்று சொல்லுகின்ற நோக்கில், அதற்கான பணிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற நோக்கில் நமக்கு முன்னால் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

முதலாவதாக, தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் ஏற்பட்ட போதிலும், தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தாய்மொழியைப் போதனை மொழியாக்குவதில் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றை நீக்கிச் செயலாற்ற வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். சட்ட மன்றத்திலேகூட சிலபேருக்கு ஆங்கிலத்திலேயே பேசுகின்ற





பழக்கம் இருந்தாலும்கூட, அமைச்சர்கள் எல்லாப்பிரச்சினைகளுக்கும் தமிழிலேயே பதில் கூறுவார்களேயானால் உண்மையிலேயே தமிழ்மொழி ஆட்சிமொழியாவதற்குப் பெரிதும் அது பயனளிக்கும் என்று கூறிக் கொள்ளுகின்றேன்.

அடுத்ததாக, இன்று காங்கிரஸ் அல்லாத மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிறார்கள். அவர்கள் சமீபத்தில் பம்பாயில் நடைபெற்ற சிவசேனை அட்டூழியங்களையும், ஆந்திராவில் நடந்த தெலிங்கானா கிளர்ச்சியையும் கவனித்தார்களானால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்று கூற விரும்புகிறேன். சிவசேனை அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மகாராஷ்டிரர் அல்லாத மக்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்ய வேண்டுமென்று இம்மாநில முதலமைச்சரவர்களும், கேரள முதலமைச்சரவர்களும், மகாராஷ்டிர முதலமைச்சரவர்களையும், இந்திய உள்துறை அமைச்சரவர்களையும் வற்புறுத்தியிருக்கிறார்கள். "செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனின் சிந்தனை ஒன்றுடையாள்" என்று பாரதியார் பாடியதுபோல், 18 மொழிகளைப் பேசக்கூடிய இந்தியாவில் அவர்கள் அனைவரும் இந்த நாட்டில் ஜனநாயகத்திற்காக சோஷலிசத்திற்காக ஒன்றுபட்ட சிந்தனையில் இருக்க வேண்டுமென்பதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. ஆனால் இன்று பம்பாயிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையைப் பார்த்தால், பிற இனத்தவருக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பிரம்மாண்டமான பணியில், நாட்டிலே உள்ள ஜனநாயக சக்திகள் ஒன்றுபட வேண்டும்.

மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சுமுகமாக இயங்க காங்கிரஸ் அல்லாத அரசுகள் முன்வர வேண்டுமென்று காங்கிரஸ் அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். காங்கிரஸ் அல்லாத அரசான தமிழகமோ, கேரளமோ அல்லது இன்றைய தினம் மாபெரும் வெற்றிபெற்றிருக்கும் வங்காள ஐக்கிய முன்னணியோ மத்திய சர்க்காரோடு தகராறு வைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் நான் இங்கு கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையில், வருமான வரி, மத்திய ஆயத் தீர்வைகள் ஆகியவற்றில் நமது மாநிலத்திற்கு மேலும் அதிகப் பங்கு அளித்திட வேண்டுமென்று நிதி ஆணைக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்; இருபது ஆண்டுக் கூட்டாட்சியின் வாயிலாக நமக்கு கிடைத்துள்ள நேரறிவின் அடிப்படையில், அரசியலமைப்பின் நிதித்துறை பற்றிய விதித்துறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையைக் குறித்தும் நிதி ஆணைக் குழுவிடம் வற்புறுத்தியுள்ளோம்; மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தவணைத் தேதிகளை மாற்றியமைக்கக் கோருகிறோம். அது மட்டுமல்ல, மாநிலப் பஞ்சாலைக் கழகம் மேற்கொள்ளும் ஆலைகளை இயக்கவும், புதுப்பிக்கவும் புதிய பொறிகளை வாங்கிச் செயல்படுத்தவும் தேவைப்படுகிற நிதி வசதிகளில் 51 சத விகிதளவிற்கு தேசியப் பஞ்சாலைக் கழகம் கொடுக்க வேண்டுமென்று

கேட்கிறோம். அதுமட்டுமல்ல, மாநில வரட்சிக்கு உதவ வேண்டுமென்று கோருகிறோம். அதுமட்டுமல்ல, மாநிலத்திலிருக்கின்ற 5,12,000 கைத்தறிப் பணியாளர்களுக்கு உதவ அதிகப்படியான நிதி உதவியை அளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் கோருகிறோம். அதுமட்டுமல்ல, இன்று காலையிலே பேசப்பட்ட இலங்கையிலிருந்து வரக்கூடிய தமிழர்களுக்கு இங்கு குடியிருப்பு அமைத்துக் கொடுக்க ஏற்படக்கூடிய செலவுகள் போன்ற உண்மையான, யதார்த்தமான காரியங்களுக்கு மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் உதவி, பொருளாதார அடிப்படையில் உதவி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பதே எண்ணமே தவிர, இன்றைக்கு மத்திய சர்க்காரோடு அனாவசியமாக தகராறு உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படவில்லை. நம்முடைய முதலமைச்சரவர்கள் கோவையில் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன், மத்திய சர்க்காரோடு நேசக்கரத்தை நீட்டும் அதே நேரத்தில் தமிழர்களின் நலனுக்காகக் குரலும் எழுப்புவோம் என்று கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நம்முடைய மாநிலத்திற்கு, தேசிய வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், திட்டக் கமிஷனிடமிருந்தும் கிடைக்க வேண்டிய நம்முடைய உரிமைகளைப் பெற்றுச் சரிவர நடத்த இதர காங்கிரசல்லாத மாநில அரசுகளுடன் சேர்ந்து முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இனிப்புப் பேச்சுக்களை நம்பாமல் மத்திய சர்க்காரிடமிருந்து இவைகளைக் கோரினால்தான் பெறமுடியும் என்ற நிலைமையிருக்கிறது. இதற்காக நாம் மக்களை ஒன்று திரட்ட வேண்டும்.

அடுத்து, மக்களுடைய சில பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வரட்சி நிலைமை. செங்கற்பட்டு, வடாற்காடு உள்பட கோவை, மதுரை, தர்மபுரி, நெல்லை மாவட்டங்களில் உள்ள நிலைமையைக் கவலையோடு உணர்ந்து அதற்கான நிவாரண வேலைகளுக்கான தக்க நடவடிக்கைகளை மாநில அரசும் எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

உணவுப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், இன்று இந்த சம்பாப் பருவத்தில் 5 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிவு செய்துள்ளது. அது போதாது. எந்தக் கட்சி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், தமிழ் மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளிலுள்ள மக்கள் ' எங்களுக்கும் நியாய விலையில் அரிசி கொடுக்க வேண்டும் ' என்று கேட்கிறார்கள். அதனால் நம்முடைய மாநில அரசாங்கம் சுமார் 15 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்தால்தான் வரட்சி ஏற்பட்டிருக்கும் நகரங்களுக்கும், நாடு பூராவிலும் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் உண்ணக்கூடிய வகையில் நியாய விலைக்குக் கொடுக்க முடியும். ஆகையால் 10 ஏக்கர்களுக்கு மேல் அதிகமாகவுள்ள நிலப்பிரபுக்களிடமிருந்து அவர்கள் தேவைக்குப் போக மீதியுள்ள அத்தனையையும் கொள்முதல் செய்தால்தான் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சேவை செய்ய முடியும். அதே நேரத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து கோதுமைப் பண்டங்களையும் அதிகமாகப் பெற வேண்டும். தமிழகத்தில் புஞ்சைத் தானியங்களை உண்டு பழக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பழக்கம் உள்ளவர்கள் புஞ்சைத் தானியத்தை நியாயமான விலையில் கொடுத்தால் போதும் என்று கூறுகிறார்கள். ஆகவே, புஞ்சைத் தானியங்களையும் கொள்முதல் செய்து கிராமப்புற மக்களுக்குக் கொடுப்போமேயானால் வரட்சி ஏற்பட்டிருக்கும் இடங்களில் உணவுப் பிரச்சினை குறையும்.



சென்னை, சுற்றுப்புற பிரதேசங்களில் பல்லாவரம், தாம்பரம் போன்ற இடங்களில் மண்ணெண்ணெய் கிடைக்காமல் 51 நயா பைசா விற்கக்கூடிய ஒரு லிட்டரை 70 நயா பைசா கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எண்ணெய் கம்பெனி ஏஜண்டுகள் அந்த எண்ணெயை லாரிகளுக்கு விற்றுவிடுவதாகப் புகார் வந்திருக்கிறது. இதில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு மண்ணெண்ணெய் நியாய விலையில் கிடைப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் நேற்று கோவையில் பேசும் போது பஞ்சாலை நெருக்கடி குறித்துக்கூறியிருக்கிறார். இதைத் தன்னுடைய முதல் பொறுப்பாக எடுத்து மூடப்பட்ட மில்களைத் திறக்க அவர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஆனால், அதேநேரத்தில் முதலாளிகள் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய ஊதியத்தைக் குறைத்தோ அல்லது கட்டுப்படுத்தியோ அல்லது அவர்களுடைய பஞ்சப்படியைக் குறைப்பதன் மூலமோ தொழில் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. முதலாளிகளினுடைய லாபத்தை அவர்கள் குறைத்துக் கொள்ளுகின்ற முறையிலேயும் அரசாங்கம் அளிக்கின்ற சலுகைகளாலுமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு யோசனையையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்று ஒரு புதிய கொள்கைத் தீர்மானம் என்ற முறையிலே ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது இதுவரையில் தனியார் துறைத் தொழில்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக, சென்னைத் தொழில் முதலீட்டுக் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைத் தவிர, வேறு வகையிலும் துணை புரிய இருப்பதாக ஆளுநர் அவர்களின் உரையில் கூறப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட தொழில்களுக்கு தொழில் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி செய்யுமென்று கூறப்பட்டிருக்கிறது. இது தேவைதானா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். மாநில தொழில் வளர்ச்சிக் கழகம், பொதுத் துறைத் தொழில்களை வளர்க்கப் பயன்படவேண்டும்.

மற்றொரு முக்கியமான பிரச்சினை. 5,12,000 கைத்தறியாளர்கள் வாழக்கூடிய மாநிலத்தில் அவர்களைப் பற்றி கவர்னர் உரையில் எந்தவிதக் குறிப்பும் இல்லாததைக் கண்டு வருந்துகிறேன். இந்தியாவில் அஸ்ஸாம், ஆந்திரம், தமிழ் நாடு ஆக இந்த மூன்று மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 5 இலட்சம் கைத்தறிகள் இருக்

கின்றன. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை இது மிகப் பெரிய பிரச்சினை. ஃபவர் லூம்களினால் கைத்தறிக்கு பெரிய போட்டி ஏற்பட்டிருக்கிறது. ஒன்றுக்குப் பத்தாக திறன் கொண்ட இவை கைத்தறிக்கு பெரிய போட்டியாக இருக்கிறது. இன்று விவசாயத்திற்கு அடுத்த தொழில் கைத்தறித் தொழில். முதலில் இந்த மாநில தொழில் வளர்ச்சிக் கழகம் தனிப்பட்ட முதலாளிகளுக்கு அனுமதித்து வரும் உதவியை நிறுத்தி இந்தக் கைத்தறித் தொழிலுக்கு உதவுவதன் மூலமாகவோ அல்லது மத்திய சர்க்காரிடமிருந்து உதவி கேட்பதன் மூலமாகவோ இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மற்றொரு விஷயம். தமிழ்நாட்டில் லாரி போக்குவரத்திலும் மாநில அரசாங்கம் நுழையவேண்டும்; ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தொழிலையும் விஸ்தீர்ணம் செய்து பொதுத்துறையை வளர்த்தால் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். தொழில் வளர்ச்சியை முதலாளிகளின் தேவையில்லாமலேயே வளர்க்க முடியும். தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலையை தனியார் துறையிலே அல்லாமல் மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் சேர்ந்து ஆரம்பிக்க வேண்டும். பிர்லா அவர்கள் இராஜஸ்தானிலே அமெரிக்க உதவியுடன் தனிப்பட்ட உரத்தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி பெரும் எதிர்ப்பு இருக்கும்பொழுது, நாம் தூத்துக்குடியில் ஒரு உரத் தொழிற்சாலையை மாநில மத்திய அரசின் உதவியோடு பொதுத்துறையில் நடத்தக்கூடாதா? இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1.00 இன்று, அதே போல் விவசாய உற்பத்தியைப் பற்றி பேசப்பட்டு வருகிறது. இது Green revolution பச்சைப் புரட்சி என்று கூடச் சொல்கிறார்கள். விவசாயம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்று பேசுவதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி நாம் கவனிக்க வேண்டும். நமது குடியரசுத் தலைவர் சாகிர் உசேன் அவர்கள்கூட முன்னால் ஒரு பிரசங்கத்திலே 'Do not take it for granted that the green revolution is a success.' என்று கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே, இந்த விவசாயப் புரட்சி வெற்றிகரமாக ஆகிவிட்டது என்று கருதவேண்டாமென்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே உள்ள வரட்சியே அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நிலையாக, எவ்வளவு முடியுமோ அந்த அளவு இன்னும் விவசாய உற்பத்தி ஏற்படவில்லை. இன்று புதிய ரக விதைகளையும், உரங்களையும் போடுவதன் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியுமா? டிராக்டர்கள், பம்ப் செட்டுகள் அமைத்ததன் மூலமாகவே சாதாரணமாக பெரும்பாலான விவசாய மக்களுக்கு வேலை இல்லாமல் போயிருக்கிறது. தஞ்சையிலே ஏற்பட்டிருக்கிற வேலையில்லாமைக்குக் காரணம், ஏராளமான இயந்திரங்களை, 'மெக்கானைசேஷன்' என்று சொல்லப்படுகிற அந்த முறையை புகுத்தியிருப்பதுதான் என்பதை நாம் அறிய முடியும். ஏறத்தாழ 1½ கோடி ஏக்கர் நிலம் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நேரத்திலே 10,000 ஏக்கர் நிலம்தான் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்த





நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய மிச்சம் என்று சொன்னால், அது பெரிய மோசடி என்பதை நான் தெளிவாக சொல்ல முடியும். மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் தன்னுடைய 5 ஆண்டு காலத்திற்குள் நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்குள் இருக்கக்கூடிய ஓட்டைகளை எல்லாம் அடைத்து, புதிய சட்டத்தைக் கொண்டு வரும் என்று மாண்புமிகு திரு. மதியழகன் அவர்களும் வருவாய்த் துறை அமைச்சர் என்ற நிலையிலே அவரது மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்துப் பேசுகின்ற நேரத்திலே இந்தச் சட்டம் சீர்திருத்தப்பட்டு புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று தான் கூறியிருக்கிறார்கள். ஆனால், இந்த மாமன்றத்தின் முன்னால், விவசாயிகள் தங்களுடைய நிலங்களின் குத்தகை உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டம் மட்டும் தான் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் போதாது. நமது நாட்டிலே பெரும்பாலான மக்கள், 70 சத விதம் மக்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களிலே பெரும்பாலோர் ஏழை விவசாயிகள். உச்ச வரம்பு சட்டத்தில் 30 ஏக்கர் உச்ச வரம்பு என்று வைத்ததே அதிகம். அந்த உச்ச வரம்பு 60 ஏக்கர் நஞ்சையாகவும் 120 ஏக்கர் புஞ்சையாகவும் விளங்குகிறது. பெரும்நிலப்பிரபுக்களெல்லாம் அதை வைத்திருப்பதால், ஏழை விவசாயிகளுக்கு இன்றைக்கு நிலம் எவ்வாறு கிடைக்கும்? அதன் பொருட்டு தான், 10,000 ஏக்கர் மட்டுமே மிச்ச நிலம் கிடைத்தது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை, விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் சாதகமான முறையில் இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய அரசாங்கம் நிச்சயமாகக் கொண்டு வரவேண்டும். பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்லிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் இந்த அரசாங்கம் அந்த மாதிரி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மிகவும் பலமாக வற்புறுத்தி வருகின்றன. ஆகவே, அந்த சட்டத்திற்கு நிலப் பிரபுக்களின் எதிர்ப்பு ஏற்படுமோ என்று பயப்படவேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்தினுடைய விவசாய உற்பத்தியை பெருக்குவதற்காக அதைச் செய்ய வேண்டி இருக்கிறது. இப்பொழுதுள்ள சட்டத்தினால் நிலப்பிரபுக்களிடம் மட்டும் ஏராளமான பணம் குவியும். ஆகையினால், விவசாயிகள் எவ்வாறு நன்மை அடைய முடியும். வாழ முடியும்? விளைச்சலிலே 3/4 பங்கு குத்தகை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிலையிலே, புறம்போக்கு நிலங்களை விவசாயிகள் பயன்படுத்தவும், அவர்கள் மனைகள் கட்டிக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிலையிலும் ஓர் அவசரச் சட்டத்தைப் போட்டாலும் கூட உதவியாக இருக்கும். இன்றைக்கு நிலப் பிரபுக்கள் இந்த மாநிலத்திலேயுள்ள விவசாயத் தொழிலாளிகள் தங்களுடைய மனைக்கட்டுகளில் வாழ விடுவதில்லை. இந்த அரசாங்கம் அந்த நிலையை நீடிக்க விடாமல் விவசாயிகளுக்கு அவர்களுடைய மனைக்கட்டுகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படாமல் பாதுகாப்பளிக்க ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு

**வந்தால் தமிழகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான விவசாயத்** தொழிலாள மக்கள் இந்த அரசாங்கத்தை மிகவும் பாராட்டுவார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே இந்த அரசாங்கம் மிகவும் சுறுசுறுப்பாக தொழிலாளிகளுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் உரிமைகள் வளர வேண்டுமென்று கூறுகிற நேரத்தில், முதலாளிகளுக்கு நியாயமான இலாபம் கிடைக்க வேண்டுமென்பதில் எந்த விதமான மாறுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால், தமிழகத்திலேயுள்ள முதலாளிகள் இந்த மாகாணத்தை தொழில் வளம் நிறைந்த மாகாணமாக மாற்றுகிறோம் என்று சொல்வதன் மூலம் பலவிதமான சலுகைகளைக் கேட்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். தண்ணீர் வசதி செய்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் தொழிலாளிகளுடைய சம்பளத்தைக் குறைத்து, அதன் மூலம் முன்னேற்றம் காணலாம் என்று சொல்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது, இந்த மாநில அரசும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. தொழில் வளர்ச்சி என்று சொல்லக் கூடிய நேரத்தில், தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களை நாம் இயற்ற வேண்டும். அவர்களுடைய உத்தியோகங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். முதலாளிகள் தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கி அனுப்ப மாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலையில் இந்த மாநில அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். அப்பொழுதுதான் தொழில் தகராறுகளில் போலீஸ் முதலாளிகளுக்கு சாதகமாகச் செயல்படக் கூடாது; தொழிலாளர்களோடு கலந்து பேச வேண்டுமென்ற வற்புறுத்தல் முதலாளிகளுக்கு ஏற்படும். அம்மாதிரி ஒரு கொள்கையை அரசாங்கம் வகுத்துக் கொண்டால், முதலாளிகளும் அரசாங்கம் உதவி செய்யாது என்று எண்ணி, வேறு வழி என்ன என்று பார்ப்பார்கள். தொழிற் சங்கங்களோடு பேசவும், நியாயமான முறையிலே பிரச்சினைகளை தீர்க்கவும் அப்பொழுதுதான் முன்வருவார்கள். அதன் மூலம் தொழில் அமைதியை ஏற்படுத்தவும் அவர்கள் முன்வருவார்கள். ஆகவே, அரசாங்கத்தினுடைய கொள்கைதான் இதிலே மிக முக்கியமானதாக இருக்கிறது.

போலீஸ் இலாகாவுக்குப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சரவர்கள் இன்றைக்கு நிச்சயமாக போலீஸ் இலாகாவை **பொறுத்தவரை மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய இலாகா**வாக மாற்றுவார்கள் என்று நம்புகிறேன். முதலிலே, பொது மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் அவர்கள் 'உட்காருங்கள்' என்று சொல்லப்பட வேண்டும். அந்த ஒரு மாற்றத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்தாலே அந்த இலாகாவை மக்கள் வரவேற்பார்கள். பொதுமக்கள் போலீஸ் ஸ்டேஷனில் பலவிதமான புகார்கள் கொடுக்கிறார்கள். அந்த புகார்கள் பதிவு செய்யப்பட்டனவா இல்லையா என்பதற்கு எந்த விதமான உத்திரவாதமும் கிடையாது. போலீஸ் ஸ்டேஷனுக்கு





புகார்கள் கொடுக்க வருபவர்களிடத்தில் புகார்கள் பெற்றுக் கொண்டு, அதற்கு சிறிய அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து, அதற்குப் பதில் இவ்வளவு காலத்திற்குள் கிடைக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அந்த முறையில் மாற்றம் செய்தால் போலீஸ் இலாகாவின் சேவையைப் பற்றி மக்கள் பெரிதும் பாராட்டி, அதனால் அவர்கள் நன்மை அடையக்கூடிய நிலைமை ஏற்படும்.

இறுதியாக, நான் கூற விரும்புவது, இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட ஐக்கிய முன்னணி மேற்கு வங்காளத்தில் மிக மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. முப்பத்திரண்டு அம்சங்கள் கொண்ட குறைந்த பட்ச ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையிலே அந்த வெற்றியை மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஈட்டித் தந்திருக்கிறார்கள். ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்து மக்களை அவமதித்ததற்குப் பதிலாக, புதிய சக்தியோடு இன்றைக்கு மேற்கு வங்காளத்திலே ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்திருக்கிறது. முப்பத்திரண்டு அம்சங்கள் கொண்ட குறைந்தபட்ச ஜனநாயகத் திட்டம் தான் அதற்குக் காரணம். ஆகவேதான், நான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தோழமை உணர்வோடு, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கூறுவது என்னவென்றால், போலீஸ் கொள்கை, தொழிலாளர் கொள்கை, கைத்தறியாளர்களுக்கு உதவி, உணவுக் கொள்கை, பொதுத் துறை பற்றிய கொள்கை, மக்கள் பிரதிநிதிகளுடைய ஒத்துழைப்புடன் காரியங்கள் நடத்துவது போன்ற கொள்கை ஆகியவற்றிலும், படித்தவர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை நீக்குவதிலும் முக்கிய ஜனநாயக அம்சம் கொண்ட திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்பது தான். அப்படி ஜனநாயக அம்சம் கொண்ட திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினால், அந்த நிலை ஏற்பட்டால் தமிழகத்திலேயுள்ள ஜனநாயக சக்திகளுடைய ஒற்றுமை பூராவும் வளரும், சோஷலிச சக்திகளுடைய நிலைமை பூராவும் வளரும்.

நேற்றைய தினம் தமிழகத்தினுடைய மேலவையிலே சுதந்திராக் கட்சியைச் சார்ந்த நபர் பேசக்கூடிய நேரத்தில் கீழ் வெண்மணியில் நடைபெற்ற சம்பவங்களுக்கு இடதுசாரி கம்யூனிஸ்ட் தான் காரணம்; ஆகவே, அரசாங்கம் அவர்களிடம் உஷாராக இருக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். அவரும் அல்லது இங்கே நண்பர் விநயகம் பேசும்பொழுதும் இன்றைக்கு விவசாயத் தொழிலாளிகள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று தான் கூறியிருக்கிறார்களே தவிர, 43 பேர்களை, கண்டிக்கத்தக்க முறையில் நிலப்பிரபுக்கள் துப்பாக்கி வலிவோடு கொளுத்தியதைக் கண்டிக்கவில்லை. அதற்காக நான் ஆழ்ந்து வருத்தப்படுகிறேன். ஆழ்ந்து வருத்தப்படுகிறேனே தவிர அதற்காக ஆச்சரியப்படவில்லை. சுதந்திராக் கட்சியினுடைய பெருந்தலைமையும், காங்கிரஸ் கட்சியினுடைய பெருந்தலைமையும் நிலப்பிரபுக்களை ஆதரிப்பவர்கள் என்பதை நாமறிவோம்.

**திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த அவையிலே இல்லாத ஒரு உறுப்பினரைப் பற்றி— மேலவையிலே இருக்கிற உறுப்பினர் அம்மாதிரி சொன்னார் என்று இங்கு குறிப்பிடுவது முறையாகாது என்று தெரிவித்துக் கொண்டு அந்த முறையிலே சபாநாயகர் அவர்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** சபாநாயகர் அவர்களே, மேலவையிலே மட்டும் அல்ல, பாராளுமன்றத்திலே பேசியதைப் பற்றிக்கூட இந்த அவையிலே குறிப்பிட்டு நாமும், எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசிக் கொண்டிருக்கிறோம். அது ஒரு அரசியல் பிரச்னையே தவிர, நோக்கத்தைப் பற்றிக் கூறவில்லை. அந்த அவையிலே எங்கள் கட்சியினுடைய சார்பிலே பிரதிநிதிகள் இல்லை. பொதுமக்கள் அதைத் தெளிவாக தெரிந்து கொள்வதற்காக மட்டுமே அதை இங்கே குறிப்பிட்டேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

இன்று இறுதியாக ஒரு குறைந்த பட்ச ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் உழைக்கக் கூடிய மக்களுக்கு நன்மைகளை செய்யக்கூடிய ஒரு காரியத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மிகவும் விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பரிபூரணமாக ஒத்துழைப்பு கொடுக்குமென்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினரவர்கள் பேசும்பொழுது, வெண்மணி சம்பவத்தைப் பற்றி யாரோ ஒருசிலர் துப்பாக்கியைக் கொண்டு துரத்தி, அவர்கள்மேல் தீ வைத்ததாகச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பிரச்னை பற்றி நீதி விசாரணை செய்தால் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு அவர் தயாராக இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** யாரோ ஒருசிலர் என்று தான் சொல்லப்பட்டதே தவிர, அந்த சம்பவத்திலீடுபட்டவர்களையோ, அவர்களுடைய பெயரையோ சொல்லவில்லை. சம்பவத்தைப் பற்றி, தீ வைப்பு பற்றி எல்லா பத்திரிகைகளிலும் செய்திகள் வந்திருக்கின. அந்த தீ வைப்பினால் காயம் பட்டவர்கள் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுதைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயம்பட்டவர்களை எல்லாம் பார்வையிட்டார்கள். ஆகவே, அந்த சம்பவம் நடைபெற்றது பற்றியோ, அல்லது தீ வைக்கப் பட்டதைப் பற்றியோ, 43 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதைப் பற்றியோ எந்த விதமான சந்தேகத்திற்கும் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, நான் விரும்புவதெல்லாம் இது தான். உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி குறிப்பிடாமல் எதைஎதையோ சொல்கிறார்கள். சம்பவம்





நடந்ததைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக சொல்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது இந்த சம்பவம் பற்றி நீதிவிசாரணை நடத்துவதற்கு அந்தக்கட்சியினர் சரி என்று சொல்கிறார்களா; அபிப்பிராயம் என்ன என்பதுதான். அவர்கள் நீதி விசாரணைக்குத் தயாரா, இல்லையா ?

**திரு. என். சங்கரய்யா :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது போல அங்கு எந்தவிதமான நீதிவிசாரணையும் இப்பொழுது நடைபெறவில்லை. அங்கு இது சம்பந்தமாக சில கிரிமினல் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. குற்றவாளிகள் என்று கருதப்படுபவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதா, இல்லையா என்பது பற்றி தகவல் தெரியவில்லை. அப்படியிருக்கும்பொழுது ஏதோ அங்கு நீதி விசாரணை நடப்பது போலவும் (குறுக்கீடு) நீதி விசாரணையைப் பொறுத்தவரையில், இப்பொழுது அங்கு நடக்கும் கிரிமினல் வழக்குகளை தனியாக நீக்கிவிட்டு, கிரிமினல் வழக்குகள் தொடர்ந்து நடப்பதற்குப் பாதகம் இல்லாமல் நீதிவிசாரணை நடத்துவதுபற்றி எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. நீதிவிசாரணை வைத்துக் கொண்டால் இப்பொழுது கொலையிட்டவர்கள் என்று சொல்லப் பட்டு, சிலர் மீது நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்ந்து நடப்பதற்கு எந்தவிதமான தடையும் ஏற்படக் கூடாது, அந்த வழக்குகள் கைவிடப்படக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. இந்த வழக்குகள் முடிந்தபிறகு வேண்டுமானால் நீதிவிசாரணை செய்யலாம். ஆனால், இந்த வழக்குகள் தொடர்ந்து நடப்பதற்கு தடை எதும் இல்லாமல், நீதி விசாரணை நடத்தப் பட்டால், அதற்கு ஆதரவு தந்து, இதற்கு யார் பொறுப்பாளி என்று நிரூபிப்பதற்கு ஏராளமான பேர்கள் சாட்சியம் கூறுவதற்கு தயாராக இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய சாட்சியங்கள் எங்களிடத்தில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், எந்த வகையிலும் இப்பொழுது கோர்ட்டுகளில் நடைபெறுகிற வழக்குகள் தடைப்படக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உறுப்பினர் அவர்கள் இதை எடுத்து விடவேண்டும், அதை எடுத்துவிடவேண்டும் என்று எல்லாம் சொல்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இந்த சம்பவம் சம்பந்தமாக நீதி விசாரணை நடத்துவது பற்றி மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் அபிப்பிராயம் என்ன, அவர்களுக்கு நீதி விசாரணை நடத்துவதற்கு அபிப்பிராயம் உண்டா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே நீதி விசாரணை என்பது அரசாங்கம் அல்லது அரசு சார்பினர் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டால் தான், அப்பொழுது அதற்கு மேலாக இருந்து ஒரு நீதிபதி விசாரிக்க வேண்டும். நீதி விசாரணை நடத்தி, தீர்ப்பு அளிக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. இப்பொழுது நடைபெற்றிருக்கிற சம்பவம் இரண்டு தரப்பினர்களுக்கிடையே நடை

[திரு. மு. கருணாநிதி] [1969 பிப்ரவரி 24

பெற்றிருக்கிறது. இதிலே போலீஸ் சுட்டார்கள் என்றோ அல்லது போலீஸ் அடக்கு முறை செய்தார்கள் என்றோ அப்படிப்பட்ட சம்பவம் இல்லாத காரணத்தினால்தான், சர்க்கார் இதில் உட்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால்தான், நீதி விசாரணை தேவையில்லை என்ற அளவில் முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் முடிவெடுத்தார்கள். அதைத்தான் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீதி விசாரணை வேண்டுமா, வேண்டாமா என்பது மந்திரி சபையினர் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம். நான் கட்சியினுடைய சார்பாக கேட்க விரும்புகிறேன். எதற்கு எடுத்தாலும் நீதி விசாரணை வேண்டும், வேண்டும் என்று கேட்கிற கம்யூனிஸ்டு கட்சி இந்த விஷயத்தில் மட்டும் அதை நீக்கிவிடவேண்டும், இதை நீக்கிவிடவேண்டும், அப்பொழுதுதான் நீதி விசாரணை தேவை, இல்லாவிட்டால் நீதி விசாரணை வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய கொள்கையை பற்றிக் கூறுகிறார்கள். அதற்கு நீங்கள் ஒரு விளக்கம் கேட்கிறீர்கள். அந்த விளக்கத்திற்கு உறுப்பினர் பதில் கொடுக்க வேண்டும் என்பதில்லை. அதையே மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை.

**திரு. என். சங்கரய்யா :** நான் பதில் கொடுக்க விரும்பவில்லை என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுவிடக்கூடாது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த நிலைமைக்கு யார் காரணம் என்பது பற்றி நீதி விசாரணை நடத்துவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. பிரச்னை என்னவென்றால், இப்பொழுது குற்றச்சாட்டு சாட்டப்பட்டு ரிமாண்டில் வைத்திருப்பவர்களை, நீதி விசாரணை நடக்கப்போகிறது என்ற பெயரால் விடுவிக்கக்கூடிய நிலைமை உருவாகக்கூடாது, அந்த வழக்குகளை தொடர்ந்து நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது. இந்த வழக்கு விசாரணைக்கு குந்தகம் இல்லாமல், நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய முடியுமானால், நிச்சயம் எல்லா விவரங்களையும் எடுத்துரைத்து, இந்த நிகழ்ச்சிக்கு யார் பொறுப்பாளி, உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை அம்பலப்படுத்துவதற்கு எங்களுக்கு வாய்ப்புகள் இருக்கும் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கம்யூனிஸ்டு கட்சியைப் போலவே, எங்களுக்கும் யார் குற்றவாளி என்பதைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, on a point of order. Unfortunately the speech of an hon. Member belonging to the other House—which has been reported in the Press—has been dragged into this House. My submission is that we have no right to mention such a report and discuss it here. The hon. Membe (Thiru Sankariah) has also accused that Member that he has not felt sorry for the



1969 பிப்ரவரி 24] [Dr. H. V. Hande]

42 persons who were burnt alive in Kilvenmani. I can tell this House that if at all there is one party which believes in democracy and law and order, I am not talking about the Party to which the hon. Member belongs—it is the Swatantra Party. We have much more belief in democracy and law and order than the Communist Party has and we do not subscribe to the view. 'துப்பாக்கி முனையில்தான் ஜனநாயகம் இருக்கிறது'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்வதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வது நல்லது அல்ல. பாயிண்டு ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள்.

Dr. H. V. HANDE : Sir, my point of order is : (1) he has brought in the name of a Member who is not a Member of this House and that itself is a serious privilege issue. (2) He has also accused that Member that he has not stated this thing and that thing in the other House. What right he has got to say against that Member of the other House?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எழுந்திருப்பது ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதற்காக. அதைவிட்டுவிட்டு, மற்ற விவரங்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது முறையல்ல.

Dr. H. V. HANDE : What is your ruling?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எதற்காக எழுந்திருந்தீர்களோ அதைவிட்டுவிட்டு, எதற்கோ போய்விட்டீர்கள். நீங்கள் என்ன பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்தச் சபையில் இருக்கக்கூடிய உறுப்பினர் இந்த மன்றத்தில் இல்லாத இன்னொரு அங்கத்தினர் மீது குற்றம் சாட்டலாமா ? அவர்கள் இதையெல்லாம் பேசியிருக்கிறார்கள், பேசவில்லை என்று குற்றம் சாட்டலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தெளிவாக நம்முடைய விதிமுறைகளில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். இன்னொரு அவையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றி இந்த அவையிலே பேசக்கூடாது என்று பல முறைகள் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையை உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வன்முறையில் நாங்கள் ஒரு போதும் ஈடுபடமாட்டோம். ஜனநாயக முறையில் தான், வாக்கெடுப்பு முறையில் தான் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. துப்பாக்கி முனையில் நம்பிக்கை இல்லை. வன்முறையில் நாங்கள் எப்பொழுதும் ஈடுபடமாட்டோம்.

We believe in democracy ; we believe in non-violence ; and we totally condemn the action of those who had burnt those persons alive. Our submission is that we want to know who is responsible for that. That is the only point.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1969 பிப்ரவரி 24

அவர்கள் எதை எதையோ சொல்லி கன்பியூஸ் பண்ணிப் பார்க்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : கனம் உறுப்பினர் அவர்கள் எங்கள் கட்சியைப் பற்றி சில பல பிரச்னையைப் பேசியுள்ளார்கள் அதைப் பற்றி சற்று விளக்கம் கூறுவதற்கு அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒரு முறைதான் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க முடியும்.

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய சபை நிகழ்ச்சிகள் விதிமுறைகளுக்கு மாறுபட்ட நிலையில் நடந்திருக்கின்றன என்பது பற்றி பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பலாம். அது மாதிரி ஏதாவது இருந்தால், அதை மட்டும் எழுப்புங்கள்.

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால் கனம் உறுப்பினர் ஹாண்டே அவர்கள் இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். "துப்பாக்கியில் தான் இவர்களுக்கு நம்பிக்கை, ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை" என்று கூறுகிறார்கள். கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றி, இந்த அவையிலுள்ள ஒரு கட்சியைப்பற்றி அவ்வாறு கூறுகிறார்கள், எங்களுக்குத் தான் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது. அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தெளிவாக கொள்கையை வைத்திருக்கிறது. கிளர்ச்சி பற்றி கூறினார்கள். நியாயத்தின் விளைவாகத் தான் அமைதி ஏற்படமுடியும். விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகள், போராட்டம் நியாயமான அடிப்படையில் தான் நடக்கும், நியாயம் தான் அதற்கு ஆதாரமாக அமையும். அவர்கள் சொல்லக்கூடிய நிலப்பிரபுக்கள் தலையிட்டு துப்பாக்கி காட்டக்கூடிய வகையில் அமைதி ஏற்படாது ...

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்கள் சர்ச்சையைப்பற்றி நான் சொல்லவில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஒவ்வொருவரும், இப்படி ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக் கொண்டு பேசிக் கொண்டிருந்தால் இந்தச் சபை நல்ல முறையில், நடைபெறாது. ஒரு முறையை ஒட்டிப் பேச வேண்டும். அவர்கள் சொல்கிறார்கள், நான் அவர்களுக்குச் சொல்கிறேன் என்ற முறையைப் பின்பற்றக்கூடாது. நடைமுறையில் ஏதாவது தவறு இருந்தால், சுட்டிக் காட்டலாம். அப்படிச் சுட்டிக்காட்டுவதோடு உறுப்பினர்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1969 பிப்ரவரி 24]

* திரு. மு. ச. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வராய், தமிழ் நாட்டின் வழிகாட்டியாய், இந்த மன்றத்தில் பேரொளியாய் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திசை நோக்கி என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு, கவர்னர் உரையின் மீது திரு. ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில், குறிப்பாக நான் அங்கம் வகிக்கும் தூத்துக்குடி தொகுதியைப் பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவைகளில் ஒன்று; இந்த மன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழிற்சாலைகள் அமையவில்லை, தொழில்கள் விருத்தியாகவில்லை என்று குறை கூறுகிறார்கள். அவர்களெல்லாம் இந்த தூத்துக்குடி திட்டம், ரூ. 40 கோடியில் அமைய இருக்கும் உரத் தொழிற்சாலையைப் பற்றிக் கவனிக்க வேண்டும். அது திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதனைகளில் மிகப் பெரிய சாதனை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தூத்துக்குடியில் அமையவிருக்கின்ற உரத் தொழிற்சாலைக்கு 40 கோடி ரூபாய் மூலதனம் போட ஏற்பாடாகியிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை அமைவதின் மூலம் 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு தேவையான பிரதான மூலப் பொருள் ஒரு லட்சம் டன் உப்பு. அந்த உப்பைப் பெற, உப்பளங்களை அமைக்க, 3,000 ஏக்கர் நிலத்தில் அமைத்தால், உரச்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள் ஒரு லட்சம் டன் கிடைக்கும். அப்படி 3,000 ஏக்கரில் உப்பளங்கள் தோன்றும் போது, மேலும் 3,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கும். ஆக இந்த தொழிற்சாலையின் மூலம் தூத்துக்குடி பகுதி மக்களில் 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்க வழி இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தைக் குறிப்பிட்டிருப்பதற்காக, தமிழக அரசை மனதாரப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

இரண்டாவதாக கவர்னர் உரையில், தூத்துக்குடியில் உப்பளங்களின் தேவை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே 8,000 ஏக்கர் நிலம் புறம்போக்காக, உபயோகப்படுத்தப்படாமல், தரிசாகக் கிடக்கிறது. அந்த 8,000 ஏக்கர் நிலத்தையும் உப்பளங்களாக மாற்ற தமிழக அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏற்கனவே, தூத்துக்குடி நகரில் சில உப்பு உற்பத்தியாளர்கள், இந்தத் தரிசு நிலங்களில் உப்பு உற்பத்தி செய்கிறோம், அந்த நிலத்தைக் குத்தகைக்குக் கொடுங்கள் என்று தமிழக அரசுக்கு மனுச் செய்திருக்கிறார்கள். இந்த அரசில் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் தமிழக அரசு மூலதனம் போட்டு உப்பளங்களை அமைக்கவேண்டும். அல்லது அங்கே இருக்கும் உற்பத்தியாளர்களில் தயாராக இருப்பவர்களுக்கு அந்த நிலங்களை நீண்ட கால

குத்தகைக்கு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதால், நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, 5,000 மக்களுக்கு, வேலையற்ற மக்களுக்கு, வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும், என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசு பரிசுச் சீட்டு அமுலில் இருக்கிறது. இந்தப் பரிசுச் சீட்டுகளை இதுவரையில் விற்பனை செய்பவர்கள், வியாபாரிகளோ அல்லது வேறு தொழில் செய்பவர்களோதான். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் விற்பனை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏஜென்டுகள் நியமிக்கும் போது, தமிழக அரசு இப்பொழுது இருப்பதை மாற்றி, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் வேலையில்லாத, குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களுக்கு கொடுப்பது என்ற முறையை உண்டுபண்ணினால், குறைந்த பட்சம் 5,000 பேர்களுக்காவது, படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது இருக்கும் முறையில் ஏற்கனவே வருமானம் வருகிறவர்களுக்குத்தான் அதிக வருமானம் கிடைக்க வழி செய்கிறது. வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்ய, வருமானம் கிடைக்கச் செய்ய வழி வகுக்க வேண்டும். அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும் என்பதை தமிழக அரசுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

உப்பு உற்பத்தி செய்யும் உப்பளங்களை பாதிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல, அதிகமான உப்பு உற்பத்தி செய்யும் உப்பளங்கள் தேவை என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கும்போது, ஏதோ தொழிற்சாலை இனிமேல் அங்கே வரப்போகிறது என்பதற்கு என்று உப்பு உற்பத்தியாளர்களுக்கு நிலம் கொடுக்காமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. வரும் காலத்தில், யாரோ, எங்கோ கொண்டு வரப் போகிறார் என்று, இப்பொழுது இருக்கும் உப்பளத்தை, நில ஆர்ஜிதம் செய்யும் கொள்கையை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது. அது 1966-முதலிலே இருந்து இருக்கிறது. இன்றைய தினம் பொறுப்பு ஏற்றிருக்கும் தமிழக அரசை நான் கேட்டுக் கொள்வது, வரப் போகும் தொழிற்சாலைக்கு என்று, இருக்கும் தொழிலை அழித்து, வேலை செய்கின்ற 2,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை நீக்கி, நில ஆர்ஜிதம் செய்வது சரியானதாக இல்லை. அதனால் ஒரு பக்கம் 2,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு போகிறது, வேறொரு பக்கம், நில ஆர்ஜிதம் செய்வதன் மூலம், அரசாங்கம் பணம் கொடுக்க வேண்டிய நிலையும் வருகிறது. என்றைக்கோ வரப்போகின்ற தொழிற்சாலைக்காக, இருக்கின்ற தொழிலை நசுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது முறையல்ல, அந்த 66-ம் ஆண்டுக் கொள்கையை மாற்றி, இன்றைய தினம் முழுக்கவனம் செலுத்துகின்ற தொழிற்சாலை அப்படியே இருக்கட்டும் என்று விட்டு, உப்பளங்களை நில ஆர்ஜிதம் செய்யாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்களும், நாகர்கோவில் தேர்தல் பற்றிப்பேசினார்கள். நாகர்கோவில் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை, எதிர்க் கட்சியின் நிலையில் தான் இருந்தது. ஆளுங்கட்சியின் நிலையில் இருக்கவில்லை, என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறித்தான் ஆகவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியின் நிலையில் தான் இருந்தது என்பதற்கு உதாரணமாகச் சொல்வதானால் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இன்றைக்கு முதல் அமைச்சராக இருக்கும், கலைஞர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களும், சர்க்யூட் ஹவுசில் இருந்தபோது, இரண்டு மூன்று லாரிகளில், 300 பேர்கள் கல்லை விட்டு கதவுகளைத் தாக்கி, உடைக்கும் நிலை இருந்தது. இதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியின் நிலையில் இல்லை, எதிர்க் கட்சியின் நிலையில் தான் இருந்தது என்பதைப் புரிந்துக் கொள்ளலாம்.

நடந்த நாகர்கோவில் தேர்தல் போது, நான் பத்மநாபபுரம் தொகுதியில் இருந்தேன். நானும் மன்னை நாராயணசாமி அவர்களும் பிரசாரத்திற்காகப் போனோம். தன்னந்தனியாகப் போய்க் கொண்டு இருந்த எங்களை இரண்டு பக்கமும் சூழ்ந்து கொண்டு, எங்கள் கார்களை 300 பேர்கள் சுக்குசுக்காக நொருக்கினார்கள் நாங்கள் மாறுங்கோணத்திற்கு பிரசாரத்திற்காகச் சென்றபோது, மேடான ரோடில் போகும்போது, மேலே போக முடியாமல் கற்களை அடுக்கிவிட்டார்கள். பின்னால் போகலாம் என்றால், பின்னாலும் கற்களை வைத்து விட்டார்கள். முன்னேறவும் முடியாமல், பின்னே போகவும் முடியாமல் இருந்தது. எந்தக் கட்சிக்காரர்கள் என்று நான் சொல்லவில்லை. எங்களை நன்றாக அடித்தார்கள். எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொல்லுகிறேன். நானும் அடிபட்டேன். இன்னும் வலது காலில் காயம் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரத்தை உபயோகித்திருந்தால், இப்படி நடக்குமா என்று பார்க்க வேண்டும். ஆகவே சொல்லுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலில் அதிகாரத்தை உபயோகிக்கவில்லை. அப்படி உபயோகித்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது, என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாகர்கோவில் தொகுதியில் அழகியமண்டபம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே சில நண்பர்களோடு போனோம். முத்துக் கருப்புப் பிள்ளை என்பவரும்கூட வந்தார்கள். அவர், சர். சி. பி. ராமசாமி அய்யருடைய செக்ரடரியாக இருந்தவருடைய மகன், அவர் ஒரு எம்.ஏ., பி.எல்., 55 வயதானவர்; அவரை முதுகில் அடித்து, அவர் உடுத்தியிருந்த வேட்டியை இரண்டாகக் கிழித்து விட்டார்கள், அஹிம்சாவாதிகள்.

நாகர்கோவில் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகாரத்தை உபயோகப்படுத்தியதாக இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், தமிழக அரசின் மீதும் உறுப்பினர்கள் பலர் குற்றஞ் சாட்டிப் பேசினார்கள். கொடியேற்றச் சென்றவருடைய

வேட்டியை உரித்து, எம்.ஏ.,பி.எல். படித்த வழக்கறிஞரை அடித்தார்கள், உடன்வந்த சுதந்திரா கட்சியின் பேச்சாளர் ஒருவரை மூக்கிலே அடித்து இரத்த வெள்ளமாக ஓடியது. இப்படி ஒவ்வொரு ஊரிலும் என்ன நடந்தது என்றால், அராஜகம் தலை விரித்தாடியது. மறைந்த மாவீரர் நேசமணி அவர்கள் பிறந்த பள்ளியாடி என்னும் கிராமத்தில் ஒத்தகடை பக்கத்தில் நாங்கள் கூட்டம் போட்டிருக்கிறோம். 500 பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மூவாயிரம் பேர் சுற்றி நின்று கேரோ செய்து கொண்டு, எங்களைப் பேச விடாமலும், பேசுவதைக் கேட்க விடாமலும் மூன்று மணி நேரம் ஒரே ஊளையிட்டார்கள். நாங்கள் அதிகாரத்தை அங்கே உபயோகித்திருந்தால், அரசாங்கத்தில் இருக்கின்ற செல்வாக்கை அங்கே உபயோகப்படுத்தியிருந்தால், அவர்கள் ஊளையிட முடியுமா? வழக்கறிஞரை அடிக்க முடியுமா? எங்களுடைய காரை மறிக்க முடியுமா? என்னுடைய காலிலேதான் அடித்துக் காயம் உண்டாக்கியிருக்க முடியுமா? எனவேதான், நான் கூறுகிறேன்—நாகர்கோயில் நாடாளுமன்றத் தேர்தலில் நம் முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை எதிர்க் கட்சியாகவும், வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சியினுடைய நிலை ஆளுங்கட்சியாகவும் இருந்தது. அங்கேயிருக்கின்ற ஒவ்வொரு ரேஷன் கடையிலும் வால் போஸ்டரைக் கொடுத்துவிடுவார்கள். வால் போஸ்டரை ஒட்டிய அத்தனை பேரும் ரேஷன் கடைக்காரர்கள். அரிசி போடும்போதே கூறுவார்கள் "நீங்கள் காளை மாட்டுச் சின்னத்திற்கு ஓட்டு போடாவிட்டால் உங்களுக்கு அடுத்த வாரம் அரிசி கொடுக்க மாட்டேன்" என்று துணிந்து கூறுவார்கள். இப்படிப்பட்ட நிலையிலேதான் அங்கே நடந்ததே தவிர, இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியபடி, அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் எந்த வன்முறைச் செயலிலும் ஈடுபடவில்லை. எந்த விதமாகவும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று கூறிக்கொண்டு, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து திரு. ஆலடி அருணா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை நான் ஆதரிக்கின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் நாகர்கோயில் நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியைப்போல் இருந்ததாகச் சொன்னார்கள். ஆளுங்கட்சியில் இருந்தாலுங்கூட, நிலைமை அப்படியிருந்தது என்றால், அவர்கள் நல்ல முறையில் ஆட்சி புரிய அருகதை இல்லை என்பதை அவர்களே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அது வேறு விஷயம்.

அவர்கள் சொன்னார்கள், மூவாயிரம் பேர்கள் சுற்றி நின்று அடித்தார்கள் என்று. அப்படியென்றால், அப்பொழுது அங்கு இருக்கும்படியான போலீஸ் என்ன செய்துகொண்டிருந்தது என்று நான் கேட்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், கொளச்சல் என்னும் இடத்தில் காங்கிரஸ் ஆபிசில் சப்-இன்ஸ்பெக்டர் புகுந்து அடித்து நொறுக்கியிருப்பதும், இரணியலில் அரசாங்கத்திலேயிருக்கும் போலீஸ்காரர்களே, போலீஸ், போலீஸ்





என்று கத்தி, எம்.எல்.ஏ.-ஐச் சுற்றி வந்ததெல்லாம் இருக்கிறது. ஆகவே, ஆளுங்கட்சியாக இருந்தாலும், அங்கே எதிர்க்கட்சியாகத்தான் இருந்தோம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு அகிம்சாவாதிகளாக அவர்கள் இப்பொழுது மாறிவிடுவதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுறுகின்றன. பேரவை நாளை காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

*பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

பிற்பகல் 1-33

11. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

ஏதுமில்லை.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1969 பிப்ரவரி 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

### ' தமிழ்ப் படை '

*1.—திரு. டி. மார்டின் :
திரு. என். எஸ். வி. சித்தன் :
திரு. கரு. சீமைச்சாமி :
மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ' தமிழர் படை ' என்ற அமைப்பு 1968 ஏப்ரல் 15-ம் தேதியிலிருந்து செயல்பட்டு வருவது அரசிற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அப்படையின் செயல் முறை பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழர்களின் நலனைக் காக்கும் நோக்கத்துடன், மதுரையில் தமிழர் படை ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படை கூட்டங்கள்—ஊர்வலங்களை ஒழுங்குற நடத்தல்—சமூகப் பணியாற்றல் முதலியவற்றில் நாட்டங்கொண்ட தொண்டுள்ளம் படைத்த அமைப்பாகும்.

THIRU T. MARTIN : The organisers of this Tamil Padai have stated that this organisation is intended to afford protection to the Ministers and also to safeguard the interests and welfare of the Tamilians in the other States. To protect the interests of the Ministers, there is the Police force and for affording protection and for safeguarding the interests of the Tamilians in other States, there is the Government here and also the respective State Governments and the Government at the Centre. Therefore, may I request the Hon. Minister to state whether the Ministry will come forward to publicly denounce such Padais which inherently will endanger the security and peace in this State?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தப் படையினுடைய அமைப்பாளர், அமைச்சர்களை பாதுகாப்பதற்காக அமைக்கப் பட்டிருக்கிறதென்று அறிவித்ததாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. இது கூட்டங்கள், ஊர்வலங்கள் இவற்றை ஒழுங்காக நடத்துவதற்காகத்தான் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவது கேள்வியையும் எடுத்துக்கொள்ளலாமே, அதுவும் தமிழர் படையைச் சேர்ந்தது தானே?

**திரு. கே. விநாயகம்:** அது வேறு கேள்வி.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பம்பாயில் இருக்கிற சிவசேனை, காங்கிரசுக்கு எதிராக செயல்படுவது போலவே, தமிழகத்திலே தமிழர் படை காங்கிரசுக்கு எதிராக ஈடுபடுவதென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதுவரையில் அது நல்ல பணிகள் செய்திருப்பதாக அரசாங்கம் கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒழுங்குபடுத்துவது இவைகளெல்லாம் தீய பணிகள் என்று உறுப்பினர் கருதுகிறார்களா?

**திரு. கரு. சீமைச்சாமி:** பம்பாயிலுள்ள சிவசேனை தமிழர்களுக்குக் கொடுமை செய்ததன் காரணமாக அதற்கு எதிராக இந்தத் தமிழர் படை அமைக்கப்பட்டுள்ளதா? அதனுடைய தளபதி யார்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி ஒரு நோக்கத்தோடு அமைக்கப்படவில்லை. அப்படி அமைத்திருந்தால் இங்கே இருக்கிற பம்பாய் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பழிவாங்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். அப்படி அமைக்கப்படவில்லை. அப்படி அமைக்கப்பட்டிருந்தால் அரசு அதை அனுமதிக்காது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பம்பாயிலுள்ள சிவசேனையைத் தடை செய்யவேண்டுமென்று நேற்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இங்கே இருக்கும்படியான தமிழர் படையையும் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால்தான் அங்கு இருக்கும் மாநில சர்க்காருக்கு நாம் அந்த யோசனை கூறுவது பொருந்தும் என்பதை இந்த சர்க்கார் உணருகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சிவசேனையைத் தடை செய்ய வேண்டுமென்று நான் அறிவிக்கவில்லை. அதனுடைய அட்டூழியங்களைத் தடுக்க வேண்டுமென்றுதான் நான் குறிப்பிட்டேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தமிழர் படையினுடைய நோக்கம் எதுவாக இருந்தாலும் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலுள்ள சேனைகள், படைகள் இவற்றைத் தடை செய்வது நன்மை பயக்கும் என்ற அளவில் ஒரு நல்ல சமிக்ஞையாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முறையிலே தமிழர் படையையும், மற்றப் படைகளையும் தடைசெய்ய சர்க்கார் முன்வருமா?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் அப்போதே சொன்னேன். தமிழர் படை, சிவசேனை ஈடுபடுகின்ற காரியங்களைப் போன்ற காரியங்களில் ஈடுபடுகிற படை அல்ல, அதுமாதிரி ஈடுபடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தமிழர் படை ஆரம்பித்த சமயத்தில் இப்போது முதல் அமைச்சராக இருப்பவர் அதை ஆதரித்ததும், மறைந்த முதல் அமைச்சர் அதைக் கண்டித்ததும் சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மிகப்பெரிய தவறான தகவலை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்ற நேரத்திலே நிருபர்களிடத்திலே அப்படி ஒரு படை அமைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறினார்களே தவிர, அது வேண்டாம், அதைத் தடுக்கவேண்டுமென்று சொன்னதாக, சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தமிழர்களுடைய நலனைப் பேணுவதற்காக ஒரு தற்காப்பு அமைப்பதற்காகத்தான் தமிழர் படை ஏற்பட்டிருக்கிறது. படை என்ற சொல்லுக்கும், சேனை என்ற சொல்லுக்கும் வேறுபாடு இருக்கிறது. படை என்றாலே கத்தி, கட்டாரியுடன் போரிடுவது என்பது பொருள் அல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போதுகூட பெரிய கூட்டத்தைப் பார்த்து 'இப்படை தோற்கில் எப்படை ஜெயிக்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே படை என்ற சொல்லுக்கும், சேனை என்ற சொல்லுக்கும் வேறுபாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சொல் வேறுபாடு இருக்கிறதா என்பதுபற்றிக் கவலையில்லை. செயல் வேறுபாடு உள்ளதா என்பதைத்தான் கவனிக்கவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தமிழர் படையினுடைய தன்மை எதுவாக இருந்தாலும் இப்போது ஒரு வார காலத்திலே 'நாம் தமிழர்' என்று சொல்லக்கூடிய அமைப்பு, நோட்டீஸ் அச்சடித்தெல்லாம் கொடுத்து, எண்ணூரிலுள்ள மலையாளிகளை அடித்து விரட்ட முயற்சி நடக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இது விஷயமாக அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்பொழுதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, வெண்புறாச் சேனை, சுதந்திரம் காக்கும் படை ஆகியவை மத மாச்சரியங்களையும், கட்சி விரோத உணர்ச்சிகளையும் தூண்டிவிடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப் படைகள் எல்லாம் முன்பு இருந்தன. இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. டி. தங்கப்பன்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் சார்பிலே படைகள் பல இயங்கி வருகின்றன. அதுபோன்று தவறான நடவடிக்கைகளிலே இதுவரை தமிழர் படை சட்டவிரோதமாக நடந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த விவரம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தமிழர்களின் உரிமைகளைப் பாது காப்பதற்காக அரசியல் இயக்கங்கள் இருக்கின்றன. அதற்காக தமிழர் படை அல்லது வேறு படை என்று வைப்பதன்மூலம் மாச்சரியங்கள்தான் ஏற்படுகின்றனவேயொழிய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை அரசு உணருகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசியல் கட்சிகளுக்குத் துணை மன்றங்கள் இருப்பதுபோல் இந்தத் துணைமன்றங்கள் வைக்கப்பட்டு, கூட்டங்களையும், ஊர்வலங்களையும் வேறு நிகழ்ச்சிகளையும் ஒழுங்காக நடத்துவதற்கு உதவியாக ஆக்கப் பணிகளைச் செய்வதற்கு மதுரையிலே ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நடிகர்கள் பெயர்களில் மன்றங்கள் இருக்கின்றன. நடிகர்களினுடைய ரசிகர்கள் அவர்களுடைய சட்டைகளிலே நடிகர்களினுடைய படங்களைப் போட்டுக்கொள்ளுகிறார்கள். அது மாதிரி அந்தந்தக் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் தலைவர்களுடைய படங்களைப் போட்டுக்கொண்டு பொதுத் தொண்டாற்றி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கென்று மதுரையில் ஒரு அமைப்பு இயங்கி வருகிறது.

**திரு. ந. தருமலிங்கம்:** தமிழர் படை நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக பல இடங்களில் மற்ற கட்சிகளால் தாக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட செய்தி எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**திரு. கே. விநாயகம்:** இந்தத் தமிழர் படையை இந்தச் சர்க்கார் ஆதரிக்கிறதா? வெளிப்படையாகச் சொல்லவேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பெயரை ஆதரிக்கிறது. எந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ அந்த நோக்கத்திலிருந்து பெயர்ந்து செல்லுமானால் அதை ஆதரிக்காது.

**திரு. என். துரைபாண்டியன்:** தமிழர் படை, கூட்டங்கள் நடத்துவதற்கும், ஊர்வலங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் பிரயோஜனமாக இருக்கிறதென்றும், ஒரு அரசியல் கட்சியின் அடிப்படையில் அது இருக்கிறதென்றும் அமைச்சர் அவர்கள் சொன்



னார்கள். அப்படியானால் இந்த அரசாங்கத்திற்கு உண்மையாக கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குப் பலம் இருக்கிறதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதற்குச் சற்று விளக்கமாகவே விடை அளிக்க விரும்புகிறேன். விலைவாசிப் போராட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைவர்களெல்லாம் சிறையிலே அடைக்கப்பட்ட நேரத்தில், சென்னையில் ஒரு ஊர்வலத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள் நடத்தினார்கள். அந்த நேரத்தில், அந்த ஊர்வலம் மவுண்ட் ரோடு வழியாகச் செல்லக் கூடாது என்று, சுதந்திரம் காக்கும் படையினர் வழியிலே அமர்ந்து மறியல் செய்தார்கள். அப்படி மறியல் செய்த நேரத்தில், ஊர்வலமாகச் சென்றவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டளை "அப்படி மறியல் செய்தால், நீங்கள் எதிர்த்துச் செல்லாமல், ஊர்வலம் அப்படியே உட்கார்ந்துவிட வேண்டும், போலீசார் வந்து, சுதந்திரம் காக்கும் படையை அகற்றியதற்குப்பின், நீங்கள் மீண்டும் தொடர்ந்து உங்களுடைய ஊர்வலத்தை நடத்தவேண்டும்" என்று அவர்களுக்குத் தலைமைக் கழகம் அறிவித்திருந்தது. அப்படி ஊர்வலம் போனபோது, சுதந்திரம் காக்கும் படையினர் பாரகன் டாக்கீஸ் எதிரில் மறியல் செய்தார்கள். மறியல் செய்த நேரத்தில், ஊர்வலத்தினர் அமைதியாக உட்கார்ந்துவிட்டார்கள். பிறகு, போலீசார் வந்து, மறியல் செய்தவர்களையெல்லாம் அழைத்துச் சென்ற பிறகு, ஊர்வலம் தொடர்ந்து நடைபெற்றது. அதுபோன்ற ஒரு நிகழ்ச்சி, தமிழர் படையின் மூலமாக ஏற்படுமானால், அப்பொழுதிருந்த அரசு, சுதந்திரம் காக்கும் படையின்பேரில் எடுத்த அத்தகைய நடவடிக்கையை, தமிழர் படை மீதும் எடுக்க இந்த அரசு தயங்காது.

**திரு. பி. எஸ். மணியன்:** தலைவர் அவர்களே, மதுரையிலே நடைபெற்ற தமிழர் படை அமைப்புக் கூட்டத்தில் அதன் அமைப்பாளர் அவர்கள் பேசும்போது, சிவ சேனையைப்போல் இது தாக்குகிற படை இல்லை, நம்முடைய உரிமையைப் பாதுகாக்கும் படைதான் என்று கூறியதும், அதைத் தொடர்ந்து மதுரையில் பல நல்ல நிகழ்ச்சிக்குத் தமிழர் படை பயன்பட்டு வந்ததும், உதாரணமாக, மதுரையிலே உள்ள மிகப் பெரிய மாரியம்மன் தெப்பக்குளத்தைச் சுத்தப்படுத்தும் வேலையில் சீரணிப் படையோடு தமிழர் படையும் சேர்ந்து ஈடுபட்டது என்பதும் இந்த அரசின் கவனத்திற்கு வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கவனத்திற்கு வந்தது. அந்த நல்ல காரியங்களுக்காக நன்றி.

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் செஞ்சேனைப் படையொன்றை அமைத்து, அதற்குத் துப்பாக்கிப் பயிற்சியும் கொரில்லாப் பயிற்சியும் கொடுத்துவருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் போலீசார் கண்காணித்து வருவார்கள்.

* 2 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 23—5—1968 அன்று மதுரை நகரில் நடைபெற்ற தமிழர் படை ஊர்வலத்தை மதுரை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டாரா?

(இ) ஊர்வலத்தில் சென்று தமிழர் படையினர் கையில் என்ன எடுத்துச் சென்றனர்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) ரயில் நிலையத்தில் முதலமைச்சரை வரவேற்க வந்தவர்களில், தமிழ்ப்படைச் சின்னம் பொறிக்கப்பட்ட பட்டைகள் அணிந்த சிலரும் இருந்தனர். திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள் ஏராளமாகக் காணப்பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன்: 23—5—1968 அன்று, மதுரை நகருக்கு வருகை புரிந்த தமிழக அரசின் அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் கறுப்புக் கொடி காட்டப்போவதாக இளைஞர் காங்கிரஸ், ஜனநாயக முறையில் முன்னே அறிவித்திருந்தும்கூட, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. அதே நேரத்தில், தமிழர் படையினர் பயங்கரமான ஆயுதங்களோடு ஊர்வலம் வர அனுமதிக்கப்பட்டது நியாயமாகுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அமைச்சர்கள் அன்றைய தினம் மதுரைக்கு வந்தது--பாவம்!--ஒரு கலியாணத்திற்காக—கலியாணத்துக்கு வந்தவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக அங்கேயிருந்த இளைஞர் காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்து, அதற்கான அணியினைத் திரட்டினார்கள். திரட்டிய நேரத்தில், கலியாணத்திற்கு வந்தவர்களுக்கு மதுரையில் அப்படிக் கறுப்புக் கொடி காட்டுவதென்பது மொத்தமாக எல்லா அரசியல் கட்சிகளின் பண்பாட்டையும் குறைத்துவிடும் என்ற காரணத்தாலும், அந்தக் கறுப்புக்கொடி நிகழ்ச்சி அப்பொழுது தடுக்கப்பட்டதே தவிர, வேறு பல இடங்களில் அரசியல் நிகழ்ச்சிகளுக்காகச் செல்லும் சமயத்தில் அமைச்சர்களுக்குக் காட்டப்பட்ட கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளெல்லாம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரம் அல்ல. இளைஞர் காங்கிரஸ்காரர்களை மட்டும் தடுத்துவிட்டு, தமிழர் படை ஊர்வலம் அனுமதிக்கப்படலாமா என்று கேட்டார்கள். இரயில் நிலையத்தில் அமைச்சர்கள் வந்தபோது, அவர்களை வரவேற்பதற்காக வரும் கூட்டத்தை ஒழுங்குபடுத்த மாத்திரம்தான் தமிழர் படைத் தொண்டர்கள் பணியாற்றினார்களே தவிர, ஊர்வலம் எதுவும் நடைபெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இந்தத் தமிழர் படைக்கு எதிர்ப்பாக இளைஞர் காங்கிரஸ்காரர்கள் அந்தப்



படையில் உள்ளவர்களைத் தாக்குவதற்கு ஏதுவாக அரிவாள்கள், கம்புகள் வைத்திருந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது சம்பந்தமாக எந்தத் தகவலும், விவரமும் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மறைந்த முதல்வர் அவர்கள் காலத்திலேதான் தமிழர் படை ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது கூட்டணியில் இருக்கும் அத்தனை அங்கத்தினர்களும், தமிழர் படை தேவை இல்லை என்று சொல்லுகிறார்கள். அதையொட்டியாவது, புதிதாக இருக்கும் முதல்வர் அவர்கள் காலத்திலே இந்தத் தமிழர் படையை ஒழித்துக் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தமிழர் படை, மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் தொண்டர் முகாமாக இருந்து, அரசியல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வேறு நகரங்கள் எதிலும் பரவவில்லை.

திரு. கே. விநாயகம்: சார், தமிழர் படையின் நோக்கம் ஒரு வேளை கூட்டங்களைச் சரிவர நடத்துவதற்காகவும், அங்கு சச்சரவுகள் வராமல் பார்த்துக் கொள்ளுவதற்காகவும் என்று இருந்தால், நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே வைத்திருக்கும் போலீஸ்காரர்களுக்கு வேலை இல்லையே, அவர்கள் ஏன் இருக்க வேண்டும்? அவர்களையெல்லாம் ரத்து செய்துவிட்டு, தமிழர் படையினரையே அந்தப் பணிக்கு வைத்துக்கொள்ளலாமா என்கிற யோசனை நல்லதா என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த யோசனை, சுதந்திரம் காக்கும் படையினர் உதயமானபோது திரு. விநாயகம் அவர்களால் சொல்லப்பட்டிருக்கவேண்டும். வெள்ளைப் புறாச் சேனை துவக்கப்பட்ட நேரத்தில் இந்த விசித்திரமான யோசனையை திரு. விநாயகம் அவர்கள் அங்கே கூறியிருக்கவேண்டும். அப்பொழுது சொல்லத் தவறிவிட்டார்கள். போனால் போகிறது. அவர்களுக்குச் சொல்ல விரும்பாத யோசனையை எங்களுக்குச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இப்பொழுதும், காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களிலேகூட, தலைவர் காமராஜ் அவர்களுடைய பதக்கத்தை அணிந்து இளைஞர் காங்கிரஸ்காரர்கள் நின்று தொண்டர்களாகப் பணி புரிந்து வருகிறார்களே, அதைப்போலத்தான் தமிழர் படையினரும் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

### ஊராட்சிகள்

*29 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்? வருவாய் எவ்வளவு இருக்க வேண்டும்?

(இ) மைனர் பஞ்சாயத்துக்களுக்கு குறை அளவு, அதிக அளவு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) மக்கட் தொகை ஐயாயிரத்துக்குக் குறையாமலும் ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் இருக்குமிடங்களில் பேரூராட்சிகள் நிறுவப்படும். ஏனைய இடங்களில் மக்கட்தொகை ஐந்நூறுக்குக் குறையாமல் இருந்தால் ஊராட்சிகள் ஏற்படுத்தப் படும். ஊராட்சிகளில் அதிக அளவு மக்கட் தொகை எவ்வளவு இருக்க வேண்டும் என்று 1958 தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் வறையறுக்கப்படவில்லை.

*30 வினு.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–ம் ஆண்டில் தமிழ் நாட்டில் எத்தனை கிராமப் பஞ்சாயத்துக்கள் மேஜர் பஞ்சாயத்துக்களாக மாற்றப் பட்டுள்ளன?

(இ) எத்தனை நகரப் பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிடிகளாக மாற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 48 பேரூராட்சிகள்.

(இ) ஒன்றும் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு மேலாக இருக்கும் மைனர் ஊராட்சி மன்றங்கள் பிரிந்து செல்லவேண்டும் என்ற கோரிக்கைகள் விடப் பட்டும், இன்னும் பல பிரித்துத் தரப்படவில்லை. அதன்பேரில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் திருத்தி, விரிவான மசோதா கொண்டுவரும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து சட்டங்களைத் திருத்தவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : போவைத் தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்தினுடைய வருமானம் பத்தாயிரம் ரூபாய் என்று வரையறை குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றுள்ள நிலைக்கு ஏற்றாற்போல், இருபதாயிரம் ரூபாய் என்று உயர்த்தி நிர்ணயிக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து சட்டங்களைத் திருத்த முற்படுகிறபோது அங்கத்தினருடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மைனர் பஞ்சாயத்துக்களில் 500-க்கும் அதிகமாக, ஆயிரம் மக்கள் தொகையுள்ள இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து ஒரு பஞ்சாயத்தாக அமைக்கிற சூழ்நிலை இப்பொழுது இருந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்துக்கள் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்றால், ஒரு கிராமம் 500 மக்கள் தொகை கொண்டிருந்து, அது தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்து அமைக்கப்படவேண்டுமானால், அந்தப் பஞ்சாயத்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அடுத்து, பஞ்சாயத்துப் பெருமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதிலே அவர்கள் செல்வாக்கு பயன்படுகிற காரணத்தால் சில சிறிய ஊர்கள், 500 மக்கள் தொகை இருந்தாங்கூட, பிரிந்து போக முடியாத நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தனித்தனியாகத் தீர்மானங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்றாலும் பல நேரங்களில் அவைகள் அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற மறுத்தால் பிரிக்கப்பட வேண்டியது நியாயம் என்று அரசாங்கத்திற்குப் பட்டால் அவைகளை மறுத்துக்கூட முடிவுகள் மேற்கொள்ள உரிமை பெற்றிருக்கிறது.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : பேரூராட்சியை நிர்வகிக்க நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அதேபோன்று கிராம ஊராட்சி அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கும், கூட்டங்கள் நடைபெறுவதற்கும் உறுதுணையாக இருக்க, இரண்டு, மூன்று ஊராட்சி மன்றங்களுக்குச் சேர்ந்தாவது ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இது ஒரு நல்ல யோசனை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, மைனர் பஞ்சாயத்து அமைப்பதற்கு மக்கள் தொகை 500 இருந்தால் போதும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மக்கள் தொகை 500 மாத்திரம் இருந்தால் போதுமா? மைனர் பஞ்சாயத்துக்கு ஒரு குறிப்பிட்ட வருவாய் வேண்டும் என்ற நிலை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 500-க்கு மேற்பட்ட மக்கட் தொகை இருக்கவேண்டும் என்று, மேல்வரம்பு எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. வருமானத்தைப்பற்றிய விதிமுறை எதுவும் இதிலே வகுக்கப்படவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சி மன்றங்களாக மாற வேண்டுமானால் அதற்கு மக்கள் தொகை ஐயாயிரமும், வருமானம் பத்தாயிரமும்

இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அப்படி மக்கள் தொகை ஐயாயிரமும், வருமானம் பத்தாயிரமும் இருந்தால் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றமாக மாற்றுவதற்கு ஊராட்சிகளே தீர்மானம் போட்டு நிறைவேற்ற வேண்டுமா? அல்லது அரசாங்கமே நேரடியாக அதை பேரூராட்சி மன்றமாக மாற்றி அறிவிக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கமே பரிசிலனை செய்து தேவையான முடிவுகளை அறிவிக்கும்.

## பதநீர் இறக்க உரிமம்

*51 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் வழங்கும் முறையை அறவே நீக்கிவிட வேண்டுமெனக் கோரி சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

*52 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, அதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள உரிமம் வழங்கும் முறையையே தொடர்ந்து கடைப்பிடிப்பது என்ற நிலையைத்தான் அரசாங்கம் எடுத்திருக்கிறது.

திரு. ரா. ராமச்சந்திரன் துரை : தலைவர் அவர்களே, பதநீர் இறக்குவதாகச் சொல்லி பனங் கள் இறக்குவது ஒன்று. அப்படி பதனீர் இறக்கியபிறகு நான்கு ஐந்து மணி நேரம் கழித்த பிறகு அது புளிப்பாகி விடுகிறது. அதைக் குடித்து வருகிற அப்பாவிகள் 4-எ செக்ஷன்படி, அதிக குடிபோதை என்கிற விதியின்படி அபராதம் கட்டுகிறார்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : குறைந்த குடிபோதைக்கு (not under the influence) 4-1(ஏ) செக்ஷன்படி ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள். ஆகவே, இதை மாற்றியமைக்கும் பரிசிலனை அரசாங்கத்திற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படிப்பட்ட சூழ்நிலையில் பதனீர் கெடுக்கப்பட்டு, அது கள்ளாக மாறி மதுவிலக்குத் திட்டத்திற்கே சவால் விடுகின்ற நிலைமை இருக்கிறது. இப்போது உரிமம் வழங்குகின்ற முறை, மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, it is a well-known fact that we are unable to restrict the drinking habits of those who are accustomed to liquors and very poor people are victimised in that connection. So, will the Government come forward to give permission to such poor people whenever they apply for licence?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது அப்படிப்பட்ட நடவடிக்கை எதையும் அரசு எடுப்பதாக இல்லை.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, ஐம்பது சதவீதம் போதை சத்துள்ள அரிஷ்டங்களை விற்பதற்கு அனுமதி முறை இல்லாமல் இருக்கும்போது ஒரு சதவீதம் போதையுள்ள பதனீர் இறக்குவதற்கான அனுமதிமுறையை வேண்டாமென்று சட்டம் விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிச் செய்வது மது விலக்குக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பாடான காரியமாக இருப்பதால் இப்போதுள்ள முறையே இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, இப்போது பதனீர் இறக்குவதற்காக நாம் லைசென்ஸ் தருகிறோம். அதற்கான விண்ணப்பங்கள் தகுந்த நேரத்தில் போடப்பட்ட போதிலும் அனுமதி கிடைப்பதற்கு பல மாதங்களாகின்றன. அதன் காரணமாக பதனீர் இறக்கும் தொழில் பாதிக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? என்னுடைய தொகுதியிலுள்ள பெற்றபாமந்தூர் என்ற ஊரிலிருந்து இவ் விஷயமாக மகஜர் வந்திருக்கிறதா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? (ஒரு மகஜரை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது கொடுக்காதீர்கள். பிறகு கொடுங்கள்.

திரு. கே. விநயகம்: அந்த மகஜர் வரவில்லையென்றால் அதன் நகலை சபாநாயகர் மூலமாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உரிமம் வழங்குவதில் நபர்கள் உரிய நேரத்தில் பெறுவதற்கு முன்வருவதில்லை. பதனீர் இறக்கப்படாத காலங்களில் தொழில் நடத்துவதற்காக அவர்கள், வெளியூர்களுக்குச் சென்று விடுகிறார்கள். பிறகு வந்து வாங்கிக் கொள்வதற்கு காலதாமதம் ஆகின்றது. வழங்குவதில் குறைபாடுகள் எதுவும் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இறக்கும்படியான பதனீர் சில மணி நேரத்திற்குள் புளிப்பு ஏறி, கள்ளாக மாறிவிடுகிறது. கிராமங்களில் இப்படி கள்ளாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. காவல் துறையினர் இப்படி மாற்றுகிறவர்களை தீவிரமான சட்டத்தின் மூலம் தண்டிக்க இயலாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, பதனீர் இறக்குவதற்கான லைசென்ஸ் கொடுக்கும் முறையை அறவே ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் பதனீர் இறக்க வேண்டாமென்று சொல்லுகிறாரா அல்லது லைசென்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, போதை எது எதிலே எத்தனை சதவிதம் இருக்கிறது என்பதை கணக்குப் பார்த்தால், நாம சாப்பிடக்கூடிய அரிசி சாதத்தில்கூட 5 சதவிதம் போதை சத்து இருப்பதாகச் சொல்லப்படுவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? பதனீர் மட்டுமல்ல, எல்லாவற்றிலும் போதைச் சத்து இருக்கிறது. ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்து, மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அரிசி போதையே போதும் என்று கருதுகிறேன்.

*Review of laws, rules, etc.*

* 53. *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there are proposals under consideration of the Government to undertake systematic review of existing laws, rules, procedures, etc., with a view to streamline the administration; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாகத்தில் ஏற்படும் அவசர சந்தர்ப்பங்களுக்குத் தேவையானபோது தற்போதுள்ள சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் இவற்றை மறு ஆய்வுசெய்வது இயல்பான பணியாக மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுபற்றிச் சிறப்பு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker Sir, the persent Law Minister, the Hon. Thiru Madhavan, when he was an Opposition Member during the Congress regime had brought forward a private Member Bill providing for the disclosure of the wealth of the Ministers. Now the present Ministry has got ample opportunities to make that Bill into law and so may I request the Hon. Minister to state whether this Ministry has so far taken any steps



to bring forward any legislation in the form in which the Bill had been introduced by the Hon. Thiru Madhavan during the previous Congress regime?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தொடக்கக் கேள்வியில் இந்தக் கேள்வி இடம் பெறவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, நம்முடைய பல்வேறு இலாகாக்களிலே எந்தவிதமான உத்தரவும் துரிதமாகப் போடுவதில்லை. இதையே ஆங்கிலத்தில் 'justice delayed is justice denied' என்று பழமொழியாகச் சொல்வார்கள். அதற்காக துரிதமாக உத்தரவு போட அரசாங்கம் புனராலோசனை செய்யுமா? ரெவின்யூ போர்டு இருக்கிறது, செகரடேரியட் இருக்கிறது. கலெக்டர் ஒரு உத்தரவை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பி, அதை அவர்கள் செகரடேரியட்டுக்கு அனுப்பி உத்தரவு கிடைப்பதில் காலதாமதம் ஆகின்றது. ரெவின்யூ போர்டில் சீனியர் ஆபீசர்ஸ் (senior officers who are trained in all departments). இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்

டாக்டர் எச். வி. ஹாண்டே: ரெவின்யூ போர்டிலே சீனியர் ஐ.சி.எஸ்./ஐ.ஏ.எஸ்; ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். செகரடேரியட்டில் ஜூனியர் ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். ரெவின்யூ போர்டில் சீனியர் ஆபீசர்ஸ் போட்ட உத்தரவை மாற்றி செக்ரடேரியட்டில் உள்ள ஜூனியர் ஆபீசர்ஸ் போடும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் நீண்ட கேள்வியாகக் கேட்டால் வினா நேரத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாது. குறுகிய கேள்வியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது தொடர்ந்து நடைபெற்று வருகிற நிர்வாக அமைப்பில் வருகிற முறையாகும். இதில் உறுப்பினர் அவர்கள் விரும்புகின்ற சீர்திருத்தத்தைப் பற்றி அரசு கவனத்தில் கொள்ளும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிர்வாகச் சட்டங்களும், விதி முறைகளும் அதிகமான அளவில் இருக்கின்றன. ஒரு பைலை அதிகமான அதிகாரிகள் பார்த்துவிட்ட பிறகுதான் முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவே, துரிதமாக முடிவு எடுப்பதற்கான வழிவகைகளில், சிம்ப்ளிபை செய்ய வேண்டும். அதற்காக அட்மினிஸ்ட்ரேடிவ் கமிட்டி ஒன்றை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாகச் சீர்திருத்தங்களை அவசரமாக செய்துவிட முடியாது. நிதானமாகச் சிந்தித்து வழிவகைகள் காண முற்பட வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைய நிலைமையில் அரசியல், பொருளாதார, சமுதாய உணர்வுகள் வெகுவாக மாறுபட்டிருக்கின்றன. ஆகவே, நிர்வாகம் நன்கு செயல் படுவதற்கு சட்டங்களையும் விதி முறைகளையும் மாற்றி, துரிதமான முறையில் செயல்படுவதற்கு தடையாயுள்ள முறையை மாற்றி யமைக்கவேண்டுமென்ற விருப்பம் கனம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாக சீர்திருத்தத்தைப்
மு.ப. 9-30 பற்றி நிதானமாக யோசித்துச் செயல்பட வேண்டுமென்று நான் முதலிலேயே சொன்னேன்.

திரு. பெ. மலைச்சாமி: அரசின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட நிலை அதன் நிர்வாக இயந்திரத்திற்கு ஏற்படவில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு இருக்கிற காரணத்தினால் பல்வேறு நன்மைகள் மக்களுக்கு ஏற்பட வில்லை. ஆகவே ரெவின்யூ போர்டையே கலைத்து விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய அபிப்பிராயம். கலைப்பது என்பது வேறு. சீர்படுத்துவது என்பது வேறு. நாம் இரண்டாவது முறையைத் தான் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

விற்பனை வரி.

*54 வினா.—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

இம்மாநிலத்தில் 1966-67, 1967-68 ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட விற்பனை வரித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1966–67-ல் விற்பனை வரி மூலம் வருமானம் ரூ. 3561.55 இலட்சம். 1967-68-ல் விற்பனை வரி மூலம் வருமானம் ரூ. 4203.23 இலட்சம்.

திரு. ஏ. எம். ராஜா: விற்பனை வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்க அரசு கையாண்ட முறைகள் யாவை? அதன்மூலம் கண்டுபிடிக்கப் பட்டு, வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் கொடுத்திருக்கிற கணக்கைப் பார்த்தாலே தெரியும். இந்த அரசு பதவிக்கு வரு வதற்கு முந்திய ஆண்டு 35 கோடி ரூபாயாக இருந்த வருமானம் இவ்வரசு பதவிக்கு வந்த பிறகு 42 கோடி ரூபாயாக உயர்ந்திருக்



கிறது. கிட்டத்தட்ட 6½ கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது. புதிய வரிகள் எதுவும் போடவில்லை. பலமுனை வரியில் கூட ½ சதவீதம் தான் புதிய அரசு வந்ததற்குப் பிறகு உயர்த்தப்பட்டது. நிர்வாகச் சீர்திருத்தத்தின் மூலமாகவும், விற்பனை வரியில் நடை பெறும் ஏய்ப்பைத் தடுப்பதன் மூலமாகவும் தான் முந்திய ஆண்டைவிட 6½ கோடி ரூபாய் அதிகமாக வசூலாயிற்று. மற்ற விவரத்திற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. டி. மார்டின்: 1966–67-ல் அசெஸ்மெண்டு செய்து பின்பு வசூல் செய்ய முடியாத தொகை எவ்வளவு? 1967–68-ல் அசெஸ்மெண்டு செய்து, பின்பு வசூல் செய்ய முடியாது இருக்கக் கூடிய தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதற்கும் தனிக் கேள்வி தேவை.

திரு. மா. பா. சாரதி: வெல்லத்திற்கு விற்பனை வரி வாங்க வேண்டுமென்று போட்டு, அதன்படி வியாபாரிகளும் மக்க ளிடத்தில் இருந்து வாங்கினார்கள். அப்படி வசூலான லட்சக் கணக்கான தொகையை இன்னும் அரசு வசூல் செய்யாமல் இருப் பதற்குக் காரணம் என்ன? வசூல் செய்ய எப்போது முற்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முதல் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: விற்பனை வரியின் விகிதத்தை அரசு உயர்த்திக்கொண்டே போவதன் காரணத்தினால்தான் வரி ஏய்ப்பு அதிகமாகிக்கொண்டு வருகிறது. விற்பனை வரி விகிதத்தை குறைத்தால் வரி ஏய்ப்பு இன்றி நல்ல முறையில் வசூல் செய்யலாம், அதிகமான தொகையும் வரும் என்பதை அரசாங்கம் உணருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முந்திய அரசாங்கத்தை விட அதிகமாக வசூல் செய்திருப்பதற்கு பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். அதற்குப் பதிலாக யாரோ சொல்வதைக் கேட்டுக் கொண்டு இங்கே வந்து சொல்வது பயனில்லை. வர்த்தகர்களுக்கும் தொந்தரவு கொடுக்காமல், வரி ஏய்ப்புக்கும் இடம் அளிக்காது நல்லமுறையில் தான் நிர்வாக யந்திரம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Are the Government aware of the fact that there are a large number of complaints with regard to harassment by the sales tax officers of the small shop-keepers and petty shop-keepers? If so, what are the steps Government proposes to take to see that this harassment is completely avoided and to stream-line the entire department without making these people wait in queue for a long time and so that there could be something like "procurement without tears"? Are the Government prepared to streamingline the entire organisation so that the present harassment is put an end to?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I entirely agree with the hon. Member that there should not be any harassment. Government are not aware of any kind of harassment. If any specific instance of harassment is brought to their notice, Government will certainly look into it.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்படியான சந்தர்ப்பத்தில் சென்ற அரசாங்கத்தைவிட இந்த அரசாங்கம் கெட்டிக்காரத்தனமாக வரி வசூல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். குறள் வழியில் நின்று ஆட்சி செய்யும்படியாகச் சொல்லிக்கொள்கிற இந்தச் சர்க்கார், "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும், கோலொடு நின்றான் இரவு" என்பதற்கேற்ப நடந்துகொள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வேலொடு நின்றவன் கொள்ளைக்காரன். இந்த அரசு கொள்ளைக்காரன் இல்லை அப்படிப்பட்ட கடுமையான, பயங்கரமான கொள்ளைக்காரனைச் சித்தரிக்க அவசியம் இல்லை. ஜனநாயக அமைப்பில் இவைகள் எல்லாம் தவிர்க்க வேண்டியாக கடமைகள். அரசு நியாயமான முறையில்தான் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "வேலொடு நின்றான்" என்பதைக் குறிப்பிட்டார்கள். விற்பனை வரி என்ற வேலையே வடித்துக்கொடுத்தது பழைய காங்கிரஸ் ஆட்சிதான். (சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ் ஆட்சி கொடுத்ததையே இந்த அரசு எடுத்துப் பின்பற்றிச் செல்வதற்கு நன்றி.

### கோவை நகரை 'பி' பிரிவாக்குதல்.

*55 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தை 'பி' பிரிவு நகரமாக மாற்றும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) நகரங்களின் அந்தஸ்தை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பாக மத்திய அரசு நகரங்களை 'ஏ' பிரிவு, 'பி—1' பிரிவு, 'பி' பிரிவு என்பதாகப் பிரித்து, 'ஏ' பிரிவு, 'பி—1' பிரிவு ஆகிய நகரங்களில் உள்ள மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு எல்லாம் சிட்டி காம்பென்சேடரி அலவன்சு வீட்டுவாடகைப்படி உண்டென்றும். 'பி' பிரிவு நகரங்களில் உள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப்படி உண்டென்றும் தெரிவித்தார்கள். அப்போது சென்னை நகரைக்கூட 'ஏ' பிரிவு நகரமாக அறிவிக்கவில்லை. கோவையைப் பொறுத்தவரையில் 'ஸி' பிரிவாக





இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையை 'ஏ' பிரிவாக மாற்றவேண்டும் என்கிற முயற்சியை எடுத்துக்கொண்டது மக்கள் கருத்து திரட்டப்பட்டது. பாராளுமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் தீர்மானம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சுற்றுப்புற நகரங்களை எல்லாம் சேர்த்து சென்னையை 'ஏ' பிரிவு நகரமாக ஆக்கினார்கள். மதுரை 'பி' பிரிவாக ஆக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இங்குள்ள அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அலவன்ஸ் கிடைக்கிறது. கோவை நகரமும் 'பி' பிரிவாக ஆக்கப்படுவதற்கு எல்லா அம்சங்களும் இருக்கின்றன. ஆயினும் நகரசபை உரிமையாளராகிய முனிசிபாலிட்டி கணக்கு குறைவாக இருப்பதால் ஆக்க முடியவில்லை. அந்தக் கணக்கு சரியானதும் அல்ல. ஆகவே இதனை வற்புறுத்தி கோவையைச் சுற்றியுள்ள புற நகரங்களையும் இணைத்து அதை 'பி' பிரிவாக ஆக்கவேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : கோவை 'பி' பிரிவு நகரமாக அறிவிக்கப்படாத காரணத்தினால் அங்குள்ள மத்திய அலுவலக ஊழியர்களுக்கும் சரி, மாநில ஊழியர்களுக்கும் சரி, எல்.ஐ.சி. ஊழியர்களுக்கும் சரி, நகர ஈட்டுப்படி, வீட்டுவாடகைப்படி போன்றவை கிடைக்காது இருக்கிறது. அது 'பி' பிரிவு நகரமாக ஆக்கப்பட வேண்டிய எல்லா அம்சங்களும் இருப்பதனால் உடனடியாக அதை 'பி' பிரிவு நகரமாக—புற நகரங்களையும் சேர்த்து—ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் சொன்னேன். அவர்களுடைய கணக்குப்படி மதுரை நகரத்திலே முனிசிபாலிட்டியிலேயே ஜனத் தொகை அதிகமாக இருக்கிறது. கோவையை எடுத்துக் கொண்டால் புற நகரங்களான சிங்கநல்லூர், பீளமேடு போன்ற பகுதிகளைச் சேர்த்தால் வருகிறது. சென்னை நகரத்தை 'ஏ' நகரமாக ஆக்காமல் முன்பு வைக்கப்பட்டு இருந்ததே அதைப்போல்தான் கோவை நகரமும் வைக்கப்பட்டு இருக்கிறது. அதையும் உயர்த்தவேண்டுமென்ற உறுப்பினரின் அனுதாப உணர்ச்சியை இந்த அரசு மிகுந்த ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டு அதை மத்திய அரசுக்கு வற்புறுத்தும். அதிலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

### *Small Savings Cultural Show,*

*56 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the expenditure incurred by the Government in connection with the Small Savings Cultural Show held at Madras on 25th February 1968; and

(b) the amount realised from the show?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) சென்னை மாநகரில் 25—2—1968 அன்று நடந்த சிறு சேமிப்பு கலைவிழாவிற்காக சுமார் ரூ. 55,900 அரசாங்கத்தால் செலவிடப்பட்டது.

(இ) சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் ஏறத்தாழ ரூ. 81 லட்சம் வசூலாயிற்று. இதைத் தவிர கலைவிழா நடந்த அன்று நேரு பந்தய அரங்கில் அனுமதிச் சீட்டுகள் விற்ற வகையில் ரூ. 19,800 வசூலாயிற்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நடத்துவதைப்போல் இந்த சிறு சேமிப்பு கலை நிகழ்ச்சிகளை மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களிலும் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சிறு சேமிப்பிலே மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற பேரார்வத்தை நான் பாராட்டுகிறேன். அதனுடைய தொடர்ச்சியாக சென்னை நகரத்திலே வருகிற 1-ம் தேதி 2-ம் தேதிகளில் நிகழ்ச்சிகள் நடக்க இருக்கின்றன. சென்ற ஆண்டு 90 லட்ச ரூபாய்வரை சேர்ந்தது. சிறு சேமிப்பு உதவித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். தலைமையில் இந்த விழாக்கள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாக்கள் இன்னும் வெற்றிகரமாக நடைபெற மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஆதரவளிக்க முன்வரவேண்டும். இதைத் தொடர்ந்து விழாக்கள் நடத்தலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 81 லட்சம் ரூபாய் வரவும் 19 லட்சம் ரூபாய் செலவும் ஆயிற்று என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஆயிரக்கணக்காகக்கூட இருக்கலாம். அந்த அளவுக்கு செலவு ஏற்பட்டது நியாயமான செலவா என்று ஒரு அறிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் குழப்பிக்கொள்கிறார்கள். ரூ. 81 லட்சம் பத்திரங்கள் மூலமாக வந்தது. சிறு சேமிப்புப் பத்திரங்கள் மூலமாக எவ்வளவு வந்தது என்பது ஒரு கேள்வி. கலை விழாக்களுக்கு என்ன செலவாயிற்று என்பது ஒரு கேள்வி. இரண்டும் தனித் தனிக் கேள்விகள். பத்திரங்கள் மூலமாகத்தான் 81 லட்சம் ரூபாய் வந்தது. அதுதான் வரவுக் கணக்கு. செலவைப் பொறுத்தவரையில் 35,900 ரூபாய் ஆயிற்று. அதிலும்கூட 16 ஆயிரம் ரூபாய் மத்திய அரசு கொடுக்க வேண்டியிருக்கிறது. மாநில அரசுக்கு அதனால் எந்தவிதமான நஷ்டமும் இல்லை. மத்திய அரசு 16,000 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். அதைப் பெறுவதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்துள்ளது.

*Supply of pesticides.*

*57 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state:

(a) whether the Committee on Estimates in its report dated 10th August 1965 on the Community Development Programme recommended that pesticides should be sold at a subsidised rate of 50 per cent of cost to all the ryots as in the case of non-food crops like cotton, oil-seeds and sugarcane; and



(b) if so, whether the Government have passed any orders thereon?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) உணவுப் பயிர்களுக்கும், வாணிபப் பயிர்களுக்கும் பயன்படுத்தப்படும் பூச்சி மருந்துகளுக்கு ஒரே சீரான வீதத்தில் உதவித்தொகை அளிக்கப்படவேண்டுமென்று அரசாங்கம் கருதியது. அதன்படி, உணவுப் பயிர்களுக்காகவும், உணவுப் பயிர்கள் அல்லாத ஏனைய பயிர்களுக்காகவும், உழவர்கள் அனைவருக்கும் 1—8—1967 முதல் பூச்சி மருந்துகள், விற்பனையில் 35 சதவிகிதம் உதவித்தொகை அளிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, பதினைந்து கூறுகள் கொண்ட பெருந்திட்டம் எதையும் அரசாங்கம் வகுக்கவில்லை. எனினும் ஒரு போகம் விளையும் நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுவதை அரசாங்கம் முழுமுரப்படுத்தியுள்ளது. மிகு பயன்தரும் பயிர் விளைவுத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் காய்கறி பயிரிடும் திட்டம் ஒன்றினைச் செயலுக்குக் கொண்டுவந்துள்ளது. பருப்பு வகைகள் பயிரிடப் படும் பரப்பளவை அதிகரித்துள்ளது. நில அடைமான வங்கிகள் மூலம் உழவர்களுக்குக் கடன்வசதிகள் அளிப்பதை முழுமுரப் படுத்தியுள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்தத் திட்டத்தைத் தயாரித்து எத்தனை மாதங்கள் ஆகியிருக்கின்றன ? இந்தத் திட்டத்தை அரசாங்கம் அமலுக்குக் கொண்டுவந்தபிறகு உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு தொகை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் சொன்ன பதிலை கனம் உறுப்பினர் கவனிக்கவில்லை என்று நினைக்கின்றேன். பதினைந்து அம்சத்திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை என்று கூறினேன். உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவிலே ஒரு போகத்தை இரண்டு போக சாகுபடியாக மாற்றவும், ஆடுதுறை 27, ஐ.ஆர். 8 போன்ற விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உற்பத்தி பெருகியிருக்கிறது. எந்த அளவுக்குப் பெருகியிருக்கிறது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லமுடியும். தஞ்சாவூர் விவசாயிகளைக் கேட்டாலே டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

திரு. கே. பி. எஸ். மணி: இந்த அரசாங்கத்தின் திட்டத்தின்படி ஏடிடி. 27, ஐ.ஆர். 8, ஐ. ஆர். 5 இவற்றினால் உற்பத்தி அதிகமானாலும், ஏற்றோரப் பகுதிகளிலே இன்னும் கூடுதலாக விளைவிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அந்தப் பகுதிகள் எல்லாம் காட்டு இலாகாவிடம் இருக்கின்றன. அங்கே சவுக்கு பயிரிட்டு

நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே ஆற்றோரப் படுகைகளையும் நஞ்சை நிலமாக மாற்றிப் பயிர்செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆற்றோரப் படுகைகளில் காட்டுச் செடிகள் நடப்படுகின்றன. ஆற்றுக்குப் பாதுகாப்பாக இருப்பதற்காகத்தான் அப்படிச் செய்யப்படுகிறது. அப்படியில்லாமல் அந்த மரங்களை வெட்டிவிட்டால் மண் அரிப்பு ஏற்பட்டுவிடும். அதனால்தான் அங்கே காட்டுச் செடிகள் வைக்கப்படுகின்றன. அந்தப் பகுதிகள் உண்மையிலே விவசாயத்திற்கு ஏற்ற பகுதியாகப் பயன்படுமானால் அதை எடுத்துக் கொள்ளலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** 15 அம்சத் திட்டம்பற்றி நான் சொல்லவில்லை. அதைப் புரிந்துகொண்டுதான் கேள்வி கேட்டேன். இதைப்பற்றி, 15 அம்சத் திட்டம் வருகிறது என்று பிரஸ்ஸிலே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் கேட்டேன். ஃபுட் ப்ரொடக்ஷனைப் பொறுத்தவரையிலே பட்ஜெட்டைப் பார்க்கிறபோது 2 லட்சம் டன்தான் உற்பத்தி உயர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு பணம் செலவு செய்தபிறகும்கூட கேவலம் 2 லட்சம் டன்தான் அதிக உற்பத்தி ஆயிற்று என்றால் இனிமேல் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆடுதுறை 28 சாகுபடியைப் பொறுத்தவரையில், 2,801 பவுண்டாக இருந்த விளைச்சல் இப்பொழுது 3,851 பவுண்டாக உயர்ந்திருக்கிறது. அது மாத்திரமல்லாமல் ஆடுதுறை 20, ஆடுதுறை 30-ஐப் பொறுத்தவரையில் 3,300 பவுண்டாக இருந்த உற்பத்தி இப்பொழுது மேலும் அதைவிட 557 பவுண்டு கூடுதலாக விளைந்திருக்கிறது. இந்த அளவுக்கு கணிசமாக உற்பத்தி பெருகியிருக்கிறது. இதைக் கனம் உறுப்பினர், 2 லட்சம் டன் தானே என்று—கேவலம் 2 லட்சம் டன் தானே என்று—குறைத்து மதிப்பிட வேண்டாம். மழையில்லாத காலத்திலே இப்படி உணவு உற்பத்தியை நாம் பெருக்கியிருக்கிறோம் என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** உணவு உற்பத்தி சம்பந்தமாக திரு. ராயப்பா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் திட்டம் தயாரிப்பதாக பிரஸ்தாபிக்கப்பட்டதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.
மு.ப. 10-00 அதனுடைய விவரங்களை அரசாங்கம் வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** திரு. ராயப்பா அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்கள். அந்தத் திட்டப்படி 27 கோடி ரூபாய் மத்திய அரசு சிறு பாசனத் திட்டத்திற்காக உதவ வேண்டுமென்று கோரினோம். சகாயத் தொகையாகவோ அல்லது கடனாகவாவது கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டோம். பலமுறை கேட்டும் இன்னும் கிடைக்கவில்லை. மத்திய உணவு அமைச்சர் அவர்கள் இங்கு வந்திருந்தபோது





இதைப்பற்றி அனுதாபத்துடன் கவனிப்பதாகக் கூறினார்கள். மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் திட்டத்திட்ட 6 கோடி ரூபாய்வரை கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்த உதவி கிடைக்கும் என்ற நல்ல நம்பிக்கையில் அரசாங்கம் இருக்கிறது. அந்த உதவி கிடைத்தால் பெரிய அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

### *Public Buildings (Licensing) Act.*

* 59 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the number of buildings for which licence has been obtained from the authorities under the Madras Public Buildings (Licensing) Act; and

(b) the steps taken by the Government to enforce the Act?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இச்சட்டத்தின் கீழ் உரிமங்கள் பெற விண்ணப்பம் செய்துகொள்வதற்கான காலவரம்பு அரசாங்கத்தால் 31—3—1969 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் இச்சட்டத்தின் விதித்துறைகள் முனைப்புடன் செயல்படுத்தப்படவில்லை.

### *Coimbatore Headquarters Hospital.*

* 60 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the labour ward in Coimbatore Headquarters Hospital is in a highly insanitary condition; and

(b) the reason for the delay in occupying the new buildings that have been built and completed a year ago?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:**

(அ) இல்லை.

(இ) ஏற்கனவே புதிய மகப்பேறு மருத்துவமனை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

### மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு

* 61 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து பின்கண்ட வினாக்களுக்கு விடை பகர்வாரா—

(அ) மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: ஒரு முன்சீப் கோர்ட் ஆரம்பிக்க வேண்டுமென்றால் என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டும்? அந்தத் தேவைகள் இருந்தால் உடனடியாக ஒரு கோர்ட் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மதுராந்தகத்திற்குப் பக்கத்தில் செங்கற்பட்டில் முன்சீப் கோர்ட் இருக்கிறது. மதுராந்தகம் அதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. தனியாக நீதிமன்றம் வேண்டுமென்றால் ஒரு நீதிமன்றத்திற்குத் தேவையான அளவுக்கு வழக்குகள் அதிகமாக இருக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றம் விரும்புகிறது.

*Bleeding Madras variety of handloom cloth.*

* 62 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Bleeding Madras variety of handloom cloth is in stock for more than 2 years in the co-operative societies in North Arcot district; and

(b) whether quite a large number of handloom weavers are suffering for want of employment thereby and also for want of raw materials?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

### சிறு ரகக் கார்கள் உற்பத்தி

* 63 வின.—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் சிறிய ரக கார் உற்பத்தி செய்ய அனுமதி கோரி விண்ணப்பங்கள் தமிழக அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய காரின் விலை என்ன?

(உ) உற்பத்தி செய்வதற்கு எந்த ஆண்டிலிருந்து வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: முன்பு இருந்த தொழிலமைச்சர் அவர்கள், சிறிய கார் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா மாநில அரசுகளும், இப்படிப்பட்ட ஒரு சிறிய கார்த் தொழிற்சாலையைத் தொடங்குவது என்று திட்டக்குழுவும் மத்திய அரசும் முடிவு செய்தால் அதை தங்கள் தங்கள் மாநிலத்தில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று நாமும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறோம்.



திரு. வை. சுவாமிநாதன்: ஆஸ்திரேலியக் கம்பெனி ஒன்று ஆண்டுக்கு 12,000 கார்களைத் தயாரித்துக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்துடன் பேசி நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட ஒரு தகவல் மத்திய அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், அதைப்பற்றி மத்திய அரசு விரிவான விளக்கங்களைக் கேட்டிருப்பதாகவும் காலைப் பத்திரிகையில் பார்த்தேன்.

திரு. மு. ச. சிவசாமி: நம்முடைய மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கும் சிறிய கார் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தால் அந்தத் தொழிற்சாலையை, வளரும் நகரமாகிய தூத்துக்குடியில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கத்தினர் அவர்களுடைய ஆசை வரவேற்கத்தக்கது.

திரு. ஆர். நாகசுந்தரம்: சிறிய கார் தொழிற்சாலையைப் பற்றி டெல்லியிலும், இங்கும் அடிக்கடி பேசப்படுகிறது. இதற்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா அல்லது மத்திய அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லைசென்ஸ் மத்திய அரசுதான் வழங்க வேண்டும். சிறிய கார் உற்பத்தியைப்பொறுத்து பல பிரச்சினைகள் எழுப்பப்படுகின்ற காரணத்தால் மத்திய அரசு பல ஆண்டு காலமாக கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்டு முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது.

திரு. டி. மார்டின்: தமிழ்நாட்டில் உள்ள சிறந்த விஞ்ஞானி திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 5,000 ரூபாய் செலவில் சிறிய காரை உற்பத்தி செய்ய முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசுக்கு ஏதேனும் மனுச் செய்துள்ளார்களா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கருத்து தெரிவித்திருப்பதைப் பற்றித் தகவல் இல்லை. இந்த அரசாங்கத்திற்கு அதைப் பற்றிய திட்டம் அனுப்பப்பட்டால் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

### மேலூர் வட்டம் பெரியருவி நீர்த்தேக்கம்

* 64 வின.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டத்தில் அமைக்கப்பெற்ற பெரியருவி நீர்த்தேக்கம் பாசனத்திற்குப் பயன்படுகிறதா?

(இ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : இந்த நிர்ணயத்தால் எத்தனை கிராமங்களில் உள்ள எத்தனை ஏக்கர் நிலப்பரப்புகள் பயன்பெறுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

காவேரி ஆற்றின் குறுக்கே பாலம்

*65 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கும்—முசிறிக்கும் இடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்; அத்தகைய செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்திற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எந்த ஆண்டில் இருந்து வேலை தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதற்கு 55 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில ரீதியில் இவ்வேலையை எடுத்துக் கொள்ள இயலாது. இந்த வேலையைத் தொடங்குவது இந்திய அரசிடம் இருந்து இவ் வேலைக்குக் கிடைக்கும் உதவியைப் பொறுத்திருக்கிறது.

*Madras Zoo*

*66 Q.—Thiru K. VINAYAGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) Whether the animals in the Madras Zoo are ill-fed and ill kept;

(*b*) Whether there is rubbish all over the place in the Zoo; and

(*c*) Whether the gate collections go to the Corporation authorities or to any contractor?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.**

(இ) இல்லை; மிருகக் காட்சிசாலை ஊழியர்கள் அந்த இடத்தை நாள் தவறாமல் துப்புரவாக வைத்து வருகின்றனர்.

(உ) மிருகக் காட்சிசாலைப் பூங்காவைக் காண வருபவர் களிடம் நுழைவுக் கட்டணத்தையும், சைக்கிள் நிறுத்துமிடத்துக் கான கட்டணத்தையும் வசூலிக்கும் உரிமை ஆண்டுதோறும் ஒப்பந்தக் குத்தகைக்கு விடப்படுகிறது.



திரு. கே. விநாயகம் : இந்த மிருகக் காட்சி சாலை இப்போது இருக்கும் இடத்தில் இருப்பது சரியல்ல என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டு இதை ராஜ்பவன் தோட்டத்திற்குப் பக்கத்தில் நில ஆர்ஜிதம் செய்து அங்கு மாற்ற வேண்டுமென்ற யோசனை இருந்ததே, இப்போது அது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறதா இல்லையா? நான் ஒரு சிறுத்தைப் புலி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை இரண்டாவது முறையாகப் போடுகிறீர்கள்.

திரு. கே. விநாயகம் : நான் கொடுத்த சிறுத்தைப் புலி என்று விளம்பர போர்டு போட்டிருந்ததை அகற்றி விட்டார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவ்வாறு அகற்றிய பலகையை திரும்பவும் புதிதாகப் போட சர்க்காருக்கு யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த மிருகக் காட்சி சாலையை மாற்றுவதற்கான திட்டம் இருப்பதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் கொடுத்த சிறுத்தைப் புலி பற்றி போர்டு இருந்ததை மாற்றி விட்டதாகச் சொல்லுகிறார்கள். பொதுவாக, பத்தாண்டு, பதினைந்தாண்டு ஆகிவிட்டால் அந்தந்தப் பொருள்கள் அவரவர்களுக்கே சொந்தம் என்ற அனுபவ பாத்தியதை இருந்து வருகிறது. இருப்பினும் உறுப்பினர் அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: மிருகங்கள் தங்களுக்கு ஆகாரம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று காங்கிரஸ் கட்சி கொறடாவிடம் டெப்டேஷன் போனதாகத் தெரிகிறது. அதற்குத் தலைமை தாங்கிய மிருகம் எது என்று தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது யானையாகத்தான் இருந்திருக்கும்.

திரு. கே. விநாயகம்: கார்ப்பரேஷன் நிர்வாக ரிப்போர்டில் இந்த மாதிரி போதிய அளவுக்கு மிருகங்களுக்கு உணவு கொடுக்கப் படுவதில்லை என்று கூறப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? குறிப்பாக ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது பற்றிய தகவல் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : எம். ஜி. ஆர். கொடுத்த சிங்கமும், திரு. விநாயகம் கொடுத்த சிறுத்தையும் நேசமாக இருக்கின்றனவா அல்லது அங்கும் சண்டை போட்டுக் கொண்டுதான் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது திரு. விநாயகம் கொடுத்த சிறுத்தைப் புலியின் குணத்தைப் பொறுத்தது.

திரு. கே. போஜன் : சென்னை நகரத்தில் அமைத்திருக்கும் மிருகக் காட்சி சாலையைப் போல் நம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் தலைநகரங்களில் தொடங்குவதற்குத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை.

### ஏற்காட்டிலுள்ள நாகலூர்—டேனிஸ்பேட்டை சாலை

* 67 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா ஏற்காடு மலைப் பகுதியில் மலை வாசிகள் நலனுக்காக போடப்பட்ட நாகலூர்—டேனிஸ்பேட்டை ரோடு பூர்த்தியாய் விட்டதா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

(உ) எப்போது பூர்த்தி செய்யப்படும்?

(எ) அந்த ரோடுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) எல்லாவற்றிலும் வேண்டும் அளவிற்கேற்றபடி அது இன்னும் முடிக்கப்படவில்லை.

(இ) சாலை வேலைகளை நிறைவேற்றுவதில் நடந்ததாகக் கூறப்படுகிற முறைகேடான செயல்கள் குறித்து செய்யப்பட்ட சிறு குற்றச்சாட்டுகளை கண்காணிப்பு-லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை துப்புத் துலக்கி வருகிறது. அது முடிகிற வரையில் மேற்கொண்டு வேலை நிறைவேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

(உ) அதைச் சரிவர இப்போதே முன்கூட்டிக் கூற இயலாது.

(எ) குறிப்பிட்ட வேலைகளுக்காகவென்று குறிப்பாக எந்த நிதி ஒதுக்கமும் செய்யப்படுவதில்லை.

பி.ப. 10-00 திரு. எம். சுரேந்திரன் : இந்த ரோடு வேலையில் பல ஊழல்கள் நடந்து அங்கு சிறுசிறு கண்ட்ராக்டர்களாக வேலை செய்தவர்களுக்குப் பணம் வந்து சேரவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அந்த சிறு சிறு கண்ட்ராக்டர்களின் கஷ்டங்களை உணர்ந்து சீக்கிரம் அதைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தப் பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். அதன்படி அவர்கள் கேட்ட ரூ. 1,50,000 ஒரு முறை கொடுக்கப்பட்டு அது அவர்களுக்கு வினியோகிக்கப்பட்டது. மேற்கொண்டும் ரூ. 5,50,000 வேண்டுமென்று கேட்டு அதுவும் கொடுக்கப்பட்டது. ஆனால் அவைகளைக் கொடுப்பதற்கு இப்போது 'செக் மெஷர்மென்ட்' கணக்குகள் எல்லாம், லஞ்ச ஒழிப்புத் துறையால் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதால் அது முடிகிற வரையில் அதைக் கொடுக்கக் கூடாது என்று அந்தத் துறையிலிருந்து வந்த அறிவுரைப்படி கொடுக்காமல் நிறுத்தப்பட்டது. அது கிடைத்தவுடன் அது முறையாக வழங்கப்படும்.



### *Hartal by workers in Coimbatore.*

* 68 Q.—Thiru K. VINAYAKAM : will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a general hartal was conducted in Coimbatore by the workers of Hind Mazdoor Sabha, Communists and Swatantra trade unionists on May 11th of 1968; and

(*b*) if so, the reasons therefor and results thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கக் கோரி ஹர்த்தால் நடத்தப்பட்டது. முதலமைச்சர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி 27-5-1968-ல் ஒரு ஒப்பந்தத்தை செய்து வைத்தார்.

திரு. கே. விநயகம் : அவர்கள் எந்தக் காரணத்திற்காக இந்த வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள்? அவர்கள் குறைகள் என்ன? அவர்களின் குறைகள் ஓரளவிற்காவது தீர்க்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கவேண்டுமென்பதற்காக அது நடத்தப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் திருச்சி, மற்ற இடங்களில் அவர்களைச் சந்தித்துப் பேசி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து வைத்திருக்கிறார்கள்.

திரு. கே. விநயகம் : அப்படி ஒரு ஒப்பந்தம் செய்து வைத்திருந்தும் கூட, இன்னும் 25-க்கு மேற்பட்ட பஞ்சாலைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப் பஞ்சாலைகள் திறக்கப்படாததற்கு முக்கிய காரணம், ஆலைச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பெருத்த நஷ்டம்தான் என்று சொல்லப்படுகிறது. அதற்காக மத்திய அரசாங்கம், இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அதில் இந்தப் பஞ்சாலைகள் பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டு, ஒன்பது பஞ்சாலைகள்பற்றி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். இரண்டிற்கு சர்க்கார் காரண்டி கொடுத்து கடன் கொடுக்கலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. மீதி ஆலைகள் பற்றி பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சமரச ஒப்பந்தம் ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சமரச ஒப்பந்தம் என்ன? அது நடைமுறையில் வந்ததா? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் நிலை, பஞ்சாலைகளின் நிலை இவைகள் எல்லாம் பற்றி தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசு அனைவரும் ஒருங்கு கூடி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

[1969 பிப்ரவரி 25

ஆகவே மீண்டும் மீண்டும் அதைப் பற்றிய பிரச்சனைகளை இப்போது எழுப்பாமலிருந்தால் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

### வீட்டுவாடகைக் கட்டுப்பாடு சட்டம்

*69 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டம் மின் குழுவில் பணிபுரிவோருக்கு விரிவாக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நம் வாழ்விற்கு ஒளியூட்டக் கூடிய இந்த மின்சார இலாகாவில் பணி புரிவோருக்கு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை விரிவாக்காமல் இருப்பது மாற்றான்தாய் மனப்பான்மையாகாதா? அந்த மனப்பான்மையை அகற்றி விட்டு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை அவர்களுக்கும் விரிவாக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மின்சார இலாகா** ஊழியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்ற பட்டியலில் வாராததால், அதுபற்றி இப்போது எதுவும் செய்வதற்கில்லை.

### மின்சாரக் கட்டண உயர்வு

*70 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :
**திரு. கே. விநாயகம் :**
**திரு. க. கோமதி சங்கர திட்சிதர் :** மாண்புமிகு
மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ஆம் ஆண்டில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் எந்தெந்த வகைகளில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு எந்தெந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** (அ) ஆம்.

(இ) மன்றப் பேரவை முன் விவர அறிக்கை[1] ஒன்று **வைக்கப்பட்டுள்ளது.**

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த விவர அறிக்கையில் சாதாரண வீட்டுத் தேவைகளுக்காக வேண்டி என்ற தலைப்பில் திங்களொன்றில் முதல் 50 யூனிட்டுக்கு 30-32 காசு என்றும், இரண்டாவது 50 யூனிட்டுக்கு 25-27 காசு என்றும் மூன்றாவதாக அதற்கு மேற்பட்ட அளவிற்கு 22-24 காசு என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசதி படைத்தவர்கள்தான் அதிகமாக உபயோகப்

[1] 613–614ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது



1969 பிப்ரவரி 25]

படுத்துகிறார்கள். அப்படி நூற்றுக் கணக்கான யூனிட்டுகள், அதாவது 50 யூனிட்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு, மேலே போகப் போக குறைந்து கொண்டு வருகிறது. ஆனால் சாதாரண ஏழை மக்கள் உபயோகப்படுத்தக் கூடியதற்கு 32 காசு என்றிருக்கிறது. இரண்டாவது, மூன்றாவதாக இருக்கக் கூடியவர்களுக்கு அதிகப்படியாகவும் முதலில் இருக்கக் கூடியதற்கு, அதாவது முதல் 50 யூனிட்டுக்குள் இருப்பதற்கு கட்டணத்தைக் குறைவாக ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** நம் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு தஞ்சை ஜில்லாவில் மாயவரம், கும்பகோணம், நாகப்பட்டினம் போன்ற மூன்று இடங்களில் சேஷசாயி பிரதர்ஸ் இடமிருந்த எலக்ட்ரிசிடி கார்ப்பரேஷனை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அரசாங்கம் எடுத்துக் கொண்டும் இது வரையில் சரியானபடி பூர்ணமாக எடுத்துக் கொள்ளப்படாததால் விவசாயிகளுக்கு என்று கொடுக்கப்படுகிற கரென்டுக்கு இன்னும் ரூ. 300 மினிமம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சர்க்காருக்குக் கொடுப்பதில் ரூ. 80 என்று வசூலிக்கப்படுகிறது. ஆகவே விவசாயிகளுக்கு இப்படி அதிகக் கட்டணம் வசூல் செய்வதை ரத்து செய்ய வழி வகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மின்சார வாரிய அமைப்புகளை எடுக்கும் போது சட்டத்திலிருக்கிற விதிகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே காலதாமதம் ஏற்படுகிறது. சிலபேர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அதனாலும் காலதாமதம் ஏற்படுகிறது. இடைக்காலத்தில் ஏற்படுகிற தவறுகளை, அல்லது விவ்சாயிகளுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளை எந்தளவிற்கு நீக்கவேண்டுமோ அந்த அளவிற்கு நீக்க மின்சார வாரியம் முயற்சி எடுத்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: What was the cause for such kind of increase in tariff rate especially for domestic consumers, whereas it did not increase for the industrial consumers? Why should Government think about domestic consumers to punish them by this kind of increase in tariff?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம் மின்சார வாரியத்தால் வசூலிக்கப்படுகிற இந்த டாரிஃப் லிஸ்டமானது மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொழில்களுக்கு மிக அதிகமாக இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. இதற்குக் காரணம், நம் தமிழ்நாட்டில் ஹைட்ரோ எலெக்ட்ரிக் உற்பத்தி கொஞ்சம் குறைவாக இருக்கிறது. தர்மல் பவர் இருக்கிற காரணத்தினால் கொஞ்சம் அதிகமாக விலை கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மைசூர், கேரளா மாநிலங்களில் ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதால் அவர்கள் எளிதாக தொழில் அதிபர்களை வரவழைக்க வாய்ப்பு இருக்கிறது.

அரசாங்கம் இதையெல்லாம் பரிசீலித்து இங்கு அதிகமாக தொழில்களைக் கொண்டு வருவதற்காக டாரிஃப் லிஸ்டத்தையெல்லாம் மாற்றியமைக்கலாமா என்ற பிரச்சனை இருந்து வருகிறது. இது வீட்டுக்கு மட்டும் அதிகப்படுத்தப்படவில்லை. எல்லோருக்கும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் 'முதலில் அதிகமாக இருக்கிறது. போகப் போக குறைவாக இருக்கிறது' என்று சொன்னார்கள். அதுதான் பிஸினஸ் மெதேட். அதிகமாகப் போகும்போது குறைவாக இருந்தால் ஏராளமான வருவாய் நமக்கு வருகிறது. அந்த அடிப்படையில் தான் இது செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கரண்டுக்குத்தான் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. மீட்டருக்கும் ஏன் உயர்வு ஏற்படவேண்டுமென்று தெரியவில்லை. மீட்டருக்கு எவ்வளவு வருடங்களானாலும் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். முதலை விட அதிகமாக எவ்வளவோ மடங்கு கொடுக்கும் நிலையில் மீட்டர் ரென்டை உயர்த்தவேண்டிய அவசியமில்லை. எதற்காக அது உயர்த்தப்பட்டது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : மின்சார வாரியமும் மின்சார உற்பத்தி செய்வதிலும், அதை விநியோகம் செய்வதிலும் ஏற்படுகிற செலவைச் சரிக்கட்டுவதற்கு இப்போது நம்மால் முடியாமல் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் விவசாயிகளுக்கு ஏராளமான சலுகை காண்பிக்கப்படுகிறது. சப்ஸிடி என்ற முறையில் சில தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. வருமானத்தை ஏதாவது ஒரு வழியில் பெருக்கித்தான் ஆகவேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி** : வீடுகளில், சாதாரண மக்கள் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு 32 காசு என்றும், பெரிய பங்களாக்களில் 100 யூனிட்டுகளுக்கு மேல் உபயோகிப்பவர்களுக்கு 24 காசு என்றும் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அதுதான் பிஸினஸ் மெதேட் என்றார்கள். இந்தப் பாகுபாட்டை நீக்கினால், இந்த ஏற்றத்தாழ்வை நீக்கினால் அரசாங்கத்திற்கும் அதிகமான வருவாய் வரும். ஆகவே ஒரே மாதிரியாக இந்தக் கட்டணத்தை நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : பதிலை உன்னிப்பாகப் படித்திருப்பார்களானால் எந்தவிதமான வேறுபாட்டிற்கும் இடமில்லை என்பது தெரிய வரும். முதல் 50 யூனிட்டுக்கு அதை யார் உபயோகித்தாலும் சரி பணக்காரர்கள் ஏழைகள் என்ற வேறுபாடு இல்லை—அடுத்த 50 யூனிட்டுக்கும் அதற்கு மேலும்தான் கொஞ்சம் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## (2) அறிவிப்புகள்.

### (அ) பக்ரீத் பண்டிகைக்கு விடுமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஓர் அறிவிப்பு 27—2—1969 வியாழக்கிழமை, பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு விடுமுறை என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதால் சட்டப் பேரவையில் 27—2—1969 வியாழக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப் படவேண்டிய அலுவல்கள் 28—2—1969 வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

### (ஆ) தஞ்சை மாவட்டத்தில் சட்டம், அமைதி காக்க தவறியது குறித்து அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, திரு. ஜெயராஜ் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அதாவது—

This House censures and disapproves the policy of the Ministry in particular respect, namely, its failure to maintain Law and Order in Thanjavur District resulting in the ghastly incident of arson on 25th December 1968 in the village of Kilvenmani and the death of 42 innocent women, children and old men.

நான் ஏற்கனவே, இப்பொழுது முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் தலைமையில் அமைந்திருக்கின்ற அமைச்சரவை, காலஞ்சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்திருந்த அமைச்சரவையின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகிறது என்றும், ஆனால் இந்த நிகழ்ச்சி முந்திய அமைச்சரவை பதவியிலிருந்தபொழுது நிகழ்ந்ததாகக் கூறப்படும் செயலைக் குறிப்பிடுவதாக இருப்பதால், அதற்கு இந்த அமைச்சரவை பொறுப்பு ஏற்பது முறையாகாது என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறேன். இருந்தாலும் அலுவல் ஆய்வுக்குழுவில் மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும், இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒத்த கருத்தைக் கூறியிருப்பதால், இதற்கு என் இசைவை வழங்க விரும்புகிறேன். இதற்கு இந்த அவையிலே அனுமதி கொடுப்பதற்கு ஆதரவாய் உள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்)

இத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு வேண்டிய அளவிற்கு ஆதரவு இருக்கும் காரணத்தால் இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கின்றேன்.

இத்தீர்மானம் இம்மாதம் 28-ஆம் தேதி காலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

### (3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

**புதுக்கோட்டை காவேரி மில் மூடப்பட்டது குறித்தும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இடைக் கால நிவாரணம் அளிப்பதுகுறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. விஜய ரகுநாத தொண்டமான் அவர்களும், திரு. சித்தன் அவர்களும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

The closure of Keveri Mills Limited at Pudukottai which has affected hundreds of workers and to take steps to open the Mills and in the meanwhile to provide interim relief for the affected workers and their families

என்ற கருத்துக்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிக்கை கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே, கதவடைப்பு முதலிய நிகழ்ச்சிகளுக்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்கத் தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கியிருப்பதால் இதற்கும் அனுமதியை மறுக்கிறேன்.

அடுத்து திரு. கோதண்டராமன், திரு. தனுஷ்கோடி, திரு. பாரதி மோகன் ஆகிய மூவரும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். இதை நாளை எடுத்துக்கொள்ளுகின்றேன்.

### (4) கவன ஈர்ப்பு

### (அ) கைத்தறித் துணித்தேக்கமும் நெசவாளர் அல்லலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. என்.எஸ்.வி. சித்தன், திரு. ஈ. ஆர். கிருஷ்ணன், திரு. கரு. சீமைச்சாமி ஆகியோர் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் உற்பத்தியாகியிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேக்கமாக இருப்பதால் கைத்தறி-நெசவுத் தொழிலில் மந்தமேற்பட்டு அதன் காரணமாக கைத்தறியை நம்பி வாழ்கின்ற பல லட்சக்கணக்கான நெசவாளர்கள் குடும்பங்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலையைப்பற்றி அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் உற்பத்தியாகியிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேக்கமாக இருப்பதால் கைத்தறி



நெசவுத் தொழிலில் மந்தமேற்பட்டு அதன் காரணமாக கைத்தறியை நம்பி வாழ்கின்ற பல லட்சக்கணக்கான நெசவாளர்கள் குடும்பங்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு துறையிலும், தனியார் துறையிலும் உற்பத்தியாகியிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேக்கமாக இருப்பதால் கைத்தறி நெசவுத் தொழிலில் மந்தமேற்பட்டு அதன் காரணமாக கைத்தறியை நம்பி வாழ்கின்ற பல லட்சக்கணக்கான நெசவாளர்கள் குடும்பங்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர்களே, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாது தேக்கமும் ஏற்பட்டுள்ளதையும் தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடம் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடைப்பதையும், அதன் காரணமாக லட்சக்கணக்கான நெசவாளர் குடும்பங்கள் அல்லலுறுவதையும் பற்றி மேற்சொன்ன உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

31-12-1968-ல் உள்ள நிலவரப்படி இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறித் துணிகளின் இருப்பு நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(மதிப்பு)

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடம். | 129·50 |
| தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திடம். | 178·14 |
| மொத்தம் ... | 307·64 |

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடம் 1965, 1966, 1967, 1968-ம் ஆண்டுகளில் மார்ச் திங்கள் இறுதியில் இருந்த இருப்பு நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| 1965 மார்ச் .. .. | 226·06 |
| 1966 மார்ச் .. .. | 161·04 |
| 1967 மார்ச் .. .. | 175·83 |
| 1968 மார்ச் .. .. | 185·14 |

இதிலிருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடம் உள்ள கைத்தறித் துணிகளின் இருப்பு இப்போது அதிக அளவில் பெருகியிருப்பதாகக் கூறமுடியாதென்று தெரியவரும்.

கூட்டுறவுத் துறையின் கீழ் வராத தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளைப் பொறுத்த வரையில் இத்தகைய உற்பத்தி குறித்தும் விற்பனை குறித்தும் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் நிறுவனம் எதுவும் இல்லை. தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடம் கைத்தறித் துணிகள் பெருமளவில் தேங்கியுள்ளதாக அண்மைக் காலத்தில் கைத்தறித்துறை இயக்குநருக்கு முறையீடுகள் எதுவும் வரவில்லை.

நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகள் மாநிலச் சங்கம் வாங்க வகை செய்யும் பொருட்டு தொழில், தொழிலாளர், வீட்டுவசதித் துறையில் 21—9—1968-ம் நாளன்று 3,300ம் எண் அரசாங்க ஆணையில் அந்த மாநிலச் சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 50 லட்சம் டன் கடன் வழங்கியுள்ளது. மேலும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மாநிலச் சங்கம் கைத்தறித் துணிகளை முனைப்பாக வாங்க மாநிலக்கைத்தறிச் சங்கத்திற்கு ரூ. 28 லட்சம் தற்காலிக முன் பணம் வழங்க அண்மையில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாநிலச் சங்கத்திற்கு அளிக்கப்படும் நிதி உதவியுடன் துணிகள் விற்பனைக்கு ஊக்கமளிக்கும் வகையில் 80 நாட்களுக்குச் சிறப்புக் கூடுதல் தள்ளுபடி வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இம்மாநிலத்தில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக ரூ. 60 லட்சம் இயல்பாக ஒதுக்கப்பட்டு வந்திருக்கையில் 1968-69 நடப்பு ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 81 லட்சம் அளவிற்கு தள்ளுபடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் உயர்அளவு தங்கள் ஒருமாத அடிப்படைச் சம்பளம் வரையில் கடனாக கைத்தறித் துணிகளை வாங்கிக் கொள்வதற்கும் அவர்களிடமிருந்து மாதத் தவணைகளில் கடன் தொகை வசூலிக்கவும் வகை செய்யும் திட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

இம்மாநிலத்தில் கைத்தறித் தொழிலை மேம்படுத்த அரசாங்கம் பல திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. 1969-70க்கான ஆண்டுத் திட்டத்தில் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 133 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவரவர்களே, இந்தக் கைத்தறித் துணி கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தேக்கமாக இருப்பதற்கு முக்கிய காரணம் விசைத்தறி வெள்ளைத் துணிகளோடு கைத்தறித் துணிகள் தரத்தில் போட்டிபோட முடியாத நிலையிருப்பதால் தான். ஆகவே, கூட்டுறவு நெசவாளர்களுக்கு விசைக்கருவிகளைக் கொடுப்பதற்கும் கைத்தறி விற்பனையில் 15 பைசாவிலிருந்து 20 பைசா வரையில் ரிபேட் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விசைத்தறிகளைப் புகுத்தாத காரணத்தால் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. மற்ற மாநிலங்களில் விசைத்தறிகளில் உற்பத்தியாகும் துணி





நம்முடைய தமிழ்நாட்டில் ஆக்கிரமித்துவிட்ட காரணத்தினால் கைத்தறிக்கு இத்தகைய சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி பேச இங்கு மாநாடு கூட்டப்பட்டது. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களை, இந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்களை அழைத்து பேசப்பட்டது. அதுபற்றி விரைவில் முடிவெடுக்கவேண்டும். ரிபேட் பற்றி மத்திய சர்க்காரோடு கலந்து முடிவெடுக்கவேண்டும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் கிடைக்க கரை போட்ட வேஷ்டியும், கலர் போட்ட சேலையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்தப் பேரவையில் ஏற்கெனவே இருந்த அரசு தீர்மானித்து இருக்கிறது. அதை மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி ஆலைகளில் அகலக்கரை போட்ட வேஷ்டிகளை நெய்யாமல் இருப்பதற்காக மத்திய சர்க்காரை வலியுறுத்துமா? கடந்த 15 ஆண்டு காலத்திற்கு முன்னால் அப்போது அமைச்சராகயிருந்த மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் பர்மாவிற்குச் சென்றிருந்த பொழுது பர்மா மக்களிடம் நீங்கள் ஏன் கைத்தறித் துணிகளை வாங்கவில்லை என்று கேட்டதற்கு பர்மிய மக்கள், "நாங்கள் கைத்தறித் துணிகளை விரும்புகிறோம். ஆனால் அந்நிய செலாவணியின் காரணமாக அவ்வாறு முடியவில்லை" என்று சொன்னதாகச் செய்திகள் பத்திரிகைகளில் வந்தது. இப்பொழுதிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம்முடைய தமிழக அரசு கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை மத்திய சர்க்காரின் மூலமாக பர்மாவிற்கு ஏற்றுமதி செய்து நமக்குத் தேவையான பர்மா அரிசியைப் பெறுவதற்கு மத்தியசர்க்காரை வலியுறுத்த இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதியைப் பொறுத்தவரையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபொழுதும் ஆளுங்கட்சியான பின்பும் அந்தக் கொள்கையைத்தான் வலியுறுத்தி வருகிறோம். அண்மையிலே மகாராஷ்டிரத்திலே அது போல உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது. சில ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்கிவிட வேண்டுமென்று இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. அதுபற்றிய உண்மையை அறிந்து, மத்திய சர்க்காரிடம் இதுபற்றி முயற்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

வெளிநாடுகளிலே நம்முடைய கைத்தறித் துணியை விற்பனை செய்வதற்கு மத்திய சர்க்கார் தடையாக இருக்கிறது என்று கூறுவதை ஒத்துக்கொள்ளவில்லை. எந்த அரசும் வெளிநாட்டு ஏற்றுமதியை ஊக்குவிக்கத்தான் விரும்பும். ஆனால் வெளிநாடுகளிலே தங்கள் நாட்டுத் துணிக்கு மதிப்பு இருக்கவேண்டுமென்ற காரணத்தினால் கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்க சந்தையிலேகூட செல்வாக்கு குறைந்திருக்கிறது. இலங்கையிலே கொஞ்சம் குறைந்திருக்கிறது. தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு

இந்த கைத்தறி துணியை ஏற்றுமதி செய்வதற்கு, முன்னாலே நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே இந்தத் துறையினுடைய செயலாளரும் வேறு சிலர், இந்தத் தொழிலைச் சார்ந்தவர்களும் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் கண்டறிந்த உண்மைகளையெல்லாம் ஏற்கனவே மத்திய அரசிடத்திலே கூறி இருக்கிறோம். மத்திய அரசு இந்த வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறது. அந்தக் குழு இந்த அறிக்கைகளை எல்லாம் பரிசீலித்து நல்ல முடிவு எடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

*(ஆ) சென்னை மாநகரில் காலரா, மஞ்சள் காமாலை நோய்கள் பரவுதலும், தடுப்பு நடவடிக்கைகளும்.*

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. the Minister for Public Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the incidence of Cholera and Jaundice in the City of Madras and the necessity to find out the exact source of these infections and take all the necessary preventive measures.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir.

*Cholera.*

The incidence of cholera broke out in an epidemic form during October 1968 and reached its peak by the end of November 1968, when it began declining. The year 1968–69 is a cyclic year for cholera epidemic and this was aggravated by the severe influenza epidemic that swept the city of Madras during July to September 1968, Cholera epidemics following influenza epidemic are always severe. Further the failure of the north-eastern monsoon this year aggravated the spread of the epidemic. Though the incidence of epidemic was rather severe, the fatality rate of cases was only 3 per cent the lowest ever recorded and this is due to the prompt and excellent modern medical treatment given to these cases at the Infectious Diseases hospital. A total of 4,559 cases of cholera with 186 deaths was reported in the city of Madras during January 1968 to January 1969. Prompt and effective preventive and control measures like anti-cholera inoculations, efficient conservancy, disinfection of infected houses and intensive deflying measures in the vulnerable areas were undertaken. Arrangements were also made to clear the water-supply mains and to close the pit taps thereby preventing suction of contaminated water into the mains during the non-supply hours. Extra chlorination was also arranged in regional mains by chlorine injectors. Licensing conditions were strictly enforced regarding dangerous and offensive trades. Simultaneously extra staff were posted on epidemic duty to work in the infected localities round the clock. About 4,27,007 persons have, been inoculated during 1968. A meeting was convened in the chambers of the previous Minister for Public Health at 11-30 a.m. on 28th November 1968. The Director of Health Services and Family Planning, the Director of Medical





Education, the Additional Director of Health Services and Family Planning and Assistant Director (Epidemics), attended the meeting besides the Corporation Commissioner and Health Officer. The cholera problem was discussed and the situation was reviewed in detail in that meeting. Every effort has been taken to arrest the further spread of the infection and all preventive measures are still continued in the City of Madras.

*Jaundice (infective hepatitis).*

Jaundice has become almost epidemic in the Madras City. A study of specific epidemiological investigation carried over about 150 cases of infective hepatitis by the epidemiological unit did not reveal any specific factor for the disease. It occurs throughout the year and especially particular areas of the city have shown greater impetus due to the local factors in those areas like close contact with infected persons in the houses through contaminated foodstuffs and drinks through flies, etc. There is a possibility of regional contamination of water-supply where there are pit taps in certain parts of the city especially in tail ends. It is one of the draw backs in cities with intermittent and defective water supply as regards quantity. Owing to the low pressure in the water mains in the tail ends of the city the taps are lowered below the ground level in pits. The possible factors for the geographical distribution of cases in the city are defective and contaminated water-supply and general insanitation, etc. A total of 2,101 cases of Jaundice with 92 deaths were reported in the city of Madras during January 1968 to January 1969. Every possible step is taken to disinfect the infected houses as soon as the report is received. In heavily infected areas the regional mains are flushed and chlorinated locally through chlorine injectors.

DR. H. V. HANDE : With regard to the statement made by the Hon. Minister for Public Health, as far as cholera is concerned, it is true that its incidence has been considerably controlled. But the statistics given about jaundice are very frightening. Is the Minister aware of the fact that only a small number of jaundice cases is reported to the Government hospitals, because a large number of jaundice patients resort to domestic remedies or quackery? In view of the fact that the statistics are frightening, why is it that the Department has not been able to find out the exact source of infections? It is nearly one year since the disease has been endemic. It does not speak well of the department. Will the Hon. Minister take the assistance of the experts outside, find out the source of infection and take steps to wipe out this disease?

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : I have aready said that a study of specific epidemiological investigation carried over about 150 cases of infective hepatitis by the epidemiological unit did not reveal any specific factor for the disease. So the investigation may still go on.

## 5. ஆளுநரின் பேருரைமீதான விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஆளுநர் உரை மீதான விவாதம். இதில் நமக்கு இன்னும் 3 மணி நேரம் தான் இருக்கிறது. ஆனால், உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற கணக்குப் படி இன்னும் 4 மணி நேரம் வேண்டியிருக்கிறது. ஆகவே, அவையை மேலும் ஒரு மணி நேரம் நீட்டித்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்கும் இருந்தாலும் உறுப்பினர்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. கே. பி. எஸ். மணி அவர்களை 10 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். 28-2-1969 அன்று பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு சட்டப் பேரவைக்கும், மற்ற அலுவலகங்களுக்கும் விடுமுறை விடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பிறை ஒரு நாள் முன்னதாக, அதாவது 27—2—1969 அன்று. . . .

**ஓர் உறுப்பினர் :** பேரவைத் தலைவர் அவர்கள் அதைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டார்.

***திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டிலும் மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் விவசாயப் பிரச்சனை, வட்டாரங்களில் இருக்கிற குறைகள், தேச முன்னேற்றங்கள் பற்றித்தான் பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். உண்மையிலே, இந்த தேசத்திலே எது மிக அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டுமோ, இந்த தேசத்தில் இருக்கிற சகல கட்சிகளாலும், சகல அரசியல்வாதிகளாலும் எது மிகப் பயங்கரமான கொடிய வியாதி என்று கருதப்படுகிறதோ, ஒப்புக்கொள்ளப்படுகிறதோ, பேசப்படுகிறதோ அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட இதுவரையிலே எந்த பேச்சிலேயும் வரவில்லை. இந்த தேசத்திலே மனிதனை மனிதனை மதிக்காது, பல கொடுமைகளுக்குக் காரணமாக இருந்து வருகின்ற தீண்டாமையை ஒழிக்க வேண்டும், ஒழிப்போம் என்று சொல்லுகின்ற அளவுக்குத்தான் இன்றைய அரசியல் இருக்கிறதே தவிர, உண்மையிலே அதை ஒழிப்பதற்கு இத்தகைய திட்டத்தை இந்த ஆண்டிலே நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம், அப்படி ஏற்படுத்தி இருப்பதற்கான இன்ன வழிவகைகளை செய்திருக்கிறோம் என்று எதிலும் காணப்படவில்லை. இந்த தேசத்திலே எவ்வளவு முன்னேற்றம் இருந்தாலும், எவ்வளவு வளம் கொழித்தாலும், எத்தனை தான் கல்வித் துறையிலே முன்னேற்றம் ஏற்பட்டாலும், தீண்டாமை இருக்கும்வரை நிச்சயமாக இந்த தேசம் வளர முடியாது, வளராது இதை நன்றாக உணர்ந்தவர்கள் எந்த காரணத்தினாலேயோ அதைப்பற்றி பேசாமலேயே விட்டு விடுகிறார்கள். ஏற்கனவே 20 ஆண்டுகள் ஆட்சி



யிருந்தும், இன்றையதினம் வேறு ஆட்சி இருந்தும் அப்பொழுதும் அந்த தீண்டாமை ஒழிப்பு என்பது சாதாரண கண் துடைப்பு வேலையாகத்தான் இருந்தது, அதே நிலை தான் இன்றும் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன். கீழ் வெண்மணி விஷயத்தைப்பற்றி கவர்னர் பெருமானுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ் வெண்மணி விஷயம் முற்றிலும் நூற்றுக்கு நூறு ஜாதிப் போராட்டம். அங்கு இருக்கிற மிராசுதாரர்கள், சகல கட்சிகளிலும் இருக்கிற மிராசுதாரர்கள் ஜாதி வெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள். ஜாதி அகம்பாவம் பிடித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள், அங்கு வேலை செய்கின்ற வேலையாட்களை, பணியாட்களை, மற்ற ஆட்களை என்ன நினைக்கிறார்கள்? ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் என்று நினைக்கிறார்கள். இன்னும் பச்சையாக சொல்ல வேண்டுமானால் ஒரு பள்ளன், பறையன் தன்னுடைய வீடு ஏறி கூலி கேட்கிறானே, அல்லது களத்து மேடு ஏறி கூலி கேட்கிறானே, அது எவ்வளவு பெரிய கேவலம் என்று நினைக்கிறார்களே தவிர, அவன் அதிகபட்சக் கூலி கேட்பதாக நினைக்கவில்லை.

இதை மத்திய சர்க்கார் விசாரணைக் கமிட்டியில் நான் சொன்னேன். அதோடுகூட அங்கு இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி அமைத்திருக்கிற முறை இருக்கிறதே, 100-க்கு 100 அந்த வெண்மணி கிராமத்தில் அத்தனை பேர்களும் ஆதித்திராவிட மக்கள் பழங்குடி மக்கள், ஜாதி இந்துக்கள் அந்த கம்யூனிஸ்டு கட்சியில் இல்லை. இந்த கிராமத்தில் இப்படி ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்படுவதற்கு இது ஒரு காரணமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் இருக்கிற சிக்கல் வீராசாமி என்பவர் கொலை செய்யப்பட்டார். அதுவும் ஜாதியின் காரணமாக கொலை செய்யப்பட்டார். சமுதாயத்தில் இருக்கிற ஒருவிழிப்பு உணர்ச்சி, சமூக மக்களிடத்திலே ஒரு கொந்தளிப்பு, சமூக மக்களிடத்திலே ஒரு வெறி உணர்வு ஏற்பட்டது. கூலி காரணம் என்று காட்டப்பட்டு உண்மை மறைக்கப்படுகிறது. உண்மையில் ஜாதி வெறி தான் இதற்கு காரணம். இதற்கு எத்தனையோ நிரூபணங்களை நான் எடுத்துக் காட்ட முடியும்.

பி.ப. 10-20

தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், இதுமாதிரி பல நிகழ்ச்சிகள். எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. சர்க்கார் ரோடிலே பிணத்தை தூக்கிக்கொண்டு போகக்கூடாது என்று மறுக்கிறார்கள். அங்கு இருக்கிற போலீஸ் அதிகாரிகள் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. 'நாங்கள் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?' என்று தயங்குகிறார்கள். ஏன் அப்படி தடுக்கிறார்கள் என்று கேட்பதற்கு கூட போலீஸ் அதிகாரிகளுக்கு தைரியம் இல்லை. உண்மையிலே நான் வருத்தப்பட்டுச் சொல்கிறேன். பொது ஊழியர்களாக இருப்பவர்கள் கட்சியின் பெயராலே தலையீடு செய்வது அதிகமாகிவிட்டதன் காரணமாகத்தான் இப்பேற்பட்ட தகராறுகள் நடக்கின்றன.

கொரடாச்சேரியில், ஒரத்தநாடு தெருவில் அம்பேத்கார் அவர்களின் பெயரால் ஒரு பெரிய சமுதாயவெளி இருக்கிறது. நான் அங்கே போயிருந்தேன். அது ஒரு பெரிய திடல். அம்பேத்கார் பெயரால் ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் பல

கட்டடங்களும் இருக்கின்றன. அங்கே கலெக்டர் அவர்கள் எவிக்ஷன் பண்ணவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஏன்? அந்தப் பெரிய பொது சமுதாய இடத்தில் ஆதித்திராவிட மகன், தாழ்த்தப்பட்ட மகன் பெருந்தலைவரின் பெயரால் ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது தவறு என்று நினைக்கிறார்கள். சர்க்கார் கலெக்டரேட்டிலிருந்து எவிக்ஷனுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு கொடுமை? இந்த கொடுமை எத்தனை நாட்களுக்கு நீடித்து கொண்டிருக்கும்? இது நீடித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்போன்று ரிசர்வ் சீட்டில் வந்த எம்.எல்.ஏக்கள் * சாதாரண ஊழியர்கள், கைகாட்டிகள், எல்லாக் கட்சியிலும் இருப்பதால் இப்பேர்பட்ட பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. எங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? மற்றவர்கள் பண செல்வாக்கைக் கொண்டோ அல்லது மற்ற செல்வாக்கை கொண்டோ வந்தவர்கள். நாங்கள் எங்களுடைய ஜீவாதார உரிமையைக் காப்பாற்ற வந்தவர்கள். இன்னும் அடிமைகளாக இருக்கிற ஒரு நிலைதான் நீடித்துக்கொண்டிருக்கிறது. சுயராஜ்யம் கிடைத்து 21 ஆண்டு காலமாகியும் நாங்கள் வாழ்வதற்கு வழி கிடைக்கவில்லை. பிணத்தைக் கூட சர்க்கார் ரோடில் தூக்கிக்கொண்டு போக முடியாத நிலைமையில் இருக்கிறோம். இப்படி பெருத்த கொடுமை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

வட நாட்டில் பகுத்தறிவு இல்லாத பாசறையில் வளர்த்தவர்கள் ஆட்சியில் இருப்பதனால் அங்கு பலர் செத்திருக்கலாம். ஆனால், இங்கே பகுத்தறிவு பாசறையிலேயே வளர்ந்து வந்தவர்களின் ஆட்சி நடக்கும் பொழுது, இன்னும் இந்தக் கொடுமையை எத்தனை நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? தயவு செய்து இந்த அரசாங்கத்திற்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் கூடத் தேவையில்லை. படிப்பு எங்களுக்குப் படித்துக்கொள்ள முடியும். நாங்கள் உழைத்து பணம் சம்பாதித்துக்கொள்ள முடியும். ஆனால், இந்த பயங்கரமான தீண்டாமையிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டும். அப்படி நாங்கள் இன்னும் தீண்டாமையிலிருந்து விடுபடாமல் இருப்பதற்கு காரணம் என்ன? எங்களிடத்தில் கட்டுப்பாடு இல்லை. நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த உணர்வு, ஆத்திரப்படுகிற உணர்ச்சி எங்களிடத்தில் இல்லை, அந்த எண்ணம் இல்லை. காரணம் எங்களுடைய மூதாதைகள் அந்தக் குறுகிய காலத்தில் அடிமைகளாக இருந்தவர்கள். எங்களை உணரவைப்பதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? உணரவைப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது?

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் ஏதோ ஒருமாதிரி கண் துடைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கண்துடைப்புக் கூட இப்பொழுது குறைந்து போய்விட்டது. இதற்குக் காரணம் என்ன? ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலுகாவிலும் இருக்கிற வட்டச் செயலாளர், வட்டச்

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



செயலாளர் என்று சொல்லப்படுகிறவர்கள் ஜாதிவெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள். நான் அதை நிருபிக்க முடியும். பல இடங்களில் இம்மாதிரி நிலைமை இருக்கிறது. நான் வருத்தப்பட்டு சொல்கிறேன். நான் அம்பேத்கார் பாசறையிலே வாழ்ந்தவன் என்ற முறையிலே உங்களுக்குச் சொல்கிறேன். கட்சி கொள்கையே என்னவென்று தெரியாதவர்களாக இருக்கிறார்கள். ஏதோ காங்கிரஸ்காரர்கள் செய்த வேலையையே செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படித்தான் செய்து காங்கிரஸ் கட்சி தொலைந்து போய்விட்டது. அந்த நிலைமை உங்களுக்கு வரவேண்டாம். ஆகவே, தைரியமாகச் சொல்கிறேன். உங்களுடைய ஆட்சி காலத்திலேயே நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால், இந்த மாநிலத்தில் தீண்டாமை என்பது ஒழிந்துவிட்டது என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். இந்த ஆட்சியில் இன்னும் ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்கிறேன்.

நாகர்கோவில் தேர்தலிலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரிசர்வ் சீட் கூட கிடையாது. அந்தப் பார்லிமெண்டு ஏரியாவில் ஒரு ரிசர்வ் சீட் கூட இல்லாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஏதோ காங்கிரஸ்காரர்கள் சாதித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஏதோ கொஞ்சம் சாதித்தார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது மாதிரிதான் அது இருந்தது. யானையின் உருவம் என்ன? இந்த மாநிலத்தில் மூன்றில் ஒரு பாகம் நாங்கள் இருக்கிறோம். 1½ கோடி மக்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆளுக்கு இரண்டு அணா, மூன்று அணாதான் வரும். போன பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட கடன் தொகை இன்னும் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்படவில்லை. நாங்கள் ஏதாவது கேட்டால், 'மந்திரி, டைரக்டர், ப்யூன் வரையில் உங்கள் ஆள் தானே' என்று கேட்கிறார்கள். இந்த டிபார்ட்மெண்டே ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெல்பேர் டிபார்ட்மெண்டே ஒதுக்கப்பட்டிருக்கிறது; அங்கு ஒன்றும் கிடையாது. அங்கே ஒரு கமாண்டிங் அட்மினிஸ்டிரேஷன் கிடையாது. நான் தைரியமாகச் சொல்கிறேன். நிர்வாகத் திறமை உள்ளவர்கள் இந்த டிபார்ட்மெண்டில் இல்லை. போன ஆண்டு பட்ஜெட்டில் இந்த ஆட்சியில் மதிப்பிற்குரிய காலஞ்சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் கருணையோடு எங்களுக்குக் கடன் தொகை ஒதுக்கித் தந்தார்கள். அந்தக் கடன் தொகை இன்னும் முழுவதும் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறது. தேவையான நமூனாக்கள் கிடையாது, பிரிண்டு செய்யப்படவில்லை, சைகிளோஸ்டைல்தான் செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் எங்களை எங்கே வைத்திருக்கிறீர்கள்? இந்த நிலைமை நீடித்தால் என்ன ஆகும்? ஆட்சியில் இருப்பவர்கள் சொல்வது ஒன்று, அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்வது வேறு. கேட்டால் அமைச்சர்களைக் கேட்கும்பொழுது மழுப்பிவிடுகிறார்கள், இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன் என்று சொல்லி விடுகிறார்கள். பச்சையாகச் சொன்னால் காக்காய் பிடிக்கிறார்கள். ஒன்றும் நடக்கவில்லை. வருஷம் முடிந்து

விட்டது. இன்னும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லை. வெரிபிகேஷன்தான் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. எங்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்? எதற்காக எங்களுக்கு என்று ஒரு தனி நிர்வாகம்? தேவையே இல்லை. இந்த டிபார்ட்மெண்டை ரெவின்யூ டிபார்ட்மெண்டோடு சேர்த்துவிடலாம். ஆயிரக்கணக்கான ரூபாய் நிர்வாகச் செலவிலேயே செலவழிந்து போய் விடுகிறது. அங்கு ஒன்றும் இல்லை. யார் கேட்பது என்று எல்லோருக்கும் பயம். யார் பூனைக்கு மணி கட்டுவது என்று பயம். காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் கேட்டால், அடுத்த தடவை தேர்தலில் ஸீட் கிடைக்காது, ஸீட் கொடுக்கமாட்டார்கள் அப்படிப்பட்ட நிலைமை இங்கும் வந்துவிடுமோ என்ற பயம் வராது, தைரியமாக கேட்கலாம். கேட்பதற்கு துணிவு வேண்டும். கவர்னர் பெருமானுடைய உரையில் நாட்டினுடைய ஜீவாதாரமான உரிமை மக்கள், எங்களைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லப்படவில்லை. நாங்கள் ஒரு காலத்தில் சரித்திரத்தில் தேசத்தை ஆண்டுவந்த ஆதி மக்கள். எங்களுக்கு உள்ள உரிமை கொடுக்கப்படவில்லை. எங்களுக்குள்ள உரிமைகளைக் கொடுப்பதற்கான வார்த்தை ஒன்றும் இந்த உரையில் இல்லை. அடுத்து, உரையிலாவது எங்களைப்பற்றிய குறிப்பு இருக்கும் என்ற நம்பிக்கையோடு, என்னுடைய பேச்சை முடித்துக்கொண்டு, ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று, அமர்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல முன்வருகிறேன்.

கவர்னர் அவர்கள், வேளாண்மை உற்பத்தி பற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு எடுத்துச் சொல்லும் போது, பருவ மழை தவறியதன் காரணமாக, தமிழ நாட்டில் மிகப் பெரிய அளவிற்கு உணவு உற்பத்தி குறையக்கூடிய நிலை பற்றிய ஐயப்பாட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். இதன் காரணமாக, இன்றையதினம், அநேகமாக தஞ்சை மாவட்டம் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்கள் அனைத்திலும் பெரிய வறட்சி நிலை ஏற்பட்டு தமிழக அரசு நிவாரண வேலை செய்ய வேண்டிய திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும்கூட, சில பகுதிகள் மானம் பார்த்த பிரதேசங்களாக இருக்கின்றன. உதாரணமாக, திருத்துறைப் பூண்டி தாலுகாவில் வேதாரண்யம் பகுதியில் பயிர்கள் காய்ந்து விட்டு, அங்குள்ள மக்களுக்கு நிவாரண வேலை செய்யவேண்டியது அவசியமாகி இருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக 50,000 ஏக்கர் இரண்டாம் போகம் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் காயும் தருவாயில் இருக்கின்றன. இந்த நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள், மிக்க தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வரி வஜா, கடன் ஒத்தி வைப்பு போன்ற காரியங்களைச் செய்து அவர்களுக்கு உதவியளிக்க வேண்டும். அவ்வாறு நிவாரணம் வேலை செய்யும்போது, எங்களுடைய ஆலோசனைகளையும் கூற விரும்புகிறேன்





எந்தெந்த மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறதோ, விவசாயம் பாதிக்கப்பட்டு மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்களோ, அங்கெல்லாம், குளங்கள், ஏரிகள் போன்றவை மராமத்து வேலை செய்து நல்ல நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டும். கிணறுகள் தோண்டி அந்தக் கிராமங்களில் நிவாரண வேலை செய்ய வேண்டும். நியாய விலைக்கடைகள் திறந்து நிவாரணம் கொடுக்கும் அளவிற்கு வேலைகள் செய்யப்பட வேண்டும். நியாய விலையில் தானியங்கள் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் உடனடியாகச் செய்யவில்லை என்றால், மிகப் பெரிய கஷ்டங்களுக்கு அந்த மக்கள் ஆளாக நேரிடும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பயிர்ப் பாதுகாப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் காரியங்களில், பயிர் கொல்லி பூச்சி மூலம் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தடுக்கவென்று அரசாங்கம் இந்த ஆண்டு பெரு முயற்சி எடுத்து, விமான மூலமாக பூச்சி மருந்து தெளித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவ்வாறு பூச்சி மருந்து தெளிக்கும்போது அதற்காகும் செலவை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்கிறார்கள். அம்மாதிரி வசூல் செய்யாமல், இனாமாகவே செய்தால் நலமாக இருக்கும். இப்பொழுது மனிதர்களுக்கு, மலேரியா போன்ற வியாதிகளைத் தடுக்க, மலேரியா தடுப்பு முறைகளை அரசாங்கமே ஏற்றுச் செய்வது போன்று, இந்தச் சலுகைகளையும் விவசாயிகளுக்கு, அவர்களுடைய பயிர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் முறையில் அவர்களிடமிருந்து செலவை வசூல் செய்யாமலிருக்க வேண்டும். இப்பொழுது புதிய புதிய வியாதிகளெல்லாம் வருகின்றன. அதிகாரிகளுக்கே அவை என்ன என்று புரிவதில்லை.

மற்றொன்று, எந்த எந்த காலத்தில், என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்யலாம், எவ்வாறெல்லாம் புதிய ரகம் விவசாயம் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் மிகத் தெளிவாக விவசாயிகளுக்குச் சொல்ல வேண்டும். அதற்காக இன்றையதினம், வானொலியில் நேரம் ஒதுக்கி, எந்த எந்த இடத்தில் புதிய ரக விதைகளை, பாதகம் ஏற்படாமல் விவசாயம் செய்யலாம் என்பதையெல்லாம் விவசாயிகளுக்குச் சொல்ல வேண்டும். அம்மாதிரி தெளிவான நிலை இல்லாததால்தான் சி.ஓ. 29 என்கிற நெல்லை விவசாயம் செய்யச் சொல்லி, தஞ்சை மாவட்டத்தில் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. சி.ஓ. 29 என்கிற விதையை எவ்வாறு பாதகம் இல்லாமல் விவசாயம் செய்ய வேண்டும் என்பதை தக்க முறையில் எடுத்துச் சொல்ல . . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சி.ஓ. 29 பயிரிடுவதால் கடைசி மாதங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். ஆகவே, ஏ.எஸ்.டி. 5, சி.ஓ. 32 என்ற இரண்டு ரக விதைகளை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும் என்று பிரசாரம் செய்ததோடு அல்லாமல், அந்த விதைகளையும் கொடுத்து விவசாயம் செய்ய ஊக்கமளிக்கப்பட்டிருக்கிறது. கடைசி மாதங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், இந்த விதைகளை உபயோகித்தால் பாதகம் ஏற்படாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நான் சொல்வது என்னவென்றால், எந்தககாலத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக விவசாயிகளுக்குச் சொல்ல வேண்டும் என்பதுதான். அதைத்தான் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஐ.ஆர். 8 போன்ற தானியம் மிக நன்றாக விளைகிறது. ஆனால், அம்மாதிரியான ஆலோசனைகள் தஞ்சையில் சொல்லப்படவில்லை. இந்த விஷயத்தில் . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வடிகால் வசதி உள்ள பகுதிகளில் ஐ.ஆர். 8 சாகுபடி செய்யலாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் பாக்டீரியா வியாதி வந்து, பயிரிட்ட நிலங்களில் மட்டுமல்லாமல், சுற்றியுள்ள நிலங்களிலும் அந்த வியாதி பரவி, காற்றிலே பரவி, தண்ணீரின் மூலம் பரவி, பயிர்கள் கெடும் சூழ்நிலை ஏற்பட்டு, ஆராய்ச்சியாளர்கள் ஒன்று கூடி, வடிகால் வசதி உள்ள பகுதிகளில் மட்டுமே இந்த ரகம் சாகுபடி செய்யப்படவேண்டும் என்று, இப்பொழுது, வடாற்காடு; செங்கற்பட்டு, சேலத்தில் ஒரு பகுதி, கோவையில் ஒரு பகுதி இங்கெல்லாம் ஐ.ஆர். 8 என்கிற நெல் சாகுபடிக்கு வந்திருக்கிறது. தஞ்சையில் நடைமுறைக்கு வராததற்குக் காரணம், அங்கே வடிகால் வசதி இல்லாததால், பாதகம் ஏற்பட்டது. வடிகால் வசதியுள்ள பகுதிகளில் ஐ.ஆர். 8 சாகுபடி செய்து நல்ல ஆதாயம் அடைந்திருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கும் தெரியும், சர்க்காரும் உணர்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நான் சொல்வது சி.எம்.பி ஏரியாவில் இந்த வருஷம் ஐ. ஆர். 8 விவசாயம் செய்ய அக்கறை காட்ட வேண்டும்.

அடுத்து, கொள்முதல் பற்றிச் சொல்லும்போது, இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் வறட்சியை மனத்தில் கொண்டு, கொள்முதலிலே தீவிரமாக இருக்க வேண்டும். அரசின் தேவை முழுவதையும் கொள்முதல் மூலம் செய்ய வேண்டும். எந்த விதமான தயவு தாட்சண்யமும் காட்டக்கூடாது. அதிகாரிகளை மட்டும் நம்பி இருந்தால், அவர்கள் இஷ்டத்திற்கு கொள்முதல் செய்து, பெரிய பெரிய நிலப் பிரபுக்களைவிட்டுவிட வேலை செய்கிறார்கள். சர்க்காரை ஏமாற்றி, அந்தப் பிரபுக்கள் அதிக நெல்லைப் பதுக்கிவைத்து, அதிக விலைக்கு பின்னால் விற்கிறார்கள். பத்து ஏக்கர் நிலம் எந்த நபருக்கு இருந்தாலும் அவரிடம் செலவுக்குப்போக, மீதம் உள்ள நெல் அத்தனையையும் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு, சி.ஓ. 25, சி.ஓ. 27 போன்ற ரக நெல்களுக்கு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அப்படி உயர்த்திக் கொடுக்க வேண்டிய அவசியத்தை சர்க்கார் யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்வெண்மணியில் ஏற்பட்டிருக்கிற நிலைகளை சபையிலே பல்வேறு அங்கத்தினர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில், நிலப் பிரபுக்கள் அட்டகாசம் உச்ச நிலைக்கு வந்திருக்கிறது. நிலப் பிரபுக்கள் புதிதாக ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நெல் உற்பத்தி



யாளர்கள் சங்கம் என்று ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். குறிப்பாக சொல்லப் போனால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, சுதந்திராக் கட்சியைச் சார்ந்த நிலப் பிரபுக்கள் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். இந்தச் சங்கம் ஆரம்பித்து பிறகுதான இப்படிப்பட்ட தவறான காரியங்கள் செய்ய தூண்டிவிடப்பட்டு, அதிகாரிகளுடைய கூட்டுச்சதியோடு நடந்திருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்னால் அந்த மாவட்டத்தில், அமைதி குலைந்திருக்கிறது, சட்டம் அமுலில் இல்லை என்றெல்லாம் கூக்குரலைக் கிளப்பி விட்டார்கள். அந்த எல்லாப் பத்திரிகைகளும் எழுதினார்கள். அதற்குப் பதில் கொடுக்கும் முறையில், போலீஸ் தலைமை அதிகாரி, ஐ. ஜி. எங்களுக்கு நிலைமை நன்றாகத் தெரியும், சம்பவங்களை கவனித்து வருகிறோம் பாதுகாக்கும் முறையில் எங்களுடைய சகல சாதனங்களும் இருக்கின்றன என்று பதில் அறிக்கை விட்டார்கள். தங்களுக்கு நிலைமைகள் தெரியும் என்றால், முன் கூட்டியே தெரியும் என்றால், அவர்கள் ஏன் காலத்தில் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இம்மாதிரி தடுப்பதற்கு முதலிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இம்மாதிரியான அசம்பாவிதங்கள், உயிரோடு கொளுத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வேலைகள் நடந்திருக்காது. இதிலே அதிகாரிகள் அசிரத்தையாக இருந்திருக்கிறார்கள். அதிகாரிகள் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தக் கொடுமைகளையெல்லாம் இன்றையதினம் நிலப்பிரபுத்துவம் செய்துகொண்டிருக்கிறது. தங்களுடைய அடக்குமுறை மூலமும் அட்டகாசத்தின் மூலமும் நிலப்பிரபுத்துவம் இன்றையதினம் தங்களைப் பாதுகாக்க முற்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது) ஏழை விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளை நசுக்கி விட வேண்டுமென்பதற்காக தீய சக்திகள் கொடுமையான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயம் என்ன என்று ஒன்றுமே தெரியாதவர்கள், நிலத்திற்கும் தங்களுக்கும் , சம்பந்தமில்லாதவர்கள் எல்லாம் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் கண்காணிப்போடு இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் நிலபிரபுக்கள் எல்லோரும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கம் தீமையான சட்ட விரோத காரியங்களைச் செய்துகொண்டு, விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டு இருக்கிறது. தவறான காரியங்களைச் செய்துகொண்டிருக்கும் சங்கத்திலிருந்து அரசியல் கட்சிகள் வெளியேற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டொரு தினங்களுக்கு முன்கூட அரிசன விவசாயிகள் தொல்லைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

நான்காவது ஐந்தாண்டு திட்டத்தைத் தயார் செய்து, மத்திய அரசுக்கு திட்டக் குழு மூலமாக இந்த அரசு அனுப்பியிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 பிப்ரவரி 25

மாநிலத்திற்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்காக 624 கோடி ரூபாய் தேவை என்று இந்த அரசு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் திட்டக் குழுவோ 201 கோடி ரூபாய்தான் ஒதுக்க முடியும் என்று கூறியிருக்கிறது. இது மிகவும் அநீதியானது. தமிழகத்தில் மூடிக் கிடக்கும் பஞ்சாலைகளைத் திறக்க வேண்டுமென்றால், இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்றால், இந்த மாநிலத்திற்குத் தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கிக் கொடுத்தாக வேண்டும். தேவையான நிதியைப் பெறுவதற்கு இந்த அரசு போராடியாக வேண்டும். திட்ட ஆணைக் குழு நம்முடைய திட்டத்தைக் குறைத்தாலும், நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு வேண்டிய நிதியைப் பெறுவதில் நாம் உறுதியாக நின்று பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான சகல விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமிழக மக்கள் ஆதரவு தருவார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கப் பணியாளர்களுக்கு வைத்திருக்கும் ரகசியக் குறிப்புகளை ஒழிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கவர்னர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசு இந்த ரகசியக் குறிப்பு முறையை எடுத்துவிட வேண்டும். அப்போதுதான் அரசாங்கப் பணியாளர்கள் மிகுந்த உற்சாகமாக தங்கள் பணிகளைச் செய்வதற்கு ஊக்கம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். கேரள அரசு ரகசியக் குறிப்பை எடுத்துவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே வேலையில்லாத நிலைமை அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் விவசாயத் தொழிலில் விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்குப் போதிய வருவாய் கிடைக்கவில்லையென்ற நிலையில் அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே, படித்த இளைஞர்கள் தங்களுக்கு வேலை கிடைக்கவில்லையே என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்துப் பார்த்தால், இந்த நிலைமை இன்னும் மிகப் பயங்கரமாக வளர்ந்து விடும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். வளர்ந்து விடுகின்ற நிலைமையைத் தீர்க்க முடியுமா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. மேலும் வளர்ந்தாலும் அச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. வருங்காலத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது மிகத் தீவிரமாக எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் நாம் காரியங்களைச் செயல்படுத்த வேண்டும். படித்தவர்கள் மத்தியில் வேலை செய்வது என்பது கௌரவக் குறைச்சல் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. வேலை செய்யாமல் சம்பாதிக்க வேண்டும் என்ற



1969 பிப்ரவரி 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. படித்தவர்கள் எல்லாம் எழுத்து வேலை ஒன்றைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்தால் இந்தப் பிரச்சினையை இந்த அரசாங்கம் மட்டும் அல்ல, வேறு எந்த அரசாங்கமும் தீர்க்க முடியாது. படித்தவர்கள் சரீர உழைப்பை மேற்கொண்டால்தான் இந்த நாட்டின் வளத்தைப் பெருக்க முடியும், பல திட்டங்களை அப்போதுதான் மேற்கொள்ள முடியும். இப்போதுள்ள உடனடிப் பிரச்சினை என்னவென்றால் நிலங்களைச் சீர்திருத்தம் செய்து, நிலத்திலிருந்து வருவாயைப் பெருக்குவதுதான். விவசாயத்தில் பழங்கால முறைகளை அனுசரித்து விவசாயம் செய்வது சாத்தியம் இல்லை. படித்த இளைஞர்கள் நவீன இயந்திரங்களை உபயோகித்து புதுமுறையில் சாகுபடி செய்தால் விளைச்சல் பெருகும். புதுப் புது நவீன இயந்திரங்களை விவசாயத் தொழிலில் புகுத்துவது படித்த இளைஞர்களைப் பொறுத்த விஷயம்.

அடுத்தபடியாக, நம் நாட்டிலுள்ள நிலம் மழையை நம்பியிருக்கின்ற வானம் பார்த்த பூமியாக இருக்கின்றது. இப்பொழுது மழையை நம்பி ஒரு போகம்தான் சாகுபடி செய்ய முடிகிறது. பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை நவீன இயந்திரங்களின் மூலமாக வெளியே கொண்டுவந்து, ஒரு போகம் நடக்கும் சாகுபடியை இரண்டு போகம், மூன்று போகம் என அதிகப்படுத்த வேண்டும். இதற்கு அரசாங்கம் தக்க முறையில் கவனம் செலுத்த வேண்டும். முதலாவதாக அரசாங்கம் பத்துப் பன்னிரண்டு குதிரை வேகம் கொண்ட டிராக்டர்களைச் செய்வதற்கான தொழிற்சாலைகளை அரசாங்கத் தாப்பிலே அமைக்கவேண்டும். அப்போதுதான் விவசாயத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இரண்டாவதாக, உழைத்து வேலை செய்வதற்கு நம்மிடத்தில் ஆட்கள் நிறைய இருக்கிறார்கள். அப்படி ஆட்கள் இருக்கும் நிலையில் நிலங்களைத் தரிசாக விட்டுவைக்கக் கூடாது. பட்டா நிலங்கள்கூட சாகுபடி செய்யப்படாமல் விட்டுவைக்கப் பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்து ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் நல்ல விளைச்சல் ஏற்படும். தரிசு நிலத்தை ஏழை விவசாய மக்களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டும். இதற்காக 'நில அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்' ஒன்றை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு லாயக்கான நிலங்களைப் பங்கிட்டுத்தர வேண்டும். புறம்போக்கு நிலங்களையும் சாகுபடி செய்யக்கூடிய, விளைநிலமாக மாற்றுவதற்கு வகை செய்ய வேண்டும். ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கும்போது, கூடிய விரைவில் அந்த நிலங்கள் சக்திவாய்ந்த நிலப்பிரபுக்களின் கைக்கு மாறிவிடுகின்றன. அப்படி நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நில அபிவிருத்திக் கார்ப்பொரேஷனில் பராமரிப்பில் நிலப்படை ஒன்றை வைக்க வேண்டும். இப்படியாகச் செய்வதன்மூலம் விவசாயத் தொழிலை மேம்படுத்துவதுடன் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க வழி ஏற்படும். அரசாங்கம் விவசாயத்தில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1969 பிப்ரவரி 25

அடுத்தபடியாக தஞ்சை மாவட்டத்து விவசாயிகளிடத்தில் ஒரு நிலமை இருந்து வருகிறது. கூலிப் பிரச்சினை என்று நீங்கள் கருதிவிடலாம். அங்கே கூலிப் பிரச்சினை மட்டும் இருப்பதாகக் கருதவில்லை. வாழ்க்கைப் பிரச்சினையும் அதில் கலந்திருக்கிறது. விவசாயக் கூலிகளுக்கு நடவு, அறுவடைக் காலங்களில் மட்டும் தான் வேலை கிடைக்கிறது. அந்த நாட்களில் கிடைக்கிற வருமானத்தை வைத்துக்கொண்டு வருடம் பூராவும் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் பட்டினியாக இருக்க நேரிடுகிறது. ஒரு பக்கத்தில் சிறுசிறு நிலச்சுவான்தார்கள், 'விவசாயிகள் ஆறு படி கொடு, ஏழு படி கொடு என்று கேட்கிறார்களே, இப்படியே கொடுத்துக்கொண்டு போனால் அவர்கள் ஏழு படி, எட்டு படி என்று மேலும் மேலும் உயர்த்திக்கொண்டே போவார்கள். இது ஒரு சமரசத்தில் போய் அடங்கிவிடும் என்று கூறுவதற்கில்லை' என்று சொல்கிறார்கள். அங்கு ஏற்பட்டிருப்பது சாதாரண கூலிப் பிரச்சினை அல்ல, சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் அடிப்படைப் பிரச்சினையாகும் என்பதை இந்நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு நிரந்தர வருவாயைத் தேடிக் கொடுக்கும் வாழ்க்கையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். விஞ்ஞான, நாகரிக வளர்ச்சி வளர்ந்துகொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுக்கு நல்ல வருவாய் தரக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

(திரு. தோ. மு. நல்லசாமி தலைமை)

நடவு பத்து நாட்கள், அறுவடை பத்து நாட்கள் என்று இருந்தால், அவர்கள் அதிகப்படியான கூலி கேட்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. எந்த நிலைமை வந்தாலும் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு கொடுத்து, வருவாயைப் பெறக்கூடிய சூழ்நிலைமையை நாம் உருவாக்கியாக வேண்டும். இந்த நிலைமை தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருந்து வருகிறது என்று நாம் கருதிவிட முடியாது. அதை அடிப்படையாக கருத்தில் வைத்துக்கொண்டு சரியான நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக்
முற் பகல் 11-00 கொண்டுவருவதற்கு முற்படவேண்டும். பொதுவாக, நாட்டின் உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருகுவதற்கு ஏற்ற முறையில் நிலத்தில் உழைப்பவர்களுடைய வருவாயும் பெருக வேண்டும். இந்த இரண்டுக்கும் குந்தகம் இல்லாத முறையில் செயல்பட வேண்டும். பெருநிலம் இருந்தால்தான் அதிக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற கருத்து மிகத் தவறானது. ஜப்பான் நாட்டில் 3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்கூட மிக அதிக அளவில் உற்பத்தி செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் நம் நாட்டிலே ஒரு கோளாறு இருக்கிறது. சிறு சிறு நிலம் உடையவர்கள் என்றாலும் அவர்களுடைய நிலம் பலப்பல பகுதிகளில் சிதறுண்டு கிடக்கிறது. சிதறுண்ட நிலங்களை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொடுத்தாலொழிய கன்சாலிடேட் பண்ணினாலொழிய நவீன முறையில் சிறப்பாக சாகுபடி செய்வது என்பது இயலாத காரியமாகும். சிதறுண்டு



1969 பிப்ரவரி 25] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

கிடக்கும் நிலங்கள் அங்கங்கே ஒன்று சேர்க்கப்படுவதுதான் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். இது மிகமிக அத்தியாவசியம். இதைக் கண்டிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். இந்த நிகழ்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படையான காரணம் என்ன? எங்கே இதன் அடிப்படைக் கோளாறு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டாகவேண்டும். இதன் அடிப்படை தெரிந்தால்தான் நிலச்சீர்திருத்தம் செய்வதற்கு சரியான யோசனை தோன்றும். நேற்றையதினம் திரு. சங்கரய்யா பேசிய போது கோர்ட்டில் வழக்குக்கு பாதகம் இல்லாத முறையில் இருந்தால் இதன் அடிப்படைக் கோளாறுபற்றி பேசப்படுவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியிருக்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இதற்கு அடிப்படைக் காரணம் என்ன, குறைகள் என்ன என்பதை நீதிவிசாரணையின் மூலம் வெளிப்படச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பக்கத்தில் பஞ்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதன் மூலம் அவைகள் திறக்கப்படும் என்று நினைப்பதற்கில்லை. பலர் வேலையில்லாது திண்டாடுகிற துர்பாக்கியமான நிலையும் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுக்கவேண்டுமோ, அவற்றை எடுத்துக்கொண்டாகவேண்டும். எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையில்லாது திண்டாடுகின்றன. இதற்கு ஏதாவது உடனடியாக பரிகாரம் தேடியாகவேண்டும்.

அடுத்து, தூய நிர்வாக அமைப்பை நாம் கொடுப்பது கீழே இருந்து மேல்வரைக்கும் காரியங்கள் துரிதமாக நடைபெறுவதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். லஞ்ச ஊழல் பெருகிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். இந்தச் சபையில் இதைச் சொல்கிறேன் என்றால் ஏதோ குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை.

"கழிபெரும் கண்ணோட்டம் செய்யார்—கருவியிட்டாற்றுவார்
புண் வைத்து மூடார் பொதிந்து."

என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. புண் இருக்கிறது என்றால் அதை மூடி வைத்திருக்க முடியாது. திறந்து ஆப்பரேஷன் செய்யத்தான் வேண்டும். ஆகவேதான் லஞ்சம் பெருகிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை இந்தச் சபையில் சொல்லாமல் இருக்க முடியாது. நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இது மேலும், மேலும் பெருகாமலாவது இருக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மக்களது ஒத்துழைப்பும் தேவை என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, அங்கங்கே அதிகாரிகள், மக்கள், உறுப்பினர்கள் கொண்ட குழுக்களை

அமைத்து—சர்வ கட்சி கொண்ட குழு அமைத்து பொது நிர்வாகங்களில் நடைபெறுகிற செயல்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகும் கள்ள மார்க்கெட் இருக்கத்தான் செய்கிறது. கள்ளக்கடத்தல் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ரொம்ப வேடிக்கை என்னவென்றால் அதிகத் தவறு செய்கின்றவர்கள்தான் இன்றைக்கு பொது மக்களால் மிகவும் நல்லவர்களாகப் போற்றப்படுகிறார்கள். ஆட்சியினர்களையும் ஆட்டி வைக்கிறார்கள். அத்தகைய சமூக விரோத சக்திகளைத் தூர விலக்கி வைத்தாக வேண்டும். அவர்கள் யாராக இருந்தாலும் மக்களிடத்தில் அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்ய வேண்டும். இன்றைக்கு நம்முடைய போலீஸ் படையில் உள்ள சமூகவிரோத சக்தியுடன் தொடர்பு கொண்டவர்களின் லிஸ்டு ஒன்றைத் தயார் செய்வது ஒன்றும் அரசுக்குக் கஷ்டமில்லை. உடனடியாக சமூக விரோத சக்திகளை ஒடுக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்த ஆட்சியையும் சிறிது நாளில் குறை சொல்லக்கூடிய துர்பாக்கியமான நிலைமை வரும். ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசாங்க நிர்வாகத்தில் ஒரு இலாக்காவுக்கும் இன்னொரு இலாக்காவுக்கும் போதுமான கோவார்டினேஷன் இல்லை. அதை ஏற்படுத்தியே தீரவேண்டும். குறிப்பாக பூமியில் உள்ள தண்ணீரை மேலே கொணர்வதற்கு போர்வெல் வைக்கிற காரியங்களில் அரசு தீவிர கவனம் காட்டி வருகிறது. விவசாய இலாகாவுக்கு தனி போர்டிங் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். பட்டுக் கோட்டையை எடுத்துக் கொண்டால், எழுபது எண்பது கிணறுகளுக்கு மேல் போர்வெல் போட்டு, இரண்டாண்டுகள் ஆகி விட்டன. ஆனால் ரெவின்யூ இலாக்கா லோன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு கிணறுக்கு நாலாயிரம் ஐந்தாயிரம் என்று செலவு செய்து கிணற்றுக்குள் பைப் வைத்து என்ன பயன்? ஆகவே கடனைக் கொடுக்கக்கூடிய பொறுப்பையும் விவசாய இலாக்காவினிடத்திலேயே கொடுத்துவிட்டால் சுலபமாக இருக்கும். இலாக்காவுக்கு இலாக்கா ஒரு கோவார்டினேஷனை ஏற்படுத்தவும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்ற இந்த அரசாங்கத்தின் கருத்தை நான் வற்புறுத்துகிறேன். ஆனால் இன்றைக்கு மதுவிலக்கு எப்படி அமல்படுத்தப்படுகிறது என்று நான் கேட்கிறேன். குடிக்கிறவன் குடித்துக்கொண்டுதான் இருக்கிறான். குடிக்கிற பழக்கம் குறைந்துவிட்டது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. தண்ணீர் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் பதநீரைக் காய்ச்சினால் என்ன கிடைக்கும்? அதற்காக தஞ்சை மாவட்டத்திற்கே பதநீர் காய்ச்ச அனுமதி கிடையாது என்பதும் நியாயமாகாது. சென்னையில் பதநீர்



காய்ச்ச தென்னை மரத்திற்கு அனுமதி கொடுப்பது என்ன பயன்? தென்னை மரத்தில் கள்தான் கிடைக்கும். ஆகவே வெல்லம் காய்ச்ச என்று தென்னை மரத்திற்கு எல்லாம் அனுமதி வழங்குவது சரியானதாகாது. மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமல்நடக்க தக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்க ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டாக வேண்டும். எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் 10 ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. சாகுபடியாகிக் கொண்டிருக்கும் நிலம் ஒரு மாதத்திற்கு 60 பட்டா கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் வருடத்திற்கு எழுநூறு, எண்ணூறுதான் கொடுக்க முடியும்? பத்தாயிரம் ஏக்கராவை பத்துப் பதினைந்து வருஷங்களில் கொடுக்க வேண்டுமா? ஆகவே உடனடியாகக் கொடுக்கக்கூடிய நிலங்களின் அளவுக்குத் தக்கபடி ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முன்னால் பேசிய திரு. ஆ. கே. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள். சி.ஓ. 29 போடும்படியாக விவசாய அதிகாரிகள் பெரிதும் சிபார்சு செய்தார்கள். பரவலாக எல்லாவிடங்களிலும் போட்டோம். ஆனால் ஒரு ஏக்கருக்கு 5 மூட்டைகூட விளையவில்லை. இதை யார் சிபார்சு செய்யச் சொன்னார்கள்? இதைப்பற்றி எப்படி ஆராய்ச்சி செய்தார்கள் என்று கேட்கிறேன். நமக்கு உற்பத்தி பெருகுவது அவசியமென்றாலும்கூட, அவசர கோலமாக எதாவது செய்துவிட்டால் அது பாதகத்தை ஏற்படுத்திவிடுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். எந்த எந்த விதைகளை எந்த எந்தப் பகுதிகளிலே, எந்த எந்த சீசன்களிலே போட வேண்டுமென்று நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு பரிசீலனை செய்த பிறகு தான் அதைச் சிபாரிசு செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சி.ஓ. 29 விதையால் பெருநஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அப்படி இனிமேல் ஏற்படாமல் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும், வேகமாகச் செய்யவேண்டும். அதே நேரத்திலே நிதானமாகவும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. டி. எஸ். ஆதிமூலம்: மிஸ்டர் சேர்மன் சார், இந்த கவர்னர் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது இந்தியக் கண்டத்தின் சிறந்த தலைவர்களில் ஒருவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்காக நான் முதற்கண் என்னுடைய வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்திக்கொண்டு அன்னார் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1969 பிப்ரவரி 25

இந்த உரையில் இருக்கிற சில விஷயங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுவாக இரண்டு வருஷமாகவே ப்ரவலாக இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் (Industrial development) கொஞ்சம் மந்தமாக இருக்கிறது. தி.மு.க. சர்க்காரில் என்ற ஆவலாதி இருக்கிறது. அந்த ஆவலாதியைத் தீர்ப்பதற்கு நாம் பாடுபடவேண்டும். அதற்கு முக்கியமான ஒரு சூழ்நிலையை நாம் உண்டுபண்ண வேண்டும். அதாவது எப்பொழுது பார்த்தாலும் தேசிய மயம் தேசிய மயம் இன்னும் என்னவெல்லாமோ சொல்கிறார்களோ அந்த அபத்தங்களை யெல்லாம் கட்டி வைத்துவிட வேண்டும். ஏற்கனவே இந்தியாவிலேயே ஒரு ஸ்டேடின் கவர்ன்மெண்ட் சிங்கில் பார்ட்டி கவர்ன்மென்ட் Single Party Government என்று நம்முடைய அரசாங்கத்தைப் பெருமையாகச் சொல்லலாம். அப்படிப்பட்ட நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. புதிதாகத் தொழில்கள் ஆரம்பிக்க நினைக்கும் தொழிலதிபர்கள் வசதி படைத்தவர்கள் இந்தச் சர்க்காரை நம்பித்தான் தொழிலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் நீங்கள் தெளிவாக நடந்து கொள்ள வேண்டும். சோஷலிஸம், கம்யூனிசம் என்றெல்லாம் இப்படிப்பட்ட மனப்பான்மையை வைத்துக்கொண்டு மீட்டிங்குகளிலே அப்படிச் செய்கிறோம் இப்படிச் செய்கிறோம் என்று அப்பளாஸ் வாங்குவதற்காகப் பேசிக்கொண்டு போனது ஒன்றும் சரிப்படாது. முன்பு Law Minister ஆக இருந்தவர்கள் இப்பொழுது Industries Ministers ஆகவும் ஆகியிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 18-ம் தேதி அவர்கள் கன்னிமாரா ஹோட்டலில் பேசியிருக்கிறார்கள்.

The Industries Minister Thiru S. Madhavan yesterday frankly told financiers and entrepreneurs not to worry much about Government's policy statements made from time to time for political reasons but to go ahead with the new ventures and expansion of the existing ones.

என்று சொல்லியிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அவர்கள், ஹிந்து, மெயில் இந்த இரண்டு பத்திரிகைகளை மட்டும் படித்துப் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மற்றப் பத்திரிகைகளையும் படித்தால்தான் தெளிவாக நான் என்ன பேசியிருக்கிறேன் என்பது தெரியும். அவர்கள் தங்களுக்குச் சாதகமான பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு பாதகமான பகுதியை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். நான் சொன்னது. . . .

Don't bother about political theories and theses of political parties but take note of the economic policies of Government that will help development of the country.

என்பதுதான்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** விளக்கத்திற்கு நன்றி. கவர்னர் அவர்களுடைய உரையைப் பொறுத்த வரையில் நான் ஆதரித்து ஓட்டு போடுகிற ஆள். நான் குறை சொல்லிப் பேச வரவில்லை.



1969 பிப்ரவரி 25] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

கம்யூனிஸ்ட்கள் மனப்பான்மை, அந்த மனப்பான்மை, இந்த மனப்பான்மை என்றெல்லாம் சொல்லி அதனால் தொழில் நடத்துகிற ஆட்கள் போய்விடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதால் சொன்னேன். தொழில் மந்த நிலையை நீக்கி வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய முயற்சியில் இந்த மந்திரிசபை ஈடுபட வேண்டும். இந்த மந்திரிசபை, முன்னால் இருந்த மந்திரிசபை நன்றாகத்தான் இயங்கிக் கொண்டிருந்தது, அதைப்போல் நன்றாகத் தான் இயங்க ஆரம்பித்து இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக மந்திரிசபை விஸ்தரிப்புச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். நான்கூட அடிக்கடி கூட்டங்களில் பேசும்பொழுது சொல்லுவேன், இந்த மெட்ராஸ் (Madras) மந்திரிகள் மிகவும் பேராசை பிடித்த ஆட்கள், எல்லா போர்ட் போலியோ (Portfolio) க்களையும் அவர்களே, பைல்கள் குவிந்தாலும் பரவாயில்லை என்று வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், இன்னும் நாலு பேர்கள் போட்டால் என்ன என்று சொல்லியிருக்கிறேன். மற்ற ராஜ்யங்களிலே 3 எம்.எல்.ஏக்களுக்கு ஒரு மந்திரி. அது என்ன மந்திரிசபையோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். அந்த மந்திரிசபையைப் பார்த்தால் வாந்தி எடுக்க வருகிறது. ஏதோ 18 கட்சிகள் இருக்கின்றனவாம், நல்ல வேளையாக 120 கட்சிகளாக இல்லை. இது என்ன ஜனநாயகமோ, கருமம். ஆகவே இந்தப் புதிய மந்திரிசபையைப் பொறுத்தவரையில் நம்முடைய புதிய முதலமைச்சர் தலைமையில் உள்ள மந்திரிசபையில் 11 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ராசியுள்ள இலக்கம் அது. ஆகவே மந்திரிசபை நல்லமுறையில் அமைந்திருக்கிறது.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் சம்பந்தமாக திட்டக் கமிஷன் மெம்பர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைப் பார்த்துக் கூட நம்முடைய முதலமைச்சர் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை கைக்குள் போட்டுக்கொண்டு, நல்ல மனுஷன் அவர், அவர் மூலமாகத் திட்டக் கமிஷனிலிருந்து தென் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழ் நாட்டுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய தயாராக இருப்பார்கள். பெற்றுக்கொள்ளவேண்டும். இங்கே உள்ள காங்கிரஸ்காரர்கள் மாதிரி அல்ல அவர். அவர் வேறு . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் பற்றிச் சொன்னதை அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மன்னித்துக் கொள்ள வேண்டும் அவர்கள். இங்கே உள்ள காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் விரிந்து கொஞ்சம் சுருங்கிச் செல்பவர்கள். அது ஒரேடியாக விரிந்திருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன். அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இந்த மூன்று வருட காலத்தில் நல்ல முறையில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து வேலை வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். டெவலப்மெண்ட் வேலைகளையும் நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கம்யூனிஸ்டு

மனப்பான்மை என்று சொன்னது—இப்படி இருக்கிற புண்ணியவாளர்கள் ஜனநாயக சோஷலிஸம் என்று ஏதாவது வோட்டுக்காக பேசி நாட்டைக் குழப்பி, 2 அல்லது 3 கட்சிகள் இருக்கக்கூடிய அரசியல் முறையை நாட்டிலே இல்லாமல் செய்துவிட்ட புண்ணியவான்களய்யா—அது வளர்ந்து நாட்டிலே ரொம்பவும் துன்பங்கள் வர ஏதுவாக இருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான்.

கம்யூனிஸ்ட் மனப்பான்மை என்று சொல்லும் அதே சமயத்தில் இங்குள்ள கம்யூனிஸ்ட் நண்பர்களைப்பற்றி ரொம்ப உயர்ந்த அபிப்பிராயம் உள்ளவன். அவர்கள் நன்றாகப் படித்தவர்கள், இந்த நாட்டின் சுய ராஜ்யத்திற்காகப் பாடுபட்ட தியாகிகள். அதே நேரத்தில் அவர்கள் ஒரு கட்சியை நடத்த வேண்டுமென்று சொன்னால் எதையாவது நாலைச் சொல்லி காரியம் பண்ண வேண்டியிருக்கின்றது.

**திரு. என். சங்கரய்யா:** கனம் உறுப்பினர் அவர்கள் பேசும் போது கொள்கைகளினுடைய அடிப்படையில் பேசாது கட்சியை நடத்த எதையாவது நாலைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று கூறுவது கம்யூனிஸ்ட் கட்சியை அவதூறு செய்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட அவதூறுகளை இந்த மன்றத்தில் கூறுவது சரியல்ல என்று கருதுகிறேன். அதைப்பற்றித் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** இதை எதற்காகச் சொல்ல வந்தேன் என்று சொன்னால் கீழ்த் தஞ்சையில் நடைபெற்ற சமீபகால சம்பவங்களைப் பொறுத்துத்தான். பொதுவாகக் கூலித் தகராறு, விவசாயிகள் கிளர்ச்சி என்பது நாலைந்து வருஷ காலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சர்க்கார் வந்த பிறகு அது கொஞ்சம் ஜாஸ்தியாகிவிட்டது. அதற்குக் காரணம் முன்னால் 2 பேராக இந்த மன்றத்திலிருந்தவர்கள் தற்போது 13, 15 என்ற அளவுக்கு இருப்பதுதான் என்று நினைக்கிறேன். நம்முடைய நண்பர்கள் கூட்டு அடிப்படையில் வந்துள்ள காரணத்தால் கொஞ்சம் வேகமாக வேலைகள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கூலித் தகராறு என்று ஒன்றும் கிடையாது. 'நிலப் பிரபுக்கள்' என்று சொல்லுகிறார்கள். லாண்ட் சீலிங் (Lnad ceiling) வந்த பிறகு நிலப் பிரபுக்கள் எங்கே இருக்கிறார்கள்? இங்கிலாந்தில் வேண்டுமானால் பிரபுக்கள் சபை இருக்கிறது. இங்கே பிரபுக்கள் என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லை. இங்கே இருப்பவர்கள் லாண்ட் ஹோல்டர்ஸ் (Land holders) தான். தஞ்சை ஜில்லாவில் ஆறு லட்சம் சிறிய பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். கூலித் தகராறு எங்கே இருக்கிறது? மன்னார்குடி ஒப்பந்தம் என்ற ஒரு ஒப்பந்தம் இருந்தது. அந்த ஒப்பந்தத்தையும் விட குறைந்த கூலியில் அறுவடை செய்ய தொழிலாளர்கள் வந்தால் அவர்களைத் தடுக்கிறார்கள். எங்களுக்கு அரை வயிற்றுச் சாப்பாடாவது கிடைத்தால் போதும் என்ற நிலையில் இராமநாதபுரத்திலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்யப் போனால் 'ஏ கொஞ்சம் நில், என்னைக் கேட்டுக்கொண்டு





வேலைக்குப் போ' என்று அவனைத் தடுத்து நிறுத்துகிறார்கள். அவன் ஜோலிக்கு அவன் போகிறான், நீங்கள் போய் ஏன் தடுக்கிறீர்கள்? இதெல்லாம் என்ன ஜோலி? அவர்கள் தடுக்கிறார்கள், போலீஸ் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தினமணி பத்திரிகையில் படித்ததாக கவனம். இரண்டு தினங்களுக்கு முன்பு கீழ்த் தஞ்சையில் நன்னிலம் போலீஸ் ஸ்டேஷன் லிமிட்டில் அறுவடைக்குப் போன ஆட்களைத் தடுத்திருக்கிறார்கள். அதனால் கலகம் ஏற்பட்டு அநேக பேர்களுக்குக் காயம். நான் சர்க்காரைப்பற்றிக் கொஞ்சம் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். சென்ற இரண்டு வருஷமாகவே சர்க்காருடைய கொள்கை என்ன என்பதே போலீசுக்கு விளங்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் சார்ஜ் சொல்லுகிற ஆங்கிள் (Angle) வேறு. அவர்கள் எப்படியாவது ஆட்டைத் தூக்கி குட்டியில் போட்டு, குட்டியைத் தூக்கி ஆட்டில் போட்டு 72-ல் எதையாவது பார்க்கலாமா என்று நினைக்கிறார்கள்.

Backing the public mind in confusion.

நான் சொல்லுவது சட்டப்படி போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு 'ஃப்ரீ ஹாண்டை (Free hand) விட வேண்டுமென்பது. முன்னால் கொலை கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை ஒரு வருஷத்திற்கு முன்பு சொன்னார்கள். இப்போது வெண்மணி கிராமத்தில் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டு மிருகத்தனமான செயல் எப்படியோ நடந்திருக்கிறது. மனிதனாக உள்ள எவனும் வருந்தாமல் இருக்க முடியாது. அதற்குப் பிறகு இப்போது மூன்று கொலைகள் நடந்திருக்கின்றன. அவர்களுடைய பாஷையில் மிராசுதாரர்கள், நம்முடைய பாஷையில் நிலச் சொந்தக்காரர்கள். நிலச் சொந்தக்காரர்கள் மூன்று பேரைக் கொலை செய்திருக்கிறார்கள். கூலித் தகராறு என்று ஆரம்பித்து இந்த மாதிரியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் என்ன நினைக்கிறது என்பது போலீசாருக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும். சமீபத்தில் ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவரைப் போட்டு கூலிப் பிரச்சினையைப்பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமித்திருக்கிறார்கள். இதற்கு மத்தியில் 'இன்டரிம் அவார்டு' (Interim Award) கலெக்டர் கொடுக்கிறார். என்ன தலைமுழுகிப் போய் விட்டது? இது 'என்கரேஜ் தி ராங் எலிமென்ட்ஸ்' (Encourage the wrong elements) என்ற அளவில்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள்தான் துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம். சோஷலிசம் என்று சொல்லுவார்கள். எல்லோருக்கும் செழிப்பு வந்த பிறகு பங்கு போட வேண்டும், இப்போது சாப்பாட்டுக்கு வழி இல்லாத நிலையில் தரித்திரத்தையா பங்கு போடுவது? சர்க்கார் தொழிற்துறையிலும், விவசாயத் துறையிலும் இந்தமாதிரி துன்பங்கள் ஏற்படாமல் பார்த்து 'லா அண்டு ஆர்டரை' (Law and Order) நல்லவிதமாக நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பார்கள். விவசாய அமைச்சருக்குத் தெரியும். ஒரு ஏக்கர் கரும்பில் எவ்வளவு வருமானம், ஒரு ஏக்கர் மிளகாயில் என்ன வருமானம்,

அடுத்தபடியாக தஞ்சை மாவட்டத்து விவசாயிகளிடத்தில் ஒரு நிலைமை இருந்து வருகிறது. கூலிப் பிரச்சினை என்று நீங்கள் கருதிவிடலாம். அங்கே கூலிப் பிரச்சினை மட்டும் இருப்பதாகக் கருதவில்லை. வாழ்க்கைப் பிரச்சினையும் அதில் கலந்திருக்கிறது. விவசாயக் கூலிகளுக்கு நடவு, அறுவடைக் காலங்களில் மட்டும் தான் வேலை கிடைக்கிறது. அந்த நாட்களில் கிடைக்கிற வருமானத்தை வைத்துக்கொண்டு வருடம் பூராவும் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் பட்டினியாக இருக்க நேரிடுகிறது. ஒரு பக்கத்தில் சிறுசிறு நிலச்சுவான்தார்கள், 'விவசாயிகள் ஆறு படி கொடு, ஏழு படி கொடு என்று கேட்கிறார்களே, இப்படியே கொடுத்துக்கொண்டு போனால் அவர்கள் ஏழு படி, எட்டு படி என்று மேலும் மேலும் உயர்த்திக்கொண்டே போவார்கள். இது ஒரு சமரசத்தில் போய் அடங்கிவிடும் என்று கூறுவதற்கில்லை' என்று சொல்கிறார்கள். அங்கு ஏற்பட்டிருப்பது சாதாரண கூலிப் பிரச்சினை அல்ல, சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் அடிப்படைப் பிரச்சினையாகும் என்பதை இந்நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு நிரந்தர வருவாயைத் தேடிக் கொடுக்கும் வாழ்க்கையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். விஞ்ஞான, நாகரிக வளர்ச்சி வளர்ந்துகொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுக்கு நல்ல வருவாய் தரக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

(திரு. தோ. மு. நல்லசாமி தலைமை)

நடவு பத்து நாட்கள், அறுவடை பத்து நாட்கள் என்று இருந்தால், அவர்கள் அதிகப்படியான கூலி கேட்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. எந்த நிலைமை வந்தாலும் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு கொடுத்து, வருவாயைப் பெறக்கூடிய சூழ்நிலைமையை நாம் உருவாக்கியாக வேண்டும். இந்த நிலைமை தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருந்து வருகிறது என்று நாம் கருதிவிட முடியாது. அதை அடிப்படையாக கருத்தில் வைத்துக்கொண்டு சரியான நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முற்படவேண்டும். பொதுவாக, நாட்டின் உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருகுவதற்கு ஏற்ற முறையில் நிலத்தில் உழைப்பவர்களுடைய வருவாயும் பெருக வேண்டும். இந்த இரண்டுக்கும் குந்தகம் இல்லாத முறையில் செயல்பட வேண்டும். பெருநிலம் இருந்தால்தான் அதிக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற கருத்து மிகத் தவறானது. ஜப்பான் நாட்டில் 3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்கூட மிக அதிக அளவில் உற்பத்தி செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் நம் நாட்டிலே ஒரு கோளாறு இருக்கிறது. சிறு சிறு நிலம் உடையவர்கள் என்றாலும் அவர்களுடைய நிலம் பலப்பல பகுதிகளில் சிதறுண்டு கிடக்கிறது. சிதறுண்ட நிலங்களை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொடுத்தாலொழிய கன்சாலிடேட் பண்ணினாலொழிய நவீன முறையில் சிறப்பாக சாகுபடி செய்வது என்பது இயலாத காரியமாகும். சிதறுண்டு

பிற்பகல் 11-00





கிடக்கும் நிலங்கள் அங்கங்கே ஒன்று சேர்க்கப்படுவதுதான் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். இது மிகமிக அத்தியாவசியம். இதைக் கண்டிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். இந்த நிகழ்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படையான காரணம் என்ன? எங்கே இதன் அடிப்படைக் கோளாறு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டாகவேண்டும். இதன் அடிப்படை தெரிந்தால்தான் நிலச்சீர்திருத்தம் செய்வதற்கு சரியான யோசனை தோன்றும். நேற்றையதினம் திரு. சங்கரய்யா பேசிய போது மிகவும் வழக்குக்கு பாதகம் இல்லாத முறையில் இருந்தால் இதன் அடிப்படைக் கோளாறுபற்றி பேசப்படுவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியிருக்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இதற்கு அடிப்படைக் காரணம் என்ன, குறைகள் என்ன என்பதை நீதிவிசாரணையின் மூலம் வெளிப்படச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பக்கத்தில் பஞ்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதன் மூலம் அவைகள் திறக்கப்படும் என்று நினைப்பதற்கில்லை. பலர் வேலையில்லாது திண்டாடுகிற துர்பாக்கியமான நிலையும் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுக்கவேண்டுமோ, அவற்றை எடுத்துக்கொண்டாகவேண்டும். எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையில்லாது திண்டாடுகின்றன. இதற்கு ஏதாவது உடனடியாக பரிகாரம் தேடியாகவேண்டும்.

அடுத்து, தூய நிர்வாக அமைப்பை நாம் கொடுப்பது கீழே இருந்து மேல்வரைக்கும் காரியங்கள் துரிதமாக நடைபெறுவதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். லஞ்ச ஊழல் பெருகிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். இந்தச் சபையில் இதைச் சொல்கிறேன் என்றால் ஏதோ குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை.

"கழிபெரும் கண்ணோட்டம் செய்யார்—கருவியிட்டாற்றுவார்
புண் வைத்து மூடார் பொதிந்து."

என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. புண் இருக்கிறது என்றால் அதை மூடி வைத்திருக்க முடியாது. திறந்து ஆப்பரேஷன் செய்யத்தான் வேண்டும். ஆகவேதான் லஞ்சம் பெருகிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை இந்தச் சபையில் சொல்லாமல் இருக்க முடியாது. நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இது மேலும், மேலும் பெருகாமலாவது இருக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மக்களது ஒத்துழைப்பும் தேவை என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, அங்கங்கே அதிகாரிகள், மக்கள், உறுப்பினர்கள் கொண்ட குழுக்களை

அமைத்து—சர்வ கட்சி கொண்ட குழு அமைத்து பொது நிர்வாகங்களில் நடைபெறுகிற செயல்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகும் கள்ள மார்க்கெட் இருக்கத்தான் செய்கிறது. கள்ளக்கடத்தல் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ரொம்ப வேடிக்கை என்னவென்றால் அதிகத் தவறு செய்கின்றவர்கள்தான் இன்றைக்கு பொது மக்களால் மிகவும் நல்லவர்களாகப் போற்றப்படுகிறார்கள். ஆட்சியினர்களையும் ஆட்டி வைக்கிறார்கள். அத்தகைய சமூக விரோத சக்திகளைத் தூர விலக்கி வைத்தாக வேண்டும். அவர்கள் யாராக இருந்தாலும் மக்களிடத்தில் அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்ய வேண்டும். இன்றைக்கு நம்முடைய போலீஸ் படையில் உள்ள சமூகவிரோத சக்தியுடன் தொடர்பு கொண்டவர்களின் லிஸ்டு ஒன்றைத் தயார் செய்வது ஒன்றும் அரசுக்குக் கஷ்டமில்லை. உடனடியாக சமூக விரோத சக்திகளை ஒடுக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்த ஆட்சியையும் சிறிது நாளில் குறை சொல்லக்கூடிய துர்பாக்கியமான நிலைமை வரும். ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசாங்க நிர்வாகத்தில் ஒரு இலாக்காவுக்கும் இன்னொரு இலாக்காவுக்கும் போதுமான கோவார்டினேஷன் இல்லை. அதை ஏற்படுத்தியே தீரவேண்டும். குறிப்பாக பூமியில் உள்ள தண்ணீரை மேலே கொணர்வதற்கு போர்வெல் வைக்கிற காரியங்களில் அரசு தீவிர கவனம் காட்டி வருகிறது. விவசாய இலாகாவுக்கு துளை போடுகிற அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். பட்டுக் கோட்டையை எடுத்துக் கொண்டால், எழுபது என்பது கிணறுகளுக்கு மேல் போர்வெல் போட்டு, இரண்டாண்டுகள் ஆகி விட்டன. ஆனால் ரெவின்யூ இலாக்கா லோன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு கிணறுக்கு நாலாயிரம் ஐந்தாயிரம் என்று செலவு செய்து கிணற்றுக்குள் பைப் வைத்து என்ன பயன்? ஆகவே கடனைக் கொடுக்கக்கூடிய பொறுப்பையும் விவசாய இலாக்காவினிடத்திலேயே கொடுத்துவிட்டால் சுலபமாக இருக்கும். இலாக்காவுக்கு இலாக்கா ஒரு கோவார்டினேஷனை ஏற்படுத்தவும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்ற இந்த அரசாங்கத்தின் கருத்தை நான் வற்புறுத்துகிறேன். ஆனால் இன்றைக்கு மதுவிலக்கு எப்படி அமுல்படுத்தப்படுகிறது என்று நான் கேட்கிறேன். குடிக்கிறவன் குடித்துக்கொண்டுதான் இருக்கிறான். குடிக்கிற பழக்கம் குறைந்துவிட்டது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. தண்ணீர் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் பதநீரைக் காய்ச்சினால் என்ன கிடைக்கும்? அதற்காக தஞ்சை மாவட்டத்திற்கே பதநீர் காய்ச்ச அனுமதி கிடையாது என்பதும் நியாயமாகாது. சென்னையில் பதநீர் காய்ச்ச தென்னை மரத்திற்கு அனுமதி கொடுப்பது என்ன பயன்? தென்னை மரத்தில் கள்தான் கிடைக்கும். ஆகவே வெல்லம் காய்ச்ச என்று தென்னை மரத்திற்கு எல்லாம் அனுமதி வழங்குவது சரியானதாகாது. மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமல்நடக்க தக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்க ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டாக வேண்டும். எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் 10 ஆயிரம் எக்கரா இருக்கிறது. சாகுபடியாகிக் கொண்டிருக்கும் நிலம் ஒரு மாதத்திற்கு 60 பட்டா கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் வருடத்திற்கு எழுநூறு, எண்ணூறுதான் கொடுக்க முடியும்? பத்தாயிரம் எக்கராவை பத்துப் பதினைந்து வருஷங்களில் கொடுக்க வேண்டுமா? ஆகவே உடனடியாகக் கொடுக்கக்கூடிய நிலங்களின் அளவுக்குத் தக்கபடி ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முன்னால் பேசிய திரு. அ. கே. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள். சி.ஓ. 29 போடும்படியாக விவசாய அதிகாரிகள் பெரிதும் சிபார்சு செய்தார்கள். பரவலாக எல்லாவிடங்களிலும் போட்டோம். ஆனால் ஒரு எக்கருக்கு 5 மூட்டைகூட விளையவில்லை. இதை யார் சிபார்சு செய்யச் சொன்னார்கள்? இதைப்பற்றி எப்படி ஆராய்ச்சி செய்தார்கள் என்று கேட்கிறேன். நமக்கு உற்பத்தி பெருகுவது அவசியமென்றாலும்கூட, அவசர கோலமாக எதாவது செய்துவிட்டால் அது பாதகத்தை ஏற்படுத்திவிடுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். எந்த எந்த விதைகளை எந்த எந்தப் பகுதிகளிலே, எந்த எந்த சீசன்களிலே போட வேண்டுமென்று நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு பரிசீலனை செய்த பிறகு தான் அதைச் சிபாரிசு செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சி.ஓ. 29 விதையால் பெருநஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அப்படி இனிமேல் ஏற்படாமல் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும், வேகமாகச் செய்யவேண்டும். அதே நேரத்திலே நிதானமாகவும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. டி. எஸ். ஆதிமூலம் :** மிஸ்டர் சேர்மன் சார், இந்த கவர்னர் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது இந்தியக் கண்டத்தின் சிறந்த தலைவர்களில் ஒருவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்காக நான் முதற்கண் என்னுடைய வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்திக்கொண்டு அன்னார் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1969 பிப்ரவரி 25

இந்த உரையில் இருக்கிற சில விஷயங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுவாக இரண்டு வருஷமாகவே பரவலாக இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் (industrial development) கொஞ்சம் மந்தமாக இருக்கிறது. தி.மு.க. சர்க்காரில் என்ற ஆவலாதி இருக்கிறது. அந்த ஆவலாதியைத் தீர்ப்பதற்கு நாம் பாடுபடவேண்டும். அதற்கு முக்கியமான ஒரு சூழ்நிலையை நாம் உண்டுபண்ண வேண்டும். அதாவது எப்பொழுது பார்த்தாலும் தேசிய மயம் தேசிய மயம் இன்னும் என்னவெல்லாமோ சொல்கிறார்களோ அந்த அபத்தங்களை யெல்லாம் கட்டி வைத்துவிட வேண்டும். ஏற்கனவே இந்தியாவிலேயே ஒரு ஸ்டேடின் கவர்ன்மெண்ட் சிங்கில் பார்ட்டி கவர்ன்மெண்ட் Single Party Government என்று நம்முடைய அரசாங்கத்தைப் பெருமையாகச் சொல்லலாம். அப்படிப்பட்ட நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. புதிதாகத் தொழில்கள் ஆரம்பிக்க நினைக்கும் தொழிலதிபர்கள் வசதி படைத்தவர்கள் இந்தச் சர்க்காரை நம்பித்தான் தொழிலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் நீங்கள் தெளிவாக நடந்து கொள்ள வேண்டும். சோஷலிஸம், கம்யூனிசம் என்றெல்லாம் இப்படிப்பட்ட மனப்பான்மையை வைத்துக்கொண்டு மீட்டிங்குகளிலே அப்படிச் செய்கிறோம் இப்படிச் செய்கிறோம் என்று அப்ளாஸ் வாங்குவதற்காகப் பேசிக்கொண்டு போனது ஒன்றும் சரிப்படாது. முன்பு Law Minister ஆக இருந்தவர்கள் இப்பொழுது Industries Ministers ஆகவும் ஆகியிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 18-ம் தேதி அவர்கள் கன்னிமாரா ஹோட்டலில் பேசியிருக்கிறார்கள்.

The Industries Minister Thiru S. Madhavan yesterday frankly told financiers and entrepreneurs not to worry much about Government's policy statements made from time to time for political reasons but to go ahead with the new ventures and expansion of the existing ones.

என்று சொல்லியிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அவர்கள், ஹிந்து, மெயில் இந்த இரண்டு பத்திரிகைகளை மட்டும் படித்துப் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மற்றப் பத்திரிகைகளையும் படித்தால்தான் தெளிவாக நான் என்ன பேசியிருக்கிறேன் என்பது தெரியும். அவர்கள் தங்களுக்குச் சாதகமான பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு பாதகமான பகுதியை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். நான் சொன்னது. . . .

Don't bother about political theories and theses of political parties but take note of the economic policies of Government that will help development of the country.

என்பதுதான்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** விளக்கத்திற்கு நன்றி. கவர்னர் அவர்களுடைய உரையைப் பொறுத்த வரையில் நான் ஆதரித்து ஓட்டு போடுகிற ஆள். நான் குறை சொல்லிப் பேச வரவில்லை.



1969 பிப்ரவரி 25] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

கம்யூனிஸ்ட்கள் மனப்பான்மை, அந்த மனப்பான்மை, இந்த மனப்பான்மை என்றெல்லாம் சொல்லி அதனால் தொழில் நடத்துகிற ஆட்கள் போய்விடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. என்பதால் சொன்னேன். தொழில் மந்த நிலையை நீக்கி வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய முயற்சியில் இந்த மந்திரிசபை ஈடுபட வேண்டும். இந்த மந்திரிசபை, முன்னால் இருந்த மந்திரிசபை நன்றாகத்தான் இயங்கிக் கொண்டிருந்தது, அதைப்போல் நன்றாகத்தான் இயங்க ஆரம்பித்து இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக மந்திரிசபை விஸ்தரிப்புச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். நான்கூட அடிக்கடி கூட்டங்களில் பேசும்பொழுது சொல்லுவேன், இந்த மெட்ராஸ் (Madras) மந்திரிகள் மிகவும் பேராசை பிடித்த ஆட்கள், எல்லா போர்ட் போலியோ (Portfolio) க்களையும் அவர்களே, பைல்கள் குவிந்தாலும் பரவாயில்லை என்று வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், இன்னும் நாலு பேர்கள் போட்டால் என்ன என்று சொல்லியிருக்கிறேன். மற்ற ராஜ்யங்களிலே 3 எம்.எல்.ஏக்களுக்கு ஒரு மந்திரி. அது என்ன மந்திரிசபையோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். அந்த மந்திரிசபையைப் பார்த்தால் வாந்தி எடுக்க வருகிறது. ஏதோ 18 கட்சிகள் இருக்கின்றனவாம், நல்ல வேளையாக 120 கட்சிகளாக இல்லை. இது என்ன ஜனநாயகமோ, கருமம். ஆகவே இந்தப் புதிய மந்திரிசபையைப் பொறுத்தவரையில் நம்முடைய புதிய முதலமைச்சர் தலைமையில் உள்ள மந்திரிசபையில் 11 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ராசியுள்ள இலக்கம் அது. ஆகவே மந்திரிசபை நல்லமுறையில் அமைந்திருக்கிறது.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் சம்பந்தமாக திட்டக் கமிஷன் மெம்பர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைப் பார்த்துக்கூட நம்முடைய முதலமைச்சர் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை கைக்குள் போட்டுக்கொண்டு, நல்ல மனுஷன் அவர், அவர் மூலமாகத் திட்டக் கமிஷனிலிருந்து தென் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழ் நாட்டுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய தயாராக இருப்பார்கள். பெற்றுக்கொள்ளவேண்டும். இங்கே உள்ள காங்கிரஸ்காரர்கள் மாதிரி அல்ல அவர். அவர் வேறு . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் பற்றிச் சொன்னதை அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மன்னித்துக் கொள்ள வேண்டும் அவர்கள். இங்கே உள்ள காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் விரிந்து கொஞ்சம் சுருங்கிச் செல்பவர்கள். அது ஒரேடியாக விரிந்திருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன். அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இந்த மூன்று வருட காலத்தில் நல்ல முறையில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து வேலை வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். டெவலப்மெண்ட் வேலைகளையும் நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கம்யூனிஸ்டு

மனப்பான்மை என்று சொன்னது—இப்படி இருக்கிற புண்ணிய வாளர்கள் ஜனநாயக சோஷலிஸம் என்று ஏதாவது வோட்டுக்காக பேசி நாட்டைக் குழப்பி, 2 அல்லது 3 கட்சிகள் இருக்கக்கூடிய அரசியல் முறையை நாட்டிலே இல்லாமல் செய்துவிட்ட புண்ணிய வான்களய்யா—அது வளர்ந்து நாட்டிலே ரொம்பவும் துன்பங்கள் வர ஏதுவாக இருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான்.

கம்யூனிஸ்ட் மனப்பான்மை என்று சொல்லும் அதே சமயத்தில் இங்குள்ள கம்யூனிஸ்ட் நண்பர்களைப்பற்றி ரொம்ப உயர்ந்த அபிப்பிராயம் உள்ளவன். அவர்கள் நன்ருகப் படித்தவர்கள், இந்த நாட்டின் சுய ராஜ்யத்திற்காகப் பாடுபட்ட தியாகிகள். அதே நேரத்தில் அவர்கள் ஒரு கட்சியை நடத்த வேண்டுமென்று சொன்னால் எதையாவது நாலைச் சொல்லி காரியம் பண்ண வேண்டியிருக்கின்றது.

**திரு. என். சங்கரய்யா:** கனம் உறுப்பினர் அவர்கள் பேசும் போது கொள்கைகளினுடைய அடிப்படையில் பேசாது கட்சியை நடத்த எதையாவது நாலைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று கூறுவது கம்யூனிஸ்ட் கட்சியை அவதூறு செய்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட அவதூறுகளை இந்த மன்றத்தில் கூறுவது சரியல்ல என்று கருதுகிறேன். அதைப்பற்றித் தீர்ப்பளிக்க வேண்டு மென்று கோருகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** இதை எதற்காகச் சொல்ல வந்தேன் என்று சொன்னால் கீழ்த் தஞ்சையில் நடைபெற்ற சமீபகால சம்ப வங்களைப் பொறுத்துத்தான். பொதுவாகக் கூலித் தகராறு, விவசாயிகள் கிளர்ச்சி என்பது நாலைந்து வருஷ காலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சர்க்கார் வந்த பிறகு அது கொஞ்சம் ஜாஸ்தியாகிவிட்டது. அதற்குக் காரணம் முன்னால் 2 பேராக இந்த மன்றத்திலிருந்தவர்கள் தற்போது 13, 15 என்ற அளவுக்கு இருப்பதுதான் என்று நினைக்கிறேன். நம்முடைய நண்பர்கள் கூட்டு அடிப்படையில் வந்துள்ள காரணத்தால் கொஞ்சம் வேகமாக வேலைகள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கூலித் தகராறு என்று ஒன்றும் கிடையாது. 'நிலப் பிரபுக்கள்' என்று சொல்லு கிறார்கள். லாண்ட் சீலிங் (Lnad ceiling) வந்த பிறகு நிலப் பிர புக்கள் எங்கே இருக்கிறார்கள்? இங்கிலாந்தில் வேண்டுமானால் பிரபுக்கள் சபை இருக்கிறது. இங்கே பிரபுக்கள் என்ற வார்த் தைக்கே அர்த்தமில்லை. இங்கே இருப்பவர்கள் லாண்ட் ஹோல் டர்ஸ் (Land holders) தான். தஞ்சை ஜில்லாவில் ஆறு லட்சம் சிறிய பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். கூலித் தகராறு எங்கே இருக்கிறது? மன்னார்குடி ஒப்பந்தம் என்ற ஒரு ஒப்பந்தம் இருந்தது. அந்த ஒப்பந்தத்தையும் விட குறைந்த கூலியில் அறுவடை செய்ய தொழிலாளர்கள் வந்தால் அவர்களைத் தடுக்கிறார்கள். எங்களுக்கு அரை வயிற்றுச் சாப்பாடாவது கிடைத்தால் போதும் என்ற நிலையில் இராமநாதபுரத்திலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்யப் போனால் 'ஏ கொஞ்சம் நில், என்னைக் கேட்டுக்கொண்டு





வேலைக்குப் போ' என்று அவனைத் தடுத்து நிறுத்துகிறார்கள். அவன் ஜோலிக்கு அவன் போகிறான், நீங்கள் போய் ஏன் தடுக்கி றீர்கள்? இதெல்லாம் என்ன ஜோலி? அவர்கள் தடுக்கிறார்கள், போலீஸ் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தினமணி பத்திரிகை யில் படித்ததாக கவனம். இரண்டு தினங்களுக்கு முன்பு கீழ்த் தஞ்சையில் நன்னிலம் போலீஸ் ஸ்டேஷன் லிமிட்டில் அறுவ டைக்குப் போன ஆட்களைத் தடுத்திருக்கிறார்கள். அதனால் கலகம் ஏற்பட்டு அநேக பேர்களுக்குக் காயம். நான் சர்க்காரைப்பற்றிக் கொஞ்சம் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். சென்ற இரண்டு வருஷமாகவே சர்க்காருடைய கொள்கை என்ன என்பதே போலீசுக்கு விளங்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் சார்ஜ் சொல்லுகிற ஆங்கிள் (Angle) வேறு. அவர்கள் எப்படியாவது ஆட்டைத் தூக்கி குட்டியில் போட்டு, குட்டியைத் தூக்கி ஆட்டில் போட்டு 72-ல் எதையாவது பார்க்கலாமா என்று நினைக்கிறார்கள்.

Backing the public mind in confusion.

நான் சொல்லுவது சட்டப்படி போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு 'ஃப்ரீ ஹாண்டை (Free hand) விட வேண்டுமென்பது. முன்னால் கொலை கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை ஒரு வருஷத்திற்கு முன்பு சொன்னார்கள். இப்போது வெண்மணி கிராமத்தில் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டு மிருகத்தனமான செயல் எப்படியோ நடந்திருக்கிறது. மனிதனாக உள்ள எவனும் வருந்தாமல் இருக்க முடியாது. அதற்குப் பிறகு இப்போது மூன்று கொலைகள் நடந்திருக்கின்றன. அவர்களுடைய பாஷை யில் மிராசுதாரர்கள், நம்முடைய பாஷையில் நிலச் சொந்தக் காரர்கள். நிலச் சொந்தக்காரர்கள் மூன்று பேரைக் கொலை செய்திருக்கிறார்கள். கூலித் தகராறு என்று ஆரம்பித்து இந்த மாதிரியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் என்ன நினைக்கிறது என்பது போலீசாருக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும். சமீபத்தில் ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவரைப் போட்டு கூலிப் பிரச்சினையைப்பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமித் திருக்கிறார்கள். இதற்கு மத்தியில் 'இன்டரிம் அவார்டு' (Interim Award) கலெக்டர் கொடுக்கிறார். என்ன தலைமுழுகிப் போய் விட்டது? இது 'என்கரேஜ் தி ராங் எலிமென்ட்ஸ்' (Encourage the wrong elements) என்ற அளவில்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள்தான் துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம். சோஷலிசம் என்று சொல்லுவார்கள். எல்லோருக்கும் செழிப்பு வந்த பிறகு பங்கு போட வேண்டும், இப்போது சாப் பாட்டுக்கு வழி இல்லாத நிலையில் தரித்திரத்தையா பங்கு போடு வது? சர்க்கார் தொழிற்துறையிலும், விவசாயத் துறையிலும் இந்தமாதிரி துன்பங்கள் ஏற்படாமல் பார்த்து 'லா அண்டு ஆர்டரை' (Law and Order) நல்லவிதமாக நிர்வகிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பார் கள். விவசாய அமைச்சருக்குத் தெரியும். ஒரு ஏக்கர் கரும்பில் எவ்வளவு வருமானம், ஒரு ஏக்கர் மிளகாயில் என்ன வருமானம்,

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1969 பிப்ரவரி 25

அதே சமயத்தில் ஒரு ஏக்கர் நெல் போட்டால் என்ன வருமானம் என்று. நெல் போட்டால் 250 ரூபாய் கிடைக்கும். மற்றவற்றுக்கு ரூபாய் 1,500 முதல் 2,000 வரை கிடைக்கும். பிளாக் மார்க்கெட்டில் விற்றால் அதைவிடக் கூடக் கிடைக்கும். நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள் வருமானம் குறைந்த மிடில் கிளாஸ்—மத்திய தர வர்க்கத்தினர் (Middle class) தான். சங்கம் அமைத்துக்கொண்டு இவர்களிடம் போய் விடிய விடியக் கூக்குரல் செய்தால் எப்படி வாழ்வது இந்த நாட்டில்? ஆகவே, நம்முடைய முதல் மந்திரி அவர்கள் மாயா ஜால வார்த்தைகளில் மயங்கி விடாமல் ஸ்திரமான சர்க்காரை நடத்தி ஜனங்கள் மனதில் நல்ல நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும். அதுதான் இப்போது சர்க்காருடைய தலையாய கடமை.

அடுத்தபடியாக, வழக்கம்போல் உள்ள பல்லவி, உணவுப் பிரச்சினை. (மாண்புமிகு திரு. மதியழகன் அவர்களையும் கோவிந்தசாமி அவர்களையும் சுட்டிக்காட்டி) அந்தத் துறை இங்கிருந்து அங்கு போய்விட்டது. நல்ல பெயர் வாங்க முடியாது என்று மாற்றிவிட்டார்களோ, என்னவோ தெரியவில்லை. தற்போது உள்ள உணவு அமைச்சர் அவர்கள் என்னைப்போல் உடம்பு சரியில்லாத ஆள். ஆகவே, அதிலே நான் ரொம்ப ஜாஸ்தி ஒன்றும் சொல்லப் போவதில்லை. சொல்லிச் சொல்லி எனக்கும் உங்களுக்கும் புளித்துப் போய்விட்டது. தேர்தலுக்கு முன்னால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். ஒரு படி அரிசி, மூன்று படி அரிசி என்று சொன்னதெல்லாம் 'ஸ்லிப் ஷாட்' (Slip shod) அதைவிட இன்னொரு முக்கியமான வாக்குறுதியைக் கொடுத்தீர்கள்—கொடுத்தோம் கூட்டணி சார்பாக. உணவு தாராளமாகக் கிடைக்கும், இனி க்யூ வரிசையில் நிற்க வேண்டாம், மலிவான விலையில் கிடைக்கும்—புது சர்க்கார் அமைக்க வாய்ப்பு ஏற்பட்டால்—என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் இப்போது காஞ்சிபுரத்தில்கூட, எந்தக் காலத்திலும் ஒரு படி அரிசி 1¼ ரூபாய்க்குக் கிடைக்கக்கூடிய இடத்தில்கூட...படி அரிசி 2½ ரூபாய் என்று விற்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, அரிசி விலை குறைந்தது தாராளமாகக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் முதலில் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த ராஜ்யம் 'செல்ஃப் சபிஷியன்ட்' (self sufficient) — தன்னிறைவு கொண்ட ராஜ்யம் உணவு விஷயத்தில் ஃபாமலி கார்டும் (Family card) ஒழுங்காகக் கொடுப்பதில்லை. ரேஷனும் அரைகுறையாக நடத்தப்படுகிறது. இதெல்லாம் சரியல்ல. ஐந்து இலட்சம்
மு.ப. 11-30 டன் நீங்கள் ப்ரொக்யூர் செய்யப் போகிறீர்கள். சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் எவ்வளவோ பேர்களை துன்பங்கள் செய்து, மக்களின் மனக் கசப்பை சம்பாத்தியம் செய்து அதன்மூலம் சர்க்காருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது. உங்களுக்கு ஐந்து லட்சம் டன் வேண்டுமா? இன்றே 'வொர்க் அவுட் (workout) செய்து பாருங்கள். கலெக்டர்களைக் கூப்பிடாதீர்கள். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டிலுள்ள கனம் திரவியம் போன்றவர்களை வைத்து அதைக் கொள்முதல் செய்ய முடியுமா என்று பாருங்கள். நான் சொல்வது,



1969 பிப்ரவரி 25] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

'ஃப்ரி ட்ரேடு' (Free trade) க்கு விட்டுவிடுங்கள். அப்போது அரிசி விலை படிக்கு 1½ ரூபாய்க்கு மேல் போகாது. ஆடிக் கோடை வரலாம். 'எமர்ஜென்ஸி' (emergency) வேளையில் அரிசித் தட்டுப்பாடு வரும்போது ஐந்து லட்சம் டன் ஸ்டாக் செய்து வைத்ததை ரிலீஸ் (release) செய்யுங்கள். இதுபற்றி காங்கிரஸ்காரர்கள் உங்களைச் சொல்வதற்கு வழியில்லை. Guilty No. 1 the Congressites. அவர்களால் இந்தப் பாயின்டை எஃபெக்டிவாக சொல்ல முடியாது. அவர்களும் தப்பு செய்திருப்பதால் இதைச் சொல்லமாட்டேன் என்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும். என்னால் அதிகம் பேசமுடியவில்லை. நாகர்கோவில் தேர்தல்பற்றி ஒரு வார்த்தை. நம் நாட்டிலே ஒரு பெரிய தலைவர் நம் காமராஜ் அவர்கள். அவர்கள் நாகர்கோவிலில் நின்று ஜெயித்தார்கள். ஜெயித்ததற்கான காரணங்கள் எல்லோருக்கும் தெரியும். ஏற்கனவே அது 'காங்கிரஸ் மைன்டட் ஏரியா' (Congress minded area) அதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். மேலும் காமராஜ் நாடார் என்று சொல்லி நிறுத்தி ஜெயித்தனர். 'சவுத் ஆர்க்காட்டில்' (South Arcot) கோயங்கா அவர்கள் நின்று ஏரோப்ளேனில் நோட்டீஸ் போட்டார்கள். பயன் இல்லை. வன்னியர் வோட்டு, அன்னியருக்கு இல்லை என்றார்கள். திருக்குறள் முனுசாமி அவர்கள் அனாயாசமாக ஜெயித்து விட்டார்கள். அதேமாதிரி காமராஜ் அவர்கள் 2½ லட்சம் வோட்டுகள் பெற்று ஜயித்தார்கள். தோட்டத்தில் பாதி கிணறு என்பதுபோல் நாடார்கள் வோட்களைக்கொண்டு அடித்துக் கொளுத்திவிட்டார்கள். (குறுக்கீடு) முத்துராமலிங்கத் தேவர் என்பதால் மதித்தார்கள். சாதாரணத் தேவர் என்றால் அதற்காக வோட் போடமாட்டார்கள். இன்னும் திறமையாக வாதம் செய்யலாம், ஆனால் என்னால் அதிகம் பேச முடியவில்லை. அங்கு 'ஹை ஹான்டட்னஸ்' (High handedness) ஜாஸ்தியாக நடந்திருக்கிறது. நம் நாட்டிலேயே நாகர்கோவிலில் நடந்தது மாதிரி 'ஹை ஹாண்டட்னஸ்' (High handedness) இந்த இருபது வருட காலத்தில் எந்தத் தேர்தலிலும் நடந்திருக்க முடியாது என்பது என் அபிப்பிராயம். அதனால்தான் அங்கு 520 போலிங் பூத்களில் 240 பூத்களில் ஏஜென்ட்கள் போட முடியவில்லை. அவ்வளவும் நாடார் பெல்ட் ஏரியா (Belt area) உள்ளே நுழைய முடியவில்லை. சுயேச்சை மெம்பர் தோற்றதில் நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். இவ்வளவு நெருக்கடிக்கிடையிலேயும் டி.எம்.கே. ஆதரவோடு 1½ லட்சம் வோட்கள் வாங்கியது டி.எம்.கே.-க்கு ஒரு கிரேடிட் (credit) தான். அப்படி அவர்கள் ஜெய்த்தது போதாது என்று சொல்லி ஜனநாயக பாதுகாப்பு வாரம் என்று போட்டு அதில் நான்கு பேர்களை பிடித்து அடித்ததாக ஆவலாதி வந்தது. மந்திரி சபை ஒன்றை கவனிக்க வேண்டும். அடிக்கடி உபதேர்தல் வந்து இந்தத் தொந்தரவுகள் வரக்கூடாது. என்னைப்போல் ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் சீக்காளிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு லிஸ்ட் போட்டு (பலத்த சிரிப்பு) இவர்களுக்காக ஒரு ஸ்பெஷல் மெடிக்கல் போர்ட் ஏற்படுத்தி இந்த மூன்று வருடங்களுக்கு

இடையில் இருக்கிற உபதேர்தலுக்கு மேலாக வேறு உப தேர்தல்கள் வராமல பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (பலத்த சிரிப்பு) இப்போது ஜனநாயக பாதுகாப்பு வாரம் என்று போட்டு இனி ஒரு உப தேர்தலில் ஜெயித்துவிட்டால் ஜனநாயக அழிப்பு வாரம் என்று ஆரம்பித்து விடுவார்கள் (பலத்த சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஜனநாயக அழிப்பு வாரம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லலாமா?

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** தொடர்ந்து பேச முடியாத நிலையில் இருக்கிறேன். இந்த மந்திரிசபை சிறப்பாக நடக்க வேண்டும். சட்ட திட்டங்களைத் திறமையாக நடத்தி ஆட்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த புதிய மந்திரி சபையை வாழ்த்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரை மீது நடக்கும் இந்த விவாதத்தில் நான் கலந்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்தில் எந்த விதமான மகிழ்ச்சியும் இல்லாமல மன நிறைவு இல்லாமல், மிகவும் மனக் கஷ்டத்துடன்தான் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசும் படியானதொரு நிலையில் இருக்கிறேன். எனக்கு முன்னால் உட்கார்ந்து அளவளாவி, அன்பையும், பண்பையும், நட்பையும் காண்பித்துக் கொண்டிருந்த திரு. அண்ணாதுரை அவர்கள் இன்று இல்லாத நிலையில் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களது கட்சியினரின் போற்றுதல்களையும், எதிர்கட்சிகளின் பாராட்டுதல்களையும் பெற்ற அவர்கள் மறைந்து விட்ட இந்த நேரத்தில் மகிழ்ச்சிகரமான ஒரு நிலை இல்லாமல் மனக்கஷ்டத்துடன்தான் இதில் கலந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டு வருட ஆட்சியில் நம் நாட்டில் நடந்த செயல்கள் மகிழ்ச்சி தரக்கூடிய நிலையில் இல்லை. கவர்னர் அவர்களது உரையும் மகிழ்ச்சிதரக்கூடிய நிலையில் இல்லை. 1967 தேர்தலுக்குப் பின்னால் நாட்டில் எவ்வளவோ கட்சிகள் எல்லாம் மாறியிருந்தாலும்கூட நாட்டில் நடக்கும் நடப்புக்களைப் பார்த்தால் நாம் எந்தத் திக்கில் போய் கொண்டிருக்கிறோம், தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறோமா என்று நினைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாம் தேச சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். அவ்வாறு பெற்றுவிட்டதன் அடிப்படைத் தத்துவம் என்ன? அந்நிய ஆட்சியைத் துரத்தி விட்டது மட்டும் அல்ல. நாட்டு மக்களுக்குச் சுதந்திர உரிமை வேண்டும். "உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும், சேரா தியல்வது நாடு" என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கின்றார்கள். மக்களின் பசி நீங்க வேண்டும். மக்களின் பிணி நீங்க வேண்டும். மக்களின் வறுமை நீங்க வேண்டும். ஜனநாயக சோஷலிசத்தை அமைக்க வேண்டுமென்றுதான் சுதந்திரத்தை வாங்கினோம். அதைத்தான் 20 வருஷ ஆட்சியிலே செய்தோம். இப்பொழுது பயனடையும்படியான நிலையிலே சில



சவால்கள் எழுகின்றன. சில தவறுகளை நாம் செய்துவிட்டோமோ என்னும்படியான நிலை இருக்கிறது. நான் எந்த அரசியல் கட்சியையும் குற்றம் சாட்ட வேண்டுமென்று வரவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், ஆளுகின்ற கட்சி எதுவாக இருந்தாலும் சட்டம் அமைதியைப் பரிபூரணமாகப் பாதுகாப்பதற்கான பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அவ்வாறு பங்கேற்றுக் கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்பதைத்தான் சொல்ல வேண்டும். அதை நோக்குமிடத்தில் எந்தத் தவறு செய்யப்பட்டிருக்கிறது என்றால், உழைக்காமலே லாபம் பெற வேண்டும், எந்தவிதமான செயலையும் செய்யாமல் எல்லாம் தானாகவே வர வேண்டுமென்ற கெட்ட மனப்பான்மை, சீரழிந்த மனப்பான்மை வளர்ந்துகொண்டு வருகிறது. நாம் கடினமாக உழைத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும், அப்பொழுதுதான் மக்கள் நன்றாக வாழமுடியும். மக்கள் அமைதியாக வாழ சட்டம் அமைதியைப் பாதுகாக்க வேண்டும். அது எந்த அரசாக இருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும், யாராகயிருந்தாலும் அரசியல் நோக்கம் இல்லாமல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, சட்டம் அமைதியைப் பாதுகாக்க, மக்கள் உழைப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டு பண்ண வேண்டும். அவ்வாறு பண்ணியிருக்கிறதா என்று பார்த்தால் 1967-க்குப் பின்னாலே இதுமாதிரி பலவிடங்களிலே இல்லை. இவ்விஷயத்தில் தமிழ் நாட்டில் அக்கறை செலுத்தப்படவில்லை என்ற குற்றச் சாட்டைத்தான் சாட்ட விரும்புகிறேன்.

இரண்டு வருஷங்களாக நடந்த சம்பவங்களைப் பார்த்தால் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்கள் இல்லை. உற்பத்தி பெருகி விட்டது என்று சொல்லலாம். ஆனால் இப்பொழுதிருக்கும் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி சொல்லும்படியான நிலை என்ன? முன்னிருந்த கட்சியின் மீது பழி போடுவது, செய்ய முடியாத காரியங்களுக்கு மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டுவது, இதைத்தான் செய்து வந்திருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் வந்து என்ன காரியம் செய்திருக்கிறார்கள்? இந்தச் சர்க்கார் கொண்டு வந்து நிறைவேற்றிய திட்டங்கள் என்ன? ஏற்கெனவே இருந்த திட்டங்களை விஸ்தரிப்பதைத்தானே செய்து வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையில் எந்தவித ஏற்பாட்டையும் செய்யவில்லை.

இங்கேயும் சரி, வெளியிலேயும் சரி, அவர்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டு, 20 வருஷமாக ஆட்சிபுரிந்து வந்த காங்கிரஸ் கட்சி நாட்டை குட்டிச்சுவராக்கிவிட்டது என்பதுதான். அதை சாதாரணமானவர்கள் பேசினால் அக்கறையில்லை. ஆனால் பொறுப்பு வாய்ந்த முதலமைச்சர், முன்னாலிருந்த முதலமைச்சரும் சரி, இப்பொழுதிருக்கின்ற முதலமைச்சரும் சரி, நாட்டை 20 வருஷங்கள் ஆண்ட காங்கிரஸ் கட்சி குட்டிச்சுவராக்கிவிட்டுப் போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் 20 வருஷங்கள் பொறுப்பிலே செய்த எந்தக் காரியத்திற்காகவும் வெட்கப்பட

வேண்டிய தேவையில்லை. எங்களால் இயன்றவரை மக்களுக்கு 20 வருஷ நல்லாட்சியைக் கொடுத்திருக்கிறோம், நல்ல முன்னேற்றத்தைத்தான் கொடுத்திருக்கிறோம். நாங்கள் போட்ட திட்டங்களினால்தான், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால்தான் நாம் இவ்வளவு பெரிய சுபிட்சத்திலே வந்திருக்கிறோம். எனவே நாங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை என்பதைத் தைரியமாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றப்படவில்லை என்றால் நீங்கள் சொல்லும்படியான எந்தத் திட்டத்தையும் விஸ்தரித்து இருக்க முடியாது. தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால், இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையைச் சுற்றி எவ்வளவு தொழிற்சாலைகள் இருந்தன? 1947-ஆம் ஆண்டு எவ்வளவு இருந்தன? தமிழ்நாட்டிலே எவ்வளவு இருந்தன? ஆனால் 1967-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவே அதற்கு யார் காரணம்? இதற்குக் காரணம் எந்த ஆட்சி, எந்தத் திட்டம் என்பதைத் தயவு செய்து அவர்கள் பார்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விண்ணப்பம். நாங்கள் போட்ட திட்டங்களின் பலனை அனுபவித்து விட்டு இப்பொழுது நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் அது அவரவர்களையே ஏமாற்றிக் கொள்ளுகின்ற காரியமாகத்தான் இருக்கும். அது அரசியலிலே முறையல்ல.

காங்கிரஸ் தவறு செய்திருக்கலாம். செய்தது எல்லாம் பூரணமாக வெற்றி என்னும்படியான பெருமையை எடுத்துக் கொள்ளத் தயாராகயில்லை. முடிந்தவரையில் எந்தக் கஷ்டமிருந்தாலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்திலே நாங்கள் செய்த திட்டங்களில் குறைபாடுகள் இல்லாமல்தான் செய்து வந்திருக்கிறோம். ஆனால் மக்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள், ஜனநாயகத்தில் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வரலாம் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அதைவிடச் சிறப்பாகச் செய்வீர்கள் என்றுதான் உங்களிடம் ஆட்சியைக் கொடுத்திருக்கிறார்கள். உணவுப் பற்றாக்குறை இருந்த அந்த நேரத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 1 படி, 2 படி, 3 படி என்று போடுவோம் என்றீர்கள். ஆட்சிக்கு வந்தவுடன் அவ்வாறு போட முடிந்ததா? போட முடியாவிட்டாலுங்கூட, அதற்கு காங்கிரஸ்காரர்கள் என்ன விளக்கங்கள் கொடுத்தார்களோ அதைவிட மோசமான விளக்கத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். நாங்கள் கொடுத்த விளக்கத்தைவிட மிகவும் சிறப்பான விளக்கத்தை உங்களால் கொடுக்க முடியவில்லை. நாங்கள் என்ன சொன்னோமோ அதே விளக்கத்தைச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்களே தவிர, வேறு முன்னேற்றமான காரியத்தைச் சொல்லவில்லை. பொருளாதாரத் திட்டங்கள் ஏதேனும் உண்டா? மக்கள் அமைதியான முறையில் வாழ்வதற்கு சட்டம் அமைதி பாதுகாக்கப்பட்டதா? பொருளாதாரத் திட்டங்கள் கொடுக்க முடிந்ததா? இல்லை. நாரணம், இயங்கக்கூடிய இயந்திரம் பழுதுபட்டு ஓட்டையான இயந்திரம். அதுதானே தவிர வேறில்லை.

இப்பொழுதிருக்கும்படியான கவர்னர் உரையில் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் எதுவும் இல்லை, சந்தோஷப்பட வேண்டியது





எதுவுமில்லை. எந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கிறார்கள்? ஒரு விஷயம். திரு. அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். வந்தவுடன் முதல் வருஷம் நடந்தது என்ன? வெற்றி விழாவிலே, எல்லா இடங்களிலும் காங்கிரஸை ஒழித்துவிட்டோம். ஒடுக்கி விட்டோம் என்று வெற்றி விழாவிலே இருந்தார்கள். ஒரு வருஷம் இவ்வாறு போயிற்று. அடுத்து, தமிழ் மாநாட்டுப் பெருமை. உலகத் தமிழ்மாநாடு நடத்தினார்கள் என்றால் அதற்கு அடிப்படை காரணம் யார்? நீங்கள் அந்த விழாவை நடத்தியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நடத்த வேண்டுமென்று செய்தவர்கள் மாஜி முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள். அவர்கள் கோலாலம்பூரிலே அவ்வாறு அழைத்திருக்காவிட்டால் நீங்கள் அந்த விழாவை நடத்தி அந்தப் பெருமையைப் பெற்றிருக்க முடியுமா? அதற்கு அவர்களுக்கு நன்றியாவது சொன்னீர்களா? நாங்கள் வந்தவுடன் செய்துவிட்டோம், உலகத் தமிழ் மாநாடு நடத்திவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள்தான் அழைத்தார்கள். ஆகவேதான் இதை நடத்தும்படியான பாக்கியத்தைப் பெற்றோம் என்று அவருக்கு நன்றி சொன்னதாகக்கூட எனக்கு ஞாபகம் இல்லை. அப்படிச் சொல்லியிருந்தால் நான் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) கம்பர் சிலை திறந்ததைப்பற்றிச் சொல்கிறார்கள், முதலில் வைக்க மாட்டேன் என்று தான் சொன்னார்கள். ஆனால் அதை எனக்காக வைத்தார்கள். அதற்கான சரித்திரமே இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : ஐயா, கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் கம்பர் சிலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களுடைய தோற்றத்தில் இருக்கிறது. ஒருவேளை இவர் போஸ் கொடுத்தாரா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: நான் இல்லை என்றுதான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். எந்தப் போஸும் கொடுத்தது கிடையாது. திருவள்ளுவருக்கு எந்தப் போஸ், யார் கொடுத்தார்கள்? எனவே, அது தவறான கருத்து. இதுமாதிரியெல்லாம் சொன்னால் மனத்திற்குச் சங்கடமாகத்தான் இருக்கும்.

எங்கும் தமிழ் வளர்கிறது என்று சொல்கிறார்கள். நேற்று பேசிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி அவர்கள் ஒரு உண்மையைக் கூறினார். தமிழ் ஆட்சிமொழியாகி 13 வருஷங்கள் ஆகிவிட்டன. 13 வருஷங்கள் ஆகியும் தமிழுக்கு உரிய நிலை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்கியது யார்?

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே இருந்த ஆட்சி செய்த குற்றத்தையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். அந்தக் குற்றம் வருகிற இடத்தையும் நோக்குங்கள் என்றுதான் அவரை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். எனவே, எதிர்க்கட்சித் தலைவர்கள் நான் கூறியதை தவறாக உபயோகித்து விடவேண்டாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவரவர்களே, பெருமையைச் சொல்வதற்குக்கூட மறுப்பது வேடிக்கையாக இருக்கிறது. அருமை நண்பர் அவர்கள் அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்வதைக்கூட அவர்கள் இதயம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அது அந்தக் கட்சியோடு சேர்ந்திருப்பதால்தான். 'காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரியும்' என்பதைப்போல் இருக்கிறது அவர்கள் சொல்வது. நான் சொன்னது, 13 வருஷங்களாக இருக்கும் உண்மையைச் சொன்னார்கள், அதற்காகப் பாராட்டுகிறேன் என்று. அதை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்பதற்காக வருந்துகிறேன். 1956-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி தமிழ் நாட்டிலே, தமிழ்தான் சட்ட மொழியாக வரும் என்ற சட்டத்தை செய்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். நாங்கள் செய்த அந்தச் சட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்ற படிப்படியாகத்தான் முன்னேற்றம் செய்து வந்திருக்க முடியுமே தவிர திடீரென்று செய்திருக்க முடியாது. 'பார்த்தீர்களா! இவர்களெல்லாம் செய்யவில்லை, நாங்கள் செய்தோம்!' என்று சொல்கிறார்கள். "முன்னே செய்திருக்கிறார்கள், அதனுடைய தொடர்ச்சியை நாங்கள் செய்கிறோம்" என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதைக்கூட அவர்கள் சொல்வது கிடையாது.

மறைந்த முதலமைச்சரவர்கள், 'நாங்கள் இதை இதை சாதித்திருக்கிறோம்' என்று சொன்ன நேரத்திலே மூன்று காரியங்களைப்பற்றி சொன்னார்கள். 'நாங்கள் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். 'என்ன பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள்' என்று கேட்டோம்? 'தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டோம், போதாதா?' என்று கேட்டார். 'இங்கே தொழில் மந்தம் இருக்கிறதே, தொழில் முன்னேற்றம் இல்லையே' என்று சொன்னோம். 'அதை எதற்காகக் கேட்கிறீர்கள், இதோ பாருங்கள் சுய மரியாதைத் திருமணத்தை நாங்கள் சட்டபூர்வமாக்கி விட்டோம்' என்று சொன்னார்கள். 'வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தீர்களா' என்று கேட்டால், 'இந்தியை ஒழித்து விட்டோம் பாருங்கள், இரண்டு மொழிக் கொள்கையை கொண்டு வந்திருக்கிறோம், பாருங்கள்' என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களே ஒத்துக் கொண்டார்கள். 'நாங்கள் எந்தவிதமானத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை,' என்று. 'நாங்கள் எந்தவிதமான பொருளாதாரத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை, மத்திய சர்க்கார்தான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்!' என்று சொல்கிறார்கள். இதுமாதிரி உணர்ச்சிபூர்வமான காரியங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். உணர்ச்சிபூர்வமான காரியங்களைச் செய்கிறீர்களே நாங்கள் என்ன விரோதிகளா?

'தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டோம், இதைக் காங்கிரஸ்காரர்கள் செய்யவில்லை' என்று சொல்கிறார்கள். இவர்கள் பிறப்பதற்கு முன்னாலேயே காங்கிரஸ் கமிட்டிக்குத் தமிழ்நாடு காங்கிரஸ்





கமிட்டி என்று பெயர் வைத்தோம். திராவிட முன்னேற்றக் கழகம் பிறப்பதற்கு முன்னாலேயே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைக்கப்பட்டதே தவிர, இவர்கள் சொல்லிய ஆலோசனையின்படி வைக்கப்படவில்லை.

சுய மரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமாக்கினோம் என்று சொல்கிறார்கள். இவர்களுடைய குருநாதராக விளங்கக் கூடிய மகாகனம் பொருந்திய ராஜாஜியினுடைய குழந்தையை காந்தியினுடைய மகனுக்குக் கொடுத்து, கலப்புத் திருமணம் செய்திருக்கிறார்கள் அப்பொழுது. இது மாதிரி எத்தனையோ நிகழ்ச்சிகளை நாங்கள் எடுத்துச் சொல்லி விளம்பரம் பெற முடியும். ஆனால், அதையெல்லாம் விளம்பரமா செய்து கொண்டிருந்தோம்? ஆகையால், இது மாதிரி நிலையிலே பார்ப்போமானால் யார் முன் மாதிரியாக இருந்தார்கள்? சமூக சீர்திருத்தம்-அவசியம் செய்ய வேண்டும். அதைச் சட்டபூர்வமாக செய்யுங்கள், நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொன்னோம். எதிர்க்கவில்லை. நான், அப்பொழுது ஒரு ஆலோசனை கூடச் சொன்னேன், 'திருமணச் செலவை ஆயிரம் ரூபாயாகக் குறைக்க வேண்டும்' என்று நான், சீர்திருத்தத் திருமணம்தான் செய்து கொண்டேன் என்று என் திருமணத்தைப் பற்றிக் கூறினேன். அது சீர்திருத்தம் அல்ல, அவசரத் திருமணம் என்று அன்றைய முதலமைச்சரவர்கள் சொன்ன ஹாஸ்யத்தைக் கூட நான் ஏற்றுக்கொண்டேன்.

மறைந்த முதலமைச்சரவர்கள் இரண்டு வருஷத்திற்கும் குறைவாகத்தான் ஆட்சியிலே இருந்தார்கள். அவர் ஆட்சியை செம்மை செய்யலாம் என்று யோசனையெல்லாம் சொன்னார்கள். தம்பிகள் எங்கே செய்யவிட்டார்கள்? முதல் வருடம் வெற்றி விழா. மறைந்த முதலமைச்சரவர்களே, தம்பிக்கு எழுதிய கடைசிக் கடிதத்திலே, 'முதலமைச்சர் என்றால் சூழ்நிலையின் கைதி,' என்று குறிப்பிட்டிருந்தார்கள். எனக்கு ரொம்பவும் கஷ்டமான, சிரமமான ஒரு காரியத்தை செய்யும்படி என்னிடம் கொடுத்திருக்கிறார்கள் என்று எழுதியுள்ளார். அதைத் தப்பாகச் சொல்லவில்லை. அவரை வேலை செய்யத் தம்பிகள் விடவில்லை. இங்கே தம்பிகள் விடவில்லை, வெளியிடத்திலே தம்பிகள் விடவில்லை, செக்ரட்டேரியட்டிலே, செக்ரட்டேரியட் தம்பிகள் விடவில்லை. வீட்டிலே தம்பிகள் விடவில்லை. போக் குழந்தைகளோடு கூடப் பேச முடியாத அளவுக்கு, அவர் 'சூழ்நிலையின் கைதி' என்று சொல்லும் அளவுக்கு அல்லவா தம்பிகள் வைத்திருந்தார்கள். தம்பிகள் என்ன பிரச்னையைப் பற்றி அவரைச் சூழ்ந்திருந்தார்கள்? மந்திரி சபை விஸ்தரிப்பு வேண்டும் என்றார்கள். அவர் அடிக்கடி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். 'ஆகட்டும் பார்க்கலாம்,' 'பிறகு பார்க்கலாம்' என்று ஏதேதோ சொல்லி வந்தார். ஆனால் தம்பிகள் விடவில்லை. அமெரிக்கா போனார், அங்கும் இரண்டு தம்பிகள் விடவில்லை, இங்கே செக்ரட்டேரியட்டிலே தம்பிகள் வேலை செய்ய விடவில்லை. வீட்டிலே விடவில்லை, அவரைத் தூங்கக் கூட விடவில்லை டெல்லியிலே கூட விடவில்லை,

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 பிப்ரவரி 25

இரண்டு தம்பிகள் கூடவே படுத்துக் கொண்டிருந்தார்கள். நான் பார்த்தேன். அவர் சிந்திப்பதற்கு, அரசியலைப் பற்றி முடிவெடுப்பதற்கு எங்கே விட்டார்கள்? அவர் மன நோய் தாங்க முடியாமல் நோய்வாய்ப்பட்டிருப்பாரோ, உடல் பாதிக்கப்பட்டிருக்குமோ என்று நான் மிக மிக கஷ்டப்பட்டேன். நான் அவரிடம் சொன்னேன், 'நீங்கள் தயவு செய்து ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள், கஷ்டப்பட வேண்டாம்,'' என்று. மறுபடியும் தம்பிகளுடைய தொல்லை அவருக்கு அதிகமாகியதே தவிர தம்பிகள் அவரை சிந்திக்கவிட்டது கிடையாது. அவர்மீது நான் குற்றம் சாட்டவில்லை. அவர் மிகவும் சிறந்தவர், மிகவும் உயர்ந்தவர், நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே இருந்தார்கள். அந்த எண்ணத்தைச் செயலிலே கொண்டு வருவதற்கான சூழ்நிலை ஏற்படும்படி இவர்கள் விடவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் ஒரு தீர்வு கண்டு அவர்களும் கையெழுத்துப் போட்டார்கள். ஓர் ஒப்பந்தத்தில் அதை நிறைவேற்ற முடிந்ததா? அதோடு மட்டும் அல்ல, இங்கே ஒவ்வொரு கஷ்டமான காரியம் ஏற்பட்டபொழுதும் அவருடைய உள்ளம் பட்ட துன்பம் எல்லாம் எனக்குத் தெரியும். மாணவர்கள்–பஸ் தொழிலாளர்கள் கிளர்ச்சி சென்ற மார்ச் மாதம் நடந்தது. அப்பொழுது அவர் இங்கு எனக்கு எதிர்ப்பக்கத்திலே உட்கார்ந்திருந்தபோது அவருடைய முகத்தைப் பார்க்க எனக்கே சகிக்கவில்லை. ஒவ்வொரு காரியத்தின் போதும் அவர் பட்ட கஷ்டங்கள், அந்த கஷ்டங்களை நீக்க முடியாத நிலையிலே அவருக்குக் கொடுக்கப்பட்ட தொல்லைகள். இவைகளினாலேதான், அவர் தன்னைப்பற்றி 'சூழ்நிலையின் கைதி' என்று எழுதி இருந்தார்கள். இதுவரை இங்கு இருந்த பிரச்சினைகளை எல்லாம் எடுத்து பார்ப்போமானால், இதுவரைக்கும் 20 மாத அரசாட்சியில் இவர்கள் இதுவரையிலே ஒரு அறிக்கை இங்கு வைத்தார்களா? நடந்ததைப்பற்றி இங்கே சொன்னால் மின்னல் சொன்னார். மின்னல் வேகத்திலே நடந்ததற்கு அறிக்கையை வைப்பதற்கு ஒரு வருடமா? பஸ் தொழிலாளர்–மாணவர் பிரச்சினை, எதற்கும் அறிக்கை வைக்கவில்லை. அவர் நல்ல மனிதர்தான். ஆனால் நிதானமானவர். அதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருந்தேன், அந்த நிதானம் அரசியலுக்கு ஒவ்வாது என்று, தனிப்பட்ட முறையிலே நிதானம் ஒத்துக் கொள்ளுமே தவிர, அரசியலில் சீக்கிரம் செய்தல் வேண்டும்.

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு',

என்று வள்ளுவர் சொன்னார். அந்த நிலையிலே நிதானம் வேண்டும். தீர்மானம் செய்யும்வரை நிதானம் வேண்டும். தீர்மானித்ததற்கு பின்னாலே அதை நிறைவேற்றுவதற்கு ஆற்றலும், சக்தியும் வேண்டும். அந்த ஆற்றலுக்கும் சக்திக்கும் இதயமும் வேண்டும். அந்த நிலையிலே நாம் பார்ப்போமானால் அவர்கள் எடுத்துக்கொண்ட தீர்



1969 பிப்ரவரி 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

மானத்தை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக அவர்கள் தம்பிகள் இருக்கவில்லை என்னும்படியான குற்றத்தை நான் சாட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையிலே அரசாங்கம் எப்படி இருக்கிறது? கட்சி அரசாங்கம் தான் நடந்து வருகிற சூழ்நிலை இருக்கிறதே தவிர மக்களுக்காக நடக்கவில்லை. 'பாசிஸ்ட்' என்று சொல்லக்கூடிய நிலையில் காங்கிரஸ்காரனை ஒழித்துவிட வேண்டும் என்ற நிலையில், தங்கள் கட்சியை வளர்க்க வேண்டுமென்ற நிலையில்தான் ஆட்சி செய்கிறார்கள் என்னும் குற்றத்தைச் சாட்டுகிறேன் ஆதாரத்தோடு.

பள்ளிக்கூடத்திலே கொடுக்கும்படியான கேள்வித்தாள்களிலே இருந்து, கேட்கும் முறைகளிலேயிருந்து ஒரு சர்வாதிகாரப் போக்கிலேதான் நடந்து கொண்டிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தவுடனே சத்தியமங்கலம் உயர்நிலைப்பள்ளியிலே கேள்வித்தாளிலே ஒரு கேள்வி கேட்கப்பட்டது, 1967-ம் வருஷத்திலே கோபிசெட்டிப்பாளையம் பாராளுமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு தோற்ற உணவு அமைச்சருடைய பெயர் என்ன? இன்னொரு கேள்வி, வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகருடைய பெயர் என்ன? இது என்ன கேள்வியா? அமைச்சருடைய பெயரை கேட்டுக் கொள்ளட்டும். ஆனால், உணவு அமைச்சரை தோற்கடித்த பெருமை எனக்குத் தான் என்ற முறையிலே பள்ளியிலே இரண்டாவது கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றுதான் நான் நினைக்கிறேன். மற்றொன்று, சி.எம்.எஸ் உயர்நிலைப்பள்ளி, திருவில்லிபுத்தூர். அந்த பள்ளியின் 7-வது வகுப்பு அரையாண்டுத் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம் சர்வாதிகார மனப்போக்கையே காட்டுகின்றன. 7-வது வகுப்பில் கேட்கப்பட்ட கேள்விகள். அந்தக் கேள்வித்தாளிலுள்ளது, 'ஏதாவது 15 கணக்குகள் மட்டும் செய். முதல் கேள்வி, ரூபாய் 2,736-ஐ 2:3:4 என்ற விகிதத்தில் D.M.K. -க்குப் பிரித்துக் காட்டு. இதுமாதிரி எங்காவது கேள்வி கேட்டது உண்டா? X : Y : Z என்று கேட்பார்கள். D.M.K. -க்குப் பிரித்து காட்டு என்று கேட்கப்பட்டிருக்கிறது என்றால் D.M.K. என்னும் நிலையிலே கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அடுத்த கேள்வி, M : G = 3 : 4 ; G.R. = 4 : 5 ஆனால் M.G.R என்ன? கேள்வியா இது? வேடிக்கைக்காகக்கூட அரசாங்கம் இப்படி செய்யலாமா என்று கேட்கிறேன்? இதைவிட சர்வாதிகாரப் போக்கு என்ன இருக்கும்? மற்றொரு கேள்வி, கருணாநிதியின் சம்பளம் ரூபாய் 500 இதில் 4/5 பாகம் செலவு. செலவு எவ்வளவு? மீதி எவ்வளவு? செலவு ரூ. 400, மீதி ரூபாய் 100. இப்படியா கேள்வி கேட்பது? அதைவிட மாண்புமிகு கருணாநிதி என்று போட்டிருக்கலாம். இப்படி போட்டால் வேறு கருணாநிதி என்று சொல்லிக் கொள்ளலாம் என்று போட்டிருப்பார்கள். மற்றொரு கேள்வி, 'நெடுஞ்செழியன் 4 மணியில் பிரயாணம் செய்த தூரம் 22½ கி.மீ. என்றால்

ஒரு மணியில் அவர் பிரயாணம் செய்தது எத்தனை கி.மீ.? நல்ல வேளை, அவர் நடந்ததிலே எவ்வளவு 'ஸ்பீட்' என்று கேட்கவில்லை. இன்னொரு கேள்வி, தீ பிடித்த குடிசைகள் 980. இதில் .75 பாகம் தீ பிடிக்காத வீடுகள கட்டிக் கொடுக்கப்பட்டால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எத்தனை? இதைவிட ஒரு அரசியல் இருக்க முடியுமா? இதைவிட ஒரு கட்சியை வளர்க்கும்படியான மனப்பான்மை இருக்க முடியுமா? இன்னொன்று, கூட்டு வியாபாரம் பற்றிய கணக்கு. மதியழகன், கோவிந்தசாமி,
ந.00 12- மாதவன் ஆகிய மூவரும் முறையே ரூ. 6000, 7500, 4500 முதல் போட்டு வியாபாரம் செய்ததில், ரூ. 5,760 லாபம் கிடைத்தது. கூட்டில் கூட லாபம் இருக்கிறது போலும்! ஒவ்வொருவருக்கும் கிடைத்த லாபம் என்ன? இது ஒரு கேள்வி. இந்த நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடக்கிறது. இது எதை எடுத்துக் காட்டுகிறது? சர்வாதிகார மனப்பான்மையைத்தான். பள்ளிகளில் இந்த நிலைமை இருக்குமானால் இவர்களுடைய ஆட்சியில், போலீஸ் ஸ்டேஷன்களில் என்ன நிலை இருக்கும், ரெவின்யூ டிவிஷன் ஆபீசில் என்ன நிலை இருக்கும்? அங்கெல்லாம் என்ன வேலை நடக்கும்?

என்னுடைய தொகுதியில் பார்லிமெண்டு உறுப்பினர் கலெக்டர் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றிய நோட்டீசை அச்சடித்து அனுப்புகிறார்கள். கலெக்டர் போகும்படியான இடத்திற்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறார்கள். கலெக்டரும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாவட்ட கலெக்டர் பாங்கோ அவர்கள் சுற்றுப் பிரயாணம்--பி.எ. சுவாமிநாதன், எம்.பி. என்று இப்படி நோட்டீஸ் அச்சடித்துக் கொடுக்கிறார்கள். இவர்கள் போன இடங்களிலெல்லாம் காரியங்களைச் செய்து தருவதாகச் சொல்லி, விண்ணப்பங்கள் கொடுக்க வேண்டியதுதான், உத்தரவுகள் போடவேண்டியதுதான். இதற்கு காரணம் என்ன? தி.மு.க. ஆட்சியில், எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் மட்டுமல்ல, சர்க்கார் அதிகாரிகள்கூட காங்கிரஸ்காரர்களை ஏளனம் செய்யும்படியான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நான் ஊட்டிக்குப் போயிருந்தேன். இந்த மாணவர்கள், பஸ் தகராறுதான், கண்டனக் கூட்டம் போட வேண்டும் என்று போயிருந்தேன். கலெக்டர் அவர்கள் மாதம் பூராவும் 144 தடை உத்தரவு போட்டுவிட்டார்கள். நவம்பர் மாதம் 11-ம் தேதி ஒரு கண்டனக் கூட்டம் நடத்துகிற சமயத்தில் 1000 போலீஸ்காரர்கள் தருவித்து விட்டார்கள். அதையும் ஏற்றுக் கொண்டோம். டிசம்பர் மாதம் 7-ம் தேதி ஒரு பொதுக்கூட்டத்தைப் போட்டு கண்டனம் செய்ய வேண்டும் என்று வேண்டினோம். எந்தவிதமான கோஷமும் வேண்டாம், கோஷம் போட்டால் தகராறுகள் வரும். கோஷமில்லாமல் ஒரு ஊர்வலம் நடத்தினால், தகராறு ஒன்றும் வராது என்று கலெக்டர் அவர்களிடம் சொன்னோம். கலெக்டர் அவர்கள் என்ன பேசினார், தெரியுமா? எதிர்க் கட்சித் தலைவர் வந்தாரே, ஏன் அவர் என்னை வந்து பார்க்கவில்லை?





என்று கேட்டிருக்கிறார். உங்கள் ஆட்சியில், மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாங்கள் கலெக்டர் மட்டுமல்ல, எல்லா அதிகாரிகளிடமும் காலில் விழவேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

எனக்கு ஒருவர் எழுதுகிறார். எழுதுவது மட்டும் அல்ல. அவர் என்னை மிரட்டியிருக்கிறார். 'ஜாக்கிரதை' என்று மிரட்டுகிறார். ஒரு டி.எஸ்.பி. நாகர்கோவில் தேர்தலின்போது போஸ்டு செய்யப்பட்டவர் எனக்கு லெட்டர் டைப் அடித்து எழுதியிருக்கிறார். அவர் டி.எஸ்.பி. நாகர்கோவிலில் போஸ்டு செய்யப்பட்டவர். அவர் எழுதியிருக்கிறார்.

"நீங்கள் காங்கிரஸ் பார்ட்டி தலைவர். நீங்கள் வந்து என்னைப் பற்றி மிகவும் அவதூறாகப் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். காமராஜ் அவர்கள் ஜெயிப்பதற்காக, அவர் காங்கிரஸ் வேட்பாளர் என்ற முறையில், நீங்கள் அவருக்காக பிரசாரம் செய்ய கடமைப் பட்டிருக்கிறீர்கள் . . ."

'I had to come down quite unwillingly to my District for election duty with a protest.'

அவர் மேலும் சொல்லியிருப்பதாவது:

"அமைச்சர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி போடப்பட்ட உத்தரவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில்தான் அங்கே வந்திருக்கிறேன்". டி.எஸ்.பி. அவர்களே எழுதியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல.

"என்னிடத்திலே சில இளைஞர்கள் வந்து உங்களை ஒரு கை பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டார்கள்" . .

'Although many young men approached me to allow them to insult you, I warned them severely against paying you in the same coin.' டி.எஸ்.பி. அவர்களே கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். சபாநாயகர் அவர்கள் மூலம் நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கடிதத்தைச் சமர்ப்பிக்கிறேன். இந்த மாதிரி நிலையிலே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இந்தச் சபையில் இல்லாதவர்களைப்பற்றி இங்கே குற்றம் சாட்டினால், அந்தக் குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கக்கூடிய சந்தர்ப்பம் குற்றச்சாட்டு யார்மீது சாட்டப்படுகிறதோ அவருக்கு இல்லையாதலால், இந்த அவையில் இல்லாதவர்களைப்பற்றி இங்கே கூறுவது முறையாகாது. கடிதத்தைப் படிக்காமல், கருத்துக்களை மட்டும் சொல்வதாக ஏற்கனவே எதிர் கட்சித் தலைவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்னிடம் ஒத்துக்கொண்டு விட்டு, இப்பொழுது அந்தக் கடிதத்தை இங்கே படிப்பது முறையாகாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கடிதத்தைப் படிக்கவில்லை. கருத்துக்களைத்தான் சொல்கிறேன். இதற்கு முன்னாலேயே தங்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறேன். அதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். கடிதம் எழுதியிருக்கிறார்கள். சுட்டிக் கொல்கிறேன் . .

[1969 பிப்ரவரி 25

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அம்மாதிரி கடிதம் எழுதியிருந்தால், அதற்கு எல்லாம் நடவடிக்கை எடுப்பதற்கு வேறு முறை இருக்கிறது. அதை இந்த அவையிலே எடுத்துக் கொள்வது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆகவே, கட்சி அரசாங்கம்தான் நடத்தப்படுகிறது. மக்களுக்காக அரசாங்கம் நடத்தப்படவில்லை. முதலில் பள்ளிக்கூடங்களில் ஆரம்பித்தால்தான், கட்சி வளரும் என்ற நிலையிலே, அவர்களுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய செல்வாக்கு எந்த இடத்தில் அவசியமாக இருக்கிறதோ, அந்த இடத்தில் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்தில், கம்பம்-புதுப்பட்டி கிராமத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளி தனிப்பட்டவர் ஒருவர் நடத்திக் கொண்டிருக்கிறார். 7,000 ஜனத்தொகை உள்ள இடத்தில் தனியார் பள்ளி அங்கே நடந்து கொண்டிருக்கிறது. 300 பேர்கள் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் 1965-ம் வருஷத்திலிருந்து ஆரம்பித்து நடத்திவரும்படியான அந்தத் தனியார் பள்ளியை அந்தப் பகுதியைச் சார்ந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. நடத்தி வந்தார். காங்கிரஸ்காரர் நடத்திவந்த அந்தப் பள்ளியை தீர்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி அந்த இடத்திலே 1967-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அங்கே 50 பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். அதற்கு ரூ. 30,000 செலவு செய்யப்படுகிறது. முன்னால் இருந்த கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் நான் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். 7,000 பேர்கள் உள்ள கிராமத்தில் 350 பேர்கள் படிப்பதற்கு வயது வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் தனியார் பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. அதில் தவறு இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி தவறு இருக்குமானால், மானேஜ்மென்டார் மீது நடவடிக்கை எடுக்கலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. அங்கே இருக்கும்படியான அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.-யின் செல்வாக்கை வளர்ப்பதற்கு அங்கே ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். காங்கிரசுக்கு அனுதாபமாக இருப்பவர்களை தொலைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் அப்படிச் செய்திருக்கிறார்கள். கஷ்டப்படுத்தி, டி.சி. வாங்கி 50 பேர்களை கவர்ன்மென்டு உயர்நிலைப் பள்ளிக்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். எத்தனையோ இடங்களில் பள்ளிக்கூடங்கள் வேண்டும், வேண்டும் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் விட்டு விட்டு, அவர்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருடைய செல்வாக்கை உயர்த்துவதற்காக அங்கே ஒரு உயர்நிலைப்பள்ளியைத் துவக்கியிருக்கிறார்கள். சிக்கன நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற தி.மு.க. அரசு 50 பேர்களுக்காக ரூ. 30,000 செலவில் ஒரு பள்ளியை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியை வளர்க்கிற போக்குத்தான் காணப்படுகிறது. கட்சியை வளர்க்கும் முறையில் இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, பொது



1969, பிப்ரவரி 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

மக்களுடைய நன்மைக்காக, அவர்களுக்கான காரியங்களை செய்வதற்கான, மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கான முறையில் தி.மு.க. அரசு செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சாட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இப்பொழுது கூட்டணிக் கட்சி என்று சொல்கிறார்கள். கூட்டணிக் கட்சி என்று இருந்தாலும், ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு விதமாகச் சொல்கிறார்கள். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் சொல்கிறார்கள். ஒரு பத்திரிகையில் அறிக்கை விடுகிறார்கள். மாண்புமிகு ஆதிமூலம் அவர்கள் ஒரு பத்திரிகைக் குறிப்பை படித்தார்கள். எந்தப் பத்திரிகையில் வந்தது? ஆதித்தனார் அவர்கள் இந்துப் பத்திரிகையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், சுதேசமித்திரனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய பத்திரிகையைத்தான் பத்திரிகையாக ஏற்றுக் கொள்வார்கள். அதற்கென்று ஒரு பத்திரிகை வைத்து, அவர் பேசுவதெல்லாம் அந்தப் பத்திரிகையில் வரும் என்று சொல்லிவிட்டால்கூட, நாம் எடுத்துக் கொள்ளலாம். அதுதான் சரி என்று எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கும். சர்வாதிகாரப் போக்கைத்தான் இது காட்டுகிறது. 50 வருஷங்களாக நடந்துகொண்டிருக்கும்படியான பத்திரிகைகள், மக்களுக்குச் செய்திகளைத் தரும் பத்திரிகைகளை பத்திரிகைகளாக ஏற்றுக் கொள்வதில்லை என்றால் என்ன சொல்வது? போன வருஷம்கூட ஒன்றை எடுத்து சொன்னோம், உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார். அப்படி ஒன்றும் அவர்கள் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். நாங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைதான் இருந்தது. இம்மாதிரி ஒரு நிலையைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? பல காலமாக இருக்கும்படியான செய்திப் பத்திரிகைகளுக்கு ஒரு முக்கியத்துவம் கிடையாது. கட்சிப் பத்திரிகைகளுக்குத்தான் சலுகை காட்டப்படுகிறது. முன்பு எனது நண்பர் பூவராகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டினார். முரசொலிப் பத்திரிகையைப்பற்றி குறிப்பிடும்பொழுது 3 லட்சம் என்ற எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்பு 3 லட்சம் பேர்கள் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதற்கெல்லாம் என்ன நிரூபணம்? நிரந்தரமான செய்திப் பத்திரிகைகளுக்கு சர்க்கார் ஆதரவு இருந்தால்தான் மக்களுக்கு பயன்படும்படியாக உதவி செய்ய முடியும், சேவை செய்ய முடியும். அப்படி இருக்கும்படியான பத்திரிகைகளை விட்டுவிட்டு, மற்ற பத்திரிகைகளுக்கு மட்டும் ஆதரவு கொடுப்பது என்றால், அது முறையாகாது. முன்பிருந்த பத்திரிகைப் பட்டியலையே நீக்கிவிட்டு, வேறு சில பத்திரிகைகளுக்கு சர்க்கார் ஆதரவு கொடுப்பது என்பது, கட்சியை வளர்ப்பதற்குத்தான் இந்த அரசாங்கம் நடக்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக அமைகிறது. மக்கள் பத்திரிகை வாயிலாக மற்ற கட்சிகளைப்பற்றித் தெரிந்து கொள்ளாத நிலைமை, மற்ற கட்சிகளினுடைய கொள்கைகளைப்பற்றி அவர்கள் பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லாத ஒரு நிலைமை ஏற்படக்கூடிய வகையிலே அரசாங்கம் நடந்து கொள்கிறது இந்த ஜனநாயகத்தில் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன்.

கூட்டணியையே எடுத்துக் கொள்வோம். என்ன ஒற்றுமை இருக்கிறது? சமயத்திற்குத் தகுந்தாற் போல பேசிக் கொள்கிறார்கள். ஒரு சமயம் தொகுதி 'அட்ஜஸ்மெண்ட்' என்கிறார்கள். இங்கே பேசுகின்றபோது, எதிர்க் கட்சி என்று சொல்லி, நேரம் கேட்கிறார்கள். அங்கே போய்க் கேட்டால், 'ஐயா, எதிர்க் கட்சியே' என்றால், தொகுதி அட்ஜஸ்ட்மெண்ட் என்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு ஒன்று எச்சரிக்கை விடுகிறேன். உங்கள் கூட்டணியில் இருக்கும் கம்யூனிஸ்ட்டுகள், இடது என்றாலும் சரி, வலது என்றாலும் சரி, உங்களை ஜீரணம் செய்யப் போகிறார்கள் என்கிற எச்சரிக்கையை செய்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தை, நாளாவட்டத்தில், அவர்கள் இடதுசாரியாக இருந்தாலும், வலது சாரியாக இருந்தாலும், ஜீரணம் செய்து விடுவார்கள் என்கிற எச்சரிக்கையை செய்யாமல் இருக்க முடியாது. தென்காசி தேர்தலை எடுத்துக்கொள்ளுங்கள். பூந்தாழங்குடியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கேசுகளை வித்ட்ரா பண்ணினால்தான் ஆதரவு என்று சொன்னார்கள். நீங்கள் வித்ட்ரா செய்தீர்கள். முன்னே சபாநாயகராக இருந்தவர் செய்ததைப்பற்றிச் சொல்ல முடியாது. பாராட்ட வேண்டியது. அதன் பலனை அவர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். கேசை வாபஸ் செய்தால்தான் ஆதரவு என்றவுடன், வாபஸ் செய்தீர்கள். நாகர்கோவில் வந்தவுடன். தென்காசிபோல்தானே என்றவுடன், இல்லை இல்லை, நாங்கள் போட்டி போடுகிறோம் என்றார்கள். முதலிலே கூடல், பிற்பாடு ஊடல், மறுபடியும் கூடல். கேட்டால் அட்ஜஸ்ட்மெண்ட் செய்துகொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இங்கே தென்காசி வேலை நடக்காது என்றார்கள். நான் சொன்னால் அரசியல் காய்ப்பு என்று சொல்வார்கள். ஆனால் ஒரு இடதுசாரி கம்யூனிஸ்ட் மினிஸ்டர், கேரளத்திலிருந்து வந்து, தென்காசி வேலையை இங்கே வைத்துக் கொள்ளாதீர்கள் என்று சொன்னதை என்னுடைய காதார நான் கேட்டேன், ஐயா. இப்பொழுது, அடிபட்ட பிறகு, இப்பொழுது மறுபடியும் அட்ஜஸ்ட்மெண்ட் என்கிறார்கள். முனிசிபல் தேர்தலில் சேர்ந்து கொள்வதற்காக, அட்ஜஸ்ட்மெண்ட் என்கிறார்கள். திருக்குறளில்,

'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையினால்தான் சொல்கிறேன், இப்பொழுது இருக்கும் அரசியலில், இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், அவர்கள் செய்து கொண்டிருக்கும் வேலைகள் என்ன என்று பார்க்கும்பொழுது, நியாயமான ஆதரவு கொடுக்கிறார்களா என்று பார்த்தால், எப்பொழுதும் சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களைக் கவிழ்க்க திட்டம் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். உங்கள்மீது ஆசையோ, அனுதாபமோ இல்லை. தென்காசியிலே, பூந்தாழங்குடி கேஸ் வாபஸ் பண்ணியதன் காரணமாக ஆதரவு கொடுத்தார்கள். நாகர்கோவிலில், போட்டியிட்டார்கள். இதற்கு இடையில் இப்பொழுது, கீழ்வெண்மணி சம்பவம் நடந்திருக்கிறது. ஏன்? இந்த





சர்க்காரில் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற துணிவு. அங்கே நடந்திருப்பது சாதாரண சம்பவமா? இப்பொழுதா நடந்தது? அது திட்டமிட்டு நடந்தது. அது எதிர்பாராமல் நடந்துவிடவில்லை. இது கையாலாகாத சர்க்கார் மக்களைப் பாதுகாக்க யோக்கியதையில்லாத, திறமையில்லாத நிலையில் போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறது. ஏன், எப்படி? 1965-ல் திருப்பூர் வீதியில், மக்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டு பட்டப் பகலிலே, மாடியை மேலே இருந்து, ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை கொலை செய்திருக்கிறார்கள். அவர் தண்ணீர் என்று கேட்டபோது, பெட்ரோலை ஊற்றினார்கள். அதற்கு தீர்ப்பு கிடைத்த பிறகு, கோர்ட்டிலே தீர்ப்பு கொடுத்த பிறகு, அந்தக் கொலையாளிகளை நீங்கள் விடுதலை செய்து பெருமையைப் பெற்றிருக்கிறீர்கள். இந்த நிலையில் போலீஸ் எப்படி வேலை செய்வார்கள்? ஆனாலும், 1965-ல் என்ன சொன்னார்கள்? எங்களுக்கும், வன்முறைகளுக்கும் சம்பந்தம் இல்லையென்றார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு வந்ததுதான் தாமதம், வன்முறைக்காரர்களை வெளியிட்டார்கள். சந்தோஷப்பட்டார்கள். இப்பொழுது அந்தப் பிசாசு தான் சுற்றிக்கொண்டிருக்கிறது. மாபெரும் தலைவர் அண்ணாதுரை மறைந்த சமயத்தில் நடந்த சம்பவங்கள் என்ன? நீங்கள் அன்று வன்முறைகளைக் கண்டிக்காததால், அந்தப் பெரியார், மாபெரும் மேதை மறைந்த அந்த சமயத்தில், துப்பாக்கிச் சூடும், தடியடியும் ஏற்பட்டது.. போலீசார் மீது காலணிகளை வீசி எறிந்தார்கள். அது கண்டு மிக மிக கஷ்டப்படுகிறேன். யாராக இருந்தாலும் சரி, கட்சிக்காகச் சொல்லவில்லை. எதைக் காட்டுகிறது? வினை விதைத்தவன், வினை அறுப்பான். நீங்கள் கண்டிக்காத வன்முறையை, நீங்கள் அடக்க முடியவில்லை. அது இப்பொழுது தலை விரித்தாடுகிறது. நீங்கள் அடக்க முடியாது. மாணவர்களைத் தூண்டி விட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுத்தினீர்கள். இப்பொழுது உங்களையே விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை எப்பொழுது நிறுத்தப் போகிறீர்களோ, இதை எப்பொழுது கண்டிக்கப் போகிறீர்களோ, இதன் பேரில் எப்பொழுது நடவடிக்கை எடுக்கப் போகிறீர்களோ, அப்பொழுது தான் . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வன்முறை, 1965-ல் தான் முளைக்கத் துவங்கி தொடர்கதையாக இருக்கிறதா அல்லது 1942, ஆகஸ்ட் மாதத்திலிருந்தே வருகிறதா என்பதை விளக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குத் தெரியும் இப்படிக் கேட்பார்கள் என்று. இந்நேரம் வரையில் பொறுத்துக்கொண்டு இருந்தார் என்பதே ஆச்சரியம்தான். இப்படித்தான் சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். மிலிட்டரியில் ஆயிரக்கணக்கானவர்களைச் சுட்டார்கள் என்பதற்கும், தனி மனிதன் சுட்டான் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. தனி மனிதன் செய்தால் அது

கொலைக் குற்றம். நான் என்ன சொல்கிறேன் என்றால், அது தேசிய போராட்டம். அதையும் இதையும் இணைக்கிறேன் என்பதனால், சுண்ணாம்புக்கும், வெண்ணெய்க்கும் போல . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேசியப் போராட்டத்தை விட, சுதந்தரப் போராட்டத்தையும்விட மொழிப் போராட்டத்தை முக்கியமானதாக மக்கள் வரிசைப்படுத்துகிறார்கள். அவர்கள் நினைப்பில், சுண்ணாம்பையும், வெண்ணெயையும் சொல்வதினால், மொழிப் போராட்டம் வெண்ணெய் . .

**திரு. பி. ஜி, கருத்திருமன் :** அது அவரவர்கள் மனப் பான்மையை பொறுத்தது. ஆனாலும், மொழிப் போராட்டத்தை தூண்டுவதற்கு தாங்கள்தான் காரணம் என்று ஏற்றுக் கொள்ளுவதற்கு நன்றி. சப்-இன்ஸ்பெக்டர் நடுரோட்டில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலை செய்தவர்களுக்கு பொன் காப்பு போட்டிருக்கிறீர்கள். எப்படி சட்டம் அமைதி இருக்க முடியும்? போலீஸ்காரர் தங்கள் கடமையை, வேலையைச் செய்ய எங்கே சக்தி இருக்கிறது? அதுதான் நாங்கள் சொல்லும் குற்றச்சாட்டு. நீங்கள் மக்களின் உணர்ச்சியைத் தட்டிவிட்டு, உணர்ச்சிவசமாக மக்களை இயக்கி காரியங்களைச் செய்கிறீர்கள். வாயால் பேசி மக்கள் மனதை உங்கள் வசம் செய்துகொள்வதில் நீங்கள் வல்லவர்கள். அதில் நாங்கள் உங்களிடம் தோற்றுவிட்டோம். ஐயா, எங்களால் அது முடியவில்லை. வாய்ப் பேச்சால் மயக்கி, மக்கள் மனதை மாற்றி காரியங்கள் செய்வதில் உங்கள் சாதுரியத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் அது ரொம்ப நாளைக்கு நடக்காது.

முதல் அமைச்சர் மறைந்து விட்டார்கள். என்ன எழுதுகிறார்கள்? மூன்று நாட்களுக்கு முன்னால் பார்த்தேன். கண்ணீர் விடுத்தேன். என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், காங்கிரஸ்காரர்கள் ஏன் முதல் அமைச்சர் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள் என்றால், பின்னால் மக்கள் உதைப்பார்கள் என்ற நிலைக்கு போகாமல் இருக்க என்று. (குறுக்கீடு) உங்களுடைய பேப்பர்தான். மாலைமணியில் வந்திருக்கிறது. படித்துப் பாருங்கள். எங்கள் குடும்பத்தில் என் தந்தையார் ஆபரேஷன் நடப்பதை விட்டு விட்டு, அண்ணாவின் உடல் நிலையைக் காணவேண்டும் என்று இங்கு வந்திருந்தோம். அவரவர்கள் தங்கள் ஏற்பாடுகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, அண்ணாவின் உடல் நிலையைக் காண வந்தபோது, இந்தக் குற்றம் சாட்டியிருக்கிறார்களே? இவர்கள் கல் நெஞ்சர்கள், பொது மக்களுடைய ஏசலுக்குப் பயந்து வந்தார்கள் என்கிறார்களே? எங்களை என்னவேண்டுமானாலும் சொல்லுங்கள், சக்தியில்லாதவர்கள் என்று சொல்லுங்கள், அறிவில்லாதவர்கள் என்று சொல்லுங்கள். ஆனால், தூய்மையில்லாதவர்கள் என்று மட்டும் தயவுசெய்து குறிப்பிட வேண்டாம். ரொம்ப மனக்கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடைய உயிருக்காக என்னைப்போல பிரார்த்தனை செய்தவர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய தரிசனத்திற்காக எவ்வளவு கஷ்டத்தில் காத்திருந்தேன். அதற்கெல்லாம் இதுதானா பேச்சு? அது





தானா உங்களுடைய தரம். உங்கள் தரத்தைக் கண்டு வருந்துகிறேன். இதை நான் மிக்க மனக்கஷ்டத்துடன் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன்

தேர்தல் காலத்திலேகூட பேசிய பேச்சுக்கள், அமைச்சர்களின் சுற்றுப்பயணம், செய்த காரியங்கள் எல்லாம் மனத்திற்குக் கஷ்டமான காரியங்களாகத்தான் இருந்தன. நாகர்கோயில் தேர்தலைப் பற்றி எனக்குமுன் பலர் பேசிவிட்டார்கள். என்னால் அதிகம் பேச முடியாது. நான் அதைப்பற்றிப் பேசாவிட்டால், நாளைக்கே நீங்கள், ‘ நாங்கள் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டார்கள் ’ என்று சொல்வீர்கள். நாகர்கோயில் சம்பவம், அங்கு நடந்த காரியங்கள் எல்லாம் மனதிற்கு வருத்தத்தை அளிப்பனவாகவே இருக்கின்றன.

அடுத்தபடியாக, சர்க்கார் எடுக்கின்ற முடிவுகள் திடீர், திடீர் என்று இருக்கின்றனவே தவிர, யோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகளாகத் தெரியவில்லை. தமிழகத்தில் முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் மறைந்த சமயத்தில், ஆஸ்பத்திரியில் அவருடைய இறுதிச் சடங்கை எப்படிச் செய்வது என்பது பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் அவரது சடலம் காஞ்சிபுரத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த சமயத்தில் திரு. சி. சுப்பிரமணியமும் நானும், ‘ காஞ்சிபுரத்திற்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை, மக்கள் எல்லாம் பார்க்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது ’ என்று சொன்னோம். அப்போது ஓர் அமைச்சர் கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டில் தகனம் செய்துவிடலாம் என்று சொன்னார்கள். ‘இல்லை, இல்லை, அண்ணா அவர்களது உடல் அடக்கம்தான் செய்யப்பட வேண்டும்’ என்று மறுநாள் ஓர் அறிவிப்பு வந்தது. அண்ணா அவர்களது உடல் கடற்கரையில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று கடைசியாக முடிவு எடுக்கப்பட்டது. ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முன்பே ஏன் இந்த ஆட்சேபணையை எழுப்பவில்லை என்று கேட்கக்கூடும். கடற்கரையைவிட இன்னும் சிறப்பான இடத்தில் அவரது உடல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். மகாத்மா காந்தி அவர்களின் ஞாபகார்த்தம் ராஜ் பவன் தோட்டத்தில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல சிறப்பான இடத்தில் திரு. அண்ணாதுரை அவர்களின் சடலம் வைக்கப்பட வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் கடற்கரையில் வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அரசாங்கமே செய்த காரணத்தினால் நானும் கலந்து கொண்டேன். இம் மாதிரியான காரியங்கள் பின்னாலே எங்கே கொண்டு போய் விடுமோ என்று அஞ்சுகிறேன். கடற்கரை பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படும் புனிதமான இடமாகக் கருதப்பட வேண்டும். கடற்கரையில் திரு. அண்ணாதுரை அவர்களது சடலம் வைக்கப்பட்டிருக்கக்கூடாது என்று கருத்து சொல்லப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை வந்ததால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணா அவர்களின் மறைவையொட்டி அனுதாபத் தீர்மானத்தை கொண்டு வந்தோம். கனம் அங்கத்தினர் ஒருவர் 'திரு. அண்ணாதுரை அவர்களின் படம் சட்ட மன்றத்தில் வைக்கப்பட வேண்டும்' என்று கூறினார். திரு. அண்ணாதுரை அவர்களின் படம் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவர் வீட்டிலும், ஒவ்வொரு நண்பர்களின் இதயத்திலும் இருக்க வேண்டும். அதுதான் திரு. அண்ணாதுரை அவர்களுக்கு நாம் செய்யும் கடமையாகும். அப்போதுதான் அண்ணாவின் உண்மையான நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும். அண்ணா அவர்களின் படம் இங்கே வைக்க வேண்டுமென்றால், இதற்கு முன்னர் இருந்த முதலமைச்சர்களின் படத்தையெல்லாம் இங்கே வைக்க வேண்டும் அல்லவா ? இந்திய நாட்டின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த திரு. ராஜாஜி அவர்களின் படத்தையும், குறள் வழி நடப்பதற்காக வள்ளுவன் படத்தையும், அகிம்சாமூர்த்தி அண்ணல் காந்தியடிகளின் படத்தை மட்டும்தான் இங்கே நாம் வைத்திருக்கிறோம். திரு. அண்ணாதுரை அவர்கள் படத்தை வைப்பது என்றால் எல்லா முதலமைச்சர்களின் படத்தையெல்லாம் வைக்கவேண்டும் அல்லவா ? அப்போது சட்டப்பேரவை மண்டபம் ஒரே படக்காட்சியாக அல்லவா காட்சியளிக்கும். இதை நான் அரசியல் காரணத்திற்காகச் சொல்லவில்லை. இதனுடைய பின் விளைவுகள் என்ன ஆகும் என்று தெரியவில்லை. இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். யார் யாருக்கு, எங்கெங்கு சிறப்பு கொடுக்க வேண்டுமோ அங்கேதான் நாம் சிறப்பைக் கொடுக்க வேண்டும். இதனால் திரு. அண்ணாதுரை அவர்களின் படத்தை வைப்பதற்கோ, அண்ணாவின் சமாதியை அழகாக வைத்துக் கொள்வதற்கோ நான் குறுக்கே நிற்கிறேன் என்பதல்ல பொருள்.

அடுத்தபடியாக திரு. அண்ணாதுரை அவர்களுக்கான சிகிச்சை செலவை சிகிச்சை நிதியென வசூல் செய்யக்கூடாது என்று அறிக்கை விட்டேன். அண்ணா அவர்கள் இந்த நாட்டின் முதல் அமைச்சர். என்னுடைய முதலமைச்சர், தமிழ்நாட்டு மக்களுடைய அன்பைப் பெற்றவர். சிகிச்சைக்கான செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதுதான் மரபு என்று நான் எழுதியிருக்கிறேன். இந்த நாட்டிற்கு அவர் தலைவராக இருந்தவர். தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தவர். ஆகவே, சிகிச்சை செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்வதுதான் சரி, அதுதான் யோக்கியதை என்று நான் சொல்லியிருக்கிறேன். அதையே இன்னமும் வலியுறுத்துகின்றேன். அந்தச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால்தான் எனக்கு பூரண நிம்மதி இருக்கும். அதனால் எனக்கு பெயரும் புகழும் வரவேண்டும் என்பதல்ல. அரசாங்கம் அந்தச் செலவை ஏற்கும்பொழுதுதான் அது ஒவ்வொரு தமிழ் மகனும் அவருக்குக் கொடுக்கின்ற காணிக்கையாக இருக்கும். அப்படிச் செய்வதுதான் அவருடைய சிறப்பான அம்சத்தை, அவருடைய கண்ணியத்தை மதித்துப் போற்றும் சிறப்பான அம்சமாக இருக்கும் என்பதைத் தெரி



வித்துக் கொள்கிறேன். அவருடைய சிகிச்சைக்காக வசூல் செய்யப்பட்ட பணத்தை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளட்டும். அரசாங்கம் திரு. அண்ணாதுரை அவர்களின் எல்லா சிகிச்சை செலவுகளையும் ஏற்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. அண்ணாதுரை அவர்கள் நாகர்கோவில் தேர்தல் நடந்தபொழுது 7-ம் நாள் ஓர் அறிக்கை விடுத்தார்கள். திரு. அண்ணாதுரை அவர்களின் அறிக்கை அவருடைய தனிப்பட்ட பண்பை, அவருடைய தனிப்பட்ட உள்ளத்தை எடுத்துக் காட்டியது. "சட்டமும் அமைதியும் பாதுகாக்கப்பட வேண்டும். யாராக இருந்தாலும் அதைநிறைவேற்ற வேண்டும்" என்று அறிக்கையில் கூறினார்கள். வேறுவிதமாக அவர் அறிக்கை கொடுத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை என்றால்தான் அதை அறிந்துகொள்ள முடியும். தென்காசியில் நடந்தது தெருச் சண்டை, நாகர்கோயிலில் நடந்தது நாட்டுச் சண்டை என்று சொல்லிவிடலாம். அது தேர்தலாகவா இருந்தது ? அமைச்சர்கள் எல்லாம் ஒருமாத காலம் அங்கே இருந்தார்கள். நான் அங்கே ஒரு மாத காலம் இருந்தேன். அங்கே நடந்த நிகழ்ச்சிகள் அவமானப்படுத்துபவைகளாக இருந்தன. சர்க்கார் அதிகாரிகள் எல்லாம், போலீஸ்காரர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்குத் தாளம் போட்டார்கள். சபாநாயகர் அவர்களே, தங்களின் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். மத்திய அரசிலேயிருந்து சி.ஐ.டி. போலீஸ் வந்தது. ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கைகளை இந்த அரசு வாங்கி, இந்தச் சட்டசபையில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோயிலில் நடந்தது என்ன, காங்கிரஸ் கட்சி எப்படி நடந்து கொண்டது, ஆளும் கட்சி எப்படி நடந்து கொண்டது என்பதையெல்லாம் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மத்திய அரசிலிருந்து ரிப்போர்ட் வரட்டும், அதைப் படித்துப் பாருங்கள். இப்போது இருக்கும் முதலமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள்.

DR. H. V. HANDE: Sir, what makes the hon. the Leader of the Opposition think that the report given by the Central Intelligence Bureau is not rigged up by the Central Government? Just as he cannot depend upon the report of the State Government, we cannot depend upon the report of the Central Government. Also, there is no need for the report of the Central Government to be discussed in this House.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நேற்றுகூட, பம்பாயிலுள்ள சிவசேனையைப் பற்றிப் பேசும்பொழுது அந்த இடத்திற்கு மத்திய போலீஸ் படை வரவேண்டும் என்று திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, நேற்று நான் சொல்கிறபோதே எதிர்க்கட்சித் தலைவருக்குச் சந்தேகம் வந்துவிடும் என்று கூறிவிட்டுப் பேசினேன். மாநிலங்களிலே மத்திய

[திரு. ம. பொ. சிவஞானம்] [1969, பிப்ரவரி 25

போலீஸ் படை வருவதை எதிர்க்காதவன் நான். ஓரிடத்தில் இரு வேறு இனங்களுக்கிடையே போராட்டம் நடக்கும்பொழுது அந்த இடத்தில் மூன்றாவது இனத்தை—மத்திய போலீசை—அனுப்ப வேண்டுமென்று நேற்றே நான் பேசும்போது விளக்கம் கொடுத்தேன். நான் எதிர்பார்த்த சந்தேகத்தையே தான் கனம் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், 'இந்த மாநிலத்திலுள்ள போலீஸார் ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருந்தார்கள்' என்று மத்திய ரகசியப் போலீஸ் ரிப்போர்ட் அனுப்பியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அதை வாங்கிப் பாருங்கள் என்றுதான் சொன்னேன்.

பிற்பகல் 12-30 **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது சட்டமன்றத்தினுடைய ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றிய விவகாரம். மாண்புமிகு உறுப்பினருடைய குற்றச்சாட்டு மத்திய சி.ஐ.டி. ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அதை வாங்கிப் பாருங்கள். அதில் இந்த அரசாங்கத்தினுடைய போலீஸ் ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருந்திருக்கிறது எனக் குறிப்பிட்டிருப்பது தெரியும் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் ரிப்போர்ட்டை வாங்கிப் பாருங்கள், அப்படி இருக்கக்கூடும் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சபாநாயகர் மூலமாக நான் கேட்டுக்கொள்வது எல்லாம் மத்திய சி.ஐ.டி. போலீஸ் இரகசிய ரிப்போர்ட் அனுப்பியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அப்படி அனுப்பியிருந்தால் இவர்களைக் கேட்டுக் கொண்டுதான் அனுப்பியிருக்கிறார்களா? ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்களா, இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் இப்படித்தான் இருக்கும் என்றும் சொல்கிறார்கள். அவருக்கு அது விஷயம் தெரிந்தால் அது முழுவதையும் சொன்னால் கொஞ்சம் அனுகூலமாக இருக்கும். விவாதத்திற்கும் உபயோகமாக இருக்கும். அவர் சொல்வதில் இருந்து திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல மத்திய போலீஸ் எதிர்க்கட்சியினருக்குத்தான் உளவாக இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆகவே நிச்சயமாக ஒன்றை சபைக்கு விளக்க வேண்டும். மத்திய சி.ஐ.டி. போலீசார் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள் என்பது எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்படித் தெரியும்? அந்த ரிப்போர்ட்டை வாங்கிப் பாருங்கள், அதில் இப்படித்தான் இருக்கும் என்று அவர்கள் எவ்வாறு சொல்கிறார்கள்?. அதில் என்ன இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியுமா? அவர்களைக் கலந்து கொண்டுதான் அனுப்பினார்களா ?



1969 பிப்ரவரி 25]

DR. H. V. HANDE : The entire report is rigged up by the Congress Party bosses.

THIRU P. G. KARUTHIRUMAN : *

DR. H. V. HANDE : The hon. Leader of the Opposition is talking * for the past forty-five minutes.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் * * * என்று சொன்னதை வாபஸ் பெறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசும்போது உணர்ச்சி வசப்பட்டு பேசுவது சரியல்ல. சட்டசபை விதிமுறை, கட்டுப்பாடுகளுக்கு உள்ளடங்கிப் பேசவேண்டும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் * * என்று குறிப்பிட்ட வார்த்தை இருக்கிறதே அதை வாபஸ் பெறவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு ஹாண்டே அவர்களும் பல முறைதான் சொல்லியிருக்கிறார்கள். நாகர்கோவில் தேர்தலிலே நான் குறிப்பிட்டது . .

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்கள் தீர்ப்பு அளித்தார்கள். அதை நிறைவேற்றாமல் மேற்கொண்டும் எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டே போவது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி நான் கவனித்துக் கொள்கிறேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் மத்திய இரகசியப் போலீசார் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னாரே, அது அவருக்கு எப்படித் தெரியும்? ரிப்போர்ட்டைப் பார்த்தார்களா என்பதுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொன்னது எல்லாம் அப்படிச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்டு அறிந்து கொள்ளுங்கள் என்பதுதான். அவர்கள் என்ன அனுப்பியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நான் ஒற்றனா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய சர்க்கார் ஒற்றர்கள் நாகர்கோயிலுக்கு வந்திருக்கிறார்கள் என்றார். எப்போதும்போல மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல இங்கே இருந்துகொண்டிருக்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எப்போதும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களது வேலையையும் பார்த்துக் கொள்ளத்தான் வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த அறிக்கையை வாங்கிப் பாருங்கள் என்று சொன்னார். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது என்பது அவருக்குத் தெரியுமா? அந்த ரிப்போர்ட்டைப் பார்த்திருக்கிறார்களா என்பதுதான்.

---

*பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. பி. ஜி கருத்திருமன் :** It is a rumour அந்த ரூமரைத்தான் நான் சொல்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். நாகர்கோவில் தேர்தலிலே நின்ற டாக்டர் மத்தியாஸ் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்? சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர். தேர்தலுக்காக கட்சியை விட்டுவிட்டு சுயேச்சையாக நின்றார். டாக்டர் ஹாண்டே அவர்களேகூட ஆலோசனை சொல்லியிருக்கலாம். பார்க் டவுன் ஒன்பது தொகுதியும் அவர்களிடத்திலேயா இருக்கிறது?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். 6 தொகுதிகள் ஏற்கனவே காங்கிரஸ் கையில் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எதற்கெடுத்தாலும் எழுந்து பேச முடியாது. சபை நடவடிக்கை விதிகளுக்கு மாறுபட்டு நடந்தால் அப்போதுதான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம்.

DR H. V. HANDE : Whatever freedom you are giving to the Hon. Leader of the Opposition, the same freedom should be extended to me. I am only saying that the Hon. Leader of the Opposition should talk clean and straight.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். I say " I am absolutely clear and safe " நேற்று பேசும்போதுகூட You can gloat over என்று சொன்னார். இதில் க்ளோட் பண்ண என்ன இருக்கிறது என்று கேட்டேன். நாகர்கோவில் தேர்தலில் நின்ற வேட்பாளரைப்பற்றி விமர்சிக்க உரிமை இல்லையா ? அவர் ஏன் சுயேச்சையாக நின்றார், தன்னுடைய சொந்தக் கட்சியில் நிற்க * * (திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்களும் டாக்டர் ஹாண்டே அவர்களும் எழுந்திருந்து பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். தனிப்பட்ட எந்த ஒருவரைப் பற்றியும் இந்த அவையில் சொல்லக் கூடாது.

THIRU K. VEZHAVENDAN : I want to know whether the remarks of the Hon. Leader of the Opposition using such words will be expunged.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் பார்த்துக் கொள்கிறேன். பேரவையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது முறை அல்ல. இந்த அவையில் தனிப்பட்ட நபரை குற்றஞ் சாட்டி, பெயர் குறிப்பிட்டுச் சொல்வது முறை அன்று.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தேர்தலிலே நின்ற அபேட்சகரைப் பற்றித் தான் நான் குறிப்பிட்டேன். அவர் நிலைமை என்ன ஆயிற்று? ஏதோ ஒன்று சொல்வார்களே ' அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாள் ' ' அரசனும் புருஷனும் ஆற்றோடே போனான்' என்கிற மாதிரியாக ஆகிவிட்டது.

DR. H. V. HANDE : Let Mr. C. Subramaniam contest from Perundurai. Has he the guts? Has the Congress Party the guts to set up its leaders in Perundurai? Why should the leaders of Congress Party go in for safe constituencies?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அங்கே அவர் அவருடைய கட்சியையும் விட்டுவிட்டு கூட்டணிக்கு அவருக்கு ஆதரவாக இருப்பதாகச் சொல்லிக் கொண்டு அரசனையும் விட்டு புருஷனையும் விட்டு ஆற்றோடு போய் விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது . .

**டாக்டர் எச் வி. ஹாண்டே :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எதற்காக எழுந்து இருக்கிறீர்கள்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பர்சனல் எக்ஸ்ப்ளநேஷனுக்காக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களைப்பற்றிக் குறிப்பிட்டு இருந்தால்தான் நீங்கள் பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் கொடுக்க வேண்டும். அவர் கட்சியைப்பற்றிப் பொதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் என்று சொல்லி குறுக்கிடுவது முறையாகாது.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், டாக்டர் மத்தியாஸ் அவர்கள் இந்தச் சபையில் இல்லாதவர்கள். அவரைப்பற்றி * * வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். அவற்றை எதிர்க்கட்சித் தலைவர் வாபஸ் வாங்காமல் பேசிக்கொண்டிருந்தால் அந்த கண்ணியமிக்க அவரைப் புண்படுத்துவது ஆகாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது என் கவனத்தில் இருக்கிறது. ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். அவர் தனிப்பட்டமுறையில் பேசவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படியெல்லாம் குறுக்கிட்டு அந்தச் சூட்டை, நாகர்கோவில் தேர்தல் சூட்டை மாற்றிவிடலாம் என்று நினைக்கவேண்டாம். அதை மாற்றிவிட முடியாது. நாகர்கோவில் சூடு சாதாரண சூடு அல்ல. டெல்லிவரைக்கும் போயிருக்கும்படியான சூடு. . .

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜாடு அல்ல, ரூடு. ஜாடு என்றால் பொருள் மாறிவிடும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரூடு என்று சொல்லலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** டெக்கே போய்விட்டதால் சமஸ்கிருத வார்த்தையும் சேர்ந்து வந்திருக்கிறது. ஆகவே, இனி மேலாவது இனிவரும் இடைத் தேர்தல்களிலாவது அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனையோ விஷயங்கள் நடந்திருக்கின்றன. கேஸ்கள் எல்லாம் வந்தன. அங்கே நான் இரண்டு, மூன்று நாட்கள் போலீஸ் ஸ்டேஷனிலேதான் காத்துக் கிடந்தேனே தவிர வேறு எந்த விதமான காரியமும் செய்ய முடியவில்லை.

DR. H. V. HANDE: On a point of order, Sir.

(Thiru R. Ponnappa Nadar rose).

DR. H. V. HANDE: Frequent interruptions were made by the Hon. Leader of the Opposition during my speech yesterday. If the Chair gives me an assurance that such interruptions will be prevented, if the Hon. Leader of the Opposition will stop disturbing me, I will also stop disturbing him.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்கள்)

(டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்காக எழுந்திருக்கிறீர்கள் ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பார்லிமெண்டரி ப்ரிவிலேஜ்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்லிமெண்டரி ப்ரிவிலேஜ் ஓரளவிற்குத்தான் இருக்கவேண்டும். முறைதவறி இடத்தில் உட்கார்ந்து கொண்டே பேசுவது முறையல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள், "பேரவைத் தலைவர் அஷ்யூரன்ஸ் கொடுத்தால் நானும் அப்படி குறுக்கிடாமல் இருப்பேன்" என்று சொல்வது இந்த அவையின் பெருமையையும் மரபையும் காப்பதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் எதிர்க்கட்சி தலைவராக இருந்தும் அங்கே பிரச்சாரம் செய்யக்கூடிய சந்தர்ப்பம்கூட ஏற்படவில்லை. ஐயா, அடிக்கிறார்கள் என்று நாங்கள் கொடுத்த விண்ணப்பங்களைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கையெழுத்துப்போட்டு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றையெல்லாம் இங்கே படித்தால் இந்தச் சபையினுடைய நேரம் வீணாகிவிடும் என்பதால் அவற்றின் நகல்களை நான் சபாநாயகர் மூலமாக அனுப்புகிறேன். திராவிட முன்னேற்றக்



கழகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்களே லாரிகளிலே ஜீப்களிலே நம்பரை அழித்துவிட்டுப் போனார்கள். எங்களுடைய கட்சி செய்தது, உங்களுடைய கட்சி செய்தது என்பதல்ல பிரச்னை. நூற்றுக்கணக்கான ஜீப்களில் போலீஸ், போன இடத்திலேயெல்லாம் தடி, அடி. லாரியில் நூற்றுக்கணக்கான பேர்கள் சென்றார்கள். 4-ஆம் தேதியன்று ஐ.ஜி. அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். லாரிகளை நிறுத்துவதுதான் முறை என்று சொன்னார்கள், நாங்கள் ஏற்றுக் கொண்டோம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு ஆக போலீஸ் வருகிறது, போலீஸ் வருகிறது என்று சொல்லி அவர்களுடைய ஆட்களை ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆயிரம் போலீஸ் வரலாம், இரண்டாயிரம் போலீஸ் வரலாம், ஐயாயிரம் போலீஸா வருவார்கள்?

அவர்கள் பிரச்சாரம் செய்யட்டும், முதலமைச்சர் அவர்கள் பிரச்சாரமும் செய்யட்டும் அதைப்பற்றி ஒன்றும் நாங்கள் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் அறிக்கைவிட்டார்கள் வன்முறைதான் ஜெயித்தது என்று. அவர்கள் ஜெயித்தால் அது நன்முறை, நாங்கள் ஜெயித்தால் அது வன்முறையா ? அப்படியானால் வன்முறையை நீங்கள் தூண்டிவிடுகிறீர்களா அல்லது வன்முறையை அடக்குவதற்குச் சக்தியற்றதாக செயலற்றதாக இந்த அரசாங்கம் இருக்கிறதா ? குருத்தங்கோடு என்ற இடத்திலே வேலைசெய்யக்கூடிய இடத்திலே சப் இன்ஸ்பெக்டர் புகுந்து அடித்து இருக்கிறார். கொளச்சலிலே லைட்களை உடைத்து ஆட்களை அடித்து அங்கே ஐ.ஜி. போய்ப் பார்த்து வந்திருக்கிறார். இது ஜனநாயகமா, அல்லது பண நாயகமா அல்லது கட்சி நாயகமா அல்லது சர்வாதிகார நாயகமா என்று புரியவில்லை. அந்தத் தொகுதி மக்கள் ஒன்றுமே செய்யவில்லை. அவர்கள் ரத்தம் சிந்தியதற்காக, இத்தனை இடையூறுகளுக்குமிடையே எங்கள் தலைவருக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக்கொடுத்ததற்காக, அவர்களைப் பாராட்டுகிறேன். அந்த மக்களுக்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுடைய வீரத்தை, தீரத்தை அவர்களுடைய சேவையை, அவர்களுடைய தைரியத்தை நான் இந்த நேரத்திலே பாராட்டிக் கொள்கிறேன்.

எங்கள் எம்.எல்.ஏக்கள் கைதுசெய்யப்பட்டார்கள். நண்பர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். ஒரு பத்திரிகையிலே தவறாக வந்திருக்கிறது. லாரியிலே சென்றார்கள் என்று சொன்னதால் நிறுத்திக் காட்டினார்கள். சௌந்தரபாண்டியன் அவர்கள் திருப்தியுடன் சென்றார்கள் என்று வந்திருக்கிறது. அது மாத்திரமல்ல, திரு. ஜேம்ஸ் அவர்களைக் கைது செய்தார்கள். ராமன்னா எங்கே என்றார்கள். ராமன்னாவைக் கைதுசெய்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த எஸ்.பி. அவர்களுக்கு ஏன் இரண்டு நாட்களுக்கு முன்பு லீவு கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஏன் மாற்றியிருக்கிறார்கள், வெளியே

இருந்து ஏன் போலீஸ் கொண்டுவரப்பட்டது? இதையெல்லாம் பார்க்கிற நேரத்திலே சட்டம் அமைதி பாதுகாக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. நியாயமான முறையில் தேர்தல் நடத்துவதற்கு, ஒருவருடைய கருத்துக்களைச் சொல்வதற்குக்கூட இவர்களுடைய ஆட்சியிலே சுதந்திரம் இல்லை.

அண்மையிலே நான்கு நாட்களுக்கு முன்பாக நெய்வேலியிலே திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அமைச்சராக இருக்கக் கூடியவர்கள் முன்னால் எங்களுடைய அமைச்சர்களைப்பற்றி என்ன என்ன எல்லாம் பேசியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் எடுத்து இப்பொழுது அவர்களிடம் கொடுத்தால் அதைப்பார்த்து விட்டு இப்படியா பேசினோம் என்று அவர்களே வருத்தப்படுவார்கள். அவர்கள் அந்தக் கூட்டத்திலே ஆண்டவன் விதித்து விட்டால் அந்த விதியை மாற்ற யாராலும் முடியாது, அமெரிக்காவிலிருந்து வைத்தியர் வந்தாலும்கூட மாற்றமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். கூட்டத்திலே இருந்தவர்கள் அதற்கு ஆட்சேபணை சொல்லியிருக்கிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு அவர்கள், "யாரையும் நான் குறிப்பிடவில்லை, மனம் நோகுமானால் வருத்தப்படுகிறேன்," என்று வருத்தப் பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இங்கேயே எத்தனையோ முறைகள் நாம் அப்படி வருத்தம் தெரிவித்திருக்கிறோம். அதுமாதிரி அங்கே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது 16-ம் தேதி நடந்தது. 17-ம் தேதி மாலையில் 200 பேர்களுக்கு மேல் சேர்ந்து அவர்களுடைய வீட்டில் புகுந்து அவரை அடித்து, அவர் போற்றி பாதுகாக்கும் விக்கிரகங்களை எல்லாம் உடைத்து சேதப்படுத்தி யிருக்கிறார்கள். முதலிலே நடந்த சம்பவம் நடந்து 24 மணி நேரமாக போலீஸ் என்ன செய்து கொண்டிருந்தனர்? ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது, சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும். 200 பேர்களுக்கு மேல் சேர்ந்து தனிப்பட்ட வீட்டில் புகுந்து அடிக்கும் வரை போலீஸ் என்ன செய்தது? அவரை வீட்டைவிட்டுப் போய் விடுங்கள் என்று போலீஸ் சொல்லுகிறது. ஆகா! என்ன ஆட்சி! ஆகா! இந்தச் சர்க்காரிடம் அதைத்தான் எதிர்பார்க்க முடியும்! பிரதமர் இந்திரா காந்தி யம்மையார் அவர்கள் அந்தமான் போக இருந்தபோது 'சென்னை வழியாகப் போகாதீர்கள்' என்று சொன்னவர்களாயிற்றே. பிரதமர் இந்திரா காந்தியவர்களுக்கே அப்பேர்ப்பட்ட நிலைமை என்றால், கிருபானந்த வாரியார் எங்கே? அவரை வீட்டைக் காலி செய்து கொண்டு போ என்று நிச்சயமாகச் சொல்லியிருப்பார்கள். அதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை. அவ்வாறு செய்யவில்லை என்றால் தங்கள் கட்சித் தோழர்களை போலீஸ் கைவைத்தால் தங்களுக்கு ஆபத்து என்ற நிலை ஏற்பட்டிருக்கலாம். இந்த நாட்டில் கேட்கப்படும்படியான ஒரு கேள்வி என்னவென்றால், ஒரு பிரஜை தன்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு உரிமை உண்டா இல்லையா என்பதுதான்.





**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, 'பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்தமான் செல்லும்போது சென்னை வழியாகச் செல்ல வேண்டாம்' என்று இங்கிருந்து அறிவித்ததாகச் சொன்னார்கள். இதைப்பற்றி பழைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே மறுத்திருக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரத்தோடு பேசுகிறார்கள். ஏற்கனவே சி.ஐ.டி. பற்றி அவர்கள் சொன்னது மாதிரி தானா இதுவும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பிரதமர் இந்திரா காந்தி அவர்களே என்னிடம் சொன்னார்கள். இதைவிட என்ன வேண்டும்? வேண்டுமென்றால் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கே வேண்டுமானாலும் எழுதிக் கேளுங்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்; இங்கிருக்கின்ற மந்திரிகளானாலும் சரி, மத்திய அரசில் உள்ள மந்திரிகளானாலும் சரி, பதவிக்கு வருகின்ற போது, ஜனாதிபதியின் முன்னாலும், கவர்னர் அவர்கள் முன்னாலும் 'இரகசியத்தை வெளியிட மாட்டேன்' என்று விசுவாசப் பிரமாணம் செய்கிறார்கள். பிரதமர் இந்திரா காந்தி அந்த மாதிரி ரகசியத்தை வெளியிட்டது உண்மையானால் அந்த அம்மையார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அவர்கள் பேசுவதற்குப் பதில் கூற அமைச்சர்கள் இருக்கிறார்கள். இந்தச் சபை நல்ல முறையில் நடைபெற விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், ஏற்கனவே சபையில் கூறியிருக்கும் தீர்ப்புகளைக் கூறுகிறேன்.

There is no objection to an interruption but it will lead to counter-interruptions and not be conducive to smooth working. Every member will have an opportunity to speak and it will be better then to reply to the points raised.

Deprecating talks across the table, the Speaker observed that interruptions must be relevant and that no member could make a second speech. Personal explanation could be made at the end and no point of information would be permissible during a speech. Though interruptions during a speech are permitted it is not correct to interrupt frequently. Too many interruptions deprecated.

ஆகவே, பல முறை சொல்லியிருக்கிறேன். ஒழுங்குப் பிரச்சினை என்ன எழுப்புவது என்பது. இந்தச் சபை நடைமுறை விதிகளுக்கு மாறுபட்டு உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்றால் அதைச் சுட்டிக்காட்ட அதற்கு ஒரு வழி காண்பதற்குத்தான். சொல்கின்ற விஷயங்களைத் தவறாகச் சொன்னால் அதைப்பற்றி விளக்கம் சொல்ல நின்றால் வாய்ப்பு இருக்கிறது.

[1969 பிப்ரவரி 25

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** நான் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். இந்த ராஜ்யத்திலிருந்தோ, இந்த ராஜ்ய முதலமைச்சரிடம் இருந்தோ ஒரு விஷயத்தைப் பற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டால் அவையெல்லாம் இரகசியமாகப் பாது காக்கப்பட வேண்டிய விஷயமாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மத்திய இரகசியப் போலீஸ் இங்கு வந்ததைப் பற்றிக் கூறியது எப்படி அடிப்படையில் உண்மையற்றதாக இருந்ததோ, ஒழுங்குக்கு உட்பட்டு இல்லாமல் இருந்ததோ அதே போன்ற நிலையில் இப்போது கூறும் கூற்றும் இல்லாது பிரதமரே நேரில் அவர்களிடம் கூறியதாகக் கூறுவதால் அது இரகசியத்தைப் பாதுகாப்பதில் தவறியதாகுமே என்ற காரணத்தால்தான் இந்த ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எழுப்புவது சபையினுடைய ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது. அவர்கள் இரகசியத்தைக் காப்பாற்றவில்லை என்று சொல்லுகிறீர்கள். இரகசியத்தைக் காப்பாற்றுவதை மீறிய செயலாக அது இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய இடம் வேறு, இந்த இடம் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இங்கிருந்து எழுதிய ஒரு கடிதத்தைப்பற்றிச் சொல்லுவதில் எந்தவிதமான இரகசியமும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாமே இரகசியம், இரகசியம் என்று சொன்னால் எப்படி ? கிருபானந்த வாரியாருக்குப் பாதுகாப்பு எப்போது கொடுக்கப்பட்டது ? அவர் அடி பட்டு, உதை பட்டு அவமானப்பட்ட பிறகு அவருக்கு பாதுகாப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மணி ஒன்று ஆகப் போகிறது தங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கு இரண்டு மணி நேரம் வேண்டுமென்று கேட்டேன். கூடிய சீக்கிரம் முடித்துவிடுகிறேன். கிருபானந்தவாரியார் அவர்கள் தெய்வபக்தி உள்ளவர்கள். தவறான காரியத்தை மனதாலே கூடச் சிந்தித்திருக்கமாட்டார்கள். பேசியது தவறாக இருந்தால், புண்படுத்துவதாக இருந்தால் மன்னிப்புக் கேட்கிறேன் என்று சொன்ன பிறகு 200 பேர் அவர் இருக்குமிடம் சென்று அவரைத் தாக்கி, ஏற்கனவே எழுதப்பட்ட கடிதத்தில் பலவந்தமாகக் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்—கிருபானந்த வாரியாரைத் தாக்குவது என்பது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல.

“ மறுமை கண்ட மெய்ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார்



1969 பிப்ரவரி 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

குறுமை கண்டபின் கொடுந்தனல் எனினும் கூசார்
சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறார் ”

என்று கம்பன் கூறுகின்றான்.

கிருபானந்தவாரியார் பார்ப்பதற்குச் சாதாரண மனிதராக இருக்கலாம். ஆனால் அவர் மெய்ஞானி. அவருடைய பெருமையை இந்த நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவருடைய பெருமையை உணர்ந்து கொள்ளாமல் அவரைத் தாக்கியிருப்பது இந்தச் சர்க்காருக்குச் சுப சகுனம் அல்ல என்று எச்சரிக்க விரும்புகிறேன். அவர் மேல் பட்ட அடி பக்தியுள்ள ஒவ்வொருவர் மேலும் பட்ட அடி, ஆஸ்திகர்கள் அத்தனை பேர் மேலும் பட்ட அடி, அவர் மேல் பட்ட அடி என் மேல் பட்ட அடி, இந்த நாட்டு மக்கள் மேல் பட்ட அடி என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படியானால் இந்த நாட்டு மக்களின் செல்வாக்கைப் பெற்ற ஒரு தலைவரைப் பற்றி அவர் தாக்கிப்பேசுவதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் தாக்கிப் பேசினால் உதைப்பீர்களா ? வாயிலே பேசினால் அடிப்பீர்களா ? அப்படிச் செய்தால் ரோட்டில் நடக்க விடுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரோட்டில் நடக்கக் கூப்பிடுகிறார்கள் !

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவரவர்களுக்குப் பண்பு இருக்கிறது. அடக்கத்தோடு இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் தாங்கள் எடுத்துப் பேசக் கூடிய விஷயம் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் இந்த அவையிலே பேசுகின்ற நேரத்திலே உணர்ச்சி வசப்படாது பேசுவது எல்லோருக்கும் நல்லது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கிருபானந்தவாரியார் தான் தாக்கப்பட்டதாக அறிக்கையிலே கூறியிருக்கிறாரா என்பதை மாத்திரம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கு எழுதிய கடிதத்தில் ‘ அடிபட்டேன்—தாக்கப்பட்டேன் ’ என்று கூறியிருக்கிறார். நெய்வேலியிலிருந்து தாக்கப்பட்டார், அடிபட்டார் என்று செய்திகள் வந்திருக்கின்றன, கடிதங்கள் வந்திருக்கின்றன; இல்லையென்று சொல்லட்டும் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கிருபானந்தவாரியாரே எழுதி இருக்கிறாரா ?

[1969 பிப்ரவரி 25

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவருடைய சார்பாக எழுதியிருக்கிறார்கள். (சிரிப்பு)—சிரிக்கிறீர்கள்! உங்களைப் பார்த்து இந்த நாடே சிரிக்கிறது. இந்தத் தேசமே சிரிக்கிறது.

(பல உறுப்பினர்கள் "ஒழுங்குப் பிரச்சினை" என்று கூறி எழுந்தார்கள்.)

THE HON. THIRU S. MADHAVAN : On a point of Order, Sir.

1-00 பி.ப THIRU J. JAMES : The Hon. Minister for Industries should not interrput the Hon. Leader of the Opposition, himself. He must get the permission of the Hon. Speaker first.

An Hon. Memberff No point of order.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே வாரியார் கடிதம் எழுதி இருப்பதாகச் சொன்னார்கள், பிறகு அவர் சார்பாக எழுதியிருப்பதாகச் சொல்லுகிறார். ஏதாவது ஒன்றை அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒருவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புகின்ற நேரத்தில் அது பாயிண்ட் ஆப் ஆர்டரா இல்லையா என்று தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்னிடத்தில் இருக்கிறது. ஜேம்ஸ் அவர்கள் அந்த நேரத்தில் எழுந்து பேசிக் கொண்டே இருக்கிறார். ஒரு உறுப்பினர் 'நோ பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று அமர்ந்திருந்தபடியே கூறுகிறார். இவ்வாறு நடந்து கொள்ளுவது சபையினுடைய கண்ணியத்தைக் காப்பதாக இருக்காது. உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது அந்தக் கடிதம் தனக்கு வந்தது என்ற முறையில்தான் பேசி விட்டார்கள். பிறகு, அந்தக் கடிதம் அவர்களிடமிருந்து வரவில்லை அவர்களது ஆதரவாளர்கள்தான் எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுதானே உண்மை?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தச் செய்தி சம்பந்தமாக பல கடிதங்கள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனக்கு தெரிந்ததை நான் சொல்கிறேன். இந்த மாதிரியான போக்கு சரியான போக்கல்ல.

**திரு. மு. ச. சிவசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர். வாரியார் அவர்கள் எழுதியதாகச் சொல்லிவிட்டு பின்னால் அவர்கள் சார்பாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலில் அப்படிச் சொன்னார். பிறகு அவர்களின் ஆதரவாளர்கள் எழுதியதாகச் சொல்லி விட்டார். அப்பொழுது அந்தக் கடிதம் இல்லை என்று ஆகிவிட்டது. பின்னர் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது?



1969 பிப்ரவரி 25]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் பதவியேற்றுள்ள இந்தச் சூழ்நிலையில் இதுமாதிரி சம்பவங்கள் நடந்தது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆகவே முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ள இவர்கள் இதையெல்லாம் தீவிரமாகக் கவனித்து இனிமேலாவது இம்மாதிரிச் சம்பவங்கள் நடைபெறாதபடி அவர்கள் நடந்து கொள்வார்களானால், சட்டம், அமைதியைப் பாதுகாப்பார்களேயானால், இந்த நாட்டு மக்களின் எதிர்கால வாழ்விற்கு, அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி காணக் கூடியவிதத்தில் திட்டங்களைக் கொண்டு வந்தால் கொண்டுவரும் நல்ல திட்டங்களுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் ஆதரவு கொடுப்பதற்கு ஆட்சேபணை இருக்கமுடியாது. தவறுகள் நடந்திருக்கலாம், ஆனால் அவற்றைத் திருத்திக் கொள்வதுதான் மனிதத் தன்மை. இதை நன்றி அறிவிப்புத் தீர்மானம் என்று சொல்வதில் எந்தப் பொருளும் இல்லை. திரு. அண்ணாதுரை அவர்களின் மறைவு மட்டுமல்லாமல், நடந்த நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல், இதிலுள்ள பொருள்கள் பூராவும் மன மகிழ்வற்ற தன்மையில் இருப்பதால் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதம் முடிவுற்று பதில் அளிக்க வேண்டிய கட்டத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன். நான் இந்தப் பொறுப்புக்குப் புதியவன் என்ற அளவில்—எனக்கு ஏற்கனவே ஒரு கெட்ட பெயர் உண்டு, கொஞ்சம் ஆத்திரக்காரன் கோபப்படக்கூடியவன் என்றெல்லாம்; இந்த நிலையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோமே எப்படி இதைச் சமாளிப்பது என்று நான் எண்ணியபோது எனக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருணையான முகந்தான் அப்போது தோன்றியது. அவர்கள் முதலில் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற இந்த அமைச்சரவையை வரவேற்று இனிய மொழிகளாலும், கனிவான வார்த்தைகளாலும் எங்களுக்குச் சொல்ல வேண்டிய அறிவுரைகளை எல்லாம் இந்த முதல் சந்தர்ப்பத்தில் சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இனிமேல் நான் எவ்வளவு கோபித்துக் கொண்டாலும், எவ்வளவு ஆத்திரப் பட்டாலும் பரவாயில்லை என்ற அளவிற்கு அவர் இன்றைய தினம் அனல் பிழம்பாகக் காட்சியளித்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்தில் எதிர்பார்த்ததெல்லாம் இனிய நல்லுரைகள். இந்த அமைச்சவை எப்படித் தங்கள் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான கருத்துரைகள், அறிவுரைகள் இவைகளைத்தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்றுமில்லாத அளவிற்கு இன்று மிகுந்த கோபத்துடன் பேசியதை, ஒருவேளை நான் ஊகிக்கிறேன்; அப்படிப் பேசினால் இவனும் துள்ளி விழுவான் பதிலுக்கு, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதி அந்தத் தந்திரத்தைக் கையாண்டார்

களோ என்னவோ எனக்குப் புரியவில்லை. ஆனால் அண்ணாவின் தம்பியாகிய நான் அவ்வளவு சுலபத்தில் அவருடைய வலையில் சிக்கிவிடமாட்டேன் என்பதை மட்டும் (ஆரவாரம்) இங்கு, மிகுந்த திடத்தோடு, தெம்போடு, ஆனால் உறுதியாக, தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரைமீது பேசுகிற நேரத்தில் எதிர்கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய தோழமைக் கட்சித் தலைவர்களும், இம் மாமன்றத்தின் உறுப்பினர்களும் எடுத்துக் கூறியது நாம் இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிட்டு இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கிறோம் என்ற சோகச் செய்தியாகும். தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்தவரும், தரணிவாழ் தமிழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் சிம்மாசனம் போட்டு சக்ரவர்த்தியாக அமர்ந்திருந்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் திடீரென்று மறைந்து விட்டார்கள். அவர்கள் உடல் நலிவுற்று இருந்த நேரத்தில் அவர்கள் உடல் நலம் பெறவேண்டும் என்று சொல்லி தொடங்கியது ஆளுநர் அவர்களுடைய உரை. ஆனால் அந்த உரையின் மீதான விவாதம் முடிகிற நேரத்தில் அண்ணா அவர்கள் இல்லை. அண்ணா அவர்களை எப்படியும் காப்பாற்றிவிடவேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போயின. இந்நிலையில் அண்ணா அவர்களின் மறைவையொட்டி சிலவற்றைச் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அண்ணா அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவ நிபுணர்களும் நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள, குறிப்பாக சென்னையைச் சேர்ந்த மருத்துவர்களும் எடுத்துக்கொண்ட சிரமங்கள் சாதாரணமானவை அல்ல. ஆனால், அந்த சிரமங்களுக்கேற்ற வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், அவர்கள் அல்லும், பகலும் அண்ணா அவர்களைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டார்கள். ஊண் உறக்கமின்றி அண்ணா அவர்களின் அருகாமையிலிருந்து எல்லாச் சிகிச்சைகளையும் செய்தார்கள். சொல்லப் போனால், உலகத்திலேயே எந்தத் தலைவனுக்கும் நடைபெறமுடியாத அளவிற்கு அக்கறையோடு சிகிச்சையும், டாக்டர்களின் கவனிப்பும் பேரறிஞர் அண்ணா அவர்களின் உடல் நலம் பெறவேண்டுமென்பதில் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தளவிற்கு தங்கள் உழைப்பை நல்கி, தங்களுடைய பாசத்தைக் காட்டி, கடமையுணர்வைக் காட்டிய மருத்துவர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த அரசின் சார்பில் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே தமிழ்நாட்டின் ஆளுநராகிய மேன்மைதாங்கிய சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களும், அவர்களுடைய துணைவியாரும் அண்ணா அவர்களை தங்கள் குடும்பச் சொந்தக்காரர் போலவே கருதி, சொல்லப்போனால் அறிஞர் அண்ணா அவர்கள் என் சகோதரர் என்றே அவர்கள் வாஞ்சையோடு அழைத்தார்கள். அந்த அளவிற்கு நேச உணர்வோடு, அண்ணா அவர்கள், அடையாறு மருத்துவ மனையில், இருந்த நேரத்தில் இரவு பகல் பாராது



ஓடோடி வந்து, அண்ணா அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று பிரார்த்தித்து அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக இந்த அரசின் சார்பில் ஆளுநர் அவர்களுக்கும், அவரது துணைவியார் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் மறைவெய்தியபோது அண்மை மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் எல்லாம் வருகை தந்தார்கள். வந்து, தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்தியாவின் உள்துறை அமைச்சராகிய மாண்புமிகு திரு. சவான் அவர்கள் சென்னைக்கு வந்து, அண்ணா அவர்களுக்கு மரியாதை தெரிவித்து சவ ஊர்வலத்திலும் கலந்து கொண்டு அடக்கம் செய்யப்படுகிற வரையில் உடன் இருந்து தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தமிழக மக்களுக்கும் இந்த அரசுக்கும் தெரிவித்துக் கொண்டதற்காக மாண்புமிகு திரு. சவான் அவர்களுக்கும் இந்த அரசின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இங்கு ஷெரீஃப் அவர்களால் நடத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆறுதல் உரை வழங்கியும், அண்ணா அவர்கள் கட்டிக் காத்த மாநில அரசு மத்தியப் பேரரசு நல்லுறவு மேலும், மேலும் செழிப்படைகிற அளவிற்கு தமிழகத்தினுடைய புதிய அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறியும், அண்ணா அவர்களின் இல்லம் சென்று அண்ணியார் அவர்களையும், அண்ணாவின் செல்வங்களையும் தேற்றியும் தமிழகம் வந்து திரும்பிய இந்திய துணைக் கண்டத்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் திரு. காமராஜர் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்களும், இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், வெளியிலே இருக்கின்ற தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பெறவேண்டுமென்று வாழ்த்தியும், அது பயனற்றுப்போன நிலையில் பெரும் ஆறுதல் கூறியும் அவர்கள் அண்ணா அவர்களிடத்திலே கொண்டிருந்த அன்பினை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டமைக்காகத் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழகத்திலே மாத்திரம் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலும், வெளிநாடுகளிலும் நடைபெறுகின்ற ஏடுகளில் இரங்கல் தெரிவித்து தமிழ்நாட்டு மக்களுக்கும், அண்ணா அவர்கள் குடும்பத்திற்கும் எழுதிய இதழாளர்களுக்கும், ஏடு நடத்தியவர்கள் அத்தனை பேர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற சில சம்பவங்களை குறித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களிட

மிருந்து அதை எதிர்பார்க்கவில்லை. மிகுந்த வேதனையோடுதான் நான் அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். குறுக்கிட்டுக்கூட எழ முடியாத அளவுக்கு நான் உள்ளம் கரைந்துப் போனேன். ஏனென்றால், மிகுந்த பெருந்தன்மை வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இப்படிப்பட்ட சொற்களைக் கூறுவார் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அவரை மெரினா கடற்கரையில் அடக்கம் செய்யவேண்டுமென்ற முடிவை அண்ணா அவர்களின் வீட்டாரைக் கலந்துகொண்டு நாங்கள் எடுத்தோம். அவர்கள் அடக்கம் செய்யப்படப் போகிறார்கள் என்ற செய்தியை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலேயும் அண்ணா அவர்களின் இல்லத்திலேயே கூறினேன். என்னுடைய நண்பர் திரு. ஈ.வி.கே. சம்பத் அவர்களிடத்திலேயும் புதைக்கப்படுவதைப்பற்றிச் சொன்னேன். அதற்கு அவர், அது புதைக்கப்படும் இடமாக மாத்திரம் இருக்கக்கூடாது, அங்கு அண்ணா அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். ஒருவேளை விட்டகுறை தொட்டகுறை என்பதுபோல இரத்த பாசத்தினால் அப்படிச் சொல்லியிருக்கக்கூடும். அந்த அளவிற்கு மற்றக் கட்சித் தலைவர்களிடையே இதைப்பற்றி நானும், ஏனைய அமைச்சர்களும், முன்னாள் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் எடுத்துக்கூறியிருக்கிறோம். மெரினா கடற்கரையிலே அண்ணா அவர்களுடைய உடல் அடக்கம் செய்யப்பட்டிருப்பது ஏதோ பொதுமக்களால் ஆட்சேபிக்கப்படுகிறது என்ற முறையில் கூறுகிறார்கள். நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சியின் கொறடா திரு. விநாயகம் அவர்கள் கூட எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து கொள்ளாமல் அண்ணா உடலைப் புதைக்கலாமா என்று கேட்டார்கள். அது புனிதமாக இருக்க வேண்டிய இடம், அங்கே போய் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யலாமா என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் இப்பொழுது கேட்டார்கள். நாமெல்லாம் பார்க்கிறோம்; நாட்டு மக்கள் அன்றாடம் அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள், கறுப்புக்கொடி ஏந்திய கையோடு, அண்ணா அவர்களின் திரு ஓவியத்தைப் பிடித்தவர்களாய் மலர் வளையங்கள் எடுத்தவர்களாய் அணி, அணியாக, சாரி, சாரியாக மெரினா கடற்கரைக்கு வந்து, பல்கலைக் கழக மண்டபத்திற்கு எதிரே அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற அண்ணா அவர்களுடைய கல்லறையில் தங்களுடைய வணக்கங்களைத் தெரிவித்து விட்டுப் போகிறார்கள். தாங்கள் பெற வேண்டிய உணர்வுகளைப் பெற்றுத் திரும்புகிறார்கள். இது எப்படிப் பெரிய குற்றமாகும்? எப்படிப் பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள்? யார் அந்தப் பொதுமக்கள்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் எந்த ஆகாயத்திலேயிருந்து குதித்தார்கள் என்றுதான் நான் அந்தப் பொதுமக்களைத் தேடித்தேடிப் பார்க்கிறேன். எனக்குத் தெரியவில்லை. உத்தமர் காந்தியார் மறைந்தபொழுது அவருடைய அஸ்தியை எடுத்துத் தமிழ்நாட்டு ஆறுகளிலெல்லாம் கரைத்தார்கள். அப்படிக் கரைத்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டுதான் காங்கிரஸ்காரர்கள் கரைத்தார்களா?





அப்பொழுது இப்படிப்பட்ட ஆட்சேபணை எழுப்பப்பட்டதுண்டா? காரணம், அப்பொழுதிருந்த எதிர்க்கட்சி பண்பு மிகுந்ததாக, அரசியல் நாகரிகம் கொண்டதாக இருந்த காரணத்தினால் அந்தப் பிரச்சினையை யாரும் கிளப்பவில்லை. கன்னியாகுமரியில் கட்டப்பட்டிருக்கும் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டிருப்பது காந்தியாருடைய அஸ்திதான். அதை அங்கே புதைத்துத்தான் காந்தியாருடைய நினைவு மண்டபத்தை எழுப்பியிருக்கிறார்கள் என்பதையும் நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

இப்படிப்பட்ட சில காரணங்களால்தான், இப்படிப்பட்ட பேச்சுக்கள் சில வரும் என்ற காரணத்தினால்தான் நேற்று முன் தினம் அண்ணியார் அவர்களுக்கு மானியம் தர வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபோதுகூட நான் சர்வ ஜாக்கிரதையாகப் பதில் சொன்னேன். அண்ணியார் அவர்கள் ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னால் அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று. அண்ணா அவர்களுடைய திருவுருவப்படத்தை இங்கு வைக்க எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சேபிக்கவில்லையே தவிர, ஆனால் அவர்களுடைய பேச்சிலேயிருந்து வெளியான ஒவ்வொரு வார்த்தையும் அதை அவர் விரும்பவில்லை என்றுதான் தெரிவித்தது. அப்படியானால் எல்லா முதலமைச்சருடைய படங்களையும் இங்கே மாட்டலாமா என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இல்லாமலேயே தமிழ்நாட்டு மக்களின் கோடானு கோடி இதயங்களைக் கொள்ளை கொண்ட சக்கரவர்த்தி அண்ணா அவர்கள். (ஆரவாரம்) சட்டப்படியே பேசினாலும் கூட அண்ணா அவர்கள் முதலமைச்சராகவே இருந்து மறைந்து விட்டவர்கள். முதலமைச்சராகயிருந்த இராஜாஜி அவர்களுடைய படம் இங்கே மாட்டப் பட்டிருக்கிறது. முதலமைச்சராகவே யிருந்து, இரண்டாண்டுக் காலம் இந்த மன்றத்திலே, கருத்திருமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அளவளாவி, அன்பொழுகப் பேசி கன்னித்தமிழிலே கனிகிற வார்த்தைகளால் இந்த மன்றத்திலேயுள்ளவர்களின் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை இந்த மன்றத்திலே வைப்பதற்கு நண்பர்கள் விரும்பிய நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர்களும் அதை இம்மியளவும் மறுக்க மாட்டார் என்று கருதியே அந்தப் படம் இங்கே வைக்கப்படும் என்று நான் இந்தக் கருத்தினை வெளியிட்டேன். ஆனால் அவர் இன்று பேசிய பேச்சிலேயிருந்து, எல்லா முதலமைச்சர்களுடைய படமும் வைக்கப்படப் போகிறதா என்ற கேள்வியிலிருந்து அவருடைய எண்ணம் தெரிகிறது. வெளியிலே இருப்பவர்கள் அவரைக் கேட்பார்கள். [illegible] சொல்லும்பொழுது நீங்கள் சும்மா உட்கார்ந்திருந்தீர்களா என்று அவரைக் கேட்பார்கள். அவருக்குள்ள சங்கடம் எனக்குத் தெரிகிறது. அதனால்தான் இதையாவது சொல்லி வைத்துவிட்டு வெளியிலே போய் 'பார், பார், என்னுடைய வெறுப்பைச் சொல்லிவிட்டேன். போதுமா? உங்கள் ஆசை தீர்ந்ததா?' என்று கூறி சமாதானம் அடைவார்கள். அதற்காகத்தான் அவ்வாறு கூறியிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். நேற்றைய தினம் அண்ணியார் அவர்களைச் சந்தித்துக் கேட்டேன், தங்களுக்கு மானியம் தர வேண்டுமென்று

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கிறது, அதை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? என்று. அதற்கு அவர்கள் "நான்கூட முதலிலே அதற்குச் சம்மதிக்கலாமா என்றுதான் இருந்தேனடா தம்பி, ஆனால் அண்ணா அவர்களின் உடலை மெரினாவில் புதைத்ததைப் பற்றி விநாயகம் பேசியதைப் பார்த்த பிறகு அது வேண்டாமென்று கருதிவிட்டேன். மானியத்தைப் பெற்றுக்கொள்வதைப்பற்றி இப்பொழுது அவர்கள் பேசாவிட்டாலும் அடுத்த ஆண்டு பேசுவார்கள். இங்கே இருப்பவர்கள் பேசாவிட்டாலும் அவர்களில் வேறுசிலபேர் பேசுவார்கள், ஆகவே அந்த மானியத் தொகை எனக்குத் தேவையில்லை" என்று குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே, அண்ணாவின் குடும்பத்தைச் சேர்ந்த நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவின் குடும்பம் என்ற முறையிலும், தோழமைக் குடும்பத்தைச் சேர்ந்த கட்சி என்ற வகையிலும் நாங்களே அண்ணியார் அவர்களுக்குத் தேவையான அந்த உதவியைத் தருவது என்கின்ற முடிவுக்கு நேற்று வந்துவிட்டோம், (ஆரவாரம்) விநாயகம் அவர்கள் பேசியதற்குப் பிறகு.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள், நாகர்கோயில் தேர்தலில் தாங்கள் பெற்ற வெற்றி அபரிமிதமான வெற்றி, அதனால் வட புலத்திலே சூடு பிடித்திருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். வடபுலம் வரையில் அது சூடு பிடிக்கும் அதே நேரத்திலேதான், அந்தச் சூடு அங்கே பரவுகிற அதே நேரத்திலேதான் மேற்கு வங்காளத்திலே சவுத்துப் போய் விட்டது. இந்தச் சூடு அங்கே பரவும் அதே நேரத்திலேதான் பீகார் பிசுபிசுத்துப் போய் விட்டது. இந்தச் சூடு அங்கே பரவும் அதே நேரத்திலேதான் உத்திரப்பிரதேசம் இங்கா, அங்கா, இப்படியா, அப்படியா என்று ஊசலாடிக்கொண்டிருக்கிறது. பஞ்சாப் பயங்கரத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது. நாகர்கோயில் இடைத்தேர்தலில் பெற்ற வெற்றி. ஒரு பாராளுமன்றத் தேர்தல் வெற்றி, அதிலும் எல்லா இடங்களும் அவர்களுக்கே என்று இருந்த இடங்கள்—நாகர்கோயில் நகரத்தைத் தவிர—அந்த இடத்திலே அவர்களுக்குரிய இடமாக இருந்ததைப் பெற்றுக்கொண்டு 'கைவிரலை காட்டி பார், பார். நான் பிடித்துக் கொண்டேன். பிடித்துக் கொண்டேன்' என்று குறிப்பிடுவதைப்போல 'நாகர்கோயிலில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். வடக்கே சூடு பிடித்திருக்கிறது' என்று சொல்கிறார்கள். வடக்கே சூடு பிடித்திருக்கிறதோ இல்லையோ, நாகர்கோயில் வெற்றியினால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சிலே சூடு பிடித்திருக்கிறது என்பதை நான் இங்கே கண்டேன்.

இங்கு பேசிய உறுப்பினர்களும், எதிர்க்கட்சியிலே உள்ள மற்ற உறுப்பினர்களும் மிகக் குறிப்பாக எடுத்துச் சொன்ன விஷயங்கள், வரட்சிப் பகுதிகளின் நிலை, தொழில் நிலை, வேலை வாய்ப்பின்மை, கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் நிலை, வெண்மணி சம்பவம், நாகர்கோயில் தேர்தல் ஆகிய இந்தத் தலைப்புகளிலே தங்கள் கருத்துக்களை எடுத்து வெளியிட்டார்கள். ஆனால் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கவர்னர் உரையில் எள்ளளவும் நன்றிய





வில்லை. அவர் நுழைந்திருந்தால் சில பாராட்டுக்களை கொடுத்திருப்பார். நான் எப்படி நன்றி தெரிவிக்க முடியும் என்று கேட்டார். அவர் தெரிவிக்கவில்லையென்றாலும் பரவாயில்லை என்றுதான் நான் ஆரம்பத்திலேயே எனது நன்றிகளைத் தெரிவித்தேன். நன்றி தெரிவிப்பதற்கு எதுவுமே இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே சொன்னார்கள்.

உணவைப் பொறுத்தவரையில் நாம் இன்றையதினம் ஒரு நெருக்கடியான நிலைமையை சமாளித்துத் தீர வேண்டிய, ஆனால் ஏக்கம் கலந்த ஒரு எதிர்காலத்தை சிந்திக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. 1968-ல் 7.5 இலட்சம் டன் அளவு அரிசி கொள்முதல் செய்தோம். ஆனால், வரும் சம்பா காலத்தில், 1—1—1969-லிருந்து 31—5—1969 வரை, மே திங்கள் வரையில் 4 இலட்சத்து 75 ஆயிரம் டன் கொள்முதல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வரட்சி மிகுமேயானால் அது எந்த அளவுக்கு கிடைக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க தவறக் கூடாது. மொத்த விளைவில் ஐந்திலே ஒரு பங்கை நாம் கொள்முதல் செய்து கொண்டு வருகிறோம் என்பதும் இந்த கொள்முதலுக்கு நாம் வருவாய்த் துறையையும் உணவு இலாகாவையும் பயன் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும், இந்த கொள்முதலில் சரிவர நடந்து கொள்ளாமல் இருப்பவர்களிடத்திலே தான் காவல் துறையினர் சென்றிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதையும் கொள் முதல் பற்றி பல விமர்சனங்கள் செய்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மூன்றில் ஒரு பங்கு மக்களை உணவு வழங்கு திட்டத்தின் கீழே பயன் அடையச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். சென்னையிலும் கோவையிலும், சென்னையை, கோவையை சுற்றியிருக்கிற சுற்றுப்புறப் பகுதிகளிலேயும் 45 இலட்சம் மக்களுக்கு படியரிசி திட்டத்தின் மூலம் பலன் கிடைத்திருக்கிறது. 130 இலட்சம் மக்களுக்குக் குடும்பக் கார்டு முறையினால் பயன் அடையத்தக்க காரியங்கள் இந்த அரசின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. அப்படி இருக்கிற இந்த நிலைமையிலே உபரி மாவட்டமாக இருந்து மற்ற மாவட்டங்களுக்கு உணவு தானியங்களை வழங்குகிற அளவுக்கு இருந்த வட ஆற்காடு மாவட்டமும், செங்கற்பட்டு மாவட்டமும் பருவ மழையின்மை காரணமாக பாதிக்கப்பட்டதால் நமது தேவையை நிறைவு செய்ய நாம் இயலாதவர்களாகவும் மத்திய அரசிடத்திலேயிருந்து ஒரு இலட்சம் டன் அரிசி எங்களுக்குத் தேவை என்று கேட்க வேண்டிய சூழ்நிலையிலே உள்ளவர்களாகவும் இன்றையதினம் இருக்கிறோம்.

கேரளத்திற்கும், மகாராஷ்டிரத்திற்கும், மேற்கு வங்காளத்திற்கும் ஆகிய இந்த மூன்று மாநிலங்களுக்கும் அரிசி வழங்க வேண்டிய பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் நம்முடைய கோரிக்கை பற்றி அவர்கள் தொடக்கத்திலே மறுப்புரைத்தாலும் நாம் விட்டபிடியாக இருந்து தீர வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அது மாத்திரம் அல்ல, நம்முடைய மாநிலத்திலே நெருக்கடி இருந்த நேரத்திலே

கூட அகில இந்திய ரீதியிலே நாம் மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கு இணங்கி கேரளாவுக்கு அரிசி அனுப்பி வைத்திருக்கின்றோம். இவைகளையெல்லாம் எடுத்துக் கூறி இந்த நிலைமையை சமாளிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து நாம் ஒரு இலட்சம் டன் அரிசியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையே ஆந்திராவிலிருந்து மைலோவும் மத்திய பிரதேசத்திலிருந்து சோளமும் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. செங்கோதுமையைத் தான் வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற பகுதிகளிலேயுள்ள மக்கள் பெரிதும் விரும்புகிற காரணத்தால் அவைகளை வரவழைப்பதற்கான ஏற்பாடுகளுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வறட்சி நிலையில் கொள்முதலைத் தீவிரப் படுத்தவும் அப்படி தீவிரப் படுத்துவதற்கு நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இந்த அரசு அவர்களையெல்லாம் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்ளுகிறது. ஏனென்றால் இது இலட்சோப இலட்சம் மக்களுடைய வயிற்றுப் பிரச்சினையாகும். இந்த வயிற்றுப் பிரச்சினையில் நிலக் கிழார்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் சட்டம், நீதி இவைகளையெல்லாம் பேசிக் கொண்டு நாங்கள் வழக்கு மன்றம் செல்லுகிறோம் என்கின்ற அளவுக்குச் செல்வார்களானால் இலட்சோப இலட்சம் மக்களுடைய வயிற்றுப் பிரச்சினைக்கு விரோதமான, காலந் தாழ்த்தும் செயலிலே அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று பொருள் ஆகிவிடும். ஆகவே தான் நான் இந்த மாமன்றத்தின் சார்பாக, கொள்முதலுக்கு மிகுந்த துணை புரிகின்ற அளவுக்கு நிலக் கிழார்கள் துணிந்து முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிகளைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. விலைவாசிகள் எல்லாம் அதிகமாக ஏறி விட்டன என்றெல்லாம் கூறப்பட்டது. 1968-ம் ஆண்டு முதல் வெளிச் சந்தையிலே புழுங்கல் அரிசியினுடைய விலை இறங்கு முகமாகவே இருந்து வருகிறது. ஆகஸ்டுக்குப் பிறகு சற்று விலை ஏறி இருப்பது உண்மை. சம்பா அறுவடைக்குப் பிறகு இந்த விலையிலே கணிசமான இறக்கம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் வறட்சி நிலைமை மிகுமேயானால் நாம் அதைக் கூட எண்ணிப் பார்க்க முடியாத நிலையிலே அல்லலுற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆகவே தான், நெருக்கடியான நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சில காரியங்களை ஆற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். வேறு உணவு தானியங்களுடைய விலையைப் பொறுத்து பயறு விலை 1967-ம் ஆண்டு இருந்ததைவிட 1968-ல் 40 சதவிகிதம் குறைந்திருக்கிறது. கடலை விலை 1967-ம் ஆண்டு இருந்ததைவிட 1968-ல் 60 சதவிகிதம் குறைந்திருக்கிறது. பச்சைப் பயறு 1967 ஜூலையில் குவிண்டால் ரூ. 197. இப்பொழுது ரூ. 133 என்கின்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. உளுந்து 1967 ஆகஸ்டிலே ரூ. 244 என்றால் இப்பொழுது ரூ. 133 என்கின்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 1968 செப்டம்பரிலே ரூ. 378 என்றால் டிசம்பரில் ரூ. 300 ஆகக் குறைந்திருக்கிறது.





நல்லெண்ணெய் 1968 பிப்ரவரியிலே ரூ. 470 என்றால் டிசம்பரில் ரூ. 350 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 1967-ல் 70 முதல் 85 வரை விற்றது. 1968-ல் 60 முதல் 75 வரை குறைந்துள்ளது. சிறு தானியங்களுடைய விலையைப் பொறுத்தவரையில் ஆந்திரா, மைசூர் போன்ற மாநிலங்களை விட விலைகள் குறைவான அளவுக்குத்தான் இருக்கின்றன.

வறட்சிப் பகுதிகளைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். ஒருசில மாவட்டங்களைத் தவிர வேறு எல்லா மாவட்டங்களிலும் இந்த நிலைமை இருக்கிறது என்பதை நான் மறுப்பதற்கில்லை. அதற்காகத் தான் கடந்த 17-ம் நாளன்று நானும் ஏனைய, தொடர்புடைய அமைச்சர்களும், மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களும் அதிகாரிகளும் கலந்து சில முடிவுகளை எடுத்திருக்கின்றோம். அந்த முடிவுக்கு ஏற்ப செங்கற்பட்டு மாவட்டத்தில் இரண்டு பருவ மழைப் பொய்த்ததன் காரணமாக மானவாரி இறைவைகள் வரண்டு போயிருப்பதால் அவற்றையே நம்பி அங்கு பயிர் செய்யப்பட்டிருப்பதால், அந்த மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது என்பதை உணர்ந்து, மொத்தத்தில் புஞ்சைப் பயிர்கள், பாசன நெற் பயிர்கள் உட்பட மிகவும் மோசமாக விளைந்துள்ளன. ஆகவே, சிறிய, பெரிய பாசன வாயில்களுக்குப் பழுது பார்த்தல், குடி மராமத்து வேலைகள், குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தல், சாலை வேலைகள், தக்காவிக் கடன் வழங்குதல் ஆகியவற்றிற்காக ரூ. 35.5 இலட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு அத்தகைய காரியங்களுக்காக ரூ. 35.5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர் மாவட்டம் மிகக் கடுமையான வரண்ட பிரதேசம். அங்கு வாய்க்கால்கள் வறண்டுள்ளதால் தாராபுரம், பல்லடம், அவினாசி வட்டங்கள் மிகக் கடும் பஞ்சம் ஏற்படுமோ என்று அஞ்சுகிற வகையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு குடியானவர்கள் கால்நடை தீவனம் வாங்குவதற்காக அவர்களுக்கு அரசு ரூ. 10 இலட்சம் கடன் ஒப்பளிக்க வேண்டி வந்தது. மக்களை குடி நீர் பஞ்சத்திலிருந்து காப்பாற்றுவதற்காக குடி நீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 8 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இயல்பிலேயே வறண்ட மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தின் காய்ந்து போன பகுதிகள் சொற்ப மழை காரணமாக மேலும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அந்த மாவட்டத்தில் துயர் தணிப்பு வேலைகளுக்காக ரூ. 40 இலட்சம் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி [illegible] வட்டங்களில் துயர் தணிப்பு வேலைகளை நடத்[illegible]கும் பொருட்டு, ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு [illegible]யுள்ளது. அங்கே சிறு பாசன வேலைகள், குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தல் போன்ற செப்பனிடு பணிகளைச் செய்ய துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1969 பிப்ரவரி 25

தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு கொடுப்பதன் பொருட்டு, சாலை வேலைகளை மேற்கொள்ள அரசு ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலே ராதாபுரத்திற்கு ரூ. 8.5 லட்சம் துயர் தணிப்பு வேலைகளுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, ரூ. 157 இலட்சம் இந்த வரட்சிப் பகுதிகளிலே நிவாரணம் அளிப்பதற்கு, ஆழ் கிணறுகளை தோண்டுதல், இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்தல், குடிநீர்ப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வேலைகளிலே ஈடுபடுதல், சாலை வசதிகளைச் செய்தல், பாசன வசதிகளைப் பெருக்குதல், அந்த வேலைகளிலே பாதிக்கப்பட்டவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வாங்கும் சக்திக்கான பணம் அவர்கள் கைக்கு வரும் நிலையைச் செய்தல், அதே நேரத்தில் அங்கு ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சீர்படுத்துவதற்கான திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகிய இந்த நிலையில் ஜனவரி 17-ம் தேதி மாநாட்டிலே முடிவுகள் எடுக்கப்பட்டன.

நான் இந்த நேரத்தில் இந்த அரசின் சார்பாக, இந்த
பி. ப. 1-30 அமைச்சர் அவையின் சார்பாக, உங்களுடைய ஒத்துழைப்போடு, ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பருவ மழை தவறினாலும், பருவ மழை பொய்த்தே விட்டாலும் கூட, உணவு உற்பத்திக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற அளவுக்கு பாசனத் திட்டங்கள், குழாய் கிணறுகள், ஆழக்கிணறுகள் இவைகளைத் தோண்டுவதிலும், அதைப்போலவே இன்னும் மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாக தமிழ் நாட்டிலே எந்த இடத்திலும் கூட குடி தண்ணீர்ப் பிரச்சினை இல்லை என்கின்ற அளவுக்கு ஆக்குகின்ற அளவுக்கு இந்த அரசு அதை முதல்நிலைப்படுத்தி எல்லா வகையான காரியங்களையும் செய்யும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (ஆரவாரம்)

தொழில் வளம் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி சுதந்திராக் கட்சி தலைவர் திரு. ஆதிமூலம் அவர்களும் குறிப்பிட்டார்கள். மற்ற கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சி தலைவராகிய நண்பர் திரு. கருத்திருமன் அவர்களும் சொன்னார்கள். 'என்ன இருக்கிறது? நாங்கள் செய்தது தானே, நாங்கள் செய்ததுதானே' என்று சொன்னார்கள். அவர்கள் செய்கின்ற தவறைச் சொல்லும்போது மாத்திரம் "நாங்கள் செய்ததைச் சொல்லாதே, நன்மைகளைச் 'சொல், சொல்' என்று கேட்பார். எல்லாம் அவர்கள் செய்தது தான். இன்னும் கொஞ்ச நாள் போனதும் 'நீங்கள் உட்கார்ந்திருக்கின்ற இடம் கூட நாங்கள் செய்தது தானே, நீங்கள் உட்கார்ந்திருக்கிற நாற்காலிகூட நாங்கள் செய்து போட்டது தானே' என்று கூட கேட்டாலும் கேட்பார்கள். அவர்கள் செய்ததாகச் சொன்ன பட்டியலில் சிலவற்றை விட்டுவிட்டார்கள். 'எல்லாம் செய்தீர்கள், தமிழ் நாடு என்ற பெயர் வைத்துவிட்டீர்களா என்று கேட்டால் 'நாங்கள் எங்கள் கட்சிக்கே தமிழ் நாடு காங்கிரஸ் என்ற



1969 பிப்ரவரி 25] [திரு. மு. கருணாநிதி]

பெயரை வைக்கவில்லையா ? என்று கேட்டார். உண்மைதான். பெருமைப்படுகிறேன். கட்சிக்கே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்ற பெயரை வைத்தார்கள். சங்கரலிங்கனார் கேட்டபோது, உங்கள் கட்சிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் என்று பெயர் வைத்த நீங்கள் 'உண்ணாவிரதம் இருந்து செத்துத் தொலைக்காதீர்கள், தமிழ்நாடு என்ற பெயரை வைக்கிறோம்' என்று சொல்லி, அந்தக் கிழவனாருடைய உயிரைக் காப்பாற்றியிருக்கக் கூடாதா ? செய்திருக்கலாமே ? நாங்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும் பொழுது 'கட்சிக்கே பெயர் வைத்திருக்கிறீர்களே, தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாதா ? என்று நெடுஞ்செழியன் அவர்களும், நானும், மதியழகன் அவர்களும் அதற்கான தீர்மானம் கொண்டுவந்தபொழுது, நீங்கள் அதை மறுத்தீர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதுமாதிரி யாராவது கொள்கைக்கு உயிரை விடுகிறேன் என்று சொன்னால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா என்று நான் இதிலிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது கொள்கையினுடைய நியாயத்தைப் பொறுத்தது. கருத்திருமன் அவர்கள் கிருபானந்த வாரியாருக்காக உயிரை விடுகிறேன் என்று சொன்னால், அதற்காக நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, தமிழ்நாடு என்ற பெயரை வைத்தோம் என்றால், அது மிகச் சாதாரணமான காரியமாகத்தான் தெரியலாம். ஏதோ ஒரு உணர்ச்சிபூர்வமான காரியமாகத்தான் தெரியலாம். ஆனால், தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும் என்பதற்காக இந்த நாட்டிலே 20 ஆண்டுக் காலமாக நடைபெற்ற போராட்ட சரித்திரம் சாதாரணமானது அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, முஸ்லீம் லீக் இன்று இங்கு இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும் 20 ஆண்டுக் காலமாகத் தாங்கள் நடத்திய மகாநாடுகளிலே, தாங்கள் நடத்திய போராட்டங்களிலே, தாங்கள் சிறை புகுந்தது மூலம், இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும் என்று கேட்ட காலத்தில் மறுக்கப்பட்டது. அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இந்த இடத்தில் அமர்ந்த பிறகு, அதைத் தீர்மான வடிவமாக ஆக்கி, மத்தியப் பேரரசு அதை ஒத்துக்கொண்டிருக்கிறது என்பது சாதாரணமான காரியமல்ல. தமிழ் நாடு காங்கிரஸ் என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. அப்படிப் பெயர் வைத்துக்கொண்டிருந்த நாங்கள் சங்கரலிங்க நாடாரைத் துடிக்கத் துடிக்கச் சாகவும் விட்டோம் என்பதையும் சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் அதைச் சொல்லாவிட்டாலும், பாக்கியை நாங்கள் சொல்கிறோம். அதற்காகவாவது அதைச் சொல்லாமல் விட்டு விடுங்கள். இதைச் சொன்னால் உடனே கோபித்துக் கொள்ளாதீர்கள் 'நாங்கள் தான் அதைச் செய்தோம், அதைச் செய்தோம்' என்று சொல்கிறீர்கள்.

'நீங்கள் ஒன்றும் புதிதாகச் செய்யவில்லை, நாங்கள் செய்ததைத் தான் நீங்கள் விரிவாக்குகிறீர்கள்' என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். சொன்னோமா? நீங்கள் கட்டிய அணைக் கட்டுகளையெல்லாம் அழிப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்று சொல்லிவிட்டு வந்தோமா? நீங்கள் கட்டிய பாசனத் திட்டத்தையெல்லாம் பாழாக்குவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்று பிரகடனப்படுத்திவிட்டுத்தான் வந்தோமா? அல்லது நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று நாங்கள் கூறினோமா? 'செய்வதைத் திருந்தச் செய்' என்று சொன்னோம். நீங்கள் செய்தது யாருக்குப் போய்ப் பயன்பட வேண்டுமோ அவர்களுக்குப் பயன்படவில்லை என்று நாங்கள் அல்ல, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த என்னுடைய மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய, நாகர்கோவில் வெற்றி வீரர் காமராஜர் அவர்கள் திருப்பதியில் நடைபெற்ற மகாநாட்டில் சொன்னார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பார்த்தோம்: திட்டங்களுடைய பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை, பணக்காரர்கள்தான் மேலும் மேலும் பணக்காரர்களாக ஆகிறார்கள் என்று காமராஜ் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். நாங்களா இப்படிச் சொல்கிறோம். நாங்களா இப்படிக் குற்றம் சாட்டுகிறோம்? இதைக் கொஞ்சம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தொழில் வளம் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் நசித்துப் போய்விட்டது என்று சொன்னார்கள். நீங்கள் உருவாக்கிய தொழிற்சாலைகளையெல்லாம் நாங்கள் என்ன அலங்கோலப்படுத்தி விட்டோமா? இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தொழில் துறையில் பெரிய மந்தம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. தொழில் துறையில் மந்தம் என்றால், அது தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல. பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருப்பெறாத காரணத்தினால், வடிவம் எடுக்காத காரணத்தினால், கருக்கொள்ளாமலே இருந்த காரணத்தினால், இந்தியா முழுவதும் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்த நேரத்தில்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழில் வளம் எந்த அளவுக்குப் பெருக்கப்பட்டிருக்கிறது என்றால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசுத் துறையின் மூலம் 3 தொழில் திட்டங்கள் ரூ. 90 கோடி 95 லட்சம் முதலீட்டில்; மாநில அரசுத் துறை மூலம் இரண்டு தொழில் திட்டங்கள் ரூ. 11 கோடி 82 லட்சம் முதலீட்டில்; கூட்டுறவுத் துறையில் 5 தொழில் திட்டங்கள் ரூ. 3 கோடி 80 இலட்சம் முதலீட்டில்; தனியார் துறையில் 52 தொழில் திட்டங்கள் ரூ. 50 கோடி 67 லட்சத்தில். இவ்வளவும் அன்றி, மத்திய அரசின் பரிசீலனையிலிருக்கிற தொழில் உரிமங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை, மத்திய அரசுத் துறை ஒன்று—அதனுடைய முதலீடு ரூ. 2.75 இலட்சம்; மாநில அரசுத் துறையில் ஒரு தொழில் திட்டம்—இரசாயனத் தொழிற்சாலைத் திட்டம். அதற்கு முதலீடு ரூ. 40 கோடி; கூட்டுறவுத்



துறையில் 3 தொழில் திட்டங்கள், ரூ. 6.60 லட்சத்தில்; தனியார் துறையில் ரூ. 25 கோடி 57 லட்சம் முதலீட்டில் 32 திட்டங்கள்; ஆக ரூ. 74 கோடி 92 லட்சத்தில் உரிமங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை இருக்கிறது. 1964-ம் ஆண்டில் உரிமங்களின் எண்ணிக்கை 2, 1965-ம் ஆண்டில் உரிமங்களின் எண்ணிக்கை 4, 1966-ம் ஆண்டில் 8. 1967-லும் 8, 1968-ல் 2. அந்த அளவுக்கு தொழில் துறையிலே மந்த நிலை ஒன்றும் பயங்கரமான அளவுக்கு ஏற்படவில்லை. பொதுவாக இந்தியா பூராவும் மந்த நிலை இருந்தது. அந்த மந்த நிலை தமிழ் நாட்டின் அளவுக்கும் இருந்தது. ஆதிமூலம் அவர்கள் "தனியார் முதலாளிகளை, தொழில் அதிபர்களை நீங்கள் வரவிடமாட்டீர்களா?" என்று கேட்டார்கள். நான் தமிழக அரசின் சார்பாகச் சொல்கிறேன், பொதுத் துறையிலே தமிழக அரசுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்றாலும், பொதுத்துறை என்பது பலாக்காய் என்றால், இன்றைக்கு வருகிற தனியார்துறை என்ற கிளாக்காயை நாங்கள் வெறுப்பவர் அல்ல. தனியார் துறையினர், தொழில் அதிபர்கள், தைரியமாக நம்பிக்கையோடு தமிழ்நாட்டில் தங்களுடைய தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றலாம், அவர்களுக்கு தமிழக அரசின் ஆதரவு பரிபூரணமாக உண்டு என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொழில் வளம் பெருகினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பகுதியிலே குறைகிறது. அதற்கு தொழில் அதிபர்கள் மாத்திரம் அல்லாமல்—நான் சொல்கிற உதாரணம் சிறியதாக இருந்தாலும்—தொழிற் சங்கங்களை நடத்துகிற யூனியன்களின் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இதில் ஏற்கனவே பதவியிலே இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது நல்லதா அல்லது வேலையிலே இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை அளிப்பது நல்லதா என்ற கேள்விக்கு தொழிற் சங்கத் தலைவர்கள் தங்களுடைய மனதைத் தொட்டுப்பார்த்து பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, பஸ் போக்குவரத்தில் கண்டக்டர்களாக இருப்பவர்களெல்லாம் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக ஆகலாம் என்று இருக்கிறது. அது பதவி உயர்வு. ஆனால் கண்டக்டர்களாக இருப்பவர்கள் பதவி உயர்வு என்ற பெயரால் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக ஆகாமல் இருந்தாலும், அவர்கள் ஏதோ ஒரு வேலையில் கண்டக்டர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வெளியிலே இருந்து 100 பேர்களை செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக எடுக்கின்ற நேரத்தில் 100 பேர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், யூனியன் தலைவர்கள் வெளியிலிருந்து யாரையும் வேலைக்கு எடுக்கக் கூடாது, ஏற்கனவே வேலையில் இருப்பவர்களுக்கேதான் பதவி உயர்வு கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். செக்கிங் இன்ஸ்பெக்டருக்கான தகுதி, படிப்பு எல்லாம் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துக்கொண்டு, தகுதிப் பத்திரத்தையும் வைத்திருக்

கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க இங்கே முட்டுக்கட்டை இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க—முழுவதும் இல்லை, ஓரளவிற்கு—நாம் முன்னோடியாகச் செய்வதற்கு முயற்சி செய்கிறோம். இதில் யூனியன் தலைவர்களுடைய ஒத்துழைப்புத் தேவை; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குத் தொழில் அதிபர்களுடைய உற்சாகம் மிகுந்த ஒத்துழைப்பும் தேவை. தொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தேவை. தொழிலாளர், தொழிலதிபர் இவர்களிடையே சுமுகமான உறவை உண்டாக்க, சட்டம், அமைதி வைகளு இவை கெடாத வகையில் பாதுகாத்து நிலைநிறுத்த, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்த சர்க்கார் நிச்சயமாக உறுதிகொள்ளும் என்பதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

மூடப்பட்டுள்ள கோவை பஞ்சாலைகள் பற்றியும், அல்லல்படும் 16,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பற்றியும், இங்கே பல முறைகள் பேசப்பட்டிருக்கிறது. காலையிலே கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கூடச் சொன்னேன். பஞ்சாலைத் தொழிலாளர் தலைவர்கள், மற்றவர்களை அரசு அளவில் அழைத்து, விரைவில் ஒரு மாநாடு கூட்டி பேச இருக்கிறேன். இதற்கு மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு நான் இந்த விஷயத்தில் விரைவில் முடிவு காண வேண்டும் என்று எண்ணியிருப்பதாகக் கூறியிருக்கிறேன். அரசின் சார்பாக இரண்டு நாட்களுக்கு முன் ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறேன். அந்த மாநாடு விரைவில் நடைபெறும். கோவை பஞ்சாலைகள் மூடியிருப்பதன் காரணமாக வாடிக்கொண்டிருக்கிற 16,000 தொழிலாளர்கள் பிரச்சினை அனுதாபத்தோடு கவனிக்கப்பட வேண்டும். அவர்களுடைய பிரச்சினை அனுதாபத்தோடு கவனிக்கப்பட, மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு வேண்டும். அப்படி மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு தரவேண்டுமென்று, காங்கிரஸ் நண்பர்கள், உறுதுணையாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினையில், இன்னும், தொழிலாளர் தலைவர்கள் ஒத்துழைப்புத் தேவை; மூடப்பட்டிருக்கிற மில்களைச் சேர்ந்த தொழிலாளர்களுடைய வயிறு காயாமல் இருக்க தொழில் அதிபர்கள் ஒரு படி கீழேயிறங்கி வந்து உதவி செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

கீழ்வெண்மணி சம்பந்தமாக கருத்துக்கள் பேசப்பட்டன. மிகக் கொடுமையான சம்பவம், உள்ளத்தை உருக்கக்கூடிய சம்பவம். நினைத்து நினைத்து கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவம். இது சம்பந்தமாக எதிர்க் கட்சியில் கண்டனத் தீர்மானம் கொடுத்திருப்பதால், மறுபடியும் பேசியதையே பேசுவது அவர்களுக்கும் அரைத்த மாவு, பதில் சொல்லுவதும் அரைத்த மாவை அரைப்பது போல இருக்கும். ஆகவே, கண்டனத் தீர்மானம் வரும்போது விளக்கமாகப் பேசலாம் என்று நினைத்து, இப்படிப்பட்ட வன்முறைகள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்காக நாமெல்லாம் ஒத்துழைப்போமாக என்ற அளவில் நிறுத்திக் கொள்கிறேன்.





இறுதியாக, நாகர்கோவில் தேர்தலைப்பற்றி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்ட நேரத்தில், நாங்கள் தேர்தலில் எப்படி நடந்தோம் என்றார்கள். வேறு எங்கேயெல்லாம் எப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதற்குச் சில குறிப்புக்களைப் படிக்க விரும்புகிறேன். இப்பொழுது வடக்கே நடைபெற்ற தேர்தலில் என்னென்ன சம்பவங்கள் நடைபெற்றன என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

"உ.பி. இடைக்கால தேர்தல்—போலீஸ் சுட்டு இருவர் காயம்."

மீரட்டு ஜில்லாவிலுள்ள, பர்னுவா அசெம்பிளி தொகுதியிலுள்ள புஸார் வாக்குச்சாவடிக்கு இரண்டு பர்லாங் தூரத்தில் கட்டுமீறிப்போன ஒரு கூட்டத்தின் மீது போலீசார் இரண்டு ரவுண்டு சுட்டனர். இரண்டு பேர் காயம் அடைந்தனர்.

"28 வோட்டுச் சாவடிகளில் மறுதேர்தல்"

சென் வர்மா தகவல்.

பீகாரில் சில வாக்குச்சாவடிகளிலிருந்து வோட்டுப் பெட்டிகள் . . .

(திரு. பி. ஜி. கருத்திருமன்: எந்தப் பேப்பர் ?) 'நவசக்தி' தான்.

". . . பறித்துச் செல்லப்பட்டதாக, மறு வாக்குப்பதிவு உத்தரவிடப்பட்டது."

"வேட்பாளர் கோஷ்டி மோதலில் 5 பேர் பலி.

பல வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு ஒத்திவைப்பு.

—இது பீகார் தேர்தலில்.

"வோட்டுப்பதிவின்போது கலவரம், துப்பாக்கிச் சூடு. ஐந்து பேர் சாவு."

"மேற்கு வங்கம்.

தேர்தல் அலுவலகம் அருகே போலீஸ் தடியடி.

**கண்ணீர்ப் புகை".**

"உ.பி. வோட்டுச் சாவடியில் மோதல்—இருவர் அடிபட்டு மரணம்".

"உ.பி. தேர்தலில் கடும் மோதல்—3 பேர் பலி—60 பேர் காயம்".

"லக்ஷ்மணபுரி—காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படும் 20 பேர்கள் தடிகள், கத்திகள் சகிதம் நேற்று அவ்வால்பூர் வோட்டுச் சாவடியில் பாரதீய கிராந்தி தள ஆதரவாளர்களைத் தாக்கியதாகத் தகவல் கிடைத்துள்ளது."

இப்படி பல பல சம்பவங்கள் இப்படிப்பட்ட சம்பவங்களெல்லாம் இப்பொழுது நடைபெற்று முடிந்திருக்கின்றன, மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம், பஞ்சாப், பீகார் தேர்தலில். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது, நாகர்கோவில் எவ்வளவோ பரவாயில்லை.

நாகர்கோவில் தேர்தலில் ஆளும் கட்சி எப்படி இருந்தது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொன்னார்கள். ஆளும் கட்சி அமைச்சர்களும், மற்றவர்களும், பயணிகள் விடுதியில் இருந்தது, பாளையங்கோட்டை சிறைச்சாலைதானோ என்று சொல்லும் அளவுக்கு அடங்கி, ஒடுங்கி இருக்க வேண்டிவந்தது. நானும், திரு. ஆதித்தனாரும், அமைச்சர் முத்துசாமியும் இருந்த பயணிகள் விடுதியை முற்றுகை இட்டார்கள் காங்கிரஸ் நண்பர்கள். மிகக் கேவலமான பாஷையில் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார், நீங்கள் பழைய அமைச்சர்களைப் பேசிய பாஷையில் என்று. அது சரியா என்பது இருக்கட்டும். நானே சொல்லுகிறேன், வெட்கம் இல்லாமல், கூச்சம் இல்லாமல் சொல்லுகிறேன். "கருணாநிதி, காலிப்பயலே, வெளியே வாடா" என்றார்கள். பயணிகள் விடுதியில் இருக்கும் எங்கள் காதில் விழுந்ததோ இல்லையோ என்று, கல்லை எறிந்தும், ஒலிபெருக்கி மூலமும் சொன்னார்கள். இவ்வளவுக்கும் பிறகு நாங்கள் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தாங்கள் இருந்த விடுதியிலே இரு 'பாம்கள்' போலீஸ்காரர்கள் கண்டு எடுத்ததாகச் சொல்லப் பட்டதே. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைப்பற்றி விசாரணை நடந்ததா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 'பாம்'களும் இல்லை, பாம்புகளும் இல்லை.

நாங்கள் கூட்டங்களுக்கு கார்களில் சென்று கொண்டிருந்தோம். ஏதாவது என்று ஊரிலிருந்து, இன்னொரு ஊருக்குப் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது காங்கிரஸ் தொண்டர்கள் எங்களைத் தடுத்து நிறுத்தினார்கள். போலீஸ் அதிகாரி அவர்களை விலக்கி, வழி ஏற்படுத்தினார். நான் சொன்னேன், 'வேண்டாம். அந்த ஊருக்கு செய்தி அனுப்பி விடுங்கள் நான் வர வில்லை என்று' என்று குறிப்பிட்டு விட்டு, திரும்பி நாங்கள் நாகர் கோவிலுக்கே வந்தோம். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் நடை பெற்றிருக்கின்றன.

கிட்டுவைக் கொலை செய்ததை விடவா? இவ்வளவு பயங்கரமான அரசியல் கொலையில் என்ன என்ன வாதங்கள்? எதிர்க் கட்சித் தலைவர் வாதாடக்கூடும், அரசியல் கொலையில்லை என்று. ஆனால், அந்த வட்டாரத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும். கிட்டுவின் பிரேத விசாரணை முடிந்து, கிட்டுவின் பிரேதம் அவருடைய தாய்க்கும், மனைவிக்கும் அளிக்கப்பட்டதும், இடுகாட்டுக்கு போகுமுன், கிட்டுவின் வீட்டில் பிரேதத்தைக் குளிப்பாட்டும் போது, எல்லோரும் ஆயிரக்கணக்கானவர்கள் சவ ஊர்வலத்தில் சேர்ந்து போகக் காத்துக்கொண்டு இருக்கும்போது, ஒரு நடிகர் தலைமையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், கிட்டுவின் வீட்டு வழியாக, வீதி வழியாக தேர்தல் ஊர்வலம் வந்தார்கள். அந்த நேரத்தில் ஊர்வலம் வரலாமா? கிட்டு படுகொலை செய்யப்பட்டு மாண்டு கிடக்கிறான். இளைஞனை இழந்த தாய், தாரம், குழந்தைகள் இவர்கள் அலறி அழுதுகொண்டிருக்கிற நேரத்தில், உற்ற





தோழர்களும், தோழமைக் கட்சிக்காரர்களும் குழுமி இறுதி மரியாதை செலுத்த இருக்கும் நேரத்தில், கடைசி முறையாக கையாலே தாய் மகனுக்குக் குளிப்பாட்டலை நடத்திக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள், கிட்டு வீட்டை கடந்து செல்வதற்காக, ஊர்வலமாக வந்தார்கள். அந்த நேரத்தில், கிட்டு வீட்டைச் சேர்ந்தவர்களும், அந்தத் தெருவில் உள்ளவர்களும் குறுக்கே படுத்துக்கொண்டு, ஊர்வலம் செல்லக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள், எங்கே ஊர்வலம் போனால் கலவரம் ஏற்பட்டு அடிதடியில் கொண்டுபோய்விடுமோ, வேறு பயங்கரம் ஏற்படுமோ என்று பயந்து. திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் ரத்தினவேலு பாண்டியன் முதலியவர்கள், அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி வந்தவர்களை கையெடுத்துக் கும்பிட்டு, 'ஒரு கொலையோடு போகட்டும், ஐயா, திரும்பிச் செல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்பிறகு போலீசாரும் சமாதானம் சொல்ல, அங்கே ஒரு அமைதியைக் காண முடிந்தது. நாகர்கோவில் சம்பவங்கள் எத்தனையோ நடந்து விட்டன. ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், கூட்டணிக் கட்சிக்காக வேலை செய்த நண்பர்கள், எவ்வளவு அல்லல்களுக்கு உட்பட்டார்கள் என்பதெல்லாம் தெரியும். எதிர்க் கட்சித் தலைவர் நாங்களும் அடிபட்டோம் என்கிறார்கள். பழைய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு மேல்சபையில் அழகாக சொன்னார்கள் "நீங்கள் தவறு செய்தீர்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். நாங்கள் தவறு செய்தோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இரண்டு பேர்களும் தவறு செய்யவேண்டுமா?" என்ற கருத்துப்பட அந்தப் பெரியவர், கிருஷ்ணசாமி நாயுடு பேசினார்கள். 'நாங்கள் அவர்கள் சொல்வதை அங்கீகரிக்கிறோமா இல்லையா' என்பது வேறு விஷயம்.

ஆகவே, இனிமேலாவது 'நாகர்கோவில்கள்' நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் மிகுந்த பணிவோடு எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நாம் ஒரு நல்ல சமுதாயத்தை—மறுமலர்ச்சியைக்—காண விரும்பி அந்தப் பாதையில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்த நிலைமையில் இருக்கிறோம் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் வாழவும், தமிழ்நாடு செழிக்கவும் அரும்பாடு பட்டார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் எடுத்துக் கூறியது போல்—ம.பொ.சி. அவர்கள் நம்பிக்கை தளர வேண்டியதில்லை—அண்ணா அவர்கள் இல்லாத காரணத்தினால் தமிழ் அன்னைக்கு உரிய ஆசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் வாழ்த்தோடும், ஆசியோடும் இளையவனாக பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான் உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

அடுத்தபடியாக, நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பிற்போக்கான வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்திஞல் பின்தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக என் உயிரையே பணயமாக வைத்துப் போராடுவேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நான் இப்படிக் கூறுகின்ற சமயத்தில் முற்போக்கு சமுதாயத்திற்கு எந்தவிதமான ஆபத்தும் வந்து விடாதபடி பார்த்துக் கொள்வேன் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் என்னை வாழ்த்துவார், ஆசி கூறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். எச்சரிக்கை செய்வதும் ஒருவகை வாழ்த்துதான் என்று ஏற்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களையெல்லாம் மரபுப்படி உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று வேண்டிக் கொண்டு நான் அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை நான் கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், நான் குறிப்பிட்ட சில விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கான சில விஷயங்களைச் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். மறைந்த முதலமைச்சர் அறிஞர் திரு. அண்ணாதுரை அவர்களுடைய படத்தை சட்டப் பேரவையில் மாட்டுவதைப்பற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் எங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. திரு. அண்ணாதுரை அவர்களிடம் நெருங்கிப் பழகியவன் நான். அவருக்கு என்னைவிட நெருங்கிப் பழகியவரும் நண்பரும் யாரும் இருக்க முடியாது. என் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்க முடியாது. (சிரிப்பு) இதில் சிரிப்பதற்கு இடமில்லை. நான் முதலில் என்னுடைய, எங்கள் கட்சியினுடைய கருத்தைப் பேச்சின் மூலமாக உரை நிகழ்த்திவிட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். திரு. அண்ணாதுரை அவர்களின் படம் சபையில் மாட்டப்படுவது குறித்து அவர்கள் என்னைக் கலந்து பேசுவதற்கும், நான் ஏற்றுக் கொள்வதற்கும் உரிமை இருக்கிறது.

மற்றொவதாக, வேறுவிதமாக என்னிடமிருந்து விஷயங்களை எதிர்பார்த்தார்கள். நான் ஆசி கொடுக்கவில்லையே என்று சொன்னார்கள். நான் இப்பொழுதும் சொல்கிறேன். புதிய முதலமைச்சருக்கு நான் மனப்பூர்வமாக என்னுடைய ஆசியை மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய ஆசி எப்பொழுதும் அவருக்கு உண்டு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, நான் பிற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவன் என்பதை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் பிற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவன்தான். அந்தப் பிற்போக்கு வகுப்பினருக்கான பட்டியலில் இருவரும் ஒன்றாகவே இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
 தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்;

நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
 நிறைய உடையவர்கள் மேலோர்,

என்று பாரதியார் கூறியிருக்கிறார். நீதி செழிக்க வேண்டும், மதி பெருக வேண்டும், (மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகனைப் பார்த்தவாறு) இந்த மதி அல்ல, நமது மதி பெருக வேண்டும், (பெருஞ் சிரிப்பு), கல்வி பெருக வேண்டும், மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாம் போக வேண்டும், ஜனநாயக அமைப்பிலே யார் வேண்டுமானாலும் முதலமைச்சராக வரலாம். கடிந்து சொல்வதற்கும் அடித்துச் சொல்வதற்கும் இடம் இல்லை. "சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்" என்ற முறையிலேயே அன்போடும் பாசத்தோடும் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் சொல்லும்படியான விஷயங்களை எல்லாம், எதிர்க் கட்சியினர் கூறும் விஷயங்களையெல்லாம் சரியாக ஆராய்ந்து ஆட்சி நடத்தி, இந்த அரசு நல்ல வரவேற்பிற்கும், அன்புக்கும் பாத்திரமாக விளங்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட இன்னும் பட்ஜெட் விவாதம் போன்றவைகளில் நிறைய சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் புதிய முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் உளம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, எங்களுடைய ஆசி பரிபூரணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற வாசகத்தின் உண்மையை இப்போது புரிந்து கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மார்டின், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. தோ. மு. நல்லசாமி, திரு. ஆர். கருப்பையா, திரு. க. ராமமூர்த்தி, திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. எம். சுரேந்திரன், திரு. கே. என். குமாரசாமி, திரு. கே. விநாயகம் ஆகியோர்களுடைய திருத்தங்கள் எல்லாம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

இப்போது திரு. ஆலடி அருணா அவர்கள் கொண்டுவந்துள்ள ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் பேரவையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்படும்.

பேரவை முன்னுள்ள கேள்வி:

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் படவேண்டும்"—

"25—1—1969-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்ட மன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, பேரவை நாளை காலை மீண்டும் 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory rules and orders

86. Notification issued with G.O. Ms. No. 860, Home, dated the 26th March 1968, in regard to an amendment to Rule 103 of the Madras Cinemas (Regulation) Rules, 1957 published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955.]

### B. Reports, Notifications and other papers.

*48. Demands for Grants for Excess Expenditure for the year 1964-65 (English and Tamil).

*49. Notice of Demands for Grants for Excess Expenditure for the year 1964-65 (English and Tamil).

*50. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1968-69 (English and Tamil).

*51. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1968-69 (English and Tamil).

*52. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance presenting the Statement of Demands for Grants to cover excess expenditure relating to the year 1964-65 (English and Tamil).

*53. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance presenting the Second Supplementary Estimates for the year 1968-69 (English and Tamil).

* Laid on the table of the House on the 24th February 1968



## இணைப்பு—I.

[534-ம் பக்கத்திலுள்ள 70-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

வீட்டுத் தேவைக்கு மொத்தமாக வழங்கப்படும் மின்சக்தி உட்பட, வீட்டுக் காரியங்களுக்கு மின்சக்தி வழங்குவதற்குரிய கட்டண விதத்தையும் மின்சார கட்டண மீட்டர் வாடகையும் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து உயர்த்தி அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

பழைய கட்டண விதமும், திருத்தப்பட்ட விதமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | பழைய கட்டண விதம். | 1-9-1967-லிருந்து திருத்தப்பட்ட கட்டண விதம். |
|---|---|---|
| **சாதாரண வீட்டுத் தேவைகளுக்காக.** | | |
| திங்களொன்றில் முதல் 50 யூனிட்டுக்கு. | 30 காசு (யூனிட் ஒன்றுக்கு) | 32 காசு (யூனிட் ஒன்றுக்கு) |
| திங்களொன்றில் இரண்டாவது 50 யூனிட்டுக்கு. | 25 காசு (யூனிட் ஒன்றுக்கு) | 27 காசு (யூனிட் ஒன்றுக்கு) |
| திங்களொன்றில் அதற்கு மேற்பட்ட அளவுக்கு. | 22 காசு (யூனிட் ஒன்றுக்கு) | 24 காசு (யூனிட் ஒன்றுக்கு) |
| **வீட்டுத் தேவைக்கு மொத்தமாக வழங்கப்படும்போது.** | | |
| நிலையான கட்டணம் .. | இணைப்பு அளிக்கப் பட்ட முதல் 2 கிலோவாட்டுக்கு 11 ரூபாய் என்ற வீதப் படியும், கூடுதலாக வழங்கப்படும் ஒவ்வொரு கிலோ வாட்டுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 6 ரூபாய் என்ற வீதப்படியும். | இணைப்பு அளிக்கப் பட்ட முதல் 2 கிலோவாட்டுக்கு 16 ரூபாய் என்ற வீதப் படியும், கூடுதலாக வழங்கப்படும் ஒவ்வொரு கிலோ வாட்டுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 8 ரூபாய் என்ற வீதப்படியும். |
| மின்சக்திக் கட்டணம் .. | திங்களொன்றுக்கு யூனிட்டுக்கு 11 காசு திங்களொன்றுக்குரிய நிலையான கட்டணத்துக்கு குந்தகம் விளையாமல் யூனிட்டு ஒன்றுக்குரிய மொத்தக் கட்டணம் எத்தகைய நேர்விலும் யூனிட்டுக்கு 30 காசு என்னும் வீதத்துக்கு மேற்படக் கூடாது. | திங்களொன்றுக்கு யூனிட்டுக்கு 14 காசு நிலையான கட்டணத்துக்கு குந்தகம் விளையாமல் யூனிட்டு ஒன்றுக்குரிய மொத்தக் கட்டணம் எத்தகைய நேர்விலும் யூனிட்டுக்கு 32 காசு என்னும் வீதத்துக்கு மேற்படக்கூடாது. |
| **மின்சாரக் கட்டண மீட்டர் வாடகை.** | | |
| குறைந்த மின் ஓட்டமுள்ள மீட்டர். | மீட்டருக்கு திங்களொன்றுக்கு 15 காசு. | மீட்டருக்கு திங்களொன்றுக்கு 75 காசு. |
| அதிக மின் ஓட்டமுள்ள மீட்டர். | மீட்டருக்கு திங்களொன்றுக்கு ரூ. 1·50. | மீட்டருக்கு திங்களொன்றுக்கு ரூ. 2. |

The Government have ordered the enhancement of the rates for supply of power for domestic purposes including domestic bulk supplies and the meter rent, with effect from 1st September 1967.

The old and revised rates are as follows :—

*Ordinary domestic supplies.*

| | Old rates. | Revised rates from 1st September 1967. |
|---|---|---|
| First 50 units per month. | 30 p. per unit. | 32 p. per unit. |
| Next 50 units per month. | 25 p. per unit. | 27 p. per unit. |
| All in excess per month. | 22 p. per unit. | 24 p. per unit. |

*Domestic bulk supplies.*

| | | |
|---|---|---|
| (a) Fixed charges. | Rs. 11 for the first 2 K. W. of connected load and Rs. 6 for each additional K.W. or part thereof. | Rs. 16 for the first 2 K. W. of connected load and Rs. 8 for each additional K.W. or part there of. |
| (b) Energy charges. | 11 p. per unit per month. In no case the overall unit rate be higher than 30 p. per unit per month without prejudice to the fixed monthly charges. | 14 p. per unit per month. In no case the overall unit rate be higher than 32 p. per unit per month without prejudice to the fixed monthly charges. |

*Meter rent.*

| | | |
|---|---|---|
| Single phase meter | 45 p. per meter per month. | 75 p. per meter per month. |
| Polyphase meter. | Rs. 1·50 per meter per month. | Rs. 2 per meter per month. |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1969 பிப்ரவரி 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்--விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 71-ல் இருந்து 79 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### ஊராட்சிகளில் மருத்துவ மனை, பிரசவ விடுதி

* 80 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் நயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொரு மருத்துவ மனையையும் பிரசவ விடுதியையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, சில கிராமங்கள் மிகவும் உள் அடங்கிய பகுதியில் இருப்பதால் அங்கிருந்து நகர ஆஸ்பத்திரிக்கு பிரசவ கேஸ்களைக் கொண்டு வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே 'இன்டீரிய'ராக இருக்கும் கிராமங்களில் பிரசவ ஆஸ்பத்திரி கட்ட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மிகவும் உள் அடங்கிய கிராமங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர் மூலமாக சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முனிசிபாலிட்டி மூலமாகவும் பல மருத்துவ நிலையங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு மெடர்னிடி சென்டர் ஏற்படுத்துவது என்பது இன்றைய பொருளாதார நிலையில் சாத்தியக்கூறாக இல்லை.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மருத்துவமனை அமைக்காவிட்டாலும், 4, 5 பஞ்சாயத்துகளுக்கும் சேர்த்து ஓர் இடத்தில் அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பஞ்சாயத்து யூனியன்களில் இன்றைக்கு இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலேயும் ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. அந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே ஆண் டாக்டர்கள் இருக்கிறார்கள், பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுவதில்லை. எனவே ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு பெண் டாக்டரை நியமித்தால் பிரசவ கேஸ்கள் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு பெண் டாக்டரை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதற்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. வை. சுவாமிநாதன் : தற்போது பத்தாயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு தாய்-சேய் நல விடுதி இருக்கிறது. அந்த அளவைக் குறைத்து ஏழாயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது நல்ல யோசனைதான். ஆனால் பொருளாதார நிலையையொட்டி அதை இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. தி. பொன்னுமலை : தற்போது எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் இதுபோன்ற பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது ஏறத்தாழ 2,535 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், பிரைமரி ஹெல்த் சென்டர்கள் வாடகைக் கட்டடத்தில் இருப்பதால், சொந்தக் கட்டடத்திற்கு மாற்றவேண்டுமென்று நங்கவெள்ளி பஞ்சாயத்திலிருந்து விண்ணப்பம் அரசாங்கத்திற்கு அனுப்பி அதற்கான இடத்தையும் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரைமரி ஹெல்த் சென்டரை வாடகைக் கட்டடத்திலிருந்து சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது பற்றிய விவரம் வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்தப் பிரைமரி ஹெல்த் சென்டரிலிருந்து டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று வைத்திய வசதி அளிப்பதற்குப் பல இடங்களிலே ஜீப்கள் இல்லாத



நிலை இருக்கிறது. அதோடு பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு நல்ல கட்டடங்களும் இல்லாமல் இருக்கிறது. இக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்குப் புறம்பாக இருப்பதால், தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருத்துவ மனை என்று இல்லாவிட்டாலும் நகர பஞ்சாயத்துகளிலே மருத்துவ மனை ஏற்படுத்த சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது ஏறத்தாழ 205 மெடர்னிடி சென்டர்கள் முனிசிபாலிடி மூலமாக நடந்து கொண்டு வருகின்றன.

பள்ளிகளுக்குக் கட்டட மானியம்

*81 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு ரா. ரா. முனுசாமி : } மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்தர பாடசாலை, ஆரம்பப் பாடசாலை, உயர்தர ஆரம்பப் பாடசாலை ஆகியவைகளுக்கு முறையே கட்டடங்கள் கட்டுவதற்கு சர்க்காரால் எவ்வளவு பணம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே 50 சத விகிதம் என்று சொல்லிவிட்டு அதில் குறிப்பிட்ட தொகைகள் எல்லாம் உயர்தரப் பாடசாலை, உயர் தொடக்கப்பள்ளி என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு கட்டக் கூடிய கட்டடங்களினுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்கப்படுகிறதா அல்லது எது குறைவாக இருக்கிறதோ அந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறதா? இது நீண்ட நாட்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட தொகை. இப்பொழுது விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆகவே, கட்டடத்தினுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற முறை தனியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐம்பது சத விகிதம் து எது குறைவாக இருக்கிறதோ அது கொடுக்கப்படுகிறது. பட்ட பள்ளிகளுக்கு நிதி வசதி பெருகும்போது இதைப் யோசிக்கலாம்.

*17-720-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1969 பிப்ரவரி 26

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் நகராட்சிப் பள்ளிக்கூடம் இடிந்துபோய் மிகவும் சேதப்பட்டுள்ளது. நகராட்சியினர் நிதி வசதி இல்லாததால் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரசு அதற்குத் துணை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றி அனுகினால் பரிசிலனை செய்யலாம்.

### டால்மியாபுரம் பைலட் சிமெண்ட் தொழிற்சாலை

*82 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், டால்மியாபுரம் அருகே அமைக்கப்பட்டுள்ள பைலட் சிமெண்ட் தொழிற்சாலை (Pilot Cement Factory இன்னும் வேலை தொடங்காததற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த பைலட் சிமெண்ட் தொழிற்சாலை வேலை தொடங்கவில்லை என்று கூறுவது சரியல்ல. இது 1966 நவம்பர் மாதத்தில் வேலை செய்ய ஆரம்பித்து, அதிலிருந்து அவ்வப்போது செயல்பட்டு கொண்டு வருகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு டன் சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பைலட் ஸ்கீம் என்று சொன்னேன். பைலட் ஸ்கீம் என்றால் செமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை அல்ல. உற்பத்தி செய்வதற்குத் தேவையான டிசைன்கள் தயார் செய்வதற்கு பைலட் ஸ்கீம் சிறிய அளவிலே தொடங்கியிருக்கிறோம். எல்லோரும் ஈடுபடக்கூடிய அளவிலே தோற்றுவித்துவிட்டால் டிசைன்கள் அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலமாக லாபம் கிடைக்கும். டிசைன் உற்பத்தி செய்யும்போது 40 டன், 50 டன் என்ற அளவிற்குத்தான் வருகிறது.

**திரு. டி. தங்கப்பன் :** தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள் கிடைக்கின்ற இடத்திலேதான் சிமெண்ட் தொழிற்சாலை அமையமுடியும். இராமநாதபுரத்திலே கோரல் ஸ்டோன்ஸ், சுண்ணாம்புக் கற்கள் நிறைய கிடைக்கின்றன. அப்படிப்பட்ட மூலப்பொருள் கிடைக்கின்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பித்தால் லாபமாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் ஆரம்பிக்க அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுண்ணாம்புக் கற்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன. எந்த இடத்திலே அமைத்தால் அதிகமான டன் உற்பத்தி செய்ய முடியுமோ, அந்த இடத்திலே ஆரம்பிக்கிறோம். அப்போதுதான் போக்குவரத்து



1969 பிப்ரவரி 26]

செலவும் குறையும். அந்த முறையில்தான் சிறிய அளவிலே டிசைன் உற்பத்தி செய்வதற்காக பைலட் ஸ்கீம் ஆக ஆரம்பித்திருக்கிறோம். அது வெற்றிகரமாக முடிந்துவிட்டால், இதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** இந்த பைலட் ஸ்கீமைப் பொறுத்தவரையில் பைலட் ஸ்கீமாக ஆரம்பிக்க வேண்டாம், அப்படி ஆரம்பித்தால் நஷ்டம் வரும் என்று சொல்லுகிறார்கள். இந்த ஸ்கீமே தேவையா? இப்பொழுது இந்த ஸ்கீம் லாபமாக நடந்துகொண்டு இருக்கிறதா அல்லது நஷ்டமாக ஓடிக்கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதிலே லாப நஷ்டக் கணக்கு பார்க்கக்கூடாது. பொதுவாக ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே இம்மாதிரி முதல் முதலாக இங்குதான் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பைலட் ஸ்கீம் வெற்றிகரமாக நடந்தால் எதிர்காலத்தில் லாபம் கொடுக்கலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த பைலட் சிமெண்ட் ப்ளான்ட், குறைந்த அளவு உற்பத்தித் திறன் உள்ள தொழிற்சாலைகள் நிறைய ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் துவக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்த அளவுக்கு முதலீடு தேவைப்படும் என்பதை இப்பொழுது கண்டுபிடிப்பதில் ஒரு சிறு கஷ்டம் என்னவென்றால் மூலப் பொருட்களை டால்மியா சிமெண்ட் பாக்டரியிலிருந்து வாங்குகிறார்கள். தாதுப் பொருட்களை அவர்களே வெட்டி எடுத்து அதற்குப் பயன்படுத்தினால், உண்மையான முதலீட்டுச் செலவு எவ்வளவு என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதுபற்றி அந்தத் தொழிற்சாலையில் உள்ளவர்கள் ஏதாவது அரசாங்கத்திற்குக் குறிப்பு அனுப்பினார்களா? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையாக இருந்தால்தான் இந்தக் கேள்வி எழும். நாம் இப்பொழுது துரித பைலட் ஸ்கீம் தயார் செய்யும்போது, அதைப் பரீட்சார்த்தமாகப் பார்ப்பதற்குத்தான் அந்தக் கற்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, நிறைந்த அளவிலே வெளியிலே வாங்குவதாகச் சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன். ஆனால், கனம் உறுப்பினருடைய நல்ல யோசனையையும் ஏற்கனவே அரசாங்கம் பரிசீலித்து, இப்பொழுது இந்த பைலட் ஸ்கீமுக்கு 46.28 எக்கரா நிலங்களை அங்கே நாம் பெற்று, அதன் மூலமாக சுண்ணாம்புக் கற்களைப் பெறலாம் என்ற முயற்சி இருந்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது எந்த ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது? இதுவரையிலும் இதற்காக வேண்டி எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது? இவ்வளவு கால தாமதத்திற்குக் காரணம், தகுதி, திறமை இல்லாத ஒரு இன்ஜினியரை அங்கே நியமித்திருக்கிற காரணத்தினால்தான் என்று சொல்லப்படுவது

. . . . .

[1969 பிப்ரவரி 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு இருக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, எப் பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு, அதற்குப் பின்னலேயே, ஏதோ தவறு நடந்துவிட்டதாக அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆனால், எனக்கிருக்கும் விவரப் படி, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு போல் தோன்று கிறது. 1964-ம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. எல்லா வேலைகளும் முடிந்து 1966-ம் ஆண்டு வேலை தொடங்கப்பட்டது. இதுவரையில் செலவான தொகை 23.47 இலட்ச ரூபாய். ஆகவே, அதிலே தவறு இருப்ப தாகத் தெரியவில்லை. வேறு எதாவது குறிப்புகள் இருந்தால் அனுப்பிவைக்கலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தமிழ்நாட்டிலுள்ள சிமென்ட் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் சிமென்ட், நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இருக்கிறதா, அல்லது பற்றாக்குறையாக இருக் கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், நாம் ஏராளமாக சிமென்ட் உற்பத்தி செய்கிறோம். இப்பொழுது அதற்கு கண்ட்ரோல் இருந்துவருகிற காரணத்தால், நாம் நம்முடைய சிமென்டை மற்ற மாநிலங்களுக்கு விற்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அண்மையில் டில்லியில் மத்திய சர்க்காரிலே ஒரு முயற்சி எடுத்து இதை டீ-கண்ட்ரோல் செய்ய லாம் என்று ஏற்பாடு செய்து வருகிறார்கள். அப்படிச் செய்வதை வெற்றிகரமாக நடத்திவிடுவார்களானால், நம்முடைய தமிழ்நாட் டைப் பொறுத்த வரையில், அது பாதிக்கத்தக்க ஒரு காரியமாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து நாம் உற்பத்தி செய்யக்கூடிய சிமென்டுக்கு நல்ல சந்தை கிடைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** மாநிலம் பூராவும் எங்கெங்கு சிமென்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்பதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது சர்வே செய்ததா ? அப்படிச் செய்யவில்லையென்றால், இனிமே லாவது சர்வே செய்து, எந்த எந்த இடங்களில் சிமென்ட் தொழிற் சாலை ஆரம்பிக்கலாம் என்பதைப்பற்றி அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சர்வே பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. நான் முதலில் சொன்னதைப் போல், இப்பொழுது இருக்கின்ற தொழிற்சாலைகளில் நாம் உற்பத்தி செய்யக்கூடிய சிமென்ட் நமது மாநிலத்தின் தேவைக்குப் போக அதிக அளவிலே இருந்து வருகிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்தச் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கும்படியான பகுதிகள் சாதாரண



1969 பிப்ரவரி 26]

மாக பிற்பட்ட புஞ்சைப் பிரதேசங்களாகத் தான் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கற்கள் கிடைக்கும் பகுதியில் தொழிற்சாலை ஆரம்பித்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கும். உதாரணமாக, என்னுடைய பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்ற பகுதிக்குப் பத்து மைலுக்கு அப்பால் இன் னொரு பகுதியில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப் படிப்பட்ட நிலையைத் தவிர்க்க இன்றைக்காவது அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் உறுப்பினர் இதைப் பற்றி மிகக் கவலையோடு என்னிடம், முன்னால் ஒருமுறை சொல்லி யிருக்கிறார்கள். அவர்களே ஒப்புக்கொண்டார்கள். பத்து மைல் தூரம்தான். இருக்கின்ற பிரச்சினையெல்லாம், அவர்கள் இருக்கக் கூடிய மாவட்டம் ஒரு பகுதியாகவும், பத்து மைலுக்கு அப்பால் தொழிற்சாலை ஒரு பகுதியாகவும் அமைந்துவிட்டது. பத்து மைல் தூரத்திற்குப் போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆவதாக அரசாங்கம் கருதவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சிமென்ட் விலை மூன்று மாதங் களுக்கு ஒரு முறை கூடிக்கொண்டே இருக்கிறது. இப்படிப் போனால் சாதாரண மக்கள் வாங்க முடியாமல் போய்விடும். ஆகவே, சிமென்டுக்குப் பதிலாக வேறு உறுதியான பொருள்களைக் கண்டுபிடிக்க பரீட்சார்த்தமாக ஏதாவது முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிமென்ட் விற்பனை ஆகுமா, அதிலேயே கஷ்டம் இருக்குமா என்றுதான் சிமென்ட் உற்பத்தி யாளர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அதைப்பற்றி யோசித்தால் நமக்கு ஆபத்து வந்தாலும் வந்து விடும்.

### சிறு தொழில் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்கள்

*83 வினா—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன் நடத்திவரும் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய நம் மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில், விற்பனை நிலையங்களை நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சென்னை, தஞ்சாவூர், நெய் வேலி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மகாபலி புரம், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் தற்போது செயல்பட்டு வரும் விற்பனைப் பெருநிலையங்கள் பல, தொழில்துறையின் கைப்பணிப் பொருள்களையும், தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்களையும் காட்சிக்கு வைப்பதிலும் அவற்றை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாடு கைப்பணி கூட்டுறவு

விற்பனைச் சங்கம், புதுடில்லி, ஈரோடு, கரூர், உதகமண்டலம், கடலூர், மதுரை, தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அதன் கூட்டுறவு விற்பனைப் பெருநிலையங்கள் அவற்றின் மூன்று சென்னைக் கிளைகள் ஆகியவற்றின் மூலமாகக் கழகத்தின் பயன் பாட்டுப் பொருள்கள் சிலவற்றை விற்பனை செய்து வருகிறது. இம்மாநிலத்தின் முக்கிய நகரங்களில் உள்ள கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளைத் தனது பயன்பாட்டுப் பொருள்களில் சிலவற்றை விற்பனை செய்யுமாறு கழகம் கேட்டுள்ளது. இது தவிர, தமிழ் நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களில் பல்வேறு மாவட்டங்களில் இருப்பு வைப்பவர்கள்/வழங்குபவர்கள் பலரை நியமிப் பதன் மூலம் கழகம் விற்பனையை முடுக்கப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. கழகத்தின் முக்கியமான பொருட்களைக் காட்சியில் வைப்பதற்காக முதல்தரமான காட்சி அறை அலுவலகம் ஒன்றினை சென்னை அரசாங்க மாளிகையில் மலைச்சாலைக்கு எதிரில் தொடங்கும் செயற் குறிப்பும் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. போஜன்: இப்பொழுது இருக்கும் விற்பனை நிலையங்களைத் தவிர, நம் மாநிலத்தில் மேலும் பல நகரங்களில் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி, விற்பனையை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத்தான் விவரமாகப் படித்துக் காண்பித்தேன்.

திரு. பி. வேலுசாமி: ஐயா, விற்பனை ஆகாமலிருக்கின்ற உற்பத்திப் பொருள்கள் யாவை? விற்பனை ஆகாமல் இருக்கும் பொருள்களின் மதிப்பு எவ்வளவு? எந்த எந்தப் பட்டறைகள் லாபகரமாக இருக்கின்றன? எவை எவை நஷ்டத்தில் நடைபெறுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் கார்ப்பரேஷன் நடத்திவரும் தொழிற்சாலைகளைச் சர்க்கார் ஊக்குவிக்கும் முகத்தான் சர்க்காருக்குத் தேவையான சாமான்களுக்கெல்லாம் தனி நபர்களிடத்திலே இன்டென்ட் கொடுக்காமல் இத்தகைய தொழிற்சாலைகளிடத்திலே கொடுக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேவையான பொருள்களை எப்படி வாங்கவேண்டும் என்பதற்கு விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. நம்முடைய அரசாங்க உற்பத்தி நிலையங்களுக்கு முதலிடம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Madurai–Ramanathapuram road*

* 84 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that Madurai-Ramanathapuram road via Manamadurai which has a very heavy traffic has not been improved even after acquiring lands for broadening and improving the same; and



(b) the probable date when the work of widening is likely to be completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை. மானாமதுரை வழியே செல்லும் மதுரை–ராமநாதபுரம் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட வில்லை. மானாமதுரையில் இச் சாலையில் புறச்சாலை ஒன்றை அமைப்பதற்காக மட்டுமே நிலம் கையகப்படுத்தப்பட்டது.

(இ) இச் சாலையை அகலப்படுத்தும் பணி, இது குறித்து இந்திய அரசின் ஆணைகள் பெறப்பட்டபின் மேற்கொள்ளப் படும்.

Dr. H. V. HANDE: May I know whether any representation has come from the residents of Manamadurai and surrounding areas requesting the Government to widen this road and expedite its broadening and smoothen the traffic? In that case may I know why the State Government did not immediately get in touch with the Centre and get whatever funds that are required? Is it because the Centre had not given funds that the broadening of the road has been prevented or is there any other reason?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: So far as I am aware, no representation has been received from the residents of the locality. It is the responsibility of the Central Government. The Chief Engineer has furnished the Government of India, a rough estimate for Rs. 76,60,800. We are awaiting sanction from the Central Government.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, மதுரை, இராம ருதபுரம் ரோடு மிக முக்கியமான சாலையாகும். வெளிநாட்டி லிருந்து வருகிறவர்களும், மற்றும் இந்தியாவின் பல பகுதிகளி லிருந்து வருகிறவர்களும் நிச்சயமாக இராமேஸ்வரம் செல்லுகிறார் கள். அந்த ரோடு சரியாக இல்லாத காரணத்தால், இராமேஸ் வரம் செல்வதற்கு இயலாமல், சிலர் திரும்பிச் சென்று விடுகிறார் கள். ஆகவே, இதை மனத்திலே கொண்டு, வெளிநாட்டினரையும் கவரக்கூடிய வகையில், அந்த ரஸ்தாவை அகலமாக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஒரு தேசிய நெடுஞ்சாலையாகும். இதன் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந் தது. நமது அரசாங்கம் ஏற்கனவே ரூ. 76,60,800 செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித் திருக்கிறது. கனம் அங்கத்தினர் கருத்தை மனத்தில் கொண்டு, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளும்.

திரு. டி. தங்கப்பன்: மதுரை இராமநாதபுரம் சாலையைவிட இராமநாதபுரத்தில் இருந்து மண்டபம் வரையிலுள்ள சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கிறது. மதுரை

இராமநாதபுரம் சாலையிலிட இராமநாதபுரம்-மண்டபம் சாலை யாத்திரிகர்களுக்கு மிகவும் இன்றியமையாதது ; புயலினால் பெரி தும் பாழடைந்திருப்பது; வெள்ள அரிப்பாலும் சேதமுற்றிருப் பது. ஆகவே அதனுடைய இன்றியமையாத தன்மையைக் கருத் தில் கொண்டு அதை விரைவில் செப்பனிட அரசாங்கம் நடவ டிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பின னுடைய கருத்தை மனதில் கொண்டு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

## குடகனாறு திட்டம்

**83 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

குடகனாறு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இத் திட்டத்திற்கு செலவு அதிகம் ஆவதையும் புதிய வேலைத் திட்டங்களை மேற் கொள்ள போதிய அளவு மிகுதிநீர் இல்லாத காரணமும் காட்டி, இத்திட்டத்தை முந்திய அரசு ஒத்திப்போட்டுள்ளது, இருப்பினும் குடகனாறு ஆற்றுப் படுகையில் சிறுபாசனத் திட்டங்கள் ஆராயப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தை மறுபரிசீலனைச் செய்து மேற்கொள்ள இயலுமா, அதற்குள்ள சாத்தியக்கூறுகள் யாவை என அறிய இவ்வரசு மீண்டும் நீர்ப்பாசன தலைமைப் பொறி யாளரைப் பணித்துள்ளது. அவரது ஆய்வுப் பரிவுரை கிடைத்த பின் இது குறித்து மீண்டும் அரசு கவனிக்கும். ஆற்றுக்கடைப் பகுதியில் சிறுமேம்பாடு திட்டங்கள் எடுத்துக்கொள்ள முடியுமா வென்பதும் ஆய்வில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள வெள்ளியணைப் பகுதிக்கு நான் செல்லுகின்ற காலங்களில் அப்பகுதி மக்கள் என்னை அழைத்துச் சென்று அங்குள்ள கிணறுகளைக் காட்டுவார்கள். பல அடி ஆழம் தோண் டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் ஊறி இருக்காது. ஆனால் என்னைக் கூட்டிச் சென்ற மக்களின் கண்களில் கண்ணீர் ஊறி இருக்கும். இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலையுடைய அவர் களது குடிநீர்ப் பிரச்சினையும் வாழ்க்கைப் பிரச்சினையும் தீர, அரசு இத்திட்டத்தை முடிக்க விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப் பினர் தொகுதிப் பிரச்சினையில் இவ்வளவு அக்கறை கொண் டிருப்பது பாராட்டத்தக்கது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.





## *Seepage channel in 'Kantharuvai'*

* 86 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a seepage channel in 'Kantharuvai' in Sasthavinallur village in Satangulam Panchayat Union Council area in Tirunelveli district; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) ரூபாய் 1.25 லட்சம் செலவாகும் இந்திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சாஸ்தாவிநல்லூர் தருவை நீரில் மூழ்காமலிருக்கச் செய்வதற்காக இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 480 ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்குவதனின்றும் காப்பாற்றப்படும். கூடுதலாக 44.25 டன்கள் உணவு உற்பத்தி பெருகுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன் நெல் விளைவிப்பதற்கு சராசரி ரூபாய் 2,825 செலவாகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, கண்தருவைக்கு வருகிற நீரில் சுமார் 10 அடித் தண்ணீரையாவது தேக்கி வைத்துக் கொண்டு அதற்கு மேல் உள்ளவற்றை கசிவு நீராக வெளியிட்டால் தான் அந்தப் பகுதியில் உள்ள புஞ்சைப் பயிர்களும், புளியமரம் போன்ற மரங்களும் பயன் அடையும், இல்லாவிடில் அவை அழிந்து போய்விடும் என்பதாக அந்தப் பகுதி மக்களிடத்தில் இருந்து அனுப்பப்பட்ட மகஜர் அரசுக்கு வந்திருக்கிறதா? அது கவனிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படிப்பட்ட மனு அந்தப் பகுதி மக்களிடத்தில் இருந்து வந்திருப்பதாகத் தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

## *Loans taken by Madras Corporation*

* 87 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Madras Corporation has been permitted to borrow funds from Scheduled Banks in Madras;

(*b*) if so, the total amount so borrowed by Madras Corporation during the years 1959–60 to 1965–66 and the rates of interest payable;

(*c*) the purpose for which such borrowals were permitted; and

(*d*) the total amount outstanding to be paid as on date by the Corporation of Madras?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

* 720–722-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(உ) வரி வருவாய் குறைந்த மாதங்களில் சென்னை மாநகராட்சியின் அன்றாடச் செலவுகளின் நிமித்தம் கடன்கள் வாங்க அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

(எ) 1968 மே இறுதியில் வங்கியில் அதிகப் பற்றுள்ள தொகை ரூ. 49.12 லட்சமாகும்.

DR. H. V. HANDE : From the statement placed on the table of the House it looks as though nearly Rs. 3-1/2 crores has been overdrawn and in addition another amount also has been given by the Hon. Minister. Has the amount that has been overdrawn been utilised for the purpose for which it was drawn? Has the Government control over utilisation? Under what head was the overdrawn amount drawn and under what head it was spent?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தத் தொகை பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்படுகிற தொகையைத் திரும்பச் செலுத்திவிட்டே மறு ஆண்டு அதிகமாகப் பெற்று வருகிறார்கள். ஒரு ஆண்டு வாங்கியவற்றைக் கொடுக்காது, மறு ஆண்டு பெறுவது அதன்மூலம் நின்ற நிலுவை இது என்கிற நிலை இல்லை இது, என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** இங்கு குறிப்பிட்டிருக்கிற வங்கிகளில் இருந்து கடன் வாங்குவதைத் தவிர கார்ப்பரேஷன் பொது மக்களிடம் இருந்து கடன் வாங்கலாம் என்பதாக உத்தரவு போட்டிருக்கிறார்களா? அப்படிப் போட்டிருந்தால் எவ்வளவு வசூல் செய்திருக்கிறார்கள்? அப்படி வசூல் செய்யப்படுகிற தொகையை எவ்வாறு செலவு செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஒரு கோடி ரூபாய் வரையில் பொதுமக்களிடம் இருந்து கடனைப் பெறலாம் என்ற ஒரு திட்டத்தை இப்போது அனுமதித்திருக்கிறது. அதில் எவ்வளவு தொகை வசூலாகியிருக்கிறது என்கிற விவரம் வரவில்லை. அந்தத் தொகை வசூலான பின்பு அதை எப்படிச் செலவிடலாம் என்று மாநகராட்சி மன்றம் யோசனை சொல்கிறதோ அதைப் பற்றிப் பரிசீலித்துத் திட்டங்கள் தீட்டலாம்.

**திரு. மா. பா. சாரதி:** நகராட்சிகள் இம்மாதிரி நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வங்கிகளில் இருந்து கடன் வாங்க சர்க்கார் அனுமதிக்குமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நகராட்சிகளிடம் இருந்து அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் அது எவ்வளவுதூரம் சாத்தியம் என்பது பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** பொதுமக்களிடம் இருந்து ஒரு கோடி ரூபாய் கடன் திரட்டப்படுகிறது என்றார்கள், அது எந்த எந்தக் காரியங்களுக்காகச் செலவிடப்படும்?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கனவே இந்தக் கேள்விக்கான விடை தந்தேன். கடன் கிடைக்கிறதைப் பொறுத்து, அதை எப்படிச் செலவழிக்கலாம் என்பதைத் தீர்மானிக்கலாம்.

*Grants for Local Development Works*

* 88 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether Government have sanctioned grants for distribution among the various panchayat unions for the year 1968–69 for Local Development Works;

(b) if so, how much and for what kind of works; and

(c) the basis on which these grants are distributed?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) இம்மாநிலம் முழுவதற்கும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 182.22 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தண்ணீர் வழங்கும் பணிக்கும் இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கும், தொடக்கப்பள்ளி கட்டடம் கட்டுவதற்கும் இத்தொகை பயன்படுத்தப்படும்.

(உ) எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இத் தொகை சமமாகப் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்:** அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்க உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. வறண்ட பிரதேசங்களாகிய செங்கற்பட்டு மாவட்டத்தில்—குறிப்பாகத் திருத்தணி பகுதியில்—பல வேலைகள் பணம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. தயவுசெய்து, வறண்ட இந்தப் பிரதேசங்களுக்காவது அங்குள்ள மக்களின் நன்மையை உத்தேசித்து அதிகத் தொகை ஒதுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் சமமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிக நிதி கிடைத்தால் மேலும் ஒதுக்கலாம். வறண்ட பிரதேசம் என்கிறபோது அதற்கென்று தனியாக வேறு வழியில் நிதி ஒதுக்கிப் பல காரியங்கள் செய்யப்படுகின்றன. இதன் காரணமாக அதிக நன்மை பெறுகிற செங்கல்பட்டு மாவட்டத்தில் திருத்தணியும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த மானியம் வழங்குவதில் 200 கிலோ மீட்டர் பரப்பளவுள்ள யூனியனுக்கும் 800 கிலோ மீட்டர் பரப்பளவுள்ள யூனியனுக்கும் ஒரே மாதிரி மானியம் வழங்கப்படுவது சரியல்ல. விளாத்திகுளம் போன்ற பெரிய யூனியன்கள், ஒதுக்கப்படுகிற பணத்தைக்கொண்டு ரோடுகள்கூடப் போட முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே அதிக பரப்பளவுள்ள யூனியனுக்கு அதிக நிதி ஒதுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1969 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கனம் அங்கத்தினருடைய யோசனை கருத்தில் கொள்ளத்தக்கது.

திரு இரா. சௌந்தரராஜ மூப்பனார்: இம்மாதிரி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகை 10 ஆயிரம் ரூபாய்க்குள் இருப்பதால் பல வேலைகளில் எந்த வேலையை எடுத்துக் கொள்வது, எந்த இடத்தில் எடுத்துக்கொள்வது என்பது பற்றி சிக்கலாகப் போகிறது, எந்த வேலையும் நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே, அதிக நிதி ஒதுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

9-30 a.m. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த நிதி கிட்டத்தட்ட 182.22 லட்ச ரூபாய் இருக்கிறது. சமமாக எல்லாவற்றுக்கும் ஒதுக்குகிறபோது ஒரு யூனியனுக்கு நாற்பத்தொன்பதாயிரத்து இருநூற்றைம்பது ரூபாய் கிடைக்கும். ஆகவே, பத்தாயிரத்திற்கும் நாற்பத்தொன்பதாயிரத்திற்கும் இடையில் உள்ள தொகையையும் கருத்தில் கொள்ளவேண்டும். நிதி நிலை இடம் கொடுக்கிற போது அதிகத் தொகை வழங்க அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்திலே உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையிலும், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையிலும், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையிலும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமையில் அதற்கு நிதி வசதி இல்லாத நிலைமையிலே அந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களை 'ஈ' பிரிவாக இறக்கி அவற்றிற்கு அதிகமாக மானியம் கொடுக்கவேண்டுமென்று அவைகள் கேட்டுக்கொண்டதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த ஆசிரியர்களுக்கு எல்லாம் உடனடியாகச் சம்பளம் வழங்கக்கூடிய அளவிலே அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இது மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியில்லையென்றாலும் ஒன்றிரண்டு விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களிலே நிதிவசதி இல்லாததன் காரணமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதிலே அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது அவற்றிற்கு முன் பணம் வழங்கி அரசாங்கம் அப்படிப்பட்ட நிலைமைகளைத் தீர்த்துவைத்திருக்கிறது. பின்தங்கிய நிலையிலே உள்ள ஊராட்சிகளுக்கு நிரந்தரப் பரிகாரம் காணக்கூடிய முயற்சிகளைக் கல்வித் துறையினர் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். 'ஈ' பிரிவாக இறக்கவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை கொடுத்ததின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் 4 பிரிவுகளாகத்தான் பிரிக்கப்படுகின்றன. இப்பொழுது புதிதாக ஒரு பிரிவைப் பிரிக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



1969 பிப்ரவரி 26]

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவர் அவர்களே, தலைஞாயிறு, அறந்தாங்கி பஞ்சாயத்து ஒன்றியங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மனித சக்தித் திட்டத்தைக் கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தை மீண்டும் அமலுக்குக் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மனித உழைப்புத் திட்டம் அந்தப் பகுதியிலே பின்வாங்கப்பட்டுவிட்டதாக எனக்குத் தகவல் இல்லை. அந்தத் தகவலைத் தெரிவித்தால் ஏன் என்பதற்கான விவரங்களைத் தெரிவிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் கொடுக்கும்பொழுது எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரே சீராக வழங்கப்படுகிறது. இது முக்கியமான பிரச்சனை. இந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் ரஸ்தாக்களைச் சீர்படுத்துவதற்காக மானியம் ஒதுக்கப்படுகிறது. ரஸ்தாக்கள் நல்ல நிலையிலே உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கும், ரஸ்தாக்கள் மிகவும் மோசமாக இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரேமாதிரியாக மானியம் கொடுக்கப்படுகிறது. நல்ல நிலையிலே இல்லாமல் மோசமாக இருக்கிற ரஸ்தாக்களுக்காக அந்த யூனியன்களுக்கு அதிகமாக மானியம் கொடுப்பதற்கு ஏற்ற முறையில் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு மாற்றியமைக்கத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பாதை சீரமைப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரே அளவில் சமமாகத் தருவதில்லை. ஒரு ஆளுக்கு 40 பைசா என்று மக்கள் தொகை அடிப்படையிலேதான் தரப்படுகிறது. இதனால் எல்லா இடங்களிலும் பாதை சீரமைப்பு ஏற்பட்டு விட்டது, இராமநாதபுரம் அப்படியே இருக்கிறது என்று சொல்லிவிடமுடியாது. இராமநாதபுரம் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளலாமே தவிர, தமிழகத்திலே எங்களுக்குப் பாதை சீராக்கப்பட்டுவிட்டதால் அந்தத் தொகை இனிமேல் தேவையில்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில் எந்த ஊராட்சி ஒன்றியமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சகாதேவக் கண்டர்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, சில பஞ்சாயத்துக்களுக்குச் சாலை வசதியை அமைத்துக்கொள்வதற்காக, நிலத்தைத் தானமாக வழங்கவேண்டுமென்று சொல்வதால் தானமாக வழங்கமுடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு நிலத்தை தானமாக வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நிலத்தைத் தானமாகப் பெற வேண்டுமென்று விதிமுறைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைக்கேற்ப இயலுமானால் தானமாகவும், இல்லாவிட்டால் விலைக்கும் வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை தான் இப்பொழுது இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு சாலைகள் இணைப்புக்காகவும், ரோடு வசதிக்காகவும் நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. சில இடங்களிலே சாலைகள், பஸ் போக்குவரத்து அதிகமாகிவிட்டதாலே பாதுகாப்பு இல்லாத நிலைமையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ரோடுகளுக்காவது நிதி வசதியளித்து போக்குவரத்துக்குப் பாதகம் இல்லாமல் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா முத்துசாமி: இது உள்ளபடியே கவனத்திலே கொள்ளவேண்டிய பிரச்சனைதான் என்றாலும், மாநில பொதுப்பணித் துறையானது அந்த வகையிலே கவனம் செலுத்தும். சில பல ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் 250 மைல்களுக்கும் சென்ற ஆண்டு அதற்குக் கூடுதலாகவும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு பராமரிப்பு நடைபெற்று வருகிறது. மேலும் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தலாம். அதிகமாகக் கொடுத்தால் மேலும் நிலைமை சீராகும்.

திரு. கே. பி. எஸ். மணி : கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற ரோடுகள் எல்லாம் பராமரிக்கப்படாமலே இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கீழ்த் தஞ்சையிலே சல்லன் லேண்டாக இருப்பதால் முதலிலே கப்பி போட்டால் கப்பி போட்டதாகவே தெரியவில்லை. இரண்டாவது முறை கப்பி போட்டாலும் கப்பி போட்டதாகத் தெரியவில்லை. மூன்றாவது தடவை போட்டால்தான் கப்பி போட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றி டி.டி.சி. மீட்டிங்கிலே இதற்காக 40 பைசா என்று இருப்பதை 80 பைசாவாக அதிகரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு-திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் அந்த ஊராட்சியினுடைய தலைவராக இருப்பதால் நிர்வாகத்திலே இருக்கிற சங்கடங்கள் அவருக்குத் தெரிந்திருக்கும். 40 பைசாவை 80 பைசாவாக ஆக்குவது பாதையினுடைய வளர்ச்சிக்காக இருந்தாலும் மத்திய அரசு அதிகமாக்கக்கூடிய சூழ்நிலையில் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிகமாக நிதி கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

### பொள்ளாச்சியில் தொழிலாளர் மருத்துவமனை

* 89. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி பகுதியில் E.S.I. திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?**



(இ) அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த இ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் பல இடங்களிலே திருப்பூர், உடுமலைப்பேட்டை போன்ற இடங்களிலே மருத்துவ மனை கட்டுவதற்காக முடிவு எடுக்கப்பட்டும் இடங்களைக் கையகப்படுத்துவதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே அதைத் துரிதப்படுத்தி அப்படிப்பட்ட இடங்களைக் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பொள்ளாச்சியைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்கள் சொல்லலாம்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, பழனியில் இ. எஸ். ஐ. திட்டம் ஆரம்பிப்பதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து இடம் பார்த்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம்: தலைவரவர்களே, பொள்ளாச்சியிலே பஞ்சாலைகளிலே வேலை செய்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நல்லமுறையிலே மருத்துவ வசதியில்லாமல் இருக்கிறது. ஏற்கனவே உள்ள அரசாங்க மருத்துவ மனைகளும் வசதியாக இல்லை. குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் பிரசவ காலங்களிலே அல்லலுக்குள்ளாக நேரிடுகிறது. எனவே முதன் முதலில் குறைந்தபட்சம் பிரசவ விடுதியாவது ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொள்ளாச்சியிலே 16 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஆரம்பிப்பதற்காக ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டு வேலைகள் விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நெய்வேலி மின்விசைக்குக் கூடுதல் விலை

* 90. வினா—திரு. எல். ஜே. இராமசாமி : } மாண்புமிகு மின்
டாக்டர் எச். வி. ஹண்டே : }
சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் மத்திய அரசாங்கம் நெய்வேலி மின்விசைக்குக் கூடுதல் விலை மாநில அரசைக் கேட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** (அ) & (இ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தமிழ் நாடு மின்சார வாரியத்துக்கு, தான் வழங்கும் மின்சாரத்தின் ஒரு யூனிட்டிற்கான கட்டண விதத்தை உயர்த்த வேண்டும் என்று கோரியது. இதுபற்றி தமிழ்நாட்டு அரசாங்க அமைச்சர்களுக்கும், மத்திய அரசு அமைச்சர்களுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக முடிவில் நெய்வேலியி லிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையை யூனிட்டுக்கு 5.2 காசி லிருந்து 5.9 காசாக 1—4—68 தேதியிலிருந்து உயர்த்த ஒப்புக் கொள்ளப்பட்டது.

DR. H. V. HANDE: Sir, I am afraid that in this particular deal, we have been treated very badly by the Central Government. At least in future will the State Government express to the Central Government that we cannot afford to pay such a high tariff? As a solution to the problem, will the State Government suggest to the Central Government that we will buy all the power produced from Neyveli, provided the Central Government show some concession in the tariff rate? Now the argument of the Central Government is that the Neyveli Project is running at a loss and so, they have to raise the rate. But we can make it run without loss. So, will the State Government suggest to the Central Government that they will buy all the power and the Central Government should reduce the tariff?

**மாண்புமிகு திரு ஓ. பி. ராமன்:** அதற்கான பேச்சுவார்த்தை கள் நடந்துதான் முடிவுக்கு வந்திருக்கிறோம். இதைப்பற்றி இன்னும் யோசனை இருந்தால் ஆராயலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** நீர் மின்சாரத் திட்டம் வேலை செய்கிற காலங்களில் நெய்வேலி அனல் மின்சார நிலையத்திலிருந்து அவ்வளவு மின்சாரத்தையும் பெற முடியவில்லை. அந்தக் காரணத்தைக் காட்டி நெய்வேலி நிறுவனத்தார் கட்டணத்தை குறைந்த அளவு 8 பைசாவாகவாவது உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்து, அதிலே இந்திய சர்க்காரும் விடாப்பிடியாக இருந்தது. அவர்களுடன் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சமரசத்திற்கு ஏற்பாடு செய்து அதை 5.9 பைசா அளவுக்குக் குறைத்து மின்சார இலாக்காவிற்கு நேரவிருந்த சுமார் 2 கோடி ரூபாய் செலவினத்தைத் தவிர்த்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** இதைப் பற்றி அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தினார்கள். நெய்வேலி கார்ப்பரேஷன் வாதமெல்லாம், ஏராளமாகச் செலவாகிறது என்பதாகும். அந்தச் செலவுக்கு எப்படியாவது வருமானம் பெற வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் களும் தங்களுக்கும் அதிலே பங்கு இருக்கிறது என்று வற்புறுத்தி வருகிறார்கள். மாநில அரசு சிறந்த முயற்சி எடுத்துக் கொண்டு



கனம் அங்கத்தினர் சொன்னது போல் எவ்வளவு குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்து வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

DR. H. V. HANDE: The complaint of the State Government to the Central Government is that we are not buying the entire power from Neyveli. Is it a fact that we are not able to buy our entire power from Neyveli? Is it a fact that it is possible to buy more power from Neyveli? In such a case we can compel or request them to reduce the rate.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நேற்றுக்கூட கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டரைச் சந்தித்துப் பேசினேன். இப்போது சில ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் குற்றச்சாட்டு, ஆந்திர மாநிலத்தின் குறை, இனிமேலும் ஏற்படாதிருக்க முயற்சிப்பதாகச் சொன்னார் கள்.

THIRU K. VINAYAKAM: Is it not a fact that there is a greater potentiality of producing electric power in Neyveli? Since Government are not consuming the entire quantity of power produced there and is purchasing power at a higher rate from other places, will the Government, instead of depending on electric power from neighbouring States or tapping our own regions, give an undertaking to the Neyveli Project authorities that they would take the entire current from them, so that the price may be lowered down considerably?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம் 'கிரிட்'டின் பக்கத்தில் எந்தெந்த மாநிலம் தோதாக மின்சாரத்தைக் குறைந்த விலையில் கொடுக்கிறதோ அதைப் பெறுகிறோம். இன்னும் அதிகமாக உற் பத்தி செய்ய முடியும் என்பதும் உண்மை. புதிய அமைச்சர் திரு. ஜகன்நாத ராவ் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள், அவர்கள் அண்மையில் சென்னை வர இருக்கிறார்கள். அப்போது இந்தத் திட்டம் பற்றியும் பேசி முடிவு எடுக்கப்படும்.

### *Film studios*

• 71 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are aware that some of the film studios are being shifted from Tamil Nadu to the neighbouring States?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரைப்படம் எடுக்கும் கலைக் கூடம் எதையும் தமிழ்நாட்டிலிருந்து அண்டை மாநிலங்களுக்கு மாற்றுவதுபற்றித் தகவல் ஏதும் இல்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** இம்மாதிரி பிலிம் ஸ்டுடியோக் கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்லாமல் அதன் மூலம் நம்முடைய அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் நிலைத்து நிற்பதற்கான வகையில் அவைகள் இங்கேயே செயல்படுவதற்கான முறையில் நட வடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி எந்தக் கலைக்கூடமும் வெளி மாநிலங்களுக்குச் செல்வதாக இல்லையென்று தொடக்க பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

THIRU T. MARTIN. Most of the film producers in Madras city or other parts of Tamil Nadu do not own film studios of their own. So they shoot their films in studios owned by others on payment of charges. They complain that the charges are heavy. In the circumstances, may I request the Hon. Minister to state whether the State Government will come forward to start a film studio in the public sector for the benefit of film producers so that their cost of production also could be reduced?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொதுத் துறையில் ஸ்டுடியோக்களை ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை. சர்க்கார்த் துறையைப் பொருத்தவரை, அடையாற்றில் செய்தித் துறை ஸ்தாபனத்திற்காக ஒரு ஸ்டுடியோ இருந்து வருகிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** புதிய அரசு, திரைப்படத் தொழிலை நாட்டுடைமையாக்கும் என்ற அச்சத்தால் சிலர் புதிய ஸ்டுடியோக்களை அமைக்க முன்வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் அந்தக் கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** லாட்டரிச் சீட்டின் விற்பனை காரணமாக சினிமாவின் மூலம் வரக்கூடிய வருமானம் வெகுவாகக் குறைந்து விட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த மந்த நிலைமை காரணமாக வேறு மாநிலங்களுக்கு சினிமா ஸ்டுடியோக்களை மாற்றும் நிலை ஏற்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வேறு மாநிலங்களுக்கு இந்த ஸ்டுடியோக்களை மாற்றும் அளவுக்கு எந்த ஸ்டுடியோவுக்கும் மந்த நிலைமை ஏற்பட்டுவிடவில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** தமிழ்நாட்டிலுள்ள திரைப்பட ஸ்டுடியோக்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? சென்னை மாநகரத்திலுள்ள எண்ணிக்கை எவ்வளவு? அண்டை மாநிலங்களில் உள்ளவர்களால் நடத்தப்படுகிற திரைப்பட ஸ்டுடியோக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தனிக் கேள்வி போட்டால் தேவையான முழு விவரங்களையெல்லாம் உறுப்பினருக்கு அளிக்கலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** மூலக் கேள்விக்கு எதிரான வகையில், தமிழ்நாட்டிலுள்ள பட நிறுவனங்களில் தொழில் நுணுக்கத்தையும், திறமையான படப் பிடிப்பு முறையையும், கருதி, இந்திப் படத் தயாரிப்பாளர்கள் இங்கு வந்து தங்களுடைய படங்களை எடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த மொழிப் படத் தயாரிப்பாளர்களாக இருந்தாலும் ஸ்டுடியோவுக்குக் கட்டணத்தைச் செலுத்தித்தான் படத்தை எடுக்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கிராமப்புறங்களில் மக்கள் வசதியாக சினிமா பார்ப்பதற்கு கிராமப்புற திரைப்பட அரங்குகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி, ஸ்டுடியோக்களைப் பற்றியது.

*Grievances Counter in Government offices*

* 72 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government proposes to instruct all Government offices to open "grievances counter"; and

(b) if so, the object thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) பொதுத் (பணி) துறையின் 29—7—1968 தேதியிட்ட 1580 எண் அரசாங்க ஆணையில், பொது மக்களுடன் தொடர்பு உள்ள அலுவலகங்களில் தகவல் அறை ஒன்றினை அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) அரசாங்க அலுவலகங்களில் இடைத் தரகர்களை நீக்குவதும் பொதுமக்களுக்கு வசதி செய்து கொடுப்பதும் இதன் நோக்கமாகும்.

**திரு. கே. விநாயகம் :** அப்பேர்ப்பட்ட நோக்கம் நம்முடைய சர்க்காருக்கு இருந்தால் இதுவரையில் எந்தெந்த அலுவலகத்திலே இந்தத் தகவல் அறியும் கவுண்டரைத் திறந்து இருக்கிறார்கள்? அங்கு எவ்வளவு பேர் வந்து குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள்? அப்படித் தெரிவித்த குறைகளைப் பற்றி அலுவலகமோ சர்க்காரோ நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டம் இப்போதுதான் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு விவரங்களைத் தர இயலாத நிலையில் இருக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அரசாங்க அலுவலகங்களுக்குக் குறைகளை எழுதினாலும், புகாரை எழுதி அனுப்பினாலும் சரியான பதில் பல மாத காலத்திற்கு வருவதில்லை. இத்தனை காலத்திற்குள் பதில் அனுப்ப வேண்டும். இவ்வளவு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முறையை அரசாங்கம் ஏற்படுத்துமா?

[1969 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உரிய காலத்தில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்று. உறுப்பினர் கூறிய குறைபாடுகளைக் களைவதற்குத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சில மாதங்களுக்கு முன்பு ‘பப்ளிக் க்ரீவன்ஸஸ் டே’ என்ற ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்து துவக்கி வைத்தார்கள். அதிலே பல யோசனைகளை சட்ட மன்ற உறுப்பினர்களும், உத்திருந்த உயர்தர அதிகாரிகளும் கூறியிருக்கிறார்கள். அங்கு கூறப்பட்ட யோசனைகளை மேற்கொண்டு கிரீவன்ஸஸைப் போக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ? அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு எந்த இலாகாவுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த யோசனைகளையெல்லாம் புதிய அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான் படித்துப் பார்த்து எந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆராய்வேன்.

மன்னார்குடியில் தீயணைக்கும் பணியாளர்களுக்கு வீட்டு வசதி.

*73 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்திலுள்ள தீ அணைப்பு நிலையத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தங்குவதற்கும், வண்டிகள், மற்ற சாதனங்களை ஒழுங்குடன் பாதுகாத்து வைப்பதற்கும் முறையான கட்டட வசதி செய்ய உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி தீயணைப்பு நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

மன்னார்குடி தீ அணைப்பு நிலையத்தில் வண்டியை விட்டு வைப்பதற்காக உள்ள இரண்டு இடங்களின் மேற் கூரை, ஓலை வேயப்பட்டதாகும். வண்டிகளையும் மற்ற சாதனங்களையும் ஒழுங்காகப் பாதுகாக்க, இந்த ஓலைக் கூரைக்குப் பதிலாக ரூ. 9,500 செலவில் வலுவேற்றிய கற்கலவைக் கூரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை 1968-69-ற்கான கட்டிடப் பணித் திட்டத்தில் தீயணைப்புப் படை இயக்குனர் சேர்ந்துள்ளார்.

விளம்பரத் துறையைச் சேர்ந்த பிரசார வண்டிகள்

* 79 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளம்பர இலாகாவில் மாவட்டவாரியாக இருந்த பிரசார வண்டிகளைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?



1969 பிப்ரவரி 26]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) இப்பொழுது இவ்வித உத்தேசமில்லை.

(இ) எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மாவட்ட வாரியாக அந்த இலாகாவில் பிரச்சாரத்திற்காக வேண்டி இருந்த வண்டிகளை இப்போது என்ன செய்திருக்கிறார்கள் ? இப்போது அந்த வண்டிகள் அந்த இலாகாவில் வேலை செய்துகொண்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் 6 வண்டிகள் செய்தி விளம்பரத் துறை இலாகாவிலும், 6 வண்டிகள் குடும்ப நலத் திட்ட இலாகாவிலும் வேலை செய்துகொண்டிருக்கின்றன.

நிலவரி பாக்கி

*74 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

1965-66, 1966-67 ஆகிய ஆண்டுகளில் வசூலாகாமல் இருக்கும் நில வரி பாக்கி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

1965-66-வது ஆண்டில் வசூலாகாமல் இருக்கும் நிலவரி பாக்கி (30—6—1966 அன்று உள்ளபடி) ரூ. 86,30,782

1965-66-வது ஆண்டின் பாக்கியில் வசூலாகாமல் இருக்கும் நிலவரி பாக்கி (30—6—1968 அன்று உள்ளபடி) ரூ. 27,80,051

1966-67-வது ஆண்டில் வசூலாகாமல் இருக்கும் நிலவரி பாக்கி (30—6—67 அன்று உள்ளபடி) ரூ. 1,07,25,579

1966-67-வது ஆண்டின் பாக்கியில் வசூலாகாமல் இருக்கும் நிலவரி பாக்கி (30—6—1968 அன்று உள்ளபடி) ரூ. 62,73,007

திரு. கொளத்தூர் கோதண்டம் : மாவட்ட ரீதியாக எவ்வளவு என்பதையும் அதன்மீது எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1969 பிப்ரவரி 26

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாவட்ட வாரியாகத் தெரிந்து கொள்ள தனிக் கேள்வி போடவேண்டும். நில வரி பாக்கி என்பது ஒரே வருடத்தில் ஏற்பட்டிருப்பதல்ல. என் கவனம் சரியானல், உறுப்பினரின் மாவட்டமாகிய செங்கல்பட்டு மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும்தான் பெருமளவில் வருடக்கணக்காக அந்தப் பாக்கி வசூலாகாமல் இருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு எவ்வளவு பாக்கி என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் தகவல்கள் கொடுக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : May I know whether this Government will come forward to write off such revenue arrears in order to help the poor ryots in drought affected areas?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : As and when Government feel that they have to either postpone the collection of or write off the kist, they are taking necessary steps.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** நிலவரி வசூலிக்கிற காலம் அறுவடைக்கு முந்திய காலத்திலிருந்து வசூல் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதுவே, விவசாயிகளுக்கு வரி கட்டுவதில் சற்றுத் தயக்கம் ஏற்படுகிறது. ஆகவே இனிமேலாவது அறுவடை முடிந்து ஒரு மாத காலத்திற்குப்பின் இந்த வரி வசூல் செய்கிற முறையை மாற்றியமைக்கும் திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களின் யோசனை அவ்வளவு நல்ல யோசனை அல்ல. அறுவடை காலத்தில் வசூல் செய்யலாம் என்பதன் முக்கிய அடிப்படையே அந்தக் காலத்தில்தான் அவர்களிடம் கொஞ்சம் பணம் இருக்கும் என்ற சாதாரண சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் செய்யப்படுகிறது. அறுவடையெல்லாம் ஆகி விற்றுப் பணமாக மாறியதற்குப் பிறகு அதில் ஏற்பட்டுள்ள அனுபவத்தையொட்டித்தான் அந்த நேரத்தில் வசூல் செய்யப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நில வரியை முழுமையாக எடுப்பதற்கான திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் இதுபற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். இப்போது நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் புன்செய்க்கு 'பேசிக் லாண்ட் டாக்ஸ்' இல்லை. அதனால் இரண்டு கோடி ஏக்கர் நிலங்களில் ஒரு கோடி அறுபது லட்சம் ஏக்கர்களுக்கு 'பேசிக் லான்ட் டாக்ஸ்' இல்லை. சர்சார்ஜ் என்று ஸ்தல ஸ்தாபனங்கள் ஆங்காங்கே வசூலிப்பதை வரி வசூலிப்பதாகத் தவருக எண்ணுகிறார்கள். ஐந்தில் நான்கு பங்கு நிலத்திற்கான வரி இப்போதே எடுக்கப்பட்டு விட்டது. அதில் நன்செய் நிலங்கள்கூட அடங்குகிறது. வைகை அணைக்கட்டு, பவானிசாகர் போன்ற இடங்களில் அடங்கலில் புன்செய் என்றிருந்தால் அவற்



1969 பிப்ரவரி 26]

றிற்கு பேசிக் டாக்ஸ் இல்லை. நன்செய் ஆயக்கட்டில் ஒரு சட்டச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. போர்ட் மெம்பர் திரு. கெய்வார் அவர்கள் இது சம்பந்தமாக ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அதை இந்த மன்றம் விவாதித்திருக்கிறது. நிலத் தீர்வையையும் அடிப்படைத் தீர்வையையும் இணைத்து சிலவிடங்களில் செய்திருக்கிறார்கள். ஒன்றாக வசூலிக்கப்படுகிறது. சிலவிடங்களில் ரூ. 6 பேசிக் டாக்ஸ் என்றிருக்கிறது. நீர் தீர்வை ரூ. 15, ரூ. 20 என்றிருக்கிறது. சிலவிடங்களில், புதிதாக வந்த இடங்களில் நிலத் தீர்வை அதிகமாகவும், நீர்த் தீர்வை குறைவாகவும் இருக்கிறது. இந்தத் தாரதம்மியம் ஏற்படுவதால் இரண்டையும் ஒருங்கிணைத்து எந்த அளவிற்குச் செய்யலாம் என்பதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. நன்செய் நிலங்களுக்கு நில வரியை எடுப்பது சம்பந்தமாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எந்த அளவிற்கு முடியுமோ அதைப் பொறுத்துத்தான் அதில் மேற்கொண்டு செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** நிலவரியை வசூலிக்கிற கிராம அதிகாரிகள் பட்டா, சர்வே நம்பர், விஸ்தீரணம், அடிப்படைத் தீர்வை, மேல் வரி இதுபோன்ற விவரங்களைக் குறிப்பிட்டு டிமாண்ட் நோட்டீஸை முன்னலே கொடுத்து வரி வசூலிக்க வழி செய்யப்படுமா ? அதோடு வேறு பலவிதக் குறைகளையும் போக்க வேண்டுமென்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அதற்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுகுறித்துச் செம்மைப் படுத்த உறுப்பினர் அவர்களின் மேலான யோசனைகளை எந்த அளவிற்குச் செயல்படுத்தப்படவேண்டுமோ அந்த அளவு செயல்படுத்தப்படும்.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் தமது பதிலில், அடிப்படை நில வரியை வசூலிக்கவில்லை என்று கூறினார்கள். ஆனல், பல கிராமங்களில் அடிப்படை நில வரியையும் கிராம அதிகாரிகள் வசூலிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? வட ஆர்க்காடு மாவட்டம் தற்போது பஞ்சப் பிரதேசமாக இருந்தும் கூட நில வரியையும் கடன்களையும் வசூலிப்பதைப் போக்குவதற்கு விரைவான உத்தரவிட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இரண்டு கேள்விகளை ஒன்றாகக் கேட்கிறார்கள். முதல் கேள்வி முற்றிலும் தவறானது. புன்செய் நிலங்களுக்கு வரி எங்கும் வசூலிக்கப்படுவதில்லை. ஸ்தல ஸ்தாபனங்கள் வசூலிக்கிற சர்சார்ஜை வரி என்று எடுத்துக் கொள்ளவேண்டிய தேவையில்லை. இரண்டாவதாக, ஆர்க்காட்டைப் பொறுத்தவரையில் வரியைத் தள்ளிப்போடுவது அல்லது ரத்து செய்வது சம்பந்தமாக கலெக்டர், வருவாய்த் துறை அதிகாரிகள் ஆலோசனைகள்மீது அந்தந்த நிலைக்குத் தக்கபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

[1969 பிப்ரவரி 26

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாவட்ட வாரியாகத் தெரிந்து கொள்ள தனிக் கேள்வி போடவேண்டும். நில வரி பாக்கி என்பது ஒரே வருடத்தில் ஏற்பட்டிருப்பதல்ல. என் கவனம் சரியானால், உறுப்பினரின் மாவட்டமாகிய செங்கல்பட்டு மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும்தான் பெருமளவில் வருடக்கணக்காக அந்தப் பாக்கி வசூலாகாமல் இருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு எவ்வளவு பாக்கி என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் தகவல்கள் கொடுக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : May I know whether this Government will come forward to write off such revenue arrears in order to help the poor ryots in drought affected areas?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : As and when Government feel that they have to either postpone the collection of or write off the kist, they are taking necessary steps.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** நிலவரி வசூலிக்கிற காலம் அறுவடைக்கு முந்திய காலத்திலிருந்து வசூல் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதுவே, விவசாயிகளுக்கு வரி கட்டுவதில் சற்றுத் தயக்கம் ஏற்படுகிறது. ஆகவே இனிமேலாவது அறுவடை முடிந்து ஒரு மாத காலத்திற்குப்பின் இந்த வரி வசூல் செய்கிற முறையை மாற்றியமைக்கும் திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களின் யோசனை அவ்வளவு நல்ல யோசனை அல்ல. அறுவடை காலத்தில் வசூல் செய்யலாம் என்பதன் முக்கிய அடிப்படையே அந்தக் காலத்தில்தான் அவர்களிடம் கொஞ்சம் பணம் இருக்கும் என்ற சாதாரண சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் செய்யப்படுகிறது. அறுவடையெல்லாம் ஆகி விற்றுப் பணமாக மாறியதற்குப் பிறகு அதில் ஏற்பட்டுள்ள அனுபவத்தையொட்டித்தான் அந்த நேரத்தில் வசூல் செய்யப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நில வரியை முழுமையாக எடுப்பதற்கான திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் இதுபற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். இப்போது நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் புன்செய்க்கு 'பேசிக் லாண்ட் டாக்ஸ்' இல்லை. அதனால் இரண்டு கோடி ஏக்கர் நிலங்களில் ஒரு கோடி அறுபது லட்சம் ஏக்கர்களுக்கு 'பேசிக் லான்ட் டாக்ஸ்' இல்லை. சர்சார்ஜ் என்று ஸ்தல ஸ்தாபனங்கள் ஆங்காங்கே வசூலிப்பதை வரி வசூலிப்பதாகத் தவறாக எண்ணுகிறார்கள். ஐந்தில் நான்கு பங்கு நிலத்திற்கான வரி இப்போதே எடுக்கப்பட்டு விட்டது. அதில் நன்செய் நிலங்கள்கூட அடங்குகிறது. வைகை அணைக்கட்டு, பவானிசாகர் போன்ற இடங்களில் அடங்கலில் புன்செய் என்றிருந்தால் அவற்



1969 பிப்ரவரி 26]

றிற்கு பேசிக் டாக்ஸ் இல்லை. நன்செய் ஆயக்கட்டில் ஒரு சட்டச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. போர்ட் மெம்பர் திரு. கெய்வார் அவர்கள் இது சம்பந்தமாக ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அதை இந்த மன்றம் விவாதித்திருக்கிறது. நிலத் தீர்வையையும் அடிப்படைத் தீர்வையையும் இணைத்து சிலவிடங்களில் செய்திருக்கிறார்கள். ஒன்றாக வசூலிக்கப்படுகிறது. சிலவிடங்களில் ரூ. 6 பேசிக் டாக்ஸ் என்றிருக்கிறது. நீர் தீர்வை ரூ. 15, ரூ. 20 என்றிருக்கிறது. சிலவிடங்களில், புதிதாக வந்த இடங்களில் நிலத் தீர்வை அதிகமாகவும், நீர்த் தீர்வை குறைவாகவும் இருக்கிறது. இந்தத் தாரதம்மியம் ஏற்படுவதால் இரண்டையும் ஒருங்கிணைத்து எந்த அளவிற்குச் செய்யலாம் என்பதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. நன்செய் நிலங்களுக்கு நில வரியை எடுப்பது சம்பந்தமாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எந்த அளவிற்கு முடியுமோ அதைப் பொறுத்துத்தான் அதில் மேற்கொண்டு செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** நிலவரியை வசூலிக்கிற கிராம அதிகாரிகள் பட்டா, சர்வே நம்பர், விஸ்தீரணம், அடிப்படைத் தீர்வை, மேல் வரி இதுபோன்ற விவரங்களைக் குறிப்பிட்டு டிமாண்ட் நோட்டீஸை முன்னாலே கொடுத்து வரி வசூலிக்க வழி செய்யப்படுமா ? அதோடு வேறு பலவிதக் குறைகளையும் போக்க வேண்டுமென்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அதற்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுகுறித்துச் செம்மைப் படுத்த உறுப்பினர் அவர்களின் மேலான யோசனைகளை எந்த அளவிற்குச் செயல்படுத்தப்படவேண்டுமோ அந்த அளவு செயல்படுத்தப்படும்.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் தமது பதிலில், அடிப்படை நில வரியை வசூலிக்கவில்லை என்று கூறினார்கள். ஆனால், பல கிராமங்களில் அடிப்படை நில வரியையும் கிராம அதிகாரிகள் வசூலிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? வட ஆர்க்காடு மாவட்டம் தற்போது பஞ்சப் பிரதேசமாக இருந்தும் கூட நில வரியையும் கடன்களையும் வசூலிப்பதைப் போக்குவதற்கு விரைவான உத்தரவிட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இரண்டு கேள்விகளை ஒன்றாகக் கேட்கிறார்கள். முதல் கேள்வி முற்றிலும் தவறானது. புன்செய் நிலங்களுக்கு வரி எங்கும் வசூலிக்கப்படுவதில்லை. ஸ்தல ஸ்தாபனங்கள் வசூலிக்கிற சர்சார்ஜை வரி என்று எடுத்துக் கொள்ளவேண்டிய தேவையில்லை. இரண்டாவதாக, ஆர்க்காட்டைப் பொறுத்தவரையில் வரிகளைத் தள்ளிப்போடுவது அல்லது ரத்து செய்வது சம்பந்தமாக கலெக்டர், வருவாய்த் துறை அதிகாரிகள் ஆலோசனைகள்மீது அந்தந்த நிலைக்குத் தக்கபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 75.

**திரு. கரு. சீமைச்சாமி :** இராமநாதபுரம் என்று சொல்லப் பட்டிருப்பதால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா மாவட்டங்களிலிருந்தும் தான் உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனித் தனியாகக் கேள்விகள் கேட்பது என்றால் அதற்கு நேரம் வேண்டுமல்லவா?

**திரு. கரு. சீமைச்சாமி :** சுதந்திரமாகக் கட்சிக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பார்ட்டி கணக்குப் பார்க்க முடியாது. உங்கள் பார்டிக்கும் போதிய அளவிற்குத் துணைக் கேள்விகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### குற்ற இயல் வழக்குகள் தாசில்தார் பயிற்சி யாளர்களுக்கு மாற்றும் முறை.

***75 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு நீதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குற்ற இயல் நீதி மன்றத்திலிருந்து சில வழக்குகளைத் தாசில் தார்கள் பயிற்சி பெறுவதற்காக, மாற்றுகிற முறையைத் திருத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்டம் படிக்காதவர்களும், சட்டத் துறையில் அனுபவம் பெறாதவர்களும் வழக்குகளை நடத்தி சாட்சிகளை விசாரித்துத் தீர்ப்புகள் வழங்கும்போது ஆங்காங்குள்ள நீதிபதிகளைக் கலந்தாலோசித்துத்தான் தீர்ப்பு வழங்குகிறார்கள். ஆகவே இது ஒருமனத் தீர்ப்பாகாது. இருமனத் தீர்ப்பாகும். அதனால் நீதியின் புனிதத் தன்மை கெடுகிறது என்பதை அரசு அறிகிறதா ? ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** டெப்டி தாசில்தார் களுக்கு மாஜிஸ்ட்ரேட் ட்ரெயினிங் கொடுப்பதற்காக அவர்களிடம் சில வழக்குகளைக் கொடுப்பது என்பது நீதி விசாரணையில் அதற்கு வேண்டிய ஆற்றல், அதற்கான சட்ட நுணுக்கங்கள் இவற்றில் அவர்களுக்கு ஞானம் குறைவாக இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவதாக, டெப்டி தாசில்தார்கள் ஆங்காங்குள்ள செல்வாக் கிற்குக் கட்டுப்பட்டு விடுவார்களோ என்ற காரணத்தினால் இது சம்பந்தமாக வருவாய்த்துறை வாரியத்தையும் உயர்நீதி மன்றத் தையும் கலந்தாலோசித்து இந்த முறை தேவையில்லை என்று கைவிடப்படுகிறது. ஆனால், டெப்டி தாசில்தார்களுக்கு மஜிஸ்டீரியல் ட்ரெயினிங் தேவைப்படுகிறது. வேறு சில





ட்ரெயினிங்களும் தேவைப்படுகின்றன. போலீஸ் பயிற்சி தேவை என்று ரெவின்யூ ஸ்பெஷல் ரூல்களில் இருக்கிறது. அதற் காக ஆறு வார காலம் ஒவ்வொரு டெப்டி தாசில்தாரும் போலீஸ் ட்ரெயினிங் பெறவேண்டுமென்று இருக்கிறது. இதுமாதிரியான முறையில் இப்படி ஒரு நீதிபதியின்கீழ் டெப்டி தாசில்தார் நேராகச் சுதந்திரமாக வழக்குகளை விசாரிக்காமல் மூன்று, ஆறு மாத காலம் பயிற்சி பெறலாம் என்ற ஒரு திட்டம்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. அது அரசாங்கத்தின் பரி சீலனையில் இருந்து வருகிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether the Government would take steps to avoid inordinate delay in the disposal of cases which are trasnsferred to the Special Magistrate trainees? மு.ப. 10-00

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member should put the question to the Minister for Law.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இன்று தாசில் தார்கள் எல்லாம் நிர்வாகத்துறை அதிகாரிகளாக இருக்கின்றார்கள். இன்றைக்கு அரசியலமைப்புச் சட்டப்படி, நீதித் துறையை நிர்வாகத்திலே ஒன்றுபடச் செய்வது " separation of the judiciary from the executive " என்ற கொள்கைக்கு மாறுபட்டது அல்லவா ?

(பதில் இல்லை)

THIRU B. VENKATASWAMY : Sir, is there any target fixed with regard to the number of cases to be handled by the Deputy Tahsildars to get their promotion as Tahsildars?

(No reply).

**திரு. கே. விநாயகம் :** சார், செக்ஷன் 145-ன் கீழ் வருவதை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் பரிசீலித்துப் பார்த்த பிறகு, அதில் இருக்கிறது என்று தெரிந்த பிறகு, போலீஸ் ரிப்போர்ட்டை வாங்கிக்கொண்ட பிறகு, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அனுப்புகிறார் கள். அதை மாற்றி நேரடியாகவே மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குப் போகலாம் என்று செய்யலாமே ? ஏனென்றால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள், அவர்கள் வேறு நேரம் எடுத்துக் கொள் வதால் பல நாட்கள் ஆகிறது 'Justice delayed is justice denied'. என்பதால் அந்த விதிகளையெல்லாம் மாற்றியமைக்கும் எண்ணம் அரசாங்கத்தின் குறிப்பில் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : 'Justice delayed is justice denied'. என்று சொல்லும்பொழுது அதேமாதிரியாக அவசரத்தினாலே அநீதிகளும் அக்கிரமங்களும் நடந்து விடவும் விடக்கூடாது.

## கிராம அதிகாரிகள்

***76 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு நிதி** அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் **பாரா?**

கிராம முன்சீப், கர்ணம் ஆகியோரை அரசாங்க உத்தியோகஸ் தர்களாக அங்கீகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கிராம அதிகாரிகள், கர்ணம் ஆகியவர்கள் சம்பந்தமாக, அவர்களுடைய நிலைகள், அவர் களுடைய அந்தஸ்து, உத்தியோகம் இவை சம்பந்தமாக உயர்வு சம்பந்தமாக விவரங்கள் அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கிறது.

**திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, கிராம முன்சீப்** கர்ணம் போன்ற அதிகாரிகள் வேலையை ஒப்புக்கொண்டது முதல் கடைசிவரைக்கும் ஒரே ஊரிலேயே இருப்பதால் அவர்கள் மூலமாகப் பல விவகாரங்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் மத்தியிலே நீண்ட காலமாக ஒரு கருத்து இருப்பதால் அவர்களையும் மாற்ற, அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வெவ்வேறு இடங்களுக்கு மாற்றுவதைப் போல, அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது பொதுவாக ஒரு பெரிய பிரச்சனையின் அடிப்படை அம்சங்களிலே வரக்கூடிய காரியங்களில் ஒன்று. அவர்களை முதலிலே அரசாங்க உத்தி **யோகஸ்தர்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பது** ஒரு அடிப்படைப் பிரச்சனை. இன்றிருக்கிற அமைப்பிலே என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்பதைப்பற்றி 10, 15 வருஷங்களாக யோசித்துக்கொண்டு வரப்படுகிறது. அவர்களை மாற்றுவது என்பது அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக ஆகிவிட்டார் கள் என்ற நிலையிலேதான் மாற்ற முடியும். அதிலும் பல சிக்கல் களும், சந்தேகங்களும் இருப்பதால் அதைப்பற்றிய தெளிவான முடிவு இப்பொழுது எடுக்க முடியாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவரவர்களே, கொலை செய்து விட்டுச் சிறையில் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்குக் கிராம முன்சீப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கலாமா? கொடுப்பது தவறு என்றால் அந்த வேலையைக் கொடுப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை **எடுக்கப்படுமா?**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அது சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்களே தெளிவாகவும், விவர மாகவும் முதலமைச்சரவர்களுக்கோ அல்லது என்னிடத்திலோ அல்லது இந்தச் சபையிலோ கொண்டுவந்தால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும், அதற்கு அவசியம் இருக்கிறதா என்பதையும் பரிசீலனை செய்யலாம்.





**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவரவர்களே, புதிதாக வட்டவாரிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டவாரிகள் அடிப்படையிலே கிராமக் கர்ணங்களை, முன்சீப்புகள் நியமிக்கும் உத்தேசம் உண்டா? எப்பொழுது அவ்வாறு நியமிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாகக் கிராம உத்தியோகஸ்தர்கள் பிரச்சனையில் முந்திய அரசு ஒரு கமிட்டி போட்டது. கிராம முன்சீப்பையும், கணக்குப்பிள்ளையையும், ஒன்றாக இணைத்து ஒரு உத்தியோகஸ்தரைப் போட்டுவிடுவது என்று 1955-ஆம் வருஷத்திலே திட்டம் போட்டு, கடந்த மந்திரி சபையில் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் இருக்கும் நேரத்தில், 1965-ஆம் வருஷம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவ்வாறு செய்வது உசிதம் இல்லை என்று அதை விட்டுவிட்டது. அதற்கு அவர்கள் நான்கு காரணங்கள் சொன்னார்கள். கிராம உத்தியோகஸ்தர் என்பது பரம்பரையாகப் பல காரியங்களிலே வந்து கொண்டு இருப்பது. அவர்களை அரசாங்க உத்தயோகஸ்தர் களாகச் செய்வது என்றால் சர்வீஸ் ரூல்ஸ் என்றெல்லாம் ஏற்படுத்தினால், கிராம முன்சீப்புகளையும், கணக்குப்பிள்ளைகளையும் ஒன்றாக இணைப்பதால், பாதிப்பேருக்கு வேலை போய்விடுகிறது. அது ஒரு பிரச்சினை. அடுத்து, இரண்டு வேலைகளையும் ஒன்றாக இணைப்பதால் வேலை அதிகரிக்கும், அதனால் திறமை குறைகிறது. ஏற்கனவே இருக்கிற சங்கடங்கள் கிராம நிர்வாகத்திலே இருக்கிறது. இரண்டு பேர்கள் செய்தார்கள் என்று சொல்லப் படுகிற தப்புகள் இன்னும் அதிக அளவிலே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதற்கு மேலும் உத்தியோகஸ்தர்கள் என்று ஏற்றுக்கொண்டால் சர்வீஸ் ரூல்ஸ், டிரெயினிங், பனிஷ்மெண்ட் என்று வருகிற நேரத்தில் பரம்பரை பரம்பரையாக வரும் நிலைமை என்னும் வளையத்திற்குள் வரமுடியாது. சட்ட அமைச்சரவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். எல்லோரையும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக ஆக்கினால் அது எந்த அளவுக்கு நிதித் துறையைப் பாதிக்கும் என்று வருவாய்த்துறை வாரியத்தைக் கேட்கலாம் என்று யோசனை சொன்னார்கள். வருவாய்த்துறை வாரியம் நன்றாக ஆராய்ந்து பணத்தைப்பற்றிப் பதில் அளிக்காமல் அதற்குப் பதிலாக இரண்டு யோசனைகளைச் சொல்லியது. 'பரம்பரை வில்லேஜ் ஆஃபீசர்ஸ் ஆக்ட்' சுப்ரீம் கோர்ட்டில் செல்லுபடி ஆகாது என்று தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். அது சட்ட விரோதமாகிவிட்டது. பரம்பரை பாத்தியதை என்ற ஒரு காரணத்தினால் உரிமை கொண்டாட முடியாது என்று 'ரெப்பீல்' செய்யும்படி வாரியம் பரிந்துரை வழங்கியது. அதன்படி இந்த மன்றத்திலே அதனுடைய அடிப்படையில் வமிசாவழி கிராம உத்தியோகச் சட்டம் இந்த மன்றத்திலே ரத்து செய்யப்பட்டு, இன்றிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சர்வீஸ் ரூல்ஸ், புது விதிமுறைகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. ஆகவே, இது பெரிய ஒருங்கிணைந்த பிரச்சினை. கிராம உத்தியோகஸ்தர்களைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மாற்றுவதுபற்றிய பிரச்சினை, 20,000, 30,000 பேர்கள்

சொல்லப்போனால் இன்று கிராம முன்சீப்புகள், கர்ணம் 20,000 பேர் 25,000 பேர் இருக்கிறார்கள், அதற்கடுத்த ஊழியர்கள் சுமார் 25,000 பேர்கள் இருக்கிறார்கள், ஆக 50,000 பேர்கள் சம்பந்தமான இந்தப் பிரச்சினையின்மீது மிகவும் நிதானமாகவும், ஜாக்கிரதை யாகவும் முடிவினை மேற்கொள்ள வேண்டும். பரம்பரைச் சட்டம் இந்த மன்றத்திலே ரத்தாகி விட்டது என்பதால் அப்படியே நீக்கப் படுகிறார்கள் என்ற பொருள் இல்லை. புதிதாக வருகிற அந்தஸ்து, உயர்வுகள் ஆகிய நல்ல காரியங்களை இந்த அரசு மேற்கொண்டிருக் கிறது.

பருப்பு வகைகள்.

* 77 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா—

திருச்சி, மதுரை மாவட்டங்களில் துவரை போன்ற பருப்பு வகைச் செடிகள் பயிரிடுவதற்கேற்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆம்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்த ஆண்டு மதுரை மாவட்டத்தில் குவாலியர் பருப்பு வகையை அரசாங்கம் ஒன்றி யங்களின் மூலமாக வழங்கியது. ஆனால் இப்படிப்பட்ட செடிகள் செடிகளாகவே வளர்ந்திருக்கின்றனவேதவிர பயன் தருவதாக அமையவில்லை. எனவே, மீண்டும் அரசாங்கம் இதனைப் பரிசீ லிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1968-69-இல் 288 டன் அளவிற்கு குவாலியர் 3 வகை துவரை விதைகள் மத்தியப் பிரதேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டது. அதில் மதுரை மாவட்டத்தில் மதுரைக் கோட்டத்திற்கு 6 டன்னும், திண்டுக்கல் கோட்டத்திற்கு 12 டன்னும், உசிலம்பட்டி கோட்டத்திற்கு 14 டன்னும், பெரியகுளம் கோட்டத்திற்கு 12 டன்னும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து கூடுதலாக 836 டன்கள் உற்பத்தியாகும் என்ற தகவல்தான் வந்திருக்கிறது. அங்கத்தினர் குறிப்பிடுகிறபடி செடியாகமட்டும் இருக்கிறது, விளைச்சல் இல்லை என்றால் எந்தக் கிராமம் என்று தகவல் தந்தால், அது அந்தக் குறிப்பிட்ட நிலத்தில் ஏற்பட்ட கோளாறு அல்லது எதனாலே அந்த நிலை ஏற்பட்டது என்பதைப்பற்றித் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதுபற்றிக் கவனிக்கலாம். கூடுதலாக 836 டன்கள் உற்பத்தியாகும் என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

* 78 வினா.—திரு. எஸ். இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பருப்பு வகைகளின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?





மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தற்போது இம்மா நிலத்தில் பருப்பு வகைகளில் பற்றாக்குறை எதுவும் இல்லை. ஆனால், ஏற்கனவே மத்திய அரசு வட மாநிலங்களிலிருந்து பஞ்சாப், அரியானா, உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங் களிலிருந்து பருப்பு வகைகள் வருவதைத் தடுத்தது. நமது தமிழக அரசு உணவு மாநாட்டிலே பலமுறை வற்புறுத்தியதற்கு இணங்க 28-3-1968ல் அந்தத் தடை நீக்கப்பட்டதனுடைய விளைவாக இப்பொழுது நமக்குத் தேவையான பருப்பு வகைகள் வந்துகொண்டிருக்கின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற பருப்பு வகைகள் நமக்குத் தேவைபடுகிற பருப்பு வகைகள் அளவு எவ்வளவு? அவற்றை இதர மாநிலங்களிலிருந்து பெறுவதற்கு வட நாட்டு இந்திய அரசு என்ன நடவடிக்கை களை மேற்கொள்ளுகின்றது? என்ன ஒத்துழைப்புத் தருகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பர்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நம்முடைய தேவை எவ்வளவு என்ற முழு விவரம் என்னிடத்தில் இல்லை. இதுவரை யிலே தடை விதித்திருந்ததை இப்பொழுது நீக்கி இருக்கிறார்கள். தடை விதித்திருந்ததை நீக்கியதன் விளைவாக மத்திய பிரதேசத் திலிருந்து 288 டன் குவாலியர் 3 என்ற வகை பருப்பு வரவழைக்கப் பட்டு ஒரு கிலோகிராம் ஒரு ரூபாய் என்ற அளவிலே விற்கப் பட்டு திருச்சிக் கோட்டத்திலே 3 டன்னும், கரூர் கோட்டத்திலே 6 டன்னும், அரியலூர் கோட்டத்தில் 7 டன்னும், புதுக் கோட்டையில் 7 டன்னும் ஆக 23 டன்னும் திருச்சி மாவட்டத்திலும், ஏற்கனவே திரு. மலைச்சாமி அவர்களுடைய கேள்விக்குப் பதிலளித்தபோது கூறியபடி மதுரையில் 44 டன்னும் வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கு வழங்கக்கூடிய அளவுக்கு நமக்குத் தேவையான அளவு பருப்பு வகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், எவ்வளவு நமக்குத் தேவை என்ற முழு விவரம் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்தப் பருப்புப் பற்றாக்குறையைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை களில் ஒன்று இந்த குவாலியர் விதையை எல்லா மாவட்டங் களுக்கும் விநியோகம் செய்தது. அந்த விதை நல்லமுறையில் விளையவில்லை, அதனால் விவசாயிக்கு நஷ்டம் என்று வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயி ஒருவர் அரசாங்கத்துக்கும் டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சரக்கும் வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எதற்கெடுத்தாலும் வக்கீல் நோட்டீஸ் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார் கள். அந்த விவரம் கொடுப்பதற்கு விவசாயி இருக்கிறான்.

[1969 பிப்ரவரி 26

விவசாயத்திற்குச் செலவிடுவதற்குப் பதில் வக்கீல் நோட்டீஸுக்குச் செலவிடுவதற்கு வேண்டிய நிலையை உருவாக்க வேண்டியதில்லை. விவசாயிகளுடைய நன்மையைப் பாதுகாப்பதற்கு டைரக்டர் ஆப் அக்ரிக்கல்சசர் இருக்கிறார். நாங்கள் இருக்கிறோம், வக்கீல்களுக்குச் செலவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

### விளாகம் கிராமத்து அரிசனக் காலனி தீயிடப்பட்டதும், பாதிக்கப்பட்ட அரிசன மக்களின் நிலைமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் திருவாளர்கள் கோதண்டராமன், தனுஷ்கோடி, பாரதிமோகன் ஆகியோர் ஓர் ஒற்றிவைப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது "தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, விளாகம் கிராமத்தி லுள்ள அரிசனக் காலனிக்கு தீயிட்டுக் கொளுத்தப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டு அவதிப்படும் அரிசன மக்களின் நிலைமையைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றி வைத்து விவாதிப்பதற் குரியது என்பதை மட்டிலும் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தஞ்சை மாவட்டத்திலே சமீபத்திலே என்ன நடந்தது என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அதை ஒட்டி இப்பொழுது தொடர்ந்து நடைபெற்று வருவது, அரிசன காலனியிலே எல்லாம் தீ வைத்துக் கொளுத்தக் கூடிய அளவுக்கு இருக்கிறது. காரணம், அவர்கள் ஏழைகள், விவசாயத் தொழிலாளர்கள். இன்றையதினம் நன்னிலம் தாலுகா, விளாகம் கிராமத்திலே இருக்கக்கூடிய அரிசனக் காலனியிலே தீ வைக்கப் பட்டிருக்கிறது. அதையொட்டி 10 மிராசுதார்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இது விஷயத்திலே இப்படித் தொடர்ந்து நடைபெறக்கூடிய அளவுக்கு இருக்குமானால், இன்றைக்குப் புதிதாக வந்திருக்கக்கூடிய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள், இனிமேல் இதுபோன்ற கீழ் வெண்மணிச் சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்று திட்ட வட்டமாகத் தெரிவித்திருந்த போதிலும், அதைத் தெரிவித்தது ஒரு வாரத்திற்குள்ளாகவே இப்படி தீ வைப்புச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதே, இதை இப்படியே விட்டுவிடக்கூடிய அளவுக்கு இருக்குமானால் மேலும் தொடர்ந்து எத்தனை கீழ்வெண்மணிச் சம்பவங்கள் நடைபெறுமோ என்று ஐயுறக் கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதை ஒட்டி இன்றைக்கு மிராசுதார் கள் நோட்டீஸ்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவேதான் இதை மேலும் பரவவிடாமல் இருப்பதற்காக வேண்டி, அந்த அரிசன மக்களுக்காக வேண்டிய, விவசாயத் தொழிலாளர்களுடைய பாது காப்பை முன்னிட்டு நாம் நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்பதைத் திட்ட வட்டமாகக் காண்பிப்பதற்காக வேண்டி, இதைப்பற்றி இங்கே விவாதம் செய்வது மிகவும் அவசியம் என்று நான் கருதக் கூடிய காரணத்தினால் தயவுசெய்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1969 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து, நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது வெண்மணிச் சம்பவத்திற்கு மீண்டும் வித்திடுவதாக அமைந்திருக் கிறது என்று திரு. கோதண்டராமன் அவர்கள் இங்கே குறிப் பிட்டார்கள். அங்கு நடைபெற்றிருக்கிற சம்பவம் என்ன என்பது குறித்து அதிகாரிகளிடமிருந்து நான் தகவல்களைப் பெற்றிருக் கிறேன்.

நாகரத்தினம் ஆச்சி என்கின்ற அம்மையாருக்குச் சொந்தமான நிலத்தில் ஆஞ்சன் என்ற விவசாயத் தொழிலாளி வேலை செய்து கொண்டிருந்தார் என்றாலும் அந்த அம்மையாரவர்கள் அறுவடை நேரத்திலே வேறு ஆட்களை வைத்து அறுவடையை முடித்துக் கொண்ட காரணத்தினால், ஆஞ்சனும் அவரைச் சேர்ந்த வேறு விவசாயத் தொழிலாளர்களும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிற தொழிலாளர்களும் அந்த அம்மையார் வீட்டு வைக்கோல் போருக்குக் காலையிலே 9 மணிக்கு தீ வைத்தார்கள். அதன் காரணமாக, ரூ. 250 பெறுமானமுள்ள வைக்கோல் போர் தீக்கு இரையானது. அதோடு மாத்திரமல்லா மல் அந்த அம்மையாரைச் சார்ந்த காசிநாதன் என்ற குடியான வரும் தாக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து பிற்பகல் இரண்டு மணிக்கு மிராசுதாருடைய குழுவைச் சேர்ந்தவர்கள் 6 பேர் இராஜகோபால் பிள்ளை என்பவருடைய தலைமையிலே, அரிசனக் குடி இருப்புக்குச் சென்று அங்கு சரசு, வல்லி என்ற அரிசனப் பெண்மணிகளுடைய வீட்டிற்கு, ஏற்கனவே நடந்த தீ வைப்பிற்குப் பதிலாக, தீ வைத்திருக்கிறார்கள். அதில் 2 வீடுகள் எரிந்து போயிருக்கின்றன. ஐந்து வீடுகள் எரிந்தும் எரியாத நிலைமை யிலே இருக்கின்றன. இதிலே, ஆரம்பம் யார் செய்தார்கள்? அதைத் தொடர்ந்து யார் செய்தார்கள் என்பவையெல்லாம் வழக்கு மன்றத்திலே இருக்கிற காரணத்தாலும், இருதரப்பிலும் விவசாயத் தொழிலாளர்களுடைய தரப்பிலே 5 பேரும், மிராசு தார்களுடைய தரப்பிலே 6 பேரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிற காரணத்தினாலும் நான் விவரங்களை ஆராய விரும்பவில்லை. ஆனால், தங்களுடைய ஆட்

களை விட்டுவிட்டு வேறு ஆட்களை வைத்து அறுவடை செய்ததற்காக உரிமைக்குரலை நியாயமான முறையில் எழுப்ப வேண்டியதற்குப் பதிலாக வைக்கோல் போருக்குத் தீ வைத்ததுதான் தகாத காரியம். அவர்கள் தீ வைத்தது தகாத காரியம் என்றாலும், அதற்குப் பதிலாக நடவடிக்கை எடுக்கச் சட்டம் இருக்கிற நேரத்தில் அதற்கு மாறாக அரிசன வீடுகளுக்கு தீ இட்டது பெரும் குற்றம். ஆகவே, இப்படி மாறி மாறி—போலீஸ், சட்டம் இருக்கிறது, அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள், என்ற அளவுக்கு நிலைமைகளை அவர்கள் விடாமல்—தங்களுக்குத் தாங்களே தீர்ப்பளித்துக் கொள்ள முயலுவது நல்லதல்ல என்பதையும் இந்த நேரத்திலே விளக்கிக்கொண்டு, இது அரசினுடைய அன்றாட அலுவல்களிலே வருகின்ற காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஏற்றதல்ல என்கின்ற கருத்தையும் அறிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்கு உட்பட்டது. மேலும் அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை மாநகரில் ஏற்படவிருக்கும் கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Sir, I call the attention of the Hon. Minister for Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the grave water shortage likely to arise in Madras city this year.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்குத் தேவையான குடிநீர் புழலேரி, சோழவரம், பூண்டி ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்படுகின்றது. இம்மூன்று நீர்த்தேக்கங்களில் மொத்தச் சேமிப்புக் கொள் அளவு 559.6 கோடி கன அடியாக இருந்தபோதிலும், பயனுறு சேமிப்புக் கொள் அளவு 507.9 கோடி கன அடிமட்டுமே ஆகும். இம்மாநகரிலுள்ள சுமார் 20 லட்சம் மக்களுக்காக நாள்தோறும் சுமார் 3.853 கோடி காலன் நீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாக, 27—1—69 தேதியன்று உள்ளபடி, மூன்று நீர்த்தேக்கங்களிலும் சேர்ந்து நீர் அளவு சுமார் 400 கோடி காலன்மட்டுமே இம்மாநகருக்குக் குடிநீர் வழங்க இருந்தது. இது நாளொன்றுக்கு 3 கோடி காலன் என்ற விகிதத்தில் 1969 ஜூன் 15-ம் தேதிவரை மட்டுமே போதுமானதாகும். எனவே, வழங்கப்படும் குடிநீர் அளவைக் குறைப்பதும், இந்த நெருக்கடி சமாளிக்கப்படும்





வரையில் புதிய வீட்டுக் குழாய் இணைப்புகள் கொடுப்பதற்குத் தற்காலிகமாகத் தடை விதிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிற குடிநீர் அளவினை மாநகராட்சி ஏற்கனவே குறைத்துவிட்டது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு நில அடிமட்ட நீர்வளங்களிலிருந்து புழலேரிக்கு நீர் அனுப்பப்படும் அளவினைப் பெருக்கவும் திட்டமிடப்படுகிறது.

சோதனைக் காரியங்களுக்காக அய்யலச்சேரிப் பகுதியில் நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் 80 முதல் 150 அடி வரையில் பல்வேறு ஆழங்களில் இறக்கப்பட்ட 10 துளைக் கிணறுகள் உள்ளன. இத்தகைய கிணறுகள் ஒவ்வொன்றிலிருந்தும் நாளொன்றுக்கு 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் நீர் அதாவது மொத்தத்தில் நாளொன்றுக்கு 48 லட்சம் காலன் நீர் கிடைக்கலாம். இத்திட்டத்தின் முதல் கட்டமாக இத்தகைய கிணறுகளிலிருந்து நீரை இறைத்துத் திறந்தவெளி புழலேரியில் சேருகின்ற திறந்தவெளிக் கால்வாய்க்கு அனுப்பவும் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் வீதம் நாளொன்றுக்கு சுமார் 86 லட்சம் காலன் நீர் எடுத்துப் புழலேரியில் சேமித்து வைக்கும் வகையில் அய்யலச்சேரிப் பகுதியில் கூடுதலாக, 18 துளைக் கிணறுகள் இறக்கவும் கருதப்படுகிறது. தாமரைப்பாக்கம் பகுதியிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கக் கூடிய நிகர நீர் அளவு நாளொன்றுக்கு 70 லட்சம் காலன் ஆகும்.

சென்னை உரத்தொழிற்சாலைக்கு நீர் வழங்குவதற்காகப் போடப்பட்ட பஞ்சட்டி ஊற்றுநீர்த் தேக்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 60 லட்சம் காலன் நீர் தற்காலிகமாக எடுத்து, 1969 அக்டோபர் வரை மாநகரக் குடிநீர் வசதியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1969 அக்டோபருக்குப்பின் இந்த நீர் உரத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும்.

மேற்சொன்ன ஏற்பாடுகளின் வாயிலாக, இம்மாநகருக்கு நீர் வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன செயற்குறிப்புகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 37.10 லட்சம் செலவில் திட்டமொன்றுக்கு இவ்வரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பொதுப்பணித்துறையைச் சேர்ந்த நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் இப்பணி செயற்படுத்தப்படும்.

### (ஆ) கிரகாம் (சிவகாசி) பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தும், உயிர் சேதமும்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely the fire accident at Sivakasi Cracker Factory about the 4th January 1969 resulting in the death of a number cf people.

[1969 பிப்ரவரி 26

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சிவகாசிக்கு அருகிலுள்ள கிராமம் பட்டாசுத் தொழிற்சாலையில் 1969, ஜனவரி, 3-ம் நாள் பிற்பகலில் தீ விபத்து ஏற்பட்டது. அத்தொழிற்சாலையில் இருந்த 35 அறைகளில் வத்திகள் தயாரிப்பதற்காக 16 அறைகள் பயன் படுத்தப்பட்டன. இவ்விபத்து நடந்த நாளன்று இந்த 16 அறை களிலும் 28 ஆண்களும் 3 பெண்களும் பணியாற்றி வந்தனர். 1969, ஜனவரி, 3-ம் நாள் மாலை சுமார் 3-30 மணிக்கு 11-ம் எண் அறையில் வெடி விபத்து ஏற்பட்டது; காயம் அடைந்த நவநாதனும் சோமய செட்டியாரும் மொத்தமாக கட்டிய இருந்த கோர்த்து உலர்ந்த நீண்ட வத்தியை (ஒரு சமயத்தில் ஒரு குரோஸ்) வேண்டிய அளவிற்கு இரும்புக் கத்தியால் வெட்டிக் கொண்டிருக்கும்போதே இந்த வெடி விபத்து ஏற்பட்டது. வத்தி, கல் போன்ற கடினப் பொருளில் மோதும்போது வத்தி ஒன்று தீப்பற்றிக் கொண்டு வெடித்தது. இந்த அறையினுள் இருந்த தொழிலாளர்கள், தீயில் சிக்கினர் ; எரிந்து கொண்டிருந்த துணிகளை வீசி எறிந்துவிட்டு அவர்கள் பல வழிகளில் ஓடினர். அடுத்துள்ள 7 அறைகளுக்கும் தீ பரவியது. பாதிக்கப்பட்ட 8 அறைகளில் வேலையில் ஈடுபட்டிருந்த 31 பேர்களில் பெண் ஒருவரும் உட்பட 25 பேர் காயமடைந்தனர் ; எஞ்சிய 6 பேர் தப்பி ஓடிவிட்டனர். காய மடைந்தவர்களுக்கு வெளிப்புறத்தில் ஏற்பட்ட காயமாகும் ; அவர்களுக்கு உடல் முழுவதும் தோல் வெந்து போய்விட்டது. பட்டாசுத் தொழிற்சாலைக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. பட்டாசு தயாரிக்கப் பயன்படுத்தும் மூலப் பொருளான வத்தி ரூ. 750 மதிப்பிற்கு விரயம் ஏற்பட்டது. தவிர, வேறு இழப்பு இல்லை.

சிவகாசி வருவாய்க் கோட்ட அதிகாரி, விபத்து நேர்ந்த இடத்தைப் பார்வையிட்டார். காயமடைந்தவர்களை உள்ளூர் அரசாங்க மருத்துவ மனைக்கு உடனடியாக எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார். பின்னர் மதுரை, அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படவும் ஏற்பாடு செய்தார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 25 பேர்களில் 24 ஆண்கள் பின்னர் மருத்துவ மனையில் இறந்தனர். பெண் தொழிலாளர் ஒருவரே பிழைத்தார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

1884-ம் ஆண்டு இந்திய வெடி மருந்துகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் மாஜிஸ்திரேட் விசாரணை நடத்துமாறு, சிவகாசி, வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

நாகபுரியிலுள்ள இந்திய வெடி மருந்துகள் துறை தலைமை ஆய்வாளர், சிவகாசியிலுள்ள அத் தொழிற்சாலை உரிமையாளரின் உரிமத்தை உடனடியாக ரத்துச் செய்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த



1969 பிப்ரவரி 26] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பதிலிலிருந்து ஏறத்தாழ 24-க்கும் அதிகமான பேர்கள் உயிர் துறந்திருக்கும் நெஞ்சுருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது. இதுபோன்ற விபத்துக்கள் இனி நடைபெறாத வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ? இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர் களுடைய குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாஜிஸ்டிரேட் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்ததும், நஷ்ட ஈட்டைப்பற்றி சர்க்கார் முடிவு செய்யும்.

### 4. அறிவிப்புகள்.

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு (Senate) 6—12—1968 முதல் திருத்தி அமைக்கப்படவேண்டியிருப்பதால் அக்குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களி லிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1—3—1969 சனிக் கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 3—3—1969 திங்கட்கிழமை பகல் 12 மணிக் குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3—3—1969 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற் படுமாயின் 5—3—1969 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பி னர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 5. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், " பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் " ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான நியமனத் தாள்கள் ஏற்கனவே பெறப் பட்டுள்ளன. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயரை நான் முதன் முதலில் அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம் பின்வருமாறு :

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1969 பிப்ரவரி 26

**நியமனம் பெற்றவர் :—**திரு ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணண்டோ.

**முன்மொழிந்தவர் :—**திரு. து. ப. அழகமுத்து.

**வழிமொழிந்தவர் :—**திரு. கா. வேழவேந்தன்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணண்டோ அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர் திரு. எட்மண்ட் பெர்ணண்டோ அவர்களுக்கு என் கட்சியின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மனப்பூர்வமான ஆசிகளை வழங்குவதோடு, பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்ட மன்றம் ஆரம்பித்ததற்குப் பின்னாலே சபாநாயகராகத் தாங்களும், உதவி சபாநாயகராக அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சபையினுடைய ஒத்துழைப்பு தங்கள் இருவருக்கும் பூரணமாக இருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது. அதற்கு வேறு அத்தாட்சி ஒன்றும் இருக்க முடியாது. சட்டசபையில் நடக்கும்படியான நிகழ்ச்சிகளில் அவரவர்களுடைய கட்சிக்கேற்றபடி கடமையைச் செய்வதே தவிர வேறு ஒன்றுமில்லை. திரு. எட்மண்ட் பெர்ணண்டோ அவர்கள் படித்தவர்கள், சட்டம் படித்தவர்கள், நல்லவர்கள், அமைதியாக இருக்கக் கூடியவர்கள். ஆகவே இதற்கு முன்னாலிருந்த உதவி சபாநாயகர் அவர்களின் வழியைக் கடைபிடித்து, அவர் பெயரைக் காப்பாற்றுவார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இதற்கு முன்னால் நீங்கள் உதவி சபாநாயகராக இருந்தபொழுது எங்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது, உங்களைப் பொறுத்த மட்டில் உங்களுடைய வழியை வழிவழியாக நிச்சயம் பின்பற்றி, காப்பாற்ற வேண்டும். ஏற்கனவே சொன்னபடி, பழைய சபாநாயகர் அவர்களுடைய பெயரை நீங்கள் காப்பாற்ற மாட்டீர்கள் என்னும்படியான நிலை எனக்குத் தெரியும். அந்த வழியில் நீங்கள் நிச்சயம் வரமாட்டீர்கள். ஆனால் உங்களுடைய வழியை நிச்சயம் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உதவி சபாநாயகர் அவர்கள் பின்பற்றி, உங்கள் பெயரைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. சட்டசபையில் உள்ள எல்லாக் கட்சிகளின் சார்பாகவும், எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும், தங்களுக்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்று கூறி, எங்களுடைய ஆசீர்வாதத்தையும், நல்வாழ்த்துக்களையும் சொல்லிக்கொள்கிறேன்.

10-30 மு.ப. * திரு. டி. எஸ். ஆதிமூலம் : கனம் சபாநாயகர் அவர்களே. இந்த உப தலைவர் . . .



1969 பிப்ரவரி 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சபை முன்னவரும் மட்டும் பேசினால் போதாதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** நானும் இரண்டு வார்த்தைகள் பேசுகிறேனே, எங்கள் ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறார். (சிரிப்பு) நான் பொதுவாகவே கொஞ்சம் ஜில்லா வெறி பிடித்தவன்.

(**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'வெறி' என்பது அனுமதிக்கப்படலாமா?)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதிக்கலாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** முன்பு இருந்த சட்ட சபையிலே, எங்கள் ஜில்லாவிலிருந்து ஒரு மந்திரியும், இன்னொருவர் சபாநாயகராகவும் இருந்தார்கள். ஆனால் இந்தத் தடவை, அந்த ஒரு பரிசு, சபாநாயகர் பதவி தான் கிடைத்தது. அதையும் கூட இடையில் அந்த சபாநாயகர் ராஜினாமா செய்ய வேண்டும் என்கிற நிலையில் ராஜினாமா செய்தார்கள். அதற்குப் பிறகு திருநெல்வேலி ஜில்லா என்ன இப்படி ரொம்பவும் பூஜ்யமாகப் போய்விட்டதே என்று நான் கவலைப்பட்டேன். ஆனால், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உதவி சபாநாயகர் அவர்களிடம் நானே ஒரு நாள் சொன்னேன், 'ஏதாவது ஒன்றை வாங்கிக் கொண்டு, திருநெல்வேலிப் பக்கம் வந்து சேருங்கள்' என்று. பத்து நாட்களுக்கு முன்னால் கொஞ்சம் அன்போடும் கண்டிப்போடும் கூட சொன்னேன். இப்பொழுது அந்தப் பதவி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. (திரு. கருத்திருமன் : சபைக்கு என்று சொல்லுங்கள்.) எங்களுக்கு என்றால், நமக்கு, சபைக்கு என்றுதான் அர்த்தம், including the Leader of the opposition. ஆகவே, இந்தப் பதவி கிடைத்திருக்கிறது. அதோடு, இப்பொழுது மந்திரி பதவியும் கிடைத்து விட்டது. எங்கள் ஜில்லாவிற்கு இரண்டு பதவிகளும் கிடைத்திருக்கின்றன. அது எங்கள் ஜில்லாவிற்கு பெரிய 'ஆனர்' ஆக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அந்தக் காலத்தில், திரு. சிவசண்முகம் பிள்ளை சபாநாயகராக இருந்த காலத்தில் நான் பார்வையாளராக வந்து பார்த்திருக்கிறேன். அடிக்கடி, 'ஆர்டர்', 'ஆர்டர்' என்று அந்த மணியைப் போட்டு அடிக்கிற அடியைப் பார்த்தால், பயங்கரமாக இருக்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் மணியடிப்பது கொஞ்சம் குறைந்திருக்கிறது. ரெட் லைட் வந்திருக்கிறது. இருந்தபோதிலும், உங்கள் பதவி காலத்தில் மணி அடிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் பார்லிமெண்ட் பெரிய சபை, 500-க்கு சரியான அங்கத்தினர்களைக் கொண்டது. அங்கே கையைத் தூக்கினால் பார்க்கிறார்கள் யு.பி-யில் எப்படித்தான் சபையை நடத்துகிறார்களோ 400 சொச்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் ஆனால், இங்கே நம்முடைய சபையில் குறைந்த அங்கத்தினர்கள் தான்

[பேரவைத் தலைவர்] [1969 பிப்ரவரி 26

அவற்றில் 12, அவர்களுடைய கட்சி உறுப்பினர்கள் கேட்க வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. சிமைச்சாமிக்கு 3, டாக்டர் ஹாண்டேக்கு 5, திரு. கரியமாணிக்கம் அம்பலத்திற்கு 1, திரு. போஜன் அவர்களுக்கு 2, திரு. வெங்கடசாமிக்கு 1, ஆக அவர்களில் ஐந்து பேர்களுக்கு, 74-ல் 12 துணைக் கேள்விகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, அவர் கட்சி உறுப்பினர்களுக்கு துணைக் கேள்விகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்ற குறையை இனியும் மாண்புமிகு உறுப்பினர் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

## 6. 1968-69-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை—பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1968-69ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை மீதும் 1964-65-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதும் பொது விவாதம் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சுவாமிநாதன் அவர்கள் முதலில் பேசுவார்கள்.

* **திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கும்படியான உய்யகொண்டான் ஆற்றில் திருச்சி எரிகாரப் பொருள் தொழிற் சாலையின் கழிவுநீர் விடுவதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென அன்றைய பொதுப்பணி அமைச்சரான இன்றைய முத லமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அமைச் சர் அவர்களும் அதை நேரில் சென்று பார்த்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை அந்த ஆற்றில் கழிவு நீர் விடுவதைத் தடுக்க ஏற்பாடு செய்யாததால் அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இனியும் கழிவுநீர் உய்யக்கொண்டானில் வந்தால் நிலங்களைத் தரிசாகப் போட வேண்டிய நிலைமை ஏற்படும். இதை பலமுறை அரசாங்கத் திற்கு எடுத்துக் கூறியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் அந்தப் பகுதி விவசாய மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். தொழில் அமைச்சர் அவர்கள்கூட, ஆகாய விமானத்தின் மூலம் பூச்சி களுக்கு மருந்து தெளிக்கும்போது நிலங்கள் கழிவுநீரால் பாதிக்கப்பட்டு பூச்சி அரித்திருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாய மக்கள் எல்லாம் சேர்ந்து போராடப் போகிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துக் கூறியும், அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவில்லை. இதன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு, நிலங்களைத் தரிசாகப் போட வேண்டிய நிலை ஏற்பட்டு, விவசாய மக்கள் கஷ்டப்படும் நிலைதான் அங்கு இருந்து வருகிறது



1969 பிப்ரவரி 26] [திரு. வை. சுவாமிநாதன்]

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டும் தொடர்ந்து உய்யக்கொண்டான் ஆற்றில் கழிவு நீர் வந்தால் 30 ஆயிரம் ஏக்கர் தரிசாகப் போட விவசாயிகள் உத்தேசித்துள்ளார்கள். எனவே, அரசாங்கம் இது குறித்து உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது சட்டப் பேரவைத் தலைவராக, தமிழ் அறிந்த புலவர் ஒருவரை நாம் அமர்த்தியிருக்கின்றோம். தமிழ்நாடு என்று நம் மாநிலத்திற்குப் பெயர் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் அவர்களைக் குறித்து எதுவும் பேசக்கூடாது.

**திரு. வை. சுவாமிநாதன் :** ஆனால் உண்மையில் நடப்பது என்ன? அமைச்சர்களின் சுற்றுப்பயணக் குறிப்புகள் எல்லாம் ஆங்கிலத் தில்தான் வருகின்றன. தமிழில் வருவதில்லை. இனி, தமிழிலேயே அவைகளும் வருவதற்கு வகை செய்ய வேண்டும்.

'மெட்ராஸ் மெடிகல் காலேஜ்' என்றுதான் இப்போது அழைக் கப்படுகிறது. 'மெட்ராஸ், மெட்ராஸ்' என்றுதான் சொல்லப் படுகிறது. தமிழ் ஆட்சி மொழியான பிறகாவது 'சென்னை மருத்துவக் கல்லூரி' என்று அழைக்கப்பட வேண்டும். 'மெட்ராஸ்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சென்னை' என்ற சொல்லை உபயோகப்படுத்த வகை செய்ய வேண்டும். மேலும் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு என்ற பெயர்கள் பழைய காலத்தில் வைக்கப்பட்ட பெயர்கள். அவைகள் அப்படியே இருந்து வருகின்றன. தர்மபுரி மாவட்டம் என்று ஒரு புதிய மாவட்டத்தை ஏற்படுத்தியதுபோல, இவைகளையும் புதிய பெயர்களால் அழைக்க வேண்டும். இவைகள் தலைநகரங்களாக இருக்கும் வேலூர், கடலூர் இவற்றின் பெயரைக் கொண்டே வேலூர் மாவட்டம், கடலூர் மாவட்டம் என்று அழைக்கலாம். பொது மக்களுக்கும் இது சுலபமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்ப் படிப்பு படிக்கும் கல்லூரி மாணவர்களின் நிலையை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாணவர்கள் எல்லோரும் ஆங்கிலப் படிப்பு சொல்லிக் கொடுக்கும் கல்லூரிகளுக்கே செல்ல விரும்புகிறார்கள். ஏனெனில், தமிழில் கல்லூரிப் படிப்பைப் படித்துவிட்ட பிறகு, வேலை வாய்ப்புகள் கிடைக்காமல் போய்விடுமோ என்று அச்சம் கொள்கிறார்கள். மாணவர்களுடைய அச்சத்தைப் போக்கும் வகையில் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டும். தமிழில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும். தமிழில் படித்தவர்களுக்கு அதிகப்படியான அலவன்ஸ் தொகை கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் இப்படிப் பல காரியங்களைச் செய்தால்தான் மாணவர்களுக்குத் தமிழில் படிக்க நல்ல ஆர்வமும் எண்ணமும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வை. சுவாமிநாதன்] [1969 பிப்ரவரி 26

திருச்சியிலே ஒரு தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று நாங்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். சென்ற ஆண்டே தமிழ்க் கல்லூரி திருச்சியில் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். வரவில்லை. இந்த ஆண்டாவது அந்தக் கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயக் கல்லூரி ஏற்பட வேண்டுமென்று மாவட்ட வடசரக வளர்ச்சி மன்றம் தீர்மானங்களைப் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. கல்லூரி ஏற்படுத்துவதற்கான பணத்தையும் இடத்தையும் திரட்டித் தர அங்குள்ள மக்களும் மாவட்ட வளர்ச்சி மன்ற உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் காலம் தாழ்த்தாமல் திருச்சியில் ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மோட்டார் வாகனச் சட்டத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால், அவைகள் எல்லாம் 1935-ம் வருஷத்தில் போடப்பட்ட சட்டங்களாகவே இருக்கின்றன. அவைகளே தற்போது அமுலில் இருந்து வருகின்றன. அந்தச் சட்டங்களை, மாறிவரும் காலத்திற்கேற்ப திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பஸ் போக்குவரத்து முதலியன நல்ல வகையில் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் வைத்திய வசதி குறைவாக இருக்கிறது. படித்த இளைஞர்கள் கிராமங்களில் வந்து வேலை செய்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். மேலும், கிராமத்தில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் பார்ட் டைம் வேலையாக சம்பளம் 100-120 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, கிராமங்களுக்கு வந்து பணிபுரிய டாக்டர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். டாக்டர்களுக்கு நல்ல ஊதியம் கொடுத்தால்தான் அவர்கள் கிராமங்களில் வந்து தங்குவார்கள். அப்பொழுதுதான் கிராமங்கள் நல்ல வைத்திய வசதியைப் பெற முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது சட்டமன்றக் கூட்டங்களையெல்லாம் நாம் சென்னையிலேதான் வைத்துக்கொள்கிறோம். பட்ஜெட் கூட்டத்தைத் தவிர மற்ற கூட்டங்களை பல்வேறு மாவட்டங்களில் நடத்தினால், பொதுமக்கள் சட்டமன்ற நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாட்டிலேயுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் இந்த நாட்டின் அஸ்திவாரமாக இருக்கக்கூடியவர்கள். ஆனால் கிராம உத்தியோகஸ்தர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டும். திருச்சியில் நடந்த கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாட்டில் நிதியமைச்சர் அவர்களும், கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கத்



1969 பிப்ரவரி 26] [திரு. வை. சுவாமிநாதன்]

திற்கு கட்டிடம் கட்டுவதற்கான ஓர் இடத்தை கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் ஒதுக்கித் தருவதாக வாக்கு அளித்தார்கள். ஒரு வருடம் ஆகியும் அந்த இடம் ஒதுக்கித் தரவில்லை. ஆகவே, கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கக் கட்டிடத்திற்கான இடத்தை உடனடியாக ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் விவசாயிகளுக்கு சி.ஓ. 29 என்ற பெயரில் விதை கொடுக்கப்பட்டது. அந்த விதைகளைக் கொண்டு பயிர் செய்ததால் விவசாயிகளுக்கு ஏராளமான அளவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு இரண்டு கலம் கூட விளையவில்லை. ஆகவே, இது மழை காலத்திற்கு ஏற்ற பயிர் அல்ல என்பதைக் கூறிக்கொண்டு, அந்த விதைகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் கூட்டுறவு வங்கிகளின் மூலமாகச் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் விவசாயிகளுக்குத் தேவைப்படும் கடன் உரிய நேரத்தில், உரிய அளவு தரப்படுவதில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு கிராம வங்கிகளின் மூலமாகத் தேவையான கடன்களை சுலபமாக உரிய நேரத்தில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் நிலங்களைப் பரிசோதனை செய்வதற்கு மாவட்டந்தோறும் மண்வளப் பரிசோதனை நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நில வளத்தை நன்றாக அறிந்து தேவையான பயிர் செய்ய முடியும். மேலும் கலப்பைகள், ஸ்ப்ரேயர் அண்டு டஸ்டர் போன்ற விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவைகள் பழுதாகிவிட்டால் சீர்செய்ய முடியாமல் பல நாட்கள் உபயோகத்தில் இல்லாமல் வைக்கப்பட்டுவிடுகின்றன. ஆகவே, விவசாயக் கருவிகளைப் பழுது பார்க்கும் நிலையங்களை மாவட்டந்தோறும் அமைக்க வேண்டும். தற்போது விவசாயிகள் பழுதுபட்ட கருவிகளை உபயோகிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பழுது பார்க்கும் தொழிற்கூடத்தை உடனடியாக மாவட்டந்தோறும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கண்டசாரி சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த தொழில் அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். என்னுடைய பகுதியிலுள்ள மக்கள் கண்டசாரி சர்க்கரைத் தொழிற்சாலையை ஏற்படுத்த தாங்களும் ஷேர் போடுவதாகக் கூறி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, கண்டசாரி சர்க்கரைத் தொழிற்சாலையை எங்களுடைய பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி படிக்கப்பட்டது).

[திரு. வை. சுவாமிநாதன்] [1969 பிப்ரவரி 26

அடுத்தபடியாக, திருவெறும்பூரில் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும். அடுத்த ஆண்டாவது கலைக் கல்லூரி கிடைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை தமிழகத்தின் தவப் புதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்தி, கடந்த ஆண்டு அவர் பல்வேறு துறைகளில் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளின் காரணமாகத்தான் 1968-69-க்கு துணை மதிப்பீட்டை நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் துணை மதிப்பீடு பற்றிய விவாதம் நல்ல முறையில் அமைவதற்கு சில அடிப்படைக் கருத்துக்களை எதிர்க்கட்சியினர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வரவுசெலவுத் திட்டம் என்றாலே அதன் விவாதத்தில் எடுத்தவுடன் குறைகளையே சொல்ல வேண்டுமென்பது பொருள் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்ட ஒரு கருத்தை நான் இங்கே கவனமூட்ட விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் சொண்டிருக்கிற கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் செய்யப்படுவதுதான் வரவுசெலவுத் திட்டம் என்று இந்த மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கொப்ப கடந்த ஆண்டு செலவினங்களில் சில துறைகளில் அதிகம் செலவாகியிருக்கிறது என்றால், அவற்றை நன்றாகப் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஏதோ எண்ணிக்கை பலம் இருக்கிறது, கூட்டணிக் கட்சியின் ஆதரவு இருக்கிறது, ஆகையால் எதை வேண்டுமானாலும் செலவு செய்கிறோம் என்ற எண்ணம் எதிர்க்கட்சியினருக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினால்தான் - நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து எதிர்க்கட்சியினர்கள் ஒரு முறை துணை மானிய மதிப்பீடுகளைப் படித்துவிட்டுப் பேசுவது நாட்டுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். ஜனநாயகமும் செம்மை அடையும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்தத் துணை மதிப்பீடு குறித்து நான் இரண்டொரு கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அவர்கள் தம் இதயபூர்வமாக ஏற்றுக்கொண்ட முக்கிய அம்சம், பஞ்சம், பசி, பட்டினி, பற்றாக்குறை இவற்றை அகற்ற வேண்டும் என்பதுதான். இவற்றை அகற்றும் எந்தத் துறைக்கு வேண்டுமானாலும் நிதி ஒதுக்கம் செய்து அதிகப் பலனைப் பெறவேண்டும் என்று கருதினார்கள் என்பதை முதற்கண் எதிர்க்கட்சியினர் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.



1969 பிப்ரவரி 26] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

மின்சார வாரியத்திற்கு அரசு கொடுத்த கடன்களின் வட்டி நிலுவை 1967-68 இறுதிவரை மொத்தம் 9.72 கோடி ரூபாய் அளவில் நின்றது. இதை மின்சார வாரியம் கொடுத்துத் தீர்க்கும் வகையில் மாநில அரசு அதற்கு இப்போது கடன் வழங்கியிருக்கிறது. மேலும், சென்ற ஆண்டு அரசிடம் இருந்து அபிவிருத்தி திட்டத்திற்காக 1.43 கோடி ரூபாய் அதிகப் பற்றாகவும் வாங்கியுள்ளது. அந்தக் கடனையும் தீர்க்க, அரசு 1.43 கோடி ரூபாய் அளவுக்கு மற்றொரு கடன் மின்சார வாரியத்திற்கு வழங்க முன்வந்திருக்கிறது. இதைப் பார்க்கின்றபோது ஏதோ தமிழ்நாடு மின்சார வாரியம் நஷ்டம் அடைந்து வருவதாகவும், அதுதான் வாங்கிய கடனுக்கு வட்டியைக்கூடக் கொடுக்க முடியாத நிலையில் செயல்பட்டு வருவதாகவும் உறுப்பினர்களிடையே தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், மின்சார வாரியம் கடந்த இரண்டாண்டுகளாக மக்களுக்குப் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிக்கொடுப்பதில் எவ்வாறு செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இந்த ஆண்டு முடிய நம்முடைய நாட்டில் உள்ள சிற்றூர்கள், பேரூர்களுக்குமாக 30,858 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியிருக்கிறோம். அது மட்டும் அல்ல, இந்த ஆண்டு நாம் வழங்குவதற்குத் திட்டமிட்டது கிட்டத்தட்ட 10,000 கிராமங்களாகும், பத்தாயிரம் கிராமங்கள் என்று நான் சொல்கிறபோது சிற்றூர்களும் இதில் அடங்கும். அப்படிப் பார்க்கிறபோது தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஊர்கள், ரெவின்யூ வில்லேஜஸ் 14,124. இது வரையில் நம்மால் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டது 9,848. வருகிற ஆண்டில் நாம் அளிக்க இருப்பது 600. ஆக 10,448 கிராமங்களுக்கு—தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்கள் 14 ஆயிரத்தில், பத்தாயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தாகிவிட்டது என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 339 நகரங்களுக்கும் நாம் மின்சார வசதியைச் செய்துவிட்டோம். இத்திட்டங்களுக்காக நாம் 32 கோடி ரூபாய் ஒதுக்கினோம் என்றால் மின்சார போர்டார் 40 கோடி ரூபாய் அளவுக்கு செலவழித்து அபிவிருத்தி திட்டங்களைத் தடங்கலின்றி நிறைவேற்றி வந்திருக்கிறார்கள்.

அதேபோல மொத்தக் கிணறுகளின் எண்ணிக்கை 9 லட்சமாகும். இதில் சுதந்திரம் கிடைத்த 20 ஆண்டுகளில் நாங்கள் போட்ட திட்டங்களின் பலனை உருவாக்கினோம், ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் கடந்த 2 ஆண்டுகளில் ஒன்றுமே செய்யவில்லை என்பதாக மேடைதோறும் முழங்கி வருகிற எதிர்க்கட்சியினர் நன்கு ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். 9 லட்சம் கிணறுகளில் கடந்த இருபதாண்டுக் காலமாக அவர்களால் பம்பு செட்டு வைத்துக்கொடுக்கப்பட்ட கிணறுகள் 3 லட்சம்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 1 லட்சம் கிணறு

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 பிப்ரவரி 26

களுக்கு பம்பு செட்டு வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் கடந்த 20 ஆண்டுகளில் 3 லட்சம் கிணறுகளுக்குத்தான் பம்பு செட்டு கொடுக்க முடிந்தது, எங்கள் ஆட்சியில் 2 ஆண்டுகளிலேயே 1 லட்சம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம் என்றால் இது ஒரு சாதனை இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சினர்களைப் பற்றி மக்கள் தவறாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காக இந்தப் புள்ளி விவரங்களைத் தருகிறேன். இங்கே நடக்கின்ற உண்மைகளை எடுத்துச் சொல்ல அவர்கள் தயங்கக் கூடாது. கடந்த இரண்டாண்டுகளில் 1 லட்சம் கிணறுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் இன்னும் 5 லட்சம் கிணறுகளுக்குக் கனெக்ஷன் கொடுத்தாக வேண்டும். இவற்றில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2½ லட்சம் கிணறுகளுக்கு மின் சப்ளை கொடுக்கும் திட்டத்தை அண்ணா உருவாக்கியிருக்கிறார்கள். ஆயினும் திட்டக் கமிஷன்—திரு. காமராஜரைத் தலைவராகக் கொண்ட கட்சியினால் நடத்தப்படுகிற இந்திய சர்க்கார், ஒன்றே முக்கால் லட்சம் பம்பு செட்டுகளுக்குமேல் கொடுக்கக்கூடாது என்று அண்ணாவிடம் சொன்னபோதுகூட அண்ணா அவர்கள் 'நீங்கள் பணம் தரவேண்டாம், நாங்கள் 2½ லட்சம் கிணறுகளுக்குமேல் பம்பு செட்டுக் கொடுத்தே தீருவோம்' என்று சொல்லிவந்தார்கள். வருகிற ஆண்டுகளில் நிச்சயமாக அதிகமான பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கப்பட்டாகிவிடும். தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்ற உணர்வு மக்களிடத்தில் இருப்பதை நீக்கியாக இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த அரசின் நோக்கம் எல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும், பஞ்சம், பசி, பட்டினியைப் போக்கியாக வேண்டும் என்பதுதான். ஒரு விவசாயக் கிணறுக்கு மின்சார சப்ளை கொடுத்து பம்பு செட்டு வைத்துக் கொடுக்கிறோம் என்றால் அதைச் சார்ந்துள்ள நிலங்களுக்கு 'அஷ்யூர்ட்டு சப்ளை ஆப் வாட்டர்' கிடைத்து விடுகிறது. வேண்டும்போது நீர் பாய்ச்சிக்கொள்ளலாம், வேண்டாதபோது நிறுத்திக்கொள்ளலாம். ஆற்றுப் பாசனப் பகுதிகளில்கூட மழையை நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. தேவைப்படும்போது கிடைக்காமல் போகிற அபாயம் இருக்கிறது. ஆற்றில் தண்ணீர் உள்ளபோது கூட விவசாயி மேஸ்திரியை நாடிப் போகவேண்டும், என்ஜினியரைத் தேடிப் போகவேண்டும். கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுப்பது 'அஷ்யூர்ட் சப்ளை ஆப் இர்ரிகேஷன்' இதையும் கவனிக்க வேண்டும்.

நேற்றுகூட, கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, பஞ்சத்தைப் பற்றிப் பேசுவார்கள், குடிதண்ணீர் பிரச்சினை பற்றிப் பேசுவார்கள், பஞ்சாலை நெருக்கடியைப் பற்றிப் பேசுவார்கள், அதற்குப் பரிகாரம் என்ன என்பதைப் பற்றிக் குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன், பொறுப்பு மிக்க பாரம்பர்யத்தில் வந்தவர்களே என்று. ஆனால் வாரியாரைப் பற்றிய பிரசங்கத்தையே செய்தார்கள். யாரோ அடிப்பட்டதைப்பற்றியே பேசினார்களே தவிர, மக்களைப் பற்றிய பிரச்சினையைப் பற்றிப் பேசும் பொறுப்பு அவர்களிடத்தில் இல்லை. அதற்காக நான் வேதனை அடைகிறேன். மக்களுக்கு இந்த அரசு எதுவும் செய்யவில்லை, கட்சியை வளர்க்க, சர்வாதிகாரப்பாதையில் நடைபெறுகிறது, உற்பத்தி பெருக்கப்படவில்லை, இவர்கள் செய்வது எல்லாம் உணர்ச்சிபூர்வமான காரியங்களே தவிர உண்மையான காரியம் அல்ல என்று அவர்கள் பேசினார்கள். அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவருவது எல்லாம் அவர்கள் 20 ஆண்டுக்கால ஆட்சியில் செய்த காரியங்களைவிட எங்களது 2 ஆண்டு கால ஆட்சியில் செய்துள்ள சாதனை அதிகமானது என்பதுதான். அதன்காரணத்தினால்தான் இவறைக்கு மழையில்லாத போதிலும், உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள போதிலும் நாம் நின்று ஓரளவு சமாளிக்க முடிந்திருக்கிறது.



1969 பிப்ரவரி 26] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

இன்னும் ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே 1,000 மெகா வாட்டுக்குக் கீழேதான் கடந்த இருபது இருபத்திரண்டு ஆண்டுகளாக அவர்கள் கொண்டுவர முடிந்ததே தவிர, அந்த நிலையை எட்டமுடியவில்லை. 1,000 மெகா வாட் என்பது 2½ லட்சம் விளக்குகளைப் போட்டால் எவ்வளவு மின்சாரம் பெறமுடியுமோ அந்த அளவுக்கு மின்சாரத்தை நாம் பெற்றிருக்கிறோம். இது நல்ல வளர்ச்சிக்கு அறிகுறி. இரண்டு தினங்களுக்கு முன்னாலே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பேசுகின்றபொழுது இந்த நாட்டிலே யார் சிறந்த முறையிலே பேசுகிறார்களோ அவர்களைத்தான் பாராட்டுகிறார்கள், நல்ல முறையிலே காரியங்களைச் செய்கிறவர்களைப் பாராட்டுவதில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படிப் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தருவருக்கு ஒரு வாய்ப்பைத் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு, எதிர்க்கட்சியினருக்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தரவேண்டுமென்ற காரணத்தினால் இன்னும் ஒரு விவரத்தையும் இந்த மன்றத்தின் முன் கொண்டுவர விரும்புகிறேன். மு.ப. 11-00

தமிழக மின்சார வாரியம் கடந்த இருபது ஆண்டுகளில் ஈட்டிய தொகை 45 கோடி ரூபாய்தான். கடந்த இரண்டு ஆண்டுகளிலே நாம் அடைந்து இருக்கிற இலக்கு 57 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருவாயைப் பெருக்கியிருக்கிறோம். பம்புசெட்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்து இருக்கிறோம். கிராமங்களில் மின்சார இணைப்பையும் அதிகமாக்கியிருக்கிறோம். இந்த நிலையிலே மற்றொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலும் நாம் பார்ப்போமானால் தமிழ் நாட்டில் மின்சாரக் கட்டணம் 8¼ பைசாதான். ஆனால் ஆந்திரத்தில் 12 பைசாக்கள், கர்நாடகத்தில் 10 பைசாக்கள். ஆந்திரத்திலே உள்ள, மக்கள் தலைவர் கட்சியைச் சேர்ந்த கட்சி ஆளுகின்ற மாநிலத்தில் உள்ள மின்சாரக் கட்டண அளவிற்கு நாமும் இங்கே உயர்த்தியிருப்போமானால், நம்முடைய பெருந்தன்மை காங்கிரஸ் கட்சியின் மனநிலைக்கு இறங்கி வந்திருப்போ

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 பிப்ரவரி 26

மானால் நாம் இந்த வகையிலே இன்னும் நான்கு கோடி ரூபாய் அதிகமாகப் பெற்று இருக்க முடியும். ஆனால், அப்படி வேண்டாம் என்று சொல்லியும் 12 கோடி ரூபாய் இந்தத் துறையிலே அதிகமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உண்மையாகவே இந்த அரசு தமிழக விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறார்கள் என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். ஆந்திரத்தைப் போல், கர்நாடகத்தைப் போல் அந்த அளவுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி இருந்தால் இன்னும் நான்கு கோடி ரூபாய் அதிகமாகப் பெற்றிருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. இதையெல்லாம் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். அவர்கள் பேசுகின்றபொழுது சொன்னார்கள். அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால் அவர்களுக்குப் புரியும். எண்ணூரிலே சாம்பல் விழக்கூடாது என்பதற்காக 'செல்லுலர் கான்க்ரீட்' என்ற முறையிலே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்காக ஸ்டேட் ஹவுஸிங் போர்ட் மூலமாக ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும், மாதவரம் பால் பண்ணைச் சீரமைப்பு, மதுரை பால் பண்ணைச் சீரமைப்பு, விவசாயிகளுக்குக் கடன் அளிக்கின்ற வங்கிகளின் தொகையை 7 கோடியிலிருந்து 11 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருப்பதையும் அதற்காக அதிலே போட்டிருக்கிற முதலீட்டுத் தொகைகளையெல்லாம் உயர்த்தியிருப்பதையும் பார்க்கிறபோது எந்த அளவுக்கு இந்த அரசு செயலாற்றியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளாமல், அவர்கள் என்ன சாதித்து விட்டார்கள், இளைஞர்களின் எதிர்காலம் இருட்டாகிவிட்டது, என்ன சாதித்து விட்டார்கள் என்று பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர்கள் இதையெல்லாம் படிக்கவேண்டும். படித்தபின் உணர வேண்டும், உணர்ந்தபின் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மதிப்பை அவர்கள் உணருகிற வகையிலே ஏகமனதாக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: பெரு மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே போட்டியின்றித் தங்களையும் உதவி சபாநாயகர் அவர்களையும் தேர்ந்தெடுத்ததற்காக எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

புதிய முதலமைச்சர் அவர்களையும் ஏனைய அமைச்சர்களையும் நான் மனதாரப் பாராட்டி இந்த உதவி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



[1969 பிப்ரவரி 26 [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

இராமநாதபுரம் ஜில்லாவிலே பெரிய கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கடுமையான வறட்சியிலேகூட, வரி வசூல் நிறுத்தப்படவில்லை. வரி வசூல் வேண்டாமென்று நாங்கள் சொன்னால் அதிகாரிகள் 'நிறுத்திவிட்டோம்' என்று சொல்கிறார்கள். ஆனால், கிராமங்களிலே வரி வசூல் கடுமையாக இருக்கிறது. ஏன்? என்று கேட்டால், பழைய பாக்கியை வசூல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். பஞ்சம் ஏற்பட்டிருக்கிற பிரதேசத்திலே பழைய பாக்கியைக் கொடுப்பதற்கு விவசாயிகளால் எப்படி முடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். கதிரிலேதான் கொடியை ஊன்றி ஜப்தி செய்வார்கள். ஆனால் அங்கே காலியாய்ப்போன நிலத்திலேகூட கொடியை ஊன்றி ஜப்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில்கூட சொன்னேன். அப்பொழுது, 'அந்த இடத்தைக் கூறமுடியுமா ?' என்று கேட்டார்கள். அந்த இடத்தையும் சொன்னேன். ஆகவே, இப்படிப்பட்ட வசூல் கொடுமையை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில அதிகாரிகள் தங்களுக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்பதற்காக இப்படிச் செய்து அதனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரக்கூடிய காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்திலேயிருந்து வறண்ட இடங்களுக்கு எல்லாம் உணவு கொடுத்துக் கொண்டு வந்த நிலை இருந்தது. அந்த நிலையில் திருவாடானை தாலுகா இருந்தது. ஏராளமாக விளைந்து, விளைந்த நெல்லை அங்கிருந்து ஏராளமாகக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அந்தத் தாலுகாவில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் வறண்ட நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஒரு மாதத்திற்கு மழையில்லாமல் போய் விட்டால்—அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும்—லாரிகளிலே தண்ணீர் கொண்டுபோய் கொடுக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும். அப்படிப்பட்ட மோசமான நிலைமை ஏற்படக்கூடிய சூழ்நிலையில் அந்தப் பகுதி இருப்பதால் உடனடியாக வரி வசூல் கொடுமையை நிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி வசூல் செய்யாத கிராம முன்சீப்களையெல்லாம் சஸ்பெண்ட் செய்கிறார்கள். எப்படி வரி வசூல் செய்ய முடியும் என்று சொன்ன கிராம முன்சீப்களையெல்லாம் வேறு காரணங்களைக் காட்டி—என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 10, 15 கிராம முன்சீப்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். அந்த சஸ்பெண்ட்களையெல்லாம் ரத்து செய்யவேண்டும். வரி வசூலை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழைய வரி பாக்கிகளை வசூல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். பழைய வரி பாக்கிகளையும் ரத்து செய்யவேண்டும். நன்றாக விளைந்தபிறகு அதை வசூல் செய்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். சில இடங்களிலே ஜப்தி செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். திருவாடானை தாலுகாவிலே பின்னாங்கோட்டை என்ற இடத்திலே 25-ம் தேதி

நிலம் ஜப்திக்கு வர இருக்கிறது. இதைப்பற்றி அதிகாரிகளிடம் கூறினால் பழைய பாக்கியை வசூல் செய்துதானே ஆகவேண்டுமென்று சொல்கிறார்கள். பஞ்சப் பிரதேசமாக அது இருப்பதால் அதையெல்லாம் உடனடியாக நிறுத்தவேண்டுமென்று, எங்கள் ஜில்லாவாசியாக அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில ஜப்தியை நிறுத்துவதற்கு அதிகாரிகளுக்கு உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் நல்ல பெயர் வாங்குவதற்காகவும், உத்தியோகத்தில் உயர்வு பெறுவதற்காகவும் இப்படிச் செய்கிறார்கள். ஆகவே, அதிகாரிகளுக்கு நல்ல அறிவுரை சொல்லி அந்தக் கொடுமையை நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 28—12—1968 அன்று நான் இது சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்னும் வரவில்லை. பஞ்சத்திலே நாங்கள் வாடி வதங்கக்கூடிய நிலைமையில் இதையெல்லாம் அரசு கவனிக்கவேண்டுமென்று மதிப்பிற்குரிய சபாநாயகர் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

திருவாடானை தாலுகாவில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளில் அரிசி கிடைப்பதில்லை. அதைப் பற்றிக் கேட்டால் கார்டு இல்லாத இடங்களில் அரிசியை நிறுத்தி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். வறண்ட இடத்தில் கார்டும் கொடுக்காமல் அரிசி இல்லையென்று சொன்னால் அந்த மக்கள் எப்படி வாழ முடியும்? அந்த வறண்ட பிரதேசத்தில் கார்டு இல்லாத இடங்களுக்கெல்லாம் கார்டு கொடுத்து அரிசி கொடுப்பதற்கான முறையில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இராமநாதபுரம் ஜில்லா பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கப்படவில்லை. நிவாரணம் கொடுப்பதற்காக 40 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த ஜில்லா ஏற்கனவே ஜமீன் பகுதியாக இருந்த காரணத்தால் எந்த விதமான அபிவிருத்தியும் ஏற்படாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இடையிடையே வெள்ளம், புயல் ஏற்பட்டு அந்த ஜில்லா முழுவதும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறது. அங்கு பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் எல்லாம் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. இதைப்பற்றி பழைய முதலமைச்சர் அவர்களிடமும், தற்போது முதலமைச்சராக இருப்பவர்களிடமும் எடுத்துக் கூறினோம். அதற்காக ஏதோ கொஞ்சம் பணம் சாங்க்ஷன் செய்தார்கள். ஆனால் அந்தத் தொகை, ரோடுகளைப் பூரணமாகச் செப்பனிடப் போதுமானதாக இல்லை. அந்தக் காரியங்களை நல்ல முறையில் நிறைவேற்ற ஒரு கோடி ரூபாயாவது கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று சொல்லும்போது—சட்டசபை மெம்பர்களாக உள்ள எங்களைப் போன்றவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்து உடனடியாகக் காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்ற



நிலையிலும்கூட,—எஸ்டிமேட் போடுகிறோம் என்று மாதக் கணக்கில் காலம் கடத்துவார்கள். பிறகு அப்ரூவலுக்குப் போயிருக்கிறது என்று கூறி மாதக் கணக்கில் காலம் கடத்துவார்கள். பிறகு டெண்டர் கேட்டு தேதி குறிப்பிடுவதில் காலம் கடத்துவார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் இல்லாமல் பஞ்ச காலத்தில் நிவாரண வேலைகளை இத்தனை நாட்களுக்குள் தொடங்க வேண்டுமென்று ஒரு ஆர்டரைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகளில் ரோடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இராமநாதபுரம் ஜில்லாவில் பெரும் பகுதி கிராமங்கள், இணைப்புச் சாலைகள் இல்லாமல் மோசமான நிலைமையில் இருக்கின்றன. அதைப் போக்க, ரோடு வேலைகளை ஆரம்பித்தால் வேலை இல்லாத மக்கள் பிழைப்பதற்கும் வழி ஏற்படும். இந்தக் காரியத்தை உடனடியாக மேற்கொண்டு நல்ல அபிவிருத்தி ஏற்பட வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டத்திற்கு வருஷா வருஷம் மானியம் ஒதுக்குவது அதே அளவில் இருக்கிறது, அல்லது குறைந்து கொண்டு வருகிறது. மற்ற இடங்களில் எல்லாம் தொகை அதிகரித்துக் கொண்டே போகும்போது இதற்கு மட்டும் குறைந்து வருகிறது. சமுதாய நலத் திட்டத்திற்கு மானியத்தைக் குறைத்துக் கொண்டே வந்தால் கிராமப் புறங்கள் எப்படி முன்னேற முடியும்? ஜனநாயக சோஷலிசத்தைக் கொண்டுவர வேண்டும் என்று பேசுகின்ற இந்த நாளில் கிராமப் புறங்கள் இந்த நிலைமையில் இருக்கலாமா என்று யோசித்துப் பாருங்கள். இந்த பட்ஜெட்டில் இந்த இனத்திற்கு அதிகமாக ஒதுக்க வேண்டும். ஏற்கனவே பட்ஜெட்டைத் தயாரித்திருப்பார்கள் என்றாலும் இதைப்பற்றி மனத்திலே கொண்டு அதிகமாக ஒதுக்க வகை செய்ய வேண்டும்

நாகர்கோயில் தேர்தலைப்பற்றி இரு தரப்பிலும் ஏராளமாகப் பேசப்பட்டது. நாகர்கோயில் தேர்தலில் மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்கள் நிற்கிறார்கள் என்று சொன்னவுடனே இதெல்லாம் கட்டாயமாக நடக்கும் என்று எங்களுக்கெல்லாம் தெரியும். இதற்கு முன்பு அவர் தேர்தலில் நின்ற இடங்களில் எல்லாம் சட்டம் ஒழுங்கு நிலை குலைக்கப்பட்டு நடந்த காரியங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியும். சாத்தூர் தொகுதியில் அவர் தேர்தலுக்கு நின்ற நேரத்தில் மிளகாய்ச் செடிகள் எல்லாம் பிடுங்கி எறியப் பட்டன. குடி தண்ணீர்க் கிணறுகளில் எல்லாம் மண்ணெண்ணையை ஊற்றினார்கள், நரகலைப் போட்டார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிப்பட்ட சொற்களை அவையில் சொல்வது அவ்வளவு நன்றாக இல்லை. அத்தகைய சொற்களைக் கூறாமல் இருப்பது நலம்.

---

**பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1969 பிப்ரவரி 26

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: நடந்ததைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடந்தது எல்லாவற்றையும் இந்த மன்றத்திலே சொல்லிவிட முடியாது. அந்தச் சொல்லைத் திரும்பப் பெற வேண்டும். அந்தச் சொல்லைப் பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைச் செய்தியாளர்கள் அதனை வெளியிடக் கூடாது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: நாகர்கோயில் தேர்தலின்போது நான் போகவில்லை என்றாலும், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், சுதந்திரா கட்சியைச் சார்ந்தவர்கள், கூட்டணியைச் சார்ந்தவர்கள் அங்கே செல்லும்போது கொடியை இறக்கச் சொல்லி அடித்தார்கள் என்ற கொடுமையைப் பற்றியெல்லாம் நான் கேள்விப்பட்டேன். அப்படியெல்லாம் செய்துவிட்டு அதை வேறுவிதமாக அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறினார்கள். சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை நிலைநாட்ட தம்முடைய அரசாங்கம் இப்படிச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் பேரில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மறைந்த முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்தி என்னுடைய பேச்சைத் தொடங்கக் கடமைப்பட்டுள்ளேன். துணை மானியக் கோரிக்கை வந்திருக்கின்ற இந்த நேரத்திலே பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினை இன்றைக்கு எரிமலை போன்ற அளவுக்கு வளர்ந்து, தொழிலாளர் வர்க்கம் குமுறிக் கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த ஆலைகள் மூடப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் இதுவரை எந்தவிதமான பரிகாரமும் ஏற்படாமல் இருக்கிறது. அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்த தொழிலாளர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைப்பற்றி யாரும் சிந்தித்ததாகக் காணோம். கடந்த 20 ஆண்டுகளாக அந்த ஆலைகளை நம்பி வாழ்ந்தவர்கள், கடந்த மூன்று ஆண்டுகளாக எப்படி வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட முதலாளிகள், நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி அவற்றை மூடிவிடுகின்ற நிலையில், அரசாங்கமும் அதிலே முதலீடு செய்வதிலோ, அல்லது பண உதவி செய்வதிலோ தயக்கம் காட்டுகின்ற நிலைமையைத்தான் பார்க்கிறோம். தனியார் துறையை நம்பி வாழ்கின்ற மக்கள், அரசாங்கம் அனுஷ்டிக்கின்ற கொள்கையின் காரணமாக தனியார் ஆலைகளை மூடிவிட்டால், திண்டாடித்



1969 பிப்ரவரி 26] [திரு. கே. என். குமாரசாமி]

தவிப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையென்பது உறுதியாக்கப்பட்டு விட்டது. அவர்களுக்கு எவ்வளவு ஆறுதல்கள் கூறினாலும் சரி, அவர்கள் இருபது ஆண்டுகளாக சேமித்து வைத்திருந்த தொகைகளையும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் சிறப்பு மிக்க பொருள்கள் இருந்தும் அந்தப் பொருள்களையும், எல்லாவற்றையும் விற்று விட்டு இன்று தெருவில் பிச்சைக்காரர்களாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முன்பு எட்டு ரூபாய் சம்பாதித்த ஒரு தொழிலாளி, இன்று இரண்டு ரூபாய்க்காக தொழிற்சாலை கேட்களில் நின்றுகொண்டு போராடிக் கொண்டிருக்கிறான். அந்தக் காலத்தில், தொழிற் சங்க இயக்கங்கள் இல்லாதிருந்த காலத்தில், இரவு பகல் என்று பாராமல் 12 மணி நேரம் வேலை வாங்கி பணம் ஈட்டினார்கள் முதலாளிகள். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் பல போராட்டங்கள் எல்லாம் நடத்தப்பட்டு, தியாகங்கள் பல செய்யப்பட்டு, பல நண்பர்களை இழந்து, தொழிலாளர்கள் வாழ்வதற்காக அவர்களின் வாழ்விற்காகப் போராடி உரிமைகளைப் பெற்றோம்.

அடிமை நாடாக இருந்த சமயத்தில் பெற்ற அந்த உரிமைகளை இன்று சுதந்திர நாட்டில் இழக்கப்படுகிற துர்ப்பாக்கியமான நிலை கோவையில் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டு, பல தியாகங்கள் செய்யப்பட்டன. எதற்காக அப்படிப் போராடினார்கள்? அப்படிப் போராடிப் பெற்ற அடிப்படை உரிமைகள் எல்லாம் இப்போது தகர்க்கப்பட்டு தொழிலாளர்கள் தெருக்களில் திரிகிற காட்சியைத்தான் நாம் இன்று காண்கிறோம். இன்று புதிதாக வந்துள்ள முதல் அமைச்சர் அவர்கள் கோவைத் தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். மீண்டும் கூடிப் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த, மறைந்துபோன முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு தடவை மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்காக வாக்குறுதி அளித்தார்கள். அது நடைமுறைக்கு வரவில்லை. காரணங்கள் எதுவாக இருந்தாலும் சரி, எந்தவிதமான முட்டுக்கட்டைகள் இருந்தாலும் சரி, தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கான ஒரு முடிவை அவர்கள் அமுலாக்கியிருக்க வேண்டும். அதை அமுலாக்காமல் இருப்பதற்குப் பொருளாதாரக் காரணங்கள் கூறப்படுகின்றன. மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து எடுக்க வேண்டிய முயற்சியில் தடை என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கும் ஆலைகள் சம்பந்தமாக மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு காணவேண்டும் என்று சொல்வது எந்த அளவிற்கு அந்தத் தொழிலாளர்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்று தெரியவில்லை. முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் மே 11-ம் தேதி தொழிற் சங்கப் போராட்டங்கள் நடந்தபோது அவர்களைக் கூப்பிட்டுப் பேசிய பேச்சு வார்த்தைகளில் மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக ஒரு வாரத்தில் ஆய்வுக் குழு நியமிப்போம் என்றும், அந்த ஆய்வுக் குழு மூடப்

பட்ட ஆலைகள் பற்றிப் பரிசீலனை செய்து இரண்டு வாரங்களில் அதன் அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும், அந்த அறிக்கையை அரசாங்கம் மூன்று வாரங்களில் பரிசீலனை செய்து அதை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்றும் அப்போது சொன்னபடி தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க முடியாவிட்டாலும், அவர்கள் ப்ராவிடன்ட் பண்ட் பங்குத் தொகையிலிருந்தும் முதலாளிகள் கொடுக்க வேண்டிய கான்ட்ரிப்யூஷனிலிருந்தும் அவர்களுக்குக் கடனாக வழங்குவது என்றுக் கடந்த மே மாதத்தில் ஒரு முடிவு செய்யப்பட்டது. இது வரையில் அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவித முடிவும் ஏற்படவில்லை. அந்தத் தொழிலாளர்கள் இன்று வேலை தேடி வேறு மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். எங்கேயாவது விவசாயக் கூலி வேலையாவது கிடைக்குமா என்று அவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் கிடைப்பதில்லை. ஆக, அந்தப் பிரதேசம் பஞ்சப் பிரதேசமாக இன்று மாறியிருக்கிறது. பெண்கள் இரவு நேரங்களில் வேலை செய்யப் போகக் கூடாது என்ற பொது நியதி நம் நாட்டில் இருந்தாலும்கூட இன்று பெண்கள் இரவு எட்டு மணிக்குப் போய் கேட்டின் முன் உட்கார்ந்து விடுகிறார்கள். மறுநாள் காலை ஏழு மணிக்கு வேலை கிடைக்காதா என்று உட்கார்ந்துவிட்டு, மறுநாள் காலையில் வேலை இல்லை என்று தெரிந்தவுடன் கண்ணீர் விட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டதொரு அவல நிலை ஏற்பட்டதற்குப் பின்னரும் இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, இந்தப் பிரச்னை பற்றி சிந்திக்க நமக்கு நேரம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள், நாகர்கோவில் தேர்தல் பற்றி சரமாரியாகப் பேசினார்கள். நாகர்கோவில் தேர்தல்பற்றிப் பேசியவர்கள் கோவையில் மூடப்பட்டிருக்கிற ஆலைகள் பற்றி, அங்கு ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் அவ்வளவு சிரத்தையை அவர் காட்டக் காணோம். தேர்தல் பிரச்னை அல்ல பெரிய பிரச்னை, மக்கள் பிரச்னைதான் முக்கிய பிரச்னை. அந்தப் பிரச்னையின்மீது தீர்வு காண என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், மாநில அரசு செய்யவேண்டிய முயற்சிகளை எல்லாம் செய்யச் சொல்லுங்கள், நான் பிரதமர் அவர்களிடம் பேசி அந்த ஆலைகள் சம்பந்தமாக ஒரு முடிவு காணலாம் என்று. ஆனால், அந்த வாதத்தையும் இன்று காணோம். இந்தத் தேசத்திலுள்ள அறிவாளிகளால், இந்தத் தேசத்திலுள்ள பொருளாதார நிபுணர்களால், இந்தத் தேசத்தில் ஏற்படுகிற நெருக்கடிகளைத் தீர்க்க வழி காட்டுகிறவர்களால், இந்த ஆலைகளைத் திறக்க வழி காட்ட முடியவில்லை. அவர்களின் அறிவு இதற்குப் பயன்பட முடியவில்லை. தனியார் துறையிலுள்ள ஸ்தாபனங்கள் மூடப்பட்டு விடுமானால் அவற்றை எடுத்து நடத்துவதில் அரசாங்கம் பொருளாதார நிலை



யில் அச்சம் காட்டுமானால் நாம் எப்படி வாழப்போகிறோம், எப்படித் தனியார் துறையை நம்பி மக்கள் வாழப்போகிறார்கள், அவற்றை நம்பிக் கொண்டிருக்கிற ஆட்சி மன்றங்கள் என்ன செய்யப் போகின்றன என்ற கவலையை நான் இங்கு எடுத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கும் ஆலைகளைப்பற்றி இனியும் பேச என்ன இருக்கிறது? அதற்காகத்தான் தொழிற்சங்க வாதிகளான நாங்கள் எடுத்துக் கூறினோம். ப்ராவிடன்ட் பண்ட் தொகையிலிருந்து மூடப்பட்ட ஆலைகளை எடுத்து நடத்த நாங்கள் பணம் தருகிறோம். அதை எடுத்து நடத்துங்கள் என்று. அது சாத்தியமல்ல என்று தெரிவித்து விட்டார்கள். ஆலைகளில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதுபற்றி சந்தேகப்பட வேண்டாம். அதுபற்றிய பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னோம். ஆனால் அது பற்றி ஒரு பிரஸ்தாபமும் இல்லை. இந்த நிலையில் மீண்டும் கூடிப் பேசி தொழிலாளர்களுக்கு என்ன ஆறுதல்கள் அளிக்கப் போகிறோம் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. எங்கள் ப்ராவிடன்ட் பண்ட் பணத்திலிருந்து அதை ஏற்று நடத்தலாம், நஷ்டம் ஏற்பட்டாலும் நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்றுதான் தொழிலாளர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மூடப்பட்ட அந்த ஆலைகள் குறித்து உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, ப்ராவிடன்ட் பண்ட் தொகையிலிருந்து அந்த ஆலைகளைத் தொடங்கலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த ஆலைகள் மூடப்பட்டிருப்பதற்குக் காரணம் அந்த ஆலை அதிபர்கள் அந்த ப்ராவிடன்ட் பண்ட் தொகையைக்கூட கொடுக்க முடியாத நிலையில் இருப்பதினால்தான். அந்தக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் தங்கள் ஆலோசனைகளைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** அது ஒரு சில ஆலைகளில் மட்டும்தான். கோவை பங்கஜா மில்ஸ், கம்போடியா மில்ஸ் ஆகிய இந்த ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் ப்ராவிடன்ட் பண்ட் தொகையிலிருந்து அவற்றை எடுத்து நடத்த சம்மதித்துக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். ஒரு நபருக்கு ரூ. 1,200-க்கு மேல் இருக்கிறது என்பதை நினைவூட்டுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்னையைக் கவனித்து இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் பருவமழை தவறி மூன்றாண்டுகள் ஆகின்றன. மூன்று ஆண்டுகளாக அங்குள்ள மக்கள் பெரிதும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு பஞ்ச நிவாரண வேலைகளை மேற்

[திரு. கே. என். குமாரசாமி] [1969 பிப்ரவரி 26

கொள்ளவேண்டுமென்று சொன்னோம். ஆனால், அதை வறட்சி என்றுதான் சொல்கிறார்கள். ஒரு வருடம் பருவ மழை தவறி விட்டாலும் வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டு துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் நாங்கள் எவ்வளவோ சொல்லியும்கூட துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

குறிப்பாக எங்கள் பகுதி மக்கள் குடி தண்ணீருக்காக இரண்டு மைல்கள் செல்லவேண்டியிருக்கிறது. குடி தண்ணீர் இல்லாமல் எங்கள் பகுதி மக்கள் மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குடம் தண்ணீர் 15-ல் இருந்து 20 காசு வரையில் விற்கப்படு கிறது. அங்குள்ள ஏழை ஹரிஜன மக்கள் குடி தண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கேட்டால், கிணறுகள் வெட்ட பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஒதுக்கப்படுகிற பணமும் ஒதுக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் குடி தண்ணீருக்காகப் படும் கஷ்டம் வருடா வருடம் ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்குவதற்கான நிவாரண வேலைகளை மேற்கொண்டு அதற்காக அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் பாகுபாடு வேண்டாம். எங்கள் பகுதியில் நிவாரண வேலைகளை மேற்கொண்டு அதிகப்படியான தொகை ஒதுக்கவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட பிரச்னைகளில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கமும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** திருமதி கே. பி. ஞானகியம்மாள்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் நாம் இன்றையதினம் மறைந்த முதல் அமைச்சரவர்கள் இல்லாத மிகப்பெரிய துக்ககரமான ஒரு நாளில் கூடியிருக்கிறோம். என்னுடைய உரையைத் துவங்குவதற்கு

நேரம் பகல் 11-30

முன்னால் மறைந்த முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

1968-69-ஆம் ஆண்டின் இரண்டாவது துணை மானியக் கோரிக்கையின்மீது பேசும்பொழுது, இன்று நாம் தமிழ்நாட்டின் முன்னாலே இருக்கக்கூடிய மிகப் பெரிய நெருக்கடியை எதிர் நோக்கி நிற்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். குறிப்பாக எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள், தமிழகத்திலே உள்ள வறட்சி நிலைபற்றி. வறட்சி என்று சொல்லக்கூடிய நேரத்தில், எப்போதும் ஆண்டுதோறும் மழையில்லாததால், பருவ மழை தவறிய காரணத்தினால் வறட்சி ஏற்படுவது உண்டு. ஆனால், இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி மிகப் பெரிய



1969 பிப்ரவரி 26] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

வறட்சியாக, குடிதண்ணீர்கூட இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வறட்சியாக ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகக் கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் இன்னும் இராமநாத புரம் மாவட்டம் ஆகிய இடங்களில் குடி தண்ணீர்ப் பற்றுக் குறை அதிகப்படியாக இருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு 50 ரூபாய் தண்ணீருக் காக சாதாரணமாகவே ஒதுக்கவேண்டிய காலத்தில் இந்த வறட்சி நிலையில் இன்னும் அதிகமான அளவில் அவர்கள் பாதிக்கப்படுகி றார்கள். போத்தனூர் என்ற ஊரிலுள்ள மக்கள் அங்கு அவர் களுக்கு சொந்தமாக வீடுகள் இருந்தும், தண்ணீர்ப் பற்றுக் குறை ஏற்பட்டிருப்பதால் தங்கள் வீட்டையே விற்றுவிட்டு வெளி யூருக்குப் போகலாமா என்று நினைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இம்மாதிரி தண்ணீர்ப் பிரச்சினையை நீக்க துரித ஏற்பாடுகளைக் கவனித்து கிணறு வெட்டிக் கொடுப்பது போன்ற வேலைகளை விரைவில் செய்ய வேண்டுமென்பதை இந்தச் சபைமுன் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிலையில் மதுரை மாவட்டம் ஏதோ வறட்சி யில்லாத பகுதி என்று அதை ஒதுக்கித் தள்ளிவிடக் கூடாது என்பதையும் அந்தப் பகுதியில் உண்மையாகவே சில தாலுக்காக் களில் குறிப்பாக திண்டுக்கல், வேடசந்தூர், பாளையம் போன்ற இடங்களிலும், பழனி, தொப்பம்பட்டி, திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற இடங்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொண்டு செய்கின்ற காலங்களில் மதுரை மாவட்டத்திலுள்ள இதுபோன்ற தாலுக்காக்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு அங்கு குளங்கள், கண்மாய்கள் வெட்டுதல், கடன் ஒத்திவைப்பு, விவசாயத்திற்குக் கொடுக்கப்படும் கடனைத் தவிர அதற்கடுத்தாற்போல் இருக்கும் வேலைகளுக்கும் பல கடன்களைக் கொடுப்பதற்கும் மதுரை மாவட்டத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் சமீபத்தில் 21-ஆம் தேதி யன்று நடந்திருக்கக்கூடிய ஒரு விஷயம். தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்காவில் விளாகம் என்னும் இடத்தில் 21-ஆம் தேதியன்று தீ வைப்புச் சம்பவம் நடந்திருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்கள்—விவசாயிகள் ஒப்பந்தத்தை மீறி அங்குள்ள நிலச்சுவான்தார்கள் தீ வைப்புச் சம்பவத்திற்கு வழிவகுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் ரிப்போர்ட் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள், இருக்கலாம். ஆனால், கீழ்வெண்மணி சம்பவத்தைத் தொடர்ந்து, பிறகும் அங்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை நிலச்சுவான்தார்கள் மீறி வருகிறார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். மன்னார்குடி ஒப்பந்தம் ஏற்பட்டது, திருவாரூர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

நன்னிலம் தாலுக்காவில் விளாகத்தில் சப்-இன்ஸ்பெக்டரும், மிராசுதார்களும், விவசாயத் தொழிலாளர் தரப்பிலுள்ள எல்லோருமாகச் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை முதலில் மிராசுதார்கள்தான் மீறியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையை மீறி, தீ வைத்து, கீழ்வெண்மணியில் நடந்த சம்பவத்தைப் போல நடக்கும் என்று அங்குள்ள மிராசுதார்கள் பயமுறுத்தியிருக்கிறார்கள். அந்தச் சம்பவத்தைப் பற்றி நேரடியாக போலீஸ் ஸ்டேஷனில் விவசாயத் தொழிலாளர்கள் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் ஒப்பந்தத்தை மீறிய மிராசுதார்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அந்த மிராசுதார்கள் தெம்புடன் தீ வைக்கக்கூடிய அளவிற்குப் போலீஸ் நடவடிக்கை சென்றிருக்கிறது என்பது தெரியவருகிறது. நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இப்படிப்பட்ட விஷயங்கள் தொடர்ந்து நடைபெறாமல் நிறுத்தப்பட வேண்டும், நிச்சயமாக, தீ வைப்புச் சம்பவத்திலிருந்து சாதாரண ஹரிஜன மக்களுக்குப் பாதுகாப்பு இருக்க முடியாத நிலை இருப்பதாகவே நாங்கள் கருதக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அங்கு தனியார் ஒருவர் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது. அதோடு இந்த சட்டசபைக் கூட்டம் முடிந்த பிறகு, உணவு அமைச்சர் அவர்களோ, முதலமைச்சர் அவர்களோ அல்லது வேறு யாராவது முக்கிய அமைச்சர்கள் அந்தத் தாலுக்காவிலேயுள்ள பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்ளுகின்றேன். போலீஸ் அதிகாரிகள் ஒரு பக்கமாக இருந்து செயல்படுகிறார்கள் என்று அங்கு இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களும், மற்றுமிருக்கக்கூடிய பொதுமக்களும் கருதுகிறார்கள் என்று தெரிகிறது. அதற்குப் பரிகாரம் காணவே நேரில் சென்று, உண்மை நிலையை அறிந்து, இனி இம்மாதிரி செயல்களை நடைபெறாமல் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டால்தான் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இந்த அவப்பெயரைத் தடுக்க முடியும்.

அதோடு, நாகப்பட்டிணம் தாலுக்காவில் இருக்கும் அரசியல் கட்சிகள், தங்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு அங்கு 144 உத்தரவு தொடர்ந்து போடப்பட்டு வருகிறது. சாதாரணக் கூட்டங்கள் போட்டு விவசாயத் தொழிலாளர்கள் பேசக்கூட முடியாத நிலையில் இன்னும் 144 உத்தரவு நீடித்திருப்பதானது உண்மை நிலைகளைப் பேசக்கூட முடியாத அளவிற்கு ஜனநாயக முறையை மறுப்பது என்ற நிலைக்குப் போகிறது.

(திரு. பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

ஆகவே அங்கு 144 தடை உத்தரவை ரத்து செய்து அங்கு ஜனநாயக உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





இன்றைக்கிருக்கும் துணை மானியக் கோரிக்கையில் மின்சாரத்திற்கு அதிக அளவிற்குத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். கிராமப் பகுதிகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் அளவில் கிணறுகள் வெட்டிக் கொடுத்தும், அதற்காக அரசு ஏராளமாகச் செலவழித்தும்கூட சில சின்னஞ்சிறிய காரியங்களைச் செய்யாத காரணத்தினால், மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்து ஒன்றியங்களிலும், பஞ்சாயத்து மன்றங்களிலும் கிராமங்களில் உள்ள மின்சார விளக்குகளைப்பற்றி ஒரு சின்ன விஷயம். எல்லாப் பிரச்சினைகளையும்விட இந்தப் பல்புகள் இல்லை என்ற காரணத்தினால், பல கிராமங்கள் இருட்டாகவே இருப்பதைப் பார்க்கிறோம். இது சம்பந்தமாக கலெக்டர் அவர்களிடத்திலும், டி.டி.சி. கூட்டத்திலும் பேசியிருக்கிறோம். நிலைமை என்னவென்றால், பஞ்சாயத்துத் தலைவர்களே போட்டுவிடலாம் என்று சொல்கிறார்கள். அப்படிப் போட்டுவிட்டாலும்கூட, அந்தப் பஞ்சாயத்தினுடைய வரவு-செலவுக் கணக்கைத் தணிக்கை செய்யும் நேரத்தில் இந்தப் பல்பு வெளியிலே வாங்கியதால் அதிகத் தொகை ஆகியிருக்கிறது. ஆகவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆடிட் ரிப்போர்ட்டில் எழுதி வைத்துவிடுகிறார்கள். எனவே சர்க்காரே இம்மாதிரியான பல்புகளைத் தயார் செய்வதற்கென்று ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அதன் மூலமாகப் பஞ்சாயத்துக்களுக்கும், நகரசபைகளுக்கும், சர்க்கார் அலுவலகங்களுக்கும் அளித்தால் நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மின்சார இலாக்காவிலுள்ள ஒயர்மேன்களும், லைன்மேன்களும் கிராமப் பகுதிகளில் அதிகமான வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி வேலை செய்யக்கூடியவர்கள், கிராமத்திலுள்ள செல்வாக்கு படைத்தவர்களுக்குச் சலுகையாக வேலை செய்தால் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களுக்கு விரோதமாக, நியாயத்தின் அடிப்படையில் வேலை செய்யக்கூடியவர்களை அவர்களுக்குப் பிடிப்பது கிடையாது. ஆகவே ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு கிராமத்திலுள்ள ஒயர்மேன்களையும், லைன்மேன்களையும் திட்டுவதும் அடிப்பதுமாக சில பகுதிகளில் நடந்திருக்கிறது. குறிப்பாக மதுரை மாவட்டத்தில் இந்தமாதிரி சம்பவங்கள் நடக்கின்றன. ஆகவே, கிராமப் பகுதிகளில் கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் மின்சார இலாக்காவைச் சேர்ந்த கீழ்த்தர சிப்பந்திகளுக்கு அங்குள்ள செல்வாக்கு படைத்தவர்களால் தொல்லை ஏற்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கிணறுகளுக்குப் பல வருஷங்களாகியும் சர்வீஸ் கனெக்ஷன் கிடைப்பதில்லை. கிணறுகளுக்கு மின்சாரம் அளிப்பதற்காக அதிகமான அளவில் செலவு செய்கிறோம். இருந்தாலும், கீழேயிருக்கக்

கூடிய சிப்பந்திகள் செய்யும் சிறு காரியங்களின் மூலமாக கிணறுகளுக்கும், பம்பு செட்டுகளுக்கும் மின்சார கனெக்ஷன் கிடைப்பதிலே தகராறு இருக்கிறது. எனவே, அவைகளுக்கு மின்சார கனெக்ஷன் சீக்கிரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மீனாட்சி மில், மதுரை மில், விசாலாட்சி மில் போன்ற பெரிய மில்களிலிருந்து மின்சாரக் கட்டணம் பல லட்சக்கணக்கான அளவில் இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சாதாரணமான, சின்னஞ்சிறிய வீடுகளில் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்றால், அவர்களுக்கு உடனேயே கனெக்ஷன் துண்டிக்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட பெரிய மில் அதிபர்களிடமிருந்து பல லட்சக்கணக்கான ரூபாய் அளவில் வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் வசூலிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, அரசுப் பணியாளர்களுக்கு இறுதி 36 திங்கள் பணிக் கால அளவில் அவர்கள் பெற்று வந்த சராசரிச் சம்பள அடிப்படையில் ஓய்வுச் சம்பளம் கணக்கிடப்படும் என்ற திட்டத்தை இந்த மானிய கோரிக்கையில் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். அம்மாதிரி செய்வது மிகவும் பொருத்தம். அதோடு மட்டுமல்ல, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் மத்திய அரசுப் பணியாளர்களுக்குமிடையே பஞ்சப்படியில் சமநிலை இருக்க வேண்டுமென்பதற்காக 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதிப் பொறுப்பாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். சமநிலையில் பஞ்சப்படி அளிப்பது உற்சாகம் அளிக்கக்கூடிய விஷயம். ஆனால், அம்மாதிரி அதிகமாக செலவழிக்கக்கூடிய நேரத்தில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு அதற்கு வேண்டிய மானியத்தை அதிகமாகப் பெறுவதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விலைவாசி உயருவதற்கோ, உணவு நெருக்கடிக்கோ மத்திய சர்க்காருடைய உணவுக் கொள்கையும காரணமாக இருக்கிறது. மாநில சர்க்காருக்குப் பண நெருக்கடி இருக்கக்கூடிய இந்த நேரத்தில், விலைவாசிகள் ஏறுகின்றன என்ற காரணத்தினால், மத்திய அரசு அவர்களுடைய பணியாளர்களுக்கு அதிகமாகப் பஞ்சப்படி கொடுக்கின்ற காரணத்தினால், மாநில சர்க்காரும் அதற்கேற்றவாறு பஞ்சப் படியை உயர்த்தித் தர வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அம்மாதிரி நிலைமை ஏற்படக்கூடிய காரணத்தினால், மத்திய சர்க்காரிடத்தில் நமது பணியாளர்கள் பஞ்சப்படியை உயர்த்த மானியம் கேட்பது மிகப் பொருத்தமானது. அம்மாதிரி மானியம் கேட்பதற்கு நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்து சம்பந்தமான ஒரு விஷயத்தைக் கூறிக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.





போக்குவரத்தைத் தேசியமயமாக்கியது மிகவும் மனதார வரவேற்கக் கூடியதுதான். அதே நேரத்தில் இப்பொழுது அதிகமாக, நெடுந்தூரம் போகக்கூடிய பஸ்களில் சில தகராறுகள் கோளாறுகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பொது மக்களிடத்தில் இதற்கு மிகப்பெரிய ஆதரவு இருந்துகொண்டு வருகிறது. இன்றைக்கு அந்த ஆதரவைத் தொடர்ந்து பெற வேண்டுமென்று நாம் விரும்புகிற அதே நேரத்தில், சின்னஞ்சிறிய ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சாமான்கள் எல்லாம் இல்லாத காரணத்தால்கூட தகராறுகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆகவே, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலே நமது சர்க்கார் சார்பிலே பெரிய ஓர்க் ஷாப்புகளைத் திறந்து, திறமையான தொழிலாளர்களை அமர்த்தி, அங்கு பஸ்களை எல்லாம் ரிப்பேர் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி, நல்ல பஸ்களாக ஓடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு தனியார் பஸ்களை தேசியமயமாக்கக்கூடிய நேரத்தில் தொழிலாளர்கள், கண்டக்டர்கள், இன்னும் டிரைவர்கள் இவர்களையும் சேர்த்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். பஸ்களை மட்டும் நாம் எடுத்துக் கொண்டு, தொழிலாளர்களை விட்டுவிட்டால் அதுவே பெரிய தகராறுகளுக்கான நிலைமைகளை ஏற்படுத்தும். ஆகவே அவர்களையும் சேர்த்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து அவர்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாகப் பைசல் காணக்கூடிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயங்களை இந்த மானியக் கோரிக்கையின்மீது கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு முன்னால், காலஞ்சென்ற முதலமைச்சர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, புது அமைச்சரவையை வரவேற்று, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். துணை மானியக் கோரிக்கை மாத்திரமல்ல, வருஷா வருஷம் மானியம் கோரப்படுகிறது. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 20 சதவிகிதம் அரிஜன மானியத்திலிருந்து ஒதுக்கப்படுகிறது. அந்த அரிஜன மானியம் கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட அரிஜனங்களுக்கு சுகாதார வசதி அளிக்கவும், அங்கு மின்சாரம் போடுவதற்கும், அவர்களுடைய குடி தண்ணீர் வசதிக்காகவும் தான் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகிற பணம் அந்தக் காரியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை. காரணம், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற ஜாதி இந்துக்களுக்கும், வசதி படைத்

[திரு. என். மருதாசலம்] [1969 பிப்ரவரி 26

தலைவர்களுக்கும்தான் செலவிடப்படுகிறது. அவர்கள் இருக்கிற இடங்களில்தான் மின்சாரம் அதிகமாகப் போடுகிறார்கள், நல்ல சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள், அவர்களுக்குத்தான் குடி நீரும் கிடைக்கிறது. சாதாரண ஏழை மக்கள், அரிசன மக்கள், இருக்கிற இடத்திலே மின்சாரம் கிடைப்பதில்லை. குடி தண்ணீர் கிடைப்பதில்லை. நல்ல சுகாதார வசதி கிடைப்பதில்லை. இம்மாதிரியான கஷ்டங்கள் கிராமப் பகுதிகளிலே அரிசனங்களுக்கு இருக்கின்றன. இந்தக் கஷ்டத்தைக் கோவை ஜில்லாக் கலெக்டரிடத்திலே போன திங்கள் தூது கோஷ்டியாகச் சென்று சொன்னபோது, அவர் "எங்களிடத்திலே பணம் இல்லை, அரசைப் பணம் கொடுக்கச் சொல்லுங்கள் நான் உங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறினார். ஆகவே, இந்தக் குடி தண்ணீர் வசதியாகிலும் செய்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அரிசனங்களுக்கு ஸ்காலர்ஷிப் விஷயம். எனக்கு முன்னால் ஒரு அங்கத்தினர்கூட அதைப்பற்றிச் சொன்னார். இன்னும் பல ஜில்லாக்களிலே இதுவரையிலும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லை. கோவை ஜில்லாவிலே ஓர் ஆரம்பப் பாடசாலையிலே இதுவரையிலும் ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கவே இல்லை. ஸ்காலர்ஷிப் பணத்திற்காக அரிசன நல இலாகாவிற்குச் சென்று கேட்டால், நாங்கள் 'பில்' போட்டுக் கொண்டிருக்கிறோம், ஆகையினால் இனிமேல் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். இப்பொழுது முழுப் பரீட்சை வரக்கூடிய நேரம். இந்த சந்தர்ப்பத்திலே இந்த ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கவில்லையென்றால், இதுவரையிலும் அரிசன நல இலாகாவில் இருந்தவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அந்த வேலையைக் கூட அவர்கள் செய்ய முடியாமல் இருப்பார்களானால், அரிஜனங்கள் எப்படிப் புத்தகம் வாங்கிப் படிக்க முடியும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் உறுப்பினர் அவர்கள் கோவையிலே இருக்கிற ஒரு ஆரம்பப் பள்ளி என்று சொன்னார். குறிப்பாக இந்த ஆரம்பப் பள்ளி என்று சொன்னால், அது குறித்துத் தகவல் அறிந்து விசாரிக்கலாம்.

**திரு. என். மருதாசலம்:** கோவை நகர ஆரம்பப் பள்ளியிலே அதுமாதிரி இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். ஆகவே, அங்கு உடனடியாகக் கொடுப்பதற்கு அரிசன நல இலாகாவிற்கு உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு கோவையிலே சிங்காநல்லூர் நகர சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நகரசபையிலே இருக்கக்கூடிய உபாத்தியாயர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுப்பதில்லை. அதன் காரணமாக, அந்த உபாத்தியாயர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இது சம்பந்தமாக அமைச்சரவர்களுக்கும்



1969 பிப்ரவரி 26] [திரு. என். மருதாசலம்]

தெரிவித்திருக்கிறோம். மாதா மாதம் சம்பளம் கொடுக்காமல் 2 மாதத்திற்கு ஒரு முறை, ஒரு மாதத்திற்கு 15 நாள் சம்பளம் என்ற முறையில் கொடுக்கிறார்கள்—ஆசிரியர்களும் வாங்குகிறார்கள். கேட்டால் பணம் இல்லையென்று ஸ்பெஷல் ஆபிசர் கூறுகிறார். அந்தப் பகுதியிலேயுள்ள ஒரு சிலர் இன்றைக்கு வரி கொடுக்கக்கூடாது என்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். வரி கொடுக்கக்கூடாது என்ற திட்டம் இருப்பதாலே இங்கே பணம் குறைவாக இருக்கிறது. ஆகையால் எங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து பணம் வேண்டும் என்று ஸ்பெஷல் ஆபிசர் கேட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து பணம் கிடைக்கவில்லை. உபாத்தியாயர்களுக்கும் சம்பளம் கொடுக்கவில்லை. ஆகவே, அரசு இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது அமைச்சரவர்கள் கூடக் கூறினார்கள், மில்களைப் பற்றி. தொழிற்சங்கம் சம்பந்தமாகப் பேசும்போது ஓர் உறுப்பினர், மில் பிராவிடண்ட் ஃபண்ட் கட்ட முடியவில்லை, ஆகையினால்தான் மில்லை ஓட்ட முடியவில்லை என்று கூறினார்கள். பிராவிடண்ட் ஃபண்ட், தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து பிடிக்கக்கூடிய பணம். அந்த பணத்தைக் கட்டவில்லை என்றால் அந்த மில் முதலாளியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் பேரில் நடவடிக்கை எடுத்து, அந்த மில்லை உடனடியாக, மில் முதலாளிக்கு நிவாரணம்கூடக் கொடுக்காமல் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்த மில் முதலாளிக்கு ஒரு கண்டனம் ஏற்படும். அந்தமாதிரி இல்லாமல் அவர் கட்டவில்லையென்று சொல்வது நாம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதுதான் காரணம். அது மாத்திரமல்ல, ஸ்டோர் பணமும் இவர்களுடைய சம்பளப் பணத்திலிருந்து கட்டுகிறார்கள். அந்த மாதிரி பல மில்காரர்கள் இருக்கிறார்கள். அந்தமாதிரி சட்ட விரோதமாக நடந்து கொள்கிறவர்கள் அவர்கள்மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து அந்த மில்லை எடுத்து நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூரிலே 16,000 தொழிலாளர்கள் இன்றைக்கு அவதிப் படுகிறார்கள். அந்த 16,000 தொழிலாளர்களிலே பலபேர் ஊரை விட்டே ஓடிப்போய் விட்டார்கள். பலர் இறந்துபோய்விட்டார்கள். பலர் பிச்சை எடுத்து சாகக்கூடிய நிலையிலேதான் இருக்கிறார்கள். அந்த நிலையிலே இருக்கும்போது இன்றைக்கு முதலமைச்சரவர்கள் பேசி நாங்கள் முடிவு செய்வோம் என்று சொல்லியிருக்கிறார். முன்னாலும் இதுமாதிரி பேசித் தீர்த்துக் கொள்வோம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். உடனடியாகப் பேசி அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையில் இந்தப் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு புது வாழ்வு கிடைக்க வேண்டுமென்று அந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கொண்டிருக்கிற சமயத்திலே அந்த மில்லை எடுத்து நடத்துவதற்கு அரசு தக்க

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் உடனடியாக நடப்பார்களானால், அரசுக்கு ஒரு நல்ல பெயர் கிடைக்கும், அதன் மூலம் தொழிலாளர்கள் நல்வாழ்வு வாழ்வார்கள் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா** : தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் பேச விழைகிறேன். விவசாயத்தைப் பற்றி நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயத்திற்காக அதிகமான பணத்தைச் செலவழித்தாலும் கூட, இன்றைக்கு நிலை என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். எங்கு பார்த்தாலும் பஞ்சம், முக்கியமாக ஒரு சில மாவட்டங்களில் அதிகமாகப் பஞ்சம் ஏற்பட்டு, மக்களெல்லாம் ரொம்ப அவல நிலையை அடைந்திருக்கிறார்கள். நாம் எடுத்துக்கொண்ட நிவாரண வேலைகளைப் பொறுத்தமட்டில், நமக்கு நன்றாகத் தெரியும், குறிப்பாக மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நல்ல மழை இந்த மாகாணத்தில் பெய்தாலும் கூட, பிற்பட்டு இருக்கக்கூடிய ஒரு மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். குறிப்பாக, மேற்கு இராமநாதபுரத்தில் கடந்த மூன்று வருடங்களாக வறட்சி ஏற்பட்டு. மழையின்மை காரணமாக, பஞ்சநிலை உச்ச கட்டத்தை அடைந்திருப்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும் நாங்கள் டி.டி.ஸி. மீட்டிங்கில் அடிக்கடி இதைப்பற்றிக் கேட்டோம். மிகத் தெளிவாக கலெக்டரிடம் கேட்டோம், என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள் ? என்று. அவர்களும் அரசுக்கு ஒரு ரிபோர்ட்டு தயார் செய்து அனுப்பியிருக்கிறார்கள். ரிப்போர்ட்டில் போர்டு மெம்பர் ஒருவர் அங்கே வந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, நிலைமையை நேரில் ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். நாங்கள் எல்லோரும் வருத்தப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஏனென்றால், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களுக்குத் தனியாக அவசரம் அவசரமாக போர்டு மெம்பரை அனுப்பி வைத்து, ரிபோர்ட்டு சமர்ப்பிக்கும்படி நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திற்கு மட்டும் ஒரு போர்டு மெம்பரை ஏன் அனுப்பவில்லை ? . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: போர்டு மெம்பரை அனுப்ப வேண்டியது அந்தந்த மாவட்டத்திலுள்ள நிலையைப் பொறுத்தது. உங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைக் காட்டிலும், இப்பொழுது செய்யப்பட்ட பரிசிலனையிலே அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு ஏதோ பாரபட்சம் காட்டுவது போலவும், சிரத்தைக் குறைவாக இருப்பது போலவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாதிக்க முடியாது. நிலைமைகளுக்குத்



தகுந்த மாதிரி இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவே தவிர, போர்டு மெம்பரை அனுப்பினால் விசேஷமான நிலைமை இருக்கிறது என்பதும் அல்ல, அனுப்பாததினால் பஞ்சம் அதிகமாக இல்லை என்பதும் அல்ல. அப்படிப்பட்ட கருத்தை உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** : அமைச்சர் அவர்கள் சொன்ன கூற்றைக் கேட்டு நான் ரொம்பவும் சந்தோஷம் அடைகிறேன். இருந்தாலும்கூட, நமது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அரசு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ரூ. 40 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்குத் தெளிவாக விவரம் தெரியாததால் போர்டு மெம்பரை அங்கு அனுப்பிவைத்தால் நன்றாக இருக்கும் என்ற அபிப்பிராயத்தைச் சொன்னேன். பாரபட்சம் காட்டுகிறீர்கள் என்று நான் சொன்னதாகத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் நினைத்துக் கொள்ள வேண்டாம்.

இப்பொழுது அங்கே நிலைமை எப்படி இருக்கிறது என்றால், கிராமங்களில் உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது. நியாய விலைக் கடைகளில் அரிசி கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. பேமிலி கார்டுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 1,200 கிராம் அரிசி கொடுக்கப்பட்டு வந்தது, 800 கிராமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இன்னும் குறையுமென்று ரூசமாக ஆங்காங்கு அவர்கள் கூற்றுகளிலிருந்து தெரிய வருகிறது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், மீதி மாவட்டங்களில் விளைச்சல் இருக்கக்கூடிய மாவட்டங்களில் அம்மாதிரியான அளவைக் குறைத்தால்கூட பரவாயில்லை. ஆனால், ஏற்கனவே பஞ்சத்தால் வாடிக்கொண்டிருக்கிற எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கிராமங்களிலுள்ளவர்கள் உணவு தானியத்திற்கு எங்கே செல்வார்கள்? இராமநாதபுரத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் தஞ்சை மாவட்டத்தில் போய் வேலை செய்து பிழைக்கக்கூடியவர்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தத் தகராறுகளின் காரணமாக இங்கே இருந்து அனுப்பப்பட்ட தொழிலாளர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படுகிற நிலைமை இருப்பதைக் காண்கிறோம். இது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்கிற நேரத்தில் பஞ்ச நிவாரண வேலைகள் மேற்கொள்ளும்படியான நிலை உள்ள இடங்களில், பிற்பட்ட மாவட்ட கிராமங்களில் உடனடியாக நியாய விலைக் கடைகளைத் திறந்து அரிசி அளிப்பதற்கு முன்வரவேண்டும். இதைச் செய்தாலொழிய மிகவும் மோசமான நிலை ஏற்படும். எங்களைப் போன்றவர்கள் அங்கே இருக்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

அதோடுகூட, போர்டில் ஒரு ஆர்டர் போட்டிருக்கிறார்கள். பழைய கடன்களைக் கண்டிப்பாக வசூல் செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. கீழேயுள்ள அதிகாரி

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1969 பிப்ரவரி 26

களைக் கேட்டால், கலெக்டர் உத்தரவு என்று சொல்கிறார்கள். கலெக்டரைக் கேட்டால் மேலே இருப்பவர்களைப் பற்றிச் சொல்ல மாட்டார்கள். கீழே என்ன நடக்கிறது, அவர்கள் உங்களைச் சொல்கிறார்களே என்று கேட்டால், செய்யவேண்டியதைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். மறைமுகமாக நமக்கு இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், போர்டு மெம்பர் அவர்கள் கண்டிப்பாக கடன் தொகையை வசூல் செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதுதான். அம்மாதிரி உத்தரவைக் கண்டிப்பாக அமல் நடத்தினால், அங்கிருக்கக்கூடிய மக்கள் என்ன ஆவது? அமைச்சர் அவர்கள் போர்டு மெம்பர் உத்தரவை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த வருடம் இல்லாவிட்டால், விளைச்சல் நல்ல நிலைமையில் இருக்கும்பொழுது அந்தக் கடன் தொகையை வசூல் செய்து கொள்ளலாம் என்று உத்தரவு போட ஏற்பாடு செய்யவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட இங்கே கிணறு தோண்டுதல், பிசையேற்றங்கள் அமைத்தல், இம்மாதிரியான காரியங்களுக்கு கடன்கள் அளிக்கப் படுகின்றன. அதைப்பற்றி இந்த மானியக் கோரிக்கையில் ரொம்பவும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையாகச் சொல்லப் போனால், கொடுக்கிற கடன் தொகை என்ன ஆகிறது என்று கேட்டால், பாதிக் கிணறு வெட்டும்பொழுதே அந்தப் பணம் தீர்ந்து போய் விடுகிறது. அந்தப் பணம் யாருக்கு எங்கே போய்ச் சேருகிறது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடைசியில் விவசாயி வாங்கும்பொழுது அவன் கையில் எவ்வளவு பணம் மிச்சப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு மண்ணை வெட்டி வெளியே போட்டால், ஒரு மழை வந்தால், மண் மூடிக் கொண்டு கிணறு தூர்ந்து விடுகிறது. அடுத்த நடவடிக்கை, ஜப்தி செய்து ரூபாயை வசூலிக்கக்கூடிய பிரச்னைதான் ஏற்படுகிறது. சர்க்கார் இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். அவர்களுக்கு கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுத்து, பின்னாலே ஜப்தி செய்யக்கூடிய ஒரு திட்டத்தைக் கையில் வைத்திருக்க வேண்டுமா ? நமது அரசு பஞ்சாயத்துக்கள் மூலம் அல்லது வங்கிகள் மூலமாக அவர்களே சர்வீஸ் செய்யவேண்டும். அரசினரே கிணறுகளை வெட்டிக் கொடுக்கவேண்டும். சமுதாயக் கிணறுகளை ஆங்காங்கு வெட்டிக் கொடுக்க வேண்டும். அப்படி வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுத்து, அதற்காக ஒரு சில கட்டணங்களை விதித்து, அதை வசூல் செய்து, நல்ல விதத்தில் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் இதற்கு இவ்வளவு அதிகமான செலவு செய்யவேண்டியதில்லை, கொடுத்த பணம் நன்கு பயன்படும். பணம் எதற்காகச் செலவு செய்யப்படுகிறதோ, அந்தச் செயல் சரிவர நடைபெறும், விவசாயிகளுடைய கடன் தொல்லைகள்



1969 பிப்ரவரி 26] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

நீங்கும். இம்மாதிரி சமுதாயக் கிணறுகள் வெட்டிக்கொடுத்து, அதிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு கட்டணத்தை வசூல் செய்யும் அளவுக்கு இந்தத் திட்டத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டால், மிகவும் நல்ல விதத்தில் அமையும் என்று மிகவும் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பருவ மழை தவறிக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆங்காங்கு வருகிற தண்ணீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆங்காங்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக, சிறு சிறு அணைகளைக் கட்டி, மழை கிடைக்கிறபோது தண்ணீரைத் தேக்கி, மழை இல்லாதபோது அந்தத் தண்ணீரை விவசாயிகளுக்கு அளித்து, அவர்களுக்கு நல்ல விதத்தில் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, மின்சாரத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விழைகிறேன். மின்சார போர்டுக்குப் பணத்தை வாரி வாரி அளிக்கிறோம். மின்சாரம் இல்லை என்று சொன்னால் நாடு ஸ்தம்பித்துப் போய்விடும் என்ற ஒரு முக்கியமான அம்சத்தைப் பெற்றிருப்பது மின்சார போர்டு. எங்கு பார்த்தாலும் புது புதுத் திட்டங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால், அங்கே கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டில் கேட்டால், அவர்கள் என்ன செய்வார்கள், காங்கிரீட் போல் கிடையாது என்று சொல்கிறார்கள். பல்புகளைப் பொறுத்த வரையில் ரொம்பவும் மோசமான பல்புகள். அந்தப் பிரச்சினையைப் பற்றிக் கேட்டால், அட்மினிஸ்ட்ரேஷனில் சிக்கல் என்று சொல்கிறார்கள். என்ன சிக்கல் என்று கேட்டோமானால், பல்புகளைப் பல விதரமாகப் பிரித்து, அவை பலவித கம்பெனிகளினால் செய்யப் படுகின்றன. மிகவும் மோசமான பல்புகளை உற்பத்தி செய்யும்படியான கம்பெனிகளும் இருக்கின்றன. அட்மினிஸ்ட்ரேடிவ் சிக்கல், ஆடிட்டர் அப்ஜெக்ஷன் செய்வார் என்பதற்காகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் பல்புகளை வாங்கினால், அவை ரொம்பவும் மோசமாக இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பல்புகளை அடிக்கடி மாற்றவேண்டியதாக இருக்கிறது. ஒரு மாதத்திற்கு ஒரு தடவை பல்பு மாற்றப்பட வேண்டியிருக்கிறது. இப்படி அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பதால், தரமான ஒரு பல்பு வாங்கவேண்டிய இடத்தில் பத்து பல்புகள் வாங்கவேண்டியிருக்கிறது. தரக்குறைவான பல்புகளை உற்பத்தி செய்யும் கம்பெனிகளிடமிருந்து 10 பல்புகளை வாங்கும் விலைக்கு, நல்ல தரமுள்ள பல்புகளை உற்பத்தி செய்யக்கூடிய கம்பெனியிடமிருந்து ஒரு பல்பு, சற்று அதிக விலையானாலும், வாங்கும் விலை சமமாக இருக்கும். அப்படிப்பட்ட முறைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். டெண்டர்கள் கால் 12-00 ந.ப. பார் செய்வதை நிறுத்திவிட்டு, நல்ல முறையில் 'அதரைஸ்ட்' கம்பெனிகள் என்று இருப்பவர்களிடமிருந்து வாங்கலாம் என்கிற உத்தரவை அளிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பணம் விரயமாகத்தான் ஆகும்.

[திரு. அ. சுப்பராஜா] [1969 பிப்ரவரி 26

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கேயிருக்கும் அமைச்சர்கள் அந்த அந்த இடங்களுக்குச் சென்று, என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, இனிமேல் அப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்த அந்த இடங்களுக்குச் சென்று, அதிகாரிகளையும் கலந்து, விஷயங்களைப் பேசினால், அட்மினிஸ்ட்ரேஷன் ஈஸியாக இருக்கும். ஸ்பாட்டில் போய், 'டிபிகல்டீஸ்' என்ன என்று பார்த்து, அந்த அந்த அதிகாரிகளுக்கும் என்ன செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டால், அட்மினிஸ்ட்ரேஷனில் 'ரெட்-டேபிஸம்' குறையும், உங்களுக்கும் நல்ல பெயர் இருக்கும். அண்ணா அவர்கள் இல்லாவிட்டாலும், அவர்களுடைய கொள்கையைக் கடைபித்து, மக்களோடு மக்களாகப் பழகி, அவர்களுடைய குறைகளைக் களைந்து, நல்ல விதத்தில் பெயர் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

**திரு. ந. தருமலிங்கம்:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இருபத்தைந்து கோடியே பதினெட்டு லட்சம் அளவிற்கு வந்துள்ள இந்தத் துணை மானியக் கோரிக்கையில், மூலதனச் செலவிற்கு என்று ஒதுக்கியிருப்பது பத்தொன்பது கோடிக்கும் அதிகமாக இருக்கிறது. உள்ளபடியே இதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும். வேறு செலவினங்களுக்கு இல்லாமல், மூலதனச் செலவுக்கு என்பது, தமிழ் நாட்டை சிறப்பான முறையில் வைக்க நல்ல காரியங்களுக்குப் பயன்படும் என்பதால் இது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதிபற்றி ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். காலங்காலமாக திருத்துறைப்பூண்டி பகுதியில் வீணாகும் நீரைத் தேக்கி, இறைவைப் பாசனம் மூலம் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டதை மறுத்து வந்ததெல்லாம் தெரியும். இன்றைக்கு அந்த இனத்திற்காக 4½ லட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்த இறைவைப் பாசனத் திட்டத்திற்காக ஏற்பாடு செய்திருப்பதற்காக, அந்தத் தொகுதி மக்களின் மகிழ்ச்சி எல்லை இல்லாதது என்பதை அறிவிக்கிறேன்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேயும் இப்படிப்பட்ட திட்டத்திற்காகப் பணம் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. வேலை தொடங்கவில்லை. அதிகாரிகளைக் கேட்கும்போது, ஒப்பந்தக் கட்டணம், அக்ரிமெண்ட் ஃபீஸ், என்று ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார்கள். அதைத் தளர்த்தினாலொழிய வேலை தொடங்க முடியாது என்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டரும், வேறு பலரும் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எவ்வளவு விரைவில் அந்தக் கோரிக்கையை ஏற்று கருணை



1969 பிப்ரவரி 26] [திரு. ந. தருமலிங்கம்]

மனதோடு, அக்கிரிமெண்ட் ஃபீஸ் சம்மந்தமாக, ஒரு முடிவு எடுத்து, அரசு அறிவிப்பதன் மூலமாக, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருபோகம் சாகுபடி செய்யக்கூடிய அளவில் பயன்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அன்மையில் மறைந்ததால், நாம் அனைவரும் அறுபட்ட கோழிபோல் துடி துடித்து, தாங்க முடியாத வேதனையில் ஆழ்ந்திருக்கிறோம் என்றாலும், இப்பொழுது சுறு சுறுப்பும், கூர்ந்த மதியும், உடனுக்குடன் முடிவுகள் எடுக்கும் தன்மையும் படைத்த ஒருவர் நம்முடைய முதல் அமைச்சராகப் பதவியேற்றிருப்பது, மிகச் சிறப்பானது. ஆகவே, உடனுக்குடன் அவர்கள் காரியங்கள் செய்ய, முறைப்படி, முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே, இந்த நேரத்தில், வடிகால் திட்டங்களுக்குத்தான் அதிகமாகத் தொகை ஒதுக்க வேண்டும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் பெருமையாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள், 25 கோடியில், 19 கோடி மூலதனச் செலவிற்கு என்று. அது பாராட்டத் தக்கதுதான். ஆனாலும், தஞ்சை மாவட்டத்தில் வேறு சில மாவட்டங்கள் போல அல்லாமல், பெய்த மழை நீரைத் தேக்கி வைத்துப் போதவில்லை என்பது இல்லாமல், தஞ்சையில் வருகிற தண்ணீரை வடிக்க முடியாத சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வடிகால் வசதிக் குறைவால் மாவுக்கு 20 கொடுக்கும் அளவில் விளைந்த பயிர்கள் கூட 10, 15 மட்டுமே தரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, வடிகால் வசதிகளைச் செய்து கொடுத்தால், தண்ணீரை அப்புறப்படுத்த நிரந்தரமான திட்டத்தை அதிகச் செலவானாலும்கூட, செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் சிறப்பான அம்சங்களைப் பாராட்டி, என் உரையை முடிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சர்க்காரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது உபமானியக் கோரிக்கையின் மேல் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உபமானியக் கோரிக்கைகள் இரண்டாம் தடவையாக வந்தாலும், நாட்டில் இருக்கும் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் உபமானியக் கோரிக்கைகள் வர வேண்டும். அப்படிப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கும்போது, உண்மையான நிலைகளை மக்களுக்குச் சொல்லாமல், தவறான முறையில், எல்லா விஷயங்களையும் தீர்த்து விட்டோம், உணவு நிலை நன்றாகவே இருக்கிறது, பஞ்சம் ஒன்றும் இல்லை, என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு, இன்னொரு பக்கம் வேறு விதமாகச் சொல்வது முறையாக இருக்காது. உபமானியக்

கோரிக்கைகளெல்லாம் தேவைக்கு மீறிய செலவுகளுக்கு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக் கொண்டுவர வேண்டும். எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, இது சரிதானு என்று பார்க்க வேண்டும்.

உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளில், உபாத்தியாயர்களுக்கு, சென்ற நவம்பர் மாதத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்படவில்லை. அப்படி ஆயிரக்கணக்கான குறைகள் வந்து கொண்டிருக்கின்றன. அமைச்சர்களைக் கேள்வி கேட்கும்போது, அது பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சம்பந்தமானது என்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்கிருர்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் கொடுக்கவில்லையா? அவர்கள் தவருக நடந்தால், செலவு செய்திருந்தால், கேட்க வேண்டாமா? ஆகவே, அதற்கும் சர்க்கார் தான் பொறுப்பு. பஞ்சாயத்து யூனியன்களில் நிர்வாகம் சரியாகச் செய்து, சரியான முறையில் வைத்திருக்கிருர்களா, செலவு சரியாகச் செய்கிருர்களா என்று பார்க்க வேண்டுவதும் சர்க்கார் கடமையே. ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தால் அது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பலப்பல இடங்களில் சம்பளம் இல்லாமல் இருக்கிறது. வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ரோடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை. திட்டங்களும் செயல்படவில்லை. சொல்லுகிருர்கள், "பார்த்தீர்களா, மானியம் கொடுத்து, அரிசியைப் போட்டுவிட்டோம்" என்று. அதையும் சரியாகப் போடவில்லை, பரிபூரணமாகச் செய்யவில்லை. கவர்னர் உரையில், 6½ அட்சம் டன்னுக்கு சப்ஸிடி, மானியம் என்று சொல்லியிருக்கிருர்கள். ஒரு டன்னுக்கு 100 ரூ. சப்ஸிடி என்றாலும், 6½ கோடி நஷ்டம். 6½ கோடி நஷ்டம் நியாயம்தானு? இதை நான் கேட்டவுடனே, விளம்பரத்திற்காக, பிரசாரத்திற்காகச் சொல்லுவார்கள், நாங்கள் அரிசி போடுகிருேம், எதிர்க் கட்சித் தலைவர் எதிர்த்துப் பேசுகிருர் என்று. அப்படிச் சொன்னுல் பிரயோசனம் இல்லை. இதுவரை எத்தனை திட்டங்கள் பாழாகியிருக்கின்றன? எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளங்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன? இவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மானியம் கொடுப்பதனுல் எவ்வளவு பொருளாதார சிக்கல்கள் ஏற்பட இருக்கின்றன, எவ்வளவு பொருளாதார இடைஞ்சல்கள் ஏற்பட இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். பரம்பரையாக எல்லா அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றி, அதற்குப் பிறகு மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டால் ஏற்றுக் கொள்ளலாம். இந்த மானியம் கொடுப்பதனுல் அரிசி உற்பத்தி அதிகரிக்கும்; அதனுல் விலை குறையும் என்று சொன்னுல் ஆட்சேபிக்கவில்லை. 12 கோடி ரூபாய்க்கும் அதிகமான கடன்களை நாம் கொடுத்திருக்கிருேம். சர்க்கார் அதிகப்படியான கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தன்னுடைய சிப்பந்திகளுக்குக் கூட பஞ்சப்படி போன்றவைகளை உயர்த்திவிட்டோம் என்று





அரசாங்கம் சொல்கிறது. ஆனுல் விவசாயினுடைய நிலைமையோ எந்தவிதமான அபிவிருத்தியும் காணுமல் அப்படியேதான் இருக்கிறது.

தஞ்சாவூர் பகுதியில் கிஸான்களுக்கும், நிலச் சொந்தக்காரர், கிஸான்களுக்கும் இருக்கும் சண்டை என்ன? இது வெறும் கிஸான்-நிலச் சொந்தக்காரர் தகராறு என்று சொல்லிவிட முடியாது. இது ஒரு அரசியல் கண்ணேட்டத்தோடுதான் இப்போது முற்றிக் கொண்டு வருகிறது. இதனுடைய பின்விளைவுகள் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாய ஊதியம் கொடுக்கவேண்டும் என்பது நியதி. உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்று சொன்னுல், உழைப்பு எது? ஊதியம் எது என்பது பிரச்சினையாக இருக்கிறது. தொழிற்சாலையில் செய்யும் உழைப்பு வேறு, ஊதியம் வேறு. அதுபோல, விவசாயத்தில் இருக்கும் உழைப்பு வேறு, ஊதியம் வேறு. ஆகவே, உழைப்புக்கேற்ற ஊதியம் என்பதை வகைப்படுத்திச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னர்குடியில் முத்தரப்பு மகாநாடு கூடி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னுர்கள். அதையாவது அமல் படுத்தினுர்களா? இல்லையே! கலெக்டரைக் கேட்டால் நிலச் சொந்தக்காரர்களைக் காட்டுகிருர், நிலச் சொந்தக்காரர்களைக் கேட்டால் விவசாயத் தொழிலாளிகளைக் காட்டுகிருர். பூமி சொந்தக்காரர்களும் காலத்திற்கேற்றவாறு தங்களுடைய கடமைகளை, நியதிகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள் பழைய சித்தாந்தங்களிலேயே இருந்துவிடக் கூடாது. அப்படி இருந்தால் தற்கால வாழ்க்கைக்கு அது ஒத்து வராது. அவர்களும் உழைக்க வேண்டும். உழைக்காமலே வருமானத்தை மட்டும் எதிர்பார்க்கக் கூடாது. நிலச் சொந்தக்காரர்கள் உழைக்கும் விவசாயத் தொழிலாளிக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

தஞ்சாவூரில் இருக்கும் நிலைமை வேறு. என்னுடைய மாவட்டத்தில் இருக்கும் நிலைமை வேறு. என்னுடைய மாவட்டத்தில் நிலச் சொந்தக்காரர்-தொழிலாளி, ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை. எல்லோரும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதால்தான் நல்வாழ்வு வாழ முடிகிறது. என்னுடைய மாவட்டத்திற்கு முற்றிலும் எதிரான நிலையே தஞ்சாவூர் பகுதியில் இருக்கிறது. சர்க்கார் அந்தப் பிரச்சினையை நேரடியாக அணுகாமல் விட்டுவிடுகிருர்கள். அங்கே ஒரு அரசியல் கட்சி தன்னுடைய செல்வாக்கை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காகவே வேலை செய்கிறது. அது துரதிர்ஷ்டவசமாக கூட்டணியிலும் சேர்ந்து கொண்டிருக்கிறது. இரண்டு பேருக்கும் உள்ள நிலைமையில் முதலமைச்சர் அவர்களும் இதை வலியுறுத்திச் சொல்லமுடியாமல் இருக்கிருர்கள். இது இப்போது வளர்ந்த பிரச்சினை இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இருந்து வரும் பிரச்சினை. அதைத் தீர்ப்பதற்கு சர்க்கார் பூரணமாக

நடவடிக்கை எடுத்து சட்ட அமைதியை பாதுகாக்க தயாராக இருக்க வேண்டும். யார் எது வேண்டுமானாலும் செய்துவிட்டுப் போகட்டும், நாம் கண்டித்தால் நம்முடைய அரசுக்கு ஆபத்து வந்துவிடுமே என்று ஆட்சியினர் பயப்படுகிறார்கள். இப்படியே போனால் இந்த ஆட்சியை அதிக காலத்திற்குப் பாதுகாக்க முடியாது, சட்டத்தை அமல் படுத்த முடியாது என்ற நிலைமைகள் எல்லாம் வரலாம்.

இப்பொழுது நாமே பார்க்கிறோம். மாணவர்களுக்கும், பல தொழிலாளர்களுக்கும் நடந்த போராட்டத்தை. ஆட்சியினர் என்ன செய்தார்கள்? ஒரு கமிஷன் போட்டார்கள். மறைந்த நமது முதலமைச்சர் அவர்களும் ‘இது மின்னல் வேகத்தில் நடந்த சம்பவம்’ என்று குறிப்பிட்டார்கள். கமிஷனுடைய அறிக்கை ஜனவரியில் கிடைக்கும் என்று சொன்னார்கள். மாதக் கணக்காக விசாரணை நடந்துகொண்டு வந்தது. ஜனவரியும் போய் பிப்ரவரியும் வந்துவிட்டது. கமிஷனுடைய அறிக்கை வரவில்லை. பிரச்சினை தீரவில்லை. கமிஷனுடைய அறிக்கை என்ன ஆனது என்றே தெரியவில்லை. எவ்வளவோ கமிஷன்கள் போடப் பட்டிருக்கின்றன. அவைகளுடைய அறிக்கைகளையெல்லாம் எடுத்து சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? எப்போதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பது? எல்லாவற்றையும் ஒத்திப் போடும் படியான நிலையில் தான் சர்க்கார் இருக்கிறது.

அடுத்தபடியாக, தஞ்சாவூரில் உற்பத்தி செய்யும் நெல்லைக்கூட வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. யார் அறுவடை செய்வது என்ற நிலைமை. ஊதியம் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. எத்தனையோ பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் வந்து வேலை செய்வதற்குத் தடங்கல்கள் இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சினை எப்படி ஒரு கட்சிக்கு மட்டும் உரிமை ஆக முடியும்? விவசாயக் கூலிப் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாக இருக்கிறதே தவிர, மக்களுடைய உயிர் பிரச்சினையாக, தேசிய பிரச்சினையாக கருதப் படவில்லை. விவசாயிகளைக் கட்டுமானப்படுத்தி; இவ்வளவு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று அதிகமாகக் கேட்கிற நிலைமை தான் இருந்து வருகிறது. இந்த அடிப்படையின் காரணமாகவே கீழ்வெண்மணி சம்பவம் ஏற்பட்டது. சட்ட அமைதியைப் பாதுகாக்க 144 தடை உத்தரவு நாகப்பட்டினத்தில் போடப் பட்டது. போலீஸ் உத்தரவு போட்டிருந்ததே தவிர, அது பாது காக்கப்பட்டதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. எங்கும் 144 தடை உத்தரவு போடப்பட்ட நேரத்தில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு டிசம்பர் 25-ம் தேதி திருவாரூரில் 3 ஆயிரம் பேர் கொண்ட ஊர்வலம் ஒன்றை நடத்த அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. அந்த ஊர்வலத்தை காங்கிரஸ்காரர்கள் நடத்தி யிருந்தால் தடுத்து நிறுத்தியிருப்பார்கள். கூட்டணியைச்





சேர்ந்தவர்கள் என்பதால் அந்த ஊர்வலம் நடத்த அனுமதிக்கப் பட்டது. இந்த நிலையில் 144 தடை உத்தரவு எங்கே அமல்படுத்தப் பட்டது என்பதைக் கேட்க விரும்புகிறேன். திரு. இராமமூர்த்தி அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு எப்படி அனுமதியளித்தார்கள் என்பதுதான் விளங்கவில்லை. கூட்டணியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அனுமதி அளிக்கப்பட்டதா? அல்லது அவர்கள் தடை உத்தரவை மீறி அவர்கள் கூட்டத்தை நடத்தினார்களா?

**திரு. என். சங்கரய்யா :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஏதாவது சொல்ல வேண்டு மென்றால், குறிப்பிட்ட சம்பவம் நடந்ததாகச் சொல்லவேண்டும். அவருக்கே என்ன விஷயம் நடந்தது என்று தெரியாமல், இந்தப் பிரச்சினையை எழுப்புவது சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றுகூட இப்படித்தான் பேசினார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தடை உத்தரவு இருக்கும் சம்பவம் பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும். பத்திரிகைகளில் என்ன நடந்தது என்று எழுதியிருப்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறதே, அதை மீறி எப்படி கூட்டம் நடத்தினார்கள்? என்று சில பத்திரிகைகளிலே போடப் பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வெண்மணியில் ஏற்பட்ட கொதிப்பான சம்பவத்தையொட்டி மேலும் தகராறுகள் ஏற்படக் கூடும் என்று கருதி தடை உத்தரவு போடப்பட்டது. இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்கள், அமைதியான முறையில் தங்கள் வேதனையை வெளிப்படுத்த ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்த அனுமதி வேண்டுமென போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்துக்கொண்டதால், அவர்களுக்குத் தனி அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுதான் இப்போது இருக்கும் படியான பிரச்சினை. தடை உத்தரவு போடப்பட்டது பத்திரிகையில் வந்தது. அவர்கள் ஊர்வலம் நடத்துவதற்குப் பிரத்யேகமாகக் கொடுக்கப்பட்ட அனுமதிபற்றி எங்கே செய்தி வந்தது? அதற்குப் பதில் 144 தடை உத்தரவையே எடுத்திருக்கலாமே. கட்டுப்பாட்டை மீறமாட்டார்கள், வன் முறையில் இறங்கமாட்டார்கள் என்பதற்கு அவர்கள் புண்ணிய வான்கள், சத்தியமூர்த்திகள் . . . .

**திரு. என். சங்கரய்யா :** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நாங்கள் சத்தியமூர்த்திகள், புண்ணியவான்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். .

(திரு. என். எஸ். வி. சித்தன் : சத்தியமூர்த்திகள் இல்லையா ?) அப்படிச் சொல்வது நையாண்டி பண்ணுவதுபோல இருக்கிறது. அப்படியானால் நாங்களும் காங்கிரஸ்காரர்கள் என்ன சத்திய மூர்த்திகளா, புண்ணியவான்களா என்று திருப்பிக் கேட்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நன்றாகச் சொல்லட்டும், மக்கள் தெரிந்துகொள்வார்கள். சத்தியமூர்த்திகள், புண்ணியவான்கள் என்று போற்றினாலும் எதிர்க்கிறார்கள். வேறு எது சொன்னாலும் எதிர்க்கிறார்கள். நான் சொல்வது நையாண்டிபோல இருக்கிறது என்றால் அது உண்மையில்லையா ? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்களே—அதுபோல அவர்களுக்கு ஏன் குறுகுறுக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அரசு தடை உத்தரவு போடுவது தடை உத்தரவு போட்டிருக்கும்போது எதற்காக ஒரு கட்சிக்கு என்று சலுகை அளிக்கவேண்டும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதேபோன்ற நிலைமையில் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் ஊர்வலம் நடத்த அனுமதி கோரப்பட்டால் அனுமதி அளிக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கீழ்வெண்மணிச் சம்பவம் போல இன்னொன்று நடைபெறவும் வேண்டாம். அதுபோன்ற நிலைமையும் ஏற்படவேண்டாம். நாங்களும் உங்களிடம் தடை உத்தரவு போட்டிருக்கிற நேரத்தில் ஊர்வலம் நடத்த அனுமதிகோரும் நிலைமை வரவேண்டாம் என்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் சலுகையைப் பற்றிக் குறிப்பிட்டேனே தவிர சம்பவத்தைக் குறிப்பிடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அம்மாதிரி சம்பவம் ஏற்பட்டு, தடை உத்தரவு போடப்பட்டாலொழிய சலுகை தேடி வர சந்தர்ப்பம் இல்லை. ஒருகால எல்லாவற்றுக்குமே இனி அவர்களைத் தேடித்தான் வரவேண்டும் என்பது அவர் மனதில் இருக்கிறதோ என்னமோ தெரியாது.

தஞ்சை கிஸான்களுடைய பிரச்சினை சாதாரணப் பிரச்சினை அல்ல. கொஞ்சநாளாகவே இருக்கும்படியான பிரச்சினை. முதல் அமைச்சர் அவர்கள் காலையில் வெளியிட்ட கருத்துக்கு நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் தவறு செய்தாலும் சும்மா இருக்கக் கூடாது. கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும். வெறும் வாயளவோடு நிறுத்தி விடுவதில் பயன் இல்லை. யார் செய்தாலும் சரி, எந்தக் கட்சி தவறு இழைத்தாலும் சரி, அவர் அளித்த உறுதிப்படி தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவும் தீ வைப்பு இருக்கிறதே அதைவிட



பயங்கரமான செயல் வேறு இருக்க முடியாது. இதற்குக் காரணமான தீய சமூக விரோத சக்திகளைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும். சென்ற ஆண்டுகளில் சென்னையில் தீ வைப்புச் சம்பவம் நடைபெற்று, ஆயிரம், இரண்டாயிரம் குடிசைகள் நாசமாயின. அதை விசாரிக்க அமைத்த கிருஷ்ணசாமி அவர்களது ரிப்போர்ட்டை ஏன் சபையில் வைக்கவில்லை ? வழக்கு ஹைக்கோர்ட்டில் இருக்கிறது என்றால் அதை ஏன் துரிதப்படுத்தக்கூடாது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் அப்படி-அப்படியே விடப்படுவது எந்தவிதத்திலும் பலன் அளிக்காது. சட்டம் அமைதி பாதுகாக்கப்படும் என்று உதட்டளவில் சொல்கிறார்களே தவிர, அதில் கருத்துக் கொண்டு செய்யவில்லை என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

உபமானியக் கோரிக்கையில் போலீஸ் துறைக்கு 62 லட்சம் கோரியிருக்கிறார்கள். எதற்காக அவர்கள் வேலை செய்யாமல் இருப்பதற்காகவா ? சட்டம் அமைதியைப் பாதுகாக்காமல் இருப்பதற்காகவா எதற்காகக் கொடுப்பது மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. சமூக விரோத சக்தி என்ன என்ன நினைக்கிறதோ அதைப் பலாத்காரத்தின் மூலம் அடைய முயற்சி செய்கிறது. இந்த நிலைமை வளர்ந்துகொண்டே போவது ஒரு குழப்பத்தில் ஒரு புரட்சியில் கொண்டுபோய்த்தான் விடும். அப்படிப்பட்டவர்களுக்கே இந்த அரசு பாதுகாப்பாக இருந்துகொண்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

இப்போது கல்வியை எடுத்துக்கொள்ளுங்கள். நாட்டிலே படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவில் இருந்து வருகிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. ஆனால் இன்றைக்கு ஒரு ஆசிரியருக்கு இருந்த மாணவர் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறார்கள். இதனால் கல்வியின் தரம் பெரும் அளவு பாதிக்கப்படுவதோடு கூட ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் மேலும் அதிகரிக்கச் செய்யும்.

அடுத்து, உபமானியக் கோரிக்கையில் உள்ள ஒன்றிரண்டு விஷயங்களை நான் ஆதரிக்கவும் செய்கிறேன். பூராவும் குற்றத்தையே சொல்லவில்லை. வேளாண்மைத்துறையில் பூச்சி மருந்து தெளிக்கும்படியான திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். இதைக் கண்டிப்பாக விஸ்தரித்தாகவேண்டும். கடந்த 2 வருட காலமாக பூச்சி மருந்து தெளிப்பதினால் நல்ல பலன் இருந்து கொண்டு வருகிறது. இதற்காக 42 லட்சம் என்று போடப் பட்டிருக்கிறது. இன்னும் அதிக அளவில் நிதி ஒதுக்கி இந்தக் காரியத்தைச் சிறப்பாகச் செய்வது உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு கூட விவசாயிகளுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 பிப்ரவரி 26

உப மானியக் கோரிக்கையில் மின்சார வாரியத்திற்கு அளிக்கப்படுகிற 12 கோடி ரூபாய் கடன் பற்றிச் சொன்னார்கள். இதுவும் மிகமிக அவசியமானது. இதுவும் போதாது. இன்னும் அதிகமாகக் கொடுத்து மின்சார வசதியைப் பெருக்கும்படியான நிலைமையைச் செய்தால்தான் மிகவும் உபயோகமாக இருக்கும். பம்புசெட்டுக் கொடுப்பதில் தயவுசெய்து அரசியலைப் புகுத்திவிட வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த எந்தப் பகுதியில் யார் யாருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக வட்டச் செயலாளர் சொன்னார், மாவட்டச் செயலாளர் சொன்னார், இவர் சொன்னால்தான் நடக்கும், அவர் சொன்னால் நடக்காது என்பது போன்ற அரசியல் இத்துறையில் புகுத்தப்படக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது கட்சி செல்வாக்கை வளர்க்கப் பயன்படலாம், உணவு உற்பத்தியைப் பெருக்கப் பயன்படாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது எந்த எந்தக் கிராமத்தில் கேட்டார்கள், நியாயமான கோரிக்கை எது புறக்கணிக்கப்பட்டு, வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்பவர்கள் சொன்னார்கள் என்பதற்காக யார், யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டும். ஒருகால் காங்கிரஸ் ஆட்சியில் அப்படி நடந்திருக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுதான் இருக்கக்கூடிய பிரச்சினை. காங்கிரஸ் ஆட்சியில் ஒன்று நடந்தது என்றால், நாங்கள் பத்து செய்கிறோம் என்பதாகச் செய்வதில் பயன் இல்லை. காங்கிரஸ் ஆட்சியில் நடந்தது என்று சொல்லித் தப்பித்துக் கொள்வதில் பயன் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உணவு-வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் எந்த இடத்தில், யார் யாருக்கு வட்ட, மாவட்டச் செயலாளர் சொன்னார் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரத்தைத் தான் கேட்டார்கள். அதற்கான பதிலைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** அதைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னிடம் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. புள்ளி விவரங்களோடு தருகிறேன். என்னுடைய பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார் என்பதற்காக என்ன என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பலமான குற்றச்சாட்டைச் சொல்லும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு அதற்கான ஆதாரங்களைத் தரவேண்டும். ஆதாரங்களைத் தான் நான் கேட்கிறேன்.



1969 பிப்ரவரி 26]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆதாரங்களைத்தான் நான் கொடுக்கிறேன் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவரது மாவட்டத்தில் மின் இணைப்புக் கொடுப்பது பற்றி ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் வந்திருந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அதில் எதிர்க்கட்சித் தலைவர் கூறிய ஆலோசனைகளும்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அரசு பாரபட்சம் காட்டாமல் நடக்கிறது என்பதற்கு இன்னொரு ஆதாரத்தையும் நான் கொடுக்க விரும்புகிறேன். வாணபுத்தூர் என்ற இடத்தில் ஒரு வாய்க்கால் எடுப்பது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களே எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நூற்றுக்கணக்கான விவசாயிகள் வந்து—எதிர்க்கட்சித் தலைவர் போனவுடன்—இது கூடாது என்று தெரிவித்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் கட்டாயம் வெட்டப்படவேண்டும் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது யோசனையை ஏற்றுக்கொண்டு அந்த வாய்க்கால் வெட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த விஷயத்தைப் பற்றிச் பி.ப. 12-30
சொன்னதற்காக நன்றி. ஏற்கனவே உத்தரவு போடப்பட்டு வெட்டின வாய்க்காலை நிறுத்திவைத்த பெருமை அவர்களுக்கு உண்டு. முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்க்கால் வேண்டாமென்று சொல்கிற சில பிரகஸ்பதிகள் இருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமான பிரச்சனை. எனக்காகச் சலுகை காட்டியதாகச் சொல்கிறார்கள். இதுமாதிரிதான் எனக்கு 250 ஏக்கரா இருக்கிறது என்று தவறான தகவல் எல்லாம் சொன்னார்கள். அந்த வாய்க்காலினால் 3 இலட்சம் ரூபாய் செலவில் 600 ஏக்கராவுக்குப் பாசன வசதி ஏற்படும்படியான நிலைமை இருக்கிறது. அதை இந்த அரசாங்கம்தான் நிறுத்தி வைத்திருந்தார்கள். இதுமாதிரி அரசியல் தலையீடுதான் கூடாது என்று நான் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். 1½ வருஷம் கழித்தாவது அந்தத் தடையை நீக்கி இப்பொழுது உத்தரவு போட்டிருக்கிறீர்கள். ஏற்கனவே, போடப்பட்ட உத்தரவை நிறுத்தி வைத்திருந்ததால் அந்தப் பாவத்தைச் சம்பாதித்திருக்கிறீர்கள், இப்பொழுது அந்த உத்தரவை மறுபடியும் நீக்கி உத்தரவு போட்டு இருப்பதால் புண்ணியத்தைச் சம்பாதித்திருக்கிறீர்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இது எதிர்க் கட்சித் தலைவருக்காகவா செய்தார்கள்? இது அவர்களுடைய கடமை. சர்க்கார் என்றால் எதிர்கட்சித் தலைவர் சொன்னால்தான் செய்ய வேண்டுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நானும் அதைச் சலுகை என்று சொல்லவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார் என்பதற்காகச் செய்யவில்லை. அப்படி அவர்கள் நினைத்திருந்தால் அதிலிருந்து காப்பாற்றவேண்டும். மூன்று இலட்சம் ரூபாய் செலவில் அந்த வாய்க்காலை வெட்டத் தீர்மானிக்கும்பொழுது, அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகளிடமிருந்து வேண்டாமென்று மனு வந்ததால், அதற்கு ஸ்டே கொடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது. பிறகு பொறியாளரை வைத்து அதைப் பற்றி ஆராய்ந்து, அது வெட்டப்படவேண்டுமென்ற அளவில் வெட்டப்படும் என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. எனவே இதிலே பாரபட்ச முறையிலே இந்த அரசு நடந்துகொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. சரியான முதலமைச்சர் என்பதை அவர்கள் இப்பொழுது நிரூபித்து விட்டார்கள். இதற்கு முன்பு இந்தத் திட்டத்திற்கு அவர்கள் எதிராக இருந்தார்கள் . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிராக இருந்தவர்களில் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இருந்தார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வேண்டாமென்று சொன்னவர்கள் இப்பொழுது உத்திரவு போட்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள். ஒரு மணிக்கு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடத்தியாக வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது ரொம்பவும் முக்கியமான விஷயம். நான் பதில் சொல்லவில்லையென்றால் எதிர்க்கட்சித்தலைவர் தப்பித்துக் கொண்டுவிட்டார் என்று சொல்வார்கள். 6 மணிக்குப் பத்திரிகையிலே வரும். எதிர்க்கட்சித் தலைவர் திருதிரு என்று விழித்தார் என்று எல்லாம் சொல்வார்கள். ஆகவே நான் பதில் சொல்லவேண்டும். என்னுடைய அரசியல் சரித்திரத்திலேயே என்னுடைய சர்க்கார் இருந்தபோது எனக்காக நான் அப்படிச் செய்யவில்லை. என்னுடைய மகன் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன், முதல் வகுப்பில்தான் தேறியவன், இருந்தாலும் மருத்துவ வகுப்பிலே இடம் கிடைக்கவில்லை அதை நான் ஏற்றுக் கொண்டேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** படித்துக்கொண்டிருக் கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நல்ல மார்க் வாங்கியிருக்கலாம். படித்துக் கொண்டிருக்கலாம். அவர்கள் கட்சிக்காரர்கள் கருத்திருமனைப் பற்றி என்ன என்ன எல்லாம் சொல்லியிருக்





கிறார்கள். எனக்காகவா இதிலே சலுகை கொடுத்தார்கள்? இதுபற்றி விண்ணப்பங்கள் வந்தன. அவற்றையெல்லாம் தயவு செய்து அவர்கள் எடுத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இணைப்புக்கள் கொடுக்கட்டும், ஆனால் அரசியல் காரணத்தை வைத்து இணைப்பு கொடுக்கவேண்டாம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நல்ல முறையிலே நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை இதுபற்றி நான் இதற்கு முன்பு முதலமைச்சராக இருந்தவர்களிடத்திலே நேராகச் சொல்லியிருக்கிறேன். வாணியபுத்தூர் வாய்க்கால் விஸ்தரிப்புக்கு மறைந்த முதலமைச்சருக்கும் இப்பொழுது இருக்கிற முதலமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நல்ல காரியத்தை நான் பாராட்டவேண்டும், ஆகவே நல்ல காரியங்களைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். வறுமை இன்னும் போகவில்லை, திட்டங்கள் இருந்தாலுங்கூட செயலற்று இருக்கின்றன. இந்த உப மானியக் கோரிக்கையாக இருந்தாலுங்கூட நாட்டுப் பிரச்சனைகள் தீர்க்கப்படாததால் இதை அவ்வளவாக ஆதரிக்க முடியாத நிலைமையில் இருக்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரப்பா எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டும். எனவே சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

* **திரு. என். சங்கரய்யா :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுடைய கட்சியைப்பற்றி அடிக்கடி தாக்கிப் பேசியிருப்பது மக்களிடத்திலே தவறான நிலைமையை ஏற்படுத்திவிடும் என்பதால் இரண்டு நிமிடத்திற்குள் விளக்கம் சொல்லிவிடுகிறேன். விவசாயி களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத்தான் நாங்கள் பாடு படுகிறோமே தவிர கட்சியை வளர்ப்பதற்காக ஆதரிக்கிறோம் என்று சொல்வதானது அவர்களுடைய மட்டத்திலே இருப்பவர் கள் சொல்வதற்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். கூட்டணியில் இருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். கூட்ட ணியில் இருப்பதால் அதைப் பயன்படுத்திக்கொண்டு சட்டம், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கிறார்கள் என்று சொன்னார்கள். கூட்டணியைப் பொறுத்த வரையில் அது தொகுதி உடன்பாடு தான். இன்றைக்கு நாங்கள் அரசாங்கத்தில் இல்லை. எதிர்க்கட்சி தலைவரைப் போன்றவர்கள்தான் நிலப்பிரபுக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக அவற்றை வற்புறுத்துவதன் காரணமாக அரசாங்கம் அதிலே அந்த அளவிலே தயக்கம் காட்டுகிறதே தவிர, அரசாங்கம் விவசாயிகளைப் பொறுத்தவரையில் சலுகைகள் காட்டவில்லையே என்பதுதான் எங்களுக்கு வருத்தம்.

[1969 பிப்ரவரி 26

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : தங்களுடைய கட்சியைப்பற்றிச் சொன்னதைப்பற்றிச் சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சியைப் பற்றிச் சொல்ல எங்களுக்கு உரிமை உண்டு. சர்க்கார் ஏமாந்து போய் அவர்களுடைய வலையிலே சிக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணிக்குள் வாக்கெடுப்பு எடுத்தாகவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த உபமானியக் கோரிக்கையின் வளையத்திலிருந்து வெளியே போய் மிக முக்கியமான பிரச்சினைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மானியத்திற்குள் அவை அடங்கவில்லையென்றாலும் நாட்டின் பிரச்சினைகளுள் அடங்கும் என்ற முறையிலே அதிகமான நேரம் ஆலோசனைகளுக்காக அதிக நேரம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்ட இரண்டொரு பிரச்சினைகளைப்பற்றி மட்டும் சொல்லி பதிலிறுக்கும் கடமையை நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களுமே பொதுவாக பல யோசனைகளை எடுத்துச் சொல்லி இருந்தாலும், உப மானியக் கோரிக்கையின் பேரிலும் நல்ல பல யோசனைகளைத் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை அரசினர் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் கொஞ்சம் விரிவாக மற்ற பிரச்சனைகளை விட இந்த உப மானியக் கோரிக்கைக்காக நேரம் எடுத்திருக்கலாம் அவர்களுடைய நல்ல பாராட்டைப் பெறுகின்ற வாய்ப்பு இந்த அரசுக்கு இருப்பதாகவே கருதுகிறேன். உப மானியக் கோரிக்கை என்றால் நல்ல காரியங்களுக்காகச் செலவிடவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். பொதுவாக உப மானியக் கோரிக்கை அரசியல் சாஸனப்படியே நடப்பு ஆண்டிலே அதிகமாகச் செலவாகிவிட்டாலும், புதிய பணிகளுக்காகச் செலவாகிறது என்றாலும், அதற்காகத் தனியாக கன்டின்ஜன்ஸி பண்ட் என்று 5 கோடி ரூபாய் ஒதுக்கி அதிலிருந்து செய்கிறார்கள். மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் கட்சி அரசாங்கம் என்ற வேற்று நிலை இல்லாமல், அப்படிச் செய்யக்கூடிய நிலைமை ஜனநாயகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஒரு பெரிய உரிமை.

இன்றைக்கு வந்திருக்கக்கூடிய 25 கோடி ரூபாய் துணை மானிய கோரிக்கை என்ன காரியங்களுக்காகக் கோரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி உறுப்பினர் நண்பர் திரு. தர்மலிங்கம் அவர்கள் வெகு அழகாக எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலிருக்கும் முறையில் கூறினார்கள். இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையில் 19 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனச் செலவுகளுக்காக செலவு செய்திருப்பதைப் பாராட்டினார்கள். அந்தப் பாராட்டை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருந்தால் இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முதலிலே பாராட்டாவிட்டாலும் கடைசியிலே அந்தக் காரியங்களைப் பற்றிப் பாராட்டிக் கூறினார்கள்.



1969 பிப்ரவரி 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

தமிழக அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிற விகிதாசாரப்படி அலவன்ஸ் கொடுப்பதற்காகச் செலவாகும் அதிகப்படியான தொகை இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே அடங்கியிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் ஜானகியம்மையார் அவர்கள் சுட்டிக்காட்டி வரவேற்றிருக்கிறார்கள். மணலையும், சாம்பலையும், சுண்ணாம்பையும் உபயோகப்படுத்தி மலிவு விலையில் வீடு கட்டுவதற்காக உபயோகப்படும் கட்டடப் பொருளைத் தயார் செய்ய ஒரு கோடி ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. சேலம் இரும்பாலையை நிறுவ, ஆராய்ச்சிக்காக கனிப்பொருளை வெட்டி (கில்லாபேஷன் & கான்சன்ட்ரேஷன்) இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு முன்னோடியாகச் செய்ய வேண்டிய காரியங்களுக்காகத் தொகை கோரப் பட்டிருப்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஐந்தாவது நிதிக் கமிஷன் தன்னுடைய அறிக்கையை டெல்லியில் சமர்ப்பிக்கின்ற நேரத்தில், இந்தச் செலவினங்களுக்கெல்லாம் அதிகமான தொகை தேவை என்ற வகையில் வலியுறுத்தி இந்த அரசாங்கத்திற்கு அந்த வகையில் பாராட்டைத் தெரிவிப்பார்களானால், இந்தத் துணை மானியக் கோரிக்கையின்போது சொல்லத் தவறி விட்டாலும், வருகின்ற நிதிநிலை அறிக்கையின்போதாவது டெல்லி மாநகரத்திற்கு எட்டும்படி அவர்கள் வலியுறுத்திப் பேசுவார்களானால் அதனால் நாம் பயன்பெற முடியும். அந்த வகையில் ஒருமித்த ஆதரவை இந்த மன்றம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு பல்வேறு துறைகளில் செய்த சாதனைகளைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். எங்கள் கட்சி உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் விவசாயத் துறையில், பம்ப் செட்கள் வழங்குவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றி வெகு அழகாகக் குறிப்பிட்டார்கள். பதினெட்டு ஆண்டு காலம் இப்போதுள்ள எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக இருந்த காலத்தில் 3 லட்சம் கிணறுகளுக்கு பம்ப் செட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியில், கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் ஒரு லட்சம் பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டிருக்கின்றன என்ற குறியீட்டு எண் மிகச் சாதாரணமானதல்ல, ஒதுக்கிவிடக் கூடியதல்ல, புறக்கணிக்கப்படக் கூடியதல்ல என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய விவாதத்தில் பிரதானமாகப் பேசப்பட்ட பிரச்சினைகள் மூன்று பிரச்சினைகள் ஆகும். ஒன்று, கோவை பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை. இரண்டாவது, வரட்சி நிலைமை ஏற்பட்டு பல்வேறு மாவட்டங்களில் உள்ள நிலை. மூன்றாவது, உணவுப் பொருளை விநியோகிக்கும் முறையைப் பற்றிய பிரச்சினை. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நிலைமையைப் பற்றியும், அங்கு செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும் திரு. சுப்பராஜா

அவர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டார்கள். அதையே சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பற்றி பல்லடம் உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்களும் பேரூர் உறுப்பினர் திரு. மருதாசலம் அவர்களும், மற்றவர்களும் பேசினார்கள். கோவை பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்னையைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோவை நகருக்குச் சென்றிருந்தபோது நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது முத்தரப்பு மாநாடு கூட்டுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை எவ்வளவு முக்கியமான பிரச்சினை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறிய அவர்களுடைய உள்ளுணர்வை நான் பெரிதும் மதிக்கின்றேன். இந்தப் பிரச்சினையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கும் முயற்சிக்கு, பரிகாரம் தேடும் முயற்சிக்கு, அது வெற்றிகரமாவதற்கு அவரது கரங்களை வலுப்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்வேன். நமக்குள்ளே போட்டாப் போட்டிகளும், இந்தக் கட்சியா, அந்தக் கட்சியா என்ற நிலைமைகளும் ஏற்படக்கூடாது. இந்தப் பிரச்சினை மிகப் பெரும் பிரச்னை. இதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்றால், தொழிலாளர் தலைவர்களானாலும் சரி, மில் முதலாளிமார்களானாலும் சரி, பொதுவாக இருக்கின்ற மக்களானாலும் சரி, அரசியல் கட்சிகளானாலும் சரி, மாநில அரசாங்கமானாலும் சரி, மத்திய அரசாங்கமானாலும் சரி, பிரச்சினையின் அடிப்படை நோயைத் தெரிந்து கொண்டால்தான் பரிகாரம் தேட முடியும். நம்மையும் ஏமாற்றிக்கொண்டு, ஊரையும் ஏமாற்றி, உலகத்தையும் ஏமாற்றும்படியான நிலைக்கு யாரும் ஆளாக்கிவிடக்கூடாது என்பதை முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு, பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது இந்தப் பஞ்சாலைத் தொழிலாகும். நூற்றைம்பது நூற்பு ஆலைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இந்த 150-ல் கோயம்புத்தூரில் 10 மைல் சுற்றளவில் 70-க்கு மேற்பட்ட ஆலைகள் இருக்கின்றன. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதோடு தமிழ்நாட்டில் இன்று பிரதானமாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலுக்கு ஒரு வரலாறே இருக்கிறது. இந்தத் தமிழ் நாட்டில்தான் முதல் முதலில் நூல் மில்கள் துவங்கின. வெறும் ஸ்பின்னிங் மில்களாகத்தான் துவங்கின. அப்போது நூற்பு ஆலைகள் கேரளத்தில் இல்லை, ஆந்திரத்தில் இல்லை, மைசூரில் இல்லை, இந்த மாநிலத்தில் இன்று நூற்பாலைகள் எண்ணிக்கை அதிகமானதோடு அண்டை மாநிலங்களிலும் நூற்பாலைகள் துவக்கப்பட்டுவிட்டன. இந்த நூல்கள் பம்பாய்க்கும் அகமதாபாத்துக்கும் சென்று துணியாக வரவேண்டிய நிலை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை—இந்த நூல்களை கைத்தறிக் கிடங்குக்கு அனுப்புவதா அல்லது பம்பாய்க்காரருடைய மில்லுக்கு அனுப்புவதா



என்ற பிரச்சினை ஒரு பெரிய அடிப்படை அம்சமாகும். அதோடு இன்றைக்கு அதிக விலை கொடுத்து இயந்திரங்களை வாங்க வேண்டியிருக்கிறது, மூலப்பொருளான பருத்தியின் விலை ஏறியிருக்கிறது. இந்த நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில் கூலியும் அதிகமாகி இருக்கிறது. அதோடு ரயான், நைலான் போன்றவை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் ஏற்பட்டுவிட்ட நிலை வேறு. இவைகளுக்கெல்லாம் மேலாக மத்திய அரசின் சுங்க வரிக் கொள்கை. நூலுக்கும், துணிக்கும், போடப்பட்டுள்ள எக்ஸைஸ் வரியின் காரணமாக இது பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை இந்த மாநிலத்தின் உரிமை பற்றிய பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை. ஏதோ 10 முதலாளிகள் சீமான்களாக வேண்டுமென்பதற்கான பிரச்சினை அல்ல. இந்த மாநிலத்தின் பொருளாதார அபிவிருத்தி இந்தப் பிரச்சினையிலே அடங்கியிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே எடுக்கப் போகின்ற நடவடிக்கைகளுக்கு எல்லா அரசியல் கட்சியினரும் ஒருமுகமான ஆதரவைத் தெரிவித்தால்தான் இதிலே ஒரு நிரந்தரமான பரிகாரத்தைத் தேடமுடியும்.

இந்த அரசு பல்வேறு நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கு இணங்க, மூடப்பட்ட மில்களைத் திறப்பதற்காக அவர்கள் கடன் பெற இரண்டு கோடி ரூபாய்க்கு நம் அரசால் உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட உத்தரவாதம் கொடுக்கப்படாமல் இருந்தால் இன்னும் எவ்வளவோ மில்கள் மூடப்பட்டிருக்கும் அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். மத்திய அரசு துணி, நூல், காட்டன் யார்ன், காட்டன் க்ளாத் இவற்றின்மீதான எக்சைஸ் ட்யூட்டியை குறைக்க முன்வருமானால் நம்மைப் பொறுத்தவரையில் விற்பனை வரி, எலக்ட்ரிஸிட்டி சர்சார்ஜ் இவற்றில் நாமும் ஒரு சலுகை காட்ட முன்வருவோர் என்று அண்ணா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள்.

நம் மாநிலத்திலிருந்து எக்ஸ்போர்ட் செய்யப்படுகிற நூலுக்கான விற்பனை வரி ஏற்கனவே ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தேங்கிக் கிடக்கிற நூல்களை எடுத்துக் கொள்ள ஹான்ட்லூம் சொஸைட்டிகளுக்காக 50 லட்சம் ரூபாய் கடன் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் மூடிய மில்களைத் திறப்பதற்காக, புது மில்களை நிர்வாகம் செய்ய ஒரு ஸ்டேட் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி நிர்வாகம் செய்வதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம்தான் சூத்திரக் கயிறு இருக்கிறது. எக்ஸைஸ் ட்யூட்டியை முழுமையாக எடுக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும் இது. ஆகவே இந்த எக்ஸைஸ் ட்யூட்டியை எடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது எல்லோரும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 பிப்ரவரி 26

தொழிலாளர்கள் முதலாளிகளைப் பார்ப்பது, முதலாளிகள் அரசைப் பார்ப்பது, அரசு இன்னொரு தலைவரைப் பார்ப்பது என்ற நிலை இருக்கக்கூடாது. இந்த மாநிலத்தின் குறைகள் போக்கப்பட வேண்டும். எக்ஸைஸ் ட்யூட்டி முழுமையாக எடுக்கப்பட வேண்டும், அல்லது குறைக்கப்படவேண்டும். அப்போதுதான் இன்னும் பல மில்கள் மூடப்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். இல்லாவிடில் மேலும் பல மில்கள் மூடப்படக்கூடிய ஒரு அபாய கரமான நிலை இருக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படக்கூடிய அபாயகரமான நிலையும் இருக்கிறது. இன்று டெல்லியில் உள்ள அரசு தன் பொறுப்பை நிறைவேற்றுகிறதா இல்லையா என்று சொல்லவேண்டும். அவர்களிடம்தான் அதிகாரங் கள் இருக்கின்றன. இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அண்ட் ரெகு லேஷன் ஆக்ட் என்ற சூத்திரக் கயிறு மத்திய அரசிடம்தான் இருக் கிறது. அவர்களால்தான் செய்ய முடியுமே தவிர நாம் தாக்கீதுகள் அனுப்பும் நிலையில்தான் இருக்கிறோம். ஆகவே அந்த அதிகாரங் கள் இங்கு மாற்றப்பட வேண்டும். ஒன்று மத்திய அரசு இந்தக் குறைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றிய தாகாது. ஆகவே இந்த இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் அன்ட் ரெகுலேஷன் ஆக்ட் விதிமுறைகளை அமல் செய்வதற்கு உள்ள அதிகாரங்களை தமிழக அரசு பெற ஒரே குரலில் நாம் போராட கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, எங்கு பார்த்தாலும் வறட்சி இருக்கிறது. வறட்சி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல் கிறார்கள். வருவாய்துறை அமைச்சர் என்ற முறையில் வறட்சி நிலை பற்றி நான் கவனித்திருக்கிறேன். இதற்காக நம் முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில் பல மாவட்டங்களில் உள்ள வறட்சி நிலையைப் போக்குவதற்காக 1,50,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் பற்றிப் பேசினார்கள். செங்கல்பட்டு மாவட்டம் பற்றிப் பேசினார்கள். வட ஆர்க்காடு மாவட்டம் பற்றிப் பேசினார்கள். கோவை மாவட்டம் பற்றிப் பேசினார்கள். பல்லடம் போன்ற பகுதிகள் பற்றியெல்லாம் பேசி னார்கள். என்ன சொன்னார்கள் அவர்கள்? வரிகளையெல்லாம் ரத்து செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை என்று சிலர் சொன்னார்கள். அதே வேளையில் 500 கிராம்தான், 700 கிராம்தான் அரிசி போடுகிறார்கள். 1,500 கிராம் போடுங்கள் என்றும் சொன்னார்கள், அதையும் ஒத்துக் கொள்கிறேன். அதுவும் அரசின் பொறுப்புதான். ஆனால் நாம் பிரத்தியட்ச நிலைமையைப் பார்க்க வேண்டும். வரிகள் கொடுக்க வேண்டுமென்றால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். பணம் ஏன் இல்லை? உணவு உற்பத்தி சரியாக இல்லை, வயல்கள் வறண்டு விட்டன, வாய்க்கால்கள் வெடித்துக் கிடக்கின்றன. குளங்கள் எல்லாம் கட்டாந்தரைகளாக, விளையாட்டு மைதானங்களாக மாறி யிருக்கின்றன. ஒருபுறம் வரி கொடுக்க முடியவில்லை என்று சொல்



1969 பிப்ரவரி 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

கிறார்கள். இன்னொருபுறம் எங்கே கூடுதல் உணவு என்று கேட்கி றார்கள். இவை இரண்டும் தவறானவை அல்ல. இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையில்தான் இன்று தமிழக அரசு இருக்கிறது. இயற்கையின் உற்பாதம் ஒரு பக்கத்தில் இருக்கிறது. உணவு உற்பத்தி விஷயத்தில் நாம் எவ்வளவோ முயற்சிகளை மேற் கொண்டும்கூட இன்றைய நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். செங்கற்பட்டு மாவட்டம் மாகதக் கம்பளம்போல் இருந்தது. வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து லாரி லாரியாக லட்சக்கணக்கான டன் அரிசியும், நெல்லும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அனுப்பினோம். அந்த நிலை மாறி இன்று வேலூ ருக்கும் மதுராந்தகத்திற்கும் தஞ்சையிலிருந்தும் சிதம்பரத்தி லிருந்தும் லாரி லாரியாக நெல்லையும் அரிசியையும் எடுத்துச் செல்லவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் அதிகமாக உணவு கொடுங்கள் என்று சொல்கிறார்கள், இன்னொரு பக்கத்தில் கொள்முதல் செய்யவேண்டாம் என்று சொல்கிறார்கள். கோவையிலுள்ள குடி தண்ணீர் பிரச்சினைபற்றி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை அரசாங்கத்தின் தவறு என்று சொல்ல முடியாது. ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். கடந்த இருபது ஆண்டு களாக மத்திய அரசில் ஒரே கட்சிதான் ஆட்சி செய்து வருகிறது. மாநிலங்களிலும் சென்ற காலம் வரை ஒரே கட்சிதான் ஆட்சி செய்து வந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 2,000 கோடியும், இரண்டாவது திட்டத்திற்காக 4,000 கோடியும், மூன்றாவது திட்டத்திற்காக 10,000 கோடியும் செலவு செய்யப் பட்டது. அப்படி செலவிட்டும் கூட அடிப்படைத் தேவைகளான உணவு இல்லை, வீடு இல்லை, குடிக்கத் தண்ணீர்கூட இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. இந்த அபாயகரமான நிலையில்தான் எங்களிடம் ஆட்சிப் பொறுப்பை விட்டு விட்டுச் சென்றிருக் கிறார்கள். குடி தண்ணீர்ப் பிரச்சினையை சமாளிக்க வேண்டிய ஒரு பெரிய பொறுப்பில் இந்த அரசாங்கம் இன்று இருக்கிறது. அதற்கு எல்லாத் தரப்பிலிருந்தும் ஒத்துழைப்புத் தர வேண்டு மென்று கேட்டுக்கொண்டு நீங்கள் எல்லாம் காட்டுகிற பேராதர வுக்கு நிதி அமைச்சர் என்ற முறையில் என் நன்றியைத் தெரி வித்து, இந்த உப மானியக் கோரிக்கைகளை இந்த மன்றம் ஏற்க வேண்டும் என்று கோரி என் வார்த்தைகளை முடித்துக் கொள் கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் நன்றி தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் பின்னால் சொன்னவை மிக மிகப் போற்றுதலாக இருக்கிறது, அதற்கு நன்றி. காங்கிரஸ்காரர்கள் மூன்று லட்சம் பம்ப் செட்ஸ் கொடுத்தார்கள். ஆனால் நாங்கள் இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் கொடுத்தோம் என்று சொன்னார்கள். முன்னாலேயே திட்டங்கள் போட்டு பவர் ஜெனரேட் செய்து கொடுத்தார்கள் அல்லவா, அதற்காகவாவது நன்றி செலுத்தலாம் அல்லவா, செய்து

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 பிப்ரவரி 26

பி.ப. 1 0 விட்டுப் போனார்கள், பாவம் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? நன்றி என்பது ஒரு பக்கத்தில் இருந்து மட்டும் வருவதல்ல, அந்தப் பக்கத்திலிருந்தும் வர வேண்டும் என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

7. 1968-69-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, வாக்கெடுப்பு.

A, வருவாய்க் கணக்கில் செலவு

கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,09,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரி களும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,24,800 -க்கு மேற்படாத அரசுக்கு வழங்க வேண்டும்'.

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 பிப்ரவரி 26]

கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,78,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,76,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1969 பிப்ரவரி 26

**கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,51,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,63,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,09,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 பிப்ரவரி 26]

**கோரிக்கை எண் 12—காவல் துறை.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 62,95,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 13—கல்வி.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,02,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 14—மருத்துவம்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,63,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,13,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1969 பிப்ரவரி 26

கோரிக்கை எண் 16—வேளாண்மை

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 45,53,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 17—மீனளம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,18,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 61,05,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 பிப்ரவரி 26]

கோரிக்கை எண் 20—தொழில்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,60,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 21—சின்கோனா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 21—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,74,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது

கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 26—பாசனம்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 96,80,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,83,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளர்களும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளர்களும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 59,65,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 71,55,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 33—பல்வகை

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,37,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,19,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1969 பிப்ரவரி 26

கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 71,80,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

B. வருவாய்க் கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவு

கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,40,01,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,00,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 பிப்ரவரி 26]

கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 48,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 பிப்ரவரி 26

கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,80,21,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

8. 1964-65-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1964-65-ம் ஆண்டில் அதிகப்படி செலவினத்துக்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 60,117-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,23,939-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 பிப்ரவரி 26]

கோரிக்கை எண் 17—மீனளம்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,32,137-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,85,569-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 26—பாசனம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,73,446-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,38,458-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,19,292-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை உதவித் தொகைகளும் ஒதுக்கீடுகளும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை உதவித் தொகைகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,39,020-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 39—அ. பயன்துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 39—அ. பயன்துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,975-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,33,516க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,92,310க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1969ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

9. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**(ஈ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**9. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி**

**(ஆ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை அறிமுகப்படுத்து கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடை கின்றன. மீண்டும் வெள்ளிக்கிழமை, 28-ம் தேதி காலை 9 மணிக்கு பேரவை கூடும். வணக்கம்.

ம. 1-22 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

**10. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**'ஏதுமில்லை'**





**இணைப்பு 1**

**[617-ம் பக்கத்திலுள்ள 81-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]**

உயர்நிலைப் பள்ளிகள், உயர்தொடக்கப்பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கத்தினால் அளிக்கப்படும் மானியத் தொகை பற்றிய விவரங்கள் :—

**I உயர்நிலைப் பள்ளிகள்—**

**(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகள்—**

1 உதவி மானிய விதிக்கோவையினால் முறைப்படுத்தப் படும் கட்டிடங்களுக்காக— கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு அல்லது அதைக் கட்டுவதற்கு ஆன மொத்தச் செலவு, அல்லது அவ்விடத்துப் பொதுப் பணித் துறை அதிகாரியினால் செய்யப் பட்ட இறுதி மதிப்பீடு, இவற்றில் எது குறைந்ததாக உள்ளதோ அதில் 50 சத விகிதம். இத்தொகை 35,000 ரூபாய் என்ற பேரளவுக்கு உட்பட்டதாகும்.

2 இரு கூறுக்கப்பட்ட பாடமுறையைக் கொண்டு வருவதன் தொடர்பாகக் கட்டப்படும் கட்டிடங்கள். கட்டுவதற்கான செலவில் ¾ பகுதி, இது கீழ்க்கண்ட பேரளவுக்கு உட்பட்டதாகும் :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| பொறியியல் .. | 18,750 | 00 |
| எழுத்தர் படிப்பு .. | 11,250 | 00 |
| வேளாண்மை .. | 9,000 | 00 |
| மனையியல் .. | 18,750 | 00 |
| நெசவுத் தொழில் நுட்பவியல். | 16,500 | 00 |
| இசை .. .. | 12,000 | 00 |
| ஓவியம் வரைதலும் வண்ணம் தீட்டுதலும். | 12,000 | 00 |

3 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்களுக்காக. ரூ. 30,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு, கட்டிடச் செலவில் ¾ பகுதி (ரூ. 25,000 கட்டிடத்திற்காகவும், ரூ. 5,000 கருவிகளுக்காகவும்.)

**(ஆ) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்—**

1 உதவி மானிய விதிக்கோவையின் கீழ் முறைப்படுத்தப் படும் கட்டிடங்கள். கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு அல்லது கட்டுவதற்கு ஆன மொத்தச் செலவு அல்லது கட்டிடத்தின் இறுதி மதிப்பீடு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அதில் 50 சதவிகிதம்.

இது ரூ. 35,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

[1969 பிப்ரவரி 26

### I. உயர்நிலைப்பள்ளிகள்—தொடர்சசி.

#### (ஆ) நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள்—தொடர்ச்சி.

2 இரு கூருக்கப்பட்ட பாட முறை. — கட்டிடத்தைக் கட்டுவதற்கான செலவில் ¾ பகுதி பேரளவுத் தொகை கீழே கொடுக்கப்பட்டது :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| பொறியியல் .. | 18,750 | 00 |
| எழுத்தர் படிப்பு .. | 11,200 | 00 |
| வேளாண்மை .. | 9,000 | 00 |
| மனையியல் .. | 18,750 | 00 |

3 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்கள். — ரூ. 30,000 என்ற பேரளவுக்கு உட்பட்டுக் கட்டிடச் செலவில் ¾ பகுதி (ரூ. 25,000 கட்டிடத்திற்காகவும், ரூ. 5,000 கருவிகளுக்காகவும்.)

#### (இ) அரசாங்க (மாவட்ட வாரியாக) உயர்நிலைப் பள்ளிகள்—

1 இரு கூருக்கப்பட்ட பாடமுறை திட்டத்தின்கீழ் கட்டப்படும் கட்டிடங்கள். — முழு மானியம் ; பேரளவுத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| பொறியியல் .. | 25,000 | 00 |
| எழுத்தர் படிப்பு .. | 15,000 | 00 |
| வேளாண்மை .. | 12,000 | 00 |
| மனையியல் .. | 25,000 | 00 |

2 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்கள். — ரூ. 40,000 (ரூ. 25,000 கட்டிடங்களுக்காகவும், ரூ. 15,000 கருவிகளுக்காகவும்).

3 பல்வேறு வயதுத் தொகுதியினருக்காகக் கட்டப்படும் கட்டிடத் திட்டம். — ரூ. 10,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு நிகரச் செலவில் 50 சதவிகிதம். மேலும் வேண்டியுள்ள செலவுத் தொகை நன்கொடை மூலம் பெறப்படுகிறது.

4 இணைமானியத் திட்டத்தின் கீழ் வரும் கட்டிடங்கள். — ரூ. 12,500 என்ற பேரளவுக்கு உட்பட்டு ஏற்பளித்த நிகர மதிப்பீட்டுச் செலவில் 50 சதவிகிதம். மேலும் வேண்டியுள்ள செலவுத் தொகை நன்கொடை மூலம் பெறப்படுகிறது.

### II. உயர் தொடக்கப் பள்ளிகள்—

1 தனியார் நிர்வாகம், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளின் கீழுள்ள உயர் தொடக்கப்பள்ளிகள். — இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பொதுப்பணித் துறையினுல் திருத்தப்பட்ட கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவில் அல்லது நிர்வாகப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட இறுதி மதிப்பீட்டுத் தொகையில் பாதிப் பகுதி மானியமாக கொடுக்கப்படுகின்றது. இது ரூபாய் 7,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.



1969 பிப்ரவரி 26]

### III தொடக்கப் பள்ளிகள்—

1 தனியார் நிர்வாகம், நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழுள்ள தொடக்கப் பள்ளிகள். — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினுல் சான்று அளிக்கப் பட்ட, கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில் 50 சதவிகிதம். இது ரூ. 4,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

2 அடிப்படை பள்ளிகள் (முது நிலை.) — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினுல் நற்சான்று அளிக்கப் பட்ட கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில் 50 சதவிகிதம். இது 15,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

3 அடிப்படைப் பள்ளிகள் (இள நிலை.) — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினுல் சான்று அளிக்கப் பட்ட கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில 50 சதவிகிதம். இது ரூ. 9,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

*Details of amount of Government grant for construction of building of high schools, higher elementary schools and elementary schools.*

### I. HIGH SCHOOLS—

#### (a) Aided High Schools—

1 For buildings governed by the rules in the Grant-in-aid Code. — Fifty per cent of the estimated cost or of the actual construction or of the final valuation of the building by the local Public Works department authority, whichever is least, subject to a maximum of Rs. 35,000.

2 For buildings constructed in connection with introduction of bifurcated courses of study. — Three-fourths of cost of construction subject to a maximum of—

| | RS. |
|---|---|
| Engineering .. .. | 18,750 |
| Secretarial .. .. | 11,250 |
| Agriculture .. .. | 9,000 |
| Home Science .. .. | 18,750 |
| Textile Technology .. | 16,500 |
| Music .. .. .. | 12,000 |
| Drawing and Painting .. | 12,000 |

3 For Science laboratory buildings. — Three-fourths of cost of construction subject to a maximum of Rs. 30,000 (Rs. 25,000 for buildings and Rs. 5,000 for equipment.)

#### (b) Municipal High Schools—

1 For buildings governed by Grant-in-aid Code, — Fifty per cent of the estimated cost of the scheme or of the actual cost of construction or of the final valuation of the buildings, whichever is the least, subject to a maximum of Rs. 35,000.

2 For bifurcated courses of study. — Three-fourths of cost of construction, subject to a maximum as indicated below :—

| | RS. |
|---|---|
| Engineering .. .. | 18,750 |
| Secretarial .. .. | 11,250 |
| Agriculture .. .. | 9,000 |
| Home Science .. .. | 18,750 |

[1969 பிப்ரவரி 26

I—HIGH SCHOOLS—*cont.*

(*b*) MUNICIPAL HIGH SCHOOLS—*cont.*

| | |
|---|---|
| 3 For Science laboratory buildings. | Three-fourths of cost of construction subject to a maximum of Rs. 30.000 (Rs. 25,000 for buildings and Rs. 5;000 for equipment.) |

(*c*) GOVERNMENT (DISTRICT BOARD) HIGH SCHOOLS—

| | |
|---|---|
| 1 For buildings constructed under bifurcated courses of study. | Full grant subject to the maximum as indicated below :— |

| | RS. |
|---|---|
| Engineering .. .. | 25,000 |
| Secretarial .. .. | 15,000 |
| Agriculture .. .. | 12,000 |
| Home Science .. | 25,000 |

| | |
|---|---|
| 2 For science laboratory buildings. | Rs. 40,000 (Rs. 25,000 for buildings and Rs. 15,000 for equipment). |
| 3 For buildings constructed under Age-Group Scheme. | Fifty per cent of net expenditure subject to a maximum of Rs. 10,000, the balance being met by local contribution. |
| 4 For building coming under the Matching Grant Scheme. | Fifty per cent of net approved estimate subject to a maximum of Rs. 12,500, the balance being met by local contribution. |

II HIGHER ELEMENTARY SCHOOLS—

| | |
|---|---|
| Higher Elementary Schools under private managements, panchayat unions and municipalities. | One-half of the total estimated cost of construction as approved by Director and modified by Public Works Department or of the final certified valuation statement of the Executive Engineer, subject to a maximum of Rs. 7,000, is paid as grant. |

III ELEMENTARY SCHOOLS—

| | |
|---|---|
| 1 Elementary Schools under private managements, municipalities and panchayat unions. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 4,000. |
| 2 Senior Basic Schools .. .. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 15,000, |
| 3 Junior Basic Schools .. .. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 9,000. |

## இணைப்பு 2

[625-ம் பக்கத்திலுள்ள 87-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

| தொடர் எண்ணும் ஆண்டும். | வங்கியின் பெயர். | கணக்கில் உள்ள தொகைக்கு மேல் வாங்கிய அதிக அளவுத் தொகை. | வட்டி வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | |
| 1 1959-60 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 38·48 | ஆண்டிற்கு 4½ சதவிகிதம். |



1969 பிப்ரவரி 26]

| தொடர் எண்ணும் ஆண்டும். | வங்கியின் பெயர் | கணக்கில் உள்ள தொகைக்கு மேல் வாங்கிய அதிக அளவுத் தொகை. | வட்டி வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | |
| 1 1959-60 | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 9·32 | ஆண்டிற்கு 4½ சதவிகிதம். |
| | | 47·80 | |
| 2 1960-61 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 39·46 | 1960 ஏப்ரல் முதல் தேதி முதல் 1960 செப்டம்பர் 30-ந் தேதி வரை ஆண்டிற்கு 4½ சதவிகிதம், 1960 அக்டோபர் முதல் தேதி முதல் 1961 மார்ச் 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 7·73 | 1960 ஏப்ரல் முதல் தேதி முதல் 1960 செப்டம்பர் 30-ந் தேதி வரை ஆண்டிற்கு 4½ சதவிகிதம், 1960 அக்டோபர் முதல் தேதி முதல் 1961 மார்ச் 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 5½ சதவிகிதம். |
| | | 47·19 | |
| 3 1961-62 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 40·86 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 2·29 | 1961 ஏப்ரல் முதல் தேதி முதல் 1961 ஆகஸ்டு 3-ந் தேதி வரை ஆண்டிற்கு 5½ சதவிகிதம். அதன் பிறகு அவ்வங்கியின் கணக்குகள் இறுதி செய்யப்பட்டு இந்தியன் பாங்கிற்கு மாற்றப்பட்டன. |
| | | 43·15 | |
| 4 1962-63 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 38·50 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| 5 1963-64 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 55·20 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| 6 1964-65 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 57·06 | 1964 ஏப்ரல் முதல் தேதி முதல் 1965 பிப்ரவரி 16-ந் தேதி வரை ஆண்டிற்கு 5 சதவிகிதம், 1965 பிப்ரவரி 17-ந். தேதி முதல் 1965 மார்ச். 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 6 சதவிகிதம். |
| 7 1965-66 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 59·80 | ஆண்டிற்கு 6 சதவிகிதம் |

| Serial number and year. (1) | | Name of bank. (2) | Maximum amount overdrawn. (3) (RS. IN LAKHS.) | Rate of interest. (4) |
|---|---|---|---|---|
| 1 | 1959-60 | The Indian Bank, Limited. | 38·48 | 4½ per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 9·32 | Do. |
| | | | 47·80 | |
| 2 | 1960-61 | The Indian Bank, Limited. | 39·46 | 1st April 1960 to 30th September 1960 at 4½ per cent per annum. 1st October 1960 to 31st March 1961 at 5 per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 7·73 | 1st April 1960 to 30th September 1960 at 4½ per cent per annum. 1st October 1960 to 31st March 1961 at 5½ per cent per annum. |
| | | | 47·19 | |
| 3 | 1961-62 | The Indian Bank, Limited. | 40·86 | 5 per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 2·29 | 1st April 1961 to 3rd August 1961 at 5½ per cent per annum. Account closed with the bank thereafter and transferred to the Indian Bank, Limited |
| | | | 43·15 | |
| 4 | 1962-63 | The Indian Bank, Limited. | 38·50 | At 5 per cent per annum. |
| 5 | 1963-64 | The Indian Bank, Limited. | 55·20 | Do. |
| 6 | 1964-65 | The Indian Bank, Limited. | 57·06 | 1st April 1964 to 16th February 1965 at 5 per cent per annum. 17th February 1965 to 31st March 1965 at 6 per cent per annum. |
| 7 | 1965-66 | The Indian Bank, Limited. | 59·80 | At 6 percent per annum |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## வெள்ளிக்கிழமை, 1969 பிப்ரவரி 28.

**சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் **பேரவை** கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 91 முதல் 98 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனைக் கட்டடம்.

*99 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விஸ்தரிக்கும் அல்லது புதிதாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)** ஆம்.

(இ) செயற் குறிப்பிற்கு அரசினர் ஒப்புதல் ஆணை பெற்றபின், நிதி நிலைமையைப்பொறுத்து இவ்வேலை துவங்கப்படும்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, உடுமலைப் பேட்டை மருத்துவ மனை புதிதாகக் கட்டப்படுமா அல்லது இருப்பதையே பழுதுபார்க்கப்படுமா ? இந்த ஆண்டே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அங்கே ஏற்கெனவே மருத்துவ மனை இருக்கிறது. மேலும் அதை விஸ்தரிக்கச் செய்வதற்குத்தான் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. நிதிநிலைமையைப் பார்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### ஹொகனக்கலை சுற்றுலா மையமாக்கல்.

*100 வினா.—**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஜில்லாவில் ஹொகனக்கலை யாத்திரிகை ஸ்தலமாக (Tourist Centre) அமைக்க, அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

*திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :* ஏற்கெனவே இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இப்பொழுது இல்லை என்று சொல்லக் காரணம் என்ன?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* இந்த ஆண்டு இதுபற்றிய செயற் குறிப்பு இல்லை. இதுபற்றிப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* பரிசீலிக்கலாம்.

*Marine Diesel Engine Factory at Madras.*

*101 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government has any proposals to start a Marine Diesel Engine Factory in Madras with Japanese collaboration; and

(*b*) the stage at which the proposals are at present?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) இந்திய அரசின் தொழில் நிறுவனமாகிய ஹௌராவிலுள்ள திரு. மத்திய மீனளக் கார்ப்பரேஷன், ஜப்பான் நாட்டு ஓசாகாவைச் சார்ந்த திரு. யென்மார் டீசல் என்ஜின் நிறுவனத்தின் உடன் உழைப்புடன் தமிழ்நாட்டிலுள்ள எண்ணூரில், மீன் பிடி படகுகளுக்கான 30-66 குதிரைத் திறனுடைய மரீன் டீசல் பொறிகளை, ஆண்டொன்றுக்கு 1,000 பொறிகள் வீதம் செய்யும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது.

(ஆ) இந்த நிறுவனம் தொழில் உரிமம் வேண்டி இந்திய அரசிடம் மனுச் செய்துள்ளது. அது இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE : When is the factory likely to take a concrete shape? Are the Government aware of the fact that a number of diesel engines which were previously functioning are not functioning now and only those foreign engines fitted to some of the boats are working and otherwise a number of them get stranded? In view of these facts, will the Government let us know when exactly this factory is going to take a concrete shape; and in case there is any delay, will the Government take up the matter with the Central Government and explain to them the urgency for this factory?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தமிழ்நாட்டு அரசின் சார்பில் இது சம்பந்தமாக மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். கடைசியாகக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசீலிக்கும்போது மத்திய அமைச்சர் அங்குள்ள இலாக்காவில் சில புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று கேட்டு



இதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மீண்டும் இதைப்பற்றி நினைவுபடுத்தி எழுதி இருக்கிறோம்.

*திரு. இல. பலராமன் :* இதுபோன்ற டீசலில் இயங்கக்கூடிய ஆயில் என்ஜின்கள் விவசாய உற்பத்திக்கு அதிகமாகத் தேவையாக இருப்பதனால், மார்க்கெட்டிலே விற்கக்கூடிய என்ஜின்கள் அதிக விலை விற்பதினால் அரசாங்கம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அவற்றைக் கொடுத்துதவ முன்வருமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இது செய்வதுபற்றிய விவரங்கள்தான் தொழில் அமைச்சரால் கவனிக்கப்படுகின்றன. உறுப்பினர் கேட்கும் விவரம்பற்றி விவசாய அமைச்சரிடம் கேட்டால் பதில் சொல்வார்கள்.

DR. H. V. HANDE : Will the Hon. the Minister be able to tell us the rough estimated cost of this factory and the rough estimated number of persons that this factory is likely to employ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* முதல் முதலாக இங்கே வைக்கப்படுமென்று மத்திய அரசு தெரிவித்து மாநில அரசும் அதை ஒப்புகொண்டு ஜப்பானிய கம்பெனியைச் சேர்ந்தவர்கள் எண்ணூரில் வந்து பார்த்தார்கள். அதற்குத் தேவைப்படுகின்ற இடம், தண்ணீர் வசதி இவற்றைத் தெரிவித்த பிறகு நம்முடைய அரசு ஒப்புதல் அளித்தது. அவர்கள் மற்ற மாநிலங்களையும் பார்த்தார்கள் அதற்குப் பிறகு லைசென்ஸ் கமிட்டியிலே விவாதிக்கப்பட்டு அதற்குப் பின்னால் அவர்கள் முடிவு எடுத்த பிறகு எத்தனை பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி டீடெயில்ட் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

*திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :* தற்போது டீசல் என்ஜின் தொழிற்சாலைகள் எவ்வளவு இருக்கின்றன? சிலர் தரக் குறைவான வார்ப்பு இரும்புகளை உபயோகப்படுத்தி டீசல் என்ஜின்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விற்பதல்லாமல், கணக்கு விவரங்களையும் காட்டாது இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* அதைப்பற்றித் தகவல் இல்லை.

*திரு. எஸ். இராமச்சந்திரன் :* இந்தியாவிலே இத்தகைய வேறு தொழிற்சாலை செயல்படுகிறது என்ற காரணத்தாலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அதற்கான அனுமதி தரத் தாமதம் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* மத்திய அரசிலே லைசென்ஸ் கமிட்டி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பல இலாக்காக்கள் இதில் பங்கு பெறுகின்றன. நிதி இலாக்கவும் இதைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரித்துக்கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டமாதிரி வேறு நிறுவனம் இதில் அக்கறைக் காட்டவில்லை. தமிழ் நாட்டிற்கு அவசியம் வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம்.

### (ஈ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 9. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:* பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:* தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை அறிமுகப்படுத்து கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடை கின்றன. மீண்டும் வெள்ளிக்கிழமை, 28-ம் தேதி காலை 9 மணிக்கு பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 10. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

‘ ஏதுமில்லை ’





## இணைப்பு 1

[617-ம் பக்கத்திலுள்ள 81-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

உயர்நிலைப் பள்ளிகள், உயர்தொடக்கப்பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கத்தினால் அளிக்கப்படும் மானியத் தொகை பற்றிய விவரங்கள் :—

**I உயர்நிலைப் பள்ளிகள்—**

**(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகள்—**

1 உதவி மானிய விதிக்கோவையினால் முறைப்படுத்தப் படும் கட்டிடங்களுக்காக— கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு அல்லது அதைக் கட்டுவதற்கு ஆன மொத்தச் செலவு, அல்லது அவ்விடத்துப் பொதுப் பணித் துறை அதிகாரியினால் செய்யப் பட்ட இறுதி மதிப்பீடு, இவற்றில் எது குறைந்ததாக உள்ளதோ அதில் 50 சத விகிதம். இத்தொகை 35,000 ரூபாய் என்ற பேரளவுக்கு உட்பட்டதாகும்.

2 இரு கூறுக்கப்பட்ட பாடமுறையைக் கொண்டு வருவதன் தொடர்பாகக் கட்டப்படும் கட்டிடங்கள். கட்டுவதற்கான செலவில் $\frac{3}{4}$ பகுதி, இது கீழ்ககண்ட பேரளவுக்கு உட்பட்டதாகும் :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| பொறியியல் .. | 18,750 | 00 |
| எழுத்தர் படிப்பு .. | 11,250 | 00 |
| வேளாண்மை .. | 9,000 | 00 |
| மனையியல் .. | 18,750 | 00 |
| நெசவுத் தொழில் நுட்ப வியல். | 16,500 | 00 |
| இசை .. .. | 12,000 | 00 |
| ஓவியம் வரைதலும் வண்ணம் தீட்டுதலும். | 12,000 | 00 |

3 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்களுக்காக. ரூ. 30,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு, கட்டிடச் செலவில் $\frac{3}{4}$ பகுதி (ரூ. 25,000 கட்டிடத்திற்காகவும், ரூ. 5,000 கருவிகளுக்காகவும்.)

**(ஆ) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்—**

1 உதவி மானிய விதிக்கோவையின் கீழ் முறைப்படுத்தப் படும் கட்டிடங்கள். கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு அல்லது கட்டுவதற்கு ஆன மொத்தச் செலவு அல்லது கட்டிடத்தின் இறுதி மதிப்பீடு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அதில் 50 சதவிகிதம்.

இது ரூ. 35,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

[1969 பிப்ரவரி 26

### I. உயர்நிலைப்பள்ளிகள்—தொடர்ச்சி.

### (ஆ) நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள்—தொடர்ச்சி.

2 இரு கூருக்கப்பட்ட பாட முறை. — கட்டிடத்தைக் கட்டுவதற்கான செலவில் ¾ பகுதி பேரளவுத் தொகை கீழே கொடுக்கப்பட்டது :—

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| பொறியியல் | .. | 18,750 | 00 |
| எழுத்தர் படிப்பு | .. | 11,200 | 00 |
| வேளாண்மை | .. | 9,000 | 00 |
| மனையியல் | .. | 18,750 | 00 |

3 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்கள். — ரூ. 30,000 என்ற பேரளவுக்கு உட்பட்டுக் கட்டிடச் செலவில் ¾ பகுதி (ரூ. 25,000 கட்டிடத்திற்காகவும், ரூ. 5,000 கருவிகளுக்காகவும்.)

### (இ) அரசாங்க (மாவட்ட வாரியாக) உயர்நிலைப் பள்ளிகள்—

1 இரு கூருக்கப்பட்ட பாடமுறை திட்டத்தின்கீழ் கட்டப்படும் கட்டிடங்கள். — முழு மானியம்; பேரளவுத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| பொறியியல் | .. | 25,000 | 00 |
| எழுத்தர் படிப்பு | .. | 15,000 | 00 |
| வேளாண்மை | .. | 12,000 | 00 |
| மனையியல் | .. | 25,000 | 00 |

2 விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடங்கள். — ரூ. 40,000 (ரூ. 25,000 கட்டிடங்களுக்காகவும், ரூ. 15,000 கருவிகளுக்காகவும்).

3 பல்வேறு வயதுத் தொகுதியினருக்காகக் கட்டப்படும் கட்டிடத் திட்டம். — ரூ. 10,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு நிகரச் செலவில் 50 சதவிகிதம். மேலும் வேண்டியுள்ள செலவுத் தொகை நன்கொடை மூலம் பெறப்படுகிறது.

4 இணைமானியத் திட்டத்தின் கீழ் வரும் கட்டிடங்கள். — ரூ. 12,500 என்ற பேரளவுக்கு உட்பட்டு ஏற்பளித்த நிகர மதிப்பீட்டுச் செலவில் 50 சதவிகிதம். மேலும் வேண்டியுள்ள செலவுத் தொகை நன்கொடை மூலம் பெறப்படுகிறது.

### II. உயர் தொடக்கப் பள்ளிகள்—

1 தனியார் நிர்வாகம், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளின் கீழுள்ள உயர் தொடக்கப்பள்ளிகள். — இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பொதுப்பணித் துறையினால் திருத்தப்பட்ட கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவில் அல்லது நிர்வாகப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட இறுதி மதிப்பீட்டுத் தொகையில் பாதிப் பகுதி மானியமாக கொடுக்கப்படுகின்றது. இது ரூபாய் 7,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.



1969 பிப்ரவரி 26]

### III தொடக்கப் பள்ளிகள்—

1 தனியார் நிர்வாகம், நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழுள்ள தொடக்கப் பள்ளிகள். — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினால் சான்று அளிக்கப்பட்ட, கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில் 50 சதவிகிதம். இது ரூ. 4,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

2 அடிப்படை பள்ளிகள் (முதுநிலை.) — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினால் நற்சான்று அளிக்கப்பட்ட கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில் 50 சதவிகிதம். இது 15,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

3 அடிப்படைப் பள்ளிகள் (இளநிலை.) — மதிப்பீட்டுச் செலவில் அல்லது பொதுப் பணித் துறையினால் சான்று அளிக்கப்பட்ட கட்டிடத்தின் இறுதி மதிப்பீட்டில் 50 சதவிகிதம். இது ரூ. 9,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது.

## *Details of amount of Government grant for construction of building of high schools, higher elementary schools and elementary schools.*

### I. HIGH SCHOOLS—

(a) AIDED HIGH SCHOOLS—

1 For buildings governed by the rules in the Grant-in-aid Code. — Fifty per cent of the estimated cost or of the actual construction or of the final valuation of the building by the local Public Works department authority, whichever is least, subject to a maximum of Rs. 35,000.

2 For buildings constructed in connection with introduction of bifurcated courses of study. — Three-fourths of cost of construction subject to a maximum of—

| | | | RS. |
|---|---|---|---|
| Engineering | .. | .. | 18,750 |
| Secretarial | .. | .. | 11,250 |
| Agriculture | .. | .. | 9,000 |
| Home Science | .. | .. | 18,750 |
| Textile Technology | | .. | 16,500 |
| Music | .. | .. | 12,000 |
| Drawing and Painting | | .. | 12,000 |

3 For Science laboratory buildings. — Three-fourths of cost of construction subject to a maximum of Rs. 30,000 (Rs. 25,000 for buildings and Rs. 5,000 for equipment.)

(b) MUNICIPAL HIGH SCHOOLS—

1 For buildings governed by Grant-in-aid Code. — Fifty per cent of the estimated cost of the scheme or of the actual cost of construction or of the final valuation of the buildings, whichever is the least, subject to a maximum of Rs. 35,000.

2 For bifurcated courses of study. — Three-fourths of cost of construction, subject to a maximum as indicated below :—

| | | | RS. |
|---|---|---|---|
| Engineering | .. | .. | 18,750 |
| Secretarial | .. | .. | 11,250 |
| Agriculture | .. | .. | 9,000 |
| Home Science | .. | .. | 18,750 |

I—HIGH SCHOOLS—*cont.*

(b) MUNICIPAL HIGH SCHOOLS—*cont.*

| | |
|---|---|
| 3 For Science laboratory buildings. | Three-fourths of cost of construction subject to a maximum of Rs. 30,000 (Rs. 25,000 for buildings and Rs. 5,000 for equipment.) |

(c) GOVERNMENT (DISTRICT BOARD) HIGH SCHOOLS—

| | |
|---|---|
| 1 For buildings constructed under bifurcated courses of study. | Full grant subject to the maximum as indicated below:— |

| | RS. |
|---|---|
| Engineering .. .. | 25,000 |
| Secretarial .. .. | 15,000 |
| Agriculture .. .. | 12,000 |
| Home Science .. | 25,000 |

| | |
|---|---|
| 2 For science laboratory buildings. | Rs. 40,000 (Rs. 25,000 for buildings and Rs. 15,000 for equipment). |
| 3 For buildings constructed under Age-Group Scheme. | Fifty per cent of net expenditure subject to a maximum of Rs. 10,000, the balance being met by local contribution. |
| 4 For building coming under the Matching Grant Scheme. | Fifty per cent of net approved estimate subject to a maximum of Rs. 12,500, the balance being met by local contribution. |

II HIGHER ELEMENTARY SCHOOLS—

| | |
|---|---|
| Higher Elementary Schools under private managements, panchayat unions and municipalities. | One-half of the total estimated cost of construction as approved by Director and modified by Public Works Department or of the final certified valuation statement of the Executive Engineer, subject to a maximum of Rs. 7,000, is paid as grant. |

III ELEMENTARY SCHOOLS—

| | |
|---|---|
| 1 Elementary Schools under private managements, municipalities and panchayat unions. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 4,000. |
| 2 Senior Basic Schools .. .. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 15,000. |
| 3 Junior Basic Schools .. .. | Fifty per cent of the estimated cost or the final valuation of the building as certified by Public Works department, subject to a maximum of Rs. 9,000. |

## இணைப்பு 2

[625-ம் பக்கத்திலுள்ள 87-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

| தொடர் எண்ணும் ஆண்டும். | | வங்கியின் பெயர். | கணக்கில் உள்ள தொகைக்கு மேல் வாங்கிய அதிக அளவுத் தொகை. | வட்டி வீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்) | (4) |
| 1 | 1959-60 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 38·48 | ஆண்டிற்கு 4½ சதவிகிதம். |



| தொடர் எண்ணும் ஆண்டும். | | வங்கியின் பெயர் | கணக்கில் உள்ள தொகைக்கு மேல் வாங்கிய அதிக அளவுத் தொகை. | வட்டி வீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்) | (4) |
| 1 | 1959-60 | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 9·32 | ஆண்டிற்கு 4½ சதவிகிதம். |
| | | | 47·80 | |
| 2 | 1960-61 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 39·46 | 1960 ஏப்ரல் முதல் தேதி முதல் 1960 செப்டம்பர் 30-ந் தேதி வரை ஆண்டிற்கு 4½ சதவிகிதம், 1960 அக்டோபர் முதல் தேதி முதல் 1961 மார்ச் 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| | | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 7·73 | 1960 ஏப்ரல் முதல் தேதி முதல் 1960 செப்டம்பர் 30-ந் தேதி வரை ஆண்டிற்கு 4½ சதவிகிதம், 1960 அக்டோபர் முதல் தேதி முதல் 1961 மார்ச் 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 5½ சதவிகிதம். |
| | | | 47·19 | |
| 3 | 1961-62 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 40·86 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| | | யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, லிமிடெட். | 2·29 | 1961 ஏப்ரல் முதல் தேதி முதல் 1961 ஆகஸ்டு 3-ந் தேதி வரை ஆண்டிற்கு 5½ சதவிகிதம். அதன் பிறகு அவ்வங்கியின் கணக்குகள் இறுதி செய்யப்பட்டு இந்தியன் பாங்கிற்கு மாற்றப்பட்டன. |
| | | | 43·15 | |
| 4 | 1962-63 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 38·50 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| 5 | 1963-64 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 55·20 | ஆண்டிற்கு 5 சதவிகிதம். |
| 6 | 1964-65 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 57·06 | 1964 ஏப்ரல் முதல் தேதி முதல் 1965 பிப்ரவரி 16-ந் தேதி வரை ஆண்டிற்கு 5 சதவிகிதம், 1965 பிப்ரவரி 17-ந் தேதி முதல் 1965 மார்ச் 31-ந் தேதி வரை ஆண்டிற்கு 6 சதவிகிதம். |
| 7 | 1965-66 | இந்தியன் பாங்கு, லிமிடெட். | 59·80 | ஆண்டிற்கு 6 சதவிகிதம் |

| Serial number and year. (1) | | Name of bank. (2) | Maximum amount overdrawn. (3) (RS. IN LAKHS.) | Rate of interest. (4) |
|---|---|---|---|---|
| 1 | 1959–60 | The Indian Bank, Limited. | 38·48 | 4½ per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 9·32 | Do. |
| | | | 47·80 | |
| 2 | 1960–61 | The Indian Bank, Limited. | 39·46 | 1st April 1960 to 30th September 1960 at 4½ per cent per annum. 1st October 1960 to 31st March 1961 at 5 per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 7·73 | 1st April 1960 to 30th September 1960 at 4½ per cent per annum. 1st October 1960 to 31st March 1961 at 5½ per cent per annum. |
| | | | 47·19 | |
| 3 | 1961–62 | The Indian Bank, Limited. | 40·86 | 5 per cent per annum. |
| | | The United Commercial Bank, Limited. | 2·29 | 1st April 1961 to 3rd August 1961 at 5½ per cent per annum. Account closed with the bank thereafter and transferred to the Indian Bank, Limited |
| | | | 43·15 | |
| 4 | 1962–63 | The Indian Bank, Limited. | 38·50 | At 5 per cent per annum. |
| 5 | 1963–64 | The Indian Bank, Limited. | 55·20 | Do. |
| 6 | 1964–65 | The Indian Bank, Limited. | 57·06 | 1st April 1964 to 16th February 1965 at 5 per cent per annum. 17th February 1965 to 31st March 1965 at 6 per cent per annum. |
| 7 | 1965–66 | The Indian Bank, Limited. | 59·80 | At 6 percent per annum |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1969 பிப்ரவரி 28.

**சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 91 முதல் 98 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனைக் கட்டடம்.

*99 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள்: மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விஸ்தரிக்கும் அல்லது புதிதாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) செயற் குறிப்பிற்கு அரசினர் ஒப்புதல் ஆணை பெற்றபின், நிதி நிலைமையைப்பொறுத்து இவ்வேலை துவங்கப்படும்.

**திருமதி வி. ப. பழனியம்மாள்:** தலைவர் அவர்களே, உடுமலைப் பேட்டை மருத்துவ மனை புதிதாகக் கட்டப்படுமா அல்லது இருப்பதையே பழுதுபார்க்கப்படுமா? இந்த ஆண்டே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அங்கே ஏற்கெனவே மருத்துவ மனை இருக்கிறது. மேலும் அதை விஸ்தரிக்கச் செய்வதற்குத்தான் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. நிதிநிலைமையைப் பார்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### ஹொகனக்கலை சுற்றுலா மையமாக்கல்.

*100 வினா.—திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஜில்லாவில் ஹொகனக்கலை யாத்திரிகை ஸ்தலமாக (Tourist Centre) அமைக்க, அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இல்லை

*திரு. இ. தீர்த்தகிரி கவுண்டர்:* ஏற்கெனவே இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இப்பொழுது இல்லை என்று சொல்லக் காரணம் என்ன?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* இந்த ஆண்டு இதுபற்றிய செயற் குறிப்பு இல்லை. இதுபற்றிப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

*திரு. வி. கே. கோதண்டராமன்:* நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை ஏற்படுத்த அரசாங்கம் பரிசிலிக்குமா?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* பரிசிலிக்கலாம்.

*Marine Diesel Engine Factory at Madras.*

*101 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government has any proposals to start a Marine Diesel Engine Factory in Madras with Japanese collaboration; and

(b) the stage at which the proposals are at present?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* (அ) இந்திய அரசின் தொழில் நிறுவனமாகிய ஹௌராவிலுள்ள திரு. மத்திய மீனளக் கார்ப்பரேஷன், ஜப்பான் நாட்டு ஓசாகாவைச் சார்ந்த திரு. யென்மார் டீசல் என்ஜின் நிறுவனத்தின் உடன் உழைப்புடன் தமிழ் நாட்டிலுள்ள எண்ணூரில், மீன் பிடி படகுகளுக்கான 30-66 குதிரைத் திறனுடைய மரீன் டீசல் பொறிகளை, ஆண்டொன்றுக்கு 1,000 பொறிகள் வீதம் செய்யும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது.

(ஆ) இந்த நிறுவனம் தொழில் உரிமம் வேண்டி இந்திய அரசிடம் மனுச் செய்துள்ளது. அது இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE: When is the factory likely to take a concrete shape? Are the Government aware of the fact that a number of diesel engines which were previously functioning are not functioning now and only those foreign engines fitted to some of the boats are working and otherwise a number of them get stranded? In view of these facts, will the Government let us know when exactly this factory is going to take a concrete shape; and in case there is any delay, will the Government take up the matter with the Central Government and explain to them the urgency for this factory?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* தமிழ்நாட்டு அரசின் சார்பில் இது சம்பந்தமாக மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். கடைசியாகக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசிலிக்கும்போது மத்திய அமைச்சர் அங்குள்ள இலாக்காவில் சில புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று கேட்டு





இதையும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மீண்டும் இதைப்பற்றி நினைவுபடுத்தி எழுதி இருக்கிறோம்.

*திரு. இல. பலராமன்:* இதுபோன்ற டீசலில் இயங்கக்கூடிய ஆயில் என்ஜின்கள் விவசாய உற்பத்திக்கு அதிகமாகத் தேவையாக இருப்பதனால், மார்க்கெட்டிலே விற்கக்கூடிய என்ஜின்கள் அதிக விலை விற்பதினால் அரசாங்கம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அவற்றைக் கொடுத்துதவ முன்வருமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* இது செய்வதுபற்றிய விவரங்கள்தான் தொழில் அமைச்சரால் கவனிக்கப்படுகின்றன. உறுப்பினர் கேட்கும் விவரம்பற்றி விவசாய அமைச்சரிடம் கேட்டால் பதில் சொல்வார்கள்.

DR. H. V. HANDE: Will the Hon. the Minister be able to tell us the rough estimated cost of this factory and the rough estimated number of persons that this factory is likely to employ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* முதல் முதலாக இங்கே வைக்கப்படுமென்று மத்திய அரசு தெரிவித்து மாநில அரசும் அதை ஒப்புகொண்டு ஜப்பானிய கம்பெனியைச் சேர்ந்தவர்கள் எண்ணூரில் வந்து பார்த்தார்கள். அதற்குத் தேவைப்படுகின்ற இடம், தண்ணீர் வசதி இவற்றைத் தெரிவித்த பிறகு நம்முடைய அரசு ஒப்புதல் அளித்தது. அவர்கள் மற்ற மாநிலங்களையும் பார்த்தார்கள் அதற்குப் பிறகு லைசென்ஸ் கமிட்டியிலே விவாதிக்கப்பட்டு அதற்குப் பின்னால் அவர்கள் முடிவு எடுத்த பிறகு எத்தனை பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி டீடெயில்ட் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

*திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்:* தற்போது டீசல் என்ஜின் தொழிற்சாலைகள் எவ்வளவு இருக்கின்றன? சிலர் தரக் குறைவான வார்ப்பு இரும்புகளை உபயோகப்படுத்தி டீசல் என்ஜின்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விற்பதல்லாமல், கணக்கு விவரங்களையும் காட்டாது இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* அதைப்பற்றித் தகவல் இல்லை.

*திரு. எஸ். இராமச்சந்திரன்:* இந்தியாவிலே இத்தகைய வேறு தொழிற்சாலை செயல்படுகிறது என்ற காரணத்தாலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அதற்கான அனுமதி தரத் தாமதம் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* மத்திய அரசிலே லைசென்ஸ் கமிட்டி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பல இலாக்காக்கள் இதில் பங்கு பெறுகின்றன. நிதி இலாக்கவும் இதைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரித்துக்கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டமாதிரி வேறு நிறுவனம் இதில் அக்கறைக் காட்டவில்லை. தமிழ் நாட்டிற்கு அவசியம் வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தத் தொழிற்சாலை அமைகிற நிலைமை ஏற்பட்டால் தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே பொதுத்துறையில் நடத்தப்படுமா அல்லது தனியார்த் துறையில் நடத்தப்படுமா என்பதுபற்றி இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லைசென்ஸ் கமிட்டி இதைப் பற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் நாம் பரிசீலிக்க முடியும்.

கைத்தறி நெசவாளர்கள்.

*102 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கடன் தொல்லையில் சிக்கியுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறி நிதி கார்ப்பரேஷனிலிருந்து கடன் கொடுத்து உதவ அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: கைத்தறி நெசவாளர்களுடைய வருவாய்க்கு உத்திரவாதம் செய்யக்கூடிய முறையில் புதிதாகத் துவக்கப்படுகின்ற தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுடைய தொல்லைகளை நீக்குவதற்கு அரசாங்கம் வழி செய்யுமா

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சம்பந்தமாக மெட்ராஸ் ஹான்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் டெட் ரிலீப் என்ற முறையில் இதில் கவனம் செலுத்துகிறது. அந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன் இதற்கு உதவி செய்யக்கூடிய முறையில் ஏற்கெனவே ஒரு திட்டம் வைத்திருந்தது. அந்தத் திட்டத்தில் பொருளாதார வசதி இல்லாத காரணத்தினால் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே நெசவாளர்களுக்கு நாம் எந்தெந்த அளவிற்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவிற்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக உதவி செய்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கிற கூட்டுறவு சங்கங்களில் பலவீனமான சங்கங்கள் இருக்கின்றன. அவை பாங்குகளில் கடன் வாங்க முடியாத நிலைமை, ரிசர்வ் பாங்கின் புதிய நிபந்தனையால் கடன் வாங்க முடியாத நிலைமை இருப்பதால் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்தச் சங்கங்களின் சக்தியைப் பெருக்கிக்கொள்வதற்கு நீண்டகால கடன் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தச் சங்கங்கள் பலவீனமாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் வாங்கியுள்ள கடனைக் கொடுக்கமுடியாத நிலைமை இருப்பதால்தான். இன்னும் பல காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்கிற துணி விலை போகாத நிலைமை இருக்கிறது. அந்தச் சரக்குகளை விற்பனை செய்வதற்கு உதவக்கூடிய முறையில் நமது அரசு இடைக்காலக் கடனாகவும், நிரந்தரக் கடனாகவும் ரிசர்வ் வங்கியிலிருந்து கொடுக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்கிற சரக்கு உடனடியாக விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அவர்களுக்கு மேலும் முழுமையாகக் கடன் கிடைக்க வகை ஏற்படும்.



திரு. எம். சுரேந்திரன்: கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கங்களுக்கு எவ்வளவு கடன்கள் இருக்கின்றன, எவ்வளவு நிதி கொடுத்து உதவி செய்தால் அவை பாதுகாக்கப்படும் என்பதைப் பற்றி அரசாங்கம் ஏதாவது மதிப்பீடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு நாட்களுக்கு முன் அதுபற்றி விவர அறிக்கை கொடுத்ததாக எனக்கு நினைவு. எப்பொழுது சரக்குகள் தேங்குகின்றனவோ அப்போதெல்லாம் அந்தச் சரக்குகளை அவர்களுடைய தலைமை அமைப்பு வாங்கி விற்பதற்கு நாம் கடன்கொடுத்து உதவி செய்கின்றோம். ஆங்காங்கு இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அங்கங்கேயுள்ள மத்திய வங்கி, ரிசர்வ் வங்கியினுடைய உதவியோடு, பணம் கொடுத்து வருகின்றோம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் என்ன என்ன ரகங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்கிற விஷயம் தொடர்ந்து நீண்ட நாட்களாகவே சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. இனிமேலாவது, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய சங்கங்கள் எந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும், மில்கள் எந்த ரகங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஏதாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அதிகாரம் நம்மிடத்தில் இல்லை; மத்திய அரசிடம் இருக்கிறது. தொடர்ந்து ஒரு கருத்து வலியுறுத்தப்படுகிறது. அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுகிறது. ஆலைத் துணிகளோடு கைதறித் துணிகள் போட்டிபோடும் சூழ்நிலை இல்லை என்ற காரணத்தால், ஆலைகள் என்ன என்ன ரகங்களை நெய்யலாம், கைத்தறிகள்—வீவர்ஸ் சொஸைட்டிகள், மற்ற அமைப்புகள்மூலம்—என்ன என்ன ரகங்களை உற்பத்தி செய்யலாம் என்று வரையறுக்கப்படவேண்டும் என்ற கருத்தை நாம் மத்திய அரசுக்கு வலியுறுத்தி வருகிறோம். அண்மையில் அந்தக் கருத்தை மத்திய அரசு ஒப்புக்கொண்டதாக ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தி சரிதானா என்பதைக்குறித்து அதுசம்பந்தமான விவரங்களையெல்லாம் மத்திய அரசிடமிருந்து நாம் கேட்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கைத்தறி நெசவாளர்களுக்கு விசைத் தறி நிறுவுவதற்காக ஏதாவது கடன்களோ அல்லது மானியங்களோ கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய தமிழ்நாட்டுக்கு 12,000 விசைத் தறிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விசைத் தறிகளை எப்படிப் பங்கிட்டுக்கொள்வது, தனியார் துறைக்கா கூட்டுறவுத் துறைக்கா என்பதுபற்றிச் சமீபத்திலே விவாதிக்கப்பட்டது. விசைத் தறியே கூடாது என்ற கருத்தும் நிலவுகிறது.

அனுகுறித்து, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களையும் அழைத்துப் பேசி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறோம் விரைவிலே மறுபடியும் அவர்களை அழைத்துப் பேசி, விசைத் தறிகளை எப்படி, யார் யாருக்குக் கொடுப்பது என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, அவர்களுக்கெல்லாம் கடன்கள் அளித்தும்கூட, நிர்வாகத் திறன் இல்லாததால், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு வேறு தொழில் தெரியாது என்ற காரணத்தைக் கருத்திற்கொண்டு, புதிதாகத் திறக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கலாம். பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வரக்கூடிய அகதிகளுக்கு புதிதாகத் திறக்கப்படும் சிமெண்ட் பாக்டரி போன்றவற்றில் வேலை கொடுக்கவேண்டும் என்று இப்பொழுது சர்க்குலர் விடப்பட்டிருக்கிறது. அதேபோல், இப்படி வேலையில்லாத கைத்தறி நெசவாளர்களுக்கும் புதிதாகத் திறக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று இந்தச் சர்க்கார் சர்க்குலர் விட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த ஆலோசனையைப் பரிசீலிக்கலாம்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும்படியான சரக்குகள் இப்பொழுது கைத்தறித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேக்கம் அடைந்திருக்கின்றன. அந்தத் தேக்கம் இன்னும் விற்பனையாகாமலிருப்பதால், அவர்களுக்கு வேலையும் கூலியும் இல்லாத நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. தேங்கிக் கிடக்கும் அந்தச் சரக்குகளைச் சர்க்காரே வாங்கி விற்பனை செய்வதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கம் வாங்குவது என்றால், அங்கேயும் அது தேங்கித்தான் இருக்கும். அரசாங்கம் வாங்கி விற்பதற்குப் பதிலாகத்தான் அவர்களுடைய தலைமைச் சங்கம் அந்த முயற்சியில் ஈடுபட்டால் நாம் அடிக்கடி அவர்களுக்குக் கடன் கொடுத்து வருகின்றோம். கீழே உள்ள அடிப்படைச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய கடன்களைப் பொறுத்தவரையில், சரக்குத் தேங்கிவிட்டால் மேலும் அவர்களுக்குக் கடன் கிடைக்காது, சரக்கும் போகாது, வேலை இல்லாத சூழ்நிலையும் உருவாகிறது. அந்தச் சூழ்நிலை உருவாகும்போது, உடனடியாகத் தலைமைச் சங்கங்களுக்குக் கடன் கொடுத்து, அவர்கள் அந்தச் சங்கங்களிலுள்ள சரக்குகளை வாங்கி விற்பதற்கு இப்போதே ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, கைத்தறியின் மந்த நிலையைப் போக்கக்கூடிய முறையிலும், கைத்தறி நெசவாளிகளின் கஷ்டங்களைப்பற்றி விவாதிக்கக்கூடிய முறையிலும், அந்தப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஒரு வாக்குறுதி அளித்தார்கள். இந்தச் சமயத்திலாவது அப்படிப்பட்ட ஒரு முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி ஆலோசிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களையும், கூட்டுறவுத் துறையிலே ஈடுபட்டிருக்கிறவர்களையும் இப்போதே அரசாங்கம் பல முறைகள் அழைத்துப் பேசியிருக்கிறது. மீண்டும் அழைத்துப் பேச எப்போதும் தயாராக இருக்கும்.

திரு. கே. சகாதேவக் கண்டர்: தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளின் கடனை வருஷாந்திரத் தவணையில் செலுத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதால் அந்தத் தவணையை நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று அரசுக்கு ஏதாவது விண்ணப்பம் வந்ததா? அப்படி வந்திருந்தால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தச் சங்கம் என்று சொன்னால் தகவல் அறிந்து சொல்லுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறித் துணியைப் பொறுத்தவரையில், வருஷா வருஷம் அதற்கு ஒரு கண்டம் மாதிரித் தேக்கங்கள் ஏற்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதற்கு வெளிநாடுகளில் நிரந்தர மார்க்கெட் கிடைப்பதற்கு கைத்தறித் துணிகளின் தரத்தை உயர்த்தவேண்டும். அந்த அளவுக்கு உயர்த்தச்செய்து, வெளி மார்க்கெட் பிடித்துக் கொடுப்பதுபற்றி இந்த அரசு முயற்சி எடுக்குமா? அப்படிச் செய்தால் கஷ்டம் தீரும் என்ற நம்பிக்கை இருப்பதால் அதை உண்டாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய துணி வெளியிலே விற்பனை போகாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுவது இயற்கைதான். முக்கியமான காரணம், மற்ற மாநிலங்களில் விசைத் தறிகள் புகுத்தப்பட்டு, அந்தத் துணிகளோடு நம்முடைய கைத்தறித் துணி போட்டிபோட முடியாத சூழ்நிலை தமிழ் நாட்டிலே தொடர்ந்து இருந்துவருகிறது. தமிழ் நாட்டிலே விசைத் தறிகள் புகுத்தப்படாத காரணத்தால் அந்த நிலைமை இருக்கிறது. வெளிநாடுகளில் நம்முடைய 'ப்ளீடிங் மெட்ராஸ்' என்னும் கைத்தறி ரகத் துணிகளுக்கு ஒரு காலத்தில் ஏராளமாகக் கிராக்கி இருந்தது. பின்னால், அங்கேயே மில்களில் இது போன்ற துணிகளை உற்பத்திச் செய்த காரணத்தால், அமெரிக்கச் சந்தையில் போட்டிபோட முடியாத சூழ்நிலை வந்து, நமக்குப் பாதகம் ஏற்பட்டது. தென் கிழக்கு ஆசிய நாடுகளிலேயும் அவர்களே சொந்தத்தில் உற்பத்தி செய்யவேண்டும் என்ற ஒரு

முயற்சியில் அவர்கள் ஈடுபடுவதால், அந்த நாடுகளிலும் நம்முடைய கைத்தறித் துணிகளுக்குக் கொஞ்சம் கிராக்கி குறைய ஆரம்பித்திருக்கிறது. இதற்காக எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலே அவர்கள் அடிக்கடி, வெளிநாடுகளில் நம்முடைய கைத்தறித் துணிகளுக்குள்ள சந்தையைப்பற்றிப் பரிசீலித்து, புதிய புதிய ரகங்களை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனைகளை இப்போதே கூறி வருகிறார்கள்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** கைத்தறித் துணி அதிகமாகத் தேங்கிக் கிடப்பதால் வியாபாரம் நடக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நேரத்தில், இன்னும் அதிகப்படியாக, அதாவது 25 சத வீதம், ரிபேட் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது கொடுக்கின்ற ரிபேட்டே போதும் என்று கருதுகிறேன்.

**திரு. இல. பலராமன் :** வடார்க்காடு மாவட்டம், ஆரணி நகரத்தில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்தின்மூலமாக நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் பேரில் தந்த கடன்களை, தற்போது வருவாய் இல்லை என்ற காரணத்திற்காக, தள்ளி வைக்கவேண்டும் என்று அந்தச் சங்கங்கள் கேட்டிருக்கின்றனவா ? அதற்காக என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** அமைச்சர் அவர்கள் கூறும்போது விசைத் தறிகள் புகுத்துவது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். விசைத் தறிகள் வேறு மாநிலங்களில் வந்து, நம் மாநிலத்தில் அவை இல்லாத நிலையில் கைத்தறித் துணி விற்பனை பாதிக்கப்படக்கூடிய நிலை இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, விசைத் தறிகளைப் புகுத்துவதன்மூலமாக இப்பொழுது இருக்கும் கைத்தறியாளர்களுக்குள்ள வேலை வாய்ப்பு குறைந்து, அதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படுமாதலால், விசைத் தறிகளைப் புகுத்துவதை நிறுத்தி வைப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படிப்பட்ட ஒரு கருத்தும் நிலவிக் கொண்டுதான் இருக்கிறது. கைத்தறித் துணிகள் விசைத் தறித் துணிகளோடு போட்டிபோட முடியாத நிலையில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம், மராட்டியம் போன்ற இதர மாநிலங்களில் விசைத் தறிகளில் உற்பத்தி செய்யக்கூடிய துணிகள் நம்முடைய சந்தைக்கு ஏராளமாக வந்து, கைத்தறித் துணிகளோடு போட்டி போடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விசைத் தறிகளைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்ற ஒரு கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், அதனால் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்





கூடாது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. அதற்காகத்தான் கூட்டுறவுத் துறையிலே கைத்தறி நெசவாளர் சங்கங்களை நடத்திவரும் பொறுப்பாளர்களை நாம் அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல், அவர்களுக்கே இந்த விசைத் தறியைக் கொடுத்து, அவர்களுக்குள்ள வேலை வாய்ப்பைக் கொஞ்சங்கூடப் பாதிக்காத சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதுதான் இப்போதுள்ள பேச்சுவார்த்தையின் நோக்கமாகும். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் தலைவர்களையெல்லாம் அழைத்து, அவர்களுடைய ஆதரவையெல்லாம் பெற்றுதான் இந்த அரசாங்கம் அதை முடிவு செய்யும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறித் தொழிலுக்கு உதவுவதற்காக, மற்ற மாநிலங்களிலிருந்து இந்தத் தமிழ்நாட்டிற்கு இறக்குமதியாகின்ற விசைத்தறித் துணிகளைத் தடைசெய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தடை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது; மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. அந்தத் துணிகளைவிட நல்ல துணிகளை நாமே உற்பத்தி செய்யக்கூடிய முயற்சியிலேதான் அரசாங்கம் ஈடுபடும்.

### வடார்க்காடு மாவட்டத்தில் காகித உற்பத்தி தொழிற்சாலை.

* 103. **வினா திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் பேப்பர், அட்டை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டத்தில் கரும்புச் சக்கையை உபயோகித்து பத்திரிகைக் காகிதம் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவத் தனியார் துறைத் தொழிலதிபர் ஒருவர் முயன்று வருகிறார். அந்தத் திட்டம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருந்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அதற்கு எவ்வளவு மூலதனம் போட்டு, எப்பொழுது, எந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடு செயயப்பட்டிருக்கிறது ? அதற்கான அனுமதி வழங்கப் பட்டுள்ளதா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னாலேயே சொன்னேன் இது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது என்று 100 டன் நியூஸ் பிரிண்ட் செய்வதற்கான முயற்சி செய்யப்படுகிறது. அந்த முயற்சியின் பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அநேகமாக எல்லாவிடங்களிலும் இப்பொழுது யூகலிப்ட்ஸ் மரங்களை நட்டுப் பயிர் செய்கிறார்கள் அது பேப்பர் செய்வதற்கு உபயோகப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே, எந்த எந்த இடங்களில் யூகலிப்ட்ஸ் காடுகள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட இடங்களுக்கு அருகில் பேப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் தனியார் துறையில் ஒரு காகித தொழிற்சாலை அமைக்க முயற்சிகள் நடைபெறுவதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருப்பதால், அங்கே கரும்புச் சக்கை கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி அரசாங்கத் துறையில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் ஆரம்பிப்பது, அந்த ஷுகர் பாக்டரியில் கிடைக்கும் உபபொருளை வைத்துச் செய்ய வேண்டும் என்றுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நிலையில் தனியார் துறையில் என்ன முடிவு என்று பார்த்தபிறகு அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பேப்பர், அட்டை இந்தத் தொழிற்சாலைகளை எந்த அடிப்படையில் ஆரம்பிக்கிறார்கள்? சிதம்பரம் பகுதியில் ஏராளமான மூங்கில் மரங்கள் இருக்கின்றனவே, அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை நிறுவ சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மூங்கில் மரத்தைக் கொண்டு செய்வதற்குத் தமிழ் நாட்டில் தொழிற்சாலை இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தில் 50,000 டன் வரை மூங்கில் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதைவிட மூங்கில் அதிகமாக இருப்பதாக இப்பொழுது தகவல் இல்லை.

திரு. சி. நஞ்சன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் மூங்கில் அதிகம் இருப்பதாலும், நீலகிரி மாவட்டத்தில் யூகலிப்ட்ஸ் மரங்களும் அதிகமாக இருப்பதாலும், அந்த மாவட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதாலும் அந்தப் பகுதியில் ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னரே சொன்னபடி, ஏற்கனவே இருக்கும் பேப்பர் தொழிற்சாலைக்கு மூங்கில் கொடுக்கவேண்டிய ஒப்பந்தம் இருப்பதால், இன்னும் அதைக் கொண்டு தொழிற்சாலை வைக்க முடியுமா என்கிற தகவல் என்னிடம் இல்லை. இப்பொழுது அப்படிச் செய்ய வேண்டாம் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.



திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, இப்பொழுது நம் மாநிலத்தில் எத்தனை பேப்பர் தொழிற்சாலைகள் இருக்கின்றன? உற்பத்திசெய்யும் பேப்பர், அட்டைகள் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னிடத்தில் இருக்கும் தகவல்படி.

Seshasayee Paper and Boards Limited;
Sun Paper Mills Limited;
Amaravathi Sri Venkatesa Paper and Straw Boards Limited.

உற்பத்திசெய்யும் பேப்பர், அட்டைகள் எவ்வளவு என்று சொல்ல போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. அ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு வடபுரத்தில் கடற்கரையில் நீண்டகாலமாக நீலத்தநல்லூர் என்ற இடத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்போவதாக வதந்தி இருக்கிறதே, அப்படி ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட வதந்திகளை உறுப்பினர் நம்பக்கூடாது.

**கல்லாற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்தல்.**

*104 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சென்னை—திருச்சி நெடுஞ்சாலையில் கல்லாற்றின்மேல் இருக்கும் பாலத்தை அகலப்படுத்துகின்ற செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அத்தகைய செயற் குறிப்பு ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் இந்தப் பாலம் குறுகலாக இருப்பதால், விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதனை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாக இருப்பதால், உடனடியாக விரிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நம் மாநிலத்தி லுள்ள சாலைகளுக்கு மத்திய சர்க்கார் நிதி ஒதுக்கம் செய்த பிறகு நான்காவது திட்டத்தில் இந்தப் பாலங்களை விரிவு படுத்த ஆலோசிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட பாலத்தைப் பொறுத்தவரையில், இது தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களையும் இணைக்கும் பகுதியில் இருப்பதால், அதோடு இந்த இடத்தில்தான் சுங்கச்சாவடி, சோதனைச் சாவடியை வைத்திருப்பதாலும், இந்தப் பகுதியில் அதிகமான லாரிகள், பஸ்கள், கார்கள் போக்குவரத்து அதிகமாக இருப்ப

தாலும், அதனால் தடை ஏற்படுவதாலும், அதன் காரணமாகப் பெரும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதாலும், மாண்புமிகு முதல் அமைச்சருக்குக்கூட இந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்பதாலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரங்களை விட்டு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி: பொதுப்பணி அமைச்சருக்கும் விபத்து ஏற்பட்டது என்பதாலும், அப்படிப்பட்ட விபத்துக்களுக்கு ஆளாகாமல் இருக்கும் வண்ணம் அங்கே, நிரந்தரமாக அந்தப்பாலத்தை உடனடியாக அகலப்படுத்த அரசாங்கம் முன் வருமா?

திரு. கொளத்தூர் கோதண்டம்: நான் சொன்ன பாலமும், கனம் உறுப்பினர் சொல்லும் பாலமும் வெவ்வேறு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதல் அமைச்சருக்கு விபத்து ஏற்பட்டது இந்த பாலத்தில் அல்ல. நான் குறிப்பிட்டது போல, மத்திய சர்க்காரிலிருந்து நிதி ஒதுக்கம் வந்த பிறகு இந்தப்பாலத்தை அகலப்படுத்தும் வேலையைச் செய்யலாம். இப்பொழுது 20 அடி இருக்கிறது, அதை 24 அடி அகலம் செய்ய வேண்டும் என்பதுதான் பரிசிலனையில் இருந்து வருகிறது.

*Periyar and Vaigai Reservoirs.*

* 105 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the water level at Periyar lake and Vaigai Reservoir has been steadily going down during the second fortnight of the month of September 1967; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பயிரின் பருவகால தேவைக்கேற்பக் கூடுதலாக நீர் வழங்க வேண்டியதிருந்ததினாலும் குறைந்த அளவிலேயே இத் தேக்கங்களுக்கு நீர் வரத்து இருந்தமையாலும் இந்நிலைமையேற்பட்டது.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில், அயல்நாடுகளில் செய்வது போல, செயற்கை மழையை உண்டாக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

*Dam across Nambiyaru.*

* 106 Q.—Thiru T. MARTIN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal for the construction of an anicut across Nambiyar river to feed the Nambikurichikulam, Nalanthula tank, Tharuvaikulam tank, Nanthankulam tank, Erumaikulam tank, Avaikalakulam tank and Aiyankulam tank in Radhapuram sub-taluk of Tirunelveli district?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல்வேறு குளங்களுக்குத் தண்ணீர் வசதி அளிப்பதற்காக சிறிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவது பற்றிய திட்டத்தைப் பொதுப்பணித்துறை ஆய்வு செய்து வருகிறது.

திரு. டி. மார்டின்: பேரவைத்தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டாரத்தில் பஞ்ச நிவாரண வேலை செய்ய நம்பியாற்றில் அணைக்கட்டு கட்டினால், அதன் காரணமாக அங்கே உள்ள குளங்களுக்கு அதிகமான நீர் கிடைத்து விவசாயம் அபிவிருத்தி ஆகும் என்கிற காரணத்தால், அங்கே பஞ்ச நிவாரண வேலை அடிப்படையில் முன்கூட்டியே இந்த வேலைகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் கருத்தைப் பரிசீலிக்கலாம்.

**எஸ்பிளனேடிலுள்ள கதர் விற்பனை நிலையம்.**

* 107 வினா—திரு. ஏ. எம். இராஜா: } மாண்புமிகு
திரு. கொளத்தூர் கோதண்டம்:
உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எஸ்பிளனேடில் இப்போது கட்டப்பட்டு வரும் கதர் விற்பனைப் பெரு நிலையத்தின் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

(இ) ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு குறைந்த ஒப்பந்த தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ரூ. 71.15 லட்சம்.

(இ) ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஒப்பந்தப் புள்ளிகள் விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டனவா? ஆம் எனில், எந்த எந்த பேப்பர்களில் வெளியிடப்பட்டன, எந்த எந்த தேதிகளில் வெளியிடப்பட்டன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: குறைந்த டெண்டர் வரவழைக்கப்பட்டும், மீண்டும் (எஸ்டிமேட்) ரிவைஸ் செய்யப்பட்டு, பிறகு இந்த மாநில முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு

[1969 பிப்ரவரி 28

வேண்டியவர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது என்றும் நீண்ட காலமாக கட்டிடம் கட்டி முடிக்காமல் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அதற்குக் காரணம் என்ன? (குறுக்கீடு) முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் . . .

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் உறவினருக்குக் கொடுக்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. மதிப்பீடு 1962-ல் தயாரிக்கப்பட்டது. நெருக்கடி நிலை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. பிறகு 1965-ல் அனுமதி வழங்கப்பட்டது. அப்பொழுது மேலும் அது திருத்தி, அறைகள் புதிதாக ஏற்படுத்தவேண்டும் என்ற காரணத்தால், திருத்த மதிப்பீடு செய்யப்பட்டதால், அந்தச் செலவு அதிகமாகியிருக்கிறது.

மு.ப. 9-30 **திரு. எஸ். இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் கட்டுவதற்காக முதலில் மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு? கட்டடம் கட்டி முடிக்கப்படுவதற்காக இப்போது ரிவைஸ்டு எஸ்டிமேட்டின்படி மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: தலைவர் அவர்களே, முதலிலே 18.8 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கதர் அங்காடிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு 15—3—1959-ல் திட்டமிடப்பட்டது. பின்னர் திருத்திய மதிப்பீடுகளின்படி நிலங்களைக் கையகப்படுத்த வும், சென்டேஜ் சார்ஜ் முதலியவற்றிற்காகவும் சேர்த்து செலவிடப்பட்ட தொகை 76,93,157 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரசபை முன்பு 'கேரோ'

*168 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

30—3—1968-ல் திருப்பூர் நகரசபை முன்பாக 100-க்கு மேற்பட்ட பெண்கள் காலிக் குடங்களைக் கையிலேந்தி நகரசபை உறுப்பினர்களை வெளியே செல்லவிடாது 'கேரோ' செய்தனரா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்**: பேரவைத் தலைவர் அவர்களே; சென்னையிலே கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. திருப்பூரிலே நடைபெற்றதுபோல் சென்னையிலே நடைபெறாமல் தடுப்பதற்கு, சென்னையில் அதிக அளவில் தண்ணீரை சப்ளை செய்வதற்கு விசேஷ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: தலைவர் அவர்களே, இது பற்றி நேற்றைய தினம் பொதுநலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஓர் விளக்க அறிக்கை வைத்தார்கள். அதில் எல்லாம் அடங்கியிருக்கின்றன.



1969 பிப்ரவரி 28]

**திரு. சு. துரைசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக 1 கோடியே 8 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டத்தைப் போட்டார்கள். 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல் காலமாக இருந்ததால் ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் செலவழிக்காமல், அவசரம் அவசரமாகத் திட்டத்தை முடித்து, ஜனவரி மாதம் 15-ம் தேதியே தண்ணீர் வழங்க ஆரம்பித்து விட்டார்கள். தற்போது தண்ணீர்ப் பற்றுக்குறை இருக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்படாததற்கு முன்னால் இருந்த ஆட்சியும் காரணம் என்பதை இந்த அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: தலைவர் அவர்களே, அதுவும் காரணமாக இருக்கலாம், கொடுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்படாததால் ஏற்பட்ட காரணமாகவும் இருக்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி**: தலைவர் அவர்களே, கோவையிலே கூட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊரைப்பற்றிக் கேட்க ஆரம்பித்துவிடக் கூடாது. மூலக்கேள்வியை யொட்டி துணைக் கேள்விகள் கேட்க வேண்டும்.

**திரு. கே. என். குமாரசாமி**: தலைவர் அவர்களே, திருப்பூரில் குடிதண்ணீர் திட்டத்திற்காக 1 கோடியே 8 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இம்மாதிரி நகரசபைகளுக்கு ஒதுக்கப்படும் தொகை, உரிய நேரத்தில் ஒதுக்கிய தொகை முழுவதும் சரிவர செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தேவையான உத்தரவுகளை பிறப்பிக்க அவ்வப்பொழுது அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: தலைவர் அவர்களே, தேவையான உத்தரவுகளை அரசு அவ்வப்பொழுது பிறப்பித்து வருகிறது. கும்பகோணம் நகரசபைத் தலைவர் அவர்களைப்போல மற்ற நகரசபைத் தலைவர்களும் விழிப்போடு இருந்து பணியாற்றினால், அரசு ஒதுக்கிய பணத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளலாம். தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் அரசாங்கம் தேவையான இடைக்கால நிவாரணம் கொடுத்து, தண்ணீர்த் தட்டுப்பாட்டை போக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சு. துரைசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக திருப்பூர் நகரசபைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: தலைவர் அவர்களே, பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

## கீழ்குந்தா பேரூராட்சிக்குத் தேர்தல்

*109 வினா—திரு. கே. போஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள கீழ்குந்தா பேரூராட்சிக்கு உடனடியாக தேர்தல் நடத்த, அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம். கீழ்குந்தா பேரூராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்தல் நடத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## மதுரை மத்திய சிறையில் கைதியின் மரணம்

*110 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலையில் 17—7—1968 அன்று ஒரு கைதி இறந்தாரா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை என்ற பெயரால் இப்போது காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகளைப் பார்த்தால், காவல் நிலையங்கள் எல்லாம் கசாப்புக்கடைகளாக மாறிவருகின்றன. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் கூறக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகள் முன்பு பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்த முறைகள் போலவே . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் குற்றச்சாட்டுதான். குறை சொல்வதற்கு வேறு நேரம் இருக்கிறது. கேள்வி நேரத்தில் கேள்விகள்தான் கேட்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, மதுரையில் ஒரு தொழிலாளி திருடினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, காவல் நிலையத்தில் அடிபட்டு இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய சிறைச்சாலையில் ஒரு கைதி இறந்தாரா என்பது மூலக் கேள்வி. காவல் நிலையத்தில் இறந்தார் என்று அங்கத்தினர் கூறுவதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு கேள்விகள் கேட்கக்கூடாது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## *Posts of Police Constables.*

*91 *Q.*—Dr. H. V. HANDE:
Thiru K. VINAYAKAM: } Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) the date from which the recruitment to the posts of constables has been temporarily suspended; and

(*b*) the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) காவலர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பது 14—12—1967 முதல் 28—7—1968 வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

(இ) தமிழ்நாட்டுச் சிறப்புக் காவல் படை கலைக்கப் படவிருந்ததால் அதில் எச்சாகவிருந்த காவலர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்காகப் பதவிகளைக் காலியாக வைத்திருக்கும் நோக்கத்துடன் காவலர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பது நிறுத்தப் பட்டது.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் உத்தியோக உயர்வு பெற்றவர்கள் மீண்டும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பரவலாகப் பேசப்படுகிறதே, உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, போலீஸ் படையுடன், மலபார் தனிக் காவல் படையை இணைக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுதான் இது.

Thiru T. MARTIN: May I request the Hon. Minister to state how many constables were recruited after the temporary bar?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 641 பேர்.

திரு. ந. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் அட்டெண்டர் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைத்தான் எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. நாட்டிலே லட்சக்கணக்கான பேர்கள் S.S.L.C படித்துவிட்டு வேலைவாய்ப்புகள் இன்றி இருக்கின்றார்கள். ஆகவே, காவலர் பணிக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் இருக்கும் என்பதை உணர்ந்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களையே எடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காவலர் பணிக்கென தனிப்பட்ட சில தகுதிகள் இருக்கின்றன. காவலர் பணிக்கு கல்வித் தகுதி 8-வது படிப்பும் இருந்தால் போதும். தனிப்பட்ட தகுதிகளாக உயரம் 128 செ.மீ. இருக்க வேண்டும்,

மார்பு அகலம் 81–86 செ.மீ. இருக்க வேண்டும். இந்தத் தனிப் பட்ட தகுதிகளோடு இருப்பவர்களைத்தான் காவல் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். 8-வது படிவம் பூர்த்தி செய்தவர்களே இந்தப் பணிக்குப் போதும் என்பதால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைப் பற்றிப் பிரச்சினை எழவில்லை.

**திரு. நா. காசிராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மலபார் ஸ்பெஷல் படை தேவையில்லையென்ற காரணத்தினால் கலைக்கப் பட்டதா, எத்தனைபேர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டனர்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மலபார் தனிக் காவல் படையைச் சேர்ந்தவர்கள் 641 பேர். அவர்களில் ஒரு ஜமேதார், 14 காவலர்களைத் தவிர மற்றவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டனர்.

### தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம்

*92 வினா.—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்களின் (Secretariat N.G.G.Os') சங்கத்திடமிருந்து தொழிற்சங்க உரிமைகள் வழங்க வேண்டுமென கோரி ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) & (இ) இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்திய ஃபண்டமெண்ட்டல் ரூல்ஸ்—அடிப்படை விதிகள்தான்—இப்போது அமலில் இருக்கின்றன. இன்றைய நிலைமைக்கேற்ப, தொழிலாளர்களுக்கான தொழிற்சங்க உரிமை வழங்குதல் போன்ற நிலைமைக்கேற்ப ஃபண்டமெண்ட்டல் ரூல்ஸை மாற்றி, புது விதிகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 1960–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான ஃபண்டமெண்ட்டல் ரூல்ஸ் விதிகளில் 4-எல், 4-எம் விதிகளின்படி, அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதோ, வேலை நிறுத்தம் செய்வதாக எச்சரிக்கை செய்வதோ கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க உரிமைகளைக் கருத்திற் கொண்டுபோனால், இந்த விதிகள் உயிர் அற்றுப் போகும்.

**திரு. செஞ்சி. வெ. முனுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு தொழிற்சங்கத்தின் உரிமைகள் கொடுக்கப்படாவிட்டாலும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் படியான ஓவர்டைம் அலவன்ஸ், போனஸ் கொடுப்பது, இரகசியக் குறிப்புகளை ஒழிப்பது போன்றவற்றையாவது அரசாங்கம் செய்யுமா?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசுப் பணியாளர்களுடைய கோரிக்கைகளை இப்போது அரசு கவனித்து வருகிறது.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether this Government has taken any final step regarding the proposal pending before it for payment of fixed medical allowance to its employees and also the abolition of the personal file system which is now prevalent in this State?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட கோரிக்கை வந்தால் ஆராயப்படும்.

### *Gambling in Madras City*

*93 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the Government are aware of the fact that of late, gambling in street corners in the Madras City is regularly conducted; and

(b) if so, the steps taken to prevent such offences?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் ரெக்ரியேஷன் க்ளப் வைத்து உண்மையாகவே சூதாட்டம் ஆடுகிறார்கள். சட்டம், காவல் துறை போலீசார் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. உண்மையாகவே வசதி இல்லாதவர்கள் பொழுதுபோக்குக்காக சீட்டாடினால் கூட சூதாட்டம் ஆடுவதாகப் பிடித்துப் போய்விடுகிறார்கள். இதைத் தடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பொழுதுபோக்குக்காக ஆடுகின்றதை யாரும் தடுப்பதில்லை. அவர்கள் கைது செய்யப் படுவதுமில்லை. சூதாட்ட முறையில் பணம் வைத்து ஆடுகின்றது தான் தடுக்கப்படுகிறது.

**திரு. ரா. ராமசந்திர துரை:** ரெக்ரியேஷன் க்ளப் என்று இருக்கக் கூடிய இடங்களில் உண்மையிலேயே பெரிய சூதாட்டம் நடைபெறுகிறது. அம்மாதிரி இடங்கள் சிலவற்றுக்குத்தான் போலீசார் சென்று அரஸ்டு செய்கிறார்கள். சிலவற்றுக்குப் போவதே இல்லை என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி இடங்கள் எல்லாவற்றுக்கும் சென்று நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படித் தகவல் எதுவும் வரவில்லை. எந்த இடத்தில் சூதாடினாலும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இப்போது சென்னையில் ஒரு பயங்கரமான நிலைமை வளர்ந்துகொண்டே போகிறது. தெருக்களில் எல்லாம் சூதாட்டம் நடைபெறுகிறது. தெருவில் ஓரிடத்தில் சூதாட்டம் நடைபெறுகிறது என்றால் அந்தப் பகுதி காவல் நிலையத்திற்குச் சுங்கம் கட்டிவிட்டால் அவர்கள் அதைத் தடுப்பதில்லை என்று பேசப்படுகிறது. 6 மாதங்களுக்கு முன்புகூட எலிபண்ட் கேட் பகுதியில் போலீஸ் நிலையத்திற்குச் சுங்கம் கட்டவில்லை என்பதாக ஒருவர் தடுக்கப்பட்டு அது அடிதடியில் போன விஷயம் சர்க்காருக்கு வந்திருக்கிறது. இதுபற்றி லெட்டர்ஸ் டு தி எடிட்டர் பகுதியிலும் வருகிறது. ஆகவே, தெருக்களில் நடைபெறும் சூதாட்டங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தச் சூதாட்டங்களைத் தடுக்கின்ற வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை சம்பந்தமான குறிப்புக்களைக் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். 1965-ஆம் ஆண்டு தெருக்களில் நடைபெற்ற சூதாட்டம் என்ற வகையில் எடுத்துக்கொண்ட வழக்குகள் 1023, வீடுகளில் நடைபெற்ற சூதாட்ட வழக்குகள் 282. 1966-இல் தெருக்கள்—வழக்குகள் 10, 219, வீடுகள் —315, 1967-இல் தெருக்கள் —8,553, வீடுகள் 243, 1963-இல் தெருக்கள்—14288 வீடுகள்—180 இந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல போலீஸ் சாவடிகளுக்குச் சுங்கம் கட்டிவிட்டு தெருக்களில் ஆடுகிறார்கள் என்கிற விவரம் இருந்தால் அதுபற்றிய புகார்கள் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினர்களும், பொதுமக்களும் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்து அவ்வப் போது இதுபற்றிய புகார்களை அனுப்பி உதவினால் இந்த அரசு தயவு தாட்சண்யம் இன்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அர். கருப்பையா :** சென்னையில் நடைபெறுவது போல கிராமங்களிலும் சூதாட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சாராயக் கடைகளே இல்லாத கிராமங்கள் இல்லை. அது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சூதாட்டத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் சாராயத்தைப் பற்றி எல்லாம் கேட்கக்கூடாது.

**திரு. அர். கருப்பையா :** போலீஸ்காரர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை காரணம் ? வருடந்தோறும் போலீஸ் நிர்வாகம் சரியில்லை என்று சொல்கிறார்கள். எனவே உடனடியாக இதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்களது கேள்விக்குச் சொன்ன பதிலையே தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் உதவி புரிந்தால் நல்ல முறையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** வீடுகளில் பிடிக்கப்பட்ட கேஸ்களை விட தெருக்களில் பிடிக்கப்பட்ட கேஸ்கள் தான் அதிகம். வீடுகள் என்கிறபோது கூட ஏழை எளியவர்களின் வீடுகளில் தான் பிடித்திருக்கிறார்கள். பணக்காரர்கள் ** போன்ற இடங்களில் சூதாட்டம் ஆடுகின்றதை போலீஸ்காரர்கள் தடுப்பதில்லை. அரசாங்கம் சூதாட்டத்தைத் தவிர்ப்பதற்காகவே என்று ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டு பெரிய பெரிய பங்களாக்களிலும் நடைபெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கனம் உறுப்பினர் கேள்வி போடுகிறபோது ** என்பதாக பெயர்சுட்டிக் குறிப்பிடுவது முறை அல்ல. பொதுவாக க்ளப் என்று சொன்னால் போதும். அவர் சுட்டிய பெயர்மட்டும் நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு குற்றத்தையும் கண்டுபிடிப்பதற்கு என்று தனித்தனியாக போலீஸ் பிரிவை ஏற்படுத்த முடியாது. எங்கெங்கு சூதாட்டம் நடைபெறுகிறது என்கிற விவரம் தெரிகிறபோது உறுப்பினர்கள் அதை எழுதினால் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். பொதுமக்களும் குற்றவாளிகளைப் பிடித்துக்கொடுப்பதில் போலீஸ் அதிகாரிகளுக்குத் துணை புரிய வேண்டும்.

## *Inam Estates Act*

* 94 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether any representation has been received by the Government about the 10th March 1968, on the question of the amendment made to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 36 of 1963); and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(ஆ) நில உடைமையாளர்கள் நேர்முகமாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளாரா எனச் சோதித்துப் பார்த்த பின்னர் அவர்களுக்குப் பட்டா வழங்குவதைப் போன்று சமய நிறுவனங்களுக்கும் அம்முறையை பின்பற்றவேண்டுமென்று அதில் முறையிடப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழ்நாடு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரி மாற்றச்) சட்டம் தக்க முறையில் திருத்தப்பட வேண்டும்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** மெட்ராஸ் இனாம் எஸ்டேட் ஆக்டினுடைய நோக்கத்திற்கு எதிரிடையாக அதன் பயனை விவசாயிகள் பெற முடியாதபடி அமெண்ட்மெண்ட் இருப்பதால், இதை நீக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தமாதிரியான நிலைமை வந்ததற்குக் காரணத்தைப் பார்க்கவேண்டும்.

According to the original provision in section 9 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, the landholder of an inam estate has to prove the cultivation test for a period of 3 years within a continuous period of 12 years before 1st April 1960, if he has to get a ryotwari patta in respect of a private land. On repeated representations from several religious institutions and on the recommendation of the Board of Revenue, the Government amended this section so that religious institutions can get patta without proof of personal cultivation test. This amending legislation was undertaken in consultation with the Government of India also. The main reason for undertaking this amending legislation was that due to certain administrative instructions issued by the Hindu Religious and Charitable Endowments Department, religious institutions were prevented from resorting to personal cultivation. The present representation is that the original provision that the religious institutions also should prove personal cultivation test should be restored, as otherwise there will be a discrimination between the ryots in inam estates owned by the religious institutions and inam estates owned by other landholders. On a suggestion from the Hon. Minister for Law, it is being re-examined.

### மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

* 95 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மதுராந்தகம் வட்டத்தை செய்யூர் உப வட்டம் என்று பிரிக்கிற வகையில் 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆய்வு செய்யப்பட்டது என்று பேசப்படுகிறதே, அது உண்மைதானா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.



**திரு. தே. கேசவலு :** ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால் என்ன என்ன தகுதிகள் இருக்கவேண்டும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க இவை தான் தகுதிகள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. மாவட்ட நிர்வாகத்தை நல்லமுறையில் அமைக்க புதிய மாவட்டங்களை ஏற்படுத்தலாமா என்பது பற்றி எல்லாம் பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அது சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதில் பல நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிர்வாகம் செம்மையான முறையில் அமைய ஒரு மாவட்டம் 20 லட்சம் ஜனத்தொகைக்கு மேற்படக் கூடாது, 20 ப்ளாக்குகள்தான் இருக்கவேண்டும். சிறிய ஜில்லாக்களாக இருந்தால் கலெக்டர் நல்ல முறையில் நிர்வகிக்க முடியும். புதிய மாவட்டங்கள் என்று அமைக்கிறபோது சரித்திர பூர்வமாக, பூகோள்பூர்வமாக, அந்த அந்த பகுதியில் பிற்போக்கு நிலைமைக்கும் ஏற்றவகையில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் எப்படி எப்படி அமைக்கப்படலாம் என்பதுபற்றி பரிந்துரை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### சென்னை கலெக்டர் அலுவலகக் கட்டடம்

* 96 வினா.—திரு. [redacted] எஸ். [redacted] இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை கலெக்டர் அலுவலகம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையிலிருப்பதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லையானால் அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) & (இ) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடம் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தகுதியற்ற நிலையிலோ அல்லது அபாயமான நிலையிலோ இல்லை. ஆனால், தற்போதுள்ள சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள பழைய உயர்நீதி மன்றக் கட்டடம் உள்ள இடத்தில் அதற்குப் பதிலாகப் பல அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கான செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள அந்தக் கட்டடத்தைக் கட்டடப் பொறியியல் வல்லுநர் சோதனையிட்டுப் பார்த்தார்களா ? அப்படியானால் அந்தக் கட்டடம் எவ்வளவு காலம், எத்தனை ஆண்டுகளுக்குத் தாங்கும் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் ? பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கள். அது எப்பொழுது கட்ட ஆரம்பிக்கப்படும், அதுபற்றி என்ன நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தக் கட்டடம் மிகப் பழைய கட்டடமதான். கட்டடப் பொறியியல் வல்லுநர் அதைப் பார்த்து சரியான கட்டடம்தான் என்று சொன்னார்கள். இருந்தாலும் அது ராபர்ட் கிளைவ் காலத்திலே கட்டப்பட்ட கட்டடம், ராபர்ட் கிளைவ்னுடைய அலுவலகங்கள் எல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன; சரியாகத்தான் இருக்கிறது என்று அவர்கள் சொன்னாலும், புதிதாக ஒரு பெரிய எழில் மாடம் கட்டுவதற்குப் பரிசீலனை செய்யககூடிய செயற்குறிப்பு இருக்கிறது. இதற்காக மூன்று திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடியே எழுபத்தி இரண்டு லட்ச ரூபாய் அளவில் ஒரு வகையான திட்டத்தையும், ஒரு கோடியே நாற்பத்தி ஏழு லட்ச ரூபாய் அளவில் ஒரு வகையான திட்டத்தையும், ஒரு கோடியே எழுபத்தி இரண்டு லட்சத்தில் இன்னொரு வகையான திட்டத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். இதிலே ஒருகோடியே நாற்பத்தி ஏழு லட்ச ரூபாய் அளவில் உள்ள திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதனபடி முதல் கட்டமாக நான்கு ஏழடுக்கு மாடிக கட்டடங்கள் கட்டுவதற்கு ஆன செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது; 1969-70-இல எடுத்துக்கொளளப்படுவதற்கு ஆலோசனை செய்யப்படுகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகம் கார்ப்பரேஷனுக்கும், கலெக்டர் ஆபீஸுக்கும் பாதிப் பாதியாகப் பிரிந்து இருக்கிறது. இதை வைத்துப் பார்க்கிற நோக்கிலே அமைசசர் அவர்கள் தெரிவித்தபடி ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவுசெய்து இப்பொழுது இருக்கிற அந்தக் கட்டடத்தைப் புனராலோசனை செய்வதற்குப் பதிலாக கார்ப்பரேஷனுக்குப் பக்கத்திலே சில லட்ச ரூபாய் செலவிலே ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த அடிப்படையிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. இப்பொழுது அந்தக் கட்டடம் நல்ல நிலையில் இருந்தாலும் சில காலத்திற்குள் அது உடைந்துவிடலாம் என்பதையொட்டியும், துறைமுகத்திற்குச் சமீபமான இடமாக அது இருப்பதாலே, மிகவும் முக்கியமான கேந்திரமாக அது இருப்பதாலே அங்கே அப்படிப்பட்ட ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டினால் கலெக்டர் ஆபீஸ் அல்லது வேறு பல அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலகங்களை—வணிகவரித் துறை அலுவலகங்கள் போன்றவை இப்பொழுது வீடகைக் கட்டடங்களிலே வட சென்னையிலே இருந்துகொண்டிருக்கின்றன—அங்கே வைத்து, மேலும் அவற்றை வர்த்தக நிறுவனங்களுக்கும்



வாடகைக்கு விட்டு இந்த 1½ கோடி ரூபாயைச் சரிசெய்துவிட முடியும். எனவே, அது விரயம் அல்ல. துறைமுகப் பகுதியிலே இந்தக் கட்டடம் அமைந்தால் வேறு பல நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்தலாம் என்ற அடிப்படையிலே தான் இது கட்டப்படுகிறது.

**திரு. இராம அரங்கண்ணல் :** இந்த 1½ கோடி ரூபாய் செலவில் கட்டப்போவதாகச் சொல்லப்படுகிற கட்டடத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது முடிவு எடுக்கப்பட்டு விட்டதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆலோசனைக்கும், முடிவுக்கும் நமது உறுப்பினர் அவர்களுக்கு வித்தியாசம் தெரியும். முடிவு எடுக்கப்பட்டது என்றால் முடிவு செய்யப்பட்டு விட்டது என்று பொருள். ஆலோசனையில் இருக்கிறது என்றால் அது இந்த வருடம் வரலாம், வராமல் போகலாம், அல்லது அடுத்த வருடம் வரலாம், வராமல் போகலாம் என்றெல்லாம் குறிக்கும்.

**திரு. பெ. சீனிவாசன் :** இப்பொழுது கட்டப்பட இருக்கிற கட்டடத்தை நகரத்தின் வேறு இடத்திலே கட்ட அரசாங்கம் உத்தேசிக்குமா ? இப்பொழுது இருக்கிற இடத்திலே கட்டினால் அது ஓரமான இடத்திலேயும் நெருக்கடியான இடத்திலேயும் இருக்கிறது. எனவே அந்தப் புதிய கட்டடத்தை வேறு நல்ல பகுதியிலே கட்ட அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த இடம் நகரத்திலே ஒரு கேந்திரமான இடம். இப்பொழுது இருக்கிற கட்டடம் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாலு வருஷம் கழித்து மீண்டும் கட்டப்பட வேண்டும். மணிநகரப் பள்ளியிலே ஏற்பட்ட நிகழ்ச்சி மாதிரி உடைந்து விழுந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. கலெக்டர் ஆபீஸுக்காக மட்டும் நாம் இதைக் கட்ட உத்தேசிக்கவில்லை. போர்டு ஆப் ரெவின்யூவைப்போல் பல வணிக வரி அலுவலகங்கள் இங்கே கொண்டுவரப்படலாம். இதனால் நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. மற்ற நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடுவதின் மூலம் 10 வருஷங்களுக்குள்ளே அதற்காகச் செலவு செய்யப்படும் பணத்தை சம்பாதித்துவிடலாம் என்ற அடிப்படையிலேதான் இதுபற்றி ஆலோசனை செய்யப் பட்டு வருகிறது.

## விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி

* 97 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விதைப் பண்ணைக்கு உருளைக்கிழங்கு விதைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நாட்டிலிருந்து ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ): அரசாங்க விதைப் பண்ணைகளில் பயிரிட்டுப் பெருக்கிக் குடியானவர்களுக்கு வழங்கப்படுவதற்காக வெளிநாடுகளிலிருந்து உருளை விதைக் கிழங்குகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆனால் சோதனை செய்து பார்ப்பதற்காக மட்டுமே உருளை விதைக் கிழங்குகளில் பல வகைகள் ஹாலந்து, மேற்கு ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்க நாடுகள், அயர்லாந்து, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஓரளவு இறக்குமதி செய்யப்படுகின்றன.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இறக்குமதி செய்யப் பெறுகின்ற விதையின் அளவு என்ன ? இறக்குமதி செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபாய் மதிப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆராய்ச்சிக்காக ஓரளவு தான் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனுடைய மொத்தம் எவ்வளவு என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் மொத்தம் வரவழைக்கப்பட்டது எவ்வளவு என்பதுபற்றிச் சொல்லலாம்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தற்போது அரசாங்கம் உயர்ந்த மலைப் பிரதேசமான நீலகிரி போன்ற இடங்களிலேதான் உருளைக்கிழங்கு நட ஏற்பாடு செய்திருக்கிறது. வட ஆற்காடு மாட்டத்தில் அதற்குச் சாத்தியமான உயர்ந்த பிரதேசமாக ஜவ்வாது மலை இருக்கிறது. அங்கே இதைப் பயிரிட ஆராய்ந்து ஏற்பாடு செய்யப்படுமா ? அது மட்டுமல்லாமல் சமவெளிப் பிரதேசங்களிலும் இதைப் பயிரிட பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உருளைக்கிழங்கு அதிக உயரமான பகுதிகளிலேதான் விளையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று சமவெளிகளிலே உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் சர்க்கரைவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யலாம்.

**திரு. நா. காசிராமன் :** உருளைக்கிழங்குப் பயிர்களுக்குச் சமீப காலத்திலே ஒருவிதமான வியாதி வந்து அதனால் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிய வருகிறது. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். கோல்டன் நெமடோட் என்ற வியாதியால் அந்தப் பயிர்களுக்குப் பாதிக்குமேல் பாதகம் ஏற்பட்டது. அதற்காக மேற்கு ஜெர்மனி சர்க்கார் சுமார் 2 கோடிக்கு மெஷினரியாகவும், உரமாகவும், பூச்சி மருந்தாகவும் வழங்கியிருக்கிறார்கள். நம்முடைய சர்க்காரின் சார்பில் அதற்காக 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வியாதியைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பூமியின் அடிப் பகுதிக்கு





மருந்து செலுத்துவதற்காக பவர் டிரில்லர்களுடன் அட்டாச் செய்யப்பட்ட இன்ஜெக்ஷன் செய்கின்ற முறையும் கையாளப் படுகின்றது. ஜெர்மனியிலிருந்து கிடைத்த உதவியின் மூலம் நல்ல பலன் இதில் ஏற்பட்டிருக்கிறது நீலகிரி மலையிலே.

### கொறுக்கை கால்நடைப் பண்ணை

* 98 வினா.—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி ‘கொறுக்கை’ கால்நடைப் பண்ணைக்கு மொத்தமுள்ள கால்நடைகள் எத்தனை ?

(இ) இந்தப் பண்ணைக்குச் சொந்தமான சாகுபடி நிலம் எத்தனை ஏக்கர் ?

(உ) இந்தப் பண்ணையில் பால் வணிகம் நடைபெறுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) கொறுக்கை கால்நடைப் பண்ணையில் (உம்பளச்சேரி) மாடுகள் 432 உள்ளன.

(இ) பண்ணையின் மொத்தப் பரப்பளவு 493.48 ஏக்கரா.

(உ) ஆம்.

**திரு. ந. தருமலிங்கம் :** அகில இந்திய கால்நடை இனத்தில் சேர்க்கப்பட்டுள்ள மிக முக்கியமான கால்நடை-இனம் உம்பளச் 10-00 மு.ப.
சேரி கால்நடை இனம். இதைப் பேணிக் காக்கவும், வளர்க்கவும் கொறுக்கை கால்நடைப் பண்ணை பயன்படுத்தப்பட வேண்டும். இப்போது இந்தக் கால்நடைகளை வெளியிலிருந்து வந்து கசாப்புக்காக வாங்கிக் கொண்டு போய்விடுவதாகத் தெரிகிறது. இதனால் அந்த இனம் அழிந்துவிடுமோ என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் கவலைப்படுகின்றார்கள். இதைத் தவிர்க்க தஞ்சை மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் தக்க முடிவு எடுத்து இந்த உம்பளச்சேரி இனம் கசாப்புக் கடைக்கு அனுப்பப்படாமல் இருக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கொறுக்கையில் உள்ள உம்பளச்சேரி இன கால்நடைப் பண்ணையை மூடிவிடலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனையின்பேரில் நானே நேரில் சென்று பார்த்ததில் இந்த உம்பளச்சேரி இனம் காக்கப் படக்கூடிய இனம் என்று உணர்ந்த காரணத்தால் பண்ணையை மூடாமல் பண்ணையை அபிவிருத்தி செய்யத் தகுந்த அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த உம்பளச்சேரி இனத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** இந்த உம்பளச்சேரி இன மாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அதிகாரிகளிடத்தில் சொல்லும்போது, பால் அதிகமாகக் கொடுக்கும் இனத்திற்குத்

தான் முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும், கடின உழைப்புக்காக இருக்கிற உம்பளச்சேரி இனத்தைப் பற்றி அதிகக் கவனம் செலுத்துவதற்கில்லை என்றும் ஸ்டேட் டூர் சென்றபோது அதிகாரிகள் நேரிலேயே சொன்னார்கள். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரை உம்பளச்சேரி இனத்தைப் போல் வேறு எந்த மாடும் வேலை செய்ய முடியாது. ஆகவே, அந்த இனத்தை அபிவிருத்தி செய்ய ஒரு சலுகை கொடுக்க வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மிகவும் துணையாக இருக்கக்கூடிய உம்பளச்சேரி இனம் அழிக்கப்பட நிச்சயமாக அரசாங்கம் துணைபோகாது. உம்பளச்சேரி இனத்தில் பால் அதிகமாக கிடைக்காவிட்டாலும் கடின உழைப்பிற்கு அது மிகவும் தேவையாக இருக்கிறது. எனவே, அந்த இனத்திற்கு எந்தவித அபாயமும் ஏற்படாதிருக்க வழி செய்வதோடு அதை அபிவிருத்தி செய்வதிலும் கவனம் செலுத்தப்படும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** கொறுக்கை கால்நடைப் பண்ணைக்குச் சொந்தமான நிலங்களில் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்து வருகிறார்கள் ? கீழ்த் தஞ்சையில் உளை அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களில் உம்பளச்சேரி இனந்தான் சிறமையாக வேலை செய்ய முடியும். ஆகவே, அந்த இன மாடுகளை அபிவிருத்தி செய்ய ஊக்கம் காட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. மணி அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னது போல் அந்த இனத்தைப் பாதுகாப்பதோடு அபிவிருத்தி செய்வதிலும் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பண்ணையின் நிலங்கள் நல்ல முறையில் சாகுபடி செய்வதற்குரிய நிலங்களாக இல்லாமல் உப்புக் கலந்த நிலமாக இருப்பதால் 10 ஏக்கர் வரைதான் விளைச்சல் தரக்கூடிய நிலை இருக்கிறது. மற்ற நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.



## 2. நடைமுறைக் கேள்வி

*பேரவைத் தலைவரின் அறையில் அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி அவையில் குறிப்பிடுதல்.*

DR. H. V. HANDE : On a point of order, Sir. With regard to the strike in the Veterinary College, I have given notice of an adjournment motion. May I request the Hon. Speaker to read out the motion and then . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் மீது முடிவெடுக்கின்ற முறையைத் தீர்மானிப்பது பேரவைத் தலைவரைப் பொறுத்தது. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எந்த அளவிலே எடுத்துக் கொள்ளப் பட வேண்டும், பேரவைத் தலைவருடைய அறையிலேயே தீர்ப்புக் கொடுப்பதா அல்லது அவைக்குக் கொண்டு வர அனுமதித்து அதற்குப் பிறகு தீர்ப்புக் கொடுப்பதா என்பதெல்லாம் பேரவைத் தலைவரின் முடிவைப் பொறுத்ததாகும். அதைப் பற்றி இங்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மெம்பர்கள் அட்ஜெர்ன் மெண்ட் மோஷன்கள் கொடுத்து அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வழக்கம்போல் தள்ளுபடி செய்தாலும் கூட, அந்த மெம்பர் அதைப் படிக்க ஒரு வாய்ப்புக் கொடுத்தால் கொண்டு வந்த நோக்கத்தை சர்க்கார் ஓரளவுக்கு உணர்ந்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படுவதோடு கொண்டு வந்தவர்களுடைய கட்சிக்கும் ஒரு பிரசாரமாக அது அமைகிறது. அந்த ஒரு சிறு உரிமையை மெம்பர்களுக்குக் கொடுத்துத் தாங்கள் அதைச் சேம்பரில் தள்ளுபடி செய்வது நல்லது. தலைவர் அவர்கள் எங்கள் கட்சிக்கு அனுதாபத்தோடு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எந்தெந்தப் பொருள்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எந்தெந்தப் பொருள்களை இந்த அவையில் கொண்டு வரலாம் என்பதையெல்லாம் பரிசீலித்து சிலவற்றை இந்த அவையிலே கொண்டு வந்து படிக்கச் செய்து தள்ளிவிடுவதும், அவையில் கொண்டு வரக்கூடாத நிலையில் உள்ள சிலவற்றை பேரவைத் தலைவரின் அறையிலேயே தள்ளிவிடுவதும் பேரவைத் தலைவரின் முடிவைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இந்த அவைமுன் கொண்டு வருவதற்கு உகந்ததல்ல என்ற காரணத்தால் அறையிலேயே தள்ளப்பட்டது.

DR. H. V. HANDE : I shall explain my stand. I am deeply hurt that this important thing called the Veterinary College strike which I want to bring to the notice . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு ஒரு பொருள் முக்கியமாக இருக்கலாம். அவ்வாறு உங்களுக்கு முக்கியமாக இருக்கிற பொருளை பேரவைத் தலைவர் அவர்கள், முக்கியமானது

அவையில் சொல்லக்கூடிய நிலைமையில் உள்ளது என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் அறையிலேயே தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு அந்தத் தீர்ப்பை பெற மறுத்து மீண்டும் அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்புவது இந்த மன்றத்தின் மரபைக் காப்பதாக இருக்காது.

DR. H. V. HANDE : As a mark of expressing my deep regret, with great anguish I wish to stage a Walk-out on the issue of the Veterinary College strike. I am walking out alone and not my party, because the subject happens to pertain to my constituency.

(டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மட்டும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

### (3) கவன ஈர்ப்பு

### (அ) சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து ஜப்பானியக் கம்பெனி முகவர்களுடன் நடந்த உரையாடல்கள்

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the talk with the Japanese Firm Delegation about the 16th November 1968 on the question of Salem Steel Plant.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கீழ்க்கண்ட அறிக்கையை அறிவிக்க முன் வருகிறேன்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த திரு. மாருபேனி-ஐடா கம்பெனி நிறுவனம் கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களை மேம்படுத்துவதில் இரும்புக்கனி உருள்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வந்துள்ளது. அக் கம்பெனியின் முகவர்கள் 1968, நவம்பர் 15-ல் முன்னாள் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். இவ்வுரையாடல்கள் பொதுத் தன்மை வாய்ந்தவை. ஜப்பானில் இப்போது தொடர்ந்து நடைபெற்றுவரும் சோதனைகளின் முடிவுகள் கிடைத்த பின்னர் இதுபற்றி மேற்கொண்டு விவாதிக்கலாமென ஒப்புக் கொள்ளப்பட்டது. இம்முடிவுகள் இப்போது பெறப்பட்டுள்ளன; திட்ட அதிகாரிகள் இம் முடிவுகள் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலை எப்போது உற்பத்தியை ஆரம்பிக்கும் ? உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்கும் ? அங்கு உற்பத்தியாகும் இரும்புக்குத் தற்போது நம் நாட்டிலே தேவை எப்படி இருக்கும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தாதுப் பொருளை எப்படி எடுப்பது, எப்படிப் பயன்படுத்துவது என்ற முதல் முயற்சிகளுக்குத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு உருக்காலை அமைப்பது பற்றி மத்திய அரசு; திட்டக்குழு பரிசீலித்த பிறகுதான் விவரங்களைக் கூறமுடியும்.



### (ஆ) நாகப்பட்டினம் இந்திய எஃகு உருட்டு உருளை ஆலைக் கதவடைப்பு முயற்சியும், தொழிலாளர் பிரச்சினையும்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் ஸ்டீல் ரோலிங் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களை சம்பளம் குறைத்துக்கொள்ளும்படியும், வேலைப் பளுவை ஏற்றுக்கொள்ளும்படியும் நிர்ப்பந்தம் செய்வதும் அப்படி ஏற்கவில்லையென்றால் கதவடைப்பு செய்யப்போவதாக சொல்வது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாகப்பட்டினத்திலுள்ள இந்திய எஃகு உருட்டு உருளை ஆலையின் நிர்வாகத்தினர், 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித்துறைகளின்படி, 1968, டிசம்பர், 31-ம் நாள் முதற்கொண்டு தங்கள் தொழிற்சாலையை மூடிவிடும் எண்ணத்தைத் தெரிவித்து அறிவிப்புக் கொடுத்தனர். எஃகுக் கட்டைகள் பெற இயலாத நிலைமையாலும், இம்மாநிலத்திலுள்ள மற்ற எஃகு உருட்டு உருளை ஆலைகளின் பெரும் போட்டியினாலும், உற்பத்திச் செலவுகள் மிகவுயர்ந்திருப்பதனாலும் பெரும் இழப்பு ஏற்படுவதனாலும் தங்கள் தொழிற்சாலையை மூடிவிடுவதாகத் தெரிவித்தனர். 600 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் துன்புறுவர் என்பதால், இச்சிக்கலில் தலையிட்டு அந்த ஆலையை மூட வேண்டாமென்று அந்த நிர்வாகத்திற்கு அரசாங்கம் அறிவுரை கூறுமாறு நாகப்பட்டினத்திலுள்ள நாகப்பட்டினம் எஃகு உருட்டு உருளை ஆலைத் தொழிலாளர் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

2. அடுத்து, 22-12-1968-ல் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், அந்த ஆலை நிர்வாகத்திற்கும் நகப்பட்டினம் எஃகு உருட்டு உருளை ஆலைத் தொழிலாளர் சங்கத்திற்கும் இடையே தீர்வு காணப்பட்டது. சென்னைத் தொழிலாளர் துறை தனித்துணை ஆணையாளர். முன்னிலையில் இத் தீர்வு ஏற்பட்டது. இதன்படி அந்த நிர்வாகத்தினர் தற்காலிகமாக தொழிற்சாலை மூடப்படும் அறிவிப்பை ரத்து செய்தனர்.

3. எஃகுக் கட்டைகள் பெறுவதில் ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாட்டின் காரணமாக, நாகப்பட்டினம், இந்திய எஃகு உருட்டு உருளை ஆலைக்கு மாதம் ஒன்றுக்கு மூன்றுயிரம் டன் எஃகுக் கட்டைகளைத் தவறாமல் வழங்குமாறு இரும்பு, எஃகுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு இந்திய அரசு தேவையான கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று இம் மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : உண்மையில் எஃகுக் கட்டைகள் வாங்க முடியவில்லை என்பதல்ல பிரச்சினை. அந்தத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பஞ்சப் படியைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில்தான் உடன்பாடு ஏற்பட்டு ஓரளவிற்குப் பஞ்சப் படியைக் குறைத்துக் கொண்டதற்குப் பிறகுதான் ஒரு உடன்பாடு காண முடிந்தது. அதேபோல் அந்தத் தொழிலாளர்களுக்கு சில சலுகைகள் செய்ய வேண்டும் என்பதும் அந்த உடன்பாட்டில் உண்டு. பஞ்சப் படியைக் குறைத்துச் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவிற்குத்தான் அந்த முதலாளிகள் முன்னுக்கு வந்தார்களே யொழிய அவர்களுக்குச் செய்யவேண்டிய சலுகைகளை நடைமுறைக்குக் கொண்டு வராத காரணத்தினால் அவர்கள் மீண்டும் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களென்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : புதிதான கருத்துக்களைச் சொல்லி விடாதீர்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : அதே முதலாளிக்குச் சொந்தமான திருநின்றவூரில் இருக்கக் கூடிய இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்லிலும் தொழிலாளர்களுக்குள்ள சலுகைகளை மறுக்கும் தன்மையில் 18-2-1969-ல் லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு காங்கிரஸ் முதலாளி. அவர்கள் ஒரு பெரிய முதலாளி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்தமாதிரி குற்றச்சாட்டு சாட்டக் கூடாது. அதைத் திரும்பப் பெறுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : அந்தத் தொழிலாளர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 41-வது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்தபின் அந்த அறிக்கையின்மீது ஏதாவது விளக்கம் பெற ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாமே தவிர புதுக் கருத்துக்களைச் சொல்வது, அதன் மீது ஒரு விவாதத்தை உருவாக்குவது இவை யெல்லாம் முறையல்ல. கொடுக்கப் பட்டிருக்கிற அறிக்கைமீது தெளிவுபெற வேண்டுமானால் அதைப் பொறுத்து இரண்டொரு கேள்விகள் மட்டும் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இந்த முதலாளிக்குச் சம்பந்தப் பட்ட தொழிற்சாலைகள் வேண்டுமென்றே மூடப்படக்கூடிய அளவிற்கு, ஒரு தொழிற்சாலையில் லாக் அவுட் செய்து இன்னொன்றில் ஒப்பந்தத்தை மீறியிருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தீர்வு காண அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : இது நாகப்பட்டினம் இரும்பு உருக்காலை பற்றியதாகும். இந்த ஒப்பந்தம் முடிவாகி விட்டது. தொழிலாளர்களுக்கு ரூ. 100 குறைந்தபட்சம் போனஸ் கொடுக்க அதிகாரிகளிடம் ஒப்பந்தம் செய்து முடிவாகிவிட்டது. மற்ற விவரங்கள் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.



## (4) அறிவிப்புகள்

### (அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 192(1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :

1. சட்டப் பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.
3. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.
4. மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர் அவர்கள்.
5. மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள்.
6. மாண்புமிகு மருத்துவ-அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள்.
7. திரு. து. ப. அழகமுத்து.
8. திரு. பி. ஜி. கருத்திருமன்.
9. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
10. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. ஹாஜி ம. மு. பீர் முகமது.
13. திரு. க. ர. நல்லசிவன்.
14. திரு. ஆ. கு. சுப்பையா.
15. திரு. ம. பொ. சிவஞானம்.

அலுவல் ஆய்வுக் குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் இருப்பார்.

### (5) கண்டனத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு நிலைநிறுத்தத் தவறியதும் கீழ்வெண்மணி கிராமத்தில் [redacted] தீவைப்பால் பலர் உயிரிழந்ததும் குறித்த அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. ஜயராஜ் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதம்.

இந்த நிகழ்ச்சி வழக்குமன்றத்தில் பல நிலைகளில் இடம் பெற்றிருக்கின்றது. ஆகவே, உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் விளக்கங்களை அளிக்காமல் பொதுவான நிலையில் பேச வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது திரு. ஜெயராஜ் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

திரு. பி. ஜயராஜ்: சபாநாயகர் அவர்களே, "குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தத் தவறியதன் விளைவாக, 25—12—1968-ல் அம் மாவட்டத்தில் உள்ள கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்குத் தீவைக்கப்பட்டு ஏதும் அறியாத பெண்டிர், சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ்செயல் காரணமாக இப்பேரவை அமைச்சர் அவையின் கொள்கையைக் கண்டிப்பதோடு அதனை ஏற்கவும் மறுக்கிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எஸ். ராமலிங்கம்: தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, இன்றையதினம் இம் மாமன்றத்தின் முன்னால் என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த கண்டனத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து பேசுகிற போது கடந்த இருபது மாத காலத்திற்கு முன்னால் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் நான் இந்தச் சட்டமன்றத்தில் பேசி விட்டுச் சென்ற 15, 20 நாட்களுக்குள்ளாக என்னைக்கொலை செய்கிற முறையில் நான் தாக்கப்பட்டு ஆண்டவன் புண்ணியத்தால் என் உயிர் தப்பியதே தவிர என் கால்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை முதலாக இங்கு தெரிவித்துக் கொண்டு எனக்கு உயிரைக் கொடுத்த ஆண்டவனுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு பேசுவதற்கு ஆரம்பிக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வரலாறு காணாத சில படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. சரித்திரம் காணாத பயங்கர நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்றிருக்கின்றன. அதைச் சொல்லும்போது என் ரத்தம் கொதிக்கிறது, உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன. கீழ்வெண்மணியில் பல பெண்களைக் கொன்றனர், பல ஆண்களைக் கொன்றனர், பல கண்மணிகளைக் கொன்றனர், தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் கொல்லப்பட்டனர். பல சேய்கள் கொல்லப்பட்டனர். சரித்திரம் காணாத மாபெரும் படுபாதகச்செயல் அங்கு நடைபெற்றிருக்கிறது. எவ்வளவோ ஆண்டுகளாக நடைபெறாத, சரித்திரத்தில் பார்க்காத அளவிற்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கு நடைபெற்ற அக்கிரமங்கள் குறித்து இன்றைய ஆட்சியாளர்களுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும் கூட அவர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து போனதற்கு இந்த அரசாங்கம் உறுதுணையாக இருந்து விட்டது என்று இந்தச் சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அந்தகைய நிலை இன்றல்ல, நேற்றல்ல. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் அங்கு ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதை இந்த அரசாங்கம் நல்லமுறையில் சீர் செய்திருக்கலாம்.. அப்படிச் சீர் செய்யாத காரணத்தினால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள், பஞ்சை பாமரர்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் பல நூற்றாண்டுகளாக கேட்பாரற்றுக் கிடந்து வந்தவர்கள்,





அவர்களில் 42 பேர்கள் சுட்டெறிக்கப்பட்டு சாம்பலாகியிருக்
கிறார்கள் என்று சொன்னால் அதைக் கேட்கிறபோது, அதைப்
பார்க்கிறபோது குமுறாத நெஞ்சங்கள் இருக்கமுடியாது. யாரும்
அதற்குப் பதில் சொல்லாமலிருக்க முடியாது. அதை இந்த அர
சாங்கம் நல்லமுறையில் சீர் செய்திருக்கலாம், ஆனால் அப்படிச் சீர்
செய்யத் தவறிவிட்டார்கள். அது திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்
கிற சதி.

இந்தக் கீழ் வெண்மணி கலவரத்திற்கு முன்னால் சிக்கலில் பக்கிரி
என்பவர் படுகொலை செய்யப்பட்டார். அதன் காரணமாகத்
தொடர்ந்து இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.
1968 நவம்பர் 15-ம் தேதி சிக்கல் ஹரிஜன் பக்கிரியை வெட்டிக்
கொலை செய்திருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்திடமும், சம்பந்
தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் அங்குள்ள பொது மக்கள் பிரதி
நிதிகளும், அங்குள்ள விவசாயத் தொழிற்சங்கங்களும், அங்குள்ள
பெரியவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சரியான
முறையில் நடவடிக்கைகள் எடுக்காமல் விட்டு விட்ட காரணத்
தினால் தான் இது தொடர்ந்து நடந்திருக்கிறது.

நவம்பர் 8-ம் தேதி சிக்கலில் தி.மு.க. வைச் சேர்ந்த அம்பல
வாணன் தலைமையில் அதிகாரபூர்வமான கூட்டம் நடைபெற்றிருக்
கிறது. அந்தக் கூட்டத்தில் கணபதி, சந்தானம் என்பவர்கள்
பேசியிருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள்
என்றால், பறையர்கள், பள்ளர்களுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது
என்பதை ஜாதி இந்துக்களாகிய நாம் பார்த்து விடுவோம் என்று
பேசியிருக்கிறார்கள். 'ஜாதி இந்துக்களை ஒன்று திரட்ட வேண்டும்'
என்று பேசியிருக்கிறார்கள். அதை . அரசாங்கம் கவனித்துப்
பார்த்திருந்தால் இந்த 42 பேர்கள் கொலை செய்யப்பட்டு இறந்
திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இன்னொரு
கொலை நடந்திருக்கிறது. கொடிக்கால்பாளையத்தில் ரெயிலை விட்டு
இறங்கிச் சென்ற ராமச்சந்திரன் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்
கிறார். அவர்கள் போலீசில் ஏற்கனவே ஒரு புகார் கொடுத்திருக்
கிறார்கள். தன்னைக் கொலை செய்யக் காத்திருக்கிறார்கள். ஆகவே
தனக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று என்று போலீ
ஸிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். அவர் ரெயிலில் இருந்து
இறங்கிச் செல்லும்போது வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

தஞ்சை ஜில்லா எங்கு பார்த்தாலும் கொலைக் களஞ்சியமாகக்
காட்சி அளிக்கிறது. இன்னும் பல நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்
றிருக்கின்றன. இதைப் பற்றி பொல்லாம் நீண்ட நாமை ஒழிப்புக்
கமிட்டித் தலைவர் திரு. இளையபெருமாள் அவர்களிடம் தெரிவிக்கப்
பட்டிருக்கிறது. அவர்கள் சென்று பார்த்திருக்கிறார்கள். நானும்
சென்று பார்த்திருக்கிறேன். இந்த நிலை எப்படி ஏற்பட்டது?
42 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 16
—8 அடி நீள அகலமுள்ள இரண்டு அறைகள் கொண்ட வீட்டில் 42

பேர்கள் கொல்லப்பட்டார்களா அல்லது சுட்டு அதில் அடைக்கப்பட்டார்களா, 42 பேர்கள் ஒன்றேடொன்று சேர்ந்து இறந்திருக்கிறார்கள். அவர்கள் இறக்கும்பொழுது என்னென்ன நினைத்தார்களோ ? அவர்கள், தங்களுடைய பிள்ளைகள், கணவன், தாய்மார்கள் முதலியோர் பக்கத்தில் இல்லையே என்று நினைத்து அந்தப் புகைச்சலிலே புழுங்கிச் செத்திருக்கிறார்கள். நல்ல மனம் படைத்தவர்கள் யாரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. அத்தகைய கொடுஞ்செயல் நடந்திருக்கிறது. பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட இதைக் கட்சி சார்பற்ற கண்கொண்டு பார்க்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக உயிரையே பணயம் வைக்கிறேன் என்று சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறேன். இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு ஆதித் திராவிட மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று இந்த மந்திரி சபையின்மீது குற்றம் சுமத்துகின்றேன். எத்தனையோ ஆண்டுகள், எத்தனையோ மந்திரி சபை ஆண்டு வந்தது. ஆனால் இப்படித் திடீர் திடீரென்று தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள், குழந்தைகள், பெண்கள், ஆண்கள் எல்லோரும் சாகின்றார்கள் என்றால் அதை எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்.

இங்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் * * அதில் உண்மை இருக்கிறது. காரணம் என்னவென்றால் அந்த சைய நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சென்று பார்க்க வேண்டும், யாராவது கேட்டார்களா? இல்லை. அவர்களுக்கு நாதி இருக்கிறதா ? மதிப்பிற்குரிய மத்திய சர்க்கார் உணவு அமைச்சரவர்கள் பாராட்டுகிறார்கள். இங்கே அரசாங்கம் நல்லமுறையிலே நடக்கிறது என்று. இந்தக் கொடுமைகளையெல்லாம் நேரில் சென்று பார்த்தால் நிலைமைகள் தெரியும். சட்டம், ஒழுங்கு எப்படி இருக்கிறது ? சட்டசபையில் 5-ம் தேதியன்று பேசிவிட்டுச் சென்ற நான் 15, 20 நாட்கள் கழித்து வெட்டப்படுகிறேன் என்றால் நிலைமை எப்படி இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள், இந்தச் சட்டப் பேரவையிலே தனக்கு ஆபத்து வரும் என்று தெரிவித்ததாக. சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்த பிறகு வேறு ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டுச சொல்லி இருக்கிறார்களே தவிர தனக்கு ஆபத்து என்று தெரிவித்ததாக இல்லை என்று தெரிகிறது. இதை சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்தும் உறுப்பினரும் தெரிந்து கொள்ளலாம்.

---

* பேரவைத் தலைவர் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.





**திரு. பி. ஜயராஜ்:** தலைவரவர்களே, இன்று அமைச்சராக இருப்பவர்கள் அப்பொழுது சபாநாயகராக இருந்தார்கள். 5,6 பெட்டிஷன்களைக் கொடுத்திருக்கிறேன். திருவேங்கடம், மற்றுமுள்ள காங்கிரஸ்காரர்களைக் கொலை செய்வதற்கும், அடிப்பதற்கும் கலவரங்கள் நடப்பதாக முன்பிருந்த முதலமைச்சரவர்களுக்கும் மகஜர்கள் கொடுத்திருக்கிறேன் என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எனக்கே இப்படி ஏற்படுகிறது என்றால் சட்டம், ஒழுங்கை எப்படி நிலைநாட்ட முடியும் ? இன்று அமைச்ச ராக இருப்பவர்கள் அன்று சபாநாயகராக இருந்தார்கள். அந்தப் பெட்டிஷன்கள் விசாரிக்கப்படவில்லை. திருவேங்கடம் என்ப வரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். பெரிய கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிட்டிருக்கிறது. இப்பொழுது அமைச்சராக இருப்பவர்கள் சபாநாயகராக அப்பொழுதிருந்தார்கள். அவர்கள் முன்னால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தங்களை வெட்டியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டதா, அல்லவா ? அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா, இல்லையா ?

**திரு. பி. ஜயராஜ்:** வழக்குத் தொடரப்பட்டிருப்பது, வழக்கு நடந்திருப்பது என்பது வேறு. வழக்கு எப்படி எப்படிச் சென்றது என்பது வேறு. நான் சொல்லியிருக்கிறேன், கலவரங்கள் செய்யக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். திருவேங்கடம் என்பவரை வெட்டிக் கொலை செய்திருக்கிறார்கள், இஸ்மாயில் சாகிப்பை வெட்டுவதற்குச் சென்றிருக்கிறார்கள். அடுத்து ராமு என்பவரை அடித்துத் தொந்தரவு படுத்தியிருக்கிறார்கள் என்று பல மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வெட்டப்பட்ட பிறகு கேஸ் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளுகின்றேன். வெட்டப்படுவதற்கு முன்னாலே சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்து சட்டசபையில் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் உண்மையா, கொடுக்கப்பட்டிருக்கும் மகஜர்கள் உண்மையா என்று விசாரிக்கச் சொல்லியிருந்தால் நான் வெட்டுப்பட்டிருக்க வேண்டாம். அது வேண்டுமென்றே இந்த அரசாங்கத்தால் விசாரிக்கப்படவில்லை என்ற குற்றத்தைச் சாட்ட விரும்புகிறேன். ஆகவே, தலைவரவர்களே, இதுமாதிரியான நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. என்னுடைய நிகழ்ச்சிகளைப்பற்றி கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் பதில் அளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பேரவையிலே தனக்கு ஆபத்து என்று கூறியதாகவும், அது கவனிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனக்கு

ஆபத்து என்று கூறியதாக அந்த நடவடிக்கைக் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அவர்கள் குறிப்பிட்டது, வேறு யாரோ சிலரைக் குறித்து ஆபத்து என்று குறிப்பிட்டார்களே தவிர, பேரவையிலே உள்ள உறுப்பினருக்கு ஆபத்து என்று குறிப்பிட்டிருந்தால் அதற்கு உடனடியாகப் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுத்திருப்பார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள், அவர்கள் சபாநாயகராக இருந்த பொழுது நடந்ததைப்பற்றிக் கூறினார்கள். அதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன், 'டேப் ரிக்கார்டு" வைக்க வேண்டுமென்று. அது மாஜி சபாநாயகரவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். "டேப் ரிக்கார்டு" வைத்தால் யார் என்ன பேசினார்கள் என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பிட்டார்களா இல்லையா என்று தெரிந்து கொள்ளலாம். சில விஷயங்கள் காணாமல் போகின்றன. "டேப் ரிக்கார்டு" வைக்க வேண்டுமென்று நான் அப்பொழுது சொன்னது மாஜி சபாநாயகரவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அது குறிப்பில் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 'டேப் ரிக்கார்டு' வேண்டுமென்பது ஒரு கருத்து. ஆனால் உறுப்பினர்கள் இங்கு பேசுகின்ற பேச்சு இங்கே சுருக்கெழுத்தாளர்களால் எடுக்கப்பட்டு மறுநாள் அது உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அதிலே ஏதாவது முறைகேடான நிலையிருந்தால் திருத்தி, அவர்கள் கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும். பிறகு அது நிகழ்ச்சிக் குறிப்பில் அச்சடிக்கப்படுகின்ற முறையிருக்கிறது. எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அந்த முறையிலே குறை காணலாமா என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் கூறியதை உறுப்பினர் ஜெயராஜ் அவர்களே மறுக்காத பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதில் தலையிட்டுப் பேசுவது விந்தையாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என்னுடைய கட்சி அங்கத்தினர் பேசும்பொழுது மாஜி சபாநாயகரவர்கள் ஏன் குறிக்கிட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சபையிலே இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புகின்ற நேரத்தில் அமைச்சர்கள் குறுக்கிட்டு விளக்கம் அளிக்க உரிமை இருக்கிறது. ஆனால் தீர்ப்பு



அளிக்கின்ற உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. அமைச்சர்கள் குறுக்கிட்டுக் கருத்துக்கள் கூறுவதற்கு விதிமுறைகள் தடையாக இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியம்** : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், நம்முடைய அங்கத்தினர் அவர்கள் தனக்கு ஆபத்து என்று குறிப்பிடவில்லை, வேறு ஒரு அங்கத்தினருக்கு ஆபத்து என்று குறிப்பிட்டதாக அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படி வேறு ஒரு அங்கத்தினருக்கு ஆபத்து என்று கூறக் கூடாதா? அந்த ஆபத்தை அரசாங்கம் தடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒருவர் கூறிய கருத்துக்கு வேறு கருத்தாக, அதற்காக நான் விளக்கம் அளிக்கிறேன் என்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது முறையாகாது. நான் பல முறை சொல்லியிருக்கிறேன், உறுப்பினர்கள் கண்டனத் தீர்மானத்தின் மீது பேசவிருக்கிறார்கள். பேசுகின்ற நேரத்தில் அடக்கமாக, உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, கருத்துக்களிலே மட்டும் கவனம் செலுத்த வேண்டும். சொற்களிலே சூடேற்றுவதும், நிகழ்ச்சி முறைகளுக்கு மாறுபட்டுப் பேசுவதும் முறையாக ஆகாது. உறுப்பினர்களை வேண்டிக் கொள்ளுகின்றேன், அடக்கமான சொற்களோடு பேச வேண்டுமென்று. உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களைப் போல் எதிர்க்கட்சிக்காரர்களின் கருத்தை மறுக்கக்கூடியவர்கள் இருக்க மாட்டார்கள். அப்படி மறுக்கின்ற நேரத்திலே, கேட்கின்ற எதிர்த்தரப்பிலே உள்ளவர்கள் வெட்கப்பட்டு உட்காரக்கூடிய நிலை இருக்கும், சிரித்துக்கொண்டே அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் நிலையிருக்கும். அந்த வகையில் சொற்களிலே பொருளை வைத்து, சொற்களிலே வலுவேற்றி உங்கள் கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. ஏ. முனியாண்டி** : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினரவர்கள் பேசும்பொழுது *
என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு குறிப்பிடுவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : *
என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு. அப்படிக் கூறியிருந்தால் அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இல்லையென்றால் உறுப்பினரவர்கள் அதைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. பி. ஜெயராஜ்** : நான் சொல்லவில்லை. இதற்கு முன்னாலே சீர்காழி சட்டமன்ற உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது உண்மையாக இருக்கலாம் என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

---

* பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தலைவரவர்களே, சட்டசபையிலே எனது தொகுதியிலே தாக்கப்படுகிறார்கள் என்ற நிகழ்ச்சிகளைக் குறித்து நானே பேசி இருக்கிறேன். நான் பேசினது ஞாபகம் இருக்கிறது. இன்று கூட்டுறவுத் துறை அமைச்சராக இருப்பவர்கள் தடுத்துச் சொல்வதால் ஏதோ ஏற்பட்டிருக்கிறது என்று ஐயப்படுகிறேன்.

மு.ப. 10-30 **மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது நம்முடைய ஜெயராஜ் அவர்கள் முன்பு சொன்னதாகச் சொன்னார்களே அது 1967-ம் வருடம் ஜூலை மாதம் 5-ம் தேதி நிகழ்ச்சிக் குறிப்பிலே இருக்கிறது. ஜூன் மாதம் ஆறும்தேதி 1967-ம் அன்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திருவேங்கடம் என்பவரை அடித்துக் கொன்று கொலை செய்துவிடப் போவதாகச் சிலர் பயமுறுத்தியதன் விளைவாக, அது குறித்து பல பேர் முறையிட்டதன் காரணமாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் இலாக்காவிற்கும் எனக்கும் தகவல் கொடுத்திருக்கிறார்கள்' என்று தான் அவர்கள் பேசி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜயராஜ்** : தலைவர் அவர்களே, நான் கால் கால் வெட்டப்பட்ட பிறகு முதன் முதலாக இப்பொழுதுதான் இந்த அவையிலே பேசுகிறேன். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இடையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பது எனக்குப் புலப்படவும் இல்லை, தெரியவும் இல்லை. இத்தகைய நிலைமை நீடிக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த நிலைமை நீடித்தால் ஏழை எளிய மக்கள் வாழ முடியுமா என்பதனை அரசாங்கம் கவனித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் தஞ்சை மாவட்டத்திலே கொலை நடப்பது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது.

கொடிக்கால்பாளையம் என்ற ஊரில் ராமச்சந்திரன் என்பவர் ஏன் வெட்டப்பட வேண்டும், அவருடைய நிலைமை என்ன, அதற்குக் காரணம் என்ன என்பதையும் அரசாங்கம் நன்கு கவனிக்க வேண்டும்.

பூந்தாழ்வான்குடியிலே பக்கிரி என்பவர் இந்த அரசாங்கத்தால் சுடப்பட்டார். அவர் எதற்காகச் சுடப்பட்டார்? இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்குக் கூலி கேட்டார். அதற்காகச் சுடப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலின்போது, 'கூலி உயர்வு கேட்ட அத்தான் குண்டடி பட்டுச் செத்தான்', என்று ஒரு சாதாரண பெண்ணின் படம் போட்டுக் குண்டடிபட்டு செத்த மாதிரி காண்பித்தார்களே. இன்றையதினம் உண்மையிலே குண்டடிபட்டு செத்திருக்கிறார்களே அவர்களை என்ன என்று அழைக்கிறார்கள். ஆக, அன்றையதினம் காங்கிரஸ் அரசாங்கம் ஏழைகளுக்குக் கூலி கொடுக்காமல் சாகடித்ததுபோல் படம் போட்டார்களே இன்றையதினம் இவர்கள் எந்த





அளவுக்கு இருக்கிறார்கள். செய்கிறார்கள்? இன்றையதினம் அந்த பக்கிரி என்பவன் மிகவும் கஷ்டப்பட்டுச் செத்திருக்கிறான். இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? அன்றையதினம் படம் போட்டு காண்பித்தார்களே, இப்பொழுது பிறபடுத்தப்பட்டவர்கள் கஷ்டப்படுகிறார்கள், செத்திருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சபையிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும்பொழுது பேசியதற்கு நேர்மாறாக இன்றைய தினம் நடந்துகொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல பாதுகாப்பெல்லாம் கிடைக்கும், நல்ல பல புதிய திட்டங்களெல்லாம் இவர்கள் ஆட்சியில் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், இப்பொழுது நடக்கின்ற நிலைமைகளைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது படித்தவர்கள். மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் மேலும் சிந்திக்க வேண்டிய அளவுக்கு இன்றையதினம் நிகழ்ச்சிகள் சென்று கொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, ஆதமங்கலம் என்ற ஊரில் பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டதாக தனுஷ்கோடி எம்.எல்.ஏ. அவர்கள் பேசியிருக்கிறார்கள். பொதுமக்கள் பிரிதிநிதிகள் கேட்கின்ற நேரத்தில், அமைச்சர்கள் சொல்லுகின்றார்கள் 'நீங்கள் பேசினால், அல்லது உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொன்னால் நாங்கள் ஏதோ செய்வோம்', என்று. ஆனால், சட்டசபை உறுப்பினர்களால் கொடுக்கப்படுகின்ற தகவல்கள், வேண்டுகோள்கள், மகஜர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. பொதுமக்கள் பிரதிநிதிகள் எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்? பொதுமக்களுக்கு நன்மை செய்யவும், அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவும், ஆட்சியில் குற்றங்குறைகள் இருந்தால் அதைச் சட்டமன்றத்திலோ, அமைச்சர்களிடத்திலோ, அதிகாரிகளிடத்திலோ சொல்லி அதை நீக்கவும் தான் வந்திருக்கிறார்களே தவிர, வேறு எதற்கும் இல்லை. ஆனால், அவர்கள் சொல்லுகின்றவைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதன் காரணமாகத்தான் இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இத்தகைய நிலைமை மாற வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, விருதுநகர் தொகுதியைச் சேர்ந்த சங்காலிங்கபுரம் குழந்தை வேலு என்ற அரிஜன் 1968-ஆம் ஆண்டு மாதம் 1-ம் தேதி செங்குன்றபுரம் என்ற ஊருக்குப் பிண்ணாக்கு வாங்குவதற்காகப் போனார். ஆமத்தூர் ஹெட் கான்ஸ்டபிள் தொரைசிங்கம் என்பவரும் மற்றும் ஒரு போலீசும் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு வா என்று அழைத்துப் போனார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கண்டனத் தீர்மானம் கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப் பற்றியது. தமிழ்நாடு பூராவும் பற்றிப் பேசுவது என்றால் நன்றாக இருக்காது.

**திரு. பி. ஜயராஜ்** : தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்கிறேனே தவிர, பேரவையில் நான் சொல்ல வேண்டாமென்று சொல்வது . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையில் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. கண்டனத் தீர்மானம் கீழ் வெண்மணிப் பற்றியதாயிற்றே என்று தான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜயராஜ்** : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் இவைகளை யெல்லாம் சொல்லி முடித்து விடலாம் என்று எண்ணுகிறேன். இவை யெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் நானும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன், நானும் பாதிக்கப்பட்டவன்; ஆகவே, பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து எனக்குக் கடிதங்கள் வருகின்றன. ஆகவே நான் இவைகளையெல்லாம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இன்னும் ஒரு கொலை நடந்திருக்கிறது. கொரடாச்சேரி பக்கத்திலே ஒரு பஞ்சாயத்து தலைவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. மனிதன் கொல்லப் படுகிறான். எதற்காகக் கொலை செய்தார்கள் என்பதை அரசாங்கம் கண்டு பிடிக்கவேண்டும். யார் கொலை செய்தார்கள் என்ப தெல்லாம் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட வேண்டிய விஷயம். மனிதன், இந்த நாட்டிலே பிறந்தவன், ஏன் கொலை செய்யப்பட வேண்டும். நான் இவைகளை யெல்லாம் சொல்லாமல் இருக்க முடியாது. இப்படி தஞ்சை ஜில்லாவில் கணக்கிலடங்காத, எனக்குத் தெரியாத பல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக் கின்றன. ஆகவேதான் இத்தகைய நிகழ்ச்சிகளை யெல்லாம் இங்கே குறிப்பிடுகிறேன்.

பேரவைத் தலைவரது அனுமதியுடன் முன்பு பாதியில் விட்ட விஷயத்தை முடித்து விடுகிறேன். 'குழந்தைவேலு என்பவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு வா என்று அழைத்துப் போனார்கள். போனவர் அன்றைக்கு வரவில்லை. மகன் தேடினார். ஆனால் அவரைப் போலீஸ் அழைத்துச் சென்றார்கள் என்று கேள்விப்பட்டு மறுநாள் மகன் நடராசன், மூலிப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் வேலுகோனார், என்பவரையும் சங்கரலிங்கபுரம் பஞ்சாயத்து உதவித் தலைவர் பெரிய கருப்பன் என்பவரையும் அழைத்துக் கொண்டு ஆமத்தூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். சென்றவுடன் பஞ்சாயத்துத் தலைவர் வேலுகோனார் ஸ்டேஷனுக்குச் சென்றிருக்கிறார். வேலுகோனார் ஸ்டேஷனுக்குள் சென்று குழந்தைவேலு இருக்கின்றாரா என்று பார்த்தார். அங்கே குழந்தைவேலு பிணமாகக் கிடக்கின்றார். வேலு அலறிக் கொண்டு ஓடிவந்தார். செய்திக் கேட்டதும் மகன் நடராசன் அப்பா அப்பா என்று துடித்தார், மோதினார். ஆனால் மகனைக்கூட கிட்ட நெருங்க விடவில்லை. என்ன அநியாயம்? பின் சம்பந்தப்பட்ட மாவட்ட





கலெக்டருக்கும், அமைச்சர்களுக்கும் தந்தி மூலம் தன் தந்தை பிணமாகக் கிடக்கின்றார் என்று தெரிவித்தார். பிறகு, பிரேத பரிசோதனை நடைபெற்றது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெற்றன என்பதைப் பார்க்கும்போது அவர் இறந்து போனது எதற்காக என்பதையும் பார்க்கவேண்டும். அவர் மன்னார் நாயக்கன்பட்டி என்ற ஊரில் ஓர் வீடு வாங்கியிருக்கிறார். ஜாதி இந்துக்கள் இருக்கிற தெருவிலே தாழ்த்தப்பட்ட மகன், ஒரு வீடு வாங்கிவிட்டாரே, இதை எப்படி யாவது அப்புறப்படுத்த வேண்டுமென்று---தடுக்கவேண்டுமென்று முயற்சி செய்தார்கள். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. அதன் காரணமாகத்தான் அவர் கொலை செய்யப்படுகின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. டாக்டர் செல்லையா என்பவர். திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ளார். அவரை ஒரு சப்-இன்ஸ்பெக்டர் பொய் சர்ட்டிபிகேட் கேட்டார். செல்லையா என்ற அந்த டாக்டர் மறுத்திருக்கிறார். அந்தச் செல்லையா ஆரம்பச் சுகாதார நிலையத்தில் வேலை செய்து வந்தார். அந்த டாக்டர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர். பொய்யான சர்ட்டிபிகேட் கேட்டு கொடுக்க மறுத்ததன் காரண மாக அந்த இன்ஸ்பெக்டர் ஆத்திரம் கொண்டு ஜாதிப் பெயரைச் சொல்லி தரக் குறைவாகப் பேசினார். இதுபற்றி மாவட்ட கலெக்டரிடம் தெரிவிக்கப்பட்டது. ரெவினியூ அதிகாரிகள் விசாரித்து ரிக்கார்டு செய்திருக்கிறார்கள். மாவட்ட போலீஸ் அதிகாரி டி.எஸ்.பி. நடவடிக்கை எடுக்கவில்லை. ஸ்தலத்தில் டி. எஸ்.பியையும், செல்லையாவையும் தீண்டாமை ஒழிப்புக் கமிட்டித் தலைவர் இளையபெருமாள் கேட்டார். போதிய சாட்சிகள் இல்லை. அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை என்று டி.எஸ்.பி. கூறி யிருக்கிறார். திரும்பவும் கேட்டுக் கொண்டதன் பொருட்டு நடவடிக்கை எடுக்கப் போவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த அளவுக்கு சென்று கொண்டிருக்கிறது அரசாங்கம். நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை சொல்ல வேண்டியதில்லை.

வட ஆற்காடு மாவட்டம் நெம்மேலி என்ற ஊரில் மாணவர்கள் நாடகம் பார்த்த குற்றத்திற்காக அவர்களை ஜாதி இந்துக்கள் அடித்துத் துரத்தி இருக்கிறார்கள். மறுநாள் ஊருக்குள் வந்து அங்கிருந்த பெண்களை அடித்துத் துன்புறுத்தியது மட்டு மல்ல, பெண்களின் உடைகளையும் அபகரித்து நிர்வாணமாக ஓட விட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகின்ற போது . . .

ஓட விட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகின்ற போது . . .

**திரு. பி. ஜயராஜ்** : நெம்மிலி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனையோ நெம்மிலி இருக்கிறது? இது எந்த நெம்மிலி?

திரு. பி. ஜயராஜ் : இளையபெருமாள் கமிட்டியினர் ஸ்தலத்திலேயே விசாரணை செய்திருக்கிறார்கள். போலீசுக்குப் புகார் கொடுக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் அமராவதி பக்கத்தில் ஒரு ஆதித் திராவிட ஆசிரியை கிணற்றில் தண்ணீர் எடுத்து வரச் சென்ற போது பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று பலவந்தமாகத் தாக்கப்பட்டார். போலீசில் புகார் கொடுக்கப் பட்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் தீண்டாமை ஒழிப்புக் கமிட்டித் தலைவர் இளையபெருமாள் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டதும் பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இங்கே நமது தலைவர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தை மட்டும் குறிப்பிட்டுப் பேசவேண்டுமென்று சொன்னதால் மற்றவற்றைச் சொல்லவில்லை.

தஞ்சை மாவட்டம் என்று சொல்லும்போது என்னுடைய விஷயத்திலே அரசாங்கம் எந்த அளவுக்கு நடந்து கொண்டது என்பதைப் பார்க்கும்போது நான் மிகவும் வெட்கப்பட வேண்டிய நிலையிலிருக்கிறேன். என்னு சம்பவத்தில்கூட, அரசாங்கம் தலையிட்டு ஓரிடத்தில் என்னுடைய எதிரியின் சார்பில் பப்ளிக் ப்ராசிக்யூட்டரை ஆஜராக்கினார்கள். நாகப்பட்டினம் செஷன்ஸுக்கு வரும்பொழுது அவர் எனக்கு ஆஜராகின்ற அளவுக்கு இருக்கிறது. இது சரித்திரம் காணாத, எந்த உலகத்திலும் நடக்காத விஷயம். இங்கே என்னுடைய எதிரிக்கு, அங்கே எனக்கு. எப்படி கேஸ் நல்லமுறையில் நடக்கும்? ஏதோ, நடந்தது, தீர்ப்பானது. அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கட்சிக் கண்கொண்டு பார்க்க வேண்டாம். நடந்ததில் என்ன உண்மை என்று பார்க்கவேண்டும். நான் மூன்று முறை தேர்தலிலே நின்று வெற்றிபெற்று தஞ்சை மாவட்டத்திலிருந்து, ஒரே அரிசனனாக காங்கிரஸ் சார்பிலே நின்று வந்துள்ளேன். எனக்கே இந்த நிலைமை என்று சொன்னால் சாதாரண தாழ்த்தப் பட்ட மக்களுக்கு என்ன நிலைமை இருக்கும்? இந்தச் சபைக்கும் இந்தத் தமிழ்நாட்டுக்கும் இது எப்படி பொருந்தும் என்பதை பார்க்கின்றபொழுது மிகவும் வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே தான் இத்தகைய நிலைமைகள் நடைபெறாதவண்ணம் சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும். கீழ்வெண்மணியில் நடந்தது என்ன? அது சம்பந்தமான வழக்குகள் இப்பொழுது நீதி மன்றத்தில் இருக்கிறபடியால், அதற்குள்ளே சென்று, எப்படி நடைபெற்றது என்பதையெல்லாம் குறித்து நான் பேசவில்லை. பாக்கிக் குண்டுகள் வெடித்திருக்கின்றன. லைசென்ஸ் இல்லாத





துப்பாக்கிகள் 16 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கின்றன. அங்கே என்ன நடைபெற்றது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னால் இதைப்பற்றிப் பேசிய பல நண்பர்கள் சொன்னார்கள். அந்தக் கட்சி செய்தார்கள், இந்தக் கட்சி செய்தார்கள் என்பதெல்லாம் பொருள் அல்ல. அதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. ஆனால், மனிதர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதுதான் கேள்வி. இதில் ஒருவரை ஒருவர் சாட்டிவிட்டு, அதன் மூலம் நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். உள்ளபடியே அங்கு நடந்த நிகழ்ச்சி என்ன? 47 பேர்கள் வீட்டிற்குள்ளேயே செத்திருக்கிறார்கள். சாதாரணமாக நெருப்பில் வெந்து செத்தார்களா, அல்லது சுடப்பட்டு அடிபட்டார்களா அல்லது உள்ளே வைத்து பூட்டப்பட்டு, புகைச்சல் தாங்காமல் மூச்சுத் திணறி மாண்டார்களா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இந்த மாநிலத்தில் இனி மேலாவது இத்தகைய அக்கிரமங்கள், அநியாயங்கள் தவிர்க்கப் பட வேண்டும். மாண்டுபோன மாணிக்கங்களுக்காக என்னுடைய கண்ணீரைக் காணிக்கையாகத் தருகிறேன்.

எனக்கு முன்பு இதைப்பற்றிப் பேசிய அங்கத்தினர்கள் தஞ்சை ஜில்லாவில் என்ன நிலைமை இருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு பேசிய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் அவர்களும் பேசியிருக்கிறார்கள், மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். அங்கே நடைபெற்ற தகராறு இனிமேலாகிலும் நடைபெறாவண்ணம் தடுக்க வேண்டும். கூலிப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். இந்தப் பிரச்னையில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தி, அங்கே எந்த விதமான உயிர்களும் இனிமேல் சாகாவண்ணம் தக்க பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். எதற்கு இம்மாதிரி திடீரென்று புரட்சி ஏற்படுகிறது. ஏன் ஏற்படுகின்றது, அதனுடைய மர்மங்கள் என்ன? அவைகளைத் தவிர்ப்பதற்கு மார்க்கங்கள் என்ன? அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களை யெல்லாம் சேர்த்துக்கொண்டு அது குறித்துப் பரிசீலனை செய்து, அங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளிகளுக்கும் அல்லது நிலச்சுவான்தார்களுக்கும், யார் யாருக்கு எப்படி எப்படி பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதைச் சிந்தித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கூலிப் பிரச்னையை சட்டபூர்வமாக நிர்ணயித்துவிடவேண்டும். கூலியைப்பற்றிய நிர்ணயம் சட்டபூர்வமாக இருந்துவிட்டால், இம்மாதிரி கிளர்ச்சிகள் வாரா. விவசாயக் கூலிகள் அன்றாடம்

வேலை செய்து பிழைப்பவர்கள். சர்க்கார் அவர்கள் கூலியைப் பற்றி ஒரு சட்டம் கொண்டுவந்துவிட்டால், அவர்களும் அதிகமான அளவு வேண்டும் என்று கேட்க முடியாது, இவர்களும் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. ஆகவே, இந்த நிலைமையை உடனடியாகப் பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு இத்தகைய வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றியும், வணக்கமும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 13 உறுப்பினர்கள் பேச வேண்டும். மேலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதற்கு கிளாரிபிகேஷன்? பேச்சைப்பற்றி ஏதாவது விளக்க வேண்டுமென்றால் தான் கிளாரிபிகேஷன்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** சபாநாயகர் அவர்களே, இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை * * என்று சீர்காழி உறுப்பினர் குறிப்பிட்டார் என்று நண்பர் சொன்னார். அதை அந்த உறுப்பினர் திரும்பிப் பெற்றுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜயராஜ் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று ஓர் உறுப்பினர் சொன்னார்கள். அதற்கு ஜயராஜ் அவர்கள் நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள் . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சீர்காழி உறுப்பினர் அப்படிச் சொன்னதாகச் சொன்னார்கள். அங்கத்தினர் * * என்று சொன்னார்கள். அதற்கு அப்படிச் சொல்லலாமா என்று ஒரு உறுப்பினர் கேட்டபொழுது, திரு. ஜெயராஜ் அவர்கள், சீர்காழி உறுப்பினர் அப்படிச் சொன்னதைத் தான், தான் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்னை எழுப்பும்பொழுது, எந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சி நடக்கிறதோ, அப்பொழுதே குறுக்கிட்டு, ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப வேண்டும். அதை விட்டுவிட்டு, எப்பொழுதோ நடந்ததைப் பற்றி இன்றைக்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது முறையாகாது. ஏனென்றால், நிகழ்ச்சிக் குறிப்புகளை யெல்லாம் பார்க்கவேண்டிய நிலைமை இருக்கும்.

* * பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாயிண்டு ஆப் இன்பர்மேஷன், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதைப்பற்றி பாயிண்டு ஆப இன்பர்மேஷன்?

**திரு. பெ. சீனிவாசன் :** எனது தொகுதியைப்பற்றி சற்று முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விருது நகரில் குழந்தைவேலு என்ற அரிசன் போலீஸ் நிலையத்தில் கொல்லப்பட்டதாக இங்கு பேசும்பொழுது உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. அவர் இறந்தார், கொல்லப்படவில்லை. ஆர்.டி.ஓ. அவர்கள் விசாரணை செய்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் பார்லிமெண்டு உறுப்பினர்கள் அங்கு விசாரணை செய்திருக்கிறார்கள். அதைப் பெரியதாக்கிப் பேசி இருக்கிறார்கள், அவர் சாவுக்கும், அரிஜன் என்பதற்கும், காங்கிரஸ்காரர் என்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. தயவுசெய்து தவறான தகவல்களைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜயராஜ் :** எந்த அடிப்படையில் உறுப்பினர் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த இடம் அவருடைய தொகுதியைச் சேர்ந்தது. அதற்காக விளக்கம் கொடுத்தார்கள். உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் அப்படிச் சொன்னார் என்று கேட்டுக்கொண்டிருக்க முடியாது 'நான் கூறுவது சரி, அவர் கூறுவது தவறு என்று சொல்லுவதற்கு இது அல்ல இடம். நீங்கள் சொன்னீர்கள் ஒரு கருத்தை. அந்தத் தொகுதியைச் சார்ந்தவர் என்ற முறையில் அவர் அதற்கான விளக்கத்தைக் கூறியிருக்கிறார்கள். அதோடு இதை முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இப்பொழுது மன்றத்தின் முன்னால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய கண்டனத் தீர்மானத்தைக் கண்டித்துப் பேசுவதற்கு நான் முன்வருகிறேன். வெண்மணியில் வெந்து மடிந்த அரிசன விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக இப்பொழுது விவாதிக்கப்படுகிறது. வெண்மணியில் நடந்திருக்கக்கூடிய அந்தக் கோரமான சம்பவம் மாதிரி நாமெல்லாம் கேள்விப்பட்டதே கிடையாது, படித்துத் தெரிந்துக்கொண்டதும் கிடையாது. அம்மாதிரியான உலகத்திலேயே நடக்காத ஒரு சம்பவத்தை நடத்தி வைத்திருக்கிறார்கள். ஏன் அவர்கள் அப்படிச் செய்தார்கள் ? எதற்காக ஏழை அரிசன விவசாயத் தொழிலாளர்களை உயிரோடு தீ வைத்துக் கொளுத்தவேண்டும் என்று நான் ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969, பிப்ரவரி 28

விவசாயத் தொழிலாளர்களாகிய அந்த மக்கள் துரதிருஷ்ட வசமாக தஞ்சை மாவட்டத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் கணிசமாக இருக்கிறார்கள். அரிசன மக்கள் முன் காலத்தில் மிகக் கேவலமான அடிமைத் தொழிலைச் செய்து வந்தவர்கள். நிலப் பிரபுக்களின்கீழ் அடிமைகளாக வாழ்ந்துவந்தவர்கள். நிலப்பிரபுக்கள் என்று சொல்லும்பொழுது, நிலப்பிரபுக்கள் ஒழிந்துவிட்டார்கள், இல்லை என்று ஒரு சாரார் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நிலப்பிரபுக்கள் இன்றையதினம் அவர்களுடைய நிலத்தையெல்லாம் பல்வேறு வகைகளில் பிரித்து வைத்துக்கொண்டு, ஆனால், பண்ணையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பது நமது அமைச்சர்கள் சகல பேர்களுக்கும் தெரியும். அதை யாரும் மறுக்க முடியாது அம்மாதிரியான ஒரு தனி அரசாங்கத்தை அவர்கள் 'இன்றையதினம் நடத்திக் கொண்டு வருகிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு அதிகமாகக் கேட்கிறார்கள் என்ற காரணத்திற்காக இம்மாதிரியான ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. எதற்காக அவர்கள் அதிகமாகக் கூலி கேட்கிறார்கள், கூலி கேட்பதிலே அர்த்தம் என்ன இருக்கிறது என்றெல்லாம் பேசப்படுகிறது. உண்மையிலேயே அவர்கள் எவ்வளவு கடுமையான வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்பதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் யாரும் மறுக்கமாட்டார்கள். வேண்டுமானால், அந்த வேலையினுடைய அருமையே தெரியாதவர்கள், அந்தத் தொழிலைச் செய்தே பழக்கம் இல்லாதவர்கள் அப்படிச் சொல்லலாம். விவசாயத் தொழிலாளர்கள் 24 மணி நேரமும் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால் அது ஒன்றும் மிகையாகாது. இரவு, பகல் பாராமல் விவசாய வேலை செய்தால் தான், விவசாயம் முறையாகச் செய்ய முடியும். உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியும். நிலத்தை மாத்திரம் சொந்தமாக வைத்துக் கொண்டு, ' நாங்கள் தான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிகிறோம்" என்று சொல்வதெல்லாம் மேலெழுந்தவாரியாகச் சொல்லிக்கொள்ளலாம், அவர்களை ஆதரிக்கின்ற முதலாளிகளும், முதலாளிகளால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகளும், நிலப் பிரபுக்கள் தான் விவசாயம் செய்கிறோம். நாங்கள் தான் உற்பத்தி செய் கொள்ளலாம்.

உண்மையிலேயே, நேரிடையாக வேலை செய்கிறவர்கள், செய்யக் கூடியவர்கள், இவர்கள். போதுமான ஊதியம் கொடுக்க வேண்டும் என்று கேட்பது குற்றமா? இதை ஆராய வேண்டும். இன்னும் சொல்லப் போனால், சமூகத்தில் இவர்கள் மிகத் தாழ்மையான, கீழ்த்தரமான வேலைகளைச் செய்கிறார்கள். ஜாதி இந்துக்களுக்கு, அதிக நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய பண்ணையில், அவர்களுடைய சொந்தத்தில், சமூகத்தில் எல்லா விதமான கீழ்த்தரமான வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாக



1969, பிப்ரவரி 28] [ஆ. கு. சுப்பையா]

இருக்கிறார்கள். மாடு தூக்குவது, பிணம் தூக்குவது, இழவுக்ுச் சொல்லப் போவது, விபத்துக்கள் ஏற்பட்டால், வெள்ளம் போனறவை, தீ விபத்துக்கள் போன்றவை ஏற்பட்டாலும், உயிரைக் கொடுத்து இவர்களதான ஜாதி இந்துக்களைக் காப்பாற்ற வேண்டும். இப்படிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள், பிரதானமான தொழில் விவசாயம் என்றாலும், அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்தாக வேண்டும். ஆகவே, இவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய, போதுமான ஊதியம் வேண்டும் என்று இன்றைக்குப் போராட்டம் நடத்துகிறார்கள்.

இன்றையதினம், தஞ்சை விவசாயத் தொழிலாளர்களாகிய அரிசனங்கள், ஒன்று சேர்ந்து ஒரு ஸ்தாபனத்தை வைத்தார்கள். இப்படி அரிசனங்கள் ஒன்று சேர்ந்து ஸ்தாபனம் வைத்திருப்பது ஜாதி இந்துக்களுக்கு ஆகவில்லை. பல அரசியல் கட்சிகளுக்கு ஆகவில்லை. அந்த வகையில் அரசியல் கட்சிகள் முழுப் பங்கு கொள்கிறார்கள். அதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. இம்மாதிரியான கொடுமையான சம்பவங்களை, 1947-48-ம் ஆண்டுகளில் இவர்கள் எவ்வளவோ கொடுமைகளைச் செய்தார்கள். காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்தவுடன், இந்த அரிசனங்களை அழித்து ஒழித்து விடலாம் என்று நினைத்துச் செயல்பட்டார்கள். ஆனால், அவர்கள் தோல்வி அடைந்தார்கள். அவர்களுக்கு கொடுமைகளைச் செய்துவந்த, பாதகம் ஏற்படுத்திய, காங்கிரஸ் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளை அகற்ற வேண்டிய நிலையில், நான்காவது பொதுத் தேர்தலில், அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்தார்கள். தோல்வி கண்டார்கள் காங்கிரஸ்காரர்கள். ஆகவே, இன்றைதினம் அதைத் திரும்பிச் செய்ய என்ன மார்க்கம் என்று பார்த்தார்கள். நம்மையெல்லாம் காலை வாரி விட்டார்கள், ஆட்சிக்கு வரவொட்டாமல் செய்தார்கள், என்ற காரணத்திற்காக, இவர்கள் ஏழை எளிய அரிசனங்கள் என்ற ஒரே காரணத்திற்காகத் தேர்தல் முடிந்த மூன்று மாதத்தில் வலிவலம் என்ற இடத்தில் மாநாடு நடத்தினார்கள். அந்த மகாநாட்டில், காங்கிரஸ் பெரும் தலைவர்கள் பங்கு கொண்டார்கள். அந்த மகாநாட்டில், எடுக்கப்பட்ட முடிவுகள், விவசாயத் தொழிலாளர்கள், அரிசனங்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளை, அவர்கள் முன்னாலே பெற்றுவந்த உரிமைகளை மறுப்பது என்பதும், புதிதாக பதவிப் பொறுப்பேற்று இருக்கும் அரசுக்கு பல்வேறு வகைகளிலும் தொந்தரவு கொடுப்பது, நெருக்கடிகளை உண்டாக்குவது எந்த எந்த வகைகளில் இயலுமோ அந்த அந்த வகைகளில் செய்வது, இரண்டாம் போகம் சாகுபடி செய்ய வேண்டாம் என்று தடுப்பது போன்ற காரியங்களைச் செய்யத் தலைப்பட்டார்கள். ஆனாலும், இவர்கள் சொல்வதை யாரும் கேட்கவில்லை. ஆனால், அப்படி அவர்கள் சொன்னது என்னமோ உண்மை. நெருக்கடிகளை

உண்டாக்க வேண்டும் என்று தீர்மானித்த பிறகு, உற்பத்தியாளர்கள் சங்கம் என்று ஒரு சங்கத்தை நிறுவினார்கள். இதை ஆரம்பித்ததற்கு உதவியது காங்கிரஸ் மூளை. . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, இதுவரைக்கும் நான் பொறுமையாகவே இருந்தேன். காங்கிரஸ், காங்கிரஸ் என்று சொல்வதானால், அதற்கு ஆதாரத்துடன் சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சி சார்பில் செய்யப்பட்டதா ? காங்கிரஸ்காரர்களாக இருந்திருக்கலாம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. பொது நோக்கத்திற்காகக் காங்கிரஸ்காரர் செய்தால் அது காங்கிரஸ் கட்சியின் ஆதரவு பெற்று செய்தது ஆகாது. காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமாகச் செய்யப்பட்டதா, விளக்கம் தரவேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அவர்கள் பேசும் போதும், கட்சியைச் சொல்லாமல் பேச வேண்டும். அப்படிச் சொல்வதானால் நானும் கட்சியைச் சொல்லக் கூடாது என்பதை ஒத்துக்கொள்வேன். நான் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. இல்லை என்று மறுக்கட்டும். . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : இல்லை என்று மறுக்கத் தானே நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் பேசினாலும், எந்தக் கட்சியைப் பற்றிச் சொல்வதானாலும், ஆதாரம் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே கட்சியைக் குறிப்பிடாமல் பேசுவது தான் நல்லது.

திரு. ஆ. கு. சுப்பையா : அந்த மாநாடு நடத்தியபோது, அந்த மாநாடு எங்கே நடந்தது, யார் யார் கலந்து கொண்டார்கள். யார் யார் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்கள் என்பதை யெல்லாம் சொல்லாமல் இருக்க முடியாது. வலிவலம் தேசிகர் அந்த மகாநாட்டில் பங்கு கொண்டார்; குன்னியூர் மீனாட்சியம்மாள் அவர்கள் அந்த மகாநாட்டில் பங்கு கொண்டார்கள்; வாண்டையார் பங்கு கொண்டார்கள். இவர்களெல்லாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சற்றுத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதைத்தான் சொல்கிறேன். அதாவது காங்கிரஸ்காரர்கள் என்பதற்கும், காங்கிரஸ் கட்சி சார்பில் என்பதற்கும் இருக்கும் வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அவரவர்கள் தனிப்பட்ட முறையில் சேர்ந்து எவ்வளவோ செய்யலாம். நான் கூட பல விவசாயச் சங்கங்களில் பங்கு கொண்டிருப்பவன். அதனால், காங்கிரஸ் அதையெல்லாம்



சேர்ந்தது என்று ஆகிவிடுமா ? அதிகார பூர்வமாகக் காங்கிரஸ் கட்சி சார்பில் அந்த மாநாட்டை நடத்தினார்களா என்பதைத் தான் கேட்கிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் தன் இடத்தில் நின்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோதண்டராமன், அவர்கள் உட்காரவேண்டும். நான் சொல்லுகிறேன்.

திரு. நா. காசிராமன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். அங்கத்தினர் பேசும்போது, ஒரு சில பெயர்களைச் சொன்னார்கள். அவர்கள் இங்கே பதில் அளிக்க முடியாமல் இருக்கும்போது, அவர்களுடைய பெயர்களைச் சொல்வது முறையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த காலத்தில் நடந்த மாநாட்டில் கலந்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றிச் சொல்லும் போது, அப்படிக் குறிப்பிடக்கூடாது என்று சொல்வது முறையாகாது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கீழ்வெண்மணியில் இழைக்கப்பட்ட தீங்குக்கு இரையானவர்கள் அரிசனங்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. அதேபோல்த்தான் நானும் சொல்லுகிறேன். பின்னால் இவர்கள் பேசும்போது அவர்களும் சொல்லத் தான் போகிறார்கள். கட்சியைக் குறிப்பிடாமல் இருக்கப் போவதில்லை. நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகப் பேசும் இவர்கள் எங்கள் கட்சியை இழுக்காமல் பேசமுடியாது. ஆகவே, அந்த மாநாடு உருவானதைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன். ஏற்படவிருக்கும் மாற்றத்திற்கு விரோதமாக சதித் திட்டம் போட்டார்கள். அந்தவகையில் அந்த மகாநாட்டில் திட்டமிட்டார்கள் என்று சொன்னேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். திட்டம் என்றால், அந்தத் திட்டம் என்னவென்று நிரூபிக்க வேண்டும். அந்தத் திட்டம் காங்கிரஸ் கட்சியின் திட்டமா ?

திரு. ஆ. கு. சுப்பையா : முதலிலேயேதான் அந்தத் திட்டங்களைச் சொன்னேனே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் மாநாடு போட்டார்கள். திட்டம் போட்டார்கள் என்று சொல்லலாம். 'சதித் திட்டம்' என்று சொல்லாமல், இன்ன திட்டம் என்று சொன்னால் போதும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அவர்கள் என்ன திட்டம் போட்டார்கள் என்று முன்னமேயே சொன்னேன். இரண்டாம் போகம் சாகுபடி செய்யாதீர்கள் என்று சொன்னார்கள். கரும்பு உற்பத்தி

செய்யாதீர்கள் என்றார்கள். விவசாயிகள் பெற்று வரக்கூடிய உரிமைகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். இதையெல்லாம்தான் அடிப்படையாகக் கொண்டு அந்த உற்பத்தியாளர்கள் சங்கத்தை ஆரம்பித்தார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நேரம் பத்து நிமிஷத்திற்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா** : மற்றவர்களெல்லாம் குறுக்கே பேசினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் என்ன செய்வேன் ? நேரத்தைத்தான் நான் பார்க்க வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : இவர்களெல்லாம் குறுக்கிட்டார்கள். இம்மாதிரியான மாநாடு நடத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோதமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அதுதான் பூந்தாழங்குடியில் வெத்திரை பார்த்தார்கள். நாலு மைல்களுக்கு அப்பால் மாங்குடியிலிருந்து அவர்கள் தவறான வார்த்தைகளைப் பேசிக் கொண்டு வந்து, ஆத்திரம் மூட்டும் அளவிற்கு, 200. 300 பேர்கள் திரண்டு, கொடிபிடித்துக் கொண்டு பூந்தாழங்குடிக்கு வந்து, தேவையற்ற நிலைமைகளை உண்டாக்கி, துப்பாக்கிப் பிரயோகத்தை ஏற்படுத்தினார்கள். அதன் பின்னால், அவர்களுடைய கூட்டங்களில், மாநாடுகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோதமாகப் பேசி வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பத்து நிமிஷங்கள் ஒதுக்கப்பட்டு, இப்பொழுது
மு.ப. 11-00 15 நிமிடங்களாகிவிட்டன. இன்னும் 13 பேர் பேச இருக்கிறார்கள். காலை நிகழ்ச்சியை 1½ மணிக்குள் முடிக்க வேண்டும்: இன்றைய தினம் மாலையில் வைத்துக் கொள்ளலாம் என்றாலும், மாலையில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் வேறு உள்ளன. அகவே, எல்லோரும் எல்லாவற்றையும் கூறுவதற்கு வாய்ப்பில்லையே, நேரம் இல்லையே என்று கருதாமல், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் உறுப்பினர்கள் தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டும். திரு. சுப்பையா அவர்கள் சீக்கிரமாக உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, இம்மாதிரியான சம்பவம் நடைபெறுவதற்கான அறிகுறியாக, தொடர்ந்து 3, 4 மாதங்களாக ஜனங்களுக்கு விரோதமான பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்போதைக்கப்போது தகவல் அனுப்பப்பட்டிருக்கின்றன.



கீழ்வெண்மணியிலிருந்து கிவளூர் மூன்று மைல் தொலைவில் இருக்கிறது. அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. சர்க்கிள் போலீஸ் ஆபிசும் இருக்கிறது. விசேஷ போலீஸ் படையும் இருக்கிறது. சுமார் மாலை 5 மணியளவில் இரண்டு பேரைப் பிடித்து கட்டிவைத்து அடித்திருக்கிறார்கள். பிறகு படையாகத் திரண்டுபோய் சேரியில் இருப்பவர்களைத் தாக்கியிருக்கிறார்கள், அடித்திருக்கிறார்கள். இந்த விஷயம் பூராவும் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியும். ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் வாளாவிருந்தார்கள் ? தகுந்த நேரத்தில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்ற விபரத்தை அறிந்து கொள்ள வேண்டும். நான் யாரையும் குறைவாகச் சொல்ல விரும்பவில்லை. போலீஸ் அதிகாரிகள் அங்குள்ள நிலப்பிரபுக்களோடு பழக்கம் வைத்துக் கொண்டிருப்பவர்கள்; நிலப்பிரபுக்களுடைய நிர்ப்பந்தம், அவர்களிடம் ஏற்பட்ட உறவு முறைகள் எல்லாம் . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : போலீஸ் அதிகாரிகள் எல்லாம் நிலச்சுவான்தார்களோடு உறவு வைத்திருந்தார்கள் என்றால், சர்க்காரும் இருந்து, நிலப்பிரபுக்களோடு போலீஸ் உறவு வைத்துக் கொண்டிருந்தது என்றால் அது சர்க்காருக்கு அவமானமாக இருக்காதா? (திரு. ஆ. கு. சுப்பையா எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நேரம் அதிகமாகி விட்டது. உறுப்பினர் அவர்கள் 20 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொண்டு விட்டார். சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, போலீஸ் வந்து நடவடிக்கை எடுக்காமல் தயங்கியிருக்கிறார்கள். இரண்டு நாட்கள் ஆகியும், யாரும் கைது செய்யப்படவில்லை. பின்னர் டி.ஐ.ஜி அவர்களும், கலெக்டர் அவர்களும், நானும் அந்த இடத்திற்கு ஒன்றாகச் சென்றோம். கொளுத்தப்பட்டு எரிந்து, பாதி எரிந்தும், பாதி எரியாமலும் இருந்த பிணங்கள் அத்தனையையும் வாசலில் அடுக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் ஒரு சிறிய குடிசையில் அடைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். தெருவில் இருந்த குழந்தைகளையெல்லாம் பிடித்து அடித்திருக்கிறார்கள். 15 பேர்களுக்குத் துப்பாக்கிக் குண்டு காயம் ஏற்பட்டிருக்கிறது. ஏழெட்டு பேர்களுக்கு அரிவாள்களால் ஏற்பட்ட குத்துக்காயம் ஏற்பட்டிருக்கிறது. 25 வீடுகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். போலீஸ் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கேட்டபோதுதான், டி.ஐ.ஜி. அவர்கள் அங்குள்ள போலீஸ் அதிகாரியைப் பார்த்து "ஏன் யாரையும் கைது செய்யவில்லை ?" என்று கேட்டார். அதன் பிறகு பக்கத்து கிராமத்தில் உள்ளவர்களையெல்லாம் கைது செய்தார்கள். நமது சட்ட அமைச்சர் அவர்களும், இன்றைய முதல் அமைச்சர் அவர்களும் நேரில் வந்து

சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். சம்பவம் நடந்த மூன்றும் நாள்தான் அமைச்சர்கள் வந்தார்கள். (மணி யடிக்கப்பட்டது).

இன்றையதினம் அரசு என்ன செய்ய வேண்டுமென்றால், இந்தச் சம்பவத்திற்கு முன்னால், அந்தப் பிரதேசங்களில் உள்ள நிலச் சுவான்தார்களோடு, போலீசுக்கு எந்த அளவுக்கு உடந்தை இருந்திருக்கிறது என்பதை உயர்தர அதிகாரிகளைக் கொண்டு விசாரிக்க வேண்டும். அப்போதுதான் அதிகாரிகள் எப்படி நடந்துகொண்டார்கள் என்ற உண்மையை அரசாங்கம் அறிந்து கொள்ள முடியும். அந்த அதிகாரிகளையெல்லாம் உடனடியாக அந்த இடத்தைவிட்டு மாற்றியாக வேண்டும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தபடியாக திரு. என். கிட்டப்பா அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். அந்தப் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்கு ஈடாக, அந்த அதிகாரிகளுடைய சொத்தைப் பறிமுதல் செய்யவேண்டும். அரசாங்கமே நஷ்ட ஈடு கொடுக்காமல், அந்த நஷ்டத்தை அதிகாரிகளிடமிருந்தே வசூலிக்க வேண்டும். அரசாங்கம் இதை விசேஷமாகக் கவனத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி, பேசுகின்ற உறுப்பினர்கள் பத்து நிமிடங்களுக்கு மேல் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பு. சே. முத்துச் செல்வன் தலைமை]

* **திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அண்மையில் கீழ்வெண்மணியில் ஏற்பட்ட சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்து இங்கே பேசப்பட்டு வருகிறது. அந்தக் கண்டன தீர்மானத்திற்கு எனது மறுப்பைத் தெரிவிக்கும் வகையில் நான் சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினர் மிகவும் உள்ளபடியே வேதனைப்படுவதாக இருக்கிறது என்று கூறிக் கொண்டு வந்தார். ஆளும் கட்சி உறுப்பினர் என்ற வகையில் கீழ் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கு என்னுடைய இதயப் பூர்வமான வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாற்பத்திரண்டு பேர்கள் ஒரு குறுகிய இடத்தில் குடிசையில் அடைக்கப்பட்டு, பின்னாலே அவர்கள் சுடப்பட்டு, அந்த வீடு கொளுத்தப்பட்டு 42 பேரும் உயிர் இழக்கக்கூடிய கோரச் சம்பவம் தமிழகத்தில் எத்தகைய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை எண்ணுகிற நேரத்தில், விவசாயத் தொழிலாளர் மத்தி





யிலும் ஏனையோர் மத்தியிலும் சிலர் இந்தக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் நாம் மிகவும் வருத்தப்படுகிறோம் வேதனைப்படுகிறோம். ஆனால் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியவர்கள், இந்தக் காரியங்கள் எல்லாம் ஏதோ சர்க்காருடைய கவனக் குறைவின் காரணமாக கீழ்வெண்மணியில் நடந்துவிட்டதைப் போலவே எடுத்துச் சொல்லி, அரசாங்கத்தை கண்டித்துப் பேசினார்கள். கீழ்வெண்மணியில் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. முன் எச்சரிக்கை இடப்பட வேண்டும், பாதுகாப்பு தரப்பட வேண்டும். அப்படி பாதுகாப்பு தரப்படாவிட்டால், தாழ்த்தப்பட்டிருப்பவர்கள் கொல்லப்பட்டுவிடுவார்கள் என்ற எச்சரிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்து, பின்னாலே அரசாங்கம் போலீஸ் துறை தக்க நடவடிக்கை எடுக்காமலிருந்து, சம்பவம் நடைபெற்றிருந்தால் உள்ளபடியே கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து கண்டிக்கிறோம் என்பதன் பொருள் விளங்கும். தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினர், இது திட்டமிட்டு நடைபெற்றதாகச் சொன்னார்கள். ஒரு வேளை அந்த உறுப்பினருக்கு இந்தச் சம்பவம்பற்றி முன்கூட்டித் தெரியுமோ, என்னவோ எனக்குத் தெரியாது. இன்றைய தினம் அவர்கள் நீலிக் கண்ணீர் வடித்து நிற்பது, ஒருவேளை அவர்கள் சம்பந்தப்பட்டவர்களோ என்று நாட்டு மக்கள் எண்ணத்தக்க அளவுக்கு இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இயக்கத்தில் உள்ளவர்களால், இதற்குமுன்பு பரிதாபத்திற்குரிய பஞ்சமர்கள் என்று வர்ணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் 42 பேர் உயிர் இழக்கக்கூடிய நிகழ்ச்சி கீழ்வெண்மணியில் நடந்ததை நாம் அறிகிறோம். நெஞ்சத்திலே கைவைத்துப் பார்த்து, உள்ளத் தூய்மையோடு நினைத்துப் பார்த்தால், இந்தச் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பது நன்றாகத் தெரியும். சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் என்ற நிலையில் அந்தக் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் தலைவர்களும் அவர்களைச் சந்திக்கின்ற நிலையில் அவர்களுக்கும் இந்தச் சம்பவத்திற்கும் இருக்கின்ற தொடர்பை நாட்டுமக்கள் அலசிப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்படி அவர்களைப்பற்றி நாட்டுமக்கள் எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில்தான் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கிறோம். கண்டிக்கப்படவேண்டியவற்றை உள்ளபடியே அத்தனை பேரும் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் நிச்சயமாக யார் இதற்குப் பொறுப்போ, யார் இதற்கு உடந்தையோ—எவ்வளவு பெரிய கட்சிக்காரர்களாக இருந்தாலும், அகில இந்தியக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், அகில உலகக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் நிச்சயமாக நீதி மன்றம் அவர்களைத் தண்டித்தே தீரும், அவர்களை விடாது என்று கருதுகிறேன்.

[திரு. என். கிட்டப்பா] [1969 பிப்ரவரி 28

கீழ்வெண்மணிச் சம்பவத்தைப்பற்றிப் பேசுகின்றபோது தமிழகம் பூராவும் இருக்கிற நிலைமைகளைச் சொன்னார்கள். தங்கள் தங்களுடைய கருத்துக்களைச் சுட்டிக் காட்டினார்கள். பலப் பல மாவட்டங்களில் இருப்பதாகப் பலவற்றைச் சொன்னார்கள். அதில உள்ள நிலைமைகள் உண்மைக்கு எவ்வளவுக்கெவ்வளவு மாறுபட்டிருக்கிறதோ, இல்லையோ 1965-ம் ஆண்டு மொழிப் போராட்டம தமிழகத்தில் நடைபெற்றது. கூலி உயர்வு கேட்டான் அத்தான் குண்டடிபட்டுச் செத்தான என்று சொல்கிறவர்கள்—1965-ஆம் ஆண்டிலே மொழிப் போராட்டம் நடந்தபோது காக்கை, குருவிகளைச் சுட்டுத் தள்ளுவதுபோல மனிதர்களைச் சுட்டுத் தள்ளினார்களே, அதை எந்தக் கட்சி அரசாங்கம் செய்தது என்று நான் சொல்லத் தேவையில்லை—மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளட்டும் எத்தனை பேர்கள் செத்தார்கள் என்கிற விவரங்கள் கூடக் கிடைக்கவில்லை, முக்கியமான சில ரெக்கார்டுகளையே கூட கொளுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். நீங்களும் அறிந்திருப்பீர்கள். குருவிகளைப் போல, காக்கைகளைப் போல மக்களைச் சுட்டுக் குவித்தார்கள். ஆனால் இந்த ஆட்சியின் கவனத்திற்கு வராத நேரத்தில் கீழ்வெண்மணிச் சம்பவம் நடைபெற்றுவிட்டது. இது ஆட்சியின் கவனக் குறைவினால் ஏற்பட்டதல்ல. கவனக் குறைவினால் ஏற்பட்டதுபோல நீலிக் கண்ணீர் வடித்து கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருப்பவர்கள் முதுகுளத்தூரை நினைத்துப் பார்க்கட்டும். முதுகுளத்தூரை பிணக் குவியலாக்கினர். அவர்கள்—அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படாத நிகழ்ச்சி—அதற்கு அரசினைக் கண்டிக்க முன் வந்திருக்கும் நிலையைக் கண்டு மக்கள் வேதனைப்படுகிறார்கள். கண்டிக்கப்படவேண்டியவர்கள் இந்த அரசினர் அல்ல. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தண்டிக்கப்படப்போகிறார்கள். கையில் துப்பாக்கி வைத்துச் சுட்டிருக்கிறார்கள். அதுவும் லைசென்சு இல்லாத துப்பாக்கி. அப்படி லைசென்சு இல்லாத துப்பாக்கியை வைத்திருந்தவர்கள்—எந்த இயக்கத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டியவர்கள், கண்டிக்கப்படவேண்டியவர்கள், நீதி மன்றம் நிச்சயமாக நீதி வழங்கும்.

ஆனால் திருடிவிட்டு ஓடுகிறவர்கள் பிடிக்கப் பல்லோர் கூடியவுடன் திருடன் அதோ ஓடுகிறான், திருடன் அதோ ஓடுகிறான் என்பதாகக் கூட்டத்தோடு சேர்ந்து தானும் திருடனைத் தேட முயற்சிப்பதுபோல இதில் தப்பித்துக்கொள்ள முடியாது. அந்த நிலைக்குத் தப்பித்துக் கொள்ளவும் விடக்கூடாது. இந்த நிலையில் அரசின்மீது கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்திற்கு—கீழ்த் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் ஆளும் கட்சியின் சாதாரண உறுப்பினன் என்ற முறையில் ஆழ்ந்த மறுப்பினைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.



1969 பிப்ரவரி 28]

* திரு. எம். சுரேந்திரன் : கனம் தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன்னால் வைத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தில் கண்டிருக்கிற 25—12—1968-ல் நடந்த கீழ்வெண்மணிச் சம்பவம் குறித்து பல்வேறு மதிப்பீடு, விமர்சனம் செய்யப்படுவதைப் பார்க்கிறோம். அப்படி மதிப்பிடுகிறபோது ஒவ்வொருவரும் கொண்டிருக்கிற நம்பிக்கைகளையும், கருத்துக்களையும் ஒட்டித்தான் அதைப் பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில்—எங்கள் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியைப் பொறுத்தவரையில் லட்சியம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அந்த லட்சியத்தை அடைவதற்காக செல்கின்ற வழிகளும், முறைகளும் நல்லவையாகவே இருக்க வேண்டுமென்று உறுதியாகவே நம்புகிறோம். அப்படி நம்புகிற கட்சியைச் சார்ந்தவன் நான்.

அந்தக் கண்ணோட்டத்தோடு இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறபோது எந்தக் கருத்தோடு நடந்திருந்தாலும், எப்படியான உணர்வோடு நடந்திருந்தாலும் மிகவும் தீமையானது மிகவும் கொடுமையானது. அப்படி நடந்திருக்கக்கூடாது என்றே நான் கருதுகிறேன். அப்படி நடந்திருக்கிற நிலைமையை எண்ணிப் பார்க்கிறபோது அம்மாதிரி நிகழ்ச்சி ஏன் நடந்தது என்று சரியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். சரித்திரம் காண முடியாத ஒரு நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கிறது. நேற்றைய தினம் திரு. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டார்கள் சரித்திரத்தில், இலக்கியத்தில் கூடக் காணாத நிகழ்ச்சி நடந்திருக்கிறது, அப்படி சரித்திரத்தில், இலக்கியத்தில் காண முடியாத, அகில இந்தியாவிலேயே பல போராட்டங்கள், பல இயக்கங்கள் நடந்திருந்தாலும் அவைகளில் எல்லாம் காண முடியாத நிகழ்ச்சியாக நடந்திருக்கிறதே, அப்படி நடந்திருக்கிற நிகழ்ச்சியை சரியாக விசாரணை செய்து, அது எதைக் குறிக்கிறது, எதைக் காட்டுகிறது என்பதை ஏன் புரிந்துகொள்ள முயற்சி செய்யக்கூடாது என்பதுதான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட்டுக் கூறினார்கள். இது அரசாங்கத்தால் நடந்தது அல்ல, நீதி விசாரணை வேண்டியதில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் கருதுகிறேன், அரசாங்கத்தால் நடக்கிற காரியங்களுக்குத்தான் நீதி விசாரணை என்ற கொள்கையை வைத்துக்கொள்வது நல்லது என்று தோன்றவில்லை. எப்படி லட்சியத்தை நல்ல முறையில், நேர்மையான முறையில் அடைய வேண்டும், ஜனநாயக முறையில் அடைய வேண்டும் என்கிற உயரிய கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோமோ, அது போலவே எங்கே தவறு நடந்தாலும் எப்படி நடந்தாலும், அரசாங்கத்தின் சார்பில் நடந்தாலும், தனியாகவே நடந்தாலும்—தவறுகள் இன்னவை, சரியானவை இன்னது என்பதை மக்களுக்கு

[திரு. எம். சுரேந்திரன்] [1969 பிப்ரவரி 28.

ஒன்றுமே இல்லாதவர்கள். அவர்கள் அங்கே போராடி இறக்க வில்லை, உயிருக்குப் பயந்து ஓடிப்போய் இறந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளக்கூட முடியாத சூழ் நிலை இந்தச் சமுதாயத்திலே இருக்கிறது என்பதை நாம் இந்த நிகழ்ச்சியிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். அரசாங்கம் இதிலே மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். பரம்பரை பரம்பரையாக நிலச்சுவான்தார்களாகவும், குத்தகை நிலமும் எழுதி வாங்காமல் ரசீதும் கொடுக்காமல் இருக்கக்கூடி யவர்களாகவும் இருக்கக்கூடிய நிலைமையை மாற்ற வேண்டும். அதிகாரமற்ற முறையில் உள்ள நிலங்கள் யாரிடத்திலே இருந் தாலும் அப்படிப்பட்ட நிலங்களை அவர்களிடமிருந்து எடுத்து வருடா வருடம் அறுவடைக்கும், நடவுக்கும் என்று கூலிகளாக வருகிறவர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால், அவர்கள் குறைந்தபட்ச நிலத்தை வைத்துக்கொண்டு அறுவடை செய் வதற்கு, உழுவதற்கு, நடுவதற்கான சூழ்நிலையை அவர்களே உண் டாக்கிக்கொள்ளக்கூடிய நிலைமை உண்டாகும். அப்படி இல்லாத வரையில் இந்தப் பிரச்னைகளிலே மாற்றம் ஏற்படாது. அப்படிச் செய்தால், அவர்களுடைய ஆதிக்கம் குறைந்துவிடும், அவர்களு டைய கர்ண்டல் குறைந்துவிடும், சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும். அப்படிச் செய்யக்கூடிய அதிகாரம் நம்மிடம் தான் இருக்கிறது. ஏற்கனவே அம்மாதிரியான சட்டம் செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. இது ஒரு விசேஷமான நிலைமையை உண்டாக்கக்கூடிய சூழ்நிலை இருப்ப தாலே அரசாங்கம் இதிலே தீவிர கவனம் செலுத்தவேண்டும். அப்படியில்லையென்றால் இதிலே அரசியல் வந்துவிடும். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் கருத்து, சமுதாயத்தின் இன்றைய நிலை, எதிர்க்கட்சித் தலைவர் நிலப்பிரபுக்களைப்பற்றி அவ்வப் பொழுது இங்கே அடிக்கடி எழுந்து எழுந்து பேசிவருகின்ற நிலை வெற்றை எல்லாம் பார்த்தால் இதில் அரசியல் அடங்கியிருக் கிறது என்பது தெரிய வருகிறது. இந்த அரசியல் என்ன, அது எப்படி உருவாயிற்று, என்ன உருவாக்கப் போகிறது, எங்கே எங்கே எப்படியெல்லாம் இனிமேல் மோதப்போகிறது என்பதை யெல்லாம் ஆராய்ந்து, இதுதான் நடந்தது, இப்படி இனிமேல் நடக்கும் என்ற வகையில் பொதுமக்களுக்கு வழிகாட்ட வேண்டு மென்ற முறையிலே, இதை விசாரணைக்குவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

*திரு. எ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தை வகுரிக்காவிட்டாலும்கூட ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சர்க்காருடைய நிலை என்ன, கட்சிகளுடைய நிலை என்ன என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் வெட்டப்பட்டவர்



1969 பிப்ரவரி 28] [திரு. எ. அ. சுப்பராஜா]

என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் என்றும், இன்னொரு கட்சி யைச் சேர்ந்தவர்கள் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் என்றும், கொலை செய்யப்பட்ட பக்கிரிசாமி யாருடைய ஆள் என்றும் மிராசுதாருடைய ஆள்கள்தான் கொலை செய்தார்கள் என்றும் இப்படியெல்லாம் பேசிக்கொண்டே போனால், அதற்கு இது நேரமல்ல. இதிலே சர்க்கார் என்ன செய்யவேண்டுமென்பதை நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். நடந்த சம்பவம் 6 மணிக்கு நடந்திருக்கிறது. பக்கிரிசாமி அப்பொழுது கொலை செய்யப்பட்டு இருக்கிறார். உடனடியாக 9 மணிக்கு அடுத்த சம்பவம் நடந்திருக் கிறது. நடுவிலே 3 மணி நேரம் இருந்திருக்கிறது. மூன்று மைல் தொலைவில் கீவளூர் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. கொலை செய்யப்பட்டார் என்று ஸ்டேஷனுக்குத் தெரிந்தவுடனே அங்கி ருக்கிற அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பதை சுயேச்சை உறுப்பினர் என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். ஒரு தப்புச் செய்தால் நாம் உள்ளே இருப்போம், நம் முடைய கதி என்ன என்று எண்ணிப் பார்க்கின்ற அளவுக்கு இந்தச் சர்க்கார் இதுபோன்ற விஷயங்களிலே கவனம் செலுத்த வில்லையென்றால் நாங்கள் எல்லாம் இருக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இந்தத் தீர்மானம் கொண்டுவந்தவர்கள் சொல் கிறார்கள், இதில் சர்க்காருடைய பொறுப்புத்தான் என்று. அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை. இதை சர்க்கார் போய்ச் செய்யச் சொன்னார்களா, அப்படிச் சொல்ல முடியாது. கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்களா, அப்படி சொல்ல முடியாது. அதிகாரிகள் ஏன் இதில் தாமதம் செய்தார்கள். அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அல்லது அமைச்சரவை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் என்ன செய்யவேண்டுமென்றால், சட்டம் அமைதி பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அளவில் மக்களிடத்திலேயும், அதிகாரிகளிடத்திலேயும் அந்த உணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு கட்சியும் அவன் செய்துவிட்டான், இவன் செய்து விட்டான் என்றோ அல்லது அவர்கள் கொன்றுவிட்டார்கள் அல்லது இவர்கள் கொன்றுவிட்டார்கள் என்றோ சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இந்தத் தீர்மானம் கொண்டு வருகிற நிலைமையைப் பார்த்தால் ரொம்ப வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குக் கீழே நடப்பது எல்லாம் அவர்களுக்குத் தெரியாது. பலசரக்குக் கடையிலே ஒரு சாமான் வாங்கினால் கொஞ்சம் கண்ணை மூடினால் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஒரு கடையில் நாலு பேரை வைத்து நிர்வாகம் செய்வது பெரும் கடின மாயிருக்கிறது. ஒரு சில பேர்களை வைத்து நிர்வாகம் செய்வது மிகக்கடினம். அப்படிப்பட்ட நிலையில் எல்லாவற்றையும் கவனிக்க முடியாது. சில அதிகாரிகளும், ஆளும் கட்சிக்காரர்களும்,

தொடர்புக்கொண்டு அமைச்சர்களுக்குத் தெரியாமல் அவர் களுக்குக் கெட்ட பெயர் உண்டாக்குகிறார்கள் என்பதைத்தான் கவனிக்கவேண்டும். இது மிக முக்கியமான விஷயம், ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இராஜபாளையம் நகரிலே ஒரு சர்வ கட்சி ஊர்வலம் நடந்தது. நானும் சட்ட மன்ற உறுப்பினன் என்ற முறையிலே தலைமை தாங்கி நடத்திச் சென்றேன். காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் அடுத்து இருக்கிற கட்சிக்காரர்களுக்கும் சண்டை வருகிற மாதிரி இருந்து வாய்ப் பேச்சோடு நின்றுவிட்டது. ஆளும் கட்சிக்காரர் டி.ஐ.ஜி.யிடம் இதுபற்றிச் சொல்லி அவர் அந்த இன்ஸ்பெக்டரிடம் அந்த சட்ட மன்ற உறுப்பினரை 75-லே போடு என்று சொன்னார். இது எனக்கு ஊர்ஜிதமாகத் தெரியும்.

அன்று எனக்குப் பக்கத்திலேயே இரண்டு கான்ஸ்டபிள்கள் வந்து கொண்டிருந்தார்கள். அன்று ஒன்றும் கலவரம் ஏற்பட வில்லை. சண்டை போட்டுக் கொள்ளவில்லை என்று அவர்களே சாட்சி சொல்லியும் கேட்கவில்லை. நானே நேரில் சென்று இன்ஸ் பெக்டரைக் கேட்டபோது அவர் நான் என்ன செய்வது. மேலே உள்ள பெரிய அதிகாரிகள் இருந்து அப்படிச் சொல்லுகிறார்களே என்று சொன்னார். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டார். நான் ஆளும் கட்சியில் இருப்ப வர்கள் எல்லோரையும் சொல்லவில்லை, சிலபேர் இப்படி அதிகாரி களைப் பயன்படுத்தி சில காரியங்களைச் செய்கின்ற காரணத்தால் பொதுவாக ஆளும் கட்சிக்கும், அமைச்சர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அப்படி ஏதாவது தவறான செயல்கள் நடந்து விட்டது என்று வைத்துக்கொண்டாலும், யார் மூலம் அதற்கு நிவாரணம் தேடுவது ? அமைச்சர்களிடம் சொல்லித்தான் முறை யாகச் செய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலை அங்கு ஏற்பட்டு கோர்ட்டுக்குப் போய் அவர் அக்விட்டல் ஆன பிறகு நான் ஐ.ஜி. அவர்களுடன் பேசினேன். முதலமைச்சர் அவர்களிடம் அதைப் பற்றிச் சொன்னபோது, எழுதிக் கொடுங்கள், டிப்பார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுக்கிறோம் என்று சொன்னார்கள். கடைசியில் யார் அகப்பட்டுக் கொள்வார்கள் ? டி.ஐ.ஜி பெயர் வராது, இன்ஸ்பெக் டருக்குத்தான் வேலை போய்விடும். இப்போதைய அமைச்சர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது இதுபோன்ற எத்தனையோ கேஸ் கள் அவர்கள் மீது போடப்பட்டதை அறிவார்கள். அதனால்தான் அப்போது ஆட்சியில் இருந்தவர்களை ஜனங்கள் ஓட்டிவிட்டார்கள். ஆகவே, உங்களுக்கும் தெரியாமல் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் உங்களுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கக் கூடாது என்பதுதான் நடுநிலைமை சுயேச்சையாளராகிய என்னுடைய அபிப்பிராயம். சட்டம் அமைதி என்பது எந்த இடத்தில் குலைந் தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை மட்டும் வலியுறுத்திக் கொண்டு, கட்சிக்காரர்கள் ஒரு சிலரின் தலையிட்டால்





உங்களுக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டு மென்று கூறி, உங்களுடைய ஆட்சி நன்றாக இருக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டுமென்று வேண்டி, கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்காமல் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** கனம் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு முன்பாக நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த, மறைந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது அஞ்சலியை ஆரம்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கண்டனத் தீர்மானத்திற்குள் நுழைவதற்கு முன்னால் புதிய முதலமைச்சர் அவர்களை வாழ்த்தியாக வேண்டும். அன்று எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டுப் பேசியபோதுகூட, 'கருத்திருமனிடம் இருந்து கனிவான வார்த்தைகள், ஆலோசனைகள் வரும் என்று எதிர் பார்த்தேன், கருத்திருமனுக்குக் கல் மனசு, அப்பேர்ப்பட்ட வார்த்தையை அவர் உதிர்க்கவில்லை' என்று சொன்னார்கள். ன் புதிய முதலமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன், வரவேற் றேன். அவர்களே கூறினார்கள்—அவர்கள் தாழ்த்தப்பட்ட பகுப்பைச் சார்ந்தவர்கள் என்று. அப்படி அவர்கள் தாழ்த்தப் பட்டவர்களுடைய பிரதிநிதியாக இன்று வந்திருக்கிறார்கள். இளைஞர்—அவர்கள் நடையிலே சொல்லுவதானால், 'நல்லவர்—வல்லவர்' என்று சொல்லலாம். அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். பிற்பட்ட மக்களுக்காக நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்று எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் நம்புகின்றோம்.

இந்தச் சமயத்தில் என்னுடைய உள்ளத்தை உறுத்திக் கொண் டிருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மறைந்த முதலமைச்சர் அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல, மிகப் பெரியவர்கள். அப்பேர்ப்பட்ட அவர் மறைந்ததற்காக ஏழு நாட்கள் துக்க நாளாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அந்தத் துக்க நாள் முடிவதற்கு முன்பாக, அவருக்காக அழுத கண்ணீர் காய்வதற்கு முன்பாக, அவர் மேல் போட்ட மாலைகள் எல்லாம் வாடுவதற்கு முன்பாக புதிய முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டது அந்தத் துக்கத்திற்கும், அந்தச் சோகத் திற்கும் புனிதத்தை ஏற்படுத்தியதாகாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேரு இறந்து 12 நாட்கள் இந்தியா முழுவதும் துக்க நாள் கொண்டாடியபோது மூன்றாவது நாளே லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுவிட்டார் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** நீங்கள் உங்களுடைய தலைவரை எந்த அளவுக்குத் தெய்வமாகக் கருதி வந்தீர்களோ அந்த அளவுக்கு நாங்கள் அவரைத் தெய்வமாகக் கருதவில்லை. நேரு அவர்களைத் தலைவராக, பெருந்தலைவராகத்தான் கருதி வந்தோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காமராஜரைக் கடவுள் என்று கூறுகின்ற நீங்கள் நேருவை அந்த அளவுக்கு மதிக்க வில்லையா?

**திரு. எஸ். ராமலிங்கம் :** நாங்கள் காமராஜரைக் கடவுள் என்று சொல்லவில்லை, அவரைத் தலைவர் என்றுதான் கொள்ளுகிறோம். கடவுளைத்தான் கடவுள் என்று கொள்ளுகிறோமே தவிர, தலைவர்களைத் தலைவர்கள் என்றுதான் மதிக்கின்றோம். நான் இதை ஒரு ஆலோசனையாகத்தான் குறிப்பிட விரும்பினேனே தவிர, முதலமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அவ்வளவு அவசரம் காட்ட வேண்டிய தேவையில்லை.

கண்டனத் தீர்மானத்தின்கீழ் வெண்மணிச் சம்பவம் பற்றி எல்லோரும் பேசினார்கள். ஒவ்வொரு கட்சியினரும் அந்தந்தக் கட்சிக் கண்ணோட்டத்தில் பேசினார்கள். கீழ்வெண்மணிச் சம்பவம் பொதுவாக இந்த நாட்டிலே நடந்திருக்கக் கூடாத ஒன்று. சரித்திரத்திலேகூட அம்மாதிரிக் கொடூரச் சம்பவங்கள் நடந்ததாக இல்லை. வெள்ளையர் காலத்தில் நடந்த கல்கத்தா கலவரம், ஜாலியன்வாலா பாக், நவகாளி கலவரம் ஆகியவற்றைப் பற்றிப் படித்திருக்கிறோம். வெளிநாடுகளிலே கூட இத்தகைய கொடூரமான நிகழ்ச்சி நடந்ததாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இம்மாதிரியான ஒரு கொடூர நிகழ்ச்சி இந்த நாட்டிலே நடந்திருக்கிறது. கீழ்வெண்மணிச் சம்பவம் திடீரென்று தீப் பற்றி எரிவதுபோல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியல்ல. திரு. ம.பொ.சி. அவர்களே குறிப்பிட்டார்கள். சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டுவிட்டதற்கு தொடர்ச்சியான நிகழ்ச்சியாகச் சொன்னார்கள். இது ஒரு சமுதாயப் பிரச்சினை, வர்க்கப் போராட்டம் மாதிரி உள்ளது. உள்ளவன், இல்லாதவன்—உள்ளவன் ஒரு கட்சி, இல்லாதவன் இன்னொரு கட்சி என்ற நிலையில் சர்க்கார் ஜாக்கிரதையாக, முன் யோசனையாகச் செய்திருந்தால் நலமாக இருக்குமென்று அவர்களே சொன்னார்கள். அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. இத்தகைய கோர நிகழ்ச்சி நடந்த சமயத்தில் நாம் எல்லாம் இருக்கிறோமே என்று வெட்கப்படும் நிலைமையில் இருக்கிறோம். இந்த மாதிரி நிகழ்ச்சி இந்த நாட்டிலே மட்டுமல்லாது வேறு எந்த நாடுகளிலும் இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி. கற்பனைக் கதைகளிலே கூடக் காணமுடியாத அளவுக்கு ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. நடந்த நிகழ்ச்சியைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் தீர்த்தால்தான் நல்லது. அந்தப் பகுதியைச் சார்ந்த கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. ஞானசம்பந்தம் அவர்கள்



பேசுகிறபோது உண்மை நிலையை உணராத நிலையிலே 'காங்கிரஸ் காரர்களுக்கு அவர்கள் ஓட்டுப் போடாததால் அவர்கள்தான் தீ வைத்தார்கள்' என்று பேசினார்கள். எவ்வளவு பெரிய அபாண்டம், உண்மைக்கு மாறான கூற்று. அவர்கள் உண்மையை மாற்றி இப்படித் திரித்துக் கூறுகிறார்கள். அதிலே சம்பந்தமே இல்லாத காங்கிரஸ் கட்சியை இழுத்துப் பார்க்கிறார்கள். மதிப்பிற்குரிய **ம.பொ.சி அவர்கள் சொன்னதையெல்லாம், சோஷலிஸ்டு கட்சி**யினர் சொன்னதை எல்லாம் கூட்டணிக் கட்சியினர் சார்பில் இன்று ஆட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் உற்றுக் கவனிக்க வேண்டும். திரு. ஜெயராஜ் அவர்கள் குறிப்பிட்டது போல் நாங்கள் எல்லாம் கூடுதலான முறையில் கவலைப் பட வேண்டியிருக்கிறது. காரணம்—கொளுத்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் அரிசனங்கள்.

நான் சென்ற ஆண்டே சொன்னேன், சர்க்கார் மாறியவுடன் **அரிசனங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாய் இல்லாப்** பிள்ளைகளைப் போன்ற உணர்ச்சி, பாதுகாப்பில்லாத உணர்ச்சி அவர்களுக்கு வந்து கொண்டிருக்கிறது என்று. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்களின் காலை வெட்டுவதிலிருந்து சாதாரண பண்ணையில் வேலை செய்கிற ஒரு ஏழைத் தொழிலாளியின், ஒரு அரிசனத் தொழிலாளியின் கையைப் பொசுக்குகிற வரையில் நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. அவர்கள் படித்துக் காட்டினார்கள். நாடு முழுவதும் பரவி இருக்கிறது. வெண்மணி நிகழ்ச்சியை மையமாக வைத்துப் பார்த்தால் வெண்மணி நிகழ்ச்சி அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு நான் பாதுகாவலனாக இருக்கிறேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, எனக்கு ஏற்பட்ட நம்பிக்கையில், இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், இந்த மாதிரி நிகழ்ச்சிகள் இவர்களின் ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தால், சிறிது ஐயப்பாடு தோன்றுவதோடு கவலையும் ஏற்படுகிறது. இந்த அரசாங்கம் கூடாத இடத்தில் சேர்ந்து கூடிக்கொண்டு எங்கே நம்மையெல்லாம் கெடுத்துவிடுவார்களோ, எங்கே நம்மை பலிக் கிடாக்களாக ஆக்கி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. தங்கள் கட்சியை வலுப்படுத்தி பிடித்த நாற்காலியை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, கூடாத இடத்தில் கூட்டு சேர்ந்து கொண்டு, ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள கட்சிகளோடு சேர்ந்து கொண்டு, இவர்கள் பேசுவது ஒன்று, அவர்கள் பேசுவது ஒன்று, இவர்கள் கொள்கை ஒன்று, அவர்கள் கொள்கை ஒன்று என்று இப்படி முரண்பாடுள்ள கொள்கைகளை உடையவர்களை கூட்டாகச் சேர்த்துக்கொண்டு, ஒருவர் மலைக்கு இழுக்கிறார், ஒருவர் நீருக்கு இழுக்கிறார் என்ற அளவில், இவர்கள் இருக்கிறார்கள். இந்த

ஆட்சி எங்களைக் காப்பாற்றும் என்றால் இந்தமாதிரி நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்க வேண்டும். அப்படி நடக்காமல் இருந்தால் நாங்கள் உங்களைப் பாராட்டுவோம், உங்களை நம்புவோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாங்கள் சுதந்திராவோடும், கம்யூனிஸ்ட் கட்சியோடும் கூடி இங்கு ஆட்சி நடத்துவதை நண்பர் அவர்கள் கேலியாகப் பேசினார்கள் அல்லது கண்டித்தார்கள் அல்லது எதிர்த்தார்கள் அல்லது வருத்தம் தெரிவித்தார்கள். ஆனால் இன்று பீஹாரில் காங்கிரஸ்காரர்கள் சுதந்திராக் கட்சியின் அனுசரணையோடு ஆட்சி அமைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

**திரு. எஸ். ராமலிங்கம்:** கொள்கை ரீதியாக நாங்கள் அதை ஒப்புக் கொள்ளாதவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாங்களும் கொள்கை ரீதியாக ஒப்புக்கொள்ளாதவர்கள்தான்.

**திரு. எஸ். ராமலிங்கம்:** அது அவர்களாக வந்து சேர்ந்தது; இப்போது நான் சொல்வது என்னவென்றால், முதல் அமைச்சர் அவர்களை தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன். நமக்கென்று ஒரு கலாசாரம் இருக்கிறது, நமக்கென்று ஒரு அரசியலமைப்பு இருக்கிறது, நமக்கென்று ஒரு நாடு இருக்கிறது. அந்த நிலையில் அடுத்த ஒரு மாகாணத்தை மேற்கோளாகக் காட்டி அடிக்கடி எங்களை மடக்குவது . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நமக்கென்று ஒரு நாடு இருக்கிறது, நமக்கென்று ஒரு கலாசாரம் இருக்கிறது என்று கூறுவது இந்திய ஒருமைப்பாட்டிற்கே விரோதமானது.

**திரு. எஸ். ராமலிங்கம்:** நமது மாகாணம், நமக்கென்று ஒரு கலாசாரம் தனியாக இருக்கிறது, நமக்கென்று ஒரு தனி பண்பாடு இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். இந்தமாதிரி அவர்கள் ஒரு கூடாத கூட்டை கூட்டிக் கொண்டு அதன் விளைவாக இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. ஜெயராஜ் அவர்கள் வருத்தத்தோடு அங்கு நடந்ததைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். வெண்மணிப் பிரச்சினையை மையமாக வைத்துக்கொண்டு அப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு என்னைவிட அந்தப் பிரச்சினை பற்றித் தெரியும். அவர்கள் அதை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்குள்ள பிரச்சினை கூலிப் பிரச்சினை மட்டுமல்ல. கூலிப் பிரச்சினைக்கு அப்பாற்பட்ட பிரச்சினை அது. அது கூலிப் பிரச்சினையாக இருந்தால் ராமநாதபுரம், கோவை ஜில்லாக்களில்





அங்குள்ள தொழிலாளர்கள் கூட்டாக சேர்ந்து ஒரு கிராமத்தை கொளுத்த முடியாது. இங்கு தனித்த முறையில் ஒரு பகுதி என்ற முறையில், ஒரு கிராம அளவில் கூட கொளுத்தும் நிலை இருக்கிறது. இந்தமாதிரி நிகழ்ச்சிகள் இனி நடைபெற முடியாத அளவில், இவர்களது ஆட்சியைக் களங்கப்படுத்தும் இத்தகைய நிகழ்ச்சிகள் இனி நடைபெறாத அளவில், ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சிகளுக்காக நாம் எல்லோரும் சேர்ந்து வெட்கப்படும் நிலையில், இம்மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்க நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இது நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்ல, இது கண்டனத் தீர்மானம். இதை கண்டிக்கிறோம். ஆகவே இவற்றையெல்லாம் மனதில் கொண்டு இவற்றிற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டுமென்று சொல்லிக் கொண்டு இந்த விவாதத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே! காங்கிரஸ் கட்சியினர் கொண்டு வந்துள்ள இந்தக் கண்டனத் தீர்மானம் அவசியமா? வேறுவகையில்—ஆக்க வழியில்—கீழ் வெண்மணிப் பிரச்சினையை அணுகுவதற்கு வழிகள் ஆயிரம் இருக்கும்போது, கண்டன ரீதியாக அதை அணுகுவது சரியல்ல; இதற்கு கட்சிக் கலர் கொடுத்து விட்டது பெரும் தவறு என்று தான் நான் நினைக்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த நண்பர் ஜெயராஜ் அவர்கள் பேசியபோது, கீழ்வெண்மணி நிகழ்ச்சி பற்றி விவரங்கள் தந்ததைவிட, இனி அவை போன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுப்பதற்கு வழிவகைகள் கூறவும் அவர்கள் கடமைப்பட்டவர்கள். ஆனால், கூற அவர் தவறிவிட்டார். அவர்களுக்குப் பின்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினரும் இத்தகைய நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் தடுக்க வழிவகைகளைக் கூறவில்லை. ஆகவே, அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களேனும் தெரிவிப்பார் என்று நம்புகிறேன்.

கீழ்வெண்மணி நிகழ்ச்சியோடு, அதற்கு முன்னும் பின்னும் வேறு பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றியும் திரு. ஜெயராஜ் அவர்கள் அடுக்காகக் கூறியபோது, நான் கூட அதிர்ச்சியடைந்தேன். இந்தக் காலத்தில் கூட இப்படியெல்லாம் நடக்கிறதா? என்று வருத்தப்பட்டேன். ஆனால், எந்தப் பின்னணியில் இவையெல்லாம் நடக்கின்றன என்று பார்க்க வேண்டும். நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தில் வர்க்க வேற்றுமையும், வகுப்பு வேற்றுமையும் இருந்து வருகின்றன. அதிலே அடக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஜனநாயக வளர்ச்சியின் விளைவாக விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, அரசியல் கட்சிகள் வலுத்துக் கொண்டு வரும்போது, இளைத்தவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும்,

அக் கட்சிகளை ஒரு வாய்ப்பாகக் கொண்டு உயர்சாதி மனப்பான்மையை எதிர்த்துப் போராடி வருவதன் விளைவுதான் வெண்மணி நிகழ்ச்சி என்பதை நான் மறுக்கவில்லை, ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அப்படி எதிர்ப்பதில் நியாயம் இருக்கிறதா, இல்லையா என்பதுதான் பிரச்சினை. கம்யூனிஸ்டுக் கட்சியை தாழ்த்தப்பட்டவர்கள் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அல்லது தங்களுக்குச் சாதகமாக அவர்களை கம்யூனிஸ்ட் கட்சியினர் பிடித்துக் கொண்டிருக்கின்றனர் என்றால், அப்படிப் பிடிப்பதற்கும் கை கொடுப்பதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். அந்த மூலக் காரணத்தை நாம் அறிவோமானால், நாம் எல்லாம் ஒன்றுபட்டு அதற்குப் பரிகாரம் காண வழி ஏற்படும். அதை விட்டு நாம் ஒருவரையொருவர் கண்டித்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. காங்கிரஸ் கட்சியில் மிராசுதார்கள் இருக்கிறார்கள் என்பதினால், அல்லது மிராசுதார்கள் தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்பதினால், அக் கட்சியினரைப் பலர் ஐயுற்றுப் பேசினார்கள். அது சரியாக இருக்கலாம்; அல்லது மிகையாகவும் இருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தலைமை தாங்குகிறவர்கள், ஒரு வர்க்கப் புரட்சிக்கு முன்னோடியாக, தஞ்சை மாவட்டத்தில் இப்படி ஒத்திகை பார்க்கிறார்கள் என்றும் காங்கிரஸ் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு வருகிறது. இங்கு ஒன்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி அல்ல இப்போதைய ஆளும் கட்சி. ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வர்க்கப் பூசலுக்கு அல்லது இந்த வகுப்புப் பூசலுக்கு நேரடிக் காரணம் அல்ல என்ற உண்மையும் இதிலிருந்து கிடைக்கிறது. இந்த உண்மை கிடைத்திருப்பது ஒரு மூலதனம் அல்லது வசதி என்று நான் நம்புகிறேன். அங்கு நடந்துள்ள போராட்டத்தின் பின்னணியாக உள்ள இருவேறு கட்சிகளுக்கும் தொடர்பற்றதாக ஆளும் கட்சி இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, இப்போது அதிகாரத்திலுள்ள ஆளும் கட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, அப் பிரச்சினைக்கு ஏதாவது பரிகாரம் காண காங்கிரஸ் கட்சி முயல வேண்டும். அச்சம்பவங்களின் பின்னணியில் உள்ள இரு வேறு கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கும் ஒரு கட்சிதான் இங்கு ஆட்சி புரிகிறது. இங்கு தனி ஒரு கட்சிதான் ஆட்சி புரிகிறதே தவிர, கம்யூனிஸ்ட் கட்சியும் கலந்த கூட்டணி ஆட்சி அல்ல. ஆகவே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண, நியாயம் வழங்க ஒரு திட்டத்தை இம்மன்றத்தின் முன்பு வைக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் சரி; அடிக்கடி சொல்லப்படுகிறது. வேறு எதைப்பற்றி அப்படிச் சொன்னாலும், இது விஷயத்தில் அப்படிச் சொல்வது சரியல்ல. தி.மு.க. ஆட்சியைக் குற்றம் சொல்ல எதிர்க்கட்சிக்கு ஆயிரம் பிரச்சினைகள் வரக்கூடும். ஆனால்,



இந்தப் பிரச்சினை, நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தில் இருந்து வரும் வர்க்கப் பேதம்–வகுப்புப் பேதம் நலிந்து, நலிந்து அதிலிருந்து கிளம்பியுள்ள நாற்றம்தான் இந்த கீழ்வெண்மணிப் பிரச்சினை. சமுதாயமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டிய பிரச்சினை இது. மத்திய அரசில் ஆளும் கட்சி காங்கிரஸ், மாநிலத்தில் ஆளும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இதில் பொறுப்புண்டு. ஏனெனில், தீண்டாமை என்பது இங்கு மட்டுமல்ல; வர்க்கபேதம் என்பது இங்கு மட்டுமல்ல; பாரதநாடு முழுமையிலுமே இந்த வர்க்க பேதமும் இந்தத் தீண்டாமையும் இருந்து வருகின்றன. ஆகவே, இந்தத் தீண்டாமையை ஒழிப்பதில், இந்த வர்க்கப்பேதத்தினைத் தீர்ப்பதில் எல்லோருக்கும் பங்கு உண்டு. காங்கிரஸ் கட்சிக்கு இதில் நம்பிக்கை இருக்குமானால், நிச்சயமாக நம்பிக்கை இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில், காந்தீய பாரம்பரியத்தில் வந்த கட்சி அது. பின்னால் சேர்ந்த ஆட்களிடம் குறையிருந்தாலும் அந்தப் பாரம்பரியத்தில் குறை ஒன்றும் இருக்க முடியாது. ஆகவே, அந்த அடிப்படையை வைத்துப் பார்க்கும்போழுது, நான் ஒரு முடிவுக்கு வருகிறேன். நேர்வழியிலே அதை அணுகுங்கள். சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்றால், அதைத் தடுக்க போலீசைக் கூடுதலாக அனுப்ப வேண்டும். அல்லது இராணுவம் அங்கு வர வேண்டும், அல்லது கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 1946-ல் அமைந்த பிரகாசம் மந்திரி சபையின்போதும், இடைக்காலத்தில் வந்த ஓமந்தூரார் மந்திரி சபையின்போதும், பின்னாலே வந்த குமாரசாமி ராஜா மந்திரி சபையின்போதும்—இந்த மூன்று பேரும் முதலமைச்சர்களாயிருந்த நீண்ட நெடுங்காலத்தில்–இதே தஞ்சை மாவட்டத்தில் அட்டூழியங்கள், முறைகேடுகள் நடந்திருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமாக ஆக்கப்பட்டிருந்த காலமும் எனக்குத் தெரியும், நீண்ட நெடுங்காலமாக அந்தக் கட்சி தடை செய்யப்பட்டிருந்தும், தலைமுறை தலைமுறையாகச் சிறையில் அடைக்கப்பட்டும் அமைதி நிலவாமல் அங்கு பயங்கரம் நீடித்து இருந்தது. 1952-ம் வருஷம் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக வந்த பொழுது அறுவடைக் காலத்தில் தந்திக்கு மேல் தந்தியாக அவர்களுக்கு வந்தன. அவற்றை அவர்களே என்னிடத்தில் காட்டினார்கள். நானும் அவற்றைப் பார்த்திருக்கிறேன். ‘அனுப்பு போலீசை, அனுப்பு போலீசை’ என்று கூறினார்கள். அப்பொழுதுதான் “பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்” போடப்பட்டது. தலைவர் இராஜாஜி அவர்கள் மூன்று நாட்கள் அந்த மாவட்டத்திலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அப்பொழுது அந்த மாவட்டத்திலேயுள்ள மிராசுதாரர்கள் அந்தச் சட்டத்தையும் எதிர்த்தார்கள். இன்று அவர்கள் அப்படியே இருக்க மாட்டார்கள்,

முன்னேறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதற்கு ஆக்க ரீதியில் என்ன செய்யலாம், **இதைத் தீர்க்க என்ன வழி என்று சொன்னால் நன்றாக இருக்கும்.** இந்த வெண்மணி நிகழ்ச்சிக்குக் காரணமான கொடுமைகளை, மிராசுதார்களும் வெறுப்பார்கள். மிராசுதார்களிலேயும் மனிதாபிமானம் உள்ளவர்கள் இருப்பார்கள், இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே, அங்கிருக்கின்ற இருவேறு வர்க்கத்தினரையும் ஒன்றுபடுத்துகின்ற வகையில், இப்பொழுது கொண்டு வந்திருக்கின்ற இந்தக் கண்டனத் தீர்மானத்தை—விவாதித்த அளவோடு மன நிறைவு பெற்று எதிர்க் கட்சியினர் விலக்கிக்கொண்டு, சட்டசபையிலேயுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் ஒன்று கூட்டி, உடனடியாக இதற்குப் பரிகாரம் காண உதவி புரிய வேண்டும். என்னுடைய உறுதியான நம்பிக்கை இது. அன்றும், இன்றும், வகுப்பு பேதம்—வர்க்க பேதம், நிலப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதன் மூலம்தான் முடிவு காணமுடியும் என்று நான் நம்புகிறேன். இது உடனடியாக நிறைவேற்றக்கூடியது அல்ல என்பது எனக்குத் தெரியும். அந்த இலட்சியம் எனக்கு இருக்கிறது என்பதை வலியுறுத்திவிட்டு, அதற்கு உடனடியாக பரிகாரம் காண வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதிகப் போலீசை அனுப்ப வேண்டும், இராணுவத்தை அனுப்ப வேண்டும், கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்வார்களேயானால், அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன், "இவ்வளவு எல்லாம் உங்கள் ஆட்சியிலேயே செய்து பார்த்தாகிவிட்டது", என்று. இருட்டிலே இரண்டு பேர் போனால் முன்னாலே செல்பவன் பள்ளத்திலே வீழ்வானேயானால், பின்னே செல்பவன் அங்கு பள்ளம் இருக்கிறது என்று தெரிந்து கொள்வான். அதேபோல், காங்கிரஸ் ஆண்ட இருபதாண்டு ஆட்சிக் காலமாக இதே தஞ்சை மாவட்டத்தில்—இதே பிரச்சினைகளை, அடக்குமுறைகளால் அடக்க முடியாமல் போயின. அப்பொழுதுதான் "பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்" இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார். அதற்குப் பிறகுதான் கிடைத்தது சிறிது அமைதி. இப்போது திரும்பவும் அந்த நாற்றம் மேலே கிளம்பியிருக்கிறது. சரித்திர உணர்வு உடையவன் என்ற முறையிலே சொல்லுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர்தான் படித்தவர், என்னைப் படித்தவனாக இந்தச் சமுதாயம் ஒப்புக் கொள்ளாது. இன்னும் அவர்கள் பெரிய கட்சிக்காரர்கள், இன்னும் சொல்கிறேன்—நான் பிறந்தபின்தான் அவர்கள் அரசியலுக்கு வந்தார்கள். அவரை நான் வேண்டிக் கொள்ளுகின்றேன். அங்கு இலட்சக்கணக்கான மக்களுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அந்த அரிசன மக்களுக்கு நாம் சேவை செய்வதாகயிருந்தால், இந்தக் கண்டனத் தீர்மானத்தை விலக்கி, ஓட்டெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தாமல் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டோம் என்ற





அளவோடு திருப்தியடைந்து, அங்குள்ள மிராசுதார்கள், உழவர்கள், மற்றும் பல்வேறு பிரிவினரிடையே சமாதானத்தை **உருவாக்கப் பாடுபட வேண்டும். தாழ்த்தப்பட்ட ஜாதியினர்** திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், இந்து சமுதாயத்தினர், தங்களுக்கிழைக்கும் கொடுமைகளிலிருந்து தப்ப, முகாம் மாறி வந்துள்ளதைச் சரித்திரத்தில் பார்க்கிறோம். இஸ்லாமிய முகாம் ஆளும் ஜாதி முகாமாக இருந்தால், அமாவாசை அப்துல் காதராக மாறினார்; அதன் பின் அவர் வீதியில் நடக்க உரிமை பெற்றார். பிறகு அமாவாசை ஆரோக்கியசாமியாக மாறிய நிலையும் இருந்தது. இதைப் படித்து வெட்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்து சமுதாயம் இன்றுகூட அந்த நிலையிலிருக்கிறது. கீழ்வெண்மணி சம்பவத்தை மட்டும் வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கழகத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவது என்றால், அது மூலநோய்க்கான பரிகாரம் காண்பதாக ஆகாது. காந்தி**யத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்; இதற்குப் பரிகாரம்** காண முயல வேண்டுமென்றால், சகல கட்சியினரும் ஒன்று சேர்ந்து, உடனடியாகத் திட்டம் வகுத்து, நடுநிலைமையுடன் பணி புரிய வேண்டும். முதலமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். கட்சிசார்பற்ற பத்திரிகைகளிடத்திலும், கட்சி சார்பற்ற பொதுமக்கள் மத்தியிலேயும் ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. கூட்டணி சேர்ந்ததன் காரணமாகத் **தான், கம்யூனிஸ்டு கட்சியினர் ஆளும்கட்சியைப் பயன்படுத்தி,** அராஜகத்தை நடத்த ஒத்திகை பார்க்கின்றனர் என்று ஒரு கருத்து இருக்கிறது. அது விஷயத்தில் ஆட்சியாளர்கள் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்திச் சொல்லிவிடுவது பொதுமக்களிடம் தங்களுக்கிருக்கும் களங்கத்தைப் போக்கும் என்று தெரிவித்துக் **கொண்டு, உங்கள் கையை வலுப்படுத்தவே இந்த வேண்டுகோள்** என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியோடு கூட்டுச் சேர்ந்து கொண்டிருப்பதால்தான், போலீஸ் படையை அனுப்பவில்லை என்ற பயங்கரப் பிரச்சாரம் மக்களிடத்தில் நடத்தப்பட்டு **வருவதால், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறிக்** கொண்டு, எதிர்க்கட்சித் தலைவரவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், விட்டகுறை தொட்டகுறை என்பதுபோல காந்தியடிகளின் ஆன்மாவும் இதை அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கையோடு, இதற்குப் பரிகாரம் காண ஒத்துழையுங்கள். கண்டனத் **தீர்மானத்தை விலக்கிக் கொள்ளுங்கள் என்ற வேண்டுகோளை விடுத்து அமர்கிறேன்.**

திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் கொண்டு வந்தி**ருக்கும் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நான் ஏற்கவில்லை**

[திரு. கே. பி. எஸ். மணி] [1969 பிப்ரவரி 28

என்றாலும், கீழ்வெண்மணியில் என்ன நடந்தது என்பதை நான் இந்தச் சபைக்குத் திட்டவட்டமாக விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஏன் ஏற்கவில்லை என்று அவர்கள் கேட்கலாம். அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானம் 'பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது' போல இருக்கிறது. உண்மையிலேயே இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள், கீழ்வெண்மணியில் வீடுகள் எரிக்கப்பட்டு, குழந்தைகள், தாய்மார்கள் பாதிக்கப்பட்டிருக்கும் அந்தக் குடும்பத்தாருக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டால் அது நியாயமாக இருக்கும். ஆனால் அதை விட்டு விட்டு, அதே நேரத்திலே, இந்த அரசாங்கத்தை எப்படி கொக்கி போட்டு இழுக்கலாம், அதிலே மாட்டிவிடலாம் என்ற கருத்தோடு, மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களுடைய துணைவியாருக்கு மானியம் கொடுக்கலாமா என்று அதற்குத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது. தேவையில்லாத ஒரு இடத்திற்கு, அரசாங்கத்தை எப்படி மாட்டலாம் என்பதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். எவனுக்குத் தேவைப்படுகிறதோ, எவன் பசியோடு வாடுகிறானோ அவனுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது முறையாகாது. ஆகவே, அந்த உள்நோக்கம் கற்பிக்கும் முறையில் இருக்கக்கூடிய வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது.

**திரு. கே. பி. எஸ். மணி** உண்மையைத்தான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உண்மையைத்தான் சொன்னேன் என்று மீண்டும் அவர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளும் கட்சியை இழுப்பதற்காக என்று கூறி உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அந்த உள்நோக்கம் கற்பித்துக் கூறுகின்ற வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது.

**திரு. கே. பி. எஸ். மணி :** திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன், இப்படிப்பட்ட நிலையிலே கீழ்வெண்மணியிலே நடந்தது என்ன? அங்கு பக்கிரிசாமி என்பவர் கொலை செய்யப்பட்டார். அதற்குப் பிறகு என்ன நடந்தது? எப்படி நடந்தது? மூன்று மைல் தொலைவிலேயுள்ள கீவளூரில் போலீஸ் அதிகாரிகள் இருந்தும், ஸ்பெஷல் போலீஸ் வேன் இருந்தும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருந்தும் என்ன செய்தார்கள்? இதற்குப் பதிலே கிடையாது. இது இந்த இடத்தில் மட்டும் அல்ல. இப்படிப் பதில் இல்லாததற்கு வழி இருக்கிறது. உண்மையிலேயே அதற்கு முன்னாலே



1969 பிப்ரவரி 28] [திரு. கே. பி. எஸ். மணி]

இரண்டு மாதங்களாக அந்த வட்டாரத்திலே கிஸான், போலீஸ், மிராசுதாரர்கள் ஆகிய 3 நபர்களிடத்திலே நடந்துகொண்டிருக்கும் விவகாரங்கள் தெரியும். கிஸான்கள் தொல்லையை வைத்து தக்க உதவி செய்வது இல்லை என்று முடிவுக்கு வந்திருந்தார்கள். அந்த ஒரே முடிவினால்தான் குறிப்பிட்ட கீழ்வெண்மணி சம்பவத்தில் போலீஸ் போகாமல் மானஸீகமாக இருந்து விட்டார்கள். அப்பொழுதே போலீஸ் போயிருந்தால் இந்த எரிப்புச் சம்பவம் நடந்து இருக்குமா? 44 பேர்கள் இறந்து இருப்பார்களா? அவர்கள் எப்படி இறந்தார்கள்? அந்தச் சிறிய குடிசையிலே நடந்த ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

ஒரு தாய் சுமார் 1½ வயது குழந்தையை தன்னுடைய இடது கையில் கட்டி அணைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தக் குழந்தையினுடைய வாய் தாயினுடைய பால் குடிக்கும் ஸ்தானத்திலே இருக்கிறது. குழந்தையினுடைய தலை, கால் கருகியிருக்கிறது. தாயினுடைய கால் கருகியிருக்கிறது, கை கருகியிருக்கிறது. போலீசார் வந்து பிணங்களை எடுத்தும், அவைகளைக் கொண்டு வந்து வெளியிலே அடுக்கி வைத்தும் குழந்தையையும் தாயையும் பிரிக்க முடியாதபடி இரண்டும் ஒன்றாகி, மொத்தமாகி, உருகி, ஒட்டியிருந்தது. இந்த நிலை போலீசார் பிணங்களை வெளியே எடுக்கும்போது, சாதாரணமாக கையிலே தூக்கிக்கொண்டு வரும்போது இருந்தது. இப்படி ஒன்று, இரண்டு அல்ல, 22 குழந்தைகள், ஒரு தவறும் செய்யாதவர்கள் தீயில் கருகியது கோரக் காட்சிதான்.

இந்தக் கோரக் காட்சியை இந்த நாடு பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், பல சகோதரர்கள் காங்கிரஸ்காரர் ஆட்சியில் முதுகுளத்தூர் ஆட்சியில் நடக்கவில்லையா என்று சொல்கிறார்கள். அவர்கள் ஆட்சியில் அதைச் செய்தார்கள், ஆகவே எங்களது ஆட்சியில் இதைச் செய்கிறோம் என்று கூறுவதா? முதுகுளத்தூரில் நடந்ததை இதிலே சம்பந்தப்படுத்தாதீர்கள். அது எங்களுடைய உரிமையைக் காப்பாற்ற நடத்திய போராட்டம். அது வேறு விஷயம். ஆகவே, இதைக்கொண்டு வந்து அரசாங்கத்தோடு பிணைக்காதீர்கள். அரசாங்கத்திற்கு இது தெரியாது. அதிகாரிகளையும் அரசாங்கத் துறைகளையும் பற்றி சொல்லும்பொழுது மதிப்பிற்குரிய ம.பொ.சி அவர்கள் தெளிவாக, அழகாகச் சொன்னார்கள். இன்று, நேற்றல்ல, மதிப்பிற்குரிய ராஜாஜி காலத்திலேயே என்னைப்போன்ற ஊழியர்கள் எல்லாம் சித்திரவதைப்பட்டார்கள். நாய்களைப்போல் கயிற்றிலே கட்டப்பட்டு லாரியிலே தூக்கி எறியப்பட்டோம். புளியங் கயிற்றை சாக்கடையிலே ஊறவைத்து அதிலே அடித்தார்கள். இந்தக் கொடுமைகளை எல்லாம் தாண்டியும் எங்களுடைய பிரச்சினைகள் வளர்கின்றன என்று சொன்னால் அது எங்களுடைய தேவைகளின், உரிமைகளின் அடிப்படையில்தான். ஏன் அப்படி? எல்லா அரசியல்

கட்சிகளுக்கும் இந்த சபிக்கப்பட்ட, ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட சமுதாயம் காலிலே மிதியடியாக இருக்கிறார்கள். எங்கள் மீது தான் எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய ஆட்சியையும் நிலையையும் கூட்டிக் கொள்ளுகிறது. எங்களுடைய ரத்தத்திலே தான் அவர்கள் வாழ்கிறார்கள். நாங்கள் அடிபடுபவர்களாகத்தான் இருக்கிறோம். சிறையிலே களப்பாள் குப்பு என்பவர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார். அவர்கள் எல்லாம் அங்கே சிறையிலே சாகவேண்டியது, இவர்கள் வாழவேண்டியது. நாங்கள் சுடப்பட்டுச் சாகவேண்டியது. யார் யாரோ இதிலே பேசி, ஏதாவது ஆதாயம் கிடைக்குமா, இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சியை சற்று சுற்ற வைத்து விடலாமா, அந்தத் நிர்வாகத்திலே நாம் உட்காரலாமா என்ற இப்படிப்பட்ட நிலைமைகள்தான் இங்கு உருவாகின்றன. ஆகவே, எங்களை ஏணிப்படிகளாக்க வேண்டாம், எங்களுடைய அடிப்படை உரிமையோடு விளையாட வேண்டாம். அந்த விளையாட்டு நீண்ட நாளைக்கு இருக்க முடியாது. எத்தனை நாளாக எங்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள், நாங்களும் ஏமாந்து வருகிறோம். ஆனால் எங்களை ஏமாற்றிக்கொண்டு வருவதும் நீடிக்காது, நாங்கள் ஏமாறுவதும் நீடிக்காது. எப்பொழுது இது முடியும் என்று சொல்ல முடியாவிட்டாலும், குறுகிய காலம் வந்துவிட்டது இது முடிய என்பது மட்டும் நன்றாகத் தெரியும். சட்டத்திலே எங்களுக்கு உரிமை பல இருந்தும் எங்களுக்கு அவை கிடைக்காதவகையில் பலவீனப் படுத்தப்பட்டிருக்கிறோம், உதறி எறியப்பட்டிருக்கிறோம், உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறோம். அதிகார வர்க்கத்தில் வாய்ப்பு கொடுத்திருக்கிறோம் பாருங்கள் என்று சொல்கிறார்கள். அதிகாரிகளாக வந்தாலும் அதே நிலைமைதான் இருக்கிறது. அரசாங்கத்திலே வந்தாலும் அந்த நிலைமைதான் இருக்கிறது. அமைச்சர்களாக வந்தாலும் அந்த நிலைமைதான் இருக்கிறது. அங்கத்தினர்களாக வந்தாலும் அந்த நிலைமைதான் எங்களுக்கு இருக்கிறது. இந்த நிலைமை ஒழிக்கப்பட வேண்டுமானால் எங்களுடைய பூர்வீக சரித்திரத்தை நாங்களே திருப்பிப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். என்ன பழமொழி என்று சொன்னால், பூர்வீகத்தில் ஆண்ட பரம்பரை இது, போர் வாளோடு பிறந்த ஆதி குடிமகன் என்று பண்டைய கால புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அந்த போராட்டத்தை துவங்கு என்று சொல்வதற்குக் காலம் வந்துவிட்டதா ? அதை அரசாங்கமும் மற்றைய சகோதரர்களும்தான் நிர்ணயிக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால் நாங்கள் உரிமையோடு வாழ முடியாது என்று நீங்களே சொல்கிறீர்களே. மிராசுதார்களுடைய கொடுமை இப்பொழுது மட்டும் அல்ல, பண்டைய காலத்திலேயே இந்த கொடுமை இருந்தது. (மணி அடிக்கப்பட்டது) ஒரு பண்ணியாள் மிராசுதாரிடத்திலே மனைவியைப்போல் இருக்க வேண்டுமென்ற வழக்கம்



இருந்தது. கோர்ட்டிலும் அப்படித்தான் விளக்கம் சொல்வார்கள். ஓர் இந்தியனுடைய மனைவி தன் புருஷனுக்கு எப்படி அடங்கி நடக்கின்றாளோ, அப்படி பணியாள் நடக்க வேண்டும், அப்படித்தான் தஞ்சை ஜில்லா பூராவிலும் வழக்கம் இருக்கிறது. முனிசீப் கோர்ட்டிலே கூட அப்படித்தான் தீர்ப்பு வழங்குவார்கள். அரசாங்க நிலத்திலே இருந்தால் கூட, தன்னுடைய மனையில் குடியிருக்கிறார் என்றுதான் மிராசுதார் குத்தகைச் சீட்டிலே எழுதி வாங்கிக்கொள்ளுகிறார். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டுமென்பதுதான் இன்றையதினம் இருக்கிற பிரச்சினை. அந்த முறையிலே இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண எனது காங்கிரஸ் சகோதரர்கள் இதைக் கொண்டு வந்திருந்தால் பெருமைப்படலாம், இறுதியாக, அரசாங்கம். . . .

(மணி அடிக்கப்பட்டது).

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன் அதற்கான காரணங்களையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானம் அரசியல் முதல் பெறுவதற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களைச் சார்ந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினர் மூலமாக கொண்டு வரப்பட்ட போதிலும், உண்மையிலே இது நிலப்பிரபுக்களின் சார்பிலே கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்ற காரணத்தினால் இன்று நிலப்பிரபுக்களுக்கு எதிராக உள்ள இலட்சக்கணக்கான ஏழை எளிய உழைப்பாளி மக்களின் பெயரால் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நண்பர் வெங்கடராமன் அவர்கள், பூந்தாழங்குடியிலே ஒரு விவசாயத் தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டான் என்று குறிப்பிட்டார்கள். அதையும் இன்றைக்கு ஒரு குற்றச் சாட்டாகக் கொண்டு வந்தார்கள். உண்மை. ஆனால் அவ்வாறு சுட்டுக் கொன்றதற்குப் பிறகு பூந்தாழங்குடி விவசாயிகள் மேலுள்ள வழக்கை வாபஸ் வாங்கவேண்டுமென்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற கட்சிகளும் ஒருமித்துக் கேட்ட நேரத்தில் ஒரே ஒரு கட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாபஸ் வாங்கக் கூடாது, அந்தத் தொழிலாளிகள் மீது வழக்கு நடத்த வேண்டுமென்று கூறினார் : ஒரே ஒரு கட்சி காங்கிரஸ் கட்சி தான் வாபஸ் வாங்கக் கூடாது என்று கூறியது. அப்படிப் பட்ட ஒரு கட்சிக்கு—இன்று கீழ் வெண்மணியிலே நிலப் பிரபுக்களின் கொடுமையால் 44 பேர் உயிரிழந்தார்கள் என்று—இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர என்ன உரிமை இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுக்கு உரிமையில்லையென்று சொல்ல அவர் யார் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மற்றொன்று கேட்க விரும்புகிறேன். நண்பர் ஜெயராஜ் போன்ற அரிசன மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடியவர்களை கேட்க விரும்புகிறேன். குடியானவர் மீது, விவசாயத் தொழிலாளர்கள் மீது மாண்புமிகு கருத்திருமன் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் இந்த தீ வைப்பை முன்னிட்டு கைது செய்திருக்கிறார்களே அந்த மிராசுதார்களை சிறையிலே சென்று ஆறுதல் தருவதற்கு அவர் முன் வருவார்களா, உங்கள் கட்சித் தலைவர் அவர்கள் முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, என் பெயரைச் சொல்வதால் நான் சொல்ல விரும்புகிறேன். அங்கு நான் சென்றேன், பார்த்தேன். அடிபட்ட சகோதரர்களையும் பார்த்தேன். ஆனால் இவர் இருக்கிற கட்சியின் தலைவர் இராமமூர்த்தி சிலரை மட்டும் பார்த்துவிட்டு மற்றவர்களை எல்லாம் பார்க்காமல் வந்துவிட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பின்னால் பேசப் போகிறார்கள். பேசும்பொழுது இந்தக் கருத்துக்களை எல்லாம் சொல்லலாம். நீங்கள் (எதிர்க்கட்சித் தலைவர்) இப்பொழுது சொன்னால் அவர் இன்னும் நேரம் கேட்பார்.

திரு. என். சங்கரய்யா : ஆகவேதான் காங்கிரஸ் கட்சியிலே யுள்ள அரிசன எம்.எல்.ஏ.-க்களுக்கு நான் சொல்வது என்னவென்றால், அவர்களுடைய அக்கறையை பாதுகாக்க காங்கிரஸ் இருக்கிறது என்று சொன்னால் இந்த தீர்மானத்தை கொண்டு வந்திருக்கக்கூடாது. விவசாயத் தொழிலாளிகளுக்கு எதிராக இருக்கிற நிலப்பிரபுக்களை கண்டிக்கக்கூடிய ஒரு தீர்மானத்தை அந்த நிலப்பிரபுக்களை ஒரு பகுதியாக கொண்டுள்ள காங்கிரஸ் தலைமை கொண்டுவந்திருக்குமானால் அதை இன்றைக்கு வரவேற்றிருக்க முடியும். அரிசன விவசாயத் தொழிலாளிகளோடு சேர்ந்து நிலப்பிரபுக்களுடைய பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க, அவர்களுடைய போராட்டங்களில் சேர்ந்து நிற்பது தான் மக்களுக்கு காங்கிரஸ் செய்யும் கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர்களே, இன்றைக்குப் பேசப்படுகிறது . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : 'நண்பர்களே' என்று பொதுக் கூட்டம் என்று நினைத்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி தாறுமாறாக பேசப்படுகிறது. இன்றைக்கு இருக்கிற நிலைமை மக்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஒன்று சொல்ல விரும்புகிறேன்.



தஞ்சை மாவட்டத்தில் தொடர்ச்சியாக விவசாயத் தொழிலாளி களுக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கு மிடையே முக்கூட்டு மாநாடு நடத்தி இந்த பிரச்சினையை தீர்த்தாக வேண்டுமென்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியது. ஆனால், முக்கூட்டு மாநாடுகளை நடத்தக் கூடாது, அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது, முக்கூட்டு மாநாடு நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உரிமையும் கிடையாது என்ற முறையில் கூறி வந்தது நிலப்பிரபுக்களின் கூட்டம். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் மிராசுதார்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏன்? காங்கிரஸ் தலைவர்கள் மிராசுதார்களினுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ஏழை அரிசன விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. விவசாய தொழிலாளர்களுக்கு எந்தக் கூலியை வேண்டுமானாலும் கொடுப்பதற்கு மிராசுதார்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறுகிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுமென்றே இந்தக் கலவரங்களைத் தூண்டிவிட்டு இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படவேண்டும் என்று செய்வதாக காங்கிரஸ் கட்சித் தோழர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் இரண்டு கூறுகிறார்கள். கூட்டணியைச் சேர்ந்த கட்சி என்பதினால் தி.மு.க. எங்கள்பேரில் இளக்காரம் காட்டுகிறார்கள். அதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பயன்படுத்திக்கொண்டு அராசகம் நடத்தி வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். நான் அவர்களுக்குத் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு திட்டத்தின் அடிப்படையில் கூட்டணி ஏற்படவில்லை. தொகுதி உடன்பாடு தான் என்பதை நாங்கள் ஏற்கனவே தேர்தலுக்கு முன்பு தெளிவு படுத்தியிருக்கிறோம். தி.மு.க. இந்த மாநிலத்தில் தனியாக அரசுப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் விருப்பம் அதுதான். தேர்தலுக்குப் பிறகு தி.மு.க. தனியாக அரசு அமைக்க வேண்டும், அதற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு கொடுக்கும், அமைச்சரவையில் சேரும்படி அழைக்கப்பட்டாலும் கூட, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் அவையில் இருக்காது. காரணம் இந்த மாநிலத்திலுள்ள நிலைமை என்று ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆகவே, கூட்டணி என்பது தேர்தல் உடன்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்டதுதான். இந்த அரசாங்கம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சாதகமாக செயல்படவில்லை என்பதுதான் என்னுடைய பிரதான வருத்தம் எங்களுக்குச் சாதகமாக செயல்படவேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி, 50 பேர்களைக் கொண்ட கட்சி, பல பத்திரிகைகளைக்கொண்ட கட்சி, நிலப்பிரபுக்களுக்குச்

சாதகமாகப் பேசுகிறார்கள். அகில இந்திய ரேடியோவில் ஒலி பரப்புகிறார்கள். நிலப்பிரபுக்களுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கை எடுப்பதற்குத் தங்களுடைய போலீஸைத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பயன்படுத்தவில்லை, அவ்வாறு பயன்படுத்தியிருந்தால், இம்மாதிரிச் சம்பவம் ஏற்பட்டிருக்க முடியாது என்பதுதான் என்னுடைய வாதம்.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தி.மு.க. அரசாங்கம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தாக்காரம் காட்டுவதினால் ஏற்பட்ட சம்பவம் என்று சொல்வது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல்தான் ஆகும். தி.மு.க. அரசின் தயவைப் பயன் படுத்திக் கொண்டு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அராஜகத்தில் ஈடுபடுகிறது. கடைசியில் அந்தக் கட்சி தி.மு.க.-வையே ஜீரணித்துவிடும் என்றெல்லாம் பேசப்பட்டது. தி.மு.க.-வும், நாங்களும் சேர்ந்து காங்கிரஸை ஜீரணித்துவிடுவோம், நாகர் கோவிலில் உங்களை ஜீரணிப்பதற்குச் சரியான சூரணம் எது என்பதில்தான் கருத்து வேறுபாடு எங்களுக்குள் இருந்ததே தவிர, வேறு ஒன்றுமில்லை. அரிசன மக்கள் பெரும்பாலோரால் சேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அரிசன மக்கள்பற்றித் தி.மு.க.-க்குப் பொறுப்பு இருப்பது அவர்களுக்குத் தெரியும். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெளிவாகக் கூறியிருக்கிறோம். எங்களுடைய நோக்க மெல்லாம், மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். உழைக்கும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும். அந்தப் பிரச்சினைகளில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தி.மு.க.-வுக்கும் உடன்பாடு இருக்கிறது. தி.மு.க. மக்களுக்கு தேர்தலின் பொழுது வாக்குறுதி அளித்திருக்கிறது. தி.மு.க. தலைவர்கள் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்த நில உடைமை வரம்புச் சட்டத்தில் பல ஓட்டைகள் இருக்கின்றன என்று, அதற்காக ஒரு போராட்டமே நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள், தொழிலாளிகளுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் நிறைவேற்றவேண்டும். மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய காரியங்களுக்கெல்லாம் தி.மு.க. அரசுக்கு எங்கள் ஆதரவு கிடைக்கும். ஆனால் மக்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்தால், அதை எங்களுடைய கட்சி விமர்சிக்கும் என்பதுதான் எங்கள் நிலை. கூட்டணியில் நாங்கள் இருப்பதால், தி.மு.க.-வின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று கூறுவதெல்லாம் சரியல்ல. 44 பேர்கள் எரிக்கப்பட்டுச் செத்திருக்கிறார்கள். இதற்கு யார் காரணம் என்று தெரியவில்லை. அது சம்பந்தமான வழக்குகள் சரியாக நடத்தப்படவேண்டும். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் நோக்கம் என்ன ? மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் விவசாயத் தொழிலாளர்கள் இயக்கத்தை தி.மு.க. குலைக்கவேண்டும். அப்படிக் குலைக்கத் தவறி



விட்டது, நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக விவசாயத் தொழிலாளர்களுக்கு எதிராகப் பயங்கரமான அடக்குமுறை ஏன் நடக்கவில்லை என்று கேட்பதுதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் நோக்கம். ஆகவே, அந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

நான் கூற விரும்புவது என்னவென்றால், தி.மு.க. அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்வது என்னவென்றால், நிலப்பிரபுக்களுடைய மிரட்டுதலுக்குப் பணிய வேண்டாம். உண்மையிலேயே நிலப்பிரபுக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'விவசாயத் தொழிலாளர்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் செங்கொடிக்குக் கீழ் வரவேண்டும், இல்லையென்றால் உங்கள் குடிசைகளுக்குத் தீ வைக்கப் படும்' என்பதுதான். இருஞ்சூர் கிராமத்தில் விவசாயத் தோழர், சின்னப்பிள்ளை என்பவர் காணப்படவில்லை. அதைப்பற்றி நானும் தோழர்கள் திரு. ஞானசம்பந்தம், திரு. தனுஷ்கோடி, திரு. பாரதி மோகன் மூவரும் புகார் செய்திருக்கிறோம். இன்னும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருஞ்சூர், கோபாலகிருஷ்ண நாயுடு அவர்கள் ஊரிலிருந்து சின்னப்பிள்ளை என்பவர் காணப்பட வில்லை. அதைப்பற்றிப் போலீஸார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? சிக்கலில் ஒரு தோழர் கொல்லப்பட்டார். கீழக்கரையில் திரு. ராமசந்திரன் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? ஆதமங்கலத்தில் என்ன கொடுமைகள் நடந்திருக்கின்றன ? தகாத முறையில் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன. அதுபற்றிக் குறிப்பிட்டபொழுது, கலெக்டரிடமிருந்து அவ்வாறு நடக்கவில்லை என்று ரிப்போர்ட்டு வந்திருப்பதாகச் சொல்லப்பட்டது. 'மேலும் விவரங்கள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்' என்று சொன்னார்கள். அவ்வாறு நிலப்பிரபுக்கள் செய்துகொண்டிருக்கிற நேரத்தில், அதற்கு ஆதரவாகச் சில போலீஸ் அதிகாரிகள் நடந்துகொண்டிருக்கிறார்கள். கீவளூர் போலீஸ் ஸ்டேஷனில் மிராசுதாரகள் சொல்படி போலீஸ் அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். அதற்கு நிச்சயமான ஆதாரங்கள் என்னால் தரமுடியும். தஞ்சை ஜில்லாவில் நிலச் சீர்திருத்தம், விவசாயத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு முதலியவைபற்றி கணபதியா பிள்ளை கமிஷன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. நிலப்பிரபுக்கள் என்ன கொடுமை செய்தார்கள், போலீஸ் அதிகாரிகள் எப்படி நடந்துகொண்டார்கள், அவர்கள் யாருக்குச் சாதகமாக இருந்தார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விவரங்கள் தெரியவரும். விவசாயிகளுக்குக் கூலி பிரச்சினை வெறும் பொருளாதாரப் பிரச்னை மட்டுமல்ல, சமுதாயத்தில் அவ்வப் பொழுது ஏற்படுகிற பிரச்னை. அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி காணவேண்டும். உடனடியாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள போலீஸ் அதிகாரிகளை மாற்றவேண்டும். அப்பொழுதுதான் அங்கு ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும். பெரிய போலீஸ் அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும்பொழுது பெரிய மிராசுதார்கள் வீடுகளில்தான் தங்கி அங்குதான் சாப்பிடுகிறார்கள்,

[திரு. என். சங்கரய்யா] [1969 பிப்ரவரி 28

மிராசுதார்கள் அளிக்கும் வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று சொல்வதுபோல், மிராசுதார்கள் வீட்டில் தங்கிச் சாப்பிட்டுவிட்டு, எப்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்? அரசாங்கம் இதுபற்றி ஒரு கடுமையான உத்தரவு போடவேண்டும். போலீஸ் அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும் பொழுது மிராசுதார்கள் வீட்டில் தங்கக்கூடாது, பொது இடத்தில் தான் தங்கவேண்டும், மிராசுதார்கள் வீட்டில் சாப்பிடுவதோ, மற்றபடி அவர்கள் கொடுக்கும் வசதிகளை ஏற்றுக்கொள்வதோ அறவே கூடாது என்று ஒரு உத்தரவு போடவேண்டும். இது ரொம்பவும் முக்கியமான விஷயம்.

மற்றொன்று பெல்லட்டுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பிறகு 39 துப்பாக்கிகளைப் போலீஸார் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் இறந்து கிடந்தார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்குத் துப்பாக்கி ஏது? கிவளூர் போலீஸ் ஸ்டேஷனில் 39 துப்பாக்கிகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன. நிலப்பிரபுக்களுக்குத் துப்பாக்கிகள் ஏன் கொடுக்க வேண்டும்? தி.மு.க. அரசுக்கு எங்களது கோரிக்கை என்னவென்றால், நிலப்பிரபுக்கள் விவசாயத் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தும்பொழுது போலீஸ் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் கட்சி தி.மு.க.-வினர்கள் கம்யூனிஸ்டு வலையில் விழுந்துவிட்டதாகக் குற்றம் சாட்டுவார்கள் என்ற தயக்கம் இருக்கக்கூடாது. தஞ்சை ஜில்லாவில் விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுகிறார்கள். மிராசுதார்கள் தரப்பில் குற்றமா அல்லது விவசாயத் தொழிலாளர்கள் தரப்பில் குற்றமா என்ற உண்மை நிலையைக் கண்டறியவேண்டும். சமுதாயத்தில் செல்வாக்குப் படைத்தவர்கள் பக்கம் அதிகாரிகள் செயல்படுவதினால்தான் இம்மாதிரித் துரதிருஷ்டவசமான சம்பவங்கள் நடக்கின்றன

ஆகவேதான் கேட்டுக்கொள்கிறேன், விவசாயத் தொழிலாளர்களுக்குச் சாதகமாக, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகளில் ஒருவரைத் தஞ்சை மாவட்டத்தில் உயர்ந்த போலீஸ் அதிகாரியாக நியமிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் அப்படிப்பட்ட ஒரு மாறுதலை ஏற்படுத்தவேண்டும். நன்னிலத்தில், விளாகத்தில் நடந்த சம்பவங்கள்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலப்பிரபுக்கள் விவசாயத் தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு தீ வைக்கும் ஒரு வழியைக் கடைப்பிடிக்கிறார்கள். ஏழை எளிய விவசாய மக்கள் மிராசுதார்களுடைய வீட்டிற்குத் தைரியமாகப் போய் தீ வைப்பார்களா இந்தக் காலத்தில், அது நடக்கக்கூடிய சம்பவமா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



1969 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யா]

அதற்கு மாறாக நிலப்பிரபுக்கள் அடக்குமுறையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஏழை எளிய விவசாயத் தொழிலாளிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதுதான் உண்மை நிலை. இந்தக் கண்டனத் தீர்மானம் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகக் காங்கிரஸ் கட்சியினால் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கூறுவேன். கீழ்வெண்மணிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாராளமாக உதவி அளிக்கச் சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சம்பவத்தில் தீக்கு இரையான வீடுகளை உடனடியாகக் கட்டிக்கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்களின் குறைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு வழிவகைகள் காணவேண்டும். அதற்கான முறையில் கணபதியா பிள்ளை கமிஷன் விசாரணை நடைபெறவேண்டும். நிலப்பிரபுக்கள் விவசாயத் தொழிலாளிகளை எந்த விதத்தில் கொடுமைப்படுத்துகிறார்கள், போலீஸ் அதிகாரிகள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் தகராறு வரும்பொழுதெல்லாம் என்பதைப்பற்றியெல்லாம் விசாரணை நடந்து, விவசாயத் தொழிலாளர்களின் குறைகள் தீர்க்கப்பட்டு, அவர்களுக்கு நிலப்பிரபுக்களின் கொடுமையிலிருந்து தகுந்த பாதுகாப்புக் கொடுக்கப்பட்டு, ஏழை விவசாயிகள், தாழ்த்தப்பட்ட அரிசனத் தொழிலாளர்கள் நல்வாழ்வு வாழ ஏற்பாடுகள் செய்யவேண்டும். நிலப்பிரபுக்களின் சுரண்டலுக்கு இடம் கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட முற்போக்குக் கொள்கையை ஜனநாயகக் கட்சியெல்லாம் கொண்டு இருக்கின்றன. அரசாங்கம் விவசாயத் தொழிலாளர்களுடைய, ஏழை விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதன்மூலம், அதற்கெல்லாம் ஒரு முடிவு காணவேண்டும். நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகக் காங்கிரஸ் கட்சியின் வாதங்களுக்கு இறையானால், தஞ்சை ஜில்லாவில் நிலைமைகள் சீர்கெடும் என்பதைக் கூறிக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், (சிரிப்பு) எல்லோரும் சிரித்துக்கொண்டு, இடைஞ்சல் செய்கிறார்கள், தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். (மீண்டும் சிரிப்பு). கனம் சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானம் அவ்வளவு சரியில்லை என்பது என் எண்ணம். காரணம், கீழ்த் தஞ்சையில் விவசாயத் துன்பங்கள் மலிந்திருக்கின்றன. அதற்குரிய பொறுப்பு காங்கிரஸுக்கும் ஓரளவு உண்டு. இப்படிப்பட்ட துன்பங்களுக்குக் காரணம் காங்கிரஸ் கட்சியில் உள்ள கொள்கைதான். மாபெரும் தலைவர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் சுதந்திரம் வந்த சில வருஷங்களில், சோஷலிசத்தால் ஆகர்ஷிக்கப்பட்டார்கள். சோஷலிசம் கொண்டு வரவேண்டும் என்று அந்த முறையில் ரொம்பவும் தீவிரமாக இருந்தார்கள். அதனால்தான் நாகபுரித்தீர்மானம், ஆவடி

சோஷலிசம், இந்தமாதிரி நடவடிக்கைகளெல்லாம் ஏற்பட்டன. குரல் எல்லாம் எழுப்பினுர்கள் காங்கிரஸ் சார்பாக. சோஷலிசம் வேண்டாம் என்று எந்தக் கட்சியும் சொல்லவில்லை. சோஷலிசம் வேண்டாம் என்று சொல்லுவார்கள் என்ருல், அந்தக் கட்சி ஒரு அரசியல் கட்சியாக தன் இயக்கத்தை நடத்த முடியாது. (சிரிப்பு). (குறுக்கீடு : சுதந்திராக் கட்சி ?) ஆனுல், இந்த நாட்டில் தற் சமயம் அதைச் சொல்வது சரியா என்று பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு). அதுதான் 'ஆனுல்' என்றேன். இங்கிலீஷில் 'பட்' என்பார்களே அதுபோல. மனிதனுக்கு அடிப்படைத் தேவை என்னய்யா ? உணவு. அது நாட்டில் இன்றைக்குப் பற்ருக்குறை தொழில் உற்பத்தி 'பரொடக்ஷன்' சரியாக இல்லை. அமெரிக்காவிலே பி.எல். 480 என்று ஒன்று இருக்கிறது. அதில், நாம் 3,000, 4,000 கோடி ரூபாய் அளவு கோதுமை சாப்பிட்டு ஜீரணித்துவிட்டோம். பணம் கொடுக்க மாட்டார்கள் என்று தெரிந்து போய்விட்டது I am not insulting our country. அந்தப் பணத்தை 'ரைட் ஆஃப்' செய்து விடுங்கள் என்று சொல்லும் நிலையில் நாம் இருக்கிறேம். பி.எல். 480-ல் வாங்கியதை ரைட் ஆப் செய்யவேண்டும் என்று கேட்கும் நிலையில் நாம் இருக்கிறேம். இந்த நேரத்தில் நாம் சோஷலிசம் பேசுவது சரியான சமயம் இல்லை என்றுதான் நான் சொல்வது. ஏழை மக்களைத் திருப்திசெய்து, அவர்களுடைய ஓட்டுக்களை வசப்படுத்த, தலைவர் காமராஜ் கிராமங்களுககுச் சென்று, மக்கள் தலையைப் பார்த்து, 'எண்ணெய் இல்லையா" ( சிரிப்பு) என்று கேட்கிருர்கள். சொல்கிருர்கள், 'பார்த்தியா, என்ன செய்கிருன், இப்படிப்பட்டவர்களுக்குத்தான் காலம்' என்று சொல்லி, 'நாங்கள் எதற்காக இருக்கிறேம். எல்லாம் உங்களுக்குச் சோஷலிசம் செய்துவிட்டுப்போக வேண்டும் என்றுதான் என்கிருர். யாரை ஏமாற்றுகிருர்கள்? கேட்கிறேன்

After twenty-two years' regime, you are speaking about "Taiai-ennai" (cheers)

ஆகவே, இப்படியெல்லாம் சோஷலிசம் பேசியதால் லாபம் கிடைத்தது கம்யூனிஸ்ட் கட்சிக்கு. ஏனென்ருல், பூரணமாகச் சோஷலிசம் பேசி ஏழைகளுடைய ஓட்டுக்களை வசிகரிக்கவும் முடியவில்லை. ஆகவே, இதில் பெனிஃபிட் அடைந்தது கம்யூனிஸ்ட் கட்சி. ஆகவே, விவசாயச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் தங்கள் கட்சியை வளர்க்க ஒரு வாய்ப்பு என்று தோன்றின. விஷ வித்தை விதைத்து விட்டார்கள் காங்கிரஸ்காரர்கள். அந்த வித்துத்தான் ஆவடி சோஷலிசம். (குறுக்கீடு). ஆம், அது நச்சு மரம் ஆக வளர்ந்து போய்விட்டது. தஞ்சை ஜில்லாவில் 1952 தேர்தலுக்கு முன்பு விவசாயக் கூலித் தகராறு என்று ஒரு கிளர்ச்சி இருந்தது. அதன்மூலம், சமுதாயத்திற்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. ராஜாஜி அவர்கள் அப்பொழுது முதல் மந்திரியாக இருந்து,





சர்க்கார்மூலம் தக்க நடவடிக்கை எடுத்தார்கள். அதற்குப்பிறகு சுமார் 12 வருஷக் காலமாக ஒன்றும் இல்லாமல் இருந்தது. இப்பொழுது பழையபடி, மூன்று, நான்கு வருஷமாகக் கொஞ்சம் விறுவிறுப்பாக பழையபடி விவசாயச் சங்கங்கள், கிளர்ச்சிகள் என்று வேலைகள் ஆரம்பித்திருக்கின்றன. (குறுக்கீடு). இப்பொழுதுதான் அங்கே விட்டு இங்கே வருகிறேன். அதிலே நம்முடைய சர்க்காரும் இந்தச் சோஷலிசச் சுழலிலே சிக்கிக் கொண்டு இருக்கிறது. 'அடல்ட் ஃப்ராஞ்சைஸ்' என்று கொடுத்து விட்டார்கள் பாருங்கள், ஓட்டை எப்படியாவது பிடிக்க வேண்டும். நாம் ஓட்டுப் பிடிக்க ஏதாவது சொல்லவேண்டியிருக்கிறது. மற்ற மற்ற நாடுகளில் சர்க்காரை நடத்தி ஓட்டுக் கேட்கிருர்கள். நாம் இங்கே ஓட்டுப் பிடிக்கச் சர்க்காரை நடத்துகிறேம். ஓட்டுப் பிடிக்க ஏதாவது சொல்ல வேண்டி இருக்கிறது. ஆக சோஷலிச் சுழலில் இந்தச் சர்க்காரும் இருப்பதால், நான் இரண்டு நாட்களுக்கு முன்ருல் சொன்னதுபோல போலீஸ் இலாகா திறம்பட வேலைசெய்யாமல் இருக்கிறது. போலீஸ் இலாகா என்று சொல்லும்போது, இந்தியாவிலேயே சென்னை ராச்சியத்திலுள்ள போலீஸ் இலாகாவிற்குத்தான் பெரிய மதிப்பு உண்டு. பெரிய இங்கிலாந்து, ஸ்காட்லண்டு யார்ட் என்று சொல்வார்களே, அதுபோல, இந்தப் போலீஸ் நிர்வாகம் திறமையில் அவர்களுக்குச் சமமானவர்கள் என்று சொல்வது உண்டு. ஆனுல் இரண்டு வருஷமாகப் போலீஸ் இலாகாவிற்குக் கொஞ்சம் சிரமங்கள் இருக்கின்றன. சர்க்கார் அவர்கள் திறமையாக வேலை செய்யும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். திறமையில்லாத நிலைமை இருக்கக் கூடாது. ஆகவே, நீதி, நியாயத்தை வழங்குவதில், இந்த மந்திரி சபை தன் மனப்பான்மையை நல்ல விதமாக மாற்றி போலீஸ் இலாகாவிற்கு நல்ல தைரியத்தை ஊட்டி, அவர்கள் வேலை செய்வதில், அவர்கள் கடமையை ஆற்றுவதில் உறுதுணையாக இருக்க வேண்டும்.

சோஷலிசம் என்று சொன்னுல், உங்களுக்குப் பட்டதார்களுடைய ஓட்டு வேண்டாமா ? தஞ்சாவூரில் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த, எட்டு லட்சம் பேர்கள், ஐந்து ஏக்கருக்கும் குறைந்த அளவில் வைத்திருப்பவர்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய ஓட்டுக்களும் உங்களுக்கு வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வேண்டும். எல்லோருக்கும் வேண்டும். அதனுல் (குறுக்கீடு) ஆமாம், நாகர்கோவிலுக்கும் பிறகு ரொம்ப 'வீக்' காக இருக்கிறதே. ஆகவே, இந்த தஞ்சை ஜில்லாவில் விவசாயத் துன்பங்கள் ஜாஸ்தி ஏற்படாமல், சர்க்காரில் நீங்கள் கண்டிப்பாகக் காரியங்கள் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இனியாவது அதைச் செய்யுங்கள்.

அடுத்தபடியாக, ஒரு பாயின்டை மட்டும் சொல்லி முடித்து பி.ப.
விடுகிறேன். கண்டனத் தீர்மானம் என்பதன் பேரில் எல்லாம் 12-30
எனக்கு நம்பிக்கையில்லை. கண்டனத் தீர்மானம். சென்ஷார்

மோஷன் என்றெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களைப் பார்த்து : உங்களுக்கு எல்லாம் வேறு ஜோலி இல்லையா ?) (சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுக்கு ஜோலி கொடுக்கத்தான் கொண்டு வந்திருக்கிறோம். (சிரிப்பு).

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த முகத்தான் இன்னொரு முக்கியமான விஷயம்பற்றிப் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக்கூடத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நான்கைந்து தினங்களுக்கு முன் நெய்வேலியில் நடந்த சம்பவம் பற்றித்தான். நெய்வேலியில் திரு. கிருபானந்த வாரியார் அவர்கள் மதப் பிரசங்கம் செய்யும்போது, சில வார்த்தைகள் அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றித் தவறாகச் சொல்லி விட்டதாகச் சொல்லப்படுகிறது. உடனே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்ஜக்ட்பற்றிப் பேசுங்கள்.

THIRU D. S. AUTHIMOOLAM : I am speaking about Government's actions, its omissions and commissions at this particular time.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கீழ்வெண்மணியைப் பற்றிய கண்டனத் தீர்மானம். நெய்வேலி சம்பவம்பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** வாரியார் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. வாரியார் ஒரு பெரிய மதப் பிரசங்கி. ஒரு சமயம் தவறுதலாகக்கூட அவர் சில வார்த்தைகள் சொல்லியிருக்கலாம். செய்தி சுதேசமித்திரன் பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியோ, நாவலர் நெடுஞ்செழியனைப் பற்றியோ தாம் ஒன்றுமே சொல்லவில்லையென்று வாரியார் அவர்கள் மறுப்பு அறிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அவருடைய கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டதால் கூட்டம் ரத்து செய்யப்பட்டது, மறுநாள் கூட்டமும் ரத்து செய்யப்பட்டது. பிறகு சிலர் போய் அவரை ஏதோ கஷ்டப்படுத்தியதாக, அவமானப்படுத்தியதாகச் செய்தி வந்திருப்பது வாஸ்தவத்திலேயே வேதனைக்குரிய விஷயம். அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் நடமாடும் பல்கலைக் கழகம். அதுபோலத்தான் திரு. கிருபானந்த வாரியார் அவர்களும். வாரியார் அவர்கள் இன்று வட இந்தியாவில் பிறந்திருந்து, இப்படி ஒரு மதப் பிரசங்கியாக இருந்திருந்தால், அவரைக் கனகாபிஷேகம் செய்வார்கள். இப்படிப்பட்ட ஒரு மத வாதியைக் கட்சிக்காரர்கள் துன்பப்படுத்தியதாகத் தமிழ்நாடு பூராவும் பேசுவதற்கு இடம் கொடுத்திருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.



தமிழ்நாட்டில் வாரியாருக்குத் துன்பத்தை நீங்கள் செய்தாலும் சரி, நாங்கள் செய்தாலும் சரி, யார் செய்திருந்தாலும், அவருக்கு அடுத்த வருஷம் 'பாரத ரத்னம்' என்ற பட்டம் கிடைக்க இந்த அரசு சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு) சிரிக்காதீர்கள், இந்த அரசுக் கட்டாயம் சிபாரிசு செய்ய வேண்டும்.

1962-ம் ஆண்டில் கேரளாவில் திரு. நம்பூதிரிபாட் மந்திரிசபை நடக்கும்போது, மந்திரிசபையிலுள்ள கட்சியின் ஆட்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். அதனால் அவருடைய ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியிலுள்ள ஆட்கள் பல்வேறு வகைகளில் நடந்துகொள்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படாமல் நல்ல முறையில் சர்க்காரை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இருக்கும்படியான என் அருமை நண்பர் திரு. பி. ஜெயராஜ் அவர்கள் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கண்டனத் தீர்மானம் அவசியமா? இதை ஏன் கொண்டு வந்தார்கள்? காங்கிரஸ்காரர்கள் ஏன் கொண்டுவந்தார்கள்? என்று எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். சம்பவம் நடந்தது, அதனால்தான் அதைக் கொண்டுவந்தோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். சம்பவம் நடந்ததை யாரும் மறைக்க முடியாது. இது மனதிற்குச் சங்கடத்தை அளிக்கக்கூடிய விஷயம் மட்டுமல்ல; இங்கே ஆட்சி நடக்கிறதோ இல்லையோ என்று நினைக்கக்கூடிய துரதிர்ஷ்டமான சம்பவமாகும். இது வெண்மணியில் மட்டும் ஏற்பட்ட சம்பவம் அல்ல. தொடர்ந்து இரண்டு வருஷங்களாக ஏற்பட்ட சம்பவமே வெண்மணியாகக் காட்சியளிக்கிறது. பல வேறு கட்சியினரும் பேசினார்கள். இதற்குக் காங்கிரஸ் கட்சியின் ஆலோசனை என்ன என்பதைக் கேட்க வேண்டும். நாங்கள் சாதாரணமாகச் சொன்னால் ஏற்கும்படியான நிலையில் அரசாங்கம் இல்லை. விவரமாக எடுத்துச் சொன்னாலும் ஏற்கும் நிலையில் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து சொன்னாலும் ஏற்பதாக இல்லை. ஒருவேளை நன்றாகக் கண்டித்துச் சொன்னால் செவியில் ஏறுமோ, ஏறாதோ என்ற நிலையில்தான் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தோம். முதன்முதலில் ஏற்பட்ட அமைச்சரவைக்கு இப்படி ஏற்பட்டதே என்பதுகூட வருந்தத்தக்க விஷயம். இது ஏற்கெனவே நடந்துவிட்ட சம்பவமாதலால், முதலிலே இதைக் கொண்டுவரும்படியான நிலைமை ஏற்பட்டது.

குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டது முதல் எந்தப் பிரச்சினையும் உடனடியாகத் தீர்க்கப்படவில்லை. எல்லாப் பிரச்சினைகளையும் ஊறப்போட்டு, ஒத்திப்போட்டு, கமிஷன் என்று போட்டு, தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார்கள். கமிஷன் என்று போட்டால் அதனுடைய விசாரணை என்ன, அறிக்கை என்ன, தீர்ப்பு என்ன என்று தெரியாமலே போய்விடுகின்றன. 1967 மார்ச் 6-ம் தேதிக்குப் பிறகு எந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கிறார்கள் என்று பார்த்தால் பலன் ஒன்றுமே இல்லை. அவ்வப்பொழுது தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் கீழ்வெண்மணிச் சம்பவம் நடந்திருக்காது என்பதுதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் நோக்கம். சட்டம், அமைதி இவற்றைக் காக்கத் தவறிவிட்டார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இதற்கு ஆலோசனை என்னவென்றால், சர்க்கார் அதிகாரிகளுக்குக் குறிப்பாகப் போலீஸ் துறை அதிகாரிகளுக்குப் பூரணமான அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான். இப்போது போலீஸ் துறை அதிகாரிகளுக்குப் பூரணமாக அதிகாரம் இருக்கிறதா என்றால், இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. யாருக்கும் கண்டிக்கத் தைரியம் இல்லை. டி.ஐ.ஜி. அவர்களையே கேட்டால்கூடச் சர்க்காரை அனுசரித்துப் போகவேண்டுமென்று சொல்கிறார்கள். இவர்கள் பதவிக்கு வருவதற்கு முன் குற்றங்கள் குறைவாக இருந்தன. 1967-ல் முதன் முதலாகச் சென்னையில் பல இடங்களில் குடிசைகளுக்குத் தீ வைப்புச் சம்பவங்கள் ஏற்பட்டன. இதற்கு அரசியல் காரணம் என்று சொன்னார்கள். இதற்காக திரு. கிருஷ்ணசாமி என்பவருடைய தலைமையில் விசாரணை நடந்தது. அவருடைய ரிப்போர்ட் இன்னும் வராமல் தூங்கிக்கொண்டிருக்கிறது. அடுத்த வருஷம் 1968-ல், 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்கிற மாதிரி இரண்டாயிரம் குடிசைகள் தீப்பிடித்தன. முதலிலேயே இதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்திருந்தால், இந்தச் சம்பவம் மீண்டும் நிச்சயமாக நடந்திருக்காது.

அடுத்தபடியாக, 1967-ம் ஆண்டு இடையிலே திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், மத்திய அமைச்சர் ஒருவரும் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்துவந்தார்கள். கோவை சிதம்பரம் பூங்காவில் ஒரு கல் மத்திய அமைச்சரின் தலையில் போடப்பட்டது. மத்திய அமைச்சர் அந்தக் கோலத்தோடு டெல்லிக்குச் சென்றார். இப்படி மத்திய அரசு அமைச்சர் அடிபட்டு டெல்லிக்குப் போன பிறகும், மாநில அரசோடு மத்திய அரசு நல்லுறவை வைத்திருந்தது போற்றத்தக்கது. அந்த அமைச்சரின்மேல் கல் போட்டதைப் பற்றி இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அந்த நிகழ்ச்சியின்பேரில் நடவடிக்கை எடுத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை.



1968-ஆம் வருடம் மார்ச், ஏப்ரல் மாதங்களில் சென்னையில் மாணவர்கள்—பஸ் தொழிலாளர்கள் மோதல் ஏற்பட்டிருக்கிறது. பயங்கரமான மோதல். விடுதிகளில் சென்றெல்லாம் மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். வெடர்னரி காலேஜில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. மாணவர்கள் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், நாளெல்லாம் போராட்டங்கள் பல இடங்களில் நடந்திருக்கின்றன. சோமசுந்தரம் நீதி விசாரணை ஏற்படுத்தி, எட்டு மாதங்களாகின்றன. ஜனவரியில் ரிப்போர்ட் வரும் என்று சொன்னார்கள். இன்னும் வந்ததாகத் தெரியவில்லை. யாருக்குப் பயம் இருக்கும்? யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் புகுந்து யாரை வேண்டுமானாலும் தாக்கி கொல்லலாம், என்ற எண்ணம் தானே ஏற்படும். கல்லூரி விடுதிக்கு முன்னால் கையில் தடி, கம்பெல்லாம் வைத்துக்கொண்டு தாக்குகிறார்கள். போலீஸ் துறைத் தலைவர் என்ன செய்கிறார்? அவர்களுக்கு முன்னே நின்று கெஞ்சுகிறார். இந்துப் பத்திரிகையில் போட்டோவே வந்திருக்கிறது. இரண்டு கையையும் விரித்துக்கொண்டு கையில் கம்பு வைத்திருப்பவர்களிடம் கெஞ்சுகிற பரிதாகரமான நிலைமை போலீஸ் துறைத் தலைவருக்கே இருக்கிறது என்றால், இந்த நாட்டில் சட்டம், அமைதி காப்பாற்றப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? எங்கெங்கே வண்மையாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ, அங்கெல்லாம் எடுக்கப்படுவதில்லை. எங்கெங்கே நடவடிக்கைக்கே அவசியம் இல்லையோ அங்கெல்லாம் அரசியல் குறுக்கீடு, கட்சிக் குறுக்கீடு காரணமாக நடவடிக்கை எடுக்கப்படுவதை பார்க்கிறோம். எங்கே நீங்கள் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காண்கிறீர்கள்? இது 1968-ல் ஏற்பட்டது அல்ல, 1967-லேயே சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கு மிடையே போராட்டம் நடந்திருக்கிறது. பிரச்சினையைத் தீர்த்தீர்களா? எதையும் ஒத்திப்போட்டுக்கொண்டே வந்தால் இந்த நாட்டில் எப்படி அமைதி ஏற்படும்? இப்படிச் செய்தால் மாணவர்கள் விரோதமாகப் போய்விடுவார்களோ, அப்படிச் செய்தால் தொழிலாளர்கள் விரோதமாகப் போய்விடுவார்களோ, இன்னவாறு செய்தால் மக்கள் விரோதமாகப் போய்விடுவார்களோ என்கிற நினைப்பில் செயலற்ற நிலை வளர்ந்துகொண்டே வருவதுதான் இத்தகைய சம்பவங்களுக்குக் காரணமாக அமைகிறது.

பூந்தாழங்குடியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. எந்தச் சூழ்நிலையில் எப்படி ஏற்பட்டது என்பது எங்களுக்குத் தெரியாது. கேஸ் பதிவு செய்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் விசாரணையை வேண்டாம் என்று சொல்லிவிட்டது என்று. எங்களுக்கும் தெரியும், எதற்காகச் சர்க்கார் கேஸ்களை வாபஸ் வாங்கினார்கள்? தென்காசி இடைத் தேர்தல் வந்துவிட்டது. இடதுசாரி, வலதுசாரி கம்யூனிஸ்டுகளின் துணை வேண்டுமென்பதற்காக—அவர்களது நிர்ப்பந்தத்தின் பேரில்

அவர்கள் போட்ட கண்டிஷன்படி—வழக்குகளை வாபஸ் பெற்ருர்கள். ஒரு அரசியல் லாபத்திற்காக ஒரு பெரிய வழக்கில் தீர்ப்பு ஏற்படுவதைக்கூட இவர்கள் விடவில்லை. அது எங்குபோய் நாகர்கோவிலில் நின்றது? நாகர்கோவிலில் அவர்களுக்கிருந்த செல்வாக்கு டெபாசிட் தொகையைக்கூட பெற்றுக் கொடுக்கவில்லை. "தென்காசி தேர்தல் வேலை இங்கே நடக்காது, தம்பி, இங்கே நடக்காது" என்று உங்களையே நாகர்கோவிலில் நையாண்டி செய்தார்களே, கம்யூனிஸ்டுகளின் அரசியல் தந்திரங்களை வேண்டுமானுல் நான் சொல்கிறேன். அந்த மகானுபாவர்கள்தான் இந்த நாட்டிலே ஒண்ணும் நம்பர் பச்சோந்தி.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கட்சியைக் குறிப்பிட்டு இப்படிச் சொல்வது சரியல்ல. ஒவ்வொருவரும் விஷயத்தைப்பற்றிப் பேசாமல் மற்ருெரு கட்சியைப் பற்றிச் சொல்வது என்பது முறையாகாது. அதுவும் பச்சோந்தி என்ற வார்த்தை சரியானது அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பச்சோந்தி என்பது பார்லிமெண்டரி முறைக்கு விரோதமானது அல்ல. கொள்கையை மாற்றிக்கொண்டே இருப்பவர்கள் வேண்டுமானுல் அரசியல் பச்சோந்திகள் என்று சொல்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காங்கிரஸ்காரர்கள் குறுக்கிடுகிறபோது அனுமதிக்கிறீர்கள். அதுவே நாங்கள் குறுக்கிடுகிறபோது அனுமதிப்பதில்லை. இது சரியானதாகாது. அவர் பச்சோந்திகள் என்று சொல்கிருர். காங்கிரஸ்காரர்கள்தான் பச்சோந்திகள் என்பதை என்னுல் நிரூபிக்க முடியும் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் உட்கார வேண்டும். உங்கள் கட்சியை அவர் குறிக்கின்ற நேரத்தில் நீங்களேதான் அதைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது இல்லை. நானே அதைப்பார்த்துத் திருத்தியிருக்கிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் குறுக்கிடுவதற்கு அனுமதிப்பதாகவும், நீங்கள் குறுக்கிடுவதற்கு அனுமதியில்லை என்றும் பேரவைத் தலைவர் மீது குற்றஞ் சாட்டுவது முறையல்ல. எல்லோரையும் ஒரே நிலையில் நடத்த வேண்டுமென்பதுதான் என் விருப்பம். எல்லோரையும் சமமாகத்தான் நடத்தி வருகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : 1939-ஆம் வருஷத்தில் ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் சண்டை என்கிறபோது கம்யூனிஸ்டுக் கட்சியினர் அதை ஏகாதிபத்தியப் போர் என்ருர்கள். இம்பீரியலிஸ்டுப் போர் என்று வர்ணித்தார்கள். ஜெர்மனிக்கும்



ருஷ்யாவுக்கும் போர் என்றவுடன் அதுவே மக்கள் போராட்டம், தர்ம யுத்தம் பிரிட்டனைப்போல் கிடையாது, அமெரிக்கர்களைப் போல கிடையாது என்று அவர்களுடைய பணத்தைக்கொண்டே பிரச்சாரம் செய்தார்கள். கம்யூனிஸ்டுகளின் வரலாறு எனக்கு நன்ருகத் தெரியும். அவற்றைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா பேசும்போது காங்கிரஸ் கட்சியைப்பற்றிச் சொன்னுர்கள். அப்போதே நான் சொன்னேன். நீங்கள் இப்போது அந்தக் கட்சியைப் பற்றிச் சொல்கிறீர்கள். கிராமங்களில் காமன் பண்டிகை என்று எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வார்கள். அதுபோல இங்கே ஒரு கட்சியும், மற்ருெரு கட்சியும் பேசிக்கொள்வதில் பயன் இல்லை. சபை முன்பு உள்ளது. ஆளும் கட்சியின்மீதான கண்டனத் தீர்மானம். நீங்கள் ஆளும் கட்சியை விட்டுவிட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றிப் பேசுகிறீர்களே?

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஆளும் கட்சியோடு சேர்ந்து ஜீரணம் பண்ணி விடுவதாகச் சொனனுர்களே, எங்களை ஜீரணம் பண்ண அவர்களாலும் முடியாது, அவர்களது அப்பன், பாட்டன் வந்தாலும் முடியாது. ஒருவேளை எங்களை விழுங்கினுலும் சுக்கிராச்சாரியாரைப்போல அவர்களது வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவோம்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : சுக்கிராச்சாரியார் வயிற்றை வயிற்றைக் கிழித்துக் கொண்டு வந்தார் என்று எந்தப் புராணத்தில் வருகிறது ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீர்தான் புராணம் படிக்காதவர் ஆயிற்றே. அதைப்பற்றி என்ன தெரியும்?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : எனக்குப் புராணம் தெரியாது என்ருலும் படித்த புலவர் பேரவைத் தலைவராக இருக்கிருர். அவரிடம் கேளுங்கள், வயிற்றைக் கிழித்து வந்தது சுக்கிராச்சாரியார் தானு என்று.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர் தமிழ் படித்த புலவர்தான், புராணங்கள் எல்லாம் எங்களுக்குந்தான் தெரியும் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: அப்படியானுல் வயிற்றைக் கிழித்து வந்தவர் சுக்கிராச்சாரியார்தான் என்று உறுதிப்படுத்துகிறீர்களா ? (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆமாம். அதைப்பற்றி என்ன இப்போது. இப்படி ஏதாவது குறுக்கிட்டு என்னுடைய மனதை அப்படி அந்தப்பக்கம் திரும்பும்படி செய்யாதீர்கள். (சிரிப்பு). சிரிக்காதீர்கள். புண்பட்ட மனத்தோடு பலர் பார்த்துக்கொண்டிருக்கி

றார்கள். இது சாதாரணப் பிரச்சினை அல்ல. சட்டம், ஒழுங்கு ஏன் கெட்டது? இந்தச் சர்க்கார் அப்போதைக்கப்போது உறுதியாக நடவடிக்கை எடுக்கத் தவறி வந்திருப்பதன் காரணத்தினால்தான். இந்த அவையில் உள்ள கூட்டுறவு அமைச்சர் தொகுதியில் பிரச்சாரம் செய்யும்போது கல்குடியில் காங்கிரஸ்காரர்களின் முதுகெலும்பை எடுத்துவிடுவேன் என்று பேசியிருக்கிறார். அதேபோல . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் பேசுகின்ற பேச்சுக்களை வைத்தே பேசவேண்டும். மன்றத்திற்கு வெளியே யார் என்ன பேசினார்கள் என்று குறிப்பிட்டு இங்கே பேசுவது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் வெண்மணி நிகழ்ச்சிகூட இந்த மன்றத்திற்குள் நடைபெற்றதுதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிகழ்ச்சி வேறு. பேச்சு வேறு. வெளியே பேசுகின்ற பேச்சுக்களைத்தான் இந்த மன்றத்தில் வந்து பேசக்கூடாது என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுமாதிரி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியே பலாத்காரத்தைத் தூண்டிவிடுவதன் காரணமாகத்தான் சட்டம், அமைதி இந்த மாநிலத்தில் தொடர்ந்து சீர்குலைந்து வருகிறது என்று குறிப்பிடுகிறேன்.

யாராக இருந்தாலும் தவறைத் தவறு என்று ஏற்றுக் கொள்ள வேண்டும், அப்படிப்பட்ட நிலைமை இருந்தால்தான் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட முடியும். இது ஒரு சாம்பிள்தான், இன்னும் நிறைய இருக்கின்றன. மாணவர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம், தஞ்சையிலே நடந்துள்ள போராட்டம், இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கின்றன. இதுபற்றியெல்லாம் ஏற்கனவே என்னுடைய கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. காசிராமன் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் அந்தச் சமயத்திலே தஞ்சையிலே தனியாகப் போலீஸ் ஏற்பாடு செய்யப் போவதாக இந்தச் சட்டசபையிலே உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள். வெளியில் அவர்கள் கொடுத்த உத்திரவாதங்கள் வேறு இருக்கின்றன, இந்த சட்டசபையிலே கொடுத்த உத்திரவாதத்தை நிறைவேற்றியிருக்கிறீர்களா? அப்படிச் செய்யாததால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள் போராட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறோம் என்று சொன்னீர்களே, இதுவரையில் கொடுத்திருக்கிறீர்களா, என்ன நஷ்டம் ஆயிற்று என்றாவது கேட்டீர்களா? ஏன் கண்டனத் தீர்மானம், ஏன் கண்டனத் தீர்மானம் என்று கேட்டார்கள். எந்தவிதமான நடவடிக்கையும்



எடுக்காதவரையில் அப்படிக் கண்டனத் தீர்மானங்களைக் கொடுப்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு நான் குறிப்பிட்டேன். தடை போட்டிருக்கிறார்கள், அதை மீறக்கூடாது என்று சொன்னார்கள், பிறகு ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லி, அதற்காகச் சலுகை கொடுத்தோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியெல்லாம் தனிச் சலுகை கொடுக்க வேண்டாம் என்பதைத்தான் நாங்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். ஊர்வலம் கூடாது என்று சொல்லிவிட்ட பிறகு முதலமைச்சர் அவர்கள் நடத்தலாம் என்று சொல்வார்களானால் போலீஸ்காரர்கள் என்ன நினைப்பார்கள்? இந்தத் தேசத்திலே பேசும்படியான அரசியல் பேச்சுக்கள் எல்லாம் வர்க்கப் போராட்டம், வர்க்கப் போராட்டம் என்ற நிலையிலேதான் இருக்கின்றனவே தவிர வேறு ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது, நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. என்னமோ அங்கலாய்த்துக் கொள்கிறார்கள், அதிலே மிச்சம் இல்லை, மிச்சம் இல்லை யென்று. அதற்கு யார் என்ன செய்யமுடியும்? கேரள மாநிலத்திலே கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. நம்பூதிரிபாட் அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் என்ன என்ன சட்டத்தையெல்லாம் கொண்டுவந்தார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற மாநிலங்களைக் குற்றஞ்சாட்டிப் பேசவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியென்றால் முதலமைச்சர் அவர்கள் மேற்கு வங்காளம், பீகார் மாநிலங்களைப்பற்றியெல்லாம் இங்கே பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இந்த மாநிலத்தோடு ஒப்புக் காட்டுகிற முறையிலே வேறொரு மாநிலத்தை நாம் குற்றஞ்சாட்டி இங்கே பேசக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் மத்திய சர்க்காரைப் பற்றி எல்லாம் சொல்கிறார்கள், நான் மட்டும் சொல்லக்கூடாதா? இந்தியா பூராவும் ஒன்று என்ற முறையிலே பேசவேண்டும். ஆகவே அப்படியெல்லாம் ஒருவருக்குச் சலுகை கொடுப்பது, ஒருவருக்கு அந்தச் சலுகை இல்லாமல் இருப்பது என்ற நிலை இருக்கக் கூடாது, அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெண்மணிச் சம்பவம் பற்றி ஒரு நோட்டீஸ் அச்சடித்து வெளியிட்டு இருக்கிறார்கள். இதிலே பார்ப்போமானால் இது உண்மையல்ல என்றால் உடனே இதைத் தடை செய்திருக்கவேண்டும். காங்கிரஸ் நிலச்சுவான்தார்

களின் சதித் திட்டம் என்று எங்களுடைய தலைவர்களைப்பற்றியும், நாங்கள்தான் அதைச் செய்ததைப் போலவும் வெளியிட்டிருக்கிறார்கள், அதைத் தடை செய்திருக்கவேண்டும். (குறுக்கீடு) கேஸ் போடலாமே என்கிறார்கள், கேஸ் போட்டால் என்ன இதுவரை ஆகியிருக்கிறது? (குறுக்கீடு) உங்கள் சர்க்காரிலே நீங்கள் எடுத்துக்கொள்ள மாட்டீர்கள், நாங்கள் பிரைவேட் ஆகத்தான் போகவேண்டும், உங்கள் சர்க்காரைத்தான் எதிர்பார்க்கமுடியாதே. அந்த நோட்டீஸிலே 24 பக்கம் அச்சடித்து எங்களுடைய தலைவர்களைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வெண்மணியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கம்யூனிஸ்டுகாரர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். வெண்மணிச் சம்பவத்திற்கான காரணங்களை அறிய நீதி விசாரணை வேண்டும். இப்பொழுது போட்டிருக்கிற கணபதியா பிள்ளை கமிஷன், பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும், கூலி நிர்ணயம் செய்வதற்காகவும் போட்டிருக்கிறார்கள். கலெக்டர் அவர்களைக் கூப்பிட்டுப் பிரச்சினையை தீர்க்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கூலிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்பதை அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்தமாதிரி மக்களிடத்திலே ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்த அரசியல் தந்திரத்தை அவர்கள் கையாள வேண்டாம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு முறை ஒரு கமிஷன் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள், ஒரு முறை நீதி விசாரணை என்று சொல்கிறார்கள். உதைத்தவன் காலைப் பிடிப்பதற்குள் அடிவயிறு சிப்பட்டுப் போகும் என்று சொல்வார்கள் Justice delayed is justice denied) என்று சொல்வார்கள். அந்த நிலைமைதான் இருந்து வருகிறது. இரண்டு வருஷமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வில்லை என்பதற்கு அத்தாட்சி கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். வெண்மணிச் சம்பவத்திற்குக் காரணம் இந்த இரண்டு ஆண்டுகளாக சட்டம், ஒழுங்கு இவற்றைக் காப்பாற்றத் தவறிய நீதியை நிலைநாட்டத் தவறிய இந்தச் சர்க்காருடைய போக்குத்தான் அதற்குக் காரணம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கலாம் என்று சொ னார்கள். அங்கே பெரிய பெரிய வீடுகள் கட்டி, அதற்கு திரு. கஜீவன்ராம் அவர்களை அழைத்து திறப்பு விழா நடத்தினால் னும் அதை வரவேற்கிறேன். மத்திய அமைச்சரிடம் பார்த்தீர்களா, ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்ல வேண்டுமானால் அப்படிச் செய்வதை நான் வரவேற்கிறேன்.

எனக்கு இருக்கிற மனிதாபிமானத்தின் காரணமாக, மறைந்த முதலமைச்சர் குடும்பத்திற்கு உதவிசெய்யவேண்டுமென்று சொன்னேன். நான் வே எதையோ சொன்னேன் என்பதற்காக



அதையும் இதையும் ஒப்பிட்டு, அது வேண்டாம் என்று சொல்லியிருப்பது மிகவும் வருந்தத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம.பொ.சி. அவர்கள் ஏதாவது ஆக்கபூர்வமான காரியத்தைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் சொல்கிறோம், இந்த சர்க்கார் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், போலீஸ், யார் தவறு செய்தாலும். ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரியே, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரியே, யாராக இருந்தாலும் சரியே, சமூக விரோதிகளாக இருந்தாலும் சரியே, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும். இதிலே எந்த விதமான அரசியல் தலையீடும் இருக்கக்கூடாது. திரு. ம.பொ.சி. அவர்கள் காந்தி பரம்பரை என்று சொன்னார்கள். ஆம், காந்தி பரம்பரையில் வந்ததால்தான் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். சத்தியம், அகிம்சையினாலே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்த நாங்கள், காந்தியடிகளின் வழியிலே ஹரிஜனங்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். எந்த இடத்தில் அக்கிரமம் நடக்கிறதோ, அப்பொழுது கண்டிக்கத்தான் வேண்டும். அப்பொழுதுதான் காந்தியடிகள் 'குவிட் இண்டியா' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன அதே முறையிலே இந்த அரசாங்கத்தை விட்டு நீங்கள் போக வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த அரசாங்கத்தை விட்டு நாங்கள் போகவேண்டுமென்ற நல்ல வாழ்த்துக்களோடு எதிர்க்கட்சித் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி முடித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே அளிக்கப்பட்டுள்ள இந்தக் கண்டனத் தீர்மானத்தில் சில வாசகங்கள் மாற்றப்படுமேயானால், நாங்கள்கூடச் சேர்ந்து அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்குத் தயாராக இருப்பவர்கள்தான். தீர்மானத்தினுடைய வாசகம் " குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தத் தவறியதன் விளைவாக, 25—12—1968-ல் அம்மாவட்டத்திலுள்ள கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டு ஏதும் அறியாத பெண்டிர், சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ் செயல் காரணமாக இப்பேரவை அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிப்பதோடு அதனை ஏற்கவும் மறுக்கிறது" என்று எதிர்க்கட்சியின் தரப்பில் அளிக்கப்பட்டிருக்கிறது. இதே தீர்மானம் " தஞ்சை மாவட்டத்தில் 25—12—1968-ல் கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டு ஏதும் அறியாத பெண்டிர், சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ்

செயலை இம்மாமன்றம் கண்டிக்கிறது" என்ற அளவிலே இருந்திருக்குமானால் அனைவரும் சேர்ந்து இந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு நம்முடைய ஆதரவைத் தந்திருக்க முடியும்.

ஆனால், இங்கே தீர்மானம் கொண்டு வந்த நண்பர் அவர்களும், கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்களும், இந்தச் சம்பவங்களுக்கு முழுப் பொறுப்பும், தொடர்ந்து இந்தச் சர்க்கார் கடைப் பிடித்து வருகின்ற காரியங்கள்தான் என்று எடுத்துக் கூறினார்கள். கண்டனம் யார் மீது என்பதைத்தான் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்த அருமை நண்பர் மாண்புமிகு திரு. ஜெயராஜ் அவர்கள், தீ வைக்கப்பட்டு கொளுத்தப்பட்ட, பெண்டிர், குழந்தைகள், அடிபட்டவர்கள் அத்தனை பேருக்கும் கண்ணீர் வடித்தார்கள். தன்னுடைய ஆழ்ந்த சோகத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அதே நேரத்தில், அப்படித் தீ வைத்துக் கொளுத்திய கொடும்பாவிகளைப்பற்றி ஒரு வார்த்தை கூட அவர் கூறவில்லை. ஆக, அவர்களுடைய கண்டனம் அந்த அளவோடு நின்று விட்டது. சர்க்கார் இந்தச் செயலுக்கு உறுதுணையாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார். நிலப் பிரபுக்கள் செய்ததாகச் சொல்லப்படுகிற அந்தக் கொடுமைக்குச் சர்க்கார் உறுதுணையாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டாரா அல்லது ஏதோ மேலெழுந்தவாரியாக சர்க்கார் உறுதுணையாக இருந்தது என்று சொல்ல வேண்டுமென்று விரும்பினாரா என்று புரியவில்லை.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஆண்டு காலமாகவே விவசாயப் பிரச்சினை இருந்து வருகிறது. அது நாடறிந்த உண்மை. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு ம. பொ. சி. அவர்களும் தன்னுடைய உரையிலே விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அவ்வப்போது தேடப்பட்ட பரிகாரங்களையும் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு, கடந்த இரண்டாண்டுக் காலத்தில் அங்கு ஏற்பட்ட நிலைமைகளுக்காக எந்தப் பரிகாரமும் காணப்படவில்லையா? எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லையா என் பதற்கான கேள்விக்கு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1967-ம் ஆண்டு ஜூன் திங்களில் விவசாயப் பிரச்சினை குறித்து அமைதிக் குழுவின் கூட்டம், மாநாடு என்ற பெயரால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டது. அதிலே, தொழிலாளர்களுடைய தலைவர்கள், நிலவுடைமையாளர்கள், அதிகாரிகள் ஆகிய இந்த மூன்று தரப்பினரும் முத்தரப்பு மாநாடு என்ற பெயராலே கூடி சில முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவின்படி, பயிரிடும் பருவத்திலும், அறுவடைப் பருவத்திலும் கூலி



விகிதங்கள் எப்படி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் நெல்லும், ரூ. 1.30 காசு பணமும் தரப்பட வேண்டுமென்றும், பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் நெல்லும், 37 காசும் தரப்பட வேண்டுமெனறும் கீழ்த் தஞ்சையில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டிலே முடிவு எடுக்கப்பட்டது.

1967 அக்டோபர் திங்கள் மன்னார்குடியில் விவசாயப் பிரச்சினை குறித்து எழுந்த சில நிலைமைகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் ஒரு முத்தரப்பு மாநாட்டைக் கூட்டினார்கள். அதில், அறுவடை செய்த நெல்லில், கலம் ஒன்றுக்கு நெல் அறுவடை செய்வதற்கான கூலி, உள்ளூர் படியில் அரைப்படி அதிகரிக்கப்பட்டது. இவ்வாறாக 4 உள்ளூர் படியாக வழங்கப்பட்ட இடத்தில் 4½ உள்ளூர் படியாக உயர்த்தப்பட்டது. 5 படி 5½ படியாக உயர்த்தப்பட்டது. கலம் ஒன்றுக்கு 6 உள்ளூர் படியாகக் கொடுக்கப்பட்ட இடங்களில் அந்த அளவே நீடிக்கும், அதை அதிகரிப்பதாக இல்லை என்ற அளவிலே மன்னார்குடியில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டிலே 1967 அக்டோபர் திங்களிலே முடிவு எடுக்கப்பட்டது.

1968 ஜூன் திங்களில், அடுத்த பயிரிடும் பருவத்தில் மறுபடியும் சில கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. ஜூன் திங்கள் 1968-ம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டில் கீழ்க் கண்டவாறு கூலி விகிதம் முடிவு செய்யப்பட்டது. ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல், ஒரு ரூபாய் பணம்; பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் நெல், 25 காசு பணம்; வெளியிலிருந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாக உள்ளூர் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டுமென்றும், கீழ்ப்படியாத, திறமையற்ற தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்பட வேண்டியதில்லை என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் தாசில்தார்களும், கோட்ட அதிகாரிகளும் அவர்களுடைய நாட்டத்திற்குக் கொண்டு வரப்படுகிற கூலித் தகாறுகளை அவ்வப்போது அமைதியோடு தீர்த்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் விளைவாக கிழக்குத் தஞ்சையில் 1968-ம் ஆண்டு குறுவைப் பயிர் சாகுபடி அமைதியாக முடிவுற்றது. அதே ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளுக்குப் பிறகு நவம்பர் 20-ம் நாளுக்கு இடையே குறுவை அறுவடை செய்யப்பட்டபோது அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. கிளர்ச்சிகள் நடைபெறக் காரணம்—ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட மன்னார்குடி மாநாடு, திருவாரூர் மாநாட்டின் தீர்மானப்படி உள்ள கூலி உயர்வைத்தான் தரமுடியுமென்று மிராசுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டதாகவும், இங்கே ஏற்கனவே தரப்பட்டது 6 படிதான்—அதைத்தான் தரவேண்டும் என்று தொழிலாளர்கள்

தரப்பில் கூறப்பட்டதாகவும், இடையிலே ஏற்பட்ட சர்ச்சைகளின் காரணமாக பாதுகாப்பை முன்னிட்டு, சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டுமென்பதை முன்னிட்டு புதுச்சேரி, ஆதமங்கலம், கருவேலி ஆகிய இடங்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க உடனடியாக இயங்கும் காவல் படைப் பிரிவினர் அனுப்பப்பட்டனர், தொடர்ந்து, அசம்பாவித மான சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க சிக்கல், வலிவலம், கீவளூர், கொரடாச்சேரி, திருவாரூர், நாகபட்டினம், புதுச்சேரி, ஆத மங்கலம் ஆகிய இடங்களில் படைக்கலன் தாங்கிய காவல் படையி னர் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

இவைகளுக்கிடையேதான் திடீரென்று கீழ்வெண்மணிச் சம்ப வம் உருவாயிற்று. கீழ்வெண்மணிச் சம்பவம் கூலிப் பிரச்னையால் ஏற்பட்டதா, கம்யூனிஸ்டு நண்பர்கள் குறிப்பிட்டது போல் வர்க்கப்போராட்டத்தின் உணர்ச்சி வடிவமா, அல்லது அனைவரும் சேர்ந்து தீர்வுகாணவேண்டிய ஒரு பிரச்சினைக்கான அறிகுறி என்று திரு. ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டார்களே, அது போன்ற சம்பவமா என்பவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்த் திட வேண்டும். எந்த ஒரு அரசாங்கத்திலும் திடீர் திடீரென்று— இந்த மன்றத்திலே முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல—மின்வெட்டென சில காரியங்கள், நிகழ்ச்சி கள் நடைபெற்று விடுவதுண்டு. அதற்கு முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிடுவது ஓரளவுக்கு அரசியல் லாப நோக்கோடு குறிப்பிடப்படுகிற வாத மாகத்தான் இருக்க முடியுமே தவிர, வேறல்ல. வெண்மணிச் சம் பவம் திடுக்கிடத்தக்க, நெஞ்சை உலுக்கத்தக்க, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மனதை நோகச் செய்யக்கூடியது; மனிதாபி மானத்திற்கு அப்பாற்பட்டது. அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றொணாத் துயரடைந்தார்கள் என்பதையும், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நானும், சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும், அரிசன நலத் துறை அமைச்சர் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றோம் என்பதையும் அனைவரும் அறிவர். அவ்வாறு நேரிடையாகச் சென்று செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்திருக்கிறார்கள், நஷ்ட ஈடு தருவதற்கான காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் தலைவர் களையெல்லாம் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். மேலும், அமைதி குலையாத அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் அங்கு வெகு தீவிரமாகப் பலப்படுத்தப்பட்டன.

வெண்மணிச் சம்பவத்தைப் பற்றி ஏற்கனவே அறிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று கேட்கிற நோக்கிலே தான் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்





நாட்டில் இருக்கும் போலீஸ் படையின் அளவு, போலீஸ் காவலர்களின் அளவு, கிராமங்களுடைய அளவு இந்த இரண்டை யும் எண்ணிப் பார்க்கவேண்டும். வெண்மணி தஞ்சை மாவட்டத் தில், நாகை தாலுகாவில் கீவளூர் என்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு அப்பால் 4½ மைல் தூரத்திலுள்ள ஒரு குக்கிராமம். அந்தக் கிராமத்தில் நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி ஆறு மணிக்கு ஒன்றும், தொடர்ந்து எட்டு அல்லது ஒன்பது மணிக்கு ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்று அதற்குள்ளாக, போலீஸ் விரைந்து செல்வதற் குள்ளாக சகிக்க முடியாத சில கொடுமைகள் அங்கு நடைபெற்று முடிந்து விட்டன. அந்தக் கொடுமைகள் நடந்து முடிந்து விட்டதும் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறியதா என்றால் இல்லை. அதில் இரண்டு தரப்பிலும், மிராசு தார்கள் தரப்பிலும். விவசாயத் தொழிலாளர்கள் தரப்பிலும் பலர் கைது செய்யப்பட்டு, அவர்களில் ஏறத்தாழ இரு தரப்பிலும் 46 அல்லது 48 பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதில் கோபால கிருஷ்ண நாயுடு என்பவர் முதல் எதிரியாக, அந்தக் குடிசைகளை தீ வைத்த சம்பவத்தில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டு, அவர் கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதை இந்த நேரத்தில் இங்கு விவாதத் திற்கு எடுத்து வைக்க நான் விரும்பவில்லை. அது தஞ்சை மாவட்ட மக்களுக்குத் தெரியும். இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த அரசியல் நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதேபோல், அரசியல் நோக்கோடு அவர் யார் என்று இங்கு கூறி அந்த அரசியல் லாபத்தைச் சம்பாதிக்க நிச்சயமாக நான் எண்ண வில்லை. அவர் யார், எப்படிப்பட்டவர், எந்த நிலையில் உள்ளவர் என்பதையெல்லாம் நிச்சயமாகத் தஞ்சையில் உள்ளவர்கள் அறிவார்கள். ஆக, கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்துள்ள காங்கிரஸ் தரப்பினர் அவர்களை அறியாமலேயே அந்தக் கொடுமையைச் செய்த பாவிகளை கண்டிக்கிறார்களே என்று எண்ணி எண்ணி அவர்களுக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். (ஆரவாரம்.)

தீ வைப்பு சம்பவம் என்பது சாதாரணமானதல்ல. நாங்கள் நேரில் பார்த்தோம். எவ்வளவு பயங்கரமான கொடுமை என்பதை நாங்கள் கண்ணீர் வடிய வடியப் பார்த்தோம். ஒரு சிறிய வீட்டிற்குள்ளாக, அதிலும் அடுக்களை என்று அவர்கள் கட்டிய பகுதியிருக்கிறதே அதற்குள்ளாக நாற்பதுக்குமேற்பட்ட வர்கள், தாய்மார்களும், குழந்தைகளும் உட்பட, திரு. ஞானசம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு குழந்தை தன் தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிற குழந்தையின் எலும்புக்கூடும், தாயின் எலும்புக்கூடும் கருகிக்கிடக்கிற அந்தக் கோரக் காட்சிகளையெல்லாம் நாங்கள் பார்த்தோம். இதிலிருந்து

என்ன புரிகிறது? சமுதாயத்திலே நாம் எந்த அளவிற்கு மிருக உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம், வெறித்தனங்களையெல்லாம் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர முடிகிறது.

ஆறு மணி அளவில் பக்கிரி என்ற ஒரு குடியானவ நண்பர் அங்கு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது போலீசும், சட்டமும். ஆனால், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீஸுக்கு அவகாசம் தராமல், சட்டத்திற்கு இடம் தராமல், சிலர் கூடிக் கொண்டு, சில மிராசுதாரர்கள் கூடிக்கொண்டு அப்போதே தீர்ப்பளிப்பது என்று கையில் கொள்ளிக்கட்டைகளையும் துப்பாக்கி ரவைகளை மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து பத்தாண்டுகளுக்குப் பின்னால் என்னோடு வாருங்கள். அது பயங்கர ஆண்டு அல்ல. பின்னால் வந்தால் நீங்கள் ஆளும் கட்சியில் இருப்பீர்கள். ஆகவே நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கக் கூடிய ஆண்டுதான் 1957-ம் ஆண்டில், முதுகுளத்தூரில், இராமநாதபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் அன்றையதினம் போலீஸ் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் என்ன சொன்னார்கள்?

"1957 ஜூலை 4-ம் தேதி முடிவுற்ற உப தேர்தலின் காரணமாக அந்தப் பிரதேசத்தில் பகை எழுந்தது. தேவர் மக்கள் அரிஜன மக்களில் ஒரு பகுதியினர் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து தேவர் மக்களை தோற்கடித்து விட்டனர் என்ற எண்ணத்தில் பகை ஏற்பட்டது. இதன் காரணமாக தேவர்களில் பலர் அரிஜன மக்களைத் தாக்கினர். அரிஜன மக்கள் அதிகமாக இருந்த இடத்தில் அரிஜனங்களும் தேவர்களைத் தாக்கினர்.

யும் எடுத்துப் போய் வெண்மணி கிராமத்தில் அவர்களே தீர்ப்பு வழங்குவது என்பது சரியல்ல. முதலில் நடைபெற்ற குற்றத்திற்கு மேலும் இன்னொரு குற்றத்தைச் செய்வது, அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் ஒரு பயங்கரமான, பிரளயம் என்று எண்ணத்தக்க அளவிற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்குவது என்பதை இந்த அரசு நிச்சயமாக விரும்பவில்லை.

நான் இந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்தில் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு நீதி விசாரணை கிடையாதா, இதற்கு சர்க்கார்தான் பொறுப்பு, மந்திரிகளே நீங்கள்தான் பொறுப்பு, நீங்கள் எல்லாம் உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியே ஓடுங்கள் என்றெல்லாம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, சபாநாயகர் அவர்களே, தங்கள்



இதிலிருந்து செப்டம்பர் மாதம் 10-ம் தேதி வரை அப்பகுதியில் கொள்ளையடித்தல், சட்ட விரோதமான முறையில் சிறைவைத்தல், களவு, சொத்துக்களை கவர்ந்து கொள்ளுதல் இதுபோன்ற பல வழக்குகள் நடந்து கொண்டிருந்தன" இப்படிப்பட்ட சம்பவங்களின் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சிகளை நாம் ஆராயவேண்டும்.

"1957 செப்டம்பர் 10-ம் தேதியன்று ராமநாதபுரம் கலெக்டர் அவர்கள் அப்பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்களினால் ஏற்பட்ட நிலைமைகளை சரிப்படுத்துவதற்காக நடத்திய சமாதான மாநாட்டில் தான் சட்டத்திற்கு முரண்பட்ட நிலைமை (அமளி) ஏற்பட்டது." கவனிக்க வேண்டுகிறேன். "1957 ஜூலை திங்கள் 4-ம் தேதி முடிவுற்ற உப தேர்தல்களை முன்னிட்டு தீ வைத்தல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்ற காரியங்கள் நடைபெற்றபோது செப்டம்பர் 10-ம் தேதி தான் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மாவட்ட கலெக்டர் அவர்கள் ஒரு சமரச மாநாட்டைக் கூட்டினார்கள். அதில் அமளி ஏற்பட்டது." அதன் தொடர்பாக இமானுவேல் என்பவர் பரமக்குடியில் கொலை செய்யப்பட்டார். செப்டம்பர் 13-ம் தேதி பகல் 11 மணிக்கு ஒரு கூட்டம் வேல்-கம்பு-அரிவாள் இவைகளுடன் அருங்குளத்திலுள்ள மக்களைத் தாக்கினார்கள், ஐந்து பேர்களைக் கொலை செய்தார்கள். இந்த ஐந்து பேர்களில் ஒருவர் பெண், மேலும் 24 அரிஜன வீடுகளுக்கு தீ வைத்தார்கள். அதோடு நான்கு பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தார்கள். இவ்வித சம்பவம் ஏற்பட்டதற்கு உடனடியான காரணம் அப்பகுதியில் நடைபெற்ற ஒரு நாடகத்தில் திரு. முத்துராமலிங்கத் தேவரை பாராட்டிப் பாடிய பாட்டுக்களை அப்பகுதியிலுள்ள அரிஜன மக்கள் எதிர்த்தார்கள் என்பதே. இந்தச் சம்பவம் நடந்தவுடன் அரிஜன மக்கள் எல்லாம் கோபம் கொண்டு திரண்டு எழுந்தார்கள். தேவர்களைத் தாக்கினார்கள். மூன்று பேர்களைக் கொலை செய்தார்கள். அவர்களில் இரண்டு பேர் பெண்கள். அவர்களுடைய வீட்டுக்கும் தீ வைத்தார்கள். அதோடு பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தார்கள்." "செப்டம்பர் 14-ம் தேதி காலையில் ஓரக்குடி கிராமத்தில் தேவர்களுக்கும், அரிஜன மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதில் நான்கு பேர் காயமுற்றனர். அதே நாளில் கீழக்தூவல் என்ற கிராமத்திற்கு இமானுவேல் கொலை வழக்கு சம்பந்தமாக குற்றவாளிகளைத் தேடுவதற்காகப் போலீஸ் பார்ட்டி சென்றபோது நூற்றுக்கணக்கானவர் அடங்கிய ஒரு கூட்டம் போலீசைத் தாக்கியது. போலீஸ் பார்ட்டி தப்பித்துக் கொள்வதற்காகச் சுட்டார்கள். அதில் ஐந்து பேர் மறவர்கள் கொல்லப்பட்டனர்." இது அன்றைய போலீஸ் அமைச்சர் அவர்களின் வாக்குமூலம். ஆனால் ஐந்து மறவர்கள் கட்டி வைக்கப்பட்டு சுடப்பட்டார்கள் என்பது எதிர்த்தரப்பிலுள்ள வாதம். "1957 செப்டம்பர் 16-ந்

தேதி காலை 6 மணிக்கு இலஞ்சம்பூர் என்ற இடத்தில் உள்ள தேவர்களுக்கும் வீராம்பள் என்ற இடத்திலுள்ள அரிஜன மக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அதில் நான்கு தேவர்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் பெண், இரண்டு அரிஜன நபர்களும் கொல்லப்பட்டனர்." அரிஜன நபர்களுக்கும் இரண்டு தேவர்களும் காயம் அடைந்தனர். அதே நாளில் ஆயுதம் தாங்கிய கூட்டமொன்று இருளாண்டிப்பட்டி, சேந்தகோட்டை முதலிய கிராமங்களிலுள்ள சுமார் 60 வீடுகளைக் கொளுத்தினர். இதில் மூன்று அரிஜன நபர்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் பெண், ஒரு அரிஜன பெண் அபாயகரமான முறையில் காயம் அடைந்தார். "1957 17-ம் தேதி மாலை கீரந்தை என்ற கிராமத்தில் ஆயுதங்களோடு சுமார் 1,000 பேர்கள் கூடி பக்கத்திலுள்ள கிராமங்களைத் தாக்கினார்கள். அங்கு வந்திருந்த ஆயுதந்தரித்த விசேட போலீஸ் படையையும் கூட்டம் எதிர்த்தது. பின்னால் போலீஸ் எழு ரவுண்ட் சுட்டது. அதில் மூன்று பேர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் காயம் அடைந்தனர். இக்கூட்டம் கீரந்தைக்கு செல்லும் வழியில் கூட்டத்தில் ஒரு பகுதியினர் முத்தானந்தல் கிராமத்திலுள்ள வீடுகளுக்கும் தீ வைத்தனர். "இந்த அசம்பாவித சம்பவங்கள் எத்தனை உயிர்களை மாய்த்திருக்கின்றன என்பது பற்றியும், எவ்வளவு சொத்துக்கள் இதனால் அழிந்திருக்கின்றன என்பது பற்றியும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்." நான் அல்ல இப்படிக் கூறுவது, திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறுகிறார்கள். "இரண்டு பிரிவினருக்கும் நேரிடையாக ஏற்பட்ட தாக்குதல்களின் காரணமாக 18 அரிஜன மக்களும் 8 தேவர்களும் கொல்லப்பட்டனர். போலீசார் மீது ஏற்பட்ட தாக்குதல் காரணமாகவும் அதன் விளைவாக ஏற்பட்ட போலீசார் துப்பாக்கிச் சூட்டினாலும் 13 பேர்கள் கொல்லப்பட்டனர். அந்த 13 பேர்களும் தேவர்கள். மற்றும் ஒருவர் ஆஸ்பத்திரியில் இறந்தார். ஆக இறந்தவர்கள் 40 பேர்கள். எரிந்த வீடுகள் 2,842. சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம், பரமக்குடி தாலுகாவில் 11,000 ரூபாய், முதுகுளத்தூர் தாலுக்காவில் ரூ. 25,000, சிவகங்கை தாலுக்காவில் ரூ. 2,51,353, அருப்புக்கோட்டை தாலுக்காவில் ரூ. 86,350 ஆக ரூ. 3,73,703". இவ்வளவிற்கும் பிறகும் பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள், "பொதுவாக நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது அரசாங்கத்தின் முக்கிய கடமை என்பது ஒரு பக்கம் இருப்பினும், கஷ்டமடைந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக அரசாங்கம் இதற்கென்று அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது" என்று குறிப்பிட்டார்கள். அவரையடுத்து சட்டசபையில் ஒரு அம்மையார் பேசுகிறார். அந்த அம்மையார் என்ன சொன்னார்கள் தெரியுமா? "வீராம்பளில் நடந்த விழாவில் கூட்டம் கூட்டமாக வந்து வீடுகளுக்கு நெருப்பு வைத்தார்கள். கிராமம் கிராமமாகச் சென்று கன்னிப்பெண்களைக் கெடுத்தும், விதவைகளை



மானபங்கம் செய்தும், பெண்களை நிர்வாணமாக ஆக்கியும் பல அக்கிரம காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்களைக் கற்பழித்திருக்கிறார்கள். கிராமத்தில் 137 வீடுகளை எரிய விட்டிருக்கிறார்கள். இந்த நெருப்பில் கோழிகளைச் சுட்டு சாப்பிட்டிருக்கிறார்கள். மனிதர்களை மனிதர்களாக இருப்பார்கள் என்று நம்பி போதுமான போலீஸ் படை வைக்காமல் இருந்தது, ஜனங்களை நம்பியிருந்தது ஒரு குற்றம் என்றால் நமது சர்க்கார் குற்றம் செய்திருக்கிறது". இப்படிப் பேசியது வேறு யாரும் அல்ல. சௌந்தரம் ராமச்சந்திரன் என்ற காங்கிரஸ் உறுப்பினர் அன்று இந்தச் சட்டமன்றத்திலே விளக்கிப் பேசினார்கள். இவ்வளவுக்கும் பிறகு நான் மற்றொன்றை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விஷயமெல்லாம் பேசப்பட்டு, எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் இவைகளுக்கு காங்கிரஸ் மந்திரிகள்தான் பொறுப்பு, ஆகவே அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கூறி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், எங்களுடைய கட்சியின் தலைவராக அன்று வீற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டபொழுது திரு. சுப்பிரமனியம் அவர்கள் சொன்னார்கள். "இது துக்ககரமானது மட்டுமல்ல, வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

இந்த நிகழ்ச்சியின் காரணமாக தமிழ் மக்களின் மானமே பறிபோயிருக்கிறது.

தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று வந்திருக்கும் கனம் முதலமைச்சர் காமராஜ் கலகங்களில் பங்கெடுத்துக் கொண்டார் என்று குற்றம் சாட்டினால் மற்ற சபைகளில் என்ன பேசுவார்கள் என்பதையும் இதைப்பற்றி வெளிநாடுகளில் என்ன பேசுவார்கள் என்பதைப் பற்றியும் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் யோசித்துப் பார்த்தாரா? பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன் என்று சொன்னார்கள். இது தானா முறை?

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எப்படி வேண்டுமானாலும் பேச உரிமையிருக்கிறது. அந்த உரிமையைப் பயன்படுத்தும்போது மானம் கப்பல் ஏறிப்போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டாமா?" என்று பேசிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்,

"கலவரம், குழப்பம் இருந்தால் முன்னேற முடியாது, நாங்கள் இங்கே சாசுவதமாக இருப்போம் என்று கருதவில்லை.

நாங்கள் அந்தப் பக்கம் வந்து உட்காருவோம் என்று கனம் அண்ணாதுரை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யாரும் நிர்வாகம் நடத்தலாம், யார் நிர்வாகம் நடத்தினாலும் அமைதி, ஒழுங்கு என்ற அடிப்படையில் தான் நடத்த முடியுமே தவிர

கலவரம், குழப்பம் என்ற அடிப்படையில் நடத்த முடியாது. கலவரங்களை அடக்க இப்போது இருக்கிற சூழ்நிலையில் போலீஸ் படையை அனுப்புவது என்கிற அந்த முறைதான் எங்களுக்குத் தெரியும் மக்களுடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது போல் போலீஸ்காரர்களுடைய உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும்.

"எந்த' சுடக்கூடிய சம்பவமாக இருந்தாலும் உடனே நீதிபதியைப் போட்டு அந்த போலீஸ்காரர்களை குற்றவாளிகளைப் போல் கூண்டில் ஏற்றி விசாரிப்பது என்றால் இந்த வேலையைப் பார்ப்பதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். இதற்கு இந்தப் போலீஸ் படையையே கலைத்து விடலாம்" என்று பேசியிருக்கிறார்கள். 20 நாட்கள், ஒருநாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல, 1957-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 10-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரை 20 நாட்கள் முதுகளத்தூரில் நடந்த அந்தக் கோர விளையாட்டுக்கு. வெறித்தனம் மிகுந்த விளையாட்டுக்கு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டபொழுது திரு. சுப்பிரமணியம் அவர்கள், எந்தச் சுடக்கூடிய சம்பவமாக இருந்தாலும் நீதிபதி போட்டு போலீஸ்காரர்களைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றி விசாரிப்பது என்றால் போலீஸ் வேலையைப் பார்ப்பதற்கே யாரும் வரமாட்டார்கள் என்று கூறிய அவர். "இவ்வளவு கலவரம் ஆகும் போது, கலவரத்தை அடக்க முயலுகிற நேரத்தில் நாம் இவர்கள் செய்யவேண்டியதை எல்லாம், சூழ்நிலை காரணமாக வரம்புக்கு மீறி நடக்காமல் இருக்க வேண்டி, உறுதியான உத்திரவுகளைப் போட்டிருக்கிறோம்.

ஆக இன்றைக்கு நீதிபதி விசாரணை தேவையில்லை என்று சொன்னது ஏதோ அவர்கள் அக்ரமம் செய்து விட்டார்கள், அதை மறைக்க வேண்டுமென்றல்ல" என்று கூறி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நீதிவிசாரணைக்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள். "ஒன்றைப் பற்றி எழுதினால், ஒன்றைப்பற்றி பேசினால் அதன் விளைவாக அந்தப் பகுதியில் மீண்டும் ஒரு அமளி ஏற்படுமானால், சீக்கிரத்திலே உணர்ச்சி வசப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களானால் அதற்கு நாமே பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கை உண்டு பண்ணாமல் அமைதியாக—புண்ணை ஆற்ற நியாயமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில் பேசாமலிருந்தேன். இப்போதும் கூட இந்தத் தீர்மானத்தின் மீது பேச எனக்கு விருப்பம் இல்லைதான்" என்று ஆரம்பித்தார் அண்ணா. காமராசரும் பக்தவச்சலமும் தான் கலவரங்களுக்குப் பொறுப்பாளி—தூண்டிவிட்டவர்கள் என்று சட்டசபையில் பேசப்பட்ட போது—இறுதியாக அங்கே அண்ணா என்ன பேசினார் தெரியுமா?



"இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததின் நோக்கம் முதலமைச்சர் அவர்களின் பேரிலும் போலீஸ் அமைச்சரின் பேரிலும் குற்றச் சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு மாத்திரம் தான் என்று நமது நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கின்ற இந்த நேரத்திலே பேசுகின்றபொழுது என்ன கூறினோம் என்பது நினைவிலே இருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு இரண்டு மந்திரிகள் பொறுப்பாளிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒப்பவில்லை." என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

அந்தப் பெருந்தன்மை வாய்ந்தவர் உட்கார்ந்திருந்த இடத்தில் நம்முடைய கருத்திருமன் அவர்கள் உட்கார்ந்து கொண்டு, போலீஸ் தலையீடு இல்லாத, போலீஸ் யாரையும் சுட்டுப் பொசுக்காத, போலீஸ் கொன்று குவிக்காத ஒரு நிகழ்ச்சிக்கு, இருதரப்பார், இரு வர்க்கத்தார் நடத்திக்கொண்ட ஒரு போராட்டத்திற்கு, மின் வெட்டென நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சிக்கு அரசாங்கமே வெளியே போ என்று கூறுகிறார்கள் என்றால் நான் அந்தக் காலத்தையும் எண்ணிப் பார்க்கிறேன், இந்தக் காலத்தையும் எண்ணிப் பார்த்துக் கொள்கிறேன், இதற்காக வருத்தப்படுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

சட்டம், அமைதி கெட்டுவிட்டது, உங்களுடைய இரண்டாண்டு கால ஆட்சியிலே எவ்வளவு கொலைகள் விழுந்துவிட்டன என்று நண்பர் ஜெயராஜ் அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இரண்டாண்டு காலமாகத் தான் கொலைகள் நடக்கின்றனவா? இப்பொழுதுதான் கொலைகள் வீழ்ந்தனவா? அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே விழுந்ததெல்லாம் கொலைகள் இல்லையா? அவைகள் வெறும் குலைகளா? என்று எண்ணிப் பார்த்தேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: சபாநாயகரவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும்படியான தீர்மானம் இப்பொழுது இருக்கும்படியான மந்திரிசபைச் சட்டம், அமைதியைப் பாதுகாக்கவில்லை என்ற கொள்கைக்காகத்தான். முன்பிருந்த மந்திரிசபையில் நடந்த விஷயங்களைப் பற்றிக் கூறினார்கள், கேட்டுக்கொண்டிருந்தோம். எப்பொழுதுமே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பழக்கமாகப் போய்விட்டது. 'முன்னாலே நடக்கவில்லையா, இதே மாதிரி முன்னாலே நடக்கவில்லையா' என்று கேட்பது. "நாங்கள் வந்தால், எங்கள் போலீஸ் சுட்டால் அது குண்டாக வராது, கொலையே விழாது" என்று சொன்னதால்தான் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். முன்னாலே நடைபெறவில்லையா என்றால் அவ்வாறு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 பிப்ரவரி 28

நடைபெற வேண்டாமென்று சொல்லித்தானே நீங்கள் வந்தீர்கள். எனவே, பழங்கதையைப் பேச வேண்டியதில்லை. இரண்டு வருஷத்திலே நடைபெற்ற விஷயங்கள், அதைப்பற்றிப் பேசுங்கள். 5 வருஷத்துப் ‘ புரொசீடிங்ஸை ’ வேண்டுமானாலும் படித்துக்கொண்டிருக்கலாம். நாங்களும் படிக்க முடியும். அவ்வாறு படிக்க வேண்டுமென்றால் படிக்கிறோம். அவ்வாறு படிக்க வேண்டுமென்றால் மாதக் கணக்காக ஆகும். தவறு நடந்து இருக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை. ‘அந்தத் தவறு நடக்காது, தமிழர் ஆட்சி நடக்கும் ஆராய்ச்சி மணியை அடித்தால் நீதி கிடைக்கும்’ என்றெல்லாம் சொல்லியும், ‘ அத்தான், பொத்தான், செத்தான் ’ என்றும், நாங்கள் வந்தால் போலீசே இருக்காது என்னும்படியான நிலையில் சொன்னீர்கள். எனவே நாங்கள் கொண்டு வந்திருக்கும் கண்டன தீர்மானம், மந்திரிசபை சட்டம், அமைதியைக் காக்கத் தவறி விட்டது, ஆகையால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டு விட்டது என்பதைக் காட்டுவதற்காகத்தான். சட்டம், அமைதியைப் பாதுகாக்க எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. வெளியே போவது பற்றி இல்லை, நாங்கள் சொல்வது மக்களுக்கு இதைப்பற்றித் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான். நீதி விசாரணை என்றால் அந்தச் சம்பவத்திற்காக அல்ல, அந்தச் சம்பவம் எப்படி ஏற்பட்டது என்பதற்காகத்தான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய விஷயங்களைக் கிளற வேண்டாமென்று, மாணவர்-பஸ்தொழிலாளர் பற்றிய பழைய விஷயங்களைக் கிளறி இங்கு பேசிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த உபதேசத்தைச் செய்வதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது, பரவாயில்லை.

நண்பர் திரு. ஜெயராஜ் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியிலே கொலைகளே நடக்காதது போலவும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகுதான் கொலைகள் நடந்தன என்பதுபோலவும் கூறினார்கள். அதற்காகத்தான் கூறுகிறேன். 1958-ஆம் ஆண்டு சென்னை நகரம் உள்ளிட்ட தமிழகத்தில் நடைபெற்ற கொலைகள் 755. 1959-ல் 751 கொலைகள். 1960-ல் 717, 1961-ல் 727, 1962-ல் 659, 1963-ல் 661, 1964-ல் 761, 1965-ல் 68, 1966-ல் 712 கொலைகள் ஆக இந்த 9 ஆண்டுக் காலத்தில்—இருபது வருஷங்களுக்குக் கூடப் போகவில்லை—6,430 கொலைகள் தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்திலே நிகழ்ந்திருக்கின்றன. கொலைகள், கொள்ளைகள், திருட்டுக்கள் இப்படிப்பட்ட சம்பவங்கள் எந்த ஆட்சி நடைபெற்றாலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுவதும், உடனடியாகப் போலீஸ் நடவடிக்கை எடுப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்காமல் தீர்மானத்தைக் கொண்டுவந்த நண்பர் திரு. ஜெயராஜ் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் கொலைகள் ஏற்பட்டன என்பதுபோல் சொன்னதற்காகத்தான் இந்தப் பதிலை சொன்னேனே தவிர வேறு அல்ல.



1969 பிப்ரவரி 28] [திரு. மு. கருணாநிதி]

முதுகளத்தூர் சம்பவம்பற்றி நடந்த விவாதத்தில் எதிர்க்கட்சிகளில் ஒருகுழுவின் தலைவராக இருந்த அண்ணா அவர்கள் அன்றைய தினம், இந்தச் சம்பவங்களுக்கும் மந்திரிகளுக்கும் சம்பந்தம் இல்லை, இது சமுதாயத்திலே ஏற்பட்ட புறையோட்டத்தின் காரணமாக ஏற்பட்ட சூழ்நிலை, அதற்கு மருந்து போட வேண்டுமே தவிர, மீண்டும் கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட இடமளிக்கக்கூடாது என்ற கருத்தைத் சொல்லி, எல்லாக் கட்சிக்காரர்களும், மந்திரிகள்தான் காரணம் என்று சொன்னாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் மந்திரிகள் காரணம் அல்ல என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறோம் எனக் கூறினார். நான் இதற்கும், அதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கிறேன். இவர்கள் பேசுகிறார்கள் இங்கு மட்டுமல்ல, வெளியிலும் எங்கேயுமே இந்த ஆட்சியிலே நடைப்பெறுவதைப்போல நடைபெறவே இல்லை, என்று பேசுகிறார்கள். அண்ணா அவர்கள் மறைந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள். மேடைகளிலே பேசுகிறார்கள். திரு. கருத்திருமன் அவர்கள் கூட பேசியதாக ஒரு பத்திரிகையிலே மிக முக்கியமான பத்திரிகையிலே பார்த்தேன், இரண்டாண்டு காலமாக அராஜக ஆட்சியாகத்தான் இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாண்டு கால அராஜக ஆட்சி என்று குறிப்பிடும் நேரத்தில், 20 ஆண்டுகளாக நடந்த அராஜக ஆட்சியை இந்த மக்கள் மறந்துவிட்டார்களா ? மறக்காத காரணத்தினால் தானே உங்களை 1967-லே வீட்டிற்கு அனுப்பினார்கள். (ஆரவாரம்) இங்கு அராஜகம் நடந்து விட்டது, பி. ப. 1.30
சட்டம், அமைதியை மீறுகிறார்கள் என்றால் அதற்கு வழிகாட்டியாக யார் இருக்கிறார்கள். மதுரையிலே ஒரு சாதாரண சம்பவம். நாகர்கோவில் தேர்தல் முடிந்து இரண்டு கட்சியினர்களிடையே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், காங்கிரஸ் தோழர்கள் இவர்களிடையே ஒரு சிறு சச்சரவு. அதன் காரணமாக அந்த தரப்பிலே 11 பேரும் இந்தத் தரப்பிலே 11 பேரும் பிடிக்கப்பட்டு அந்த 22 பேர் மீது வழக்கு போடப்பட்டது. வழக்கு கூட அல்ல, 107 என்கின்ற பிரிவின்படி அந்தப் பகுதியிலே அவர்களெல்லாம் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஓர் உத்திரவு. அந்தப் பிரிவின்படி 11 காங்கிரஸ்காரர்களிலே 10 பேர் கோர்ட்டுக்கு வந்தார்கள். கோர்ட்டின் அழைப்பின்படி 11 திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் கோர்ட்டுக்கு வந்தார்கள். ஒரு நபர் மாத்திரம் நான் கோர்ட்டுக்கு வரமுடியாது என்று மறுப்புச் சொல்லிவிட்டார். மறுப்புச் சொல்லியது மாத்திரம் அல்ல, ஒரு பெரிய பொதுக்கூட்டமே போட்டு, நான் கோர்ட்டுக்குப் போகாத வீரத்தைப் பார்த்தீர்களா என்று 23-ம் தேதியன்று பேசியிருக்கிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஐ.ஜி.-யைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? ஐ.ஜி.யைவிட அதிகமான வருமான

[திரு. மு. கருணாநிதி] [1969 பிப்ரவரி 28

வரியைக் கட்டுகிறேன். எங்களுக்கு இந்த சமுதாயத்தில் மரியாதை அதிகம். அவன் சம்பளத்திற்கு வேலை செய்கிறான். ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் காக்கி சட்டையும் மேலேபோட்டு இருக்கிற தொப்பியும் பறந்து போகும். எனவே நான் திரும்பச் திரும்பச் சொல்கிறேன் கடமையை ஆற்றுகிற வரைக்கும் மரியாதை. இல்லாவிட்டால் தொப்பி பறந்து போகும். இதையே தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்'. எப்படிச் சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பாற்றப்படுவதற்கு காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டுமென்று நான் கேட்கிறேன். ஒரு நண்பரைப்பற்றி அதே கூட்டத்திலே பேசிய ஒரு தலைவர் கூறி இருக்கிறார்கள், 'இந்த வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். சம்மன் அனுப்பப்பட்டது. நண்பர் நெடுமாறன் ஒல்லியாக இருந்தாலும் அவர்தான் சம்மனை மறுத்தவர்கள்—இந்த நேரத்தில் பெரிய ரௌடி ஒருவரை கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கியதை நான் பார்த்தேன். காய்கறி சாப்பிடுகிற குடும்பத்திற்கு இந்த பலமா என்று எண்ணினேன். எங்களுக்கு இல்லாத தைரியம் நெஞ்சு உரம் உண்டு என்பதால் அவர் சம்மனை வாங்காமல் திருப்பி அனுப்பினார். இரண்டாவது வாய்தாவில் சம்மனை வாங்க மறுத்தார். அதை வீட்டு வாசலில் ஒட்டினார்கள். மூன்றாவது வாய்தாவில் கைது செய்து வரவேண்டுமென்று வாரண்டு பிறப்பித்தார்கள். அதற்கும் கோர்ட்டுக்குப் போகவில்லை. கைது செய்யப் போலீஸ் வரவில்லை. நீங்கள் எல்லோருமே இங்கு வந்திருக்கிற ஒரு இலட்சம் பேர்களும் கோர்ட்டுக்குப் போகலாம். எங்கள் மீது என்ன குற்றம் என்று கேட்கலாம்', என்று இப்படிக் கூறப்பட்டு மக்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள். எப்படி சட்டம், அமைதி, ஒழுங்கு பாதுகாக்கப்படும்? அதற்கு காங்கிரஸ்காரர்கள் உத்திரவாதம் அளிக்க முடியும் என்று கூற முடியுமா? அது மாத்திரமல்ல, நம்முடைய கருத்திருமனிடத்திலே சொல்லியிருப்பதாகவே அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

'நான் நம்முடைய எம்.எல்.ஏ.-க்களுக்குச் சொல்கிற யோசனை நீங்கள் சட்டமன்றத்தில் "வாக்கவுட்" செய்யுங்கள். பதில் வரவில்லை என்றால் ரகளை பண்ணுங்கள். இதற்கு ஒரு முடிவு தேட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பி.ஜி. கருத்திருமன் அவர்களிடம் சொன்னேன். மானை அடிக்க ஒரு மெல்லிய பிரம்பு. மாட்டை அடிக்கும்போது பெரிய பிரம்பு. யானையை அடிக்கும் போது ஒரு தடி. எங்கே எந்த தோலுக்கு உறைக்குமோ அந்த அளவுக்கு தட்டினால்தான் விஷயம் புரியும்' என்று பேசி இருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, இன்னும் ஒரு பயங்காமான விஷயத்தைப் பேசி இருக்கிறார்கள். "1963-ல் இன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் மைத்துனர் சி. எஸ். ஜெயராமன் ஏப்ரல் மாதத்தில்



1969 பிப்ரவரி 28] [திரு. மு. கருணாநிதி]

இலங்கை சென்று இருந்தார். அங்கே அவர் பேசியதாவது: '1969 ஏப்ரல் மாதத்திற்குள் கருணாநிதி முதலமைச்சர் ஆவார்,' என்று. ஆகவே இதிலிருந்து திட்டம் இட்டு அண்ணாதுரை கொல்லப்பட்டிருக்கிறார் என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது." எந்த அளவுக்குப் பேசுகிறார்கள்? பேசிவிட்டு, சட்டம், ஒழுங்கு அமைதி பாதுகாக்கப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள் என்றால் உள்ளபடியே அவர்களுக்கு அப்படி சட்டம், ஒழுங்கு, அமைதி பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே நாட்டம் இருக்கிறதா என்பதைத்தான் நான் எதிர்க்கட்சித் தலைவரை கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த கருத்துக்கள் உடன்பாடானவைகள் அல்ல. ஆனால் உடன்பாடு மாறியவர்கள் தன்னுடைய கட்சியிலே இருப்பதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. நான் அவரிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலே நல்லவர்கள் இருக்கிறார்கள், நாணயமானவர்கள் இருக்கிறார்கள், நேர்மையானவர்கள் இருக்கிறார்கள், அவர்களெல்லாம் தலையிட்டு இந்தக் காரியங்களுக்கு ஒரு முடிவு காண வேண்டும்.

நான் முதலமைச்சரானதையொட்டி கறுப்புப் பார்டர் கட்டி "கெட்டகாலம்" என்று தலையங்கம் எழுதப்படுகிறது. பரவாயில்லை. 'கருணாநிதி காரில் 'கருமாதி' சங்கு"!! என்று தலைப்புக் கொடுத்து எழுதப்பட்டது. பரவாயில்லை. அவர்கள் கூறினார்கள், 'நீங்கள் வளர்த்துவிட்டது உங்களையே தாக்கும்' என்று. நீங்கள் வளர்த்து விட்டவர்கள் உங்களையே தாக்கி இருப்பதை நான் காட்டுகிறேன். கருணாநிதியின் தூதராக பக்தவத்சலம் போனார்!"—இது தலைப்பு. 'கருணாநிதியின் அமைச்சரவையில், அவருக்குக் கீழே அமைச்சராக இருக்க மறுத்த நெடுஞ்செழியனைச் சரிக்கட்டி, எப்படியாவது தன் மந்திரிசபையில் உட்கார வைத்தால்தான் கழகம் பிழைக்கும் என்று கருணாநிதி அதற்கான வேலைகளைச் செய்துள்ளார்.

பலரைத் தூது அனுப்பி, நெடுஞ்செழியனைச் சரிக்கட்டும் வேலை நடந்துள்ளது.

அதிலே ஒரு தூதுவர்—பழைய முதல் மந்திரி பக்தவத்சலமாம்!

'காலக் கொடுமை'—"பக்தவத்சலத்திற்கு சென்னையில் இப்போது இந்த வேலைதான் இருக்கிறது." அடுத்து வருத்தமான எவ்வளவு அசிங்கம் பாருங்கள்? 'ராம தூதுவர்' என்பதைப்போல கருணாநிதியின் தூதுவராக நெடுஞ்செழியனிடம் பக்தவத்சலம் போய் 'சமரசம்' பேசியும்கூட, அவர் கண்டிப்பாக மந்திரிசபையில் சேர மறுத்து விட்டாராம்! தூதுவரையும் அனுப்பி விட்டாராம்!

பாவம் மந்திரி வேலை போனபின்பு, மந்திரிக்குத் தூதுபோகும் வேலையாவது நமது பழைய முதல்வருக்கு கிடைத்ததே என்று அமைதி கொள்வோமாக!"

யார் வளர்த்து விட்டது யார் மீது பாய்கிறது? அவர்களுடைய பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன இவ்வளவும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையாவது விட்டார்களா ? அவர் அண்ணியார் அவர்களுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அதைப்பற்றி அவர்களுடைய பத்திரிகையில் எழுதுகிறார்கள், ". . . . இந்த நிலையில் அண்ணாதுரை, தனது குடும்பத்தாரை 'நிர்கதியாய்' விட்டுச் சென்று விட்டார் என்றோ, அந்தக் குடும்பம் ஜீவிக்க, சர்க்கார் 'மானியம்' தரவேண்டும் என்றோ சொல்வது 'அற்பத்தனமாகும்!" மானியம் தரவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். அவருக்குக் காங்கிரஸ் கட்சியினுடைய ஏடு அளிக்கின்ற மரியாதை 'அற்பத்தனமாகும்' என்பதாகும். (ஆரவாரம்). இது கை தட்டுவதற்காகச் சொல்வதல்ல உள்ளபடியே உள்ள உருக்கத்தோடு சொல்கிறேன். அவரைப்பற்றி அந்த வார்த்தைகள் வருகின்றன என்றால் நாளையதினம் காமராஜரைப்பற்றி வர எவ்வளவு நேரமாகும்? இப்படி எழுதுவது, பேசுவது, சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்படுவதற்கு எந்தவகையிலே பயன்படும் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் தயாராக இருக்கிறோம், எங்களுடைய கட்சியிலே உள்ள தலைவர்கள் தயாராக இருக்கிறார்கள், நீங்கள் முன் வரவேண்டும். அல்லது நீங்கள் முன்னின்று துணை புரிந்து நாம் அனைவரும் ஒன்று கூடி பேசுவோம், ஒரு நாகரீகமான அரசியலைத் தமிழகத்திலே நடத்துவதற்கு அதுதான் பயன்படும், ஒரு நல்ல பாதையை வகுத்துக் கொள்வோம் என்பதற்குத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறு எதற்கும் அல்ல.

இந்த சம்பவங்களுக்குப் பிறகு அரசின் சார்பாக ஒரு நீதிபதியினுடைய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கிடையிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தொழிலாளர்களுடைய தலைவர்களையும், நிலச்சுவாந்தார்களையும் அதிகாரிகளையும் அழைத்து முறைப்படி ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டிலே 4 படி என்று இருந்த இடத்திலே ½ படி கூட்டி, 4½ என்றும், 4½ படி என்று இருந்த இடத்திலே ½ படி கூட்டி, 5 படி என்றும், 5 படி என்று இருந்த இடத்தில் ¼ படி கூட்டி, 5¼ என்றும், 5½ என்று இருந்த இடத்தில் ¼ படி கூட்டி 5¾ என்றும் 6 படியில் ஒன்றும் மாற்றம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ¼ படி என்றும் சொல்லப்படுவதுகூட ஒரு கையால் அள்ளிப் போடுகின்ற அளவுதான். அதைக்கூட சில பேர் மறுத்து அதற்கு அரசியல் முலாம் பூசி அங்கே, தஞ்சை மாவட்டத்திலே



மறுபடியும் கிளர்ச்சிக்கு வித்திடத் தொடங்கினார்கள். நல்ல காலம், அவைகளெல்லாம் அமிழ்த்தப்பட்டு சாதாரண நிலையே இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே மாத்திரம் அல்லாமல் தமிழகம் முழுவதும் இந்த நல்ல நிலை உதாரணமாக விளங்கவேண்டும்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அனைவரும் ஒன்றுபட்ட சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டுமே அல்லாமல் வேறு அல்ல என்று கூறிக் கொண்டு, மற்றொன்றையும் கூற விரும்புகிறேன் கூட்டு சேர்ந்திருக்கிற கட்சிக்கு ஒரு சலுகை என்ற கெட்டபெயரை இந்த அரசு வாங்கக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார். தோழமைக் கட்சிகளுக்கு சலுகை என்பது மாத்திரமல்ல, சொந்தக் கட்சிக்கே கூட நிச்சயமாக தவறு செய்தால் அவர்களுக்கு சலுகை அளிக்கப் பட மாட்டாது என்பதையும் நான் உறுதியாக உங்களிடையே தெரிவித்துக்கொண்டு இந்தக் கண்டனத் தீர்மானம் ஏற்படுத்த வேண்டிய உணர்ச்சியை, ஒரு சமுதாய உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தால் அதை ஏன் கொண்டு வந்தோம் என்பதை திரு. கருத்திருமன் தெளிவாக விளக்கியதற்கு நன்றி கூறி இந்தக் கண்டனத் தீர்மானத்தை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதை திரு. ஜயராஜ் அவர்கள் திரும்ப பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நடார் :** சார், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே 44 பேர்கள் இறந்தவர்கள் என்று கூறுகிறார்கள். உண்மையாக அரசுத் தரப்பிலிருந்து அதற்கு ஏதாவது விவரம் இருந்தால், அதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ? 44-ஆ, 42-ஆ என்ற விவாதத்தைக் கூற வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த எண்ணிக்கையைப் பொறுத்து, இரண்டு எண்ணிக்கை, கொஞ்சம் தகராறாகத்தான் இருந்து வருகிறது. நீதி விசாரணைக்குப் பிறகு அது தெரியும்.

**திரு. பி. ஜயராஜ் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தின்மீது பல கட்சி உறுப்பினர்களும் எங்கள் கட்சித் தலைவர்களும் பேசி முதலமைச்சர் அவர்களும் பதில் அளித்தார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது சென்ற காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து, காங்கிரஸ் ஆட்சியிலே இன்னின்ன கொலைகள் நடக்கவில்லையா, சாகவில்லையா என்று எண்ணிக்கை கொடுத்தார்களே தவிர, இந்தச் சம்பவங்களுக்கு என்ன பரிகாரம் காண வேண்டுமென்பதைக் குறித்து அவர்கள் நல்ல முறையில் சொல்லவில்லை. மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் பேசுகிறபொழுது நிலப்பிரபுக்களின் சார்பாகக் கொண்டு

வரப்பட்ட தீர்மானம் இது என்றார்கள். அது எந்த அளவுக்கு பொறுப்பை தட்டிக் கழிக்கக்கூடியது என்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இறுதியாக அவர்களும் இந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. காங்கிரஸ் கட்சியிலும் விவசாயத் தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்கள், ஜீ. நாராயணசுவாமி நாயுடு போன்றவர்களும், மற்றவர்களும் இருக்கிறார்கள். திருவட்டாரத்தில் 1962-ல் நிலச்சுவான்தார்கள் நிலத்திலிருந்து குடியானவர்களை வெளியேற்றியபொழுது நாங்கள் திரும்பவும் பொஸெஷன் வாங்கிக் கொடுத்தோம். முதலாளித்துவத்தின் சார்பாக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுவது தேர்தலில் வோட்டு கிடைக்கவேண்டும், தேர்தலில் வோட்டுகளை இழந்துவிடக்கூடாது என்பதை நிதானப்படுத்திக்கொள்வதற்காகத் தான். மற்றபடி இதை முதலாளித்துவத்தின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்று சொல்ல முடியாது. ஆகவே, அவர்களும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாயவரம் தொகுதி அங்கத்தினர் நீலிக் கண்ணீர் விடுவதாகச் சொன்னார்கள். இது நீலிக்கண்ணீர் அல்ல. இது திட்டமிட்டு நடைபெற்ற சதி என்று சொன்னால். அரசாங்கம் உண்மையைக் கண்டுபிடித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? சிக்கலில் நடைபெற்ற சம்பவத்திற்குப் பிறகு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டது. எது எப்படியிருந்தாலும் 40-க்கு மேற்பட்ட அரிசனங்கள், தொழிலாளிகள் செத்திருக்கிறார்கள். தொழிலாளர் தலைவர்கள் இருக்கிறார்கள். அரிசனங்களுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய தி.மு.க. இருக்கிறது. மந்திரிகள் உள்பட எல்லோரும் இதற்கு ஆதரவு கொடுப்பார்கள் என்று நம்பி, நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** இப்பொழுது பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தத் தவறியதன் விளைவாக, 25—12—1968-ல் அம் மாவட்டத்தில் உள்ள கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டு எதும் அறியாத பெண்டிர், சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ்செயல் காரணமாக இப்பேரவை அமைச்சர் அவையின் கொள்கையைக் கண்டிப்பதோடு அதனை ஏற்கவும் மறுக்கிறது."

இந்தத் தீர்மானத்தை ஏற்போர் 'ஆம்' என்க; மறுப்போர் 'இல்லை' என்க. 'இல்லை' என்போர் அதிகம். . .

***திரு. பி. ஹி. கருத்திருமன் :*** டிவிஷன் வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.



எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்புக் கோரப்பட்டு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டபடி வாக்களித்தனர் :—

**ஆதரித்தவர்கள்.**

1. திரு. பி. ஜி. கருத்திருமன்.
2. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
3. திரு. கே. விநாயகம்.
4. திரு. எஸ். ராமலிங்கம்.
5. திரு. என். எஸ். வி. சித்தன்.
6. திரு. எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார்.
7. திரு. எ. பட்டாபி நாயுடு.
8. திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்.
9. திரு. ரா. ராமச்சந்திர துரை.
10. திரு. நா. காசிராமன்.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. திரு. கே. சகாதேவக் கண்டர்.
13. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்.
14. திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்.
15. திரு. நா. சௌந்தர பாண்டியன்.
16. திரு. பி. ஜயராஜ்.
17. திரு. வை. சுவாமிநாதன்.
18. திரு. பா. தம்பி நாயக்கர்.
19. திரு. ந. தீர்த்தகிரி.
20. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்.
21. திரு. டி. டி. எஸ். திப்பையா.
22. திரு. பெ. வெங்கடாசல தேவர்.
23. திரு. தா. விஜயராஜ்.
24. திரு. ரா. கனகசபை.
25. திரு. எம். வில்லியம்.
26. திரு. இல. பலராமன்.
27. திரு. என். துரைபாண்டியன்.
28. திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
29. திரு. வ. ஜார்ஜ்.
30. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
31. திரு. ஆர். கருப்பையா.
32. திரு. அ. மாரிமுத்து.
33. திரு. டி. மார்டின்.
34. திரு. க. முருகேசன்.
35. திரு. தோ. மு. நல்லசாமி.
36. திரு. சி. நஞ்சன்.

**எதிர்த்தவர்கள்.**

1. திரு. மு. அலங்காரம்.
2. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
3. திரு. சி. வி. எம். அண்ணாமலை.

4. திரு. வி. டி. அண்ணாமலை.
5. திரு. அ. பொ. அரசு.
6. திரு. அ. ஆறுமுகம்.
7. திரு. எஸ். ஆறுமுகம்.
8. திரு. ஆலடி அருணா.
9. திரு. கே. ஆண்டி என்ற குருசாமி.
10. திரு. எம். சி. பாலன்.
11. திரு. ஜெ. வெள்ளி கவுடர்.
12. திரு. மு. சின்னசாமி.
13. திரு. ந. தருமலிங்கம்.
14. திரு. சு. ம. துரைராஜ்.
15. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.
16. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
17. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.
18. மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து.
19. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
20. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
21. திரு. அ. ப. அழகமுத்து.
22. திரு. இராம. அரங்கண்ணல்.
23. திரு. கா. வேழவேந்தன்.
24. திரு. எஸ். முருகையன்.
25. திரு. முனு ஆதி.
26. திரு. பழனிவேல்ராஜன்.
27. திரு. கே. ஆர். கோவிந்தன்.
28. திரு. வி. எஸ். கோவிந்தராஜன்.
29. திரு. கே. கோவிந்தராசுலு.
30. திரு. ஆ. கோவிந்தராசன்.
31. திரு. டி. இராசரத்தினம்.
32. திரு. பி. ஜெயராமன்.
33. திரு. கலியமூர்த்தி என்ற ஏ. கே. மூர்த்தி.
34. திரு. ஆ. கருப்பையா.
35. திரு. தே. கேசவலு.
36. திரு. என். கிட்டப்பா.
37. திரு. கொளத்தூர் கோதண்டம்.
38. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி.
39. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
40. திரு. அ. கிருஷ்ணன்.
41. திரு. நா. கிருட்டிணன்.
42. திரு. சொ. கோவிந்தராசன்.
43. திரு. வெ. மலைச்சாமி.
44. திரு. வீ. மலைக்கண்ணன்.
45. திரு. பி. துரைராஜ்.
46. திரு. இரா. மாணிக்கவாசகம்.
47. திரு. பி. எல். மணியன்.



48. திரு. ரா. ரா. முனுசாமி.
49. திரு. ஏ. முனியாண்டி.
50. திரு. எல். கணேசன்.
51. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி.
52. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்.
53. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா.
54. மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்.
55. திரு. இரா. நெடுஞ்செழியன்.
56. திரு. என். ராஜாங்கம்.
57. திரு. மா. இராசாங்கம்.
58. திரு. மு. ச. சிவசாமி.
59. திரு. எஸ். இராமச்சந்திரன்.
60. திரு. எஸ். முத்துலிங்கம்.
61. திரு. பு. செ. முத்துச்செல்வன்.
62. திரு. என். நாச்சிமுத்து.
63. திரு. பா. நாகலிங்கம்.
64. திரு. ஆர். நாகசுந்தரம்.
65. திருமதி. சு. குப்பம்மாள்.
66. திருமதி. வி. ப. பழனியம்மாள்.
67. திரு. இரா. நாராயணன்.
68. திரு. ஜி. நடராஜன்.
69. திரு. ஈ. எம். நடராஜன்.
70. திரு. எஸ். பி. பச்சையப்பன்.
71. திரு. ஏ. சி. நரசிம்மன்.
72. திரு. எம். கோபால்.
73. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்.
74. திரு. பெ. பெரியசாமி.
75. திரு. புலவர் பொன்னம்பலம்.
76. திரு. தி. பொன்னுமலை.
77. திரு. ஏ. எம். இராஜா.
78. திரு. சு. துரைசாமி.
79. திரு. தி. ஏ. ராஜவேலு.
80. திரு. மு. ராமன்.
81. திரு. வ. க. இராமராசன்.
82. திரு. இ. ராமசாமி.
83. திரு. ஜே. எஸ். இராசு.
84. திரு. மு. இரத்தினசபாபதி.
85. திரு. என். சாமிநாதன்.
86. திரு. என். சங்கரய்யா.
87. திரு. ஆ. கு. சுப்பையா.
88. திரு. ம. பொ. சிவஞானம்.
89. திரு. வி. கே. கோதண்டராமன்.
90. திரு. கோ. பாரதிமோகன்.
91. திரு. கே. என். குமாரசாமி.

92. திரு. சோ. அழகர்சாமி.
93. திரு. எம். பூபதி.
94. திரு. பி. எஸ். தனுஷ்கோடி.
95. திரு. எம். சுரேந்திரன்.
96. திரு. எஸ். ஜே. ராமசாமி.
97. திரு. அ. ப. சண்முகசுந்தரம்.
98. திரு. சி. கோவிந்தராசன.
99. திரு. பி. வேலுசாமி.
100. திரு. சி. சேதுராமன்.
101. திரு. என். மருதாசலம்.
102. திரு. ஏ. அ. சுப்பராஜா.
103. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.
104. திரு. வி. எஸ். இளஞ்செழியன்.
105. திரு. தொ. க. சிறைமீட்டான்.
106. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
107. திரு. க. ந. சிவபெருமாள்.
108. திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்.
109. திரு. டி. தங்கப்பன்.
110. திரு. தி. சி. திம்மராய கவுண்டர்.
111. திரு. என். வரதராஜன்.
112. திரு. நா. வீராசாமி.
113. திரு. சி. வே. வேலப்பன்.
114. திரு. ஏ. வெள்ளத்துரை.
115. திரு. டி. எஸ். ஆதிமூலம்.
116. டாக்டர் எச். வி. ஹாண்டே.
117. திரு. எஸ். அழகுத்தேவர்.
118. திரு. கே. போஜன்.
119. திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்.
120. திரு. சா. மெய்யப்பன்.
121. திரு. மு. முத்தையா.
122. திரு. ஏ. ஆர். பெருமாள்.
123. திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்.
124. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
125. திரு. வி. தவமணி தேவர்.

ஆதரித்தவர்கள்—36.
எதிர்த்தவர்கள்—125.
நடுநிலைமை வகித்தவர்கள்—எவருமிலர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்மானத்தை ஏற்போர் 36 ; மறுப்போர் 125 ; நடுநிலைமை வகிப்பவர் எவரும் இல்லை. ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன, பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.



(இடைவேளைக்குப் பின் மாலை 4-00 மணி)

பேரவை மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் கூடியது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 3/1969).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1969) சட்டப் பேரவை நிறைவேற்றியபடி, சட்டமன்ற மேலவையில் திருத்தம் ஏதுமின்றி 25-2-1969-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டதென்று சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்துள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 6/1969).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 6/1969) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை நிறைவேற்றுவதற்கு முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நிதி ஒதுக்கல் மசோதா எந்தவிதமான விவாதமும் இல்லாமல் நிறைவேறுவது தான் வழக்கம். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா ஆகாமல் இருக்கின்றது. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் ஆசிரியர்-ஆசிரியைகளிடத்திலிருந்து நாள்தோறும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று குறைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. 'நாங்கள் கொடுக்க வேண்டிய மானியத்தையெல்லாம் கொடுத்தாகிவிட்டது. ஆசிரியர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்துதான் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். நாங்கள் எல்லா மானியங்களையும் கொடுத்துவிட்டோம்' என்று அமைச்சரவை தரப்பிலிருந்து

* 26-2-1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 பிப்ரவரி 28

பதில் கிடைக்கிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லையென்று சொல்கின்ற நேரத்தில், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குக் கொடுத்த மானியங்கள் எந்தெந்த வகைகளில் செலவானது? ஏன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை? கொடுத்த மானியங்களைச் சரியான முறையில் உபயோகப்படுத்துகிறார்களா? என்பவைகளையெல்லாம் அரசு விழிப்போடு இருந்து பார்க்க வேண்டும். மேலும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தை, அவர்கள் இஷ்டம்போல் பல வேலைகளுக்கு ஒதுக்கும் அதிகாரம் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்ற வேலைகளுக்கு அந்தப் பணத்தை ஒதுக்கிவிட்டு, ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யாமல் தள்ளிக் கொண்டே வருகிறார்கள். அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்து ஆசிரியர்கள் சரிவர சம்பளம் பெறுவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தியை ஒழித்துவிட்டோம் என்று சொல்லி, இன்றைக்கு நான்காயிரம் ஆசிரியர்கள் வேலையின்றி கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆனால் ஏராளமான பேர் இன்னும் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பல இடங்களில் வேலையில் ஏற்கெனவே இருப்பவர்களை நீக்கிவிட்டு, மாற்று வேலைத் திட்டத்தின் பெயரால் சிலருக்கு வேலை கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களை நீக்கிவிட்டால், அவர்களுக்கு வேலை கிடைக்க என்ன செய்வது? ஆகவே, இன்றைக்கு இருக்கும் படியான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், கொடுக்கப்படும் மானியம் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஆகவே, எப்படிப் பார்த்தாலும் சர்க்காருடைய நிர்வாகத்திலே எங்கோ ஓரிடத்தில் கோளாறு இருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது. சரியான முறையில் ஒதுக்கப்பட்ட இனங்களுக்கு பணத்தைச் செலவழிக்காத பஞ்சாயத்து ஒன்றியங்கள்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நிதி ஒதுக்கல் மசோதா நிறைவேறத்தான் போகிறது. அது நிற்கப் போவதில்லை. ஏதோ இருக்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டினால், திருத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE**: Sir, with regard to the Appropriation Bill, I wish to offer a few remarks. Now the administrative set up has become a thing of great irritation to a large number of technologists, to number of persons who are in different professions. For instance this morning, we had a problem. In my own constituency in Vepery, there has been a strike this morning by the



1969 பிப்ரவரி 28]

students of Veterinary College. Their argument is that the Director of Animal Husbandry should not be an I.A.S. officer but that he should belong to the category of persons who are trained as products of the Veterinary College. In other words those who have passed from the College as Veterinary physicians and surgeons, persons from that group, must be posted as Director. The argument of the students is, that otherwise, their promotion prospects is blocked. That is No. 1.

The second argument is that it creates a tremendous dis-incentive for a large number of veterinary students who want to go higher up. The same thing happened some times ago in the Milk Department. The Milk Commissioner was drawn from the ranks of I.A.S. There are a large number job opportunities in the Milk Department. There is the Assistant Commissioner of Milk. They can definitely come from the Veterinary Surgeons' class. If that is done, veterinary students will have a feeling that after a few years, they will get promotion, that they will be absorbed in the service. That is one thing.

In the Medical and Public Health Service also, if we are to adopt the same policy, if the Director of Medical Service is, say, an I.A.S. officer, then it will have a demoralising effect on the medical students. Their opportunity for promotion is completely shut out. Medical students will feel that there is no future at all for them.

It is from this standpoint, the strike has taken place to-day in Veterinary College. This House may be aware that I have never supported unreasonable practices. I have never supported any motion with regard to strikes at all, since I have a general sentiment that students should not be made tools for purposes of political exploitation. I am definitely against it and my Party also is against it. Now that the Appropriation Bill has come and I have raised the subject. I request the Minister for Finance to have a talk with the Minister for Food and Agriculture and try to see what could be done. I am very particular that no politics should be brought into this particular incident. Even now the Hon. Minister can get a few students and find out what exactly should be done. If such a thing is done, I shall be extremely grateful.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் காலையில் இருந்தே இதுபற்றி இந்தச் சபையில் சொல்வதற்கு முயற்சி எடுத்து இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது விஷயத்தில் அரசாங்கம் ஒரு முடிந்த முடிவுக்கு வருவதற்கு முன்னாலேயே மாணவர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கக்கூடிய வகையில் காலேஜுக்குப் போகாமல் நின்றது உண்மையில் வருந்தக்கூடிய செய்தியாகும்.

மாணவர்கள் என்னையும் வந்து சந்தித்தார்கள். அவர்களுக்கு எல்லா விவரங்களையும் எடுத்துச் சொன்ன பிறகு 'நாங்கள் முடிவு எடுத்துவிட்டோம். எடுத்த முடிவுப்படியே நடப்போம்' என்று

சொன்னார்கள். இருந்தும் நான் சொன்ன விளக்கத்தை எல்லாம் மற்ற மாணவர்களுக்கும் எடுத்துச் சொல்வதாகவும், வேலை நிறுத்தம் செய்யாமல் பார்த்துக்கொள்ள முயற்சிப்பதாகவும் சொல்லி விட்டுச் சென்றார்கள். என்ன காரணத்தினாலோ, யாருடைய தூண்டுதலினாலோ வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கால்நடைத் துறையில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு நல்ல முறையில் காரியங்களைச் செய்யலாமா என்கிற கருத்து ஒன்று இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் அது முடிந்த முடிவாகவும் இல்லை. அத்துறையில் உள்ளவர்களும் தங்களுடைய ஆட்சேபனையை இதற்குத் தெரிவிப்பதற்கு சென்னையில் இருப்பவர்களும், செங்கல்பட்டில் இருந்தும் கூட வந்து என்னிடம் பெட்டிஷன் கொடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இது விஷயத்தில்—நிர்வாக விஷயத்தில் மாணவர்கள் தலையிடுகிற சூழ்நிலை வந்திருப்பது வருந்தத் தக்கது.

நேற்றையதினம் கூட டீன் மூலமாக—இக்கருத்தில் அரசாங்கம் இன்னும் யாதொரு முடிவுக்கும் வரவில்லை—அவசரப்பட்டு மாணவர்கள் வேலை நிறுத்தம் போன்ற எந்த முடிவுக்கும் வரவேண்டாம் என்று சொல்லச் சொல்லி இருந்தேன். அவரும் சொல்லியிருப்பார். அவரது முயற்சியும் பலன் அளிக்காது போகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாணவர்கள் கல்லூரிகளைவிட்டு வெளியே வந்து, பத்து இருபது வருஷங்களுக்குள் இந்தப் பதவிக்கு வரப் போவதில்லை. ஆகவே அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்க வேண்டியதில்லை. இதை திரு. ஹாண்டே அவர்களும் ஒத்துக் கொள்வார்கள். ஆயினும் இது அவர்களது தொகுதியைச் சேர்ந்த பிரச்சினை ஆதலால்—மாணவர்கள் நிலையைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருவது அவர் கடமை. அவருடைய கருத்து இதில் நிறைவேறி விட்டது என்று அவர் திருப்தி கொள்ளலாம்.

ஆயினும் மாணவர்களுக்குத் தீங்கு இழைக்க வேண்டும் என்ற நிலை சர்க்காருக்கு இல்லை; அவ்விலாக்கா அதிகாரிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற நோக்கமும் இல்லை. இது நிர்வாகத் துறையைப் பொறுத்தது. இதுபற்றி அரசாங்கம் இன்னும் முடிந்த முடிவுக்கு வரவில்லை. ஆகவே, மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம். இதை திரு. ஹாண்டே அவர்களும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறி, மேலும் கிளர்ச்சியில் ஈடுபடாதிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் சில கருத்துக்களைச் சொன்னார்கள்.



எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதி ஒதுக்கீடு மசோதா பற்றிய விவாதத்தில் மட்டும் அல்ல, இதற்கு முன்பும் திருநெல்வேலி மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற நிலைமையை எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அதுபற்றி நாளைய தினம் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வர இருக்கிறது. அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலை அளிப்பார்கள். அது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அதற்கான தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தி பண்டிதர்கள் வேலை நிலைமைபற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் குறைகளை எல்லாம் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப அரசாங்கம் நிவர்த்தி செய்யத் தயாராய் இருக்கிறது என்பதை நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஸ்ட்ரைக் பற்றி திரு. ஹாண்டே அவர்கள் கூறினார்கள். அதற்கு உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறார்கள். நிர்வாக சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்கம் முடிவு செய்யட்டும் என்று மாணவர்கள் விலகி இருக்க வேண்டும். இவற்றையும் கூட மாணவர்கள் சம்பந்தமான பிரச்சினையாக அவர்கள் கொண்டு முன் வருவது வேளாண்மைத்துறை அமைச்சர் குறிப்பிட்டதுபோல ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையாகும். இது ஜனநாயகத்திற்கே பெரிய ஊறு விளைவிக்கக்கூடும். மாணவர்கள் அவர்களுடைய நியாயமான உரிமைகளுக்குப் போராட வேண்டும். மாணவர்களுக்கு அரசியல் தெரிய வேண்டும். அவர்களிடத்து நியாயமானவற்றுக்குப் போர்க் குணம் வர வேண்டும் என்பதில் நான் அழுத்தமான நம்பிக்கை உள்ளவன். ஆனால் அவர்கள் வேறு சிலருடைய உணர்வுகளினால் இழுத்துச் செல்லக்கூடியவர்களாக, பிறர் ஆட்டி வைக்கின்ற சதுரக்காய்களாக ஆகிவிடக் கூடாது என்பதில் அரசாங்கத்திற்கு மெத்த கவனம் உண்டு. அவர்களது உணர்வு தூண்டுவது நியாயமாக இருந்தாலும் கூட, அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்றாலும் கூட, அதைச் சொல்கின்ற முறை இருக்கிறது. அவர்களை அந்த நிலைக்குப் பிறர் தூண்டிவிடுகிறார்கள் என்றாலும் அதுவும் சரியல்ல.

இதுசம்பந்தமாக நானும் உணவு அமைச்சரோடு கலந்து பேசினேன். ஐ.ஏ.எஸ் அதிகாரியை நியமிக்க வேண்டும் என்பது ஒரு கருத்து. அவர்கள் வந்துவிட்டால் மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது ? இப்போது இருப்பதையே முழுமையாக ஆக்க முடியாதா என்பது ஒரு கருத்து. இதில் எவ்வித முடிவும் எடுக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டே முடிவு எடுக்க இருக்கிறது. ஆகவே இதுபற்றி யாரும் இப்போது கவலைப்படத் தேவையில்லை. திரு. ஹாண்டே அவர்களும் மாண

வர்கள் இடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். நிச்சயமாக மாண வர்களுடைய உரிமைகளுக்கு குந்தகம் வந்துவிடாது என்று சொல்லலாம்.

கடைசியாக இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை எல்லோரும் ஆதரித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதை ஒரு மனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன் உள்ள கேள்வி "தமிழ்நாடு" 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்."

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/69) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

**(ஆ) தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/69).**

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 7/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என முன் மொழிகிறேன்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்** : சார், இந்த மசோதாவின் மீது ஒன்று இரண்டு கருத்துக்கள் நிர்வாகத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக கன்னியாகுமரி ஜில்லாவிலே பட்டதாரி ஆசிரியர் களுக்கு டெஸ்ட் குவாலிஃபிகேஷன் வேண்டுமென்ற ஒரு விதி எஜுகேஷன் டிபார்ட்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்டது. அதை ஆட்சேபித்து திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள் உயர்நீதி மன்றத்திற்கு பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்தார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆசிரியர்களுக்குச் சாதக மாக வழங்கப்பெற்றது. ஆனால் நீண்ட நெடுங்காலமாக இந்தப் பிரச்சினையில் இலாகாத் தரப்பில் எந்தவிதமான நடவடிக்கையும்

*26-2-1969 -ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



எடுக்கப்பட்டு உத்தியோக உயர்வோ, தரமோ நிர்ணயிக்கப் படாமல், ஒரு நெபுலஸ் ஸ்டேட் என்று சொல்லக் கூடிய நிலை மையில் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. நிர்வாகத் துறை யிலே இதுமாதிரியான சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் ஆசிரியப் பெருமக்களுக்கு இருக்கிற இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். ரயத்வாரி முறையில் கன்னியாகுமரி முறையிலே செட்டில்மெண்ட் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலைக்காக வெளி மாவட்டங்களிலேயிருந்து உத்தியோகஸ்தர் களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். ஆனால் அங்கேயே ரெவின்யூ இலாகாவிலே பல ஆண்டுகளாக அனுபவம் பெற்றவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள், டெஸ்ட் குவாலிஃபிகேஷன் உள்ள பலரும் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே எல்லாப் பிராந்தியப் பிரச்சி னைகளைப்பற்றியும் அவர்களுக்குத் தெரியும். அவர்களை அந்த வேலையில் ஈடுபடுத்தாமல் வெளி மாவட்டங்களிலிருந்து உத்தி யோகஸ்தர்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது நியாயம் இல்லை என்று நான் சொல்லவில்லை. அங்கேயுள்ளவர்களுக்கு டிஸ்ட்ரிக்ட் அடிப்படையிலேதான் அவர்களுடைய சீனியாரிடி, நிர்ணயிக்கப்படுகிறது. அப்படி வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு வருவதால் அவர்களுடைய சீனியாரிடி, உத்தியோக உயர்வு எல்லாம் பாதிக்கப்படுகிறது என்ற ஆட்சேபனையை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். துரிதமாக அந்த வேலை நடைபெற வேண்டுமானால் அங்கேயுள்ளவர்களையே பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயம். காதி இலாகாவில் பீ ஃபீல்டு மென் பல ஆண்டுக்காலமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பூரண உத்தியோகஸ்தர்கள் என்று இந்த அரசாங்கம் கருதாத காரணத்தால் அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்காததன் காரண மாக 10, 12 வருடமாக வேலைபார்த்தவர்கள் இன்று நீக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சர்களைச் சந்தித்து மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஹ்யூமென் ஆஸ்பெக்ட் என்ற முறையி லாவது அவர்களுடைய குறையைப்பற்றிப் பரிசீலனை செய்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டுமென்றும் அதற்காக உடனடியாக உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் டிரான்ஸ்போர்ட் துறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. முன்பு டி. பி. எஸ். இருந்தார்கள். அவர்கள் இருந்து மட்டும் எல்லா நிர்வாகங்களையும் கவனிக்க முடியவில்லை, அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கன்னியாகுமரி ஜில்லாவிலே டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் நஷ்டத்தில் ஓடுகிறது என்று சென்ற பட்ஜெட் டிலே நான் குறிப்பிட்டேன். தகுதிவாய்ந்த கண்டக்டர்களை செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக உத்தியோக உயர்வு கொடுத்து

நியமிக்க வேண்டும். அந்தப் பிரிவை மூன்று பிரிவுகளாகப் பிரித்து குழித்துறை, இராணித் தோட்டம், நாகர்கோவில் என்ற மூன்று டெப்போக்களாகப் பிரித்தால்தான் நல்ல முறையிலே நிர்வாக வேலைகள் நடைபெறும். காலாகாலத்திலே பஸ்களைப் பழுதுபார்த்து அனுப்பமுடியும். முன்னாள் முதலமைச்சர் இறந்த அன்றும் அதற்கு அடுத்த நாளிலேயும் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் ஓடவில்லை, அதனால் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று நிறுத்திவிட்டால் மாணவர்கள் மிகவும் அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. வேறு பஸ் வசதி அந்த மாவட்டத்திலே இல்லாத காரணத்தினால் ஏதாவது சிறு தகராறு ஏற்பட்டால்கூட ஸ்ட்ரைக் என்று சொல்லி விடுவதால் அவர்களுக்கு அதிகமாகப் பாதகம் ஏற்படுகிறது. எனவே அந்த டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுடைய குறையைப் போக்குவதற்கு முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் பொதுஜனப் போக்குவரத்து நல்ல முறையில் இயங்கும்.

அரசாங்க இயந்திரமானது விறுவிறுப்பாக வேலை செய்ய வேண்டும். எம். எல். ஏ. அல்லது பொதுஜனப் பிரதிநிதி ஆகியவர்கள் அனுப்புகிற கடிதங்களுக்குத் துரிதமாக பதில் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்படிச் செய்வது தான் இந்த அரசாங்கத்திற்கு நற்பெயர் வாங்கித்தரும் என்பதைச் சுட்டிக்காட்டி என்னுடைய கருத்துக்களையொட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவின்மீது பேசும்பொழுது உடனடியாக சில பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பஸ்களில் திருச்சியிலிருந்து சென்னைக்குச் செல்கின்ற வேளையில் டிரைவர்கள், கண்டக்டர்கள் இடையிலே விழுப்புரத்திலே தங்குவதற்கும், தங்கி ஓய்வு பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். அதுபோன்ற மற்ற இடங்களிலுள்ள கண்டக்டர்கள், டிரைவர்கள் இவர்களுக்கும் அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையிலே பணிபுரிகின்ற புல் அட்டெண்டர்கள், அதாவது காளைப் பணியாளர்கள், தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக தற்காலிக ஊழியர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கூடுமானவரையில் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடாமல் அந்த அந்தத் துறைகளில் அவ்வப்பொழுது வேலை வாய்ப்புகள் வரும்பொழுது அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுறவுத் துறை கணக்குகளைச் சரிவர சம்பந்தப்பட்டவர்கள் காட்டாததால் அவற்றைத் தனிப்பட்ட ஆய்வாளர்கள் அதைத் கவனிப்





பதற்கு நியமிக்கலாமா என்பதுபற்றி யோசனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்டவரை, இலாகாவைச் சேர்ந்தவர்களே அவற்றைத் தணிக்கை செய்ய வேண்டுமேதவிர, தனிப்பட்டவர்களைக் கொண்டு பரிசீலனை செய்வது உகந்ததாக இருக்காது என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே; உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறை தணிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். தனியார் துறைகளிலே சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் மூலமாக தணிக்கை செய்கிறார்கள் என்று குறிப்பிட்டு, கூட்டுறவுத் துறையிலும் அப்படிச் செய்யலாமா என்று யோசிக்கலாம் என்று சொன்னேன். ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பது, வாங்குவது முதலியன நடந்தால், அந்தக் கணக்கை இலாக்காவினர் தணிக்கை செய்வதற்கு 1,200 ரூபாய் செலவாகிறது. அதையே தனிப்பட்ட சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் மூலமாகச் செய்தால் 100 ரூபாயில் செய்ய முடியும். எனவே, 100 ரூபாய்க்குச் செய்ய வேண்டிய வேலையை 1,200 ரூபாய்க்குச் செய்கிறார்கள், இதனால் ஏறத்தாழ 10 மடங்கு சங்கத்துக்குச் செலவு அதிகமாகிறது. இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்ய முடியுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருப்பதாகத்தான் நான் தெரிவித்தேன்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசும்பொழுது ஆசிரியர்கள் நிலைமை பற்றியும், வருவாய்த் துறையிலே ரயத்வாரித் துறைக்கு மாற்றப்படுவது சம்பந்தமாகவும், மற்றும் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட்பற்றி, குறிப்பாக கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிற நிலைமைகளைப்பற்றியும், காதி இலாகாவைப்பற்றியும் சொன்னார்கள். இவையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு சாத்தியக்கூறான காரியங்களைச் செய்வதற்கு முயற்சிக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. ரெவின்யூ இலாகாவிலே கன்னியாகுமரி ஜில்லாவிலே திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். அதைவிட்டு விட்டு, வெளியிலே இருந்து குடியேற்றம்போல செய்கிறீர்களே என்ற தொனி வருவதுபோல் சொன்னார்கள். அது சரியானதல்ல, அந்தக் கொள்கையும்கூட சரியானதல்ல. மு.ப. 4-30

அந்த மாவட்டத்திலே உள்ளவர்களைத்தான் போட வேண்டுமென்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமானதாக இராது. அவர்கள் ஏற்கனவே பெற்றிருக்கின்ற பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது சரியானதாக இருக்கும். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைத்தான் ஆங்காங்கு போட வேண்டுமென்று சொன்னால்

பொதுவாக எந்த விதி முறைகளும் சரியாக நடைபெற முடியாது. அந்த மாவட்டத்திலே இருக்கிற நியாயமான உரிமைகள், வாய்ப்புகள் எல்லாம் அவர்களுக்குப் புறக்கணிக்கப்படக் கூடாது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு திருவிதாங்கூர் தமிழகம், இன்னொரு தமிழகம் என்ற வகையிலே பிரித்துப் பார்க்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்பட மாட்டாது, காட்ட வேண்டிய அவசியமும் இல்லை. வருவாய்த்துறையின் பொறுப்பையும் ஏற்றிருக்கிறவன் என்ற முறையில் அவர்கள் சொன்ன நியாயமான காரணங்களுக்கு உரிய வாய்ப்புகள் நிச்சயம் அளிக்கப்படும். மற்ற விவரங்களைப்பற்றி வாய்ப்புகள் நிச்சயம் அளிக்கப்படும். மற்ற விவரங்களைப்பற்றி யோசனை சொல்லக்கூடிய முறையிலே சொன்னார்கள். கண்டிப்பாக அவர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் மனதில் கொண்டு, நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன் வரும் என்று கூறிக் கொண்டு, இந்த மசோதாவிற்கு நீங்கள் எல்லாம் காட்டிய பேராதரவிற்கு நன்றி தெரிவித்து, இதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன் உள்ள கேள்வி —"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, மூன்றாம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/69) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/69.**

* The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, I beg to mov that the Madras General Sales Tax (Amendment) Bill, @ 1969 (L.A. Bill No. 1 of 1969) be taken into consideration.



Under item 30 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959), precious stones, namely diamonds, emeralds, rubies, real pearls and sapphires, whether they are sold loose or as forming part of any article in which they are set were liable to a single point tax of four per cent at the point of first sale in the State. The Government decided to increase the rate of tax to seven per cent. The increase is expected to fetch an approximate additional revenue of Rs. 1,20,174 per annum to the Government. The decision has been given effect to by issuing a notification under sub-section (1) of section 59 of the Act amending item 30 of the First Schedule to the Act. The amendment has come into force on the 11th December 1968.

Pure silk fabrics were liable to multi-point sales tax under the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959) till the 1st March 1961. They were exempted from sales tax with effect from the 1st March 1961 consequent on the levy of additional excise duty on silk fabrics by the Union Government. The Union Government subsequently withdrew the additional excise duty. But "silk fabrics as defined in item 20 of the First Schedule to the Central Excises and Salt Act, 1944 (Central Act I of 1944)" had been included as one of the items of declared goods under section 14 of the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) Therefore "silk fabrics as defined in section 20 of the Central Excises and Salt Act, 1944 (Central Act I of 1944) was included as item No. 8 in the Second Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) and subject to a single point tax of three per cent at the point of first sale in the State with effect from the 1st July 1966. The item relating to silk fabrics in section 14 of the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1966) was omitted by an amendment made by the Finance Act, 1968 (Central Act 19 of 1968). Consequently silk fabrics have ceased to be declared goods. The Government have therefore issued a notification under sub-section (1) of section 59 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) omitting item 8 of the Second Schedule to the Act thereby making silk fabrics liable to multi-point tax of three per cent under the Act. The amendment has come into force on the 18th December 1968. Silk fabrics made on handlooms remain exempted from sales tax under item 7 of the Third Schedule to the Act. The changeover to the multi-point tax on silk fabrics therefore applies to silk fabrics made in mills and powerlooms. The additional revenue anticipated on account of the changeover is Rs. 51,600 per annum.

Under sub-section (2) of section 59 of the Act, a Bill to replace the notification has to be introduced during the present session of the Legislature. The Bill now before the House accordingly contains necessary provisions in this regard. Sir, I commend the motion for the acceptance of the House.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்.** சார், பொதுவாக, இந்த மசோதாவில் காணுகின்ற கொள்கைகளைப் பற்றி ஓரிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நான்கு சதவிகிதமாக இருந்த வரியை 7 சத விகிதமாக மாற்றுவதற்காக இதில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. பிரஷஸ் ஸ்டோன்ஸ் போன்ற வகைகளுக்காக இந்த வரி கூட்டப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டு டிசம்பர் 11-ம் தேதியில் இருந்து நோடிபிகேஷன் மூலம் அமலாகி யிருக்கிறது என்பதையும், ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சில் சொல்லியிருக்கிறார்கள். நான்கு சதவிகிதத்தை ஏழு சதவிதமாகக் கூட்டுவதிலே அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருவாய் சுமார் ஒரு லட்சம் அளவுக்குத்தான் இருக்கிறது. பிரஷியஸ் ஸ்டோன்ஸ் செல்வந்தர்கள் வாங்குவது என்றாலும் வருவாய் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்த வரி உயர்வு வேண்டுமா என்பதைப் பற்றி ஆலோசிப்பது பொருத்த முடையதாக இருக்கும். குறிப்பாக, இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சியாக இருந்தபோது வரியைக் குறைத்து, வசதியைப் பெருக்குவோம் என்று கூறி அதிகாரத் திற்கு வந்தவர்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். அப்படியிருக்க, அவர்கள் இந்த மாதிரி வரியை ஏற்றுவது நியாயந்தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சில்க் ஃபாப்ரிக்ஸ் பற்றி விசேஷமாகக் கூறுவதற்கில்லை. அந்தத் தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டியது நம்முடைய அரசாங்கத்தின் கடமை என்பதை நன்றாக உணருகிறேன். அதைப் பற்றி எந்தவிதமான ஆட்சே பணையும் சொல்லவில்லை. கருத்தளவில் ஒருவேளை பிரஷஸ் ஸ்டோன்சுக்கு வரி உயர்வு நியாயம் என்று சொன்னாலும், இந்த உயர்வு அவ்வளவு வருவாயை ஈட்டித் தராத காரணத்தால் வற்புறுத்த வேண்டிய தேவையில்லை என்றுமட்டும் சொல்லி அமர் கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, விலை உயர்ந்த கற்கள் மீதான விற்பனை வரி உயர்வு அவசரச் சட்டம் மூலமாக விதிக்கப்பட்டிருக்கிறது. 11-12-1968-ல் அவசரச் சட்டத்தின் மூலம் வரி விதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இனத்தின் மூலம் அரசு எதிர்பார்க்கக்கூடிய வருவாய் ரூ. 1,20,174. அந்தத் துறையினருக்கும் சரி, அமைச்சர் அவர்களுக்கும் சரி, இந்தச் சட்ட மன்றம் அவர்கள் வரி விதித்த அந்தக் காலத்தில் இருந்து 1½ மாதத்திற்குள்ளாகக் கூட இருக்கிறது என்று மிக நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மசோதாவின் மேல் பேசுங்கள். முறையைப் பற்றிப் பேசாதீர்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் மசோதாவை இன்ட்ரொட்யூஸ் பண்ணும் நேரத் திலேயே கேட்டிருக்க வேண்டும். தாங்கள் பேசுகின்ற கருத்து ஒழுங்குப் பிரச்சனை என்பதின் கீழ்தான் வரும்.



THIRU K. RAMAMOORTHY : I am not on a point of order. I am speaking on the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே, மெரிட்ஸ் அண்டு டிமெரிட்ஸ் பற்றிப் பேச வேண்டுமே தவிர, இவ்வளவு நாளில் சட்ட மன்றம்கூட இருக்கும்போது அப்போது கொண்டு வந்திருக்கலாமே என்று பேசுவது சரியல்ல. அவ்வாறு பேசுவது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ்தான் வரும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆகவே இதுபோன்று விற்பனை வரி உயர்வுசட்டம் கொண்டுவருவது பற்றி, முன்பே ஒரு முறை சென்ற வருடம் இதே முறையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது கூறப்பட்டிருக்கிறது அப்போதும் இந்தப் பிரச்சினை கிளம்பியது. விற்பனை வரி பற்றி மட்டுமல்ல. இதுபோன்ற சட்டங்கள் வரும் போது சட்டமன்றத்தை தன் நம்பிக்கைக்கு பாத்திரமாக எடுத்துக் கொண்டு, இந்தச் சட்டசபையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்த விற்பனை வரி உயர்வைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வருடமும் ஏழெட்டு முறைகளாவது உயர்த்தப்படுகிற நிலைமை இருக்கிறது. இந்த விற்பனை வரி உயர்வு ஒவ்வொரு நேரத்திலும் கொஞ்சம், கொஞ்ச மாக உயர்த்தப்படுவது பொது மக்களின் மீதும், வாங்குபவர்கள் மீதும் அதிகமான பளு விழுகிறது. அந்தப் பளுவை திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கொஞ்சம் கொஞ்சமாக ஒட்டகத்தின் மீது சுமை ஏற்றுவது போல் ஏற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த நிலையை இனியாவது தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வரி உயர்வை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. கே, ஏ. மதியழகன் :** மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவிற்கு பொதுவாக இந்த மன்றத்தில் பெரிய ஆதரவு இருக்கிறது என்பதுதான் இதற்குப் பொருள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் இதில் கலந்து கொண்டதற்காக அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம் என்ன வென்றால், எங்கே, யாரும் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டு, இதற்கு ஆதரவு இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் போய் விடுமோ என்ற நிலை ஏற்படாமல் அவர்கள் கலந்து கொண்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் என்ற முறையில் அந்தப் பாத்திரத்தைத் தாங்கி அதற் கேற்றபடி காரியங்கள் செய்வது இயற்கையே. ஒரு மசோதா வந்தால் அதை எதிர்ப்பது என்பது எதிர்க்கட்சியின் முதல் இலக்கணம். அந்த அளவுகோலை வைத்து அவர்கள் பிரசங்கத்தைத் துவக்கி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. ராமமூர்த்தி அவர்கள் பின்னால் நிகழ்த்திய பிரசங்கத்திற்கு அவர்களே பதில் அளித்துள்ளார்கள்.

இதில் ஒன்றிரண்டு கருத்துக்கள்தான் சொல்லப்பட்டன, பெரிய விவாதம் நடைபெறவில்லை என்பதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். வைரம், வைடூரியம், மாகதம், முத்துக்கள் போன்ற விலை உயர்ந்த பொருள்களுக்குத்தான் இந்த வரி போடப் படுகிறது. இது ஒரு சிறிய வரி, பணம் கூட அதிகம் இல்லை. 1,20,000 ரூபாய்கள்தான் வருகிறது. சீமான்களாக இருக்கிறவர்கள், வசதியானவர்கள், மேட்டுக்குடியினர்தான் இதைச் செலுத்துகிறார்கள். ஜனநாயக சோஷலிஸ சமதர்மம் பேசுகிற காங்கிரஸ் கட்சி வைரம் போன்றவற்றிற்கு வரி போடுவதில் ஆட்சேபனை செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று தெரியவில்லை. இதனால் எங்கே அதிகப் பணம் வந்து விடுகிறது என்று கேட்டார்கள். அதையே நானும் கேட்கிறேன். அதிகப் பணம் வராததை ஏன் நீங்கள் எதிர்க்க வேண்டுமென்று கேட்கிறேன். இவையெல்லாம் முற்போக்கான அம்சங்கள். ஆடம்பரப் பொருள்கள் மீது வரி போடுவதை அவர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். இருந்தாலும் எதிர்க்கவில்லை. பட்டுத் துணி மீது மிகப் பெரிய அளவில் பணம் வந்துவிடப் போவதில்லை. கூட்டிக் கழித்தால் ரூ. 51,000 தான் வருகிறது. கைத்தறிப் பட்டுக்கு வரி இல்லை என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறோம். அதையும் இந்த மன்றம் வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை. இதில் பங்கு கொள்ளவேண்டுமென்று திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள். இது அவசரச் சட்டம் போல் அல்ல. இது ஒரு பெரிய மசோதா அல்ல இவை நோட்டிபை செய்து செய்கிற சில்லறை காரியம்தான். ஒரு லட்சம் ரூபாய் வரிபோட இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து மன்றத்தைக் கூட்டி, மசோதா கொண்டு வந்து சட்டமாக்குவது என்பது அவ்வளவு சரியல்ல.

இது சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, நோட்டிபை செய்யப்பட்டு மன்றம் கூடும்போது அங்கீகாரத்திற்கு வருகிறது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி வைத்திருக்கிறோம், எஸ்டிமேட்ஸ் கமிட்டி வைத்திருக்கிறோம், செலக்ட் கமிட்டீஸ் வைத்திருக்கிறோம். செலக்ட் கமிட்டியில் ஏன் பத்து பேர்கள் மட்டும் கூடிச் செய்கிறார்கள் என்றால் அப்படிச் சொல்வது ஜனநாயக முறையாகாது. தாங்குகிறவர்கள் மீது தான் வரி போடுகிறோம் என்ற நிலையை ஏற்றிருக்கிறோம். அரசுக்கு வருவாய் தேவை, சமூக நலன் குறித்த காரியங்களைச் செய்வதற்கு பொது நிதி திரட்டவேண்டும் என்று கருதுகிற நேரத்தில் அந்த வரியை எப்படிப் போடுவது, யார் மீது போடுவது, எந்த நேரத்தில் போடுவது என்பதில்தான் அபிப்பிராயபேதமே தவிர வரி போடுவதில் அபிப்பிராய பேதம் இருக்காது என்று கூறிக்கொண்டு, ஒரு ஆண்டுக்கு 1½ லட்சம் ரூபாய் வருகிற சின்ன விவகாரம் இது என்றும் கூறி, இதற்கு இந்த மன்றம் அளித்த பேராதரவிற்கு நன்றி தெரிவித்து, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன் உள்ள கேள்வி "'தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/69) வை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, முதல் பிரிவு முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டப் பேரவை மசோதா எண் 1/69) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

**(ஈ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த மசோதா (ச. பே. மசோதா எண் 2/69).**

* THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill † 1969 (L.A. Bill No. 2 of 1969) be taken into consideration"

Under rule 6 of the Madras General Sales Tax Rules, 1959, as amended with effect from 1st April 1966, excise duty is not one of the items to be deducted for arriving at the taxable turnover. But till the 31st March 1966, the excise duty was one of the items to be deducted from the turnover both under the Madras General Sales Tax Act, 1939, and under the Madras General Sales Tax Act, 1959. In Pothan Joseph's case, the Supreme Court has held that if excise duty was deductible under the local sales tax law for the purposes of taxable turnover, then such excise duty should stand deducted even for the purposes of the Central Sales Tax. In view of the aforesaid decision of the Supreme Court excise duty will have to be deducted for purposes of the Central Sales Tax also. However, this Government had been levying and collecting tax by inclusion of excise duty in the taxable turnover under the Central Sales Tax Act, 1956 from its inception. In the light of the Supreme Court's decision, the State Government may have to refund Central Sales Tax, to the tune of Rs. 1.55 crores as the Madras High Court has allowed certain petitions and as many dealers have already applied for refund of the tax paid on the excise duty part of the turnover under the Central Sales Tax Act, 1956. The Government, therefore, considered that specific provision should be made to the

effect that the net turnover under the Madras Act IX of 1939 and the taxable turnover under Madras Act 1 of 1959 would include excise duty and to validate the levy and collection of tax already made. Accordingly, the Madras General Sales Tax (Fifth Amendment) Ordinance, 1968 was promulgated by the Governor on the 31st December 1968. The present Bill before the House seeks to replace the Ordinance by an Act of the Legislature.

Sir, I commend the motion for the acceptance of the House.

***திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, இந்த 'சேல்ஸ் டாக்ஸை' கொஞ்சம் விட்டால் பரவாயில்லை என்று மந்திரியவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சாமானுக்கு விற்பனை வரி போடுகிறார்கள். ஆனால் இது வரிக்குப் போடும் வரியாக இருக்கிறது. வைரம், வைடூரியத்திற்குத்தான், "பணக்காரர்களுக்குத்தான் போடப்படுகிறது என்றால், இதனால் எலெக்ட்ரிக் மோட்டார், வாங்கும் சிறு தொழிற்சாலை வைத்திருப்பவர்களும் சிறு குடியானவர்களும் வாங்கும் குறைந்த எச்.பி. மோட்டார்களுக்கும் 100 ரூபாய், 200 ரூபாய் என்று எக்ஸைஸ் ட்யூட்டி போடப்படுகிறது. இந்த வரிமேல் அல்லவா வரி போடுகிறீர்கள்? தாங்கக் கூடியவர்களுக்குப் போடக்கூடிய வரி என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது தாங்கக்கூடாதவர்களுக்கும் போடப்படும் வரியாக இருக்கிறது. உண்மையிலேயே மற்றவர்கள் சொல்வதைப்போல, ஆட்சிக்கு வரும்பொழுது வரியைக் குறைப்போம் என்று சொல்லிவிட்டு, சும்மா சும்மா வரியைப் போட்டால் எதிர்க்கட்சியினர் சொல்வதைப்போல் எல்லாக் கட்சிக்காரர்களும் சொல்ல ஆரம்பிப்பார்கள். எனவே, கொஞ்சம் வரியை எப்படியாவது குறைத்துத்தான் ஆகவேண்டும். இது ஏழைகளைப் பாதிக்கும் வரி, தாங்கக் கூடாதவர்களுக்கும் போடப்படும் வரி, வரிக்குப் போடும் வரி, எனவே நிச்சயமாக இதில் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, in addition to what my hon. friend Thiru Krishnaswami Gounder has said, I want to state a few things.

Firstly, there is no proper co-ordination between sales tax authorities of the Central Government and sales tax authorities of the State Government. The very fact that this complication has arisen and we have to refund to the tune of Rs. 1 crore shows there is no co-ordination between the Centre and State.

Secondly, just because we have to pay to Central Government this has been brought. Firstly there was the Ordinance. Now a Bill has come. Will it not be possible for the Ministry concerned to sort out the whole thing and see that this tax is not levied? As my friend has observed, this is paying tax on tax. I will substantiate by an argument.



Supposing an article costs Rs. 100. There is the Central Excise tax on that for say, Rs. 20. Supposing we charge 3 per cent. Three per cent on Rs. 100 is Rs. 3. But 3 per cent on Rs. 120 comes to nearly Rs. 4. Like this, we find that on almost all articles we have to pay nearly to the tune of $\frac{1}{2}$ to $\frac{3}{4}$ per cent. That will be the position. The excise duty itself is quite high. Added to that, is this tax.

There is another thing. I have mentioned it before. Cannot this department be streamlined? For instance, a number of cases is posted for a day before a particular officer. A particular time is fixed say, 10-30 a.m. All these people wait in a long queue. Some cases are disposed of and the other poor people are asked to come on some other day. This is not the case in Income-tax department. The Income-tax officer knows the cases of his clients and the time-limit fixed for hearing of cases is adhered to there. But it is not so in sales tax cases. This is not a trivial but a major issue. The parties concerned are harassed. If there is going to be any 'paise' which the State Government might get by asking these people to come often there is some meaning. Then we can say that resources of the State are augmented. But no extra money comes by the present harassment and the Government only gets a bad name. I am taking this opportunity to point out to the Hon. Minister the defects so that he might set right the defects and streamline the department; then these poor people may not be harassed. These are my submissions.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், இந்த மசோதாவானது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையிலே ஏற்பட்டது என்று இதில் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறது. புதிதாக எந்த வரியையும் சுமத்துவதற்கு இல்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் புரிந்து கொண்டுள்ளனர். இது ஏற்கனவேயுள்ள சுங்கவரியைக் குறித்து இந்த விற்பனை வரி விகிதங்களை கணக்கிட வேண்டுமென்று ஏற்பட்டவிதியின் காரணங்களைக் கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், குறிப்பாக இதிலே சொல்லியிருப்பது, இந்த சட்டமானது முன்பு வசூலான தொகையை 'வேலிடேட்' செய்யவும், கலெக்ஷன் ஆனதை ரெகுலேட் செய்யவும் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள், இது பாஸ் ஆகவில்லை என்றால் சுமார் ஒரு கோடி ரூபாய் வரியைப் பாக்கியாக திரும்பிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும், இதைத் தவிர்க்கத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள், ஒரு வேளை இந்த விற்பனை வரி சரியல்ல, அதிலும் சுங்க வரியை எடுத்துக் கொள்வதால் வரிக்கு வரியா என்றும் சொல்லப்பட்டது. ஆனால், விற்பனை வரியைப் பொறுத்த வரையில் 'காமதேனு' என்று அதை வைத்திருக்கிறோம். இம்மாதிரியான சட்டத்தைக் கொண்டு வருவதால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தினால் இந்த சட்டத்தை, மசோதாவாகக் கொண்டு

வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் எந்த விதமான தடையும் இருக்க முடியாது என்று கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி:** தலைவரவர்களே, இந்த மசோதா சமீபத்திலே சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்த தீர்ப்பின் விளைவாக இங்கே வந்திருக்கிறது. வரியைத் தாங்கக்கூடியவர்களுக்குப் போடுவதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதைப்போல இது ஒரு புது வரி அல்ல. ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட வரிகளை இந்த அரசாங்கம் நிறுத்தி வைத்துக்கொள்ளவும், வசூலிக்கவும் அதிகாரம் அளிக்கத்தக்க மசோதாவாகும். நான் ஆரம்பத்திலேயே சொன்னதைப்போல், தாங்கக் கூடியவர்களுக்கு வரியைப் போட்டாலும் மற்றவர்களுக்கு விலக்களிப்பதுதான் முறையாக இருக்கும். அந்த அடிப்படையிலே, கைத்தொழிலுக்கு, 'காட்டேஜ் இண்டஸ்டிரீஸ்' உள்ள சாமான்களுக்கும் இன்னும் கையினாலேயே செய்யக்கூடிய பேப்பர், சோப்பு போன்றவைகளுக்கும் இந்த உத்தரவு பாதிக்கத் தகாத அளவிற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்தால் தான் அந்தத் தொழில்கள் பிழைக்க முடியும். உதாரணமாக, சிவகாசி, கோயில்பட்டி, சாத்தூர் போன்ற பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள், 'காட்டேஜ் இண்டஸ்டிரீஸ்' இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, பெரிய எந்திரத் தொழிற்சாலைகளோடு போட்டி போட்டுக்கொண்டு அது நல்லபடியாக நடந்து பல லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொழில்துறையிலே இருக்கிறவர்களுக்கு இந்தப் புதிய மசோதாவாலே பாதகம் ஏற்படாத அளவுக்கு அரசாங்கம் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காரணம் என்னவென்றால், சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி போன்ற பகுதிகளிலேயிருக்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அங்கேயுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு இன்று வேலை தந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலே அவர்களுக்கு விதிவிலக்கு இல்லாத நிலைமை ஏற்பட்டது என்றால் பல தொழிற்சாலைகளை மூட வேண்டியிருக்கும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதைப்போல் 1½ கோடி ரூபாய் திருப்பித் தர வேண்டிய நிலை ஏற்படுமே என்ற பயத்தின் காரணமாகத்தான் இது கொண்டு வரப்படுவதாகச் சொன்னார்கள். நான் சொன்ன 'காட்டேஜ் இண்டஸ்டிரீஸ்' தொழில்களான கையினாலே செய்யக்கூடிய பேப்பர், சோப், போன்றவைகளுக்கு விதிவிலக்கு கொடுப்பதாகயிருந்தால் ஒரு 30, அல்லது 35 லட்சம் ரூபாய் அளவில்தான் நஷ்டம் வரலாமே தவிர வேறு எந்தவிதமான பாதகமும் வராது. ஆனால், இப்படி விதிவிலக்கு அளித்தால் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை தரக்கூடியவர்களின் தொழில்துறை அபிவிருத்தி அடைய முடியும். இதனை அரசாங்கம் இந்தச் சமயத்தில் கவனத்



தில்கொண்டு திருத்தம் செய்யவேண்டும். இப்பொழுதே அந்தத் திருத்தத்தைக் கொண்டுவரமுடியாவிட்டாலும்கூட பிறகு ஆலோசனை செய்து இதற்கு விதிவிலக்கு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது நல்ல வகையிலே சில விளக்கங்கள் எடுத்துச் சொன்னதற்கு நம்முடைய நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது அவ்வளவு பெரிய மசோதா அல்ல. புதிதாக ஏதோ வரி போட்டதாகக் கருதிக் கொள்ளவும் தேவையில்லையென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்ல வேண்டியதை எல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இது சுருக்கமான ஒரு விவகாரம். டர்ன்ஓவர் கணக்கிடுகிற நேரத்தில் சுங்க வரியையும் சேர்த்து கணக்கிடுவதா? அதை விட்டுவிடுவதா என்று கவனிக்கப்பட்டது. வரி விதிக்கப்பட்ட நேரத்திலே டர்ன்ஓவரை கணக்கிடுவதிலே ஒரு நிலைமை இருந்தது. சுங்க வரி சேர்க்கக் கூடாது என்ற நிலைமை இருந்தால் கூட அந்தச் சுங்க வரியும் சேர்த்து, நம்முடைய மாநில அரசு—வேண்டுமென்றே அல்ல—அது சரியானதுதான் என்ற கருத்திலே அப்பொழுது வசூல் செய்து விட்டது. 1966-ம் வருடம் ஏப்ரல் மாதம் ஒன்றும் தேதி முதல் அந்தச் சட்டத்தைத் திருத்தியதற்குப் பிறகு சுங்க வரியை விடவேண்டியதில்லை, அதையும் மொத்தக் கணக்கிலே டர்ன்ஓவரிலே சேர்க்கலாம் என்று அப்படித்தான் இருக்கிறது. இன்றைக்குப் புதிதாக சுங்க வரியை விட வேண்டாமென்று கொண்டு வரவில்லை. ஆனால் 1966-க்கு முன்பாக சுங்க வரியை டர்ன்ஓவரிலே சேர்த்து வசூல் செய்ததாலே 1½ கோடி ரூபாய் அன்றைக்கு நம்முடைய அரசாங்கக் கருவூலத்திற்கு வந்து சேர்ந்து விட்டது. இந்த விவகாரத்திற்கு ஒரு தாவா கேட்க சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன நேரத்தில் அவர்கள், நம்முடைய மாநிலத்தினுடைய சேல்ஸ் டாக்ஸ் வசூலிப்பின்போது சுங்க வரியை நீக்குகின்ற நேரத்தில் மத்திய சேல்ஸ் டாக்ஸ் வசூலிப்பிற்கு அதை நீக்காதது எப்படி பொருத்தம், அது சட்டத்திற்கு முரணானது என்று சொன்னார்கள். அந்தத் தீர்ப்பை அமுல் நடத்த வேண்டுமென்றால் 1½ கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். அதை நாம் செய்யவேண்டியதில்லை. வசூல் செய்யப்பட்டதற்கு ஒரு சட்ட சம்மதம் கொடுப்பதற்காகத் தான் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறதே தவிர புதிதாக நாம் சுங்கவரியும் போடவில்லை. அந்தச் சுங்கவரி இந்த மசோதாவின் அமைப்பு வரவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஆசைத்தம்பி இதை ஆதரித்துப் பேசுகிற நேரத்திலே ஒரு யோசனையைச் சொன்னார்கள். அந்த யோசனையை நாம்

கவனத்திலே இருந்தி ஆவன செய்யவேண்டியது அவசியம்தான். இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லுகிற நேரத்திலே அதையெல்லாம் நிச்சயம் கவனிக்கும். ஏனென்றால், ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், பலவீனமானவர்கள், இவர்கள் முன்னேற வேண்டும், அவர்கள் பொருளாதார அபிவிருத்தி அடையவேண்டுமென்பதிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது இந்த அரசு., வரியும் கொடுக்கவேண்டும், ஆனால் அவர்களும் பிழைக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையே தவிர, ஏழை எளியவர்கள் கழுத்தைத் திருகி வரி வாங்கவேண்டுமென்ற கொள்கை உடையதல்ல என்று கூறிக்கொண்டு அவர்கள் கூறிய அந்த ஆலோசனையை சாத்தியமான முறையிலே, விதிவிலக்குகளைச் செய்வதற்கு எந்த எந்த இடங்களிலே சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று ஆராயும். விதிவிலக்கை ஏற்கனவே அளித்து வருகிறோம். இந்த முறையிலே மேலும் விதி விலக்கு அளிப்பதற்கு அரசு முன் வரும் என்று சொல்லிக்கொண்டு இந்த மாமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/69) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(இ) 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (ச. மசோதா எண் 4/69)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-ம் ஆண்டு, கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/69)-வை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.



(6) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

**(உ) 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (ச.பே.ம. எண் 4/69)**

* THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I beg to move—

"That the Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, * 1969 (L.A. Bill No. 4 of 1969) be referred to a Select Committee of the House consisting of the following members :—

Hon. Thiru K. A. Mathialagan.
Thiru T. P. Alagamuthu.
Thiru J. Bellie Gowder.
Thiru A. V. P. Asaithambi.
Thiru P. Malaichamy.
Thiru Era. Elamvazhudi.
Thiru P. Soundarapandian.
Thiru A. M. Raja.
Thiru P. G. Karuthiruman.
Thiru C. Nanjan.
Thiru M. William.
Thiru K. Bojan.
Thiru N. Sankarayya.
Thiru S. Alagarswamy
Thiru M. Surendran."

The janmi system of tenure is prevalent in Gudalur taluk of the Nilgiris district. According to the definition of "estate in Article 31-A (2) (a) of the Constitution, any janmam right in the States of Tamil Nadu and Kerala also constitutes an estate.

The whole of Gudalur taluk was originally included in the Malabar district and was transferred to the Nilgiris district in 1877. The original settlement of the taluk was carried out in the years 1881-89. Side by side with the original settlement, escheat enquiries were conducted and several janmam lands were declared to have escheated to the Government. Those lands were called "Government janmam lands". The lands which had not escheated were called "private janmam lands". During the resettlement of the taluk, the Government janmam lands were referred to as "new holdings" and the private janmam lands as "old holdings". There are twelve villages in Gudalur taluk, of which two entirely contain Government janmam lands, seven consist wholly of private janmam lands except for a few patches of acquired lands (which are registered as new holdings) and the remaining three villages contain both Government janmam lands and private janmam lands. The total extent of private janmam lands in the entire Gudalur taluk is 80,087.84 acres and the proposals for the abolition of the janmi system relate to this extent only.

---

Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 28th January 1969.

[Thiru K. A. Mathialagan] [1969 பிப்ரவரி 28

In pursuance of the policy of abolition of all intermediaries between the Government and the actual cultivators, the zamindari, under-tenure and inam estates, and all minor inams, leaseholds, etc. have been abolished under the various legislative measures and all those lands have been converted into ryotwari lands by the grant of patta to the persons entitled thereto. The question of abolition of the janmi system of landholding, and introducing ryotwari settlement has been engaging the attention of the Government for quite some time. So, towards the close of 1960, a Board Member was deputed to study the question and submit a preliminary report. Later the Revenue Divisional Officer, Gudalur was directed to make a detailed enquiry in the matter and to submit a report. After considering the report of the Revenue Divisional Officer in consultation with the Board of Revenue, the Government have decided to abolish the system of janmam tenure in the Gudalur taluk on payment of compensation to the janmis at the rate of twenty times the average net annual income derived by them from the janmam estate. The janmi and the verumpattamdar will be entitled to ryotwari patta for any land on proof of personal cultivation for three agricultural years. If no janmi or verumpattamdar is entitled to patta, any other person who has cultivated the land for three agricultural years will be entitled to ryotwari patta. Any person other than the janmi getting patta will be liable to pay to the Government contribution at the rate of twenty times the difference between the fair rent and the land revenue.

I have briefly explained the scope of the Bill. Now I request the House to accept the motion.

Dr. H. V. HANDE : May I know the number of acres involved and the number of persons who are going to be affected? Can the Hon. Minister give some rough indication to the House so that we can have an idea of the whole thing?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I want notice.

The motion was put and carried.

Mr. SPEAKER : Under Rule 99 (1) of the Tamil Nadu Legislative Assembly Rules, I nominate the Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, as Chairman of the Select Committee.

(ஊ) தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/69)

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு; ஊராட்சிகள் (திருத்த) மசோதா) (சட்டப் பேரவை மசோதா எண் 5/1969) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிக்க விழைகின்றேன்.

* 29—1—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1969 பிப்ரவரி 28] [திரு. மா. முத்துசாமி]

தமிழ்நாடு, 1958-ம் ஆண்டு, ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் (தமிழ் நாடு சட்டம் 35/1958) ஊராட்சிகள் வீட்டு வரி விதிக்கும் பொறுப்புள்ளவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஊராட்சிகளுக்கு இதுவே மிகுந்த வருவாய் அளிக்கக்கூடிய நிதி வாயில் என்பதையும் அறிவார்கள்.

முதற்கண் இயற்றப்பட்ட தமிழ்நாடு, 1958-ம் ஆண்டு, ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1958) 120-வது பிரிவு, ஒவ்வோர் அரையாண்டிற்கும் வீட்டு வரி விதிக்க வகை செய்தது. கிராமங்களில் ஆண்டுக்கு ஒருமுறை வீட்டு வரி விதிக்கப்பட்டால் கிராம மக்களுக்கு வசதியாகவும் எளிதாகவும் இருக்குமென்றும், நில வரி வசூலிக்கும்போதே இதையும் வசூலித்து விடலாமென்றும் கருதப்பட்டது. இக் கருத்து, நகரத்திற்கும் பொருந்துமாறு செய்யப்பட்டது. எனவே, ஒவ்வோர் அரையாண்டிற்குப் பதிலாக ஒவ்வோர் ஆண்டிற்கும் வீட்டு வரி விதிப்பதற்கு வகை செய்யும் முறையில் 120-வது பிரிவு தமிழ் நாடு 1965-ம் ஆண்டு 38-வது சட்டத்தினால் திருத்தப்பட்டது.

பேரூராட்சிகள் நகர்ப் பாங்குள்ளவையாகும் நகரங்களில், வீட்டு வரி விதிப்பையும் வசூலிப்பையும் நில வரி வசூலிப்புடன் இணைப்பதற்கு அவசியமில்லையென்று இப்போது கருதப்படுகிறது. மேலும், பேரூராட்சிகளில் அவற்றிற்கென தனியாக வரி வசூலிப்புப் பணியாளர்கள் உள்ளனர். பேரூராட்சிகளுக்குச் செலுத்தத்தக்க வீட்டு வரித் தொகை ஊராட்சிகளுக்குச் செலுத்தத்தக்கதைவிட மிக அதிகமானதாகும். நகரங்களிலுள்ள வரி விதிக்கப்பட்டவர்கள் ஆண்டுதோறும் ஒரே தடவையில் வீட்டு வரியை மொத்தமாகச் செலுத்துவது இடர்ப்பாடாயிருக்கும். கிராமங்களில் ஆண்டுதோறும் வரி விதிப்பதற்கு மறுப்பு ஏதுமிருக்க முடியாது; ஆனால், நகரங்களில் ஆண்டுதோறும் வரி விதிப்பதற்கு நடைமுறையில் இடர்ப்பாடு பல உள்ளன. வரி செலுத்துவோருக்கான இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்தில், எந்த ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் அல்லது ஒரு வகையைச் சேர்ந்த கிராமங்களில் அல்லது நகரங்களில் ஒவ்வோர் அரையாண்டிற்கு ஒரு முறை வீட்டு வரி விதிக்கப்பட வேண்டுமா அல்லது ஆண்டிற்கு ஒரு முறை வீட்டு வரி விதிக்கப்பட வேண்டுமா என்பதை வரையறுக்க அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கும் வகையில் திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எனவே, இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது.

ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் அல்லது ஒரு வகையைச் சேர்ந்த கிராமங்களில் அல்லது நகரங்களில் வீட்டு வரி அரையாண்டுக்கு ஒரு முறை விதிக்கப்பட வேண்டுமா அல்லது ஆண்டிற்கு ஒரு முறை விதிக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்கையில் அந்த உள்ளூர்ப் பகுதிகளில் வகைப்பாடு, ஊராட்சிகளின் ஆண்டு வருவாய், கிராமம் அல்லது நகரத்தின் மக்கள் தொகை, அந்த மக்களின் தலையாய தொழில் முதலிய

வற்றை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக அரசாங்கம் ஆலோசிக்க வேண்டிய பிறவற்றிற்கு விதிகள் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரமளித்து இந்த மசோதாவில் விதித்துறை செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள வரி விதிப்பு வீதங்களில் திருத்தம் எதுவும் செய்யாமல், வரி விதிப்புக் கால அளவையொட்டி அதிக அளவு, குறைந்த அளவு வீதங்களைக் குறிப்பிட்டு, தற்போதுள்ள 1-வது விவர அட்டவணைக்குப் பதிலாக புதிய விவர அட்டவணை ஒன்று அமைத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

இவை கூறி இந்தப் பேரவையின் ஆலோசனைக்காக இந்த மசோதாவை முன்னுரைக்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, why not we delegate the power of deciding whether the House tax should be collected once a year or twice a year to the concerned Corporation or the Municipality or the Panchayat Union or Town panchayat instead of the State Government taking up the entire responsibility in the matter and deciding each case according to the circumstances prevailing in each place?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, நகராட்சிகள், ஊராட்சிகள் வரி விதிக்கின்ற நேரத்தில் அதில் இருக்கக் கூடிய பல சிக்கல்களை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஊராட்சிகள் ஆண்டுக்கு ஒரு முறை அல்லது அரை ஆண்டுக்கு ஒரு முறை வரி வசூலிக்கவேண்டும் என்று கருதினால், அந்த மன்றம் அதைப்பற்றித் தீர்மானம் நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பினால், அந்தக் கருத்துக்களைப் பரிசிலனை செய்து முடிவெடுக்கலாம். ஆனால், அந்த அதிகாரத்தை ஊராட்சிகளுக்கே கொடுத்து விட்டால், அந்த அதிகாரம் சில நேரங்களில் பொதுமக்களுக்கு அனுகூலமில்லாத முறையில் உபயோகப்படுத்தப்படக்கூடும். அம் மாதிரி நிலைமைகள் அமையும்பொழுது அதை அரசு திருத்தி அமைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்ற கருத்தில்தான் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 5/1969) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.



பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"இரண்டாவது பிரிவு இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

"In the proposed sub-section (3) of the principal Act, for the words :—'The Government shall, by notification, determine in regard to any village or town or any class of villages or towns whether the house-tax shall be levied every half-year or year and in so doing have regard to the following matters, namely :—', the following words shall be substituted, namely, 'The house tax shall be levied every half-year and in so doing the village or town panchayat shall have regard to the following matters, namely :—'."

Thiru L. BALARAMAN : Sir, I second the amendment.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க மசோதா ஆகும். கிராமப் பஞ்சாயத்துக்கள், ஊராட்சிகள் இவைகளை இரண்டு விதமாகப் பிரித்து, அவைகள் வரி வசூல் செய்கின்ற அதிகாரத்தைத் தருகின்ற மசோதாவாகும் இது. கிராமப் பஞ்சாயத்துக்கள் என்றும், நகரப் பஞ்சாயத்துக்கள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, இரண்டு பிரிவுகளிலும் வசிக்கின்ற மக்களது வருவாயைக் கணக்கில் கொண்டு, கருத்தில் கொண்டு, அந்த அடிப்படையிலே வரிவசூலிப்பது என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தத்தின் நோக்கம், இந்த மசோதாவின் நோக்கம் இன்னும் வெற்றிகரமாக நடைபெறவேண்டும் என்பதுதான். இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும்பொழுது, பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

"It has also been pointed out that the amount of house-tax payable to town panchayats is much higher than that payable to village panchayats and that it would be difficult for the assessees in town to pay the house-tax annually in one lump-sum."

நகரப் பஞ்சாயத்தில் இருப்பவர்கள் வருடத்திற்கு ஒரு முறை என்கின்ற அளவுக்கு வரி செலுத்துவது என்பது சிறிது கடினமான நிலையாகும். காரணம், அவர் அதிகப்படியான வரியை செலுத்துகின்ற ஒரு நிலைமையில் இருப்பவர்கள். ஆகவே, நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு முறைகளில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாக வரி வசூலிக்கின்ற ஒரு நிலைமையையும், கிராமப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுக் கடைசியில்

அல்லது ஆண்டுக்கு ஒரு முறை வரி வசூல் செய்வது என்ற ஒரு நிலையும் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் அத்தோடு நிற்காமல் எந்தக் கிராமப் பஞ்சாயத்து ஆண்டுக்கு ஒரு முறை வரி வசூல் செய்வது என்ற நிர்ணயம் செய்கின்ற உரிமை, அதே மாதிரி எந்த நகரப் பஞ்சாயத்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை வரி வசூல் செய்வது என்ற நிர்ணயிக்கும் உரிமை, ஆகிய உரிமைகளை அரசாங்கம் தன்னுடைய உரிமைகளாக ஆக்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஒரு நிலைமை ஏற்படுமானால் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் எல்லா ஊராட்சிகளுக்கும் ஒரே சட்டம் என்கிற நிலைமை ஏற்படாது. ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு யூனிபார்மிடி, ஒரு யுனிமிடி இருக்காது. எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் ஒரே விதமாக வரி வசூல் செய்கின்ற நிலைமை இருக்காது. அதேபோல் எல்லா நகரப் பஞ்சாயத்துக் களிலும் ஒரே விதமாக வரி வசூல் செய்கின்ற நிலைமை இருக்காது. இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா அப்படியே சட்டமாக்கப்படுமானால், சில நகரப் பஞ்சாயத்துக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறையும், சில நகரப் பஞ்சாயத்துக்கள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு முறைகளும் வரி வசூல் செய்கின்ற நிலைமை ஏற்படும். அதே நிலைமை கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் ஏற்படும். சில இடங்களில் பக்கத்து பக்கத்து ஊர்களிலே, ஒரு இடத்தில் வருஷத்திற்கு ஒரு முறை தான் வரி வசூல் செய்கின்ற நிலைமையும், பக்கத்தில் இருக்கிற நகரப் பஞ்சாயத்தில் இரண்டு முறை வரி வசூலிக்கின்ற நிலைமையும் ஏற்படும். வரி அதிகமா, குறைவா என்கின்ற நிலையைப் பற்றி மக்களுக்குச் சிந்தனை ஏற்படாது, எத்தனை முறை வரி செலுத்துகிறோம் என்பது தான் பெரியதாகத் தோன்றும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் இது மக்களிடையே ஒரு குழப்பமான சூழ்நிலையை உண்டாக்கி விடுவதற்கு மிகுந்த ஏது இருக்கிறது.

ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொருத்தவரையில், இது மிக மிக அவசியமானது. பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்கள் என்றால், ஒரே விதமான வரி வசூல் இருக்கவேண்டும். அப்படி நிர்ணயிப்பதை சர்க்காரின் உரிமையாக்காமல், சட்டமாகச் செய்து இதுதான் நிலைமை என்று செய்துவிட்டால் ஒரு நிரந்தரமான நிலை ஏற்படும். வரி வசூலில் குழப்பங்களை தவிர்க்க ஒரு சூழ்நிலை ஏற்படும். யார் அமுல் நடத்துவது என்கிற நிலையை அரசு நிர்வாகம், இயந்திரம் வைத்துக்கொள்வது ஜனநாயகத்தில் அவ்வளவு உகந்தது அல்ல. இந்த நிலைகளை மனத்தில் கொண்டு, என்னுடைய திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, திரு. ராமமூர்த்தி கொண்டு வந்திருக்கும் திருத்தத்தின் மீது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



முதலாவதாக, இது சாதாரண மசோதா என்று நமக்கு தோன்றினாலும், இதில் பல முக்கிய அம்சங்கள் இருக்கின்றன. நடைமுறைக்குக் கொண்டு வருவதில், பல இடையூறுகள் நிச்சயமாக வரக்கூடும் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, ஏராளமான ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இன்றைக்கு அவைகள் நம்முடைய அரசாங்கத்திற்கு மனுப்போட்டு, இப்படிப் பட்ட மசோதாவைக் கொண்டு வந்து சட்டத்தைத் திருத்தினால்தான், ஆண்டுக்கு ஒரு முறை வரி வசூல் செய்யலாம் என்று, தங்களுக்கு இருக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்களா? அதற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறதா ? பல இடங்களிலும், அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வராவிட்டால், கஷ்டம் இருக்கும் என்று மனுச் செய்து இருந்தால் இந்த மசோதா கொண்டு வருவதில் நியாயம் இருக்கும்.

இரண்டாவதாக, மசோதா கொண்டு வந்தபிறகு, இத்தனை மாதங்களுக்குள்ளே, நிச்சயமாக ஊராட்சி மன்றம், பேரூராட்சி மன்றம் ஆண்டுக்கு ஒரு முறை இந்த வரியை விதிக்கலாம் என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், எந்த ஒரு ஊராட்சி மன்றமும், பேரூராட்சி மன்றமும் ஆண்டுக்கு ஒரு முறை, அல்லது இரண்டு முறை என்று வரி வசூல் செய்வதில் குழப்பமான நிலையில் இருப்பார்கள், ஆகவே, கால வரம்பு விதிக்க வேண்டும். அதற்கான உத்தரவை உடனடியாக விதிக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்து இருக்கிறதா? அதிகாரிகளைக் கலந்து கொண்டு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களா ? இவற்றிற்கு அமைச்சரிடத்தில் விளக்கம் எதிர் பார்க்கிறேன். மூன்றாவதாக, We must clearly specify about the population எவ்வளவு ஜனத்தொகை இருந்தால், எவ்வளவு வருமானம் இருந்தால் ஒரு மன்றம் ஆண்டு ஆண்டுக்கு ஒரு முறை வரியை விதிக்கலாம் ? எதற்கு மேல் இருந்தால் ஆண்டுக்கு இரண்டு முறை விதிக்கலாம் என்பது போன்றவைகளுக்கு திட்டவட்டமாக ஷரத்துக்கள் இருக்க வேண்டும். ஜனத்தொகை பற்றியும், வருமானம் பற்றியும், ரூல்ஸ் ஃப்ரேம் செய்யும் போதாவது தெளிவு படுத்தப் படவேண்டும்.

நான்காவதாக, கடைசியில், இதன் காரணமாக ஏதோ சில 'பேக் லாக் ஆப் ஒர்க்' இருந்து, ஏராளமான வேலைகள் அப்படியே தேங்கிக் கிடக்கும் போது, ஊராட்சி மன்றத்தில் இங்கே கோட்டையிலிருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்லி, பின்னால், நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு பேக் லாக்காக உத்தரவு போட்டு, ரிட்ராஸ்பெக்டிவ் ஆக 4, 5 ஆண்டுகளுக்கு வரி வசூலிக்கக் கூடிய நிலைமை வரலாம். அது ஒரு மிக முக்கியமான அம்சம். இதை அமைச்சரவர்கள் கவனித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். இவற்றையெல்லாம் தெளிவாகச் சொன்னால் நலமாக இருக்கும். நாங்களும் மகிழ்ச்சியோடு வரவேற்போம்.

[1969 பிப்ரவரி 28

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி நான் ஒரு கிராம வாசி என்ற முறையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் உள்ள மக்களுக்கு வருஷத்திலே ஒரு முறை வரி கொடுப்பதுதான் சுலபமாக இருக்கும், சங்கடம் இல்லாமலும் இருக்கும், எளிதாகவும் இருக்கும். முதலில் பேசியவர் நகர வாசி இரண்டாவதாகப் பேசியவர் மாநகர வாசி. நான் ஒரு கிராம வாசி. கிராமத்தில் இருக்கும் சங்கடங்களைத் தெரிந்து ஆராய்ந்த தன் மேல் தான் நம்முடைய அரசு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த அந்தக் கிராமங்களைக் கலந்து அவர்களுடைய ஆலோசனைப்படி, அந்த அந்தக் கிராமங்கள் விஷயத்தில் ஒரு முறையில் வரி வசூலிக்கலாம் என்று முடிவை செய்யும் பாத்தியதை சர்க்காருக்குத்தான் இருக்க வேண்டும். அத்தோடு நில வரியோடு வசூல் செய்யும் நிலை இருக்கிறது. கிராமங்களில் கிராம அதிகாரிகள் அதைச் செய்கிறார்கள். தண்ணீர் வரி வருஷத்தில் ஒரு முறை தான் வசூலிக்கப் படுகிறது. வேறு எவ்வளவோ சிக்கல்களைத் தவிர்க்க இப்பொழுது நம்முடைய அரசு ஆராய்ந்து ஆய்ந்து கொண்டு வந்திருக்கும் திருத்த மசோதாவே முழுக்க முழுக்க அவசியமானது என்று நினைக்கிறேன். ஆகவே, அதை வேறு திருத்தமின்றி அப்படியே இந்த மாமன்றம் நிறைவேற்ற வேண்டுகிறேன்.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூன்று உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கிராமப் பகுதியைச் சேர்ந்தவர் ஒருவர்; நகர் பகுதியைச் சேர்ந்தவர் மற்றவர்; இன்னொருவர் மாநகரத்தைச் சேர்ந்தவர். நான் கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, நகரத்தில் தொழிலை ஆரம்பித்து, இப்பொழுது மாநகரத்தில் கடமையை ஆற்றுகிறேன். மூன்று பகுதிகளிலும் உள்ள வரி வசூல் சங்கடங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். திரு. ராமமூர்த்தி அவர்கள் இந்த மசோதாவை மேலும் வலிவுள்ளதாகச் செய்ய யோசனைகளை சொன்னார்கள். பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். இவற்றிற்குப் பதில் கூறும் முறையில் திரு. ராமசாமி கவுண்டர் தெளிவாகவே எடுத்துச் சொன்னார்கள். புதிதாக அரசாங்கம் எந்த உரிமைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா அல்ல இது. ஏற்கனவே அரசாங்கம் வைத்துக் கொண்டு இருந்த பொறுப்பு. ஆனால், அதில் கிராமப் பகுதிகளில் நிலவரியோடு வரி வசூல் செய்தால், சுணக்கம் இல்லாமல் நடைபெறும். வரி பாக்கியில்லாமல் நடைபெறும். ஆனால் பல்வேறு பேரூராட்சி மன்றங்களிலிருந்து வேண்டுகோள்கள் வந்ததால் தான் இந்தத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இந்த இரண்டு ஆண்டு காலத்தில், செல்லுகின்ற இடங்களில் பேரூராட்சி மன்றங்கள் வரவேற்பில் முதலாவதாகக் குறிப்பிடுவது



1969 பிப்ரவரி 28] [திரு. மா. முத்துசாமி]

ஆண்டுக்கு ஒரு முறை என்பது சங்கடமாக இருக்கிறது, பெரும் தொகை செலுத்த வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமப் புறச் சூழ்நிலை வேறு, கிராம அதிகாரிகள் நில வரியோடு சேர்த்து வசூல் செய்துவிடுகிறார்கள். ஆனால், நகர் புறங்களில், வரிவசூலிக்க என்று தனியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். கிராமம் போல நகரத்திலும் ஆண்டு ஒரு முறை என்பது சங்கடமாக இருக்கும். இதைப் பலரும் வற்புறுத்திச் சொன்னதால் தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்தார்கள். ஆனால், அந்த நிலைமை நகரத்தில் இப்படிப்பட்ட ஒரு சங்கடத்தைக் கொடுக்கும் என்று அவர்கள் எதிர் பார்க்க வில்லை. ஆகவே தான் இப்பொழுது அந்த வகையில் திருத்தம் கொண்டு வந்திருக்கிறது. திரு. ராமமூர்த்தி குறிப்பிட்டது போல, சில இடங்களுக்கு ஆறு மாதம் என்றும், சில இடங்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை என்றும் செய்தால். அந்த முறையை மாற்ற வேண்டியிருந்தால், மறுபடியும் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். எந்த நகரத்தில் அல்லது பேரூராட்சியில் ஆண்டுக்கு ஒரு முறை பணத்தைச் செலுத்துகிறோம் என்கிறார்களோ, அதைப் பெற்றுக் கொள்ளும் உரிமை இந்தச் சட்டத்தின் மூலம் அப்படிப் பட்ட மன்றங்களுக்குக் கொடுக்கப் படுகிறது. இது எதிர் காலத்தில் நலமாக இருக்கும் வகையில் செய்யப் பட்டிருக்கிறது. அரசு பேரூராட்சி, நகராட்சி மன்றங்களின் அதிகாரத்தில் தலையிட்டுக் காரியங்களைக் கெடுத்துவிடாது.

ஏற்கெனவே இருந்த ஓராண்டு, அரையாண்டு என்று நிலைமைக் கேற்றபடி வசூல் செய்வது என்று மாற்றிக்கொள்ளத்தக்க விதத்தில் செய்துகொள்ள வேண்டும். இதனால் அரசாங்கத்தினால் எந்தவிதமான உரிமையையும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. மேலும், இதனால் காலதாமதமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் தொகையைக் கணக்கிட்டு, மக்கள் தொகை அடிப்படையில் அரையாண்டுக்கு ஒரு முறை, ஆண்டுக்கு ஒருமுறை என்று நிர்ணயித்தால் அதனால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று தெரிகிறது. முன்னாலே நகரசபைகள் அரையாண்டுக்கு ஒரு தடவையும், கிராமப் பஞ்சாயத்துகள் ஆண்டுக்கு ஒரு தடவையும் என்று வைத்திருந்தன. சட்டத்தை பல முறை திருத்த வேண்டிய வாய்ப்பு வந்துவிடக்கூடாது. உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப வசூல் செய்துகொள்ளலாம் என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மீது நல்ல பல கருத்துக்களைக் கூறிய நண்பர்களுக்கு நன்றிகூறுகிறேன்.

இந்தச் சட்டத்திலுள்ள நல்ல கருத்துகளை அறிந்து உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. RAMAMOORTHI : In view of the explanation given by the Hon. Minister, I do not press my amendment.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. க. ராமமூர்த்தி அவர்கள் கொடுத்த திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

இரண்டாவது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மூன்றும் பிரிவு, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/69) நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (ச. பே. மசோதா எண். 18/68—ஆய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move

"That the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 *(L.A. Bill No. 18 of 1968) as amended by the Select Committee be taken into consideration."

Past experience has shown that in the absence of reliable record of tenancy rights, it is difficult to implement measures of land reforms and in particular, enforce legislative provisions which seek to provide security of tenure to the tenant-cultivators who are also, generally denied credit facilities from institutional agencies, as they are, in a majority of cases, not in a position to establish their tenancy rights, due to incomplete land records. The Government have, therefore, felt the urgent need for a correct and up-to-date record of tenancy rights for an effective implementation of land reform measures. The Government had therefore, decided to undertake necessary legislation for the purpose.

Accordingly, during August 1968, the Government brought before this House a Bill called the Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968. The Bill was, however, referred to a Select Committee of this House by a resolution of the Assembly, dated the 21st August 1968. The report of the Select Committee was presented to this House on 29th January 1969. Now I will proceed to explain the various changes made in the Bill by the Select Committee.

***Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th January 1969**



(1) The Committee has decided that the record of tenancy rights referred to in sub-clause (2) of Clause 3 should also include besides other particulars mentioned therein, details of the extent and local name, if any, of the land as well as the addresses of the landowner, intermediary and the tenant cultivating the land. Sub-Clause (2) of Clause 3 has been amended accordingly.

(2) Sub-Clause (5) of Clause (3) provides for the publication of the draft record of tenancy rights for a village in the *Fort St. George Gazette*. The Committee has decided that it would be sufficient to publish the draft record in the District Gazette. The Committee has also decided that the extract of entries in the draft record should be served on the parties concerned. Sub-clause (5) of clause 3 has been amended accordingly.

(3) Sub-Clause (8) of Clause 3 relates to the rectification or inclusion of certain particulars in the draft record by the record officer on an application made by an aggrieved person. The Committee has decided that the record officer should give reasonable opportunity to the parties concerned before passing an order and that he should also send his final orders to the parties concerned. Sub-clause 8 of clause 3 has been amplified accordingly.

(4) Clause 5 provides for modification of entries in the approved record of tenancy rights. The Committee has decided that opportunity should be given to the concerned parties to represent their case either orally or in writing. Sub-clause (3) of Clause 5 has been modified accordingly.

(5) Clause 9 relates to supply of information and documents needed for the correct preparation or revision of the record by the record officer. The Committee has decided to insert a separate clause to empower all authorities concerned to summon witnesses and also to call for records. A new clause 10 has been inserted so as to give effect to this decision.

(6) Clause 11 in the Bill as introduced, since renumbered as Clause 12, provided for a penalty of fine which may extend to one thousand rupees for furnishing false information. The Committee has decided to provide for imprisonment upto three months or with fine upto one thousand rupees. This Clause has been amended accordingly.

I request the House, Sir, to accept the motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைப் பொறுத்த மட்டில் எத்தனையோ சட்டங்கள் நம் நாட்டில் வந்துகொண்டிருக்கின்றன. இது புதிதாகப் புகுத்தப்

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1969 பிப்ரவரி 28

பட்டிருக்கிறது. ஏற்கெனவே குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தினால் குத்தகைக்குக் கொடுத்தவர்களும், குத்தகைக்குப் பெற்றவர்களும் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகப் பேசப்படுவதாகச் சொல்வார்கள். ஆனால், உண்மையிலே இந்தச் சட்டங்கள் நிலப்பிரபுக்களைப் பாதிப்பதில்லை. ஏழையைத்தான் இந்தச் சட்டங்கள் எல்லாம் பாதிக்கின்றன என்பதற்குச் சில விளக்கங்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டம், வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் சட்டம் என்று தமிழிலே சொல்லப்படுகிறது. ஆனால் இந்தச் சட்டமானது ஏற்கெனவே குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்திலே கொடுக்கப்பட்ட உரிமைகளையும் கூட மீறுகிறது. புதிது புதிதாக பூசல்களையும், கோர்ட் விவகாரங்களையும் தோற்றுவிக்கவே இது உபயோகப்படுகிறது.

சிலர் பர்மிட்-லைசன்ஸ் வியாபாரத்தின் மூலமாக பத்தை நூறாக்கி, நூறை ஆயிரமாக்குகிறார்கள். வியாபாரம் செய்வது அவனுடைய ஏகபோக உரிமையாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஏழை விவசாயிகள், அதுவும் தலைமுறை தலைமுறையாகச் சம்பாதித்த சொத்தை எளிய முறையில் பறிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டங்களில் இது தலைசிறந்த சட்டம் என்று கூறலாம். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்துக்களைப் பறிப்பதற்கு நேர்மைக்கு விரோதமான சட்டங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்திலே ஒருவன் குத்தகைக்குப் பெற்ற பிறகு, பிறர் ஒருவருக்குக் குத்தகைக்குத் தர முடியாது. குத்தகை காலம் முடிந்ததும், நிலத்தைத் திரும்பத் தர வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்திலே குத்தகைக்குப் பெற்ற ஒருவன், இன்னொருவனுக்கு மேல் குத்தகைக்கு விட்டிருந்தால் அவனும் நிலச்சொந்தக்காரனாகிவிடுகிறான். குத்தகைகாரன், இடைத்தரகன், சப் டெனன்ட் என்று பலவிதமான தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறது. ஏற்கனவே செய்த குத்தகைதாரர் பாதுகாப்புச்சட்டம் பெரும் பணக்காரர்களைப் பாதிப்பதைக் காட்டிலும் ஏழைகளைத்தான் பாதிக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன்.

நான்கு ஏக்கரே உடைய ஆர்க்காட்டைச் சேர்ந்த டி. பரமேஸ்வரி என்ற அம்மையார் எழுதிய ஒரு கடிதத்தை மட்டும் பேரவைத் தலைவரின் அனுமதியோடு படிக்கலாம் என்று நினைக்கிறேன்.

"1969 ஜனவரி 28, ஆர்க்காடு.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் திவ்ய சமூகத்திற்கு ஆற்காடு சிறுநிலச் சொந்தக்காரர் சார்பில் டி. பரமேஸ்வரி அம்மாள் மிகவும் தாழ்மையுடன் எழுதிக்கொண்ட விண்ணப்பம். ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட சிறுநிலக் கிழாருக்கு எவ்விதமான நிலச் சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பது விஷயமாக அரசினருக்குப் பல



1969 பிப்ரவரி 28] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

கடிதங்கள் எழுதியும் இதுவரை பதிலோ நடவடிக்கையோ கிடையாது. குத்தகைதாரருக்கு சுமார் இருபதாயிரம் வருமானம் கிடைத்தும் எனக்குரிய பங்கைக் கொடுக்காமல், அரிசி வாங்கி, அரை வயிறு சாப்பிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இச்சட்டம் மிகவும் பாதிக்கத்தக்கதாகும். அரசினர் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதனால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லை. வயிறார சாப்பிட முடியவில்லை. நிலம் கடன்காரருக்குப் போய்விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நீவிர் இது விஷயமாகச் சட்டமன்றத்தில் ஏழை என்பால் இக்கடிதத்தை சட்டம் இயற்ற வந்துவிட்ட சட்ட மந்திரி அவர்களுக்கு காண்பித்து ஆவன செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
டி. பரமேஸ்வரி அம்மாள்,
நெ. 1, முனுசாமி முதலியார் வீதி,
தோப்புக்கானா
வட ஆர்க்காடு,
ஆர்க்காடு.

குறிப்பு—இச்சட்டம் நீடித்தால் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்."

இவ்வாறு அந்த அம்மையார் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஆகவே, இது பெரிய பணக்காரர்களைப் பாதிப்பது இல்லை. பெரிய நிலப்பிரபுக்கள் எல்லாம் வெகு ஜாக்கிரதையாகத் தங்களைப் பாதுகாத்துக்கொண்டு விட்டார்கள். நிலத்தில் முதலீடு செய்வது தமக்குப் பிற்காலத்தில் உதவும் என்பதாக நடுத்தர வர்க்கத்தினர் கொஞ்சம் கொஞ்சம் நிலத்தில் பணத்தைப் போட்டவர்கள் தான் இந்தச் சட்டத்தினால் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள். நிலத்தில் உழைப்பவன் பயன் அடைந்தாலும் சரி, நிலத்தின் சொந்தக்காரன் பயன் அடைந்தாலும் சரி—இந்தச் சட்டத்தினால் இந்த இரண்டுவகையினர் அடைகிற பயனைவிட இடையில் உள்ளவர்களுக்குத் தான் பலவிதமான தொந்தரவுகளைக் கொடுப்பதற்கு இந்தச் சட்டம் வகை செய்கிறது. காலஞ்சென்ற முதல் அமைச்சர் அவர்களுடைய எண்ணத்தில் கூட—நிலத்தைக் குத்தகைக்கு விட்டு விட்டு இருக்கிற நிலச்சொந்தக்காரர்கள் கடைநிலையில் தான் மதிக்கப்படுவதாகப் பேசியிருக்கிறார். நேராக உழைக்கின்ற அத்தனை பேர்களுக்குமே நிலத்தில் உரிமை கொடுக்க இருப்பதாகத் தெரிகிறது. பலதுறைகளில் இது ஆபத்தில் கொண்டு போய்விடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் பெயர் வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா: வேளாண்மை நிலங்களுக்காக இது கொண்டுவரப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆயினும் இதில் உழும் நிலம் மட்டும் அன்றி கட்டடம் முதலியவைகளும் சேர்க்கப்

பட்டிருக்கின்றன. மசோதாவின் இரண்டாவது பிரிவு உப பிரிவு நாலு உழும் நிலம் மட்டும் அல்ல கட்டடம் முதலியவைகளையும் பாதிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இவைகளையும் கல்டி வேட் செய்கிறுனு? அதுமட்டும் அல்ல பிரிவு 2/8-வது உப பிரிவில் சப்-டெனன்ட் என்பதற்கு நிலத்தில் தானே, குடும்பத்தில் ஒருவனே, உடல் உழைப்பைச் செய்பவர் யாராக இருந்தாலும் அடங்கும் என விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அப்படியே படித்தால் தான் நன்கு புரியும். If he contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land. ஆகையால் இப்படி ஏதோ அந்த பூமியில் உழைக்கிற ஒருவனை சப்-டெனன்ட் என்று ஆக்கிவிட்டால் என்ன மதிப்பு இருக்கிறது? ஒருவன் மணம் செய்து கொண்டு, மனைவியோடு இல்லறம் நடத்துகையில் யாரோ ஒருவனுக்கு ஒரு வேளை உட்கார வைத்து சோறு பரிமாறச் சொன்னதற்கு—"அவன் நீ எனக்குச் சோறுபோட்டாய், ஆகவே எனக்கும் மனைவியாகத் தான் இருக்கவேண்டும்" என்று உரிமை கொண்டாடுவது எப்படி இருக்குமோ அப்படித்தான் இந்தச் சட்டத்தில் உரிமை கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் மிகை யாகாது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள் மறுசிந்தனை செய்துபார்த்துத் திரும்பப் பெறவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், இந்த மசோதாவின் பிரிவுகள் எல்லாம் அப்படி வீணை பல சங்கடங்களை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக் கின்றன. குறிப்பாகச் சொல்கிறேன். ஒவ்வொரு பிரிவையும் படித்துக்காட்டிச் சொல்லிக்கொண்டே போனால் நேரமாகிவிடும். நிலத்திற்கு நிலச்சொந்தக்காரர்கள் மட்டும்தான் உரிமை உள்ளவர் களாக இருக்கவேண்டும். இந்த மசோதாவின் பகுதிகளுக்கு எனக்குத் தெரிந்த மட்டில் விளக்கம் கொடுக்கிறேன் பிரிவு மூன்று உப பிரிவு 2 படி எத்தனை பேர்களுக்கு உரிமை? 3 (எ) யில் உண்மையில் உழாதவர்களும் சொந்தம் கேட்கலாம். பிரிவு 3 (4)—ரெக்கார்டு ஆபீசர்களுக்கு ஒரு சான்ஸ் இருக்கிறது. பிரிவு 3 (5)—வீண், அவசியம் இல்லாத பிரசுரங்கள் தேவைப்படுகிறது. பிரிவு 3 (6)—ஆபீஸ்களுக்கு அடிக்கடி யாத்திரை போகவேண்டியதில் கொண்டுபோய்விடுகிறது. (7) வக்கீல்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. (9), (10) பிரிவுகளின்படி விஷயம் தெரியாத பாமர மக்களின் நில உடைமைகளில் யார் யார் பெயர்புகுத்தப்படுமோ?

பிரிவு 4—என்றும் முடியாத வழக்குகளுக்கும், குழப்பங் களுக்கும் வழிவகுக்கும். பிரிவு 5—சச்சரவுகள் சிரஞ்சீவியாகும். பிரிவு 6—ஒரே அப்பீல். விவசாயத்தை நிறுத்தி வைத்துவிட்டு, அப்பீல், காலாவதி முதலியவைகளைத் தெரிந்து கோர்ட்டு அலுவலகத்துக்குப் போய்க்கொண்டிருக்க வேண்டியது. பிரிவு 7 ஜில்லா கலெக்டர் அலுவலகத்தை இன்னும் விரிவுபடுத்தி





அதை சுப்ரீம் கோர்ட். ஆகவே ஆக்கிவிடுகிறது. பிரிவு 9 எல்லாம் வல்ல ஏதேச்சாதிகாரம் உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பிரிவுகள் 10, 11 இது பாஸிசமா அல்லது கம்யூனிசமா? அல்லது இவற்றுக்கும் ஒரு படி மேலா என்று சிந்திக்க வைப்பதாக இருக்கிறது. பிரிவு 12 நிலச் சொந்தக்காரர் களுக்குப் பாதகம் நடந்தால் கோர்ட்டுக்குப் போக முடியாது செய்கிறது. பிரிவு 13 உழுபவனுக்குப் பட்டா போகும். பிரிவு 14 உத்தியோகஸ்தர்கள் செய்யும் தவறெல்லாம் உண்மையாகும். பிரிவு 15 உத்தியோகஸ்தர்கள் மேலும் பல மடங்கு பெருக வழி வகுக்கும். பிரிவு 16 (1) (2) சர்க்கார் செய்வதற்குப் பரிகாரம் இல்லை. லெஜிஸ்லேடிவ், எக்ஸிக்யூடிவ், ஜுடிஷியரி இம்மூன்றில் நாட்டின் நடப்பில் இருந்து ஜுடிஷியரியை நீக்கி விடுகிறது. நிலச்சொந்தக்காரர்களின் உரிமை உத்தியோகஸ்தர்கள் கையில் மாறிவிடுகிறது. பிரிவு 18—அரசாங்க, கார்ப்பொரேஷன் உடைமை களுக்கு மட்டும் விதிவிலக்கு. ஒரு கண்ணுக்கு வெண்ணை, ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பா? அரசாங்கம் தன்னுடைய சொந்த நிலங்களுக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுப்பதில் இருந்து அரசாங்கம் இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய கஷ்டத்தை நன்கு உணர்கிறது என்று தெரியவில்லையா? பிரிவு 19 இது மிகமிக ஆபத்தானது, எத்தனையோ வில்லங்கங்கள் நிலத்தைப் பொருத்து இருக்கும். இவற்றை எல்லாம் ஒரு வரியில் ரத்து செய்கிறது. உதாரணமாக இத்தனை வருஷங்களுக்கு அனுபவ போக்கியம் என்று இருந்தால் போக்கியதாரர் குத்தகைக்கு விட்டதை காலாவதியில் நிலத்துக்காரன் எப்படி எடுப்பது? பள்ளிப் பிள்ளைகள் ஸ்லேட்டை துடைத்துத் துடைத்து எழுதுவது போல இருக்கிறது.

மசோதாவில் ஒரிஜினல் குத்தகைதார், உள் குத்தகைதார் எல்லோருக்கும் பாதுகாப்பு இருக்கிறது. உண்மையில் இது மிக மிக வேதனை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. பல்வேறு நிலப் பிரபுக்கள் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. என்னைப் பொறுத்த மட்டிலும் சொல்கிறேன். நான் கொஞ்சங்கூடக் குத்தகைக்கு நிலத்தைவிடவில்லை. பிறருடைய நிலங்களை வேண்டுமானால் குத்தகைக்கு வைத்திருக்கிறேன். அவ்வளவுதான். எனக்காக நான் சொல்லவில்லை.

ஆவாரை யாரே அழிப்பார்

என்பது உங்களுக்குத் தெரியும். மேலே சொல்லவில்லை. சட்டத் தின் மூலம் யாரையும் அழித்துவிட முடியாது. ஆனால், இந்த மசோதா யாரையும் வாழவிடாது. உழைக்காது பல தொந்தரவு களைக் கொடுத்துக்கொண்டிருக்கிற பொல்லாதவர்களைத் தான் வலுப்படுத்தும். ஆகவே இந்தச் சட்டத்தை அடியோடு கைவிட்டு விடுவதுதான் நன்றாக இருக்கும். இதனால் உற்பத்தி பெருகாது, சங்கடங்கள் நீங்காது, பலவிதமான தொந்தரவுகள் ஏற்படும்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1969 பிப்ரவரி 28

சிறுநிலக்காரர்களைப் பெரிதும் பாதிக்கும், ஆகவே இதைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நமது மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற மசோதாவை நிறைவேற்றுமுன் ஒருசில வார்த்தைகளைச் சொல்கிறேன். அதாவது 1955-ம் வருடத்தில் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தில் அமைந்துவிட்ட சில கோளாறுகளை வைத்துக்கொண்டு அந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் தோற்கடிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக வேலை செய்து வருகிற விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்றுவது தடுக்கப்படவில்லை. இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா சாகுபடியாளர்கள் யார், நிலக்காரர்கள் யார் என்று பதிவு செய்கிற மசோதா. இதுதான் சாகுபடியாளர்களுக்கு நேரிடையான பாதுகாப்பாக அமையும். நமது மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் சொன்னார், இந்த மசோதாவை எதிர்க்கவேண்டும் என்பதாக. அவர் நேரிடையாக விவசாயம் செய்கின்றவர்கள். நேரிடையாக சாகுபடி செய்கின்ற நிலங்கள், அந்த நிலச்சொந்தக்காரர்களுடைய உரிமைகள் இதனால் பாதிக்கப்படாது.

நேரடியாக நிலத்தில் பாடுபடக்கூடிய சாகுபடியாளர்களை இஷ்டப்பட்டால் வைத்துக்கொள்வது, இல்லாவிட்டால் மாறி மாறிக் கொடுப்பது போன்ற நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகத் தான் இந்த மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு அவசியம் என்பதை சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் உணர்கிறார்கள். இதற்கு முன்னால் சாகுபடி செய்கிறவர்கள் மூன்றுகள் தயாரித்து, அதாவது ஒப்பந்தப் பத்திரம் தயாரித்து, ஒன்றை தாலுகா ஆபீஸில் கொடுக்கவேண்டும், ஒன்றை நிலச் சுவான்தாரிடம் கொடுக்க வேண்டும், இன்னொன்றை தானே வைத்துக் கொள்ள வேண்டுமென்று இருந்தது. பல இடங்களிலே அப்படி ஒப்பந்தப் பத்திரங்கள் இல்லாத நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம். வாய்மூலமாக இருந்த வேண்டும் இல்லாவிட்டால், அதற்கு ஒப்புக்கொள்ளாத விவசாயியை நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூட நிலைமை இருக்கிறது. யார் யார் எந்த எந்த நிலங்களிலே சாகுபடி செய்கிறார்கள் என்பதைப் பார்த்து வைத்துக் கொண்டால் சிக்கல்கள் வராது. அந்த முறையிலே நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன். ஆனால் இதற்கு ஒரு சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன்.



1969 பிப்ரவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

இந்த மசோதாவானது, பற்பல நாள்களிலே இதை அமலாக்க வேண்டுமென்று சொல்கிறது, அதை மாற்றி ஒரே சமயத்திலே அமலாக்கலாம் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களிலே விவசாயத் தொழிலாளர்கள் நிலங்களிலேயே வீடுகள் கட்டி இருக்கக்கூடிய நிலைமை இருப்பதாலே, அவர்களுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் அவர்களை வெளியேற்றி விடாமல் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சப்-டெனன்ட் என்று வருகிற ஷரத்தை இதிலே நீக்கியிருக்கிறார்கள். அதையும் இதிலே சேர்த்துக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களிலே பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் அதனால் பாதுகாப்பு கிடைக்கும்.

நம்முடைய உண்மையான நோக்கம் பாடுபடக்கூடிய விவசாயிகள் நிலத்திற்கு உடமையாளராக ஆகவும், எந்தவிதமான உழைப்பும் இல்லாதவர்கள் உரிமை கொண்டாட முடியாத நிலைமையும் ஆகும். பாடுபடக்கூடியவர்கள் பதிவு செய்துகொண்டால் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றமுடியாதபடி பாதுகாப்புக் கொடுத்து, அதே நேரத்திலே உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கம் கொடுத்தும் அதன்மூலம் நல்ல பல காரியங்களைச் செய்ய முடியும் என்ற அளவிலே இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவில் இருக்கக்கூடிய பிரிவுகளிலே மிகவும் முக்கியமானது இரண்டாவது பிரிவு, எட்டாவது உட்பிரிவு ஆகும். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புராட்டக்ஷன் ஆக்ட் கொண்டுவந்ததின் நோக்கம் என்னவென்றால் நிலத்தை நேரிடையாக உழக்கூடியவருக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்திற்கு முழுத் தன்மை கொடுப்பதற்கு, நேரிடையாக விவசாயம் செய்யக்கூடிய டெனன்ட்ஸ்க்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்பதற்கு, உரிமைகளை பதிவு செய்யவேண்டுமென்று அதற்கான ஒரு ஏற்பாடு என்ற முறையிலே தான் இப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது முதல் சட்டத்தினுடைய நோக்கத்தை மேலும் விரிவு படுத்த, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவின் நோக்கங்கள் அமைந்திருக்கின்றன.

கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்டின்படி விவசாயிக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று இருப்பதைவிட அதிகமான நோக்கங்கள் இந்தச் சட்டத்திலே இருக்கின்றன என்று நான்

[திரு. சௌடி. என். சுந்தரபாரதி] [1969 பிப்ரவரி 28

கருதுகிறேன். இந்த மசோதாவிலே இரண்டாவது பிரிவிலே எட்டாவது உட்பிரிவிலே டெனன்ட் என்றால் என்ன என்று சொல்லக்கூடிய கருத்துக்களைக் கவனித்துப் பார்க்கவேண்டும். கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்டிலே டெனன்ட் என்றால் சொல்லப்பட்டிருக்கிற டெபனிஷனோடு இன்னும் மூன்று பகுதிகளை இந்த மசோதாவிலே சேர்த்திருக்கிறார்கள். டெனன்ட் என்பதற்கு மேலும் சில விளக்கங்கள் கொடுக்கவேண்டுமென்றால் அதை கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட் என்ற சட்டத்தில்தான் கொடுக்கவேண்டுமே தவிர, இதில் செய்யமுடியாது. அவர் தான் டெனன்ட் என்று சொல்லும்பொழுது இன்னின்னார் என்று வகைப் படுத்திச் சொல்லும்பொழுதுகூட அதை அந்தச் சட்டத்திலே செய்வதுதான் முறையாகுமே தவிர இந்த மசோதாவில், முதல் சட்டத்தை எக்ஸிக்யூட் செய்கிற இந்த மசோதாவிலே சொல்வது, அந்த வகையிலே டெபனிஷனை இதிலே என்லார்ஜ் பண்ணுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே புதிய, புதிய கருத்துக்கள் எல்லாம் வருகின்றன. முதலாவது இச்சட்டத்திலே டெனன்ட்ஸ் ரைட் நெகோஷியபிள் ரைட் ஆக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டத்திலே டெனன்ட்ஸ் ரைட் நெகோஷியபிள் ஆக இல்லை, தான் அந்த ஒரு ரைட்டை இன்னொருவருக்கு கொடுப்பதோ மாற்றுவதோ முடியாத நிலைமை இருந்தது, ஆனால் இன்றைக்கு இந்த மசோதாவின் மூலமாக அந்த ரைட் நெகோஷியபிளாக செய்யப்படுகிறது. ஆரம்பச் சட்டம் எந்த நோக்கத்திற்காக நிறைவேற்றப்பட்டதோ அந்த நோக்கத்தைவிட இன்னும் அதிகமான நோக்கங்களைக் கொண்டதாக இது வருகிறது. விவசாயியை வெளியேற்றக்கூடாது என்ற நோக்கத்தைத் தவிர புதிதாக டெனன்ட்ஸ் ரைட் அதிகமாகியிருக்கிறது. அப்படி உண்மையிலேயே இந்தச் சபை கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ரைட்டுகளை அதிகப்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அதை முதலாவது சட்டத்திலேதான் செய்ய வேண்டுமே தவிர இதிலே செய்வது முறையாகாது.

சப்-டெனன்ட் என்று வருகிறபொழுது, ஒரு டெனன்ட் இன்னொரு டெனன்ட்டை நியமிக்கிறார். He can enlarge his own right என்று இருக்கிறது. அதுவும் முதல் சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கிறது. அந்த டெனன்ட், இன்னொரு டெனன்ட் அல்லது ஒரு சப் டெனன்ட்டைக் கிரியேட் பண்ணலாம் என்பதை அமலாக்க வேண்டுமென்று இந்தச் சபை விரும்பினால் அதை முதல் சட்டத்திலேதான் செய்யவேண்டுமே தவிர இதிலே செய்வது என்பது முறையாகாது. எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். கல்டிவேட்டிங் டெனன்ட் என்பதற்கு டெபனிஷன் இதில் மாறுபாடாக இருக்கிறது. இம்ப்ளைடு ஆர் எக்ஸ்பிரஸ் கான்ட்ராக்ட் வித் லேண்ட் லார்டு என்று இருக்கிறது. சப்-டெனன்ட் என்று வருகிறபோது, இம்ப்ளைடு ஆர். எக்ஸ்பிரஸ் அக்ரிமெண்ட் என்று இருப்பதாகச் சொல்ல முடியாது.



1969 பிப்ரவரி 28] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

எனவே, அந்த முறையில் பார்த்தாலும் கூட விரிவுபடுத்தப்பட்டிருக்கும் 'டெஃபனிஷன்' சரியாகாது. இது கோர்ட்டுக்குப் போனால் கூட 'டெஃபனிஷன்' இருப்பது செல்லுபடியாகாது என்று சொல்லக் கூடிய நிலைமைதான் ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே, இரண்டாவது பகுதியிலே இருக்கக்கூடிய 8-வது உட்பிரிவுக்கான திருத்தத்தை இந்த மசோதாவிலே கொண்டு வரக்கூடாது. 'டெஃபனிஷன்' கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் சட்டத்தின் மூலம் கொண்டு வரவேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. நா. காசிராமன்: இந்த மசோதாவின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, சிறு நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும், நிலத்திலே பாடுபடக்கூடிய விவசாய மக்களுக்குப பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தில் இந்த மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இந்தச் சட்டத்தில் இருக்கும் ஷரத்துக்களையும், விதிகளையும் பார்க்கும்போது மறைமுகமான வழியில் அதிகப்படியான நிலங்கள் ஒருவருடைய கன்ட்ரோலுக்கே போகக் கூடிய நிலைமை இருக்கிறது. இதை 'மனுபலி ஆன் தி கண்ட்ரோல் ஆஃப் தி லாண்டு' என்றுதான் சொல்ல வேண்டும். சிறு நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் பார்த்து நிலத்தில் போட்டிருக்கும் முதல் கைக்கு வந்தால் போதும் என்று நிலத்தை விட்டு விட்டுப் போகும் நிலை வரும். இதனால் பெரும் பணம் படைத்தவர்கள் மறைமுகமான வழியில்—உச்ச வரம்புச் சட்டம் இருந்தாலும் கூட—அதிகமான நிலங்களை வைத்திருக்கக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும். இந்தச் சட்டம் வந்தால் சிறு நிலச்சுவான்தார்களை நிலத்திலிருந்து ஓட்டவும், கோர்ட்டுகளுக்கும் அதிகப்படியான வக்கீல்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கவுந்தான் வழி ஏற்படுமே தவிர, விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பயன் தராது. இது உணவு உற்பத்திக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிப்பதாக இருக்காது. விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே இதைக் கொண்டு வந்திருந்தாலும்கூட, அவசர அவசரமாக இதை நிறைவேற்றுவதால் இதன் மூலம் ஏற்படக் கூடிய பின்விளைவுகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்து அந்த விளைவுகள் ஏற்படா வண்ணம் வழிவகைகளை ஏற்படுத்திக் கொண்ட பிறகு இதைக் கொண்டு வந்து நிறைவேற்றலாம். ஆகவே, தற்போதைக்கு இதை நிறுத்தி வைத்து தீர்க்கமாகப் புனராலோசனை செய்த பிறகு இதைக் கொண்டு வர வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் அவர்களிடத்திலே ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் பிரிவு 2, உப பிரிவு 8 ஐடம் (எ)-ல் 'சப்-டெனன்ட்' என்று இருந்தது. இப்போது 'மாட்டுவாரம்தார்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 'சப் டெனன்ட்' நீக்கப்படுவதால் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது எப்படி? பிரிவு 3-ல் பேசும்போது சேர்மன் அவர்கள் அதற்கான திருத்தம் சீக்கிரம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். சப் டெனன்ட்சுக்குப் பாதுகாப்புக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது ஒரு கொள்கை அடிப்படையான அம்சம். இந்த மசோதாவின் நோக்கத்தையும் இந்த அரசாங்கம் ஒளிக்கத் தேவையில்லை, மறைக்கத் தேவையில்லை. இது ஒரு சாதாரண மசோதா அல்ல. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த மாமன்றத்தில் நிறைவேறி இருக்க வேண்டிய காரியத்தினுடைய முன்னறிவிப்பாகவும், தோற்றுவாயாகவும்தான் இந்த மசோதா வந்திருக்கிறது என்பதுதான் நான் சொல்ல வேண்டிய ஒன்று. நிலப்பிரச்சினையில் நிலத்திலே உழுபவர்களுக்கு என்ன சங்கடம், சாகுபடியாளர்களுடைய பாதுகாப்பு நிலைமை என்ன, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கடந்த 20 வருஷ காலமாகச் சமாளித்து விட்டோமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இது வெறும் குடியானவர் பிரச்சினை மட்டுமல்ல, கூலிப் பிரச்சினை மட்டுமல்ல, இந்த நாட்டில் இருக்கும் உணவு உற்பத்திப் பிரச்சினை ஆகும். புதிதாக விவசாயத்தில் மாறுதல் ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதிலே அடிப்படையான அம்சம் பெர்டிலைசர் கொடுப்பது, கடன்கள் கொடுப்பது, கிணறுகள் வெட்டுவது ஆகியவற்றோடு உறவு முறைகளும் சரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும். இதற்கு முன்பு சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் என்று எவ்வளவோ செய்யப்பட்டன என்றாலும், இது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

காலையில் வெண்மணி சம்பவத்தைப் பற்றி விவாதித்தபோது அது ஒரு மிரர் போல்—பொதுமக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போல் இருந்தது. அதனுடைய பொருள் என்ன? மிராசுதாராக இருக்கட்டும், குடியானவனாக இருக்கட்டும் அல்லது வேறு யாராகவேனும் இருக்கட்டும். இந்தப் பிரச்சினையின் விளைவாக இதைக் கீறி, கிழித்து ரண சிகிச்சை செய்ய வேண்டிய பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் விளங்குகிறது. ரெக்கார்டு ஆப் டெனன்சி பதிவேடு மசோதா சாதாரணமான





சம்பிரதாய மசோதா அல்ல. திட்டமிட்டிருக்கிற பெரிய நிலச் சீர்திருத்தங்களுக்கு, உறவு முறைகளுக்கு, சாகுபடியாளர்கள், குடியானவர்கள், நிலத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு அவர்களுடைய நியாயமான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுவதற்கான 'காம்ப்ரிஹென்சிவ் லாண்ட் ரிஃபார்ம் பில்' லுக்கு முன்னறிவிப்பாக இதைக் கொண்டு வருகிறோம். இந்தியாவின் பூபாகத்தில் நிலச் சீர்திருத்தங்களுக்கான பல்வேறு மார்க்கங்களை எல்லோரும் தேடினால்கூட, இப்படித்தான் துவங்கவேண்டுமென்று கூறி வெளி மாநிலக்காரர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். இந்த மசோதாவை ஒரு அடித்தளமாக நிர்மாணிக்கிறோம். இன்னும் செய்யப்பட இருக்கிற பெரிய நிலச் சீர்திருத்தங்களுக்கான பெரிய அஸ்திவாரமாக இந்த மசோதா இருக்கிறது. நான் இந்த மசோதாவை நிறைவேற்றும் இந்த நாளை வரலாற்றிலேயே ரொம்ப முக்கியமான நாள் என்று கருதுவேன். பொறுக்குக் குழுவில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பல கருத்துக்களைக் கூறி இதை ஏகமனதாக வரவேற்றதற்காக நான் எல்லாக் கட்சியினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய பொருளாதார நிலையில் உணவு நிலைமையில் நெருக்கடி இருக்கிறது. நாம் முன்னாலே நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டம் வெறும் பேப்பர் லெஜிஸ்லேஷன்தான் என்று வெளியே இருப்பவர்கள் எல்லாம் குற்றம் சாட்டுவதைப் பார்த்தோம். அது உச்ச வரம்புச் சட்டம் அல்ல, மிச்ச வரம்புச் சட்டந்தான் என்று சொல்லும் அளவுக்கு நிலைமைகள் இருப்பதைப் பார்த்தோம். சாகுபடிதாரர் சட்டம், நியாய வாரச் சட்டம் என்று பல சட்டங்களை இயற்றியும் அது உடமையாளன்—நிலச்சுவான்தார் உறவு முறைகள் சுமுகமான முறையில் நிறைவேற்றத் தவறியிருக்கிறது. யாரும் வெட்கப்படத் தேவையில்லை. இந்தக் காரியம் துரும்பும் எரிமலையாகிவிடக் கூடாது வைக்கோல் போரிலே தீ வைக்கும் காரியங்களாக மாறி விடக் கூடாது. பொறுப்புணர்ச்சியுடன், நல்ல உணர்வுடன், நாட்டிலே உணவு உற்பத்தியைப் பிரதானமாகக் கொண்டு எடுக்க வேண்டிய காரியத்திற்கு இந்த மசோதா நிறைவேற்றப்படுகிறது என்று பெருமிதம் கொள்ளலாம்.

வெள்ளைக்காரன் காலத்தில் ஜமீந்தார்கள் இருந்தார்கள். அந்த ஜமீந்தாரி முறையை ஒழித்துவிட்டோம். முன்பெல்லாம் அனுபவிக்க வேண்டியவர்கள் சிலர், உழைக்க வேண்டியவர்கள் சிலர் என்ற முறை இருந்தது. அது சரியல்ல. முன்னாள் முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், காங்கிரஸ் சோஷலிஸம் இளித்தது, காகிதப் பூ மணக்காது என்று. சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த மசோதா இன்று நிறைவேறு இருக்கிறது. இவ்விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு. அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு என் நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நான் தனித்தனியாக பதில் அளிக்க விரும்பாததற்குக் காரணம் கொள்கைபூர்வமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கனவே மிகத் தெளிவாகத் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்துக்களைக் கொண்டது இது. ஆகவே, அவர்கள் கூறிய கருத்துக்களோடு ஒத்துக் கொள்ள முடியாததற்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா அவர்கள் ஒரு விளக்கம் கேட்டார்கள். இரண்டாவது க்ளாஸ் எட்டாவது உப விதியில்:

"A sub-tenant, if he contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land."

என்பது சேர்க்கப்பட்டு இருக்கிறது. மாட்டுவாரம்தார் சப் டெனன்ட்களாக இருந்தும் கூட மூல மசோதாவில் இணைக்கப் படாததால்தான் இது. அவர்கள் வெளியேற்றப்படுவார்களா, அவர்கள் நிலங்கள் பாதிக்கப்படுமா என்பதுபற்றி அச்சப்படத் தேவையில்லை பொறுக்குக் கமிட்டியில் இதெல்லாம் பேசப்பட்டது. இது சம்பந்தமாக

'A Bill further to amend the Madras Cultivating Tenants Protection Act, 1955 and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956'.

என்று சப் டெனன்ட்களின் நலனைப் பாதுகாக்க திங்கட்கிழமையன்று அந்த மசோதாவை இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இதற்கு இந்த மன்றம் ஒத்துழைக்கவேண்டும். ரிக்கார்ட்ஸ் ஏற்படும் வேலைகளில் எல்லோரும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** ஒரு சிறிய சந்தேகம். இந்தச் சட்டப்படி லான்ட் ரிக்கார்ட்ஸ் ஆபீசர் முன் உண்மையிலேயே நிலத்தில் கூலி வேலை செய்து கொண்டிருக்கிற ஒருவன் அல்லது செய்யாத ஒருவன் சாட்சியம் மூலம், வாய்மொழி மூலம்தான் தான் உழுவதாக அதிகாரியிடம் பொய் சொல்லி, 'பொய்யுடை ஒருவர் சொல்வன்மையினால் மெய்போலுமே, மெய்போலுமே' என்பதுபோல் பொய் சொல்லி அதை மெய்ப்பித்துவிட்டால் பூமியின் சொந்தக்காரனின் கதி என்ன ஆகும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது கற்பனையான வாதம். இவ்வளவு உறுதி படைத்த அவர்கள் இப்படிக் கற்பனை செய்யத் தேவையில்லை. அதற்கான பாதுகாப்புகள் இருக்கின்றன. மேலே கலெக்டர் அவர்கள் விசாரிக்கவும், அப்பீல் செய்து





கொள்ளவும் எல்லாம் வழிமுறைகள் இருக்கின்றன. கிராமத்திலுள்ள நிலை எல்லோருக்கும் தெரிந்ததுதான். அப்படி ஏமாற்றிவிட முடியாது. ஆகவே, அதுபற்றி பயப்படத் தேவையில்லை. அச்சத்திற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லையென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** கலெக்டர் அவர்களின் முடிவுதான் முடிவு என்று இப்போது சொல்லப்படுகிறது. கீழ் உள்ள அதிகாரிகளின் அபிப்பிராயத்தைத்தான் அநேகமாக கலெக்டர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். கோர்ட்டுக்கு போவதற்குப் பாதுகாப்பு இல்லை. அவர்களின் உரிமைகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** ஒரு கட்சிக்குத்தான் இது பாத்தியதை என்பதில்லை கீழ் உள்ள அதிகாரிகள் சொல்வதைத்தான் கலெக்டர் கேட்பார் என்று சொல்வது அபவாதம். கீழ் உள்ளவர்கள் சொல்வதில் நியாயம் இருந்தால் அதைக் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது ? கேட்கத்தான் வேண்டும். இந்த மன்றத்தில் அப்படிச் சொல்வது நிர்வாக இயந்திரத்திற்கு கொடுக்கவேண்டிய மரியாதையை சிறிது பலஹீனப்படுத்துவதாகும். மாவட்ட தலைமை அதிகாரிகளைப்பற்றி அப்படிச் சொல்லக் கூடாது. அவர்கள் நியாயமற்றதைக் கேட்டுக் கொள்வார்கள் என்பது அவர்களின் தன்மைக்குச் சவால் விடுவது போலாகும். அந்தக் குற்றச்சாட்டு சரியானதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 18/68) ஆய்வுக்குழு திருத்தியமைத்தவாறு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா ஆய்வுக்குழு திருத்தியமைத்தவாறு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

"இரண்டாவது பிரிவு மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir.

I move the following amendment :—

'In clause 2, in sub-clause (8), in item (a), for sub-item (i), substitute the following sub-item, namely :—

(i) A mattuvaramdar referred to in clause (a) or clause (b) of section 7 of the Tiruchirappalli *Kaiaeruvaram* and *Mattuvaram* Act, 1958 (Madras Act XXXVI of 1958); and".

THIRU S. ALAGARSWAMY : Sir, I move the following amendments :—

(i) In sub-clause (4) *for* the word " and " occurring after the words " appurtenant thereto " and before the words " any house ", *substitute* the word " or ".

(ii) In sub-clause (4) *for* the words " tenant under the same tenancy agreement " *substitute* the words " farm labourers working under such landowners;".

The amendments were duly seconded.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the following amendment :—

' In sub-clause (7) delete the word " Deputy ".

The amendment was duly seconded.

THIRU A. A. SUBBA RAJA : Sir, I move the following amendment :—

In sub-clause (8) in item (a), for sub-item (i) substitute the following sub-item, namely :—

(i) a *mattuvaramdar* referred to in clause (a) or clause (b) of section 7 of the Tiruchirappalli *Kaiaeruvaram* and *Mattuvaram* and *Tirunelvely Pethuvaram* Act, 1958 (Madras Act XXXVI of 1958) and ".

The amendment was duly seconded.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில் அது இந்த மசோதாவிற்கு மிகமிகத் தேவையான திருத்தமாகும். என்னுடைய திருத்தம் ஒரு 'ரெக்கார்டு ஆபீசர்' என்கின்ற அதிகாரியைப்பற்றிய திருத்தமாகும். இந்த அதிகாரி யார் என்பதைக் குறிப்பிடுவேன், 'டெபுடி தாசில்தார்' என்பவரைக் கடைசி அதிகாரியாக வைத்து அதற்கு மேலே உள்ள அத்தனை அதிகாரிகளும் என்று சட்டமாக்கப்படுமேயானால், இதன் மூலமாக அவர்கள் இந்தச் வைத்திருக்கிறார்கள். பொறுக்குக் கமிட்டியிலேகூட ஆலோசிக்கப் பட்டிருக்கிறது. அதிலே கூட,

The Chairman said that the provision was only 'not below the rank of Deputy Tahsildar' and therefore it could be a Tahsildar or Revenue Divisional Officer.

என்பதாக ரெக்கார்டு ஆபீசர் என்னும் அதிகாரி தாசில்தாராக இருக்க வேண்டும் என்ற நிலைமை விவாதிக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினாலோ பின்னாலே அந்த நிலைமாறி,

" However, since a Deputy Tahsildar also could be the Record Officer, he could be empowered suitably to carry out his functions ".



என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரெக்கார்டு ஆபீசர்களாக டெபுடி தாசில்தார்களை நியமிப்பதிலேயுள்ள சில சங்கடங்களை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டெபுடி தாசில்தார்கள் என்று இந்த மசோதாவின் மூலமாகச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே இந்தச் சட்டத்தின் விளைவாக தாவாக்களை விசாரிக்கும் நீதிபதிகளாக இருந்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள் ஆகிறார்கள். டெபுடி தாசில்தார்கள் நம்முடைய வட்டங்களிலே மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். 6, 7, 10, 12 என்றுகூட இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வட்ட அலுவலகத்தில், தாலுக்கா அலுவலகத்தில் டெபுடி தாசில்தார்கள் உட்கார என்று ஒரு அறைகூட கிடையாது. பல டெபுடி தாசில்தார்கள் மற்றக் குமாஸ்தாக்களோடு உட்கார்ந்து பணிபுரியும் நிலையிருக்கிறது. பல வழக்குகள் வந்து ஒரே நேரத்தில் பல டெபுடி தாசில்தார்கள் இம்மாதிரியான வழக்குகளை விசாரிக்கும் நிலை ஏற்பட்டால் தாலுக்கா அலுவலகம் பூராவும் பெருவாரியான விவசாயிகள், மற்றும் அத் தொழிலே ஈடுபட்ட மற்றவர்களைக் கொண்ட கூட்டமாக அமைந்து விடுமே தவிர அவர்கள் உட்காரக்கூட இடம் இருக்காத நிலையேற்படும்.

அதோடு மட்டுமல்லாமல், டெபுடி தாசில்தார்களைப் பொறுத்த வரையில் இன்னொரு நிலைமையும் இருக்கிறது. அவர்கள் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க ஒரு அதிகாரத்தைக் கொடுப்பதற்காகப் பயிற்சி பெறுவதற்காக இப்பொழுது கோர்ட்டுகளிலே கிரிமினல் வழக்குகள் வேறு அவர்களுக்குத் தரப்படுகிறது. அதோடு இந்த வழக்குகளையும் விசாரிக்கும் வேலையும் வந்துவிட்டால் அவர்கள் செய்யக்கூடிய வேலைக்கு அது குந்தகமாக இருக்கும்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். டெபுடி தாசில்தார்களைப் பொறுத்தவரையில், அவர்கள்தான் இந்தச் சட்டத்திற்கு அஸ்திவாரமாக அமைகிறார்கள். அவர்கள் இதை மிகப் பொறுப்போடு செய்தாக வேண்டும். அந்த அதிகாரியின் முன்னாலே சென்று வழக்கை விசாரிக்கின்றவர்களும் சரி, வழக்கிலே ஈடுபட்டிருக்கின்ற இரு தரப்பாரும் சரி, அந்த இடத்திற்கு ஒரு மரியாதை, அந்த அதிகாரிக்கு ஒரு மரியாதை தரவேண்டும். அந்த நிலை ஏற்பட்டால்தான் நியாயம் நடக்கின்ற நிலைமையும், நியாயம் வழங்கப்படும் என்று சூழ்நிலையும், எண்ணமும் மக்கள் மத்தியிலே ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை தாசில்தார்களை வைத்தால் ஓரளவுக்குச் சரிசெய்யும், அல்லது இந்தச் சட்டத்தின் நோக்கங்களை முழுமையாகப் பெறத்தக்க அளவிலே முடியும். அமைச்சரவர்கள் பொறுக்குக் கமிட்டியிலே உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். டெபுடி தாசில்தார்கள் என்றிருந்தாலும் தாசில்தார்களையே நியமித்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். தாசில்தார்கள்தான் கடைசி என்ற நிலை இருந்தால் அச்சத்திற்கே இடமில்லாமல் போய்விடும். ஏனென்றால்

அமைச்சரவர்களின் உறுதியைப் பின்னாலே வருகிற மற்றவர்கள் மாற்றலாம், அல்லது எந்தக் கருத்திலே, எந்த எண்ணத்திலே உறுதி தரப்படுகிறதோ அந்தக் கருத்தும், எண்ணமும் பின்னாலே வருகிறவர்களாலே மாற்றப்படலாம் அல்லது ஏற்கப்படாமல் போகலாம். எனவே, சட்டமாக்கும் நேரத்திலே இதனைக் கருத்திற் கொண்டு தாசில்தார்கள் இதை விசாரிக்கின்ற அதிகாரிகளாக இருக்க வேண்டுமென்று ஆக்கினால் மிகவும் நன்மை பயக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு அமைச்சரவர்களுக்கு நிறைய வழக்கறிஞர்கள் நண்பர்களாயிருக்கிறார்கள். சட்டமன்றத்தில்கூட வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். டெபுடி தாசில்தார்கள் வழக்கை நடத்துவதாலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்று எல்லா வழக்கறிஞர்களுக்கும் மிக நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இதிலேயுள்ள பல்வேறு சங்கடங்களையும் நான் இந்தச சட்டத்தின் மூலம் விரிவுபடுத்த விரும்பவில்லை என்றாலும்கூட அந்தச் சங்கடங்கள் அமைச்சரவர்கள் உள்பட எல்லோருக்கும் தெரியும் என்பதால் டெபுடி தாசில்தார்கள் என்ற நிலையை மாற்றி தாசில்தார்களை ரெக்கார்டு ஆபீசர்கள் என்ற நிலையில் வைத்தால் அதனால் ஒரு படி மரியாதை பெறும், சங்கடங்கள் தீரும், நிலைமைகள் மாறும் என்று கூறிக் கொண்டு அதனை அமைச்சரவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள், என்னுடைய திருத்தத்தை ஏற்பார்கள் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இரண்டாவது பகுதிக்கு நான் திருத்தம் கொடுத்ததின் நோக்கமே, விவசாயத் தொழிலையே பரம்பரை பரம்பரையாக நம்பி, நிலத்தை நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டு வரக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் அந்த நிலங்களில் குடிசைகள் அமைத்து, வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலத்தைப் பதிவு செய்யும் முறையிலே இடம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, இந்த 'மாட்டு வாரம்' என்று போட்டிருப்பதிலே 'பேத்து வாரம்' என்பதையும் சேர்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். திருநெல்வேலி ஜில்லாவிலே 'பேத்து வாரம்' என்பது இருக்கிறது. பேத்து வாரம் -என்று, நிலச் சொந்தக்காரர்கள் அங்கே நிலத்திற்கு உழுவதற்கு வேண்டிய அத்தனை சாதனங்களையும் கொடுக்கிறார்கள். அதனை கொண்டு குடும்பத்தோடு சென்று உழைப்பை அளித்துப் பாடுபடுகிறார்கள். அந்த முறை இருக்கிறது. பிற்காலத்திலே மகசூல் வரும்பொழுது உண்டான செலவை யெல்லாம் எடுத்துக்கொண்டு மீதி இருப்பதை வார முறையிலே





பிரித்துக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட கஷ்டமான நிலை இருக்கிறது. எல்லாம் சேர்த்துவிட்டு திருநெல்வேலி ஜில்லாவிலேயுள்ள அந்த வாரத்தை மாத்திரம் இதில் சேர்க்காமல் இருப்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. அதையும் சேர்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக்காரர்கள் பற்றிச் சொன்னால் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சொன்னபடி நிலத்தைப் பிடுங்கி அவர்களிடத்தில் கொடுப்பது என்பது இல்லை. கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருப்பவர்களை உடனே வெளியே போ என்று சொல்வது சரியல்ல. ஜனநாயக முறையிலே வாரம் முறையில் இரண்டு பேருக்கும் எப்படிப் பிரிப்பது என்பதுதான் சண்டை. அந்தச் சண்டையின் பிரச்சினையைத்தான் தஞ்சாவூரிலே பார்க்கிறோம். சர்க்காரின் கடமை, இரண்டு பேர்களின் உழைப்பையும், உரிமைகளையும் பார்த்து நல்ல விதத்திலே இப்படிப்பட்ட வாரங்களை எப்படிப் பிரிப்பது என்பதைச் செய்ய வேண்டும். கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கும், வக்கீலகளுக்குச் சந்தோஷமாக இருக்கும் என்றால் அதற்கு ஒரு வரைமுறையை ஏற்படுத்தி விட்டால் கோர்ட்டுக்குப் போக வேண்டிய தேவையில்லை, செலவு செய்ய வேண்டிய தேவையில்லை. இதனுடைய உள்ளேயிருக்கும் கருத்து நில உடைமையாளர்கள் நிலத்தைவிட்டுப் போவது என்பது அல்ல. அது அவர்களுக்கும் பாதகம். மகசூலை அவர்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறோம். ஆனால் பாடுபடக் கூடியவர்களை உடனே விரட்டுவது என்றால் அவர்கள் சாக வேண்டியதுதான். உடைமைகளை வைத்திருப்பவர்கள் கொஞ்சம் பேர். பாடுபடக்கூடியவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள். ஜனநாயக உரிமைப்படி பார்த்தால்கூட மெஜாரிட்டி பக்கம்தான் இருக்க வேண்டும். அப்படிப்பார்த்தால் ஒரேயடியாக விட்டுச் செல்லுங்கள் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அதை நாம் செய்யச் சொல்லவில்லை. இரண்டு பேர்களுக்குமிடையில் மகசூலை எப்படி பிரிப்பது என்பதைத் திட்டவட்டமான முறையில் நல்ல விதத்தில் செய்ய வேண்டும் என்பதை மட்டும் சுருக்கமாகக் கூறிக் கொண்டு இந்த பேத்துவாரத்தையும் இதிலே சேர்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நான் கொடுத்த அமெண்ட்மெண்டிலேகூட கொஞ்சம் தப்பு இருக்கிறது. 'பிரின்ஸிபல் ஆக்ட்'க்கே அமெண்ட்மெண்ட் கொண்டு வந்தது மாதிரி இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். திருச்சிராப்பள்ளி கையேர் வாரம்—மாட்டு வாரம் 58 ஆக்ட் என்று இருக்கிறது. அந்த ஆக்ட்டுக்கே திருத்தத்தைக் கொண்டு வந்தது மாதிரி இருக்கிறது.

பின்னாலே அமைச்சரவர்கள் பார்த்து இதற்கான ஒரு திருத்தத்தைக் கொடுத்து இதையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சரவர்கள் இதுபற்றி ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பகல் 6-00 *மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த இரண்டாவது கிளாஸ் சம்பந்தமாக இரண்டு மூன்று பிரச்னைகள் வந்திருக்கின்றன. அவைகளுக்கு மட்டும் நேராக விளக்கம் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். ஒன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம். அவர்கள் 'டெபுட்டி' கூடாது என்று சொல்கிறார்கள். அவருடைய திருத்தத்திற்கு ஆதாரவாக பொறுக்குக் குழுவிலே நான் கூறிய கருத்தையும் கூறினார்கள். அதையேதான் நான் மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய கருத்திலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. தாசில்தார் இருக்க வேண்டும் மென்பதிலே ஆட்சேபனை இல்லை. ஆனால் கூடுமானவரையிலே தாசில்தாரே பார்க்கலாம் என்று சொன்னதாகச் சொன்னார்கள். இப்பொழுதும் மாற்றிக் கொள்ளவில்லை. அதையே வைத்துக் கொள்ளலாம். ஆனால் தாசில்தாரே போகலாம், அவர் தகுதிக்குக் கீழே யாரும் போகக் கூடாது என்று போட்டுவிட்டால் சில நிர்வாக அசௌகரியங்கள் ஏற்படும்—இந்த வேலை துரிதமாக நடப்பதற்கு நிர்வாகத்திலே சங்கடம் ஏற்படும். அதற்காகத்தான டெபுட்டி தாசில்தார் வரை என்று போட்டிருக்கிறோம். டெபுட்டி கலெக்டரை போடலாம் என்று சொன்னார்கள். அவர்களைப் போட்டால் வேறு வேலைகளைச் செய்வதற்கு இடம் இருக்காது என்பது மட்டுமல்ல, அந்தனை டெபுட்டி கலெக்டர்கள் அகப்படமாட்டார்கள் இந்தப் பணியை ஆற்ற. இப்பொழுது வருவாய்த்துறை அமைச்சர் என்ற முறையிலே 'டெபுட்டி' தாசில்தார் பதவியையே ஒழித்துவிட்டு தாசில்தாராக ஆக்கிவிட வேண்டுமென்ற கருத்து அரசாங்கத்தினுடைய தீவிர பரிசீலனையில் இன்றைக்கு இருந்து கொண்டு வருகிறது என்பதனைக்கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இராமமூர்த்தி அவர்கள், ரெக்கார்ட் ஆபிசர் என்றால் தாசில்தார் அந்தஸ்திற்குக் கீழ் இருக்கக் கூடாது என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

" Record Officer means any officer of the Revenue Department not below the rank of Deputy Tahsildar, authorised by the Government by notification to exercise the powers conferred on and to discharge the duties imposed upon, the Record Officer under this Act for such area as may be specified in the notification ".

என்றுதான் இப்பொழுது இருக்கிறது. அவருடைய திருத்தப்படி போட்டுவிட்டால் சில நிர்வாக அசௌகரியங்கள் ஏற்படும் என்ற காரணத்தாலே இது இப்படி போடப்படுகிறதே தவிர, அவருடைய எண்ணத்தை நான் மனதில் கொண்டு, கூடுமானவரையில் அது மாதிரியாகவே செய்யலாம் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு அவர்களுடைய திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதே மாதிரியாக நம்முடைய நண்பர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒன்று சொன்னார்கள். மாட்டுவாரம் கிளாஸோடு பேத்துவாரம் சேர்க்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

" The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram and Tirunelveli Pethuvaram Act ". என்று

பேத்துவாரம் என்று சட்டத்தைக் காணோம். அதைப்பற்றிக் கூட பரவாயில்லை. நானே ஒரு திருத்தத்தை அமைச்சரவையின் சார்பாக அதிகாரபூர்வமாக கொடுத்திருப்பதாலே இதை வற்புறுத்த வேண்டியதில்லை. அந்தத் திருத்தத்தை ஒலிக்கிற வகையிலே நான் திருத்தம் கொடுத்திருப்பதாலே அவருடைய திருத்தத்தை வறுபுறுத்தத் தேவையில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. அழகர்சாமி அவர்களுடைய திருத்தம் மூல நோக்கத்தை தோற்கடிப்பதாக இருப்பதாலே அதையும் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு அதிகாரபூர்வமான என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த அமெண்ட்மெண்டிலே இந்த பேத்துவாரம் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி என்ன பேத்துவாரம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மாட்டுவாரத்திலேயே அதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** இந்த பேத்துவாரம் அவர்கள் கொண்டுவருகிறேன் என்று சொல்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படி ஒரு சட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் அமுலில் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த வில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தின் காரணமாக என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

THIRU A. A. SUBBARAJA : I do not press my amendment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. அழகர்சாமி, திரு. க. இராமமூர்த்தி, திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்ட படி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி;

"பிரிவு 3 இந்த மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

**திரு. சோ. அழகர்சாமி:** நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கிறேன்.

(i) In sub-clause (6) for the words 'within such period as may be prescribed' substitute the words 'within a period of three months from the date of notification under sub-section (5) of Section 3'

(ii) For sub-clause (8) (a), substitute the following:—

(8) (a) Before passing an order on an application under sub-section (6), the officer shall;

(i) hold an enquiry in the concerned village on such date as may be decided by him; but after giving notice of such enquiry not less than seven days before, to all the persons concerned, members and presidents of the concerned Panchayats and also to the public by beat of tom tom;

(ii) give a reasonable opportunity to the parties concerned to make their representation either orally or in writing; and

(iii) if the record officer decides any rectification or inclusion should be made, he shall pass an order accordingly.

திருத்தம் வழி மொழியப்பட்டது.

**திரு. சோ. அழகர்சாமி:** நான் கொடுத்திருக்கிற திருத்தத்தி னுடைய நோக்கம், இன்றிருக்கிற அரசினர் மசோதாவின்படி ஒரு திருத்தம் வேண்டுமென்று மனு செய்யக்கூடிய நேரத்தில் காலம் குறிப்பிடாமல் மனு செய்யலாம் என்றிருக்கிறது. அதை 3 மாதத்திற்குள் மனு செய்ய வேண்டுமென்று இருக்கவேண்டுமென் பது நான். ஏனென்றால் யார் சாகுபடியாளர்கள் என்று அந்த ஆவணத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து மனு செய்வதாலே அந்தத் காலம் குறிப்பிடாமல் இருந் தால் அதனுல் உண்மையாக பதிவு செய்யப்பட வேண்டிய சாகுபடி யாளர்கள் விடப்படக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, 3 மாதம் என்று இருந்தால் அந்தத் காலத்திற்குள் அவர்கள் பார்த்து மனுச் செய்யச் சொல்வதாக இருக்கும் என்ற முறையிலே இந்தத் திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நம்முடைய உறுப்பினர் அழகர்சாமி அவர்களுடைய இந்தத் திருத்தம் ஒரு காலவரை யறையைப் பற்றியதாக இருக்கிறது. காலவரையறையை சட்டத்திலே குறிப்பிடாமல் இருப்பதுதான் நிலைமைக்குச் சௌகரியமாக இருக்கும். 3 மாதம் என்பது 4 மாதமாகலாம், 5 மாதமாகலாம், 5 மாதம் தேவையிருக்கிறது என்ற நிலையில் 3 மாதம் என்று போட்டுவிட்டால் பிறகு சங்கடமாகவிருக்கும். ஆகவே, அவர் அந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் திரு. அழகர்சாமி அவர்களுடைய திருத்தம் திரும்பப் பெறப் படுகிறது.

மூன்றாவது பிரிவு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

பிரிவுகள் 4, 5 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 6 இந்த மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி:** நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

Re-number the existing clause as clause 6 (*a*) and add the following as sub-clauses (*b*) and (*c*):—

"(*b*) The authority specified by the Government under section 6 (a) shall give a reasonable opportunity to the parties concerned to make their representations either orally or in writing; and

(*c*) The concerned authority shall have sittings at the concerned taluk headquarters for the purpose specified in sub-section (b)."

**திரு. ஆ. கு. சுப்பையா:** நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** என்னுடைய திருத்தத்தின் நோக்கம் ஒரு தீர்ப்பிற்குப் பின்னால் மனுதார் அப்பீல் செய்யக்கூடிய காலத் தில், மேல் விசாரணை கோட்டாட்சித் தலைவராலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவராலோ நடத்தப்படக்கூடிய காலத்தில் சம்பந்தப்பட்ட தாலுகா தலைநகரத்தில் இருந்தால்தான் பாதிக்கப்

பட்டவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். பாதிக்கப்படும் சாகுபடியாளர்கள் இந்த அப்பீல் விசாரணைக்காக அதிக தூரம் போகாமல், அதிக செலவு செய்யாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். ஏழை சாகுபடியாளர்கள் ஒரு விசாரணைக்காக, விசாரணையில் தன்னுடைய வழக்கை எடுத்துச் சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்க முடியும், தாலுகா தலைநகரத்தில் விசாரணை நடந்தால். ஆகவே, தாலுக்கா தலை நகரத்தில் இந்த விசாரணை நடக்க வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், இதுபற்றியெல்லாம் பொறுக்குக் குழு விவாதித்து, இவைகளை யெல்லாம் விதிமுறைகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்று விடப்பட்டது. அந்த விவரங்கள் இந்த மசோதாவில் இடம் பெறவேண்டியதில்லை என்ற காரணத்தினால் தான் இந்தக் காரியம் செய்யப்பட்டது. அதற்கான விதிமுறைகளை நாம் செய்யும்பொழுது, இவை யெல்லாம் அனுசரித்து, அதற்கான விதிகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று வகையிலே இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டியதில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் அனுமதியோடு திரு. சோ. அழகர்சாமியின் திருத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகிறது.

ஆறாவது பிரிவு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 7 இந்த மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I move—

" In clause 7, for the words " any appellate authority " substitute the words " any record officer or appellate authority " and for the words and figure " under section 6 ", substitute the words " under this Act ".

**திரு. சோ. அழகர்சாமி** : 7-வது பிரிவுக்கு என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

Re-number the existing clause as clause 7 (*a*) and add the following as sub-clause (*b*)—

" (*b*) The District Collector shall, for the purpose of hearing the concerned parties as specified under the priviso to section 7 (*a*), have sittings only at the concerned taluk headquarters."



The amendment was duly seconded.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நான் திரும்பவும் அதையேதான் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் தாலுகா தலைநகரத்தில் உட்கார்ந்து விசாரணை நடத்த வேண்டுமா அல்லது மாவட்ட தலைநகரத்தில் உட்கார்ந்து கேட்கவேண்டுமா என்பதைப் பற்றி விதிமுறைகள் செய்யும்பொழுது, அதை அனுசரித்து செய்துகொள்ளலாம். ஆகவே, அந்த விவரங்கள் இந்த மசோதாவில் இடம் பெற வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி**: அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் அனுமதியோடு திரு. சோ. அழகர்சாமியின் திருத்தம் திரும்பப்பெற்றுக்கொள்ளப் படுகிறது.

அரசினர் திருத்தம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 7, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 8, 9, 10, 11 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" பிரிவு 12 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name—

(i) Delete the words " imprisonment for a term which may extend to three months or with ";

(ii) for the words " one thousand rupees ", substitute the words " five hundred rupees ".

**திரு. நா. காசிராமன்** : நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மிக முக்கியமான பிரிவைப் பற்றிய முடிவு எடுக்கும் இந்த வேளையிலே அதைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல

விரும்புகிறேன். இந்த மசோதா பொறுக்குக் கமிட்டியின் ஆய்வுக்கு விடப்படுவதற்கு முன்னால் இந்த மன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பொழுது சிறைத் தண்டனை கொடுக்கின்ற நிலைமை இந்த மசோதாவில் இல்லை. என்ன காரணமோ தெரியவில்லை, பொறுக்குக் கமிட்டியிலிருந்து மசோதா திரும்பிவரும்பொழுது இந்த விதியைச் சேர்த்திருக்கிறார்கள். சரியான விவரங்கள் தராவிட்டால் நிலச் சொந்தக்காரர்களுக்கு மூன்று மாத அளவுக்கு சிறை வாசம் அளிக்கலாம் என்பதற்கான ஒரு புதிய திருத்தத்தோடு இந்த மசோதா இன்றையதினம் வந்திருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும், அதிலும் முக்கியமான இந்தப் பிரிவைப் பொறுத்தவரையிலும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நிலம் படைத்தவர்கள் என்றாலே, அவர்கள் நிலப்பிரபுக்களாகத்தான் இருக்க முடியும் அல்லது நிலச்சுவான்தார்களாகத்தான் இருக்க முடியும், மிராசுதார்களாகத்தான் இருக்க முடியும் என்ற அளவிலே, வார்த்தைகளை மையமாக வைத்து, வார்த்தைகளுக்கு விளம்பரத்தைத் தேடி, நிலச் சொந்தக்காரர்களை அவமானப்படுத்துகிற நிலைமைதான் ஏற்படுகிறது. யார் நிலத்தை வைத்திருந்தாலும் அவன் விவசாயி என்று கருதப்படுகிற நிலைமை நாட்டில் நிலவ வேண்டும். சிறு நிலச் சொந்தக்காரர்கள் கூட, 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கும் சாதாரண விவசாயிகள் கூட, சமுதாயத்தில் பார்க்கிறபொழுது, அவர்கள் மிராசுதார்கள், அவர்கள் நிலப்பிரபுக்கள், நிலச் சொந்தக்காரர்கள் என்று சொல்கிற அளவிலே, நிலம் படைத்திருப்பது ஒரு குற்றம் என்ற அளவிலே, கருதப்படுகிற நிலைமை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. நிலம் வைத்திருப்பவர்கள் சமுதாயத்தில் வாழத் தகுதியற்றவர்கள், அவர்கள் சமுதாயத்திற்கு விரோதிகள், சமூக விரோதிகள் என்கின்ற அளவில் இன்றையதினம் அரசினரும் சரி, மற்றவர்களும் சரி அவர்களை ஒதுக்குகின்ற ஒரு நிலைமை நாட்டிலே உருவாகிக் கொண்டிருக் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து மனு செய்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும், ஒரு விவசாயி தன்னிடம் வைத்திருக்கிற நிலங்களைப் பற்றிய விவரங்களை அதிகாரிகளுக்குத் தருவதற்கான வழிவகைகளைச் செய்கிறது. இந்த விவசாயிகளைப் பொறுத்த அளவிலே நாட்டிலுள்ளவர்களும் சரி, அரசுப் பொறுப்பிலுள்ள அமைச்சர்களும் அறிவார்கள். மற்ற துறையிலே இருப்பவர்களைவிட இந்தத் துறையிலே இருப்பவர்களுக்குக் கல்வி அறிவு குறைவு என்பது மட்டுமல்ல, நாட்டில் நடப்பதுபற்றி மற்றவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்கள். எல்லாத் துறைகளிலும் உள்ளவர்களுக்கு இருக்கிற வசதிகளைவிட இவர்களுக்கு வசதிக் குறைவு என்பதை அறிவோம். சாதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் வருமான வரி செலுத்துபவர்கள், சொத்து வரி செலுத்துபவர்கள், ஏனைய இதுபோன்ற வரிகளைச் செலுத்துபவர்கள் தவறான கணக்குகளைத் தந்தால், அவர்களுக்கு பெனல்டி





டாக்ஸ், அபராத வரி, விதிக்கின்ற ஒரு நிலைமைதான் இருக்கிறதே தவிர, சிறைவாசம் செய்வதற்கான நிலைமை கிடையாது. தங்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களைப்பற்றிய குறிப்புகளை, விவரங்களை தெரிந்தோ, தெரியாமலோ தவறாகச் சொல்லிவிட்டால், நிலச் சொந்தக்காரர்களை அதற்காக ஜெயிலுக்கு அனுப்பக்கூடிய ஒரு அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த மசோதா வழங்குகிறது. சமுதாயத்தில் விவசாயிகளை எந்த அளவுக்கு நாம் மதிக்கிறோம், அரசியல் கட்சிகள் மற்ற நிலைமைகளைப் பேசிக் கொண்டே விவசாயிகளை எவ்வளவு கேவலமாக மதிக்கின்றன என்பதற்கு மசோதாவினுடைய இந்தப் பிரிவு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. இந்தப் பிரிவு சட்டமாக நிறைவேற்றப்படுமானால், அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மசோதா சட்டமானால் சமுதாயத்தில் ஒரு புரட்சி உண்டாக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் புரட்சியை உண்டாக்கப் போகும் ஒரு சட்டம் எடுத்த எடுப்பிலேயே இவ்வளவு கொடுமையான ஒரு அங்கத்தோடு நிறைவேற்றப்படுமேயானால், விவசாயிகளுக்கு எவ்வளவு பாதகம் இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டம் கோர்ட்டுக்குப் போகமுடியாத சட்டமாக இருககிறது. அதற்கு மேல், அதற்கு மேல் கோர்ட்டுக்குப் போகும் நிலைமை இருந்தால், தங்கள் நிலைகளைச் சொல்லி, விவசாயிகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால், சாதாரண ஒரு விவசாயிக்கு அவ்வளவு பணம் கிடையாது. எவ்வளவு பணம் செலவழித்தால் அவன் தன்னை மீட்டுக் கொள்ள முடியும் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒருவனுக்கு ஒரு அரை ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், அவனுக்குச் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது என்று வைத்துக் கொண்டால், அதிலிருந்து மீள அவன் தன்னுடைய அரை ஏக்கரையும் விற்று, தன்னுடைய வீட்டையும் விற்று, முடிந்தால், தன்னையும் விற்று மீண்டு வரமுடியுமா என்று பார்க்க வேண்டும். இந்த மசோதா நிறைவேறும் இந்த நேரத்தில் வருவாய்த் துறை அமைச்சரோடு, விவசாய அமைச்சரும் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலைகள் மிக நன்றாகத் தெரியும். இந்த வரிசையிலிருந்து நாங்கள் சொல்லுவதால், எதிர்க்கத்தான் சொல்லுகிறோம் என்று எண்ணக் கூடாது. இந்த உப பிரிவை வைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரை, அமைச்சர்களை மக்கள் மத்தியில் செல்வாக்கற்றவர்களாக ஆக்க முடியும் என்று நான் சொல்லவில்லை. விவசாயத்தைப் பொறுத்தவரையில், நாட்டில் இருக்கும் இத்தனை கட்சிகளும் வாயால் எவ்வளவு பேசினாலும், செயல் அளவில் விவசாயிகளிடம் அக்கறை கொண்டவர்கள்தானா என்பதில் ஐயப்பாடு இருக்கத்தான் செய்கிறது. விவசாயிகளை இனிமேல் தங்கள் நிலைமையைச் சரிக்கட்ட முடியாத அளவு கடன்காரர்கள் ஆகி, சமுதாயத்தில் நினைக்க முடியாத அளவிற்கு நிலைமைகள் கெட்டு, சிறை செல்லக் கூடியவர்களாக இருக்கும்

நிலைக்குக் கொண்டு வந்துவிடுவது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே, இந்தச் சிறைத் தண்டனை என்கிற நிலையை நீக்கிவிட்டு, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு, இதற்கு அபராதத் தொகை ரூ. 1,000 என்பதும் மிகவும் அதிகமானது. அதை ரூ. 500 என்று குறைத்து வைக்கலாம். இப்படிச் செய்து விவசாய சமூகத்தை நலமாக வைக்க முடிவு செய்யவேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, குடியானவர்களை நல்ல மானத்தோடு வைத்துக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் நிலம் வைத்திருக்கும் குற்றத்திற்காக அவர்கள் இழிவு படுத்தப்படக் கூடாது. ஆகவே, திரு. இராமமூர்த்தியினுடைய திருத்தத்தை ஏற்றுக் கொண்டு சிறை தண்டனையை எடுத்துவிட வேண்டும் என்று, மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, கொஞ்ச நேரத்திற்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர், கோவையைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி கவுண்டர், பொய்யையே சொல்லி, அதுவே மெய்யாகிவிட்டால் ஆபத்து வரும் என்று குறிப்பிட்டார்கள். அதற்காகவே இந்த ப்ரொவிஷனும் இருக்கிறது. அவர்கள் எழுந்தவுடன் நான் நினைத்தேன், திரு. ராமமூர்த்திக்கு பதில் சொல்லத்தான் எழுந்திருக்கிறார்கள் என்று. இந்தத் திருத்தம் ஒன்றும் கட்சிப் பிரசாரத்திற்காக இல்லை. (குறுக்கீடு.) அதுவும் சொல்லலாம். யாராவது ஒரு குடியானவன் பொய்யாகச் சொல்கிறான் என்றால், அதற்கு இந்தச் சிறைத தண்டனை என்கிற முறை. அதிலும், அது 'ஆல்டர்நேடிவ் பனிஷ்மெண்ட்' தான்.

THIRU D. S. AUDHIMOOLAM: It is an insult to land-owners.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வேண்டும் என்கிறவர்கள் அரசியல் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் தாராளமாகச் செய்து கொள்ளலாம். இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. தவறுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. அதுவும், 'either fine or alternative punishment' தான். ரூ. 1,000 என்றால் மட்டும் போதாது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஆக்ரமிப்பு ஏற்பட்டிருக்கிறது. சமுதாய உரிமைகள் வேட்டையாடப்பட்டிருக்கின்றன. பொய்யர்களுக்கு யாரும் வாதாடத் தேவையில்லை. நியாயத்திற்கு வாதாடுவதானால், நல்ல விதமாக இருக்கும். ஊரில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்றால், அதற்காக ஊரில் இருப்பவர்களெல்லாம் திருடர்கள் என்று பொருள் ...முடைய





வீட்டைப் பூட்டி வைத்தால், அடுத்த வீட்டுக்காரனை அவமதிப்பதாகவா அர்த்தம்? ஆகவே, இதுவும் 'penalty for failure to furnish information' என்று முன்னாலே ஒரு விதியிருக்கிறது. சொல்லாமல் இருந்தால் அதற்கு ஒருவகை தண்டனை. இங்கே தவறான தகவல்களைக் கொடுத்தால், அதற்கு வேறு வகையான தண்டனை. தகவல்களைச் சொல்லியே தீர வேண்டும் என்று இருக்கும்போது, உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுக்கும் போது, அதைத் தண்டிக்கவேண்டும். அதற்கு ரூ. 1,000 அபராதம் அல்லது மூன்று மாத சிறைத் தண்டனை என்று இருந்தால்தான் எச்சரிக்கையாக இருக்கும். ரூ. 1,000 என்பது ஒரு எல்லைதான். அதனால் ஆயிரம் ரூபாயே போட்டு விடுவார்கள் என்பதல்ல. இதுவும் அபராதம் அல்லது தண்டனை என்றுதான் இருக்கிறது.

ஆறாவது கிளாசில் ஒரு விதமாகப் பேசினார்கள். இப்பொழுது வேறு விதமாகச் சொல்லுகிறார்கள், அதற்கு நேர்மாறாகச் சொல்லுகிறார்கள் அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் நலனுக்காகச் செய்யப்படும் ஒரு புரட்சிகரமான காரியத்தில் தவறான செய்திகளைச் சொல்லுகிறவர்களுக்கு இந்தத் தண்டனை இருப்பது எந்த வகையிலும் தவறு இல்லை. இந்த மாமன்றம் அதை ஆதரிக்க வேண்டும். தவறு செய்பவர்களுக்கு ஆதரவாக இருக்கக் கூடாது. மாமன்றம் அதற்கு ஆளாகக் கூடாது. சமூகத்தில் கேடான காரியத்தைச் செய்பவர்களுக்கு உறுதுணையாக யாரும் இருக்கக் கூடாது. திரு. இராமமூர்த்தி அவர்களையும் இந்த சமாதானத்துடன் திருப்தியடைந்து, அவருடைய திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, முடிக்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்த வரையில், அமைச்சர் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நிலச் சொந்தக்காரர்களால் கொடுமை நடந்திருக்கிறது என்றார். அதைத்தான் நான் முன்னாலேயே சொன்னேன். ஒரு தவறான அடிப்படையில் எண்ணங்களை வைத்துக் கொண்டு நாம் சட்டத்தை அமைக்க முற்படுகிறோம். அதிகமான நிலம் படைத்த பட்டாதார்கள் எத்தனை பேர்கள்? மிக மிகக் குறைவான நிலம் வைத்திருப்பவர்கள்தாம் லட்சக் கணக்கானவர்கள் என்பதை விவசாய வருமான வரிச் சட்டம் கொண்டு வந்தபோது இதே அமைச்சர் தெரிவித்தார் என்பதை நாம் அறிவோம். ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் நிலத்திற்குள்ளாக வைத்திருப்பவர்கள்தான் அதிகம். அமைச்சர் சொல்லுகின்ற வாதத்தை எடுத்துக் கொண்டால், இப்படி 5, 10 ஏக்கர் வைத்திருக்கும் நிலக்காரர்களா கொடுமை செய்துவிட்டார்கள்?

அதோடு மட்டுமல்ல, இன்னொரு கோரிக்கை, விவசாயிகள் தெரிந்தோ, தெரியாமலோ தவறுகள் செய்துவிடலாம். விவசாயிகளைப் பொறுத்தவரையில் போகின்ற இடங்களில் எல்லாம் அச்சமி

வந்துவிடும். அவர்களை அறியாமல் தவறுகள் வந்துவிடும். இந்தத் தவறுகளுக்காக அவர்கள் சிறைவாசம் போக வேண்டுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வற்புறுத்துகிறார்களா ?

THIRU K. RAMAMOORTHY : Sir, I press my amendment.

திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 12, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 13 முதல் 20 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 18/1968), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றமானது இந்த மசோதாவைச் சட்டமாக்குவதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம். இதிலே பல புரட்சிகரமான கருத்துக்கள் இருக்கின்றன. இதைக் கொண்டு வந்தால் விவசாயிகளுக்குப் பெரும துன்பங்கள் எல்லாம் அகன்று விடும் என்று அரசினர் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதா சட்டமாகின்றபொழுது, மேலும் வருகின்ற சட்டங் களுக்கு, சிறு நிலச்சுவான்தார்களுக்குத் துன்பங்கள் எல்லாம் இல்லாத முறையில் இது அமையும் என்று எதிர்பார்க்கிறேன். விரிவான நிலச் சீர்திருத்தம் வரப் போகிறது என்று சொல்லப் படுகிறது. குடியானவர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டுமோ அவற்றையும். ஸ்திரத்தன்மை கொடுப்பதில் ஜென்மிகளுக்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இது சட்டமாகின்றது. இதை அமல் நடத்துவதில் சர்க்கார் அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும். கட்சி நோக்கோடு இல்லாமல் பொதுநலத்தைக் கருத்திற் கொண்டு செயல்படுத்த வேண்டும். இன்னும் சமுதாயத்திலே அடித்தளத்தில் இருக்கின்றவர்களுடைய துன்பங் களும் துயரங்களும் தீருவதற்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.





**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே இப்போது சட்டமாக்கப்படுகின்ற மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான விவசாயிகளால் எதிர்பார்க்கப்பட்ட சட்டம் இது. இதைத் தொடர்ந்து விவசாயத் தொழிலாளர்களுடைய மனைக்கட்டுகள் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படுவதும், அவர்களுடைய வாரக் குத்தகை சரியான முறையில் பங்கு கிடைப்பதற்கும் வழி செய்ய வேண்டும். நிலவுடைமைக்கு வரம்பு கட்டக்கூடிய வகையில், அதிகமான நிலம் வைத்திருப்பதைக் கட்டுப்படுத்தி, விவசாய மக்களுக்கு உரிமைகள் அளிக்கக்கூடிய மசோதாவாக இது அமையும் என்று எதிர்பார்க்கிறேன். இன்னும் விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு ஏற்பாடு செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த தமிழ்நாடு அரசாங்கத்திற்கு, தமிழ்நாட்டு விவசாய மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இன்று நிறைவேற்றுவதன்மூலம் தமிழ் நாட்டிலே, ஏன் இந்தியாவிலே, ஏன் ஆசியாக் கண்டத்திலே ஒரு பெரிய சாதனையைச் சாதித்துவிட்டதாக நமது ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு ஓர் எண்ணம். அது என்ன சாதனையோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். எந்தச் சட்டம் செய்தாலும் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு ஒரு விதி விலக்கு இருக்க வேண்டாமா ? காங்கிரஸ் கட்சி எதனால் அழிந்தது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தியாவில் எட்டு மாநிலங்களில் இரண் டாவது பொதுத் தேர்தலில் கோட்டைவிட்டது. இடைத் தேர் தலில் 4 மாநிலங்களில் வெளியே போய்க்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? தருமம் போய்விட்டது. வெறும் ஓட்டு பிடிப்பதற்காக என்ன என்னவோ செய்கிறார்கள். 'Do not play on the small landholders for your party's strength' பெரிய காம்ப்ர ஹென்ஸிவ் பில்? ஆகவே, நிலச் சட்டம் என்று சொல்லி, இருக்கப்பட்ட 3 வருஷ காலத்தை வீணாக்கிவிட்டு, உங்கள் சர்க்காரே வெளியே தலைகாட்ட முடியாமல் நடந்து கொள்ளாதீர்கள் ! நீங்கள் அப்படிச் செய்தால், 1972-ம் ஆண்டு தேர்தலில் நீங்கள் இங்கே இருக்க மாட்டீர்கள் என்பதை சேலேன்ஜ் செய்து சொல்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கம் வயலிலே உழைக்கின்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு உரிமைகளை அளிக்கும் வகையில் மசோதாவைக் கொண்டு வந்து, சட்டம் ஆக்குவதை நானும் எனது கட்சியும்

மனப்பூர்வமாக ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நிலத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள் நிலம் வைத்திருக்கின்ற நிலை மாறிக்கொண்டு வருவதற்கு அறிகுறியாக, இம்மாதிரியான முற்போக்குச் சட்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன. நிலத்தை தங்களுக்குச் சொந்தமாக வைத்துக்கொண்டு, எங்கேயோ இருந்துகொண்டு உல்லாச வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஆத்திரமும் பயமும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களைப் பாதுகாக்க எந்தவிதமான அரசாங்கத்தாலும் முடியாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், உழைக்கின்ற விவசாய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று கருதி, முதன்முதலில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த அரசாங்கத்தைக் கோடிக்கணக்கான உழவர்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த உழவர்கள் நிச்சயமாக இந்த அரசாங்கத்தை ஆதரித்து நிற்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் விரிவான நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, நிலத்தில் உழைக்கின்றவர்களுக்கு உரிமைகளையும் பலனை அனுபவிக்கின்ற உரிமைகளையும் அளிக்கின்ற சிறந்த சட்டங்களை அரசாங்கம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் அமர்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் சார்பாக, சட்டமாகப் போகின்ற இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் பொருள் —இதுவரை இருந்து வந்திருக்கிற உண்மையை உண்மை என்று அங்கீகரிப்பதுதான். எல்லாவிடங்களிலும் இருக்கிற நிலைமை நிலக்காரர்கள் நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். ஆனால் குத்தகைக்காரர்களுக்கு அந்த நிலத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாமல் இருந்து வந்திருக்கிறது. நிலக்காரர்கள் நினைத்தால் ஒவ்வொரு வருடமும் குத்தகைக்காரர்கள் மாற்றிக் கொண்டே இருக்கலாம். அந்த நிலை இனி முடியாது, குத்தகைக்காரர்களுக்கும் உள்ள உரிமையைத்தான் இந்தச் சட்டம் அங்கீகரிக்கிறது. இருந்தாலும் இந்தச் சட்டம் இன்று இருக்கிற நிலைமையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆயினும் சிலபேர் துடிக்கத்தான் செய்வார்கள். ஒரு தாய் பிரசவம் ஆகிறபோது துடிதுடித்து விடுகிறாள். அவளது துடிப்பிலேதான் ஒரு ஜீவன் பிறக்கிறது. சமுதாயத்தில் இந்தச் சட்டத்தைக் கண்டு சிலபேர் துடிக்கிறார்களே, ஆத்திரப்படுகிறார்களே, கோபப்படுகிறார்களே என்றால்—அவர்களுக்காக நாம் நமது இந்தக் கடமையைச் செய்யாவிட்டால் சரித்திரம் நம்மைக் குற்றம் சாட்டும். அது வருங்காலத்தில் இந்த அரசை மட்டும் அல்ல, சமுதாயத்தையே பாதிக்கக்கூடிய விளைவுகளை உண்டாக்கும். சாதாரண





மக்களிடையே உண்டாகும் ஆத்திரமாக அமையும். ஆகவேதான் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்கிறது.

ஆயினும் இந்த மசோதாவை அமல்படுத்துவதில் நம்முடைய நோக்கம் பாதிக்கப்பட்டுவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும். விதியில் கூறப்பட்டிருக்கிறபடி டெபுடி தாசில்தார் போன்றவர்கள் அதிகாரிகளாக இருக்கிற நிலைமையில் ஒப்பிட்டுப்பார்த்தால் இது அவ்வளவு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இல்லாமல் போய்விடக் கூடாது. அதிகமான கண்காணிப்பும் தேவை. அதிகாரிகளுடைய உள்ளங்களில் கூட உணர்வு போதுமானதாக இல்லை. எவ்வளவு புரட்சிகரமான ஒரு சட்டத்தை நாம் செய்தால் மட்டும் போதாது. சரியான முறையில் செயல்படுத்துவதன் காரணமாகத்தான் ஒரு சட்டம் நல்ல பலனை அளிக்க முடியும். ஆகவே, இந்த மசோதாவையும் நல்லமுறையில் செயல்படுத்த கண்காணிப்பும், கவனமும் அவசியம் என்று கூறிக் கொண்டு, இதை உண்மையான முறையில் வரவேற்று எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இன்றையதினம் இந்த மாமன்றத்தில் உள்ள பிரதான எதிர்க் கட்சியாகிய காங்கிரசும், மற்ற தோழமை எதிர்க் கட்சிகளும் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசியிருப்பதற்கு மீண்டும் ஒரு முறை நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒரு விஷயத்தில் நாம் எல்லோரும் இன்றைக்கு ஒன்றுபட்டு—இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்குச் சிறிது காலதாமதமானாலும்—இதை ஒன்றுபட்டு நிறைவேற்றுகிற ஒரு பெரிய துவக்கத்தை ஆரம்பித்திருக்கிறோம். இந்த ஆரம்பம் திரு. சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, திரு. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டதைப்போல கோடிக் கணக்கான விவசாய மக்களுக்கு, குடியானவர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக, எதிர்காலத்தில் மாநிலத்தில் அமைதி நிலவுவதற்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது. நான் அமைச்சர் ஆனவுடனேயே—நாம் நம்முடைய வாழ்நாளில் சரித்திரத்தில் இடம்பெறும் ஏதாவது ஒரு காரியத்தையாவது செய்தாக வேண்டும், பத்தோடு பதினொன்று என்ற வகையில் உட்கார்ந்து போய்விடக்கூடாது என்று நினைத்ததுண்டு. தமிழகத்தின் தவப் புதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் என்னிடத்தில் இந்த வருவாய்த்துறையைக் கொடுத்தபோது நல்ல முறையில் முன்னேற்றமான வகையில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குச் சிந்தனை செய்ய வேண்டும், இத் துறையில் விரிவான பல நல்ல காரியங்களை ஆற்ற வேண்டும் என்று சொல்லி ஒப்படைத்தார்கள். இந்த மசோதா இந்த மன்றத்தில் நிறைவேறுகிற நேரத்தில்—அவரது எண்ணங்கள், கொள்கைகளை வைத்தே நாம் செயல்படுகிறோமே, அவர் இல்லையே என்ற ஏக்கமே, சோகமே

என்னைப் பெரிதும் வாட்டிற்று. அந்த சோகத்தோடு, துயரத்தோடு தான் இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

திரு. ஆதிமூலம் அவர்கள் சுதந்திராக் கட்சித் தலைவர். அவரை நான் ரொம்பவும் பாராட்டுகிறேன். கொள்கையில் வித்தியாசம் இருக்கலாம். தைரியமாக இதுதான் என்னுடைய கொள்கை என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். எப்போதும் இரண்டுங் கெட்டான் நிலைமை கூடாது. நம்முடைய கருத்து இன்னதென்று தெள்ளத் தெளிய நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அவரது கொள்கையில் இருந்து நான் மாறுபட்டாலும் அவர் நம்முடைய கொள்கையை எடுத்துத் தைரியமாகச் சொன்னதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்த மன்றத்திலே விவசாயிகளுடைய தோழர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர்களுடைய நண்பர்கள்இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தை விட்டு வெளி வந்துள்ள மாணவ ரத்தினங்கள் இருக்கிறார்கள். சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். நான்கு கோடி மக்களுக்கு வழிகாட்டியாக இந்த மன்றம் இருக்கிறது. நான்கு கோடி மக்களது நன்மை, தீமைகளுக்கு அவர்களது வாழ்வையே நடத்திச் செல்லும் தலைமை ஸ்தாபனமாக இது விளங்குகிறது. சமுதாயத்தின் துயர் களைகின்ற ஜீவசக்தி கொண்டது இந்த மன்றம். இப்போது நாம் கொண்டு வந்திருக்கும்படியான இந்த மசோதா ஒரு பெரிய முதல் தோற்றமாகத்தான் வந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களுடைய நல்வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு, வருங்கால சமுதாய அமைதிக்கு, வாழ்வுக்கு இது வழிகோன்றலாகத்தான் வந்துள்ளது. இதை எல்லோரும் வரவேற்றுப் பேசியதற்கு நன்றி தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1968), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட்டு, சட்டமாக ஆக்கப்பட்டது.

## 7. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (அ) 1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்தலும், வரைவு அறிவிப்பை ஏற்றலும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்து மேற்படி பிரிவின் கீழ் மாநில





அரசாங்கம் வெளியிடவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்புக்கு மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

#### வரைவு அறிவிப்பு

1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ம் நாளிட்ட தமிழ்நாடு அரசாங்க இதழில் 1-ம் பக்கத்தின் விதிகள் பிற்சேர்க்கையின் 899–902-ம் பக்கங்களில் வெளியிடப்பட்ட, 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ம் நாளிட்ட S.R.O.—A 769/1968-ம் எண் அறிவிப்பின் தோற்றுவாயில் கீழ்க்கண்ட திருத்தங்களைத் தமிழ்நாடு ஆளுநர் இதனால் செய்கிறார். பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் III/1923) 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு சட்டமன்றத்தின் தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

#### திருத்தம்

மேற்கூறிய அறிவிப்பின் தோற்றுவாயில், கீழ்க்கண்ட பாராவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதாவது—

"2. இதனால் செய்யப்படும் திருத்தங்கள் 1969-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் நாள் முதல் செயலுக்கு வரும்."

இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை முடிவு செய்தல்) விதிகளுக்குத் திருத்தம்

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move :

"That the following amendment to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 published with Revenue Department Notification, S.R.O. No. A. 1240 of 1965, dated the 25th November 1965 at pages 1284-1296 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st December 1965 which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) be approved by the Legislature under the proviso to the said sub-section.

AMENDMENT.

For sub-rule (3) of rule 6 of the said rules, the following sub-rule shall be substituted:

"(3) The value for the surplus land and for the buildings and trees thereon, if any, shall at the option of the assignee, be payable in a lumpsum or in equal annual instalments not exceeding twenty, with interest at the rate of five per centum per annum on the outstanding instalments.

[Thiru K. A. Mathialagan] [1969 பிப்ரவரி 28

Provided that the assignee shall be entitled to pay, at any time, any sum in excess of the annual instalments and such excess shall be adjusted towards the subsequent instalment or instalments."

2. Rule 6 (3) of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 provides that the value for the surplus land and for the buildings and trees thereon, if any, shall at the option of the assignee be payable in a lumpsum or in twenty equal annual instalments with interest at the rate of five per centum per annum on the outstanding instalments. The rule as it exists, does not contemplate the payment of land value in a lesser number of instalments and to the payment of the instalments in advance. It is therefore, proposed to substitute the new sub-rule 3 under rule 6 of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 in the place of the existing one.

Sir, I request the House to accept the motion.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

**8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**ஏதும் இல்லை.**



# INDEX TO THE FOURTH TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

## How to use the index.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporation etc., are consolidated under the said main headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ' ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| **A.M./Ad. Motion** | .. | **Adjournment Motion.** |
| **Ann.** | .. | **Announcement.** |
| **B.O.H.** | .. | **Business of the House.** |
| C. A. | .. | **Calling Attention to a Matter of Urgent Public Importance.** |
| C. A. St. | .. | **Calling Attention Statement** |
| Consid. | .. | **Consideration stage of a Bill. This stage includes :**<br>**(i) Motion to refer to Select/ Joint Select Committee.**<br>**(ii) Amendment to refer to Select/Joint Select Committee.** |

PAGES.

A—cont.

AGRICULTURE—
Seed Potatoes, import ... ... ... ... 747–749

ALAGAMUTHU, THIRU T. P.—
Speaker, felicitations on election ... ... ... 332–333

ALAGARSAMY, THIRU S.—
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 872–873, 880–882, 885, 886, 887, 888, 889
Governor's Address (M) ... ... ... ... 272–274

ANIMAL HUSBANDRY—
Korukkai Livestock Farm, particulars ... ... 749–750

ANNADURAI, DR. C. N.—
Demise, condolence resolution ... ... ... 285–313

ARECANUT—
Nurseries, location ... ... ... ... 417–418

ARSON—
Kilvenmani (St.) ... ... ... ... 40-41

ARUNA, THIRU ALADI.—
Governor's Address (M) ... ... ... 46-57

ASAITHAMBI, THIRU A. V. P.—
General Sales-Tax (Second Amendment) Bill, 1969 854–855

AUTHIMOOLAM, THIRU D. S.—
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 895
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion). ... ... ... ... 803–807
Deputy Speaker, felicitations on election ... 653–654
Governor's Address (M) ... ... ... ... 557–564
Speaker, felicitations on election ... ... 319–320

PAGES

B

BALAKRISHNAN, THIRU A. G.—
Governor's Address (M) ... ... ... ... 65–70

BALASUBRAMANYAN, THIRU A.—
Arson in Kilvenmani Village (A.M.) ... ... 26–28, 31–33
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 291–293
Speaker, felicitations on election ... ... 321

BHARATHI MOHAN, THIRU G.—
Fire in Vilakam Harijan Colony and relief to victims (A.M.) ... ... ... ... ... ... 646-647

BILL(S)—
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968—Report of the Select Committee ... ... 240
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 :
Consid., ... ... ... ... ... 866–879
Consid. Cl., ... ... ... ... ... 879–894
Motion to pass. ... ... ... ... 894
Passed. ... ... ... ... 898
Appropriation Bill, 1969 :
Message from Governor ... ... ... 715
Int., ... ... ... ... ... 715
Consid. ... ... ... ... ... 837–842
Consid, Cl., ... ... ... ... ... 842
Motion to pass
Passed
Appropriation (No. 2) Bill, 1969 :
Message from Governor ... ... ... 716
Int., ... ... ... ... ... 716
Consid., ... ... ... ... ... 842–846
Consid. Cl. ... ... ... ... ... 846
Motion to pass
Passe
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 :
Int. ... ... ... ... ... ... 159
Consid., ... ... ... ... ... 448–450
Consid. Cl. ... ... ... ... ... 450
Motion to pass
Passe

B—*cont.*

PAGES


BILLS—*cont.*

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969—*cont.*

Message from Legislative Council agreeing without amendment ... ... ... ... 837

General Sales-Tax (Amendment) Bill, 1969 :

Message from Governor ... ... ... ... 45

Int., ... ... ... ... ... ... 45

Consid., ... ... ... ... ... 846–851

Consid. Cl.

Motion to pass ... ... ... ... ... 851

Passe

Geneal Sales-Tax (Second Amendment) Bill, 1969 :

Message from Governor ... ... ... ... 45

Int., ... ... ... ... ... ... 45

Consid., ... ... ... ... ... 851–856

Consid. Cl.

Motion to pass ... ... ... ... ... 856

Passe

Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 :

Message from Governor ... ... ... ... 856

Int., ... ... ... ... ... ... 159

Consid., ... ... ... ... ... 857–858

Panchayats (Amendment) Bill, 1969 :

Int., ... ... ... ... ... 240

Consid., ... ... ... ... ... 858–860

Consid. Cl., ... ... ... ... ... 861–866

Motion to pass ... ... ... ... ... 866

Passe

BUSINESS OF THE HOUSE ... ... ... 44, 190, 405

BOJAN, THIRU K.—

Kilkundah Town Panchayat, Election ... ... 738

Small Scale- Industries—Corporation,, sale of produce of factories ... ... ... ... 621–622




PAGES

B—*cont.*


BOOKS—

Text-Books, publication ... ... ... ... 129–131

BRIDGE(S)—

Across Arasalar at Sakkottai ... ... ... 431

Across Cauvery ... ... ... ... ... 530

Across Kallaru, widening ... ... ... 733–734

Across 'Peria Odai', Dharapuram ... ... 149

Road bridge between main land and Rameswaram Island ... ... ... ... ... ... 9–11

BUILDINGS—

Research cell ... ... ... ... ... 135-136

C

CALLING ATTENTION—

Accumulation of handloom cloth and suffering of weavers ... ... ... ... ... 538-542

Deaths due to Fire in Sivakasi Cracker Factory ... 649–651

Drought in North Arcot and Chingleput districts ... 152–156

Incidence of cholera and jaundice in Madras City ... 542–543

Indian Steel Rolling Mills, Nagapattinam, labour problems leading to closure ... ... ... 753–754

Repatriates from Ceylon, rehabilitation ... ... 441–444

Salem Steel Plant, taluks with Japanese Firm Delegation ... ... ... ... ... 752

Water scarcity in Madras City ... ... ... 648–649

CARS—

Small cars, manufacture ... ... ... ... 528-529

CHAIR—

*Announcements* :

Annamalai University, election to Senate ... 651

Bakrid, holiday ... ... ... ... 537

Business of the House ... ... ... ... 405

Business Advisory Committee, nomination of Members ... ... ... ... ... 755

Deputy Speaker, announcement of election and felicitations ... ... ... ... 652-655

Supplementary questions, opportunities to Swatantra party members ... ... ... 655–656

CHAIR—*cont.*

Rulings and Observations :

*Adjournment*—cont.

*Adjournment of House as a mark of respect to a deceased sitting member* :

With reference to the adjournment of the House for fifteen minutes as a mark of respect to a deceased sitting Member, a Member rose on a point of order and stated that the House should have been adjourned for the day as a mark of respect to the deceased sitting member. Another Member pointed out that the deceased member was an ally of the ruling party...

The Leader of the House stated that it was customary to adjourn the House for the day whenever a sitting Member expired at the place where the House was in Session and in other cases, the House adjourned only for a short while and that in the instant case the House was adjourned for 15 minutes as decided by the Business Advisory Committee.

The Chair observed that in 1967 the House adjourned only for ten minutes in a similar case, that the procedure adopted was proper and that all would be shown equal respect irrespective of the party to which they belonged ... ... ... ... 2–3

*Adjournment Motions* :

*Admissibility* :

On a point of order raised whether it was proper to allow an adjournment motion when a Censure Motion or No-Confidence Motion on the same subject had been admitted and whether the Chair was not itself, the Chair held that it was not a point of order and observed that it was just as it was cutomary to table both a no-confidence motion and a censure motion for identical or different reasons, it was not contradictory to table an adjournment motion on the same subject to discuss which a censure motion had been allowed ... ... ... ... 29,30,31







CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Adjournment Motions*—cont.

*Closure of Kaveri Mills, Limited at Pudukottai and provision of interim relief for affected workers* :

Consent was witheld in the light of previous rulings that the other business of the House need not be adjourned for discussion of matters like lock-out, etc. ... ... ... ... ... 538

*Plights of Harijans of Vilakam Village Harijan Colony gutted by fire.*

Consent was withheld as the matter involved day-to-day administration of Government and in view of the statement by the Chief Minister that the Government had taken necessary action in the matter. ... ... ... ... ... 648

*Lathi charge on students and consequent unrest* :

Consent wts withheld on the grounds that the matter came within the purview of the day-to-day administration of Government and the members had opportunity to speak about it during the discussion on Governor's Address ... 149

*Lathi-charge on the workers of Mayfield Estate and their arrest* :

Consent was withheld on the ground that the matter came within the purview of the day-to-day aministration of Government, that lock-outs, hunger strikes, etc., could not form the subject-matter of an adjournment motion and that the members would have an opportunity to refer to the same during the discussion on the Governor's Address ... ... ... ... 150

*Lock-out in Kaveri Nagar Mills and consequent picketing by the labourers* :

Consent was withheld on the ground that picketing, hunger-strike, etc., could not form the subject matter of an adjournment motion and the members could refer to the same during the discussion on the Governor's Address ... 149–150

*Lock-out in Sri Lakshmi Narayana Mills, Palladam* :

Consent was withheld in the light of earlier rulings to the effect that the House should not be made the forum to bring forward adjournment motions to discuss matters like strikes and lock-outs ... 436

C—*cont.*

PAGES

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Adjournment Motions*—cont.

*Method of Disposal* :

It is for the Chair to decide whether an adjournment motion should be disposed of in the Chamber itself considering its importance, or whether it should be disposed of in the House after reading the notice and hearing the member concerned and the Government ... ... ... 751-752

*Panicky situation in Kilvenmani village and the need to offered protection to land-owners and agricultural coolies* :

With reference to two sets of adjournment motions to discuss the panicky situation in Kilvenmani consequent on the death of many persons because of arson and the other to discuss the same subject and also the protection to be afforded to land-owners and agricultural coolies the Chair withheld consent on the grounds that the members would have an opportunity to refer to the subject during the discussion on the impending Censure Motion, the discussion on the Motion of Thanks to the Governor's Address and also in the light of a promised statement by the Leader of the House on the subject ... ... ... 25-39

*Pollution of water in the wells in P. N. Patti and Veerakalputhur Panchayats by effluent water from Mettur Chemicals* :

Consent was withheld as the matter did not relate to a recent occurrence and the problem had been there for years ... ... ... ... 39-40

*Reference to Motions disposed in the Chamber* :

It is not in order to raise the subject matter contained in an adjournment motion for which the Chair had refused consent in his Chamber ... 751-752

*Scope of discussion* :

Members should only explain how a matter was so important and urgent as to be discussed under the provisions governing the adjournment motions and should not discuss or enter into the merits or details of the case ... ... ... 26, 27, 32,33, 32, 33 34, 35



C—*cont.*

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Adjournment Motions*—cont.

Rising on a point of order, a Member asked whether the very purpose of disallowing an adjournment motion was not set at nought if Members were allowed to express their views in the guise of explaining how the matter was so important as to adjourn the other business of the House. The Chair ruled it out and observed that he did interrupt and pull up the Members as and when they referred to inadmissible matters ... ... 36-37

*Siva Sena menace in Bombay City and protection to the interests of South Indians* :

After the three Hon. Members who had given notice of a motion explained how the matter was important and urgent and should be discussed and the Hon. Chief Minister explained the action taken by Government, the Chair withheld consent as the sentiments expressed by the members and the Chief Minister reflected the feelings of the House and in the light of earlier rulings to the effect that it was not in order to interfere in the affairs of another State ... ... ... ... ... ... 436-440

*Strike in Pugalur Sugar Mills of Parry and Company and its repercussions.*

Consent was withheld in the light of earlier rulings to the effect that adjournment motions should not be brought before the House to discuss about strikes or lock-outs ... ... ... ... 435-436

*Bill.*

*First Reading, scope of discussion* :

While speaking at the first reading stage of a Bill a Member said that the Minister knew that the Assembly would be meeting within a month and a half at the time of imposition of an enhanced tax by means of an Ordinance. The Chair held that such a point should have been raised only as a point of order at the introduction stage of the Bill and that Members should confine themselves to the merits and demerits of the Bill at the first reading stage ... ... ... ... 848-849

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Brief record of proceedings* :

On 22nd February 1969, rising on a point of order, a Member complained that the reason for the abrupt adjournment of the House on 29th January 1969, viz., the deteriorating condition of the then Chief Minister on a resolution moved by him did not find a place in the brief record of proceedings. The Chair, while appreciating the gesture by the Member on that day observed that the Member's resolution for adjournment was not formally moved, seconded and voted upon and that was perhaps the reason for not referring to it in the Brief Record of Proceedings and if desired by the Member, there was no objection to include the same ... ... ... ... ... 344–345

*Calling attention* :

After a Minister's statement in response to a Call attention notice, a Member could only ask for clarification on the statement made by the Minister and he could not avail of the opportunity to give expression to his personal views 154–155

After a Minister's statement in response to a Call Attention Notice, one or two questions may be put by way of elucidation or clarification. New ideas, insinuation or a discussion will not be allowed ... ... ... ... ... 754

*Chief Minister's Fortfolios* :

On 28th January 1969 a member rising on a point of order enquired who was acting as Chief Minister during the Chief Minister's (Thiru C. N. Annadurai's) illness and treatment, as he was an appellate authority against the orders of other Ministers and as the mere distribution of his portfolios among other Ministers might not suffice.



CHAIR—*cont.*

*Chief Minister's portfolios*—cont.

The Law Minister pointed out that nobody could force the appointment of an Acting Chief Minister, and that there was no mention of "appellate authority" either in the Business Rules or elsewhere. The Governor is the Constitutional Head of the State acting on the advice of the Ministers and he allots the portfolios among various Ministers as advised by the Chief Minister. The Chief Minister continued in office and the same arranagement that had been made during his visit to America had been made then also ... ... ... ... ...

The Chair ruled out the point of order, as points of order could be raised only when there was infringement of rules of procedure and not for clarification of doubts ... ... ... 157–159

D

DEBATE :

*Allegations* :

Baseless allegations should not be made ... ... 371

Should relate to matters in which the responsibility of the Government is involved ... ... 87–88

When the Leader of the Opposition read a letter addressed to him by a Superintendent of Police, the Chair observed that it was not in order for him to read the letter, contrary to his agreeing to refer only to the points mentioned therein. It was also not in order to make allegations against outsiders, as they had no opportunity to defend themselves ... ... ... ... 573–574

When the Minister denies having made a particular statement, it is not in order to raise the same point again ... ... ... ... ... 370

*Attribution of motives* :

It was not in order to attribute motives to those who have sponsored a (Censure) Motion. As suggested by the Chair, the Member who made certain expressions attributing such motives, withdrew the same ... ... ... ... 794

C—*cont.*


CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Decorum—*cont.*

*Demanding assurance from Chair*—cont.

The Chair observed that there was a limit to Parliamentary Privilege and it was not in order for the Member to speak sitting. To ask for such an assurance from the Chair would not be in keeping with the decorum, dignity and convention followed in the House ... ... 586

Members should not get emotional and should conform to the rules of procedure, while speaking ... ... ... ... ... 583

While Members can use strong and meaningful expressions, they will do well to avoid heat and emotion in their views and to conform to the rules of procedure ... ... ... ... 761

*Insinuating remarks against Chair* :

Members will do well to refrain from making insinuating remarks against the Chair like " Will you allow at least now to put a supplementary question? ", as if the Chair has erred in not allowing supplementary questions previously ... ... ... ... ... ... 145–146

*Disapproval of the Policy of Ministry* :

On 27th January 1969 the Chair announced, after ascertaining the wish of the House, that he had given consent to the Hon. Member Thiru P. Jayaraj to move a motion of censure and disapproval of the policy of the Ministry *re.* its failure to maintain Law and Order in Thanjavur district resulting in the death of 42 persons in Kilvenmani on account of an arson incident. The motion however lapsed on the prorogation of the House ... ... ... 21–25

On 25th February 1969, the Chair after ascertaining the wish of the House, announced that consent had been given to Thiru P. Jayaraj to move a censure motion disapproving the policy of Government, viz., its failure to maintain Law and Order resulting in arosen in Kilvenmani and the death of 42 persons and that the motion would be taken up for discussion on 28th February 1969 ... ... ... ... 537






C—*cont.*


CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Expressions used in the House :

*Insinuating Expression* :

" இப்பொழுதாவது அனுமதிக்கிறீர்களா" (Will you allow at least now?) in the sentence, ' Will you allow (me) at least now to put a supplementary question, ' addressed to the Chair—Deprecated ... ... ... ... ... 145–146

*Objectionable Expressions* :

Conspiracy (' சதித்திட்டம் ') in the expression ' They hatched out a conspiracy against the prospective changes '—Deprecated ... 773

' Number one Chameleon ' with reference to a particular political party—Deprecated ... 810

' Those who wanted to eke out their livelihood ( பிழைக்கவந்தவர்கள் ) in the sentence : " True Congressmen have left the present day Congress Party and those who sought the favour of the party in power and wanted to eke out their livelihood have come into it."—Deprecated and was withdrawn by the Member who used it ... 261–263

*Unparliamentary Expressions* :

" வெறி " (Mad or Fanatic)—in the sentence, " generally, I am somewhat mad or fanatical after my district "—Held to be not unparliamentary ... ... ... ... ... 653

Governor's Address :

*Amendment* :

On 24th February 1969, rising on a point of order, a Member stated that the reference to the late Chief Minister (Thiru C. N. Annadurai) who was ailing then, in the address delivered by the Governor on 25*th January* 1969 wishing him speedy recovery was not quite appropriate on 24th February 1969, because of the demise of Thiru Annadurai in between, inasmuch as the Motion of Thanks was for the entire Address. Hence, he suggested that that portion might be suitably amended in keeping with the altered situation. The Leader of the Opposition

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Amendment*—cont.

endorsed this view. The Leader of the S.S.P. said that the point raised by the Member deserved careful consideration ... ...

A Member of the Swatantra Party expressed the view that there was no need to amend the Address ... ... ... ... ...

The Chief Minister stated that if the suggestion of the Member was to be accepted, the sentiments expressed by the Members of the House earlier endorsing the wish of the Governor, might also have to be amended. Hence, there was no need for the amendment suggested by the Member ... ... ... ... ...

The Chair held that inasmuch as they were having a discussion on the Motion of Thanks moved on 27th January 1969 for the Address delivered by the Governor on 25th January 1969 and there was no change in the situation, any amendment to the Address just then would not be in order and was unnecessary ... ... 453–456

*Discussion* :

On 22nd February 1969, a Member rose on a point of order and enquired whether discussion on the Address delivered by the Governor on 25th January 1969 portraying the policies of the Government headed by the late C. N. Annadurai could be continued when that Government was not in existence and a new Government headed by Thiru M. Karunanidhi with the addition of four new Ministers and deletion of one Minister who headed the Care-taker Government just after the demise of Thiru C. N. Annadurai was in power. He requested the Chair to give a ruling whether they could continue the discussion on the Address, since it was based on the policies of the old Government and the new Ministry might have new policies, and whether a new Address by the Governor was necessary. The Chair deferred its ruling ... ... ... ... ...







CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Discussion*—cont.

However, after some time another Member pointed out that it would be better to give a ruling on the point that day itself to avoid practical difficulties later ... ... ... ... ...

Quoting the statement made by Thiru C. Subramaniam under similar circumstances that "inspite of a change in the personnel of the Ministry, as the same party (Congress) continued in office, and would be guided by the Congress principles and ideals, the question of statement of policy did not arise," the Minister for Finance stated that as the new Ministry would follow the policies adumbrated by the late Thiru Annadurai, the discussion on the Address already delivered by the Governor when Thiru Annadurai was the Chief Minister might continue ... ... ... ... ...

Thereupon the Chair held that inasmuch as the new Ministry followed the same policies adumbrated by the Ministry headed by the late Thiru Annadurai and there was no change in the policy, there was no need for the new Chief Minister making a statement of policy afresh, and for the Governor to address the House again, and that the discussion on the Address already delivered might continue ... ... 345–347 350–352

Half-hour Debate :

*One rupee a measure of rice scheme* :

Request negatived on the ground that the Chair had already allowed a lot of time for Members to put a large number of supplementaries and that Members would have an opportunity to refer to the subject during the discussion on the Motion of Thanks for the Governor's Address ... 143

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Amendment*—cont.

endorsed this view. The Leader of the S.S.P. said that the point raised by the Member deserved careful consideration ... ...

A Member of the Swatantra Party expressed the view that there was no need to amend the Address ... ... ... ... ...

The Chief Minister stated that if the suggestion of the Member was to be accepted, the sentiments expressed by the Members of the House earlier endorsing the wish of the Governor, might also have to be amended. Hence, there was no need for the amendment suggested by the Member ... ... ... ... ...

The Chair held that inasmuch as they were having a discussion on the Motion of Thanks moved on 27th January 1969 for the Address delivered by the Governor on 25th January 1969 and there was no change in the situation, any amendment to the Address just then would not be in order and was unnecessary ... ... 453–456

*Discussion* :

On 22nd February 1969, a Member rose on a point of order and enquired whether discussion on the Address delivered by the Governor on 25th January 1969 portraying the policies of the Government headed by the late C. N. Annadurai could be continued when that Government was not in existence and a new Government headed by Thiru M. Karunanidhi with the addition of four new Ministers and deletion of one Minister who headed the Care-taker Government just after the demise of Thiru C. N. Annadurai was in power. He requested the Chair to give a ruling whether they could continue the discussion on the Address, since it was based on the policies of the old Government and the new Ministry might have new policies, and whether a new Address by the Governor was necessary. The Chair deferred its ruling ... ... ... ... ...





C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Discussion*—cont.

However, after some time another Member pointed out that it would be better to give a ruling on the point that day itself to avoid practical difficulties later ... ... ... ... ...

Quoting the statement made by Thiru C. Subramaniam under similar circumstances that "inspite of a change in the personnel of the Ministry, as the same party (Congress) continued in office, and would be guided by the Congress principles and ideals, the question of statement of policy did not arise," the Minister for Finance stated that as the new Ministry would follow the policies adumbrated by the late Thiru Annadurai, the discussion on the Address already delivered by the Governor when Thiru Annadurai was the Chief Minister might continue ... ... ... ... ...

Thereupon the Chair held that inasmuch as the new Ministry followed the same policies adumbrated by the Ministry headed by the late Thiru Annadurai and there was no change in the policy, there was no need for the new Chief Minister making a statement of policy afresh, and for the Governor to address the House again, and that the discussion on the Address already delivered might continue ... ... 345–347
350–352

Half-hour Debate :

*One rupee a measure of rice scheme* :

Request negatived on the ground that the Chair had already allowed a lot of time for Members to put a large number of supplementaries and that Members would have an opportunity to refer to the subject during the discussion on the Motion of Thanks for the Governor's Address ... 143

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Amendment*—cont.

endorsed this view. The Leader of the S.S.P. said that the point raised by the Member deserved careful consideration ... ...

A Member of the Swatantra Party expressed the view that there was no need to amend the Address ... ... ... ... ...

The Chief Minister stated that if the suggestion of the Member was to be accepted, the sentiments expressed by the Members of the House earlier endorsing the wish of the Governor, might also have to be amended. Hence, there was no need for the amendment suggested by the Member ... ... ... ... ...

The Chair held that inasmuch as they were having a discussion on the Motion of Thanks moved on 27th January 1969 for the Address delivered by the Governor on 25th January 1969 and there was no change in the situation, any amendment to the Address just then would not be in order and was unnecessary ... ... 453–456

*Discussion* :

On 22nd February 1969, a Member rose on a point of order and enquired whether discussion on the Address delivered by the Governor on 25th January 1969 portraying the policies of the Government headed by the late C. N. Annadurai could be continued when that Government was not in existence and a new Government headed by Thiru M. Karunanidhi with the addition of four new Ministers and deletion of one Minister who headed the Care-taker Government just after the demise of Thiru C. N. Annadurai was in power. He requested the Chair to give a ruling whether they could continue the discussion on the Address, since it was based on the policies of the old Government and the new Ministry might have new policies, and whether a new Address by the Governor was necessary. The Chair deferred its ruling ... ... ... ... ...





C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Governor's Address—*cont.*

*Discussion*—cont.

However, after some time another Member pointed out that it would be better to give a ruling on the point that day itself to avoid practical difficulties later ... ... ... ... ...

Quoting the statement made by Thiru C. Subramaniam under similar circumstances that "inspite of a change in the personnel of the Ministry, as the same party (Congress) continued in office, and would be guided by the Congress principles and ideals, the question of statement of policy did not arise," the Minister for Finance stated that as the new Ministry would follow the policies adumbrated by the late Thiru Annadurai, the discussion on the Address already delivered by the Governor when Thiru Annadurai was the Chief Minister might continue ... ... ... ... ...

Thereupon the Chair held that inasmuch as the new Ministry followed the same policies adumbrated by the Ministry headed by the late Thiru Annadurai and there was no change in the policy, there was no need for the new Chief Minister making a statement of policy afresh, and for the Governor to address the House again, and that the discussion on the Address already delivered might continue ... ... 345–347
350–352

Half-hour Debate :

*One rupee a measure of rice scheme* :

Request negatived on the ground that the Chair had already allowed a lot of time for Members to put a large number of supplementaries and that Members would have an opportunity to refer to the subject during the discussion on the Motion of Thanks for the Governor's Address ... 143

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Matters sub-judice :

On 28th February 1969, just before the discussion on the Motion of Disapproval of policy of the Government in regard to the Kilvenmani incident commenced, the Chair observed that as the subject-matter was before the Court in various stages, members would do well to speak in a general way without going into the details ... 755

Ministry :

*Composition* :

On 22nd February 1969, one Member seeking clarification from the Chair on an ex-Minister (Thiru V. R. Nedunchezhian) sitting on the Treasury Benches, the Chief Minister remarked that even during the Congress Regime members like Thirumathi Anandanayaki were sitting on the Treasury Benches and they did not mistake her to be a Minister.

The Chair observed that information about the personnel of the Ministry had appeared in Newspapers and had been published in the Gazette which was supplied to the Members. The Members should be aware of the same. If they had failed to see it, it was their own fault and not that of the Government ... ... ...

The Members would do well to refer to the composition of the Ministry in dignified terms ... 346–347

*Introuction of new Ministers and statement by an ex-Minister* :

On 22nd February 1969, the Leader of the Opposition pointed out that it would have been better for the Chief Minister to have introduced the new Ministers to the House. He also pointed out that it would have been better if one of the Ministers of the ex-Ministry who had not been included in the new Ministry had made a statement to the House regarding the reasons as to why he had resigned ... ... ...

The Chief Minister stated that the new Ministers should have been introduced on the first day itself, but he had not done it because there was no precedent for the same established by the previous Government in power ... ...



CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Ministry—*cont.*

*Introduction of new Ministers and statement by an ex-Minister*—cont.

The Minister for Finance stated that the ex-Minister referred to by the Leader of the Opposition was not a Member of the new Ministry, but he was a Member of the old Ministry which did not exist just then, and hence the question of a statement by that ex-Minister did not arise. Moreover, the inclusion of any one in the new Ministry was a matter for the Chief Minister to decide.

The Chair observed that inasmuch as the ex-Minister referred to by the Member was not a member of the new Ministry which was just then in office, he need not make a statement about the reasons for his 'resignation' ... 347-350

Personal Explanation :

A Member could rise on 'personal explanation' only when he had been personally referred to, and not when the party in general was referred to ... ... ... ... ... ...

Interruptions under the guise of personal explanation were not in order ... ... ... 585

Petitions :

Mahazars (petitions) should not be presented to Ministers in the House during question hour ... 517

Point of information :

A matter on which ruling had already been given will not be allowed to be raised once again ... 241

Should not be raised without previous notice to the Chair ... ... ... ... ... 241

Point of information may be raised in the middle of a member's speech, and not necessarily after the end of the speech ... ... ... 249

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order :

*Censure Motion re. Kilvenmani incident* :

On 22nd February 1969, rising on a point of order, a Member enquired whether, despite the change in the Ministry, which was a continuation of the previous Ministry, the Censure Motion moved against the previous Ministry could be considered just then or whether it lapsed on the previous Ministry laying down office and a new Ministry coming into existence, and so, a fresh motion would have to be given notice of ... ... ... ... ... ...

In reply to this point and also in reply to some other points raised by other Members on the same issue, the Chair observed that though the new Ministry might follow the policies and principles of the old Ministry, the new Ministry could not be expected to take responsibility for the lapses and wrongs alleged to have been committed by the previous Ministry. As the Censure Motion was not on the policies followed but on particular deeds of the previous Ministry, it would be deemed to have lapsed, consequent on the new Ministry coming into office, on the analogy of a case against a person abating on his death ... ... ... ... ...

The Chair's ruling on a fresh motion on the subject could not be anticipated, even before it was moved and they had to wait and see ... 352–357

*Clarification by Ministers* :

Whenever points of order are raised, Ministers have a right to intervene by way of clarification or expressing their views, and the Rules of Procedure do not prohibit the same, while the right of giving a ruling rests with the Chair ... 760-761

*Criteria and scope* :

It is not proper to raise points of orders to contradict the view expressed by another member or to offer any clarification ... ... ... 761



PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

*Criteria and scope*—cont.

Members should not rise on a point of order for anything and everything, and then talk. Points of Order should be raised only when the proceedings of the House are conducted against the rules of procedure ... ... ... ... ... 584

On a member rising on a point of order seeking the permission of the Chair to clarify certain matters relating to his party referred to by another member in his speech, the Chair observed that it would not be possible to conduct the proceedings of the House smoothly if the Members wanted to reply to each other. Members should confine themselves to pointing out irregular procedure, if any, and stop with that 500

On a point of order raised whether it was in order for a Member to conclusively say that friends of the ruling party may not be aware of the importance of National Days, the Chair held that it was not a point of order ... ... 245

Points of order should relate to wrong procedure adopted in the House or to point out violation of the Rules and the occasion should not be availed of for expression of the Members' views ... 499, 520

Should be raised then and there and not about what happened in the past ... ... ... 768

Should relate to procedural lapses or violation of rules that might take place in the House. There are rules which govern the admissibility of each motion given notice of by Members and the Chair knows how to deal with them and give its rulings on such motions and the Members need not comment on the same ... ... ... 36

*Responsibility for ruling* :

Whenever a point of order was raised, the responsibility for giving a ruling as to whether it was a point of order or not rested with the Chair. It was not in order for members to comment on the points of order. They would do well in conducting themselves with dignity and decorum of the House ... ... ... ... ... 591–592

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

*Prime Minister's leaking out an official secret*:

On 25th February 1969 during the discussion on the Governor's Address, the Leader of the Opposition stated that the Prime Minister, Thirumathi Indira Gandhi herself told him that during her trip to the Andamans, she was advised by the Government of Tamil Nadu not to go *via* Madras. A Member raised a point of order observing that Ministers in the Centre and in the States had taken the oath of secrecy at the time of taking office and hence, action must be taken against her for infringement of that oath in that she had revealed an official secret to the Leader of the Opposition. The Chair held that the House was not the forum for raising matters relating to infringement of oath of secrecy and it should be raised elsewhere and hence the matter would not come under a point of order. Quoting earlier rulings, the Speaker observed that points of order should be raised only when there was breach of rules of procedure, as there would be opportunities later to clarify wrong statements ... ... ... 588–590

Privilege matters:

*Interruption of Governor's Address and walk out*:

On 27th January 1969, the Chair *suo motu* referred to the Privileges Committee the conduct of Hon'ble Member Thiru A. Balasubramanyan who rose and spoke a few words before the commencement of the Governor's Address, on 25th January 1969 and the conduct of a few other members of the Opposition who walked out of the House thereafter, as the same violated the provisions contained in Rule 12 ... 23-24

Proceedings:

*Tape-Recording*:

On 28th February 1969, in the course of the discussion on a Censure Motion against the Ministry, when the Minister for Co-operation contradicted some remarks made by the mover of



PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

PROCEEDINGS—*cont.*

*Tape Recording*—cont.

the Motion quoting the relvant Assembly proceedings, the Leader of Opposition recalled his earlier suggestion to the former Speaker (who happened to be the Minister for Co-operation just then) to install a Tape-Recorder to ensure accurate recording of the proceedings of the House ... ... ... ... ...

The Chair observed that the copies of proceedings recorded by the Reporters were sent to the members concerned and after incorporating the corrections, if any, they were printed. It was for the Leader of the Opposition to consider whether he was to find fault with that system ... 760

Questions:

*Allegations*:

Allegations should not be made during question hour. ... ... ... ... ... ... 620

*Full utilization of question hour*:

On 29th January 1969, the question hour was over in about 15 minutes. Immediately after the Chair announced that the question hour was over, a Member pointed out that although hundreds of questions relating to very important day-to-day problems had been given notice of long ago, they were not taken up in the House and hence they had only a few questions. So, he requested the Chair to arrange to include more questions in the Order Paper ... ...

The Chair observed that more questions could not be included in the Order Paper as of late Members had cultivated the habit of putting a large number of supplementaries on each question and also due to delay in the receipt of replies from the Departments concerned. He, however, assured the Members that the Leader of the House and himself would endeavour to minimise the delay in the receipt of answers as far as possible ... ... ... ... ... 238–239

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Questions—*cont.*

*Lengthy Answers:*

On a Minister reading a long answer containing statistics, in reply to a starred question, the Chair observed that it was desirable to place lengthy answers with lot of statistics on the Table of the House ... ... ... ... 412

*Postponement of questions addressed to Chief Minister after including them in the Agenda:*

When a Member raised a point of order whether it was proper to include questions to be answered by the Chief Minister in the Order Paper when he was indisposed and then postpone the same, the Chair held that it was not a point of order and observed that such a procedure had been in practice in the House in the past ... ... 23

Supplementary questions:

Should relate to the main question ... ... 15, 737, 742

Should be general and should not refer to names of particular institutions. The name of an institution, referred to by a Member was ordered to be expunged. ... ... ... ... 743

Should be in the form of questions ... ... 519

Should be in the form of questions and should not contain accusations, reference to deficiencies, etc. as there were other opportunities to refer to the same ... ... ... ... ... 738

Should be put without going into details ... 734

Should be short and not lengthy, as otherwise the time allotted for the question hour may not be sufficient to cover all the questions ... ... 519

Should not be on the basis of newspaper reports ... 739

Though a Member has got the right to put a supplementary question, he could do so, only when called by the Chair ... ... ... 746



PAGES

CHAIR—*cont.*

Ruling and Observations—*cont.*

Supplementary questions—*cont.*

While supplementary questions could not be allowed on party basis, the Chair furnishing statistics about the supplementary questions allowed party-war, observed that sufficent number of questions had been allowed for all parties ... 640, 655-656

Question hour:

*Suspension:*

In accordance with the decision taken at the meeting of the Business Advisory Committee and on a motion moved by the Hon. Chief Minister and approved by the House, the question hour was suspended on 22nd February 1969 ... ... 315

Speeches:

*Reading of written speech:*

Members should speak *ex-tempore* and not read from manuscripts ... ... ... ... 383

CHEEMAICHAMY, THIRU K.—

Accumulation of handloom cloth and suffering of weavers (C.A.) ... ... ... ... ... 538–542

Arson in Kilvenmani village (A.M.) ... ... ... 33–35

Government servant allotments of quarters ... 136–138

Questions put to Chief Minister, point of order *re.* postponement ... ... ... ... ... 23

Road bridge to Rameswaram Island ... ... ... 9–11

Supplementary questions, opportunities to Swatantra Party members ... ... ... ... ... 640

Tamilar Padai ... ... ... ... ... ... 507–512

CHIEF MINISTER—

Health condition (St.) ... ... ... ... ... 151, 240–241

Information *re.* health ... ... ... ... 42–44

PAGES

CHITHAN, THIRU N. S. V.—
Accumulation of handloom cloth and suffering of weavers (C.A.) ... ... ... ... ... 538–542
Deaths due to fire in Sivakasi Cracker Factory (C.A.) ... ... ... ... ... ... 649, 650–651
Family Planning, mobile sterilisation units ... 419–422
Gherao before Tiruppur Municipal Council ... 736–737
Governor's Address (M) ... ... ... ... 245–249 252, 253
Grievances counter in Government offices, opening ... ... ... ... ... ... ... 635–636
Madurai Central Jail, death in ... ... ... 738–739
Rent Control Act, extension to staff of Electricity Board ... ... ... ... ... 534
Salem Steel Plant talks with Japanese Firm Delegation (C.A.) ... ... ... ... ... 752
Small Savings Cultural Show, expenditure ... ... 523–524
Tamilar Padai ... ... ... ... ... ... 507–512, 512–513

COIMBATORE—
Classification as 'B' class ... ... ... ... 522–523

COMMITTEES.—
Business Advisory Committee, nomination of Members ... ... ... ... ... ... 755

COURTS.—
Munsif Court for Madurantakam ... ... ... 527–528
Sub-Magistrate Court for Manaparai ... ... 424–425

CRIMINAL CASES.—
Transfer to Tahsildar trainees ... ... ... 640–641

D

DAM(S).—
Across Nambiyaru, construction ... ... ... 734–735
Manjamalai Odai Scheme, construction of dam ... 430–431





PAGES.

DAM(S)—*cont.*
Periyar and Vaigai Reservoirs, water level ... 734
Periaruvi Reservoir ... ... ... ... ... 529–530

DEPUTY SPEAKER.—
Felicitations on election ... ... ... ... 651–655

DEVASTHANAMS.—
Executive Officers, travelling allowance ... ... 433–434

DHALES.—
Scarcity ... ... ... ... ... ... 644–646

DHANUSHKODI, THIRU P. S.—
Fire in Vilakam, Harijan Colony and relief to victims (A.M.) ... ... ... ... ... ... 646–647
Governor's Address (M) ... ... ... 279, 357–360

DHARMALINGAM, THIRU N.—
DSG (Second), 1968–69, G.D. ... ... ... 684–685
Fire Service Personnel, Mannargudi, accommodation ... ... ... ... ... ... 636
Korukkai Livestock Farm, particulars ... ... 749–750
Public Buildings (Licensing) Act, 1965, representation for repeal ... ... ... ... 237

DISEASES.—
Incidence of cholera and jaundice in Madras City (C.A.) ... ... ... ... ... ... 542–543

DIVISION(S).—
Censure Motion:
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district ... 833–836

DROUGHT.—
North Arcot and Chingleput districts (C.A.) ... 152–156

DURAIPANDIAN, THIRU N.—
Governor's Address (M) ... ... ... 220–223

DURAIRAJ, THIRU P.—
Governor's Address (M) ... ... ... ... 255–260

PAGES

DURAISAMY, THIRU S.—
Coimbatore City, classification as 'B' class ... 522–523
E.S.I. Hospital for Pollachi ... ... ... ... 630–631
Governor's Address (M) ... ... ... ... 191–193
House sites, Goundenpalayam, assignment ... 407–408
Industrial Estate for Tiruppur ... ... ... 426

E.

EDMUND, THIRU G. R.—
Felicitations on election as Deputy Speaker, reply ... 655

EDUCATION.—
Institutions in Madurai, meeting of parents, etc. ... 3–8

ELECTRICITY.—
Ennore Thermal Scheme, disposal of fly ash ... 434–435
Neyveli electric power, increase in price .. ... 631–633
Tariff, increase ... ... ... ... ... 534–536

ELLAPPAN, THIRU P. S.—
Governor's Address (M) ... ... ... ... 214–217

EMPLOYEES.—
Executive Officers of Devasthanams, travelling allowance ... ... ... ... ... ... 433–434

F

FACTORIES.—
Marine Diesel Engine Factory, Madras, starting with Japanese collaboration ... ... ... 724–726
Paper Factory, starting in North Arcot district ... 731–733
Pilot Cement Factory, Dalmiapuram, functioning 618–621
Vanaspathi Factory, Villupuram, State aid ... ... 422–424

FAMILY PLANNING.—
Mobile sterilisation units ... ... ... ... 419–422
Women promoters, appointment ... ... ... 420–422

FILM STUDIOS.—
Shifting to neighbouring States ... ... ... 633–635



PAGES.

FINANCIAL BUSINESS.—
DEE, 1964–65—
Presentation ... ... ... ... ... 444–445

DEE, 1964–65, Voting—
Capital Outlay on Consumer Co-operatives ... 714
Capital Outlay on Irrigation ... .. ... 715
Capital Outlay on Road Transport Schemes ... 715
Fisheries ... ... ... ... ... ... 715
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 712
Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ... ... 712
Irrigation ... ... ... ... ... ... 713
Other Miscellaneous contributions and Assignments ... ... ... ... ... ... 714
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 714
Public Works—Works ... ... ... ... 713–714
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... ... 713

DSG (Second), 1968–69—G.D. ... ... ... 656–702

DSG (Second), 1968–69, Voting—
Administration of Justice ... ... ... ... 704
Agriculture ... ... ... ... ... 706
Animal Husbandry ... ... ... ... ... 706
Capital Outlay on Forests ... ... ... ... 711
Capital Outlay on Industrial Development ... 710
Capital Outlay on Irrigation ... ... ... 710
Capital Outlay on Public Works ... ... ... 711
Capital Outlay on Road Transport ... ... 711
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... ... 711
Cinchona ... ... ... ... ... ... 707
Community Development Projects, etc. ... ... 707
Co-operation ... ... ... ... ... 706
District Administration and Miscellaneous ... 704
Education ... ... ... ... ... ... 705

PAGES

FINANCIAL BUSINESS—*cont.*
DSG (Second), 1968–69, Voting—*cont.*
Elections ... ... ... ... ... ... 703
Fisheries ... ... ... ... ... ... 706
Forest Department ... ... ... ... ... 710
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ... ... 702
Head of State, Ministers and Headquarters Staff 704
Industries ... ... ... ... ... ... 707
Irrigation ... ... ... ... ... ... 708
Jails ... ... ... ... ... ... ... 704
Labour including Factories ... ... ... 707
Land Revenue Department ... ... ... 702
Loans and Advances by the State Government ... 712
Medical ... ... ... ... ... ... 705
Miscellaneous ... ... ... ... ... 709
Motor Vehicles Acts—Administration ... ... 702
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ... 710
Pensions ... ... ... ... ... ... 709
Police ... ... ... ... ... ... ... 705
Public Health ... ... ... ... ... 705
Public Works-Establishment and Tools and Plant 708
Public Works—Works ... ... ... ... 708
Registration Department ... ... ... ... 703
Road Transport Schemes ... ... ... ... 709
Stamps—Administration ... ... ... ... 703
State Legislature ... ... ... ... ... 703
Stationery and Printing ... ... ... ... 709
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... 708
Second Supplementary Statement of Expenditure, 1968–69 :
Presentation ... ... ... ... ... 445–448

FIRE SERVICE.—
Fire Service Personnel, Mannargudi, accommodation ... ... ... ... ... ... ... 636



FISHERIES—
Fishermen, death near Dhanushkodi ... ... 415–417
House-sites, allotment in Tirunelveli district ... 144–145

FOODGRAINS—
Pudukesapuram check-post, action taken on transport of rice ... ... ... ... ... ... 418
Toor-gram, cultivation in Tiruchirappalli and Madurai districts ... ... ... ... ... 644
Rice, one rupee a measure, Government subsidy ... 138–144

G

GAMBLING—
Madras City, Prevention of ... ... ... ... 741–743

GEORGE, THIRU V.
Governor's Address (M) ... ... ... ... 392–400

GHERAO—
By women before Tiruppur Municipal Council ... 736–737

GNANASAMBANDAN, THIRU K. R.—
Governor's Address (M) ... ... ... ... 184–190

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Amendment to Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, representation ... ... 743–744
Educational institutions, Madurai, meeting of parents, etc. ... ... ... ... ... ... 3–8
Electricity tariff, increase ... ... ... ... 534–536
Family planning, appointment of women promoters 420–422
Felicitations on completion of 81 years ... ... 341–344
Film Studios, shifting to neighbouring States ... 633–635
Float of Sri Kapalesswarar temple, entrance fee ... 8–9
Governor's Address (M) ... ... ... ... 384–388
Laws, rules, etc., review ... ... .. ... 518–520
Public Buildings (Licensing) Act, enforcement ... 527
Water scarcity in Madras City (C.A.) ... ... 648

PAGES.

G—*cont.*


GOVERNMENT OFFICES—
- Grievances counter, opening ... ... ... ... 635–636
- Madras Collectorate, shifting ... ... ... 745–747
- Tiruvalluvar, installation of portrait in Highways Department offices ... ... ... ... ... 11–13

GOVERNMENT SERVANTS—
- Gazetted Officers, festival advance ... ... ... 415
- Quarters, allotment ... ... ... ... ... 136–138

GOVINDAN, THIRU K. R.—
- Government Workshop, Mettur, retrenchment ... 235

GOVINDARAJAN, THIRU C.—
- Handloom weavers, loans to indebted . ... ... 726–731
- Pugalur Sugar Mills of Parry and Co., Closure (A.M.) ... ... ... ... ... ... 435–436
- Vanaspathi Factory, Villupuram, State aid ... 422–424

GOVINDARAJULU, THIRU K.—
- Governor's Address (M) ... ... ... ... 382–384

GOVINDASAMY, THIRU A.—
- Appropriation Bill, 1969 ... ... ... ... 839–840
- Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending the notification and approving the Draft Notification (R) ... ... ... ... 898–899
- DSG (Second), 1968–69, G.D. ... ... ... 692

GRANTS—
- Thirumathi Rani Annadurai, Government grant, suggestion ... ... ... ... ... 340–341


H


HANDE, DR. H. V.—
- Activities of Siva Sena, Bombay, protection to South Indians in Maharashtra State (A.M.) ... 436–440
- Appropriation Bill, 1969 ... ... ... ... 838–839
- Arson in Kilvenmani village (A.M.) ... ... ... 35–36


H—*cont.*

PAGES.


HANDE, DR. H. V.—*cont.*
- Censure Motion *re.* Kilvenmani incidents, discussion in the wake of new Ministry (Point of Order) 354
- Chief Minister's health, point of information ... 44
- Drought in North Arcot and Chingleput districts (C.A.) ... ... ... ... ... ... 152,155
- General Sales Tax (Second Amendment) Bill, 1969 852–853
- Governor's Address (M) ... ... .. ... 62, 65, 450, 474–478 498–500
- Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... 455
- Incidence of cholera and jaundice in Madras City (C.A.) ... ... ... ... ... ... 542–543
- Land Tax, Kuranthankode Panchayat Union ... 408–410
- Madurai-Ramanathapuram Road, widening and improvement ... ... ... ... ... 622–624
- Marine Diesel Engine Factory, Madras, starting with Japanese collaboration ... ... ... 724–726
- Neyveli electric power, increase in price ... ... 631–633
- Panchayats (Amendment) Bill, 1969 ... ... 862–863
- Police constables, recruitment, temporary suspension ... ... ... ... ... ... ... 739-740
- Repatriates from Ceylon, rehabilitation (C.A.) ... 441, 443–444

HNADLOOMS—
- Accumulation of cloth and suffering of weavers (C.A.) 538–542
- Bleeding Madras ... ... ... ... ... 528
- Weavers' loans to indebted ... ... ... ... 726–731

HOSPITALS AND DISPENSARIES—
- Coimbatore Headquarters Hospital, Labour Ward 527
- Dispensary and maternity centre for each panchayat 615–617
- E.S.I. Hospital for Pollachi ... ... ... ... 630–631
- Government Hospital building, Udumalpet, expansion ... ... ... ... ... ... ... 723
- Primary Health Centre, Karungalangudi, building 231–232

PAGES.

HOUSING—
Corporation low income group houses, allotment ... 145–148
House-sites, Goundenpalayam, assignment ... 407–408
House-sites, Sathampadi, Melur taluk ... ... 13–17

I

INDUSTRIES—
Indian Steel Rolling Mills, Nagapattinam, labour problems leading to closure (C.A.) ... ... 753–754
Industrial Estates, delay in opening ... ... ... 426
Industrial Estate, Establishment in Hosuu ... 426–430
Industrial Estate, Establishment in Madurantakam 232–235
Indutrial Estate, Establishment in Tiruppur ... 426
Small Scale Industries Corporation, sale of procedure of factories ... ... ... ... ... 621–622

IRRIGATION—
Kudaganaru Project, implementation ... ... 624
See page channel, Kantharuval, construction ... 625

J

JAIL (S)—
Madurai Central, death in ... ... ... ... 738–739

JAMES, THIRU J.—
Governor's Address (M) ... ... ... ... 363–372

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
D.S.G. (Second), 1968–69, G.D. ... ... ... 672–677

JAYARAJ, THIRU P.—
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (C.M.) ... ... ... ... ... ... 756–768, 831–832

K

KANDASWAMY, THIRU M.—
Governor's Address (M) ... ... ... 217–220



PAGES

KARIAMANICKAM AMBALAM, THIRU KR. RM.—
D.S.G. (Second), 1968–69, G.D. ... ... ... 664–668

KARUNANIDHI, THIRU M.—
Activities of Siva Sena, Bombay, protection to South Indians in Maharashtra State (A.M.) ... 439–440
Correction to answer to a supplementary question. 239–240
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district, (Censure Motion.) ... ... ... ... ... 815–831
Deputy Speaker, felicitations on election ... ... 654–655
D.S.G. (Second), 1968–69, G.D. ... .. ... 689, 690, 692–694
Fire in Vilakam Harijan Colony and relief to victims (A.M.) ... ... ... ... ... 647–648
Gomathy Sankara Dikshidar, Thiru G., feliciatious. 342
Governor's Address (M) ... ... ... ... 63, 64, 199, 202, 203, 221, 225, 226, 227, 255, 367–368, 369, 370, 459–460, 461, 463, 497–498, 593–610
Governor's Address, continuance of discussion in the wake of new Ministry, (Point of Order) ... 346
Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... ... 454–455
Introduction of incoming Ministers and statement by outgoing Minister, non-observance of convention (Point of Order) ... ... ... ... 348
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 285–287, 311–312
Question-hour, suspension (M) ... ... ... 315
Speaker, felicitations on election ... ... ... 335–337

KARUPPIAH, THIRU R.—
Governor's Address (M) ... ... ... ... 176–180

K—cont.


PAGES.

**KARUTHIRUMAN, Thiru P. G.—**
- Appropriation Bill, 1969 ... ... ... ... 837–838
- Censure Motion *re.* Kilvenmani incidents, discussion in the wake of new Ministry (Point of Order) ... 352–353
- Chief Minister's health (Point of Information) ... 42–43
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (M) 807–815
- Deputy Speaker, felicitations on election ... ... 652
- D.S.G. (second), 1968–69, G.D. ... ... ... 685–696, 701–702
- Gomathysankara Dikshidar, Thiru G., felicitations 343
- Governor's Address (M) ... ... ... ... 63, 64, 65, 199, 203–204, 225–226, 227, 251–252, 254, 255, 257, 258, 368,, 369, 371, 377, 392, 463, 477, 478, 496, 497, 498, 504–505, 564–593, 610–611
- Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... ... 454, 455
- Introduction of incoming Ministers and statement by outgoing Minister, non-observance of Convention (Point of Order) ... ... ... ... 347–349
- Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 308–311
- Speaker, felicitations on election ... ... ... 318–319
- Thirumathi Rani Annadurai, Government grant ... 340–341

**KASIRAMAN, Thiru N.—**
- Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 875
- Bridge across the Arasalar, Sakkottai ... ... 431
- Handlooms, Bleeding Madras, ... ... ... 528




K—*cont.*


PAGES.

**KASIRAMAN, Thiru N.—*cont.***
- High speed diesel oil, rebate on purchase ... ... 235
- Madras Corporation, loans from Scheduled Banks ... 625–627
- One rupee a measure—Rice, Government subsidy ... 138–144
- Pesticides, Subsidy ... ... ... ... 524–527
- Road bridge to Rameswaram Island ... ... 9–11
- Khadi Emporium Building, Esplanade, acceptance of tender ... ... ... ... ... ... 735–736

**KITTAPPA, Thiru N.—**
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (C.M.) ... ... ... ... ... ... 776–778
- Governor's Address (M) ... ... ... ... 160–163

**KOTHANDAM, Thiru KOLATHUR—**
- Bridge across Kallaru, widening ... ... ... 733–734
- Governor's Address (M) ... ... ... ... 74–78
- Industrial Estate, Madurantakam, establishment ... 232–235
- Khadi Emporium Building, Esplanade, acceptance of tender ... ... ... ... ... ... 735–736
- Land revenue, arrears in 1965–66 and 1966–67 ... 637–640
- Madurantakam taluk, bifurcation ... ... ... 744–745
- Munsif Court for Madurantakam ... ... ... 527–528
- Neera, licences for tapping ... ... ... ... 516–518
- Panchayat, criterion for major and minor ... ... 513–514
- Travelling Allowance to Executive Officers of Devasthanams ... ... ... ... ... ... 433–434

**KOTHANDARAMAN, Thiru V. K.**
- Drought in North Arcot and Chingleput districts (C.A.) ... ... ... ... ... ... 152, 154–156
- Electricity tariff, increase ... ... ... ... 534–536
- Fire in Vilakam Harijan Colony and relief to victims (A.M.) ... ... ... ... ... 646–647
- Indian Steel Rolling Mills, Nagapattinam, labour problems leading to closure (C.A.) ... ... ... 753–754
- Labour agitations in Neyveli Lignite Corporation 431–433
- Paper factory, starting in North Arcot district ... 731–733

K—*cont.*


PAGES.

KOTHANDARAMAN, THIRU V. K.—*cont.*
- Profession tax, raising the exemption limit ... ... 19–23
- Propaganda vans, supply to panchayat unions ... 636–637
- Schools, building grants ... ... ... ... 617–618
- Siva Sena's activities in Bombay and protection to South Indians in Maharashtra State (A.M.) ... 436–440

KRISHNAMOORTHI, THIRU C.—
- Governor's Address (M) ... ... ... ... 388–392

KRISHNAN, THIRU E. R.
- Accumulation of handloom cloth and suffering of weavers (C.A.) ... ... ... ... ... 538–542
- Governor's Address (M) ... ... ... ... 204–208

KRISHNASAMY GOUNDER, THIRU R.—
- Agricultural Lands Record of Tenancy Right Bill, 1969 ... ... ... ... ... ... 367–372, 878, 879, 892
- General Sales Tax (Second Amendment) Bill, 1969 852
- Governor's Address (M) ... ... ... ... 170–173

KUMARASAMY, THIRU K. N.—
- D.S.G. (Second), 1968–69, G.D. ... ... ... 668–672
- Sri Lakshmi Narayana Mills, closure ... ... 436

L.

LABOUR—
- Agitation in Neyveli Lignite Corporation ... ... 431–433

LAND(S)—
- Land revenue, arrears in 1965–66 and 1966–67 ... 637–640
- Land Tax, Kuranthankode Panchayat Union ... 408–410

LOANS—
- Loans to agriculturists through panchayat unions ... 410–415
- Madras Corporation, loans from scheduled banks ... 625–627

LOCAL BODIES—
- Madras Corporation, loans taken from scheduled banks ... ... ... ... ... ... 625–627
- Municipalities, elections (St.) ... ... ... ... 484–485




L—*cont.*


PAGES

LOCAL DEVELOPMENT WORKS—
- Grants to Panchayat Unions ... ... ... 627–630

M.

MADHAVAN, THIRU S.—
- Accumulation of handloom cloth and suffering of weavers (C.A. St.) ... ... ... ... ... 538–542
- Salem Steel Plant, talks with Japanese Firm Delegation (C.A. St.) ... ... ... ... ... 752

MADRAS CORPORATION—
- *See* Local bodies.

MALAICHAMY, THIRU P.—
- Arecanut nurseries, location ... ... ... ... 417–418
- Governor's Address (M) ... ... ... ... 167–170
- House sites, Sathampadi, Melur taluk ... ... 13–17
- Mulaiyur—Valayapatti Road ... ... ... ... 17–18
- Periaruvi Reservoir ... ... ... ... ... 529–530
- Primary Health Centre, Karungalangudi building ... 231–232
- Seed potatoes, import ... ... ... ... ... 747–749
- Toor-gram, cultivation in Tiruchirappalli and Madurai districts ... ... ... ... ... 644
- Travellers' Bungalow, Sendurai, construction ... 236

MALAIKANNAN, THIRU V.—
- Governor's Address (M) ... ... ... 265–268

MANI, THIRU K. B. S.—
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (C.M.) ... ... ... ... ... ... ... 793–797
- Governor's Address (M) ... ... ... ... ... 544–548
- Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 299–301
- Speaker, felicitations on election ... .. ... 324–325

MANIAN, THIRU P. S.—
- Manjamalai Odai Schemo, construction of dam ... 430–431
- Village officers, recognition as Government officials 642–644

PAGES

MARIMUTHU, THIRU A.—
Governor's Address ... ... ... ... 193–196

MARIMUTHU, THIRU A. R.—
Governor's Address (M) ... ... ... ... 452, 552–557
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 295–296
Speaker, felicitations on election ... ... ... 321–322

MARTIN, THIRU T.—
Censure Motion, *re.* Kilvenmani incidents, discussion in the wake of new Ministry, Point of Order 353
Dam across Nambiyaru, construction ... ... 734–735
Death of fishermen near Dhanushkodi ... ... 415–417
Festival Advance to Gazetted Officers ... ... 415
Fishermen, allotment of house-sites in Tirunelveli district ... ... ... ... ... ... 144–145
Government Servants, allotment of quarters ... 136–138
Governor's Address (M) ... ... ... ... 163–167, 202–203, 371–372, 450
Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... 453
Saveriarpuram-Peikkulam Road ... ... ... 18–19
Seepage channel, Kantharuvai, construction ... 625
Tamilar Padai ... ... ... ... ... ... 507–512

MARUDACHALAM, THIRU N.—
D.S.G. (Second), 1968–69, G.D. ... ... ... 677–680

MATHIALAGAN, THIRU K. A.—
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 866–867, 876–878, 879, 884—885, 887, 888, 889, 892–893 894, 897–898



PAGES.

MATHIALAGAN, THIRU K. A.—*cont.*
Appropriation Bill, 1969 ... ... ... ... 715, 837, 840–842
Appropriation (No. 2) Bill, 1969 ... ... ... 716, 842, 845–846
Censure Motion *re.* Kilvenmani incidents, discussion in the wake of new Ministry—Point of Order ... 355–356
Correction to answer to a supplementary under Question No. 112—(st.) ... ... ... ... 156–157
DEE, 1964–65, presentation ... ... ... ... 444–445
DEE, 1964–65, Voting :
Capital Outlay on Consumer Co-operatives ... 714
Capital Outlay on Irrigation ... ... ... 715
Capital Outlay on Road Transport Schemes ... 715
Fisheries ... ... ... ... ... ... 715
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 712
Head of State, Ministers and Headquarters Staff 712
Irrigation ... ... ... ... ... ... 713
Other Miscellaneous Contributions and Assignments ... ... ... ... ... ... 714
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 714
Public Works-works ... ... ... ... 713-714
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 713
DSG (Second), 1968–69, G.D. ... ... ... 680–681, 696–701
DSG (Second), 1968–69, Voting :
Administration of Justice ... ... ... ... 704
Agriculture ... ... ... ... ... ... 706
Animal Husbandry ... ... ... ... ... 706
Capital Outlay on Forests ... ... ... ... 711
Capital Outlay on Industrial Development ... 710
Capital Outlay on Irrigation ... ... ... 710
Capital Outlay on Public Works ... ... ... 711

MATHIOLAGAN, THIRU, K. A.—*cont.*

PAGES.

D.S.G. (Second), 1968–69, Voting—*cont.*
Capital Outlay on Road Transport ... ... 711
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 711
Cinchona ... ... ... ... ... ... 707
Community Development Projects, etc. ... 707
Co-operation ... ... ... ... ... 706
District Administration and Miscellaneous ... 704
Education ... ... ... ... ... ... 705
Elections ... ... ... ... ... ... 703
Fisheries ... ... ... ... ... ... 706
Forest Department ... ... ... ... ... 710
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 702
Head of State, Ministers and Headquarters Staff 704
Industries ... ... .. ... ... ... 707
Irrigation ... ... ... ... ... ... 708
Jails ... ... ... ... ... ... 704
Labour including Factories ... ... ... 707
Land Revenue Department ... ... ... 702
Loans and Advances by the State Government .. 712
Medical ... ... ... ... ... ... 705
Miscellaneous ... ... ... ... ... 709
Motor Vehicles Acts—Administration ... ... 702
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ... 710
Pensions ... ... ... ... ... ... 709
Police ... ... ... ... ... ... 705
Public Health ... ... ... ... ... 705
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 708
Public Works—Works ... ... ... ... 708
Registration Department ... ... ... ... 703
Road Transport Schemes ... ... ... ... 709
Stamps Administration ... ... ... ... 703
State Legislature ... ... ... ... ... 703



PAGES.

MATHIALAGAN THIRU K. A.—*cont.*
D.S.G. (Second), 1968–69, Voting—*cont.*
Stationery and Printing ... ... ... ... 709
Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 708
Drought in North Arcot and Chingleput Districts (C.A. St.) ... ... ... ... ... ... 152–156
General Sales Tax (Second Amendment) Bill, 1969 43, 846–847, 849–851
General Sales Tax (Second Amendment) Bill, 1969 45, 851–852, 855–856
Governor's Address (M) ... ... ... ... 250–251, 253–254, 377, 458, 460
Governor's Address, continuance of discussion (Point of Order) ... ... ... ... ... 350–351
Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 ... ... ... 159, 857–858
Introduction of incoming Ministers and statement by outgoing Minister, non-observance Point of Order ... ... ... ... ... .. ... 349–350
Land reforms (Disposed of Surplus Land) Rules, 1965, amendment (R) ... ... .. 899–900
Repatriates from Ceylon, rehabilitation (C.A. St.) 441–444
Second Supplementary Statement of Expenditure, 1968–69, presentation ... ... ... ... 445–448
Speaker, felicitations on election ... ... ... 333–335

MILK—
Microbiological product to detect adulteration ... 418–419

MOOKIAH THEVAR, THIRU P. K.—
Gomathysankara Dikshidar, Thiru G., felicitations. 343–344
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 287–291

MOTIONS—
Adjournment Motions—

M—*cont.*


MOTIONS—*cont.* PAGES

Adjournment Motions—*cont.*

Activities of Siva Sena, Bombay, protection to South Indians in Maharashtra State ... ... ... 436–440
Arson in Kilvenmani village ... ... ... 25–39
Fire in Vilakam Harijan Colony and relief to victims ... ... ... ... ... ... 646–648
Kaveri Mills, Pudukottai, opening and interim relief to workers ... ... ... ... ... 638
Kaveri Nagar Mills, Tiruchirappalli, closure ... 149–150
Lathi charge on students ... ... ... ... 149
Lathi charge on workers of Mayfield Estate ... 150
Pugalur Sugar Mills of Parry and Co.—Closure ... 435–436
Sri Lakshmi Narayana Mills, closure ... ... 436
Water in the wells, pollution by effluent water from Mettur Chemicals ... ... ... ... 39–40
Censure Motion *re.* Kilvenmani incident, consent and leave given ... ... ... ... ... 537
Censure Motion :
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district 755–836
Governor's Address, Motion of Thanks ... ... 46–91, 160–229, 242–279, 450–453, 456–484, 485–505, 612
Question-hour, suspension ... ... ... ... 315

MUNUSWAMY, THIRU R. R.—
Peria Eri, Annamangalam village, deepening ... 430
Schools, building grants ... ... ... ... 617–618

MUTHUSAMY, THIRU M.—
Elections to municipalities (St.) ... ... ... 484–485
Panchayats (Amendment) Bill, 1969 ... ... 858–860, 866




N.


PAGES

NAGASUNDARAM, THIRU R.—
Governor's Address (M) ... ... ... ... 373–378

NALLASIVAN, THIRU K. R.—
Governor's Address (M) ... ... ... ... 480–484
Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... 455–456
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 293–295
Speaker, felicitations on election ... ... ... 315–316, 322–323

NALLASWAMY, THIRU T. M.—
Governor's address (M) ... ... ... ... 78–81, 453

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Arson in Kilvenmani village (A.M.) ... ... 37–39
Arson in Kilvenmani village (St.) ... ... ... 40–41
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 ... ... ... ... ... ... ... 240
Chief Minister's health (St.) ... ... ... 151
240–241
Chief Minister's health (point of information) ... 43–44
Essential Articles (Control and Requisitioning) Temporary Powers Amendment Bill, 1969 .. 159
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 304–308
Panchayats (Amendment) Bill, 1969 ... ... 240
Speaker, feilcitations on election ... ... ... 330–332

NEERA—
Licence for tapping ... ... ... ... ... 516–518


O.


OBITUARY REFERENCE(S)—
Abdul Majeed, Thiru M. S. ... ... ... .. 1
Annadurai, Dr. C. N. (R) ... ... .. .. 285–313
Balasubramaniam, Thiru S. ... .. ... 1
Deaths in Kilvenmani incident ... ... ... 1
Muthiah, Thiru V. A. ... ... ... ... 1
Muthu Velappa Gounder, Thiru P. K. ... ... 1
Ramaswamy Naidu, Thiru S. ... ... ... 1
Viswanathan, Thiru K. R. ... ... ... ... 407

OILS.—
High speed diesel oil, rebate on purchase ... 235

PAGES

P.

PALANIAMMAL, THIRUMATHI V. P.—
Bridge across Peria Odai, Dharapuram ... ... 149
Dispensary and maternity centre for each panchayat 615–617
Government hospital building, Udumalpet, expansion ... ... ... ... ... ... ... 723
Water supply to Veerachimangalam ... ... 148–149

PANCHAYAT(S)—
Kilkundah Town Panchayat, election ... ... 738
Major and minor—criterion ... ... ... ... 513–514
Propaganda vans, supply to panchayat unions ... 636–637
Upgrading ... ... ... ... ... ... 514–516

PANEL OF CHAIRMEN (Ann.) ... ... ... 44

PAPERS LAID ON THE TABLE.
Agricultural Lands Record of Tenancy Rights Bill 1968, Report of Select Committee ... ... 281
Agricultural Produce Markets Act, 1959, notifications 94, 96, 230
Arkonam Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... 105
Arni Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... ... 105
Attur Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... .. 105
Banana and Fruit Development Corporation Limited, report ... ... ... ... ... 104
Buildings (Lease and Rent Control) Act, 1959, notification ... ... ... ... ... ... 96
Catering Establishments Act, 1958, notification ... 101
Cinemas Regulation Act, 1955, notifications ... 93, 99, 612
City Municipal Corporation Act, 1919, notification 93
Cultivating Tenants (Special Provisions) Act, 1968, notification ... ... ... ... ... 92



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Cumbum Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... 106
DEE, 1964-65 (English and Tamil) ... ... ... 612
DEE, 1964-65, notice ... ... ... ... 612
Delimitation Commission Act, 1962, order ... ... 102
Demands for Grants for further expenditure and detailed supplementary estimates for 1968–69 ... 612
Demands for Grants for further expenditure for 1968–69, notice ... ... ... ... ... 612
District Municipalities Act, 1920, notifications ... 92–93, 95, 229, 280, 313, 405
Electricity (Taxation on Consumption) Act, 1962, notification ... ... ... ... ... ... 95
Entertainments Tax Act, 1939, order ... ... 229–230
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 ... 314
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment, Ordinance, 1969 ... ... ... ... ... ... ... 230
General Sales Tax Act, 1959, notifications ... ... 91, 95, 97, 313
General Sales Tax (Amendment) Bill, 1969 ... 314
General Sales Tax (Amendment) Ordinance, 1968 ... 106
General Sales Tax (Second Amendment) Bill, 1969 314
Governor's Address to the Members of Legislature 168
Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 ... ... ... 314
Hindu Marriage (Registration) Rules, 1967, notification ... ... ... ... ... ... 103
Hindu Religious and Charitable Endowments Act, 1959, notification ... ... ... ... ... 95
Indian Stamp Act, 1899, notifications ... ... 104, 281, 314,
Industries (Development and Regulation) Act, 1951, notification ... ... ... ... ... [illegible]

PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Karaikudi Municipality, re-division of wards and reservation of seats, errata ... ... ... ... 103

Karur Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... ... 106

Land Improvement Schemes Act, 1959, notifications 96, 314

Legislative Assembly, resume of work ... ... 104

Legislative Council, resume of work ... ... 314

Mettupalayam Municipality, re-division of wards and reservation of seats, errata ... ... 102

Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 94

Money Lenders Act, 1957, notification ... ... 99

Motor Vehicles Act, 1939, notification ... ... 91, 313

Motor Vehicles Taxation Act, 1931, notification ... 93, 94, 95, 97

Nagapattinam Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... 104–105

Official Language Act, 1956, notification ... ... 93

Padmanabhapuram Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... 105–106

Palani Municipal Council, reservation of seats, errata ... ... ... ... ... ... ... 103

Panchayats Act, 1958, notifications ... .. ... 91, 92, 94, 95, 313

Panchayats (Amendment) Bill, 1969 ... ... 314

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, notifications ... 92, 280

Pattukottai Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... 105

Pawnbrokers Act, 1943, notification ... ... 103

Periakulam Municipality, division of ward and reservation of seats, errata ... ... ... 103

Pollachi Municipality, redivision of wards and reservation of seats, errata ... ... ... ... 102–103



PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Private Educational Institutions (Regulation) Act, 1966, notification. ... ... ... ... 280

Prohibition Act, 1937, notification ... ... 100

Puliangudi Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... 106

Ramanathapuram Municipality, division of wards and reservation of seats, errata ... ... 104

Rasipuram Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... 106

Ryotwari settlement of inam estates and minor inams notification ... ... ... ... 104

Sankarankoil Municipality, redivision of wards and reservation of seats, erratum ... ... ... 314

Singanallur Municipality, division of wards and reservation of seats, errata ... ... .. 104

Sivakasi Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... ... 105

Small Industries Corporation, Annual Report and Accounts ... ... ... ... ... 102

Speech of Thiru K. A. Mathialagan re. Demands for Grants for Excess Expenditure for 1964-65. 612

Speech of Thiru K. A. Mathialagan re. Second Supplementary Estimates for 1968–69 ... ... 612

Stamp duty, exemption, notifications ... ... 104, 106

State Electricity Board (Term of office, re-appointment, Remuneration, Allowances and other conditions of service of Chairman and Members' Rules, 1958, notification) ... ... ... ... 314

State Housing Board Act, 1961, notification ... 94

Tirunelveli Municipality, division of wards and reservation of seats, errata ... ... .. 103

Vaniambadi Municipality, division of wards and reservation of seats, errata ... ... ... 103

PARAMASIVAM, THIRU P. N.—

Governor's Address (M) ... ... ... ... 360–363

PEER MOHAMMED, HAJI, M. M.—

Governor's Address (M) ... ... ... ... 196–198, 200–202

P—*cont.*

PAGES

PEER MOHAMMED, HAJI, M. M.—*cont.*
Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 301–304
Speaker, felicitations on election ... ... ... 325–326

PERIA ERI—
Annamangalam Village, deepening ... ... 430

PERUMAL, THIRU A. R.—
Governor's Address (M) ... ... ... ... 260–261, 263–265

PESTICIDES—
Subsidy ... ... ... ... ... ... 524–527

*POINTS OF ORDER.*

Brief Record of Proceedings, dated 29th January 1969, omission of reason for adjournment ... 344–345
Censure Motion, re. Kilvenmani incidents discussion in the wake of new Ministry ... ... ... 352–357
Governor's Address, continuance of discussion in the wake of new Ministry ... ... ... 345–347, 350–352
Governor's Address, reference to health of Chief Minister (since late) ... ... ... ... 453–456
Introduction of incoming Ministers and statement by outgoing Minister, non-observance of Convention ... ... ... ... ... ... 347–350
Responsibilities of Hon. Chief Minister ... ... 157, 158

POLICE—
Constables, recruitment, temporary suspension ... 739–740

PONNAMBALAM, PULAVAR, P.—
Governor's Address (M) ... ... ... ... 274–279

PONNAPPA NADAR, THIRU. R.
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 891
Appropriation (No. 2) Bill, 1969 ... ... ... 842–844
General Sales Tax (Amendment) Bill, 1969 ... 848
General Sales Tax (Second Amendment) Bill, 1969 ... ... ... ... ... ... ... 853–854
Governor's Address (M) ... ... ... ... 57-62, 198-199



Q.

PAGES

QUESTIONS AND ANSWERS—
Corrections to answers to supplementaries (St.) ... 156–157, 239-240
Questions put to Chief Minister, Point of order re. postponement ... ... ... ... ... 23
Supplementary Questions, opportunities to Swatantra Party members (Ann.) ... ... ... 655–656

R.

RAJA, THIRU A. M.—
Khadi Emporium building at Esplanade, acceptance of tenders ... ... ... ... 735-736
Sales Tax Collections ... ... ... ... ... 520–522
Tamil Nadu Secretariat N.G.G.O.s' Association, representation for Trade union rights ... ... 740–741

RAJANGAM, THIRU M.
Governor's Address (M) ... ... ... ... 88-91

RAMACHANDIRA DORAI, THIRU R.
Governor's Address(M) ... ... ... 84-88

RAMACHANDRAN, THIRU S.—
Dhals, scarcity ... ... ... ... ... 644–646
D.S.G. (Second), 1968–69, G.D. ... ... ... 660–664
Madras Collectorate, shifting ... ... ... 745-747
Research cell for building materials and designs ... 135–136
Thiruvalluvar installation of Portrait in Highways Department offices ... ... ... ... 11-13

RAMALINGAM, THIRU S.
Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion) ... ... ... ... ... 785-789

RAMAMOORTHI, THIRU K.
Activities of Siva sena, Bombay, protection to South Indians in Maharashtra State (A.M.) ... 436-440

R—*cont.*

RAMAMOORTHI, THIRU K.—*cont.*

Agricultural lands, Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... .. .. ... 880–8
68
889–8
893–8

Censure Motion *re.* Kilvenmani incidents, discussion in the wake of new Ministry (point of order) ... 35

General Sales Tax (Amendment) Bill, 1969 ... 848-84

Governor's Address (M) ... .. . ... 4

Governor's Address, continuance of discussion, point of order ... ... ... ... ... 35

Panchayats (Amendment) Bill, 1969, ... ... 861-86

RAMAN, THIRU O. P.

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 ... 448–45

RAMASWAMI GOUNDER, THIRU K. M.

Aided school teachers, City Compensatory Allowance ... ... ... ... ... ... 236–23

Governor's Address (M) ... ... ... 70-7

Panchayats (Amendment) Bill, 1969 ... ... 86

RAMASWAMY, THIRU S. J.

Neyveli Electric Power, increase in price ... ... 631-63

Rice transport, action taken in checkpost, Pudukesapuram ... ... ... ... ... 418

Small cars, manufacture ... ... ... ... 528–529

RANI ANNADURAI, THIRUMATHI—

Government Grant, suggestion ... ... 340-341

REPATRIATES :

Repatriates from Ceylon, rehabilitation ... 441-444

RESOLUTION(S) :

Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending the notification and approving the Draft notification ... ... ... .. 988–899

Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, amendment ... ... ... ... 899-900

REST HOUSES :

Travellers Bungalow, Sendurai, construction ... 236



ROADS—

Madurai—Ramanathapuram road, widening and improvement ... ... ... ... 622-624

Mulaiyur—Valayarpatti road ... ... ... 17–18

Naganur—Danishpet road ... ... ... 532

Saveriarpuram —Peikkulam road ... ... 18-19

S

SIDIQ PASHA, THIRU S. J.—

DSG (Second), 1968-69, G. D. ... ... 693

SANKARIAH, THIRU N.—

Arson in Kilvenmani Village (A. M.) ... ... 34

Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 876, 879

Appropriation (No. 2) Bill, 1969 ... ... .. 844–845

Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (C.M.) ... ... ... ... ... 797-803

Deputy Speaker, felicitations on election ... ... 654–655

DSG ((Second), 1968-69, G. D. ... ... 695

Governor's Address (M) ... ... ... 488-496
497, 498, 500

SATHYAVANI MUTHU, Dr. (THIRUMATHI).—

Incidence of Cholera and Jaundice in Madras City (C.A. St.) ... ... ... ... ... 542–543

Water Scarcity in Madras city (C.A. St.) ... ... 648–649

SCHOOLS :

Building grants ... ... ... ... ... 617–618

Municipal schools, provincialisation ... ... 131–134

SEENIVASAN, THIRU P.—

Governor's Address (M) ... ... ... ... 224–225
227–229

SHANMUGAM, THIRU P. U.—

Deaths due to fire in Sivakasi Cracker Factory (C.A. St.) ... ... ... ... ... ... 650–651

Indian Steel Rolling Mills, Nagapattinam, labour problems leading to closure (C.A. St.) ... ... 753–754

PAGES

SIVAGNANAM, THIRU M. P.—
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion.) ... ... ... ... ... ... 789–793
- Governor's Address (M) ... ... ... ... 465–472
- Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 297–299
- Speaker, felicitations on election ... ... ... 327–330

SIVASAMI, THIRU M. S.—
- Governor's Address (M) ... ... ... ... 501–504

SMALL SAVINGS :
- Cultural show, expenditure ... ... ... 523–524

SOMASUNDARAM, THIRU N.—
- Governor's address (M) ... ... ... ... 81–84

SOUNDARAPANDIAN, THIRU N.—
- Governor's Address (M) ... ... ... ... 268–271

SOUNDARAPANDIAN, THIRU P.—
- Criminal cases, transfer to Tahsildar trainees ... 640–641
- Kudaganaru Project, implementation ... ... 624
- Loans to agriculturists through panchayat unions 410–415
- Sub-Magistrate's Court for Manaparai ... ... 424–425

SOUNDARARAJA MOOPANAR, THIRU R.—
- Governor's Address (M) ... ... ... ... 208–211

SPEAKER—
- Felicitations on election ... ... ... ... 315–340
- Reply to felicitations ... ... ... ... ... 337–340
- Gomathysankara Dikshidar, Thiru G., felicitations 341–342

STEEL PLANT—
- Salem, talks with Japanese Firm delegation (C.A.) 758



PAGES

SUBBARAJA, THIRU A. A.—
- Agricultural lands Record of Tenancy Rights Bill, 1969 ... .. ... ... ... ... 880, 882-883, 885
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion.) ... ... ... ... ... 782–785
- DSG (Second), 1968–69, G.D. ... ... ... 680–684
- Governor's Address (M) ... ... ... ... 211–214
- Speaker, felicitations on election ... ... ... 326–327

SUBBIAH, THIRU A. K.—
- Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 895–896
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion.) ... ... ... ... ... 769–776
- Governor's Address (M) ... ... ... ... 548–552
- Obituary reference, Dr. C. N. Annadurai (R) ... 296–297
- Speaker, felicitations on election ... ... ... 323–324

SUGAR MILLS—
- Starting ... ... ... ... ... ... 425–426

SUNDARA BHARATHI, THIRU SOWDI, S.—
- Agricultural Land Records of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 873–875
- Governor's Address (M) ... ... ... 378–381

SURENDRAN, THIRU M.—
- Agricultural Land Records of Tenancy Rights Bill, 1969 ... ... ... ... ... ... 896–897
- Deaths in Kilvenmani due to arson and failure to maintain law and order in Thanjavur district (Censure Motion.) ... ... ... ... ... 779–782
- Governor's Address (M.) ... ... ... ... 453, 485–488
- Naganur-Danishpet road ... ... ... 532

SWAMINATHAN, THIRU V.—
- Bridge across Cauvery ... ... ... ... 530
- DSG (Second), 1968–69—G.D. ... ... ... 656–660

| | PAGES |
|---|---|
| SWAMINATHAN, THIRU V.—cont. | |
| Municipal schools, provincialisation ... ... | 131–134 |
| Panchayats, upgrading ... ... ... ... | 514–516 |
| Pilot Cement Factory, Dalmiapuram, functioning | 618–621 |
| Small cars, manufacture ... ... ... ... | 528 |

T

| | |
|---|---|
| TALUK(S)— | |
| Madurantakam, bifurcation ... ... ... ... | 744–745 |
| TAMILAR PADAI— | |
| Activities in Madurai ... ... ... ... | 512–513 |
| Constitution and objects ... ... ... ... | 507–512 |
| TAXES— | |
| Profession tax, raising the exemption limit ... | 19–23 |
| Sales tax, collections ... ... ... ... | 520–522 |
| TEACHERS— | |
| Aided school teachers, City Compensatory Allowance | 236–237 |
| TEMPLES— | |
| Float of Sri Kapaleswarar Temple, entrance fee ... | 8–9 |
| THANGAPPAN, THIRU T.— | |
| Governor's Address (M) ... ... ... ... | 478–480 |
| THEERTHAGIRI GOUNDER, THIRU T.— | |
| Hoganekkal, Convention into tourist centre ... | 723–724 |
| THIRUVALLUVAR— | |
| Portrait, installation in Highways Department Offices ... ... ... ... ... | 11–13 |
| TOURISM— | |
| Hoganekkal, Convention into tourist centre ... | 723–724 |

U

| | |
|---|---|
| UNION(S)— | |
| Tamil Nadu Secretariat NGGOS Association, representation for Trade Union rights ... ... | 740–741 |
| UNIVERSITIES— | |
| Annamalai University, Election to Senate (Ann.). | 151–152<br>651 |




V


| | PAGES |
|---|---|
| VEERAMANI, THIRU C.— | |
| Governor's Address (M) ... ... ... | 242–245 |
| VELAPPAN, THIRU C. V.— | |
| Governor's Address (M) ... ... ... | 472–474 |
| VELUSAMY, THIRU P.— | |
| Governor's Address (M) ... ... ... ... | 181–184 |
| VENKATASWAMY, THIRU B.— | 425–430 |
| Industrial Estate for Hosur, opening ... ... ... | |
| Industrial Estates, delay in opening ... ... ... | 426 |
| VEZHAVENDAN, THIRU K.— | |
| Governor's Address (M) ... ... ... | 400–404 |
| VILLAGE OFFICERS— | |
| Recognition as Government officials ... ... | 642–644 |
| VINAYAKAM, THIRU K.— | |
| Brief Record of Proceedings, dated 29th January 1969, Omission of reason for adjournment (Point of Order) ... ... ... ... ... ... | 344–345 |
| Censure Motion regarding Kilvenmani incidents discussion in the wake of new Ministry, Point of Order ... ... ... ... ... ... ... | 352, 355 |
| Corporation low income group houses, allotment ... | 145–148 |
| Electricity tariff, increase ... ... ... ... | 534–536 |
| Ennore Thermal Scheme, disposal of fly ash ... | 434–435 |
| Gambling in Madras city, prevention ... ... | 741–743 |
| Government Servants, allotment of quarters ... | 136–138 |
| Governor's Address (M) ... ... ... | 188,<br>452–453<br>456–465<br>475,477 |
| Governor's Address, continuance of discussion in the wake of new Ministry, Point of Order .. | 345–347 |
| Grievances couter in Government offices, opening ... ... ... ... ... | 635–636 |
| Hartal in Coimbatore by workers ... ... | 533–534 |
| Headquarters Hospital, Coimbatore, Labour Ward | 527 |

| | PAGES |
|---|---|
| VINAYAKAM, THIRU K.—*cont.* | |
| Local development works, grants to Panchayat unions ... ... ... ... ... | 627-630 |
| Madras Zoo ... ... ... ... ... ... | 530-532 |
| Microbiological product to detect adulteration of milk ... ... ... ... ... ... | 418-419 |
| Periyar and Vaigai reservoirs, water level ... ... | 734 |
| Police Constables, recruitment, temporary suspension ... ... ... ... ... .. | 739-740 |
| Speaker, felicitations on election ... . | 316-318 |
| Sugar mills, starting ... ... ... ... ... | 425-426 |
| Text books, publication ... ... ... ... | 129-131 |
| VISWANATHAN, THIRU C. G.— | |
| Governor's Address (M) ... .. .. | 173-176 |

W.

| | |
|---|---|
| WALK-OUT BY MEMBERS(S) ... ... ... | 752 |
| WATER SUPPLY— | |
| Veerachimangalam ... ... ... .. | 148-149 |
| WORKERS— | |
| Hartal in Coimbatore ... ... ... ... .. | 533-534 |
| WORKSHOP (S)— | |
| Government workshop [illegible] retrenchment .. | 235 |
| ZOO | |
| **Madras zoo** .. .. | 530-532 |


61450

137